தத் ஸத்

ஸ்ரீ பர ப்ரஹ்மணே நம:

ஜீவப் பிரம்மைக்கிய

வேதாந்த ரஹஸ்யம்

இது

வெட்டவெளி பரம்பரையில் வந்த

ஸ்ரீ நித்யானந்த சுவாமிகளின் பிரிய சிஷ்யராகிய

கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த

யோகீஸ்வரர் அவர்களால்

இயற்றி

சென்னை சூளை

ஸ்ரீ "பாரதி" அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

எட்டாம் பதிப்பு. 4,000

20-5-25

All Rights Reserved] [விலை ரூபா.

MAHARAJA SERFOJI'S SARASVATI MAHAL LIBRARY, SOCIETY, THANJAVUR
-6 JAN 1990

வி. பி. தபால் பாகிங் சிலவுகள் பிரத்தியேகம்.

முக்கிய கவனிப்பு.

குரங்கைப்போல் ஓடித்திரியும் மனதை ஓடவிடாமல் நிறுத்தி முக்தியடைவதற்காக இந்நூலாசிரியரால் வெளியாகிய முக்கியமான நூல்கள்:—

	ரூ.	அ.
"ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" அநேக தேவ ரஹஸ்யங்களும் அநேக ஆப்டோன் பிளாக் படங்களும் கூடியது. மிகவும் அற்புதமான நூல் காலிகோ பயிண்டு விலை	3	12
மேற்படி "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" தெலுங்கு	3	0
மேற்படி "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" இங்கிலீஷ் முதற்பாகம்	2	8
ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை மூன்றும் பதிப்பு காலிகோபயிண்டு	2	4
ஞானார்த்தமாய் எழுதிய ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம், ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்து கன்னடத்திலும், கன்னடத்திலிருந்து தமிழிலும் மொழிபெயர்த்தது, இதுவரையில் வெளியாகாதது இரண்டாம் பதிப்பு காலிகோபயிண்டு	2	4
ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர் பூர்வஜன்ம இச்ஜன்ம சரித்திரம் இரண்டாம் பதிப்பு விலை	0	6
மனதை ஓட்டத்தை நிறுத்திக்காட்டும் நூல்	0	4
ஷை நூல் இங்கிலீஷ்	0	4
பூஜை அறைக்கு வேண்டிய உயர்ந்த பரிமளமுள்ள $1\frac{1}{2}$-மணிநேரம் எரியும் ஊதுவத்தி 100-க்கு விலை	2	0

இவைகள் அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெறலாம்.

ஸ்ரீ ஸச்சிதானந்தர் கம்பெனி,
169, ஸ்டிராஹன்சு ரோட்டு, சூளைப் பட்டாளம்.
பெரம்பூர் பாரக்ஸ் போஸ்ட்டு, சென்னை.

கடப்பையிலும், கடிகோட்டையிலும் மடாலயம் கட்ட

பொருள் உதவிசெய்த கனவான்களின் ஜாபிதா.



ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதாநந்த யோகீசுவரர்
பாதக்குறடு படம்.

உலகத்திலுள்ள மானவ ஜனங்களெல்லோரும் எந்த ஸாஸ்த்திரங்களையும் வாசிக்காமல் ஜீவப் பிரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில் சொல்லியிருக்கும் யோகாப்பியாச

ஸ்ரீ வரசித்தி விநாயகர்.

வெண்பா.

அடையு மடியார்க் கருள்செய்யுங் கோவே
திடமோ டெனக்குமருள் செய்வாய்—படியிற்
பிரசித்தி பெற்றுள்ள பேரின்ப ஞான
வரசித்தி வாரணதே வா.

1. ஹம்ஸத்வனி, வாதாபி கணபதிம் என்ற மெட்டு. ஆதி.

பல்லவி

மூலாதிபவி மலா நலா ஜெக
மோன நாயகா முதியவர்தொழு சுகா (மூ)

அநுபல்லவி

மாலாதிபல தேவரும் நீயே
வந்தனை செய்வோர் மனத்தக லாயே
மாசிலாதவா வாசிமாதவா
தேசினுதவா ஆசியோதவா (மூ)

சரணம்

விதேக முத்தி யளித்திடு நாதா
வேதமந்த்ரமாய் விளங்கிடு நீதா
நிதானபிரணவ பாசுக போதா
நிமல நிரஞ்சன நித்யவிநோதா
இதோபதேச மஹாபிர மாதா
இஷ்டகாமியார்த்தந்தரு தாதா
சதாசலனமறு சத்திய பூதா
ஷட்விதகாரிய சமய வதீதா
மதாங்கயத்திரு துரிதம் முகவிபரீதா
மலிவுறு சஞ்சித வெம்பவசேதா
பதாம்புயப்புன் யப்பிரசாதா
பாவுசச்சிதா னந்த சங்கீதா (மூ)

2. நாட்டை, சுந்தர கணநாதா என்ற மெட்டு. ஆதி.

பல்லவி.

ஐங்கர நய ரூபா ஓம்
ஆதிமத்யாந்த அநாதி பராபரா (ஐ)

அநுபல்லவி

எங்கும் நிறைந்தவா யார்க்கும் சிறந்தவா
துங்க மிகுந்தவா துதிக்கத்தகுந்தவா (ஐ)

சரணம்.

தோற்றுமூலாதாரம் தொடங்கியே மிடத்திற்கும்
துலங்கிடுமதிகாரா
போற்றுமருவுருவே புனிதத்தவகுருவே
வேற்று மையின்றி யெங்கும் விளங்கியிருப்பவனே (ஐ)
சஞ்சித வினைகளைத் தானறுத் துயர்ந்திடும்
சாயுச்யந்தருபவனே
வஞ்சகபாசபந்த வாழ்க்கை தனையொழித்து
விஞ்சுடும்ஞானநெறி விளக்கியுணர்த்திடும் (ஐ)
ஒவ்வொரு ப்ராணிகளும் உட்கொள்ளும்
சுவாஸம்தினம் ஒன்றுக்கு அறுநூறே
செவ்வையுட னதனைத் தினமுமருந்திப்பசி
தீர்ந்திடும் பெரியோனே திருவடி தருவாயே (ஐ)
முன்னுமெதுவும் நீயே மூலப்பொருளும் நீயே
முத்திக்கு முதலோனே
அன்னை தந்தைகளற்றாய் அகிலமுழுதும் பெற்றாய்
தன்னில் தானாக வுற்றாய் சச்சிதானந்தன் றோழும் (ஐ)

3. கமாசு, மாதாட பாரதேனோ என்ற மெட்டு. மிச்ரஏகம்.

பல்லவி

வாரணமாமுகதேவா மைந்தனைக்காவாய் (வா)

அநுபல்லவி

பூரணமுனதடி போற்றினேன் முன்னம்வாவா (வா)

சரணம்

ஆரண அடிமுடி—யாகவே நிறைந்தவா
காரண குருவாகிக் கதியை யுணர்த்துஞ்சிவா (வா)
தத்துவங்களுக்கெல்லாம் சம்மந்த மில்லாதவா
சத்தசத்து மேயாகித் தானுய் விளங்குபவா (வா)
சித்தமலமறுத்துத் தீவினை தவிர்ப்பவா
நித்தியானந்தஞான நின்மல மகத்துவா (வா)
மூலக்கனலெழுப்பி முயலும் யோகோபகாரா
சாலவுந்தொழுதேற்றும் சச்சிதானந்தசாரா (வா)

4. கமாசு, சுஜனஜீவனு என்ற மெட்டு. ரூபகம்.

பல்லவி

முதல்வநாயகா கஜ முகவிநாயகா தேவ (மு)

அநுபல்லவி

உதவுமாசுகா சொல்லும் உறுதிவாசகா
உபயோகமா தபயோகமே சுபமதாகத்தா தேவ (மு)

சரணம்

உருவமாயும் அருவமாயும் ஒளிர்பராபரா யாரும்
ஓதுதற்குவாய்ந்திடாமல் ஓங்கு மோங்காரா
கருணையார்ந்தவா முற்றும் கவலைதீர்ந்தவா
நற்கதியேதரு நிதியேயிது தருவந்தாளுவாய் தேவ (மு)
அருமையான ஐந்தெழுத்தாய் அமர்ந்திருப்பவா செய்யும்
அஷ்டாங்கமா யோகருள்ளம் அடங்கி நிற்பவா
சர்வபூஜிதா சர்வ சமயனேசதா தினம்
சச்சிதானந்தன் நச்சு பேரின்ப நிச்சயகாரணு தேவ (மு)

---

5. கீர்வாணி, வாமுலொஸகி என்ற மெட்டு. ரூபகம்.

பல்லவி

மதகஜகணநாதநித்யா வரதாநி கிலாதிபத்யா (ம)

அநுபல்லவி

முதல்வமோ தகசாரா
மூலமெனும் ப்ரணவ வோங்காரா (ம)

சரணம்

நின்மல நிஜ ரூபநேர்த்தி
நீள்பவமதை நீக்குங் கீர்த்தி
சின்மயானந்தம் பெறு பூர்த்தி
சிருஷ்டி திதி சங்கார மூர்த்தி (ம)

பாசமென்ற திரையைநீக்கிப்
பசுபதியொன்று படவுண்டாக்கி
மாசறும்பர மானந்தந்தேக்கி
வாழ்வுபெற்றுய்ந்திட வைத்திடுதூக்கி (ம)

பஞ்சபூதா பஞ்சகோசா
பஞ்சக்ருத்ய பஞ்சாக்ஷரேசா
தஞ்சமென்றவர்க் கருளுநல்லாசா
சச்சிதானந்தமா தவவிஸ்வாசா (ம)

6. கமஹரப்பிரியா, ஸங்கல்பமே என்ற மெட்டு. ஆதி.

பல்லவி

தவசேகரா தத்துவாதிகாரா
சகலாத்மநயக்ருபா சாகரா (த)

அநுபல்லவி

சிவபாலகா ஜென்மவிமோசன
சின்மயானந்தாசுக சாசன (த)

சரணம்

ரேசகபூரக கும்பகவைபோக
நிகழ் பேரானந்த நிச்சய யோக
தாசரின்தாச சற்குணதியாக
சச்சிதானந்தவரத தெய்வீக (த)

7. நாட்டை, மூலாதாராநாத என்ற மெட்டு. ஆதி.

பல்லவி

பஞ்சாக்ஷரா விப்ர பஞ்சாற்புதாநாயகா
மகார சுகா மொழி
பகாவரிய தவ (ப)

அநுபல்லவி

அஞ்சாப்பவமிழைக்கும் வஞ்சாக்ரமமனத்தைப்
பஞ்சாய்ப்படவொழிக்கும்
பக்கு வத்தினைக் கொடுத்து நலமருள் (ப)

சரணம்

ஆதியந்தமில்லாத ஜோதிசுந்தாநீத
நீதிமுந்திடுவேத
நின்னையன்றி யுன்னவின்று ப்ரணவ (ப)
ஓயாக்கவலைதரும் மாயாவிநோதஜெக
நோயால் வருந்திடாமல்
நுட்பமொழி யைப்புகலு மொப்புயர்வறு (ப)
ஏகாதி காரநற்றி யாகாதொண்டருக்கருள்
போகா சச்சிதானந்த
பூஜித காரண சேவித பூரண (ப)

8. சுத்தபங்காளா, தொவினே ஜேவின என்ற மெட்டு. ஆதி

பல்லவி

கஜமாமுகமூ ஷிகவாகனனே (க)

அநுபல்லவி

கருதருபேரின்பங் காட்டுவிற்பனனே
நிஜரூபமகா நிரதிசயசுகா
நிமலநிராங்காரா நித்தியானந்தஜெகா (க)

சரணம்

அருளாருதாரா ஐம்பத்தோரக்ஷரா
அழியாவமரா அகிலசராசரா
தருணவிஜயா சமரசதற்பரா
சச்சிதானந்தாநித சரணஹரோஹரா (க)



ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதாநந்த யோகீஸ்வரர், கடப்பை.

ஸ்ரீமது, கலியுகாதி௵ 4966 ரத்தாக்ஷி௵ மாசிமாதத்திற்குச் சரியான இங்கிலீஷ் **1865-**௵ பிப்ரவரி௴ 16௳ குருவாரம் ஸிம்ஹ லக்நத்தில் ஜனனம்.

கடிகோட்டை, வீரபல்லி போஸ்டு, ராயசோடி தாலுக்கா, கடப்பை ஜில்லா. கடப்பை விட்டு இம்மலையடிவாரம் போய்ச் சேர்ந்தார்கள்.

Sri Paramahamsa Sachidananda Yogeeswarar,

Born on Thursday the 16th Feb. 1865, while the sun was in Leo

Gadikota, Viraballi Post, Cuddapah.

மான்தோல்மீது உட்கார்ந்து ஜபம் செய்வதனுல் உண்டாகும் பலன்.

ஓ சகோதரி! சகோதரர்களே!

யார், ஸந்தியாவந்தனம் அல்லது ஜபம், பூஜை, செய்து வந்தபோதிலும், மணை (பலகை) மேல் மான்தோல்போட்டு அதன்மேல் வெள்ளை வேஷ்டி மடித்து விரித்து நிஷ்காம்யமாய் ஜபம் செய்ய வடக்குமுகமாய் உட்கார்ந்து, ஜபம் செய்து வரவேண்டும். அப்படிக்குச் செய்யாமல், பூமியின் மீதோ மணை (பலகை) யின்மீதோ அல்லது வேஷ்டியின் மீதோ உட்கார்ந்து ஜபம் செய்துவந்தால் ஜபத்தின் பலனை, ஊசியை காந்தம் இழுத்துக்கொள்வதுபோல் பூமி, புருஷன் செய்யும் ஜபத்தை இழுத்துக் கொள்ளும். மான்தோல்மீது உட்கார்ந்து ஜபம் செய்து வந்தால், ஜபத்தின் பலனை பூமி இழுத்துக் கொள்ள சக்தியிராது. ஆதலால், மான்தோல் மீது உட்கார்ந்து ஜபம் செய்ய வேண்டுமென்று, ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல்லியிருக்கின்றுர். மான்தோல் மீது உட்கார்ந்து ஜபம் செய்ய வேண்டுமென்று ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லிய ரஹஸ்யம் இதுவேயாம். இந்த ரஹஸ்யம் குருவினுல் தெரிந்துகொள்ளும் பொருட்டு ஸ்ரீ கிருஷ்ண பகவான் வெளிப்படுத்தவில்லை; அப்படிப்பட்ட குரு ரஹஸ்யம் உங்களுக்கு இந்நூல் மூலமாய்த் தெரிவித்தோம். மான்தோல், எந்ததோலாயிருந்த போதிலும் சரி. அதன்மேல் உட்கார்ந்து ஜபம் செய்யலாம். புள்ளி மான் தோலே வேண்டுமென்பது அனுவஸ்யம். மான்தோல் அநேக இடங்களில் கிடைக்கமாட்டா. ஆதலால், ஸந்தியா வந்தனம், ஜபம், அல்லது பூஜை செய்து வரப்பட்டவர்

களுக்காக ஸ்ரீ சுவாமிகள் நந்தலூரில் மான்தோல் விற்பனை செய்ய லோகோபகாரார்த்தமாய் ஏற்பாடு செய்திருக்கின்றார்கள்: இந்தியாவிற்குள் மான்தோல் வாங்கப் பட்டவர்கள், ஒவ்வொரு தோலுக்கு ரூபா 5-0-0 முன்னதாய் அடியிற் கண்ட விலாசத்திற்கு மணியார்டர் மூலமாய் அனுப்ப வேண்டும். பினங்கு, சிங்கபூர் முதலாகிய அந்நியதேசங்களிலுள்ளவர்கள் மான் தோலுக்காக ரூபா 6-0-0 சரியான அவர்களின் விலாசத்துடன் கடிதமும் மணியார்டரும் அனுப்பவேண்டும். போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டாம். மேற்படி தோல் வீ. பீ. மூலமாய் அனுப்புவதில்லை. ரூபா அனுப்பியவர்களுக்கு எந்த சிலவுகளும் இல்லாமல் தபால் மூலமாய் மான்தோல் ரிஜிஸ்டர் செய்து அனுப்பிவிடுவார்கள்.

மான்தோல் விற்பனை செய்யும் விலாசம்:—

G. ரங்கநாதன் பிரதர்ஸ்

கோர்ட்டு வியூ,

நந்தலூர் போஸ்டு, கடப்பை ஜில்லா.

G. RANGANATHAN BROS.,

Court View, Nandalur,

Cuddapah D

விஷய அட்டவணை.

பக்கம்.

1. நூல் பிராரம்பம் I
2. முக்கிய கவனிப்பு ஸ்ரீ வரசித்தி விநாயகர் வெண்பா II
3. மான்தோல்மீது உட்கார்ந்து ஜபம் செய்வதனுல் உண்டாகும் பலன் VII
4. விஷய அட்டவணை IX
5. படங்களின் அட்டவணை XIII
6. விற்பனைக்குத் தயாராயிருக்கும் ஸ்ரீ சுவாமிகளின் படங்கள் XV
7. பொருளுதவிசெய்த புண்ணிய ஸ்திரீ புருஷ தர்மாத் மாக்களின் ஜாபிதா XIX
8. மானச பூஜை L
9. முகவுரை LVIII
மலச்சிக்கல் நிவாரணே செய்யும் அன்னரஸ ஸஞ்சீவி LXXVI
10. சிறப்புப்பாயிரம், சாற்றுக்கவி ... LXXVIII
11. ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம் ஸ்ரீ நிற்குண ஸத்குரு ஸ்துதி. I
12. சம்சார பந்தம் புருஷனைத் தொடர்வது ... 23
13. பிணத்தைப்பார்த்து வியசனப் படுபவர்களின் சோகம் நிவாரணே அடைய உபதேசித்தல் 38
14. மனேலயத்தால் சகலமும் சித்தியடைதல். சஞ்சித பிராப்த ஆகாம்ய கர்மங்கள் 41
15. பிரபஞ்ச விரக்தி மார்க்கம் 63
16. தாரேஷணே 77
17. புத்திரேஷணே 80
18. தனேஷணே 92
19. காமசொரூபம் 102
20. அமாவாஸ்யையில் பிதுர்தர்ப்பணம் விடும் மந்திரம் ... 126
21. அன்னம் மந்திரபூர்வகமாய்ச் சுத்திசெய்து சாப்பிடு வதனுல் உண்டாகும் பலன் 133

பக்கம்.

22. சிருஷ்டிக்குமுன் இந்தப் பிரபஞ்சம் எவ்விதமாயிருந்தது 140
23. சரீர லக்ஷணம் சாங்கிய விசாரணை 143
24. நாடிகளும் அதன் குணங்களும் 150
25. சரீரத் திரயம் 153
26. பஞ்சகோச விவரங்கள் 158
27. பஞ்சீகரணம் 170
28. ஆலதேக பஞ்சீகரண அந்தக்கரணங்கள் ... 172
29. சாத்விக ராஜச தாமசமெனக் குணங்கள் மூன்றும் ... 175
30. கர்ப்பத்தில் பிண்டம் தரிப்பது 176
31. உபநிஷத்துக்களின் தாத்பரியம் 198
32. ஜாக்ரதை சொப்பன சுஷுப்தி துரீயாவஸ்தைகள் ... 204
33. ஜகத்சிருஷ்டி மனோசிருஷ்டி லயம் 206
34. ஸங்கல்பத்தால் உண்டான சரீர விருக்ஷத்தில் ஜீவாத்மா பரமாத்மா நிவசிப்பது 219
35. ஆத்மா தத்துவங்களோடு கூடிப் பிறந்திறந்து வினைப் பயனை அனுபவிக்கும் வகை 224
36. தத்துவ பரிசோதனை 232
37. சிஷ்யன் தத்வங்களைப் பரிசோதனை செய்தல் ... 261
38. யார் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்கள்? ... 269
39. அவதூதர்களுக்கு ஜாதி பேதமில்லை 310
40. ஜீவன் முக்தன் லக்ஷணம் 313
41. சம்சாரவாசனை வாசனாத் திரயங்கள் 327
42. பந்தமோக்ஷ ஆத்மா அநாத்மா லக்ஷணங்கள் ... 342
43. சரசாஸ்திரம் 359
44. சுவாசத்தை நாசிகளில் மாற்றும் விதம் ... 360
45. ஜீர்ணஸக்தி ஆயுர்விருத்தி 365
46. பற்பொடியினால் உண்டாகும் குணம் 366
47. பல்நோய் பல் ஆட்டம் நிவாரணை 371
48. வியாதிகளை மேற்கிளம்பச்செய்வது எது? ... 372
49. பரமசிவன் மான் மழுகு உடுக்கை சூலத்துடனிருந்து காக்ஷிதர அழைப்பது 376

பக்கம்.

50.	உண்மை விளக்கம்	381
51.	தில்லை நடராஜன் நடனம் செய்துகாட்டும் ரஹஸ்யம்	382
52.	பிராணுயாமாப் பியாசத்தினுல் பிராணன் சரீரத்தி லிருந்து விடுபடுதல்	391
53.	உஷ்ணம் தணிக்க ஸ்நானம் செய்யும்முறை ...	456
54.	வெட்டைச்சூட்டைத் தணிப்பதற்குக் காப்பித்தூளுக் குப் பதில் தூள்	457
55.	வாசியை யடைக்கி யடையும் பலன்	525
56.	யோகாப்பியாச காலத்தில் இந்நூலாசிரியருக்கு உண் டாகிய தேகபாதை	527
57.	உபநயந காயத்ரீ ரகஸ்யம்	536
58.	உபநயந காயத்ரீ மந்த்ரோபதேசம்	554
59.	பிராணுயாம பிராணலயம்	563
60.	தசவித நாதங்கள்	569
61.	மனம் உதிக்கும் இடத்தை உபதேசித்தல் ...	580
62.	மனே ஓட்டத்தை நிறுத்த உபாயம்	582
63.	கைக்குறி சிதாகாசத்தில் மனதை லயப்படுத்தல் ...	591
64.	மனே ஓட்டத்தை நிறுத்திக் காட்டுதல் ...	598
65.	மனக்குரங்கை ஈசுவரனிடத்தில் அர்ப்பணம் செய்தல்	601
66.	இரவில் ஈசுவரனைத் துதிசெய்து சயனித்தல் ...	604
67.	ஏழு சக்கரங்களிலும் சுவாசம் நடந்து நம்முடைய ஆயுட்பாகம் காட்டுதல்	610
68.	ஹம்ஸ சூத்திர ரகசியம்	618
69.	மனதின் சுபாவம்	625
70.	பந்தம்பரியினுடையவும், திருவண்ணுமலையினுடை யவும் அக்ஷரார்த்தம்	642
71.	பந்தத்திற்கு மனதே காரணம்	652
72.	பிரம்ம சூத்திரமே யஞ்ஞோபவீத தாரணே ...	661
73.	இதுவே சிவராஜயோக ஸமாதி இதை ஜபம் செய் யுங்கள்	663
74.	ரிஷிகள் ஆஹாரமில்லாம லிருப்பதற்குக் காரணம் ...	695

பக்கம்.

75.	ஸோஹம் மந்திரஜப கண்டனே	704
76.	அஸம் பிரஞ்ஞாத சமாதி...	705
77.	சிதாகாசம் எது? நிர்விகல்ப சமாதி எது? ...	709
78.	ஆத்மா மாயா சக்தியினல் பந்தப்பட்டு சம்சாரத்தை அனுபவிக்கின்ருன்	713
79.	மூத்திரப்பை தீனிப்பை குடல்களைக்கழுவி காயசுத்தி செய்யப் பழகுதல்	753
80.	கல்பம் எது? அமரி எது?	758
81.	பஞ்ச முத்திரைகளின் லக்ஷணங்கள்	763
82.	ஸ்ரீ ராமாயணத்தின் அந்தரார்த்தம்	766
83.	ஸ்ரீராம மந்த்ரோபதேசம்...	770
84.	தன் நிஜசொரூபத்தைத் தெரிந்துகொள்ள சிஷ்ய னுக்கு உபதேசித்தல்	779
85.	சிஷ்யன் தன் சுவானுபவத்தை ஆசாரியரிடம் சொல் லுதல்	791
86.	பரப்பிரம்மத்தின் ரூபம் எப்படிப்பட்டது ...	795
87.	மனம் லயப்பட மூன்ரும்முறைஉபதேசித்தல் ...	801
88.	மௌனம் எது? சமாதி எது?	808
89.	சாஸ்திரவிசாரணை ஜபதபங்கள் இவைகளினல் உண் டாகும் பலன்	810
90.	பரமஹம்ஸன் எவன்	816
91.	பரமாத்மா சரீரத்தில் குடியிருந்து கிளம்பிவிடுதல் ...	819
92.	கர்மவியாதியை வைத்தியமூலமாய் போக்கடிப்பத ஞல் உண்டாகும் கெடுதி	844
93.	பஞ்சாக்ஷர மந்திரத்தினல் உண்டாகும் பலன் ...	846
94.	பஞ்சாக்ஷர மந்த்ரோபதேசம்	853
95.	ஓம் என்னும் மஹா மந்திரத்தின் ரஹஸ்யம் ...	858
96.	பராபர வஸ்துவை வேதங்கள் துதிசெய்வது ...	874
97.	ஞானமடையும் மார்க்கம்	876
98.	அறுதியுரைத்தல்	890
99.	புத்தக விளம்பரம்	891

படங்களின் அட்டவணை.

		படம் அட்டவணை.
1.	ஸ்ரீ சித்திவிநாயகர் படம்	I
2.	இந்நூலாசிரியர் படம்	VII
	ஸ்ரீ சுவாமிகளின் பாதக்குரடு படம்	XVII
	கடிகோட்டை மடம் நான்குமலை படம் ...	XVIII
3.	கணபதி, விஷ்ணு, பார்வதி, சரஸ்வதி, யோகாக்நி ஜ்வாலை உண்டாக்கும் படம்	L
	ராபட்ஸன்பேட்டை மடாலயத்தில் பிடித்த சித்தாசன வீராசன படம்	I
4.	கயறு சர்ப்பமாகக் காணப்படும் படம் ...	29,30
5.	ஸ்ரீ ஏகாம்பரநாதர்படம்	43
6.	ஸ்ரீ கிருஷ்ணன் காளிங்கன் என்னும் சர்ப்பராஜன் கர்வத்தை அடக்கும் படம்	73
7.	சிசு ஈசுவரனைக் கும்பிட்டுக்கொண்டு வெளிவரும்படம்	188
8.	ஸ்ரீமந் நாராயணமூர்த்தி ஜலத்தில் ஆலிலையின்மீது ஸயனித்திருக்கும் படம்	201
9.	சுவாசத்தை நாசிகளில் மாற்றும் படம்... ...	361
10.	பரமசிவன் காக்ஷிதர அழைக்கும் படம் ...	376
11.	நடராஜன் நடனம் செய்யும் படம்	382
12.	சுஷூம்நா நாடி (முதுகெலும்பு வெள்ளை நரம்பு) படம்	385
13.	காற்றுப்பை தீனிப்பைகளைக் காட்டும் படம் ...	409
14.	சின்முத்திரையுடன் நிஷ்டையிலிருக்கும் படம் ...	419
15.	ஸ்ரீ சங்கரர் படம்	421
16.	குடல் வயிற்றில் சுற்றிக்கொண்டிருக்கும் படம் ...	464
17.	ஜலத்தின்மீது சின்முத்திரையுடன் ஸயனித்திருக்கும் படம்	481
18.	ஜலத்தின்மீது பத்மாசனத்துடன் ஸயனித்திருக்கும் படம்	493
19.	நுரை ஈரல் படம்	569

படம் அட்டவணை.

20. கெட்ட நல்ல ரத்தங்கள் ஓடும் நரம்புகள் படம் ... 570
21. முதுகெலும்பில் சுஷூம்நா என்னும் வெள்ளை நரம்பு படம் 572
23. ஸ்ரீ ரங்கநாதர் படம் 580
24, ஸ்ரீமந் நாராயணமூர்த்தி படம் 584
வாய்த்திறந்து மனோ ஓட்டத்தை நிறுத்திக்காட்டும் படம் 598
25. ஸ்ரீ பார்த்தசாரதி பெருமாள் படம் 623
26. 'ஸோஹம்' மந்திரம் ஜபம் செய்யும் படம் ... 681
27. கைக்குறியினுட் காட்டிய ஆகாசத்தில் மனதை லயப் படுத்த உபதேசிக்கும் படம் 692
28. ஜீர்ணகோசம் படம் 700
29. மூத்திரப்பை தீனிப்பை குடல் இவைகளை கழுவி காயசுத்தி செய்யப் பழகும் படம் 754
30. இருதய கமலத்தில் பரமாத்மா நிவசிக்கும் படம் ... 822
31. பஞ்சாக்ஷர மந்திர சக்கரம் 854

விற்பனைக்குத் தயாராயிருக்கும்

ஸ்ரீ சுவாமிகளின் படங்கள்.

		ரூ.	அ.
1.	1923ஹு மேமீ 29உ ராபட்ஸன்பேட்டை ஸச்சிதானந்த மடாலய ஸபையில், கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீசுவரர் சின்முத்திரையை விரல்களால் பிடித்து, வீராசனத்துடன் இருக்கும்போது பிடித்த புல் ஸயிஸ் போடோ காஷாய வஸ்திரத்துடன் இருப்பது. விலை....	2	0
2.	மேற்படி மடாலயத்தில் ஸ்ரீ சுவாமிகள் சின்முத்திரையைப் பிடித்து சித்தாசனத்துடன் இருக்கும்போது பிடித்த புல் ஸயிஸ் போடோ	2	0
3.	மேற்படி மடாலய உபந்யாஸ ஸபையில் ஸ்ரீ சுவாமிகள் சிதாகாஸ குறியை விரல்களால் காட்டும்போது பிடித்த புல்ஸயிஸ் போடோ காஷாய வஸ்திரத்துடன் இருப்பது விலை	2	0
4.	சின்முத்திரையுடன் யோகநிஷ்டையில் இருக்கும்போது பிடித்த புல்ஸயிஸ் போடோ.	2	0
5.	ஸுகாசனமாய் யோகநிஷ்டையில் இருக்கும்போது பிடித்த போடோ. விலை	2	0
6.	ஸ்ரீசுவாமிகள் மூத்திரப்பை தீனிப்பை குடல்களை இரண்டுவிதங்களாய்க் கழுவி, காயசுத்தி செய்யும்போது பிடித்த இரண்டு போடோ.	4	0
7.	சுவாஸம் மாற்றுவதைக் காட்டும்போது பிடித்த போடோ. விலை	1	8

		ரூ.	அ.
8	போகப்பட்டையுடன் நிஷ்டையில் இருக்கும் போது பிடித்த போடோ. விலே	1	8
9.	சென்னை வியாசர்பாடி ஆசிரமத்தில் வீராசனத்துடன் நிஷ்டையி லிருக்கும்போது பிடித்த போடோ விலை	1	8
10.	பத்மாசனத்துடன் ஜலத்தின்மீது சயனித்திருந்தபோது பிடித்த போடோ. விலை	1	8
11.	சின்முத்திரையுடன் ஜலத்தின்மீது சயனித்திருந்தபோது பிடித்த போடோ. விலை	1	8
12.	சுவாமிகள் 20-வயதில் பிடித்த போடோ	1	8
13.	,, 25-வயதில் பிடித்த போடோ.	1	8

மேல்கண்ட படங்கள் வேண்டுபவர்கள்:—

ஸதானந்தன்,

வேப்பேரி போஸ்ட்டு, சென்னை.

என்று எழுதிப் பெறலாம். புஸ்தகங்கள் இக்கம்பெனியில் விற்பதில்லை. சுவாமிகளின் படங்கள் மாத்திரம் விற்கப்படும்.

சம் சிவராஜயோகம் பஞ்சாக்ஷரம் முதலாகிய இன்னும் அனேக ரகஸ்யங்களை ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர் இந்நூலில் எழுதி, இப்போது எட்டு பதிப்பு வரையில் வெளிவந்திருக்கின்றது. இந்நூலாசிரியராகிய மேற்படி சுவாமிகள் தேச சஞ்சாரார்த்தமாய்ப் புறப்பட்டு, தஞ்சாவூர் மதுரை கோயம்புத்தூர் நீலகிரி சேலம் முதலாகிய ஜில்லாக்களும், அதைச்சார்ந்த தாலூக்கா கிராமங்களும் சென்று, அங்கங்கு வேதங்களிலுள்ள தேவரஹஸ்யங்களையும், யோகாப்பியாசம் செய்யவேண்டிய வழியையும், ராஜயோகம் செய்யும் ரஹஸ்யங்களையும் உபந்யாசமூலமாயும், உபதேச மூலமாயும் எளியநடையில் தெரிந்துக் கொள்ள உபதேசித்து, நமது முன்னோர்கள் மிகவும் ரஹஸ்யமாய் வைத்திருந்த வேதாந்த ரகஸ்யங்களையெல்லாம், வெட்டவெளியாய் உபந்யாசம் செய்துவந்தார். அச்சமயம் கோயம்புத்தூர் ஜில்லா, தாராபுரம் தாலூக்கா, கண்மலியம்பட்டி, இன்னும் அதைச்சார்ந்த சில கிராமத்திலுள்ள ஸ்திரீகளும் புருஷர்களும், தம் தம் கிராமங்களுக்கும் வரவேண்டுமென்று இந்நூலாசிரியரை அழைத்துக்கொண்டுச் சென்றார்கள். மேற்சொல்லிய கிராமத்தில் பழனிசாமி கவுண்டர் பார்யாள், ஸ்ரீமதி சௌபாக்கியவதி செல்லம்மாள் மேற்படி சுவாமிகளால் இயற்றிய நூல்களை இதற்குமுன் வாசித்து ஆனந்தமடைந்திருந்தபடியால், மேற்படி சுவாமிகள் தம் கிராமத்திற்கு எழுந்தருளியதற்காக மிகவும் சந்தோஷமடைந்து சகல உபசாரங்களும் செய்து, எதிரில் காட்டியிருக்கும் ☞ இறநூறு ரூபா எடையுள்ள வெள்ளிப் பாதக்குரட்டை செய்வித்து, 1923௵ மார்ச்சி௴ 12உயில் ஈசுவரார்ப்பணமாய்ச் சமர்ப்பிததார்கள்.

ஆதியில், ருஷிகளும் சக்ரவர்த்திகளும் அரசர்களும், ஆசா பாசங்களையெல்லாம் அறுத்து மனோவேகத்தை

அடக்கி, ஜீவாத்மாவை பரமாத்மாவில் ஐக்கியம் செய்ய எண்ணி, ராஜ்ஜியங்களைவிட்டு மனித சஞ்சாரமில்லாத கானகம் (காடு) சென்று விட்டதுபோல், இந்நூலாசிரியராகிய மேற்படி சுவாமிகள் கடப்பைவிட்டு, கடப்பைக்கு நாற்பது மையில் தூரத்திலிருக்கும் கடிகோட்டை யென்னும் நான்கு மலையடிவார மத்தியில் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். அங்கு ஓர் மடம் கட்டி அதில், ஸ்ரீ ஏகாம்பரீசுவரரை பிரதிஷ்டை செய்யப்போகின்றார்கள். மேற்படி கடிகோட்டை யென்னும் மலையடிவாரத்திற்குப்போக சரியான பாட்டை இல்லாததனால், சென்னைக்கு வடக்கு 140-மையில் தூரத்தில் நந்தலூர் ரேயில்வே ஸ்டேஷனில் இருந்து கடிகோட்டைப் போக 17-பதினேழு மையில் தூரம் பாட்டை போடுவதற்கும், மடம் கட்டுவதற்கும் ரூபா அதிகம் வேண்டும்: ஷை கடிகோட்டையில் கட்டும் மடமும், நான்கு மலைகளும் ☞ எதிரிலிருக்கும் படத்தில் பார்க்கலாம். இக்கட்டட தர்மத்திற்கு பொருளுதவிசெய்யும் ஸ்திரீகளும், புருஷர்களும் அடியில்கண்ட விலாசத்திற்கு மணியார்டர் மூலமாய் ரூபா அனுப்பினால் அவர்களின் பெயர்களையெல்லாம் ரிஜிஸ்டர் செய்து ஒன்பதாம் பதிப்பு "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்ய"த்திலும், நான்காம் பதிப்பு "ஸ்ரீ பகவத்கீதை"யிலும், மூன்றும் பதிப்பு "ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திர"த்திலும் சேர்க்கப்படும்.

ரூபா அனுப்பவேண்டிய விலாசம்,

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர்
கடிகோட்டை, வீரபல்லி போஸ்டு,
ராயசோடி தாலூக்கா, கடப்பை ஜில்லா.

இவ்விலாசத்திற்கு அனுப்பலாம்.

VIEWS OF GADIKOTA MUTT AND MOUNTAINS.

SOLDEN & CO., PRINTERS, MADRAS, S.E.

கடிகோட்டை மலையடிவாரத்தில் ஸ்ரீ ஏகாம்பரீசுவரர் மடாலய கட்டடம் கட்ட இந்தியாவிலுள்ளவர்களும், சிலோன், இரங்கூன், பினங்கு, **F. M. S.** சிங்கப்பூர் முதலாகிய அன்னிய தேசத்திலுள்ளவர்களும் பொருளுதவி செய்த, புண்ணிய ஸ்திரீ புருஷ தர்மாத்மாக்களின் ஜாபிதா.

1923௵ மார்ச்ம௴ முதல்
1925௵ மேம௴ 15௳ வரையில் வந்த
வரவுகள்.

		ரூபா.
1	பெரிய தேசாசாரி, சின்ன தேசாசாரி, குண்ருஜு குப்பம் கிராமம், நகரி போஸ்ட்டு ...	60
2	T. R. நாராயணசாமி பிள்ளை, போஸ்டு மாஸ்டர், கொடுமுடி	25
3	சீதாலக்ஷிமியம்மாள், இராஜம்மாள், 48-40 வது தெருவு, இரங்கூன்	20
4	சி. ரு. பொன்னுசாமி, Field Coy., Q. V. O., Madras & S. M.	20
5	G. R. கிருஷ்ணராவ், மீனாக்ஷிபுரம், ஸரஸ்வதி ஸ்கூல் மானேஜர், மதுரை	15
6	சிவானந்தன், பச்சபாளையம், திருச்சங்கோடு தாலுக்கா	15
7	P. S. தங்கவேலு முதலியார், P. மாணிக்கம் பிள்ளை M. & M. S. ரெயில்வே, அரிசிக்கரை ...	15
8	ஜமேதார் சக்ரபாணி, Q. V. O., M. & S. M., பெங்களூர்	15
9	K. R. ராமசாமி, P. K. P. S. பரம், சகேங், அப்பர் பர்மா	11
10	பூ. நா. சு குப்புசாமி அய்யர் அண்டு ஸன்ஸ், சீதா ராமையர், மதுரை	10
	Carried over.	206

		ரூபா.
	Brought forward.	206
11	இராமானுஜன், பச்சபாளையம், திருச்சங்கோடு தாலூக்கா ...	10
12	இ. இராமசாமி செட்டி, மேளியப்பள்ளி, திருச்சங்கோடு தாலூக்கா	10
13	இ. மு. பழனிவேல் கவுண்டன், குட்டிக்கா பாளையம், திருச்சங்கோடு தாலூக்கா	10
14	இராகவாராமானுஜர், பண்ணைபாளையம், திருச்சங்கோடு தாலூக்கா	10
15	சின்னய்ய கவுண்டன், பூலாங்காடு, திருச்சங்கோடு தாலூக்கா	10
16	இ. மு. குலசேகரன், பண்ணிகுத்திப்பாளையம், திருச்சங்கோடு தாலூக்கா	10
17.	மேற்படியார் தம்பி, இ. மு. கேசவன் ...	10
18	செ. மு. சோமசுந்திரம் செட்டியார், ரயிஸ் மில், திண்டிவனம்	10
19	T. S. சுப்பய்ய கோனர், பழய சன்னதி தெருவு, திருநெல்வேலி ஜில்லா	10
20	K. ராமசாமி, இண்டியன் ஸ்டேஷன் ஆஸ்பத்திரி, மேமியோ, இரங்கூன்	10
21	V. அமுர்தம் நாயுடு, 16, பீச்சு ரோட்டு, கொளும்பு, சிலோன்	10
22	S. காளியப்ப பிள்ளை, 76, பீச்சு ரோட்டு, கொளும்பு, சிலோன்	10
23	S. T. P. சிதம்பரம் பிள்ளை, தேவகோட்டை ...	10
24	C. அருணாஜலம் பிள்ளை, பெண்ஷன் போலீஸ் கானிஸ்டேபில், ஆ பத்திரி தெருவு, முத்துப் பேட்டை, தஞ்சாவூர் ஜில்லா	10
25	லக்ஷ்மி நாராயணன், சிந்தலபட்டடை, நகரிபோஸ்ட்டு	10
26	தர்மம்மாள், 48 - 40வது தெருவு, இரங்கூன் ...	10
	Carried over.	366

Brought forward. 366

27 நெ. 2143, கிருஷ்ணசாமி முதலியார் 2-கம்பெனி, கன்னி கோவில் தெருவு, இராயவேலூர் ... 10

28 S. R. ராமய்ய முதலியார் வீரகொளம் பத்தூர்கிராமம், தென்காசி, திருநெல்வேலி ஜில்லா ... 10

29 லக்ஷ்மண முதலியார், நெ. 2-கம்பெனி, B. டிவிஷன், ஜண்டோலா, N. W. F. F. 10

30 K. V. முனுசாமி நாயுடு, பினங்கு சென்றபோது இந்தியாவிலிருந்து 5-1-24ல் வந்தது ... 10

31 P. S. தஙகவேலு முதலியார், வொர்க் மேஸ்திரி, M. & S. R., அல்னுவர் போஸ்ட்டு, தார்வார் ஜில்லா 10

32 K. நடேசம் பிள்ளை, கிளார்க், தாலூக்கா போர்ட்டு ஆபீஸ், பெரும்பலூர், அரியலூர் போஸ்ட்டு ... 10

33 M. S. சீனிவாசன், அசிஸ்டெண்டு பார்சல் கிளார்க்கு, G. I. P. R. விக்டோரியா டர்மினெஸ் ஸ்டேஷன், பொம்பாய் 10

34 K. முத்துகிருஷ்ணன் பிள்ளை, No. 2652, B. Dn. சிக்னெல்ஸ், Quetta 10

35 லக்ஷ்மண முதலியார், வீரகளம்பத்தூர் போஸ்ட்டு, தென்காசி தாலூக்கா 10

36 P. மாரிமுத்து, நெ. 104., F. M. S. R., தைபிங். ... 10

37 A. M. வீரய்ய பண்டிதர், வைத்யம், நெ. 2, Kuala Kettil Kedah, F. M. S. 10

38 V. A. கோவிந்தராஜுலு முதலியார், படாணி வர்த்தகம், சின்னகடை, நெல்லூர் 10

„ மேற்படியார் 3-5-25-ல், இரண்டாம் முறை கொடுத்தது 10

39 K. தில்லையம்பலம், Raub Pohang F. M. S. ... 10

40 R. நாராயணசாமி அய்யர், Forestor பாலசமுத்திரம் அட்டகோட்டி போஸ்ட்டு, பழனி ... 10

41 K. தம்பைய்ய, P. M. D. Nuwara Eliya, Ceylon ... 10

Carried over. 526

	Brought forward.	526
42	சிவன்மலை கங்காணி, Sungei Puloh Estate Kuala-Selangor F. M. S.	10
43	ஆ. மி. கு. கோவிந்தசாமி ராஜா, ஸ்ரீரங்கம், திரிச்சினாப்பள்ளி	10
44	மு. ரா. செ. ரா. வன்னியப்ப செட்டியார், கண்டரமாணிக்கம், ராமநாதபுரம் ஜில்லா ...	10
45	முத்து. பெரிமுத்து ராமஞ்செட்டியார், புதூர். கண்ணங்குடி போஸ்ட்டு, ராமநாதபுரம் ஜில்லா ...	10
46	தெ. மு. கருப்பஞ் செட்டியார், ஆற்பநாதபுரம் ஆவுடையார்கோவில் போஸ்ட்டு, தஞ்சாவூர் ஜில்லா ...	10
47	அ. சு. ப. சோமசுந்தரம் செட்டியார், மிதிலைப்பட்டி ராங்கியம் போஸ்ட்டு, புதுக்கோட்டை ஜில்லா ...	10
48	ப. ரா. வெ. கி. வீரயஞ் செட்டியார், அறந்தாங்கி போஸ்ட்டு, தஞ்சாவூர் ஜில்லா... ...	10
49	A. M. பொன்னுசாமி ராஜா தெற்குத் தெருவு, ராமநாதபுரம்	10
50	M. அப்பாதுரை உபாத்தியாயர் Anglo Chiresen chool, சிங்கப்பூர்	10
51	A. வடிவம்பாள், பினாங்கு சென்றபோது இந்தியாவி விருந்து 5-1-24ல் வந்தது	6
,,	S. சிதம்பரம் பிள்ளை, Asst Station Master S. I. R. Punalur Post Travancore	6
52	R. சிங்காரவேலு முதலியார், அசிஸ்டெண்டு ஸ்டேஷன் மாஸ்டர், M. & S. R., ராமகிரி ...	5
53	நெ. 3986, முனியப்பன், சிப்பாய், C. I. கம்பெனி, சிக்நெல், ஸெண்டர் டிப்போ, ஜப்பல்பூர் ...	5
54	வீராசாமி, டாடா பங்களா, கல்யாண் ...	5
55	சீதாமுத்துப் பிள்ளை, ஸன்றி ஷாப்பு, நெ. 29, மார்கெட் தெருவு, பினாங்கு	5
	Carried over.	648

Brought forwaad. 648

56 S. கணபதி, ரெயில்வே ஸப் அசிஸ்டெண்டு இஞ்சினீர், மூப்பன், மோல்மின் 5

57 2148, சாபர் கிருஷ்ணசாமி, 2-கம்பெனி, டாரா இஸ்மால் கான், வஜிரிஸ்டான் 5

58 மாயாண்டிப் பிள்ளை குமாரன் சிதம்பரம் பிள்ளை, தெற்குத் தெருவு, சோழவந்தான் போஸ்ட்டு, மதுரை ஜில்லா 5

59 M. வாசுதேவன், டாடா பங்களா, கல்யாண் ... 5

60 வேயர், நெ. 7. சர்வே பார்ட்டி. சிவகங்கை, ராமநாதஞ் ஜில்லா 5

61 சிக்னெல் நெ. 2148, கிருஷ்ணசாமி, B. டிவிஷன் சிக்னெல் செக்ஷன், Quetta 5

62 P. T. லக்ஷ்மண நாயுடு, மடன் மர்ச்செண்டு கீழ்வாசல் தஞ்சாவூர் 5

63 N. A. பொன்னுராஜா, தெற்குத் தெருவு, ராமநாதபுரம் 5

64 P. S. தங்கவேலு முதலியார், F. M. S. Rv , Alnavar Post, Dharway Dist 5

65 அ. நா. பொன்னுசாமி ராஜு, தெற்குத் தெருவு, ராமநாதபுரம். இவர் மூலமாய் ராமநாதபுரம், வி. அழகிய நாகலிங்கம் பிள்ளை, வரவு 5

66 மேற்படியார் மூலமாய் வையூர் S. தெய்வநாயகம் பிள்ளை, வரவு 5

Total. 703

கடிகோட்டை மலையடிவாரத்தில் ஸ்ரீ ஏகாம்பரீசுவரர் மடாலய கட்டடம் கட்ட, S. S. பினாங், சிங்கப்பூர், மலாகா முதலாகிய நாடுகளுக்கும், F. M. S. கிட்டா, பேராக், கோலசிலாங்கூர், ஜோகூர், பஹாங் முதலிய மலாய் நாடுகளுக்கும் அடியேன் சென்றிருந்தபோது அந்நாடுகளிலுள்ள புண்ணிய ஸ்திரீ புருஷ தர்மாத்மாக்கள் பொருளுதவி செய்தவர்களின் ஜாபிதா:—

1924௵ ஜனவரி௴ முதல்
செப்டம்பர் மாதம் 17உ வரையில் வந்த
வரவுகள்.

		வெள்ளி. $
1	மு. குமாரசாமி, கோலாலம்பூர், F. M. S. ...	150
2	நகரத்தார், மலாகா, S. S.	150
3	நகரத்தார், மூவார், ஜோகூர்	101
4	நா. நாகமுத்து சேதுவராயர், வங்குசாரோட்டு, 15-ங் கட்டை, கோலாலம்பூர், F. M. S. ...	80
5	த. மு. மாயாண்டி செட்டியார், வத்துரோட்டு, 2½ கட்டை சென்துல், கோலாலம்பூர் F. M. S. ...	65
,,	S. சின்னதுரை, ரிவிடெண்டு ஆபீஸ், கோலா லிப்பிஸ், F. M. S , பஹாங் இவர் மூலமாய் கிராணிமார்கள் (Clerks) கொடுத்தது	65
6	சி. தியாகராஜன், பண்டிதர், நெ. 31, ஆச்சாரோட்டு, சிங்கப்பூர் ...	62
7	பேட்டாம் தோட்டம் அண்ணாவிமுத்து நாடார் வகயரா கிராணிமார்கள், (Clerks) கப்பல் பத்தாஸ், கிட்டா	54
8	நகரத்தார், வத்து பஹாரு, ஜோகூர் ...	51
9	அ. ரு. ரு. ம. சொ. பினாங்கு ஸ்டிரீட்டு, பினாங்கு ...	50
	Carried over.	828

		வெள்ளி. $
	Brought forward.	828
10	V. சீனிவாசம் பிள்ளை, செகிர்டெரி, இந்து சங்கம்; செந்துல், கோலாலம்பூர், F. M. S., (கடிகோட்டை மடாலயத்திற்கு ரத்ன கம்பளம் தர்மம் செய்தது) ...	50
11	A. சிற்றம்பலம், ஸ்டேஷன் மாஸ்டர், F. M. S. & E. அய்யாதுரை, போஸ்டு மாஸ்டர், கிமாஸ், F. M. S. இவர்கள் மூலமாய் வந்த வரவு ...	50
12	S. சதாசிவம், சீப் கிளார்க், F. M. S. Railway, சிங்கபூர், இவர் மூலமாய் வந்த வரவு ...	46
13	N. V. N. மீனன், சித்தியவான், F. M. S. ...	40
14	செட்டிகள், தமிழாதிகள், சுங்குப்பட்டாணி, கிட்டா ...	39
15	கா. சின்னய்யகோனர், Charted Bank Watchman Singapur (செம்படவங்காடு, முத்துப் பேட்டை தாலுக்கா, தஞ்சாவூர் ஜில்லா) இவர்மூலமாய் வந்தது	36
16	கா. மெ. சொ. அரு. கிட்டங்கி வரவு, பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு ...	35
17	நகரத்தார், ஜோகூர் பாரு	31
18	கா. நமசிவாயம், ஸ்ரீ உமயவள் பஜனை கூடத்து தலைவர், பட்டர்வொர்த், (கோலப்பிரை) ...	30
19	V. வீரகத்திபிள்ளை, ஆஸ்பத்திரி ஸார்ஜன், சுங்குப்பட்டாணி, கிட்டா	30
20	மு. முனுசாமி உடையார். பாரிட், ஈப்போ, F. M. S.	30
21	நகரத்தார், சிகமெட், S. S.	27
22	டாக்டர் P. நாகலிங்கம் பார்யாள் சிரஞ்சீவி சௌபாக்யவதி அங்கலக்ஷிமி யம்மாள், கோலசிலங்கூர், F. M. S.	25
23	அ. ரு. ரு. ம. நா. பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு ...	25
24	தி. சொ. do. do. ...	25
25	வீ. செங்கல்வராயன், மேசனர், ஈப்போ, F. M. S. ...	25
	Carried over.	1372

		வெள்ளி $
	Brought forward.	1372
26	செ. முருகப்பிள்ளை, இஞ்சனீர் ஆபீஸ், முனிசிபாலடி, சிங்கப்பூர்	25
27	S. கணபதி பிள்ளை, P. W. D. ஓவர்சீர், சுங்குப்பட்டாணி, கிட்டா	20
28	அ. மு. க. மு. ரு. ம. பினங்கு ஸ்டிரீட், பினங்கு ...	20
29	E. வேலுபிள்ளை, போஸ்ட்டு மாஸ்டர், பாரபந்தா, F. M. S. ...	20
30	E. Aune (ஒனி) சூப்பிரெண்டெண்டு, சர்வே ஆபீஸ், சிறம்பான், F. M. S.	20
31	பெ. ரி. நா. நா. மார்கெட் ஸ்டிரீட்டு, சிங்கப்பூர் ...	20
32	S. கோவிந்தசாமி, கவர்மெண்டு சேவிங்ஸ் பாங்கி, ஜனரல் போஸ்ட் ஆபீஸ், சிங்கப்பூர் ...	20
33	T. சுப்ரமண்யம் பிள்ளை, கண்டிராக்டர், அலஸ்டார், (கிட்டா) ...	15
34	சீனிவாசம் பிள்ளை, எட் ஓவர்சீர், P. W. D., பஹாங், F. M. S. ...	15
35	A. சாமிவேல், F. M. S. ரெயில்வே கிளார்க், கோலாலம்பூர் ...	15
36	வே. மாணிக்கமூ மார்க்கெட்டு, கோலாலம்பூர், F. M. S. ...	15
37	ப. ள. க. ன. மு. சி. த., கோலாகங்சர், F. M. S. ...	15
38	பொ. வீ. ரு. வீராசாமி, சாத்தாங்கோவில், மலாகா, S. S. ...	15
39	செ. மு. சுப்பய்யாபிள்ளை, அறிமளம், மலாகா, S S.	15
40	சே. லக்ஷ்மணஞ் செட்டியார் நெ. 14. ஸ்டேஷன் ரோட், சென்தல் கோலாலம்பூர் F. M. S. ...	15
40-A	P. தேவசகாயம், லோகோ டிராயிங் ஆபீஸ், சென்தல் கோலாலம்பூர் F. M. S. ...	15
	Csirred over.	1652

		வெள்ளி. $
	Brought forward.	1652
40-B	பி. நடராஜபிள்ளை, சுரேஜ் டிபார்ட்மெண்டு, முனிசிபல் ஆபீஸ், சிங்கப்பூர், இவர் மூலமாய் வந்தது ...	15
41	செ. ரு. ம. பெ. சி. த. பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு ...	10
42	ராஜா, கஸ்டம் ஆபீஸ், சீப் கிளார்க், பட்டர் வொர்த்து, கிட்டா ...	10
43	அருணாஜலம் செட்டியார், பட்டர் வொர்த்து, கிட்டா...	10
44	R. M. உடையப்ப செட்டியார், சுங்குப்பட்டாணி, கிட்டா ...	10
45	Dr. முத்துக்குமரு, பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு ...	10
46	அ ரு. ரு. ம. சொ. அ. சொக்கலிங்கம் செட்டியார், அலஸ்டார், (கிட்டா)	10
47	லெ. சி. தா. பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு ...	10
48	மு. மு. do. do. ...	10
49	மெ. ரு. ம. வெ. ல. do. do. ...	10
50	உ. ரு. ம. மெ. சு. ப. சே. வு. பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு ...	10
51	உ. ரு. ம. உ. மு. பினங்கு ஸ்டிரீட்டு, do. ...	10
52	வெ. ரு. ம. சு. do. do. ...	10
53	க. வீ. அ. ள. do. ...	10
54	சா. நா. அ. அ. ள. do. ...	10
55	சா. நா. அ. சொ, do. ...	10
56	சா. ரு. ம. மு. அ. do. ...	10
57	சொ. மு. அ. do. ...	10
58	ரு. ம. நா., நாகப்பிள்ளை do. ...	10
59	K. கணபதிபிள்ளை, ஆஸ்பத்திரி, கோலாகங்ஸர், F. M. S. ...	10
60	ரு. ம. மு, சோ. ம., தைபிங், F. M. S. ...	10
	Carried over.	1867

		வெள்ளி $
	Brought forward.	1867
61	ப. ள. க. ந. ஆ. ரு. ம. கொமரப்பசெட்டி, கோலாகங்சர்	10
62	செ. ப. ள. மலையாண்டி கவுண்டர், செட்டிக்குரிச்சி, துவரங்குரிச்சி போஸ்ட்டு, மணப்பாரை மார்க்கம் ...	10
63	சு. ப. அ. ப. ள, பழணியப்ப செட்டியார், கோலாகங்சர், F. M. S. ...	10
64	சி. ப. ள. ரு. ம. கோலாகங்சர், F. M. S. ...	10
65	முத்து, மு. முத்தய்யா செட்டி. கோலாகங்கர், F. M. S. ...	10
66	வை. பெ. கோவிந்தசாமி, கண்ட்ராக்டர், ஈப்போ, F. M. S. ...	10
67	மு. அப்பாதுரை பிள்ளை, ஈப்போ, F. M. S. ...	10
68	சிவன்மலை கங்காணி, சுங்கைபூலோ எஸ்டேட், கோலசிலங்கூர் போஸ்ட்டு, F. M. S. ...	10
69	K. சின்னப்ப, ஸ்டேஷன் மாஸ்டர், கோலசிலங்கூர், F. M. S. ...	10
70	வி. மாரிமுத்து, கௌரவகாரியதரிசி, இந்து சங்கம், சென்துல், கோலாலம்பூர், F. M. S. ...	10
71	லெ. நா. க. அ. ள. ரு. ம. ஈப்போ, F. M. S. ...	10
72	வி. சிதம்பரம் பிள்ளை, கண்ட்ராக்டர், கோலலங்காட் டிஸ்டிரிக்டு, F. M. S.	10
73	A. T. கோவிந்தசாமி பிள்ளை, மர்செண்டு, சுங்கைபிசி, F. M. S. ...	10
74	கா. துரைசாமி பார்யாள், கோலாலம்பூர் ...	10
75	ராசர் do. ...	10
76	K. வேலுபிள்ளை, கண்ட்ராக்டர், கோலாலம்பூர், F. M. S. ...	10
77	ரு. ம. ப. ள. கிட்டங்கி, சிறம்பான், F. M. S. ...	10
	carreid over.	2037

		வெள்ளி. $
	Brought forward.	2037
78	உ. ரு. ம. உ. மு.ச. ப. கிட்டங்கி, சிறம்பான், F. M. S. ...	10
79	கு. சோமசுந்தரம், நெ, 41—1, அல்பர்ட் ஸ்டிரீட்டு, சிங்கப்பூர் ...	10
80	கு. மு. சொ. கிட்டங்கி, சிறம்பான், F. M. S. ...	10
81	வ. கோ. பகீரிசாமி, நெ. 26, ரெயில்வே ரோட்டு கும்பகோணம், கியாம்பு, நெ. 26, ஜாலான் இங்கான் ரோட்டு, வத்துபஹார், ஜோகூர் ...	10
82	R. C. நாயுடு, P. W. D., கோதாதிங்கி, ஜோகூர் பாரு ...	10
83	S. சதாசிவம், சீப் கிளர்க், F. M. S. ரெயில்வே, சிங்கப்பூர் ...	10
84	ச. வே. வரதராஜலு நாயுடு, நெ. 243, பெங்குலன் ஸ்டிரீட்டு, சிங்சப்பூர்	10
85	ரு. ம. அ. ரு, சொ., ஈப்போ, F. M. S. ...	9
86	ப. ள. மு. நா., ஈப்போ, F. M. S. ...	9
87	ப. ள. மு. நா., சிறம்பான், F. M. S. ...	9
88	சி. மு. ரு. ம. do. ...	8
89	பெ. ப. வீ., பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு ...	8
90	ஆ. வி, ப. ள. do. do. ...	8
91	க. அ. ள. ரு. ம. do. do. ...	7
92	உ. வீ. ர. do. do. ...	7
93	க. அ. ள. ரு. ம. ராமசாமி செட்டி, கிட்டா ...	7
94	க. மு. நா., பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு ...	6
95	சி. க. ரு. சொ. do. do. ...	6
96	மெ. ரு. ம. அ. do. do. ...	6
97	க. வெ. ரு. ம. do. do. ...	6
98	சா. அ. ரு. ம. do. do. ...	6
	Carried over.	2209

		வெள்ளி. $
	Brought forward.	2209
99	சா. நா. சா. தெ. பினாங்கு ஸ்டிரீட்டு பினாங்கு ...	6
100	மெ. செ., ஈப்போ, F. M. S. ...	6
101	முத்து, க. மா. மு. சோ. ம. அ. ரு, ஈப்போ, F. M. S. ...	6
102	மெ. செ. மெ. மெ., ஈப்போ, F. M. S. ...	6
103	மு. ஆ. ரி. நா., ஈப்போ, F. M. S. ...	5
104	க. சொ.. பினாங்கு ஸ்டிரீட்டு, பினாங்கு ...	5
105	ஆ. ரு. ப. ள. சி. ப., பினாங்கு ஸ்டிரீட்டு, பினாங்கு ...	5
106	ப. ள. க. ரு. ம்.	5
107	சா. நா. ரு. ம. சு., பினாங்கு ஸ்டிரீட்டு, பினாங்கு ...	5
108	ஆ. ரு. ப. ள. சி. ப. ள. do do ...	5
109	மு. மெ. மு. do do ...	5
110	பெ. க. அ. சி. த. do do ...	5
111	அ. ள. ரு. ம. மெ. மெ. do do ...	5
112	உ. ரு. ம. மெ. சு. செ. do do ...	5
113	அ. ரு. வீ. ர. do do ...	5
114	அ. ரு. ரு. ம. do do ...	5
115	அ. ள. ரு. ம. சி. மெ. கி. சி. த. கி. தெ., பினாங்கு ஸ்டிரீட்டு, பினாங்கு ...	5
116	ப. ள. பெ. ரி., தைபிங், F. M. S. ..	5
117	யே. மு. வ. do do ...	5
118	பெ. ரி. ப. ள. அ., கோலாகங்சர், F. M. S. ...	5
119	அ. ள. ஆ. do do ...	5
120	மு. ரு. ம. சொ. do do ...	5
121	சைவம் சிவசுப்ரமண்யம், கோலாகங்சர், F. M. S. ...	5
122	தேவசகாயம், கோட்டு துபாஸ், கோலாகங்சர், F. M. S. ...	5
	Carried over.	2333

		வெள்ளி. $
	Brought forward.	2333
123	கொழுந்தவேலு பிள்ளை, போஸ்ட் ஆபீஸ், கோலா கங்சர், F. M. S.	5
124	R. கோவிந்தராஜுலு, கோலாகங்சர், F. M. S. ...	5
125	T. A. ஆரோக்யசாமி பத்தர், கோலாகங்சர் ...	5
126	அ. ள. ரு. ம. ரு. ம. கோலாகங்சர், F. M. S, ...	5
127	மு. மு. do ...	5
128	சி. மு. ப. மு. do ...	5
129	முத்து, சு. do ...	5
130	வீ. ர. க. ரு. செ. கோலாகங்சர், F. M. S. ...	5
131	வீ. ர. க. ரு. தைபிங், F. M. S, ...	5
132	டாக்டர் சுப்ரமண்யம், காஜாங், F. M. S, ...	5
133	அங்கம்மா, கோலாலம்பூர் ...	5
134	அய்யாகண்ணு, கோலாலம்பூர் ...	5
135	செ கெ. செல்லய்யா, கோலாலம்பூர் ...	5
136	மு. ரு. ம. சு. ப. வத்துகாஜா, F. M. S. ...	5
137	உ. ரு. ம. உ. மு. சு. ப. கிட்டங்கி, தாப்பா, F. M. S.	5
138	M. பெருமாள், கோலாலம்பூர், F. M. S. ...	5
139	செ. ருமசாமி do. do ...	5
140	V. S. வேலுபிள்ளை, புடு சிலாங்கூர், F. M. S. ...	5
141	A. செல்வதுரை கோலசிலங்கூர், F.M. S. ...	5
142	P. நாகலிங்கம் do. do. ...	5
143	மு. கிருஷ்ணன் do. do. ...	5
144	ப. ள. நா. சிறம்பான், F. M. S. ...	5
145	தெ. சொ. ப. ள. do do ...	5
146	அ. யெ. அ. ரு, கிட்டங்கி, சிறம்பான், F. M. S. ...	5
147	வேதாசலம் கோர்ட்டு, கோலபிலா, F. M. S. ...	5
148	S. நாகலிங்கம், டிஸ்டிரிக்ட் ஆபீஸ் do. ...	5
149	V. தர்மலிங்கம், P. W. D , கோலபிலா, F. M. S....	5
	Carried over.	2468

		வெள்ளி. $
	Brought forward.	2468
150	பெ. பெ. யெ. பெரிய அய்பாப்பிள்ளை, வத்துபஹார், ஜோகூர்	5
151	ரு. வெ. பெருமாள் நாயுடு, துபாஸ், போலீஸ் கோர்ட்டு, ஜோகூர்பாரு	5
152	மு. ப. துரைசாமி பண்டிதர், தஞ்சாவூர் ...	5
153	ச. ஆ. கோவிந்தசாமி பண்டிதர், ஒத்தைத் தெருவு, புதுச்சேரி ...	5
154	வே. வேலு, ஜனரல் போலீஸ் ஸ்டேஷன், ஜோகூர்பாரு ...	5
155	வே. குளந்தவேலு, மேஸ்த்திரி, சவம்பேட்டை, வேலூர் ...	5
156	மாணிக்கம் தம்பு, முனிசிபல் ஆபீஸ், சிங்கபூர் ...	5
157	K. கணபதி பிள்ளை, வைத்தியசாலை, சிங்கபூர் ...	5
158	சபாபதி பத்தர், நெ. 37. ஆச்சாரோட்டு, சிங்கபூர் ...	5
159	நா தெ. தெய்வநாயகம் செட்டியார், நெ. 182, அரப் ஸ்டிரீட்டு, சிங்கப்பூர் ...	5
160	ரு. சு. சி. சுப்பாரெட்டியார், 183, அரப் ஸ்டிரீட்டு, சிங்கபூர் ...	5
161	அ. ப. தண்டபாணி ஸ்ரீ நெ. 245, அரப் ஸ்டிரீட்டு, சிங்கபூர் ...	5
162	அ. வ. க. கந்தசாமி பிள்ளை, ஜாங்கி, $8\frac{1}{2}$ மையில் சிங்கபூர் ...	5
163	ப. அம்பிகைபாகன், சர்வே ஆபீஸ், சிங்கபூர் ...	5
164	சு. வைத்தியலிங்கம், P. W. D., ஜோகூர்பாரு ...	5
165	அ. தி. ஆறுமுகம், எமகிரேஷன் ஆபீஸ், ஜோகூர்பாரு ...	5
166	வி. கே. ருமன் நாயர், ஜோகூர்பாரு ...	5
167	நா. டாக்டர் முத்துத்தம்பி, ஜோகூர்பாரு ...	5
	Carried over.	2558

		வெள்ளி.
		$
	Brought forward	2558
168	வி. கணபதி பிள்ளை, ரெயில்வே போலீஸ் ஆபீஸ், சிங்கப்பூர் ...	5
169	செ. இந்திரராஜா, ரெயில்வே ஸ்டேஷன், டாங் ரோட்டு, சிங்கபூர் ...	5
170	சு. லெ. வீரப்பசெட்டி, ராபர்ட் லேயின், சிங்கபூர் ...	5
171	T. கந்தய்யா, பிளாண்டர்ஸ் ஸ்டோர் & ஏஜென்சி Let. கோலாலம்பூர், F. M. S. ...	5
172	E. பொன்னம்பலம், போஸ்ட்டு மாஸ்டர்; புடு சிலங்கூர் கோலாலம்பூர், F. M. S. ...	5
173	K. சரவணமுத்து கமர்ஷல் பிரஸ், கோலாலம்பூர், F. M. S. ...	5
174	ரெ. சாமியப்பதேவர் வத்துரோட்டு, $2\frac{1}{2}$ கட்டை செந்துல், கோலாலம்பூர் F. M. S. ...	5
	Grand Total $ ...	2593

One of the Seven Wise Men of Greece

A Sophist wishing to puzxle him with difficult questions, the sage of Miletus replied to them all, without the least hesitation, and with tne utmost precision:—

1. What is the oldest of all things ?
"GCD, Because He has all always existed."
2. What is the most beautiful of all things ?
"THE WORLD, Because it is the werk of God."
3. What is the greatest of all things ?
"SPACE, Because it contains all that has been created"
4. What is the most constant of all things ?
"HOPE, Because it still remains with man, after he has lost everything else."
5. What is the best of all things ?
"VIRTUE, Because without it there is nothing good."
6. What is the quickest of all things ?
"THOUGHT, Because in less than a moment it can fly to the end of the universe."
7. What is the strongest of all things ?
"NECESSITY, Which makes man face all the dangers of life."
8. What is the easiest of all things ?
"TO GIVE ADVICE."
9. What is the most difficult of all things ?
"TO KNOW THYSELF."
10. What is the wisest of all things ?
"TIME, Because it discovers all things."

Extract from the Indian Patriot of the 10th February 1914.

LECTURES BY A YOGI AT GOOTY:

A correspondent writes:—

Swami Paramahamsa Sachidananda is the name of a very earnest and learned person and he lives now at Cuddapah. He rigidly endeavours to practise the Ashtanga Raja Yoga and knows the Gita and the Upanishads by heart. He delivered three eloquent lectures in Telugu in this town on the great imperative need for man to aspire and strive for true and spiritual enlightenment, and to live a clean and pious life. His copious and ready quotations in Sanskrit from the Gita and the Upanishads are so apt and illuminative. He is anxious to deliver lectures in different centres before entering into a stage of meditation, called Samadhi.

Extract from the Army and Civil News, Bangalore, 18th January 1915.

An Indian Correspondent writes the following:—

His Holiness, Swami Paramahamsa Sachidananda Yogeeswarar of Cuddapah, performed with success the Jalasthambha feat, as advertised yesterday, Sunday the 17th instant, in the tank of the Subramanya's temple, Old Madras Road, Ulsoor, Bangalore. His Holiness remained floating on the water with hands and legs folded, for over an hour and a half, and spoke with the people around him from that posture, about the practice of Brahmasutram. The feat, rare in itself, was made rarer by the beautiful exposition of "Mind, Atman and Paramatman" but owing to the large concourse of people which continued pouring in till late in the evening, and owing to the unmanageableness of the crowd which numberd over 5000, the lecture became inaudible, espe-

cially at the end. Swamiji, therefore at the request of many gentlemen, has kindly consented to perfrom the same feat, once again next Sunday the 24th instant, at the same place with the programme a little changed as stated under: (1) Lecture on "Mind and How to control it;" in the Subramanya's temple, Ulsoor, 2 to 3 P. M.; (2) Jalasthamba performance in the tank attached to that temple, 3 to 4 P. M; (3) Lecture again in the Contonment in the Sankaranarayana Sabha Hall, Sivan Chetty Garden Street, on "Atman and its relation to the body."

Extract from the New India, dated Saturday, *the 15th May 1916.*

A LECTURE IN FLOATING POSTURE.—The Kristnappa Naicken Tank, George Town, was this morning at 6 o' clock, the scene of a huge crowd of anxious spectators, numbering over 7,000 ladies and gentlemen, young and old, rich and poor, educated and uneducated, to see Swami Paramahamsa Sachidananda Yogeeswarar of Cuddapah, perform Jalasthambanam Yogam (floating on water) and to hear him deliver a lecture in Tamil in that posture on "Brahmasutram and how to practice." There were also spectators on house tops round the tank. The Swami began to demonstrate his floating feats and to deliver his lecture precisely at the appointed time at the north ghaut of the tank and took one hour and forty-five minutes to finish it. arriving in the end at the same ghaut. During this long time he kept himself floating round the big tank with his legs in what is known as *Padmasanam* and his hands in sleepiug posture. The Swami was always in touch with people by floating near the parapet walls, so that the people might see and hear him. However, it was impossible to hear him distinctly, owing to very large number of people round the parapet walls and to the low level of the water in the tank. A very smart sale of the Swami's photagraphs and his book on Yoga in Telugu and Tamil was made on the spot.

quantity should be breathed in and this process repeated will help the Swami to deliver lectures. The original quantity of air, after expunging the small quantity, should remain fixed so long as he delivers lecture on the surface of water, only the small quantity of air should be alternately breathed in and breathed out. All these can be fully understood in the *Jeeva Brahmaikya Vedanta Rahasyam*, in Tamil, Telugu and English—1st and 2nd parts.

All the illustrations necessary for understanding these lectures together with the exposition of their deep significance are well expatiated by the Swami in the firs Six Chapters of his BHAGAVADGEETA.

The treatise has been prepared at the request of the several disciples of the Swami and it is considered desirable that these papers should be given a wide publication; and he made it easily accessible both to the rich and to the poor and with this object in view it has been decided to issue at a cheap rate.

The papers have been arranged under different dheaings and supplied with glossaries to understand the Sanskrit words written in Tamil and photos to suit the lectures for the convenience of those that read the treatise.

I hope that there lectures will prove helpful in disseminating religious knowledge among the people.

A. TIRUVENKATASWAMI MUDALIAR, B. A.,

Consulting Geologist,

மானச பூஜை

☞ எதிரில் காட்டியிருக்கும் கணபதி, விஷ்ணு, பார்வதி முதலாகிய விக்கிரஹங்களின் ரூபம், மானசபூஜை செய்யப் பட்டவர்களின் கர்ப்பத்தில் நிறுத்தி, கண்களைமூடி அந்த உருவத்தை மனக்கண்ணால் பார்த்து மனதினால் அர்ச்சனை செய்துவரும் ஓம் என்னும் மந்திரங்களை, இதில் காட்டியிருக்கும் கணபதி, விஷ்ணு, பார்வதி, முதலான விக்கிரஹங்களில், கண்டம் முதல் நாபிவரையில்............... புள்ளிகளாய் வைத்துக் காட்டப் பட்டிருக்கிறது. அதாவது, பூஜைசெய்ய உட்கார்ந்து கண்களைமூடி எவ ரெவர்களுக்கு எந்தெந்த பகவான்மீது பிரீதியோ அந்த பகவானை † உபாஸனா மூர்த்தியாய் நினைத்து இருதயத்தில் நிறுத்தி அவ்விக்கிரஹத்தை மனக்கண்ணால் பார்த்து, ஓம் சிவாய நமஃ, ஓம் மஹேஸ்வராய நமஃ, ஓம் சம்புவே நமஃ, என்று மனதினால் உச்சரிக்கும் பிரணவ மந்திரங்களை புள்ளிகளாய் வைத்துக் காட்டப்பட்ட தென்று அறியவேண்டும். என்றால், நாம் பிரணவத்தினால் அர்ச்சனை செய்யும் மந்திரங்கள், இருதயத்தில் நிறுத்திவைத்த பகவானை அர்ச்சனை செய்கின்ற தென்று, எதிரில் காட்டியிருக்கும் விக்கிரஹத்திற்குக் கண்டம் முதல் நாபிவரையில்...............புள்ளிகள் வைத்துக் காட்டி யிருக்கின்றது. ஈசுவரன், விஷ்ணு, சிவகாமசுந்தரி, விநாயகர், சுப்ரமண்யர், முதலானவர்களை அர்ச்சனை செய்யவேண்டுமானால், கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீசுவரர் பூர்வஜன்ம இச்ஜன்ம சரித்திரத்தில் எழுதியிருக்கும் அஷ்டோத்ர நாமங்களைப் பார்த்து பாடம்செய்து அதுபோல் அர்ச்சனை செய்துவரவேண்டும்.

---

† உபாஸநாமூர்த்தி = மோக்ஷத்திற்கு வழிகாட்டும் கடவுள்.

1



Ganapathy Bhavana for Manasa Pooja

2

Vishnu Bhavana for Vishnu Manasa Pooja

மானஸ தியானே உபாஸன பூஜா, தேவதா விஸ்வ விராட் ரூபபாவனை

இவ்வாறு செய்து வருவதே தியானமாகும். இது வரையில் அச்சிட்டிருக்கும் ஜீவப் பிரம்மைக்ய நூலில் காட்டிய கணபதி, விஷ்ணு, பார்வதி, முதலாகிய படங்களில் இந்தரஹஸ்யம் சொல்லவில்லை. அதன் ரஹஸ்யம் இப்போது சொல்லப்பட்டது.

அன்றியும் ☞ எதிரில்காட்டியிருக்கும் 6, 5, 4 படங்கள் பிராணாயாம, பிரத்தியாஹார, தாரண, தியான, சமாதி படங்களென்று அறியவேண்டும். இவைகள் யோகத்தில் சேர்ந்தது. அதை இங்கு விவரித்துச் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

யோகாப்பியாசம் செய்ய மிகவும் பரிசுத்தமான இருட்டு அரையில், மணையின் மீது மான்தோல் போட்டு அதன்மேல் வெள்ளை வஸ்திரம் மடித்துப்போட்டு வடக்கு முகமாய் பத்மாசனத்திலாவது, சித்தாசனத்திலாவது உட்கார்ந்து, வாய்க் கண்களை மூடி 412-வது, பக்கம், சொல்லியதுபோல் சுவாசம், உள்ளுக்கிழுத்து விழுங்கி அதை வெளிவிடாமல் நிறுத்தினால், அந்த சுவாசம் சரீரமெங்கும் ஓடித்திரிந்து அனேக வருட பழக்கத்தால் நாளுக்குநாள் சிறுகச் சிறுக அந்த சுவாசம் தேகமெங்கும் ஓடித்திரிந்து மண்டை ஓட்டைத் துளைத்துக்கொண்டே வந்து கடைசியில் சிசு பிறந்தவுடன், உச்சித்தோல் மண்டையின்மீது எவ்வளவு மிருதுவாய் மூடிக்கொண்டிருக்குமோ அதுபோல் மண்டை தோல், சித்தியடைந்த யோகிக்கு மிகவும் மிருதுவாயிருக்கும். யோகி மண்டையையும் மண்டைத் தோலையும் சுவாசத்தினால் துளைத்து தயார்செய்து வைத்துத் தான், எப்பொழுது ஆத்மாவை விடவேண்டுமென்று நினைக்கின்றானோ அந்த க்ஷணமே பிராணாயாம மகிமையினால் உச்சியைத் திறந்து, ஆத்மாவை விட்டுவிடுவான். அப்படிப் பட்டவனுக்கு புனர்ஜநநமில்லை. விசேஷமாய் பிராணாயா

ఓం
ప్రణవము.

3

4





౫



6

మానసః ధ్యానోపాసన పూజా దేవతా విశ్వవిరాట్ రూపభావను

மம் செய்துவந்தவனுக்கு சுவாசம் சரீரமெல்லாம் ஓடித்திரியும். சரீரத்தில் சுவாசம் ஓடித்திரிவதை 6-வது, நெம்பர் படத்தில் காட்டியிருக்கின்றது; அதைப் பாருங்கள். சுவாசம் சரீரமெல்லாம் இவ்விதமாய் ஓடித்திரிந்து கடைசியாய் மண்டை வெடித்துக் கிளம்பிவிடும். அதையும் 6-வது, நெம்பர் படத்தில் காட்டி யிருக்கின்றது. அதை கவனியுங்கள். மோக்ஷமடையும் ஜீவனுக்கு இதுவே கடைசியான பதவி. அது, இங்கு 6-வது நெம்பர் படத்தில் காட்டப் பட்டிருக்கின்றது.

2. சுவாசம் மூக்கின் வழியாய் இழுத்து நிறுத்திய போது வெகுநாட் பழக்கத்தால் அந்த சுவாசம், கர்ப்பத்திலிருந்து குதஸ்தானத்தின் வழியாய், முதுகெலும்பின் மத்தியி லிருக்கும் வெள்ளை நரம்பில் (Spinalcordடில்) தாமரைக் கொடியிலுள்ள சிறிய நூலைப்போன்ற மிகவும் சிறிய ரந்திரங்கள் அந்த நரம்பில் உண்டு. இந்நரம்பு 385-வது, பக்கம் படத்தில் காட்டியிருக்கின்றது. அந்த ரந்திரங்களின் வழியாய் சுவாசம் ஏறி, பிரம்ம கபாலத்தில் (சிரகின் உச்சியில்) போய் அவ்விடமிருந்து நாபிக்கு (தொப்புளுக்கு)ச் சென்று அங்குள்ள குண்டலி ஸக்தியைக்கிளப்பி விடும். அப்போது நெற்றியில் ஜோதி காணப்படும். நெற்றியில் காணப்படும் ஜோதியை 5-வது, நெம்பர் படத்தில் காட்டப் பட்டிருக்கின்றது. அதையும் கவனியுங்கள்.

3. இவ்விரண்டையும் முடித்தயோகி சுவாசம் அடக்கி சும்மாய் உட்கார்ந்தால் அந்த சுவாசம் 6-வது, நெம்பர் படத்தில் காட்டியதுபோல், தேகமெல்லாம் சுற்றித்திரிந்து சரீரத்திலிருக்கும் எழுபத்து ஈராயிரம் நாடிகளையும் கிளப்பி விடும். சுவாசம் நாடிகளைக் கிளப்பி விட்டால், அவைகளுக்குக் கோப முண்டாய் ஓங்காரத்துடன் சர்ப்பம் போல் சீறி, தசவித (பத்துவித) நாதங்கள் விசேஷமாய்க் காது

பிளக்கும்படி, இராப்பகலாய் "ஓம்" என்னும் சப்தம் சதா ரீங்காரம் செய்துக்கொண் டிருக்கும். அப்போது அந்த ஓங்காரத்தில் மனதை நாட்டிக் கேட்டுக்கொண் டிருந்தால் சுருதிப் பிரமாணங்களுடன் முன், 569-வது பக்கம் தசவிதநாதங்கள் என்பதில் சொல்லியதுபோல், ஓங் காரத்திலிருந்து பத்துவித நாதசப்தங்களையும் கேட்கலாம். சின்முத்திரையைப் பிடித்து சித்திரப் பதுமைபோல் உட் கார்ந்து நாதசப்தங்களை ஆனந்தமாய்க் கேட்டுக்கொண் டிருக்கும் சமயத்தில், சிரசிலிருந்து அம்ருதமானது யோகாக்நி சுவாலையினால் கரைந்து மண்டையி லிருந்து கண்டத்தின் வழியாய் பத்து நிமிஷங்களுக்கு ஒருமுறை சொட்டுச் சொட்டாய், இருந்தாப்போ லிருந்து குபீரென தொண்டையில் விழுந்து வயற்றிற்குள் செல்லும். அம்ருதம் மண்டையிலிருந்து வரும்போது நன்றாய்த் தெரியும்; அது தொண்டையினிடம்வருமுன் கண்டத்தைமூடி அந்த அம்ரு தத்தை வாயில் கொண்டுவந்து கையில் வைத்துப் பார்த் தால், அது இளம் நுங்கு எப்படி யிருக்கின்றதோ அது போல், சுண்டக்காய் அவ்வளவு பிரமாணம் இருக்கும். முன் சொல்லிய நாதசப்தங்களும், மண்டையிலிருந்து சொட்டுச் சொட்டென்று அம்ருதம் விழுவதும் அடியே னுக்கு பிரத்தியக்ஷ திருஷ்டாந்த மாதலால் அதை இங்கு சொல்ல நேரிட்டது. இந்த அம்ருதம் சிரசின் மூல ரந்திரம் வழியாய் வருகின்ற தென்பதற்குச் சுருதியும், அகஸ்தியர் பாடலும் பிரமாணம் இதனடியில் சொல்லுகின்றோம்;

"ஷஷ்டம் தாலுசக்கரம் தத்ர அம்ருத தாரா ப்ரவாஹ
கண்டிகா மூலரந்த்ர ராஜதந்தி ஸந்திரி விவரத்வாரம்
தத்ர ஸூந்யம் த்யாயேத் சித்தலயோ பவதி."

கொள்ளப்பா மூக்குனுனியைக் கூர்ந்து பார்த்துக்
குருவான நடுவரையைக் குறித்துப் போற்றி
விள்ளப்பா விஞ்சையார் பூரணத்தி லேகி
விடுகாதே விஞ்சை மறத்திடாமல் நிற்க
கள்ளப்பா கள்ளுமங்கே வடியும் பாரு
கண்காணு மந்திரங்க லெல்லாஞ் சித்தி
தள்ளப்பா வாசையோடு ரோச மாயை
தவிர்த்திடுவார் தனையறிந்த தவத்தோர் தானே.

யோகியானவன் மேற் சொல்லிய நாத சப்தங்களைக் கேட்டு அம்ருதபானம் செய்துகொண்டிருந்து கடைசியில் மனம் சூன்யமாய் பிரம்மானந்த பதவியை அடைவான். யோகாப்பியாசம் சித்தியடைந்த மஹான்களுக்கு நாபியிலிருந்து யோகாக்நி உண்டாகும். அந்த யோகாக்நி கணபதி படத்திற்கு 4-வது, நெம்பர் படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது; அதைப் பாருங்கள். இந்த யோகாக்நி சஞ்சித மென்னும் புண்ணிய பாப இருவினைகளைச் சாம்பலாய் எரித்துவிடும். அன்றியும் சூர்யமண்டலம் சந்திரமண்டலம் நக்ஷத்திரமண்டலம் யாவும் நம்மில் அடங்கி யிருப்பதனுல் அதை கணபதி, விஷ்ணு, பார்வதி, முதலாகிய படங்களின் சிரசுகளுக்குமேல் அம்மண்டலங்களை எழுதிக் காட்டப்பட்டிருக்கின்றன. அதை கவனியுங்கள். சிரத்தையுடன் பக்தி, தியானத்தி லிருக்கப்பட்டவர்களுக்குத் தப்பாமல் யோகம் சித்திக்கும். அடியேன் பன்னிரெண்டாம் வயதில் எவர்களிடமும் உபதேசம் பெருமல், காஞ்சிமா நகரிலுள்ள ஸ்ரீ ஏகாம்பரீசுவரரை உபாஸனை மூர்த்தியாகக் கொண்டு, தனக்குத்தானுய் செய்துவந்த மானஸ பூஜையை, ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீசுவரர் பூர்வஜன்ம இச்ஜன்ம சரித்திரத்தில் படத்தின் மூலமாய்க் காட்டிச் சொல்லி யிருக்கின்றேம். அதை வரவ

ழைத்துப்பாருங்கள். எந்த குரு உபதேசமில்லாமல் தனக்குத் தானுய் உண்டாகும் பக்தியே, விட்டகுறை யென்றும், தொட்டகுறை யென்றும் சொல்லப்படும். அதாவது, ஈசுவர பக்தி பூர்வஜன்மத்தில் எதுவரையில் செய்துவிட்டு மரண மடைகின்ருனே மறுஜன்மத்தில் தான், முன்ஜன்மத்தில் ஈசுவரபக்தி எங்கு செய்து விட்டானே அவ்விட மிருந்து மறுபடியும் தொடர்ந்து, இந்த ஜன்மத்தில் பக்தி செய்து வருவான். இந்த விட்டகுறை தொட்ட குறைகளுக்கு அடியேனுடைய சுவானுபவமே திருஷ்டாந்தமாய், ஸ்ரீ ஏகாம்ப ரீசுவரர் ஸ்ரீ ஜம்புகேசுவரர் முதலாகிய படங்களின் மூலமாய் அடியேனுடைய சரித்திரத்தில் காட்டி யிருக் கின்ருேம்,

ஆதலால், ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீசுவரர் பூர்வஜன்ம இச்ஜன்ம சரித்திரத்தை வரவழைத்துப் பார்த்து அதில் சொல்லி யிருப்பதுபோல் பன்னிரெண்டு வருடங்கள் மானஸபூஜை செய்துவந்தால் தப்பாமல் யோகியாவான்.

தத் ஸத்

ஸ்ரீ ஸர்வ பரிபூரண பர ப்ரஹ்மணே நம:.

முகவுரை.

தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டுவார் போல்
ஆலத்தி னுடுக்கள் காட்டி யருந்ததி காட்டுவார் போல்
தூலத்தை முன்பு காட்டிச் சூக்கும சொரூப மான
மூலத்தைப் பின்பு காட்ட முனிவரர் தொடங்கி னரே.

[கைவல்யம்.]

உலகத்திலுள்ள ஜனங்கள் ஒரு மரத்தின் கிளையைக் குறிப்பிட்டு அதன் மத்தியில் காட்டும் மூன்றாம்பிறைச் சந்திரனைப் போலவும்; ஆகாசத்தில் ஸப்த ரிஷிகளின் நக்ஷத்திரங்களைக் குறிப்பிட்டு அதில், வசிஷ்டரது பார்யை பதிவ்விரதா சிரோன்மணியாகிய அருந்ததி தேவியை, விவாஹ காலத்தில் குறிப்பிட்டுக் காட்டுவது போலவும், இந்த "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்ய" மானது, ஸ்தூலமாயுள்ள தத்துவங்களையெல்லாம் முன்னதாய்ச் சொல்லி, அணுவிலும் அணுவாயிருக்கும் பரப் பிரம்மத்தைப் பின் சொல்லப்போவது, ஆசார்யபிரசாதம் போன்றதாயிருந்து, சூக்ஷ்ம சொரூபமாயிருக்கும் பரப் பிரம்மத்தையே உபதேசிக்கின்றது. ஜீவ சாக்ஷியாகிய கூடஸ்தனும் ஈசுவர சாக்ஷியாகிய பரப் பிரம்மமும் தானென்று அறியாமல், ஸ்தூல சூக்ஷ்ம காரணங்களினால் உண்டாகிய தேஹமே தானென்று அபிமானம் வைத்து, நான் பிராமணனென்று பிரமையடைந்து அனேக யுக வருஷங்களாய் புருஷன்

கால சக்கரத்தில் (சுழல்காற்றில் அகப்பட்டுக்கொண்ட செத்தையானது கிறு கிறுவென்று சுழல்வதுபோல்) சுழன்றுகொண்டு, நாநாவித ஜந்துக்களின் யோநிகளில் போய்ப் பிறந்து பிறந்து புண்ணிய பாப மிசிர (இரண்டு) கர்மங்களையும் செய்துகொண்டு, சுக துக்கங்களை அனு பவித்துப் பிறந்து கொண்டும் இறந்துகொண்டுமாய் இருக் கின்றார்கள். "பிரம்மமே நான்" என்று தெரிந்துகொள் ளும் வரையில் ஜனனமரணங்கள் வந்துகொண்டே யிருக் கும். ஆதலால், உலகத்தில் ஸ்திரீ புருஷரூபமாய்ச் சஞ் சரித்துக் கொண்டிருக்கும் மானிட ஜனங்களெல்லாம், மாயையென்னும் ஆசையால் கட்டுப்பட்டு மிகவும் ஆழ மான சம்சாரமென்னும் சமுத்திரத்தில் மூழ்கி என்றால், சம்சாரமென்பது மனைவி மக்கள்மீதுள்ள ஆசையே யல்ல; எந்தப்பொருள் தனக்கு வேண்டுமென்று இச்சைகொள்ளு கின்றானோ அவையாவும் சம்சார பந்தமென்றே சொல்லப் படும். இந்த சம்சாரமென்னும் பந்தமே பெரிய சமுத்திர மாய் இருக்கின்றது. இப்படிப்பட்ட சம்சாரமென்னும் சமுத்திரத்தில் மூழ்கி, தனைசை என்னும் வியாதியினால் பீடிக்கப்பட்டு, மின்னலைப்போல் க்ஷணநேரம் உண்டாகும் ஸ்திரீ ஸம்போகங்களின் அற்ப சுகங்களுக் குட்பட்டு, எப் பொழுதும் வருத்தமடைந்துகொண் டிருப்பார்களே அல் லாமல் நித்தியானந்த பதவியைக் கோரார்கள். இவர்கள் செய்வது எப்படி யிருக்கின்றதென்றால், காட்டில் பெரிய பள்ளம் வெட்டி கழிகளைப்பரப்பி அதன்மேல் பாயும் மண் ணும் போட்டு விதைவிதைத்து செழுமையாய் வளர்த்து வைக்கப்பட்ட பயிரைப்பார்த்து, அதனால் கேடு சம்பவிக்கு மென்னும் விசாரமில்லாத யானையானது, அந்தப் பயிரை மேய்வதற்காக துரிதப்பட்டுச் சென்று அந்தப் பாழும் பள் ளத்தில் வீழ்வதுபோல் இருக்கின்றது. எப்படியென்றால,

"ஶப்தமாயாவ்ருதோ நைவ தமஸோ யாதி புஷ்கரே
பிங்கேதமவி சைகத்வ மேகமேவாநு பஶ்யதி."

என்னும் சுருதிரீதியாய் (1) 'சப்த' த்தினல் ஸர்ப்பமும், (2) 'ஸ்பர்ஸ்' த்தினல் ஸமரீ மிருகங்களும் (3) 'ரூப' த்தினல் விட்டில் பூச்சிகளும், (4) 'ரஸ' த்தினல் மச்சங்களும் (5) 'கந்த' த்தினல் தும்பிகளும் நசிக்கின்றன. அதாவது, (1) பாம்பாட்டியானவன் மோடி வாசிக்கும்போது, ஸர்ப்பங்கள் புற்றிலிருந்து வெளிவந்து அந்த சப்தத்தைக் கேட்டு, சந்தோஷித்துத் தன்னைமறந்து ஆடிக்கொண்டிருக்கும் சமயத்தில் மேற்படி பாம்பாட்டியால் பிடிபட்டு அனேக பாதைகள் அடைந்து மரணமடைவதுபோலவும், (2) காட்டிலுள்ள ஸமரீ மிருகங்கள், வேடன்வலைக்கு அகப்படாமல் ஓடும்பொழுது, வாலிலுள்ள மயிர்கள் புதரில் அகப்பட்டுக்கொண்டால் ஓட ஸாத்தியமாகாமல் நின்றுவிடும்; அப்போது வேடன்கையில் அந்த ஸமரீ மிருகம் அகப்பட்டு மரண மடைவதுபோல்வும், (3) விட்டில் பூச்சிகள் தீபப்பிரகாசரூபத்தைப்பார்த்து பழமெனப் பிரமிதது அந்த தீபத்தில் வீழ்ந்து மரணமடைவது போலவும், (4) தூண்டின் முள்ளில் ரசரூபமாகிய மாம்சம் கோர்த்து ஜலத்தில் போட்டவுடன், மச்சங்கள் நா ருசிக்காக ஆசைப்பட்டு, தூண்டின் முள்ளில் அகப்பட்டு மரணமடைவதுபோலவும், (5) சம்பங்கி புஷ்ப கந்தரூபமான வாசனைக்கு ஆசைப்பட்டு தும்பிகள் அப்புஷ்பத்தில் சேர்ந்து மரணமடைவது போலவும், புருஷர்களுக்கு பூர்வ ஜன்மார்ஜ்ஜித புண்ணிய விசேஷத்தினல் துர்லபமான மானவ ஜன்மம் உண்டாகியும், ஈசுவர பக்தி யில்லாமல் எல்லாவற்றிலும் விசேஷ ஆசை யுடையவர்களா யிருந்து, சம்சார மென்னும் பாழும் பள்ளத்தில் வீழ்ந்து நசிக்கின்றார்கள். ஆதலால், சிலனளில் அழியும் இத்தேஹத்தை நம்பி வீணகக் காலம் கழித்துக்

கெடாமல் இத்தேஹ மெடுத்தது முக்கியமாய் மோக்ஷ த்தை யடைவதற்கெனவே தெரிந்துகொள்ள வேண்டும்.

மோக்ஷமென்றால், எல்லா பந்தத்திலிருந்து விடுதலை அடைதலேயாம். இப்பந்தம் பாஹ்யம் ஆந்தரம் என இரண்டு வகைப்படும்.

பாஹ்ய பந்தமாவது:— எனது வீடு, எனது பார் யாள், எனது புத்திரர்கள், எனது புத்திரிகள், எனது சரீரம், எனது பூமி, எனது மாடு, எனது தோட்டம், எனது திரவ்யங்கள் என்று தனதல்லாத வேறு வஸ்துக்களைத் தனதாகப் பாவிப்பது.

ஆந்தர பந்தமாவது:—காம, க்ரோத, லோப, மோஹ, மத, மச்சர, டம்ப, தர்ப்ப, ஈர்ஷை, அசூயை என்னும் இந்த பத்து குணங்களினால் புருஷனுக்கு பந்தம் உண்டாகின் றது. இந்த பத்து பந்தங்களையும் இந்நூல் 66, 67, 68, பக்கம் பார்க்க.

இந்த பந்தம் அஞ்ஞானத்தினால் ஏற்பட்டதே யன்றி வேறன்று. இவ் வஞ்ஞானத்தை விசாரிக்குமளவில் இது, கானல் நீரைப்போல் ஜீவனுக்கு அநேக ஜன்மங்களாய் வந்துகொண் டிருக்கும் காரண சரீரத்தின் வாசனையினால் இவனுக்கு, தாரேஷணை (பார்யாளின் மீது ஆசை) புத்ரே ஷணை (புத்திரர்களின் மீது ஆசை) தனேஷணை (பொன் வெள்ளி முதலானவைகளின் மீது ஆசை) இது முக்கியமாய் கிரகிக்கவேண்டிய விஷயம் இவைகளை 77-வது, பக்கம் முதல் 101-வது, பக்கம் வரையில் பார்ப்பீர்களாக. இந்த ஈஷணாத் திரயங்கள் ஜீவனுடன் கூடவே சூக்ஷ்ம சரீரத் துடன் அணு சொரூபமாய் (கண்களுக்குக் காணப்படாத சிறிய வஸ்துவாய்க் கிளம்பி) அவனவன் கர்மத்திற்குத் தக் கபடி அந்தந்த தாயின் கர்பத்தி லிருக்கும் பிண்டத்தில் போய்ப் பிரவேசித்து சிசுவாய்ப் பிறந்தபோது மேற

சொல்லிய காமக் குரோதாதிகளும், ஈஷணாத் திரயங்களும் யாவும் அந்த சிசுவுடன்கூடவே அடங்கி யிருந்து, பிறகு சிசுவானது விருத்தியடைய, வடைய இந்த காமக்குரோ தாதிகளும் ஈஷணாத் திரயங்களும் சிசுவுடன்கூடவே விருத் தியாய், இடைவிடாமல் அவனுடன்கூடவே தொடர்ந்து கொண்டே வருகின்றன: ஆதலால், இந்த ஈஷணா திரயங்க ளும் ஆசா பாசங்களும் காமக் குரோதாதிகளும் நம்முடன் கூடவே விருத்தியாய் வந்தன. இவைகளை கிரமக் கிரமமாய் யோக சாதனையினாலும், ஆத்ம விசாரணையினாலும் போக் கடித்தால், சிதாகாச (ஜீவாத்மா) சொரூபமா யிருக்கும் 'நீ' ததாகாரமாய் (தான்தானாய்) நின்றுவிடுவாய். இவ்வாறு நின்றுவிடுவதே முக்தியடைவ தென்பதாம்.

பரமேசுவரன் ஜீவர்களின்மீது கருணையுடையவராய்த் தான் உசுவாசித்த (சுவாசத்தை வெளிவிட்ட) போது வேதங்களை யுண்டாக்கி அதன் வழியாய் ஜீவர்கள், சித்த சுத்தி அடைந்து முக்திபெறுமாறு, அவ்வேதங்களைக் கர்ம காண்ட ஞானகாண்டங்களாகப் பிரிந்துத் தான் சகுண ரூபமாய் நின்று; சங்கு, சக்கரம், கதை, கரிய திருமேனி முதலியன தரித்து விஷ்ணு மூர்த்தியாயும்; சூலம், டமரகம் ருஷபவாஹனம் தவளமேனி (வெண்மை தேகம்) முதலியன தரித்து மஹா தேவராயும் நின்று, வைகுண்ட கைலாசங் களில் பிரவேசித்து அநுக்கிரஹித்தார்கள். அவ்வாறு அநுக்கிரஹித்தும் ஜீவர்களுக்குத் தத்துவஞான நிஷ்டை யுண்டாகவில்லை. ஆதலால், விஷ்ணுமூர்த்தி அம்ஸமே வியாஸபகவானாக அவதரித்து அவ்வேத வேதாந்த சாரா மிருதங்களைத் திரட்டி, சரத்தில் முத்துக்களைக் கோர்த்தது போல், பிரம்ம சூத்திரங்களை ஏற்படுத்தினார். இதற்கும் உண்மைப்பொருள் விளங்காமையால், பற்பல மதஸ்தர் களும் அவரவர் கொள்கையின் கருத்திற் கேற்றபடி

பற்பல வியாக் யானங்களைச் செய்துகொண்டார்கள். அதனல், ஸ்ரீ 'சம்பு'வானவர், உண்மைக் கருத்தை ஜீவர்களுக்குணர்த்தவேண்டி ஸ்ரீ சங்கராசார்யராக அவதரித்து, இந்த பிரம்ம சூத்திரத்திற்கு பதவிபாகஞ் செய்து யதார்த்த அர்த்தத்தைத் தெரிவிக்கும் சாரீர பாஷ்யத்தையும் உண்டாக்கினர். அஃதும் சாமான்யர்கட்கு அர்த்தமாகவில்லையென்று இதர கிரந்தங்களையும் உண்டாக்கினர்.

ஆயினும், அவையனைத்தும் ஸம்ஸ்கிருத பாஷையிலிருப்பதனல் அந்த பாஷா ஞானமுள்ளோர்க்கே யன்றி ஏனையோர்க்கும் உபயோக மாகாததனல், சில பெரியோர்கள் நமது தேசபாஷைகளில் அநேக அத்வைத கிரந்தங்களை பாடல் களாய்ப் பாடினர்கள். அவைகளைப் படித்து அநுபவம் பெறுதற்குச் சாத்திய மாகாதவர் களுக்காக இப்பொழுது அடியேனல் இயற்றியுள்ள இந்த "ஜீவப் பிரம்மைக்கிய வேதாந்த ரகஸ்ய" மானது மிகவும் சுலபமாயும், சிரவண மநந நிதித்தியாசனங்கள் மூலமாய்ச், சிறுவர் சிறுமியர்களும் ஆத்மாநுபவத்தைத் தெளிவாய் தெரிந்துகொள்ளும்படி, கரதலாமலகம் (உள்ளங்கை நெல்லிக்கனி) போல் சுருதி ஸ்மிருதி பிரமாணங்களுடன் அதிக சுலபமான நடையில், தமிழிலும் இங்கிலீஷிலும் தேலுங்குபாஷையிலும் வசன ரூபமாய் எழுதப்பட்டிருக்கிறது. இந்த கிரந்தத்தை வாசிப்பதனல் பிரம்மம் தானென்று அறிந்து ஆனந்திப்பதற்கு இது, ஒவ்வொருவருக்கும் விசேஷ முக்கியமானது.

உலகத்திலுள்ள ஜனங்க ளெல்லோரும், பார்யாள் புத்திர பௌத்திர தனதான்யாதி சம்பத்துக்கள் இருக்கவேண்டுமென்றும், மோக்ஷமும் உண்டாகவேண்டுமென்றும் நினைக்கின்றர்கள். இவ்விரண்டும் எவ்வாறு உண்டாகும். பாரியாள் புத்திர தனதான்யாதி சம்பத்துக்கள் யாவும் மோக்ஷத்திற்கு நேர் விரோதமானவைகள்.

மேற்சொல்லியவைகளின்மீதுள்ள ஆசைகளெல்லாம் ஸ்திரீ புருஷர்களை விட்டு நீங்கினால், மோக்ஷமென்னும் வீட்டைத் தப்பாமல் அடைவார்கள். மோக்ஷமென்றால் என்ன வென்று நினைத்துக்கொண்டீர்கள். மோக்ஷ மென்னும் வாக்கியத்திற்குச் சரியான அர்த்தம், விடுதலை அடைதலே யாம். இது விஷயம் இதில் அநேகமுறை சொல்லியிருக் கின்றோம்; மேற்சொல்லிய ஆசைகள் யாவும், அநேக கோடி ஜன்மங்களாய் ஸ்திரீ புருஷர்களைத் தொடர்ந்து கொண்டே வருவதனால், அந்தப் பாழும் ஆசைகள் மோக்ஷ மென்னும் வீட்டை அடையவிடாமல் செய்விக்கின்றது. இந்த ஆசைகளுக்கே, மாயை யென்று சொல்லப்படும். அதாவது, இல்லாத வஸ்துவை உண்டென்று பிரமையை உண்டாக்குவதே மாயை; எப்படியென்றால், உங்கள் முதல் பாட்டன் பாட்டி, இரண்டாம் பாட்டன் பாட்டி, மூன்றாம் பாட்டன் பாட்டி, முதலானவர்களும், பாரியாள் புத்திர தனதான்யாதி சம்பத்துக்களின்மீது சில வருஷங்கள் ஆசையுடையவர்களாயிருந்து, கடைசியில் எல்லோரையும் விட்டுத் தாம் தனியர்களாய்ப் போய்விட்ட விஷயம் எல் லோரும் அறிந்த விஷயமே. இதனால் என்ன ஏற்படுகின்ற தென்றால் சிலது நாளைக்குள் அழிந்துப்போகத்தக்க ஸ்திரீ புருஷர்களையும், தன தான்யாதி வஸ்துக்களையும் எனது எனது என்று நினைத்து மாண்டவர்கள் கோடானகோடி யுண்டு. அழிந்துபோகத்தக்க வஸ்துவையெல்லாம் நிஜ மென்று எண்ணி பிரமை யடைவதே மாயை யென்றும், அவித்தையென்றும், அஞ்ஞானமென்றும் சொல்லப்படும். ஆதலால், எல்லோரும் எல்லா ஆசைகளையும் ஒழித்து மோக்ஷமென்னும் வீட்டை அடைவதற்காகவே இந்த ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம் எழுதியிருக்கின் றோம். வேதாந்தமென்றால், வேதங்களுக்கெல்லாம் கடைசி

யில் முடிவாகிய பதவி எதுவோ அதுவே வேதாந்தம். அதாவது, ருக் யஜுர் சாம அதர்வணமென்னும் நான்கு வேதங்களையும் பரிசோதித்துக்கொண்டே செல்லச் செல்ல கடைசியில், மனதை ஒரே நிலையாய் நிறுத்தி பிறகு அந்த ஓர்நிலையும் அற்றால் தானேதான் ஆகலாம், என்று வேதங்களின் முடிவில் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த முடிவான விஷயம் எதுவோ அதை இந்நூலில் தெரிவித்திருக்கின்றோம். ஆதலால், பல இடங்களிலும் குரங்கைப்போல் ஓடித்திரியும், மனதை ஓடவிடாமல் பிரம்ம சூத்திரத்தினால் (சுவாசமென்னும்நூலினால்)கட்டி ஒரே நிலையாய் நிறுத்திப் பிறகு அந்த ஓர் நிலையையும் சூன்யமாய்ச் செய்தால் அந்த க்ஷணமே ஆனந்த முண்டாகும். மனது எதுவரையில் ஓடிக்கொண்டிருக்கின்றதோ அதுவரையில் ஆனந்தம் உண்டாகவேமாட்டா. ஆதலால், எந்த மந்திரங்களும் ஜபங்களும் பூஜைகளும் செய்யாமல் ஆகாச வடிவமாகிய பரமாத்ம சொரூபத்தில் மனதை ஐக்கியம் செய்துவிடவேண்டும். இவ்விதமாய் மனதை ஆகாசவடிவத்தில் ஐக்கியம் செய்துவிடுவதே வேதாந்தங்களின் முடிவாகிய ரகஸ்யார்த்தம். ஆனால் ஒரே முறையாய் ஆகாச வடிவத்தில் மனதை ஐக்கியம் செய்வது மிகவும் கஷ்டம். ஆதலால், மனதை ஒரே நாட்டத்தில் நிறுத்துவதற்காக முதல் முதல் விக்கிரக ஆராதனையைச் செய்யவேண்டும். இவ்வாறு செய்து வந்தால் மனம் ஒரே நாட்டத்தில் நின்று, பிறகு அந்த ஓர்நாட்டமும் தனக்குத்தானாகவே மறைந்துவிடும். இப்படிக்குச் செய்யாமல் அநேக அக்கிரமங்களைச் செய்து பாவத்தைச் சம்பாதித்துக்கொண்டு அநேக தடவைகளில் நானாவித யோனிகளிற்போய்ப் பிறந்துகொண்டும் இறந்துகொண்டும் மாயையென்னும் இருளில் அகப்பட்டு வழிதெரியாமல் துக்கமென்னும் சமுத்திரத்தில் மூழ்கி பலவித துக்

கங்களை அனுபவித்துக்கொண் டிருப்பதனால், இவர்களை அடிக்கடி சிருஷ்டிசெய்ய, பிரமதேவருக்கு விசேஷகஷ்டத்தைக் கொடுத்துக்கொண்டு வருகின்றார்கள். பிரபஞ்சத்தையும் ஜீவர்களையும் சிருஷ்டிசெய்து அவரவர்கள் கேட்டவைகளை எல்லாம் கொடுக்கும்படி பகவான் பிரமதேவருக்கு சொல்லியிருப்பதனால், ஜீவர்கள் நித்தியானந்த பதவியைக் கேளாமல், சிலதுநாளில் அழிந்துபோகத்தக்க துக்கசுக விஷயங்களை அனுபவிக்க இச்சைகொண்டு, வரங் கேட்டு, மோகமென்னும் இருளில் அகப்பட்டு கேவல விஷயானந்தத்தில் மூழ்கி கடைசியில், பசு பக்ஷியாதி ஜீவ ஜந்துக்களின் ஜன்மங்களை யடைந்து, நல்ல வழிக்கு வராமல் மாயையிலேயே அகப்பட்டுக்கொண்டு துக்க சுகங்களே நல்ல சுகமென்றெண்ணி அவைகளையே கேட்கின்றார்கள். ஆதலால், உலகத்திலுள்ள ஜனங்க ளெல்லோரும், அவரவர்களின் இருதயகமலத்தில் ஆகாசவடிவமாய் அமர்ந்த ஆத்ம சொரூபத்தை மூடிக்கொண் டிருக்கும் ஆசாபாசங்களென்னும் அழுக்குகளைக் கழுவி போக்கடிக்காமல், சரீரத்தின்மேல் இருக்கும் அழுக்குகளைக் கழுவி, விபூதி பூசி ருத்திராக்ஷங்களைப் பூண்டு ஆசனத்தில் உட்கார்ந்து கண்களைமூடி ஜபமாலையை கையிற்பிடித்து முணமுணவென்று உதட்டை அசைத்து கர்மவாக்கினால் மந்திரத்தைச்சொல்லி ஜப மாலையைத் திருப்பிவந்தால், இருதய கமலத்திலிருக்கும் ஆசை யென்னும் அழுக்குகளைப் போக்கடிக்கமாட்டா? எந்த மந்திரங்களும ஜபங்களும் பூஜைகளும் செய்யும்வேலையை மனதிற்குக்கொடாமல் சுமமாயிருநதால் தன்னைத்தான் மறந்து கல்பொம்மைபோல் நின்று பிரம்மானந்த சுகத்தில் சொக்கியிருப்பான்.

எப்படியென்றால், காட்டில் மலைக்குகைக்குள் ருஷிகள் புகுந்து தவம் செய்கின்றார்களல்லவா? அத்தவத்தின்

ரகஸ்யார்த்தம் என்னவென்றால், தவம் செய்பவர்கள் எந்தப் பலனையும் கோராமலும், எந்த விக்கிரகங்களின் ரூபம் மனதில் நினையாமலும், எந்த மந்திரங்களும் ஜபங்களும் செய்யாமலும் மனதை பரமாத்ம சொரூபத்தில் கலக்கும் படிச் செய்து தான்தானுய்க் கல்பொம்மையைப்போல் நின்றுவிட, மலைக்குகைக்குள் சென்று விடுவார்கள். இவ்வாறு சரீரம் கல்பொம்மைபோல் நின்றபிறகு, சிரசு கழுத்து சரீரம் சாயாமல் அசைவர நின்றுவிடும். இவ்வாறு நின்று விடுவதே தவத்தின் ரகஸ்யார்த்தம். பட்டணங்கள் கிராமங்கள் கோவில்கள் மடங்கள் சத்திரங்கள் முதலான இடங்களில் யிருந்தால் இப்படிப்பட்ட நிலைக்கு வருவது மிகவும் கஷ்டமென்றெண்ணி தவத்தின் ரகஸ்யார்த்தம் அறிந்த புத்திமான்கள் காட்டுக்குச்சென்று மலைக் குகைக்குள் ளிருக்கும் ஏகாந்த இருட்டறையில் உட்கார்ந்து மனதை பரமாத்ம சொரூபத்தில் ஐக்கியம் செய்ய சாதனம் செய்துவருவார்கள். இவ்வாறு சாதனம் செய்வதற்கே முன்னுள்ள அரசர்களில் சிலர், எல்லாபோகங்களையும், ஐஸ்வர்யங்களையும் விட்டு காட்டுக்குச் சென்றுவிட்டார்கள். இதுவே தவத்தின் ரகஸ்யார்த்தம். இருட்டு அறையே தவத்திற்கு சிரேஷ்டமானதாதலால் இந்நூலில் உபதேசித்திருக்கும் உபதேசங்கள் எல்லாம் ஏகாந்த இருட்டு அரையிலிருந்து இதில் சொல்லியிருக்கும் உபதேசத்தையே சாதனம் செய்துவந்தால் மனம் ஆத்மசொரூபத்தில் லயித்து பிரம்மானந்த சுகத்தை அடையலாம். மனம் இவ்வாறு லயித்துவிடுவதே மன மிறந்ததென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

எல்லாப் பூஜைகளும் ஜபங்களும் செய்வது மனதை சூன்யமாய்ச் செய்வதற்கேயன்றி மற்றவைகளுக்கல்ல; இப்படிப்பட்ட சுகத்தை அனுபவிக்க வழிதெரியாமல் சில

புருஷர்கள் கஞ்சாப்புகை சாப்பிடுகின்றார்கள். அது சாப்பிட்டவுடன், கஞ்சா மயக்கத்தால் மனக்குரங்கு சில நிமிஷங்கள் வெளியில் ஓடாமல் நின்றிருக்கும்; கஞ்சாமயக்கம் தீர்ந்தவுடன் மறுபடியும் மனக்குரங்கு, பல இடங்களிலும் ஓட ஆரம்பிக்கும். அப்போது மறுபடியும் கஞ்சாப்புகை சாப்பிடுகின்றார்கள். இப்படிச்செய்து மனதை நிறுத்துவது சாதனமல்ல. இவ்வித சாதனங்களினால் ஆனந்தம் உண்டாகவேமாட்டா. மனதை நிறுத்த வழிதெரியாமல் அநேகர்கள் கஞ்சாப்புகை சாப்பிட்டுப் பாழாகின்றார்கள். ஆதலால், கஞ்சாப்புகை சாப்பிடாமல் சிலது நாட்கள், இதில் சொல்லியிருக்கும் "ஸோஹம்" மந்திரம் சுவாசத்துடன் சேர்த்து உள்ளுக்கிழுத்துக்கொண்டும், வெளியில் விட்டுக்கொண்டுமாய் ஜபம்செய்துவந்தால், மனம் இறந்து பிரம்மானந்த சுகத்தை அடையலாமென்று இதில் உபதேசமாய்ச் சொல்லியிருக்கின்றோம். அநேககோடி விலையுயர்ந்த மாணிக்கம் பச்சை நவரத்தினங்கள் போன்ற ரத்தினங்களுக்கெல்லாம் அதிகமாயிருக்கும் ரத்தினங்களை இந்நூலில் எழுதி வெளியிட் டிருக்கின்றோம். இந்த ரத்தினங்கள் அநேகர் கண்களுக்குப் புலப்படமாட்டா. ஒருவேளை புலப்பட்டாலும் அதை வாசிக்க மனதிற்கு இடம் கொடுக்கமாட்டா. அநேக ஜன்மங்களாய் நல்ல புண்ணியங்களைச் செய்துவந்த புண்ணிய புருஷர்களுக்கு மாத்திரம் இந்த "ஜீவப்பிரம்மைக்கியத்தில்" சொல்லியிருக்கும் ரகஸ்யம் காணப்பட்டு அதை சாதனம் செய்யவேண்டுமென்று எண்ணமுண்டாகுமேயொழிய மற்றவர்களுக்கு உண்டாகமாட்டாதென்று அறியக் கடவீர்களாக.

ஐயா! பூர்வ ஜன்மங்களில் தனக்கு நேர் விரோதிகளாய் இருந்தவர்களே, பாரியாளாய் வந்துசேர்ந்து சம்சாரமென்னும் பந்தத்தில் அவனை அகப்படும்படிச்செய்து அவ

னுக்கு அநேக விதங்களாகிய துக்கங்களை, துஷ்டமனைவிக ளாய் இருக்கப்பட்டவர்கள் உண்டாக்கி அவன் பிராணனை வாட்டி, மனம் நோகும்படிப் பலவித தூஷணைகளைத் தூஷித்து அவனைத் தலையெடுக்க விடாமல் அதோகதி யாய்ப் பாழாகும்படிச் செய்துவிடுகின்றார்கள். குடும்பங் களில் பாரியாளே புருஷனுக்கு எமனாயிருக்கின்றாள். ஆத லால், பூர்வ ஜன்மங்களில் இவனுக்கு நேர் விரோதிகளாய் இருந்தவர்களே, பாரியாளாய் வந்து சேர்ந்து அவனைத் தலையெடுக்கவிடாமல் செய்து அதோகதிக்கு ஆளாக்கிவிடு கின்றார்கள். நல்ல புண்ணிய புருஷர்களுக்கு மாத்திரம் நல்ல பாரியாளாய் வந்து சேருவாளே யொழிய மற்றவர் களுக்கு வந்து சேரமாட்டாள். எமபாதையோ ஒருநாள் அனுபவிக்கத்தக்கது; பாரியாளின் பாதையோ மரண மடையும் வரையில் அனுபவிக்கத்தக்கதா யிருக்கின்ற தென்று ஸ்பஷ்டமாய்த் தெரிந்துகொண்டு ஜாக்கிரதைப் படுங்கள். ஆதலால், இதை வாசிக்கும் பெண்டுகளெல் லோரும் புருஷன் சொல்லுக்கடங்கி அவரது இஷ்டம் போல் நடந்துவருவீர்களாகில், அதுவே பதிவிரதா தர்ம மென்று சொல்லப்படும்: இந்த பதிவிரதா தர்மத்தினால் நீங்கள் மேலான பதவியை அடைவீர்கள்: இது சத்யமான வாக்கென்று அறிந்து, புருஷனுக்கு அடங்கி அவர் சொல் வதுபோல் நடந்து வரவேண்டும்: புருஷர்கள் ஸ்திரீகள் எல்லோரும் சம்சாரமென்னும் சக்கரத்தில் அகப்பட்டுக் கொண்டு பாழாகாமல் இருக்கும்படி இந்நூலில் விசேஷ மாய் குரு உபதேசம் சொல்லி இருக்கின்றோம். அந்த குரு உபதேசத்தை அறிந்து சதாகாலமும் அதையே ஜபம் செய்து வருவீர்களாகில் அநேக ஜன்மங்களாய்ச் செய்து வந்த உங்கள் பாப கர்மங்களெல்லாம், பஞ்சுப் பொதியிற்

பட்ட நெருப்புப்பொறி பஞ்சுமூட்டைகளையெல்லாம் பஸ்மம் செய்விப்பதுபோல், பஸ்மம் செய்துவிடும். ஆதலால்,

உலகத்தின் கண்ணுள்ள ஒவ்வொருவரும் ஞானத்தை அடையவேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தபோதிலும் அவர்களினுடைய பூர்வ ஜன்மங்களின் கர்மமானது, ஞானமார்க்கத்திற்குரிய அரியநூல்களை வாசிக்கவிடாமல், நாவல் (கதை)கள், வீண் சரித்திரங்கள், அருவருக்கத்தக்க நாடகங்கள் அகடவிகடமான குயித்திக்கதைகள் முதலியவற்றை வாசிக்கச்செய்து, அஞ்ஞானமென்னும் படுகுழியில் வீழ்த்தி மாயா சம்சார சமுத்திரத்தில் அலைந்து கொண்டிருக்கச் செய்யும்; ஆதலால், பூர்வ சுத்தவாசனையில்லாதவர்கள் இந்த ஜன்மத்திலாகிலும் நல்லொழுக்கத்துடன் இருந்து பெரியோர்களை யடுத்து, அவர்களின் மனம் சந்தோஷிக்கும்படி நடந்து, அவர்களால் ஞானோபதேசம் செய்யப்பெற்று அதை இடைவிடாமல் அப்யசித்து வந்தால், அந்த அப்யாச முதிர்ச்சியினால் ஜன்மாந்தரங்களிலாயினும் மோக்ஷத்தை அடைவதற்கு முக்கியமானதாயிருக்கும். உள்ளபடிக்கே ஞானமார்க்கத்தின் உண்மையைச் சிறிதேனும் உணர்ந்தவர்கள் மேற்படி நாவல் முதலிய வீண் கதைகளைப்படித்து தமது வாழ்நாட்களை வீழ்நாட்களாக்கி விடார்கள்.

ஒருவனுக்கு, தன் சரீரத்திலிருக்கும் வியாதியைப் போக்கடித்துக் கொள்வதற்கு வைத்தியனும் ஔஷதமும் எப்படி வேண்டுமோ, அதுபோல் தனது மனதிலிருக்கும் ஆசை யென்னும் அழுக்குகளைப் போக்கடித்துக் கொள்வதற்கு குருவென்னும் வைத்தியனும், யோகாமிருதமென்னும் ஔஷதமும் அத்தியாவசியமாய் வேண்டற்பாலன.

ஸம்ஸார நிவர்த்தியானது ஞானத்தினால் உண்டாகுமேயன்றி கர்மத்தினால் உண்டாகமாட்டா. பூர்வ ஜன்ம புண்

ணிய கர்மங்களினுல் பரிபக்குவமடைந்து சம்சாரத்தி லிருந்து விரக்தி அடைந்தவனே ஞானத்திற் கதிகாரி; அவனே மோக்ஷமடைய அருஹன். மோக்ஷமே பந்த விமுக்தியாகிய பிரம்மஞான சொரூபம் எனவும், அஞ் ஞானமே பந்தத்திற்குக் காரணமெனவும் விசாரித்துத் தெளிதலே மானுடயாக்கை யெடுத்ததனு லான பயன். ஆகவே, ஒவ்வொருவரும் ஸத்குருமுகமாய்ச் சாஸ்திரங் களை ஆராய்ச்சிசெய்து அவரால் உபதேசம் பெற்று அவ் வழியே அநுஷ்டித்துவந்தால் சிறுகச் சிறுக மேலெடுக்கும் ஜன்மங்களில் சகல ஆசைகளும் விட்டு நீங்கும்.

ஆதலால், நீங்கள் நல்ல குருவைத்தேடி உபதேசம் பெறவேண்டுமென்னும் எண்ணத்தைவிட்டு, இந்நூல் ஒன் றையே வாசித்து இதில் உபதேசமாய்ச் சொல்லியிருக்கும் 'குரு' ரஹஸ்யார்த்தங்களை நன்ருய் அறிந்து பிரம்மஞானத் தைச் சம்பாதித்து, மாயை என்னும் அஞ்ஞானத்தை வென்று ஆனந்தத்தை அனுபவிக்கவேண்டும். உலகத் தில் அனேக நூல்கள் இருந்தபோதிலும் இந்த "ஜீவப் **பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்**" தவிர மற்ற நூல்கள் யாவும், ஆத்ம என்னும் வஸ்துவில் அனேக சந்தேகங்களை உண்டாக்கும்; இந்நூல், அப்பேர்ப்பட்ட சந்தேகங்களை உண்டாக்கமாட்டா. ஏனென்ருல், நமது சரீரமே ஓர் ரதமாய்க் காட்டி இந்த சரீரமென்னும் ரதத்திற்கு, கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகத்தின்மேல் இருக்கும் தோல் இந்த ஐந்து இந்திரியங்களே குதிரைகளாகவும், மனதே குதிரையின் கடிவாளமாகவும், புத்தியே இந்திரியங்களென் னும் குதிரைகளை ஓட்டும் சாரதியாகவும், ஆத்மாவே ரதத் தில் உட்கார்ந்திருக்கும் ரதிகனுகவும் (அதிபதியாகவும்) காட்டி, எவனொருவன் தன் இந்திரியங்களென்னும் குதிரை களை புத்தி என்னும் சாரதியினுல் சரியாய்த் திருப்பி ஓட்டு

கின்முனே, அவனுக்கு, மனதென்னும் கடிவாளத்தினுல் இந்திரியங்களென்னும் குதிரைகள் வசமாய், ரதத்தில் உட்கார்ந்திருக்கும் ரதிகனென்னும் ஆத்மாவை மோக்ஷமென்னும் வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்க்குமென்றும், எவன் புத்தி என்னும் சாரதியினுல் இந்திரியங்களென்னும் குதிரைகளைச் சரியாய்த்திருப்பி ஓட்டாதோ, அவன் இந்திரியங்களென்னும் குதிரைகள் துன்மார்க்க விஷயத்தில் கொண்டுபோய் அழுந்தச்செய்து, ரதத்தில் உட்கார்ந்திருக்கும் ஆத்மாவென்னும் அதிபதியை ஜன்மங்கள் தோறும் அவனுடன் கூடவே தனக்குச் சாக்ஷி சொரூபமாயிருக்கும்படி செய்விக்குமென்று இந்நூலிலும், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதரூபமாய் எழுதியிருக்கும் ஸ்ரீ பகவத் கீதையிலும் எழுதியிருக்கின்றோம். ஆதலால், புருஷனானவன் புத்தியென்னும் ரதசாரதிக்கு நன்றாய் உபதேசித்து, தன் இந்திரியங்களென்னும் குதிரைகளை நல்லவழியாய்ப் போகும்படி மனதென்னும் கடிவாளத்தினுல் திருப்ப வேண்டும். அவ்வாறு திருப்பினுல் மோக்ஷமென்னும் வீட்டைத் தவருமல்அடையலாம் என்பதே இந்நூலின்கருத்து.

ஐயா! ஸத்குருவினுல் தெரிந்துகொள்ளத்தக்க உபதேசங்கள் எல்லாம் இதில் உபதேசித்திருக்கின்ற தென்றும், மோக்ஷமடைய அதிதீவ்ர பக்குவ முடையவர்களுக்கு இதுவே முக்கிய நூலாயிருக்கின்ற தென்றும், இந்நூல் வாசித்த அனேக புண்ணிய புருஷர்கள், மோக்ஷப் பிராப்தி அடைவார்களென்றும், அவர்கள் அடையும் மோக்ஷபதவியில் தமக்கும் கிஞ்சித்மாத்திரம் லபிக்கவேண்டுமென்றும், அப்படி லபித்த புண்ணியத்தினுல் தாம் கடைத்தேற வேண்டுமென்றும் உத்தேசம் கொண்டு, கோயம்புத்தூர் ஜில்லா அவநாசி தாலுக்காவைச்சார்ந்த தேக்கம்பட்டி கிராமத்திலிருக்கும் தேசியகவுண்டர் பார்யை சௌபாக்கிய

வதி பொம்மம்மாள் இந்நூல் அச்சிடுவதற்காக ரூபா 500 ஈசுவ ரார்ப்பணமாய்க் கொடுத்திருக்கின்றார்கள்.

இந்தப் புண்யவதி உத்தேசம் கொண்டிருப்பது எப்படி இருக்கின்றதென்றால்; ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் மஹாத்மாக்களினுடையவும், புண்ணியவான்களினுடையவும், பாதங்களினால் மிதியுண்டு, அவர்களின் பாத பரிசத்தினால் தாம் கடைத்தேற வேண்டுமென்று எண்ணி, ஆலயங்களைக் கட்டிவைத்த புண்ணிய புருஷர்கள் எல்லோரும் கோபுர வாசற்படிகளிலும் மூலஸ்த்தானங்களிலுள்ள பித்தளைப், படிகளிலும் சுற்றிலுமுள்ள பிராகாரங்களிலும் ஆங்காங்கு பெரியோர்கள் செல்லும் மார்க்கங்களிலெல்லாம் தம்மைப்போன்ற உருவங்கள், கல்லிலும் பித்தளைப் படிகளிலும் அடிப்பித்து வைத்திருக்கின்றார்கள். இப்படி வைப்பதற்குக் காரணம் யாதெனில், ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் மஹாத்மாக்களின் பாத ஸ்பரிசம் பட்டாகிலும் நமது ஜநநம் கடைத்தேற வேண்டுமென்னும் உத்தேசங் கொண்டு ஆங்காங்கு தம்மைப்போன்ற சிலைகள் அடித்து வைத்திருப்பது எல்லோரும் அறிந்த விஷயமே.

இவ்விடம் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் நேரிடா விட்டாலும் மேற்படி பொம்மம்மாள் திரவ்விய சகாயத்தினால் வாங்கிய கடிதங்களில் பதிப்பித்திருக்கும் வேதவாக்கியங்களை மஹாத்மாக்களின் வாக்கினால் உச்சரித்த மாத்திரத்தில் தமக்குப் புண்ணிய பலன் உண்டாகுமென்றும், மற்றும் சிலர் இந்நூலில் உபதேசித்திருக்கும் 'குரு' ரஹஸ்யங்களை எல்லாம் அறிந்து ஜபம்செய்து வரப்பட்டவர்களுக்கு, மனோலயமாய் பிரம்மாநந்தத்தில் சொக்கியிருக்கும் ஆநந்தம், தமக்கும் கிடைக்கவேண்டுமென்று எண்ணி இவ்

வித தர்ம கைங்கர்யத்திற்குப் பொருளுதவி செலவு செய்த தாய் ஸ்பஷ்டமாய்த் தெரியவருகின்றது. நற்குணமுடைய புண்ணிய புருஷர்களின் உள்ளம், எப்பொழுதும் இப்படிப்பட்ட நல் விஷயத்திலேயே தமது திரவ்யத்தை செலவழிக்க இச்சைகொண் டிருப்பார்களென்று அறியக் கடவீர்களாக.

இந்நூலில், திருக்களிற்றுப் படியார், கைவல்யம், முத்திமுடிவு, நம்மாழ்வார் பெரியாழ்வார் திருமொழி, இராமாநுஜர் நூற்றந்தாதி, திருக்குறுந்தாண்டகம், ஞானவாசிட்டம், உபதேசகாண்டம், குறள், சிவஞ்ஞானசித்தியார், சிவப்பிரகாசம், திருவருட்பிரகாசம், வள்ளலார் சாஸ்திரம், தேவிகாலோத்திரம், நெஞ்சறிவிளக்கம், திருச்செந்தூர் புராணம், திருவாதவூர் புராணம், ஸ்வானுபவமாலே, தணிகைப்புராணம், நிஜானந்தபோதம், வாதவூர் புராணம், திருமந்திரம், உண்மை விளக்கம், பெரியபுராணம், கந்தபுராணம், திருவுந்தியார், காசிகாண்டம், அகஸ்தியர்பாடல், அகஸ்தியர்வாகடம், பிரபுலிங்கலீலே, அழுகணிச்சித்தர்பாடல், நிஷ்டானுபூதி, காகபுஜண்டர், பாம்பாட்டிச்சித்தர் பாடல், ஞானசூரியன், தாயுமானவர், பட்டிணத்தடிகள், இவைகள் யாவும் இவ்வெட்டாம் பதிப்பில் அந்தந்த சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி அந்தந்தப் பாடல்களே அதிகமாய்ச் சேர்த்திருக்கின்றோம். இதில் அனேக சொற்குற்றங்களும் பிழைகளும் இருக்கலாம் ஆதலால்,

ஓ சகோதரி சகோதரர்களே! பாலும் நீரும் கலந்து பிரிக்கக்கூடாத நிலேயில் யிருக்கையில், அன்னப்பக்ஷியானது நீரினின்று பாலேப்பிரித்து நீரை நீக்கிப் பாலே

மாத்திரம் உட்கொள்ளுகின்றன. இதைச் செய்ய இதர பக்ஷிகளால் சாத்தியப்படமாட்டா. அதுபோல், இந்நூலை வாசிக்கும் சகோதரிகளும் சகோதரர்களும் முன்சொல்லிய அன்னப்பக்ஷியைப்போல் யிருந்து, இந்நூலில் எழுதியிருக்கும் ஸத்விஷயங்களைக்கொண்டு, குற்றங்களை நிவர்த்திசெய்வீர்களென்று பிரார்த்திக்கின்றனன்.

இங்ஙனம்,

உங்கள் எல்லோருடைய க்ஷேமத்தைக் கோரப்பட்டவன்

பரமஹம்ஸ ஸச்சிதானந்தன்

கடிகோட்டை, வீரபல்லி போஸ்ட்டு

ராயசோடி தாலுக்கா,

கடப்பை ஜில்லா.

CONSTIPATIAN

மலச்சிக்கல் நிவாரணை செய்யும் அன்னரஸ ஸஞ்ஜீவி.

ஓ சகோதரி சகோதரர்களே!

உலகத்திலுள்ள ஜனங்களின் சரீரங்களெல்லாம், பிருதிவி (மண்) அப்பு (ஜலம்) தேயு (அக்கி) வாயு (காற்று) ஆகாசம் (வெளி) என்னும் பஞ்ச (ஐந்து) பூதங்களினால் உண்டாயிற்று. இவ்வாறு எல்லோருடைய சரீரங்களும் பஞ்சபூதங்களினால் உண்டானபோதிலும், இச்சரீரங்களெல்லாம் ஒரேவிதமாயிராமல் வெவ்வேறு பேதங்களா யிருப்பதை இதனடியில் சொல்லுகின்றோம். அதாவது,

சிலருக்குப் பித்தம் அதிகமாயும், சிலருக்குச் சமமாயும், சிலருக்கு குறைவாயுமிருக்கும். அதுபோல், உஷ்ணம் அதிகமாயும், சமமாயும், குறைவாயும் இருக்கும். அதுபோல், நாடிகளும் வெட்டைச் சூடுகளும் சிலேஷ்ம (சீதள)ங்களும் ஜன்னிகளும் திமிர்களும் காமாலைகளும் தித்திப்புகளும் கசப்புகளும் புளிப்புகளும் உட்கானல்களும் ஸ்தூலமாகுதலும் கருகுதலும் (மெலிந்து போகுதலும்) நரம்பு வலிகளும் தொண்டைக் கட்டுதலும் மூச்சு அதிகமாய் விடுதலும் மேல்சுவாசம் உண்டாகுதலும் பச்சை காமாலைகளும் மஞ்சள் மூத்திரங்களு முடையவர்களா யிருக்கின்றார்கள். இதற்குத் திருஷ்டாந்தம் இந்நூல் 150-வது பக்கம் நாடிகளும் அதன் குணங்களும் என்பதில் காண்க.

மேற்சொல்லிய சரீரங்களில், சில சரீரங்களுக்கு மலச்சிக்கல் (Constipatian) உண்டாய் மல விசர்ச்சனை செய்யும் பொழுது (விடும்பொழுது) மலம் தாராளமாய் (தளர்ச்சி

யாய்) வாராம லிருப்பதனல், மூச்சைப்பிடித்து நிறுத்தி முக்கலிடும்போது அம்மலம் அழுத்தமாயும் உருண்டை உருண்டைகளாயும் மூச்சின்பலத்தால் மிகவும் கஷ்டத்துடன் சிலமலம் வெளியில்வரும். இவ்வாறு வரும் மலத்திற்கே மலச்சிக்கல் (Constipatian) என்று சொல்லப்படும் இவ்வாருன மலச்சிக்கலுடையவர்களுக்கும், மலம் தாராளமாய் வரப்பட்டவர்களுக்கும் எப்பொழுதும் எந்த நோய்களும் வாராமலிருக்க பிரதிதினம் பழயசாதமும் அந்த சாதத்தின் ரசமாகிப அங்கரச சஞ்சீவியையும் சாப்பிடவேண்டிய முறையை இதனடியில் சொல்லிபிருப்பது போல் சாப்பிட்டுவந்தால் எப்பொழுதும் மலச்சிக்கலும், வியாதிகளும் வாராமல் மிகவும் சுகமா யிருக்கலாம். இனி, பழயசாதம் செய்யவேண்டிய முறையும் அதைச் சாப்பிட வேண்டிய விதமும் இதனடியில் சொல்லுகின்றேம். அது போல் செய்து சாப்பிட்டுவரவேண்டும்.

ஐயா! இரவில் போஜனமுண்டு (சாப்பிட்டு) மிகுதியா யிருக்கும் சாதத்தில், சில பெண்டுகள் குளிர்ந்த ஜலத்தையும், மற்றும் சில பெண்டுகள் வென்னீரையும் விட்டுப் பழயசாதமாய்ச் செய்து, மறுநாட்காலே அந்த சாதமும் நீரும் விட்டுச் சாப்பிடுவார்கள். இவ்வாறு சாப்பிடாமல் அடியில் சொல்வதுபோல் செய்து பழயசாதமும் அதன் நீரும் சாப்பிட்டுவந்தால், அவர்களுக்கு மலச்சிக்க லில்லாமலும், சரீரத்திற்கு எவ்வித வியாதிகளும் வாராமல் எப்பொழுதும் சுகமாயிருப்பார்கள். இனி, பழயசாதம் செய்யவேண்டிய முறை இதனடியில் சொல்லுகின்றேம் அதுபோல் எல்லாக் குடும்பங்களிலும் செய்து சாப்பிட வேண்டும்.

இரவில் சாதம் வடித்தபிறகு, சுத்தஜலம் ஒரு பாத்திரத்திலாகிலும் அல்லது பாண்டத்திலாகிலும் விட்டு நன்

ருய்த் தெள்ளும்படி (கொதிக்கும்படி) எரிவிட்டு, கொதித்த பின் அச்சலத்தை வேருய் எடுத்து ஆறவைக்கவேண்டும். பிறகு, ஷை கஞ்சிநீர் எட்டை நீக்கி அந்தந்த குடும்பத்திற்கு வேண்டுமளவு கஞ்சிநீர் வேறோர் பாண்டத்தில் விட்டு, அந்த கஞ்சிநீர் இரண்டளவு பிரமாணம் முன் காச்சிய வென்னீறை ஆற்றி, ஷை கஞ்சிநீரில்விட்டுக் கலந்து தயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டும்.

இரவில் எல்லோரும் சாப்பிட்டபிறகு, மிகுதியாகும் சாதத்தில், முன் தயார்செய்து வைத்த கஞ்சிநீர் ஜலத்தை ஷை சாதமுள்ள பாண்டத்தில் குடும்பத்திற்கு வேண்டும் பிரமாணம் ஷை ஜலம்விட்டு, அப்பாண்டத்தை மூடிவைக்க வேண்டும். பிறகு, இரவு நித்திரைசெய்து காலையில் எழுந்து காலக்கடனை முடித்து பல்தேய்த்து ஸ்தானம் செய்து நெற்றியில் விபூதியோ அல்லது, ஸ்ரீ சூர்ணமோ அணிந்து, சிவபூஜையோ, அல்லது விஷ்ணுபூஜையோ செய்துமுடித்து ஷை பழயசாதம் இலையில் சாப்பிடாமல், ஒரு கிண்ணியில் போட்டு, ஷை பழயசாதம் நீர் சாதத்திற்குமேல் இரண்டு அங்குல மிருக்கும்படிவிட்டு, அதில் சமுத்திரலவணம் (உப்பு) கொஞ்சம் அதிகமாய்க் கரிக்கும்படிபோட்டுப் பிசைந்து எதாகிலும் ஊர்காய் வைத்துக்கொண்டு சாப்பிட்டுக் கடைசியில் அந்நீரையும் சாப்பிடவேண்டும். எவ்வளவு மழைகாலமாயிருந்தாலும் அல்லது, குளிர் காலமாயிருந்தாலும் ஒருநாளும் தவராமல், தம் ஆயுள் உள்ளவரையில் ஷை பழையசாதம் சாப்பிட்டு வருவாராகில், அவர்களுக்கு எப்படிப்பட்ட வியாதிகளும் எக்காலத்திலும் உண்டாகவே மாட்டா. ஆதலால், பிரதிதினம் சிறுவர்களும் சிறுமியர்களும் பெரியோர்களும் ஆறுமாத காலம்வரையில் தவராமல் மேற்சொல்லியபடிபோல் பழய சாதம் செய்து சாப்பிட்டுவாருங்கள். அதன் அனுபவம்

உங்களுக்குப் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாய்த் தெரிய வரும்.

நமது முன்னோர்காலத்தில் காலையில், இட்லி சாம்பார் றவைதோசை உப்புமா இன்னும் அநேக பக்ஷணங்களும், காபி, டீ முதலானவைகள் இல்லை. இவைகள் யாவும் கலியுகம்பெறுகப்பெறுக இப்போது உண்டாயிற்று. நமது முன்னோர் காலத்தில் முன் சொல்லியதுபோல், பழய சாதம் செய்து சாப்பிட்டுவந்து எந்நோய்களும் இல்லாமல் மிகவும் சுகஜீவிகளாயிருந்து காலங்கழித்துச் சென்றார்கள். பழயசாதம் அதன்நீர் விஷயம் இவ்வளவு விஸ்தாரமாய் எழுதுவதற்குக் காரண மென்னவென்றால், இப்பழயசாதமும் அதன்நீர் விஷயமும் அனேகர்களுக்குத் தெரிய வராது; ஆதலால், இதை எல்லோரும் தெரிந்துக்கொண்டு அதுபோல் பழயசாதம் செய்து சாப்பிட்டு வருவதற்காக இந்நூல் மூலமாய்த் தெரிவித்தோம். இனி இதுமுதல் எல்லாக் குடும்பத்தி லுள்ளவர்களும் பழயசாதம் செய்து சாப்பிட்டுவாருங்கள். எந்த பக்ஷணங் (பலகாரங்) களும் காபி, டீ முதலானவைகளும் சாப்பிடவேண்டாம். சுவற்றின்மே லல்லவோ சித்திரம் (படம்) எழுதவேண்டு மென்பதுபோல், சரீரம் வியாதி இல்லாம லிருந்தா லல்லவோ, சிவபூஜையும் யோகாப்பியாசமும் ஞானமும் அடையலாம். சரீரம் நல்ல ஸ்திதியி லில்லாவிட்டால் எதையும் அடையமாட்டார்கள். ஷை சாதத்தின்நீர் ரகசியம் இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

முன்சொல்லிய பழயசாதம் நீரை நன்றாய்க் கலக்கி ஓர் கலாய்ப் பாத்திரத்தில், மூன்று பூனா டம்ளர், அல்லது இரண்டரை டம்ளருக்குக் குறையாமல் அளந்துவிட்டு அதில் உப்புகொஞ்சம் அதிகமாய்க் கரிக்கும்படி போட்டுக் கலக்கி காலையில் எதுவும் சாப்பிடாமல் வெறும்வயற்றில்

அந்நீரைச் சாப்பிட்டு உடனே தாம்பூலம் போட்டு விழுங்க வேண்டும். இவ்வாறு சாப்பிட்டால் ஒன்று அல்லது இரண்டுமுறை அந்தந்த தேகத்திற்குத் தக்கபடி பேதியாய்ப் பிறகு, அந்நீர் குடலையெல்லாம் கழுவி வெறும் ஜலமாய்க் கொண்டுவந்து வெளியில் தள்ளும். உப்பு கொஞ்சம் அதிகமாய்க் கரிக்கும்படி போட்டுச் சாப்பிட்டால் இக்குணத்தைத்தரும்; உப்பு அவ் வளவிற்குமேல் விசேஷமாய்ப் போட்டு, அதன் காரத்தினால் திகட்டும்படி கஷ்டத்துடன் சாப்பிட்டால், வயிர்நோய் உண்டாகும். வாந்தியாகும், குடலைமுறுக்கும், தாஹமெடுக்கும், நன்றாய்ப் பேதியாகும். ஆதலால், உப்பு அவ்வளவு அதிகமாய்ப் போடாமல் சாதாரணமாய்ச் சாப்பிடும் உப்பைவிட கொஞ்சம் அதிகமாய்க் கரிக்கும்படிப்போட்டுச் சாப்பிட்டால் மிகவும் சுலபமாய் பேதியாகும், இவைகளையெல்லாம் அடியேன் பரீக்ஷித்துப்பார்த்து உங்கள் எல்லோருக்கும் இப் புஸ்தகமூலமாய்த் தெரிவித்த கைகண்ட அன்னரச அமிர்தசஞ்சீவி ஔஷதமென்று அரியக்கடவீர்களாக.

ஓ சகோதரிகளே! உங்கள் பிள்ளைகளாகிலும், பெண்களாகிலும் வாசிக்கப் பள்ளிக்குச் செல்லும்போது, இதுவரையில் கொடுத்திருந்த பக்ஷணங்கள், காபி அல்லது டீ முதலானவைகளை நிறுத்தி, முன்சொல்லிய பழயசாதம் இலையில் போடாமல் கிண்ணியில் போட்டு, மேற்படி சாதத்தின்நீர் அதிகமாய்விட்டு, ஊர்காய்வைத்து சாப்பிட்டபிறகு, அந்நீரை சிறிதேனும் நிறுத்தாமல் எல்லா நீரையும சாப்பிடும்படிச்செய்து பள்ளிக்கு அனுப்புங்கள். ஆறுமாதம் சென்றபிறகு அதன் அனுபவம் உங்களுக்குப் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாய்த் தெரியவரும். உங்கள் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் இது கைகண்ட ஔஷதமாயிருந்தால், அவர்களின் ஜீவகாலபரியந்தம்

மழைக்காலமென்றும் குளிர்க்காலமென்றும் பாராமல் பிரதிதினம் இப்பழயசாதமே சாப்பிட்டுவரும்படிச் சொல்லவும். நீங்களும் அதுபோல் சாப்பிட்டுவாருங்கள். உங்களுக்கும் எந்நோயும் உண்டாகவே மாட்டா; தேகம் மிகவும் ஆரோக்கியமாயிருக்கும்.

மேற்சொல்லிய பழய சாதத்தில், தயிராகிலும் மோராகிலும் விட்டுச் சாப்பிடலாகாது. அவ்வாறு சாப்பிட்டால் திமிர், சோம்பேரித்தனம், கோட்டாவி, தூக்கம், மந்தபுத்தி முதலானவைகள் உண்டாவதுமேயன்றி வியாதிகளுக்கும் தாய்விடாயிருக்கும். மேற்படி பழயசாதத்திற்கு இரவு மிகுதியாகும் பதார்த்தம் வைத்துச் சாப்பிடலாகாது. எந்த ஊர்காயாகிலும் வைத்துச் சாப்பிடவேண்டும். இப்பழயசாதமும் ஓர் ஔஷதமென்று நினைத்துச் சாப்பிட்டுவாருங்கள்.

இப்படிக்கு

ஸச்சிதானந்தன்.

கடிகோட்டை, வீரபல்லி போஸ்ட்டு,

ராயசோடி தாலூக்கா,

கடப்பை ஜில்லா.

ஸ்ரீ சற்குரு பாதந்துணை.

சிறப்புப்பாயிரம்.

இது,

ஸ்ரீ ஷண்முகானந்தர் மரபில்வந்த

ஸ்ரீ சதாநந்த ஸரஸ்வதி

இயற்றியது.

நேரிசை யாசிரியப்பா.

உலகெலாம் போற்று மொருதனிப் பரஞ்சுடர்
அருளிய வாரணம் பிரம சூத்திரமுங்
கண்ணனெம் பெருமான் கனிந்த கீதையும்
அவன்பதம் பராவிய வனந்தமா முனிவரர்
வேத பாரகர் வித்தகச் செல்வரும்
பாதஞ் சலமுனி பகர்ந்தநூண் முறையும்
யோக சிகோப நிடதக் குண்டலி
யோக தத்துவம் யோக சூடாமணி
ஆத்ம போதம் யாஞ்ஞ வல்கியம்
சர்வ சாரந் தக்ஷிண மூர்த்தம்
ஏகா க்ஷரத்தோ டிசைந்த சந்யாசம்
ஓதிய வுபநிடத் தாதிய மூயர்நூல்
ஆங்காங் கமைதரு மரும்பொரு ளாய்ந்து
ஈங்குளம் வியம்ப வின்சுவை யிஃதெனு அ
முத்தமிழ்க் கவிஞர் சித்தங் களிப்புற
எளிதினி லியாவரு மின்பவீ டெய்தும்
யோக சாதனத் துயர்பொரு ளோர்ந்தே
தன்னனு பவத்தைத் தாரணி யுவப்பப்

பொருளல்ல வற்றைப் பொருளென மருளும்
பொய்திக ழுலக முய்வகை முறையே
பொருளி னரும்பொருள் புகன்றனன் புண்ணியன்
அன்னவன் யாரெனி லறைகுதுங் கேண்மின்
கிஞ்சுக மஞ்ஞையுங் கிளர்பூங் காவினங்
கொஞ்சு மாவளர் கோகிலங் குலவு
மதுமலர்ச் சோலையு மாதவிச் சாலையும்
அன்னங் கண்படு பகவிதழ்க் கமலம்
உன்னருந் தண்பணை யோங்கு மொருதனி
நீர்வள நிலவள நெல்வள நிலவிய
சீர்வளம் பொருந்துந் தேடரு மளவில்
அலகில் புகழ்பெறூஉ மாடவர் மங்கையர்
இலகு மெழில்பட ரின்னிசை மன்னிய
பொன்னி னனையர் பொருந்து பூம்பதி
உருப்படு முத்தம ருயர்கலங் கிளர்ந்த
திருப்பனங் காடேனுந் திருப்பதிச் செல்வன்
ஆடகம் வேய்ந்த கூட லம்பதி
சுந்தரன் சோம சுந்தரன் தூய்பதம்
சந்ததம் பரவுஞ் சிந்தைய னுவந்த
சுந்தரன் சோம சுந்தர வள்ளல்
மாட்சி வளர்விசா லாட்சிமுற் பவத்தில்
பழுத்த மனத்தே வழுத்திய தவமெலாம்
ஒருங்கே குழீஇ பொருமக வாகித்
திருந்திய திருவிற் றிருக்குலந் தழைக்கும்
அருந்தவ மியற்ற வாரிய னமர்ந்துளன்
பவக்கடல் கடக்கும் பற்பல துறையே
தவத்திறம் பூண்ட தனியோ குடையரும்
மறைமறை பயின்ற மாதவ ரோதிய
முறைமுறை தேர்ந்த மூதறி வாளன்

குறைவில் சீர்த்தியன் குணப்பெருங் குன்றம்
அன்பருள் வாய்மை யடக்கம ளவில்சீர்
தன்பொரு ளாமெனத் தம்முளம் வளர்த்தோன்
மாரக மிருதரு மாமறைப் பொருளாம்
தாரக நாமத் தனிமுத லிராமன்
தாரகச் சரிதையின் றத்துவ முணர்த்தினன்
முற்று மாய்ந்துணர் தத்துவ னுத்தமன்
வெட்ட வெளியில் விளங்குநன் மரபினன்
முத்தி சாதனத் துத்தம பாகத்
தெத்தகை ஞருமிஃ தெழுதி யுணர்வதாம்
இத்தகை நூலிங் கியற்றி யளித்தனன்
நன்னயம் பெருகும் பெண்ணையாற் றருகின்
களிமது குடையுங் காவுஞ் சோலையும்
அளிமளர் நந்தன மனந்தம் வளந்தரும்
மாட மாளிகை மதிதவழ் கோபுரச்
சிகர மோங்கித் திருமக டிகழ்தருங்
கடைப்பையம் பதியின் கருதருந் தவத்தினன்
அருளொரு வடிவத் தமர்ந்த வாரியன்
நித்தியா னந்த நிமலருக் கினியவன்
ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரகசியம்
தாவிலி யோகந் தழைக்கத் தந்ததில்
நிலைநில யாமை நிகழ்த்தினன் வெளியாய்
அலையு மனத்தை யகத்தி லடக்கிடும்
பூரக ரேசகம் பொருந்துங் கும்பம்
பயிலும் பான்மையும் பாங்குறும் பத்தியம்
ஆதியா யனைத்து மநுபவித் தறைந்தனன்
உச்சிமேற் புலவ ருவக்கும்
ஸச்சிதா நந்தத் தபோதனன் மாதோ



పుష్పగిరి. | పెన్ననది. | కడప.
Pushpagiri, | **The Pennar.** | **Cuddapah.**

சாற்றுகவி.

இது,

நீலகிரி உதகமண்டலம் திருக்காந்தல்

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி கார் ஆலயம்,

ஓம் அசலபீட உலகோபகார வித்யாதன சபை

ஸ்ரீ ஓம் ப்ரகாச சுவாமிகள்

இயற்றியது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சீர்கொண்ட மதிகண்ட பெரியர்வாழ் கடப்பையாந்
 தேசம் வந்தோர்
நீர்கொண்ட புவியாளர் நலமோட்ச மின்னதென
 நேர்ந்து கொள்ளப்
பேர்கொண்ட பிரபல சாஸ்திரம் ஜீவப் பிரம்மைக்யப்
 பெட்பு நூலைத்
தார்கொண்ட பரமாம்ஸ ஸச்சிதாநந்தன் தமிழிற்
 சாற்றி னனே.

பெங்களூர், சூளை

ஸத் குஹாசிரம

ஸ்ரீ ப்ரஹ்ம வித்யாதன சபை

ஸ்தாபகர்

ஓம் அசலபீடம் நிச்சல ப்ரகாசரென்னும்

ச மு நாராயணசுவாமிகள்

அபிப்ராயம்.

ஸர்வாதிஷ்டான ப்ரத்யக் ப்ரஹ்ம ஸத்தையே ஸ்வபாவஸத்தெனக் கூறி, நிரம்பவும் விசாலமான கொடுமுடியாய் விளக்கும் வேதோப நிஷத்தின் பிரமாணங்களை, அதிக சூக்ஷ்ம புத்தியுடையோர்களுக்கே யல்லாது மற்றும் எனையோர்களும், அறியும்படி ஆசார்ய பிரசாதம் போல்வதான "ஜீவப் பிரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" என்னும் இந்த கிரந்தமானது, கடப்பை ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸச்சிதாநந்த யோகீசுவர ரவர்களால், தமிழில் சுலோகமும் அழகிய வியாக்கியானத்துடன் எழுதி, வெளி வந்துள்ளது. வேதாந்த விசாரணைசெய்ய முற்படும் ஒவ்வொருவரும் இதனை ஆசிரயித்து ஆநந்த முறுவார்களாக.

ஐயா !

இனி நூல் பிராரம்பம் செய்யப்போகின்றோம். இந்நூலானது, உலகத்திலுள்ள ஜாதிகளையெல்லாம் ஒன்றே என்பதை அறிவித்து, பிபீலிகாதி (கண்களுக்குக் காணப்படாத சிறிய புழு) முதல் பிரமதேவன் வரையில் ஸர்வம் பிரம்மசொரூபமேயென்று தெரிவித்து, அப்பிரம்மசொரூபத்தில் நாமெல்லோரும் ஏதோ ஓர் ஜன்மத்தில்போய்ச் சேர்ந்து (ஐக்யமாய்) விடுவது திண்ணம் என்னும் ரஹஸ்யார்த்தங்களையெல்லாம் இந்நூலில் மிகவும் தெளிவாய் எழுதி வெளியிட்டிருக்கின்றோம். மாயையென்னும் சமுத்திரத்தைக் கடந்து கடைத்தேறபட்டவர்களுக்கு இந்நூல் ஒன்றே போதுமானதா இருக்கின்றது. பல சாஸ்த்திரங்களிலும் அடங்கியுள்ள ரஹஸ்யார்த்தங்களும் இதில் அடங்கி இருப்பதனல் நாம் மோக்ஷமென்னும் வீட்டைவதற்கு இந்நூல் ஒன்றே போதுமானதாயிருக்கின்றது. பல பெரியோர்கள் அனேக ரஹஸ்யங்களையெல்லாம் பாடல்களாயும் கவிகளாயும் பாடி வெளியிட்டதுபோல் இந்த "ஜீவப்பிரம்மைக்கியத்தில்" வெளியிடாமல் எல்லாம் வசன நடையாய் வெளியிட்டிருக்கின்றோம். சில நூல்களில் மனதை அடக்குவது அசாத்யமென்று எழுதியிருக்கின்றார்கள். இந்நூலில் மனதை அடக்குவது மிகவும் சுலபமென்று சொல்லி அம்மனதை நிலை நிறுத்தும் ரஹஸ்யார்த்தங்களையெல்லாம் இதில் தெரிவித்திருக்கின்றோம். இதுவரையில் இந்நூல் ஏழுபதிப்புகள் அச்சிட்டு பதினாறாயிரம் புத்தகங்கள் சிலவழிந்து, இப்போது எட்டாம்பதிப்பு நாலாயிரம் அச்சிட்டு வெளிவந்திருக்கின்றது. இதுதான் கடைசியாய் எழுதிமுடித்த பதிப்பு. இதில் எல்லா ரஹஸ்யங்களும் அடங்கிவிட்டது. இனி அச்சிடப்போகும் ஒன்பதாம் பதிப்புமுதல் சேர்க்கப்போவது ஒன்றுமில்லை. ஆதலால், முன் ஏழாம்பதிப்புவரையில் வாங்கிய நண்பர்களெல்லோரும் இவ்வெட்டாம்பதிப்பை அவஸ்யம் வாங்கி வாசித்துப் பார்க்கவேண்டும். இந்நூல் எல்லா மதங்களையும் அனுசரித்துச் சொல்வதனல் எல்லா மதஸ்த்தர்களும் இந்நூலை வாங்கி வாசிக்கலாம் என்பதற்கு ஆக்ஷேபனை இல்லை.



ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதாநந்தயோகீசுவரர், கடிகோட்டை, கடப்பை. 1923வூ மேமீ 29உ ராபர்ட்ஸன்பேட்டை, ஸச்சிதாநந்த மடாலயசபையில் சித்தாசனத்துடனும், வீராசனத்துடனும் இருக்கும்போது பிடித்தபோடோ. விலை ரூபா 2, வி.பி. பிரத்தியேகம். படங்கள் மாத்திரம் ஸதாநந்தன், வேப்பேரி போஸ்டு, சென்னை. இவ்விலாசத்திற்கு எழுதிப்பெறலாம். புஸ்தகங்கள் இங்கு கிடைக்கமாட்டா.

SOLDEN & CO, MADRAS. S.E.

தத் ஸத்

ஸ்ரீ பரப் பிரஹ்மணே நமஃ.

ஜீவப் பிரம்மைக்ய

வேதாந்த ரஹஸ்யம்.

ஸ்ரீ நிற்குண சற்குரு ஸ்துதி.

யஸ்யாந்தர் நாதிமத்யம் நஹிகரசரணம் நாமகோத்ரம் நஸூத்ரம்
நோஜாதிர் நைவவர்ணு நபவதிபுருஷோ நாநபும்ஸம் நசஸ்த்ரீ
நாகாரம் நோவிகாரம் நஹி ஜநமரணம் நாஸ்தி புண்யம் நபாபம்
நோதத்வம் தத்வமேகம் ஸஹஜ ஸமரஸம் ஸத்குருந் தந்நமாமி.

ஆதி மத்ய அந்த்ய (முதல் இடை கடையு) மில்லாதவனும், அவயவங்களில்லாதவனும், பெயர் கோத்திரம் சூத்திரம் ஜாதி வர்ணமில்லாதவனும், ஆண் பெண் அலி என்னும் நாம ரூபமற்று எவ்வித விகாரங்களில்லாதவனும், ஜநந மரணங்களும் புண்ணிய பாபங்களுமில்லாதவனும், தத்துவங்களுக் கெல்லாம் அதிகமாய் எல்லாவற்றிலும் சமரசமாய் இருக்கப்பட்ட பரப் பிரம்மமாகிய உன்னை எவ்விதமாய் அறிவேன்! எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருக்கும் உனக்குத் தகுந்த ஆஸனம் எவ்விதமாய்க் கொடுப்பேன்! சகஜ சுபாவங்களுடன்கூடிய உனக்கு அர்க்ய பாத்தியங்கள் (இரண்டு கைகளிலும் ஜலம் எடுத்து)

எவ்விதமாய் விடுவேன்! எல்லாவற்றையும் பரிசுத்தம் செய்யும் உனக்கு ஆசமனம் எவ்விதமாய்ச் செய்வேன்! மலினமில்லாமல் பரிசுத்தமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் உனக்கு வெளியிலிருக்கும் ஜலத்தினுல் ஸ்நானம் எவ்விதமாய்ச் செய்விப்பேன்! பிரபஞ்சத்திற்கெல்லாம் அதீதப்பட்ட உனக்குத் தருந்த வஸ்திரத்தை எவ்விதமாய்த் தரிப்பேன்! விசாரிக்குமளவில் ஜாதி (குலம்) கோத்திரம் இல்லாத உனக்கு யஞ்ஞோபவீதமென்னும் பூணூலை எவ்விதமாய்த் தரிப்பேன்! அவயவங்களில்லாத உனக்கு நல்ல அலங்காரம் எவ்விதமாய்ச் செய்வேன்! இவ்வுருவமுடையவனென்றெழுத வொண்ணுத உனக்கு மிகுந்த பூஜையை எவ்விதமாய்ச் செய்வேன்! நிரஞ்சனனுன உனக்குத் தூபம் எவ்விதமாய்க் கொடுப்பேன்! சூர்ய சந்திரர்களைப் பிரகாசிக்கச் செய்யும் சொரூபமுடைய உனக்குத் தீபம் எவ்விதமாய் ஏற்றுவேன்! முதலும் கடையுமில்லாத உனக்கு எந்த மந்திரங்களினுல் புஷ்பத்தைச் சாற்றுவேன். சர்வ பரிபூரணனுய் நித்திய திருப்தி யடைந்தவனுயிருக்கும் உனக்குச் சொற்பமான எந்த நைவேத்தியங்களைக் கொடுப்பேன்! ஆனந்தத்தை அடைந்திருக்கும் உனக்குத் தாம்பூலம் எவ்விதமாய்க் கொடுப்பேன்! சுயம்பிரகாசனுன உனக்கு நீராஞ்சனம் (கர்பூரம் ஏற்றி நீர்விடுவது) எவ்விதமாய்ச் செய்வேன்! பிரபஞ்சமெல்லாம் சரீரமாயிருக்கும் உனக்குப் பிரதக்ஷணம் எவ்விதமாய்ச் செய்வேன்! நீ நான் என்னும் பேதமில்லாமல் அத்வைத வஸ்துவாயிருக்கும் உனக்கு நமஸ்காரம் எவ்விதமாய்ச் செய்வேன்! ஸரஸ்வதீ சம்பந்தமான வாக்கிற்கெட்டாத உன்னை எவ்விதமாய்த் துதிசெய்வேன்! (இந்நூலாசிரியரால், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூபமாய் எழுதிய, ஸ்ரீ பகவத்கீதை அத்-4, சுலோகம் 11-ல், இதை விரிவாய்க் காணலாம்.) ஆகவே,

சுரு || "தஸ்ய நிஸ்சிந்தா த்யாநம், ஸர்வகர்ம நிராகரண மாவாஹநம், நிஸ்சயஜ்ஞாந மாஸநம், உந்மநீபாவ: பாத்யம், ஸதா மநஸ்க மர்க்யம், ஸதாதீப்தி ரபாநாம்ருத வ்ருத்தி: ஸ்நாநம், ஸர்வாத்ம பாவநா கந்த:, த்ருக் ஸ்வரூபாவஸ்தாந மக்ஷதா:, சிதாப்தி: புஷ்ப:, சிதக்நிஸ்வரூபம் தூப:, சிதாதித்ய ஸ்வரூபம் தீப:, பரிபூர்ண சந்த்ராம்ருதா ஸ்யைகீகரணம் நைவேத்யம், நிஸ்சலத்வம் ப்ரதக்ஷணம் "ஸோஹம்" பாவோ நமஸ்கார:, மௌனம் ஸ்துதி:, ஸர்வ ஸந்தோஷோ விஸர்ஜந மிதி." [மண்டல பிராஹ்மணோப]

சர்வ கர்மங்களையும் விட்டுவிடுவதே உன்னைத் தெரிந்து கொள்வது (கிரகிப்பது). எங்கும் பரிபூர்ணமாய் நிறைந்திருக்கும் பிரம்மமே சத்தியம், ஜகத்து மித்தையென்னும் நிச்சய ஞானமே ஆஸனம். மனதில் எந்த கல்மஷங்களும் இல்லாமல் பரிசுத்தமா யிருப்பதே ஸ்னானம். நிச்சிந்தையா யிருப்பதே அர்க்கிய பாத்தியங்கள் விடுவது. மனம் சங்கல்ப விகல்பங்க ளில்லாமல் பரிசுத்தமா யிருப்பதே ஆசமனம். ஜாதி மதபேதங்களில்லாம லிருப்பதே ஞானம். இந்திரியங்களை அதனதன் இஷ்டானுசாரமாய்ப் போக விடாமல் திருப்புவதே சௌசம். சர்வம் பிரம்மமென்று நினைப்பதே கந்தம். திருஷ்டியை சிதறவிடாமல் சதா பிரம்மத்தில் நிறுத்துவதே அக்ஷதைகள். ஆத்மதரிசனம் செய்யவேண்டுமென்னும் சங்கல்பமே ஞாநாப்தி. இந்த ஞாநாப்தியேபுஷ்பம். எந்தபந்தங்களுமில்லாமல் ஆத்மா தானென்னும் நிச்சயத்தை யடைவதே யதார்த்தமான தியானம். அந்தக்கரணத்திற்கு (மனம் புத்தி சித்த அகங்காரங்களுக்குச்) சாக்ஷியாய் அந்தக்கரண பிரதிபிம்ப (காணப்படும் வஸ்துக்களின்) சேஷ்டைகள் இல்லாமலிருப்பதே உன்னை விஸ்தாரமாய்ப் பக்தியுடன் பூஜை செய்வது. புத்தியை அங்கு மிங்கும் ஓடவிடாமல் ஆத்மஞானத்தில் ஸ்திரமாய் நிறுத்துவதே ஞானக்கினி. இந்த ஞானக்கினியே தூபம். "நேதி நேதி" என்றால், நான் தேஹமல்ல மனதல்ல

ஜீவனல்ல இந்தப் பிரபஞ்ச சர்வம் நானல்ல, இவைகளை எல்லாம் அறியும்படியான தத்வ விவேகமே ஞான சூரியன் என்றும், இந்த ஞான சூரியனே தீபம் என்றும் அறிய வேண்டும். 'நானே பிரம்மம்' 'பிரம்மமே நான்' என்று சர்வ பரிபூர்ணமாகிய பரப் பிரம்மத்தில் ஐக்கியமாவதே நைவேத்தியம். சர்வ பரிபூர்ண சாக்ஷியில் சலிக்காம (அசையாம) லிருப்பதே பிரதக்ஷணம். முன் ராஜயோகத்தில் சொல்லப்போகும் 'ஹம்ஸ' பாவத்தை நன்ருய் அறிந்து 'ஸோஹம்' பாவத்தில் இருப்பதே தியானம், அதாவது மனதை சுவாசத்துடன் சேர்த்து 'ஸோஹம்' மந்திரம் ஜபம் செய்து வருவதே தியானம். மனம் ஆத்ம ஞானத்திற் கலந்து அசையாமல் ஒரே நிஷ்டையிலிருந்து ஆனந்தத்தை அடைவதே உனது நாம சங்கீர்த்தனம். உள்ளும் வெளியும் எங்கும் நிறைந்து பரிபூர்ணமா யிருப்பதே ஜபம். நினைப்பு மறப்புகள் இல்லாமல் மௌனமா யிருப்பதே துதி. ஜீவாத்மா பரமாத்மா ஐக்கியமே நமஸ்காரம். உள்ளும் வெளியும் காணப்படும் பதார்த்தங்களிரண்டும் அதாவது, உள்ளே காணப்படும் பதார்த்தம் சங்கல்பம் (நினைப்பு), வெளியே காணப்படும் பதார்த்தம் சகல வஸ்துக்களின் தோற்றம். இவ்விரண்டு பதார்த்தங்களின் நாமரூபங்களை அறவே விட்டு சங்கல்ப விகல்பங்களில்லாமல் அகண்ட பாவத்தை அடைந்திருப்பதே மோக்ஷம். அன்றியும்,

எல்லாவுலகமு மானாய்நீயே
　　யேகம்பமேவி யிருந்தாய்நீயே
நல்லாரை நன்மையறியாய்நீயே
　　ஞானச்சுடர் விளக்கானாய்நீயே
பொல்லாவினைக ளறுப்பாய்நீயே
　　புகழ்ச்சேவடியென்மேல் வைத்தாய்நீயே

சொல்வாயசெல்வந் தருவாய்நீயே
திருவையாறகலாத செம்பொற்சோதீ.

எல்லா உலகமும் நீயாகவே இருக்கின்றாய்; திருவேகம்பம் என்னும் ஸ்தலத்திலிருப்பவன் நீயே; நல்லோரின் நன்மையறிந்தவன் நீயே; ஞான மென்னும் சுடர் ஒளியாய் இருப்பவனும் நீயே; நல்வினை தீவினை யென்னும் இரண்டு கர்மவினைகளை நாசம் செய்பவன் நீயே; புகழ்ப்பொருந்திய உன் பொற்பாதகமல திருவடியை என் சிரசின்மேல் வைத்தாய் நீயே; மோக்ஷமென்னும் செல்வம் தரப்பட்டவன் நீயே; திருவையாற் என்னும் ஸ்தலத்தைவிட்டு நீங்காதவனும் நீயே; பரப் பிரம்மமா இருக்கப்பட்டவனும் நீயே:

இருநிலனாய்த் தீயாகிநீருமாகி
யமானனாய்வெறியுங் காற்றுமாகி
யருநிலையதிங்களாய் ஞாயிறு
யாகாயமாயட்ட மூர்த்தியாகிப்
பெருநிலமுங்குற்றமும் பெண்ணுமாணும்
பிறருருவுந்தம் முருவுந்தாமேயாகி
நெருநலையாயின்றாகி நாளையாகி
நிமிர்புன்சடை யடிகள்நின்றவாறே.

பிருதிவியாய், ஜலமாய், அக்நியாய், காற்றாய், ஆகாயமுமாய், சூர்ய சந்திரர்களாய், அஷ்டதிக் பாலகர்களாய், உலகமாய், மாயையாய், ஆணும் பெண்ணுமாய், அலியுமாய், பிறருருவம் தம்முருவம் தாமேயாய், சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலமாயும், நீண்ட மிருதுவாகிய சடையையுடைய தலைவனாயும் நின்றவன் நீயே; பரப்பிரம்மமும் நீயேயாம். இதன்றியும் நீ இன்னும் எப்படிப்பட்டவனென்றால்,

"அஜாத மபூத மப்ரதிஷ்டித மப்ராண மமுக மஸ்ரோத்ர மவாகமனோ தேஜஸ்க மசக்ஷுஷ்க மநாம மகோத்ர மஶிர மபாணி

பாத மஸ்ரிக்த மலோஹித மப்ரமேய மஹ்ரஸ்வ மதீர்க்க மணுவ நல்ப மபார மநிர்த்தேஸ்யம்.'' [சுபாலோபநிஷத்.]

மேற்சொல்லிய பரப் பிரம்மம் பிறப்பு இறப்பு இல்லாதது; ஒருவரால் பிரதிஷ்டை (ஸ்தாபிதம்) செய்யப்பட்ட விக்கிரகங்களைப் போன்றதல்ல. அது பிராணவாயு, அதற்கு மனம் புத்தி சித்தம் அஹங்காரங்களும், சிரசு கண்கள் மூக்கு வாய் செவிகள் கைகள் கால்கள் முதலாகிய அவயவங்களும், சிவப்பு வெண்மை முதலிய பஞ்ச (ஐந்து) வர்ணங்களும், உயரம் குட்டை ஸ்தூலம் சூக்ஷ்மம் (கண்களுக்குக் காணப்படாத) அணு (சிறிது) மகத்து (பெரிது) என்னும் ரூபங்களும் இல்லாதது. அது, எல்லை யில்லாதது; எண்ணிச் சொல்வதற்குச் சாத்தியப்படாது. மேலும்,

''அஸப்த மஸ்பர்ஸ மரூப மவ்யயம் ததா ரஸம் நித்ய மங்கத வச்சயத் அநாத்யநந்தம் மஹதஃ பரம் த்ருவம் ததேவ ஸிஷ்ய த்யமலம் நிராமயம்.''

[பயிரங்கலோப நிஷத்]

அந்தப் பரப் பிரம்மம், சப்த (கேட்பது) ஸ்பர்ச (தொடுவது) ரூப (பார்ப்பது) ரஸ (ருசி அறிவது) கந்த (முகர்வது) முதலானவைகள் இல்லாதது; நாசமில்லாதது, ஆதி அந்திய மத்தியமில்லாதது, (அடியும் நுனியும் நடுவும் இல்லாதது) சத்தியமானது, மாயா அஞ்ஞான மில்லாதது, த்ருவமானது, நித்தியமானது, நிர்மலமானது, நிராமயமானது. ஆகவே,

''ஏகமேவா த்விதீயம் ப்ரஹ்ம.''

என்னும் சாந்தோ க்யோபநிஷத் வாக்கியரீதியாய் ஸஜாதீய விஜாதீய சுவகத பேதங்கள் இல்லாம லிருப்பதே பரப் பிரம்மம்.

ஸஜாதீய மென்றால்:—ஓர் மனுஷ்ய ஜாதியில் பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திராதி பேதங்கள் தோன்றுவது.

விஜாதீய மென்றால்:—மனிதர்கள் மிருகங்கள் தேவதைகள் ஜீவஜந்துக்கள் விருக்ஷங்கள் முதலானவைகளுக்கு வெவ்வேறு பேதங்கள் தோன்றுவது.

சுவகத பேதமென்றால்:—ஒரு தேகத்தில், சிரசு கண்கள் மூக்கு வாய் கைகள் கால்கள் முதலாகிய வெவ்வேறு அவயவங்கள் தோன்றுவது: இவ்வகைப்பட்ட மூன்றுவித பேதங்களும் இல்லாம லிருப்பதே பரப் பிரம்மம்.

அதாவது, பிரமன் விஷ்ணு மஹேஸ்வராதி தேவதைகளும், பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திராதி மனுஷ்யர்களும், பசு பக்ஷி கிருமி கீடக விருக்ஷ பர்வதங்களும், சிரசு கைகள் கால்கள் முதலாகிய அவயவங்களும் இல்லாம லிருப்பதே பரப் பிரம்மம்.

அப்பா! குழந்தாய் ! அத்தியாத்மோபநிஷத்தில் இன்னும் என்ன சொல்லுகின்றதென்றால் ?

“பரிபூர்ண மநாத்யந்த மப்ரமேய மவிக்ரியம் ஸத்கநம் சித்கநம்” நித்ய மாநந்த கநமவ்யயம் ப்ரத்யகேகரஸம் பூர்ண மநந்தம் ஸர்வதோமுகம் அஹேய மநுபாதேய மநாஸ்ரயம். நிர்க்குணம் நிஷ்க்ரியம் ஸூக்ஷ்மம் நிர்விகல்பம் நிரஞ்ஜநம் அநிரூப்ய ஸ்வரூபம் யந்நவாசாம கோசரம் ஸத்யம் ருதம் ஸ்வதஸ் ஸித்தம் ஸுத்தம நீத்ருஸம், ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்மநேஹ நாநாஸ்தி கிஞ்சந.”

[அத்யாத்மோபநிஷத்.]

அந்த பரப் பிரம்மம் பரிபூர்ணமானது, ஆதி மத்ய அந்தியமில்லாதது, எந்த விகாரங்களும் இல்லாதது, சித்ரூபமானது, நித்தியமானது, ஆனந்தமா யிருப்பது, நாசமில்லாதது, பிரத்தியகாத்மாவா யிருப்பது, அகண்ட ஞான சொரூபமானது, சர்வ பரிபூர்ணமானது, சர்வோத்கிருஷ்டமானது (எல்லாவற்றிற்கும் சிரேஷ்டமானது) எந்த ஆதாரங்களும் யில்லாதது, சுத்த நிர்க்குணமானது, வியாபாரமில்லாதது, அதி சூக்ஷ்மமானது, எந்த எண்ணங்

களும் இல்லாதது, நிரஞ்ஜநமானது, இப்படிப்பட்டது அப்படிப்பட்டது என்று நிரூபிக்கக் கூடாதது, மனோ வாக்குக் கெட்டாதது, தனக்குத்தானு யிருப்பது, பரிசுத்த மானது, கேவல ஞாநாகாரமா யிருப்பது, தனக்கு இரண்டா வது வஸ்து இல்லாதது;

மைப்படியுங் கண்ணுளுந் தானுங்கச்சி
மயானத்தான் வார்சடையான் மாசொன்றில்லான்
ஒப்புடையனல்ல னொருவனல்ல
னோரூரனல்ல னோருருவனல்லன்
அப்படிய னவ்வுருவ னவ்வண்ணத்த
னவனருளே கண்ணுகக் காணினல்லால்
இப்படிய னிவ்வுருவ னிவ்வண்ணத்த
னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணுதே.

அது மனோ வாக்குகளுக்கு எட்டாதது, ஸத் ரூபமா னது, தனக்குத் தானுய்ப் பிரகாசித்துக்கொண்டிருப்பது, பரிசுத்தமானது, கேவலம் ஞாஞகாரமானது, தனக்குச் சமானமான வஸ்துக்கள் ஏதுவும் இல்லாதது, ஒன்றுயிருப் பது, தன்னைவிட இரண்டாவது பதார்த்த மில்லாதது, பிரம்மத்தைத் தவிர அணுப் பிரமாண வஸ்துக்களும் அந் நியமாய் இல்லாதது என்று அறியக்கடவாய்.

ஒன்றுயும் பலவாயு முருவாயு மருவாயும்
குன்றுயு மணுவாயுங் குணமாயுங் குணியாயும்
நன்றுயுந் தீதாயு நாஞயுந் தாஞயும்
இன்றுயு முளதாயு மிருக்குமந்தப் பரமசிவம்.

"ஓ சுவாமி! பரப் பிரம்மத்திற்கு நாமரூபமில்லை என்று இதுவரையில் சொல்லிக்கொண்டு வந்தீர்களே! பிரம்ம மென்று சொல்வதே ஒரு நாமமா (பெயரா) யிருக்க பிரம் மத்திற்கு நாமமில்லை என்று எப்படிச் சொல்லலாம்"?

குழந்தாய்! ஆம் அது உண்மையே ஆனல், அதன் ரகஸ்யத்தைச் சொல்லுகிறோம் கேள்.

"ருதமாத்மா பரம் ப்ரஹ்ம ஸத்யமித்யாதிகா புத்தைஃ
கல்பிதா வ்யவஹாரார்த்தம் யஸ்ய ஸஜ்ஞா மஹாத்மநஃ"

என்னும் மஹோபநிஷத் வாக்கிய ரீதியாய் பரப் பிரம்மமென்னும் பெயர், மனோவாக்கினால் சொல்வதற்குச் சாத்தியப்படாத சிருஷ்டிக்கு உட்பட்ட வஸ்துவிற்கு உண்டான பெயரைப் போன்றதல்ல; உலகத்தார் கண்களுக்குக் காணப்படாத ஈசுவரனுக்குப் பதிலாய் ஒரு விக்கிரகத்தைக் காட்டி, அதோ ஈசுவரன் ஒருவன் இருக்கின்றான் என்று காட்டுவதுபோல், பிரபஞ்ச சிருஷ்டிக்குப் பூர்வத்தில் நாமரூபமில்லாத (பெயர் ரூபமில்லாத) வஸ்து ஒன்று தனக்குத்தானாகவே சுயம் பிரகாசமா யிருந்தது அதைச் சீடனுக்கு உபதேசிப்பதற்காக அவ்வஸ்துவிற்கு பரப் பிரம்மமென்னும் பெயர் உபசார வார்த்தையாய்ச் சொல்லப்பட்டதே யல்லாமல் பரப் பிரம்மத்திற்கு உண்மையாய் ரூபம் பெயர் இல்லவேயில்லை; அது, ஒன்றுமல்ல இரண்டுமல்ல, எப்பொழுதும் இல்லாததுமல்ல, தீயதுமல்ல, நானுமல்ல, நீயுமல்ல, முதல் கடை. இடை இல்லாத அனாதி வஸ்துவா யிருக்கின்றது; இதற்கு திருக்களிற்றுப் படியார் பிரமாணம்.

ஒன்றன் றிரண்டன் றுளதன் றிலதன்று
நன்றன்று தீதன்று நானன்று நின்ற
நிலையன்று நீயன்று நின்னறிவு மன்று
தலையன் றடியன்று தான்.

இப்படிப்பட்ட பரப்பிரம்மமானது, பிபீலிகாதி பிரமதேவன் வரையில், பிரம சிருஷ்டிநாள் முதல் நாளது வரையில், சகல ஜீவராசிகளின் ஸ்திரீ கர்ப்பத்திலிருக்கும் பிண்டத்தில் சூக்ஷ்ம சரீரத்துடன் போய்ப் புகுந்து, ஜநந காலம் முதல் மரணகால பரியந்தம் அவனவன் செய்யப்பட்ட நல்வினை, தீவினைகளுக்கெல்லாம் சாக்ஷீபூதமாய்

ஜீவாத்மாவாய் வியாபித்திருந்து, மரணகாலத்தில் அவனவன் செய்த பாப புண்ணியத்திற்குத் தகுந்த வீட்டில் ஜன்மிக்கச்செய்கின்ருன். இவ்வகைப்பட்ட சாக்ஷி சொரூபமாயிருக்கும் ஆத்மாவே சித்ர குப்த னென்று சொல்லப்படும். இந்த சித்ரகுப்தன் ரகஸ்யம் எதுவோ அது விஷயம் முன் சொல்லப்படும். இதற்குத் திருஷ்டாந்தம், ஸ்ரீ பகவத் கீதை அத்யாயம்-10 சுலோகம்-20.

அஹமாத்மா குடாகேஶ ! ஸர்வபூதாஶயஸ்திதஃ
அஹமாதிஶ்ச மத்யஞ்ச பூதாநா மந்தஏவச ! !

சகல சரீரங்களிலும், அந்தர்யாமியாய் ஆத்மாவாய் இருந்து, அவரவர்களின் கர்மானுசாரமாய் பிராணிகளை சிருஷ்டிக்கிறவனும், காப்பாற்றுகிறவனும், அழிக்கிறவனும் நானே என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்வித 'ஜீவாத்மாவை' பரப் பிரம்மத்தில் ஐக்கியம் செய்வதைக் குறித்து இதில் விசேஷமாய் எழுதியிருப்பதனுல் இதற்கு "ஜீவப் பிரம்மைக்ய" மென்றும் ருக் யஜுஸ் ஸாம அதர்வணமென்னும் நான்கு வேதங்களின் சிரசாகிய உபநிஷத் வாக்கியங்களிலுள்ள ரகசியங்களைக் குறித்து இதில் எழுதப்பட்டிருப்பதனுல் இந்நூலுக்கு, "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்யம்" என்று பெயரிடப்பட்டது.

"அசிந்த்யா வ்யக்த ரூபாய நிர்குணய குணத்மநே
ஸமஸ்த ஜகதாதார மூர்த்தயே ப்ரஹ்மணே நமஃ"

அந்த பரப் பிரம்மம் சத்திய ஞானானந்தமானதும், மனோவாக்கிற் கெட்டாததும், நாமரூப மில்லாததும், மாம்ச மயமாகிய கண்களுக்குக் காணப்படாததும், சகுண (விக்கிரகரூப) நிர்க்குண (ஆகாயரூப) மானதும், சகல லோகத்திற்கும் ஆதாரமா யிருக்கப்பட்டதுமாகிய அந்தப் பரப் பிரமத்தை நான் நமஸ்கரிக்கின்றேன்.

* "நித்யாநந்தம் பரமஸுகதம் கேவலம் ஞானமூர்த்திம்
விஶ்வாதீதம் ககநஸத்ருஶம் தத்வமஸ்யாதி லக்ஷ்யம்
ஏகம் நித்யம் விமலமசலம் ஸர்வதீ ஸாக்ஷிபூதம்
பாவாதீதம் த்ரிகுண ரஹிதம் ஸத்குருந்தந்நமாமி."

எல்லா ஆனந்தங்களுக்கும் சிரேஷ்டமானதும், இவ்வுலகிலும் பரலோகத்திலும் உள்ள எல்லாச் சுகங்களுக்கும் மேலானதும், ஞான சொரூபமானதும், பிரபஞ்சாதீதமானதும், நிரவயவ மானதும், (அவயவங்க ளில்லாததும்), மஹா வாக்கியங்களுக்கு லக்ஷியார்த்தமானதும், அத்விதீயமானதும், நாச ரஹிதமானதும், நிர்மலமானதும், சலனமற்றதும், சகல அந்தக் கரணங்களிலும் சாக்ஷிபூதமாயிருப்பதும், கற்பனை முதலியனச் கடந்ததும், ஸாத்விக ராஜஸ தாமஸமென்னும் முக்குணங்களற்றதும், எனது அவிவேகத்தைப் போக்கடித்து என்னை ஞான சொரூபமாகச் செய்ததுமாகிய ஸ்ரீ பரப்பிரம்ம மென்னும் அடியேனுடைய ஸ்ரீ சற்குருவின் பாதங்களை நமஸ்கரிக்கின்றேன்.

"ஸச்சிதாநந்த ரூபாய வ்யாபிநே பரமாத்மநே
நமஃ ஸ்ரீ குருநாதாய ப்ரகாஶாநந்த மூர்த்தயே."

ஸச்சிதானந்த சொரூபனும், எங்கும் வியாபித் திருப்பவனும், சுயம் பிரகாசனும், சதாநந்தனும், பரமாத்ம சொரூபனுமான ஸ்ரீ சற்குரு சுவாமியை நமஸ்கரிக்கின்றேன்.

" ஸத்யாநந்தரூபாய போதைக ஸுககாரிணே
நமோ வேதாந்த வேத்யாய குரவே புத்திஸாக்ஷிணே."

ஸத்யானந்த சொரூபனும், கேவல ஞான மாத்ரமான சுக சொரூபனும், சகல உபநிஷத்துகளினால் தெரிந்துக் கொள்ளத் தக்கவனும், புத்திக்கு சாக்ஷியா யிருக்கப்பட்டவனும் பிரத்தியகாத்ம சொரூபனுமான ஸ்ரீ சற்குரு சுவாமியை நமஸ்கரிக்கின்றேன்.

---

* ப்ரஹ்மாநந்தம் என்றும் பாடாந்தரம்,

"யேநசேத யதாஹீதம் சித்தம் சேதயதே நரঃ
ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்த்யாதி தஸ்மை ஸ்ரீ குரவே நமঃ"

எவனது ஸக்தியினுல், ஜட சொரூபமாகிய இந்த சித்தம் ஆத்ம சொரூபமாய்த் தோன்றிச் சகல கார்யங்களையும் செய்கின்றதோ, எவனது சத்தாமாத்திரத்தினுல் ஜீவன் சேதன சொரூபமாய் ஜாக்கிரதை சொப்பன சுஷுப்தி என்னும் அவஸ்தாத் திரயங்களையும் அடைந்து சகலமும் அனுபவிக்கின்றதோ, அப்பேர்ப்பட்ட கேவல சாக்ஷிமாத்ர பிரத்தியகாத்ம சொரூபமான ஸ்ரீ சற்குருவை நமஸ்கரிக்கின்றேன்.

"சைதந்யம் ஶாஶ்வதம் ஶாந்தம் வ்யோமாதீதம் நிரஞ்ஜநம்
நாதபிந்து களாதீதம் தஸ்மை ஸ்ரீ குரவே நமঃ."

சுயம் பிரகாசமானதும் நித்தியமானதும் சாந்தமானதும் ஆகாயத்தைவிட அதிகமானதும் எந்ததோஷங்களும் இல்லாததும் நாதபிந்து களா தீதமானதும் சைதந்திய சொரூபமானதுமாகிய பிரத்தியகாத்மா என்னும் ஸ்ரீ சற்குரு பரப் பிரம்மத்தை நமஸ்கரிக்கின்றேன்.

"குருர் ப்ரஹ்மா குருர்விஷ்ணு குருர்தேவோ மஹேஶ்வரঃ
குருஸ் ஸாக்ஷாத் பரப்பிரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நமঃ."

பிரமா விஷ்ணு மஹேஸ்வர சொரூபனும் அத்விதீய பரப் பிரம்ம சொரூபனுமாகிய ஸ்ரீ சற்குரு சுவாமியை நமஸ்கரிக்கின்றேன்.

"அகண்ட மண்டலாகாரம் வ்யாப்தம் யேந சராசரம்
தத்பதம் தர்ஶிதம் யேந தஸ்மை ஸ்ரீ குருவே நமঃ."

இந்த சராசர பிரபஞ்ச முழுமையும் சர்வத்ர மண்டலாகாரமாய்ப் பரிபூரணமாய் வியாபித்திருக்கும் 'தத்' பத லக்ஷியார்த்தமாகிய பரமாத்மா இப்பேர்ப்பட்டதென்று அதன் லக்ஷணத்தை எனக்கு விசிதமாய்ப் போதித்த ஸ்ரீ சற்குரு சுவாமியை நமஸ்கரிக்கின்றேன்.

"ஸ்தாவரம் ஜங்கமம் வ்யாப்தம் யத்கிஞ்சித் ஸ சராசரம்
த்வம்பதம் தர்ஶிதம் யேந தஸ்மை ஸ்ரீ குரவே நம:"

இந்த சராசர ஜந்துக்களில் வியாபித்திருக்கும் 'த்வம்' பத லக்ஷியார்த்தமாகிய ஜீவாத்ம சொரூபம் இப்பேர்ப் பட்டதென்றும் அதன் லக்ஷணத்தை எனக்கு விசிதமாய்ப் போதித்த ஸ்ரீ சற்குரு நாதனை நமஸ்கரிக்கின்றேன்.

"சிந்மயம் வ்யாபிதம் ஸர்வம் த்ரைலோக்யம் ஸ சராசரம்
அஸித்வம் தர்ஶிதம் யேந தஸ்மை ஸ்ரீ குரவே நம:"

அகண்ட ஸச்சிதானந்த பரப் பிரம்மமே பரமாத்ம சொரூபமாகவும் ஜீவாத்ம சொரூபமாகவும் இருக்கிற தென்றும்; பரமாத்மா ஜீவாத்மா ஆகிய இவ்விரண்டும் அபேத பரப் பிரம்ம சொரூபம். ஆதலால், ஜீவாத்ம சொரூபியாகிய நீயே அந்த பரப் பிரம்மமென்றும், அந்த பரப் பிரம்மமே நீ என்றும் ஜீவப் பிரஹ்மைக்யத்தைப் போதித்து 'அசி' பத ரகஸ்யார்த்தங்களை எனக்கு விசித மாய்த் தெரிவித்து என்னை கிருதார்த்தனைச் செய்த ஸ்ரீ சற்குரு பாத கமலங்களை நமஸ்கரிக்கின்றேன்.

"மந்நாத ஸ்ரீ ஜகந்நாதோ மத்குரு ஸ்ரீ ஜகத்குரு:
ஸ்வாத்மைவ ஸர்வபூதாத்மா தஸ்மை ஸ்ரீ குரவே நம:."

என் பிரபுவே லோகப் பிரபு; என் குருவே லோக குரு; என் ஆத்மாவே ஸமஸ்த பூதங்களிலும் பரிபூரண மாய் நிறைந்திருக்கும் பரப் பிரம்மமா யிருக்கின்றது: அப் படிப்பட்ட சற்குரு சொரூபமான பரமாத்மா என்னும் பரப் பிரமத்தை நமஸ்கரிக்கின்றேன்.

"யஸ்ய ப்ரஸாதா தஹமேவ ஸர்வம்
மய்யேவ ஸர்வம் பரிகல்பிதஞ்ச
இதம் விஜாநாமி ஸதாத்மரூபம்
தஸ்யாங்க்ரி பத்மம் ப்ரணதோஸ்மி நித்யம்."

நானே ஸர்வ பரிபூரண பரப் பிரம்மமா யிருக்கின்றேன். இந்தச் சராசர (அசையும் அசையாப்) பிரபஞ்சமெல்லாம் என்னிடத்தில் கற்பிக்கப்பட் டிருக்கின்றது. எந்த குரு கடாக்ஷத்தினுல் எனது நிஜ சொரூபமாகிய பரமாத்ம சொரூபத்தைத் தெரிந்துகொண்டு அந்த பரமாத்மாவே அனேக அவதாரங்களை எடுத்து, பக்த ஜனங்களை ரக்ஷித்து அசுரர்களை நாசம் செய்கின்றுரோ அந்தப் பரமாத்ம யென்னும் ஸ்ரீ சற்குருவினுடைய பாத கமலங்களை நமஸ்கரிக்கின்றேன்.

"அஞ்ஜாந திமிராந்தஸ்ய ஜ்ஞாநாஞ்ஜந ஶலாகயா
சக்ஷுருந்மீலிதம் யேந தஸ்மை ஸ்ரீ குரவே நம:."

அஞ்ஞாநாந்தகாரத்தினுல் (அஞ்ஞானமென்னும் இருளினுல்) குருடனுயிருந்த என்னுடைய ஞான நேத்திரங்கள், பிரம்மஞான மென்னும் அஞ்சனத்தினுல் (மையினுல்) கனிகரத்துடன் எந்த மஹானுபாவனுல் திறப்பிக்கப்பட்டனவோ, அந்த மஹானுபாவனுகிய அடியேனுடைய சற்குரு சுவாமியின் சரண கமலங்களை நமஸ்கரிக்கின்றேன்.

"ஆப்ரஹ்ம ஸ்தம்ப பர்யந்தம் பரமாத்ம ஸ்வரூபகம்
ஸ்தாவரம் ஜங்கமஞ்சைவ ப்ரணமாமி ஜகந்மயம்."

பிரமதேவன் முதல் அணு (கண்களுக்குக் காணப் படாதசிறிய புழு) வரையில் ஸ்தாவர ஜங்கம ரூபங்களாகிய இந்தச் சராசர பிரபஞ்சமெல்லாம் பரப் பிரம்ம சொரூபமாகவே யிருக்கின்றன. அப்பேர்ப்பட்ட பரப் பிரம்மமே குரு சொரூபமா யிருக்கின்றது. ஆகையால், அப்படிப்பட்ட பரமாத்மா என்னும் ஸ்ரீ சற்குரு பரப் பிரம்மத்தை நமஸ்கரிக்கின்றேன்.

"குருஶ்ஶிவோ குருர்தேவோ குருர்பந்து ஶரீரிணாம்
குருராத்மா குருர்ஜீவோ குரோரந்யம் ந வித்யதே"

"நகுரோரதிகம் நகுரோரதிகம் நகுரோரதிகம் நகுரோரதிகம்
ஶிவஶாஸநதஶ்ஶிவஶாஸநதஶ்ஶிவஶாஸநதஶ்ஶிவஶாஸநதஃ"
"இதமேவஶிவம் இதமேவஶிவம் இதமேவஶிவம் இதமேவஶிவம்
மமஶாஸநதோ மமஶாஸநதோ மமஶாஸநதோ மமஶாஸநதஃ"
"விதிதம் விதிதம் விதிதம் விதிதம், விஜநம் விஜநம் விஜநம் விஜநம்
ஹரிஶாஸநதோ ஹரிஶாஸநதோ ஹரிஶாஸநதோ ஹரிஶாஸநதஃ"

என்னும் குருகீதா வாக்கியரீதியாய், தனக்கு ஞானோபதேசம் செய்த சற்குரு எவரோ அவரே ஈசுவரன் அவரே தேவன் அவரே பந்து அவரே ஆத்மா அவரே ஜீவன்: அவரைவிட அந்யமானதும் சிரேஷ்டமானதும் எதுவுமில்லை. குருவே மங்களகரமாகிய பரப் பிரம்மம். குரு சொரூபமே சாக்ஷிமாத்திரம், அவரது சொரூபமே ஜநந மரணாதி விகாரங்களில்லாதது என்று ஹரிஹராதி தேவதைகளும் உரைத்திருக்கின்றார்கள்.

"நஸுகம் வேதஶாஸ்த்ரேஷு நஸுகம் மந்த்ரயந்த்ரகே
குரோஃ ப்ரஸாதா தந்யத்ர ஸுகம் நாஸ்தி மஹீதலே."

நான்கு வேதங்களையும், ஆறு சாஸ்திரங்களையும், சப்த கோடி மஹா மந்திரங்களையும் யந்திரங்களையும் தெரிந்ததனாலேயே பிரம்ம ஞானமென்னும் சுக முண்டாகமாட்டா. சற்குரு கடாக்ஷத்தினாலேயே பிரம்மாநந்தமான மோக்ஷ சாதநம் உண்டாகும். ஆதலால், சற்குரு கடாக்ஷத்தைவிட விசேஷமானது வேறொன்றில்லை.

'ஸ்வாஶ்ரமஞ்ச ஸ்வஜாதிஞ்ச ஸ்வகீர்த்திம் புஷ்டி வர்த்தநம்
ஏதத்ஸர்வம் பரித்யஜ்ய குரோரந்யம் ந பாவயேத்."

சற்குருவானவர் தன்னைவிடத் தாழ்ந்த ஜாதியாரென்றும், தன்னைவிடச் சிறியவரென்றும், தன் ஆசிரமத்தைவிடத் தாழ்ந்த ஆசிரமத்திலிருக்கிறாரென்றும் பேதமெண்ணாமல், அவரது குலகோத்திர வர்ணாசிரமாதிகள் ஆகிய எல்லாவற்றையும் பரித்தியாகஞ்செய்து, அவரை ஆசிரயித்துப் பூஜிக்கவேண்டும்.

"ஶ்ரத்ததாந ஶுபாம் வித்யா மாததீதா வராதபி
அந்த்யாதபி பரம்தர்மம் ஸ்த்ரீரத்நம் துஷ்குலாதபி"

வித்தையை அப்பியசிப்பதற்குச் சிரத்தையுடையவன் சிரேஷ்டமான வித்தையை சூத்திரனிடத்திலிருந்தாகிலும், மோக்ஷ மார்க்கோபதேசத்தை சண்டாள னிடத்திலிருந் தாகிலும், குணவதியாகிய ஸ்திரீயைத் தாழ்ந்த குலத்தி லிருந்தாகிலும் பெறலாம் எனவும், இவற்றிற்கு எக்குற்றங் களுமில்லை யெனவும் மநுஸ்மிருதியிற் கூறி யிருக்கின்றது.

"ததேஜதி தந்நைஜதி தத்தூரே தத்வந்திகே
ததந்தரஸ்ய ஸர்வஸ்ய தது ஸர்வஸ்ய பாஹ்யதஃ"

[ஈஶாவாஸ்யோபநிஷத்.]

தத்துவ விசாரணை இல்லாதவர்களுக்கு மாயா வுபாதி யினால் தேகேந்திரியாதிகள் உண்டாகி, சிருஷ்டி ஸ்திதி சம் ஹார காரியங்களைச் செய்துகொண் டிருப்பவனாகவும், தத் துவ விசாரணை செய்த ஞானிகளுக்குத் தேகேந்திரியாதிக ளில்லாத கேவல நிராகார சைதன்னிய சொரூபனாகவும் தோன்றுகின்றான். அன்றியும், பாமரர்களுக்கு வெகு தூரத்தி லிருப்பவனாகவும், சிரவண மநநாதிகள் செய்யும் பிரம்ம ஞானிகளுக்கு அதிக சமீபத்தி லிருப்பவனாகவுந் தோன்றுகின்றான். சகல ஜீவ ஜந்துக்களினுடைய சரீரங் களிலும் அந்தக்கரண சாக்ஷியாய் ஞான சொரூபமாய் ஆத்மாவாய் வியாபித்து இந்த மாயாப் பிரபஞ்சத்திற்கு உள்ளும் புறம்பும் நிறைந்திருக்கின்றான்.

"குகாரஞ்ச குணாதீதம் ருகாரம் ரூபவர்ஜிதம், குணாதீத மரூபஞ்ச யோ தத்யாத்!ஸகுருஸ்ம்ருதஃ" "குகாரஃ ப்ரதமோ வர்ணோ மாயாதி குணபாஸகம், ருகாரோஸ்தி பரம்ப்ரஹ்ம மாயாப்ராந்தி விமோசகம்" "குகாரஶ்ச குணாதீதோ ரூபாதீதோ ருகாரகஃ, குண ரூப விஹீநத்வாத் குருரித்யபிதீயதே." "குகாரஶ் சாந்தகாரஸ்து ருகாரஸ் தந்நிரோத க்ருத், அந்தகார விநாஶித்வாத் குருரித்யபி

தீயதே'' "குகாரஸ்யாந்தகாரோஹி ருகாரஸ்தேஜ உச்யதே, அஜ்ஞாந க்ராஸகம் ப்ரஹ்ம குருரேவ நஸம்ஸாய:'' "மந்த்ரராஜ மிதம் தேவீ குருரித்யக்ஷர த்வயம், ஸ்ம்ருதி வேதார்த்த வாக்யா நாம் குருஸ் ஸாக்ஷாத் பரம்பதம்'' "சப்தகோடி மஹா மந்த்ரா: சித்தவிப்ரம காரகா:, ஏகமேவ பரோ மந்த்ரோ குருரித்யக்ஷர த்வயம்.''

இந்த குருகீதா வாக்கியத்தில் 'கு-ரு' என்னும் இரண்டு அக்ஷரங்களில் 'கு' என்னும் அக்ஷரம் சுத்த நிர்க்குண சொரூபம், 'ரு' என்னும் அக்ஷரம் கேவல நிராகார பரப் பிரம்மம். ஆகவே, குருவென்ருல், சுத்த நிர்க்குண நிராகார பரப் பிரம்ம மாகின்றது என்றும்,

'கு' என்ருல், மாயை, 'ரு' என்ருல், அம்மாயையை நாசஞ்செய்யும் பரப் பிரம்மம். ஆகவே, குரு என்ருல் மாயையை நாசஞ்செய்யும் பரப் பிரம்மம் என்றும்,

'கு' என்ருல், ஸத்வ ரஜஸ் தமோ குணங்களில்லா தது, 'ரு' என்ருல், கரசரணுதி (கை கால்) முதலிய அவய வங்க ளில்லாமல் நிராகாரமாய் (ரூபமில்லாமல்) இருக்கப் பட்டது. ஆதலால், குரு என்ருல், சுத்த நிர்க்குண நிரா கார பரப் பிரம்மம் என்றும்,

'கு' என்ருல், காடாந்தகாரம் (இருள்), 'ரு' என்ருல், அந்தக் காடாந்தகாரத்தை (இருளை) நாசஞ்செய்யப்பட்ட வன். ஆதலால், குரு என்ருல், அஞ்ஞானமாகிய காடாந்த காரத்தை (இருளை) நாசஞ் செய்யப்பட்டவன் என்றும்,

'கு' என்ருல், அஞ்ஞானமென்னும் இருள். 'ரு' என் ருல், அந்த இருளை நாசஞ் செய்யப்பட்ட பரஞ்சோதி. 'குரு' என்ருல், அஞ்ஞானமென்னும் இருளை நாசஞ் செய் யப்பட்ட பரஞ்சோதி யென்றும், மேலும் இந்த 'குரு' என்னும் இரண்டு அக்ஷரமே சப்தகோடி மஹா மந்திரங் களிலும் மிகவும் சிரேஷ்டமானவை யென்றும் சொல்லப் பட்டிருக்கின்றது. ஆதலால்,

"வேதாந்தார்த்த விசாரேண ஜாயதே ஞானமுத்தமம்
தேனுத்யந்திக ஸம்ஸார து:கநாஶோ பவத்யநு."

வேதாந்தங்களாகிய உபநிஷத்துக்களின் ரகஸ்யார்த்தங்களை, மேற்சொல்லிய குருவைப் போன்றவர்களாயிருக்கப் பட்டவர்களிடம், விசாரணையினால் தெரிந்து கொண்டால், தத்துவ ஞானம் அதாவது, ஆத்ம அநாத்ம விவேகம் உண்டாகும். இப்படிப்பட்ட ஞானம் உண்டாவதனால், ஜனன மரணமென்னும் துக்க சம்சாரத்தைத் தாண்டி பிரம்ம சொரூபனாய் முக்தியை அடைவான். முக்த்தி அடைவதற்கு நான்கு துவார பாலகர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் யாரெனில்:—

"மோக்ஷத்வாரே த்வாரபாலாஶ் சத்வார: பரிகீர்த்திதா:
ஶமோ விசாரஸ் ஸந்தோஷஶ் சதுர்த்தஸ் ஸாது ஸங்கம:
ஏகம் வா ஸர்வயத்நேந ஸர்வமுத் ஸ்ருஜ்ய ஸம்ஶ்ரயேத்
ஏகஸ்மின் வஶகே யாந்தி சத்வாரோபி வஶங்கதா:."

என்னும் மஹோபநிஷத் வாக்கியரீதியாய், சாந்தம்; ஆத்ம அநாத்ம விவேகம்; தனக்கு லபிக்காத வஸ்துக்களில் இச்சையில்லாமல், பூர்வ கர்மானுசாரமாய்த் தனக்கு எது லபிக்கின்றதோ அதனுடன் திருப்தியடைந்து சந்தோஷத்துடன் இருப்பது; பிரம்ம ஞானிகளுடன் சாங்கத்தியம் ஆகிய இந்த நான்கு சாதனங்களே நான்கு துவார பாலகரென்று சொல்லப்படும். இவைகளில் ஏதாகிலும் ஒன்றை, பிரயத்தினத்துடன் சாதித்து வசப் படுத்திக்கொண்டால், அப்பொழுதே மற்ற மூன்றும் வசமாய் மோக்ஷத்தைக் கரதலாமலகம் (உள்ளங்கை நெல்லிக்கனி) போல் காணலாம்.

"அவிசார க்ருதோ பந்தோ விசாராந்மோக்ஷோ பவதி, தஸ்மாத் ஸதா விசாரயேத் ஜகத்ஜீவபரமாத்மந: ஜீவபாவஜகத்பாவ போதே ப்ரத்யகபிந்நம் ப்ரஹ்மைவாவஶிஷ்யதே."

[பைங்கலோபநிஷத்.]

விசாரணை செய்யாததனால் பந்தமும், விசாரணை செய்வதனால் மோக்ஷமும் உண்டாகும். ஆதலால், ஜகத் என்றால் எது? ஜீவன் எப்படிப் பட்டது? பரமாத்மா எப்படிப் பட்டவன்? என்று ஜகத் ஜீவ பரமாத்ம லக்ஷணங்களை சதா குரு முகமாய் விசாரணை செய்யவேண்டும். அப்படி விசாரிப்பதனால், ஜீவ ஜகத்து இரண்டின் லக்ஷணம் இப்படிப் பட்டதென்று விசிதமாய்த் தெரிந்துகொண்டவுடனே, பரமாத்மா இப்படிப்பட்டவனென்று தெளிவாய்த் தெரியவரும்: அப்படிப்பட்ட பரமாத்ம லக்ஷணம் தெரிந்தவுடனே மோக்ஷம் தனக்குத் தானாகவே சித்திக்கும். ஜீவ ஜகத்துக்களின் லக்ஷணம் இப்படிப் பட்டதென்று விசாரித்துத்தெரிந்துகொள்ளாதவன், பரமாத்மாவின் லக்ஷணம் இப்படிப் பட்டதென்று தெரிந்துக்கொள்ள மாட்டான். எவன் பரமாத்மாவை அறியவேண்டுமென்று எண்ணுகின்றானோ, அப்படிப் பட்டவன் ஜகத் ஜீவ லக்ஷணங்களை குரு முகமாய் விசாரித்துத் தெரிந்துகொள்வான், பிறகு, பரமாத்மாவின் லக்ஷணத்தையும் குரு முகமாய் விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கோரப் பட்ட முமுக்ஷுக்கள், இந்நூலையும், இந்நூலாசிரியரால் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத் கீதையையும் வாசித்து இவைகளில் உபதேசித் திருக்கும் குரு ரகஸ்யார்த்தங்களைக் கிரஹித்து, சாஸ்திர விசாரணையை விட்டு ஒழித்து மனதை நிறுத்தி இரவும் பகலுமாய் ஜபத்திலிருக்க நிச்சயம் செய்துகொள்ள வேண்டுமென்பதே இந்நூலின் கருத்து.

“சுலோ॥ ததேஜதி தந்நைஜதி தத்தூரே தத்வந்திகே
ததந்தரஸ்ய ஸர்வஸ்ய தது பாஹ்யதஃ”

என்னும் ஈசா வாஸ்யோபநிஷத் வாக்கிய ரீதியாய் கேவல நிராகார பரப் பிரம்மமாகிய நான், தத்வ விசாரணை

இல்லாதவர்களுக்கு தேஹேந்த்ரியங்க ளுடையவனுயிருந்து சிருஷ்டிப்பதும் காப்பாற்றுவதும் சம்மாரம் செய்வதுமா யிருக்கின்றேன். தத்வ விசாரணை செய்த ஞானிகளுக்கு அசல சொரூபனுயும் என்றுல், தேஹேந்த்ரியங்க ளில்லாமல் கேவல நிராகார (வெட்டவெளியாய்) சைதன்ய சொரூபனாய்க் காணப்படுவேன். பாமரஜனங்களுக்கு என்றுல், இந்த உலகத்தில் தள்ளத்தக்க விஷய சுகங்களையெல்லாம் தள்ளாமலும், சாஸ்த்திர விசாரணை செய்யாமலும் இருப்பவர்களே பாமரஜனங்களென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட பாமர ஜனங்களுக்கு வெகுதூரத்தில் இருப்பவனுயும் காணப்படுகின்றேன். சிரவண மனன நிதித்யாசங்கள் (கேட்டல் சிந்தித்தல் தெளிதல்) செய்யப்படும். பிரம்ம ஞானிகளுக்குச் சமீபமாயிருப்பவனுயும் காணப்படுவேன். அன்றியும், சகல ஜீவ ஜந்துக்களினுடைய சரீரத்திலிருக்கும், மனம் புத்தி சித்தம் அஹங்காரமென்னும் அந்தக்கரணங்களுக்கெல்லாம் சாக்ஷியாய், கேவல ஞான சொரூபமான ஆத்மாவாய் வியாபித் திருக்கின்றேன். இந்த மாயா பிரபஞ்சத்திற்கு உள்ளும் வெளியிலும் நிறைந்திருக்கின்றேன். மேலும்,

சுரு|| தஸ்மாத் ஸாகார மநித்யம் நித்யம் நிராகாரமிதி.

என்னும் மஹா நாராயணேப நிஷத் வாக்யரீதியாய், பெயர் ரூபமுடைய என் சாகார (விக்கிரக) சொரூபம் அநித்யமானது, பெயர் ரூபமில்லாத என் நிராகார (வெட்டவெளி) சொரூபம் நித்யமானதும் சத்யமானதுமா யிருக்கும். இதுவே என் யதார்த்தமான சொரூபம்.

சுரு|| யத்ர நாந்யத் பஶ்யதி நாந்யத் ஸ்ருணோதி
நாய்ய த்விஜாநாதி ஸபூமா யோவை பூமா ததம்ருதம்
அத யத்ராந்யத் பஶ்ய த்யந்ய ஸ்ருணோதி அந்ய த்விஜாநாதி
ததல்பம் அத யதல்பம் தந்மர்த்யம்.

என்னும் சாங்தோக்யோபநிஷத் வாக்யரீதியாய், என் நிஜ சொரூபமாகிய நிராகார சொரூபம் (வெட்டவெளி) அக்கண்ட பரிபூர்ண மென்றும், நாசமில்லாத தென்றும் சொல்லப்படும். என் சாகார சொரூபம் (கண்களுக்குக் காணப்படும் விக்கிரகங்கள்) அல்பமானதும் கண்டமானதும் மாயா சொரூபமானதும் என்றால், நசித்துப்போகத் தக்கதுமாயிருக்கும். மேலும்,

சுரு|| யோவை பூமா தத்ஸுகம் நால்பே ஸுக மஸ்த்தி பூமைவ ஸுகம் பூமாத்வேவ விஜிஞ்ஞாஸிதவ்ய இதி.

எது அகண்ட பரிபூர்ணமாய் நிராகார சொரூபமாயிருக்கின்றதோ அதுவே எனது நிஜ சுயசொரூபம். என்றால், கண்ட சொரூபமாயிருக்கும் விக்கிரகங்களை ஆராதிப்பதில் அப்படிப்பட்ட சுகமிராது. நிராகார சொரூபத்தை ஆராதித்தால் சுகமுண்டாகும் என்பதேயாம். ஆதலால், வெட்டவெளியா யிருக்கும் பரப் பிரம்ம சொரூபத்தை இதில் உபதேசித்தோம்; அந்த பரப் பிரம்ம சுகத்தை அனுபவிக்கும்பொருட்டே இந்நூல் எழுதப்பட்டது.

எனதன்பர்களே! வெட்டவெளியாகிய பரமாத்மாவே பெரிதென்றும், விக்கிரகங்கள் தாழ்ந்ததென்றும் இங்கு சொன்ன விஷயம் ஞானிகளுக்கே யொழிய, நம்மைப் போன்றவர்களுக்கல்ல. ஞானிகள், முதல் கோவில்களுக்குச் சென்று விக்கிரக ஆராதனைகளை (பூஜைகளைச்) செய்து முடித்து சித்தி யடைந்துவிட்டபடியால், அவர்கள் விக்கிரக ஆராதனைச் செய்யாமல், வெட்டவெளியா யிருக்கும் பரமாத்ம சொரூபத்தில் மனதை சேர்ப்பிக்கவேண்டுமென்று, உபநிஷத்துகளில் சொல்லியதை இங்கு தெரிவித்தோம். ஆதலால், அவர்களைப்போல் நாமும் அனேக காலம் கோவில்களுக்குச் சென்று மிகவும் பக்தியுடன் சிவன் அல்லது, விஷ்ணு பூஜைகளைச் செய்து மனம் பரிபக்குவ

மடையவேண்டும். இதற்கு சிவஞான சித்தியார் உபதேச காண்டம் பிரமாணம்;

யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக ஞர்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு
மாதலா னிவையி லாதா னறிந்தருள் செய்வ னன்றே.

எத்தி றத்துள மூர்த்தியி ஞயினு
மெமையுணர்ந் தருச்சனை யியற்றின்
முத்தி நல்குது மாங்கதிற் பவித்திர
முழுமுத லிலிங்க வர்ச்சனையே
பத்தியிற்சிறு பச்சிலை யாயினும்
பனிமலர்ச் சிற்றிதழெனினுஞ்
சுத்த மென்புனற் றுள்ளியா யினுமதிற்
ருெகுப்பவ ரெமக்கெனத் தொகுப்பார்.

ஞான மடையும்பொருட்டு வெட்டவெளியாகிய பரமாத்மாவில் மனதை சேர்ப்பிக்க சாதனம் செய்து வரவேண்டும்: கோவில்களிலுள்ள சிவ விஷ்ணுக்களின் பூஜைகளைப் பூர்த்திசெய்யாமுன், அதற்குமேல் என்றால், பக்திக்குமேல் நான்காம் படியிலிருக்கும் வெட்டவெளியாகிய பரப் பிரம்மத்தில் மனதை லயப்படுத்துவது மிகவும் கஷ்டம். எல்லோரும் முதல் கோவில்களுக்குச் சென்று பக்தியைப் பூர்த்தி செய்துகொள்ளவேண்டும். இவ்வாறு பக்தியை பூர்த்தி செய்துகொண்டபின் மனம் வெகு சுலபமாய்ப் பரப்பிரம்மத்தில் ஐக்யமாய்விடும். பக்தி செய்தவர்களுக்கும் பக்தி செய்யாதவர்களுக்கும் மனதை வெகுசுலபமாய் லயப்படுத்த, இதில் உபதேசமாய் சிவராஜயோக சமாதியில் சொல்லியிருக்கின்றோம். ஆதலால், சம்சாரத்துட னிருக்கும் கிருகஸ்த்தர்களும், மற்றுமுள்ள சாதுக்களும் இந்த சிவராஜயோக சமாதியில் சொல்லியிருக்கும் இரண்டு மந்திரங்களையும் சுவாசத்துடன் சேர்த்து உள்ளுக்கிழுத்து ஜபம் செய்துவந்தால் சுவாசம், மனதை வெளியில் ஓடவிடாமல் நிறுத்தி, பிறகு அம்

மனதை தம்மில் (சுவாசத்தில்) ஐக்யம் செய்துகொள்ளும். அப்போது புருஷன் தன்னைத்தான் மறந்து சல்பொம்மை யைப்போல் நின்றுவிடுவான். இது, அனுபவத்தில் உங்க ளுக்குப் பிரத்யக்ஷ திருஷ்டாந்தமாய்த் தெரியவரும்.

சம்சார பந்தம் புருஷனைத் தொடர்வது.

இந்நூலுக்கு முக்கிய அங்கமாயிருக்கப்பட்டது. "சிவராஜ யோகம்." இந்த சிவராஜயோகத்திற்கு அங்கம் "ஸோஹம்" இந்த "ஸோஹம்" மந்திரம் எவ்விதமாய் உபதேசிக்க வேண்டுமோ அதை, உபநிஷத்துக்களின் திருஷ்டாந்தங்க ளுடன் முன் உபதேசிக்கப்படும். இந்த உபதேசத்தினுல் சம்சாரபந்தம் நீங்கி (பந்தத்திலிருந்து விடுபட்டு) இச் சன்மத்திலேயே மோக்ஷத்தை அடையலாம். இந்த சம் சாரபந்தம் புருஷனை எவ்விதமாய்த் தொடர்ந்ததோ அதன் விவரத்தை இதில் சற்றே சுருக்கிச் சொல்லுகின்றோம் அதைக் கவனித்து வாசித்துப் பாருங்கள் :—

ஐயா! இந்துஸ்தானி தேசத்தில்! 'ஸத்ஜங்கட' என் னும் கிராமத்தில் ராமநாதசுவாமி என்னும் மஹானுபாவன் ஒருவனிருந்தான். அவனது விவாககாலத்தில், அவன் மாங் கல்யம் தரிக்கப்போவதற்குமுன் தம்பதிகளுக்கு மத்தியில் திரைபோட்டு வைத்தார்கள். அந்தச் சமயத்தில் பிரா மணர்க ளெல்லோரும் "அதிசுமுகூர்த்த ஸாவதாந, அதிசு லக்ந ஸாவதாந" என்று எல்லோரும் ஒரே சப்தமாய்க் கூச்சலிட்டார்கள். அப்போது தன் சமீபமா யிருக்கும் ஒரு பிராமணனைப் பார்த்து, "ஸாவதாந ஸாவதாந" என்று எல்லோரும் கூச்ச லிடுகின்றார்களே அது என்ன விஷய மென்று மாப்பிள்ளைக் கேட்டான். இப்போது 'ராக்ஷசி' உன் கழுத்தில் வந்து விழப்போகின்றாள்: ஆதலால், நீ

சாவதானமாயிரு; ஏதாகிலும் உபாயமிருந்தால் அது போல் செய்யென்று ஸர்வ முனிஜனங்களும் உன்மீது கிருபை யுடையவர்களா யிருந்து உன்னை ஜாக்கிரதைப் படும்படி சொல்லுகின்றார்களென்று அந்தப் பிராமணன் சொல்லினன். அந்த வார்த்தை மாப்பிள்ளையினது செவியில் வீழ்ந்தவுடனே, அவன் திரையிலிருந்து தப்பித்துக் கொண்டு ஓடிவிட்டான். மறுபடியும் அவன் விவாகம் செய்துகொள்ளவில்லை. ஜாக்கிரதைப் படுங்களென்று எவ்வளவு சொல்லியபோதிலும் புருஷர்கள் கேளாமல், ஸ்திரீ மீதிருக்கும் மோகாந்தகாரத்தினால் அவளைத் தன் வசப் படுத்திக்கொண்டு எங்கும் ஓடாமலிருப்பதற்காக, முதல் முதல் மங்கள சூத்திரரூபமான பாசக்கயற்றை அவளது கழுத்தில் போடுகின்றார்கள்; இந்த ராக்ஷசி ஒருவேளை அந்தப் பாசக் கயற்றிற்கும் உட்படமாட்டாளென்று எண்ணி நவரத்தின ஆபரணரூபமாய்ச் செய்த அனேக தங்கமாலைகளாகிய பாசக் கயறுகளும் அவள் கழுத்தில் போட்டு, அவள் இவைகளுக்கும் உட்படமாட்டா ளென்று நினைத்து கைகளையும் கால்களையும் கட்டுவதற்காக ஆபரண ரூபமாயிருக்கும் பொன் வெள்ளி விலங்குகளையும் மாட்டி, தங்கத்தினாற் செய்த ஒட்டியாணத்தினால் இடுப்பை இழுத்துக் கட்டி, மூக்காங் கயறுபோன்ற புலாக்கை மூக்கில் மாட்டி, முகத்தைச் சுளித்துத் திருப்பாமலிருக்க கம்மல் கர்ணப்பூ கத்தரிப்பாவலி குருட்டுப்பாவலிகளை மாட்டி, அதிகமாய் வாயாடாமலிருக்கக் கண்டத்தை யிறுக்கிப் பிடிப்பதற்காகக் கெம்புரவைகளால் செய்த அட்டிகைகளை (சரடுகளை) கழுத்தில் இழுத்துக் கட்டும்படி, புருஷன் செய்விக்கின்றான். இப்படிப்பட்ட ஆபரண ரூபமாகிய பாசக் கயற்றால் அவளை இருக்கிக்கட்டி, எங்கும் ஓடவிடாமல் தன்னுடன் அழைத்துச் செல்வதற்காக தன் வலது

கைச் சுண்டு விரலால் அவளது இடது கைச் சுண்டு விரலைப் பிடித்து விவாகரூபமாய் இழுத்துக்கொண்டு செல்கின்றான். அவளைத் தன்வசமாய்ச் செய்துகொள்ள இப்படிப்பட்ட ஆபரணாதி பாசக்கயறுகளால் அலங்கரித்து இழுத்துக் கொண்டு சென்றபோதிலும் நாளாவட்டத்தில் அவனுடைய சாமர்த்தியங்களெல்லாம் ஒழிந்து கேவல மூடனாய் அவள் வலையில் அகப்பட்டு அவளது ஆதீனமாய் அவள் நில்லென்றால் நிற்பதும் போவென்றால் போவதுமா யிருப்பான். இப்படிப்பட்ட அபவித்திர ராக்ஷசியை மோகிப்பதனால் அவ்விடம் என்ன இருக்கின்றது? சுகமா? அல்லது புருஷார்த்தமா? அவளால் துக்கங்களே யொழிய வேறு ஏதாகிலும் உண்டோ? ஒன்றுமில்லை யல்லவா. எப்படிப்பட்டவளை மனைவி யென்று சொல்லலாமென்றால்:—

"கார்யேஷு தாஸீ கரணேஷு மந்த்ரீ போஜ்யேஷு மாதா ஶயநேஷு ரம்பா தர்மானுஸாரீ க்ஷமயா தரித்ரீ ஷட்குண்ய பார்யா குலமுத்தரந்தி."

என்னும் ஸ்மிருதிரீதியாய் புருஷனது சர்வ காரியங்களிலும் யுக்தாயுக்தங்களைச் சொல்லுவதில் மந்திரியைப் போலவும், சரீர சம்ரக்ஷணையில் தாதியைப்போலவும், பிரியத்துடன் புஜிக்கும்படிச் செய்வதில் தாயைப்போலவும், காம போகத்தில் ரம்பையைப் போலவும், குலத்திற்கும் ஆசிரமத்திற்கும் மதத்திற்கும் தகுந்த நடவடிக்கை யுடையவளும், பூமிதேவியைப்போன்ற சாந்தகுண முடையவளுமான மனைவியே குலத்தை உத்தரிக்கப் பட்டவளென்று வேத சாஸ்திரங்களில் சொல்லப் பட்டிருப்பதனால் இப்படிப்பட்டவளையே மனைவியென்று சொல்லலாம்.

அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவி பொறையும்—வன்னமுலை

வேசி துயிலும் விறன் மந்திரிமதியும்
பேசிலிவை யுடையாள் பெண்.—அஃதொழிய;

புருஷனுடன் வாதாடி துர்ப் பாஷைகளால் தூஷித்துக் கொண்டிருப்பவள் உத்தம ஸ்திரீ யாகமாட்டாள். இப்படிப்பட்ட ஸ்திரீயுடன் கூடியிருப்பதைவிட,

"பத்தாவுக்கேற்ற பதிவிரதை யுண்டானல்
எத்தாலுங்கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமாறுகி யிருப்பாளே யாமாகிற்
கூறுமற் சந்நியாசங் கொள்."

என்றபடி சந்நியாசங் கொள்வதே உத்தமம். ஆதலால்,

இந்த சகல பிரபஞ்சமும் மாயையால் கட்டுப் பட்டிருக்கின்றன. இந்த மாயாப் பிரபஞ்சமோ, கயற்றைப் பார்த்து சர்ப்பமென்று பயப்படுவதுபோல் இருக்கின்றதென்று ஸ்ரீ சங்கராசாரியர் சொல்லி யிருக்கின்ருர்.

அதாவது:—

"ரஜ்ஜுஸர்ப்பம் ப்ரமணாரூபம் தத்வது ப்ரஹ்மணி
ஜகதாரூபம் மநவி விசாரய வாரம் வாரம்"
"ரஜ்வஞ்ஞாநாத்பாதி ரஜ்ஜுர்யதாஹி:
ஸ்வாத்மஜ்ஞாநாதாத்மநோ ஜீவபாவ:"
"ஆப்தோகத்யா ஹி ப்ராந்திநாஸே ஸ ரஜ்ஜு
ர்ஜீவோ நாஹம் தேஸிகோக்த்யா ஸிவோஹம்."

இரவில் வழி நடக்கும்போது தன் எதிரில் கயறு வீழ்ந் திருந்தபோதிலும் அதை கயறென்று நினைக்காமல் பாம்பென்று நினைத்து கலவரப்பட்டு பிரமை அடைகின்றுன். பிறகு கயறென்று அறிந்த மற்றொரு புருஷன் பயப்படாதே அது பாம்பல்ல, கயறு என்று சொன்ன பிறகு பாம்பென்னும் பிரமை எப்படி நாசமாகின்றதோ அதுபோல் ஆத்மாவே தானென்று அறியாமல், ஜீவனென்று எண்ணி பிரமை அடைந்த புருஷன், குரு உப

தேசத்தினால் நான் ஜீவனல்ல ஆத்மசொரூபியாகிய நானே பரப் பிரம்மமென்று தெரிந்துகொள்வான். ஆதலால்,

ஒருவன் கயிற்றைப் பார்த்து பாம்பென்று பிரமை யடைவதுபோல், ஜனங்களெல்லோரும் இந்த மாயாப் பிர பஞ்சத்தைப் பார்த்து நிஜமான பிரபஞ்சமென்று நம்பி மோசம் போகின்றார்கள். இப்படி மோசம் போவதனால், கயறு சர்ப்ப திருஷ்டாந்தமாய் வேதாந்தத்தில் சொல்லப் பட்டிருக்கின்றது. அவை வருமாறு:—

ஒரு கிருஹஸ்தன் வீட்டிற்கு எதிரில் கிணறு ஒன் றுண்டு. அது, 29-வது, பக்கம் ☞ No 1. படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது.

அவ்வூரிலுள்ள ஜனங்களெல்லோரும் ஜலம் எடுக்க அந்தக் கிணற்றுக்கு வருவதுண்டு. ஒருநாள் மாலை தீபம் வைக்கும் சமயத்தில் ஒரு ஸ்திரீ ஜலம் எடுக்க மிடா எடுத் துக்கொண்டு அந்தக் கிணற்றண்டை வந்து, பாம்பு! பாம்பு! ஓ! அம்மா! எவ்வளவு பெரிய பாம்பு! என்று உரத்த சப்தத் துடன் கூக்குரலிட்டு மிடாவைப்போட்டு மூர்ச்சையாய்க் கீழே வீழ்ந்தாள். அவளது கூச்சலைக் கேட்டுச் சுற்றுப் பக்கங்களிலிருந்த ஜனங்களெல்லோரும் ஓடிவந்து தூர மாய் நின்று பார்த்திருந்தார்கள். அவர்களில் இரண்டு புருஷர்கள், மூர்ச்சையாய் விழ்ந்துகிடக்கும் ஸ்திரீயி னுடைய கையைப் பிடித்து சீதோஷ்ணங்களைத் தொட்டுப் பார்த்து உபசரித்தார்கள். ஒருவன் தூரமாய் நின்று சூ! சா! என்று கூச்சலிட ஆரம்பித்தான். மூன்று புரு ஷர்கள் மூர்ச்சையாய் வீழ்ந்தார்கள். ஒருவன் துப்பாக்கி யில் தோட்டா வைத்துத் தூரமாய் நின்று பாம்பைக் குறி பார்த்தான். ஒருவன் பெரிய தடிகொண்டு அடிக்க பிர யத்தினப்பட்டான். ஒருவன் உறையிலிருந்த கத்தியை உருவி வெட்ட ஆரம்பித்தான். ஒருவன் பெரிய கல்லைத்

தலைக்குமேல் எடுத்து அதன்மேல் போட ஆரம்பித்தான். அதிக பயமுடைய ஒருவன் செடியின் மீதேறி அம்பில் பாணத்தைப் பூட்டி அப்பாம்பின்மேல் பிரயோகஞ்செய்ய குறிபார்த்து நின்றான். ஒரு பாம்பாட்டி மோடிவாசிக்க ஆரம்பித்தான். ஒருவன் மீசையை உருவிக்கொண்டு நின்றான். இவைகளை No. 1. படத்தில் காட்டியிருக்கின்றது.

ஒருவன் பிரம்பினால் பாம்பை அதட்டினான். ஒரு ஸ்திரீ குழந்தையைத் தூக்கி பாம்பைக் காட்டினாள். சில ஸ்திரீகளும் புருஷர்களும் தூரமாய் நின்று வேடிக்கைப்பார்த்திருந்தார்கள். இவ்விதமாய் அனேகர்கள் அனேக விதங்களாய் அந்தப் பாம்பைக் கொல்ல பிரயத்தினப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இவ்விதமா யிருக்கும்போது அந்த வீட்டிலுள்ள தைர்யமுடைய ஒரு கிழவி இந்தக் கூச்சலை யெல்லாம் கேட்டு ஓர் அகல் விளக்கை ஏற்றிக்கொண்டு மெதுவாய் அந்தப் பாம்பினிடம் சென்று நின்றாள். இவைகள் யாவும் 30-வது, பக்கம் No. 2. ☞ படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது. பாம்பின்மீது கிழவியின் தீபப் பிரகாசம் பட்டவுடனே ஜனங்களெல்லோரும் பாம்பல்ல "கயறு கயறு" என்று சொல்லி கல்லென்று சிரித்தார்கள். இதற்குள் அந்த வீட்டில் வேலைசெய்பவன் வெளியில் சென்றிருந்து மறுபடியும் தாம்புக் கயற்றைக் கொண்டு போகக் கிணற்றினிடம் வந்து பார்த்தான். அப்போது இவர்கள் செய்துகொண்டிருக்கும் அட்டகாசங்களை யெல்லாம் பார்த்து விழுந்து விழுந்து சிரித்து இராட்டினத்தின் மீதிருந்த தாம்புக் கயற்றை சுருணையாய்ச் சுற்றி தொட்டியின்மீது நானே வைத்தேன் என்று சொன்னான். அதைக் கேட்டு எல்லோரும் ஆச்சரிய மடைந்தார்கள்.

இதனால் என்ன ஏற்படுகிறதென்றால், கயறு ஸ்தானத்தில் பாம்பின் பிரமை தோன்றிற்று. அதனால் பாம்



கயற்றைப் பார்த்துப்பாம்பென்று பிரமை அடைவது.



கிழவியின் தீபப் பிரகாசத்தினால் பாம்பின் பிரமை நீங்குதல்.

யைக் கொல்ல அனேக ஜனங்கள் அனேக உபாயம் செய்த போதிலும், அவைகளெல்லாம் வியர்த்தமாயிற்று. கடைசியில் கிழவியால் கொண்டுவரப்பட்ட தீபப் பிரகாசத்தினுல் பாம்பின் பிரமை நீங்கி கயருய்க் காணப்பட்டது. அதனுல் எல்லோருடைய சந்தேகமும் நிவாரணையாய் ஆச்சரியத்தை உண்டாக்கியது கிழவியினுடைய தீபமல்லவோ? அதுபோல் சம்சாரமென்பது ஒரு பெரிய பாம்பாயிருக்கின்றது. இது, ஆதியில் பிரம சிருஷ்டியினுல் உண்டாகிய அஞ்ஞானம். இந்த அஞ்ஞானம், பிராந்தியினுல் உண்டாயிற்று. ஆதலால், இந்தச் சம்சார சர்ப்பம் அநேக ஜன்மங்களாய் புருஷனுடன்கூடவே வந்துகொண்டிருக்கின்றது. இதிலிருந்து தப்பித்துக்கொள்ள அனேகர்கள் அனேக உபாயங்களைச் செய்துகொண்டு வருகின்றார்கள். அவை வருவாறு:—

சிலர் கஞ்சாப்புகை சாப்பிடுவதும், சிலர் ஜபம்செய்வதும், சிலர் தியானம் செய்வதும், சிலர் தீர்த்த யாத்திரை செய்வதும், சிலர் கர்மாநுஷ்டானங்களைச் செய்வதும், சிலர் பூஜை செய்வதும், சிலர் யாகங்களைச் செய்வதும், சிலர் பஜனைகளைச் செய்வதும், சிலர் விசேஷ தர்மங்களைச் செய்வதும், சிலர் கோயில் குளம் சத்திரங்கள் முதலானவைகளைக் கட்டுவதுமாய் இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட உபாயங்களினுல் இந்த சம்சார சர்ப்பம் நாசமாக மாட்டா. பின் எப்படி நாசமாகுமென்றால், ஞான விருத்திக்காக சமாதி சாதனம் செய்துவரவேண்டும். அதாவது, சுத்த அசலமாகிய (சலிக்காத) 'அந்தஃகரணம்' என்னும் அகலில் "அஹம் பிரம்மாஸ்மி" என்னும் "ஸோஹம்" மந்திரச் சுடரினுல் 'நான்' என்னும் தீபத்தைப் பிரகாசிக்கச் செய்தால் அந்தக்ஷணமே சம்சார சர்ப்பம் இறந்து சச்சிதானந்த பிரம்ம சொரூப தரிசனமாய் ஆனந்தக்கடலில் மூழ்கி

யிருக்கலாம். இதற்குத் திருஷ்டாந்தம் ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம்-17 சுலோகம்-16.

மநஃப்ரஸாதஃ ஸௌம்யத்வம் மௌநமாத்ம விநிக்ரஹஃ
பாவஸம் ஶுத்திரித்யேதத் தபோ மாநஸ முச்யதே.

மனதை காமக் குரோதாதிகளென்னும் ஆசாபாசங்களில் போகவிடாமல் பரிசுத்தமாய் வைத்திருந்தால், மனதில் சந்தோஷமென்கிற அகக்குறி முகத்தில் விளங்கி விகசித்திருக்கும். மனம், அப்படிப்பட்ட விகாரங்களில் போகாமலிருப்பதனால், வாய்த்திறவாமலிருக்கும். வாய்த் திறவாமலிருந்து மனதை அக முகப்படுத்தி ஆத்மாவில் சேர்ப்பித்தால்,அப்போது மனதிற்கு உண்டாகும் சங்கல்ப விகல்பங்க ளெல்லாம் அதனிடமே கலந்து ஏகமாய்ப் போகும். இதுவே மனதினால் செய்யத்தக்க தவமென்று சொல்லப்படும். ஆதலால், கயறு பாம்பாய் தோன்றிய திருஷ்டாந்தம் வேதாந்த சாஸ்திரத்திற்குப் பிரமாண மாய்க் காட்டப்பட்டது. பிராணனில்லாத சரீரம் எப்படி வியர்த்தமோ அதுபோல் சர்ப்ப (கயறு) திருஷ்டாந்தம் இல்லாவிட்டால் வேதாந்த சாஸ்திரத்தை ஸ்திரப்படுத் துவதற்குச் சாத்தியமாகமாட்டா.

ஓங்காரரூபமாய் நிர்க்குணமாய் பரப் பிரம்ம சொரூ பமா யிருப்பதை இந்நூலில் உபதேசித்தோம். அதைச் சதாகாலமும் அப்பியசித்துக்கொண்டு வரவேண்டும். இந்த நிர்க்குணத் தியானம்செய்ய சாத்திய மாகாவிட்டால், சகுணரூபமாகிய விக்கிரக ஆராதனைகளைச் செய்து வரவேண்டும். இந்த சகுணத்தியானம் சாத்தியமாகாவிட் டால், நிஷ்க்காம கர்மத்துடன் ஒரு ரூபத்தை நிறுத்தி பரமாத்ம சொரூபமாய் நினைத்து பஜனைகளைச் செய்து வரவேண்டும். நிஷ்க்காம கர்ம ரூபமான பஜனைகளைச் செய்யச் சாத்தியமாகாவிட்டால், காம்ய கர்மங்களை அதா

வது கோரிக்கையுடைய கர்மங்களைச் செய்துவரவேண்டும். கோரிக்கையுடன் கூடிய கர்மங்களைச் செய்யச் சக்தியில்லாவிட்டால் வாரம் வாரம் அதாவது, ஞாயர் திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி என்னும் இந்நாட்களில் ஜன்மங்கள்தோறும் பிறந்துகொண்டும் இறந்துகொண்டுமா யிருப்பதே திண்ணம்.

ஆதலால், முன் சொல்லிய கயிற்றைப் பார்த்துப் பாம்பென்று எல்லோரும் பிரமையடைந்து மதிமயங்கி யிருக்கும்போது கிழவியால் கொண்டுவரப்பட்ட தீப்ப பிரகாசத்தினல், யதார்த்தமான கயிறு காணப்பட்டு பாம்பின் பிரமை நீங்கி சந்தேகம் நிவர்த்தியானதுபோல், இந்த "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்ய" மானது கிழவியால் கொண்டுவரப்பட்டத் தீபம்போலிருந்து சகலருடைய சந்தேகங்களையும் போக்கடித்து நிராகாரப் பிரம்மத்தை தரிசிக்கும்படி செய்விக்குமென்று அறியக் கடவீர்களாக.

பிணத்தைப்பார்த்து வியசனப் படுபவர்களின் சோகம் நிவாரணே அடைய உபதேசித்தல்.

"எப்போ தாயினுங் கூற்றுவன் வருவான்
அப்போ தந்தக் கூற்றுவன் றன்னைப்
போற்றவும் போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் தமரொடும் போகான்
நல்லா ரென்னுன் நல்குர வறியான்
தீயா ரென்னுன் செல்வரென் றன்னுன்
தரியா ரெருகணம் தறுக ணளன்
உயிர்கொடு போவான் உடல்கொடு போகான்
எதுக் கழுவீர் ஏழை மாந்தர்காள்."

என்னும் கபிலர் வாக்கியரீதியாய்,

ஓ ஸகோதரிகளே ! ஓ ஸகோதரர்களே !! உங்கள் குடும்ப சம்ரக்ஷணையில் தெய்வ விதிப்படி யாவரேனும் மரணமடைந்தால், அவர்களுக்காக நீங்கள் வியசனப் பட வேண்டாம். அவர்கள் நம்முடன்கூட வந்தவர்களுமல்லர், வரப் பட்டவர்களு மல்லர், சந்தையின் கூட்டம்போல் மத்தியில் வந்து மத்தியிலேயே சென்றுவிடுகின்றார்கள். புத்திர பௌத்திர களத்திர மித்திராதிகளின் முற்பிறப்பு நமக்குத் தெரியவரமாட்டா. அவர்கள் பிறந்த பின்பு தான் நம்முடையவர்களென்று தோன்றி ஆசை என்னும் பிரமையை உண்டாக்குகின்றார்கள். மறுபடியும் அவர்கள் மரணமடைந்தபிறகு எப்படி ஆகின்றார்களோ தெரிய வராது. மத்தியில் சிலநாள் மாத்திரம் நம்முடையவர்க ளென்று பிரமையை உண்டாக்கும் புத்திர களத்திராதி களைக் குறித்து ஏன் வியசனப்படவேண்டும்? காணப்படும் வஸ்துக்களெல்லாம் நசிப்பது நிச்சயம். இந்த பந்துக்களில் சிலர் உங்களுக்கு முன் பிறந்தவர்களும் சிலர் பின் பிறந்த வர்களுமா யிருக்கின்றார்களல்லவா? உங்களுக்கு முன் பிறந்தவர்களுக்குப்பின் நீங்கள் பிறவாம லிருந்தபோது அவர்களுக்கு நீங்கள் என்ன உறவாயிருந்தீர்கள்? நீங்களும் அவர்களும் பிறப்பதற்கு முன்னே எவ்விடத்தில் எப்படி இருந்தோமென்று சொல்ல யாதொன்றும் உங்களுக்குத் தெரியவரமாட்டா தல்லவா? நல்லது, அவர்கள் இறந்த பிறகாயினும் எவ்விடத்தில் எப்படி இருக்கின்றார்களோ தெரியவருமா? அதுவும் தெரியவரமாட்டா தல்லவா? அவர்கள் பிறந்து ஜீவித்திருக்குங் காலம்வரையில் மாத்தி ரம் உங்களுக்குக் காணப் படுகின்றார்களே யன்றி, பிறப்ப தற்கு முன்னும் இறந்த பின்னும் எவ்விடத்தில் எப்படி யிருக்கின்றார்களோ என்பதும் உங்களுக்குத் தெரியவா மாட்டா தல்லவா? அப்படிப் பட்டவர்களுக்காக நீங்கள்

வியசனப்படுவதேன்? அப்படி வியசனப்படுவது அறியாத் தன்மையினாலேயே யன்றி வேறல்ல. ஆத்மா அநாத்மா விவேகமில்லாதவர்கள் வியசனப் படுவார்களே யன்றி, ஆத்மாநாத்ம விவேகமுடையவர்கள் ஜீவித்திருக்கப்பட்டவர்களைக் குறித்தேனும் இறந்தவர்களைக் குறித்தேனும், சந்தோஷமும் வியசனமும் படமாட்டார்கள். ஒரு தேகம் மரணமடைந்தால் அந்த தேகத்திலுள்ள ஆத்மாவும் மரணமடைகின்றதென்று எண்ணுகிறீர்களோ யென்ன? அப்படி எண்ணவேண்டாம். அதற்குக் காரணம் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

மரணமடைவதென்றால், சாசுவதமா யிருக்கப்பட்ட ஆத்மா, ஒரு தேகத்தினின்று மற்றொரு தேகத்தில் பிரவேசிப்பது. ஆத்மா, எந்த தேகத்தினின்று கிளம்பிவிடுகின்றதோ, அந்தத் தேகம்மாத்திரம் மரணமடைந்ததாகின்றது. அதிலிருந்த ஆத்மா அத்தேகத்தைவிட்டு மற்றொரு தேகத்தில் பிரவேசிக்கும். அதில் சிலநாள் குடியிருந்து அந்தத் தேகத்தையும்விட்டு மற்றொரு தேகத்தில் பிரவேசித்து இப்படியே எப்பொழுதும் ஆத்மா, எதையோ ஒரு தேகத்தை ஆசிரயித்துக்கொண்டே யிருக்கும். ஆதலால், அசத்தாகிய தேகாதி சர்வப் பிரபஞ்சமும், கானல் ஜலத்தை முதல் பார்த்தவுடன் அது நிஜமாகிய ஜலம்போல் தோன்றிப்பிறகு அது ஜலமல்லவென்று அறிந்த ஒருவன் மற்றொருவனை நம்பும்படிச் சொல்லியும், சமீபத்தில் அழைத்துச் சென்று காட்டியும், அவன் சம்சயம் எப்படி நசிக்கப்படுகின்றதோ, அதுபோல் நசிக்கப்படவேண்டும். அநேக ஜன்மங்களாய்ச் செய்துவந்த புண்ணிய விசேஷத்தினால் ஆத்மாவின் நிஜ சொரூபம் தெரிந்த பிறகு ஜனன மரணங்களுக்குக் காரணமா யிருக்கும் சஞ்சிதமென்னும் மூட்டை நசிக்கும். இந்த சஞ்சிதமென்னும் மூட்டை

நசித்தவுடன் ஜீவ சொரூபியாயிருக்கும் ஆத்மா பரமாத்மா வுடன் ஐக்யமாகுமே யன்றி, பஞ்சபூதங்களால் உண்டா கிய தேகத்தைப்போல சொரூபம் நாசமாகப் பட்டதல்ல. அதாவது, பஞ்ச பூதங்களினுல் உண்டாகிய தேகம் மாத்தி ரம் நாசமடையத் தக்கதென்றும், ஆத்மா நித்தியமாகிய வஸ்துவென்றும் அறியவேண்டும்.

செடிமுளைந்த காட்டுக்குள்ளே சிதம்பரதேவன் வீட்டுக்குள்ளே
இருவரும் மூவருங் கூடிக்கொண்டு குடியிருந்து குடிப்போயினுர்
குருநாதா வேதா வென்னுங்கடி அதுவாமடி யிதுவல்லவடி
இது ஓமடி இது வொக்குமடி.

ஓ ஸகோதரர்களே! இந்த ஆத்மா பரப் பிரம்மத்தின் அம்சமேயன்றி வேறல்ல. அதுவே சகல ஜந்துக்களிலும் வியாபித் திருக்கின்றது. அது, பிரகிருதி சம்பந்தத்தை அடைந்திருப்பதனுல் அதற்கு ஜீவாத்மா என்று சொல் லப்படும். பிரகிருதி, என்ருல் மாயை; இதற்கே அவித்தை யென்றும், அஞ்ஞானமென்றும் நாமங்களுண்டு. பர மாத்மாவானது அப்பேர்ப்பட்ட அஞ்ஞான சம்பந்தமில் லாமல் சுயம்பிரகாசமாயிருக்கும். அதனுலேயே அது பர மாத்மாவெனப்படும். அந்த பரமாத்மா பிறப்பு இறப்பு உயர்வு தாழ்வு முதலான எவ்வித விகாரங்களும் இல்லாத தாய் எப்பொழுதும் ஒரே விதமாயிருக்கும். அப்படிப் பட்ட பரமாத்மாவே உங்கள் முதலானவர்களிடத்திலும் இருக்கும் ஆத்மா. அது, பிரகிருதி சம்பந்தமான அஞ்ஞா னத்துடன் கூடி யிருக்கின்றது. அப்படி அஞ்ஞானத்து டன் கூடியிருக்கும் வரையில் பிறப்பு இறப்பு அதாவது, ஒரு தேகத்தை விட்டு மற்றொரு தேகத்தில் பிரவேசித்தல் முதலான விகாரங்களை அடைவதனுல் அது, ஜீவாத்மா வென்றே சொல்லப் படுகின்றது. இந்த ஜீவாத்மாவிற்கு எப்பொழுது அஞ்ஞானம் விட்டு ஒழிகின்றதோ அப்

பொழுதே அது பரமாத்மாவில் கலக்கும். அப்படிக் கலந்தபிறகு அதற்கு ஜனனமரணுதி விகாரங்கள் உண்டாக மாட்டா. பரமாத்மாவில் கலத்தலே, மோக்ஷம் எனப் படும். இதற்குத் திருஷ்டாந்தம், ஸ்ரீ கிருஷ்ணர்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம்-2, சுலோகம்-16.

நாஸதோ வித்யதே பாவோ நா பாவோ வித்யதே ஸதஃ
உபயோரபி த்ருஷ்டோந்த ஸ்த்வநயோ ஸ்தத்வ தர்ஸிபிஃ.

கிருஷ்ணன்:—'ஸத்' என்ருல், நித்தியமான (கெடாத) பதார்த்தம். 'அஸத்' என்ருல், அநித்தியமான (நசிக்கத் தக்க) பதார்த்தம். ஸத் பதார்த்தத்திற்கு அநித்தியமும் அஸத் பதார்த்தத்திற்கு நித்தியமும் எக்காலத்திலும் உண்டாகமாட்டா. இவ்விரண்டின் யதார்த்தம் தத்வ வேத்தர்கள் (ஞானிகள்) அறிவார்களே யன்றி மற்றவர்கள் அறியமாட்டார்கள்.

அர்ஜுனன்:—'ஸத்' என்ருல் எது? 'அஸத்' என்ருல் எது?

கிருஷ்ணன்:—என்னிடத்திலிருக்கும் பரமாத்மாவும், உன்னிடத்திலும் நம் எதிரிலிருக்கும் ராஜர்க ளிடத்திலும் இன்னும் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள பிபீலிகாதி பிரம்ம பரியந்தம் சமஸ்த ஜந்துக்க ளிடத்திலும் இருக்கப்பட்ட ஜீவாத்மாவும் எந்தக் காலத்திலும் நசிக்கத் தக்கதல்ல. ஆதலால், இந்த பரமாத்மா ஜீவாத்மாக்கள் 'ஸத்' என்றும் மற்ற திருஸ்ய (கண்களுக்குக் காணப்படும்) பிரபஞ்சமெல்லாம் நசிக்கப்படுவ தாதலால் 'அஸத்' என்றும் சொல்லப் படும்.

அர்ஜுனன்:—உம்மிடத்தில் இருப்பது பரமாத்மா வென்றும், நான் முதலான மற்ற ஜந்துக்களிடத்தில் இருப்பது ஜீவாத்மா வென்றும், சொன்னீரல்லவா? அங்ஙனம்

கூறுவதற்குக் காரணமென்ன? பரமாத்மா ஜீவாத்மாக்கள் வெவ்வேறு வஸ்துக்களா? அப்படியானால், அவ்விரண்டிற்குமுள்ள பேதமென்ன? நான் முதலான மற்ற ஜந்துக்களில் வியாபித் திருப்பது ஜீவாத்மா என்றீரல்லவா? அந்த ஜீவாத்மா வொன்றே சகல ஜந்துக்களிலும் வியாபித் திருக்கின்றதா? அல்லது, அந்தந்த ஜந்துக்களில் வெவ் வேறு ஜீவாத்மாக்கள் வியாபித்திருக்கின்றனவா? இந்த ஜீவாத்ம பரமாத்மாக்கள் மாத்திரம்எப்படி நாசமில்லாம லிருக்கும்.

கிருஷ்ணன்:—பரமாத்மா வென்றால், சகல பிரபஞ்சங் களையும் சிருஷ்டிக்கப்பட்டதும் அழிக்கப்பட்டதுமாகிய பரப் பிரம்மத்திற்குப் பெயர். ஜீவாத்மாவென்றால், அந்த பரப் பிரம்மத்தின் அம்சமேயன்றி வேறல்ல. அதுவே சகல ஜந்துக்களிலும் வியாபித் திருக்கின்றது. அந்த ஜீவாத்மா மாயையுடன் சம்பந்தப்பட்டிருப்பதனால் அதற்கு ஜீவாத்மா என்று சொல்லப்படும். இந்த மாயையே அவித்தையென்றும் அஞ்ஞானமென்றும் சொல்லப்படும். பரமாத்மாவானது அப்பேர்ப்பட்ட அஞ்ஞான சம்பந்த மில்லாமல் சுயம் பிரகாசமாயிருக்கும். அதனாலேயே அது பரமாத்மா வென்று சொல்லப்படும். அந்தப் பரமாத்மா பிறப்பு இறப்பு உயர்வு தாழ்வு முதலான எவ்வித விகாரங் களுமில்லாமல் எப்பொழுதும் ஒரே விதமாயிருக்கும். அப் படிப்பட்ட பரமாத்மாவே உன் முதலானவர்களிடத்திலும் இருக்கும் ஆத்மா. அது, மாயையுடன் கூடியிருக்கின்றது. அது, மாயையுடன் கூடியிருக்கும் வரையில் பிறப்பு இறப்பு அதாவது, ஒரு தேகத்தைவிட்டு மற்றொரு தேகத்தில் போய்ப் பிரவேசிப்பது முதலாகிய விகாரங்களை அடைவ தனால் அது ஜீவாத்மாவென்றே சொல்லப்படும். இந்த ஜீவாத்மாவிற்கு எப்பொழுது மாயை விட்டொழிகின்றதோ

அப்பொழுதே அது பரமாத்மாவில் கலக்கும். அப்படிக் கலந்தபிறகு அதற்கு ஜனன மரணாதி விகாரங்கள் உண்டாக மாட்டா. பரமாத்மாவில் சேருவதே மோக்ஷம் எனப்படும். இதற்குத் திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன் கேள்:—

கிருஷ்ணன் :—இவ்வுலகில் சுயமா யிருக்கப்பட்ட சொர்ணத்திற்குத் தங்கம் அல்லது அபராஞ்சி யென்றும், செம்பு முதலான மற்ற லோகத்தினுல் கலந்திருக்கும் சொர்ணத்திற்குப் பொன்னென்றும் நாமங்கள் ஏற்பட்டிருக்கின்றன அல்லவா? அப்படி நாமபேதங்கள் உண்டான காரணத்தையும் அவற்றின் பேதத்தையும் நீ அறிவாயா?

அர்ஜுனன்:—ஆம் அறிவேன் தங்கம் சுயமானது. அதாவது, வேறு எந்த லோகங்களுடனும் கலக்காமலிருப்பது; அதனை எத்தனைவிசை உருக்கினுலும் அல்லது புடம் வைத்தாலும் அது, தன் மாற்றிலாவது எடையிலாவது குறைவதும் உயர்வதும் இல்லை. பொன்னைப் புடம் வைத்தால் மாற்று உயர்ந்து எடை குறைந்துக் கொண்டே வரும். அப்படியே, புடம் போடப்போட அதிலிருக்கும் அழுக்குகளெல்லாம் ஒழிந்து அதுவும் சுயமான தங்கமாகும். அதன் பிறகு, அதை எத்தனை புடங்களிட்டாலும் அது, மாற்றும் எடையும் குறையாமலும் உயராமலும் தங்கமே யாகும்.

கிருஷ்ணன்:—ஜீவாத்மா பரமாத்மாக்களுக்கும் உள்ள பேதங்களும் அதுபோல் ஆகுமென்று அறிக. ஜீவாத்மா பொன்னைப் போன்றதும், பரமாத்மா தங்கத்தைப் போன்றதுமாகும். தங்கத்தை எத்தனை புடங்களிட்டாலும் அது மாற்றிலாயினும் எடையிலாயினும் எப்படி மாறுவ தில்லையோ அதுபோல், பரமாத்மாவும் எப்பொழுதும் எந்த விகாரங்களையும் அடையாமல் ஒரே விதமா யிருக்கும். பொன்னனது புடங்களால் எடை

குறைந்துகொண்டும், மாற்று உயர்ந்துகொண்டும் வர வர அதிலிருக்கும் அழுக்குகளெல்லாம் நீங்கி சுயமான நிறமாய் அதுவும் தங்கத்துடன் எப்படி கலக்கின்றதோ அதுபோல் ஜீவாத்மாவும், அநேக ஜன்மங்களாய்ச் செய்துவந்த நிஷ்க் காம்ய தவத்தினுல் அஞ்ஞானம் நீங்கிக்கொண்டே வரவர கடைசியில் பூர்த்தியாய் அஞ்ஞானம் நீங்கின பிறகு பர மாத்மாவில் கலக்கின்றது. இதற்குப் பின்வரும் விஷயங் களை ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதையில் விரிவாய்க் காணலாம். ஆதலால், உங்கள் குடும்பத்தில் இறந்தவர்களைக் குறித்து வியசனம் உண் டானபோதெல்லாம் இந்நூலாசிரியர் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம்-2, சுலோகம் 11-முதல், 30 - வரையில் வாசித்தால் உங்கள் சோகந்தீர்ந்து மனம் சாந்தியடையும். ஆதலால்,

“ கட்டோடே கனத்தோடே வாழ்கின்றே மென்பீர்
கண்ணேடே கருத்தோடே கருத்தனைக் கருதீர்
பட்டோடே பணிவோடே திரிகின்றீர்
தெருவில் பசியோடே வந்தாரை பார்க்கவே நேரீர்
கொட்டோடே முழக்கோடே கோலங் காண்கின்றீர்
குறியோடே குணத்தோடே குறிப்பதைக் குறியீர்
எட்டுடன் ரெண்டும் சேர்த்தெண்ணவும் அறியீர்
எத்தொழிலை புரிகின்றீர் பித்துலகீரே.”

என்னும் திருவருட் பிரகாச வள்ளலார் வாக்கியரீதி யாய்; உலகத்திலுள்ள ஜனங்களாகிய நீங்களெல்லோரும், பந்து மித்திர களத்திராதிகளென்னும் கூட்டத்துடன் சேர்ந்து பெருங் கௌரவத்துடன் வாழ்கின்றோமென்றும் நினைக்கின்றீர்கள். ஓ ஸ்திரீகளே! பட்டு பீதாம்பர ஆடை களையும் வைரத்தினுல் செய்த உயர்ந்த ஆபரணங்களையும் அணியவேண்டு மென்னும் கருத்துட னிருக்கின்றீர்கள்.

இதுபோல் புருஷர்களாகிய நீங்களும், பட்டு பீதாம்பரங்கள் சரிகை வேஷ்டி முதலான ஆடைகளும், உத்ராக்ஷங்களுக்குத் தங்கக் கவசங்களும் அணிந்து தன் குடும்ப சவரக்ஷணைக்கு வேண்டிய விஷயங்களை மாத்திரம் செய்துகொண்டு, பசியுடன் வந்தவர்களை ஆதரிக்காமல் அநேக விதங்களான மேள வாத்தியங்களுடன் மிகவும் சந்தோஷமாய் ஊர்கோலம் வருகின்றீர்கள். இப்படிப்பட்ட அல்ப விஷயங்களான சந்தோஷத்தை அடைந்து, உங்களுக்கு முக்கியமான குறி எதுவோ அதைப் பார்க்கமாட்டீர்கள்: எட்டு மிரண்டு மென்று சொல்லும் 'அ' கார, 'உ' கார மென்னும் ரேசக பூரகங்களை அரியாமல் எத்தொழிலைச் செய்தாலும் என்ன பிரயோஜனம் அடையப்போகின்றீர்கள். தனக்குள் அந்தர்யாமியாயும் சாக்ஷி சொரூபனாயும் இருக்கும் பரமாத்ம சொரூபத்தை அறிய எல்லோருக்கும் ஞானக்கண் என்பதை ஈசுவரன் கொடுத்திருந்தும், பூர்வ † வினைப்பயனால் அதை அறிய மறந்திருக்கின்றீர்கள். அம்மறதியை நீக்க இந்த "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யமே" மிகவும் முக்கியமானதென்று தெரிந்துகொள்ளுங்கள்.

மனோலயத்தால் சகலமும் சித்தியடைதல்.

சஞ்சித பிராரப்த ஆகாம்ய கர்மங்கள்.

நாம் ஒவ்வொருவரும், அநேக ஜன்மங்களாய் அநுபவித்து வருகின்ற ஜனனமரண மென்னும் துக்க சமுத்திரத்திலிருந்து விடுபட்டு, நித்தியானந்த சுகத்தை

---

† வினைப்பயன் அநேக ஜன்மங்களாய்ச் செய்துகொண்டு வந்த சஞ்சிதமென்னும் மூட்டையே வினைப்பயன் என்று சொல்லப்படும்:

யடைய விரும்புகின்றோ மன்றோ ? அதற்கென்ன செய்ய வேண்டுமோ அதை யிதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள் !

ஒருகன்னிகை, பருவமடைந்து விவாகம் முடிந்தபின்பு தனது குடும்பத்திலுள்ள சகல காரியங்களையும் கவனித்து வருவதுடன், மாமன் மாமி மூத்தார் மைத்துனர் முதலானவர்களிடத்திலும் அன்பாய் இருந்து அவர்களை உபசரித்து வருகின்றனள். அங்ஙனம் உபசரித்து வந்தபோதிலும், தனது பிராண நாதனிடத்தில்மாத்திரம் அதிக விசுவாசத்தைப பாராட்டி மிகவும் அன்பாய் இருப்பாள். அன்றியும், அப் புநிதவதிக்குப் புத்திரப் பாக்கியம் கிடைத்தவுடன், அவள் முன்போல் குடும்பத்தில் அதிக கவலையின்றி, இரவும் பகலும் தனக்கு அறிதாய்க் கிடைத்த செல்வக் குழந்தையைச் சீராட்டி அன்பார்ந் தமுதூட்டித் தாலாட்டி வளர்த்து ஆனந்த மடைவாளன்றோ ? அதுபோல் நாம், அநேக ஜன்மங்களிற் செய்துவந்த புண்ணிய விசேஷத்தினால் பரிபக்வமடைந்து, நல்லுணர் வுதித்து நமது நிலையில்லாத தேகத்தையும் அதன் சம்பந்தமாக வினையும், பெண்டு பிள்ளை பண்டு பதார்த்த மாதியாயுள்ள போகத்தையும், நேற்றைக்கிருந்தார் இன்றைக்குக் காணோம் என்கிறபடி நீரிற் குமிழியைப்போன்ற நிலையில்லா வாழ்க்கையும் கவனித்து அந்தோ! இந்நாள் வரையில் என்ன செய்தோம் ! நமது வாழ்நா ளெல்லாம் திரவ்வியம் சம்பாதிப்பதில் வீழ் நாளாய்விட்டதே யென்று மரணத்திற்குப் பயந்து ஸாது சங்கத்திற் பயின்று நல்ல வழியாய்க் கடந்து சற்குருவின் திருவடியை ஆசிரயித்து அவரால் உபதேசிக்கப் பெற்றுள்ள அங்கிலே வழுவாமல் தியானித்து வரவேண்டும். எப்படியெனில், நாம் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கும்



ஸ்ரீ ஏகாம்பரநாதர், கடப்பை.
శ్రీ యేకాంబరేశ్వరుడు, కడప.
Sri Ekambaranath, Cuddapah.

நந்தி.
నంది.
Bull.

பலிபீடம்.
బలిపీఠము.
Altar.

போது முதலில் 'பலிபீட' மிருக்கின்றது. அது ☞ எதிரிலிருக்கும் படத்தில் காட்டப் பட்டிருக்கின்றது.

"துள்ளுமறியா மனது பலிகொடுத்தேன் கன்ம துஷ்ட தேவதைகளில்லை" என்பதுபோல், நம் மனத்திற் குடிகொண்டுள்ள காமக் குரோதாதி துஷ்டகுணங்களையும், அஹங்கார மமகாராதி சகல துஷ்ட மிருகங்களையும் அந்த பலிபீடத்தினிடம் பலிகொடுத்து பரிசுத்த மனதுடன் சந்நிதானத்தினுட் புகுந்து மூலஸ்தானத்திலுள்ள லிங்கத்தைத் தரிசனம்செய்யச் செல்லும்போது, லிங்கத்திற்கு நேராயிருக்கும் நந்தியைக் குறுக்கிட்டுச் செல்லாமல் நந்திக்கு வலது அல்லது இடது புறமாய் மூலஸ்தானம் சென்று, அந்த மூல விக்கிரகத்தை அடிமுதல் நுனி வரையில் நன்றாய் திருஷ்டித்துப் பார்த்து அந்த வுருவத்தை புருவமத்தியில் நிறுத்தி கண்களைமூடி உள் முகமாகவே மனக்கண்ணால் பார்த்து ஒரே தியானமாய்ச் சில நேரம் தியானித்து, பிறகு விபூதி பிரசாதம் பெற்று வெளிவரும்போது முன் எவ்வாறு சென்றோமோ அவ்வாறே வெளிவரவேண்டும். நந்தியைக் குறுக்கிட்டு வரலாகாது. ஏனென்றால், நந்தி ஈசுவரருக்கு நேராயிருந்து, தாம் மூக்கின் ரந்திரங்களின் வழியாய் உள்ளுக்கும் வெளிக்குமாய் இழுத்துக்கொண்டும் விட்டுக்கொண்டுமா யிருக்கும் யக்ஞோபவீதமென்னும் சுவாசத்தினால் (மூச்சினால்) ஈசுவரனை விசுருகின்றார். அதனால் நந்திக்கும் ஈசுவரருக்கும் குறுக்காய்ப்போகலாகாது. குறுக்கிட்டுப்போனால் தடையாகும். ஈசுவரன் மஹா யோகியாதலால், எப்பொழுதும் அக்கி ஜ்வாலையாகவே இருப்பார். ஆதலால் அவருக்கு சதா அபிஷேகமே பிரீதி யாதலால் ஈசுவரனுக்கு "அபிஷேகப் பிரியஃ" என்று சொல்லப்படும்: இதற்குத் திருஷ்டாந்தம் பூனா, பொம்பாய், முதலான இடங்களில் ஈசுவரர் ஆலயங்

களிலுள்ள லிங்கங்களின் சிரசின் மத்தியில், தென்னம் ஈர்க்கு அவ்வளவு கனத்தில் நீர்த்தாரை சதா காலமும் வீழ்ந்துக்கொண்டிருப்பதற்காக, வாழைப்பூவைப்போன்ற, ஒரு குடம் ஜலம் பிடிக்கும்படியான செம்புப் பாத்திரம் செய்து, அதை லிங்கத்திற்குமேல் உயரத் தூக்கிக்கட்டி வாழைப்பூ நுனியைப்போல் வைத்திருக்கும் செம்பின் நுனியிலிருக்கும் துவாரத்திலிருந்து இரவும் பகலுமாய் ஜலம் லிங்கத்தின் சிரசில் வீழ்ந்துக்கொண்டே இருக்கும் படிச் செய்து வைத்திருக்கின்றார்கள். சதாகாலமும் நீர்த் தாரை ஈசுவரர் சிரசின்மீது வீழ்ந்துக்கொண்டிருந்தால் உஷ்ணம் சாந்தமாகும் என்று காட்டுவதற்காக பூர்வீக பெரியோர்கள் லிங்கத்தின் சிரசில் சதாகாலமும் ஜலம் வீழ்ந்துக்கொண்டிருக்கும்படி செய்வித்துக் காட்டியிருக் கின்றார்கள். இதை நீங்கள் பூனா பொம்பாய் முதலான இடங்களிலுள்ள சிவாலயங்களில் பார்க்கலாம். ஆதலால் இனி சொல்லப்போகும் யோகாப்பியாசம் செய்து வரப் பட்டவர்களுக்கு விசேஷ உஷ்ணமுண்டாகும். அவ்வுஷ் ணத்தைத் தணிக்க ஸ்நானம் செய்ய சாந்தியும் இதில் சொல்லியிருக்கின்றோம். அதுபோல் செய்துவரவேண்டும். உஷ்ணத்திற்கு உஷ்ணமே கொடுத்தால் உஷ்ணம் சாந்தி யாகும். குளிர்ந்த ஜலம் உஷ்ணம் ஆதலால், ஈசுவரனுக்கு குளிர்ந்த ஜலத்தால் விசேஷமாய் அபிஷேகம் செய்து வருகின்றார்கள். இதனால் என்ன ஏற்படுகிறதென்றால், யோகியும் குளிர்ந்த ஜலத்தினால் ஸ்நானம் செய்துவர வேண்டும் என்பதேயாம். இதற்குக் கைவல்யம் பிரமாண மென்னவென்றால்,

இம்பரினஞ்சை நஞ்சாவிரும்பினை
விரும்பா லெய்யும்

அம்பினையம்பாற் பற்றுமழுக்கினை
யழுக்கான் மாய்ப்பர்
வம்பியன்மாயைதன்னை மாயையான்
மாய்ப்பது போல்.

என்றிருப்பதனால், உஷ்ணத்திற்கு உஷ்ணமே கொடுக்க வேண்டும் வெந்நீர் குளிர்ச்சி, குளிர்ந்தஜலம் உஷ்ணம். ஆதலால், யோகி குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்ய வேண்டும். என்பதேயாம்;

இப்படிப்பட்ட யோகியை, தேங்காயின்மீது பிடித்துக்கொண்டிருக்கும் பட்டையைப்போல் பிடித்துக்கொண்டிருந்த, சகல பந்தபாசங்களென்னும் பிடிப்புகள் யாவும் தனக்குத்தானகவே யோகபலத்தினல், அந்த யோகியை விட்டு நீங்கும். ஆதலால்,

மேற்சொல்லிய குடும்பத்திலுள்ள ஸ்திரீயைப்போல் ஈசுவரன்மீது அதிகப் பிரீதியைப் பாராட்டி அன்பே வடிவாயிருந்து ஈசுவரனை தியானித்து வரவேண்டும். அங்ஙனம் தைலதாரையைப்போல் இடைவிடாமல் தியானித்துக் கொண்டு வருகின்றகாலத்தில் அவ் வுபாசன மூர்த்தியின் திருவருளால் ஆனந்தமே வடிவமாகிய ஞானம் உதயமாகின்றது. அங்ஙனம் கிடைப்பதற்கரிய ஞான சூரியன் உதயமானவுடன், அஃதாவது பல்லாயிரங்கோடி அண்டங்களிலும் பரிபூரணமாய் சுயம் பிரகாசமாயுள்ள சுத்த சைதன்ய பரமாத்மாவாகிய ஆத்ம சொரூபத்தைத் தரிசித்தவுடனே, ஆயிரமாயிரமாகக் கூடியுள்ள காகத்தின் பெருங்கூட்டத்தில் ஒரு கல்லெறிந்த மாத்திரத்தில் அக்காகமனைத்தும் அந்தக்ஷணமே ஒடி எப்படிக்காணமல் மறைந்துவிடுமோ அதுபோல், அனந்த ஜன்மங்களாக நம்மைப் பற்றியுள்ள அளவில்லாத பாப கருமக் கூட்டங்கள் யாவும் அஞ்ஞானமென்னும் இருளைக் கடந்து ஒருங்கே தொலைந்து

விடுகின்றன. அவ்வித அப்பியாசத்திலுள்ள பெரியோர்கள், சகல ஜீவகோடிகளிடத்திலும் அன்பே வடிவா யிருப்பார்கள். அவர்கள், ஏழை தநிகன் நல்லவன் தீயவன் புண்யவான் பாபி குலத்தி லுயர்ந்தவன் தாழ்ந்தவன் வித்துவான் மூடன் என்கிற எவ்வித பேதமு மில்லாமல் யாவரிடத்திலும் சமரசபாவனை யுடையவராகி சாந்தமுங் கருணையுந் ததும்பப்பெற்று ஈசுவரனுக் கொப்பாவார்கள்.

க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மின் த்ருஷ்டே பராவரே.
[முண்டகோபநிஷத்.]

இதற்குத் திருமந்திரமும் கீதையும் பிரமாணம்.

அன்பு சிவமிரண்டென்பரறிவிலார்
அன்பே சிவமாவதாருமறிகிலார்
அன்பே சிவமாவதாருமறிந்தபின்
அன்பே சிவமாயமர்ந்திருப்பாரே.

கீதை. அ—13. ஸமம் பஶ்யந் ஹி ஸர்வத்ர ஸமவஸ்திதமீஶ்வரம்
ந ஹிநஸ்த்யாத்மநாத்மாநம் ததோ யாதி பராங்கதிம் [சுலோ—29.]

என்றிருக்கின்றது. அதாவது, ஸமஸ்த ஜீவகோடிகளிடத்திலும் சமமாய் நிறைந்துள்ள ஆத்ம சொரூபத்தைத் தனது ஆத்ம சொரூபமாக அறிந்தவன் எவனோ, அவன் எந்த ஜீவனையும் இம்சிக்கமாட்டான். அப்படிப்பட்டவனே எனது நிஜ சொரூபத்தை யடைவான் என்பதேயாம். இதற்கு உபதேசகாண்டம் பிரமாணம்,

உரைக்குமற் றுணர்வுக்கு மறிய வொண்கிலாப்
பரப்பிர மத்தினிற் றோன்றிப் பல்லுயிர்க்
கிரக்கமுற் றளித்திட வெய்து மிப்பொரு
ணிரப்புறு முயிர்த்தொகை நிறைந்து நிற்குமால்.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும் ஜனன மரண துக்கத்திலிருந்து விடுபட்டு நற்கதி யடையவேண்டுமாயின், நாம் பரிசுத்த மனமுடையவர்களாயிருந்து சகல ஜீவகோடிகளை

யும் சமரசமாய் நினைத்து உள்ளன்புடன் கடவுளைத் தியானிக்கவேண்டும். அங்ஙனம் குவிந்த மனதுடன் அப்பியசித்துக்கொண்டு வருவோமாயின் அக்கடவுளின் திருவருளால் வாக்கு சுத்தியும் ஞானசக்தியும் எல்லாக் காரிய சித்தியும் உண்டாகும். (ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அ-3. சுலோ-9-பார்க்க) எங்ஙனமெனில்:—

மகம்மதிய மதஸ்தர்கள் பரிசுத்தமான (வெண்மையான) ஆடைகளை அணிந்து தங்கள் தேவாலயமாகிய மஜீதினுட் புகுந்து கை கால்கள் முகம் வாய் மூக்கு காது முதலானவைகளைக் கழுவி சுத்திசெய்து எவ்வகை வீணான எண்ணங்களுமில்லாமல் பரிசுத்தமான மனதுடன் 'நிமாஸ்' என்னும் நிஷ்டைசெய்து முடித்து அவர்கள் வெளியில் வரும்பொழுது அம்மஜீதின் வாசற்படி இருபக்கங்களிலும் வரிசை வரிசையாக வைத்துக்கொண்டிருக்கும் தோஷந் தாங்கிய குழந்தைகளின் முகத்தில் ஊதுகின்றனர். அதனால், சகல தோஷங்களும் நிவர்த்தி யாகின்றன வென்பது உலகமறிந்த விஷயமன்றோ? இவர்கள் சிசுக்களின் முகத்தில் ஊதுவதனால் ஸகல தோஷங்களும் நீங்குவதற்குக் காரணம் இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

மகம்மது மதஸ்தர்கள் விக்கிரக ஆராதனையைச் செய்வதில்லை. இவர்கள் வெட்டவெளியா இருக்கும் பரப் பிரம்மத்தைத் துதி செய்யப்பட்டவர்கள்.

மகம்மதியர்கள் 'மஜீதினுட்' புகுந்து கைகள், கால்கள், முகம் முதலானவைகளை மிகவும் பரிசுத்தமாய்க் கழுவி நிமாஸ் செய்யுமிடம் சென்று, அவர்கள் மூன்றாம் பிரைக் குறி பார்ப்பதனால் மூன்றாம்பிரைக் காணப்படுவது மேற்கு, ஆதலால், அவர்கள் மேற்குப் புரமாய்த் திரும்பி இரண்டு

கைகளின் ஆள்காட்டும் விரல்களை இரண்டு காதுக்குள் வைத்து கண்களை மூடி,

லா——ஆ, இலா——ஹா, இல்லல்——லா, மஹம்மது ரஜூலில்——லா,

என்று விசேஷ நீளமாய் ஆ—ஆ ஆ ஆ ஆவென்று தீர்க்கமாய்ச் சொல்லிக்கொண்டே வந்து கடைசியில் மனதை வெட்டவெளியாகிய பரமாத்ம சொரூபத்தில் ஐக்யம் செய்து பரமாத்மாவைப்போல் வெட்டவெளியாய்விடுவார்கள். இவ்வாறு வெட்டவெளியாயிருந்து மிகவும் பரிசுத்தமான மனதுடன் வெளிவரும் சமயத்தில், தோஷம் தாங்கிய குழந்தைகளின் முகத்தில் ஊதுவதனால் பரிசுத்தமான காற்று குழந்தைகளின் முகத்தில் பட்டவுடன் சகல தோஷங்களும் தீர்ந்துவிடுகின்றன. முகத்தில் ஊதி வெளி வந்தவுடன் அவர்களின் மனமானது ஊர் வியவகாரங்களில் ஓடிக் கெட்டலைந்துக் கொண்டிருக்கும். சமயங்களில் குழந்தைகளின் முகத்தில் ஊதினால், தோஷ நிவாரணை யாகமாட்டா.

இதனால் என்ன விளங்குகின்றதென்றால் அரை மணி நேரம் பரிசுத்த மனதுடன் ஜபத்தி லிருந்தவர்கட்கே இத்தகைய சக்தி யுண்டாகின்றதென்றால் சதாகாலமும் ஜபத்திலிருக்கும் பெரியோர்களிடத்தே அபாரமான சக்தி பிரகாசித்துக்கொண்டிருக்கு மென்பதற்கு ஐயமுண்டோ? இவ்வப்பியாசம் பூர்வ சஞ்சித கர்மங்கள் ஒழிந்தவர்களுக்கே எளிதில் வசமாகும். அக்கர்மங்கள் சஞ்சிதம், பிராரப்தம், ஆகாம்யம் என மூன்று வகையாகும்.

இனையபல பிறவிகளி னிறந்துபிறந் தருளா
   லிருவினைகள் புரிந்தருந்து மிதுசகல மகலா
முனமருவு மிருபயனு மொருகாலத் தருந்த
   முந்துறுக ருந்துபய னந்தமுற வந்த

வினையுமெதிர் வினையுமுடி வினையுதவு பயனு
னேராக நேராதன் மேவுங் கான்முற்
சினமருவு திரோதாயி கருணையாகித்
திருந்தியசத் திநிபாதந் திகழு மன்றே.

1. சஞ்சிதம்:—பிரமதேவன் ஜீவகோடிகளைச் சிருஷ்டிசெய்தநாள்முதல் நாளது வரையில் ஜனங்கள் அநேக கோடி ஜன்மங்களை எடுத்து ஒவ்வொரு ஜன்மத்திலும் செய்துகொண்டுவந்த புண்ணிய பாபங்களெல்லாம் மூட்டைமூட்டைகளாகப் பருவதம்போல் ஒருங்கு சேர்ந்து வந்த கர்மங்களே சஞ்சிதமென்று சொல்லப்படும். இந்த சஞ்சிதமென்னும் வினைப்பயனுல் பிராரப்தகர்மம் வந்து துக்கமனுபவிக்கும்போது கடவுளைத் தூஷிக்கின்றுர்கள்.

இந்தச்சீவனுல் வருமறுபகை
யெலாமிவன் செயலென்னுமல்
அந்தத்தேவனுல் வருமென்ற
மூடர்களதோ கெதியடைவார்கள்
இந்தச்சீவனுல் வருமறுபகை
யெலாமிவன் செயலல்லாமல்
அந்தத்தேவனு லன்றெனும்
விவேகிகள்மல வீடடைவாரே.

இந்த பிராரப்த கர்மத்தை விவரித்துச் சொல்லுகின்றேும் கேளுங்கள்:—

2. பிராரப்தம்:—மேற்படி சஞ்சிதத்திலிருந்து, அவனவன் செய்த கர்மானுசாரமாய்ப் புண்ணிய பாபங்களைப் பங்கிட்டுக் கொண்டுவந்து இந்த ஜன்மத்தில் அனுபவித்துக்கொண்டிருப்பது பிராரப்தமாகும். இந்தப் பிராரப்த கர்மங்களை விவரித்துச் சொல்லுகின்றேும் கேளுங்கள். ஒருவன் அநேக ஜன்மங்களாய்ச் செய்துகொண்டுவந்த புண்ணியபாப சர்மத்தில், 100-மூட்டை புண்ணியமும், 5-

மூட்டைப் பாபமும் இருப்பதாய் நினைத்துக் கொள்ளுங்கள். அவனுக்குப் பிரமதேவன் 80-வயது, ஆயுள் ஏற்படுத்தி ஜன்மத்தை உண்டாக்கினதாய் எண்ணுங்கள். இவன் புண்ணியம் விசேஷமாய்ச் செய்திருப்பதனால் அந்த ஜன்மத்திற்குத் தக்கபடி, அனுபவிப்பதற்காக 10-மூட்டைப் புண்ணியமும்,பாபம் குறைவாகச் செய்திருப்பதனால் பாபத்தில் அரை மூட்டையும் பங்கிட்டு அனுப்பி, மிகுதியாகிய 90-மூட்டைப் புண்ணிய கர்மமும், $4\frac{1}{2}$-மூட்டைப் பாபகர்மமும் இருப்பில் இருப்பதாய் எண்ணவேண்டும். இவன் புண்ணியம் அதிகமாகக் கொண்டுவந்தவனுதலால் ராஜன் வீட்டிலாகிலும், அல்லது பெறுத்த செல்வ முடையவர்களின் வீட்டிலாகிலும் பிறந்து இம்மைச் சுகத்தை அதிகமாயும் துக்கம் சொற்பமாயும் அனுபவித்துக்கொண்டு வருவான். இந்த துக்கம் எப்படிப்பட்டதென்ருல், சந்தானமில்லாமற் போயிற்றே என்ருகிலும், ஒருவேளை சந்தானமிருந்தால் துன்மார்க்கனுய் வந்து பிறந்தானே என்ருகிலும், மனையாள் தன் இஷ்டம்போல் நடக்கவில்லையே என்ருகிலும், தனத்தைக் கள்ளர்கள் கொண்டுபோகாவண்ணம் காப்பாற்றுவதிலாயினும் இப்படியே ஏதுவோ ஓர் வியசனம் உண்டாகிக்கொண்டே இருக்கும்.

மற்றொருவனுக்கு, 100-மூட்டைப் பாபமும், 5-மூட்டை புண்ணியமும் இருப்பதாய் நினைத்துக் கொள்ளுங்கள். அவனுக்கு 80-வருஷங்கள் ஆயுர்ப்பாகம் உண்டென்று வைத்துக் கொள்ளுங்கள். அவன் பாபம் அதிகமாய்ச் செய்திருப்பதால் பாபத்தில் 10-மூட்டையும், புண்ணியம் அற்பமாய்ச் செய்திருப்பதால் புண்ணியத்தில் அரை மூட்டையும் அனுபவிக்கும்படியாய்ச் செய்து அனுப்பப்பட்டான். அதனுல் அவன் கூலிவேலை செய்யப்பட்டவர்களின் வீட்டிலாயினும் அல்லது பிக்ஷை எடுக்கப்

பட்டவர்களின் வீட்டிலாயினும் ஜன்மித்து எப்போதும் கஷ்ட தசையை அனுபவிப்பானென்று அறியவேண்டும். இவனுக்கு நித்திரைவேளை தவிர மற்றக் காலங்களிலெல்லாம் துக்கமே அதிகமாயிருக்கும். 80-வருஷத்திற்கு, அரை மூட்டை புண்ணியம் இருப்பதால் எப்போதாகிலும் ஒவ்வொரு சமயங்களில் அற்ப சந்தோஷத்தை உண்டாக்கும் என்று அறியவேண்டும். இதுபோல் ஒவ்வொருவருடைய புண்ணிய பாபங்களுக்குத் தகுந்த சரீரம் மாறி மாறி வந்துகொண்டே இருக்கும்.

3. ஆகாம்யம்:—இப்போ தெடுத்திருக்கும் தேகத்தினால் மரணபரியந்தம் செய்துவரும் புண்ணிய பாபங்களின் கர்மமே ஆகாம்யமென்று சொல்லப்படும். மரணமடைந்தவுடன் இந்த ஆகாம்யமென்னும் கர்மங்களும், முன் சஞ்சிதத்தில் குறைவாய் நின்றிருந்த, 90-மூட்டை புண்ணியத்துடன் இந்த ஜன்மத்தில் செய்த புண்ணியம் போய்ச் சேர்ந்து விருத்தியாகும். இதுபோல் முன் தங்கியிருக்கும் நாலரை மூட்டை பாபத்துடன் இந்த ஜன்மத்தில் செய்த பாபமும் போய்ச்சேர்ந்து விருத்தியாகும். இவ்விதமாய் ஜன்மாந்தரங்கள் தோறும் புண்ணிய பாபங்கள் விருத்தியாய்ப் வந்துகொண்டே இருப்பதனால் ஜன்மங்கள் அநேகமாய் பெருகிக்கொண்டே வருகின்றன. என்றால், ஆகாம்யத்தினால் சஞ்சிதம் உண்டாய் அதிலிருந்து பிராரப்தம் வருகின்றன. எப்படியெனில், பயிரிடுவோன் நிலத்தை உழுது நாற்றை நட்டு தண்ணீரிறைத்துக் களை பிடுங்கி பயிரைப் பாதுகாத்து, தான்னியத்தைக் காலத்தில் அறுவடை செய்து மொத்தமாய்க் களஞ்சியத்தில் சேகரித்து வைக்கின்றான். நிலத்தில் தான்னியத்தை அருக்கும் வரையில் செய்யும் வேலைகளை ஆகாம்யத்திற்கு ஒப்பிடலாம்.

தான்னியத்தைச் சேகரித்து மொத்தமாய்க் கட்டி வைத்தலே சஞ்சிதத்திற்கு ஒப்பிடலாம். கட்டிவைத்த தான்னியத்திலிருந்து எடுத்துப் புசிப்பதே பிராரப்தத்திற்கு ஒப்பிடலாம். இதுபோல் கர்மத்திற்குக் காரணம் மனோ சங்கற்பம். ஒருவன் யாதேனும் ஒரு பலனை அடைவதற்கு மனதில் சங்கற்பித்துக் கொள்வதே ஆகாம்யம். இப்படிப் பட்ட சங்கற்பங்கள் அதிகமாய்ச் சேர்ந்த மொத்தமே சஞ்சிதம். சங்கற்பித்துக்கொண்டவண்ணம் பலனை அனுபவிப்பதே பிராரப்தம். ஆதலால், உலகத்தில் ஜனங்கள் அனுபவிக்கும் சுக துக்கங்களுக்குக் காரணம் அவரவர்கள் பூர்வ ஜன்மங்களிற் செய்த கர்மங்களேயாம். அதாவது, ஆசைகொண்டு எண்ணிய மனோசங்கல்பங்களே கர்மமாகிக் காரியத்திற்கு வந்து அவரவர்கள் கோரியதை அனுபவிக்கின்றார்கள். அப்படியிருக்க இதை நான் செய்தேன், இது என்னால் வந்தது என்று ஒவ்வொரு புருஷனும் அஹங்காரம் கொள்ளுகின்றான். அது அவனால் வந்ததல்ல. அவன் முன் ஜன்மத்தில் வேண்டுமென்று நினைத்த வஸ்துக்கள் அவனுக்கு இந்த ஜன்மத்தில் வரவேண்டுமென்று பிராரப்தகர்மம் இருந்தபடியால் அது அவனுக்கு உண்டாயிற்றே யொழிய அவன் சுபாவ குணத்தினால் உண்டானதல்ல. இதுபோல் மற்றொருவன் வேறு வஸ்துக்களைக் கோருகின்றான். அது அவனுக்குப் பிராரப்தத்தில் இல்லாமையால் கிடைப்பதில்லை. இதற்குத் திருஷ்டாந்தம்:—

சிலர் புத்திர சந்தானமில்லையென்று அநேக புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்தும், காசி ராமேஸ்வரம் யாத்திரைகள் செய்தும் நாகப்பிரதிஷ்டை செய்தும், அரசமரப் பிரதக்ஷணம் வந்தும் அநேக தானதர்மங்களைச் செய்தும் புத்திர சந்தானமில்லாமல் இருக்கின்றார்கள். அவ்வாறு உண்டாகாததற்குக் காரணம் என்னவென்றால்,

புத்திர சந்தானம் அவர்களுக்குப் பிராரப்தத்தில் இல்லாததனால் அவர்கள் என்ன செய்தபோதிலும் புத்திரன் உண்டாவதில்லை. ஆனால், இந்த ஜன்மத்தில் புத்திர சந்தானத்திற்காக மிகவும் கஷ்டப்படுவதனால் இதன் பலனை மறு ஜன்மத்தில் தப்பாமல் அடைவார்கள். ஆனால், சிலர் காசிக்குச் சென்று வருவதனால் புத்திர சந்தானமடைகின்றார்களே! அஃது எப்படி என்றால், அதற்குக் காரணம் சொல்லுகின்றோம் கேளுங்கள். ஒருவன் தான் ஏதோ ஒரு வயதில் காசிக்குப் போகவேண்டுமென்றும், போன பிறகே அவனுக்குப் புத்திர சந்தானம் உண்டாகவேண்டுமென்றும் அந்தப் புத்திரன் இன்னவீட்டில் இன்னார்க் குமாரத்தியை இன்னவருஷத்தில் விவாகம்செய்துகொள்ள வேண்டுமென்றும், அவள் இத்தனை புத்திர புத்திரிகளைப் பெறவேண்டுமென்றும் பிராரப்தமிருப்பதனாலேயே, அவ்வாறு நடக்க நேரிட்டதே யொழிய, புருஷன் செய்யும் தீர்த்த யாத்திராதிகளினால் உண்டானதல்ல. ஆதலால், பஞ்சப்பொதியில் நெருப்புப்பொறி பட்டவுடன் அது எப்படி பஸ்மமாகின்றதோ, அதுபோல் இந்த சஞ்சித கர்மமானது ஞானமென்னும் நெருப்பினால் எப்பொழுது சாம்பலாய் எரிக்கப்படுகின்றதோ அப்பொழுதே ஒருவன் முக்தனாகின்றான்.

"ப்ரஜ்ஞானகன ஏவைதேப்யோ பூதேப்ய
ஸ்ஸமுத்தாய தாந்யேவாது விநஶ்யதி."

என்னும் சுருதிரீதியாய் அநேக ஜன்மங்களில் செய்து வந்த ஆகாம்யத்தினால் உண்டாகிய சஞ்சித கர்மங்கள் நசித்தவுடனே தேஹமும் ஜீவோபாதியும் (சங்கல்பரூபமாயிருக்கும் மனம்) நசித்து,'ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவ பவதி' என்னும் சுருதிரீதியாய் கடாகாசம் மஹாகாசத்திற் கலந்து ஏகமாவதுபோல், அகண்ட சச்சிதானந்த நித்திய நிர்மல

பரிபூரணமாகிய பரப் பிரம்மத்தில் ஐக்கியமாய் நித்திய முக்தனுகின்ருன். யாவரா யிருந்தபோதிலும் பிராரப்த கர்மங்களை அனுபவித்தே தீரவேண்டும். புண்ணிய பாபங்கள் செய்வதனுல் சரீரமெடுத்து அந்த புண்ணிய பாபங்களை அனுபவித்தே தீரவேண்டும். எதையும் ஈஸ்வரார்ப்பணமாய்ச் செய்தால் புண்ணிய பாபங்கள் சஞ்சிதத்திற்போய்ச் சேராமல் ஈஸ்வரனைச் சேர்ந்தபோதிலும் பூர்வ சஞ்சித கர்மங்களைப் பஸ்மீகரப்படுத்த முன் சொல்லியதுபோல் எந்த எண்ணங்களுமில்லாமல் மனதைப் பரிசுத்தமாய் வைத்து ஒரே சமாதியி லிருக்கவேண்டும். அதாவது, அப்போதைக்கப்போது மத்தியில் இடைவிடாமல் அநேக காலம் தன்னை மறந்திருப்பதே சமாதி எனப்படும். மேலும்,

"மநஸ்ஸங்கல்பநம் த்யக்த்வா ஸம்க்ஷிப்யாத்மநி புத்திமாந்
தாரயித்வா ததாத்மாநம் தாரணு பரிகீர்திதா."

புத்திமான்கள் சகல விஷயங்களையும் சங்கற்பிக்கும் மனதை விஷயங்களிலிருந்து நிவர்த்திசெய்து, பரமாத்ம சொரூபத்தில் சங்கற்பிக்கவேண்டுமென்று நிச்சயித்துப் பரமாத்மாவிலேயே மனதை ஸதாகாலமும் லயிக்கச் செய்ய வேண்டும். இந்தச் சமாதிநிலையே தியானமென்று கீதையில் சொல்லப்பட் டிருக்கின்றது. ஆதலால், இதுவரையிற் சொல்லிவந்ததையும் இனிச் சொல்லப்போகும் ஆத்மோஜ்ஜீவனேபாயத்தையும் வாசிக்கப்பட்ட யாவத்திராளும்.

கீதை. அ-4-யோகஸந்யஸ்த கர்மாணம் ஜ்ஞாநஸஞ்சிந்நஸம்ஸயம்
ஆத்மவந்தம் ந கர்மாணி நிபத்நந்தி தநஞ்சய! சு-41.

பலாபேக்ஷையை விட்டு ஈஸ்வரார்ப்பண புத்தியாய்க் கர்மம்செய்கிற நிஷ்க்காம கர்மயோகி, குரு உபதேசித்த பிரம்ம ஞானத்தினுல் சகல சம்சயங்களையும் போக்கடித்துக்கொண்டு, பிரம்ம நிஷ்டையில் இருப்பவனைக் கர்மங்கள் கட்டுப் படுத்தமாட்டா. ஆதலால், முன் சொல்லியது

போல் எதையும் ஈஸ்வரார்ப்பணமாய்ச் செய்துவந்தால் அதனால் சித்தசுத்தியும், சித்தசுத்தியினால் ஞானமும், ஞானத்தினால் மோக்ஷமும் அடையலாம். இந்திரியங்களை அடக்கி மனதை லயப்படுத்துவதற்காக ஸ்ரீ பகவத்கீதை முதல் 6-அத்யாயங்களில் விசேஷார்த்தங்களுடன் தனியே எழுதப்பட்டிருக்கின்றது. இந்நூலையும் மேற்படி கீதையை யும் வாசித்து ஏகாந்த ஸ்தலத்தில் உட்கார்ந்து மனதை வெளியில் ஓடவிடாமல் பரமாத்ம சொரூபத்தில் லயிக்கச் செய்ய எளிதில் அறிந்து அப்பியசித்து நற்கதி அடைய வேண்டுமென்பதே இந்நூலின் கருத்தாகும்.

ஐய்யா! அமாவாஸ்யை இருளை கறுமேகங்கள் மூடிக் கொண்டால், இருள் எப்படி அதிகரிக்கின்றதோ அது போல், உலகத்திலுள்ள ஜனங்களுக்கெல்லாம் ஆகாம்ய கர்மத்தினால் அஞ்ஞானமயமாகிய மாயை யென்னும் இருள், ஜன்மாந்திரங்கள்தோறும் அதிகரித்து விருத்தி யாய்க் கொண்டே வருகின்றன; அமாவாஸ்யை இருளில் வழி நடக்கும் புருஷனுக்கு எதிரில் மற்றொரு புருஷன் எதிர்ப்பட்டால் அவன், பிராமணனென்றும் சூத்திரனென் றும் சண்டாளனென்றும் தெரியாவிட்டாலும் எவனோ ஒரு புருஷன் எதிரில் வருகின்றானென்றும், நாற்கால் மிருகங்கள் எதிர்ப்பட்டால் அது ரிஷபமென்றும் பசு வென்றும் எருமையென்றும் கிடாவென்றும் தெரியாமற் போனபோதிலும் ஏதோ ஓர் நாற்கால் மிருகம் வருகின்ற தென்று தெரியவரும். இருள் இன்னும் அதிகமாய் மூடிக் கொண்டபோது வழிநடந்தால், முன் கண்டவைகளும் தெரியாமல் ஒருவரோடொருவர் இடிபடுவது எல்லோருக் கும் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமா யிருக்கின்றன. இது போல் அஞ்ஞானம், ஜன்மாந்தரங்கள்தோறும் கர்மத்தை அதிகப்படுத்திக்கொண்டே வந்து கடைசியில் முன் சொல்

லிய அமாவாஸ்யை யிருளைப்போல் மாயை என்பது, புருஷனை மூடிக்கொண்டு ஆத்ம சொரூபத்தை பூர்த்தியாய்க் காணப்படாமல் செய்விக்கும். இருளுடன்கூட மேகங்களும் மூடிக்கொள்வதனால் அந்த சமயத்தில், இவன் இன்ன புருஷனென்றும் இன்ன மிருகமென்றும் அறியக்கூடாமையாயிருக்கும்; சூர்யோதயமாய் இருள் நீங்கியவுடன் இரவு கண்டவைகளின் நிஜ ஸ்திதியைக் கண்டறிவது போல், புருஷனுக்கு ஆகாம்யகர்மத்தினால் அதிகரித்துக் கொண்டேவரும் அஞ்ஞானம் ஞானத்தினால் நசித்தவுடனே ஆத்மதத்வம் இப்படிப்பட்டதென்று தெரியவரும். அமாவாஸ்யை இருட்டுக் கறுக்கலில் வழிநடக்கும்போது வழிதெரியாமலிருக்கும் சமயத்தில் மின்னல் மின்னியவுடன் அதன் வெளிச்சத்தினால் சிலதூரம் சென்று, மறுபடியும் வழி தெரியாமலிருக்கும்போது மறுபடியும் மின்னல் மின்னியபோது, அதன் வெளிச்சத்தைக்கண்டு வழிநடக்கின்றோம். இதற்கு சிவப்பிரகாச மூலம் பிரமாணமென்னவென்றால்,

இருணனி யிரவி தான்வந்
 திரித்தலு மிரவி லெண்ணும்
பொருணிலை கண்டு மாந்தர்
 பொருந்திடு மாறு போல
மருணிலை யெங்கு நீங்க மகிழ்ந்
 துயிர் தன்னுண் மன்னும்
அருளையு மொழிய ஞாலத்
 தறிந்தவா றறியு மன்றே.

அறிந்திடு மனுதி வாயி
 லானவை யவன்ற னாலே
அறிந்திடு மென்று மொன்று
 மறிந்திடா வவைபோலியாவும்

அறிந்திடு மறியுந் தன்மை
யறிந்திடா கன்மத் தொன்மை
அறிந்தவை நுகரு மாறு
மருளுவ னமலன் றானே.

இதுபோல், புருஷர்களை மூடிக்கொண்டிருக்கும் அஞ்ஞானமயமாகிய மாயையென்னும் இருளை நீக்கி வழிகாட்ட, இந்த "ஜீவப் பிரம்மைக்கிய வேதாந்த ரஹஸ்ய"மே மிகவும் முக்கியமானதா யிருக்கின்றது. ஆத்மஞானம் ஆத்ம விசாரணையினால் தெரிந்துக் கொள்ளவேண்டுமே யொழிய மற்றவைகளால் தெரிந்துக்கொள்ளத் தக்கதல்ல, ஸ்நானம் சந்தியாவந்தனம் ஜபதபங்கள் தேவதாபூஜை உபவாசங்கள் தீர்த்த ஸ்நானம் க்ஷேத்திர தரிசனம் முதலானவைகளெல்லாம் கர்மங்களென்று சொல்லப்படும். இந்த கர்மங்களையெல்லாம் நாம் பிரதிதினம் அனுஷ்டித்துக்கொண்டு வருகின்றோமே யொழிய அவைகளினால் இதுவரையில் சிறிதேனும் ஆத்ம சொரூபம் தெரியவந்ததில்லை. இனி இந்த ஜீவப் பிரம்மைக்கியத்தை வாசித்தால் தம்மில் இருக்கும் ஆத்ம சொரூபத்தைத் தெரிந்துகொள்ளலாம். இந்த ஆத்ம சொரூபத்தில் விசேஷமாய்க் களிம்பு (அழுக்கு) ஏறியிருப்பதனால், ஸ்திரீ புருஷர்கள் தம்மில் இருக்கும் ஆத்ம சொரூபத்தை அறியாம லிருக்கின்றார்கள். இவ்வாத்ம சொரூபத்திற்கு, ஆதியில் களிம்பு எவ்வாறு பற்றிற்றோ, அதை இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

களிம்பு தோய்ந்தசெம் பெனவுனை மருவுங்
கருமை கூர்மலங் கண்டது கலக்கும்
பளிங்கு போன்றதுன் றன்மையம் மலத்தின்
பற்றி னுடல் பலவெடுத் துழன்றாய்
வளங்கு லாம்புவ னந்தொறுஞ் செயுமுன்
வல்வி னைப்பயன் வருமுறை நெறியே

யளந்து நாந்தர நுகர்ந்துமே னுகர்வு
மாக்கி யேதிரிந் தனைமன வழுக்கால்.

மேற்சொல்லிய பாட்டின் கருத்தை இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

ஓர் செம்புக்குடத்தில் அநேக வருஷங்களாய் எண்ணை விட்டுக்கொண்டும் எடுத்துக்கொண்டும் வருவார்களாகில் சிறுகச்சிறுக நாளாவட்டத்தில் அச்செம்புக்குடம் முழுமையும் காலங்குலத்திற்குமேல் பச்சை நிறத்துடன் களிம்பு யேறி செம்புக்குடத்தை காணவிடாமல் களிம்பு மூடிக் கொள்ளும். பிறகு, அக்குடத்தை ஒருவனுக்குக் காட்டி இது, என்ன குடமென்று அவனைக் கேட்டால் அது இன்ன குடமென்று சொல்ல அவனுக்குச் சாத்தியமாகமாட்டா: பிறகு, அவன் செங்கல்பொடி, புளி முதலானவைகளால் துலக்கி அக்களிம்புகளை யெல்லாம் போக்கி பிறகு இது செம்புகுடமென்று சொல்லுவான். அதுபோல், நமக்குள் ளே களிம்பில்லாமல் பளிங்குபோல் இருக்கும் ஆத்ம சொரூபத்தில் களிம்புயேறிய ரகஸ்யம் இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

ஆதியில் பிரமதேவர் ஜீவர்களை சிருஷ்டி செய்யும் போது, பளிங்குபோல் யிருக்கும் ஆத்மாவை ஜீவர்களுக்கு சாக்ஷிபூதனுயிருக்க, ஜீவராசிகளின் இருதயகமலத்தில் சேர்ந்து, அந்த ஆத்ம சம்பந்தத்தால் எல்லா ஜீவராசிகளையும் சிருஷ்டிசெய்து, அவர்கள் அனுபவிப்பதற்காக பார்யாள் புத்திரர்கள் புத்திரிகைகளும், பொன் வெள்ளி தனமும் வாகனங்கள் பூமி தோட்டம் துரவுகள் முதலாகிய போக போக்கியங்களை யெல்லாம் முதல் ஜன்மத்தில் கொடுத்தார்:—

ஸ்திரீ புருஷர்களுக்கு, ஆதியில் எடுத்த முதல் ஜன்மத்திலேயே மேற்சொல்லியவைகளின் மீதெல்லாம் ஆசையுண்டாய், நல்வினை தீவினைகளை (புண்ணிய பாபங்களை)ச்

செய்து கடைசியில் மரணமடையும்போது தாம் ஆசைப்பட்டவைகளை நினைத்துக்கொண்டே பிராணனை விட்டபடியால், ஆசைப்பட்டவைகளை அனுபவிக்க மறுபடியும் அந்தந்த புண்ய பாபங்களுக்குத் தக்கபடி உயர்வு தாழ்வாயிருக்கும் அந்தந்த வீட்டில்போய்ப் பிறக்கவேண்டியதாய் நேரிட்டது. அப்போது இவ்வாசைகள் யாவும், தனக்குளே சாக்ஷிமாத்ரனாய் பளிங்குபோலிருக்கும் ஆத்ம சன்னிதானத்தை, மேற்சொல்லிய ஆசையென்னும் களிம்பு (அழுக்கு) புகை சூழ்வதுபோல் முதல் ஜன்மத்தில் பற்றியது: அவ்வாசைகளை அனுபவிக்க, புருஷன் மறுபடியும் இரண்டாவது ஜனனம் எடுக்கவேண்டியதாய் நேரிட்டது. இரண்டாம் ஜனனம் எடுத்தபோது, மறுபடியும் முன்போல் இரண்டாம் ஜன்மத்தில் வேறாய்வந்த பார்யாள் புத்திரர்கள் புத்திரிகைகள் தனம் வீடு தோட்டம் துரவுகள் முதலானவைகளின்மீது ஆசைகள் முன் ஜன்மத்தைவிட அதிகமாய், அவைகளை அனுபவிக்க மறுபடியும் மூன்றாம் ஜனனம் எடுக்கின்றான். இவ்வாறே பிரதி ஜன்மங்களிலும் ஆசை அதிகமாய், மேற்சொல்லிய செம்பு குடத்தின்மேல் சிறுகச்சிறுக யேறிய பச்சைநிறமுடைய பாச்சையைப் போன்ற களிம்பு புருஷனுக்கு, அநேக கோடான கோடிகளாய் எடுத்துவந்த ஜன்மங்கள்தோரும் ஆசையென்னும் களிம்பு, சிறுகச் சிறுகப் புகையைப்போல்சூழ்ந்துகொண்டு வருகிறபடியால், தனக்குள் பளிங்குபோல் சாக்ஷி சொரூபமாயிருக்கும் ஆத்ம ஸன்னிதானத்தை மேற்படி பந்த பாசங்களென்னும் ஆசைகள் மூடிக்கொண்டு மோக்ஷமென்னும் வீட்டை அடையவிடாமற் செய்விக்கின்றது. எறும்பு முதல் எண்பத்து நான்குலக்ஷ ஜீவராசிகளும், ஏதோ ஓர் ஜன்மத்தில் மோக்ஷமென்னும் வீட்டை அடையவேண்டியது திண்ணம். இம் மோக்ஷவீட்டிற்கு வழிகாட்டும் குரு

வானவர் எப்படிப் பட்டவராயிருக்க வேண்டுமென்றால், முன் களிம்பேறிய செம்புக்குடத்தை செங்கற்பொடியினாலும் புளியினாலும் தேய்த்துக் களிம்பைப்போக்கி செம்பு குடத்தைக் காட்டிய குருவைப்போன்றவராய் இருக்க வேண்டும். இங்கு இந்த "ஜீவப்பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்ய"மே, களிம்பைப்போக்கி செம்பு குடத்தைக்காட்டிய குருவைப்போல் இருக்கின்றது. ஆதலால், இதில் உபதேசமாய்ச் சொல்லிய விஷயங்களை கிரகித்து சாதனம் செய்து வருவீர்களாகில் அப்போது ஜன்மாந்திரங்கள் தோறும் புகையைப்போல் சிறுகச்சிறுக சூழ்ந்துவந்த, ஆசையென்னும் களிம்பு (அழுக்கு)களெல்லாம், மறுபடியும் புகையைப்போல் சிறுகச் சிறுக இந்த ஜீவப் பிரம்மைக்ய" உபதேசத்தால் குறைந்துகொண்டே வந்து கடைசியில் எல்லா பாசங்களும் நீங்கி, தான் தானாய் நின்று பிரம்மத்துடன் கலந்துவிடுவீர்கள்: இவ்வாறு ஆசையென்னும் களிம்பைப் போக்கினவனுக்கு மறு பிறப்பில்லை. மேற்சொல்லிய ஆசைகளையே ஆணவம், மாயை, காம்யகர்மமென்று சொல்லப்படும்: இது, அனாதியிலிருந்து சகஜமாயுள்ள மூல மலமாயிருக்கின்றது: இம்மலம், ஆன்மாக்களின் அறிவு முழுதையும் விளங்கவொட்டாமல் களிம்பேறி மறைக்கின்றது. இக்களிம்பிற்கு, தேங்காயின்மேலிருக்கும் பட்டையை திருஷ்டாந்தமாய் இதனடியில் சொல்லுகின்றோம், கேளுங்கள்;

தேங்காயின்மீது பிடித்துக்கொண்டிருந்த பட்டையைப்போல் யோகியைப் பிடித்துக்கொண்டிருந்த, சகல பந்த பாசங்களென்னும் பிடிப்புகள் யாவும் தனக்குத் தானாகவே யோக பலத்தினால் அந்த யோகியை விட்டு நீங்கும் என்று முன் சொல்லியிருக்கின்றோம். ஆதலால்,

தேங்காயின் ரகஸ்யார்த்தம் இதனடியில் தெரிவிக்கின்றோம் கேளுங்கள்:—

பட்டையுடன் யிருக்கும் தேங்காய் பார்வைக்கு மிகவும் பளபளப்பாய்க் காணப்படும். பிறகு, அத்தேங்காய் உரிக்கும்போது மிகவும் கஷ்டத்துடன் சிக்குச் சிக்காய் வரும். அச்சிக்குகளையெல்லாம் நீக்கி உடைத்துப் பார்த்தபோது, அதனுள் மிகவும் சுத்தமான வெண்மை காணப்படும். தேங்காய்களை நாம் கோவில்களுக்குக் கொண்டு போய் உடைத்து பகவானுக்குக் காட்டுகின்றோம். அவ்வாறு காட்டுவதற்குக் காரணம் இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

பட்டை உரிக்காத தேங்காய், மேல் பார்வைக்கு மிகவும் சுத்தமாயும் பளபளப்பாயும் இருப்பதுபோல், மானவர்களின் சரீரங்களெல்லாம் அநேக நிறங்களுடன் மிகவும் பளபளப்பாய் மேல்தோல் மூடிக்கொண்டிருக்கின்றது. தேங்காய்ப் பட்டையை உரிக்கும்போது விசேஷ சிக்குச் சிக்காய் வருகின்றது. அதுபோல், ஸ்திரீ புருஷர்களின் சரீரங்களும் பார்வைக்குப் பளபளப்பாய் இருக்கின்றது, அவ்வாறு சரீரத்தின் மேல்தோல் பார்வைக்குமாத்திரம், மேற்சொல்லிய தேங்காயின்மேல் பட்டையைப்போல் பளபளப்பாய் இருந்தபோதிலும், சரீரத்திற்குள் இருக்கும் அநேக விதங்களாகிய ஆசைகள் யென்னும் சிக்குகள், தேங்காயின்மேலிருக்கும் சிக்கைப்போல் ஸ்திரீ புருஷர்களைப் பிடித்துக்கொண் டிருக்கின்றது. இப்படிப்பட்ட ஆசைகளென்னும் சிக்குகளையெல்லாம் நீக்கிப் பார்த்தபோது தேங்காய்க்குள் வெண்மை இருப்பதுபோல், எனக்குள் பரிசுத்தமான பரமாத்ம சொரூபம் இருக்கின்றது. அந்த பரமாத்ம சொரூபத்தை மூடிக்கொண்டிருக்கும் ஆசையென்னும் சிக்கை நீக்கி என்னைப் பரமாத்ம சொரூ

பத்தில் சேர்ப்பிக்க வேண்டுமென்று, ஈஸ்வரனைக் கேட்டுக் கொள்வதற்காகவே கோவில்களில் தேங்காய்களை உடைத்து ஈஸ்வரனுக்குக் காட்டி கர்ப்பூரம் ஏற்றி, இதோ இக்கர்ப்பூரம் எரிந்து நீராய்க்கரைந்து ஒன்றுமில்லாமல் ஜோதியுடன் எவ்வாறு கலந்துவிடுகின்றதோ அதுபோல், என் ஆசைகளையெல்லாம் நீராய்க்கரைத்து ஜோதி சொரூபமாயிருக்கும் உன்னில், ஆத்ம சொரூபியாகிய என்னை ஐக்யம் செய்துக்கொள்ளக்கடவாய் என்று, ஈஸ்வரனை வேண்டிக் கேட்டுக் கொள்வதற்காகவே கோவில்களில் தேங்காய்களை உடைத்து ஈஸ்வரனுக்குக்காட்ட காரணமாயிருக்கின்றது. என்றால்:—

நான் பார்வைக்கு நன்றாயிருந்தபோதிலும், தேங்காயின்மேல் சிக்குகளுடன் பட்டை மூடிக்கொண்டிருப்பது போல் என்னை, அநேக விதங்களாகிய ஆசையென்னும் சிக்குகள் மூடிக்கொண்டிருப்பதனால் என் நிஜ சொரூபத்தைத் தெரிந்துக் கொள்ளாமலிருக்கின்றேன். தன் நிஜ சொரூபம் தெரிந்துகொள்வதற்காகவே, தேங்காய் உடைத்து தட்டில்வைத்து ஈஸ்வரனுக்குக்காட்டி, கற்பூரமேற்றி இதோ இப்படிப்பட்ட வெண்மையான ஆத்ம சொரூபம் எனக்குள் இருக்கின்றது. இப்படிப்பட்ட வெண்மையுடைய ஆத்ம சொரூபத்தை இந்த தேங்காயின் மேல் பட்டை அநேக சிக்குகளுடன் மூடிக்கொண்டிருந்ததுபோல் என்னை, அநேக ஜன்மங்களாய் ஆசையென்னும் சிக்குகள் (களிம்புகள்) மூடிக்கொண்டு, எனக்குள்ளிருக்கும் இவ்வெண்மைபோன்ற ஆத்ம சொரூபத்தைக் காணவிடாமல் செய்விக்கின்றது: மேற்படி ஆசையென்னும் களிம்புகளெல்லாம், இதோ ஏற்றி உமக்குக்காட்டும் கர்ப்பூரம் எரிந்து எவ்வாறு நீராய்க் கரைந்துவிடுகின்றதோ அதுபோல், என் ஆசைகளென்னும் களிம்புகளெல்

லாம் மேற்படி கர்ப்பூரம்போல் நீராய்க்கரைந்து ஜோதி சொரூபமாகிய உன்னில், ஆத்ம சொரூபமாகிய என்னை ஐக்யம் செய்துக்கொள்ளக்கடவாய் என்று காட்டுவதற் காகவே கோவில்களில் தேங்காய்களை உடைத்துக் கர்ப்பூ ரம்யேற்றிக் காட்டுவதற்குக் காரணமாயிருக்கின்றதென்று அறியக்கடவீர்களாக.

பிரபஞ்ச விரக்தி மார்க்கம்.

"கிம் வாஸேந தநேந வாஜிகரிபிঃ ப்ராப்தேந ராஜ்யேந கிம் கிம் வா புத்ரகளத்ரமித்ர பஶுபிঃ தேஹேந கேஹேந கிம் ஜ்ஞாத் வைதத் க்ஷண பங்குரம் ஸபதிரே த்யாஜ்யம் மநோ தூரதঃ ஸ்வாத் மார்த்தம் குருவாக்யதோ பஜபஜ ஸ்ரீ பார்வதீ வல்லபம்."

"தந்தைதாய் தமர் தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்ட மிதிலோ
சந்தேக மில்லை மணி மாட மாளிகை மேடை
சதுரங்க சேனை யுடனே
வந்ததோர் வாழ்வு மோ ரிந்த்ரஜாலக் கோலம்
வஞ்சனை பொருமை லோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்த மல பாண்டமோ
வாஞ்சனை யிலாத கனவே
யெந்த நாளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
யிரவு பகலில்லா விடத்
தேகமாய் நின்ற நின்னருள் வெள்ளமீதிலே
யானென்ப தறவு மூழ்கிச்
சிந்தைதான் றெளியாது சுழலும்வகை யென்கொலோ
தேடரிய சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேஜோ மயா னந்தமே."

அன்பர்களே! இச்சரீரம் மலம்நிறைந்த பாண்டம். இராஜாதிகாரத்தால் பலபொருள்களும் ஓரிடத்தில் கொண்டுவந்து சந்தை சேர்த்தபோது அச்சந்தையில் கொள்வோர் பலர்வந்து சேர்வதுபோல், அவரவர்களின் நல்வினைத் தீவினைப்போல் அந்தந்தக் குடும்பத்தில்வந்து கூடுகின்றார்களாதலால், தந்தைதாய் தமர் தாரம் மகவென்னு மிவையெலாஞ் சந்தையிற் கூட்டமென்று சொல்லப்பட்டது. அதாவது, தாய் தந்தை முதலானோர், சந்தையிற்கூடிய கூட்டம்போல் வந்து சேர்ந்தவர்கள். சதுரங்க சேனையென்றால், அரசர்க் குரிய நால்வகைப்படை. அவை தேர், யானை, குதிரை, காலாட்கள் என்பதேயாம். அன்றியும், மாட மாளிகை சதுரங்கசேனை என்பவற்றோடு கூடிய வாழ்வு இந்திரஜாலம் போன்றது. வஞ்சனைப் பொருமை முதலானவைகளுக் கிடமாகிய சரீரமோ, சொப்பனம் (கினவு) போன்றது. இராஜ்ஜிய பரிபாலனமோ தோல் பொம்மை நாடகம் போன்றது. இவைகளை எக்காலத்தும் உயர்வு தாழ்வு கருதாது ஒரு நிகராகத் தெளிந்து, மனமானது ஒரு நிலையில் நில்லாமல் சுழல்வதற்குக் காரணம் எதுவோ அதைச் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

மாடு மக்களுஞ் சுற்றமும் பெண்டிரு மாளிகையுடன் வாழ்வு
நாடு ராச்சிய மாண்டிடும் புகழ்ச்சியு நம்மதென்றே தேகத்தி
னூடுசென்று நீயெனது டலியானென வுழன் றலுத்திடு நெஞ்சே
வீடுவிட் டுயி ரேகிடும் போதினில் வினைவழி நுழைந்தாயே.

[சிவானந்தபோதம்.]

மனிதர்களுக்கு இச்சன்மம் பூர்வத்தில் சஞ்சித கர்ம பந்தத்தால் உண்டான தாய் தந்தையர்கள் புத்திரர்கள் புத்திரிகள் மனைவிகள் சுற்றத்தார் முதலானவர்கள், பந்துக்களாகத் தோன்றித் தோன்றி நீர்க் குமிழிகளைப்போல் மறைந்தார்கள். நாமும் அவ்வாறே தோன்றி மறைந்து விடப்போகின்றோம். ஆதலால்,

"எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதா
　　னியாதினு மரிதரிதுகா
ணிப்பிறவிதப்பினு லெப்பிறவி வாய்க்குமோ
　　யேதுவருமோ வறிகிலேன்."

'தந்தையார் தாயாருடன் பிறந்தார் தாரமார்
　　புத்திரரார் தாந்தாமாரே
வந்தவா றெங்ஙனே போமாறேதோ மாயமா
　　மிதற்கேது மகிழவேண்டாம்
சிந்தையீ ருமக்கொன்று சொல்லக்கேண்மின் றிகழ்மதியும்
　　வாளரவுந் திளேக்குஞ்சென்னி
எந்தையார் திருநாம நமச்சிவாய வென்றெழுவார்க்
　　கிருவிசும்பி லிருக்கலாமே!"

"பந்தமெனு மக்கள்மனே வீடுதோட் டந்துறவு
　　பணமாகு மிதுக ளெல்லாம்
பாரினில் வரும்போது வந்ததில்லை நாளக்குப்
　　பாடைமேல் போகும் போது
சொந்தமென வந்திடா திடையினிற் கனவுபோல்
　　தோன்றியே யழிவ தென்று
சுத்தமா யெண்ணுமல் நித்தமே சதமென்று
　　தொல்லுலகி லெண்ணி நாளும்
வந்தமட மாதினேு டினிதாக வாடியே
　　வலிவையெல் லாமி ழந்து
வாழ்நாட் கழித்துட னிறப்ப தன்யாயமே."

"தந்தையார் போயினர் தாயாரும் போயினர் தாமும் போவார்." என்பதுபோல, இவர்கள் எல்லோரும் மாயையால் உண்டாயினும் அஞ்ஞானிகள், சரீரமே நித்தியம், இந்த சம்சாரமே சாஸ்வதமென்று மாயையால் கட்டுப்பட்டு சரீர சம்பந்தமான பார்யாள் புத்திரர்கள் பார்த்துக் கொண்டிருக்க மரணமடைவதால் அவர்களுக்காகத் துக்கித்துக்கொண்டும், மறுபடியும் திரவியம் சம்பாதிக்க

பிரயத்தினப்பட்டு துன்மார்க்கத்தை யடைந்து, காமக் குரோத லோப மோக மத மச்சராதிகளை அநேக விதங்க ளாய் விஸ்தரித்துக்கொண்டு, நமக்கு எந்த விதத்திலும் திர வ்வியம் கிடைத்தால் போதுமென்று துச்சமான வியவகா ரங்களைச்செய்து, திரவ்வியத்தைச் சம்பாதித்துக்கொண்டு, இதுவே நமக்குச் சுகம் இதைவிடச் சுகம் வேறில்லையென்று நிச்சயித்து அந்தகர் (குருடர்) களைப்போல் காமத்தினல் (ஆசையினல்) தமக்கு எந்தக்கதி உண்டாகுமோவென்று தெரியாமல், வேடன் வலையில் அசப்பட்டு மதிமயங்கிய பக்ஷிகளைப்போல், புருஷர்கள் ஸ்திரீகளின் மோகவலையில் அகப்பட் டழுந்தி, எழுந்திராதபடி ஈஷணாத் திரயங்களேன் னும் சமுத்திரத்தில் மூழ்கி, பெண்டு பிள்ளைகளின்பேரில் ஆசை அதிகரித்து, அவர்களுக்காகத் தனத்தைச் சம்பா தித்து அவர்களால் சுகத்தை யடையாமல் காலமெல்லாம் துக்கமாய்க் கழித்து, சரீரம் விழுந்தபோது அநேகவித யம பாதைகளையடைந்து, நரகக்குழியில் சிலநாளிருந்து, பாபாத்மாக்களாய் பிரபஞ்சத்தில் பிறந்து பிறந்து இறந் திறந்து, இம்மையிலிருந்து மறுமைக்கும் மறுமையிலிருந்து இம்மைக்கும் கணக்கில்லாமல் உழன்று அநேக கஷ்டங் களைப் படுகின்றார்கள். சூக்ஷ்ம திருஷ்டியினல் பார்த்த போது தேசம்வேறு தான்வேறாகக் காணப்படும். ஆகை யால் அவர்கள், பிராந்தியினல் தேகமும் தானும் ஒன்றென மயங்கி வீழ்ந்து, காமாதி தசவர்க்கங்களையே விருத்தி செய்து நசிக்கின்றார்கள். காமாதி தசவர்க்க மென்பன:— காம குரோத லோப மோஹ மத மச்சர டம்ப தர்ப்ப ஈர்ஷை அசூயை என்பனவேயாம்.

1. காமமென்பது:—தநம் தாந்யம் புத்திர பௌத் திராதிகளின்பேரில் அதிகப் பிரீதி வைத்தல். இதனல் துயரடைந்தவன் நரகாசுரன் முதலியோர்,

ஆசையாற் சந்திரனங்கந் தேய்ந்தனன்
ஆசையாற் சவுபரியறிவை நீங்கினன்
ஆசையா னராசுரனுவி போக்கினன்
ஆசையால் வாலியு மழிந்து போயினன்.

2. குரோதமென்பது:—ஒருவருக்குக் கெடுதி விளைவிக்கப் பிரயத்தினம் செய்ய இச்சை கொள்ளுதல். இக்குணத்தால் துயரமடைந்தவன் பகாசுரன் முதலியோர்.

3. லோபமென்பது:—தனது சொத்திலிருந்து ஞாதிகளுக்குங்கூட சிறிதேனும் கொடுக்கக்கூடாது என்னும் எண்ணமிருத்தல். இதற்கு சான்று துரியோதனன்.

4. மோஹமென்பது :—புத்திர களத்திராதிகளின் மீது அதிகப் பிரீதியை வைத்துத் தனக்கு உண்டாயிருக்கும் பொருள் போதாதென்றும் இன்னும் கொஞ்சம் அதிகமாய்ச் சம்பாதிக்கவேண்டுமென்னும் ஆசையை விருத்தி செய்தல். இப்புத்திர சோகத்தால் துயரமடைந்தவன் தசரத மஹாராஜன்.

5. மதமென்பது:—திரவ்வியம் அதிகரிப்பதனால் இதரர்களை லக்ஷியம் வைக்காமல் பேசுதல். இதனால் துயரடைந்தவன் கார்த்தவீரி யார்ச்சுனன்.

6. மச்சரமென்பது:—தன்னைப்போல் பிறரும் சுகமநுபவித்தலைச் சகியாமையை விளைவிக்கும சித்தவிருத்தியை யுண்டாக்குதல். இக்குணத்தால் துயரடைந்தவன் சிசுபால தந்தவக்திரன்.

7. டம்பமென்பது:—பலர்மெச்ச தருமம், யாகம் முதலானவைகளைச் செய்தல். இதனால் துயரடைந்தவன் புரூரச் சக்ரவர்த்தி.

8. தர்ப்பமென்பது:—புத்திர மித்திர களத்திர தனதான்யாதி சம்பத்துக்களில் தனக்கு நிகரானவர்கள் ஒரு

வருமில்லை என்று கர்வப்படுதல். இதனல் துயரடைந்தவன் பரசுராமன்.

9. ஈர்ஷை என்பது:—தனக்கு நேர்ந்த துக்கம் பிறருக்கும் நேரிடவேண்டுமென்று எண்ணுதல். இதனுற் கெட்டவன் அருணுக்ஷதன்.

10. அசூயை என்பது:—கெடுதி செய்தவனுக்குக் கெடுதி விளைவிக்கவேண்டுமென்று எண்ணுதல். இக்குணத்தால் துயரடைந்தவன் பவுண்ரீக வாசுதேவன்.

இதன் விவரங்களை, ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அ-3-சு-40, அ-6-சு-7, 36, இவைகளில் விரிவாய்க் காணலாம். அன்றியும் அத்யாயம் 16, சுலோகம் 13-14-15-16-ல், ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லுகின்ருர்.

இதமத்ய மயா லப்த மிமம் ப்ராப்ஸ்யே மநோரதம்
இதமஸ்தீத மபிமே பவிஷ்யதி புநர்த்தநம்.

அஸௌ மயா ஹதஸ் ஶத்ரு ரஹநிஷ்யே சாபராநபி
ஈஶ்வரோஹ மஹம் போகீ ஸித்தோஹம் பலவாந்ஸுகீ

ஆட்யோபிஜநவாநஸ்மிகோந்யோஸ்தி ஸத்ருஶோ மயா
யக்ஷ்யே தாஸ்யாமி மோதிஷ்ய இத்யஜ்ஞாநவிமோஹிதா:

அநேகசித்தவிப்ராந்தா மோஹஜாலஸமாவ்ருதா:
ப்ரஸக்தா: காமபோகேஷு பதந்தி நரகேஶுசௌ.

இந்த வஸ்துவானது, இப்போது என்னுல் சம்பாதிக்கப்பட்டது; இந்தக் காரியத்தை, நான் நிறைவேற்றுவேன்; இந்தப்பொருள் எனக்கு அளவற்றுக் கிடக்கின்றது; இவ்வளவு தனமும் எனக்கு மறுபடியும் உண்டாகப்போகின்றது, இந்தச் சத்ருவானவன் என்னுல் கொல்லப்பட்டான்; மற்றுமுண்டான பகைவர்களையும் நான் கொல்லுவேன்; நான் கோடீஸ்வரன்; நான் போகங்களில் மிகுந்தவன்;

நான் மஹா சாய்கா லுள்ளவன்; நான் சுக சௌக்கியங்களை யுடையவன்; நான் பலமுடையவன்; நான் சகல சம்பத்துக் களுடன் நிறைந் திருப்பவன்; தலைமுறை தலைமுறையாய் நல்ல குலத்தில் அவதரித்து வந்தவர்களின் வம்சத்தில் பிறந்தவன்; எனக்குச் சமானமானவன் வேறொருவனு மில்லை; நான் செய்யும் யஞ்ஞ யாகங்களைக் கண்ணுற்றுப் பார்த்தவர்களை வெட்கமடையும்படிச் செய்வேன்; கூத்தி கள் முதலிய சம்பிரமங்களுக்கு வேண்டிய பொருளைக் கொடுப்பேன் என்று நினைக்கப்பட்டவர்கள், அஞ்ஞானத்தி னால் புத்தி மோசம்போய் பலவித சஞ்சலத்தினால் சித்தம் மருண்டு, மனைவி மக்கள் சுற்றம் என்கிற மோகவலையில் அகப்பட்டு விஷயபோகங்களில் அதிக இச்சையுடையவர் கள், அசுத்தமும் கோரமுமான நரகத்தில் விழுவார்கள். அன்றியும், அத்யாயம்-16 சுலோகம் 17-18-19.

ஆத்ம ஸம்பாவிதா: ஸதப்தா தநமாநமதாந்விதா:
யஜந்தேநாம யக்ஞைஸ்தே தம்பேநாவிதிபூர்வகம்
அஹங்காரம் பலம் தர்ப்பம் காமம் க்ரோதஞ்ச ஸம்ஸ்ரிதா:
மாமாத்மபரதேஹேஷு ப்ரத்விஷந்தோப்யஸூயகா:
தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந்
க்ஷிபாம்யஜஸ்ர மஸுபா நாஸுரீஷ்வேவ யோநிஷு.

தன்னைத்தான் புகழ்ந்துக் கொள்பவர்களாயும், செல் வத்தால், செருக்கு மதம் இவைகளுடன் கூடியவர்களாயும், அஹங்காரத்தையும் பலத்தையும் அகந்தையையும் ஆசை யையும் கோபத்தையும் உடையவர்களாயும், தன் தேகத் திலும் இதரர்களின் தேகத்திலும் ஆத்மாவாயிருக்கும் என்னை தூஷிப்பவனும், தன்னை ஞானி என்று உலகில் காட்டிக் கொள்ளும்பொருட்டு வேதவிதியை விலக்கி பெய ருக்கு மாத்திரம் பூஜை செய்கிறவனைப்போல் நடிக்கின்றவ னும், த்வேஷ முடையவனும், குரூர சுபாவமுடையவ

னும், அசுத்தமுடையவனும் நரரில் அதமராகவுமிருக்கின்ற இவர்களை ஜனனமரண மார்க்கங்களில் அசுர யோனிகளில் தானே, எப்போதும் நான் போட்டுக் கொண்டிருப்பேன். என்றால் புலி முதலாகிய துஷ்ட ஜன்மங்களில் தள்ளுகின்றேன். அத்யாயம் 16, சுலோகம் 7.

ப்ரவ்ருத்திஞ்ச நிவ்ருத்திஞ்ச ஜநா நவிது ராஸுராஃ
நசௌசம் நாபிசாசாரோ நஸத்யம் தேஷு வித்யதே.

அசுர சுபாவத்தை யுடையவர்கள், புருஷார்த்தத்தை அடைவதற்குரிய காரியத்தில் பிரவேசித்து இதற்கு விரோதமாயிருக்கும் அதர்மத்தை நிவர்த்திக்கவும் அறியார்கள். அவர்களிடத்தில் மனோசுத்தியென்பது இல்லை. தனது வருணாசிரமத்துக் குரிய நடையும் சீலமும் ஆசாரமும் சத்தியமும் நம்பிக்கையும் அவர்களுக்கு இல்லவேயில்லை. அத்யாயம் 16, சுலோகம் 4.

தம்போ தர்போபிமாநஸ்ச க்ரோதஃ பாருஷ்யமேவச
அஜ்ஞாநம் சாபிஜாதஸ்ய பார்த்த! ஸம்பத மாஸுரீம்.

ஓ! பார்த்தா! (ஓ அர்ஜுநா) கீர்த்தியைக் கருதிக் கொண்டு பலர் மெச்ச தர்மம் முதலானவைகளைச் செய்தல், பெரியோர் நல்லோர்களுக்கு அடங்காமை, தன்னைத்தான் புகழ்ந்துக்கொள்வது, தன்னை மதிக்கவில்லை என்று பிறர் மேல் துவேஷிப்பது, கடினமாக எவரையும் எடுத்தெறிந்து பேசுவது, முதலான குணங்களுடையவனும், நன்மை தீமைகளை எடுத்துச் சொல்லியும் கேளாமல் தன்னிஷ்டம் போல் மூட நடக்கையுடன் இருப்பவன், அசுரகுணமுடையவனேயாம். அத்யாயம் 16, சுலோகம் 21.

த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாஸநமாத்மாநஃ
காமஃ க்ரோத ஸ்ததா லோப ஸ்தஸ்மா தேதத் த்ரயம் த்யஜேத்

உலகத்தில், வேத விதிப்படி நடக்கவேண்டுமென்கிற மனமுடையவரா யிருந்தபோதிலும், காமக் குரோதாதி

குணங்களை விட்டிலராயின் இவர்களையும் அசுர (புலி) யோனியில் செலுத்தி நரகத்துக்கு வழிகாட்டுவேன். ஆதலால், இவற்றை ஒருங்கே விடவேண்டும். அத்யாயம் 16, சுலோகம் 20.

ஆஸுரீம் யோநி மாபந்நா மூடா ஜந்மநி ஜந்மநி
மாமப்ராப்யைவ கௌந்தேய! ததோ யாந்த்யதமாம் கதிம்.

ஒ! குந்தீபுத்ரா! ஒவ்வொரு ஜன்மத்திலும் அசுர சுபாவத்திற்குரிய பிறவியை அடைந்த மூடர்கள், என்னை அடைய சக்தியில்லாமல் அதிலிருந்து மற்றொரு அதிக நீசமான ஜன்மங்களை அடைகின்றனர்கள். ஆதலால், இவைகள் யாவும் தள்ளத்தக்க குணங்களேயாம்.

இனி கொள்ளத்தக்க குணங்களைச் சொல்லுகின்றோம் கேளுங்கள்:— அவை, இச்சை பக்தி சிரத்தையேயாம்.

1. இச்சை என்பது:—அன்ன பானாதிகளை யுட்கொள்ளவும், மல மூத்திரங்களை வெளியில் தள்ளவும் விரும்புதல். இவைகளைச் செய்யாவிடில் தேகபாதை உண்டாகும். இதைச் செய்வதனால் பிறருக்குக் கெடுதி யாதொன்றுமில்லை.

2. பக்தி என்பது:—குருவினிடத்திலும் ஈஸ்வரனிடத்திலும் மாறா நேசம்வைத்து இடைவிடாப் பேரன்புடன் துதித்தல்.

3 சிரத்தை என்பது:—குரு வாக்கியத்திலும் சாஸ்திரத்திலும் முழு நம்பிக்கை வைத்தல்.

மேற்கூறிய காமக் குரோதாதி பத்துக் குணங்களும், பிறவிக் கேதுவாகிய பலவித எண்ணங்களை விளைவித்து ஜனன மரணமென்னும் சமுத்திரத்தில் அழுந்தச் செய்யும். ஆதலால் அக்குணங்களை அறவேவிட்டு பின்கூறிய மூன்று குணங்களைக் கடைப்பிடித் தொழுகினேரே முமூட்சுக்க

ளாய் முத்தி அடைவார்களென்பது கற்றுணர்ந்த பெரியோர்கள் கருத்து.

“தோன்றுங் குணங்கள் பத்தும் நீக்கிப்பின்
மூன்று குணங்கொள்வோ ருந்தீபற
முமூட்சுக்களாவாரென் றுந்தீபற.” [உந்தியார்.]

ஒவ்வொரு மனிதனிடத்தும் மேற்சொல்லிய காமக் குரோதாதி பத்துக்குணங்களுமில்லாவிடினும், அவைகளில் ஏதாகிலும் இரண்டு அல்லது ஒரு குணமாகிலும் ஒவ்வொரு புருஷனுக்கும் இருந்தேதீரும். அது எப்படித் தெரிந்து கொள்ளலாமென்றால் மேற்சொல்லிய காமக் குரோதாதி பத்து குணபேத விபரங்களை வாசித்துக்கொண்டு வரும் போது தம்மிடத்துள்ள குணம் இதுவென நன்றாய் விளங்கும். இப்பத்து குணங்களே மனிதர்களுக்கு ஆலகால விஷமாயிருந்துகொண்டு ஜனன மரணங்களை விருத்தி செய்துகொண்டே வருகின்றன. இப்பத்து குணங்களே கர்மகாண்டத்தில் தசகண்ட (பத்து சிரசையுடைய) இராவணனென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இது விஷயம் சம்சார வாசனை வாசனாத்திரயங்கள் என்பதில் முன் சொல்லப்படும்.

☞ எதிரில் காட்டிய படத்தில் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா காளிங்கன் என்னும் சர்ப்பத்தின்மேல் நர்த்தனம் செய்து அதன் கர்வத்தை அடக்கியதுபோல், நமது இருதயத்திலிருக்கும் முன் சொல்லிய காமக் குரோதாதிகளின் கர்வத்தை யெல்லாம் புத்தியினால் மிதித்து அடக்கவேண்டும் என்று காட்டுவதற்காக, ஸ்ரீ கிருஷ்ணபகவான் காளிங்கன் என்னும் சர்ப்பத்தின் சிரசில் காலைவைத்து மிதித்து அதன் கர்வத்தை அடக்கினதாய்க் காட்டப் பட்டது: இதற்கு மற்றொரு ரகஸ்யம் என்னவென்றால், நமது சரீரத்திலிருக்கும், பிராண அபான வியான உதான சமான னென்னும்



ஸ்ரீ கிருஷ்ணன் காளிங்கன் என்னும் சர்ப்பராஜன் கர்வத்தை அடக்குதல்.

ஐந்து வாயுக்களே, ஐந்துதலை நாகனு யிருக்கின்றது: ஐந்து தலை நாகனுக்குச் சமானமாயிருக்கும் பஞ்ச (ஐந்து) பிராணன்களின் கொழுப்பை அடக்கவேண்டுமென்று, கிருஷ்ண பகவான் ஐந்துதலை நாகன் சிரசை தன் காலால் மிதித்துக் காட்டினார் என்பதேயாம். இவைகள் அடங்கியபின் ஆத்மா, எவ்விதப் பற்றுதலுமில்லாமல் நிஷ்க் களங்கமாய் படிகம்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கும். இதற்குத் திருஷ்டாந்தம் என்னவென்றால்,

பன்னிறங் கவருந் தொன்மைப் படிகநீ டொளியும்பன்மை
மன்னிலங் இயல்புந் தந்த வளரொளி போல வையந்
தன்னகம் பயிலு நற்கிற் சடங்களின் றன்மை தாவா
நன்னலம் பெறநி றைந்த ஞானமே ஞான மென்பர்.

[சிவப் பிரகாசம்].

படிகலிங்கத்தின் எதிரில் வெண்மை வர்ணமுடைய புஷ்பத்தைக் காட்டியபோது, அப்புஷ்பத்தின் பிரதி பிம்பம் அந்தப் படிகலிங்கத்தில் வெண்மை நிறமுடைய தாகவும், சிவப்பு வர்ணமுடைய புஷ்பத்தைக் காட்டிய போது சிவப்பு நிறமுடையதாகவும், பச்சை வர்ணமுடைய புஷ்பத்தைக் காட்டியபோது பச்சை நிறமுடையதாகவும் காணப்பட்டு, இவைகளை யெல்லாம் களைந்து பார்க்கும் போது சுத்த வெண்மையுடைய படிகலிங்கமாய்த் தன் நிஜ சொரூபத்துடன் பிரகாசித்துக் கொண்டிருக்கும். அது போல், நமது சரீரத்திற்குள் இருக்கும் ஆத்மா மேற்படி படிகம்போல் பரிசுத்தமாய் பிரகாசித்துக் கொண்டிருக் கின்றதென்று அறிக. இவ்வித ஆத்மாவானது மேற் சொல்லிய காமக் குரோதாதி என்னும் அழுக்குகளால் மூடப்பட்டிருக்கின்றது. இதையே பசு, பதி, பாசமென்று சொல்லப்படும். அதாவது, பசு என்றால் நாம்; பதி என் றால் கடவுள்; பாசம் என்றால் நமக்கும் கடவுளுக்கும் மத்தி

யில் இருக்கப்பட்ட ஆசையென்னும் திரை. இந்த ஆசை யென்னும் திரையை யார் ஒருவர் நீக்கிவிடுகின்றார்களோ, அவர்கள் பசுத்தன்மை நீங்கப்பெற்று பதியாய் விடுகின்றார் கள். அதாவது, பசுக்களா யிருக்கும் ஜீவாத்மாக்கள், பதியாயிருக்கும் பரமாத்மாவில் ஐக்கியமாகின்றார்கள். இந்தப் பசு என்னும் ஜீவாத்மா அஞ்ஞானத்துடன் கூடி யிருப்பதனால் ஞானரத்னம் மறைவுபட்டிருக்கின்றது. அஃ தெப்படி என்றால், ஒரு வீட்டில் பிரகாசித்துக்கொண்டிருக் கும் தீபத்தை ஒரு கூடைகொண்டு மூடினால் அஃது எப்படி கூடைக்குள் மாத்திரம் பிரகாசித்துக்கொண்டு மற்ற இடங் களை இருளடையச் செய்யுமோ, அதுபோல் நம்மிடத்தி லுள்ள ஜோதி சொரூபமாகிய ஆத்மா, முற்கூறிய காமக் குரோதாதியென்னும் ஆசையினாலும், ஈஷணாத் திரயங்களி னாலும் மூடப்பட்டிருக்கின்றது. இதுவே பாசமென்று இதுவரையில் சொல்லப்பட்டது. இந்தப் பாசத்தையும் ஈஷணாத் த்ரயங்களையும் பஸ்மம் செய்து பார்க்குமளவில் அவ்விடம் சேஷமாய் ஒன்றுமில்லாத ஆகாசவடிவமே நிற்கும். அந்த ஆகாச வடிவந்தான் நீ; அதுதான் நான்; அதுதான் பிரம்மம்; அதுதான் சிதம்பர ரகஸ்யம்; அது தான் ஆத்மா; அதுதான் சித்ர குப்தன் என்று சொல்லப் படும். ஆதலால், துச்சசுகம் அதிகரித்துத் தமது கதி காணமல் கர்மானுசாரமாய் ஒவ்வொருவரும் அநுபவிக் கும் சுகம் துச்சமேயாம். பூமியெல்லாம் பரிபாலனம் செய்தபோதிலும் இந்திரலோகமும் வரவேண்டும் என்று தோன்றும். தாம் அநுபவிப்பது தாழ்ந்ததென்றும் இந்திர லோகம் உயர்ந்ததென்றும் எண்ணிப் பிரமலோக பரியந் தம் அடைந்தபோதிலும் துச்ச சுகமேயாகும். சுய சொரூப ஸ்திதியைப் பெற்று மோக்ஷாநந்தத்தை அடையப் பட்ட வர்களுக்கு இவைகளெல்லாம் துச்சமே ஸ்திரீகளின்

மோகவலையில் அகப்பட்டு, மின்னலைப்போல் க்ஷணத்திற்குள் அழியத்தக்க சிற்றின்பங்களை அனுபவித்து மீண்டும் எழுந்திருப்பதற்குச் சக்தியில்லாமல்,

துன்பநுகரும்வினையின்
தொடர்ச்சியினே
ரின்பநுகர்வார்போலேந்
திழையார்கட்பட்டார்
தன்பன்மிகநடுங்க
ஞானிதசையில்லா
வென்புகறித்திட்டா
விருஞ்சுவையும்பெற்றிடுமோ.

என்னும் ஸ்கந்தபுராண வாக்கியரீதியாய் சத்தில்லாத எலும்பை நாயானது கடித்து யாதொரு ருசியை அறியாததுபோல், துன்ப மனுபவிக்கவேண்டிய பிராரப்த வினையையுடையவர்கள், இன்பம் அனுபவிப்பவர்களைப் போல் நினைத்து * வீசகோசப் புழுவைப்போல் வழி தெரியாமல் காமக் குரோத லோபங்களில் ஆழ்ந்து உழலுகின்றார்கள். இதற்கு ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 16, சுலோகம் 11, 12.

சிந்தா மபரிமேயாம் ச ப்ரளயாந்தா முபாஶ்ரிதாঃ
காமோபபோகபரமா ஏதாவ திதி நிஶ்சிதாঃ
ஆஶாபாஶஶதைர் பத்தாঃ காமக்ரோத பராயணাঃ
ஈஹந்தே காமபோகார்த்த மந்யாயே நார்த்தஸஞ்சயாந்.

இப்படிப்பட்ட மனிதர்கள், பிரதிதினம் அநேக எண்ணங்களை யுடையவர்களாய் சாகுமளவும் அளவுகடந்த துக்

* வீசகோசப் புழுவானது நுண்ணிதாகிய நூலை ஒரு வழியுமில்லாத கூடாகக் கட்டி அதிலிருந்து தான் வெளியில் புறப்பட்டுப்போக வழிகாணாமல் இறக்குந் தன்மையைப்போல், மனிதன் பஞ்ச பாசங்களினாலும் தத்துவா தத்துவங்களினாலும் பந்தப்பட்டு ஈனமாகிய ஜனனமரண துக்கங்களை யடைவான்.

கத்தை அடைந்தவர்களாயும், பெண்கள் ஆசையே புருஷார்த்தமாக நினைத்து இதுதான் மோக்ஷமென்று நிச்சயித்தவர்களாயும், ஆசை என்னும் அநேகக் கயிறுகளால் கட்டப் பட்டவர்களாயும், காமக் குரோத முதலியவற்றையே பிரதானமாகக் கொண்டவர்களாயும், காமானுபவத்தின் பொருட்டாகவே கெட்டவழியில் திரவ்வியக் குவியலைச் சம்பாதிக்கின்றூர்கள். இவர்களுக்கு உண்டாயிருக்கும் ஈஷணு த்ரயங்களைப்பற்றி இதனடியில் சொல்லப்படும்.

ஈஷணு த்ரயமென்பன:—தாரேஷணை, புத்ரேஷணை, தநேஷணை.

அத்துவீத நூல்களவை யோது மீஷணைகள்
சத்துவ மிருரேஷணையுடனே—யொத்து
வருபுத்திரேஷணையு மாருமலன்பு
தருமோரார்த் தேஷணையுந்தான்.

தாரேஷணை.

தாரேஷணையென்பது:—பார்யாளின்மீது ஆசைகொள்ளல்;

சுலோ||"ஸந்யாஸ மக்நிஹோத்ரஞ்ச த்விஜாதீநாம் ப்ரஶஸ்யதே."

என்னும் சித்தாந்த வசனங்களினுல், புருஷர்கள் பிரம்மசரிய விரதம் பூண்டு மோக்ஷாபேக்ஷை யுடையவர்களாயிருந்தால் சந்நியா ஸாசிரமமும், காம சுகத்தில் இச்சையுடையவர்களா யிருந்தால் அக்கினி ஹோத்திரமான கிருகஸ்தாசிரமமும் கைக் கொள்ளல்வேண்டும். பிரம்மசாரியாயிருந்து சந்நியாசம் பெற்றவர்கள் சாங்கியர்களென்றும், பிரம்மசாரியா யிருந்து கிருகஸ்தாசிரமம் பெற்று பிறகு சந்நியா ஸாசிரமம் பெற்றவர்கள் கர்மயோகிக

ளென்றும் சொல்லப்படுவார்கள். சாஸ்திர ஞானமுடைய பண்டிதர்களுக்கு நிஜமான அர்த்தம் தெரியாமல் சாமாந்நியார்த்தங்களை ஊஹித்து, மனைவியே சம்சாரத்திற்கு பரம புருஷார்த்தமென்று எண்ணித் தாம் பிரமை அடைவதுமேயன்றி இதரர்களையும் பிரமிக்கும்படிச் செய்விப்பார்கள்.

சரு|| "ஆதிமத்யாவஸாநேஷு துஃகம் ஸர்வமிதம் யதஃ ஸ்த்ரியம் த்யக்த்வா ஜகத் த்யக்தம் ஜகத் த்யக்த்வா ஸுகீ பவேத்."

என்று மஹாவாக்கிய ரத்நாவளியில் இருக்கின்றது. ஆதலால், சம்சாரவிஷயம் விசாரிக்குமளவில் எப்பொழுதும் துக்கமாகவே யிருக்கின்றது. சம்சாரத்திற்கு மூல காரணமாயிருக்கும் மனைவியினால், பிரயோஜனம் ஞானிகளுக்கு யாதொன்றுமில்லை. ஞானிகள் தவிர மற்றவர்கள் மனைவி வராமுன், மனைவி வரவில்லையே என்று துக்கப்படுகின்றார்கள். அவள் வந்தபிறகு, தான் சொல்லியதுபோல் செய்து உபசரணைகளைச் செய்யாமல் வீண்வாதங்களாடி வீட்டு விஷயங்களை யெல்லாம் வெளிப்படுத்தி இல்லாத பொய் வார்த்தைகளைக் கற்பனைசெய்து இதரர்களுக்குச் சொல்லி கௌரவத்திற்குத் தீங்கு விளைவித்து திருட்டுத்தனம் முரட்டுப்புத்தி முதலாகிய ராக்ஷஸ குணங்களுடன் இருந்து தனது புருஷன்மீது பிரீதி யில்லாதவளாயும், ஞான ஹீனமுடையவளாயும்,வியாதி யுடையவளாயும்,ரூப லாவண்ணியமில்லாதவளாயும்,அநாசார முடையவளாயும், நாகரீகம் இல்லாதவளாயும், ருசியுடன் பாகம் செய்யாதவளாயும்,இருப்பாளாகில் அவளால் துக்கமே சம்பவிக்கும். அப்படிக்கல்லாமல் சத்துவ குணமுடையவளாயும், ரூப லாவண்ணிய முடையவளாயும், தன் புருஷனிடத்தில் அதிகப் பிரீதியுடையவளா யிருந்தாலும், அவள் சந்தான மில்லாமல் மலடியா யிருப்பாளாகில் அதனால் துக்கமே

உண்டாகும். அல்லது, அவள் ரத்திநா பரணங்களும் சரிகைச் சேலை சரிகை ரவிக்கைகளும் கொண்டுவந்து கொடுக்கும்படி தொந்தரவு செய்வாளாகில் தரித்திரத்தினல் அவைகளைக் கொண்டுவந்து கொடாவிட்டால், இராப் பகலாப் இழவு பேரிழவு கல்லெடுப்பு வீட்டில் என்னைக் கொண்டுவந்துக் கொடுத்தார்களே என்று சட்டியைத் தூக்கிப் பானையின்மீதும், பானையைத் தூக்கிச் சட்டியின் மீதும், சொம்பு தவலை முதலானவைகளையும் புருஷனைக் கண்டபோதெல்லாம் தூக்கிப்போட்டு உடைத்துக் கொண்டிருப்பதும் துக்கமே. அல்லது ரோகத்தினலாகிலும் பிசாசாதி வியாதிகளினலாகிலும் பாதைப்பட்டுக் கொண்டிருக்கும்போது வைத்தியர்களையும் மாந்தரீகர்களையும் வரவழைத்து அதை நிவர்த்தி செய்விப்பதற்காக சரீரப் பிரயாசையும் திரவ்விய விரயமும் அதிகமாய் உண்டாவதனல் துக்கமே சம்பவிக்கும். அல்லது, அவள் வியாதியில்லாமல் நல்ல அழகும் குணமும் சந்தானமும் உடையவளாயிருந்து திடீரென்று இறப்பாளாகில் அவளை நினைத்து நினைத்து துக்கத்தை அடையவேண்டியதாய் நேரிடும். ஆதலால்,

சுலோ || "காம: க்ரோதஸ்ச லோபஸ்ச தேஹே திஷ்டந்தி தஸ்கரா: ஜ்ஞாநரத்நா பஹாராய தஸ்மாஜ்ஜாக்ரத ஜாக்ரத:" "மாதா நாஸ்தி பிதா நாஸ்தி நாஸ்தி பந்து ஸஹோதர: அர்த்தம் நாஸ்தி க்ருஹம் நாஸ்தி தஸ்மாஜ்ஜாக்ரத ஜாக்ரத:" "ஆஶயா பத்யதே லோக: கர்மணா பஹுசிந்தயா ஆயுக்ஷீணம் நஜாநாதி தஸ்மாஜ் ஜாக்ரத ஜாக்ரத:" "ஜந்ம து:கம் ஜரா து:கம் ஜாயா து:கம் புந: புந: ஸம்ஸாரஸாகரம் து:கம் தஸ்மாஜ்ஜாக்ரத ஜாக்ரத:"

என்னும் சுருதிரீதியாய் தேகம் இந்திரியங்கள் முதலானவைகளுக்கு வேருயிருக்கும் ஆத்மாவாகிய தனக்குத் தாய்த் தந்தை களத்திர புத்திர மித்திராதிகளில்லை.

சுலோ || "ஸத்யம் மாதா பிதா ஞாநம் தர்மோ ப்ராதா தயா ஸகீ
ஶாந்திঃ பத்நீ க்ஷமா புத்ரঃ ஷடைதே மம பாந்தவாঃ."

என்னும் பாண்டவகீதா வாக்கியரீதியாய் ஸத்யமே மாதா, ஞானமே பிதா, தர்மமே ஸஹோதரன், தயையே சிநேகிதன், ஸாந்தியே பத்னி, பொருமையே புத்திரன்; இந்த ஆறு குணங்களும் உள்ளவனே முக்தனுவான். என்றால், சர்வதுக்க நாசகரமாகிய பரம உபசாந்தி என்னும் மனைவியுடன்கூடி கிரீடித்துக்கொண்டு பிர்ம்மானந்த சமுத்திரத்தில் மூழ்கியிருக்கும் புண்ணிய புருஷன் ஜீவன் முக்தனுய், சம்சாரவிஷய வியாபாரங்களும் மனுேவிகாரங்களும் இல்லாதவனுய் சுகியா யிருப்பானென்பது சாஸ்திரப் பிரமாணம்.

புத்ரேஷணை.

புத்ரேஷணை:—புத்ரர்களின்மீது ஆசைகொள்ளல்.

"புத்ரேண லோகாந் ஜயதி, அபுத்ரஸ்ய கதிர் நாஸ்தி; புந்நாம்நோ நரகாத் த்ராயதே இதி புத்ரঃ புந் நாம்நோ நரகாத் யஸ்மாத் பிதரம் த்ராயதே ஸ்வயம், தஸ்மாத் புத்ர யிதி ப்ரோக்த ஸ்வயமேவ ஸ்வயம்புவঃ"

என்னும் சுருதிகளைக் கேட்டு அதன் நிஜ ஸ்திதியை அறியாத சில பண்டிதர்களும் பாமரர்களும் விபரீதார்த்தங்களை ஊஹித்து, புத்திரர்களே ஸத்தியமென்றும் புத்திரர்களை உடையவர்களுக்கே இஹபரங்களில் சுகமுண்டென்றும், புத்திரர்கள் இல்லாதவர்களுக்கு சுகமில்லையென்றும், புத்திரர்கள் தாய் தந்தையர்களின் வம்சத்தாரை எல்லாம் புண்ணிய லோகத்திற்கு அனுப்புவார்களென்றும், புத்திரர்கள்இல்லாவிடில் பிதிரு ருணம் தீராதென்றும் தாம் பிரமை அடைவதுமேயல்லாமல், உலகத்தாரையும் பிரமிக்கச் செய்

கின்றார்கள். ஆனால், புத்திரர்களால் இந்த லோகத்திற்கும் பரலோகத்திற்கும் மோக்ஷத்திற்கும் யாதொரு பிரயோஜனமு மில்லை. புத்திரர்கள் பிறவா முன்னும் பிறந்த பின்னும் பிறந்து இறந்தபின்னும் அதிக துக்கமே சம்பவிப்பதல்லாமல் வேறில்லை. புத்திர சப்தத்திற்கு நிஜமாகிய அர்த்தம் விவரித்துச் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

"அலப்யமாநஸ் தநய: பிதரௌ க்லேஶயேச்சிரம்
லப்தோ ஹி கர்ப்பாதேந ப்ரஸவேந ச பாததே
ஜாதஸ்ய க்ரஹரோகாதி குமாரஸ்ய சதுர்த்ததா
உபநீதேப்ய வித்யத்வ மறுத்வாஹஸ்ச பண்டிதே."

"யூநஸ் ச பரதாராதி தாரித்ரயம் ச குடும்பிந:
புத்ரது:கஸ்ய நாஸ்த்யந்தோ தநீ சேந்ம்ரியதே ததா
ஏவம் விவிக்ஷ்ய புத்ரோஸௌ ப்ரீதிம் த்யக்த்வா
நிஜாத்மநி நிஶ்சித்ய பரமப்ரீதிம் வீக்ஷயதே தத ஹர்நிஶம்."

என்னும் யாஞ்ஞ வல்க்யோபநிஷத் வாக்கியரீதியாய் புத்திரர்கள் பிறந்தபோதிலும் பிறவாம லிருந்தபோதிலும் துக்கத்தையே உண்டாகச் செய்கின்றன. எப்படி யென்றால், புத்திரர்க ளில்லாதவர்கள், அபுத்திரர்களானோ மென்னும் துக்கத்தினால் ஒரு பிராமணனை வரவழைத்து பெரிய மணையின்மீது உட்காரச் செய்து அவனை நமஸ்கரித்து "சுவாமீ! எங்களுக்குப் புத்திர சந்தான மில்லாமற் போயிற்றே எங்கள் கதி என்ன" என்று கேட்க, அதற்கு அவன் சில சாஸ்திரங்களைப் பரிசோதித்துப் பார்த்து "நீங்கள் பூர்வ ஜன்மங்களில் பாபகர்மங்களைச் செய்தபடியால் புத்திர சந்தானமில்லாமற்போயிற்று ஆதலால், நீங்கள் ராமேஸ்வராதி புண்ணிய க்ஷேத்திரங்களை சேவித்துத் தீர்த்தமாடிவந்தால் பாபகர்மங்கள்நசித்துப்புத்திரசந்தானமுண்டாகு" மென்று சொல்ல, பிராமணனுடைய வார்த்தையை அவர்கள் நம்பி திரவ்வியங்களை யெடுத்துக்கொண்டு

அநேகமாதங்கள் தீர்த்தயாத்திரைசெய்து ஆங்காங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம்செய்து தானதர்மங்கள் தர்ப்பணங்கள் சர்ப்பசாந்தி நாகப் பிரதிஷ்டை அரசமரப் பிரதக்ஷணம் முதலானவைகளை அநேகம் செய்து செய்து வெறுத்து பிரயாணங்களில் அன்னபானுதிகள் சரியாய் அகப்படாததனுல் தேகம் மெலிந்து சகல துக்கங்களை அனுபவித்தும் இஷ்டசித்தி நிறைவேருமற் போனபடியால், வேறொரு மந்திர ஜோதிடங் கற்றவனை வரவழைத்துத் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்து இதற்கு ஏதாகிலும் உபாயம் சொல்லவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, அந்த மந்திர சாஸ்திரவாதி "உங்களுக்குச் சநி போதாமலிருப்பதால் நவக்கிரகங்களுக்கு அகண்டமேற்றி மந்திரங்களால் அர்ச்சனை செய்வித்து மொக்குகளைப்போட்டு மந்திரித்து சநி நீங்கியபிறகு புத்திர சந்தான முண்டாகு"மென்று சொல்ல அவன் வார்த்தையைக்கேட்டு அதற்குத் தக்க பிரயத்தினங்களைச் செய்தும் சந்தான மில்லாவிட்டால், மற்றொரு மாந்திரீகனை வரவழைத்துக் கேட்டபோது "பேய் பிடித்துக்கொண் டிருப்பதனுல் புத்திர சந்தான மில்லை யென்றும், பேய் ஒட்டுவதற்காக ஐம்பது வராகன் பிடிக்கு மென்று" சொல்லி ஐம்பது வராகனைப் பெற்றுக் கொண்டு ஒருவாரம் வரையில் முழுக்கில்வைத்து உடுக்கையடித்து சிலம்புபோட்டுப் பேயோட்டும் மந்திரங்களைச் சொல்லிமுடித்து இனி உங்களுக்குச் சந்தான முண்டாகுமென்று சொல்லிச் சென்றபிறகு அவர்களுக்குச் சந்தான மில்லாமல் போவதனுல் மிகவும் வியாகூலமடைந்து மற்றொரு சாஸ்திரவாதனை வரவழைத்து "எங்களுக்குச் சந்தான மில்லை எங்கள் கதியென்ன" என்று கேட்க, அவன் சாஸ்திர கிரந்தங்களைப் பரிசோதித்து "ஆஹா! நீங்கள் முன் ஜன்மத்தில் மஹா பாபங்களைச் செய்தவர்கள். அதனுல் உங்க

ளுக்குச் சந்தான மில்லாமற் போயிற்று. நீங்கள் தம்பதிகள் இருவரும் நியம நிஷ்டைகளுடன் நிராஹாரமா (போஜனமில்லாமல்)யிருந்து மஞ்சள் வஸ்திரங்களை உடுத்திவாயைத் தாள்போட்டுத் திருப்பதிமலைக்குச் சென்று திருவேங்கடே சுவரரைத் தரிசித்து நியமம் தவறுமல் நூறு வராகன் காணிக்கைப் போட்டு மாவிளக்குடன் அகண்டம் ஏற்றி முப்பழம் பலகாரங்களுடன் சமாராதனை செய்வித்து வீடு சேர்ந்தவுடன் மறுபடியும் மாவிளக்குப் போட்டு பிராமண சந்தர்ப்பணை செய்வித்தால் உங்களுக்குப் புத்ர சந்தான முண்டாவதற்குச் சந்தேகமில்லை'' யென்று சொல்ல, அவனது வார்த்தையை நம்பி அதுபோல் செய்தும் சந்தானமில்லாமல் துக்கத்தில் மூழ்கியிருக்கிறார்கள். பிறகு,

சுலோ || "கோடாராந்தர்பவோ வஹ்நிஸ் தருமேகம் தஹிஷ்யதி
குபுத்ரஸ்து குலேஜாதః ஸவகுலம் நாஸயேத் பரம்."

என்றிருப்பதனுல் புத்திரனுக்காக அநேகவித பாடுகள்பட்டும் புத்திரன் கிடைக்காமற் போனதால் கடைசியில் நற்குணமுடைய புத்திரன் உண்டாக வேண்டுமென்று ஈசுவரனை பிரார்த்தனை செய்துவந்தார்கள். புத்திர சந்தானமில்லாத தாய் தந்தையர்களுக்குப் பலவித துக்கத்தை உண்டாக்குவதற்குச் சந்தேகமில்லை. இப்படி துக்கப்பட்டு சந்தான முண்டானபோதிலும் அதனுல் துக்கமே உண்டாகின்றது. அஃதெப்படி யென்றுல், சந்தானப் பிரீதியுடையவர்களுக்குத் தெய்வானுகூலத்தினுல் தனக்குத் தானுய்க் கர்ப்பந்தரித்து அக்கர்ப்பம் சிலமாதங்களில் கலங்கிவிட்டால் அதனுல் தாய்தந்தையர்களுக்குத் துக்கத்தை விசேஷமாய் உண்டாக்கும். அப்படிக்கல்லாமல் கர்ப்பம் நின்று பத்து மாதங்களும் பூர்த்தியாய் பிரஸவவேதனை அதிகமாகப் படும்போது அந்த வேதனையைப் பார்க்கச் சகிக்கா

மல் மருத்துவம் செய்யப்பட்டவளை அழைத்துவந்து காட்டியபோது ஐயா! பட்டாச்சாரியரே, உமது பாரியாள் விசேஷமாய்ப் பிரசவவேதனைப் பட்டுக்கொண் டிருப்பதனால் ஏதாகிலும் பிரார்த்தனை செய்துகொள்ளென்று சொல்லுவாள். அதற்குப் பட்டாச்சாரியர் செய்யவேண்டிய பிரார்த்தனைகளெல்லாம் முந்தியே செய்து முடிந்தன; குழந்தைக்கு ஆசைப்பட்டு பெரிய பிராணனுக்கே மோசம் வந்தது. இனி என்னசெய்வேன்? அவள் பிழைத்தால் போதும். ஈசுவரன் எங்களை எல்லா விதத்திலும் சோதித்துத் துக்கத்தையே உண்டாக்குகின்றான் என்று சொல்லி மிகவும் வருத்தமடைவான். ஒருவேளை பிராணனுக்கு அபாயம் உண்டானல் அதனல் அவனுக்கு துக்கமே சம்பவிக்கும். அப்படிக்கல்லாமல் சுகமாய்ப் பிரசவித்தால் சிசுவிற்கு பக்ஷி தோஷங்களும் சந்தி தோஷங்களும் உண்டாகும். இவைகளுக்காகக் குளிஸங்கள் கட்டி. விபூதி மந்திரித்துக்கொடுத்தும், காலை மாலைகளில் மகம்மதீயர்களின் மசூதிக்குக் கொண்டுபோய் நிமாஸ்செய்து வெளியில்வரும் மகம்மதீயர்கள் குழந்தைகளின் முகத்தில் ஊதியபிறகு கொண்டுவருவதும் வழக்கமுண்டு. இப்படிப் பலவிதங்களாய்க் கஷ்டப்பட்டு சிசுவைக் காப்பாற்றுகின்றார்கள். சிசு பிறந்தபிறகு பன்னிரண்டு வருஷங்கள் வரையில் பாலகிரஹ தோஷம் காண்கின்றது. அப்போது மூன்று சந்துகள் கூடியிருக்கும் இடத்தில் பொங்கலிட்டு ஓணன் பலிகொடுத்துப் பூசை செய்கின்றார்கள். இப்பேர்ப்பட்ட கஷ்டத்துடன் பதினைந்து வருஷங்கள் வளர்ந்து துன்மார்க்கனாயிருந்து ஊர்ப்பிள்ளைகளை அடித்துத் தானும் அவர்களால் அடியுண்டு தன் தாய் தந்தையர்களுக்கும் ஊர்ப்பிள்ளைகளின் தாய் தந்தையர்களுக்கும் கலகத்தை உண்டாக்குவதனல் தாய் தந்தையர்களுக்குத் துக்கத்தையே உண்டாக்கு

கின்றான். அப்படிக்கல்லாமல் புத்திசாலியா யிருப்பா னாகில் அவனுக்கு எட்டாவது வயதில் உபநயனம் செய்து அவனைப் பள்ளிக்கு அனுப்புவார்கள். அவன் வாசிப் புடையவனாகாவிட்டால் அவன் மூடபுத்தியை அறியாமல் அவனுடைய தாய் தந்தையர்கள் உபாத்தியாயரிடம் சென்று எங்கள் பிள்ளைக்கு நன்றாய்ப் படிப்புச் சொல்லா மல் மாதம் மாதம் சம்பளம் மாத்திரம் பெற்றுக்கொண்டீர், உமக்கு ருணமிருந்து கொடுத்தோம் என்று தூஷணை செய்து சண்டையிடுவார்கள். பிள்ளைக்கு வித்தை வரா விட்டால் துக்கத்தையே உண்டாக்கும். அப்படி வித்தியா சீனனாயிராமல் வாசிப்புடையவனா யிருப்பானாகில் அவ னுக்கு விவாகம் செய்விக்கவேண்டுமென்று எண்ணிப் பெண்ணிருக்குமிடம் சென்று பெண்ணைக் கேட்டபோது, ஒருவன் முந்நூறு வராகன் கொடுக்கவேண்டும் அன்றியும் தலைச்சாமானுடன் வங்கி ஒட்டியாணமும் போடவேண்டு மென்று கேட்பான். மற்றொருவன் ஐந்நூறு வராகன் கொடுத்து நாங்கள் கேட்கும் ஆபரணங்களைப் போட வேண்டுமென்று கேட்டபோது தமக்கு திரவ்வியம் இல்லா மல் போயிற்றல்லவா என்று மிகவும் துக்காகிராந்தனா யிருக்கும்போது, மற்றொருவன் கன்னிகாதானமாய்க் கொடுப்பதற்குச் சம்மதித்து பொருத்த நிமித்தங்கள் பார்த்தபோது வயிற்றுப் பொருத்தமில்லை நாங்கள் பெண் கொடுக்கமாட்டோம் என்று சொன்னவுடன் ஆஹா! கைக் கெட்டினது வாய்க் கெட்டாமல் போயிற்றல்லவா என்று துக்கத்தையே உண்டாக்கும். அப்படிக் கல்லாமல் பொருத்தநிமித்தங்கள் சரிப்பட்டு விவாகம் முடிந்தவுடன் அவள் அழகும் நற்குணமும் இல்லாவிட்டால் அதனால் மனைவியாகூலமே உண்டாகும். அப்படிக்கல்லாமல் எல்லா சுகுணங்களும் இருந்தபோதிலும் அவள் க்ஷயரோகத்துடன்

மிகவும் மெலிந்து இருப்பாளாகில் அவளுக்குக் கூஷ்ப்பாண்டலேக்கியம் முதலானவைகள் செய்து தகுந்த ஔஷதங்களுடன் கொடுத்தும் வியாதி தீராமலிருந்தால் குமாரனது காமம் அதிகரித்து மனைவி இனி உபயோகப் படமாட்டாளென்று எண்ணி பரஸ்திரீகளை மோகித்து வியாதி சம்பவித்தபோது திரவ்வியம் விரயமாவதனுல் தாய் தந்தையர்களுக்குத் துக்கம் உண்டாவதுமே யன்றி, இவன் மோகித்த பர ஸ்திரீயினுடைய புருஷனுல் தாவா செய்யப்பட்டு ராஜாங்கத்தாரால் தண்டனை யடைந்தபோது தாய் தந்தையர்களுக்குப் பெரிய துக்கத்தையே உண்டாக்கும். அப்படிக்கல்லாமல் நல்ல மருமகளாய் வந்துவாய்த்துப் புத்திர சந்தானம் அதிகமா யுண்டாய், தாரித்திரிய தோஷத்தினுல் சம்சாரபந்தத்தில் அகப்பட்டுக்கொண்டு அவஸ்தைப் பட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்து அவனது தாய் தந்தையர்கள் மிகவும் துக்கப்பட்டுக் கொண்டிருப்பார்கள். இப்படித் துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தாய் தந்தையர்களை சிலஜனங்கள்பார்த்து என்ன வியசனமா யிருக்கின்றீர்கள் என்று கேட்டபோது புத்திர பௌத்ராதிகளெல்லோரும் கட்ட வஸ்திரமும் புசிப்பதற்கு அன்னமும் இல்லாமல் துக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றுர்கள். அதைப்பார்த்து வருத்தமடைகின்றேம். எங்களுக்கு மரணமாகிலும் வரவில்லையே என்று சொல்லுவார்கள். ஆதலால், தாய் தந்தையர்களுக்குப் புத்திரன் இல்லாவிட்டாலும் இருந்தாலும் துக்கத்தையே உண்டாக்குகின்றது. இப்படிப்பட்ட புத்திரர்களால் நற்கதி உண்டாகுமென்பது என்ன நிச்சயம்.

தாய் தந்தையர்கள் மரணமடைந்தபோது அவர்களுக்காக புத்திரர்கள்செய்யும் சிரார்த்தம் தர்ப்பணம் தானம் முதலானவைகளினுல் அவர்கள் திருப்தி அடைந்து நற்கதி அடைவார்களென்று கர்மகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்

கின்றது. ஆதலால், புத்திரன் எப்படிப் பட்டவனுயிருந்த போதிலும் இருந்தே தீரவேண்டுமென்பது லோகப்பிரசித்தியா யிருக்கின்றது. புத்திரர்கள் செய்யும் தானசிரார்த்தங்களினுல் தாய் தந்தையர்களுக்குத் திருப்தியும் நல்லகதியும் உண்டாவது ஸத்தியமாயிருந்தால் தாய் தந்தையர்கள் ஜீவித்திருக்கும்போது புத்திரர்கள், தாய் தந்தையர்களின் பெயரைச் சொல்லி சில பிராமணர்களுக்கு ஷட் ரசங்களுடன் அவரவர்களுக்கு இஷ்டமான பதார்த்தங்களைத் திருப்தியாய்ப் புசிக்கும்வரையில் அளித்து, தனது தாய் தந்தையர்களுக்குப் போஜனம் வைக்காமலிருந்தால், அந்தப் பிராமணர்கள் திருப்தியுடன் புஜித்தது தாய் தந்தையர்களினுடைய பசியைப் போக்கடிக்குமா? போக்கடிக்காதல்லவா? அப்படியிருக்க, அவர்கள் மரணமடைந்தபின் அவர்களுக்காக புத்திரர்கள் செய்யும் சிரார்த்த தானுதிகள் அவர்களுக்குத் திருப்தியையும் நல்ல கதியையும் எப்படியுண்டாக்கும். ஆனுல், பித்ரு தேவதைகளைக் குறித்துச் செய்யும் சிரார்த்த தர்ப்பண தானுதிகள் வியர்த்தமாவென்று கேட்கின்றீர்களோ, காரண மில்லாமல் காரியமுண்டாகமாட்டா. ஆதலால், அவர்கள் பெயரைச்சொல்லி புத்திரர்கள் செய்யும் தானங்கள் அந்தப் புத்திரர்களின் நற்கதிக்கே காரணமா யிருக்கின்றனவே யல்லாமல் வியர்த்தமாகமாட்டா. கருமகாண்டவிதிப்படி ஸ்தூலசரீரம் வீழ்ந்தபோது ஜீவன் சூக்ஷ்ம சரீரத்துடன் சந்திரலோகம் போய்ச் சேர்ந்து சமஸ்த போகங்களையும் அனுபவித்துப் பிறகு, மேகத்துடன் போய்ச்சேர்ந்து ஜலரூபமாய் ஜந்துக்களுக்கு வேண்டிய ஆகாராதி தானியங்களில் வீழ்ந்து அத்தான்யம் அன்னமாய், அந்த அன்னத்திலிருந்து ரசமுண்டாய், அந்தரசம் ரத்தரூபமாய், அந்தரத்தம் மாமிசத்தில் பிரவேசித்து, மாமிசத்திலிருந்து கொழுப்பிலும், கொழுப்பி

லிருந்து அஸ்தி (எலும்பு) களிலும் ' அஸ்திகளிலிருந்து மூளையிலும், மூளையிலிருந்து சுக்கிலமுண்டாய் அந்தச் சுக்கிலம் ஸ்திரீ கர்ப்பத்தில் போய்ப் பிரவேசித்து ஜன்மமெடுக்கின்றதென்று சிலர் சொல்லுகின்றார்கள். ஜீவன் தேஜோமார்க்கமாய்ச் சூர்யலோகம் சென்று பிறகு பிரம்மலோகம் சேர்ந்து பிரம்மத்துடன் கலந்து முக்தி அடைகின்றார்களென்று சிலர் சொல்லுகின்றார்கள். மற்றும் சிலர், ஜீவசொரூபியாயிருக்கும் தான், மற்றொரு தாய் கர்ப்பத்தின் ஸ்தூல சரீரத்தில்போய்ப் பிரவேசிப்பதற்காக இந்த ஸ்தூல சரீரத்தை விட்டுவிடுகின்றதென்றும் சொல்லுவார்கள்.

சுலோ || "ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யுஃ த்ருவம் ஜன்ம ம்ருதஸ்யச, அத்யவாப்தஸதாம்தேவ ம்ருத்யுர் வை ப்ராணிநாம் த்ருவம்."

என்னும் பர்த்ருஹரி வாக்கியரீதியாய் தாய் தந்தையர்கள் மறுபடியும் ஜன்மமெடுத்த போதிலும் அல்லது மோக்ஷத்தை அடைந்தபோதிலும் புத்திரர்கள் அவர்களைக் குறித்துச் செய்யும் புண்ணிய காரியபலன்கள் அவர்களுக்குச் சேரமாட்டா. இதற்குத் திருஷ்டாந்தம் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

ஒரு பிராமண தம்பதிகள் இருவரும் அவர்களின் கர்மானுசாரமாய்த் தன் புத்திரனது வீட்டில் ரிஷபமா (எருதா)யும், நாயாயும் பிறந்திருந்தார்கள். அந்தப் புத்திரன் தனது தந்தையின் சிரார்த்ததிற்காகச் செய்யவேண்டிய கர்மங்களைச் செய்துகொண்டிருக்கும் சமயத்தில் அந்த ரிஷபத்திற்கு வைக்கோல்போட மறந்துவிட்டான். சிரார்த்தத்திற்காகக் கொண்டுவந்து வைத்திருந்த பாலில் சர்ப்பம் விஷத்தைக் கக்கிற்று. நாய், அதைப் பார்த்திருந்து அந்தப் பாலைக் கீழே கவிழ்த்தது. அதைப் பிராமணன் கண்டு, வயிறெரிந்து நாயைத் தடியாலடித்துக் கட்டிவிட்டு அதற்குச் சாதம் வைக்காமல் போனான். ரிஷப, நாயா

யிருக்கும் அவனது தாய் தந்தையர்கள் பூர்வ ஜன்மங்களில் அநேக விரதங்களை அனுஷ்டித்து வந்ததனால் அந்த ரிஷப நாய்களுக்குப் பூர்வ ஞானமுண்டாய், இவன் நமக்காகவைத்த சிராத்தத்தினால் நமக்கென்ன திருப்தியுண்டாயிற்று. நமக்குத்தீனியைப் போடாமல் கொல்லுகின்றானேயென்று ரிஷபம் துக்கத்துடன் சொல்லிற்று. சகல பாஷா ஞானமுடைய அந்தப் பிராமண குமாரன், அவ்வார்த்தையைக் கேட்டு மனம் நொந்து அவைகளின் பசியைத் தீர்த்தான். ஆதலால், தாய் தந்தையர்களுக்காகப் புத்திரர்கள் செய்யும் சிராத்தங்கள் அவர்களுக்குச் சேரமாட்டா. ஸநகன் ஸநந்தநன் ஸநத்குமாரன் ஸநத்சுஜாதன் நாரதர் ஹநுமான் பீஷ்மர் முதலானவர்கள் புத்திரர்களில்லாமலே ஸத்கதி அடைந்த விஷயம் லோகப் பிரசித்தமாயில்லையா?

சுலோ || "ஐஸ்வர்யம் ஶங்கரம் சைவ ஆரோக்யம் பாஸ்கரம் ததா ஆயுஷ்யம் ஸ்ருஷ்டிகர்த்தாரம் மோக்ஷமிஸ்சேஜ் ஜநார்த்தநம்."

என்னும் ஸ்மிருதியினால் ஸ்ரீ மஹா விஷ்ணுவாகிய கிருஷ்ண மூர்த்தியைப் புத்திரனாய்ப் பெற்ற தேவகீ வசுதேவர்கள் கிருஷ்ணன் மரணமடைந்த வார்த்தையை அர்ஜுனனால் கேள்விப்பட்டு புத்திர துக்கத்தை அனுபவித்து மரணமடைந்து தமது சுகிருத வசத்தினால் சத்கதியை அடைந்தார்கள். இந்தப் புத்திரனால் தேவகீ வசுதேவர்களுக்கு என்ன லாபமுண்டாயிற்று. மேலும் ஸ்ரீராம மூர்த்தியைப் புத்திரனாய்ப் பெற்ற தசரதன் புத்திரசோகத்தினால் இறந்து, தேவதா சக்ரவர்த்தியாகிய தேவேந்திரனால் கௌரவிக்கப்பட்டு, சுவர்க்கலோகத்தி லிருக்கும்போது ராவணனை வதைத்த ஸ்ரீராமமூர்த்தியை, பிரமன் சிவன் தேவேந்திராதி தேவதைகள் தரிசிக்க வந்தபோது அவர்களுடன் கூடவந்த தசரதனை ஸ்ரீராமமூர்த்தி நமஸ்கரித்ததாய், ஸ்ரீ ராமாயணத்தில் சொல்லப் பட்டிருக்கின்றது. பிரம

ருத்திரேந்திராதிகளைத் தசரதன் தரிசனம் செய்தது ஸ்ரீராமமூர்த்தியைப் புத்திரனாகப் பெற்றதனாலல்லவோ என்றாலோ, "ஜ்யோதிஷ்டோமம் ஸ்வர்க்ககாமோ யஜேத்" என்று சுருதி யிருப்பதனால் இந்த தசரதன் அசுவமேத முதலான யாகங்களைச் செய்ததாலும் தபோ நிஷ்டர்களாகிய வசிஷ்ட தூர்வாச மகரிஷிகளைப் பூஜித்த புண்ணிய விசேஷத்தினாலும் சுவர்க்கலோகப் பிராப்தியும் பிரமாதி தேவதா தரிசனமும் கிடைத்ததே யொழிய ஸ்ரீராமனைப் புத்திரனாய்ப் பெற்றதனாலல்ல. புத்திரனால் நல்லகதி அடைவது நிச்சயமா யிருந்தால் ஸ்ரீராமனைப் புத்திரனாய்ப்பெற்ற தசரதன் மறு பிறப்பில்லாத பரம பிராப்தியை அடைய வேண்டியதே யொழிய புனர் ஜன்மத்திற்குக் காரணமா யிருக்கும் சுவர்க்காதி போகங்களை அடையத்தக்கதல்ல. மேலும் இரண்ணியன், பிரஹ்லாதனை தன் புத்திரனால் அநேக துக்கங்களை அனுபவித்துப் பிறகு தன் புத்திரனாலேயே மாண்டான். அன்றியும் திருதராஷ்டிரன் துர்யோதனாதிகளாகிய நூறு குமாரர்களைப் பெற்று அவர்கள் யுத்தத்தில் மாண்டதனால் மிகுந்த துக்காக் கிராந்தனாயிருந்து பிறகு தன் புண்ணிய விசேஷத்தினால் பரம கதியை அடைந்தான். இவ்வாறே இன்னும் அநேகர்கள் புத்திரசோகத்தினால் நரகத்தை அடைந்தார்கள். ஆதலால், இந்தப் புத்திரர்களால் தாய் தந்தையர்களுக்குத் துக்கமும் மரணமும் நரகமும் உண்டாகுமென்று பிரமாணமுண்டு. பிராரப்தத்தில் இல்லாத புத்திரன் எவ்விதமாய் உண்டாகும். இந்த ஜன்மத்தில் புத்திரனுக்காக கஷ்டப்படுவதனால் இது சஞ்சிதத்தில் போய்ச்சேர்ந்து அதன் பலனை மறுஜன்மத்தில் தவறாமல் அடைவார்கள். ஆனால், "அபுத்ரஸ்ய கதிர்நாஸ்தி" என்னும் சுருதி அசத்தியமா என்றாலோ, அந்த சுருதிக்கு நிஜமாகிய அர்த்தம் என்ன

வென்றால், 'புத்' என்னும் கோர நரகத்திலிருக்கும் தாய் தந்தைகளை மேல் கிளப்பி ரக்ஷிக்கப்பட்டவன் புத்திரன் என்பது சுருதியினுடைய அர்த்தம். ஞானகாண்டரீதியாய் நரகமென்றால் துக்கம். சுவர்க்கமென்றால் சந்தோஷம். ஒருவன் மஹா துக்கத்தில் அகப்பட்டுக்கொண்டு ஆஹார நித்திரைகளில்லாமல் பிராணனை விட்டுவிடவேண்டு மென்று எண்ணி தனக்கு நிச்சயம் உண்டானபோது தேகம் முதலாகிய பிரபஞ்சமெல்லாம் சொப்பனம் போன் றனவென்றும், பிரபஞ்ச விலக்ஷணனாகிய பரப் பிரம்மம் ஒன்றே சத்தியமானது என்றும் பரப் பிரம்மமாகிய எனக்கு துக்கமேது என்னும் திவ்விய ஞானத்தை உண் டாக்கி முன்னிருந்த துக்கத்திலிருந்து உத்தரிப்பது விஞ் ஞானமென்றும், இப்படிப்பட்ட விஞ்ஞானம் உண்டாவதே புத்திரன் உண்டாவது என்பதேயாம். அப்படிப்பட்ட ஞானம் இல்லாமல்போவதே புத்திரன் இல்லாமற்போவது. ஆதலால், பரம வைராக்கிய முடையவனா யிருந்து பர மார்த்த ஞானத்தை சிரவண மநந நிதித்தியாசநங்களினால் பிரபலிக்கச்செய்து புத்திராதி சகல துக்கங்களையும் விட் டுச் சித்த விஸ்ராந்தி அடைந்து ஆத்மசொரூபனாய் தன் னில்தான் விசேஷ பிரீதி யுடையவனாய் யிருந்து சதா ஆத்மநிஷ்டை செய்து மோக்ஷமடைய வேண்டுமென்பது வேதாந்த சித்தாந்தத்தின் துணிபாம். மோக்ஷப் பிராப் தத்திற்கு ஞானவைராக்கியங்களே முக்கியமானது என்ப தற்குச் சுருதி ஸ்மிருதிப் பிரமாணம். "ந கர்மணா நப்ர ஜயா தநேந த்யாகேநைகே அம்ருதத்வமாநஶு:" என்று உபநிஷத்தும், "ஞாநாதேவ து கைவல்யம்" என்று சுருதி யும், "பாகஸ்ய வஹ்நிவத் ஜ்ஞாநம் விநா மோக்ஷோ நஸித் யதி" என்று ஆத்மபோத ப்ரகாசிகை, "ந ஹி ஞாநேந ஸத்ருஶம் பவித்ரமிஹ வித்யதே" என்று கீதையும், "ந கர்

மணு மநுஷ்டாநைர் ந தாநைஸ் தபஸாபி வா கைவல்யம் லபதேமர்த்யஃ கிந்து ஞாநேந கேவலம்'' என்று சிவகீதையும் பிரமாணங்களுண்டு.

த னே ஷ ணை.

தனேஷணை,—பொருளாசை கொள்ளல்.

சுலோ|| ''யஸ்யாஸ்தி வித்தம் ஸ நரஃ குலீநஸ் ஸ பண்டிதஸ் ச ஶ்ருதிமாந் குணஜ்ஞஃ ஸ யேவ வக்தா ஸ ச தர்ஶநீய ஸ்ஸர்வே குணாஃ காஞ்சநமாஶ்ரயந்தே.''

என்னும் பர்த்ருஹரி வாக்கியரீதியாய் லௌகிக சாஸ்திர ஞானமுடைய சில பண்டிதர்களும் பாமரர்களும், தனமே எல்லா புருஷார்த்தங்களிலும் உத்தமமான தென்றும், தனமுடையவனே நல்ல வம்சமும் பாண்டித்யமும் சகல வேதசாஸ்திரங்களும் விஷய ஞானமும் எல்லா நற்குணமும் வாசா கைங்கரிய முடையவ னென்றும், சொல்லுவார்கள். தனமில்லாவிடில், மேற்சொல்லிய பாண்டித்யமும் சகலவேத சாஸ்திரங்களும் விஷயஞானமும் எல்லா நற்குணமும் வாக்சாலத்வமும் உண்டாயிருந்த போதிலும் வியர்த்தமானதென்றும், அவன் வார்த்தை உபயோகப் படாதென்றும் சொல்லுவார்கள். இகபர லோகத்திற்கும் தனமே முக்கிய பிரதானமானதென்றும் பரமபதமும் தனத்தினலேயே உண்டாகுமென்றும் தனமுடையவனுக்குக் கோரிய வஸ்துக்களெல்லாம் சித்திக்குமென்றும் தனமுடையவன் புத்தி யில்லாதவனு யிருந்தாலும் அவனை உலகத்தார் கொண்டாடுவார்களென்றும் சொல்லுவார்கள். நற்குணங்களிருந்தும் தனமில்லாவிட்டால் அவனை உலகத்தார் நிந்தனை செய்வார்கள். ஆதலால், ஏழ்மையை விடத் தாழ்ந்தது பிரபஞ்சத்தில் வேறொன்றில்லை. தனமுடைய

வனுக்கு உலகெலாம் உள்ளங்கையில் இருக்குமென்று எண்ணி, அந்தத் தனத்தைச் சம்பாதிப்பதற்காகப் படாத கஷ்டங்களெல்லாம் பட்டுச் செல்லக்கூடாத இடங்களெல்லாம் சென்று செய்யக்கூடாத வேலைகளை எல்லாம் செய்கின்றார்கள்.

பல்லெலாந் தெரியக்காட்டிப் பருவரன் முகத்திற்கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லிநாட்டித் துணைக்கரம் விறித்துநீட்டி
மல்லெலா மகலவொட்டி மானமென்பதனைவீட்டி
யில்லெலா மிரத்தலந்தோ விழிவிழி வெந்தனூன்றும்.

சுலோ|| "அர்த்தாநாமார்ஜநேதுঃக மார்ஜிதாநாஞ்ச ரக்ஷணே,
காமே துঃகம் வ்யயே துঃகம் கிமர்த்தம் துঃகபாஜனம்."
"ஆமாபிமாசீ மவமாநயந்தம் ஆலோகயந்தம் ஜகதிந்த்ரஜாலம்."

என்று மநுவசனத்திலும் மஹாவாக்ய ரத்நாவளியிலும் சொல்லியிருக்கின்றது. ஆதலால், காலத்ரயத்திலும் துக்கமயமாகிய தனத்தின்மீது ஞானிகள் ஆசைவையாமல் அதன் வரத்துப்போக்குகளுக்குத் துக்கிக்காமல் தாம் அனுபவித்துக்கொண்டும் பிறருக்குக் கொடுத்துக் கொண்டும் நித்தியானந்தத்தை அடைந்துகொண்டுமிருப்பார்கள். பாமரர்கள் தனத்தைச் சம்பாதித்து அதை, தாம் அனுபவிக்காமலும் பிறருக்குக் கொடாமலும் பயிர் விழலைக் காத்துக்கொண்டிருக்கும் பொம்மை போலிருந்து கடைசியில், அந்தத் தனம் கள்ளர்களுக்கோ துர் வியாஜ்ஜியத்திற்கோ அக்நிக்கோ தான் மரணமடைந்தபிறகு தாயாதிகளுக்கோ அல்லது மனைவியின் அபிமான புருஷனுக்கோ போய்ச் சேர்ந்து விடுகின்றது. தனத்தை எவர்களாகிலும் கொள்ளையிடுவார்களென்று எண்ணி புதைத்து வைத்தால் அது பூமாதேவிக்கு சுவாதீனமாகும். ஆதலால், தனம் தனக்கு துக்கத்தையே உண்டாக்குவதற்குக் காரணமாயிருக்கின்றது. வாயையும் வயிற்றையும் கட்டி சேர்த்து

வைத்த தனத்தை வியர்த்தமாய் உலகில் போக்கடித்துக் கொண்டவர்கள் அதிக துக்கத்தில் மூழ்கி அன்னபானுதிகளில்லாமல் மெலிந்து மரணமடைந்தவர்கள் அநேக பேர்களுண்டு. மேலும் தனத்தை விருத்தி செய்யாமல் சிலவு செய்துவந்தால் அந்த தனம் நாளாவட்டத்தில் குறைந்து விடுமென்று எண்ணி, வீடுகள் பூமி தோட்டம் துரவு முதலானவைகளை அடகுவைத்து வட்டிக்குக் கொடுத்தி, அதனுல் தாயா திகளின் வழக்குகள் நேர்ந்தாலும் அல்லது திருட்டுச் சொத்தென்று வியாஜ்ஜியம் நேரிட்டாலும் அதனுல் துக்கத்தையே உண்டாக்கும். அப்படிக்கல்லாமல் தான்கொடுத்த ரொக்கம் முழுமையும் ஒரே முறையாய் வரவேண்டுமென்ருல் அது கஷ்டசாத்தியமேயாகும். தான் கொடுத்த தொகை சிறுகச்சிறுக வந்து சேருமேயொழிய ஒரே முறையாய் வருமென்று நினைக்கலாகாது. விசேஷ லாபத்திற்கு ஆசைப்பட்டுச் சரக்குகளை வாங்கித் தூரதேசம் செல்வதற்காகக் கப்பல் வியாபாரம் செய்யத்தொடங்கியபோது காற்று மழைகளால் கப்பலுக்கு அபாயம் நேரிட்டாலும், மாட்டு வண்டிகளில் செல்லும்போது கள்ளர்களால் சரக்குகளைக் கொள்ளையடித்த போதிலும் அதனுல் தனக்கு வேதனையை உண்டாக்கும். அப்படிக்கல்லாமல் தான் நிச்சயித்த தேசத்திற்குச் சரக்குகள் போய்ச்சேர்ந்து, சரக்குகளைக் கடன்கொடுதது பணம் கொடாவிட்டாலும், விலை குறைந்தாலும் கறையான் பிடித்துச் சரக்குகள் கெட்டாலும் தீப்பட்டாலும் களவுபோனுலும் இவைகளால் மனேவியாகூலமே உண்டாகும். இப்படிப்பட்ட எவ்வித அபாயங்களு மில்லாமல் விலையுடன் விற்பனைசெய்து அந்த தனத்தை ‘உண்டி’ எழுதி உண்டிவாயிதாப்போல் பணம் கொடுக்க தவறிவிட்டால் உண்டி கொடுத்தவனிடம் சென்று தனம் கொடுக்கும்படி கேட்

டால் நான் மிகவும் நஷ்டமடைந்தேனென்று வேஷம் போட்டு தனத்தை அபகரித்தால் அதனுல் துக்கமே உண்டாகும். அப்படிக்கல்லாமல் தனம் சுகமாய் வீடுசேர்ந்தால் அதை, பந்துக்கள் சுற்றத்தார் சிநேகிதர்கள் புத்திரர்கள் சகோதரர்கள் முதலானேர் அபகரிக்கப் பார்ப்பார்கள். இவன் ஏமாருமல் சாக்கிரதையுடனிருந்தால், பந்துக்கள் முதலானவர்களின் எண்ணம் ஈடேறமாட்டா. அதனுல் அவர்கள் அவனைக் கொல்ல எண்ணங்கொள்வார்கள். தன் பந்துக்களே இவ்வாறிருந்தால் பிறரை சொல்லவும் வேண்டுமோ ! இந்த தனத்திற்குப் 'பிராணகாதகி' (ஆட்கொல்லி)என்றும் பெயருண்டு. பூர்வம் சிவஞ்ஞா என்னும் ஒரு மஹாபுருஷன் தன் பத்திநியுடன் காட்டுக்குச் சென்று விறகுகளைவெட்டிச் சுமைகட்டி நாட்டில் விற்பனை செய்து ஜீவிப்பது வழக்கம். இப்படி காலங்கழித்து வரும் நாளில் ஒருநாள் விறகுகளை வெட்டும்போது அந்த தம்பதிகளுக்கு ஸமீபமாய் இருந்த புதரில் தனம் காணப்பட்டது. அதை அவர்கள் பார்த்தவுடன் ஆட்கொல்லி என்று பயந்து ஒடும்போது, அம்மார்க்கமாய் வந்துகொண்டிருக்கும் சகோதரர்கள் இருவரும் அவர்களைப் பார்த்து நீங்களேன் ஓடுகின்றீர்களென்று கேட்டார்கள். பிராணகாதகியைப் பார்த்து ஓடுகின்ருேமென்று சொல்லினர்கள். அந்தப் பிராணகாதகி எப்படிப் பட்டதோ பார்ப்போம் சற்றே காட்டுமென்று கேட்டார்கள். அவன், அவர்களை அழைத்துக்கொண்டு சென்று தூரமாய் நின்று புதரைக் காட்டினன். அவர்கள் புதரிலிருக்கும் தனத்தைப்பார்த்து இவர்கள் பைத்தியம் பிடித்தவர்களென்று எண்ணி அவர்களைப் போகும்படிச் சொல்லி சகோதரர்கள் இருவரும் மிகவும் ஒற்றுமையாயிருந்து ரொக்கத்தை எல்லாம் மஹாசந்தோஷமாய் எடுத்துக்கொண்டு சமீபமாயிருக்கும் கிராமம்

சென்று பங்கிட்டுக் கொள்ளலாமென்று சொல்லி அதை ஓரிடத்தில்மறைத்து மூத்தோன் அவ்விடமே காவலிருந்து சகோதரனைப் போஜன பதார்த்தங்களைக் கொண்டுவரும் படி கிராமத்திற்குள் அனுப்பினன். சகோதரன் செல்லும் போது,நான் ஒருவனே இந்த தனத்தை யெல்லாம் கிரகிக்கும்பக்ஷத்தில் அநேக காலம் மிகவும் சுகமாய் ஜீவித்திருக்கலாம் இவனுக்கு ஏன் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும் என்று எண்ணி, தமையனைக் கொன்றுவிட நினைத்து போஜன பதார்த்தங்களை வாங்கி அதில் சிலவற்றைத் தான் புசித்து மற்றவைகளில் விஷத்தைக் கலந்துகொண்டு வந்தான். தனத்தினிடம் காத்திருந்த தமையன் சகோதரனுக்குத் தனத்தைப் பங்கிட்டுக்கொடுக்க இஷ்டமில்லாமல் அவனை வெட்டிவிட நிச்சயித்து தன்னிடமிருந்த கத்தியை நன்ருகத் தீட்டித் தயார்செய்து வைத்துக்கொண்டிருந்தான். சகோதரன்வந்து தின்பண்டங்களை கீழே வைக்கக் குனிந்தான். உடனே தமையன் தன் தம்பியை, கத்தியால் ஒரே வெட்டாய் வீசி நறுக்கி ஓரிடத்தில் புதைத்துவிட்டு, விஷங்கலந்த பதார்த்தங்களைப் புசித்துத் தானும் மாண்டான். ஆதலால், ‖ சுலோ "மாதா புத்ர விரோதாய ஹிரண்யாய நமோ நமஃ" என்னும் சுருதி வாக்கிய ரீதியாய் ஆஹா ! தனம் அவர்களை எப்படிப்பட்ட ஸ்திதிக்குக் கொண்டுவந்தது பாருங்கள். பதினெட்டு தினத்திற்குள் கௌரவர்களின் பதினேரு அக்ஷௌஹினி சதுரங்க சேனைகளும், பாண்டவர்களின் ஏழு அக்ஷௌஹினி சதுரங்க சேனைகளும் மாண்டது தனத்திற்காக வல்லவா. ராவணுதி ராக்ஷஸர்கள் தங்கள் மதத்தினலல்லவோ அன்னிய ஸ்திரீகளையும் தனத்தையும் அபகரிக்க எண்ணி மாண்டார்கள். சுலோ ‖ "பாகஸ்ய வஹ்நிவத் ஞானம் விநா மோக்ஷோ நஹித்யதி." என்னும் ஆசார்ய வாக்கியத்தினல் நல்ல கதிக்கு ஞானம் காரணமேயொழிய தனம் காரணமன்று.

ஆதலால், தனம் பிராண் ஹானியை உண்டாக்குவதற்கு முக்கிய காரணமா யிருப்பதுமேயன்றி மானஹானியையும் உண்டாக்கும். தனமுடையவன், நல்லகுணங்களில்லாமல் ஸ்திரீலோலனு யிருந்தாலும் மதுபானம் செய்பவனுயிருந்தாலும் சூதாடுபவனுயிருந்தாலும், மானஹானி உண்டாவதற்குச் சந்தேஹமில்லை. ஆதலால், இஹலோக சுகத்திற்குச் சாதகமானதும் சர்வ துக்கத்திற்கு உறைவிடமாயிருப்பதுமாகிய தனத்தின்மீது மிகவும் பிரீதி வைக்காமல்,இஹ பரலோக சுகசாதகமும் சகல துக்கநாசனமும் பரம மோக்ஷ சாதனமும் நிரதிச யானந்தமென்னும் பிரம்மஞானமே மஹா தனமென்றும் அவைகளைச் சம்பாதித்து, துர்ஜனர்களாகிய உட்சத்துருக்களை ஜயித்து ஊர்ச்சித மடைந்தவனே, புண்ணிய புருஷனென்பது வேதாந்த சித்தாந்தத்தின் முடிவாகும்.

ஆதலால், இந்த ஈஷணுத் திரயங்கள் சமுத்திரத்தைப் போன்றன. பெண்டு பிள்ளைகளுக்காகத் தனத்தைச் சம்பாதித்துத் தனது நிஜசொரூபத்தை மறந்து தான் ஜீவிக்கும் காலம் வெகு அற்பமெனச் சற்ருகிலும் தெரிந்துகொள்ளாமல், மரணம் அடையும் வரையிலும் இந்த அநித்யமான திரவ்வியத்தையே, பெண்டு பிள்ளைகளுக்காகச் சம்பாதித்துக் கொண்டிருப்பார்கள். மரணகாலம் வந்தபோது தனது நிஜசொரூபம் தெரிந்துகொள்ளாததனுல் மிருத்யுவிற்கு உட்பட்ட, விட்டில் பூச்சிகள் தீபத்தைப் பார்த்துப் பழமென பிரமையடைந்ததுபோல், மனிதர்கள் 'நாரீ ஸ்தந பர நாபீதேஸம், த்ருஷ்ட்வா மாகா மோஹாவேஸம், ஏதன் மாம்ஸவஸாதி விகாரம், மநஸி விசிந்தய வாரம் வாரம்.' என்னும் ஸ்ரீ சங்கராசாரியர் வாக்கியரீதியாய், அஸ்திகள் சர்மம் நரம்பு ரோமம் ரத்தம் மாமிசம் மஜ்ஜை (கொழுப்பு) மலம் மூத்திரம் முதலானவைகளினுல் நிறைந்திருக்கும்

ஸ்திரீ ரூபத்தைப் பார்த்துப் பிரமையடைந்து அவர்கள் சம் ரக்ஷணார்த்தமாய்ப் பாபங்களுக் குட்பட்டுப் பயப்படா மல் திரவ்வியத்தைச் சம்பாதித்துக்கொண்டு சில நாளைக் குள் ஜீவர்கள் இச்சரீரத்தைவிட்டு மறுபடியும் வேறு சரீர மெடுக்கின்றார்கள். ஆதலால், இப்படி இறந்த ஸ்திரீ புரு ஷர்கள், மறுபடியும் எவ்விதமாய் மாறிமாறி வருகின்றார்க ளென்றால்,

சுரு || யஃ ஸ்தநஃ பூர்வபீதஸ்தம் நிஷ்பீட்ய முதமச்நுதே
யஸ்மாத் ஜாதோ பகாத் பூர்வம் தஸ்மிந்நேவ பகே ரமந்.''

"என்னையும் நோக்கி யென்னல்குலும் நோக்கி
யேந்திளங் கொங்கையும் நோக்குகின்றார்
அன்னையென்னைக்குமென் றஞ்சுகின்றேனச்
சோவொருவரழகியவா.'' [பெரிய திருமொழி.]

என்னும் யோக தத்வோபநிஷத் வாக்கியரீதியாயும், பெரிய திருமொழி வாக்கியரீதியாயும், பூர்வம் எந்த ஸ்தனங்களில் பாலைக்குடித்தானோ, அந்த ஸ்தனங்களையே பார்த்து இப்போது மோகித்து சந்தோஷிக்கின்றான். எந்த யோநியில் முன் பிறந்தானோ அந்த யோநியைப் பார்த்து இப்போது சம்போகம் செய்கின்றான்.

பிறந்திடத்தைத்தேடுதே பேதைமடநெஞ்சம்
கறந்திடத்தைத் தேடுதே கண்.

சுரு|| "யா மாதா ஸா புநர் பார்யா யா பார்யா மாத்ருகைவ
ஹியஃ பிதாஸ்ஸ புநஃ புத்ரோ யஃ புத்ர ஸ்ஸ புநஃ பிதா.''

எவள் முதல் தாயாயிருந்தாளோ, அவளே மறுபடி யும் மனையாளாய் வருகின்றாள்; எவள் மனையாளாயிருந் தாளோ அவளே மறுபடியும் தாயாய் வருகின்றாள். எவன் முதல் தந்தையாயிருந்தானோ அவனே மறுபடியும் புத்திரனாய் வருகின்றான்; எவன் புத்திரனாயிருந்தானோ அவனே மறுபடியும் தந்தையாய் வருகின்றான்.

சுரு|| "ஏவம் ஸம்ஸாரசக்ரேண கூபசக்ரே கடா யிவ
ப்ரமந்தோ யோநிஜன்மாநி ஸ்ருத்வா லோகாந் ஸம்ஶ்நுதே."

இப்படிப்பட்ட சம்சார சக்கரமானது, கிணற்றிலிருந்து ஜலம் கொண்டுவரும் ராட்டினம் சுழல்வதுபோல் சுழன்றுகொண்டு, அநேக யோனிகளில் பிறப்பை உண்டாக்கும். ஆதலால், பிராணப் பிரயாணகாலத்தில் யார் யார் எந்தெந்தரூபத்தை நினைக்கின்றார்களோ, அவர்களின் ஜீவன் அந்தந்த ரூபத்தை அடைகின்றது. ஜீவன் காற்றுருவமா யிருப்பதனால் "யத் பாவம் தத் பவதி" என்பதுபோல் ஜீவன் எதை யெதை இச்சிக்கின்றதோ அதையதை யடையும்படி தனக்குள் சாக்ஷி சொரூபமாயிருக்கும் ஆத்மா செய்விக்கின்றான். இதன் விவரங்களையெல்லாம் பரமாத்மா சரீரத்தில் குடியிருந்து கிளம்பிவிடுதல் என்பதில் முன் சொல்வோம்.

மருளுந் தெருளும் வந்து கதியென்பதை மறந்து
மதனன் சலதிபொங்க விரணமதான
அளிபுண் டளைவளைந்து விரல்கொண் டுறவளைந்து
சுரதஞ் சுகமிதென்று பரவசமாகி
மருவுந் தொழின் மிகுந்து தினமுந் தினமும் விஞ்சி
வளரும் பிறைகுறைந்த படிமதிசோர
வானரமதென மேனிதிரையாய்,

அடிக்கடி மயக்கமும் தெளிவுமுண்டாய், நற்கதியென்பதை அறவே மறந்து, காமக்கடல் பொங்கி இரணமாகிய அளிந்த புண்ணைச் சூழ்ந்து விரலினால் மிகவும் பரிசித்து, புணர்ச்சியாகிய இது இன்பமென்று பரவசப்பட்டுப் புணருந்தொழிலில் அதிகப்பட்டு நாள்தோறும் மிஞ்சி விருத்தி அடைகின்ற சந்திரன் கலை குறைந்தாற்போல அறிவு சோர்வடைய சரீரம் குரங்கின் சரீரம் எனத்திரைந்து,

"வயதும் படவெழுந்து பிணியுந் திமிதிமென்று
வரலுஞ் செயலழிந்து னிருமலுமாகி
அனமுஞ் செலுதலின்றி விழியுஞ் சுடர்களின்று
முகமுங் களைகளின்று சரியெனநாடி
மனையின் புறவிருந்த வினமுங் குலைகுலைந்து
கலகஞ் செயவிருண்ட யமன் வரும் வேளை
எது துணை பழிகார மனமே."

வயதும் முதிர்ந்து வர, அடங்கிக்கிடந்த வியாதிக ளெல்லாம் மேலெழுந்து திமிதிமியென்று உற்சாகத்தோடு வந்து செய்கையற்று உள்ளே இருமலு முண்டாகி அன்ன மிறங்குதலும் இல்லாமல் கண்களும் பஞ்சடைந்து ஒளி யில்லாமல் முகத்தில் அழகு குறைந்திருக்கும் சமயத்தில் முடிவுதானென்று ஆலோசித்து, மனைவியும் சுகமுண்டான போது அநுபவிக்க இருந்த சுற்றமும் கட்டுக்குலைந்து பேரொலி செய்யக் கருநிறத்தையுடைய கூற்றுவன் நம்மை நாடி வருங்காலத்தில் நமக்குத் துணையாய் நின்று காக்கக் கடவது யாது, எனக்குப் பழியை யுண்டாக்குகிற நெஞ் சமே!

வாயொருபக்கம் வாங்கி வலிப்ப வார்ந்தநீர்க் குழிக்கண்கள் மிழற்ற, தாயொருபக்கம் தந்தை யொருபக்கம் தாரமுமொருபக்க மரற்ற, தீயொருபக்கஞ் சேர்வதன் முன்னம் செங்கண்மாலொடும் சிக்கெனச்சுற்ற, மாய் ஒருபக்கம் நிற்கவல்லார்க் கரவதண்டத்தி லுய்யலுமாமே. [பெரியாழ்வார் திருமொழி]

கூடிக்கூடியுற்றார்களிருந்து குற்றம்நிற்கநற்றங்கள் பறைந்து
பாடிப்பாடியோர் பாடையிலிட்டு நரிப்படைக் கொருபாகுடம் [போலே
கோடிமூடியெடுப்பதன் முன்னம் கௌத்துவமுடைக்கோவிந்த [னோடு
கூடியாடியவுள்ளத்தரானல் குறுப்பிடங்கடந்துய்யலுமாமே.
[பெரியாழ்வார் திருமொழி]

"இருப்பது பொய்! போவது மெய்!
யாரிருந்து மென்னும்?
எவரிருந்து மென்செய்வார்?
எமன் வருங்காற் றேடும்

பொருள் கொடுத்துப் பிழைப்பாயோ?
தமரையனுப்புவையோ?
பொய்யுரைத்தாற் சென்றிடுமோ?
பிற்கணத்தே வருவேன்

உருக்கம்வையுமையாவென்
றழுதும் விடுவானே?
ஊட்டிவளர்த் திடுமுடம்பி
னெடு கொடுபோகானே?

செருக்கெதுவோ நிலேயில்லாப்
பொருட்கழுவாய் மனமே
சீச்சீ நீ யறிந்து கெட்டாய்
செப்புவர் யா ருனக்கே!"

ஆதலால், முற்கூறிய காமக் குரோதாதிகளேயும், ஈஷணு த்ரயங்களேயும் பஸ்மம் செய்து பார்க்குமளவில் அவ்விடம் சேஷமாய் ஒன்றுமில்லாத ஞானசொரூபமாகிய ஆகாசவடிவமே நிற்கும். அந்த ஆகாசவடிவந்தான் நீ; அதுதான் நான்; அதுதான் பிரம்மம்; அதுதான் சிதம்பர ரஹஸ்யம்; அதுதான் ஆத்மா. அந்த ஆத்மாவில் மனதை லயப்படுத்துவதே மோக்ஷம். இப்படிப்பட்ட மோக்ஷ வீட்டை அடையவொட்டாமற் செய்வது காம சொரூபமேயாம். அந்தக் காம சொரூபத்தை இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

காமசொரூபம்.

காமோ நாம மஹாந் ஜகத்ப்ரமஃ இதஸ்தித்வாந் தரங்கே ஸ்வயம்
ஸ்த்ரீபும்ஸாவிதரே தராங்க கருணே ராஹவைஸ்யபாவைஃ ஸ்புடம்
அந்யோந்யம் பரிமோஹ்ய நைஜதமஸா ப்ரேமாநுபந்தேந தௌ
பத்வா ப்ராமயதி ப்ரபஞ்ச ரசநாம் ஸம்வர்தயந் ப்ரஹ்மஹா!

பிரபஞ்சத்தைப் பிரமிக்கச் செய்கின்ற மன்மதன், ஜீவகோடிகளின் சரீரத்திலிருந்துகொண்டு ஸ்திரீ புருஷர்களின் மனதை சுருங்கார சேஷ்டைகளினால், சிற்றின்பத்தைப் பெருக்கி மயக்கி, ஒருவருக் கொருவர்மேல் மோஹத்தை அதிகமாய் யுண்டாக்கி ஆசையென்னும் பந்தத்தினால் பிரபஞ்சத்தை சாஸ்வதமாய் விருத்தி யடையச்செய்து, பிரம்மஞானத்தை நசிக்கச்செய்து, ஸ்திரீ புருஷர்களை பிரமிக்கச் செய்கின்றான். அதனால் சமஸ்தமாகிய பிராணிகளுக்கும் காமாதிசயத்தினால் போக்கிய வஸ்துக்களில் இச்சை யுண்டாகின்றது. ஸ்திரீ புருஷர்களின் அந்தரங்கத்திலிருக்கும் மன்மதன், ஆசையென்னுங் கயிற்றாற்கட்டி ஆட்டுகிறான். அதனால் சகல பிராணிகளுக்கும் காமம் அதிகரித்திருக்கின்றது; எப்படியெனில்:—

தாயின் கருப்பையிலிருந்துவந்த சிறு பாலனுக்கு, வருஷத்திற்குவருஷம் தேஹமும் மனமும் குணங்களும் வெவ்வேறாய் மாறி மாறி கடைசியில், யௌவனதசை வந்து சகல போகங்களையும் அனுபவித்துப் பிறகு சரீர பலம் குறைந்துக்கொண்டே வரவர மயிர் நரைத்து பற்களெல்லாம் வீழ்ந்து சரீரம் மேல்தோல் சுருக்கமுண்டாய் கூன் வளைந்து கண் பார்வைகள் குறைந்து சரீரம் நடுக்கமுண்டாய் நடக்கச் சக்தியில்லாமல் கையில் ஊன்றுகோல் பிடித்து நடு நடுங்கி தட்டுத் தடுமாரி நடந்துகொண்டிருந்த போதிலும், இக்கிழவனுக்குக் காமம் (இச்சை) மாத்திரம்

இருபது வயதில் எவ்வா றிருந்ததோ அதுபோல், வயது தொண்ணூற் றொன்பதிலும் இருக்கும். அச்சமயத்தில் தாதா (பாட்டா) கலியாணம் செய்து கொள்ளுகின்றாயா வென்று விளையாட்டாய்ச் சிறு பெண்கள் கேட்பதுண்டு: அவ்வயதில் யாதொன்றும் செய்யக் கிழவனுக்குச் சக்தி இல்லாதவனா இருந்தபோதிலும் பொக்கை வாயால் சிரித்துக்கொண்டு, ஆ—ஆ—ஆ—ஆ—ஆவென்று, வாயைத் திறப்பான்: இவ்வாறான ஆசை உண்டாவதற்குக் காரணம் யாதெனில், அநேக ஜன்மங்களாய் இவனுடன் கூடவே வந்துகொண்டிருக்கும் காமம் இக்கிழவனை இவ்வாறு செய்ததேயொழிய இச்சன்மத்தில் புதிதாய் உண்டாகிய காமமல்ல; இப்படிப்பட்ட காமத்துட னிருந்து சரீரத்தை விடுவதனால் இந்த கிழ சரீரம் மாத்திரம் நாசமடைந்து அக் காமம், வேறு தாயின் கர்ப்பத்திலிருக்கும் சிசு, இருதயத்திற்குள் போய்ப் புகுந்து சிசுவாய்ப் பிறந்து வளரும்போது, பால்யதசை வரையில் அக்காமம் அடங்கியிருந்து, சிறுவனுக்கு பால்யதசை சென்று யௌவனம் வந்தவுடன், முன் ஜன்மத்தில் கிழவனா யிருந்தபோது இருந்த காமத்திற்கும் யௌவனம் வந்து, ஸ்திரீமீது அதிக மோகங்கொண்டிருக்கும். இந்தக் காமமானது, இவ்வாறே அநேக ஜன்மங்களாய்த் தொடர்ந்துக்கொண்டு வருவதனால், ஜன்மாந்திரங்கள் தோறும் இக்காமத்திற்கு ஆசைகள் அதிகமாய் வேறொன்றி, பிரதி ஜன்மங்கள்தோறும் வந்துகொண்டே இருக்கின்றன. இதுபோல் மற்ற விஷயங்களும், இவனுடன் கூடவே அநேக ஜன்மங்களாய் வந்துக்கொண்டே இருக்கின்றனவேயன்றி இந்த ஜன்மத்தில் புதிதாய் வந்ததல்ல: ஆதலால்,இக்காமத்தை ஜபிக்க உபாயம் என்னவென்றால், ஸங்கல்பங்களை எல்லா (எண்ணங்களை) அதாவது,ஆசைகளை நிவர்த்திச் செய்வதே காமஜயத்திற்கு

சுலப உபாயம். காமம் உதிக்காம லிருப்பதற்காக என்ன செய்யவேண்டுமென்றால், போக்கியவஸ்துக்களைவிட்டு அது நன்றா யிருக்கிறதென்னும் எண்ணத்தை விட்டால், அதில் இச்சை உண்டாகவேமாட்டா. காமம் ஸங்கல்பத்தினால் உண்டாகிறது. ஸங்கல்பம் காமத்திற்கு பீஜம் (விதை). காமஜயத்திற்கு நன்றாயிருக்கிற தென்னும் எண்ணத்தை விடுவதே முக்கியமான உபாயம். எந்த மனிதனும் நன்றா யிருக்கிற தென்னும் எண்ணத்தினாலேயே எந்தப் பதார்த் தங்களையும் இச்சிக்கின்றானே யன்றி நன்றா யிருக்கிறது என்னும் எண்ணம் இல்லாவிடில், எதையும் இச்சிக்கவே மாட்டான். கோரிக்கைகளை ஜயிக்க எண்ணமுடையவன், காணப்படும் வஸ்துக்கள் நன்றா யிருக்கிறதென்னும் எண் ணத்தை நாசஞ்செய்யவேண்டும். விஷயங்களில் சுகம் உண் டென்கிற எண்ணமேவிடல் வேண்டும். வைரக் கற்களைச் சுரங்கத்திலிருந்து எடுக்கும்போது, எவ்வித பிரகாசமும் இல்லாமல் கேவலம் பாரைக்கல்லுபோல் இருக்கும்: பிறகு, அவ் வைரக் கற்களை தொழிலாளிகள் சாணைப் பிடித்த போது, அவ் வைரக்கற்களுக்கு மிகவும் ஜொலி ஜொலிப்பு உண்டாகின்றது; இவ் வைரக் கற்களை பாறைக் கற்களைப் போல் நினைத்தால் அதில் சற்றேனும் ஆசை உண்டாக மாட்டா; அது நன்றாயிருக்கின்றது என்று எண்ணமுண்டா னால் ஆசை நிவாரணையாகமாட்டா. வஸ்துவினுடைய ரூபத்தை அறிவதும், வஸ்துவில் அநர்த்த முண்டென்றும் நினைத்தால் ஸங்கல்பத்தையும் காமத்தையும் ஜயிக்கலாம். இதற்குத் திருஷ்டாந்தம் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அ-3, சுலோகம் 40-41,

* இந்த்ரியாணி மனோ புத்தி ரஸ்யாதிஷ்டாந முச்யதே
ஏதைர்விமோஹய த்யேஷ ஜ்ஞாந மாவ்ருத்ய தேஹிநம்.

---

* இந்திரியங்கள் மனது புத்தி இவைகள் காமத்திற்கு இருப்

அர்ஜுனன்:—இந்தக் காமக் குரோதங்களை நிவர்த்தி செய்வதற்கு, மனம் புத்தி இந்திரியம் இவைகளை வசப் படுத்தவேண்டுமென்று சொன்னீரல்லவா? அதற்குக் காரணமென்ன?

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுனா! உலகத்தில் சகல மனிதர் களுக்கும் ஆசையுண்டல்லவா? அந்த ஆசை இருக்கப் பட்ட இடத்தைச் சொல்லுகின்றேன். கேள்; ஆசை உண் டாவதற்கு இடம் புத்தி. ஆசையை விசேஷமாய் உண்டாக்கு வதற்குச் சாதனம் மனது; விஷயங்களில் ஆசையை உண் டாக்குவதற்குக் காரணம் இந்திரியங்கள்; ஆதலால், இந்த மூன்றும் ஆசைக்கு இருப்பிடமென்று சொல்லப்படும். இந்த ஆசை ஞானத்தை பிரகாசிக்கச் செய்யாமல் ஜீவனை அநேக விதங்களாய் மோஹிக்கச் செய்கின்றது. இந்திரி யங்க ளில்லாவிடில் இந்த காமக் குரோதங்கள் உண்டாக மாட்டா. அதெப்படியென்றால், ஒரு புருஷன் ஏதேனும் அதிசயமான வஸ்துவைப் பார்த்தாலல்லவோ அதில் காமம் (ஆசை) உண்டாகின்றது. அந்த ஆசை எதிலிருந்து உண்டாகின்றது?

அர்ஜுனன்:—மனதிலிருந்தே உண்டாகின்றது.

பிடமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தக் காமமா (ஆசையா) னது ஞானத்தை மறைத்து ஜீவனை மயக்குகின்றது. ஏனென்றால்,

சப்தங்கள் முதலானவைகளை இந்திரியங்கள் அறிந்து மனதி னிடம் சேர்ப்பிக்கின்றது, மனது விஷயங்களை அறிந்தவுடனே புத்தியினிடத்தில் சேர்ப்பிக்கின்றது; புத்தி ஆத்மாவினிடத்தில் சேர்ப்பிக்கின்றது, மிகவும் பரிசுத்தமான ஆத்மாவினிடத்தில் விஷயங்களாகிய அழுக்குகளை (காமக்குரோதங்களை) சேர்ப்பித் தவை,இந்திரியங்கள் மனது புத்தி இவைகளாகையால், அவைகள் காமத்திற்கு இருப்பிடமாகச் சொல்லப்பட்டன. காமமாகிய அழுக்கையடைந்த ஆத்மா அசுத்தனைய் விட்டபடியால் பரிசுத்த மான ஆத்மஞானம் மறைவுபட்டு மயங்கி யிருக்கின்றது.

கிருஷ்ணன்:—அப்பொழுது மனதும், காமத்திற்கு இருப்பிடமல்லவா ?

அர்ஜுநன்:—ஆம்.

கிருஷ்ணன்—நல்லது, அந்த வஸ்துவில் ஆசைபிறந்த வுடனே அதை அடையத்தக்கது எது ?

அர்ஜுநன்:—புத்தி.

கிருஷ்ணன்:—அப்போது புத்தியும் காமத்திற்கு (ஆசைக்கு) இடமா யிருக்கின்றதல்லவா ?

அர்ஜுநன்:—ஆம்.

கிருஷ்ணன்:—ஒருவன் நினைத்தவஸ்து கிடைத்தால் சரி, இல்லாவிட்டால் அவனுக்கு என்ன சம்பவிக்கும் ?

அர்ஜுநன்:—கிடைப்பது எவரால் தடுக்கப் படுகின் றதோ அவர்களின்மீது கோபம் உண்டாகும்.

கிருஷ்ணன்:—அப்படி கோப முண்டாவதே குரோத மென்று சொல்லப்படும். இந்த குரோதத்திற்கு மனது புத்தி இந்திரியங்களே இருப்பிடமா யிருக்கின்றதென்று இப்போது தெரியவந்ததல்லவா ?

அர்ஜுநன்:—ஆம் தெரியவந்தது.

கிருஷ்ணன்:—நல்லது, அந்த வஸ்துவைக் கண்களால் பாராமலிருந்தால் அதில் ஆசை உண்டாகுமா ?

அர்ஜுநன்:—உண்டாகமாட்டா.

தஸ்மாத் த்வாமிந்த்ரியாண்யாதௌ நியம்ய * பரதர்ஷப !
பாப் மாநம் ப்ரஜஹி ஹ்யேநம் ஜ்ஞாந விஜ்ஞாநநாஶநம். 41.

---

* "பாதர்ஷப" என்று சொல்லுவதை யோசிக்குமளவில் இவர்களின் வம்சத்தில் பூர்வம் பரதன் என்பவர் காமத்தை ஜயித்து ஞானியாயிருந்தார். ஆதலால், நீயும் காமத்தை ஜயிப்பதற்குப் பிரயத்தினப்படு என்று ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அர்ஜுநனுக்கு உப தேசித்ததாய் தெரியவருகின்றது. பரதன் ஞானியாயிருந்தும் காமத்தை (ஆசையை) விடாததனுல் முதல் ஜன்மத்திலேயே

கிருஷ்ணன்:—ஓ பரத சிரேஷ்டனே! ஆசை இவ்வளவு அனர்த்தத்தை உண்டாக்குகின்ற தாகையால், நீ முதல், இந்திரியங்கள் மனது புத்தி இவைகளை அடக்கி ஞானத்தைப் போக்கடிக்கும் பாபசொரூபமான இந்தக் காமத்தை விட்டுவிடு. அதாவது, நீ முக்கியமாய்ச் செய்ய வேண்டிய விஷயம் என்னவென்றால், முதலில் கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகசர்மம் என்னும் ஐந்து இந்திரியங்களை அடக்கவேண்டும். என்றால், இந்திரியங்கள் போகும் வழியாய் மனதைப் போகவிடாமல் திருப்பிக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதனால், அந்த இந்திரியங்கள் விஷயங்களில் எப்பொழுதும் ஓடமாட்டா. இந்திரியங்கள் எப்பொழுது விஷயங்களில் ஓடாமல் நின்று விடுகின்றனவோ அப்போதே குரோதம் ஓடிவிடுகின்றது. ஆதலால், நீ, இந்திரியங்களை விஷயங்களிலிருந்து திருப்பிக்கொள்வதனால், ஞானத்தைக் கெடுக்கப்பட்ட இந்த காமத்தை ஜயித்தவனாகின்றாய்.

அர்ஜுனன்:—ஐயா கிருஷ்ணமூர்த்தியே! "இந்த்ரியாணி ப்ரமாதீநி" இந்திரியங்கள் மிகவும் பலமுடையது என்று இதுவரையில் அத்யாயம் 2, சுலோகம் 60-ல், சொல்லி யிருக்கின்றீர். அப்படிப்பட்ட இந்திரியங்களை இழுத்துப் பிடித்தால் ஆசையென்னும் சத்துருவை ஜயிக்கலாமென்று இப்பொழுது சொன்னீரே? அப்படிப்பட்ட பலமுடைய இந்திரியங்களை இழுத்துப் பிடிப்பதற்கு உபாயமென்ன? இதற்குமுன் விஷயங்களை ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதையில் விரிவாய்க் காணலாம்: இங்கு வேண்டுவது இவ்வளவேயாம்:

மோக்ஷத்தை அடையவேண்டிய பரதன், மானும் ஜடபரதனும் இரண்டு ஜன்மங்கள் எடுக்கவேண்டியதாய் நேரிட்டது. எனென்றால், கர்மசேஷம் இருந்தபடியால் இரண்டு ஜன்மமெடுக்க வேண்டியதாய் நேரிட்டது.

இந்த ஆசாபாசங்கள் நம்மைவிட்டு ஏன் ஒழிகிறதில்லை யென்றால், ஆதியில் நம்மை பிரமதேவர் சிருஷ்டிசெய்த நாள்முதல் நாளதுவரையில் நாம், அநேக கோடி ஜன்மங்களை எடுத்து சரீரம் மாத்திரம் மாறிமாறி வந்துக்கொண்டேயிருக்கின்றோம். இப்போதிருக்கின்ற மனைவி புத்ர பௌத்ராதிகள், தந தாந்யாதி கிருகம் (வீடு) பூமி முதலானவைகள் யாவும், அநேக ஜன்மங்களாய் அவனவன் செய்த கர்மானுசாரமாய்ப் பிரதி ஜன்மங்களிலும் ஸம்ஸாரபந்தம் தொடர்ந்துகொண்டே வருகின்றன. மேற்கூறியவர்களின் மீதுண்டான ஆசாபாசங்கள் இப்போது மத்தியில் உண்டானவைகளல்ல. இவை; அனாதியானவை, இந்தப் பெண்டுபிள்ளைகளைப்போல் ஆதியிலிருந்து அநேக பெண்டுபிள்ளைகள் வந்துகொண்டிருந்தார்கள். அந்தந்த ஜன்மங்களில் வந்துகொண்டிருந்த பெண்டுபிள்ளைகளை எல்லாம் விட்டு மரணமடைந்துகொண்டே வரவர, முன் ஜன்மாந்திரங்களில் அவரவர்களின் மீதுள்ள ஆசாபாசங்களெல்லாம் சூட்சும சரீரத்துடன் கூடவே சேர்ந்து தாயின் கர்ப்பத்திலிருக்கும் பிண்டத்தில் பிரவேசித்து சிசுவாய்ப் பிறந்தபோது, அந்தச் சிசுவுடன் கூடவே மேற்படி ஆசாபாசங்களெல்லாம் பால்யதசைவரையில் அடங்கியிருந்து, பால்யதசைசென்று சிறுவனுக்கு யௌவனம் வரும்போது முற்கூறிய ஆசாபாசங்களுக்கும், சிறுவனைப்போல் யௌவனமுண்டாய், மறுபடியும் இச்சன்மத்திலுள்ள பெண்டுபிள்ளை மற்றவைகளின்மீது ஆசையை உண்டாக்குவதற்குக் காரணமாயிருக்கின்றன. இதற்கு திருஷ்டாந்தம் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

யாதொன்றும் தெரியாமல் பரப்பிரம்ம சொரூபமாயிருக்கும் ஒரு வயதையுடைய குழந்தையின் கையில் ஓர் காலணா கொடுத்தமாத்திரத்தில் அக்குழந்தை அதை ஏந்தி வாங்கிக்கொள்ளும். மறுபடியும் அதை யார் கேட்டபோதி

லும் கொடுக்க மனம் வராமல் கையில் கெட்டியாய் இறுக்கிப் பிடித்துக்கொள்ளும் விஷயம் ஒவ்வொருவரும் அறிந்த விஷயமன்றோ? இதற்குக் காரணம் யாதெனில், சிசுவாயிருக்கும் தான் முன் ஜன்மாந்திரங்களில் பணத்தையே கையாண்டு வந்துகொண்டிருந்ததால் அந்தச் சிசுவுடன் கூடவே பணப்பிசாசும் சூட்சும (கண்களுக்குக் காணாத) சரீரத்துடன் தொடர்ந்துகொண்டு வருகின்றது. இவைகளுடன்கூட ஆத்மாவும், பிரதி சரீரங்கள் தோறும் தொடர்ந்துகொண்டே வந்து இவைகள் செய்யப்பட்ட காரியங்களுக்கெல்லாம் சாக்ஷியாயிருந்து, ஆத்மா அந்தந்த ஜீவர்களுக்குத் தக்கபடி சுக துக்கங்களைக் கொடுத்துக்கொண்டு வருகின்றது. இந்த ஆத்மா, பிரபஞ்ச சிருஷ்டி காலத்தில் பரப் பிரம்மத்திலிருந்து அணுசொரூபமாய்ப் புறப்பட்டு எல்லா ஜீவராசிகளிலும் வியாபித்திருக்கின்றது.

மற்றொரு திருஷ்டாந்தம் சொல்லுகின்றோம் கேளுங்கள்; ஒருவனுக்கு இரண்டு குமாரர்கள இருந்தார்கள். அவர்க ளிருவரும் ஒரே பள்ளிக்குச் சென்று வாசிப்பதுண்டு; அவர்களில் மூத்த குமாரன் மாலை 7-மணி முதல் இரவு 11-மணி வரையில் வாசித்துப் பிறகு சயனிப்பான்; அவன் மறுபடியும் 2-மணிக்கெழுந்து காலை 8-மணி வரையில் வாசித்து நிறுத்தி நித்தியகடனை முடித்து பள்ளிக்குப் போவது வழக்கம். இவ்வாறு கஷ்டப்பட்டு வாசித்தும் வகுப்பில் சூட்சுமபுத்தி யில்லாமல் மந்தபுத்தி யுடையவனாகவே யிருப்பான். இவன் சகோதரன் எப்படிப்பட்டவனென்றால், காலை மாலைகளில் எப்பொழுதும் ஆட்டங்களையே ஆடிக்கொண்டிருந்து, இரவு 7-மணிக்கு உட்கார்ந்து தன் பாட புத்தகங்களின் ஏட்டை ஒருமுறை திருப்பிப் பார்த்து வைத்துவிட்டு 8-மணிக்கெல்லாம் போஜனத்திற்கு எழுந்திருப்பது வழக்கம். இவர்களிருவரும் இவ்விதமாய்

வாசித்துப் பரீக்ஷைக்குச் சென்றபோது மூத்தவன், இராப் பகலாய் வாசித்தும் மந்தபுத்தி யுடையவனுதலால், பரீக்ஷைக்கடிதத்தைக் கையில் வாங்கி அதற்குப் பதிலெழுத யாதொன்றும் தோன்ருதவனுய் எதையோ ஒன்றை எழுதிக் கொடுத்து வந்துவிடுவான். அதனுல் அவன் பரீக்ஷையில் தப்பினவனுனன். இதற்குக் காரணம் யாதெனில், இவன் முன் ஜன்மங்களில் வாசிப்புடையவனல்லன்; வாசிப்பதற்காக இந்த ஜன்மத்தில் பிரயத்தினப் பட்டிருக்கின்ருன்; இது படிப்படியாய் ஜன்மாந்திரங்கள்தோறும் உயர்ந்துகொண்டே போகும். அதிகமாய் வாசிக்காமலிருந்த இளையவனே பரீக்ஷையில் உட்கார்ந்து, பரீக்ஷைக் கடிதத்தைக் கையில்வாங்கி முதற் கேள்வியிலிருந்து கடைசி கேள்விவரையில் ஒருமுறை வாசித்துப் பார்த்து இவைகளுக்கெல்லாம் பதில் எழுதுவேனென்று சந்தோஷமுடையவனுய் ஒரு கேள்வியும் தவருமல் எல்லாவற்றையும் எழுதிப் பூர்த்திசெய்து, பரீக்ஷைக் கடிதத்தில் உபாத்தியாயர்கள் குறித்திருக்கும் மணிக்கு அரைமணி முந்தியே தான் எழுதிய கடிதத்தை உபாத்தியாயர்களிடம் கொடுத்து விட்டு வருவான். பரீக்ஷைமுடிந்து எல்லாப் பிள்ளைகளின் கடிதங்களைப் பார்க்கும்போது மேற்படி சிறுவன் எல்லாப் பிள்ளைகளைவிட அதிகமாய் மார்க்கு வாங்கி அவர்களுக்கெல்லாம் தலைவனுய் ஏற்பட்டான். அதிக வாசிப்பில்லாமலே இவ்விதமாய் உண்டாவதற்குக் காரணம் யாதெனில்;

"ஒருமைக் கட்டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமெயு மேமாப் புடைத்து" என்பதுபோல்

இவன் முன் ஜன்மங்களில் B. A, B. L, (பி. ஏ, பி. யல்,) முதலாகிய பாஸ் செய்துகொண்டே வந்தவன். முன்னிருந்த ஸ்தூல சரீரங்கள் மாத்திரம் மாறிமாறி வருகின்றனவேயன்றி சூட்சும சரீரம் மாத்திரம் மாறுபடாமல் முன்

னிருந்த குணங்களுடன் கூடவே வந்துகொண்டிருக்கும். இவ்விதமாய் தொடர்ந்து வருவதே பூர்வவாசனை என்று சொல்லப்படும். அதுபோல், மோக்ஷமடைய நான்குபடிகள். உண்டல்லவா? அவைகளில் இரண்டாம் படியை அப்பியாசம் செய்துகொண்டிருப்பவன், தன் அப்பியாஸத்தைப் பூர்த்திசெய்து மரணமடைந்தால் மறு ஜன்மத்தில் மூன்றும்படி பிராரம்பிப்பான்: அல்லது அப்பியாஸத்திலிருக்கும்போது மரணமடைந்தால் மறு ஜன்மத்தில் அதாவது முன் ஜன்மத்தில்தான், சிவன் அல்லது விஷ்ணு பூஜை அல்லது அல்லா ஏசுநாதர் பூஜைகளை எங்குசெய்து விட்டானே, அவ்விடத்திலிருந்து மறுஜன்மத்தில், ஆரம்பித்து இரண்டாம்படியைப் பூர்த்திசெய்து மூன்றும்படியாகிய யோகாப்பியாசத்தை ஆரம்பிப்பான். இதுதான், விட்ட குறை என்றும் தொட்டகுறை என்றும் சொல்லப்படும். இதற்கு திருஷ்டாந்தம் என்னவென்றால், ஓர் அங்குலம் நீளமுள்ள பச்சை நிறமுடைய புழுவானது இலைகளை மேய்ந்து கொண்டிருக்கையில் ஒவ்வொருவரும் பார்த்திருக்கலாம். அது, நடக்கும்போது முகத்தினிடம் இருக்கும் பாதத்தை ஊன்றி உடலை மேல்தூக்கிப் பின்னிருந்த பாதத்தைக் கொண்டுவந்து சிரசினிடம் இருக்கும் பாதத்தினிடம் வைத்து ஊன்றியபிறகு முன் பாதத்தை எடுத்து அதற்குமுன் வைத்து இவ்விதமாய் ஒன்றைத்தொட்டு மற்றொன்றை விடுகின்றது; அதுபோல், நாம் இந்த ஜன்மத்தில் எவ்வளவு ஈஸ்வர பக்திசெய்து விட்டுவிடுகின்றோமோ மறு ஜன்மத்தில் அவ்விடமிருந்து மேற்கொண்டு செல்வோமென்று அறியவேண்டும். பக்தி செய்யும் முறை இதனடியிற் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

சாதாரணமாய் உலகத்திலுள்ள மனிதர்கள் எவ்விதமாய் பக்தி செய்துகொண்டு வருகின்றார்களென்றால்:—

விக்கிநேஸ்வரர் மீதோ அல்லது மற்ற எந்த தேவதையின் மீதோ, பூவும் நீருங்கொண்டு அபிஷேகம் செய்தாலும் சரி; அல்லது ராமன் கிருஷ்ணன் ஈஸ்வரன் லக்ஷ்மி பார்வதி ஸரஸ்வதி முதலாகிய படங்களை ஆராதித்தாலும் சரி; அச் சமயத்தில் அவர்களின் மனோ நாட்டம் பூஜையின்மேலிரா மல், உத்தியோக விஷயத்திலோ வியாபார விஷயத்திலோ சம்சார துக்கத்திலோ பொருள் ஆசையிலோ கோர்ட்டு வியவகாரங்களிலோ, அல்லது ஆபீசுக்குப் போகவேண் டுமே என்று சீக்கிரம் சீக்கிரமாய் மணியை ஆட்டி இவ்வித மாய் எதிலேயோ ஒன்றில் மனதை ஓடவிட்டுப் பூஜை செய் கின்றார்கள். இவ்விதமாய் சிரத்தையில்லாமல் கோடி ஜன்மமெடுத்து பூஜைசெய்து வந்தபோதிலும் மேல்படி யில் ஏறாமல் இந்த முதற்படியில்தான் இருப்பார்களென்று அறியவேண்டும். சிரத்தையுடன் பக்திசெய்து முக்தியடை யும் மார்க்கத்தைச் சொல்லுகின்றோம் கேளுங்கள். ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம் - 9, சுலோகம் 26 - ல், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா என்ன சொல்லுகின்றாரென்றால்:—

"பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோமே பக்த்யா ப்ரயச்சதி
ததஹம் பக்த்யுப ஹ்ருத மச்நாமி ப்ரயதாத்மந:"

எவன் எனக்காகச் சிரத்தை பக்தியுடன், வில்வம் துளசி முதலாகிய பத்திரங்களாலாகிலும் புஷ்பங்களா லாகிலும் பழங்களாலாகிலும் நீராலாகிலும் சுத்தாந்தக் கரண மனதுடன் ஸமர்ப்பிக்கின்றானோ, அப்படிப் பட்டவ னுடைய பத்ர புஷ்ப பழங்களை நான் கிரகிக்கின்றேன் என்று பகவானும் மற்ற ஆன்றோரும் சொல்லியிருக்கின் றார்கள்.

நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்குநிற்பன் பொன்னார் சடைப் புண்ணியன்
பொக்கமிக்கவர் பூவுநீருங்கண்டு
நக்கு நிற்பனவர்தமை நாணியே.

ஆதலால், ஸ்திரீ புருஷர்க ளெல்லோரும் தேவதா பூஜை எவ்விதமாகச் செய்யவேண்டுமோ அதனை இதனடியில் விவரித்துச் சொல்லுகின்றேம் கேளுங்கள்:—

அன்பர்களே! நமது வீட்டிற்கு, நாரதர் வசிஷ்டர் விஸ்வாமித்திரர் முதலாகிய மஹாத்மாக்கள் வந்துவிட்டால் எவ்விதமாய், அதிக சிரத்தை பக்தி விசுவாசங்களுடன் அவர்களைப் பூஜிப்போமோ, அதுபோல் ஈஸ்வர பூஜை செய்யும் ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களும் மனதை வெளி விஷயங்களில் ஓடவிடாமல் நிறுத்தி மிகவும் பக்தி சிரத்தை விசுவாசங்களுடன் நிதானமாய்ப் பூஜைசெய்து வரவேண்டும். இவ்விதமாகப் பூஜை செய்து முடிந்தபிறகு, ஸ்திரீகள் ஸ்நானம்செய்து பய பக்தியுடன் சுசி ஆசாரம் மடியுடனிருந்து அடியில் சொல்வதுபோல், அந்தந்த வாரத்தில் அந்தந்தப் பதார்த்தங்களைச் சமைத்து, ஈஸ்வரர்படம் அல்லது கணபதி (விக்நேஸ்வரர்) சுப்ரமண்யர் விஷ்ணு பார்வதி லக்ஷ்மி முதலாகிய படங்களில் எந்தப்படம் உங்கள் வீட்டில் இருக்கின்றதோ அந்தப் படங்களுக்கு, ஒவ்வொரு வீட்டிலுள்ளவர்களும் காலை மாலைகளிலும் அன்னம், ஆராதனைச் செய்து (நைவேத்பம்காட்டி) அந்தசேஷத்தைச் சாப்பிட வேண்டும. சாப்பிடும் அன்னம் (சாதம்) பதார்த்தம் மோர் ஜலம் முதலானவைகளை பகவானுக்கு ஆராதனைச் செய்து சாப்பிட்டு வரவேண்டுமேயொழிய பகவானுக்கு ஆராதனைச்செய்யாமல் சாப்பிடலாகாது. பதார்த்தங்களைப் பிரதி தினம் மாற்றி மாற்றி ஒரு கீரைதினுசு சேர்த்து சாப்பிட்டு வந்தால் மலம் தாராளமாய் நழுவிச்செல்லும்.

ஞாயிறு பகல், ஆமவடை அல்லது கத்தரி மோர்க் குழம்பு, வாழக்காய் பொரியல், பொன்னுங்கண்ணி சிறு பருப்பு துகட்டல், மிளகு ரசம், மோர், ஊறுகாய்:

இரவு, கடுகு குழம்பு, அப்பளம், வறுத்து உடைத்த கடலைப் பருப்பு தேங்காயுடன் துவையல், ரசம், மோர் ஊறுகாய்:

திங்கள் பகல், பருப்பு சாம்பார், கடலை பீர்க்கன் அல்லது புடலங் கூட்டு, உருளைக்கிழங்கு வறல், அரைக் கீரை மிளகுடன் துவட்டல், ரசம், மோர், ஊறுகாய்:

இரவு, சுண்டக்காய்க் குழம்பு, மணத்தக்காளி வத்தல், அப்பளப்பூ, ரசம், மோர், ஊறுகாய்:

செவ்வாய் பகல், வண்டக்காய் வறுத்த குழம்பு, வாழைக்காய் வறல், பசரக்கீரை கடையல், ரசம், மோர், ஊறுகாய்:

இரவு, வெந்தியக் குழம்பு, துவரம்பருப்பு நெய்யுடன் வறுத்து தேங்காய் சேர்த்த துவையல், கொத்தவரை வத்தல், ரசம், மோர், ஊறுகாய்:

புதன் பகல், தயிர் கசகசா மசாலாவுடன் உருளைக் கிழங்கு குழம்பு, மெரி (சிறிய) பாவை வரல், அரைக்கீரை கடையல், ரசம், மோர், ஊறுகாய்:

இரவு, மிளகு குழம்பு, ஆதண்டங்காய் (சுக்கங்காய்) வத்தல், கடையில் விற்கும் உலர்ந்த ரோஜாமொக்கு துவையல், அத்திக்காய் கூட்டு, ரசம், மோர், ஊறுகாய்:

வியாழம் பகல், பச்சப்பயர் சாம்பார், வாழைத்தண்டுக் கூட்டு, அவித்திக்கீரைத் துவட்டல், ரசம், மோர், ஊறுகாய்:

இரவு, வடகம் குழம்பு, சப்பரிசி வத்தல், வாழப்பூ கூட்டு, ரசம், மோர், ஊறுகாய்:

வெள்ளிக்கிழமை பகல், பகடா குழம்பு, கத்தரி பொரியல், கருணை அல்லது சேமை வரல், மணத்தக்காளிக் கீரை கடையல், ரசம், மோர், ஊறுகாய்:

இரவு, பருப்பு சாம்பார், இஞ்சி எலிமிச்சம்பழம் ரசம் சேர்த்து துகையல், கடலே கத்தரி கூட்டு, மணத்தக்காளி வத்தல், ரசம், மோர், ஊறுகாய்:

சனிக்கிழமை பகல், வாழத்தண்டு கத்தரி பருப்பு சேர்த்து தப்பளம் (குழம்பு) உருளைக்கிழங்கு புட்டு, சிறு கீரை மிளகுடன் துகட்டல் அல்லது கடையல், ரசம், மோர், ஊறுகாய்:

இரவு, கத்தரி எண்ணெய்க்குழம்பு, பாவை வத்தல், ரசம், மோர், ஊறுகாய்:

கோஸ், நூல்கோல், அவரை, முள்ளங்கி, முருங்கை, கீரத் தண்டு, மாங்காய்ப் பச்சடி, வெள்ளரி, பெலா, விளாம், சுக்காக்கீரை, தக்காளி முதலாகிய பதார்த்தங்கள் கிடைக்குங்காலத்தில், அந்தந்த சந்தற்பங்களுக்குத்தக்கபடி அந்தந்த காலத்தில் உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும்: பிரதிதினம் கிடைக்கும் பதார்த்தங்களே பிரதிவாரங்களிலும் உபயோகப்படுத்த மேற்சொல்லப்பட்டிருக்கின்றது; அதுபோல் சமைத்து பகல் மாலேகளில், அவரவர்களின் வீட்டில் யிருக்கும் அந்தந்த படங்களுக்குக் காட்டி ஆராதனேச் செய்து; அந்த சேஷத்தைச் சாப்பிடவேண்டும்: இவ்வாறு, பிரதிதினம் பகல் இரவு சாப்பிடும் அன்னம் பதார்த்தம் மோர் ஜலம் முதலானவைகளே பகவானுக்கு ஆராதனேச் செய்து சாப்பிட்டுப் பொய் சொல்லாமலும் சத்தியம் தவறுமலும் இருப்பீர்களாகில் உங்களுக்குப் புண்ணியமுண்டாகும்: அப்புண்ணிய விசேஷத்தினுல் நீங்கள் எல்லோரும், பெரியவீடாகிய மோக்ஷ சாம்ராஜ்ய பதவிவீட்டைத்தப்பாமல் அடைவதுமேயன்றி மாதம் மும்மாரி மழைபொழியும்: இது சத்தியம் சத்தியம்: ஆதலால், ஸ்திரீகள் சாதம் வடித்து நிமிர்த்தியபிறகு கொஞ்சம் சாதம் கரண்டியில் எடுத்து அதில் நெய்விட்டுக் கலந்து அக்கினியில் போட்டு அவ்

வக்கியை நமஸ்கரித்துச் சாதம் வடித்து கிமிர்த்திய பாண்டத்தின்மீது ஜலம் தெளித்துக் குட்டையால் துடைத்து மூன்று பக்கங்களிலும் விபூதியிட்டு அந்த அன்னத்தை நமஸ்கரித்து அதன்மீது தட்டைமூடி ஓர்புறமாய் வைக்க வேண்டும். பதார்த்தங்களையும் அதுபோல் சமைத்து முடித்தபின் ஒரு தட்டில் இலைபோட்டுப் பதார்த்தங்களுடன் அன்னமும் நெய்யும் பரிமாறி ஈஸ்வர படங்களின் எதிரில் பூமியின்மேல் ஜலம் தெளித்து தீபம் யேற்றி, மேற்படி பதார்த்தங்களும் அன்னமும் பரிமாறிய தட்டைப் படத்திற்கு எதிரில் வைத்து தன் வலதுகையில் கொஞ்சம் தீர்த்தம் விட்டுக்கொண்டு,

"ஓம் பூர்புவஸ்வஃ, ஓம் தத்ஸவிதுர்வரேண்யம்
பர்கோதேவஸ்யதீமஹீ, தியோயோநஃ ப்ரசோதயாத்."

என்று சொல்லி அந்த தீர்த்தம் அன்னத்தின்மீது தெளித்து, மறுபடியும் கொஞ்சம் ஜலம் கையில் விட்டு "தேவசவித ப்ரசௌவ" என்று சொல்லி நைவேத்யம் சுற்றிலும்விட்டு, மறுபடியும் கொஞ்சம் ஜலம் கையில் விட்டு "ஸத்யம் த்றுதேந பரிஷம்யாமி" என்று சொல்லி, நைவேத்யம் சுற்றிலும் மறுபடியும் விடவேண்டும். இவ்விதமாய் விட்டபிறகு, ஈஸ்வரன் பிரசாதத்தின் சத்தை இழுக்கும்படி இதனடியில் சொல்லப்போகும் ஆறுமந்திரங்களையும் சொல்லவேண்டும். ஒவ்வொருமந்திரம் சொல்லும் போதும் பிரசாதத்தை பகவானுக்கு நேராய்த் தன் வலதுகையால் காட்டவேண்டும்.

"ஓம் ப்ராணாய ஸ்வாஹா, ஓம் அபாநாய ஸ்வாஹா,
ஓம் வியாநாய ஸ்வாஹா, ஓம் உதாநாய ஸ்வாஹா,
ஓம் ஸமாநாய ஸ்வாஹா, ஓம் ப்ரஹ்மணே ஸ்வாஹா."

என்று வலது கையால் அதைக் கிரகிக்கும்படிக் காட்ட வேண்டும். இவ்விதமாய்க் காட்டிய பிறகு மூன்று வட்டில்களில் பிரத்தியேகமாய் ஜலம் வைத்து ஒவ்வொரு வட்டிலி

னுள்ள ஜலத்தை உத்தரணியால் எடுத்து, 'மஹா தீர்த்தம் கண்டருள்வாய், மஹா தீர்த்தம் கண்டருள்வாய், மஹா தீர்த்தம் கண்டருள்வாய்' என்று சொல்லி மூன்று முறை காட்டி அந்தத் தீர்த்தத்தை ஒவ்வொருமுறை வேறு வட்டியில் விடவேண்டும்.

இவ்விதமாய் விட்டுப் பகவானுக்கு ஆராதனை செய்த பிறகு சிறு குழந்தைகளும் பெரியோர்களும் போஜனம் செய்யவேண்டுமேயொழிய அதற்குமுன் போஜனம்செய்ய லாகாது. ஏனென்றால், பதார்த்தங்களை அறுத்துச் சமைக்கின்றோம்; ஒவ்வொரு பதார்த்தத்திலும் ஜீவனுண்டு; அதையறுத்துச் சமைப்பதனால் தோஷம் உண்டாகின்றது; அவைகளை பகவானுக்கு ஆராதனைசெய்து சாப்பிட்டால் அந்தத் தோஷம் நிவாரணையாகும். இது, வடதேசத்திலுள்ள பிராமணர்கள் தவிர மற்ற எந்த ஜாதியாரும்செய்வதில்லை. ஆனால் அமாவாஸ்யை கிருத்திகை இவ்வித விரத தினங்களில் மாத்திரம் மற்ற மூன்று ஜாதியாரும் செய்து வருகின்றார்கள். அவ்வாறு செய்யாமல் பிரதிதினம் அமாவாஸ்யை, கிருத்திகை இத்தினங்களாய் எண்ணி ஈஸ்வரனுக்கு ஆராதனைச்செய்து சாப்பிடவேண்டும்

இதற்குத் திருஷ்டாந்தம் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாம் 3-சுலோகம் 12-ல், ஸ்ரீ கிருஷ்ணபகவான் என்ன சொல்லுகின்றாரென்றால்,

இஷ்டாந் போகாந் ஹி வோ தேவா தாஸ்யந்தே யஜ்ஞ பாவிதா:,
தைர்தத்தா நப்ரதா யைப்யோ யோ புங்க்தே ஸ்தேந ஏவஸ:.

ஆதலால், ஓ அர்ஜுனா !பிரம்மதேவர் அந்த ஜனங்களுடன் இன்னும் என்ன சொல்லினரென்றால் "ஓ புருஷ சிரேஷ்டர்களே! யஜ்ஞத்தினால் ஆராதிக்கப்பட்ட தேவதைகள், சந்தோஷமடைந்து உங்களுக்கு இஷ்டமான போகங்

களைக் கொடுப்பார்கள்; ஆதலால், நீங்கள் சாப்பிடுவதற்கு முன் அன்னமும் பதார்த்தங்களும் பகவானுக்குக் காட்டி ஆராதனைசெய்து மிகுதியாகிய சேஷத்தைச் சாப்பிட வேண்டும். இஃதன்றியும் எந்தெந்த இடங்களில் எந்தெந்தப் பதார்த்தங்களைச் சாப்பிடுகின்றீர்களோ அந்தந்தப் பதார்த்தங்களை அவ்வவ்விடத்திலேயே ஈஸ்வரனுக்கு அர்ப்பணம் செய்து அந்த சேஷத்தைச் சாப்பிடவேண்டும். மேற்படி தேவதைகளால் கொடுக்கப்பட்ட பதார்த்தங்களை அவர்களுக்கு நைவேதிக்காமல் சாப்பிடப்பட்டவன் திருடனே யாவான்'' என்று சொல்லினர்.

அர்ஜுநன்:—ஐயா கிருஷ்ணமூர்த்தியே! தேவர்கள் சமஸ்த போகங்களைக் கொடுக்கின்றார்களென்றும், அவர்களால் கொடுக்கப்பட்ட பதார்த்தங்களை மறுபடியும் அவர்களுக்கே நைவேதிக்க வேண்டுமென்றும், அப்படி நைவேதிக்காமல் சாப்பிடப்பட்டவன் திருடனாவானென்றும் பிரமதேவன் சொன்னதாய்ச் சொன்னீரே இதற்குக் காரணமென்ன? தேவதைகள் கொடுத்த பதார்த்தத்தில் சில பாகத்தை மறுபடியும் அவர் களுக்கு நைவேதிப்பதனால் எப்படி பிரீதியுண்டாகும்? அப்படி அவர்களுக்கு நைவேதிக்காமல் சாப்பிடுவதனால் எப்படி திருடனாவான்? இது என் புத்திக்கு எட்டாம லிருக்கின்றது. ஆதலால், இது விவரம் எனக்குத் தெரியச்சொல்லும் கிருஷ்ணா!

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுநா! நீ ராஜ்ஜிய பரிபாலனம் செய்யும் ராஜனல்லவா? உன்னிடத்தில் ஆயிரக்கணக்காய் ஜனங்கள் சம்பளம் வாங்கிக்கொண்டு சேவகம் செய்கின்றார்க ளல்லவா? அப்படிச் செய்வதற்குக் காரணமென்ன?

அர்ஜுநன்:—ஓ சுவாமி! அவர்கள் என்னிடம் சேவிப்பதற்காகவே நான் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கின்றேன். ஆதலால், அவர்கள் என்னிடம் சேவிக்கின்றார்கள்.

கிருஷ்ணன்:—நல்லது, உன் உத்தியோகஸ்தர்களில் சிலர், உன் உத்தியோகம் செய்வதுமேயல்லாமல் அப்போதைக்கப்போது உனக்கு, நல்ல உயர்ந்த ருசிகரமாகிய பழவர்க்கங்களைக் கொண்டுவந்து காணிக்கையாய்க் கொடுக்கின்றார்கள். மற்றும் சிலர் அப்படிச் செய்யாமல் நிராகரித்திருக்கிறார்கள். அப்போது இந்த இரண்டு வகுப்பினர்களிலும் எவர்களிடத்தில் உனக்கு அபிமானம் அதிகமாயிருக்கும்?

அர்ஜுநன்:—அப்போதைக்கப்போது பழவர்க்கங்களைக் கொண்டுவந்து காணிக்கையாய்ச் சமர்ப்பிக்கப்பட்டவர்களிடத்திலேயே எனக்கு அபிமானம் அதிகமாயிருக்குமேயன்றி மற்றவர்களிடத்தில் அப்படிப்பட்ட அபிமானம் இராது.

கிருஷ்ணன்:—ஆனால் நீ ஆயிரக்கணக்காய் கொடுத்த சம்பளத்திலிருந்து பழவர்க்கங்களை வாங்கிக்கொண்டு வருகின்றார்களா? அல்லது மற்றொருவிதமாய்ச் சம்பாதித்துக் கொண்டு வருகின்றார்களா?

அர்ஜுநன்:—நான் கொடாவிட்டால் அவர்களுக்கு எங்கிருந்துவரும்? ஆதலால் நான் கொடுத்த திரவ்வியத்திலிருந்தே பழவர்க்கங்களை வாங்கிக்கொண்டுவந்து கொடுக்கின்றார்களென்றே எண்ணவேண்டியது.

கிருஷ்ணன்:—அதனால் உனக்கென்ன பிரயோஜனமுண்டாயிற்று? உனக்கில்லாத வஸ்துவை ஏதாகிலும் அவர்கள் கொண்டுவந்து கொடுக்கின்றார்களா? அப்படிக் கொடாவிட்டால் உனக்கேதாகிலும் குறைவுபடுமா? ஆதலால் அவர்களிடத்தில் அபிமானம் வைக்கவேண்டிய காரணமென்ன?

அர்ஜுநன்:—எனக்கு அவர்கள் கொடுக்கப்பட்ட காணிக்கையினால் யாதொரு பிரயோஜனமும் இல்லாவிடி

னும், அவர்களுக்கு என்மீது உண்டாயிருக்கும் சிரத்தை பக்தி விசுவாசங்களினுல் எனக்கு அவர்களின்மீது அதிகப் பிரீதி உண்டாகின்றது. ஆதலால், அவர்களிடத்தில் நான் அபிமானம் வைப்பது சகஜமேயல்லவா?

கிருஷ்ணன்:—நல்லது நீ அவர்களை அபிமானிப்பதனுல் அவர்களுக்கு உன்னுல் ஏதாகிலும் பிரயோஜனமுண்டாகுமா?

அர்ஜுனன்:—ஆஹா! உண்டாகும். எனக்கு எப்பொழுது அவர்களிடத்தில் அபிமானம் உண்டாகின்றதோ அப்போதே அவர்களுக்கு ஆயிரக்கணக்காய் சம்பளம் உயர்த்திக்கொண்டே வருவேன். அதனுல் அவர்கள் கிரமக் கிரமமாய் அபிவிருத்தி அடையத் தக்கவர்களா யிருப்பார்கள். அப்படிச் செய்யாமல் என்னிடத்தில் பக்தி சிரத்தையில்லாதவர்களாய்த் தோன்றினுல் அவர்களுக்குச் சம்பளம் உயர்த்தி மேன்மையுண்டாக்க எனக்கு எப்படி மனம் உண்டாகும்? அதற்குப் பதிலாய் அவர்களை நாளாவட்டத்தில் க்ஷீணகதிக்குக் கொண்டுவரவேண்டுமென்றுத் தோன்றும்.

கிருஷ்ணன்:—இதுபோல் இந்திராதி தேவதைகளும், ஜனங்களுக்கு ஜீவனுர்த்தமாகிய பதார்த்தங்களைக் கொடுப்பதற்கு மழையை பெய்விக்க பகவானுல் நியமிக்கப்பட்டிருக்கின்றுர்கள். ஆதலால், அவர்களால் விளைத்துக் கொடுக்கப்பட்டப் பதார்த்தங்களை மறுபடியும் அவர்களுக்கு அர்ப்பணமாய் நைவேத்யம் செய்வதனுல் அவர்கள் சந்தோஷித்து மறுபடியும் மழையைப் பிரதிவருஷங்களிலும் விருத்தி செய்துகொண்டே வருவார்கள். அதனுல் ஜனங்கள் க்ஷேமமாய் விருத்தியடைவார்கள். அத்யாயம்-3, சுலோகம்-13,

யஜ்ஞசிஷ்டாசிந ஸ்ஸந்தோ முச்யந்தே ஸர்வ கில்பிஷைஃ
தேத்வகம் புஞ்ஜதே பாபா யே பசந் த்யாத்மகாரணாத்.

ஆதலால், ஓ அர்ஜுனா! நான் இதுவரையில் சொல்லியதுபோல் ஜீவனார்த்தமாகிய பதார்த்தங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கும் தேவதைகளை ஜனங்கள் பிரதிதினம் ஆராதிக்கவேண்டியது அத்யாவசிய மாதலால் புத்திமான்களாகிய ஜனங்கள் தேவதைகளுக்கு ஆராதித்த பிரசாதங்களைப் புஜித்து, ஜீவிப்பவர்கள் சமஸ்த பாபங்களிலிருந்து விடுபட்டு விமுக்தர்க ளாவார்கள். அப்படிச் செய்யாமல் எவனொருவன் சுவேச்சையாய் அன்னத்தைப் புசிக்கின்றானோ அவன் பாபத்திற்குப் பாத்திரனாகின்றான்.

தேவயஜ்ஞாதி பஞ்ச யஜ்ஞங்களைச் செய்து அம்ருதமென்னும் பெயருடைய அதன் சேஷத்தைச் சாப்பிடப் பட்டவர்கள் சகல பாபங்களிலிருந்து விடுபடுவார்கள். பஞ்ச யஜ்ஞமென்றால்,

"அத்யாபநம் ப்ரஹ்மயஜ்ஞஃ பித்ருயஜ்ஞஸ்து தர்பணம்
ஹோமோ தைவோ பலிர்பௌதோ ந்ருயஜ்ஞோ அதிதிபூஜநம்."

"பஞ்சைதாந் யோ மஹாயஜ்ஞாந் ந ஹாபயதி சக்திதஃ
ஸ க்ருஹேபி வஸந் நித்யம் ஸூநாதோஷைர் ந லிப்யதே."

இதில் பிரஹ்ம யஜ்ஞமென்றால்; பிரதிதினம் வேதாத்யயனம் செய்வது; பித்ரு யஜ்ஞமென்றால், பிரதிதினம் பித்ரு தேவதைகளுக்குத் தர்ப்பணங்கள் விட்டு திருப்தியடையச் செய்வது; தேவ யஜ்ஞமென்றால், பிரதிதினம் அக்கினியில் ஓமம் செய்வது; பூத யஜ்ஞமென்றால், பிரதிதினம் ஜந்துக்களுக்குப் பலிகொடுத்துக் கொண்டிருப்பது; மனுஷ்ய யஜ்ஞமென்றால் பிரதிதினம் வரப்பட்ட அதிதிகளுக்கு போஜனம் அளிப்பது;இப்படிப்பட்ட பஞ்ச மஹா யஜ்ஞத்தினால் பிரதிதினம் செய்யும் கிருஹஸ்தன் பஞ்ச ஸூனை

தோஷங்களை அடையமாட்டான். பஞ்ச ஸூனதோஷ மென்றால்:—

"கண்டநீ பேஷணீ சுல்லி உதகும்பீ சமார்ஜநீ
பஞ்ச ஸூநா க்ருஹஸ்தஸ்ய தாபிஸ் ஸ்வர்க்கம் ந விந்ததி."

உலக்கை உரல் அம்மி அடுப்பு ஜலபாண்டம் துடைப்பம் ஆகிய இவைகளில்லாமல் சம்சாரம் நடக்கமாட்டாதாதலால், இவைகளால் வேலை செய்யும்பொழுது சிறிய ஜந்துக்களாகிய புழுக்களுக்கு இம்சை யுண்டாகின்றது. ஆதலால், இதையே பஞ்ச ஸூனயஜ்ஞமென்று சொல்லப்படும். கிருஹத்தில்இப்பேர்ப்பட்ட தோஷங்கள் சம்பவிப்பதனால் கிருஹஸ்தனுக்குச் சொர்க்கம் உண்டாவது துர்லபம். சொர்க்கமே உண்டாகாம லிருந்தால் முக்தனாவது எப்படி? முன் சொல்லிய பஞ்ச மஹா யஜ்ஞங்களைச் செய்துவந்தால் இந்த தோஷங்கள் நசித்துவிடும். இப்படிக்குச் செய்யாதவர்கள் பாபத்தையே அனுபவித்துக்கொண்டு வரவேண்டும். இவ்விடத்தில் யஜ்ஞமென்றால் அக்னிஷ்டோமாதி யஜ்ஞங்களே யல்ல; பிரதி புருஷனும் ஓர் இஷ்டதேவதையை உபாசனா மூர்த்தியாய் ஆராதிப்பதுண்டல்லவா? அந்த உபாசனா மூர்த்திக்கு பிரதிதினம் சமைத்த பதார்த்தங்களை அந்தப் பகவானுக்கு ஆராதித்து அந்த சேஷத்தைச் சாப்பிடுவதும் யஜ்ஞமென்றே சொல்லப்படும். ஆதலால், ஓ அர்ஜுனா! அப்படி ஆராதித்தப் பிறகு"தைவம் மாநுஷரூபேண"என்றிருக்கின்றதாதலால், அதிதிகளுக்குப் பிக்ஷை கொடுத்து சாப்பிடவேண்டும். அப்படிக் கொடுத்துச் சாப்பிடுவதனால் தேவதா பிரீதியர்த்தமாய்ச் செய்யப்பட்ட யஜ்ஞங்களில் இது சேர்ந்ததென்று அறியக்கடவாய். இதன்றியும் சகல பூதங்களும் பகவத் சொரூபமே யாதலால், பிபீலிகாதி பிரமதேவன் வரையில் சகல ஜீவ ஜந்துக்களிலும் சாக்ஷாத் பரப் பிரம்மமே சாக்ஷிமாத்ரனாய் ஆத்ம சொரூப

ணய் இருப்பதனுல் தன் வீட்டைக் காத்துக்கொண்டிருக்கும் நாய் பூனை முதலாகிய ஐந்துக்களுக்கும் அன்னம் போடுவது தேவதாப்பிரீதியர்த்தம் செய்யப்பட்ட யஜ்ஞத்திலேயே சேர்ந்ததாகின்றது. எந்த ஜாதியாரா யிருந்தாலும் அவர்களின் சக்தியானுசாரமாய் இப்படிச் செய்வதற்குச் சாத்திய மானதேயன்றி அசாத்திய மானதல்ல. இப்படிச் செய்வதனுல் பகவானுக்குப் பிரீதியுண்டாகின்றது அப்பொழுது அவனுடைய பாபங்கள் பரிஹாரமாகின்றன (நசிக்கிறன); அப்படிச் செய்யாதவனுக்கோ என்றுல், சமைத்த பதார்த்தங்களைப் பகவானுக்கு ஆராதிக்காமலும் தன் சக்தியானுசாரம் அதிதிகளுக்குப் போடாமலும் தன் வீட்டைக் காத்துக் கொணடிருக்கும் பூனை நாய்களுக்கும் போடாமலும் எவனொருவன் தன் குடும்பம்வரையில் உபயோகித்துக் கொள்ளுகின்றுனே அப்படிப்பட்டவன் பாபியென்றே சொல்லப்படுவான்.

ஆனுல், இப்படி யஜ்ஞரூபமாகிய தேவதா ஆராதனையினுல் உண்டாகும் பிரயோஜன மென்னவென்று கேட்கின்றுயோ சொல்லுகின்றேன் கேள்:—

அந்நாத் பவந்தி பூதாநி பர்ஜந்யா தந்ந ஸம்பவஃ
யஜ்ஞாத் பவதி பர்ஜந்யோ யஜ்ஞஃ கர்ம ஸமுத்பவஃ.

அப்படிப்பட்ட யஜ்ஞத்தினுல் தேவதைகளுக்குப் பிரீதி யுண்டாகின்றது; அதனுல், அவர்கள் காலமழையைச் சரியாய்ப் பெய்விக்கின்றுர்கள்; அப்படிப் பெய்விப்பதனுல் பயிர்கள் சரியாய்ப் பலன்களைக் கொடுக்கின்றன; அப்படிக் கொடுப்பதனுல் ஜனங்களுக்கு ஆஹாரங்கள் புஷ்களமாய் உண்டாகின்றன. அதனுல், மனிதர்கள் பசு பக்ஷி முதலானவைகள் அபிவிருத்தி யாகின்றன. ஆதலால், ஜனங்கள் யஜ்ஞமென்னும் தேவதா ராதனையைச் சரியாய் நடத்திக்கொண்டு வரவேண்டும். இவ்வாறு நடத்திக்கொண்டு

வந்தால், அவரவர்கள் நற்கதி யடைவதுமேயன்றி மாதம் மும்மாரி மழை பெய்யும். ஆதலால், பிரதி மனுஷ்யனும் யஜ்ஞமென்னும் கர்மத்தை அவஸ்யமாய் அனுஷ்டிக்க வேண்டும். அத்யாயம்-3, சுலோகம்-16,

ஏவம் ப்ரவர்த்திதம் சக்ரம் நாநுவர்தயதீஹ யஃ
அகாயு ரிந்த்ரியாராமோ மோகம் பார்த்த ஸ ஜீவதி.

அர்ஜுநா! இந்த யஜ்ஞம் சக்ராகாரமாய்த் திரிந்து கொண்டிருக்கின்றது; அஃதெப்படியென்றால் யஜ்ஞம், ஜனங்களுடன் கூடவே பிரமதேவனால் உற்பத்தி செய்யப் பட்டது. அந்த யஜ்ஞத்தினால் தேவதைகள் பிரீதியாகின்றார்கள், பிரீதியாவதனால் மழை பெய்கின்றது. மழை பெய்வதனால் ஆஹார வஸ்துக்கள் விசேஷமாய் உண்டாகின்றன. அப்படி உண்டாவதனால் பகவ தாராதன ரூபமாய்க் கர்மத்தைச் செய்ய சக்தியுடையவர்களாகின்றார்கள். அப்படிப்பட்ட கர்மம் மறுபடியும் அந்தப் பகவானிடத்திலேயே அர்ப்பணமாகின்றது. ஆதலால், இந்த யஜ்ஞ ரூபமான கர்மம் எந்த பரப் பிரம்மத்திலிருந்து பிறந்ததோ அந்தப் பரப் பிரம்மத்திலேயே ஐக்கியமாய் மறுபடியும் அதிலிருந்தே உண்டாகிறபடியால் இதற்குச் சக்ரமென்று சொல்லப்படும். இந்த விஷயங்களை எல்லாம் எவனொருவன் சரியாய் அறியாமல், தான் செய்யப்பட்ட கர்மமெல்லாம் பரமாத்மாவினாலேயே உண்டாயினவென்றும், அவற்றின் பலன் அந்தப் பரமாத்மாவிற்கே சேரவேண்டியதாயிருக்கின்றதென்றும் எண்ணாமல், தன் ஆத்மார்த்தமாய் எண்ணி அதன் பலத்தைத் தானே அனுபவித்துக்கொண்டு மனதை இந்திரிய விஷயங்களில் ஓடவிட்டுக்கொண் டிருக்கின்றானோ, அவன் பாபாத்மனாகின்றான். அப்படிப்பட்டவன் ஜீவனம் வியர்த்தமானதா யிருக்கின்றது.

ஓ அர்ஜுநா! உலகத்தில் முதல் விருக்ஷம் உண்டா

யிற்று அல்லது விதையுண்டாயிற்று என்னும் விஷயத்தை எவ்வாறு சொல்லத் துணியமாட்டோமோ அதுபோல் இந்தச் சக்கிரத்திற்கு இது முதலென்றும் இது கடையென்றும் சொல்வதற்குச் சாத்தியப் படமாட்டா. அது போல் சம்சாரமென்னும் சமுத்திரமும் அனாதியென்று சொல்லப் பட்டிருக்கின்றது. அஃதெப்படியென்றால், ஒரு சக்கரத்தின் மீதேறி அந்தச் சக்கரத்தை அநேக தடவைகளில் சுற்றிவரும் எறும்பானது தான் வெகுதூரம் திரிகின்றதென்று எண்ணுமேயன்றி மறுபடியும் யதா ஸ்தானத்திற்கே வருகின்றதென்று தெரிந்து அந்தச் சக்கிரத்தை விட்டு அப்புறம் போவதற்கு எப்படி பிரயத்தினப் படாதோ அதுபோல் சம்சாரி தான் ஒரு தடவை செய்த கார்யங்களையே மறுபடியும்செய்துகொண்டு அப்போதைக் கப்போது அது நூதன (புது) வியவகாரங்கள் செய்வது போல் பிரமையடைந்து, இந்த சம்சாரமென்னும் சக்கிரத்தில் பிறந்துகொண்டும் இறந்துகொண்டும் இருப்பானேயன்றி, இதிலிருந்து விமுக்தனாவதற்குப் பிரயத்தினப் படமாட்டான்.

"இந்த அத்தியாயம் 3-சுலோகம் 3-முதல் 17-வரையில், அஜ்ஞானி அந்தஃகரண சுத்தி நிமித்தமாய்க் கர்மத்தைச் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. 18-வது சுலோகம் முதல் பிரம்ம ஞானிக்குக் கர்மத்தினால் பிரயோஜனம் இல்லை யென்பதைச் சொல்லப்போகின்றார்." இதை ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத் கீதையில் விரிவாய்க் காணலாம். இன்னும் அத்யாயம் 9-சுலோகம் 27-ல்,

யத்கரோஷி யதஶ்நாஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத்
யத்தபஸ்யஸி கௌந்தேய! தத்குருஷ்வ மதர்ப்பணம்.

ஓ குந்தீபுத்ரா! சுபாவ குணத்தினாலாகிலும் சாஸ்திர

விதிப்படியாகிலும் நீ எந்தக் கர்மங்களைச் செய்கின்றாயோ உன் பசி தணிய வயிற்றிற்கு எதைச் சாப்பிடுகின்றாயோ, எதையெதைப் புசிக்கின்றாயோ, எதைக் குடிக்கின்றாயோ, எதைத் தானம் செய்கின்றாயோ, எதில்மனதைச் செலுத்துகின்றாயோ, எதைக் கொடுக்கின்றாயோ அவைகளை எல்லாம் எனக்கு அர்ப்பணம்செய் நான் என்னும் அஹங்கார மமகாரங்களைவிட்டு எல்லாவற்றையும் பிரம்மார்ப்பணமாய்ச் செய்வதே எனக்கான பூஜை. இவ்வாறு செய்யும் கர்மயோகி கர்ம பந்தங்களிலிருந்து விடுபட்டு ஆத்ம ஞானத்தை யடைந்து ஜீவன் முக்தனாய் பிரம்மமாகிய என்னில் ஐக்கியமாவான் என்று சொல்லப் பட்டிருக்கின்றது. ஆதலால், நீங்கள் பிரதிமாதமும் பிதுர் தர்ப்பணமென்னும் கர்மத்தைச் செய்துவரவேண்டும். அப்பிதுர் தர்ப்பண கர்மங்கள் எவ்வாறு விடவேண்டுமோ அதை இதனடியில் சொல்லுகின்றோம், அதுபோல் பிரதிமாத அமாவாஸ்யைகளிலும் பிதுர் தர்ப்பணம் விட்டுவரவேண்டும்.

அமாவாஸ்யையில் பிதுர் தர்ப்பணம் விடும் மந்திரம்.

எனதன்பர்களே!

பிரதிமாதம்வரும் அமாவாஸ்யையில் நீங்களே பிதுர் தர்ப்பணம் விட்டுக்கொள்ளவேண்டிய மந்திரங்களை இதனடியில் சொல்லுகின்றோம். அதுபோல், பிரதி அமாவாஸ்யை தினங்களில் ஸ்நானம் செய்து தர்ப்பணம் விடுங்கள்:—

ஸ்நானம்செய்து முடிந்தபிறகு மூன்று தர்ப்பை நுனிகளை ஒன்றாய்ச்சேர்த்து ஜாணளவு நீளத்தில் கிள்ளி அம்மூன்று தர்ப்பை நுனியில் ஒருமுடிபோட்டு வைத்துக்

கொள்ளவேண்டும். பிறகு, நாலங்குலம் நீளமுள்ளதாய் பத்து தர்ப்பைகளைக் கிள்ளி வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு, நீளமுள்ள சில தர்ப்பைகளையும் எள்ளும் எடுத்து எல்லாவற்றையும் தயார் செய்து வைத்துக்கொள்ளவேண்டும்:—

மேற்சொல்லியதுபோல் தர்ப்பையும் எள்ளும் தயார் செய்துகொண்டு ஒரு பெரிய மணையின்மீது மான்தோல் போட்டு அதன்மேல் வெள்ளை வஸ்திரம் மடித்துவிரித்து கிழக்குமுகமாய்ச் † சித்தாசனத்துடன் உட்காரவேண்டும். இவ்வாறு உட்கார்ந்து, சிரசு உச்சி நெற்றி மார்பு தொப்புள் புஜம் நடுக்கைகள் கணுக்கைகள் மாறுதலாய் முழங்கால் பாத மணிக்கட்டு விலா முதுகு கழுத்து முதலான இடங்களில் மந்திரங்களைச்சொல்லி விபூதியிட இந்நூலில் இதுவே சிவராஜயோக ஸமாதி இதை ஜபம் செய்யுங்கள் என்னும் அத்யாயத்தில் எழுதியிருக்கின்றோம். அதைப் பாடம் செய்து அம்மந்திரங்களை மனதில் நினைத்துக்கொண்டே அந்தந்த அவயவங்களில் விபூதியிட்டு முடிந்தவுடன் விபூதியிட்ட ஜலத்தை கிணற்றிலாகிலும் செடிகளிலாகிலும் விட்டுவிடவேண்டும். பிறகு,

தன் எதிரில் ஒரு பஞ்சபாத்திரம் ஜலம் தட்டில் வைத்து, ஒரு பெரியசெம்பு ஜலமும் இலையும் எள்ளும், முன் தயார் செய்துவைத்த தர்ப்பைகளும் தன் வலதுகைப் புறமாய் வைத்துக்கொள்ளவேண்டும்.

இவைகளையெல்லாம் தன் சமீபமாய்த் தயார்செய்து வைத்துக்கொண்டு பிறகு கணபதிபூஜை செய்துமுடித்து தர்ப்பணம் விடவேண்டும். இனி கணபதிபூஜையும், பிதுர்

---

† சித்தாசனம் இடதுபாதம் வலது தொடையின் கீழ்வைத்து, வலது பாதத்தை இடது தொடைக்கும் முழங்கால் கணுக்கால் இரண்டிற்கும் மத்தியில் வைத்து உட்காருவது.

தர்ப்பணம் விடும் மந்திரங்கள் அடியில் சொல்லப்போகின்ளோம். இவைகளையெல்லாம் பாடம் செய்து பிரதி அமாவாஸ்யைகளில் நீங்களே பிராமணன் இல்லாமல் தர்ப்பணம் விட்டுவாருங்கள். இனி கணபதிபூஜை சொல்லுகின்ளோம்:—

இரண்டு சிறிய தற்பைகளை ஆசனயாய்க் காலின்கீழ் வைத்து உட்கார்ந்து,

சுக்லாம் பரதரம் விஷ்ணு, ஸசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்ன வதனம் தியாயேத், ஸர்வ விக்னோப ஸாந்தயேத்.

இம்மந்திரங்களைச் சொல்லி இரண்டு கன்னத்திலும் மாறுதலாய்க் குட்டிக்கொள்ளவேண்டும். பிறகு,

இரண்டு சிறிய தர்ப்பைகளை, வலதுகை சுண்டுவிரல் மோதிரவிரல்களின் சந்தில்வைத்து பின்புறமாய் வளைத்து விரல்களால் அத்தற்பையை இடிக்கிப்பிடித்து தர்ப்பையுள்ள வலது உள்ளங்கையால் இடது உள்ளங்கையைமூடி வலதுதுடை முழங்கால்மேல்வைத்து அடியில் சொல்லப்போகும் மந்திரங்களைச் சொல்லவேண்டும்.

சிவாய்யாம், சிவசிவ, சம்புராக்ஞ, ப்ரவர்த்தமாநஸ்ய, ஆத்ய ப்ரஹ்மண, த்விதிய ப்ரார்த்தே, ஸ்வேதவராஹகல்பே, வைவஸ்வத, மந்மந்தரோ, அஷ்டாவிகும், ஸததமே, கலியுகே, ப்ரதமபாதே, ஸஷ்டிஸம்வச்சராணும் மத்யே, ரத்தாக்ஷிநாம ஸம்வச்சரே * உத்தராயணே, மேஷமாஸே, கிருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாம், சுபதிதௌ, வாசரঃ, பானுவாஸர யுத்தாயாம், அஸ்வனி நக்ஷத்ர, யுக்தாயாம், சுபயோக, சுபகருண, யேவங்குண, விசேஷண, விசிஷ்டாயாம், அஸ்யாம், வர்த்தமானுயாம், அமாவாஸ்ய, புண்யகாலே, சிவகோத்திரத்தில் இருக்கப்பட்ட

* உத்தராயணம்=தைமுதல் ஆனிவரையில்
தக்ஷணயணம்=ஆடிமுதல் மார்கழிவரையில்

அடியேனுடைய தோப்பனுர்..............., பாட்டனுர்........
........, இரண்டாம் பாட்டனுர்..............., தாயார்........
........, பாட்டியார்..............., இரண்டாம் பாட்டியார்....
............, அமாவாஸ்ய, புண்யகாலே, தில தர்ப்பணஞ்ச, அத்யமகம், அத்யகருஷ்யே;

இம்மந்திரங்கள் சொல்லி முடிந்தவுடன் தர்ப்பையைப் போட்டுவிடவேண்டும். பிறகு,

தெற்கு முகமாய் இடது முழங்கால் மண்டிபோட்டு இடதுகை பூமியில் ஊன்றி உட்கார்ந்து,முன் தயார்செய்து வைத்த நாலங்குல நீளமுள்ள தர்பையில் ஆறு தர்ப்பைகளையெடுத்து, பூமியில் ஊன்றியிருக்கும் இடது முழங்கால் இடது முழங்கை சந்துவழியாய்க் கொண்டுவந்து அத்தர்ப்பையை தன் எதிரில் கிழக்குமேற்காய் ஒரு ஜாணுக்குள் இரண்டு தர்ப்பைகளாய்ச் சேர்த்து தட்டில் மூன்று இடங்களில் வைக்கவேண்டும். பிறகு,

மண்டிபோட்டிருக்கும் முழங்கால் முழங்கை சந்து வழியாய் முடிபோட்டிருக்கும் தர்ப்பையைக் கொண்டு வந்து, முடி தெற்காயும் அடி வடக்காயும் இருக்கும்படி மேற்படி தட்டிலுள்ள தர்ப்பைகளின்மேல் வைக்கவேண்டும். இவ்வாறு வைத்தபிறகு, முழங்கால் முழங்கை சந்து வழியாய் எள் வலதுகையில் கொண்டுபோய் மூன்றுமந்திரங்களைச் சொல்லிக்கொண்டே தர்ப்பை முடியிலும், மத்தியிலும் கடைசியிலும் எள் வைக்கவேண்டும். அம்மந்திரங்களை இதனடியில் சொல்லுகின்றோம்:—

சிவகோத்திரத்தில் இருக்கப்பட்ட அடியேனுடைய தோப்பனுர்..............., பிரதமரூபத்திற்கு ஆவாஹ நன்னமஃ,

பாட்டனுர்..............., த்விதிய ரூபத்திற்கு ஆவாஹ நன்னமஃ,

இரண்டாம் பாட்டனர்..............., த்ருதியரூபத்திற்கு ஆவாஹ நன்னமஃ,

தாயார்..............., ப்ரதம ரூபத்திற்கு ஆவாஹ நன்னமஃ,

பாட்டியார்..............., த்விதிய ரூபத்திற்கு ஆவாஹ நன்னமஃ,

இரண்டாம் பாட்டியார்..............., த்ருதிய ரூபத்திற்கு ஆவாஹ நன்னமஃ,

தோப்பன், பாட்டன், இரண்டாம் பாட்டன்களுக்கு முடிபோட்டுவைத்த தர்ப்பைமேல் எள் வைத்து முடிந்தவுடன், அவர்களின் பார்யர்களாகிய உங்கள் தாயார், பாட்டி, இரண்டாம் பாட்டிகளுக்கும் எள் யெடுத்து மேற்படி எள்ளுடன் சேர்ந்தாற்போல்வைத்து முடிந்தவுடன், தர்ப்பையை சொம்புக் கழுத்தில் சுற்றி வலதுகையில் எள் யெடுத்து, தர்ப்பை நுனிவழியாய் சிறிதாய் இடதுகையிலுள்ள ஜலம், வலதுகையிலுள்ள எள்ளில்விட்டு எல்லோர் பெயரையும் சொல்லி தர்ப்பணம் விடவேண்டும்.

பிதுஹ்ரூஃ தோப்பனர்..............., ப்ரதமரூபத்திற்கு திலோத கன்னமஃ, திலோத கன்னமஃ, திலோத கன்னமஃ,

த்விதிய ரூபஸ்ய பாட்டனர்............, த்விதிய ரூபத்திற்கு திலோத கன்னமஃ, திலோத கன்னமஃ, திலோத கன்னமஃ,

த்ருதியரூபஸ்ப இரண்டாம் பாட்டனர்..................., த்ருதிய ரூபத்திற்கு திலோத கன்னமஃ, திலோத கன்னமஃ, திலோத கன்னமஃ,

தாயார்..............., ப்ரதமரூபத்திற்கு திலோத கன்னமஃ, திலோத கன்னமஃ, திலோத கன்னமஃ,

பாட்டியார்..............., த்விதியரூபத்திற்கு திலோத கன்னமஃ, திலோத கன்னமஃ, திலோத கன்னமஃ,

இரண்டாம் பாட்டியார்................., த்ருதிய ரூபத்திற்கு திலோதகன்னமஃ, திலோதகன்னமஃ, திலோதகன்னமஃ,

இவ்வாறு, எள்ளும் ஜலமும் தர்ப்பணம்விட்டு அவ்வாறே உட்கார்ந்து,

சர்வேஷாம், காருண்ய, பிதுர்முக்தஸ்ய, அறிந்தறியாத மூவேழு இருபத்தோரு தலைமுறைக்கும் தர்ம திலோதகன்னமஃ, திலோதகன்னமஃ, திலோதகன்னமஃ,

அயோத்யா, மதுரா, மாயா, காசீ, காஞ்சீ, அவந்திகாபுரி, துவாரகாபுரி, ஸப்தைக, மோக்ஷதாயக, முக்திதாயக, காசிகாசி, பலேனித்யம், விஸ்வநாத ஸன்னிதௌ, கயாயாம் கயாயாம்ஃ

இவைகளையெல்லாம் சொல்லி முடித்து எழுந்து நின்று இரண்டுகைகளையும் குவித்து தர்ப்பணம் விட்ட தட்டுக்கெதிரில் மூன்றுமுறை பிரதக்ஷணம் செய்து உட்கார்ந்து தன் வேஷ்டி நுனியை தட்டிலுள்ள ஜலத்தில் நனைத்துப் பிழிந்து கண்களில் ஒற்றிக்கொள்ளவேண்டும். பிறகு,

எள் யெடுத்து யதாஸ்தானம் ப்ரதிஷ்டா பயாமி என்று சொல்லி அவ்வெள்ளை தட்டிலுள்ள தர்பைமேல் போட்டு, மூன்றாய்ச் சேர்த்து முடிபோட்டிருந்த தர்ப்பை முடியை அவிழ்த்து, எல்லாம் ஒன்றாய்ச்சேர்த்து கிணற்றிலாகிலும் செடிகளிலாகிலும் விட்டுவிடவேண்டும்.

பன்னிரெண்டு மாதங்களின் பெயர், கிழமை, நக்ஷத்திரங்களும் இதனடியில் சொல்லுகின்றோம்; அந்தந்தமாதங்களில் வரும் அமாவாஸ்யை மாதம், கிழமை, நக்ஷத்திரங்களுக்கு மாருபெயர் சொல்லுகின்றோம். அதுபோல் சொல்லி தர்ப்பணம் விடவேண்டும்.

மாதம்.

சித்திரை (மேஷமாஸே), வைகாசி (இடபமாஸே), ஆனி (மிதுனமாஸே), ஆடி (கடகமாஸே), ஆவணி (சிங்கமாஸே), புரட்டாசி (கன்னிமாஸே), ஐப்பசி (துலாமாஸே), கார்த்திகை (விருச்சிகமாஸே), மார்கழி (தனுர்மாஸே), தை (மகரமாஸே), மாசி (கும்பமாஸே), பங்குனி (மீனமாஸே),

கிழமை.

ஞாயறு (பானுவாசர யுக்தாயாம்) திங்கள் (இந்துவாசரயுக்தாயாம்),செவ்வாய்(பௌம்யவாசர யுக்தாயாம்), புதன் (சௌம்யவாசர யுக்தாயாம்), வியாழம் (குருவாசர யுக்தாயாம்), வெள்ளி (ப்ருகுவாசர யுக்தாயாம்), சனி (ஸ்திரவாசர யுக்தாயாம்).

நக்ஷத்திரங்கள்.

அஸ்வனி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, புநர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்தரம், அஸ்த்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி.

மேற்சொல்லிய மாதம், கிழமை, நக்ஷத்திரங்களில் எந்தமாதத்தில் எந்தக்கிழமை, எந்த நக்ஷத்திரம், அமாவாஸ்யை வருகின்றதோ அந்த மாதம், அந்த கிழமை, அந்த நக்ஷத்திரம், சொல்லி தர்ப்பணம்விட இதில் எழுதியிருக்கின்றோம்: இவ்வாறு தற்பணம்விட்டு பிரதிதினம் அன்னம் மந்திர பூர்வகமாய்ச் சுத்திசெய்து சாப்பிடவேண்டும். அதை இதனடியில் சொல்லுகின்றோம்:

அன்னம் மந்திர பூர்வகமாய்ச் சுத்திசெய்து சாப்பிடுவதனுல் உண்டாகும் பலன்,

அன்பர்களே! பிரதிதினம், போஜனத்திற்காக உட்கார்ந்து பதார்த்தங்களும் சாதமும் இலேயில் பரிமாரிய பின், வெறும் சாதத்தில் நெய்விடச்சொல்லி இடதுகை நடுவிரலே இலே மத்தியில் ஊன்றி, தன் வலதுகையில் மனைவியை கொஞ்சம் தீர்த்தம் விடச்சொல்லி.

"ஓம் பூர்புவஸ்ஸுவஃ, ஓம் தத்ஸவிதுர்வரேண்யம்,
பர்கோதேவஸ்ய தீமஹீ, தியோ யோநஃ ப்ரசோதயாத்."

என்னும் இந்நான்கு மந்திரங்களேயும் சொல்லி அந்த தீர்த்தம் அன்னத்தின்மீது புரோக்ஷித்தால் (தெளித்தால்) அந்த அன்னம் சுத்தியாகின்றது. பிறகு கொஞ்சம் தீர்த்தம் கையில் விடச்சொல்லி,

"தேவ ஸவித ப்ரஸௌவ" என்று சொல்லி அந்தத் தீர்த்தம் இலே சுற்றிலும் விடவேண்டும். பிறகு கொஞ்சம் தீர்த்தம் கையில் விடச்சொல்லி,

"ஸத்யம் த்ருதேந பரிஷிஞ்சாமி" என்று சொல்லி மறுபடியும் அந்தத் தீர்த்தம் இலே சுற்றிலும் விடவேண்டும்.

இவ்விதமாய் இரண்டுமுறை இலே சுற்றிலும் விட்டபின் மறுபடியும் கொஞ்சம் தீர்த்தம் கையில் வாங்கி "அம்ருதோபஸ் தரணமஸி" என்று சொல்லி அந்தத் தீர்த்தம் சாப்பிடவேண்டும்.

இவ்விதமாய்ச் சாப்பிட்டபிறகு முன் நெய்விட்டிருந்த வெறும் சாதத்தில் மறுபடியும் கொஞ்சம் நெய் விடச் சொல்லி, பெருவிரல், நடுவிரல், பவித்திர (மோதிர) விரல்களால் நெய்விட்ட வெரும் சாதத்தைக் கலந்து நாலேந்து அன்னத்தை மாத்திரம் மேற்படி விரல்களால் எடுத்து

கொண்டு அடியில் சொல்லப்போகும் ஒவ்வொரு மந்திரங் களையும் மனதினுல் நினைத்து வாய்திறந்து பற்களில் படா மல் ஆறு முறையும் ஆறு மந்திரங்களைச் சொல்லி அந்த அன்னத்தை விழுங்கி பஞ்ச பிராணன்களுக்கு ஆஹுதி செய்யவேண்டும். ஆஹுதி என்ருல், எரிந்து கொண் டிருக்கும் அக்கினியில் போடுவது. நெய்கலந்த அன்னம் வாயில் போடும் மந்திரம் இனி இதனடியில் சொல்லுகின் ருேம் கேளுங்கள்.

"ஓம் ப்ராணய ஸ்வாஹா, ஓம் அபாநாய ஸ்வாஹா,
ஓம் வியாநாய ஸ்வாஹா, ஓம் உதாநாய ஸ்வாஹா,
ஓம் ஸமாநாய ஸ்வாஹா, ஓம் ப்ரஹமணே ஸ்வாஹா,
ப்ரஹமணிமாத்ம அமுர்தத்வாயா."

என்று இந்த மந்திரங்களைச் சொல்லி வாய்திறந்து அந்த அன்னத்தை, வாயில் போட்டுக் கொண்டு பற்களில் படாமல் விழுங்கியபின், இடதுகைப் பக்கமாய் பார்யாளை இரண்டிடங்களில் பூமியின்மேல் ஜலம்விடும்படிச் சொல்லி முன் இலையில் ஊன்றியிருந்த இடதுகை நடுவிரலை எடுத்து முதல்விட்ட ஜலத்தில் தொட்டு சுத்திசெய்து மறுபடியும் அந்த விரலை, இரண்டாவது விட்ட ஜலத்தில் தொட்டு "ப்ரஹ்மணிமாத்ம அமுர்தத்வாய" என்றுசொல்லி விரலை மார்பில் தொடவேண்டும். இவ்விதமாய்த் தொடுவதற்குக் காரணம் யாதெனில், ஆத்மா இருதய கமலத்தின் மத்தியில் இருப்பதனுல் அவ்வாத்மாவிற்கு நைவேத்தியம் செய்து அந்த சேஷத்தை நான்சாப்பிடுகின்றேன் யென்பதே இவை களின் கருத்து; இலையில்உட்கார்ந்து இடதுடகைநடுவிரலை இலையில் ஊன்றி முன் சொல்லிய மந்திரங்களை எல்லாம் சொல்லி முடித்து, நெய்விட்டிருக்கும் வெறும் அன்னம் மூன்று விரல்களால் எடுத்து 6 - முறைகள் வாயில் போடும்வரையில் நடுவிரலை இலையில் ஊன்றிக்கொண்டே

யிருக்கவேண்டும். மந்திரங்கள் சொல்லி முடிந்தபின், இலையில் ஊன்றிய இடதுகை விரலை எடுத்துவிடவேண்டும். பிறகு பருப்புபதார்த்தங்கள் கலந்துசாப்பிட்டுமுடிந்தவுடன் எழுந்திருப்பதற்குமுன், மறுபடியும்கொஞ்சம் தீர்த்தம் கையில் விட்டுக்கொண்டு அம்ருதாபி தானமஸி" என்று சொல்லி அந்தத் தீர்த்தத்தைச் சாப்பிட்டு எழுந்திருக்கவேண்டும். இரவில் சாப்பிடும்போது மாத்திரம் "தேவஸவித ப்ரஸௌவ" "ருதம்வா ஸத்யேநபருஷஞ்சாமி" என்னும் இந்த இரண்டு மந்திரங்களையும் சொல்லி இரண்டு முறை இலையைச் சுற்றிலும் ஜலம் விடவேண்டும். இந்த மந்திரங்களைச் சொல்லி சாப்பிடுவதனால் நான் சாப்பிட்ட பதார்த்தம் அமிர்தமாயிற்று என்னும் பாவனையேயாம்.

இப்படிச் செய்வதனால் என்ன குணங்கள் உண்டாகுமென்றால், துன்மார்க்க விருத்தியில் திரவ்வியம் சம்பாதிக்க இடங் கொடாமல் நியாயமாய்ச் சம்பாதிக்க எண்ணம் உண்டாய், அப்படி சம்பாதித்த திரவ்வியத்தினால் பதார்த்தம் வாங்கிச் சமைத்து பகவானுக்கு ஆராதனை செய்து மிகுதியான சேஷத்தை நான் சாப்பிடுகின்றேன் என்றும், நான் சாப்பிடும் ஆஹாரம் அநியாயமாய்ச் சம்பாதித்ததல்ல நியாயமாய்ச் சம்பாதித்ததென்று த்ருட வைராக்கியம் ஏற்படும். ஆதலால், முன் சொல்லியதுபோல் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் முதலாகிய நான்கு வருணஸ்தர்களும், அன்னத்தை மந்திரபூர்வகமாய்ச் சுத்தி செய்து போஜனம் செய்யவேண்டும்.

இப்படி மந்திர பூர்வகமாய்ப் போஜனம் செய்யப்பட்டவர்கள் மறு ஜன்மத்தில் என்ன பலன் அடைவார்களென்றால் அது விஷயம் ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம்-6, சுலோகம் 44-ல்,

பூர்வாப்யாஸேந தேநைவ ஹ்ரியதே ஹ்யவஸோபி ஸ:
ஜிக்ஞாஸுரபி யோகஸ்ய ஸப்தப்ரஹ்மாதி வர்த்ததே.

பரிசுத்தமான மனதுடன் பக்தி செய்து மரண மடைந்தவன் மறு ஜன்மத்தில், தானுய்ப் பிரயத்தினப் படாவிட்டாலும் நானே அவனை பலவந்தமாய் மனதை நிறுத்த மேல்படிக்குக் கொண்டுபோகின்றேன். ஏனென்ருல் பூர்வ ஜன்மங்களில் நான் அவனுடன்கூடவே யிருந்து, அவன் மனதிற்குச் சாவியைக் கொடுத்துத் திருப்பி விசேஷ பக்தியை உண்டாக்கினவன் நானே. இந்த ஜன்மத்திலும் நான் அவனுடன் கூடவே இருப்பதனுல், அவன் முன் ஜன்மத்தில் ஈசுவரபக்தி கால் செய்திருந்தால் அரையும், அரை செய்திருந்தால் முக்காலும், முக்கால் செய்திருந்தால் பூர்த்தி செய்வது என்னுடைய கடமையேயன்றி அவனுடைய கடமையன்று என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், இதை வாசிக்கும் சகோதர சகோதரிகளும் ஈசுவரபக்தி செய்யும்போது மனதை வெளியில் ஓடவிடாமல் உள்முகமாய்த் திருப்பி நிறுத்தி, பக்தி செய்து முடிந்தவுடன், போஜனத்திற்காக உட்கார்ந்து சாப்பிடும்போது பதார்த்தங்களுடன் அன்னம் பரிமாறிய பின் முன் சொல்லிய மந்திரங்களால் அன்னத்தைச் சுத்தி செய்து சாப்பிடவேண்டும். நாயனு! பக்தி செய்யும் மார்க்கம் "ஸ்ரீ கபீர்தாஸ்" சரித்திரத்தில் விசேஷமாய் எழுதப் பட்டிருக்கின்றது. ஆதலால், ஒவ்வொருவரும் கபீர்தாஸ் சரித்திரம் வரவழைத்து வாசிப்பாராகில், ஆத்மாவுடன் சேர்ந்திருக்கும் மாயை என்னும் மலினம் நீங்கும். மலினம் நீங்குவதனுல் ஆத்மா பரிசுத்தமாய் விடுகின்றது. ஆத்மா பரிசுத்தமான பிறகு அது தன் சொரூபத்தில் போய்ச் சேரும். அதாவது, ஜீவாத்மா பரமாத்ம சொரூபத்தை அடையும். இதற்குத் திருஷ்டாந்தம் ஸ்ரீ பகவத் கீதை அத்யாயம்-15, சுலோகம்-11,

யதந்தோ யோகிநஶ்சைநம் பஶ்யந்த்யாத்ம ந்யவஸ்திதம்
யதந்தோப்ய க்ருதாத்மாநோ நைநம் பஶ்யந்த்ய சேதஸ:.

வைராக்கியம் ஜீவகாருண்யம் ஈசுவரபக்தி முதலாகிய நல்ல சாதனங்களுடன் தேசங்கள்தோறும் இருக்கும் யோகி, தேகத்திற்கு வேருகவும் விலக்ஷணனுகவும் சச்சிதானந்த சொரூபனுகவும் இருக்கும் ஆத்மாவை அறிகின்ருன். காமக் குரோதாதிகளென்னும் மலின மனமுடையவர்கள் ஆத்மாவை அறியமாட்டார்கள். ஆதலால்,

இதை வாசிக்கும் ஸ்திரீ புருஷர்கள் எல்லோரும், வைராக்கியமாயும் ஜீவகாருண்யமாயும் இருந்து, மச்சம் மாம்சம் முதலானவைகளைப் புசிக்காமல் நிவர்த்திசெய்து சுசி ஆசாரங்களுடன் இருந்து பதார்த்தங்களைச் சமைத்து, பிரதிதினம் காலை இரவுகளில் பகவானுக்கு ஆராதனைச் செய்து, அந்த சேஷத்தை முன் சொல்லியதுபோல் மந்திர பூர்வகமாய்ச் சாப்பிடவேண்டும். அப்படி சாப்பிடுவதனுல், பதார்த்தங்களிலுள்ள தோஷங்களெல்லாம் பகவானுக்கு அர்ப்பணமாய் விடுகின்றன. ஏனென்ருல், பகவான் பிபீலிகாதி (கண்களுக்குக் காணப்படாத சிறியபுழு) முதல் பிரமதேவன் வரையில் சகல சராசர ஜந்துக்களிலும் வியாபித் திருக்கின்ருன். எந்த ஜந்துக்களைக் கொன்று தின்ருலும் ஈசுவரனைக் கொன்றவனுகின்ருன். ஆதலால், எந்த ஜீவ ஜந்துக்களையும் கொன்று தின்னலாகாது. நோன்பென்பது கொன்று தின்னுமையேயாம். சில மனிதர்கள், கசாயித் தொழில் செய்யப்பட்டவர்கள் ஆடு மாடுகளைக்கொல்லுகின்ருர்களே யொழிய நாங்கள் கொல்லுவதில்லை; ஆதலால், அந்தப் பாபம் கசாயித்தொழில் செய்பவனைச் சேருகின்றதே யன்றி எங்களைச் சேரமாட்டாதென்று சொல்லுகின்ருர்கள். நல்லது, அவைகளைப் புசிப்பவர்கள் இருப்பதனுலல்லவோ கசாயித்தொழில் செய்ப

வன் ஆடு மாடுகளைக் கொல்லுகின்றான். அவைகளைப் புசிப்பவர்கள் இல்லாவிட்டால், அவன் ஏன் அவைகளைக் கொல்லப்போகின்றான்? திருப்பதி மலையின்மீது ஏதாகிலும் கசாயித்தொழில் செய்கின்றார்களா? இல்லையல்லவா? ஏனென்றால், அதை புசிப்பவர்கள் திருப்பதி மலையில் இல்லாததனால் ஜீவஇம்சை செய்வதில்லை; அதுபோல் பிரபஞ்சமெங்கும் மாம்சம் புசிக்காமலிருப்பார்களாகில், கசாயித்தொழில் செய்பவனுக்குவேலையே இராது. ஆதலால், அந்தப் பாபம் சாப்பிடப்பட்டவர்களைப் பற்றுமே யொழிய கசாயித்தொழில் செய்யப்பட்டவனைப் பற்றாது.

மற்றும் சிலர், ஆடு கோழி முதலானவைகளை நாம் புசிப்பதற்காகவே கடவுளால் சிருஷ்டி செய்யப்பட்டிருக்கின்றது என்று வாதிப்பார்கள். இது அறியாத்தன்மை. பகவான் அவனவன் கர்மத்திற்குத் தகுந்த ஜென்மங்களைக் கொடுத்து, கர்ம ஒழிவில் மோக்ஷத்திற்குக் கொண்டு வருவதற்காகவே எண்பத்துநான்கு லக்ஷ ஜீவராசிகளையும் சிருஷ்டி செய்திருக்கின்றார். அதில் ஆடு கோழிகளும் சேர்ந்திருக்கின்றதே யொழிய மனிதர்கள் புசிப்பதற்காக அல்ல; இவர்களின் முன்னோர் மாமிசங்களைப் புசித்துக் கொண்டே வந்தபடியால் அது பரம்பரை விருத்தியாய் வந்துகொண்டேயிருக்கின்றது. மாமிசம் புசித்துப் பழக்கமாய் விட்டபடியால் அதை விடுவதற்கு மனமில்லாதவர்களாய், முன் சொல்லிய குதர்க்கங்களைச் சொல்லி வாதாடுகின்றார்கள். பிராமண வம்சத்தில் பிறந்தவர்களுக்கு இவ்வித துரப்யாசம் ஏதாகிலும் உண்டா? இல்லையல்லவா? ஏனென்றால், அவர்களின் வம்ச பரம்பரையாய் வந்துகொண்டிருக்கும் தாய் தந்தைகள், இந்த துஷ்ட அப்பியாசத்தை அவர்களின் வீட்டில் செய்யாததனால், அவர்கள் மாம்சத்தைப் பார்த்தவுடன் அவர்களின் சரீரம்

அருவருத்து மயிர்க் கூர்ச்சலே யடைகிறது. ஆனுல், சில பிராமணர்கள் மாமிசம் சாப்பிடுகின்ருர்களே என்று யோசிக்கின்றீர்களா என்ன? அதற்குக் காரணம் சொல்லு கின்ருேம் கேளுங்கள். அவர்கள் பூர்வ ஜன்மங்களில் சூத்திரர்களா யிருந்தவர்கள். ஏதோ புண்ணிய விசேஷத் திஞல் பிராமண ஜனனம் எடுத்தபோதிலும், அவர்களின் பூர்வ வாசனையானது மாமிசங்களேப் புசிக்க அவர்களின் மனது இழுத்துச் செல்லும். என்ருல், பூர்வ ஜன்மங்களில் சூத்திரர்களா யிருந்தவர்களின் மனதானது நாருசியாய் மாமிசங்களேப் புசித்துக்கொண்டேயிருந்து, அம்மனம் சூத்திர சரீரத்தை விட்டு புண்ணிய விசேஷத்திஞல் பிரா மண சரீரத்தில் போய்ப் புகுந்து, மாமிசம் அவர்களின் வீட்டில் சமைக்காம லிருந்தபோதிலும்,அவர்களின் சிநேகி தர்களாகிய சூத்திரர்களின் வீட்டிற்குச் சென்று மாமிசம் சாப்பிடவேண்டுமென்று அவர்களின் மனதானது நினேத் துக்கொண்டே இருக்கும்: என்ருல், ஜீவன் ஒரு சரீரத்தை விட்டு மற்ருெரு சரீரத்தில் போய்ப் புகுந்தபோதிலும், முன் ஜன்மத்தில் மனதிற்கு இருந்த குணங்கள் இருந்துகொண்டே யிருக்கும். இவ்வாறிருப்பதனுல் இதற் குப் பூர்வ வாசனேயென்று சொல்லப்படும். இதன் விவரங்களேத் தெரிந்துகொள்ள வேண்டுமானுல் இதில் சொல்லி யிருக்கும் தத்துவ பரிசோதனேயைப் பார்க்க. இதுவே பூர்வ வாசனே என்று சொல்லப்படும். மாமிசம் புசிக்கப்பட்டவர்களின்மீது பகவானுக்குக் கிருபை உண் டாகமாட்டா. மோக்ஷத்தைக் கோரப்பட்ட புருஷர்க ளெல்லோரும் முதல் மாமிச பக்ஷணேயை நிவர்த்தி செய்ய வேண்டும். மாமிச பக்ஷணே நிவர்த்தி செய்வதனுல் ஜீவ காருண்ய முண்டாகும். ஜீவ காருண்ய முண்டாவதனுல், மோக்ஷப் பிராப்தி சித்திக்கும். இதற்குத் திருஷ்டாந்தம்

ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம்-17, சுலோகம் 5, 6,

அஶாஸ்த்ரவிஹிதம் கோரம் தப்யந்தே யே தபோ ஜநா
தம்பாஹங்கார ஸம்யுக்தாஃ காமராகபலாந்விதாஃ.
கர்ஶயந்தஶ் ஶரீரஸ்தம் பூதக்ராம மசேதஸஃ,
மாம் சைவாந்தஶ்ஶரீரஸ்தம் தாந் வித்யா ஸுரநிஶ்சயாந்.

பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசமென்னும் பஞ்ச பூதங்களினால் உண்டாகிய சரீரத்தில் ரகஸ்யமா யிருக்கும் ஆத்மாவாகிய என்னை, உபவாசங்களினால் துன்பப்படுத்துபவனும், பலர் மெச்சவேண்டுமென்னும் அகங்காரத்தை யுடையவனும், தானென்னும் கர்வங்கொண்டவனும், விஷயங்களில் பிடிவாதங்கொண்டிருப்பவனும், புத்தியில்லாதவனும், எவன் சாஸ்திர விருத்தமாயும் நல்லோர் மனம் கூசும்படியானதாகவு மிருக்கும் விரதங்களை அனுஷ்டிக்கின்றானோ அதாவது, ஆடு கோழி முதலானவைகளைப் பலி கொடுக்கின்றானோ அவன் அசுர (புலி) முதலாகிய யோனிகளில் பிறப்பான். இதற்குத் திருமந்திரம் பிரமாணம்.

பொல்லாப்புலாலை நுகரும்புலையரை
யெல்லாருங்காண வியமன்றன்றூதுவர்
செல்லாகப்பற்றித் தீவாய்நரகத்தின்
மல்லாக்கத்தள்ளி மறித்துவைப்பாரே.

சிருஷ்டிக்கு முன் இந்தப் பிரபஞ்சம் எவ்விதமா யிருந்தது?

சுரு || "ஸ்ருஷ்டேஃ புரா நாமரூப விஸர்ஜிதம் ஜகத்"
"ஸதேவ ஸௌம்ய இதமக்ர ஆஸீத்" [சாந்தோக்யோபநிஷத்.]

சிருஷ்டிக்குமுன் இந்தப் பிரபஞ்சம் நாமரூபமில்லாமல் கேவல நிர் விசேஷ சிந்மாத்ர பரப் பிரம்மமா யிருந்தது. அதிலிருந்து,

சுரு || "தஸ்மின் மரு ஶுக்திகா ஸ்தாணு ஸ்படிகாதௌ ஜல ரௌப்ய புருஷ ரேகாதிவத் லோஹித ஶுக்ல க்ருஷ்ணமயீ குணஸாம்யா நிர்வாச்யா மூலப்ரக்ருதி ராஸீத்.

[பைங்கலோபநிஷத்.]

கானல் நீர்போலும் கிளிஞ்சலில் வெள்ளிபோலும் இரவில் தூணைப்பார்த்து புருஷனென்று பயப்படுவதுபோலும், ரவையில் நானாவித வர்ணங்கள் இல்லாவிடினும், பிரமையினால் இருப்பதாய்க் காணப்படுவதுபோல், சுத்த நிர்க்குண நிராகார நிர்விகார பரப் பிரம்மத்தில் மூல பிரக்ருதி யென்னும் இல்லாத மாயையொன்று உண்டாயிற்று. இதற்கு உபதேசகாண்டமும், சிவப்பிரகாசமென்னும் சித்தாந்த நூல் பிரமாணம்:

பிரகிருதி யெனச்சொல்லப் படுமாயை
  யுமையிடத்தெம் பெருமானென்னு
மரனையா தரித்திருக்கும் பிரமனு
  தியர்க்குமயக் களிப்ப தாகும்
விரவுபசும் பொன்னணிப்பால் வெவ்வேறு
  குதல்போன்மென் கலைக்கு நூல்போற்
பரவுபிர பஞ்சமுண்டா வதற்கதுவே
  காரணமாய்ப் பவித்த தமே.

என்னையிது வெனிலுலகுக் குபாதானமில்லை
  யிறைவனல தெனினசித்துச் சித்தினிடத் துதியா
மன்னியுள தேன்முதல்வ னென்கொ லென்னின்
  மாயைதா னசித்துருவாய் மருவ மாட்டா
தன்னவனு மிதுவொழிய வாக்க மாட்டா
  னசத்து மெனினதுவு மவன்போ னித்த
முன்னவனவ் வசித்தைவிரித் தெவையு மாக்கு
  முதன்மையது கொடுத்ததென மொழிந்தி டாரே.

அந்த மூல பிரக்ருதி, வெண்மை சிகப்பு கறுப்பு என்னும் மூன்று வர்ணங்களுடன்கூட மூன்று சக்திகளா

யிற்று. வெண்மைவர்ணமே மாயாசக்தி, சிவப்புவர்ணமே அவித்தியா சக்தி, கறுப்புவர்ணமே ஆவரண விக்ஷேபசக்தி எனப்படும். இதில்,

ஶ்ரு || "ஸத்வோ த்ரிக்தா வ்யக்தாவரண ஶக்திராஸீத் தத் ப்ரதிபிம்பிதம் யத் ததீஶ்வர சைதந்யாஸீத் ஸ ஸ்வாதீந மாய ஸர்வஜ்ஞ: ஸ்ருஷ்டி ஸ்திதி லயாநா மாதிகர்தா ஜகதங்குர ரூபோ பவதி."

[பைங்கலோப நிஷத்.]

மாயாசக்தி, சத்வகுண பிரதானமா யிருக்கும். அதில் பரப் பிரம்மம் பிரதிபலித்ததனால் உண்டாகிய பிரதி பிம்பமே ஈசுவரன் என்று சொல்லப்படும். அவர் அந்த மாயையை சுவாதீனம் செய்துகொண்டு பிரமா விஷ்ணு மஹேஸ்வர ரூபமாய் பிரபஞ்ச சிருஷ்டி திதி சம்ஹாரங் களைச் செய்துகொண்டிருப்பார்; ஆதலால்,

சுரு || "ப்ரஹ்மணோ ரவ்யக்த: அவ்யக்தான் மஹத் மஹதோ அஹங்கார: அஹங்காராத் பஞ்சதன்மாத்ராணி பஞ்சதன்மாத் ரேப்யோ பஞ்சமஹாபூதாநி பஞ்சமஹ பூதேப்யோகிலம் ஜகத்."

[த்ரிஶிகி ப்ராஹ்மணோபநிஷத்.]

பிரம்மத்திலிருந்து மாயை, மாயையிலிருந்து அவித் தை, (அஜ்ஞானம்) அவித்தையிலிருந்து அஹங்காரமென் னும் ஆவரண விக்ஷேப சக்தியும் அதிலிருந்து, சப்த ஸ்பரிச ரூப ரச கந்தங்களென்னும் பஞ்ச தந்மாத்திரைகளும், அதி லிருந்து சூக்ஷ்மமாகிய பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாச மென்னும் பஞ்ச பூதங்களும், அதிலிருந்து தூலமாகிய ஆகாசாதி பஞ்ச பூதங்களும், அந்தப் பஞ்ச பூதங்களினால் பிரபஞ்சமும் உண்டாயின. மாயையால் உண்டாகிய பிர பஞ்சம், மாயா சரீரம் நசிக்கும்போது அதனுடன்கூடவே இந்த மாயா பிரபஞ்சமும் நசித்து விடுகின்றது. மறுபடி யும் இந்த மாயாசரீரம் பிறக்கும்போது அதனுடன் கூடவே

இந்த மாயா பிரபஞ்சமும் பிறக்கின்றது. இப்படி நமது மாயா சரீரம், பல தடவைகளில் பிறந்து பிறந்து நசிப்பதனுல், இந்த மாயா பிரபஞ்சமும் பன்முறை நம்முடன் கூடவே பிறந்து பிறந்து நசிக்கின்றது. இவ்விதமாய் நாம் அநேக கோடி ஜன்மங்களெடுத்துக் கொண்டே வந்து, பிரளயகாலத்தில் நமது மனம் எவ்விடத்தில் தங்கியிருக்கின்றதென்ருல்:—

சுரு || ப்ரஹ்மாத்யம் ஸ்தாவராந்தம் ச பஶ்யந்தி ஜ்ஞாந சக்ஷுஷா தமேகமேவ பஶ்யந்தி பரிஶுப்ரம் விபும் த்விஜாः யஸ்மிந் பாவாः ப்ரலீயந்தே லீநாஶ்சா வ்யக்ததாம் யயுः,பஶ்யந்தி வ்யக்ததாம் பூயோ ஜாயந்தே புத்புதா இவ. [சுபாலோபநிஷத்.]

சகல நதிகளும் சமுத்திர ஜலத்திலிருந்து உண்டாகி, மறுபடியும் சமுத்திரத்தில் வீழ்ந்து கலந்து பேதமில்லாமல் ஏகமாவதுபோல், பிரமன் முதல் தாவர ஜந்துக்கள் வரையில், சகல சராசர ஜகத்து எந்த பரப் பிரம்மத்திலிருந்து உண்டாயிற்ருே அந்த பரப் பிரம்மத்திலேயே மறுபடியும் பிரளயத்தில் லயிக்கும். சமுத்திரத்தில் அலேகள் நுரைகள் திவலேகள் குமிழிகள் உண்டாய் மறுபடியும், அந்த அலேகள் நுரைகள் திவலேகள் குமிழிகள் சமுத்திர ஜலத்தில் லயித்து விடுவதுபோல், அந்த பரப் பிரமத்திலிருந்து சகல சராசரஜகத்தும் உண்டாய் மறுபடியும் அந்த பரப் பிரம்மத்திலேயே லயித்துவிடும். இது விஷயம் முன் விவரமாய்ச் சொல்லப்படும்.

சரீர லக்ஷணம் சாங்க்கிய விசாரணே,

சரீர லக்ஷணம் இப்பேர்ப்பட்டதென்று விசாரித்துத் தெரிந்து கொள்ளாவிடில், ஆத்மா இப்பேர்ப்பட்டதென்னும் ஆத்மஞானம் உண்டாகமாட்டா. ஆதலால், சரீர

லக்ஷணம் இப்பேர்ப்பட்டதென்பதை சிரத்தையுடன் விசாரிப்பதே மிகவும் முக்கியமானது.

சுரு || ஸாங்க்யம் தேஹவிசாரணம் [ப்ரஹ்மயாமளம்.]

தேகம் இப்படிப்பட்டதென்றும், தேகி இப்படிப் பட்டவனென்றும் தெரிந்துக்கொள்வது, சாங்க்கிய விசாரணையென்று சொல்லப்படும். ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, தந்மாத்திரைகள் ஐந்து, பிராணன்கள் ஐந்து, அந்தக்கரணங்கள் நான்கு, இந்த 24-தத்துவங்கள் கூடினவையே சரீரம். இச்சரீரத்தில் வசிக்கும் ஆத்மாவே 25-வது, தத்துவமாம். 26-வது தத்துவமே பரப் பிரம்மம். இந்த பரப் பிரம்மத்தில், 25-வது, தத்துவமாகிய ஜீவாத்மாவைச் சேர்ப்பிக்கவேண்டும். இவ்வாறு சேர்ப்பிப்பதே மோக்ஷம் என்று சொல்லப்படும்.

ஞானேந்திரியங்கள்—5.

பூதாதியெனும் பெயரஞ்சுண்டே தென்னில்
பிரிதிவப்புவுடன் றேயுவாயு வாகாயம்
ஆதாரமான, மண்ணீர் நெருப்போ
டசைவானவாயு வெளியதன் பேரைந்தாம்
சூதானஞான விந்திரிய மைந்து
துய்யதொக்கு சட்சு சிங்குவை யாக்கிராணஞ்
நீதான சோத்ர மிதன் விரிவுகேளாய்
சிறந்தசெவியுடம்பு வாய்கண் மூக்காமே.

ஶ்ரு|| "ஶ்ரோத்ராதி ஜ்ஞானேந்த்ரியாணி ஶ்ரோத்ரமாகாஶே வாயௌ த்வக்அக்நௌ சக்ஷுரப்ஸு ஜிஹ்வா ப்ருதிவ்யாம் க்ராணமிதி." [ஶாரீரகோபநிஷத்.]

1. சுரோத்திரம்:—செவி. இது, ஆகாசத்தின் அம்சமானபடியால், அதன் குணமாகிய நாநாவித சப்தங்களைக் கேட்டுக்கொண்டிருக்கும்.

2. தொக்கு:—தோல். இது, வாயுவின் அம்சமான படியால், அதன் குணங்களாகிய சீதளம் உஷ்ணம் மிருதுவு கடினம் என்னும் நான்குவித ஸ்பரிசங்களை உணரும்.

3. சட்சு:—கண்கள். இது அக்கினியின் அம்சமான படியால், அதன் குணங்களாகிய வெண்மை கருமை சிவப்பு பச்சை நீலம் மிசிர வர்ணம் நீளம் குட்டை தூலம் ஸன்னம் என்னும் பத்துவித ரூபங்களைப் பார்க்கும்.

4. சிங்குவை:—நா. இது, அப்புவின் அம்சமான படியால், அதன் குணங்களாகிய உப்பு புளிப்பு இனிப்பு கசப்பு கார்ப்பு துவர்ப்பு என்னும் அறுசுவைகளின் ரசத்தை அறியும்.

5. கிராணம்:—நாசி, (மூக்கு.) இது, பிருதிவியின் அம்சமானபடியால், அதன் குணமாகிய சுகந்த துர்க்கந் தங்களை மாத்திரம் பகுத்து அறியும். இவ்வைந்து இந் திரியங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விஷயத்தை அறி வதனுல் இவைகள் ஞாநேந்திரியங்கள் எனப்படும்.

கன்மேந்திரியங்கள்—5.

உண்டு விரித்திடும் வாக்குப் பாதம் பாணி
யொப்பரிய பாயுருவோடு பத்தமைஞ்சாம்
கண்டுகொள்ளும் வாக்குவாய் திறத்தல் பாதங்
காணுமிரு கால் பாணி கையதாகும்
விண்டுமுறை பாயுருக் கண்ணியாகும்
விரித்தபடியுபத்த மென்பதுவே லிங்கம்
என்றுமறிகரண மினிநான்குகளோ
யியம்புமனம் புத்தியாங்காரஞ் சித்தம்.

சரு || "வாக் பாணி பாத பாயூபஸ்த்தாக்யானி கர்மேந்திரியாணி, தேஷாம் க்ரமேண வசநாதாந கமந விஸர்ஜநாநந்தாஸ் சைதே விஷயா:, ப்ருதிவ்யாதி மஹாபூதேஷு க்ரமேணோத் பந்நா:." [ஶாரீரகோபநிஷத்.]

10

1. வாக்கு:—வாய். இது, ஆகாயத்தின் அம்சமா யிருப்பதனுல் ஆகாசத்தின் குணங்கொண்டு வசனிக்கும்.

2. பாணி:—கைகள். இவை வாயுவின் அம்சமா யிருப்பதனுல் கொடுத்தல் வாங்கல் பிடித்தல் விடுதல் முத லாகிய காரியங்களைச் செய்யும்.

3. பாதம்:—கால்கள். இவை, அக்கினியின் அம்சமா யிருப்பதனுல், நடப்பது உட்காருவது நிற்பது எழுந்திருப் பது முதலான காரியங்களைத் தாங்கி நடக்கும்.

4. பாயுரு:—குதம். இது, பிருதிவியின் அம்சமா யிருப்பதனுல், மல ஜலாதிகளை வெளியில் தள்ளச்செய்யும்.

5. உபஸ்தம்:—மர்மஸ்தானம். இது, அப்புவின் அம்சமா யிருப்பதனுல், மூத்திரம் சுக்கிலம் சுரோணிதம் விடுவித்து போகாநந்தம் அடைவிக்கும். இந்த ஐந்தும், ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரியத்தைச் செய்துகொண் டிருப்பதனுல் இதற்குக் கர்மேந்திரியங்கள் என்று சொல் லப்படும்.

அந்தக்கரணங்கள்—4.

ஶ்ரு|| “மனோபுத்தி ரஹங்காரஸ்சித்த மித்யந்தஃகரண சதுஷ்டயம், தேஷாம் க்ரமேண ஸங்கல்ப விகல்பா த்யவஸாயாதி மாநாவதாரண ஸ்வரூபா ஶ்சைதே விஷயாஃ, மநஸ்தாநம் நாபி புத்தேர்வதந மஹங்காரஸ்ய ஹ்ருதயம் சித்தஸ்ய களாந்தம்.”

[ஸாரீரகோபநிஷத்.]

1. மனம்:—இம்மனம் வாயுவின் அம்சமானபடியால் இது, தன்சொரூப குணமாகிய நினைப்பு மறப்பென்னும் சங்கல்ப விகல்பங்களையே செய்துகொண்டு வாயுவைப் போல் அலைந்து திரியும். இதற்கு அதிதேவதை சந்திரன்; இடம் நாபி.

2. புத்தி:—அக்கினியின் அம்சம். பதார்த்தத்தின் சுயரூபத்தை நிச்சயிக்கும் வடிவ விருத்தியே புத்தியாம்.

இது, காரியாகாரியங்களிலும் பொருள்வகையிலும், இது நல்லது இது கெட்டது என்று நிச்சயித் துணரும். இதற்கு அதிதேவதை பிரமன்; இடம் முகம்.

3. சித்தம்:—அப்புவின் அம்சம். பொருளின் நினைப்பே சித்தமாம். இது, இந்திரியங்களுக்குச் சலனத்தை யுண்டாக்கி அதன் வழியாய் விஷயங்களைப்பற்றி யிழுத்துச் செல்லும். இதற்கு அதிதேவதை விஷ்ணு; இடம் நாபி.

4. அஹங்காரம் :—பிருதிவியின் அம்சம். மாமிஸ பிண்டமாகிய இத்தேகத்தையே 'நான்' என்று அபிமானிக்கும் வடிவ விருத்தியே அஹங்காரமாம். இது, காரியாகாரியங்களை யோசிப்பதைவிட்டு 'நான்' 'எனது' என அபிமானித்துப் புண்ணிய பாபங்களைச்செய்து கொண்டிருக்கும். இதற்கு அதிதேவதை ருத்திரன்; இடம் இருதயம். இந்நான்கும் தேகத்தில் வியாபித்துக்கொண்டு ஞானேந்திரிய கர்மேந்திரியங்களை அவ்வவ் விருத்திகளில் பிரவேசிக்கச் செய்கின்றன.

வாயுக்கள்—10.

தசவாயுவின் பெயரைச்சாற்றக்கேள் ப்ராணன்
நிசமார பானனேர் வ்யானன்—வசமாரு
மத்தகையனுக னுதானன் கிரிகரன்றேவ
தத்தன் றனஞ்ஜய னிதாம்.

பிரதானவாயுக்கள்—5.

“ஹ்ருதி ப்ராணே குதேபானோ உதாநः கண்ட தேஶஸ்திதः
ஸமானோ நாபிதேஶஸ்து வ்யாநஸ்ஸர்வ ஶரீரகः.”

1. பிராண வாயு:—இது, இருதய ஸ்தானத்தி லிருந்து நாசிகா (மூக்கு) ரந்திரங்களின் வழியாய் மேல்நோக்கி உசுவாசமாகச் சஞ்சரித்துப் பசி தாகங்களை உண்டாக்கிப் புசித்த ஆஹாரத்தை ஜீரணம் செய்விக்கும்.

2. அபான வாயு:—இது, குதத்தைப்பற்றி நின்று மல மூத்திரங்களையும் சுக்கிலத்தையும் வெளியில் தள்ளும் படிச் செய்து நிசுவாஸ ரூபமாய்ச் சஞ்சரிக்கும்.

3. உதான வாயு:—இது, கண்ட ஸ்தானத்திலிருந்து அன்னத்தை விழுங்கும்படிச்செய்து அந்த அன்னரசத்தை நாடிகளுக்கு வியாபிக்கச்செய்து சப்தத்தோடு கலந்து குரலோசை செய்விக்கும். இதன்றியும், தூங்கும்பொழுது கண்கள் மூக்கு வாய் செவிகள் மேல்தோல் என்னும் ஐந்து இந்திரியங்களையும் அஞ்ஞானமென்னும் இருளில் அழுந்தச் செய்து, தூங்கி எழுந்தவுடன் அந்தந்த இந்திரியங்களை தம்தம் ஸ்தானத்தில் இருக்கும்படி செய்விக்கும்.

4. ஸமான வாயு:—இது, நாபி ஸ்தானத்திலிருந்து, உதான வாயுவினுல் அனுப்பப்பட்ட அன்னரஸத்தை நாடி (நரம்பு) களுக்குச் சமமாகப் பங்கிட்டு தேகத்தை வளர்ப் பிக்கும்.

5. வியான வாயு:—இது, சரீரத்தின் சர்வ பாகத்தி லும் வியாபித்து ஸ்பரிசத்தை கிரகிக்கச்செய்யும். மேலும் புசித்த அன்னத்தைத் திப்பி வேறு ரசம் வேருகச்செய்து கொண்டிருக்கும். இவ்வைந்தும் தேகத்திலிருப்பதனுல் ஒருவன் ஜீவித்திருக்கின்றுன். ஆதலால்,இவைகளைப் பஞ்ச பிராணன்களெனப்படும்.

உபவாயுக்கள்—5.

6. நாகன்:—இது, கண்டத்திலிருந்து வாந்தியை உண்டுபண்ணும், நேத்திரங்களினுல் பார்க்கச்செய்யும்.

7. கூர்மன்:—இது, கண்களிலிருந்து, திறக்கவும் மூடவும் செய்யும்.

8 கிருகரன்:—இது, இடது மூக்கினின்று, குருகுருத் துத் தும்மலை உண்டாக்கும்.

9. தேவதத்தன்:—இது, மார்பினின்று கபத்தைச் சேர்த்து நெட்டிக் கொட்டாவியையும் விக்கலேயும் உண்டாக்கும்.

10. தனஞ்ஜயன்:—இது, கர்ப்பத்திலிருக்கும் பிண்டத்தை வெளியில் தள்ளச்செய்யும். அன்றியும், மரணமடைந்த சரீரத்தையும் விடாமல் காஷ்டத்திற்குப்போகும் வரையில் ஸ்தூலமாகச்செய்யும். இந்த தனஞ்ஜயனென்னும் வாயு, சரீரம் தஹனம் செய்யும்வரையில் ஸரீரத்திலேயே இருக்கும்.

இந்தப் பத்து வாயுக்களும் பத்து நாடிகளில் திரிந்து கொண்டிருக்கும். அன்றியும்,

பூஷா, அலம்புஸா:—என்னும் நாடிகள் செவியினிடமிருந்து பற்பல சப்தங்களேக் கேட்கச் செய்யும்.

காந்தாரி, ஹஸ்திஜிஹ்வா:—என்னும் நாடிகள், நேத்திரங்களிலிருந்து பதார்த்தங்களேத் தெரியச் செய்யும். இது, இருதயத்திலிருந்து மேல் வியாபித்திருக்கின்றது.

சிநீவாலி, குஹு:—என்னும் இரண்டு நாடிகளும் மலமூத்திரங்களே விடச் செய்துகொண்டு, அநாகதச் சக்கிரம் முதல் லிங்க குத ஸ்தானங்கள்வரையில் வியாபித்திருக்கும்.

ரக்தவியானன்:—என்னும் நாடி அநாஹத (இருதய)ம் முதல் ஸ்வாதிஷ்டானம் (லிங்கம்) வரையிலும் வியாபித்து அந்தரங்க ஸ்தானத்தில் குஹு நாடியுடன் கலந்து, சுக்கில சுரோணிதங்களே ஏகமாய் வெளியில் தள்ளச் செய்யும். இந்த ஏழு நாடிகளும், இருதயத்தை ஆதாரமாகச் செய்து கொண்டு நான்கு நாடிகள் ஊர்த்துவ (மேல்) முகமாகவும் மூன்று நாடிகள் அதோ (கீழ்) முகமாகவும் வியாபித்திருக்கின்றன.

இடை, பிங்கலே:—இவ்விரண்டும் நெற்றிச் சக்கரம் முதல் மூலாதாரம் வரையிலும் வலமிடமாக வியாபித்து

அதன் மத்தியில் ஸுஷும்னா நாடியை அநுசரித் திருக்கின்றன. இவை, புருவ மத்தியிலிருந்துகொண்டு வலதுநாசி இடது நாசிகளில் சேர்ந்து பிராண வாயுவை, உசுவாஸ நிசுவாசங்களாய் நடத்திக்கொண்டிருக்கும்.

ஸுஷும்ன நாடி.—இது, பிரம்ம ரந்திரம் வரையில் வியாபித்து நாவிற்சேர்ந்து அகாராதி க்ஷகாராந்த ஓசைகளை உண்டாக்கும்.

நாடிகளும் அதன் குணங்களும்.

காரணமாம் மாந்தர்க்கு நாடிசொல்வேன்
கருவான யெழுபத்திராயிரந் தான்
பூரணமா மதைக் குறுக்கித் தசநாடி யாகப்
பூட்டினேன் குருநாடி சூதநாடி
தோரணமாம் வாதமென்ற நாடி தானுந்
தொகுப்பான கானகத்து மயில்போலாகும்
வாரணமாம் பித்தமது வட்டைபோலாம்
வளமான சிலேற்றுமமது தவளையாமே.

ஆமேதான் நாடிமூன் றோடிற்ருனு
லப்பனே சன்னியது வந்துகூடும்
போமேதான் வாதமது திமிர்த்துநின்ருல்
பொல்லாத எமனுக் கறுதியாகும்
சாமேதான் பித்தமது வழுந்திற்ருனுற்
சார்வாக வசாத்தியமு முடனேசேரும்
காமேதான் சிலேற்றுமமது கோபித்தாக்கால்
சடுதியி லெமபதி சேருவாரே.

சேருவார் வாதத்தில் பித்தமாகில்
செழிப்பான வார்த்தைமுதற் குழறிப்பேசும்
கூறுவார் பித்தத்தில் வாதமாகில்
குணமான திரேகமது வெளுப்புமாகும்

திருவார் சேற்றுமத்தில் பித்தமாகில்
திரேகமது மஞ்சணிக்கும் மலம்வெளுக்கும்
ஊருவார் தொந்தரத் திரமாகிநின்றால்
உடல்வலிக்கும் நாசிவக்கும் முன்னம்பாரே.

பாரப்பா வாதமது தித்திப்பாகும்
பாங்கான பித்தமது கசப்புமாகும்
சீரப்பா சேத்துமமது புளிப்புமாகும்
சினப்பான தொந்தமது வியாதிமெத்த
கூறப்பா சப்தங்கள் மாறிப்போகும்
குடிலமாங் காந்தலது வதிசமுண்டாம்
தீரப்பா மேனியது கருகிப்போகும்
திறமான நாடியின் விபரங்காணே.

காணவே சேற்றுமத்தின் வாதமாகில்
கடினமாம் பிடரியது வலிப்புமுண்டாம்
தோணவே நரம்பெல்லாம் வலித்துநிற்குந்
துடியான கண்டமது வலித்துக்காணும்
ஊனவே பித்தத்தில் நாடிதானு
முற்பனமாய் வாதத்தி லுறையுமாகில்
ஆணவே பித்தமும் வாதமும்கூடில்
லரணைவால் துடிபோலத் துடிக்கும்பாரே.

பாரேதான் நோயாளியெழுந்து நிற்கில்
படையுடனே மூச்சுமது வதிகங்கொண்டால்
சீரேதான் நேத்திரமது வட்டமானால்
சிகப்பானமுழியதுவுந் திரும்பி விழிபார்த்தால்
தூரேதான் சேத்துமமது தொண்டைகட்டுந்
தொலையாத நெஞ்செரிப்பு மேற்சுவாசம்
வீரேதான் மேனியது கருகல்காணும்
மேதினியில் வியாதியது செனிக்கும்வாறே.

வாறான பித்தமது வுறையுமானால்
வளமான சேற்றுமத்துத் தொண்டைகட்டுங்
கூறான வாதமது குறுகிற்றானால்
குறிப்பான மூத்திரமது மஞ்சள்போலாம்

நீருனு பழுவெலும்பு ரத்தஞ்சுண்டி
 நிலையான யாக்கைக்கு வறுதிரேருந்
தூருன சடலமது சுறக்கிற்போகுஞ்
 சுந்தரனே நாடிதெளிந்து பாரே.

தன்மாத்திரைகள்—5.

உன்னவரிதான தன்மாத்திரையைக் கேட்பா
 யுரைப்பர் சத்தபரிசமுடன் ரூபரசகந்தம்
என்னுமிவை தமிற்சப்தமது செவியிற் கேட்டு
 மியற்பரிசமுடம்பு சுகமறியும் ரூபம்
கண்ணு முருக்காணும் ரசமினிபவைக் காட்டுங்
 கருது கந்தம் நாசியினிற் கந்தங்காணும்
சொன்னவகையைந்து முயிர்கூறுமென்று
 சொல்லு கன்மேந்திரியந்தானேந் துண்டோ.

1. சப்தம்:—ஆகாசத்தின் தன்மாத்திரை. இது, செவியின் உட்புறத்திலுள்ள மெல்லிய ஜவ்வின் வழியாய் சப்தத்தைக் கேட்பிக்கும்.

2. ஸ்பரிசம்:—வாயுவின் தன்மாத்திரை. இது, தேகத்தில் பிராணுதி ஸர்வ வாயுக்களுடன் வியாபித்திருப்பதால், தொட்டுக் காட்டும் குணத்தை சரீரத்தினின்று அறிவிக்கும்.

3. ரூபம்:—அக்கினியின் தன்மாத்திரை. இது, நேத்திரங்களில் அக்கினி ஸம்பந்தப்பட்டிருப்பதால், பத்துவித ரூபங்களையும் நேத்திரத்தினின்று காட்டிவைக்கும்.

4. ரசம்:—ஜலத்தின் தன்மாத்திரை. இது, நாவில் ஜல சம்பந்தமிருப்பதால் அந்த நாவிலிருந்து அறுசுவையின் பேதங்களை அறிவிக்கும்.

5. கந்தம்:—பிருதிவி (பூமி) யின் தன்மாத்திரை. இது, நாசியில் (மூக்கில்) பிருதிவி சம்பந்த மிருப்பதால் அந்த நாசியின் வழியாய்ச் சுகந்த துர்க்கந்தங்களை அறிவிக்கும்.

இவை முதலாகிய ஸர்வ இந்திரியங்களும் ஆத்மாவை அறியமாட்டா. ஆகவே, இத்தேகாதி இந்திரியங்கள் யாவும் "ஜடம்" என்றும், ஆத்மா ஒன்றே ஞான சொரூபமாய் யிருப்பதால் "சித்து" என்றும் சொல்லப்படும்.

சரீரத்திரயம்.

சீவர்களுக் குற்றுத்திகழுஞ் சரீரங்கள்
மூவகையாமென்று மொழிவார்க—ளாவதவை
தூலமொடு சூக்மஞ் சொற்காரண மென்றே
வாலறிவிஞேர்கள் வகுத்து.

தூலம், சூட்சுமம், காரணம் என்று சரீரம் மூன்றாகும்.

1. தூல சரீரம்:—தலை கண்கள் மூக்கு வாய் கைகள் கால்கள் முதலாகிய அவயவங்களுடன் கூடிய இம்மாமிச சரீரம், கைகளினுல் பிடிப்பதற்குக் கடினமாயும் மிருதுவாயும், பார்வைக்கு நீளமாயும் குட்டையாயும் பெருத்தும் சிருத்தும் தோன்றுவதால், இதற்கு தூல சரீரம் என்று சொல்லப்படும்.

2. சூட்சும சரீரம்:—ஞானேந்திரியங்கள்-5, கர்மேந்திரியங்கள்-5, பிராணன்கள்-5, மனம், புத்தி-2, ஆகிய இந்தப் பதினேழு அவயவங்களுடன் கூடினதே சூட்சும சரீரம்; அல்லது "லிங்க" சரீரம் என்று சொல்லப்படும். இந்த சூட்சும சரீரம், கண்களுக்குத் தோன்ருமலும் கைகளாற் பிடிப்பதற்குச் சாத்தியப்படாமலும் இந்த தூல சரீரத்தின் உள்ளிருப்பது.

3. காரண சரீரம்:—இது, தூல சூட்சும சரீரங்கட்கு விதையாயிருந்து, உற்பத்தி யொடுக்கத்தை விளைவித்துத் துன்பத்தையே சுகம் எனக் கருதச் செய்கின்ற அஞ்ஞானமே "காரண" சரீரம் எனப்படும்.

தூல சரீரம். "ஸீர்யதே இதி ஸரீரः" ஜீர்ணித்துப் போவதால் சரீரம் என்றும், "தஹ்யதே இதி தேஹः" தகிக்கப்படுவதால் தேகமென்றும் சொல்லப்படும். இத்தேகம் அன்னமில்லாவிடில் ஜீர்ணித்துப் போகும்; அன்றியும், வியாதியினுலும் கிழத்தனத்தினுலும் ஜீர்ணித்துப்போகும். அங்ஙனம் ஜீர்ணித்தபின்பு அதாவது, பிராணன்போய் விட்டபின்பு இத்தேகம், மசானத்தில் அக்கினியினுல் சுடப்பட்டு மண்ணுய்ப்போகும். சூட்சுமசரீரம் விருத்தியாய்க் கொண்டேவரும். எப்படியென்ருல், ராகத் துவேஷ காமக் குரோதங்கள் தினேதினே விசேஷித்து வளர்கின்றமையால் இந்த சூட்சும சரீரம் விருத்தியை அடைந்து வளர்கின்றது. நாளுக்குநாள் காமக் குரோதாதிகள் குறைவுபட்டால், ஜன்மங்கள் குறைவுபட்டு நாளுக்குநாள் சூட்சுமசரீரம ஜீர்ணித்துப் போகும். ஆதலால், இந்த ராகத்துவேஷாதிகள் சூட்சுமசரீரத்தின் விகாரங்களாகும். காரணசரீரம் எங்ஙனம் விருத்தியடையும்? அஞ்ஞானத்தினுல் 'நான்' 'எனது' என்னும் அபிமானம் நாளுக்குநாள் விசேஷிப்பதால் காரண சரீரம் விருத்தியடைகின்றது. ஆதலால், அபிமானம் நாளுக்கு நாள் ஒடுங்கினுல் காரண சரீரம் நாளாவட்டத்தில் ஒடுங்கி ஜீர்ணித்துவிடும். சூட்சும காரண சரீரங்கள் இரண்டும் சற்குரு கடாக்ஷத்தினுலும் ஞானாக்கினியினுலும் ரூபமில்லாமல் நசித்துப் போய்விடும். இவ்விரண்டும் நசித்தவுடன் மோக்ஷம் சித்திக்கும்.

ஓ சுவாமீ! தூல சரீரம் யதார்த்த பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகின்றதுபோல் சூட்சும சரீரம் ஏன் காணப்படுவதில்லை? ஆதலால், அதனை உண்டென எப்படி நிச்சயிக்கலாகும்?

அப்பா! குழந்தாய்! மாமிசமயமாகிய இந்தத் தூல சரீரத்திற்கு நித்திரை, மரணம், மூர்ச்சை முதலானவைகள்

சம்பவிக்கும் சமயங்களில், இச்சரீரத்திலுள்ள நேத்திரங்கள் செவிகள் முதலாகிய அவயவங்கள் யாவும் இருந்தபோதிலும் அந்த நேத்திரங்கள் பார்ப்பதில்லை, செவிகள் கேட்பதில்லை, இவ்விதமே ஒவ்வொரு இந்திரியமும் அதனதன் காரியங்களைச் செய்வதில்லை. ஆதலால், இந்தத் தூல சரீரம் கேவலம் மாமிச பிண்டமாகிய மட்பாண்டமா யிருப்பதால், இதுவே சகல காரியங்களையுஞ் செய்வதாகச் சொல்லலாகாது. இந்த தூல சரீரத்திற்குள் சூட்சும (கண்களுக்குக் காணப்படாத) சரீரம் ஒன்றிருந்து சமஸ்த காரியங்களையுஞ் செய்துக்கொண்டிருக்கின்றது என்பது நிச்சயமாகும் ஆகவே தூல தேகத்தில், கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகசர்மம், என்னும் பஞ்சேந்திரியங்களுடன் கூட, மனம் புத்தி சித்தம் அஹங்காரமென்னும் அந்தக்கரணங்கள் கூடியிருப்பதனால், அவைகள் ஒவ்வொன்றும் தம்தம் காரியங்களைச் செய்துகொண்டிருக்கின்றன. அஃதெப்படியெனில், நாம் சில வஸ்துக்களைக் காண்கின்றோம். வஸ்துவைக் காணுவது கண்ணென்னும் அவயவமல்ல. கண்களுக்கும் மூளைக்கும் மத்தியிலுள்ள நரம்பின் வழியாய் ஓடிக்கொண்டிருக்கும் இந்திரியமே, வஸ்துவைப் பார்க்க மிகவும் உபயோகமானது. கண்ணென்னும் அவயவமானது, காணுந் தொழிலுள்ள இந்திரியத்திற்கு ஒரு கருவி. கண்ணினுடைய இந்திரியம் இல்லாவிடில் ஒருவனுக்கு நூறு கண்கள் இருந்தபோதிலும் பிரயோஜனப்படமாட்டா. கண்ணென்னுங் கருவியும் கண்ணுக்கும் மூளைக்கும் சேர்ந்திருக்கும் நரம்பு இவைகளிரண்டும் இருந்தபோதிலும், மனம் இவைகளுடன் கலக்காவிட்டால் எந்த வஸ்துவையும் காணமுடியாது. ஒரு வஸ்துவைப் பார்க்கவேண்டுமானால், முதல் கண்ணென்னுங் கருவி, கண்ணுக்கும் மூளைக்கும் சேர்ந்திருக்கும் நரம்பு, மனம் ஆக

இம்மூன்றும் வேண்டும். மனதானது, வேறோர் இந்திரியத்துடன் சேர்ந்து, வேறோர் கருவியின் மூலமாய் வேறோர் வேலையில் இருந்துவிட்டால், கண்ணிந்திரியமும், கருவியும் சேர்ந்து காணுந்தொழிலைச் செய்யமாட்டா. ஆகையால், ஒரு விஷயத்தை உணரவேண்டுமானால், அவ்வுணர்ச்சிக்குக் கருவிகள், இந்திரியங்கள், மனம் ஆகிய இம்மூன்றும் அவசியம் வேண்டும். சப்தத்தைக் கேட்பதற்குச் செவியென்னுங் கருவியும், செவி இந்திரியமும், மனமும் ஆக இம்மூன்றும் வேண்டும். இவ்வாறே மற்ற எல்லா இந்திரியங்களும் ஆகுமென்று தெரிந்து கொள்ளவேண்டும். வஸ்துக்களைக் காணும்போது மனதானது, கண் இந்திரிய மூலமாய் வெளியில் சென்று அவ்வஸ்துக்களைப்பார்த்து, கண்களை மூடிக்கொண்டு நினைக்கும்போது அவ்வஸ்துக்களை மனம் மறுபடியும் உள்ளிந்திரியங்களுடன் கலந்து வேலை செய்கின்றது. வஸ்துக்களை வெளியே கவனிக்கும்போது, கருவிகளின் சகாயமும் வேண்டும். இந்திரியங்களின் ஒத்தாசையில்லாமல் மனதினால் ஒன்றும் செய்யமுடியாது. ஒரு வஸ்துவின் அடையாளம், அல்லது குறியில்லாமல் மனதானது ஒன்றையும் நினைக்கமாட்டா. அவ் வடையாளங்களை மனதிற்குக் கொண்டுவருவது இந்திரியங்களேயாம். இதன் விவரங்களையெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதையில் விரிவாய்க் காணலாம். தூல சூட்சும சரீரமிரண்டும் காரியரூபமாயிருக்கின்றன. எவ்வாறெனில்:—

புகை வருவதனால் அக்கினியைக் காணவிடினும், காரணமாகிய அக்கினியிலிருந்தே அதன் காரியமாகிய புகை காணப்படுகின்றது என்று நிச்சயிப்பதுபோல், காரிய வடிவமாகிய சூட்சும சரீரம் உண்டாவதற்குக் காரணம் ஒன்று உண்டென்று நிச்சயிக்கலாம். அதுவே அஞ்

ஞானமாகிய காரண சரீரம், அதனுலேயே, தூல சூட்சும சரீரங்கட்கு காரணமாயிருந்து ஜனன மரணுதி தாபத்ரயங் களை உண்டாக்குகின்றன. எப்படியெனில்,

தூக்கத்தில் கினவு காணும்போது பிராணன் வெளி யில் போவதில்லை; மனம் புத்தி சித்தம் அகங்காரமென்னும் அந்தக்கரணங்கள் வெளியில் போகின்றன; அவைகள் போனபோதிலும், கண்களுக்குக் காணப் படும் தூல சரீரம் பிணமாகமாட்டா. பிராணன் போய்விட்டால் சரீரம் பிணமாய்விடும். பிராணனுக்கு அறியும் சக்தியுண்டு. அதனுல், அந்தக்கரணம் வெளி வியவகாரங்களில் திரிவதை, பிராணன் (ஆத்மா) சாக்ஷியாயிருந்து, அந்தக்கரணங்கள் இரவு தூக்கத்தில் கண்டவைகளை யெல்லாம் சொல்லுகின் றது. ஆதலால், தூல சூக்ஷ்ம சரீரங்களுக்குச் சத்தா யிருப்பது பிராணன். பிராணன் போய்விட்டால் சரீரத்தை தகனம் செய்துவிடுவார்கள். தூங்கப்பட்டவனைத் தகனம் செய்யார்கள். என்றுல், தூல சூக்ஷ்ம சரீரங்களுக்குச் சத்தாயிருப்பது பிராணன்; எதுவரையில் பிராணன் சரீரத் தில் இருக்கின்றதோ அதுவரையில் சகல மனே இந்திரிய கூட்டங்களும் இருக்கும். பிராணன் போய்விட்டால் எல் லாம்போய்விடும். சகல மனே இந்திரியங்களுக்கு அரசனு யிருப்பது பிராணன். இப்பிராணன் போகும்வரையில் அந்தக் கரணேந்திரியங்கள் போகமாட்டா. அந்தக் கரணேந்திரியங்களுக்குச் சத்வகுண கார்யங்கள் இருப்பத ஞல், அவைகளுக்கு ஞானசக்தி உண்டு. பிராணனுக்கு ரஜோகுண கார்யங்கள் இருப்பதனுல், அதற்குக் கிரியா சக்தியுண்டு; அதன் பலத்தினுல், பிராணன் போகும் போது லிங்கசரீரமென்று சொல்லப்படும் சூக்ஷ்ம சரீரம், தூலசரீரத்தைவிட்டுப் போய்விடும். பிராண பலத்தினுல், இந்திரியங்களும் அந்தக் கரணங்களும் இருக்கின்றன

வென்று யோக சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. அன்றியும், பிராணவாயுவை நிறுத்தாவிட்டால் மனோவாயு நிற்கமாட்டா. ஆதலால், மனோ ஓட்டத்தை நிறுத்தத்தக்க ராஜயோகத்தை இதில் சொல்லியதுபோல் ஜபம் செய்துவரவேண்டும். அன்றியும், மனோவாயுவை ஓடவிடாமல் செய்விக்கும் யோகாப்பியாசத்தையும் செய்துவர வேண்டுமென்றும் இந்நூலில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால்,

"அஜ்ஞாந தவிவேகঃ, அவிவேகா தபிமாநঃ, அபிமாநாத் ராகாதயঃ, ராகாதயம் கர்மாணி, கர்மண ஸரீர பரிக்ரஹঃ" என்றிருப்பதால் அஞ்ஞானத்தினால் அவிவேகமும், அவிவேகத்தினால் 'நான்' 'எனது' என்னும் அபிமானமும், அந்த அபிமானத்தினால் காமக் குரோதாதிகளும் அந்தக் காமக் குரோதாதிகளால் அநேக கர்மங்களைச் செய்து, அக்கர்மவசத்தால் ஜீவாத்மா அநேக ஜனன மரணங்களை அடைந்துகொண்டே யிருக்கும். அதனால், அக்காரண சரீரம் முற்றிலும் நசிக்காவிடில் முக்தியில்லை யென்பது திண்ணம். இந்தக் காரண சரீரமே சஞ்சிதமென்று அறிய வேண்டும். இனி, பஞ்சகோசங்களைச் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

பஞ்ச கோச விவரங்கள்.

கோசங்களோரைந்தாய்க் கூறுவரன்னம்ப்ராண
னுசின்மனோ விஞ்ஞான மானந்த—நேசமுள
வன்னமயந்தூல மதன்பின் மூன்றுஞ் சூக்ம
நன்னய காரணமானந்தம்.

"ஆத்மா நாத்ம ஸ்தூல ஸூக்ஷ்ம காரண ஶரீரத்ரய விலக்ஷணঃ பஞ்சகோஶ வ்யதிரிக்தঃ அவஸ்த்தாத்ரய ஸாக்ஷீ ஸச்சிதா [னந்தரூபঃ"

பரமாத்மா பஞ்ச கோச விலக்ஷணனென்று சுருதிகள் முறையிடுகின்றன. பஞ்ச கோசங்களை அறியாமுன் அவைகளுக்கு விலக்ஷணனான பரமாத்மாவை அறியலாகாது. ஆதலால்,முதல் பஞ்சகோசத்தை விசாரிக்கலாம்.

அது, அந்நமயம் பிராணமயம் மநோமயம் விஞ்ஞானமயம் ஆநந்தமயமெனக் கோசங்கள் ஐந்து வகைப்படும். இதற்குச் சிவஞான சித்தியார் பிரமாணம்;

மருவா னந்தம் விஞ்ஞான
 மனேபி ராண னன்னமய
முருவாந் தன்மை யுண்டாய்மு
 ன்னென்றுக் கொன்று சூக்குமமாய்
வருமா மன்ன மயம்பற்றி
 மாயை முதற்கா ரணமாகு
மருவா யான்மா வைங்கோசத்
 தார்ப்புண் டவற்றி னகம்புறமாம்.

"அந்நவிகார ஶுக்லஶோணித ஜந்ய ஷட்பாவவிகார ஸஹிதம் அந்நேந்நைவ வர்த்தமாநம் இதம் ஸ்தூலஶரீர மந்நமயகோஶ: ஶுக்லஶோணித ஸம்பூததே ஹோந்நமய உச்யதே அந்நகார்யாணும் ஸமூ ஹோந்நமயகோஶ:"

1. **அன்னமய கோசம்**:—தாய் தந்தையர்கள் புசித்த அன்னத்தினுலுண்டாகிய சுக்கில சுரோணிதங்களால், தாயின் உதரத்தில் சிசு தரித்துப் பிறந்து, பால் அன்னம் முதலிய ஆகாரங்களால் தினே தினே விருத்தியடைந்து, தூலமாகிய கை கால்கள் உண்டாய், மாறுபடுதல் அதிகரித்தல் குறைதல் நசித்தல் முதலாகிய விகாரமுடையதாய், சப்த தாது மயமாய்க் காணப்படும். ஆதலால், இந்த தூல சரீரம் அன்னமய கோசமாம். இது மரணமடைந்தபின் அன்னமயமாகிய பிருதிவியில் ஒடுங்கும்; அன்றியும்.

"யதா கட்கம் தத்கோஶம் ஆம்ரபலம் த்வக்
யதா துஷ: தண்டுலாதிக மாச்சாதயதி
யதாவா கர்ப்பம் ஜராயுரா வாரயதி
கோஶவதாச்சாத கத்வாத் கோஶ இத்யுச்யதே."

உறை, கத்தியையும் ஓடு புளியையும் உமி அரிசியையும் மா பிண்டத்தையும் மூடிக்கொண்டு காணக்கூடாமற் செய்வதுபோல், பரமாத்மாவை இந்தக் கோசங்கள் மூடிக்கொண்டு காணப்படாமல் செய்வதனுல் இதற்குக் கோசங்களெனப் பெயர் உண்டாயிற்று.

"நநு கட்காதீனாம் தத்கோஶாதீனாஞ் ச ஸத்தா பின்னா
பஞ்சகோஶா நாமாத்ம பின்ன ஸத்தாகத்வா பாவாத் [யதே."
கோஶாதிப்யோ வைஷம்யாத் கதமாச்சாதகத்வமிதி சேதுச்

உறை கத்தி முதலியவைகள் வேருயிருந்தபோதிலும், ஒன்றினுள் ஒன்று சேர்ந்திருப்பதனுல் அவைகள் காணப்படுவதில்லை. இதுபோல், ஆத்மாவை பஞ்ச கோசங்கள் மூடிக்கொண்டிருப்பதனுல் ஆத்மா, காணப்படுவதில்லை. பரமாத்மாவை மூடும்படியான சக்தி கோசங்கட்கு எப்படி உண்டாயிற்றென்றுல்:—

"ஆதித்ய கிரண பரிணும விஶேஷத்வாந்மே
கஸ்யாதித்ய ஸத்தைவ ஸத்தா ததாபி மேக:
ஆதித்யம் யதாச்சாதயதி அக்நிமுபஜீ
வ்ய வர்தமாநஸ்ய தூமஸ்யா ப்யக்நே ஸத்தை
வஸத்தா ததாபி ஸதூம: அக்நிமாஸ்ச்சாத
யதி ஏவமாத்ம ஸத்தயா ஸத்தாவந்தோபி
கோஶா ஆத்மாநம் ஆஸ்சாதயந்தி."

சூரிய கிரணத்தினுல் உண்டாகிய மேகங்கள் சூரியனை மூடிக்கொண்டு காணப்படாமற் செய்வது போலும், அக்கினியினுலுண்டாகிய புகை அக்கினியை மூடிக்கொண்டு காணப்படாமல் செய்வதுபோலும், ஆத்ம சத்தாவை

அநுசரித்து விருத்தியடையும் கோசங்கட்குப், பரமாத்மாவை மூடும்படியான சக்தி யுண்டாயிற்று. ஆனல், அன்னமய கோசத்திற்கும் பரமாத்மாவிற்கும் சேர்க்கை எப்படி உண்டாயிற்றென்ருல், அந்நியோந்நியாத் தியாஸத்தினல் உண்டாயிற்று. அந்நியோந்நியாத் தியாசமென்ருல், ஒரு வஸ்துவிலுள்ள குணங்கள் மற்றொரு வஸ்துவில் தோன்றுதல். அதாவது, 'நான் ஜீவன்' என்பது ஜீவாத்தியாசம், 'நான் மனுஷ்யன்' என்பது ஜாத்யாத் தியாசம்; 'நான் பிறந்து வளர்ந்து க்ஷீணித்து மரிக்கின்றேன்' என்பது விகாராத் தியாசம்; 'நான் பிராமணன் நான் க்ஷத்திரியன்' என்பது வர்ணுத் தியாசம்; 'நான் ஆந்திரன் வேளாளன், மகாராஷ்டிரன், காஸ்யப கோத்திரன், நான் பிரமசாரி, நான் சந்யாசி, நான் ராமையன்,' என்பது நாமாத்தியாசம் 'நான் கறுத்தவன், வெளுத்தவன்' என்பது ரூபாத்தியாசம். இவையாவும் அன்னமய கோசத்தின் லக்ஷணங்கள்.

இந்தத் தூல சரீரம் உற்பத்திக்கு முன்னும், மரணத்திற்குப் பின்னும் இல்லை. ஆகையால், உற்பத்தி விநாசாதி ஷட்பாவ விகார ஷட்கோச மயமான இந்த அன்னமய கோசம் ஆத்மாவல்ல.

"கர்மேந்த்ரியை ஸ்ஸஹ ப்ராணமயகோஶ: ப்ராணதி
பஞ்சகம் ப்ராணமய: கர்மேந்த்ரியைர்யுதம்."

"ப்ராணதி தஶவாயு வோந்நமயகோஶே
யதா வர்தந்தே ததா ப்ராணமயகோஶ:"

2. பிராணமய கோசம்:—வாக்கு பாணி பாத பாயுருகுய்யம் என்னும் கர்மேந்திரியங்கள் ஐந்து, பிராணன் அபானன் உதானன் சமானன் வியானன் என்னும் பிராணன்கள் ஐந்து, ஆகிய இந்தப் பத்தும் சேர்ந்தது பிராணமயகோசம் ஆகின்றது. அன்றியும்,

பிராணவாயு முதலாயுள்ள தசவித வாயுக்களும், அன்னமய கோசத்தில் எப்பொழுது சஞ்சரிக்குமோ அப்பொழுதே பிராணமய கோசத்திற்கும் பரமாத்மாவிற்கும் சேர்க்கை யுண்டாகும். எப்படி யெனில்:—

"அஹம் க்ஷுத்தாயுக்த அஹம் பிபாஸாவாந்
அஹம் பலவாந் அஹம் வீர்யவாந்
அஹம் க்ரியாவாந் அஹம் வக்தா."

"அஹம் தாதா மூகஃ பங்குஃ விஹஸ்தஃ ஷண்டஃ இத்யாதி
ப்ராண விகாரத்வே ஸதி வக்த்ருத்வாதி ரஹிதமாத்மாநம்
வக்தாரமிவ தாநாதி ரஹிதமாத்மாநம் தாதாரமிவ
கமநாகமந ஸூந்யமாத்மாநம் கந்தாரமிவ [ஆபாரயதி."
க்ஷுத் பிபாஸாதி ரஹிதமாத்மாநம் க்ஷுத்பிபாஸாவந்தமிவ

நான், பசியும் தாகமும் சாமர்த்தியமும் பலமும் பராக்கிரமமு முடையவன், வாய்ச் சாலகன், தாதா, ஊமை, முடவன், குருடன் என்பன பிராணமய கோசத்தின் குணங்களாகும்.

"ஆத்மநஃ ஸச்சிதாநந்தாந் மம ப்ராணஃ
அஸ்தி பாதி ப்ரியமிதி ப்ராணமயகோஸே சாத்யஸ்யதி."

என்பதுபோல், பரமாத்மாவி லுண்டாயிருக்கும் சச்சிதாநந்தாதி (சத்து, சித்து, ஆனந்தம்) குணங்கள் பிராணமய கோசத்தில் உண்டாயிருப்பதால் பிராணமுடையவனாயிருக்கின்றான். அதனுல் பிராணமய கோசத்திற்கும் பரமாத்மாவிற்கும் சேர்க்கை யுண்டாயிற்று. இந்தப் பிராணமய கோசமே ஆத்மாவென்று சொல்லலாமெனில், எந்தப் பிராணவாயு, கால் நகம் முதல் (சிகை உச்சி) பரியந்தம் அந்தரங்கமாய் வியாபித்து கண் முதலாகிய இந்திரியங்களுக்குப் பலத்தை யுண்டாக்கி இந்திரியங்களை அனுசரித்துக்கொண்டிருக்கின்றதோ, அந்தப் பிராணமய கோசம்

கடாதிகள்போல் ஜட சுபாவமுடையதாய் திருசியமாயிருக்கின்றது; ஆதலால் இதுவும் ஆத்மாவல்ல.

"ஜ்ஞாநேந்த்ரியைர் மநோயுக்தம் மநோமய இதீரிதஃ
ஜ்ஞாநேந்த்ரியாணி பஞ்ச மநஶ்ச எதஸ் ஸர்வம்
மிளித்வா மநோமயகோஶ இத்யுச்யதே
எதத் கோஶத்வய ஸம்யுக்த ஆத்மாந
ஆதி சதுர்தஶ கரணைஶ்ஶப்தாதி விஷயஸங்கல்பாதி
தர்மா ந்யதா கரோதி ததா மநோமயகோஶஃ."

3. மனோமயகோசம்:—மனதுடன், செவிகள் தேக சர்மம் கண்கள் நா மூக்கு என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் சேர்ந்து, சப்த முதலாகிய விஷய சங்கல்பாதி தருமங்களைச் செய்யும்போது மனோமய கோசம் என்று சொல்லப்படும்.

இந்த மனோமய கோசத்திற்கும் பரமாத்மாவிற்கும் சேர்க்கை எப்படி உண்டாயிற்றென்றால்,

"அஹம் ஸங்கல்பவா நஹம் விகல்பவாந்
ஶோகவாந் மோஹவாந் காமீ லோபீ ஶ்ரோதா
ஸ்ப்ருஷ்டா த்ரஷ்டார ஸயிதா க்ராதா பதிரஃ
அந்தஃ இத்யாதி மநோவிகாரத்வே ஸதி ஸம்ஶ
யாதி ரஹிதமாத்மாநம் ஸம்ஶயாதிவந்தம்
ஶோகமோஹாதி ரஹிதமாத்மாநம்
ஶோகமோஹாதிவந்தம் தர்ஶநாதி ரஹிதமாத்மாநம்
தர்ஶநாதிமந்தமாவாரயதி."

நான் சங்கல்ப விகல்பமுடையவன், துக்கம் மோகம் காமம் குரோதம் துவேஷ முடையவன், கேட்கப்பட்டவன், இச்சையுடையவன், ராஜச குணமுடையவன் எதையும் கிரகிக்கப்பட்டவன், செவிடன், நாக்கு மூக்கில்லாதவன் முதலாகிய மனோமய கோச இஷ்ட சங்கல்பாதி தருமங்கள் ஆத்மாவிலும், ஆத்மா யென்னும் ஸச்சிதாநந்தம்

மனோமய கோசத்தில் சேர்ந்திருப்பதால் அவ்வாறு தோன்றுகின்றன. ஆதலால், மனோமய கோசத்திற்கும் ஆத்மாவிற்கும் சேர்க்கை யுண்டாயிற்று.

இந்த மனோமய கோசத்தையே ஆத்மாவென்று சொல்லலாமென்றால், தேகத்தில் 'நான்' என்னும் அஹங்காரத்தையும், வீடு முதலியவைகளில் 'எனது' என்னும் அபிமானத்தையும் உண்டாக்கும். இக்கோசம் பிராணமயகோசத்திற்கு வேறாயிருந்து காமக் குரோதாதி வியாபாரங்களையும் உண்டாக்கி தன் நிஜ சொரூபத்தை மறந்து தேகாதிகளைப் பார்த்து நான் எனதுயென்னும் விகாரங்களையுடையதாதலால் இந்த மனோமய கோசமும் ஆத்மாவல்ல.

"ஜ்ஞானேந்த்ரியாணி பஞ்சபுத்திஃ எதஸ் ஸர்வம்
மிளித்வா விஞ்ஞானமயகோஶ இத்யுச்யதே
புத்தி ஜ்ஞானேந்திரியைர் யக்தம் விஜ்ஞானமய கோஶகம்."

"எதத் கோஶத்ரய விஶிஷ்டாந்தஃகரணே
தத்கத விஶேஷ த்யான மானாதி வ்ருத்தயோ
யதோத்பத்யந்தே ததா விஜ்ஞானமய கோஶஃ."

"அஹம் கர்தா புத்திமாந் ஊஹா போஹ சதுரஃ
எகஸந்தக்ராஹீ யோகாந்தரகாமீ
ராகத்வேஷீ ஶ்ரோத்ரியஃ பண்டிதஃவிரக்தஃ
பக்திமாந் உபாஸகஃ ஜ்ஞானீத்யாதி விஜ்ஞான
மயகோஶ விகாரத்வே ஸதி அகர்தாரமாத்மானம்
கர்த்தாரமிவ அவிஜ்ஞாதார மாத்மானம்
விஜ்ஞாதாரமிவ நிஶ்சய ரஹிதமாத்மானம்
நிஶ்சயவந்தமிவ மாந்தஜாட்யாதி ரஹிதம்
ஜாட்யாதிமந்த மிவா வாரயதி."

4. விஞ்ஞானமய கோசம்:—புத்தியும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் சேர்ந்து, அன்னமய பிராணமய மனோமய கோசங்களுடன் கூடின, அந்தக்கரணத்திலிருக்கும் தியான

மனசாதிகளின் விருத்தி எப்பொழுது உண்டாகின்றதோ, அப்பொழுதே விஜ்ஞானமய கோசம் எனப்படும்.

இந்த விஜ்ஞானமய கோசத்திற்கும் பரமாத்மாவிற்கும் சேர்க்கை எப்படி உண்டாயிற்றெனில்:—

நான் கர்த்தன், புத்திமான், சஞ்சல முடையவன், காரியா காரியங்கள் செய்வதில் சாமர்த்திய முடையவன், ஒரே வார்த்தையில் தெரிந்துக்கொள்ளத்தக்கவன், சுசியாயிருக்கப்பட்டவன், இச்சையில்லாதவன், பண்டிதன், பக்தி யுடையவன், எவ்வுலகத்திற்கும் போகப்பட்டவன் என்னும் இவைகள்யாவும் விஜ்ஞானமயகோச தர்மங்களேயாம்.

மனோமய கோசத்திலும் மனமிருப்பதால் ஆத்ம தர்மங்களான ஸச்சிதானந்தம் தோன்றுகின்றது: அதனால், மனோமயகோசத்திற்கும் ஆத்மாவிற்கும் சேர்க்கையுண்டாயிற்று. இந்த விஜ்ஞானமய கோசத்தையே ஆத்மாவென்று சொல்லலாமென்றால், மனோமயகோச அந்தரங்கத்தில் சப்த வாக்கியங்களாகிய விஜ்ஞானமய கோசம் ஆத்மாவுடன் கூடியிருக்கும் புத்தி, சுஷுப்தி காலங்களில் தனக்குக் காரணமாகிய அஜ்ஞானத்தில் அடங்கி சாக்கிரதையில் சிகை பரியந்தம் வியாபித்து அநேக அவஸ்தைகளை உண்டாக்கி திருசியமா யிருப்பதனாலும், அதற்கு விருத்திப் பிரவாகம் இடைவிடாமல் எப்பொழுதும் கூடியிருப்பதனாலும் இதுவும் ஆத்மாவல்ல.

மேற்கூறிய பிராணமய மனோமய விஜ்ஞானமயமென்னும் மூன்று கோசங்களால், சூட்சும சரீரம் நிலைத்து நிற்கும்.

"ப்ரியமோத ப்ரமோத வ்ருத்திமத ஜ்ஞாந
ப்ரதாநமந்த:கரணம் ஆநந்தமயகோஶ இத்புச்யதே."
"ப்ரியாதி யுக்தமஜ்ஞாந மாநந்தமய உச்யதே."

5. ஆனந்தமய கோசம்:—பிரியம் மோதம் பிரமோதம் என்னும் விருத்திகளுடன் கூடிய அஜ்ஞானமே, பிரதானமாயிருக்கும் அந்தக்கரணம். இந்த அந்தக்கரணமே ஆனந்தமயகோசம் எனப்படும்.

பிரியம் என்பது, இஷ்டமான பதார்த்தத்தைக் கண்டபோது உண்டாகும் சந்தோஷமே பிரியமாம்.

மோதம் என்பது, அப்பதார்த்தம் தன் கையிற் கிடைத்தபோது உண்டாகும் சந்தோஷமே மோதமாம்.

பிரமோதம் என்பது, தம் கைக்குக் கிடைத்த வஸ்துவைத் தான் அநுபவித்தவுடன் உண்டாகும் சந்தோஷமே பிரமோதமாம்.

"ஏ தத்கோஶ சதுஷ்டய காரணஜ்ஞாந
ஸம்ப்ருக்தம் ஸ்வகாரண ஜ்ஞானம் ஸ்வரூபஸுகே
வடதாநாஸு வடவ்ருக்ஷ இவ யதா வர்ததே
ததாநந்த மயகோஶ:".

மேற் குறித்த நான்கு கோசங்களும் அஜ்ஞானத்துடன் சேர்ந்து, நுண்ணிய ஆல விதைக்குள் பெரிய ஆல விருக்ஷம் அடங்கியிருப்பதுபோல், சொரூப சுகத்தில் தன் காரண ஞானம் அடங்கியிருக்கும்போது ஆநந்தமயகோசமென்று சொல்லப்படும்.

இந்த பஞ்ச கோசத்திற்கும் பரமாத்மாவிற்கும் சேர்க்கை எப்படி உண்டாயிற்றெனில்:—

"அஹம் போக்தா ஸுகீ ஸந்துஷ்ட: ஸாத்விக:
ராஜஸ தாமஸ: மூட: துஷ்ட: ஶூந்ய:
மோஹித: அவிவேகீ ப்ராந்த இத்யாநந்தமய
கோஶ விகாரத்வே ஸதி ப்ரியமோத ப்ரமோத
ரஹிதமாத்மாநம் ப்ரியமோத ப்ரமோதம்
மந்தமிவ அபோக்தார மாத்மாநம் போக்தாரமிவ
பரிச்சிந்ந ஸுகாரஹித மாத்மாநம்
பரிச்சிந்த ஸுகவந்த மிவாச்சாதயதி."

நான் போக்தன், சந்தோஷமுடையவன், சுகமுடையவன், ராஜஸன், சாத்விகன், தாமசன், மூடன், சக்தன், பிராந்தியுடையவன் என்னும் இவை முதலானவைகள் ஆத்மாவினும்,

"ஆத்மா: ஸச்சிதாநந்தாம்ஸ்ச மம ஜ்ஞாநமஸ்தி
பாதி ப்ரியமிதி ஆநந்தமயகோஶே அத்யஸ்யதி."

ஆத்மா, ஸச்சிதானந்த ஆநந்தத்துடன் இருப்பதால், ஆனந்தம் தோன்றுகின்றது. ஆகையால் ஆநந்தமய கோசத்திற்கும் பரமாத்மாவிற்கும் சேர்க்கை யுண்டாயிற்று. ஆனல், இந்த ஆநந்தமயகோசம் ஆத்மாவாகாத விதமெப்படியெனில், ஆநந்தமய கோசத்தில் கடாதிகளைப் போல், திருசியம் ஜடம்,

"அஸ்தூல மரண்வ ஹ்ரஸ்வ மதீர்க்க மஶப்த
மஸ்பர்ஶ மரூபமவ்யயம்."

இவ்வித லக்ஷணங்களுடன் கூடினதாதலால், அது ஆத்மா ஆகமாட்டா. ஆனல், பரமாத்மா பஞ்ச கோசங்களுக்கு வேறு யிருப்பதனல் அது, எப்படி சித்திக்கும். கத்தி உறை முதலானவைகள் ஒன்ருய்த் தோன்றினாலும் விசாரிக்குமளவில், கத்தியும் உறையும் வேருவதுபோல், வேதாந்த சாஸ்திர விசாரணையினல் பரமாத்மா, காலத்ரயத்திலும் பஞ்ச கோசங்களினின்றும் வேறுபட்டுத் தோன்றுவதால், பஞ்ச கோச வியதிரிக்தம் லபிக்கும். இதற்குத் திருஷ்டாந்தம்:—

"மமாயம் கௌ: மமசாயம் வத்ஸ:
மமாயம் குமார: மமாயம் குமாரீ
மமாயம் ஸ்திரீ ஏவமாதி பதார்த்தவாந் புருஷ:
பதார்த்தோ ந பவதி தேப்யோ யதா விலக்ஷண:
ததா மம அந்நமயகோஶ: மம ப்ராண
மயகோஶ: மம மநோமயகோஶ:

மம விஜ்ஞாநமயகோஶ: மமா நந்தமயகோஶ:
ஏவம் பஞ்சகோபீஶாவாந் ஆத்மா பஞ்சகோஶாதிர்
ந பவதிதேப்யோ விலக்ஷண:.''

என் பசு, என் கன்று, என் புத்திரன், என் புத்திரி, என் மனைவி என்றுசொல்லும்போது பசு கன்று புத்திரன் புத்திரி மனைவி முதலானவர்களுக்கெல்லாம் தான் வேறு யிருந்து எப்படிச் சொல்லுகின்றானோ, அதுபோல் என் சரீரம், என் பிராணன், என் மனது, என் புத்தி, என் அஜ்ஞானம் என்று தன்னைச் சம்பந்தித்துக்கொண்டு பேசும் பஞ்சகோசங்களைவிட, ஆத்ம சொரூபனாகிய தான் வேறு யிருக்கின்றான். அன்றியும், அவன் கன்று இளைத்துவிட்டது என்றாகிலும், அவன் மனைவி நற்குணமுடையவ ளென்றாகிலும், மூர்க்க குணமுடையவ ளென்றாகிலும், சொல்லும் போது அதனதன் விகார குணங்களெல்லாம் அவனைப் பற்றாம லிருப்பதுபோல் அன்னமயகோச சம்பந்தமான ஜாதி குல கோத்திர ரூப நாமாதி விகாரங்களும், பிராணமய கோச சம்பந்தமான பசி தாகம் முதலாகிய விகாரங்களும், மனோமய கோச சம்பந்தமாகிய சங்கல்ப விகல்பாதி விகாரங்களும், விஜ்ஞானமயகோச சம்பந்தமாய்ச் செய்யப்படும் விவகாரங்களும், சாக்ஷியாய் ஆத்ம சொரூபனா யிருக்கும் தன்னைப் பற்றமாட்டா; ஆனால், மக்கள் மாடு மனைவி முதலானவைகள் தன்னுடன் கூடாமல் வேறு வஸ்துக்களா யிருக்கின்றன. ஆதலால், தான் வேறு, தன் பசுக்கள் வேறு, என்று அறியலாம். ஆத்மா, பஞ்ச கோசங்களுடன் கூடச் சேர்ந்திருக்கின்றது. ஆதலால், அது பஞ்ச கோசங்களுக்கு வேறா யிருக்கிறதென்று எவ்விதமாய் அறியலா மென்றால்:—

சுரு || ''பாஹ்ய த்ருஷ்டிர் நேத்ரம் அந்தர் த்ருஷ்டிர் புத்தி
பாஹ்யத்ருஷ்ட்யா ஜ்ஞாத்மஶக்யா அபி பதார்த்தா:
ஆந்த்ர த்ருஷ்ட்யா ஜ்ஞாதும் ஶக்யந்தே.''

என்னும் சுலோகரீதியாய் பாஹ்ய (வெளி) திருஷ்டி நேத்திரங்களாகவும், அந்தர் (உள்) திருஷ்டி புத்தியாகவும் இருக்கின்றன. நேத்திரங்களால் அறிவதற்குக் கூடாத விஷயங்களை அந்தர் (உள்) திருஷ்டியாகிய புத்தியினால் அறியலாம். அஃதெப்படியென்றால், ஜலம் உஷ்ணம் இவ்விரண்டும் கலந்திருந்தபோதிலும் கைகளால் தொட்டு உஷ்ணம் வேறு ஜலம் வேறென்று புத்தியினால் அறிவது போலும், சுவரின்மீது எழுதப்பட்ட சித்திரங்கள் சுவருடன் கலந்து ஒன்றாய்த் தோன்றிக் கொண்டிருந்தபோதிலும், சுவர் வேறு சித்திரம் வேறென்று புத்தியினால் ஊஹித்து அறிவது போலும், ஆத்மா வேறு பஞ்ச கோசங்கள் வேறென்று புத்தியினால் அறியலாம்.

"ஜலகதஸூர்ய ப்ரதிபிம்பம் ஜலவ்ருத்தௌ வர்த்ததே
ஜலஹ்ராஸே ஹ்ரஸதி ஜலசலநே சலதி
ஜலபேதே பித்யத இத்யேவம் ஜலதர்மாநுவிதா
இபவதி நது பரமார்த்தஃ ஸூர்யஸ்ய தத்வ
மஸ்தி ஏவம் பரமார்த்ததோ விக்ருதமேகரூப
மபிஸத் ப்ரஹ்ம தேஹாத்யுபாத்யந்தர பாவாத்
பஜத ஏவோபாதிமாந் வ்ருத்தி ஹ்ராஸாதிகி."

ஜலத்தில் பிரதிபலிக்கும் சூரிய பிம்பம், ஜலம் விருத்தி அடையவடைய அதுவும் விருத்தி அடைகின்றது. ஜலம் குறையக் குறைய அதுவும் குறைந்து விடுகின்றது; ஜலம் சலித்தால் சூரிய பிம்பமும் சலிக்கின்றது; ஜலம் பின்னமானால் சூரியபிம்பமும் பின்னமாகின்றது. இப்படி ஜல தர்மத்தை அநுசரித்துத் தோன்றுகின்றதே யொழிய, யதார்த்தமாய் சூரியனுக்கு அவைகள் எப்படி உண்மையன்றோ, எப்படி சூர்யனைப் பற்றாதோ அப்படியே தாஷ்டாந்தத்தில் அன்னமயகோச இஷ்டமான ஜீவாத்ம மனுஷ்யத்வாதி தருமங்களும், பிராணமய கோச இஷ்டமான

க்ஷுத்பிபாஸாதி (பசி முதலாகிய) குணங்களும், மனோமய கோச இஷ்டமான சங்கல்பாதி தர்மங்களும், விஜ்ஞானமய கோச இஷ்டமான கர்த்ருத்துவாதி குணங்களும், ஆநந்த மய கோச இஷ்டமான போக்த்ருத்வாதி விகாரங்களும் யதார்த்தமன்று. அந்தரத்தில் உபாதிகள் இருப்பதால் தோற்றமே யொழிய யதார்த்தமாயில்லாத சத்ரூபனும் பஞ்சகோச வியதிரிக்தனும் சாக்ஷியுமான தன்னைக் காலத் திரயத்திலும் பற்றுதென்றறிக. செத்தையை நீக்கித் தர்ப்பையைக் கைக்கொள்ளுமாறு பஞ்சீகரணத்திற்கு வேறாயிருக்கும் ஆத்ம சொரூபத்தை விசாரணையினால் அடையவேண்டும். ஆதலால், இப்படி விசாரித்து அறி வதே பஞ்சகோச வியதிரிக்த ஞானமெனப்படும்.

பஞ்சீகரணம்.

பஞ்சமஹா பூதங்களில் ஒவ்வொரு பூதத்தையும் மற்ற பூதங்களுடன் சேர்த்தபோது பஞ்சீகரணமாயிற்று. எப் படியெனில்:—

"ஐம்பூதமும் பத்தாக்கி யவைபாதி நன்னான்காக்கி
நைந்துதன் பாதிவிட்டு நாலொடு நாலுங்கூட்ட
வந்தன தூலபூத மகாபூத மிவற்றினின்று
தந்தன தூலதேக தனுவண்ட புவனபோகம்." [கைவல்யம்.]

ஆகாசத்தை இரண்டு பாகங்களாய்ப் பாகித்து, அதில் ஒருபாகம் சமஷ்டி பாகமாயும், மற்றொரு பாகம் வியஷ்டி பாகமாயும் செய்யவேண்டும். இவ்விதமாய்ப் பிரதி பூத த்தையும் தனித்தனியே வெவ்வேறாகப் பாகிக்கவேண்டும். ஆகாசத்தினுடைய சமஷ்டி பாகம் ஞாதாவாயிற்று. வியஷ்டி பாகத்தை நான்கு பாகங்களாய்ச் செய்து ஒவ் வொரு பாகத்தையும் தனித்தனி வாயுவுடன் சேர்த்த

போது மனதும், அக்கினியுடன் சேர்த்தபோது புத்தியும், ஜலத்துடன் சேர்த்தபோது சித்தமும், பூமியுடன் சேர்த்த போது அஹங்காரமும் பிறந்தன.

வாயுவை மேற் சொல்லியதுபோல் இரண்டு பாகங்க ளாகச் செய்து, அதில் சமஷ்டி பாகம் வியான வாயுவாக வும், மற்ற வியஷ்டி பாகத்தை நான்கு பாகஞ்செய்து ஒரு பாகத்தைப் பூமியுடன் சேர்த்தபோது பிராணனும், ஜலத்துடன் சேர்த்தபோது அபானனும், அக்கினியுடன் சேர்த்தபோது சமானனும், ஆகாசத்துடன் சேர்த்த போது உதானனும் பிறந்தன.

தேயுவை முன்போல் இரண்டு பாகஞ்செய்து அதில் ஸமஷ்டி பாகத்தைச் சக்ஷுவாகவும், மற்ற வியஷ்டி பாக மாகிய நான்கையும் வாயுவுடன் சேர்த்தபோது துவக்கும் (தேக சர்மம்), ஆகாசத்துடன் சேர்த்தபோது சுரோத் திரமும் (செவி), ஜலத்துடன் சேர்த்தபோது சிங்குவையும் (நா), பிருதிவி (பூமி) யுடன் சேர்த்தபோது கிராணமும் (மூக்கும்) பிறந்தன.

அப்புவை இரண்டு பாகஞ்செய்து, அதில் சமஷ்டி பாகம் ரசேந்திரியமாகவும், மற்ற வியஷ்டி பாகமாகிய நான்கையும் பிருதிவியுடன் சேர்த்தபோது கந்தமும், தேயுவுடன் சேர்த்தபோது ரூபமும், வாயுவுடன் சேர்த்த போது பரிசமும், ஆகாசத்துடன் சேர்த்தபோது சப்த மும் பிறந்தன.

பிருதிவி (பூமி)யை இரண்டு பாகஞ்செய்து அதில் சமஷ்டி பாகம் பாயுவிந்திரியமாகவும், மற்ற வியஷ்டி பாகம் நான்கையும் அப்புவுடன் சேர்த்தபோது மர்ம ஸ்தானமும், தேயுவுடன் சேர்த்தபோது வாக்கும், வாயு வுடன் சேர்த்தபோது கைகளும், ஆகாசத்துடன் சேர்த்த போது பாதங்களும் இவ்வகையில் இருபத்தைந்து தத்து

வங்கள் உண்டாயின. இவைகள் யாவும் ஆத்மாவை அறிய மாட்டா. ஆகையால், இவைகள் ஜடமென்று சொல்லப் படும். மேலும் இந்தப் பூததேகம் மரித்தவுடனே, இத் தேகத்திலிருக்கும் பஞ்ச பூதங்களும் அதது தனித் தனி யாய் அந்தந்தப் பூதங்களில் சேர்ந்துவிடும். மறுபடியும் ஜீவன் வேறு சரீரத்தை அடையும்போது அவனவன் செய்த கர்மானுசாரமாய் எந்தத் தாயின் கர்ப்பத்தில் ஜனிக்கவேண்டுமோ அந்தத் தாயின் கர்ப்பத்தில், பஞ்ச பூதங்க (திருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசங்க) ளால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தூல சரீரத்தில் ஜீவன், தாய் மூச்சுவழியாய் பிரவேசித்து சிசுவின் கர்ப்பத்திலுள்ள இருதய கமலத்தில் இருக்கும் ஜலத்தில் போய்ச் சேர்ந்து, மறுபடியும் சிசுவாய்ப் பிறக்கின்றது. ஆத்மா ஞான சொரூபனுகையால் சித்தென்று சொல்லப்படும்.

தூலதேக பஞ்சீகரண அந்தக்கரணங்கள்.

இச் சரீரம், ப்ருதிவி அப்பு தேயு வாயு ஆகாச மென் னும் பஞ்ச பூதங்களால் உண்டாக்கப்பட்டது. அதாவது,

"அஸ்தி சர்ம நாடீ ரோம மாம்ஸஸ்சேதி ப்ருதிவ்யம்ஸா:
மூத்ர ஸ்லேஷ்ம ரக்த ஸுக்ல ஸ்வேதா: அபம்ஸா:
க்ஷுத் த்ருஷ்ணாலஸ்ய மோஹ மைதுநாநக்நே:
ப்ரசாரண விலேகந ஸ்தூலாக்ஷியுந்மேஷ நிமேஷாதிவாயோ:
காம க்ரோத லோப மோஹ பயா ப்யாகாஸஸ்ய."

[சாரீரகோபநிஷத்.]

அஸ்திகள் தோல் நரம்பு ரோமம் மாமிஸம் இவ்வைந் தும் பிருதிவியினுடைய அம்சம். மூத்திரம் கபம் ரத்தம் சுக்கிலம் வியர்வை இவ்வைந்தும் ஜலாம்சம். பசி ஆசை நித்திரை அல்லது ஆலஸ்யம் மோகம் மைதுநம் (சம்போ

கம்) இவ்வைந்தும் அக்கினியாம்சம். நடப்பது அசைவது எழுதுவது கண்ணிமைக் கொட்டுவது மூடுவது திறப்பது இவைகள் வாயுவாம்சம். காமம் குரோதம் லோபம் மோஹம் பயம் இவ்வைந்தும் ஆகாசாம்சமாகும்.

சரு || "மனோ புத்தி ரஹங்காரஸ்சித்த மித்யந்தஃகரண சதுஷ்டயம், தேஷாம் க்ரமேண ஸங்கல்ப விகல்பாத்யவ ஸாயாபி மாநாவதாரண ஸ்வரூபாஸ்சைதே விஷயாஃ, மநஸ்தாநம் களாந்தம் புத்தேர்வதந அஹங்காரஸ்ய ஹ்ருதயம் சித்தஸ்ய நாபிரிதி." [சாரீரகோபநிஷத்.]

ஆனதனு வதனிலுறு மநிலனையு மியக்கி
யாங்கார நீங்காத வகந்தைக்கு வித்தா
யானலது பிறரொருவ ரெனையொப்பார் புவியி
லில்லையெனு மியல்பினதா யிந்திரியம் புலன்கள்
தாநுகரு மளவிலதின் முந்தியுறு மிச்சை
தானுருவாய்ச் சங்கற்ப சதாகதியுந் தந்து
மானதமா னதுசிற்குஞ் சிந்தைநினை வையம்
வந்துதரு மனமொழிய வகுப்பொணுதே. [சிவப்பிரகாசம்.]

மனம் புத்தி சித்தம் அஹங்காரம் என்னும் இந்நான்கும் அந்தக்கரண சதுஷ்டயம்: இதுவே, அந்தரிந்திரிய (உள் இந்திரிய)ங்களென்று சொல்லப்படும்:

இந்த மனம், அதிக வேகமுள்ளது: அன்றியும், கண்கள் மூக்கு வாய் செவிகள் சரீரத்தின்மேலிருக்கும் தோல், இந்த ஐந்து இந்திரியங்களுக்கும், விஷயங்களில் விசேஷ ஊக்கத்தை மனம் கொடுக்கத்தக்கதா யிருக்கின்றது: எப்படியென்றால், கண்கள் மூலமாய் அழகையும், மூக்கின் மூலமாய் வாசனையையும், வாய் மூலமாய் ருசியையும், செவிகள் மூலமாய் சப்தங்களையும், சரீரத்தின்மேலிருக்கும் தோல் மூலமாய் சீதோஷ்ணங்களையும் மனம் கிரகிக்கும்: இந்த இந்திரியங்களுடன் மனம் சேராவிட்டால், எதை அறியவும், இந்திரியங்களுக்குச் சக்தியிராது: ஆதலால், விஷ

யங்களின் இச்சையை இந்திரியங்களுக்குக் கொடுக்க, மனதே காரணமாயிருக்கின்றது: விஷயங்களும் இந்திரியங்களும் சேர்ந்து, அதில் மனம் சேராவிட்டால், வெளி இந்திரியங்களுக்கு, விஷயப் பிரவிருத்தி இல்லையாதலால், இந்திரியங்களுக்கு விஷய ஊக்கத்தைக் கொடுக்க மனதே காரணமாயிருக்கின்றது:

புத்தி; இது, நல்லது இது கெட்டதென்று அறிந்து நிச்சயிக்கும்:

சித்தம்; மனதின் சந்தேக நிலையே சித்தமாம்: சித்தமென்று ஒரு தனித்த பொருளில்லை: இச்சித்தமானது மனதின் தொழிலாகிய ஐய நிலையேயன்றி ஒரு தனித்த தத்துவமல்ல:

அஹங்காரம்; இதன் குணம் யாதெனில், நானே கர்த்தன் என்னைவிட அதிகப்பட்டவன் எவனுமில்லையென்று அபிமானித்து, காரியாகாரியங்களை விசாரிக்காமல் தன்னிஷ்டம்போல் சர்வ காரியங்களையும் செய்துகொண்டிருக்கும்: இந்த மனோபுத்தி சித்த அஹங்காரங்கள் ஒன்றாய்க் கூடினதே அந்தக்கரணமென்று சொல்லப்படும். இதற்குச் சுருதிப்பிரமாணம்;

சுரு|| "ஸாத்விக ராஜஸ தாமஸ லக்ஷணாநி த்ரயோ குணா:
அஹிம்ஸா ஸத்யமஸ்தேய ப்ரஹ்மசர்யா பரிக்ரஹா:
அக்ரோதோ குருஶுஶ்ருஷா ஶௌசம் ஸந்தோஷ [ஏதே
ஆர்ஜவம் அமாநித்வ மதம்பித்வ மாஸ்திகத்வ மஹிம்ஸ்ரதா
ஸர்வே குணா: ஜ்ஞேயாஸ் ஸாத்விகஸ்ய விசேஷத:."

"அஹம் கர்தாஸ்ம்யஹம் போக்தாஸ்ம்யஹம்
வக்தாபிமாநவாந் ஏதே குணா ராஜஸஸ்ய ப்ரோச்யந்தே
ப்ரஹமவித்தமை:."

"நித்ராலஸ்யௌ மோஹராகௌ மைதுநம் சௌர்யமேவ ச
ஏதே குணாஸ்தாமஸஸ்ய ப்ரோச்யந்தே ப்ரஹ்மவாதிபி:."

சாத்விக ராஜச தாமசமெனக் குணங்கள் மூன்றும்.

" ஊர்த்வே ஸாத்விகோ மத்யே ராஜஸோ
அதஸ்தாத் தாமஸ இதி ஸத்ய ஜ்ஞாநம் ஸாத்விகம்,
தர்மஜ்ஞாநம் ராஜஸம், திமிராந்தம் தாமஸமிதி."

[சாரீரகோபநிஷத்.]

ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம்-14, சுலோகம்-5.

ஸத்வம் ரஜஸ் தம இதி குணா: ப்ரக்ருதி ஸம்பவா:
நிபத்நந்தி மஹாபாஹோ தேஹே தேஹிந மவ்யயம்.

ஹே! நீண்ட கைகளையுடைய ஓ அர்ஜுனா! மாயையினுலுண்டாகிய ஸாத்விகம் ராஜஸம் தாமஸம் என்கிற மூன்று குணங்களும் தேகத்தில் மூடிக்கொண்டு, எந்த விகாரங்களும் இல்லாதவனையும் நாச ரஹிதனையும் இருக்கும் ஆத்மாவை மறைக்கின்றன. இம்முக்குணங்கள் எப்படிப் பட்டவை யென்றால்,

ஸத்துவம்:—பொய் சொல்லாம லிருப்பது, ஜீவஹிம்சை செய்யாம லிருப்பது, சத்தியமா யிருப்பது, களவு செய்யாமலிருப்பது, ஏகபத்தினி விரதத்துடன் இருப்பது கோபமில்லாமலிருப்பது, குரு சிசுருஷை, சௌசம், சந்தோஷம், சதாசாரம், டம்பமில்லாமலிருப்பது, ஜீவகாருண்ணியமாயிருப்பது ஆகிய இவை முதலாகிய குணங்களுடையவன் ஸாத்விகன்.

ராஜஸம்:—நான் கர்த்தன், நான் போக்தன், நான் தாதா என்று அஹங்காரங்கொண்டிருப்பவன் ராஜஸன்.

தாமஸம்:—நித்திரை, ஆலஸ்யம், மோஹம், ராகம், மைதுநம் (சம்போகம்), திருட்டுத்தனம் ஆகிய இவை முதலான குணங்களுடையவன் தாமஸன்.

உத்தமம் சாத்விக குணம். மத்திமம் ராஜஸ குணம். அதமம் தாமஸ குணம்.

ஸாத்விககுணம்:—பரிசுத்த குணமுண்டாய் நிவர்த்தி மார்க்கமும் அசஞ்சல (சலிக்காத) பகவத் பக்தியும் குரு பக்தியும் சாதுஜன விஸ்வாசமும் அபேத (பேதமில்லாத) பிரம்ம ஞானமும் உண்டாக்கும்.

ராஜஸ குணம்:—பிரவர்த்தி மார்க்கமும் அதாவது காம்ய கர்மாநுஷ்டானமும் அதன் சம்பந்தமான தேவதா உபாசனைகள் முதலானவைகளை உண்டாக்கும்.

தாமஸ குணம்:—ஈஸ்வரன் இல்லை என்னும் நாஸ்திக புத்தியும் துர் அஹங்காரமும் அவிவேக அந்தகாரமும் (இருளும்) உண்டாக்குவதேயாம்

கர்ப்பத்தில் பிண்டம் தரிப்பது.

சரு || "ஷட்விதோ ரஸோ ரஸாச் சோணிதம்
ஶோணிதாந் மாம்ஸம் மாம்ஸாந் மேதோ
மேதஸ: ஸ்நாயவ: ஸ்நாயுப்யோ அஸ்தீனி
அஸ்திப்யோ மஜ்ஜா மஜ்ஜாத: ஶுக்லம்
ஶுக்ல ஶோணித ஸம்யோகாத் ஆவர்ததே கர்ப்ப:"
[கர்போபநிஷத்.

ஜீவராசிகளின் சரீரத்தில், ஆறுவித ரசங்களுண்டு அதாவது, புசிக்கும் ஆஹாரத்திலிருந்து ரசம் உண்டாகின்றன. அந்த ரசம் ரத்தரூபத்தை அடைகிறது. அந்த ரத்தம், மாமிசத்திலும் மாமிசத்திலிருந்து கொழுப்பிலும் கொழுப்பிலிருந்து அஸ்தி (எலும்பு) களிலும் அஸ்தி லிருந்து மூளையிலும் பிரவேசித்து, மூளையிலிருந்து சுக்கிலமாய் மாறுகின்றது. உழக்கு ரத்தம் சுண்டினால் ஒரு துளி சுக்கிலம் உண்டாகின்றது. இப்படிப்பட்ட சுக்கிலம், ஒரு

சம்போகத்திற்கு முப்பது துளிகளுக்குமேல் செலவழிந்து விடுகின்றன. அதனால் ஏழரைப்படி ரத்தம் நஷ்டமாய் விடுகின்றது. ஆதலால், மாத ருதுகாலங்களில் அதாவது, மாத விடாயான பதினாறு தினங்களுக்குள் இரண்டு தினங்களுக்குமேல் சம்போகம் செய்யலாகாது. சம்போககாலத்தில் மனோ வியாகூலமாய் இருக்கலாகாது. அப்படியிருப்பாராகில் அவர்களுக்கு எப்படிப்பட்ட குழந்தைகள் ஜனிக்குமென்றால்,

சரு || "வ்ருத்யனுகுணா ஹி ப்ரவ்ருத்திஃ
தேதோர் ஹி பித்ரானுகுணா ப்ரஜா
வ்யாகுலித மனோப்யாமந்தாஃ கஜ்ஞா
குப்ஜா வாமனா வ்யங்காஜாயந்தே." [கர்போபநிஷத்.]

காரணத்துக்குத் தகுந்த காரியம் உண்டாகின்றது. ஆதலால், சித்த விருத்திக்குத் தகுந்த குழந்தைகள் ஜன்மிக்கின்றன. அதாவது, ஸ்திரீ புருஷர்கள் கூடும்போது மனம் சந்தோஷமில்லாமல் வியாகூலமாயிருந்தால் அவர்களுக்கு, கூன் குருடு நொண்டி நோணல் முதலாகிய அங்க ஈனமுடைய குழந்தைகள் ஜன்மிக்கும். சம்போக காலத்தில் மனோ வியாகூல மில்லாம லிருப்பதற்காக, சிலர் தம்படுக்கை அறை முழுமையும் மிக சௌந்தரியமுள்ள படங்களை அமைத்து வைப்பது வழக்கம். ஏனெனறால், அப்படங்களின் உருவங்களை சதா பார்த்துக் கொண்டிருப்பதனால், அவ்வுருவங்களில் வைத்த மனோ ரம்மியமானது புணர்ச்சி காலத்தில் அக்கருவிற்கு சௌந்தரியத்தை உண்டாக்குமென்பது யாவரும் அறிந்த விஷயமே. மேலும் ஸ்திரீகள், பிரதிமாதமும் மாதவிடாய் வந்து ஸ்நானம் செய்யும்போது எல்லாம், எவர்களின் முகத்தையும் பாராமல் சூரியனைப் பார்க்கவேண்டுமென்று நமது முன்னோர்கள் நூல்களில் கூறி யிருக்கின்றார்கள். அதற்குக் காரணம் யாதெனில்,

மாதவிடாயான காலத்தில் கரு தரிக்கும் கருப்பை மலர்ந்திருக்குமென்றும், ஸ்நானம் செய்த ஐந்தாநாள் முதல் பதினேரு தினங்கள் புணரலாமென்றும், விதித்திருப்பதால் ஸ்நானகாலத்தில் எந்த உருவம் எதிர்ப்படுகின்றதோ, அந்த உருவமே கருவில் அமையுமென்னும் கருத்தால் அவ்வாறு கூறியிருக்கின்றார்கள். மேற்கூறியபடி புணர்ச்சி காலத்தில் தாய் தந்தையர்களுக்கு உண்டாகும் குண பேதங்களைப்போலவும், எண்ணங்களைப் போலவும் பிள்ளைகளுக்கும் குணகுண ரூபாரூபங்கள் பேதிக்குமென்பதற்குத் திருஷ்டாந்தமாக உலகத்தாருடைய சில வழக்கங்களைக் காட்டி நிரூபிக்கின்றோம். அவையாவன:—

ஒரு பெண் குதிரையின் எதிரில், ஒரு விரையடித்த ஆண் குதிரையை நிறுத்தி, பெண் குதிரை ஆண்குதிரையை திருஷ்டித்துப்பார்த்து மோஹித்தமாத்திரம் பெண்குதிரையின் கண்களைக் கட்டி, விரையடித்த குதிரையை மறைத்து வேறு குதிரையைப் புணரவிட்டு புணர்ந்த குதிரையை மறைத்து, முன் விரையடித்த குதிரையைப் பெண்குதிரை முன்னிறுத்திக் கண்களை யவிழ்த்த மாத்திரம், எதிரில் நிற்கும் விரையடித்த குதிரையைப் பெண் குதிரைப் பார்த்து, அதுவே தன்னைப் புணர்ந்ததாக நினைத்துக் கனைத்தவுடன் அதை யொத்த குட்டியைப் போடும். ஆதலால், இதை வாசிக்கும் அன்பர்கள் யாவரும், தாம் சயனிக்கும் அறையில் சுந்தரமான படங்களை, சம்போககாலத்தில் ஸ்திரீகளின் திருஷ்டிக்குக் காணப்படும் இடத்தில் வைத்து, மிகவும் சந்தோஷமாயிருந்து, ஸ்திரீகள் அப்படங்களைப் பார்த்துக்கொண்டே சம்போகம் செய்வார்களாகில், அவர்களுக்கு அழகும் சாத்வீக குணமும் ஈசுவர பக்தியுமுடைய குழந்தை உண்டாகும்.

இதற்கோர் திருஷ்டாந்தம் சொல்லுகின்றோம் கேளுங்

கள்; இஞ்ஜனீராயிருந்த ஓர் ஆங்கிலேயதுரை தன் நாயகியுடன் கூடும்பொழுது, அவள் கால்மாட்டிற்கு நேராய் கறுத்தநிறம் சுருட்டை மயிருடைய காபிரியதேச மனிதன் படம் ஒன்று, அவள் கால்மாட்டிற்கு நேராய்ச் சுவற்றில் மாட்டியிருந்தது: புணற்சி சமயத்தில், அவள் திருஷ்டி அப்படத்தில் நின்றிருந்தபடியால் அக்காலத்தில் பிண்டம் தரித்துக் குழந்தையைப் பெற்றாள்: அக்குழந்தை காபிரி குழந்தை ரூபம்போல் இருந்தபடியால், அவள் நாயகன் அக்குழந்தையைப் பார்த்து, தன் நாயகி பரபுருஷனைச் சேர்ந்து அக்குழந்தையைப் பெற்றாளென்று எண்ணி, மிகவும் கோபமுண்டாய் யாதொன்றும் செய்ய தோன்றாமல், பிறகு தனக்கு மிகவும் சிநேகிதனாயிருந்த ஒரு பெரிய டாக்டரிடம் இந்த ரகஸ்யம் வெளியிட்டான்: அந்த டாக்டர் மிகவும் புத்திசாலியாதலால், தனக்கும் யாதொன்றும் தோன்றாமல் நெடுநேரம் ஆலோசித்து பிறகு உன் படுக்கை அறையைப் பார்ப்போம் வா வென்று அவன் வீட்டிற்கு அழைத்துச்சென்று, படுக்கும் அறையைப் பார்த்து நீங்கள் எந்த முகமாய்ப் படுப்பதென்று டாக்டர் கேட்டான். அப்போது, தாம் கட்டிலில் படுக்கும் தலைமாடு கால்மாட்டைக் காட்டினான். உடனே டாக்டர், கால்மாட்டுச் சுவற்றைப் பார்த்தான். அப்போது அச்சுவற்றில் கறுத்த நிறமும் சுருட்டை மயிருமுள்ள படம் கால்மாட்டில் யிருந்ததைப் பார்த்து, அப்படத்தை டாக்டர் தன் கையிலெடுத்து மேற்படி துரைக்குக்காட்டி குழந்தையைக் கொண்டுவரச் சொல்லிப் பார்த்தபோது, படத்தின் ரூபமும் குழந்தையின் ரூபமும் ஒன்றா யிருந்தபடியால், நீங்கள் சம்போகம் செய்யும்பொழுது உன் மனைவி அப்படத்தைப் பார்த்திருந்தபடியால் அக்காலத்தில் பிண்டம் தரித்தது அதனால் குழந்தை அந்த ரூபமாய்ப் பிறந்தது

உன் மனைவியின்மீது யாதொரு தோஷமும் இல்லையென்று அத்துரைக்குத் தேறுதலைச் சொல்லிச் சென்றான். ஆதலால், சம்போகம் செய்யும் அறையில் நல்ல அழகுடைய படங்களை அமைத்துவைக்கவேண்டும். ஆண்குழந்தை வேண்டுமென்றால் ஆண் குழந்தையும், பெண்குழந்தை வேண்டுமென்றால் பெண் குழந்தையும் பெற, இதனடியில் சொல்லுகின்றோம். அதுபோல் சம்போகம் செய்ய வேண்டும்.

சரு || "ஸப்தரா த்ரோஷிதம் புத்புதம் பவதி
அர்த்த மாஸாப்யந்தரேண பிண்டோ பவதி
மாஸாப்யந்தரேண கடிநோ பவதி
மாஸத்வயேந ஶிர: குருதே
மாஸத்ரயயேண பாத ப்ரதேஶோ பவத்யத
சதுர்த்தே மாஸே ஜடர கடிப்ரதேஶோ பவதி
பஞ்சமே மாஸே ப்ருஷ்டவம்ஶோ பவதி
ஷஷ்டே மாஸே நாஸாக்ஷி ஶ்ரோத்ராணி பவந்தி
ஸப்தமே மாஸே ஜீவ ஸம்யுக்தோ பவதி
அஷ்டமே மாஸே ஸர்வ ஸம்பூர்ணோ பவதி
நவமே பீவதே சுக்லம் பும்பாக, சோணிதம் ஸ்திரீபாக
உபயம் க்ளீபம் பிதரு ரேதோதிரே காத் புருஷோ பவதி
மாத்ரு ரேதோதி ரேகாத் த்ரியோபவந்தி
ஸ்திரியோஹி காமிந்ய ஸ்தாஸாம் சுகாதிக்யாத்தா[பவதி.
எவ பஹூளாஜாயந்த உபயோ பீஜதௌல்யே நபும்ஸகோ
[கர்ப்போபநிஷத்.]

"எதஸ்மாத்க்மி வேர்த்ரஜால மபரம் யத் கர்ப்பவாஸே ஸ்திதம் ரேதஸ்ச்சேததி ஹஸ்த மஸ்தக பதப்ரோத்பூத நாநாங்குரம் பர்யாயேணஶிரோத்வ யௌவந ஜராவேஷை ரநேகைர் வ்ருதம் பஶ்ய த்யத்தி ஶ்ருணோதி ஜிக்ரதி யதாகஸ்சத் ததா கஸ்சதி."

ஆஹா! இந்த பிரபஞ்சத்திலுள்ள மாயா விசித்திர இந்ரஜால வித்தையை என்னவென்று சொல்லலாம்!

ஸ்திரீகள் மாதவிடாயானபின், 6, 8, 10, 12, 14, 16, இவ் விரட்டித்த நாட்களில் சம்போகம் செய்துவந்தால், தந்தையின் சுக்லமும் தாயின் சுரோணிதமும் இரண்டும் ஒன்று சேர்ந்து, தாயின் கர்ப்பத்திலிருக்கும் கமலத்தில் பிந்துவாய் நின்று, தரிக்கப்படுவது ஆணாகவும், 5, 7, 9, 11, 13, 15 - இவ்வொற்றைப்பட்ட நாட்களில் தரிக்கப்படுவது பெண்ணாகவும் பிறக்கும். அந்த சமயத்தில், ஆண்குழந்தை தரித்தால் ஸ்திரீகளுக்கு சுவாசம் வலது நாசியிலும், பெண் குழந்தை தரித்தால் இடது நாசியிலும் நடந்துகொண்டிருக்கும். இரண்டு நாசிகளிலும் சுவாசம் நடந்துகொண்டிருந்தால், அலியாய்ப்பிறக்கும் தாய்தந்தையர்களின் சுக்ல சுரோணிதங்கள் தாயின் கர்ப்பப்பையில் தங்கினால் பிண்டம் தரிக்குமென்று மநுஸ்மிருதியில் சொல்லப் பட்டிருக்கின்றது. அதாவது, மாதவிடாயானபின் பதினாறு தினங்களுக்குள் பிண்டம் தரிக்கும்; அதற்குமேல் தரிக்கமாட்டா. ஏனென்றால், மாதவிடாயான பதினாறு தினங்கள் வரையில் 'கமலம்' திறந்துகொண்டிருக்கும்; அச்சமயம் சுக்கிலம் போய்ச் சுரோணிதத்துடன் சேர்ந்தால் கர்ப்பம் தரிக்கும் பதினேழாவது நாள் கமலத்தின் வாய் மூடிக்கொள்ளும். அப்போது சுக்கிலம் மேற்படி கமலத்திற்குள் செல்லாமல் வெளிவாய்விடும். ஸ்திரீகளுக்கு மாதவிடாய் நின்று, கர்ப்பம் தரித்த இரண்டாம் மாதம்முதல் சிசு ஜனன காலம் வரையில், ஒருநாளும் தவறாமல் காலை மாலைகளில் எதுவும் சாப்பிடாமல் வெறும் வயற்றில் ஐந்து குண்டுமணியவ்வளவு குங்குமப்பூ பிரதிதினம் சாப்பிட்டு வரவேண்டும். அவ்வாறு சாப்பிட்டு வந்தால் சிசு அழகுடையதாயும் கருப்பான் முதலிய சிரங்குகள் இல்லாததாயும் மிகவும் சுகமாயும் வளர்ந்துவரும். இதற்கோர் திருஷ்டாந்தம் சொல்லுகின்றோம் கேளுங்கள்; சென்னை நாட்டுப் பிள்ளையார்

கோவில் வீதியில், ஓர் சால்ட் சப் இனிஸ்பெக்டர் பார்யாள் இரண்டுமாதம் கர்ப்பவதியா யிருந்தனள். அவ்வீட்டி லுள்ளவர்கள் எல்லோரும் அடியேன்மீது மிகவும் சிரத்தை பக்தி விஸ்வாச முடையவர்களா இருந்தபடியால், அது சமயம் யாம் அவர்கள் வீட்டிற்குச் சென்றிருந்தோம்; மேற்சொல்லிய அம்மையார் இரண்டுமாதம் கர்ப்பவதியா யிருந்தபடியால், அடியில் சொல்வதுபோல் செய்யும்படிச் சொன்னோம்; அதாவது, குங்குமப்பூவில் காஷ்மீர் குங்கு மப்பூ உயர்ந்தது: அதை உடனே கொண்டுவந்து இன்று முதல், ஒருநாளுந் தவறாமலும் மரவாமலும் பிரதிதினம் காலை மாலைகளில் வெறும் வயற்றுட னிருக்கும்போது ஐந்து குண்டுமணியவ்வளவு குங்குமப்பூ எடுத்து வாயில் போட்டு நன்றாய் மென்று விழுங்கவேண்டும்: இவ்வாறு சாப்பிட்டுவந்தால் அவ்வம்மைக்கு எந்த சீதள வியாதியும் வராமல் இருப்பதுமேயன்றி, பிறக்கும் குழந்தைக்கு,கருப் பான் சிரங்குகள் கட்டிகள் முதலான வியாதிகள் எப் பொழுதும் வரமாட்டாதென்றும், குழந்தை சிகப்பாய் கிருஷ்ண விக்கிரகம்போலப் பிறக்குமென்றும் சொன் னோம். அவர்கள் மிகவும் குருபக்தி யுடையவர்களாதலால், அடியேன் சொல்லியதுபோல் அன்றே காஷ்மீர் குங்கு மப்பூ வரவழைத்து, அன்றுமுதல் ஒருநாளுந் தவராம லும் மரவாமலும் சிசு ஜனனமாகும் நாள்வரையில் குங்கு மப்பூ கொடுத்துவந்தார்கள். பிறகு, அடியேன் மறுபடி யும் ஒருமுறை அவ்வீட்டிற்குச் சென்றிருந்தபோது, கர்ப் பம் தரித்த இரண்டாம் மாதம்முதல் குங்குமப்பூ சாப்பி டும்படி சுவாமிகள் சொல்லியதுபோல் சாப்பிட்டுப் பிறந்த குழந்தை இதுதானென்று குழந்தையைக் காட்டினார்கள்: அப்போது அக்குழந்தைக்கு, ஒருவருஷம் பத்துமாதம் ஆயிற்று; ஆண்குழந்தையாய்ப் பிறந்தது: தாய்த்தந்தையர்

கள் கறுப்பாய் இருந்தபோதிலும், அக்குழந்தை சிறிது தூலசரீரமாயும் யாம் சொல்லியபடி, கிருஷ்ண விக்கிரகம் போல் சிவப்பு நிற முடையதாயிருந்தது. குழந்தைப் பிறந்த நாள்முதல், அடியேன் குழந்தையைப் பார்த்தனள் வரையில் எந்தக் கருப்பான், சிரங்குகள், கட்டிகள் இன்னும் எந்த வியாதிகளும் இல்லாமல் மிகவும் சுகமாய் விளையாடிக் கொண்டிருந்தது: அவ்வீட்டில் மற்றொரு அம்மையும் கர்ப்பவதியா இருந்தனள்; அவ்வம்மைக்கும் அதுபோல் அதே குங்குமப்பூ கொடுத்துவந்தார்கள். ஆனல், அவ் வம்மையார் ஒருநாள் சாப்பிட்டும், ஒருநாள் மறந்து சாப் பிடாமலும் இவ்வாறு குங்குமப்பூ சரியாய்ச் சாப்பிடா மல் அனேகநாள் தவறிக்கொண்டே வந்தது. அவ்வம் மைக்குப் பிறந்த குழந்தையை, யாம் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கும்போது, சிரசு கழுத்து கை முதலான இடங்களில் அனேக கட்டிகள், நெல்லிக்காய் ப்ரமாணம் இருந்தன. யாம் சொல்லியதுபோல் பிரதிதினம் தவருமல், காலை மாலைகளில் வெறும் வயற்றில் குங்குமப்பூ சாப்பிட்டு வந்திருந்தால் முன்சொல்லிய கட்டிகள் ஏதுவும் வந்திராது. ஆயினும் ஒன்று சொல்லுகின்றோம் கேளுங்கள்: அவரவர் கள் பூர்வஜன்மத்தில் செய்த கர்மத்திற்கு (புண்ணிய பாபங் களுக்கு)த் தக்கபடி வியாதிகளும் சுகதுக்கங்களும் உண்டா கின்றன; ஆதலால் "புத்தி கர்மாநுசாரிணி" என்றிருப்பத ஞல், அவரவர்கள் அனுபவிக்கவேண்டிய கர்மத்திற்குத் தக்கபுத்தி உண்டாகும். ஆதலால்,

இவ்வம்மையின் குழந்தை, வியாதிகளை அனுபவிக்க வேண்டிய கர்மம் இருந்தபடியால், குங்குமப்பூவை இவ் வம்மையார் சரியாய்ச் சாப்பிடாமல் யிருக்க, அடிக்கடி மறதியை உண்டாக்கிற்று. உலகத்தில் ஒவ்வொருவரும், அவரவர்களின் கர்மத்திற்குத் தக்கபடி வியாதிகளும்

சுகதுக்கங்களும் அனுபவித்துக்கொண்டு வருகின்றார்களே யொழிய, மற்றப்படிக்குவேறல்ல. இதுவிஷயம் யாவும், இந்நூல் 49-வது, பக்கம்முதல், 54-வது, பக்கம் வரையில்; சஞ்சித பிராரப்த ஆகாம்ய கர்மங்களில் சொல்லியிருக்கின்றோம். அவைகளை நீங்கள் மறந்திருக்கலாமென்று மறுமுறையும் இங்கு சொன்னோம். கர்ப்ப உர்ப்பத்தியைக் குறித்து யாம் இவ்வளவுதூரம் எழுதவேண்டியது ஏனென்றால், இந்நூலை வாசிக்கப்பட்டவர்களின் வீட்டில், எந்த சமயத்தில் ஸ்திரீகளுக்குக் கர்ப்பம் தரிக்கின்றதோ அச்சமயம், இரண்டாம்மாதம் முதல் சிசு பிறக்கும்வரையில், காஷ்மீர் குங்குமப்பூ ஒருநாளும் மறவாமல் காலை மாலைகளில், ஒன்றும் சாப்பிடாமுன் ஐந்து குண்டுமணி பிரமாணம் குங்குமப்பூ எடுத்துவாயில் போட்டு மென்று விழுங்க வேண்டுமென்று எழுதினோம்: விழுங்கியபின், வாய் மிகவும் வாசனையாயிருப்பது தமக்குத் தெரியவரும். சற்றுநேரம் சென்றபிறகு எச்சலைத் துப்பிப்பாருங்கள். அவ்வெச்சல் பொன்னிறம்போல் மஞ்சள் வர்ணமாய் வரும். இந்த காஷ்மீர் குங்குமப்பூ, தேயிலையைப்போல் யிருந்து, தேயிலையிலும் சிறிதாய் வெவ்வேறாய் ரத்தம்போல் சிவப்பு வர்ணமுடையதாயிருக்கும். இதுவே முதல்தரமான குங்குமப்பூ இது விலை அதிகம். மற்றொரு குங்குமப்பூ இருக்கின்றது அது, மயிரைப்போல் நீளமாயும் நாரைப்போல் ஒன்றையொன்று பற்றிக்கொண்டு மஞ்சள் நிறமுடையதாயிருக்கும்: இதை வாயில்போட்டு மென்றால், சுண்ணம்பு வாசனைப் போலும் சுண்ணம்புக் காரம்போலும் சிறுங்காரமாயிருக்கும். எல்லாக் கடைகளிலும் இந்த மட்ட குங்குமப்பூவை வைத்துக்கொண்டு, மிகவும் உயர்ந்ததென்று சொல்லி விற்பனைச்செய்துவருகின்றார்கள்: உயர்ந்த காஷ்மீர் குங்குமப்பூ, விலை கொடுத்து வாங்கமாட்டார்களென்று எண்ணி,

தாழ்ந்த குங்குமப்பூவே உயர்ந்ததென்று சொல்லி விற்பனைச் செய்துவருவார்கள். இதன்றியும், கர்ப்ப ஸ்திரீகளே அல்லாமல் எல்லா ஸ்திரீ புருஷர்களும் பிரதிதினம் காலை மாலைகளில் சிறிதும், போஜனமுண்டு தாம்பூலம் போடும்பொழுது தாம்பூலத்தில் சிறிதும் காஷ்மீர் குங்குமப்பூ சேர்த்து சாப்பிட்டுவந்தால், எந்த சீதள வியாதியும் பற்றாமல் சரீரத்திற்கு உஷ்ணத்தை உண்டாக்கி, எந்த வியாதிகளையும் அணுகாமலிருக்கச் செய்விக்கும். குங்குமப்பூ சாப்பிட்டு எச்சலைத் துப்பினால் அவ்வெச்சல் பொன்நிறம்போல் மஞ்சள் வர்ணமாய் வருமென்று முன் சொன்னோமல்லவா? அவ்வெச்சலின் குணத்தை இப்பொழுது சொல்லுகின்றோம் கேளுங்கள்; வெறும் வயற்றில் குங்குமப்பூ சாப்பிட்டு எச்சல் விழுங்கியபோது, குங்குமப்பூ சத்தாகிய மஞ்சள் நிறமுடைய ரசம், தாயின் குடலில் சம்பந்தப் பட்டிருக்கும் கர்ப்பப்பையிலுள்ள சிசுவின் உச்சிவழியாய் மேற்படி குங்குப்பூ ரசம் இரங்கி, அக்குழந்தையின் சரீரத்திலுள்ள நாடி நரம்புகளுக்கெல்லாம் பிரதிதினம் காலை மாலைகளில் ஓடிக்கொண்டே வருகிறபடியால், அந்த மஞ்சள் நிறமுடைய ரசமானது குழந்தையின் சரீரத்தைச் சுத்திசெய்து வைப்பதால், அக்குழந்தையின் நிறம் மாறி, கருப்பான் முதலிய சிரங்குகளை சேரவிடாமல் செய்விக்கும். ஆதலால், கர்ப்ப ஸ்திரீகள் இரண்டாவது மாதம் முதல், பிரதிதினம் தவறாமல் காலை மாலைகளில் ஐந்து குண்டுமணி அவ்வளவு காஷ்மீர் குங்குமப்பூ சாப்பிட்டு வரவேண்டும். காஷ்மீர் குங்குமப்பூ வேண்டுபவர்கள், இந்நூல் விற்பனை செய்யும் ஸ்ரீ ஸச்சிதானந்தர் கம்பெனி **169**, ஸ்டிராஹன்சு ரோட்டு, குளைப்பட்டாளம் பேரம்பூர் பாரக்ஸ் சென்னை. இக்கம்பெனிக்கு ரூபா 11—8—0 முன்னதாய் அனுப்பினால் அத்துகைக்கு எவ்வளவு குங்கு

மப்பூ அனுப்பவேண்டுமோ அவ்வளவு குங்குமப்பூ அனுப்புவார்கள். இது, வி. பீ. மூலமாய் அனுப்புவதில்லை; இக்கம்பெனியில் எந்தமோசமும் இராது; எல்லாம் சத்திய மாய் நடக்கும். மேற்படி குங்குமப்பூ பிரதிதினம் காலை மாலை இரண்டுவேளைகளிலும் சாப்பிட்டுப் பிறக்கும் குழந் தையை, அனுபவத்தில் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாய்ப் பார்த்துப் பிறகு, ஒவ்வொரு குடும்பத்திலுள்ள எல்லா ஸ்திரீகளுக்கும் சொல்லி இதுபோல் சாப்பிட்டு வரவேண்டு மென்று, அவர்களுக்கும் சொல்லவேண்டும். சிசு கர்ப்பத் தில் தரித்த பிறகு, ஏழுதினங்கள் வரையில் நீர்க் குமிழி யைப் போலவும், பதினைந்து தினங்களில் பிண்டவடிவமா யும், ஒரு மாதத்தில் கட்டிப்பிண்டமாயும், இரண்டாவது மாதத்தில் தலையும் மூளையும், மூன்றுவது மாதத்தில் கால் களும் கைகளும், நான்காவது மாதத்தில் வயிறும், ஐந்தா வது மாதத்தில் முதுகெலும்பும் விலாக்களும் ரோமங்க ளும், ஆறுவது மாதத்தில் கண்கள் மூக்கு வாய் செவிகள் முதலாகிய ரந்திரங்களையுடைய அவயவங்களும் ஏற்படும். இப்படி ஏற்பட்ட பிறகு, ஏழாவது மாதத்தில் ஜீவன் பிரவேசிக்கின்றுன். அப்போது, பிண்டம் தலை கீழாய்த் திரும்பும், பிண்டம் திரும்புவது தாய்க்கு நன்றுய்த் தெரி யவரும். அப்போது, தாயினுடைய ஜடராக்கினி நோய் இல்லாமலிருப்பதற்காக 'ஸஹதி' என்னும் பெயரையுடைய ஒரு குடலானது பிண்டத்தைச் சுற்றிக்கொண்டிருக்கும். எட்டு ஒன்பதாவது மாதங்களில் ஞானம் உதயமாய் "நாநா யோநி ஸஹஸ்ராணி, த்ருஷ்ட்வா சைவததோ மயா ஆஹாரா விவிதாபுக்தாঃ, பீதாஸ்ச விவிதாஸ்தநாঃ" என்னும் சுருதிரீதி யாய் ஸ்தாவர ஜங்கமங்களாகிய எண்பத்துநான்கு லக்ஷம், அதாவது, ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 14, சுலோகம் 4.

ஸர்வயோநிஷு கௌந்தேய! மூர்தய ஸ்ஸம்பவந்தி யா:
தாஸாம் ப்ரஹ்ம மஹத்யோநி ரஹம் பீஜப்ரத: பிதா.

ஓ குந்தி புத்ரா! ஜராயுஜம் என்றால், 'மா' என்னும் பையால் மூடப்பட்டுப் பிறக்கும் மனிதர்கள் மிருகங்கள் முதலானவைகளும், அண்டஜம் (முட்டையில் பிறப்பது) சுவேதஜம் (வியர்வையில் பிறப்பது) உற்பிஜம் (பூமியில் பிறப்பது) என்கிற நால்வகை யோனிகளில் எந்தத் தேகங்கள் உண்டாகின்றனவோ அவற்றிக்கெல்லாம் மாயையே தாயாகவும் நான் விதைபோட்ட தந்தையாகவும் இருக்கின்றேன். என்றால்,

"ஸ்தாவரோ லக்ஷவிம்ஸத்ய ஜலஜோ நவலக்ஷ:
க்ரிமீணும் ருத்ரஸங்க்யாஸ்ச சாதுர்லக்ஷந்து மாநுஷ:
த்ரிம்ஸல்லக்ஷம் கவாநாம் ச பக்ஷீணும் தஸலக்ஷ:

விருக்ஷாதி ஸ்தாவரங்கள் 20-லக்ஷம், ஜலத்திலுள்ள மச்சாதி ஜலவர்க்கங்கள் 9-லக்ஷம், புழு முதலாகிய கிருமி வர்க்கங்கள் 11-லக்ஷம், மனுஷ்ய ஜாதிபேதங்கள் 4-லக்ஷம், கோக்கள் முதலாகிய மிருகவர்க்கங்கள் 30-லக்ஷம், பக்ஷி வர்க்கங்கள் 10-லக்ஷம், ஆகமொத்தம் 84-லக்ஷ ஜீவ ராசிகளின் நாநாயோநிகளில் பிறந்து பிறந்து உழன்று மரித்த தனது பூர்வ ஜன்மங்களையெல்லாம், தான் பூமியில் ஜனிக்கும் வரையில் தாயின் உதரத்தில் மல மூத்ர ஸ்தானங்களுக்கு மத்தியிலுள்ள கர்ப்பத்திலிருந்து, தனக்குத் தானுகவே பின் வருமாறு துக்கித்துக்கொண்டிருக்கும்.

"ஐயோ! நான் எனது ஜன்மாந்திரங்களில் கொஞ்சமேனும் புண்ணியம் செய்யாமற் போனேன்; பிரபஞ்சாநுபவம் தெரிந்திருந்தும் என்னை யார் என்ன செய்வார்களென்னும் கர்வத்தினுல் நிஷ்காம்ய சத்கர்மங்களைச் செய்யாமற் போனேன்; இதரர்களை மோசம் செய்வதற்காகவே காம்ய கர்மங்களைச் செய்தேன்; நிஷ்காம்ய சத்கர்மங்

களைச் செவியிற் கேளாமலும், ஒருக்கால் கேட்டாலும் அதை மனதில் நிறுத்தாமல், பெரியோர்கள் சன்மார்க்க விஷயங்களைக் குறித்துச் சொல்லிய போதெல்லாம் அவைகளைக் கேளாமல், நான் என் இஷ்டம்போல் செய்வேனென்று சொல்லி அவர்களை நிந்தித்து நற்கதியை விரும்பாமற் போனேன். அஞ்ஞானத்தினால் பர ஸ்திரீகளை மோஹித்து, அநியாயமாய் அவர்களை மான பங்கஞ் செய்தேன்; அறியாத் தன்மையினால் அநேக பாப கிருத்தியங்களைச் செய்தேன்; குருவையும் பெரியோர்களையும் தாய்த் தந்தையர்களையும் நிந்தித்தேன்; தநத்தைச் சம்பாதித்துப் பெண்டு பிள்ளைகளுக்குக் கொடுத்துப் பின்னுமதைக்கேட்க மறுபடியும் அவர்கள் கொடாததனால் துக்கித்தேன்; இனி, இந்த மல மூத்ரப் பைகளால் நெருக்குண்டிருக்கும் கர்ப்பப்பையிலிருந்து பூமியில் பிறந்தவுடன், ஞானம் அடைவதற்காக சத்குருவை நாடி சாங்கிய யோக பக்தி மார்க்கங்களினால் பரமாத்மாவைத் தரிசிப்பேன்'' என்று சிசுவானது இவ்வாறு நினைத்து துக்கித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் பத்துத் திங்களும் பூர்த்தியாய்ப் பிண்டம் தாயிற்கு நோவை உண்டாக்கித் தநஞ்ஜய னென்னும் வாயுவினால் சிசுவை வெளியில் தள்ளும்போது, அந்த சிசுவானது பூர்வ ஞானத்துடன் கர்ப்பத்தில் இருப்பதனால் வெளிவர பயந்து இரண்டு கைகளையும் சேர்த்து சிரசின்மேல்வைத்து ஐயோ! மாயா சம்சாரத்தில் கொண்டுபோய்த் தள்ளுகின்றாயாவென்று ஈசுவரனைக் கும்பிட்டுக்கொண்டே, தாயின் யோனிப்பையிலிருந்து வெளி வருகின்றது. சிசு யோனிப் பையிலிருந்து கும்பிட்டுக்கொண்டே, வெளிவருவதை ☞ எதிரிலிருக்கும் படத்தில் காட்டப் பட்டிருக்கின்றது பாருங்கள். சிசுக்களேயல்ல, சகல மிருகங்களுக்கும் பூர்வ ஞானமுண்டு; அம்மிருகங்களும், முன் இரண்டுகால்களால் ஈசுவரனைக் கும்

ஐயோ ! மாயா பிரபஞ்சத்தில் கொண்டுபோய்த் தள்ளுகின்றாயாவென்று சிசுவானது, ஈசுவரனைக் கும்பிட்டுக்கொண்டே தாய் கர்பத்திலிருந்து வெளிவரும் படம்.

பிட்டுக்கொண்டே வெளிவரும். இவைகளை நீங்கள் அனுபவத்தில் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாய்ப் பார்க்கலாம். இவ்வாறு ஜனனகாலம் சம்பிராப்தமாய்ப் பிண்டம் "ஜ்ஞாநாந் தேஜவநம்ப்ராப்திர் யோநி மத்யஸ்ச கச்சதியோநி ஸ்பர்ஸ மாத்ரேண ஜ்ஞாநரூபம் நஸம்ஸயஃ" தான், தாயின் கர்ப்பத்தில் கட்டுப் பட்டிருந்த பையிலிருந்து புறப்பட்டுப் பூமியில் பிறந்தவுடன், வெளி ஸ்பரிஸம் (காற்றுப்) பட்டு பூர்வ ஞானங்கெட்டுத் தன்னை மறந்திருக்கும் ஸமயத்தில் கலியுக ஜலத்தை சிசுவின் முகத்தின்மீது தெளிக்க, குவா! குவா! குவா! என்று வீரிடுகின்றது. அதாவது, எங்கே! எங்கே! எங்கே! எனக்குப் பூர்வ ஞானமிருந்ததே,அந்த ஞானம் எங்கு போயிற்றென்று, சிசுவானது துக்கித்துக்கொண்டு நாளுக்கு நாள் பால்ய யௌவன கௌமார (கிழத்தன) மென்னும் சரீர விகாரங்களை மேன்மேலடைந்து ஒன்றையொன்று பார்த்துக் கொண்டும் தின்றுக்கொண்டும் கேட்டுக்கொண்டும் வாசனைப் பார்த்துக் கொண்டும் சிரித்துக் கொண்டும் அழுதுக்கொண்டும் விளையாடிக் கொண்டும் பேசிக் கொண்டும் சம்போகம் செய்துக்கொண்டும் உலகத்தாரை மோசம் செய்துக்கொண்டும் பொய் சொல்லிக்கொண்டும், இப்படி விந்தை விந்தைகளான அநேக காரியங்களைச் செய்து கொண்டிருந்து, மறுபடியும் அகஸ்மாத்தாய் இருந்தாற்போலிருந்து, ஜீவன் எப்படி வந்ததோ அப்படியே சொல்லாமல் ஓடிப்போய் விடுகின்றது. ஆஹா! ஜீவனில்லாத ஜடபதார்த்தமாகிய சுக்கிலமே யல்லவா, இப்படி விந்தை விந்தைகளான அனேக நாமரூபங்களுடன் தோன்றி மறுபடியும் நாமரூபங்கள் தோன்றாமல் சூன்னியமாய் (ஒன்று மில்லாமல்) விடுகின்றது. இதைவிட பெருத்த இந்திரஜாலவித்தை வேறொன்றில்லை. இந்திர ஜாலத்தைப் போன்ற இந்த மாயாப் பிராந்தியினாலேயே

நாநா விசித்திர ஜகத்து தோன்றுகின்றதே யல்லாமல் மாயா பிராந்தி யில்லாதவர்களுக்கு இந்த மாயா ஜகத்து இல்லவேயில்லை. எப்படியென்றால்:—"மாயாமய மிதமகிலம் ஜகத், ஜாயதே கச்சதி இதி ஜகத், இதம் ப்ரபஞ்சம் நாஸ்த் யேவ நோத்பந்நம் நோஸ்திதம் ஜகத், மாயா கார்யாதிகம் நாஸ்தி, மாயா நாஸ்தி, பயம் நஹி வந்த்யாகுமாரவசநே பீதிஸ்சேத் அஸத்விதம் ஜகத்."

இந்த ஜகத்து மாயா பிராந்தியினால் தோன்றுகின்றது. இந்திரஜலாம்போல் நாநாவித நாம ரூபங்களுடன் தோன்றி மறுபடியும் நாமரூபங்கள் தோன்றாமல் அசத்தியமாய்ப் போவதே ஜகத்து. எப்படியென்றால், மனிதன் பிறந்தால் அவனுடன்கூடவே இந்த மாயாப் பிரபஞ்சமும் பிறக்கின்றது. அவன் மரணமடைந்தால், மறுபடியும் இந்த மாயாப் பிரபஞ்சம் அவனுடன் கூடவே மறைகின்றது; மறுபடியும் அவன் பிறந்தால் அவனுடன் கூடவே இந்த மாயாப் பிரபஞ்சமும் பிறக்கின்றது. இப்படி, இந்த மாயா சரீரம் பல முறைகளில் அவனுடன்கூட பிறந்து பிறந்து நசிக்கின்றது. இந்திர ஜாலத்தில் தோன்றும் வஸ்துக்கள் எப்படி அநித்தியமோ அதுபோல் மாயையும், இந்த மாயையினால் தோன்றும் நாமரூப ஜகத்தும், அநித்தியமே. மாயைக்குக் காரணம் மனம். மனதிற்குக் காரணம் இந்திரியங்கள். இதற்குத் திருஷ்டாந்தம் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம்-2, சுலோகம்-67,

> இந்திரியாணும் ஹி சரதாம் யந்மநோ நு விதீயதே
> ததஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர்நாவ மிவாம்பஸி.

மெய் வாய் கண்கள் மூக்கு செவிகளாகிய பஞ்சேந்திரியங்களிலும், எந்த இந்திரியங்களின் வழியாய் மனம் பிரவேசிக்கின்றதோ அதில் ஆசை யுண்டாகின்றது. என்

றால், இந்திரியங்கள், மனிதனுடைய மனதை வசப்படுத்தி விஷயங்களில் ருசியை உண்டாக்கி அவைகளை இழுக்கச் செய்யும். எப்படியெனில், ஜலத்தின்மீது மிதந்துகொண் டிருக்கும் படகை நடத்துபவன் சுக்கானால் திருப்பாவிட்டால், அப்படகு போகவேண்டிய மார்க்கமாய்ப்போகாமல் வேறுமார்க்கத்தில் காற்றினால் எவ்வாறு இழுக்கப்படுமோ அதுபோல், புருஷனும், தன் மனமென்னும் படகை, சன்மார்க்கத்தில் போகும்படி, புத்தியென்னும் சுக்கானால் திருப்பாவிட்டால், அவனுடைய மனம், இந்திரியங்களென்னும் காற்றினால் கெட்டமார்க்கங்களில் இழுக்கப்படுவதற்குச் சந்தேகமில்லை. இதற்குப்பின் விஷயங்களை ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதையில் விரிவாய்க் காணலாம்.

எவன் மனம் ஈசுவரனிடத்தில் சேர்க்கப்படுகின்றதோ அவன் மனம், இந்திரியங்களுக்கு உட்படமாட்டா. அப்படி உட்பட்டால், அவன் சிரேஷ்டமான ஞானம் கெட்டு விஷயாசக்தியினால் இழுக்கப்படுவான். ஆதலால், இந்திரியங்கள் குதிரையைப் போன்றன, மனம் வண்டியைப்போன்றது. இதைச் சாரத்யம் செய்பவன் மோக்ஷத்திற்கு திட பிரயத்நம் செய்துகொண்டிருக்கும் விவேகி. இந்த விவேகியானவன் புத்தியென்னும் கயற்றைக் கடிவாளமாகப் போட்டு, கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகசர்மமென்னும் ஐந்து இந்திரிய குதிரைகளை இழுத்துப் பிடித்தபோதிலும் நிற்காமல், அவனையும் அந்த இந்திரியங்களேன்னும் குதிரைகள் பலவந்தமாய் விஷயங்களில் பற்றி இழுத்துச் செல்வதனால், அந்த விவேகியானவன் என்ன செய்கின்றானென்றால், குதிரைகளென்னும் இந்திரியங்களை இழுத்துப் பிடிப்பதற்குச் சக்தி இல்லாதவனா யிருப்பதால் 'நான்' என்னும் விருக்ஷத்தில் இந்திரியங்களென்னும் குதிரைகளைக் கட்டி

விடுகின்றான்; அப்படிக் கட்டிவிடுவதனால் இந்திரியங்களென்னும் குதிரைகள், எவ்வளவு பலமுள்ளவைகளாயிருந்தபோதிலும் இழுத்துக்கொண்டு போகமாட்டா. 'நான்' என்னும் விருக்ஷம் தேகமல்ல, தேகத்தின் மத்தியில் அந்தர்யாமியாயிருக்கும் ஆத்மா; அந்த ஆத்மாவில் மனதை கட்டிவிடவேண்டும்: இதற்கு சுருதிப் பிரமாணம்.

"இந்த்ரியத்வாரா ஸங்க்ராஹ்யைர் கந்தாத்யை ராத்மதேவதா ஸ்வயம் பக்த்யா ஸமாராத்ய ஜ்ஞாதும் ஸோயம் மஹாமக:"

இந்திரியங்களை அதன் அதன் விகார காரியங்களில் போகவிடாமல் திருப்பி, ஆத்ம நிஷ்டை செய்வதே மஹா யாகம். காராடுகளாகிய வெள்ளாடுகளைக்கொன்று, அக்னி குண்டத்தில் போட்டு பஸ்பம் செய்து புசிப்பது யாகமல்ல. அதாவது, நமக்கு பஞ்சேந்திரியங்கள் உண்டு. அவையாவன:—

கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகசர்மம் (சரீரத்தின்மேல்தோல்) என இந்திரியங்கள் ஐந்து. மனம், சுகந்தமான வாசனைகளை மூக்கிந்திரிய வழியாய் இழுத்தும், ருசிகரமாகிய பதார்த்தங்களை வாயிந்திரிய வழியாய் அறிந்தும், தோடி காம்போதி பைரவி முதலாகிய ராகங்களை, செவி யிந்திரியங்களின் வழியாய்க் கேட்டும், சீதோஷ்ணங்களை, தேகசர்ம இந்திரிய வழியாய்க் கிரகித்தும் ஆநந்திக்கின்றது. இந்நான்கு இந்திரியங்களும் புருஷனை அதோகதி செய்விப்பதில்லை. பின் எது செய்விக்கின்றதென்றால், கண்ணிந்திரியம் செய்விக்கின்றது. அஃதெப்படியென்றால், ஆலயங்களில் நடந்தேறிவரும் உச்சவங்களுக்குச் செல்லவேண்டுமென்று, ஸ்திரீகள் கூந்தலை வாரிமுடித்து ஸ்நானம் செய்து, நல்ல புஷ்பங்களை அணிந்து நெற்றியில் நல்ல பொட்டுவைத்து தனக்கு ஆபரணங்கள் இல்லாவிட்டாலும் இரவலாக வரவழைத்துக் காதுகளிலும் கைகளிலும்கழுத்

திலும் கால்களிலும் அணிந்துகொண்டு, நல்ல ரவிக்கையும், பட்டுச்சேலையும் தரித்து அண்டை அயல் வீட்டிலிருக்கும் தன் சிநேகித ஸ்திரீகளையும், நன்ருய் அலங்கரித்துக் கொண்டு வரும்படிச் சொல்லி, தன்னுடன்கூட கோவிலுக்கு அழைத்துச் செல்வார்கள். அங்குசென்று குளத்தில் கை கால்களை அலம்பி சந்நிதானத்திற்குள் பிரவேசிக்கும்போது, வழியில் சென்றுகொண்டிருக்கும் மற்ற ஸ்திரீகளை எல்லாம் இவர்கள் பார்த்து கமலம்! அதோ, மத்தாப்பு ரவிக்கை போட்டிருக்கின்ருளே அவளைப் பார்த்தையா? அவள் கட்டியிருக்கும் மேகவர்ண சேலைக்கும் மத்தாப்பு ரவிக்கைக்கும் எவ்வளவு நன்ருயிருக்கின்றது பார். இப்படிப்பட்ட சேலையும் ரவிக்கையும் நானும் எடுக்கவேண்டும். அவள் கறுப்பு முகத்திற்கும் குண்டு மூஞ்சிக்கும் தக்கபடி ரவை மூக்குத்தியும் ரவைக்கம்மலும் போட்டிருப்பதனுல் அவள் எவ்வளவு பிரகாசமாயிருக்கின்ருள் பார் என்று, ஒவ்வொரு ஸ்திரீகளும் ஒருவரையொருவர் பார்த்து பேசிக்கொண்டு போவதற்காகவே ஆலயங்களுக்குப் போகின்ருர்களே யொழிய, பகவானை பக்தியுடன் சேவிப்பதற்கல்ல. இதுபோல், புருஷர்களும் ஸ்நானம் செய்து, நாமம் அல்லது விபூதி, சந்தனமாகிலும் நெற்றியில் வைத்து, நல்ல சரிகை வேஷ்டிகளை அணிந்து ஆலயத்திற்குட்சென்று, தன் சிநேகிதர்களைப் பார்த்து ரங்கநாதா! அதோ காசிரவிக்கை போட்டுக் கொண்டிருக்கின்ருளே அவளைப்பார்; அவள் இடுப்பு மிகவும் சிறிதாயும் மார்பு அகண்டும் கழுத்து திட்டமாயும் குண்டுமுகமாயும் மூக்கு கோட்டைப்போலும் புருவம் வில்லைப்போலும் கண்களின் வெள்ளை விழிகள் பால்போலும் அதன் மத்தியிலிருக்கும் கரிவிழிகள் குண்டுமணியிலுள்ள கறுப்பைப்போலும் இருக்கின்றது. ஆஹா! இவளை

மணம்புரிந்தவன் பாக்கியமே பாக்கியம்; உலகத்திலுள்ள ஜனங்கள் பார்யாள் சிகப்பாய் வரவேண்டுமென்று எண்ணுவார்கள். சிகப்பு நிறமுடையவர்களாயிருந்தபோதிலும் முகத்தில் இப்படிப்பட்ட களை இல்லாவிட்டால் என்ன பிரயோஜனம். கருப்பழகே நெருப்பழகு என்று இப்படியே ஒவ்வொரு புருஷனும் ஒவ்வொரு ஸ்திரீ ரூபத்தைப் பார்த்து வர்ணித்துப் பேசி பகவானை சரியாய்ச் சேவிக்காமல், தங்கள் தங்கள் வீடு சேர்ந்து தாம் தாம் கண்ட அதிசயங்களை எல்லாம் மற்றவர்களுடன் சொல்லிப் பேசிக் கொள்வது வழக்கம். உலகத்திலுள்ள பாமரஜனங்கள் தெய்வபக்தி இல்லாமல் அதோகதி அடைகின்றார்கள். ஆதலால், அவர்களை எவ்விதத்திலாகிலும் ஆலயங்களுக்கு தாசிகளின் மூலமாய் வரவழைத்து பகவானை சேவித்து ஒரு க்ஷணமாகிலும் அவர்களின் மனம் பகவத் சேவையில் நிற்பதற்காக ஆலயங்களில் தாசிகளை நாட்டியம் செய்யும்படி ஏற்படுத்தினால் அவள் மீதிருக்கும் ஆசையினாலாகிலும் ஆலயங்களுக்கு வந்து பகவானைத் தரிசனம் செய்வார்களென்று எண்ணி முன்னிருந்த பெரியோர்கள், ஆலயங்களில் தாசிகளை நடனம் செய்ய ஏற்படுத்தினார்கள். அப்படி ஏற்படுத்தியும் ஜனங்கள் பகவானைச் சேவிக்காமல், அவர்களின் கண்களும் மனமும், முன்சொல்லிய துர் விஷயங்களிலேயே ஓடிக்கொண்டிருக்கும். ஆதலால், கண்ணிந்திரியம் எந்த வஸ்துக்களைப் பார்க்கின்றதோ அந்த வஸ்துக்களை எல்லாம் மனம் கிரஹித்து அதை அடையவேண்டுமென்று, துன்மார்க்க விருத்தியில் பிரவேசித்து, புருஷனை அதோகதிக்கு ஆளாக்கி அனேக அனர்த்தங்களில் இழுத்துக் கொண்டுவந்துவிடும். ஆதலால், பஞ்சேந்திரியங்களிலும் கண் என்னும் இந்திரியமே மிகவும்

துன்மார்க்கமான தென்று சொல்லலாம். இப்படிப்பட்ட இந்திரியங்களின் விருத்தியை யெல்லாம் அடக்கி மனதை ஆத்ம நிஷ்டையில் நிறுத்துவதே மஹாயாகம்.

"ப்ராணேந்த்ரியாத்யந்தஃகரணகுணதேஃபரதரம்,ஸச்சிதாநந்தமய ஸர்வஸாக்ஷிகம் நித்யமுக்த ப்ரஹ்மஸ்தாநம் பரமபதம்." [நிராலம்]

பஞ்ச பிராணன்களும், மெய் வாய் கண்கள் மூக்கு செவிகள் என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும், மனம் புத்தி சித்தம் அஹங்காரமென்னும் அந்தக்கரணங்கள் நான்கும் ஆகிய இவைகளுக்கெல்லாம் வேருய், சச்சிதானந்த ஸர்வ ஸாக்ஷியாயிருக்கும் ஆத்மாவே பரப் பிரம்மம். அப்படிப்பட்ட ஆத்மாவில் மனதை லயப்படுத்துவதே (சேர்ப்பதே) பரமபதம், வைகுண்டம், கைலாசம் என்று சொல்லப்படும்.

"அதஸ் ஸம்ஸாரவிஷய ஜநக ஸம்ஸர்க ஏவ நரகஃ
ஸத்ஸம் ஸ்வர்க்கஃ ஸ்வர்க்கஃ| [நிராலம்போபநிஷத்.]

சம்சார விஷய வியவகாரங்களில் அகப்பட்டுக் கொண்டிருப்பதே நரகம். இதைவிட வேறு நரகமில்லை. சதா மனதை பிரம்மத்தில் ஐக்கியம் செய்வதே சோர்க்கம்; இதைவிட வேறு சொர்க்கமில்லை.

"ஸச்சிதாநந்தாநுபவ ஸ்வரூபம் ஜ்ஞாத்வா ஆநந்தரூபோயஸ்திதிஃ ஸஏவ ஸுகம் அதஸ் ஸம்ஸாரவிஷய ஸங்கல்ப ஏவ துஃகம்."
[நிராலம்போபநிஷத்.]

சச்சிதானந்த பரப் பிரம்மமே ஆத்மாவென் றறிந்து ஸகலமும் மறந்து, ஆத்மானுபவ நிஷ்டையில் இருப்பதே பரமசுகம். மனைவி புத்திரர்கள் முதலான சம்சாரவிஷய சங்கல்பமே மஹா துக்கமென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட சம்சார துக்கத்தைக் கடந்து கடைத்தேறினவன் யாரென்றால்,—

ஆர்த்தசபை நூற்றொருவரா யிரத்தொன்றாம்புலவர்
வார்த்தைபதினாயிரத்தொருவர்—பூத்தமலர்
தண்டாமரைத்திருவே தாதாகோடிக்கொருவர்
உண்டாயினுண்டென்றறி.

மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஶ்சி த்யததி ஸித்தயே
யததா மபி ஸித்தாநாம் கஶ்சிந்மாம் வேத்தி தத்வதঃ. கீ. அ,7. சு.3.

ஆயிரக் கணக்காக சாஸ்திரங்களை வாசித்த பண்டிதர்களில் ஒருவன் மாத்திரம் மோக்ஷத்திற்காக பிரயத்தினப்படுகின்றான்; இப்படி பிரயத்திநப் பட்டவர்கள் அனேக ஆயிரம் பெயர்களுண்டு; அப்படிப்பட்டவர்களில் ஒருவன் மாத்திரம் என்னை வாஸ்தவமாய் அறிகின்றான். அப்படிப் பட்டவன் யாரென்றால்,—

“யஎவம் வேதாஹம் ப்ரஹ்மாஸ்மீதி
ஸ இதம் ஸர்வம் பவதி.” [ப்ருஹதாரண்யோபநிஷத்.]

எவன், ஆத்மசொரூபியாகிய நானே பிரம்மமென்று தெரிந்துகொள்ளுகின்றானோ, அவனே அந்த பரப் பிரம்ம சொரூபமாகின்றான்.

“அயமாத்மா ப்ரஹ்ம.” [மாண்டூக்யோபநிஷத்.]

இத்தேஹத்தில் அந்தக்கரண (மனம் புத்தி சித்தம் அஹங்காரங்களுக்கு) சாக்ஷியாயிருக்கும் ஆத்மாவே பரப் பிரம்மம்.

“பூதேஷு பூதேஷு விசிந்த்ய தீராঃ
ப்ரேத்யாஸ்மாந் லோகா தம்ருதா பவந்தி.” [கேநோபநிஷத்.]

சமஸ்த பிராணிகளிலும் ஆத்ம சொரூபியாகிய பரப் பிரம்மமே யிருக்கின்றதென்று தெரிந்துகொண்ட புண்ணியவான் எவனோ, அவன் அந்த ஜன்மத்திலேயே மோக்ஷ சித்தியை அடைவான் மோக்ஷமென்றால்,—

“யதா பஞ்சாவதிஷ்டந்தே ஜ்ஞாநாநி மநஸா ஸஹ
புத்திஶ்ச நவிசேஷ்டேத தாமாஹுঃர் பரமாங்கதிம்.”
[கடோபநிஷத்.]

சுரோத்திரங் (காது) கள் நேத்திரங்கள் முதலாகிய ஞானேந்திரியங்கள் ஐந்தும், மனதும் ஆத்மாவில்சேர்த்து, இதர வியாபாரங்க ளில்லாமல் சகல எண்ணங்களையும் மறந்து, நிச்சலனமாய் தந்மயமா யிருப்பதே மோக்ஷ மென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

"த்வமேவாஹம் நபேதோஸ்தி பூர்ணத்வாத் பரமாத்மநஃ"
[மண்டல ப்ராஹ்மணோபநிஷத்.]

நீயே நான் நானே நீ; நாம் இருவரும் சர்வ பரிபூரண பரப் பிரம்மமாகிய ஆத்ம சொரூபிகளே; நாம் இருவரும் ஏக பரப் பிரம்மமே. நம் இருவருக்கும், சத்தியமாய் எவ் வித பேதங்களும் இல்லை. இதற்குத் திருஷ்டாந்தம் ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம் 12-சுலோகம் 6-7.

யேது ஸர்வாணி கர்மாணி மயி ஸந்யஸ்ய மத்பராஃ
அநந்யேநைவயோகேந மாம் த்யாயந்த உபாஸதே.
தேஷாமஹம் ஸமுத்தர்தா ம்ருத்யுஸம்ஸார ஸாகராத்
பவாமி நசிராத் பார்த! மய்யாவேஸித சேதஸாம்.

எவன், சகல கர்மங்களையும் 'நான் செய்கின்றேன்' என்னும்அஹங்காரம் இறந்து,எல்லாம் அவன்செயலென்று நினைத்து, மனோ வாக்குக் காயங்களை என்னிடத்தில் ஒப்பு வித்து, எனது பூர்ண ஞாபகத்தில் தன்னையழிந்து நின்று, ஏகாந்த பக்தியுடனிருந்து 'நீயே நான் நானே நீ' என் கிற ஐக்கியானு சந்தானத்தில்,எனது சொரூபத்தை மநநம் செய்பவனும், (தியானார்ச்சுன சிரவண கீர்த்தன ஸ்துதி நமஸ்காரங்களைச்) செய்கின்றானோ அவனை, சம்சார சமுத் திரத்திலிருந்து சீக்கிரமாய்க் கரையேற்றுவேன். அத் யாயம் 10-சுலோகம் 2.

ந மே விது ஸ்ஸுரகணாஃ ப்ரபவம் ந மஹர்ஷயஃ
அஹமாதிர்ஹி தேவாநாம் மஹர்ஷீணாம் ச ஸர்வஶஃ.

எனது உத்தமமான அவதாரமகிமையை, தேவர்களும் அறியார்கள். மஹரிஷிகளும் அறியார்கள். நான் தேவர்களுக்கும் மஹரிஷிகளுக்கும் காரணமா யிருக்கின்றேன்.

ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேஸ்வரம்
விநஸ்யத்ஸ்வ விநஸ்யந்தம் யஃ பஸ்யதி ஸ பஸ்யதி. அ.13. சு. 28

தேவதைகள் மனிதர்கள் முதலாகிய ரூபபேதங்களில்லாமல், அந்தந்த தேஹம் இந்திரியங்கள் மனது முதலானவைகளுக்கு சாக்ஷியா யிருக்கப்பட்ட பரமேசுவரனென்னும் ஆத்மாவை யதார்த்தமாய்த் தெரிந்துகொண்டவன் எவனே அவன் சம்சார விரக்தனுகின்றான் என்னும் கீதா வாக்யரீதியாய், 'ஆத்மசொரூபியாகிய நீயே பரப் பிரம்மம்' அந்த 'பரப் பிரம்மமே நீ' என்று அறிந்து சகல எண்ணங்களையும் விட்டு, 'ஆத்ம சொரூபியாகிய நானே பிரம்ம' மென்று சதா ஆத்மானுசந்தானம் செய்துகொண்டிருக்கக் கடவாய்.

நீ தாயின் கர்ப்பத்தில் ஜநித்து விருதா காலங்கழித்துச் சென்றுவிடாமல், இதுவரையில் சொல்லிய உபநிஷத் வாக்கியங்களையும் இனி சொல்லப்போகும் உபநிஷத் வாக்கியங்களையும் நன்றாய் அறிந்து சுவானுபவத்திற்குச் கொண்டு வரவேண்டும்.

உபநிஷத்துக்களின் தாத்பரியம்.

ஸம்ஸ்கிருத பாஷையில் 'ஸதல்' என்னும் தாதுவிலிருந்து 'உபநிஷத்' என்னும் சப்தம் உண்டாயிற்று. 'ஸதல்' என்றால் நாசம் செய்யப்பட்டது. அதாவது, அஞ்ஞானமென்னும் சம்சார விருக்ஷத்தை நிர்மூலமாய்க் கண்டித்து, பிரம்ம லக்ஷணத்தையும் ததேக ஞாநத்தையும்

போதித்து ஜனன மரணங்களில்லாமற் செய்து, பிரம்மம் இப்பேர்ப்பட்டதென்று தெரிவித்து, அஜ்ஞானத்தைப் போக்கடித்து ஜீவ பிரம்மைக்கியத்தைப் போதிப்பதே உபநிஷத்துக்களென்று சொல்லப்படும்.

இந்த உபநிஷத்துக்கள் வேதவாக்கியம். அதாவது, ஆதியில் மஹா பிரளயத்தில் பரப் பிரம்மமானது, ஸ்ரீமந் நாராயணமூர்த்தி ரூபமாய் அவதரித்து ஜலமத்தியில் * ஆலிலையின்மீது ☞ 201-வது பக்கத்திலிருக்கும் படத்தில் காட்டியதுபோல் சயனித்துக் கொண்டு,

சுரு || "நிஸ்வாஸபூத மே விஷ்ணோர்
ஜாதா வேதா ஸுவிஸ்தரா:"

என்னும் சுருதி வாக்கியரீதியாய் நான், சுவாசம் வெளியில் விட்டபோது ருக், யஜுஸ் ஸாம, அதர்வணமென்னும் நான்கு வேதங்கள் உண்டாயின. அதில், கர்மபக்தி இப்படிப்பட்டதென்றும், ஞாநுஷ்டானங்கள் இப்படிப் பட்டதென்றும் தெரிவித்து, அதை உலகத்தில் சுருதி ஸ்மிருதி பிரமாணங்களுடன் சொல்லியிருக்கின்றேன். ஆதலால், வேதங்கள் என்னுடைய ஆஜ்ஞா வாக்கியங்களென்று அறியவேண்டும். அதிலிருந்து ருக்வேதத்தில் 21-சாகை (பிரிவு) களும், யஜுஸ் வேதத்தில் 109-சாகை (பிரிவு) களும் சாம வேதத்தில் 1000-சாகை (பிரிவு) களும், அதர்

---

* ஆலிலையின்மீது சயனித்துக்கொண்டிருப்பது என்று காட்டும் குறி யாதெனில்:—சகல ஜீவராசிகளின் ஹிருதய கமலத்தில், தாமரைக் கமலம்போன்ற ஒரு கனியுண்டு. அதனை இரு பிளப்பாய்ப் பிளந்தபோது அது ஆலிலை வடிவமாயிருக்கும். அப்படிப் பட்ட கமலத்தில், ஜீவாத்மா வசித்துக் கொண்டிருப்பதனால் பகவானுக்கு ஆலிலையின்மீது பள்ளிகொண்டான் என்று பெயர் வந்தது. இந்த ஆலிலையின் கருத்து முன் படத்தில் காட்டி அதன் ரகஸ்யம் சொல்லப்படும்.

வண;வேதத்தில் 50-சாகை (பிரிவு) களும், ஆகமொத்தம் ஆயிரத்து நூற்றெண்பது சாகை (பிரிவு)கள் உண்டாயின. இந்த ஆயிரத்து நூற்றெண்பது பிரிவுகளிலும் ஆயிரத்து நூற்றெண்பது உபநிஷத்துக்கள் உண்டாயின. இதில் ருக் வேதத்திலிருந்து பத்தும், யஜுஸ் வேதத்திலிருந்து ஐம்பத்தொன்றும், சாம வேதத்திலிருந்து பதினாறும், அதர்வண வேதத்திலிருந்து முப்பத்தொன்றும், ஆகமொத்தம் நூற்றெட்டு உபநிஷத்துக்களை மாத்திரம் எடுத்துக் கொண்டார்கள். ஏனென்றால், இந்த ஆயிரத்து நூற்றெண்பது உபநிஷத்துக்களையும் பார்ப்பதற்கு நமக்கு ஆயுட்பாகம் போதாமலிருப்பதால், நாம் மோக்ஷத்தை அடைவதற்கு வேண்டிய முக்கியமான உபநிஷத்துகளை யெல்லாம் பரீக்ஷித்துப் பார்த்தபோது, நூற்றெட்டு உபநிஷத்துகள் மாத்திரமே அகப்பட்டன. மனதை நிறுத்துவதற்காக எவை முக்கியமான உபநிஷத்துக்களோ அவைகளில் சிற்சில உபநிஷத்துக்களை மாத்திரம் இந்நூலில் எழுதப்பட்டிருக்கின்றன. ஆதலால், ஒடித்திரியும் மனதை ஒடவிடாமல் நிறுத்தி, நாமெல்லோரும் முக்தியடைய இந்த "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்யமே" மிகவும் முக்கியமான நூல். ஆதலால்,

ரெயிலுக்குப் போகப்பட்டவன், தனக்கு வேண்டிய வஸ்துக்களைத் தன் பிரயாணத்திற்கு எப்படி சித்தப்படுத்திக் கொள்ளுகின்றானோ அதுபோல், நம்முடைய பிராண பிரயாண காலத்திற்கு வேண்டிய விஷயங்களை யெல்லாம் தெரிந்து கொண்டு, இதுமுதல் அப்பியாஸம் செய்து வரவேண்டும்.

இதற்குத் திருஷ்டாந்தம்:—ஸ்ரீ கிருஷ்ண பகவானை அர்ஜுனன் என்ன கேட்கின்றானென்றால், 'ஹே சுவாமி! மரண காலத்தில் கிருஷ்ணா வென்று சொன்னால் மேலான



ஸ்ரீமந் நாராயணமூர்த்தி ஜலத்தில் ஆலிலையின்மீது ஸயனித்தல்.

பதவியை அடைவானென்று சொன்னீரல்லவா? அது போல் மரணகாலத்தில் நான் கிருஷ்ணுவென்று சொல்லு கின்றேன்' என்று சொல்லினன். அதற்குப் பகவான் சொல்லுகின்றார். 'ஓஹோ! அதுவா உனது அபிப்பிராயம்! அப்படிக்கல்ல, நீ இப்பொழுது எந்த வஸ்துவின்மீது அதிக பிரீதியை வைத்திருக்கின்றாயோ அந்த வஸ்துவே, உனது பிராண பிரயாணகால சமீபத்தில் உன்னெதிரில் காணப்படும் சித்ரகுப்த படத்தில் தோன்றுமேயொழிய, என் நாமஸ்மரணை உனக்கு உண்டாகமாட்டா. ஆதலால், நீ இன்றுமுதல் சதாகாலமும் என் நாமத்தை ஸ்மரித்துக் கொண்டு வருவாயாகில், அந்தியகாலத்தில் நீ பிரஜ்ஞை தப்பியிருந்தபோதிலும், அந்த சமயத்தில் நான் உன் னுள்ளே அந்தர்யாமியா யிருப்பதனால், என் நாமஸ்மரணை உன் ஞாபகத்திற்கு வரும்படிச் செய்வேன். ஆதலால், இதுமுதல் என்னை ஸதா ஸ்மரித்துக்கொண்டே வரக்கட வாய்' என்று சொல்லினர்.

ஆதலால், ரெயிலுக்குப் போகப்பட்டவன் பத்து நிமிஷங்களுக்கு முந்தியே ரெயிலிடம் போயிருக்கவேண் டும். ரெயில் வந்து நின்றபிறகு போய்ச் சேரப்பட்டவ னுக்கு ரெயில் அகப்படமாட்டா; அதுபோல், நமது பிராண பிரயாணகாலம் சமீபித்து ஸ்மரணை தப்பியிருக் கும்போது, நம்முடைய பந்து ஜனங்களெல்லோரும் செவியி னிடம் வந்து, அண்ணு! எனக்கென்ன சொல்லுகின்றாய்? மாமா! எனக்கென்ன சொல்லுகின்றாய்? அப்பா! எனக் கென்ன சொல்லுகின்றாய்? என்று சிலரும், மற்றும் சிலர், ராமா! வென்று சொல், கிருஷ்ணுவென்று சொல், நாராயணு வென்று சொல், கோவிந்தா வென்று சொல், என்று உரத்த சப்தத்துடன் கூப்பிட்டுச் சொல்வார்கள். அந்த சமயத் தில், ராமனுகிலும் கிருஷ்ணனுகிலும் நாராயணனுகிலும்

கோவிந்தனுகிலும் வந்து அவனுக்குச் சகாயம் செய்யப் போவதில்லே. இது விஷயங்களேக் குறித்து முந்தி வரப் போகும் மஹோபநிஷத்தில் விரிவாய்க் காணலாம்.

> "மநஸா பாவ்யமாநோஹி தேஹதாம் யாதி தேஹக:
> தேஹவாஸநயா முக்தோ தேஹதர்மைர் நலிப்யதே."

ஆதலால், இந்நூலில் சிவ ராஜயோகசமாதியில் சொல்லி யிருக்கும் 'ஸோஹம்' மந்திரத்தை இடைவிடாமல் இராப் பகலாய் இன்றுமுதல் அப்பியசித்து வந்தால், மரணகாலத் தில் தான் ஸ்மரணே தப்பியிருந்தபோதிலும், தன்னில் ஸாக்ஷி பூதமாயிருக்கும் பரப் பிரம்மத்தின் அம்சமாகிய ஆத்மா, கருணேயுடையதாய் ஐயோ இதுவரையில் "ஸோ ஹம்" மந்திரத்தை ஸ்மரித்துக்கொண்டுவந்தானே அவனே கைவிடலாகாதென்று எண்ணி, இவன் ஸ்மரித்துக்கொண் டிருந்த "ஸோஹம்" மந்திரம் ஞாபகத்திற்கு வரும்படிச் செய்கின்றது.

இவ்வித அப்பியாசம் செய்வதை விட்டுவிட்டு, பத்து சிநேகிதர்களுடன்கூடி, புட்பால் டேனிஸ் க்ரிகேட்டு பாட் மிண்டன் ஸ்பேட் சதுரங்கம் முதலாகிய ஆட்டங்களே ஆடிக்கொண்டும் சந்தோஷமாய்ச் சிரித்துக் கொண்டும், ந்யூஸ் பேபர்களே வாசித்துக்கொண்டும் விருதா கால க்ஷேபம் செய்துவரும் நாளில், மேற்சொல்லியவர்களில் எவராகிலும் ஒருவர் காயலாவா யிருக்கும்போது, ஐயோ! இன்னர் காயலாவா யிருக்கின்றூராமே பாவம் என்று மற்ற ஒன்பது பேர்களும் கலந்து பேசிக்கொள்ளுகின்றூர் கள். காயலாவாயிருக்கப்பட்டவன், மற்ற ஒன்பது பேரை யும் நினேயாமல் அவர்களே மறந்து பிரஞ்ஞை தப்பித் தன் பிரயாணகாலத்தி லிருப்பான். ஆதலால், மேற்சொல் லிய ஆட்டங்களி லிருந்தபோதிலும் மனதை, இந்திரியங்க ளின் வழியாய்ச் செலுத்தாமல் பரப் பிரம்ம சொரூபத்தில் செலுத்த வேண்டுமென்பதே இந்நூலின் கருத்து.

ஜாக்ரதை சொப்பன சுஷுப்தி துரியா வஸ்தைகள்.

சரு || "ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்தி துரீயமிதி சதுர்விதா வஸ்தா:, ஜ்ஞானேந்த்ரிய கர்மேந்த்ரியாந்த:கரண சதுஷ்டய ஸம்யுக்தம் ஜாக்ரத், அந்த:கரண சதுஷ்டய ஸம்யுக்த ஸ்வப்ந:, சித்தைககரண ஸுஷுப்தி:, கேவல ஜீவயுக்தமேவ துரீயமிதி."
[ஶாரீரகோபநிஷத்.]

1. சாக்கிரத்தில் சாக்கிரம், சாக்கிரத்தில் சொப்பனம், சாக்கிரத்தில் ஸுஷுப்தி, சாக்கிரத்தில் துரீயம்.

2. சொப்பனத்தில் சாக்கிரம், சொப்பனத்தில் சொப்பனம், சொப்பனத்தில் சுஷுப்தி, சொப்பனத்தில் துரீயம்.

3. சுஷுப்தியில் சாக்கிரம், சுஷுப்தியில் சொப்பனம், சுஷுப்தியில் சுஷுப்தி, சுஷுப்தியில் துரீயம்.

4. துரீயத்தில் சாக்கிரம், துரீயத்தில் சொப்பனம், துரீயத்தில் சுஷுப்தி, துரீயத்தில் துரீயம் என ஒவ்வொன்றிலும் நந்நான்கு (16) அவஸ்தைகளுண்டு.

1. சாக்கிரத்தில் சாக்கிரம்:—வார்த்தைகளைக் கேட்கும் போதாகிலும், அல்லது வேதாந்த சிரவணம் செய்யும் போதாகிலும் சிரத்தையுடன் கேட்டு மறவாமலிருப்பது.

2. சாக்கிரத்தில் சொப்பனம்:—வேதாந்தத்தைப் பராமரிக்கையாய்க் கேட்டு, அவ்விஷயத்தில் சிலவற்றை ஞாபகத்தில் வைத்தும், சிலவற்றை மறந்தும் இதரர்களுக்கு சரியாய்ச் சொல்லத் தெரியாமலிருப்பது.

3. சாக்கிரத்தில் சுஷுப்தி:—வேதாந்தத்தைக் கேட்கவேண்டுமென்று உட்கார்ந்து, மனதை அவ்விஷயங்களில் நிறுத்தாமல் வேறு எண்ணங்களை எண்ணிக்கொண்

டிருப்பதனல், கேட்டவைகளை இதரர்களுக்குச் சொல்ல ஞப்தியே இல்லாமற்போவது.

4. சாக்கிரத்தில் துரீயம்:—தத்துவ ஞானங்களை விசாரணை செய்து, ஏகாந்த ஸ்தலத்தி லுட்கார்ந்து தான் கேட்ட விஷயங்களை யெல்லாம் ஆலோசித்துக் கொண் டிருத்தல்.

5. சொப்பனத்தில் சாக்கிரம்:—சொப்பனம் கண்டு எழுந்த பிறகு, தான் சொப்பனத்திற்கண்ட விஷயங்கள் யாவற்றையும் மறவாமற் சொல்லுதல்.

6. சொப்பனத்தில் சொப்பனம்:—சொப்பனத்தில் கண்ட விஷயங்களில், சிலது ஞாபகத்திலிருந்தும் சிலது இல்லாமலு மிருப்பது.

7. சொப்பனத்தில் சுஷுப்தி:—சொப்பனங்கண்டு எழுந்திருந்து அந்த சொப்பனத்தில் தான் கண்ட விஷயங்கள் பூர்த்தியாய் ஞாபகத்திற்கு வராமலிருப்பது.

8. சொப்பனத்தில் துரீயம்:—தான் சொப்பனத்திற் கண்ட நன்மை தின்மைகளை விசாரித்து சந்தோஷப்படாமலும், துக்கப்படாமலும், இவைகளெல்லாம் மனோ வியாபாரமென நிச்சயித்துக்கொண்டு ஆத்மஞானத்தை விசாரித்திருப்பது.

9. சுஷுப்தியில் சாக்கிரம்:—நித்திரைவிட்டெழுந்து அந்நித்திரையின் சுகம் இவ்வண்ணமென இதரர்களுக்குச் சொல்லுதல்.

10. சுஷுப்தியில் சொப்பனம்:—நித்திரை விட் டெழுந்து நித்திரையின் சுகம் இவ்வகைத்தெனத் தோன்றியும் தோன்றும லிருத்தல்

11. சுஷுப்தியில் சுஷுப்தி:—நித்திரை விட்டெழுந்து, நித்திரையில் தான் கண்டது கிஞ்சித்தேனும் தோன்றும லிருத்தல்.

12. சுஷுப்தியில் துரீயம்:—நித்திரித்து எழுந்(...) இந்த நித்திராவஸ்தை அஜ்ஞானவிஷயம், இதற்கு சா(...) யான ஆத்மாவே சத்தியம் எனத் தெரிந்துகொள்ளல்.

13. துரீயத்தில் சாக்கிரம்:—நிஷ்டையி லிருக்கு(ம்) போது சாக்கிர வியாபாரங்களாகிய பிரபஞ்ச விருத்தி உண்டாவது.

14. துரீயத்தில் சொப்பனம்:—நிஷ்டையி லிருக்கும்போது சாக்கிர வியாபாரங்களான பிரபஞ்ச விருத்தி தோன்றியும் தோன்றாம லிருத்தல்.

15. துரீயத்தில் சுஷுப்தி நிஷ்டையில் எவ்வித சங்கல்பங்களு மில்லாம லிருத்தல்.

16. துரீயத்தில் துரீயம்:—மேற் சொல்லிய 15-அவஸ்தைகள் இல்லாமல் அகண்ட பரிபூரணமான பரப்பிரம்மமே தான் என்றும், தன்னைத்தவிர வேறொரு வஸ்து வில்லையென்றும் தெரிந்துகொண்டு தானாகவேயிருத்தல். இப்பதினாறுவது பாகமே எல்லாவற்றிற்கும் சிரேஷ்டமான ஸ்திதியெனத் தெளிவாய்த் தெரிந்துகொண்டால் சர்வம் பிரம்ம சொரூபமே என்று அறிவார்கள்.

ஜகத்சிருஷ்டி மனோ சிருஷ்டி லயம்.

சுரு||"ஸதேவ ஸௌம்ய இதமக்ர ஆஸீத்.

[சாந்தோக்யோபநிஷத்.]

"தஸ்மிந் மரு ஶுக்திகா ஸ்தாணு ஸ்படிகாதௌ
ஜல ரௌப்ய புருஷ ரேகாதிவத் லோஹித
ஶுக்ல க்ருஷ்ணமயீ குணஸாம்யா
அநிர்வாச்யா மூல ப்ரக்ருதி ராஸீத்." [பயிங்கலோபநிஷத்.]

"ஸத்வோத்ரிக்தா வ்யக்தாவரண ஸக்திராஸீத்
தத் ப்ரதிபிம்பம் யத் ததீஶ்வர சைதந்யமாஸீத்

ஸஸ்வாதீந மாயா ஸர்வக்ஞ: சிருஷ்டி
ஸ்திதி லயாநா மாதிகர்தா ஜகதங்குர ரூபோபவதி.''
[பயிங்கலோபநிஷத்.]

ப்ரஹ்மணோ ரவ்யக்த: அவ்யக்தாந் மஹத் மஹதோ அஹங்கார:
அஹங்காராத் பஞ்சதந்மாத்ராணி பஞ்சதந்மாத்ரேப்யோ
பஞ்சமஹாபூதாநி பஞ்சமஹாபூதேப்யோகிலம் ஜகத்.''
[த்ரிசிகி பிராஹ்மணோபநிஷத்.]

இத்தியாதி சுருதிப்பிரமாணங்களின் ரீதியாய், சிருஷ்டிக்குப் பூர்வம் இந்த பிரபஞ்சம், நாமரூபங்களும் எந்த விகாரங்களும் இல்லாததாய் நிர்விசேஷ சிந்மாத்தர பரப் பிரம்மமா யிருந்தது. இந்த பரப் பிரம்மமே அகண்ட ஜோதியாகிய ஓர் தீபம். அதில் பிரதிபலித்த பிரதி பிம்பமே மாயாசக்தி. ஒரு மாயாசக்தி எப்பொழுது உண்டாயிற்றோ அப்பொழுதே அநேகம் தோன்றும். மித்யா சொரூப மாகிய மாயையில் பிரதிபலித்த பிரம்மத்திற்கு ஈசுவர னென்று பெயர். அந்த ஈசுவரனுக்கு சித்திர விசித்திரங்க ளாகிய அநேக ரூபங்கள் உண்டாயின.

சலனமாகிய மூல பிரகிருதியினுல் உண்டாகிய சப்த தன்மாத்ரையாகிய ஆகாசத்தில் பிரதிபலித்த பிரம்மத் திற்கு சதாசிவனென்றும், சப்த குணமாகிய ஆகாசத்தி னுல் உண்டான, சப்த பரிச தன்மாத்ரையாகிய வாயுவில் பிரதிபலித்த பிரம்மத்திற்கு மகேசுவரனென்றும், பரிச குணமாகிய வாயுவினுல் உண்டான, சப்த பரிச ரூப தன் மாத்ரையாகிய தேயுவில் பிரதிபலித்த பிரம்மத்திற்கு ருத்திரனென்றும், ரூபகுணமாகிய தேயுவினுல் உண்டான, சப்த பரிச ரூப ரச தன்மாத்ரையாகிய ஜலத்தில் பிரதி பலித்த பிரம்மத்திற்கு விஷ்ணுவென்றும், ரச குணமாகிய ஜலத்தினுல் உண்டாகிய, சப்த பரிச ரூப ரச கந்த தன்மாத் ரையாகிய பிருதிவில் பிரதிபலித்த பிரம்மத்திற்கு பிரம

தேவ னென்றும் பெயர்கள் உண்டாயின. இதற்கு சிவப் பிரகாசம் பிரமாணம்;

"உன்னலரும் பரசிவன்ற னருளாலே நாத
முதிக்கு மிருங் குடிலைதனில் விந்துவரு நாதந்
தன்னிலதி னெளிவளருஞ் சதாசிவரா மவரிற்
றயங்கவரு மீசர்வித்தை தனையளிப்ப ரதனுன்
மன்னுவரிவ் வகையைவர்."

பிரபஞ்சோத்பத்திற்குக் காரணபூதமாகிய மாயை பரப் பிரம்மத்தில் ஓர் அணுமாத்திரமென்று சொல்லப்படும். மாயையென்னும் பிரதிபிம்பத்தில் ஆகாசமும், ஆகாசத்தில் வாயுவும், வாயுவில் தேயுவும், தேயுவில் ஜலமும் ஜலத்தில் பிருதிவியும் ஐக்கியமாயிருக்கின்றன. நிராகாரமாகிய பரப் பிரம்மத்தில் தோன்றிய மாயை, பஞ்ச பூதங்களிருந்து ஒன்றாய்ச் சேர்ப்பிக்கப்படும். இப்படி ஒன்றாய்ச் சேர்க்கப் பட்டவைகளெல்லாம், ஈசுவரனால் அநேக கோடி பிரம்மாண்டங்களான அநேக விசித்திர ரூபங்களுடன் காணப்படுகின்றன. வைரக் கற்களில் நானுவித ரூபங்கள் இல்லாவிடினும் பிரமையினல் பஞ்சவர்ணங்கள் தோன்றுவதுபோல், பஞ்ச பூதங்களினுல் பிரதிபலித்த் பரப் பிரமம், பஞ்சபூத சம்பந்த குணங்களை அனுசரித்து சதாசிவனென்றும், மகேசுவரனென்றும், ருத்திரனென்றும், விஷ்ணுவென்றும், பிரமதேவ னென்றும் சொல்லப் பட்டிருக்கின்றது.

இதில், பிரமதேவன், சப்த பரிச ரூப ரச கந்தமென்னும் ஐந்து குணங்களையுடைய பிருதிவியினுல் தாவர ஜங்கம ரூபங்களாகிய பிரபஞ்சமெல்லாம் சிருஷ்டித்தனர். விஷ்ணு, சப்த பரிச ரூப ரசமென்னும் நான்கு குணங்களையுடைய ஜலத்தினுல் சகல பிரபஞ்சங்களையும் ரக்ஷிக்கின்றனர். உருத்திரன், சப்த பரிச ரூபமென்னும் மூன்று

குணங்களையுடைய தேயுவினால் சகல பிரபஞ்சங்களையும் சங்கரிக்கின்றனர். மஹேசுவரன், சப்த ஸ்பரிச மென்னும் இரண்டு குணங்களையுடைய வாயுவினால் மாயா சம்பந்த மாகிய ஜீவகோடிகளுக்கெல்லாம் பிரமையை உண்டாக்கு கின்றனர். சதாசிவன் சப்தமென்னும் ஓர் குணமுடைய ஆகாசத்தினால் ஜீவ வர்க்கங்களுக்கு அறிவை உண்டாக்கு கின்றனர். மாயை என்பது பஞ்சபூத, விகாரமான தேகேந்திரியாதிப் பிரபஞ்சத்தில் 'நான்' 'என' தென்னும் துரபிமானத்தை உண்டாக்கும். சாக்கிரத்தில் பிரமதேவர், ஜீவனுக்கு பலவித சுக துக்கங்களை யுண்டாக்குகின்றனர். சொப்பனத்தில் விஷ்ணு, ஜீவனுக்கு அநேக விநோதங்களைக் ...ணும்படிச் செய்கின்றனர். சுஷுப்தியில் ருத்திரன், ...வ சூன்னியத்தை உண்டாக்கி ஜீவனை பிரத்தியேகப் படுத்துகின்றனர். துரீயத்தில் மஹேசுவரன், ஜீவனுக்கு பிரமையை உண்டாக்கு கின்றனர். துரியாதீதத்தில் சதா சிவன், ஜீவனுக்கு ஆனந்தத்தை உண்டாக்கு கின்றனர். சுத்தசூன்யமாகிய மாயை, சுகத்தை மறையும்படிச் செய்து பிரமையை உண்டாக்கும். சுயம் பிரகாசமாகிய பிரம்மம் ...சிதாநந்த மயமா யிருக்கின்றது. இதற்குக் கைவல்யம் ...மாணம்,

சென்மாந்தரஞ் செய்த வினைகளுட
    னருமெனிற் செல்காலமிவ னுண்டலோ
கன்மானுபவ நரக சொர்க்கமெனில்
    வருகின்ற காலத்துமிவ னுண்டலோ
உன்மாத யாதனுவுடல் கடவுளுடன்
    மனுபவுடன் மாறிமாறி யழியும்
தன்மாய வுடல் கெடினு மிவ
    னிருப்பதுகொண்டு சத்தென்ப தொக்குமக...

இருளாக மூடுஞ்சுழுத்தியி லிராத்திரியி
　　லிரவிசுட ரற்ற பொழுது
மருளாம் லிருளையும் பொருளையுந்
　　தெரிகின்ற வகைகொண்டு சித்தாமே
பெருவாழ்வு மிக்கதானே தன்னிடத்
　　தினிற் பேராத பிரியமதனல்
அருகாத பிரியஞ் சுகத்தில்வரு
　　மாதலா லானந்தமா மைந்தனே.

அப்படிப்பட்ட சச்சிதானந்த பரப் பிரம்மம், மாயாந்த காரத்தில் அகப்பட்டு வழிகாணமல் காமக்குரோதாதி பத்து குணங்களினலும், தாரேஷணை, புத்திரேஷணை, தனேஷணை என்னும் ஈஷணைத் திரயங்களினலும் பந்தப் பட்டு, தான் ஜீவனென்பதைத் தெரிந்து கொள்ளாமல் துக்கங்களை யெல்லாம் சுகமென்றெண்ணி அபரிமிதமான ஆசையில் மூழ்கி அநேக கோடி ஜன்மங்களெடுத்து, சம்சார மென்னும் மஹா சமுத்திரத்தைக் கடந்துபோக சக்தியற்ற தாய், துக்கத்தை அநுபவித்துக் கொண்டிருக்கும்; அன்றி யும், பஞ்ச தன்மாத்திரைகளினலும், பஞ்ச பூதங்களினலும் உண்டான சராசர பிரபஞ்சம், சர்வம் மாயா சம்பந்த மாகிய லீலையே யொழிய வேறன்று. தேகாதிப் பிரபஞ்ச மெல்லாம் பஞ்சபூதாம்ச மானபடியால், அவைகளை யெல் லாம் வேறுபடுத்திப் பார்க்குமளவில் அஜ்ஞானத்தினல் தேஹேந்திரியாதிகளெல்லாம் 'நான்' 'எனது' என்னும் துரபி மானத்துடன் அஹங்கரித்த பிரமையே ஜீவனென்று விசித மாய்த் தெரியவரும். சர்வஸாக்ஷியாகிய ஆத்மாவே பிரம்ம மென்று சொல்லப்படும்.

இந்தக் கூடஸ்த பிரம்மமே, சுயம் பிரகாசமாய்ப் பிர ...த்துக்கொண்டு அவஸ்தாத் திரயங்களில் காணப்படும். ...கங்களில் பகுவித பேதங்களை அடைந்தபோதி... அபேதமாயும், அவை நசிக்கத் தக்கதாயும்

அசத்தாயும் இருந்தபோதிலும் தான் சாஸ்வதமாகிய சத்தாயும், அவை அஜ்ஞான மயமாயிருந்தாலும் தான் ஞான மயமாயும், அவை துக்க சொரூபமா யிருந்தாலும் தான் சுக சொரூபமாயும், நிர்மலமாயும், நிர்விகாரமாயும், நிர்தோஷமாயும், நிர்விசேஷமாயும், சுயம் பிரகாசமாயும் சிதாகாசமாயுமிருக்கும்.

மாயைக்கு உட்பட்டவர்களுக்கு பிரம்மஞானம் உண்டாகாததனால், அஹங்காரம் விருத்தியாய்த் தீராத துக்கம் சம்பிராப்திக்கும். பிரம்மஞானம் அடைந்தவர்களுக்கு அநேக சித்திகள் தனக்குத் தானுய் லபிப்பதேயன்றி அகண்டானந்தம் உதித்துக் கைவல்பமும் சித்திக்கும். அதாவது ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 12, சு. 13-14.

அத்வேஷ்டா ஸர்வபூதாநாம் மைத்ரஃ கருண ஏவ ச
நிர்மமோ நிரஹங்கார ஸ்ஸமதுஃக ஸுகஃ க்ஷமீ

ஸந்துஷ்டஸ் ஸததம் யோகீ யதாத்மா த்ருடநிஶ்சயஃ
மய்யர்பித மநோபுத்திர்யோ மத்பக்தஸ்ஸ மே ப்ரியஃ.

சமஸ்த ஜீவர்களுக்கும் துவேஷம் செய்யாதவனுயும், எல்லோரிடத்திலும் சிநேக முடையவனுயும், கருணையுள்ளவனுயும் மமதை இல்லாதவனுயும், அஹங்கார மற்றவனுயும் சுக துக்கங்களைச் சமமாய்ப் பார்ப்பவனுயும், பொறுமையுள்ளவனுயும்,எப்பொழுதும்நிறைந்தசந்தோஷமுடையவனுயும், மனே புத்திகளை என்னிடம் சேர்பித்து ஆத்ம தத்துவத்தில் உறுதி- யுடையவனுயும் இருக்கும் ஞானியாகிய எனது பக்தன் எவனே, அவனே எனக்குப் பிரியமானவன் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்த ஞானமடைவதற்காக முதல் பிரயத்நம் யாதெனில், பிரம்மாம்சத்தினல் தோன்றும் விக்கிரகங்களில் எதையாகிலும் ஒன்றை பக்தி சிரத்தையுடன் பூஜிக்க வேண்டும். அப்படிப் பூஜிப்பது பரப் பிரம்மத்தைப் பூஜிப்

பதேயொழிய வேறன்று. பரம பக்தர்கள் தமக்கிஷ்ட மான தேவதையை ஆஸ்ரயித்துத் ததேகத்தியான சித்தர் களாய் எப்பொழுதும் பூஜித்து. நித்யானந்தத்தை அநுப வித்துக் கொண்டிருந்து கடைசியில் பிரம்மா நந்தத்தைத் தடையன்றி அடைவார்கள். இதற்கு சுவானுபவமாலை. தணிகைப்புராணம் பிரமாணம்,

துயவுபாசனைக ளோரிரண்டாச் சொல்லுவர்க
ளாயவவற்றின் பேரறையக்கே ணைய
மிகுஞ்சகுண நிர்க்குணமாம் விள்ளிவற்றுண்மேலாந்
தகு நிர்க் குணோபாசனை.

ஆதலா லானினறு மவ்வாறு
மருளிய பொருள்களுந் தழுவிச்
சோதி நிட்களமாய் நின்றிடி
னுயிரின் றுரி யருதெனக் கருணையினன்
மாதர்சேர் சகளவடிவு கொண்
டிருந்தவரதனை வழிபடப் பெற்றோர்
கோதுறு வினைகண் முழுவதுந்
துமித்துக் குறுகுவர் சிவபுரத்தவன்பால்.

சகுணோபாஸனமாய் ஆராதிப்பதைவிட்டு நிர்க்குணோ பாஸனமாய் ஆராதிப்பது மிகவும் கஷ்டம். எப்படி யெனில், கண்களுக்குக் காணப்படும் சொரூபத்திலேயே சரியாய் நிற்காத மனம், அரூபத்தில் (வெட்டவெளியில்) எள்ளளவேனும் நிற்கமாட்டா. ஆதலால், முதலில் மனம் நிற்பதற்குச் சகுணோபாஸனை (விக்கிரக ஆராதனை)யைவிட சுலபோபாயம் வேறொன்றில்லை. இதற்குத் திருஷ்டாந்தம் ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம் 3-சுலோகம் 29.

ப்ரக்ருதேர்குண ஸம்மூடாஸ் ஸஜ்ஜந்தே குணகர்மஸு
தாநக்ருத்ஸ்ந விதோமந்தாந் க்ருத்ஸ்நவிந்ந விசாலயேத்.

மாயையினுடைய முக்குணங்களினால் மோகத்தை அடைந்தவர்கள், இந்திரியங்களினுடைய வியாபாரங்களில்

அபிமானம் வைக்கின்றார்கள். ஆதலால் ஞானியானவன், ஆத்மாநாத்ம ஞானமில்லாத பாமரர்களுக்குக் கர்மத்தை விட்டு ஞானமார்க்கத்தில் நடக்கும்படி போதிக்கலாகாது. அப்படிப் போதித்தால், அவர்களுக்கு ஞானமார்க்கம் சித்திக்கவேமாட்டா. இந்த ஞானியானவன் கர்மத்தினுல் பிரயோஜன மில்லையென்று சொல்வானுகில், மோகத்தை யடைந்தவர்கள் அதை ஆதாரமாகக்கொண்டு கர்மத்தை விட்டுவிடுவார்கள். முதல் கர்மத்தை அனுஷ்டிக்காவிட்டால், அவர்கள் ஞானசித்திக்கு யோக்கியதை இல்லாதவர்களாய் இரண்டிலும் கெட்டவர்களாகின்றார்கள். ஆதலால், கர்மமானது ஆத்ம தரிசனத்திற்கு ஸாதனமானதென்று ஞானியானவன் சொல்லி தான் கர்மத்தைச்செய்தும், அவர்களால் கர்மத்தைச் செய்வித்தும் காட்டவேண்டும். இந்த கீதையை அனுசரித்தே, சகுணேபாசனையை இதில் திருடமாய் எழுதப் பட்டிருக்கின்றது. இதற்கு முக்யமான திருஷ்டாந்தம் ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரத்தில் இன்னும் விசேஷமாய் எழுதப் பட்டிருக்கின்றது.

"புங்காநு புங்கவிஷயே க்ஷணதத்வரூபிணும்" என்னும் சுருதிரீதியாய் மனிதர்களுக்கு க்ஷணத்திற்குள் அநேக எண்ணங்கள் உண்டாகின்றன. அப்படிப்பட்ட அநேக எண்ணங்களையுடைய மனதை சும்மா இரு என்றால் இராது. அப்படிச் சும்மா இருப்பதே வெட்ட வெளி. அந்த வெட்ட வெளி, மனதிற்குப் பிடிபடமாட்டா. ஆதலால், அநேக எண்ணங்களையுடைய மனதை முதல் ஓர் எண்ணமாகச் செய்யவெண்டும். அப்படிச் செய்வதற்காக இப்புத்தகத்தில் காட்டப்பட்டிருக்கும் விக்கிரகங்களைப்போன்ற, மற்ற எந்த ஆலயத்தில் எவரெவர்களுக்கு எந்தெந்த விக்கிரகத்தின்மீது அதிக பிரீதியோ அந்தப் பகவானை * உபாசனு மூர்த்தியாகத் தனது இருதயத்தில் நிறுத்தி அந்தர் (உள்)

* உபாசனுமூர்த்தி=வழிகாட்டுங் கடவுள்.

முகமாய், மனக்கண்ணாலேயே தரிசித்துக்கொண்டு "தைல தார மிவாச்சிந்நம் தீர்க்ககண்டா நிநாதவத் உபாஸ்யம் ப்ரண வஸ்யாக்ரம் யஸ்தம் வேத ஸ வேதவித்" என்னும் த்யாநபிந் துபநிஷத் வாக்கிய ரீதியாய், அவிச்சிந்நமாகிய தைல தாரை ரீதியாயும், கண்டாநாத ரீதியாயும் இடைவிடாமல் அல்லும் பகலும் அணுவளவேனும் சோர்வை அடையா மல் பிரணவத்துடன் சதாகாலமும் ஸ்மரித்துக்கொண்டு வந்தால், அவ்வப்பியாஸ முதிர்ச்சியினால் அநேக எண்ணங் களையுடைய மனம் ஓர் எண்ணத்தில் நிற்கும். இப்படி நிற்பதே சகுணோபாசனமென்று சொல்லப்படும். (இதன் விவரங்களை ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 3, சுலோகம் 31-32-ல், விரி வாய்க் காணலாம்) இவ்வாறு நின்றபிறகு அந்த ஓர்எண்ண மும் சூன்னியமாய் ஒன்றுமில்லாமல், ஆகாச வடிவ மாய் நின்றுவிடுவதே, நிர்க்குணோபாசனமென்று சொல்லப் படும். என்றால், மனம் எவ்விடத்தில் உதித்ததோ அவ் விடத்திலேயே லயித்தபோது சேஷமாய் நின்றது ஆகாச வடிவமேயாகும். பெரியோர்கள், முக்கியமாய் முதலில் சகுணோபாசனத்தினால் சித்த சுத்தியடைந்த பிறகு, நிர்க் குணோபாசனத்திற்குப் பிரயத்தினப்பட்ட சத் புருஷர்க ளின் மர்மங்களைக் காணமல் பிரமித்து, மனம் பரிபக்குவ மாகாத மந்தபுத்தி யுடையவர்களிற் சிலர் அவர்களைப் போல் தாமும் இருக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு, நிர்க்குணோ பாசனத்தை ஆரம்பிப்பார்கள். இது, எப்படி யிருக்கின்றதென்றால், புலியைப்பார்த்துப் பூனை சூடுபோட் டுக் கொண்டதுபோல், சகுணோ பாசனத்தைவிட்டு நிர்க்கு ணோபாசனத்தை அப்பியசித்து, சித்த சுத்தியில்லாததனல் இரண்டுமற்று பிரஷ்டனாய் துக்கத்தை அனுபவிக்கவேண் டியதாய் நேரிடும். இந்திரியங்களை ஜயித்து மனதையடக்கி

காமக்குரோதாதி பத்து குணங்களை விட்டவன் எப்படிப் பட்டவனு யிருந்தபோதிலும், நிர்க்குணேபாசனத்தைச் செய்யத் தகுமேயொழிய, இதரர்கள் செய்யத்தகாது. விக்கிரக ஆராதனை செய்பவர்களும் பரப் பிரமத்தை திரிகரண சுத்தியுடன் பூசிப்பவர்களுமே பரம பக்தர்க ளெனவும், பரம பாகவதர்க ளெனவும் சொல்லப்படுவார்கள்.

முதல் பக்தி மார்க்கங்களை அவலம்பித்துச் சித்த சுத்தி யுண்டானபிறகு, யோகசாதனத்தை அனுஷ்டித்து, எப்பொழுதும் சர்ப்பம்போல் வாயு பக்ஷணை செய்து கொண்டு, தேகத்திற்கு அபாயம் உண்டாகாவண்ணம் மிகவும் ஜாக்கிரதையுடன் அந்த வாயுவை, நாளாவட்டத்தில் கும்பித்து (நிறுத்தி) விருத்தி செய்துகொண்டு, அணிமாதி சித்திகளை சுவாதீனப் படுத்திக்கொண்டு சுவேச்சையாய் சஞ்சரித்து சந்தோஷிப்பவர்களே ஸித்தர்க ளெனப்படுவார்கள். பகவத்பக்தி, யோகாப்பியாசம், சத்புருஷர்களிடம் சாங்கத்தியம்செய்து, இந்திரியங்களை அடக்கி, மனதை நிறுத்தி, தேகாபிமானத்தை விட்டு, பரதத்துவங்களை விசாரித்துத் தன்னைத்தானறிந்து பிரம்மானு சந்தானத்தினுல் பகிர் (வெளி) வியாபாரங்களெல்லாம் அறவே மறந்து பிரம்மத்தில் ஏகிபவித்து பிரம்மானந்த ரசத்தைப் பானம் செய்யவேண்டும். அப்படிப்பட்டவர்களே முக்தர்களெனப் படுவார்கள்.

சர்வ பிராணிகளுக்கும், போதுமான ஆஹாரம் சம்போகம் நித்திரை முதலான வியவகாரங்களில் அகப்பட்டுப் புருஷார்த்த சிந்தையில்லாமல், கேவலம் பசுக்களைப்போல் யிருக்கும் மூடர்களைவிட விக்கிரக ஆராதனை செய்யப் பட்டவர்களே உத்தமர்கள். அவர்களைவிட, பிரம்மத்தை தியானிப்பவர்களே உத்தமர்கள். அவர்களைவிட, தன்னிடத்திலிருக்கும் பிரம்மத்தை தரிசிப்பவர்களே உத்தமர்

கள். அவர்களை விட, சச்சிதானந்த சம்பத்தால் சகலமும் மறந்து சாக்ஷாத்காரத்தை அடைந்தவர்களே உத்தமர்கள். அவர்களை விட,

"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி மாசறு காட்சியவர்க்கு."

என்பதுபோல் துரீய திருஷ்டியிலிருந்து சர்வ அவஸ்தைகளிலும் பால உன்மத்த பிசாசர்களைப்போல் ஸஞ்சரித்துக் கொண்டு, பிரம்மானந்த சம்பத்துடன் பிரகாசித்துக் கொண்டிருக்கும் மஹான்களைக் கண்டு பிடித்து பரம பிரீதியுடன் அவர்களுக்கு அன்னபானாதிகளைக் கொடுத்து ஆதரிப்பவர்களே உத்தமர்கள். இப்பேர்ப்பட்ட உயர்ந்த பதார்த்தத்தைக் கோராமல் (விரும்பாமல்) அற்ப சுகங்களுக்கு ஆசைப்பட்டு அநேக துரவஸ்தைப்பட்டு கர்மமென்னும் பெருத்த மூட்டையைச் சிரசின்மேல் வைத்துக் கொண்டு சுமக்க சக்தியில்லாமல் முக்கிக்கொண்டிருந்தும், மறுபடியும் சகல பதார்த்தங்களிலும் இச்சை வைத்து பிரதி ஜன்மங்கள்தோறும் இந்நூலில் சொல்லியிருக்கும் 'ஸஞ்சிதம்' என்னும் மூட்டையை அதிகப் படுத்திக்கொண்டிருக்கும் நர பசுக்களைப் பலி கொள்வதற்காகக் காலன் (யமன்)வந்தபோது என்ன செய்வார்களோ யாரை நிந்திப்பார்களோ (தூஷிப்பார்களோ) தெரியவரமாட்டா. இதற்குப் பட்டணத்தடிகள் பிரமாணம்:

ஆடுங் குறங்குந் திரிகையும் போ லலைந் தலைந்து
காடுங் காரையுந் திரிவ தல்லால் நின்சருணை வந்து
கூடும் படிக்குத் தவ முயலாத கொடிய ரெமன்
நேடும் பொழு தென்ன செய்வார் பரானந்த சிற்சுடரே.

தினமே செலச்செல வாழ்நாளு நீங்கச் செகத்திருள் சொப்பனமே யென வழிகண்டே யிருக்கவும் பாச பந்த
வினமே துணையென் றிருந்தோம் நமன் வரிலென்செய்வோம்
மனமே நம்போல வுண்டோ சுத்தமூட ரிவ் வையகத்தே.

எத்தனை தினங்களிருந்தபோதிலும் ஒரு தினத்தில் இச்சரீரத்தை விட்டு ஓடிப்போகப் போகின்றோமென்று தெரிந்துகொண்டு சாஸ்வத ஜீவனத்திற்குப் பிரயத்தினப் படாமல் காலமெல்லாம் திரவ்வியம் சம்பாதித்து துர் விஷயங்களில் பிரவர்த்திப்பதனால், பெருத்த நஷ்டமேயொழிய லாபமொன்றுமில்லை. பகவத் பக்தியும் ஜீவன் முக்தியும் அடையாத ஜன்ம மிருப்பதனால் யாதொரு லாபமுமில்லை. மந்தபுத்தி யுடையவர்களுக்கு எத்தனை விதங்களாய்ப் போதித்த போதிலும்.

"கற்பூரப் பாத்திகட்டிக் கஸ்தூரி
யெருப்போட்டுக் கமழ்நீர் பாய்ச்சிப்
பொற்பூர வுள்ளியினை விதைத்தாலு
மதன் குணத்தைப் பொருந்தக்காட்டும்.
சொற்பேதை யருக்கறிவிங் கினிதாக
வருமெனவே சொல்லினாலு
நற்போதம் வாராதாங்கவர்
குணமேமேலாக நடக்குந்தானே." [விவேகசிந்தாமணி]

என்பதுபோல், அவர்களின் பிறவிக்குணம் மாறாம லிருப்பதனால், செவிடன் காதில் சங்கை ஊதியதைப்போல் நிஷ் பிரயோஜனமாகும். அஞ்ஞான மென்னும் இருளடைந்த பாழுங் கிணற்றில் மூழ்கி யிருக்கப்பட்டவர்களின் மனம், எப்பொழுதும் வெளி கிளம்பவே மாட்டா.

சஜாதிய, விஜாதிய, சுவகதபேதங்க ளில்லாமல் சச்சிதாநந்தமயமாய், அகண்டமாய், அப்ரமேயமாய், நிராகாரமாய், சர்வாதாரமாய், பரிபூரணமாய், பரமார்த்தமாய், நிஷ்பிரபஞ்சமாய், நிர்விசேஷமாய், சர்வபாவமாய், சர்வதோமுகமாய், சின்மயமாய், சித்விலாஸமாய் விளங்குவது கூடஸ்த பிரம்மம். அந்த பிரம்மத்தை அடைந்தவர்களுக்கே, ஜநந மரணங்களினால் உண்டாகும் துக்க பரம்

பரா நிவர்த்தியும் சர்வ கர்மங்களும் நிர்மூலமாய், மோக்ஷ சாம்ராஜ்ய பதவி உண்டாகும். பரமோத்கிருஷ்டமான (சிரேஷ்டமான) இப்படிப்பட்ட பிரம்மஞானம் உண்டாவதற்குமுதல்சாதனம், தனக்கு இஷ்டதேவதையை ஆராதிப்பதற்காக சற்குருவை அடையவேண்டும். இவ்விரண்டும் இல்லாவிடில் சாம்பலில்விட்ட நெய்யைப்போல் விருதாவாகும்.

"ப்ரஹ்மாத்யம் ஸ்தாவராந்தம் பஶ்யந்தி ஜ்ஞாந சக்ஷுஷா
ப்ரம்மைகமேவ பஶ்யந்தி பரிஸுஸ்தம் விபும் த்விஜா:
யஸ்மிந் பாவா: ப்ரலீயந்தே லீநாஸ்சா வ்யக்ததாம் யயு:
பஶ்யந்தி வ்யக்ததாம் பூயோ ஜாயந்தே புத்புதா இவ."

[ஸுபாலோபநிஷத்.]

சகல நதிகளும் சமுத்திரத்தில் கலந்து பேதமில்லாமல் ஏகமாவதுபோல், பிரமாதி தாவர பரியந்தம் சகல சராசர ஜகத்து, எந்த பரப்பிரம்மத்தில் உண்டாயிற்றோ அந்த பரப்பிரம்மத்திலேயே பிரளயத்தில் லயித்துவிடும். சமுத்திரத்தில் அலைகள் நுரைகள் திவலைகள் உண்டாவதுபோல், மறுபடியும் அந்த பரப் பிரம்மத்திலிருந்தே சகல சராசர ஜகத்துகளும் உண்டாகிக் கொண்டிருக்கும் ஆதலால், சமுத்திரஜலமே அலைகள் நுரைகள் திவலைகளாய்த் தோன்றுவதுபோல் பரப் பிரம்மம் ஒன்றே நானாவித நாமரூபங்களுடன் சகல சராசர ஜகத்தாய்த் தோன்றுகின்றதே யொழிய பிரம்மத்தைவிட பிரபஞ்சம் வேறானதல்ல. ஞானிகள் சகல பிரபஞ்சங்களையும் பரப் பிரம்மமாய் பாவிப்பார்கள். ஆனால், சமுத்திரஜலமே அலைகள் நுரைகள் திவலைகளாய் எத்தனைவிசை நானா ரூபங்களாய்ச் சமுத்திரத்தில் தோன்றி மறுபடியும் ரூபமில்லாமல் சமுத்திரத்தில் லயித்தபோதிலும், சமுத்திரஜலம் மாத்திரம் எவ்வித விகாரங்களுமில்லாமல் ஒரேவிதமாய் இருப்பதுபோல், பிரமாதி சகல பிரபஞ்சமும் நாமரூபங்களுடன் தோன்றி மறுபடியும் பிரள

யத்தில் நாமரூபங்களில்லாமல் லயித்தபோதிலும் பிரம்மம் மாத்திரம் எவ்வித விகாரங்களுமில்லாமல் ஒரே விதமாய் இருக்கும்.

ஸங்கல்பத்தால் உண்டான சரீர விருக்ஷத்தில் ஜீவாத்மா பரமாத்மா நிவசிப்பது.

"ஸஹஸ்ராங்குர ஶாகாத்ம பலபல்லவ ஶாலிநஃ
அஸ்ய ஸம்ஸார வ்ருக்ஷஸ்ய மநோமூல மிதம் ஸ்திதம்"

[முக்திகோபநிஷத்.]

வித்தெனப்படு முதலொன்றின்மென்கிளை
கொத்திணரலர்முறி குழைந்தபாசடை
வைத்தகாய்பல மிவைதிரிந்தவாறுபோல்
முத்தனிற்பிரிந்த திப்பொருள்கள்முற்றுமே.

மனமே, சம்சாரமென்னும் விருக்ஷத்திற்கு மூலகாரணமாயிருக்கின்றது. இந்த சம்சாரமென்னும் விருக்ஷத்திற்கு, ராகத் துவேஷாதிகளே மூளைகளாகவும், சுவர்க்கமே மேல் கிளைகளாகவும், சுக துக்கங்களே கீழ் கிளைகளாகவும், தாரேஷணை (மனைவியாதிகளின்மேல்) ஆசை, புத்ரேஷணை (புத்திரர்களின்மேல்) ஆசை, தனேஷணை (திரவ்வியத்தின்மேல்) ஆசை, இந்த ஈஷணாத்திரயங்களே கொழுந்துள்ள இலைகளாகவும் உண்டாயிருக்கின்றன. இந்த சம்சார விருக்ஷத்திற்கு மனமே மூல காரணமாய் அநாதியாய் அநந்தமாயிருக்கின்றது. இவ்விதமான மனம், அபரோக்ஷ ஞான சாக்ஷாத்காரமென்னும் அத்வைதஞானம் உண்டாகும் வரையில் எதனாலும் நாசமாகமாட்டா. ஞானிகள் இந்த சண்டாள மனதினுடைய பாதையை நன்றாய் அறிந்து இத் துக்கத்தை நிவர்த்திப்பதற்காகப் பிரம்ம ஞானத்தை சாதனமாய்ச் செய்துகொள்வார்கள். இதற்குத் திருஷ்

டாந்தம் ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 15, சுலோகம் 2-டும், சிவப்பிரகாச நூலும் பிரமாணம்.

அத்ஶ்சோர்த்வம் ப்ரஸ்ருதா ஸ்தஸ்ய ஶாகா
குண ப்ரவ்ருத்தா விஷய ப்ரவாளா꞉,
அதஶ்ச மூலாந்யநு ஸந்ததாநி
கர்மாநுபந்தீநி மநுஷ்யலோகே.

படைத்ததொரு படியின்றிப் பறவைபசு நரராய்ப்
பண்ணியதென் முன்னைவினைப் பான்மை யென்பர்
அடுத்துவினை யுளதாயி னிறையே னென்னி
லசேதனமற் றவையாவிக் கமைத்த தாகும்
எடுத்தவினை யுருவுறவ துயிரேற் றுனே
யிருவினைக்குத் தக்கவுட லெய்து மென்னிற்
சடத்திரளுங் கர்த்தாவா யறிவொன் றில்லாத்
தன்மையனுங் கூடவொரு சங்கை யின்றே.

கர்ம பலன்களால் தேவ மனுஷ்ய பசு பக்ஷ்யாதி சரீரங்களே எங்கும் வியாபித்து விருத்தியடைந்திருக்கின்றன. அவற்றில் தேவ சரீரங்களே, பருத்த மேல்நோக்கிய கிளைகளாகவும், பசு பக்ஷி முதலிய சரீரங்களே கீழ்நோக்கிக்கொண்டிருக்கும் சிறுங் கிளைகளாகவும் இருக்கின்றன. திக்குகள்தோறும் நீண்டோடும் தண்டுகளாகிய பெருங் கிளைகளே ஞான கர்ம பயன்களாகவும் இருக்கின்றன. இக்கிளைகள், சத்துவ ரஜஸ் தமஸென்னும் முக்குணங்களால் விருத்தியடைந்து வருகின்றன. சப்தாதி விஷயங்களே, இக்கிளைகளுக்குத் தளிர்களாகவும் இருக்கின்றன. இந்த சம்சார விருக்ஷத்திற்கு பிரம்மமே மூல வேராகவும், ஜீவர்களே பக்க வேர்களாகவும் இருக்கின்றன. நல்வினைப் பயனே மேலுலகமாயும், தீவினைப்பயனே கீ ழுலகமாயும் இருக்கின்றது. நல்வினை தீவினை என்னும் இரண்டு கர்மங்களையும் செய்ய பூலோகமே இடமா யிருக்கின்றது. இப் பூலோகத்திலேயே ஞான மடையவேண்டும்.

"ஸங்கல்ப ஏவ தந்மந்யே ஸங்கல்போபஶமேந தத்
ஶோஷயாஶு யதா ஶோஷமேதி ஸம்ஸார பாதப:."

[முக்திகோபநிஷத்.]

"சங்கற்ப நாசத்தா லெளிதாக மனநாசந் தானே யெய்தும் அங்குற்ற மனமிறக்கிற் ஜநந மரணங்களெனு மரமும் மாயும், இங் கிப்பா லேனைத்திருடுங் கள்ளனைக் கண்டேன் கண்டே னிவன் பெயர் நெஞ்சம், பொங்குற்ற விவனாலே நெடுநாளுழந் தேனிற்று பொன்று விப்பேன்."

மூண்டு பற்றி முழங்கி யெழுங்கனல்
ஈண்டு காட்ட மிலதே லிலதாகும்
தீண்டு மப்பொரு ளின்றெனிற் சித்தமும்
மாண்டு தோற்ற மிலதாய் மடிந்திடும். [தேவிகாலோத்திரம்.]

பற்றி எரிகின்ற அக்நி, விறகில்லாவிடில் எரியாதது போல், விஷயங்களைப் பற்றிக்கொண்டிருக்கும் மனதிற்கு விஷயமில்லாவிடில், மனம் நசிந்துவிடும். எப்பொழுது மனம் நசிந்துவிடுகின்றதோ அப்போதே சம்சாரமென்னும் விருக்ஷம நசிந்துவிடும்:

"ஜ்ஞமநோ நாஶமப்யேதி மநோ ஜ்ஞஸ்ய ஹி ஶ்ருங்கலா
தாவந்நிஶீவ வேதாளா வல்கந்தி ஹ்ருதி வாஸநா:
ஏகதத்வ த்ருடாப்யாஸாத் யாவந்ந விஜிதம் மந:."

[முக்திகோதநிஷத்.]

ஞானியினுடைய மனம் நசிந்துவிடும். அஞ்ஞானியினுடைய மனம் விலங்கிட்டதுபோல் பந்தப்பட்டிருக்கும். பிரம்ம நிஷ்டையில் மனம் எதுவரையில் அயிக்யமாகாதோ அதுவரையில், இராக்காலத்தில் பயங்கரமுடைய பேதாளாதி கிரகங்கள் ஸஞ்சரித்து உலகத்தாருக்குப் பயத்தை உண்டாக்குவதுபோல், இருதயத்தில் பூர்வ சஞ்சித கர்ம வாசனைகளென்னும் பேதாளக் கிரகங்கள் சஞ்சரித்துக் கொண்டு ஜநந மரணங்களென்னும் துக்கத்தை உண்டாக்

கிக்கொண்டிருக்கும்; "ததா வித்வாந் ப்ரஹ்ம ஜ்ஞாநாக்நி கர்மபந்தம் நிர்தஹேத்" என்பதுபோல் பிரம்ம ஞாநாக்கி யினால் அஞ்ஞாநமும், சகல கர்மங்களும் நசிக்கப்பெற் ஜீவன் முக்தி அடைவான் ஆதலால்,

"த்வா ஸுபர்ணௌ பவதோ ப்ரஹ்மணோ ஹம்ஸபூத
ஸ்ததேதரோ போக்தா பவத்யந்யோ ஹி ஸாக்ஷீபவதீதி."
"வ்ருக்ஷதர்மே தௌ திஷ்டத, அதோ போக்த்ரபோக்தாரௌ,
பூர்வோ ஹி போக்தாபவதி, ததேதரோ போக்தா க்ருஷ்ணோ
பவதி." [கோபாலதாபி ந்யுபநிஷத்.]

இந்த சரீரமே ஓர் விருக்ஷமாயிருக்கின்றது. இச் சரீரமென்னும் விருக்ஷத்தில், ஜீவாத்மா பரமாத்மா என் னும் இரண்டு பக்ஷிகள் வசிக்கின்றன. அவைகளில் ஜீவாத்மா என்னும் பக்ஷி 'தேஹேந்திரியங்களே 'நா' னென்று அபிமானித்து போக்தனயிருந்து கர்ம பலன்களைச் செய்துகொண்டு சுக துக்கங்களையடையும். பரமாத்மா என்னும் பக்ஷி அபோக்தனயிருந்து எக்காரியங்களையும் செய்யாமலும், எக்கர்மங்களையும் அநுபவிக்காமலும் சுக துக்கங்களை யடையாமலும் அதிஷ்டானமாய் சாக்ஷிமாத் திரமா யிருக்கும்.

"தேஷாம் மநுஷ்யாதீநாம் பஞ்சபூத ஸமவாயுஶ் ஶரீரம்."
"ஜ்ஞாந கர்மேந்த்ரியைஃ ப்ராணாதி பஞ்சவாயு
மநோ புத்தி பிஶ்ச ஸூக்ஷ்மஸ்ஸோபி லிங்க மித்யுச்யதே."
[யோகசூடா மண்யுபநிஷத்.]

இருபத்தைந்து தத்துவங்களே சொரூபமாயுடைய, இந்த தூல சரீரத்தினுள், பதினேழு தத்துவங்களுடன் கூடிய சூட்சும சரீரம் ஒன்று இருக்கின்றது. அது யாதெ னில், மனம் புத்தி இரண்டு, சூட்சும ஞானேந்திரியங்கள் ஐந்து, சூட்சும கர்மேந்திரியங்கள் ஐந்து, பிராணவாயுக்கள் ஐந்து, இந்தப் பதினேழு தத்துவங்கள் கூடியதே சூட்சும

சரீரமென்று சொல்லப்படும். இந்த சூட்சும சரீரம் அபஞ்சீக்ருதமானது. அபஞ்சீக்ருத மென்றால், தூல சரீரத்தைப் போல் பஞ்சீகரணமானதல்ல. சூட்சும சரீரமென்றால் கண்களுக்குக் காணப்படாத சரீரம்.

சுலோ || "ஸர்வ வ்யாப்ருதிகரணம் லிங்கமிதம் ஸ்யாச் சிதாத்மநః பும்ஸః, வ்யாஸாதிக மிவ தக்ஷண ஸ்தேனைவாத்மா பவத்ய ஸங்கோயம்."

என்னும் சுலோகரீதியாய் தச்சனிடம் உளி முதலான ஆயுதங்களிருந்தால், தான் கர்த்தனாயிருந்து மரத்தைச் செதுக்குகின்றான்; ஆயுதங்க ளில்லாவிடில் கர்த்தனாகமாட்டான். அதுபோல் ஜீவன், சூட்சும சரீரத்துடன் சம்பந்தப் பட்டிருப்பதனால், தான் கர்த்ருத்துவ அஹங்காரத்துடன் கூடிக்கொண்டு கர்த்தனாய், தூல சரீரத்தின் வழியாய் எல்லாக் காரியங்களையுஞ் செய்து, போக்தனாய் என்றால், சகலமும் அநுபவித்துக் கொண்டிருக்கின்றான். என்பதேயாம்; இந்த சூட்சுமசரீரசம்பந்தமானது ஜீவனுக்கு இல்லாவிடில், ஜீவன் கர்த்ருத்துவ அஹங்கார மில்லாதவனாகின்றான். அதனால் தான் கர்த்தனாகமாட்டான். என்றால், எந்தக் காரியங்களையுஞ்செய்யமாட்டான் என்பதும், போக்தனாகமாட்டான் (எதையும் அநுபவிக்கமாட்டா)னென்பது தாத்பரியமாகும்.

சுரு || "ஸங்கல்பந ஸ்பர்ஶந த்ருஷ்டி மோஹைர் க்ராஸாம்பு வ்ருஷ்ட்யாசாத்ம விவ்ருத்த ஜந்ம கர்மாநுகா ந்யநுக்ரமேண தேஹீ ஸ்தாநேஷு ரூபாண்யபி ஸம் ப்ரபத்யதே."

[ஸ்வேதா ஸ்வதரோப நிஷத்.]

ஆன்மா, தத்துவங்களோடு கூடிப் பிறந்திறந்து வினைப்பயனை அனுபவிக்கும் வகை.

இந்நிலையி லைந்துசுத்த மேழ்சுத்தா சுத்த
மெண்மூன்று மசுத்தமெனு மிவைமுப்பத் தாறு
மன்னியதத் துவங்களிடை மயங்கிநெடுந் துயர்தா
மருவுமுரு நிலைவழிய வரும்பொழுது வரியார்
பன்னகமண் டசங்கனவு படர்வகையே முன்னம்
பகரவருங் கலாதிநிலை பரவியருக் குமமாந்
தன்னுருவி னணைந்துபய னருந்தியர னருளாற்
றரையினிடை வருமென்று சாற்று நூலே.

பன்னக மண்டசங்கள் பரகாயந் தன்னிற் பாய்வோர்
தன்னுதோன் முட்டையாக்கை துறந்துசெல் வதுவேபோல
வுன்னியவுயிர் கலேவுடல் விட்டுவானி னூடு
மன்னிடு நனவுமாறிக் கனவினை மருவுமாபோல்.

ஜீவன் சூட்சும சரீரத்துடன் சேர்ந்து தூல சரீரத்திற் புகுந்துகொண்டு நாநாவித எண்ணங்களுடையதாய் உலகத்திலுள்ள சகல விஷயங்களையும் நினைத்துக்கொண்டும், தீண்டிக்கொண்டும், ஸ்திரீகளைப் பார்த்து மோஹித்துக்கொண்டும், புண்ணிய பாப கர்மங்களைச் செய்துகொண்டும், அந்தந்தப் புண்ணிய பாப கர்மபலன்களை அநுபவிப்பதற்காக ஜீவன், இந்த தூல சரீரத்தை விட்டுவிடும்; விட்ட பின்பு அந்த ஜீவன் சூட்சும சரீரத்துடன் சேர்ந்து தேவலோகஞ் சென்று, அங்குள்ள தேவதா சரீரத்திற் புகுந்து போகாநு போகங்களை அநுபவித்து, புண்ணியம் முடிந்தவுடன் மறுபடியும் பூர்வ கர்மாநுசாரமாய் அந்தந்த

தேவதா சரீரத்தையும் விட்டு, மறுபடியும் பூலோகத்தில் தாயின் கர்ப்பத்தி லிருக்கும் தூலசரீரத்தில் போய்ப் புகுந்துகொண்டு சிசுவாய்ப் பிறக்கும். இதுவே ஜநந மென்று சொல்லப்படும். மறுபடியும் சிசு பூர்வ கர்மாநு ஸாரமாய்க் கர்மங்களைச் செய்துகொண்டிருந்து மரண மடைந்து சுவர்க்க நரகங்களிலிருந்து மறுபடியும் பூலோ கத்தில் ஜன்மிக்கும். இவ்வண்ணம், ஜலப் பிரவாகத்துச் சுழலில் அகப்பட்டுக்கொண்ட வண்டானது அந்தச் சுழலி லிருந்து தப்பித்துக்கொள்வதற்குச் சக்தியற்று, அந்தச் சுழலிலேயே சுற்றிச் சுற்றித் திரிந்து உழல்வதுபோல், நாமெல்லோரும் ஜநந மரண (பிறப்பு இறப்பென்னும்) பிரவாகச் சுழலில் அகப்பட்டுக்கொண்டு பலகால் பிறந்து கொண்டும் இறந்துகொண்டும், அதினின்றுந் தப்பித்துக் கொண்டு கடந்துபோக சக்தியில்லாமல் அலைந்து தத்த ளித்துக்கொண்டிருக்கும் நாளில், (ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந சம் வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம், 2-சுலோ கம்-49-50-51, பார்க்க.)

"ஸத்கர்ம பரிபாகதோ பஹுநாம் ஜன்மநா மந்தே ந்ருணாம் மோக்ஷேப்சா ஜாயதே,ததா ஸத்குரு மாஶ்ரித்ய சிரகால ஸேவயா பந்தாந்மோக்ஷம் கஶ்சித் ப்ரயச்சதி." [பயிங்கலோபநிஷத்.]

இந்தச் சிதாபாஸஜீவன் ஜநநந்தோறும் செய்த புண் ணிய விசேஷத்தினால் ஏதோ ஓர் ஜன்மத்தில், தான் மோக்ஷமடையவேண்டுமென்னுங் கருத்தை யுடையவனாய் ஞாநாநுஷ்டானங்களையுடைய சற்குருவை யடைந்து, சரீர மும் நிழலும்போல் அநேககாலம் அவரை இடைவிடாமல் சேவித்துக்கொண்டு, அவரால் கடாக்ஷிக்கப்பட்ட நித்தியா நித்தியவிவேக சிரவண மனன நிதித்தியாசனங்களைச் செய்து, ஞானதீபத்தைச் சம்பாதித்துக்கொண்டு அஞ் ஞானமென்னும் இருளைப் போக்கி, அதாவது அந்தக்கரண

பிரதிபிம்ப சிதாபாச ஜீவனென்று சொல்லப்பட்ட எனக்கு, இந்த ஜீவ சொரூபம் மாயாசொரூபமே என்றும், தேகம் கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகசர்மம் என்னும் ஐந்து இந்திரியங்களும், மனம் புத்தி சித்தம் அஹங்காரமென்னும் அந்தக்கரணங்கள் நான்கும், இவைகளுக்குச் சாட்சியாயிருக்கும் ஆத்ம சொரூபமே எனது நிஜ சொரூபம் என்றும், ஜீவ சொரூபம் நானல்ல, இந்த ஜீவ விகாரங்கள் எனக்கில்லை; தேகம் நானல்ல. தேஹேந்திரியங்களுக் கிருக்கும் விகாரங்கள் எனக்கில்லை, நான் தேஹேந்திரிய அவஸ்தாத்ரய ஜீவ ஸாக்ஷியாகிய ஆத்ம சொரூபன்; என்றால் தேகம், கண்கள் மூக்கு வாய் செவிகள் சரீரத்தின்மேல்தோல் முதலான ஐந்து இந்திரியங்களுக்கும், ஜாக்கிரதை சொப்பன சுஷுப்தி என்னும் மூன்று அவஸ்தைகளுக்கும் நான் சாக்ஷியாயிருந்து பார்த்துக்கொண்டு வருகின்றேன் என்பதாம். இவ்வித ஆத்ம சொரூபனாகிய நானே பிரம்மம், பிரம்மமே நான் என்று அறிந்து, சதா பிரம்மாத்ம அபேத ஐக்கியபாவ முடையவனாய் ஆத்மாநு சந்தானம் செய்து கொண்டு, பிராரப்த கர்மநாசபரியந்தம் "ராகத்வேஷ பயாதீநா மநுரூபம் சரந்நபி யோந்தர்வ்யோம வதத்தியஸ்ச ஸ்ஸ ஜீவன்முக்த உச்யதே" என்னும் வாக்கியரீதியாய், தானும், உலகத்தாரைப்போல் ராக த்வேஷாதி குணங்களையுடையவனாய் நடித்துக்கொண்டு சகல காரியங்களையும் செய்து கொண்டு, தான் அந்தரத்தில் ஆகாசம்போல் நிராகாரமாய் நிர்க்குணமாய் நிர்விகாரமாய் ஸாக்ஷிமாத்ரமாய் நினைத்துக்கொண்டு ஜீவ காருண்ணியமுடையவனாய், சதா ஆத்மாநுசந்தானம் செய்து ஜீவன்முக்தியை அநுபவித்துக் கொண்டு, பிராரப்த கர்மம் க்ஷீணித்தவுடன், தனக்கு உண்டாயிருக்கும் பிரம்மாத்ம அபேத ஐக்கிய ஞானத்தினால் தூல சூட்சும காரண தேகங்கள் நசித்து, கடஜலம்

வற்றிப் போனவுடனே, அந்தக் கட ஜலத்தில் தோன்றிய பிரதிபிம்ப சூரியன், ஆகாசத்திலிருக்கும் சூரிய பிம்பத்திற் கலப்பது போல்,தன் சிதாபாச ஜீவ சொரூபம் ஆத்மாவில் கலந்து பரிசுத்த ஆத்ம சொரூபியாய், கடம் உடைந்தவுடன் அந்த கடாகாசம் மஹாகாசத்திற் கலந்து ஏகமாவது போல், ஆத்ம சொரூபியாகிய தான் சர்வ பரிபூரண பரப் பிரம்மத்திற் கலந்து அபேத பரப் பிரம்ம சொரூபனுகின்ருன். (இதற்குத் திருஷ்டாந்தம் ஸ்ரீ கிருஷ்ணர்ஜுன சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம், 3-சுலோகம்-26, பார்க்க.)

இப்படிப்பட்ட ஜீவப் பிரம்மைக்யமே,ஜநந மரணங்களில்லாத விதேஹ முக்தியென்றும், விதேக கைவல்லியமென்றும், நிஜ மோக்ஷமென்றும், சொல்லப்படும். ஆதலால், உலகத்திலுள்ள சகல ஜந்துக்களின் ஒவ்வொரு தேகத்திலும் ஆத்மாவை இடைவிடாமல் சிதாபர்ச ஜீவ சொரூபம் (மாயை) வியாபித் திருப்பதனுல், ஒவ்வொரு மனிதனும், தனக்கு உண்டாயிருக்கும் சிதாபாச ஜீவ சொரூபத்தை ஜயித்து, ஜனன மரணங்களில்லாதவனுய் பரிசுத்த ஆத்ம சொரூபியாய்த்தான், பிரம்ம சொரூபனுவதற்காக பிரம்ம ஞானத்தை சாதனம் செய்யவேண்டும். ஜீவனுக்கு கர்மாநுசாரமாய்,இந்த தூல சரீரங்கள் அநேகம் மாறி மாறி வருவதும் போவதுமாயிருக்கும். ஆனல், சூட்சும சரீரம்மாத்திரம் ஓர் சரீரமே யல்லாமல் பல வல்ல. ஜீவன், சதா சூட்சும சரீரத்தை இடைவிடாமல் அதனுடன் கூடவே தொடர்ந்து கொண்டிருக்கும்; ஜீவனுக்கு சூட்சும சரீரம் சகஜமா யிருப்பதே யொழிய, தூல சரீரம் சகஜமா யிருப்பதல்ல. ஆதலால்,இந்த சூட்சும சரீரம் அக்கினியினுல் தகிக்கப்படாதது; ஆயுதங்களினுல் வெட்டப்படாதது; ஜலத்தினுல் நனைக்கப்படாதது; வாயுவினுல்

அலைந்து மோதப்படாதது; மஹா பிரளயத்திலும் நசிக்கப் படாதது. ஆனல், இந்த சூட்சும சரீரத்திற்குக் காரண மாகிய அஞ்ஞானமென்னும் காரண சரீரம் எதுவரையில் நசிக்காதோ அதுவரையில் சூட்சும சரீரம் நசிக்காது. காரண சரீரமென்பது "அநாதிமாயா ஸுப்தோ ஜீவ:" என்னும் சுருதி ரீதியாய் ஜீவனுக்கு அநாதியாய் வந்துகொண்டிருக் கும் அஞ்ஞானமே காரண சரீரமென்று சொல்லப்படும். இந்தக்காரண சரீரம் ஞானக்கியினல் நசித்தவுடனே சூட்சுமசரீரம் தனக்குத் தானகவே நசித்துப்போகும். அப் படி சூட்சும சரீரம் நசித்தவுடனே ஜீவன், ஜனன மரண மென்னும் சமுத்திரத்தைத் தாண்டி முக்தியென்கிற மோக்ஷக்கரையை அடையும். ஆதலால்,லிங்கசரீர பங்கமே, அதாவது சூட்சும சரீர நாசமே முக்தி அடைவதற்குக் காரணம். இந்த சூட்சும சரீரத்திற்குக் காரணமாகிய அஞ் ஞானமென்னும் காரண சரீரம் நசிககாவிடில் இந்த சூட்சும சரீரம் நசிக்காது. இந்தக் காரண சரீரம் ஞானக்கினியினல் நசிக்குமேயொழிய மற்ற எதனலும் நசிக்கமாட்டா. இந்தக் காரண சரீரமே சஞ்சிதமென்று சொல்லப்படும். இக்காரண சரீரம் ரகஸ்யம், இன் நூலாசிரியர் சின் முத்திரையை விரல்களால் பிடித்து பிராணயாமத்தில் காட்டிய படத்தில் விவரமாய்க் காணலாம். ஒவ்வொரு மனிதனும், அஞ்ஞான மென்னுங் காரண சரீரத்தையும் சூட்சும சரீரதையும் நசிக்கச்செய்து முக்தி யடைவதற்கு முக்கியமான பிர யத்தினப்பட்டு, பிரம்ம ஞானத்தைப் பெறல்வேண்டும். "பாகஸ்ய வஹ்நிவத் ஜ்ஞாநம் விநா மோக்ஷோ நைவ ஸித் யதி." என்பதுபோல், பிரம்மஞானம் லபிக்காவிடில் எப் படிப்பட்டவனுக்கும் மோக்ஷம் லபிக்கவேமாட்டா. ஜீவன் வேறு பரமாத்மாவேறு என்று நினைப்பதே துவைதமென் றும் பேதஞானமென்றும் கூறப்படும். இவ்வித பேத

ஞானத்தினுல் ஜீவன், ஜநந மரணமடைந்து பிரதி ஜன்மங்கள் தோறும் துக்கித்துக்கொண்டேயிருக்கும். ஆனுல், "ஜீவः பஞ்சவிம்ஸகः ஸ்வகல்பித சதுர்விம்ஸதி தத்வம் பரித்யஜ்ய ஷட்விம்ஸ பரமாத்மாஹமிதி நிஸ்சயாத்ஜீவந்முக்தோ பவதி" என்னும் மண்டல பிராம்மணுேபநிஷத் வாக்கிய ரீதியாய் ஜீவ சொரூபமாகிய நான் தேஹேந்திரியங்களுக்கு வேரு யிருக்கின்றேன்; தேஹேந்திரியங்கள் நானல்ல; மேலும், ஜீவ சொரூபமாகிய நான் பரமாத்மாவின் அம்சமா யிருக்கின்றேன்; நானே பரமாத்மா, பரமாத்மாவே நான், என்று தெரிந்து சதா அபேதமாய் (பேதமில்லாமல்) ஜீவப் பிரம்மைக்யாநு சந்தாநம் செய்துகொண்டிருப்பதே அத்வைதமென்றும், பிரம்ம ஞானமென்றும் சொல்லப்படும். இவ்வித அபேத அத்வைத பிரம்ம ஞானமே ஜநந மரணங்களில்லாத முக்தி எனப்படும். "அந்யவித்யா பரிஜ்ஞான மவஸ்யம் நஸ்வரம் பவேத், ப்ரஹ்ம வித்யா பரிஜ்ஞாநம் ப்ரஹமப்ராப்தி கரம் ஸ்திதம்." என்னும் சுகரகசியோபநிஷத் வாக்கியரீதியாய், காம்ய கர்ம சம்பந்தமான சகல வித்தைகளையுங் கற்றபோதிலும் முக்தி உண்டாக மாட்டா. ஆனுல், பூர்வகர்ம புண்ணிய வசத்தினுல் சற்குரு தரிசனம் கிடைத்து அவருடைய அபார கருணையால் "ஜீவனே பிரம்மம்," "பிரம்மமே ஜீவன்" என்னும் ஜீவப் பிரம்மைக்கியாநு சந்தாநம் என்கிற பிரம்ம வித்யயை அப்பியசித்துத் தான் பிரம்ம சொரூபனுயிருப்பதனுல் முக்தி லபிக்கும்.

"நாஹம் ப்ரஹ்மேதி ஜாநாதி தஸ்ய முக்திர் நஜாயதே."

[பயிங்கலோபநிஷத்.]

ஜீவனே பிரம்மமென்று தெரியாதவனுக்கு எப்பொழுதும் மோக்ஷ முண்டாகமாட்டா.

இந்த ஜீவன் எதனல் கட்டுப்பட்டிருக்கின்றதென்றால்:—

சுரு|| 'துவேஷண பத்தோவ்ரீஹி: ஸ்யாத் துஷாபாவேது தண்டல:
எவம் பத்த ஸ்ததா ஜீவ: கர்மநாஸே ஸதாஶிவ:.'
[ஸ்கந்தோபநிஷத்.]

அல்லன்மிக வுயிர்க்கிவைதா னனைத்த தீச
னருவினைக ளருந்துதற்கோ வினையோ வன்றிச்
சொல்லிவரு மாயையோ வணுவை முந்தச்
சூழ்ந்ததெனு முரைமுதலோர் தொடக்கி லார்பால்
ஒல்லைவரு மெனினுளதா முயிருண் டாவே
யுளதுமல மலமுளதா வொழிந்த வெல்லா
நெல்லின்முளை தவிடுமிபோ லநாதி யாக
நிறுத்திடுவ ரிதுசைவ நிகழ்த்து மாறே.

மும்மல நெல்லினுக்கு முளையொடு தவிடுமிப்போன்
மம்மர்செய் தணுவினுண்மை வடிவினை மறைத்துநின்று
பொம்மைசெய் போகபந்த போத்திருத் துவங்கள்பண்ணு
மிம்மலமூன்றி னேடுமிகு மலமிசைப்ப னின்னும்.

உமியினல் மூடப்பட்டிருக்கும்போது நெல்லென்றும், உமி யில்லாதபோது அரிசியென்றும் எப்படிச் சொல்லப் படுகின்றதோ அதுபோல், கர்மத்தினல் கட்டுப்பட் டிருக்கும்போது ஜீவனென்றும், கர்மம் நாசமானபோது, நித்ய மங்களசொரூபனய் சாஸ்வதமா யிருக்கப்பட்ட பரப் பிரம்மமென்றும் சொல்லப்படும்.

சுரு || " கர்மேந்த்ரியை: கர்மண்யஹங்கரோ மீத்ய த்யாத்ம நிஷ்டதயா க்ருதம் கர்மைவகர்ம."
[நிராலம்போபநிஷத்.]

இந்திரியங்களினல் செய்யப்படும் காரியங்களை 'நான் செய்கின்றேன்' என்று ஆத்மாவுடன் சம்பந்தப்பட்டுச்

செய்யப்படும் காரியங்களே, கர்மமென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட ஆத்மாவிற்கு ஜாதிபேதமில்லை. இதற்குச் சுருதி பிரமாண மென்னவென்றால்;

சரு || "ஜாதிரிதிச ந சர்மணோ ந ரக்தஸ்ய ந மாம்ஸஸ்ய நசா
ஸ்திநஃ ந ஜாதிராத்மநோ ஜாதிர் வ்யவஹார ப்ரகல்பிதா."

ஜாதியென்பது, தேகத்தின்மீதிருக்கும் சர்மத்திற்குமில்லை, ரத்தம், மாமிசம், அஸ்திகளுக்குமில்லை, ஆத்மாவிற்குமில்லை; வியவகாரத்திற்கு மாத்திரம் ஜாதிபேதம் ஏற்படுத்தப்பட்டது. ஆதலால்,—

"காணப்பா ஜாதிகுலம் எங்கட்கில்லை
கருத்துடனே யெங்குலஞ் சுக்கிலந்தான் மைந்தா
தோணப்பா தோணுமற் சாதிபேதஞ்
சொல்லுவான் சுருக்காகச் சுருண்டுபோவான்
வீணப்பா பிரம்மத்தில் ஆதிகாலம்
வீரமுடன் பிறந்ததடா உயிர்களெல்லாம்
நானப்பா அப்படியே உதித்தேன் முன்னே
நன்றாக வுதித்தவிடம் நாடினேனே."

சரு||"அத்யந்தமலிநோ தேஹோ தேஹீ சாத்யந்த நிர்மலம்
உபயோரந்தரம் ஜ்ஞாத்வா கஸ்ய ஸௌசம் விதீயதே."

[முக்திகோபநிஷத்.]

தாய் தந்தையர்களினுடைய சுக்கில சுரோணிதங்களினால் உண்டாகிய இந்த மாமிச சரீரம் அசுத்தம். இதில் நிவசித்துக் கொண்டிருக்கும் ஆத்மா நிர்மலமானவன். இந்த இரண்டு தத்துவங்களையும் விசாரித்த ஞாநி எதற்கு சௌசம் செய்வான். அசுத்தமாகிய தேகத்திற்கே ஸ்நான சௌசாதிகள் செய்யவேண்டுமேயொழிய, பரிசுத்தனாகிய ஆத்மாவிற்கு ஸ்நான சௌசாதிகளினால் பிரயோஜனமில்லை.

இந்த ஸ்நான சௌசாதிகளினல் ஆத்மா பரிசுத்தமாவா னென்பது விருதா பிரமையேயன்றி வேறல்ல.

சுரு||"ஸ்வஸ்வரூபஸ்ய விஜ்ஞாநாத் நாதிகம் தீர்த்தமுச்யதே."
[ஜ்ஞாந வாஸிஷ்டம்.]

ஆத்மஞானமென்னும் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்த வர்களே முக்தியை அடைவார்கள்; இதரர்கள் அடைய மாட்டார்கள். ஆதலால்,

சுரு||"உத்திஷ்டத ஜாக்ரத ப்ராப்ய வராந் நிபோதத, க்ஷுரஸ்ய தாரா நிஶிதா துரத்யயா துர்கம் பதம் தத் கவயோ வதந்தி.'
[கடோபநிஷத்.]

அஞ்ஞானமென்னும் இருளில் நித்திரை செய்யும் ஓ சகோதரர்களே! எழுந்திருங்கள், ஜாக்கிரதைப் படுங்கள்! நிஜ குருகடாக்ஷத்தினல் ஆத்ம அநாத்ம விவேகம் முத லாகிய வேதாந்த விசாரணைசெய்து ஆத்மானுபவத்தை அடையுங்கள்! ஜாதி மத பேதங்களை நினையாதீர்கள். இந்த ஜாதிபேதம்அடியில் சொல்லப்போகும் தத்துவ பரிசோதனை யில் காண்க.

தத்துவ பரிசோதனை.

கருவூரில் (கர்ப்பத்தில்) குடியிருந்துவந்த ஒரு சிறு வன் பிரம்ம ஞானத்தில் ஈடுபா டடைய விரும்பி, ஓர் ஆசாரியரை அடுத்து பற்பல சுருதிகளைக் கேட்கலுற்றான். கேட்டவைகளைச் சிந்திக்குங்காலத்தில், அவனுக்கு அநேக விஷயங்களில் சந்தேகமுண்டாயிற்று; அவைகளில் முக்கிய மானது, 'சர்வ ஜீவர்களும் பரப் பிரம்மமே என்று சுருதி கள் முறையிடுகின்றனவே? ஆனல், நாம் பரப் பிரம்மத்தி னின்றும் வேறாகத்தானே இருக்கின்றோம். அது என்!'

என்பதேயாம். பிறகு, அவன் இதை ஆழ்ந்து யோசிக்குமிடத்தில் தன்னிடத்திலுள்ள அஞ்ஞானமே காரணமெனத் தெளிந்தான். ஆயினும், இதைச் சங்கையறத்தெளிய ஓர் குருவையடுத்துக் கேட்கத்தொடங்கினன்.

சிஷ்யன்:—ஓ யோகீசுவரரே? அஞ்ஞானமென்பது எது?

குரு:—தன்னைத்தான் அறியாமல் இதர விஷயங்களில் பிரயத்தினப்படுவதே அஞ்ஞானமென்று சொல்லுவார்களே யொழிய, அஞ்ஞானமென்று ஓர் வஸ்து இல்லை. அஞ்ஞானமென்பது அறியாத்தன்மையே.

சிஷ்யன்:—மாயை என்பது என்ன?

குரு:—மாயை யென்பது பகவானுடைய லீலையேயொழிய மாயை என்று ஓர் வஸ்து இல்லை. ஆதலால், இந்த மாயா சொரூபத்தைச் சொல்லுகின்றோம் கேள்!

பூலோகத்தில் கோசல தேசத்தில் காதி என்னும் பெயருடைய ஓர் பிராமணன் இருந்தான். அவன் ஒரு காரியத்தை மனதில் நினைத்து, உறவினரை விட்டு நீங்கி வனத்திற்குச் சென்று ஒரு தடாகநீரின் நடுவில், கழுத்தளவு ஜலத்தில் நின்று, விஷ்ணு மூர்த்தியை நினைத்து எட்டு மாதங்கள் வரையில் மேலாகிய தவத்தைச் செய்து வந்தான். பிறகு, விஷ்ணுவானவர் பிரத்தியக்ஷமாய், உனக்கென்ன வரம் வேண்டுமென்று கேட்டார். அதைக்கேட்ட பிராமணன் கரையேறி வந்து, திருமாலைக் கைக்குவித்து வணங்கி பரமேசுவரா! லக்ஷ்மீ மனோஹரா! புரஹரா! ஸ்மரஹர! பாப விதூரா! பரம கல்யாண குணாகரா! தயாகரா! தர்மசீலயா! ப்ரணதார்த்தி நாசநா! பவ பந்த விமோசக! பக்த வத்ஸலா! சந்திர சூடா வதம்ஸா! உமது மாயாசொரூபத்தைத் தர்சிக்க விரும்புகின்றேன் என்றான். அதைக் கேட்ட பகவான், அப்படியே என் மாயா சொரூ

பத்தைக் காணக்கடவாய். கண்டபிறகு, அதனை நீங்கக் கடவாயென்று அநுக்கிரஹித்து பகவான் மறைந்தவுடன், பகவானைச் சேவித்த சந்தோஷத்தினால் அதிக உத்ஸாஹங் கொண்டு தன்னைத்தான் மறந்து அநேகநாள் பரியந்தம் தன் தியானத்திலேயே யிருந்துவிட்டான். இவ்வாறு சில மாதங்கள் சென்றன. பிறகு, கண்களை விழித்துப் பார்த்து முன்னே திருமால் அருளிச் செய்த மாயா சொரூபத்தை நினைத்துக்கொண்டே சென்று ஒரு தாமரைத் தடாகத்தில், இடுப்பளவு ஜலத்தில் நின்று, வலதுகை மோதிரவிரல் பெரு விரல்களால் இடது வலது மூக்குகளை மூடி, தடாக நீரில் ஒரு முழுக்குப் போட்டு சிரசை மேல் எடுப்பதற்குள், தான் தன் பந்துக்கள் இருக்கும் வீட்டில் வியாதியினால் இறந்தவனாகத் தன்னைக் கண்டான். பிறகு பந்துக்கள், தன் மனைவி, தன் தாய் முதலியோர் தன்மேல் விழுந்து கட்டிக்கொண்டு கதறவும் பார்த்தான். இதற்குமேல், தன்னை ஸ்மசானத்திற்கொண்டுபோய்ச்சுட்டுச்சாம்பலாய்ச் செய்ததையும் பார்த்தான். நீரின்நடுவிலிருக்கின்ற பிராம ணன் பின்னும் ஊணதேசத்தின் ஒரு நகரமுடிவில் இருக் கிற நீசர் குலத்தில் ஒரு பெண்ணின் வயிற்றில், வெந்த கரிக் கட்டைபோல ஆண் மகனாகப் பிறந்து, அந்த குலத் துப் பெண்ணொருத்தியை மணம் புரிந்து, மனமும் பிராண வாயுவும்போல் வொற்றுமையாய்க் கலந்து வாழும்நாளில், தன் குலம் விளங்கச் சில புத்திரர்களைப் பெற்றான் சில நாள் சென்றபிறகு தன் சேரிக்குச் சில தூரத்தில் ஒரு சிறு தழைக்குடிசை கட்டி அதில் வசித்துக் கொண்டிருக்கும் போது, தன் மக்களுக்கும் தனக்கும் தன் மனைவிக்கும் கிழத்தனம் வந்துவிட்டது. மனைவி மக்களுக்கும் தனக்கும் ஒருமிக்க கிழத்தனம் வந்ததைப் பார்த்து வருந்துங் காலத்தில், தன்னைத் தவிர மற்றவர்களை யெல்லாம் காலன்

(யமன்) கொண்டுபோய்விட, தான் தனியே யிருந்து வாய் விட்டலறி அழுது சகிக்கமாட்டாமல், மனங்கலங்கி நிராசை யுள்ளவனாய் அநேக நாடுகளில் வெகுகாலம் திரிந்து கொண்டிருப்பதாய்க் கண்டான். இவ்வாறு திரிந்து கொண்டே கீரநாட்டின் ராஜதானியில் புகுந்து, சொர்க்க லோகம்போல் பொன்மயமாயிருக்கும் வீதியின் வழியாய் வந்துகொண் டிருப்பதையும் கண்டான். அதுசமயம் அவ்வூ ரரசன் மாண்டிருந்தபடியால் ராஜ்ஜிய பரிபாலனம் செய்ய, வேற்றரசனை நியமிப்பதற்காகப் பட்டத்து யானையை மந்திரிகள் அலங்கரித்து, அதன் துதிக்கையில் மாலையைத் தந்து செங்கோல் செலுத்த வேற்றரசனைக் கொண்டு வரக்கடவாய் என்று சொல்லி அனுப்பினார்கள். அவ்வார்த்தையைக் கேட்ட யானையானது, மாலையை எடுத் துக்கொண்டு அதிவேகமாய்ச் சென்றது. அப்போது ராஜாதிராஜர்கள் எல்லோரும் தம் தம் கழுத்தில் மாலை யைத் தரித்துக்கொள்ளவேண்டுமென்று நினைத்து யானைக் கெதிரில் சென்று நின்றார்கள்; அந்த யானை, அவர்களுக்கு மாலையைச் சூட்டாமல் அவர்களிலிருந்து தப்பித்துக் கொண்டு முன் சொல்லிய பொன்மயமாய் இருக்கும் வீதி யின் வழியாய் வந்தது. அப்போது காதி யென்னும் சண் டாளன், யானைவரும் வேகத்தைப் பார்த்து பயந்து ஓர் மூலையில் பதுங்கிக்கொண்டான். மேற்படி யானையானது சண்டாளனுக்கு நேரில்வந்து அவன் கழுத்தில் மாலையைத் தரித்துத் தன் பிடரியில் (முதுகின்மேலிருக்கும் அம்பாரி யில்) ஏற்றிக்கொண்டு போவதையும் கண்டான்.

சிஷ்யன்:—ஓ யோகீசுவரரே! அந்த யானையை எதிர் நோக்கிவந்த மன்னாதி மன்னர்களுக்கெல்லாம் மாலையைத் தரிக்காமல், கேவலம் நீசனாயிருக்கும் சண்டாளனது கண் டத்தில் மாலையைத் தரிப்பதற்குக் காரணம் யாது?

குரு:—குழந்தாய்! அந்தக் காரணத்தைச் சொல்லுகின்றோம் கேள்: இப்போது மாயைக்குள் அகப்பட்டிருக்கும் சண்டாளன், காதி என்னும் பிராமணனென்று உனக்கு நன்றாய்த் தெரியவருகின்றதல்லவா? இவன் ஆதியில் விஷ்ணுவைக் குறித்துத் தவம்செய்தபடியால், சர்வத்திற்கும் ஆதாரமாய் இருக்கப்பட்ட பரப் பிரம்மமே, பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசமென்னும் பஞ்ச பூதங்களால், விஷ்ணுரூபத்தைத் தரித்துக் காதி என்னும் பிராமணனிடம் சென்று அவன் கேட்ட வரத்தைத் தந்து மறுபடியும், பஞ்சபூதங்களையும் அந்தந்த பூதத்தில் ஐக்கியம்செய்து தான் யதாரீதியாய் பரப் பிரம்மமாகவே இருந்தது.

குழந்தாய்! இவன் தவம் செய்யும் விஷயம் அந்தப் பரப் பிரம்மம் எப்படி அறியுமென்று எண்ணுகின்றாயோ? அதன் ரகஸ்யத்தைச் சொல்லுகின்றோம் கேள். மனிதர்கள் எதை எதை நினைத்து தவம் செய்கின்றார்களோ அவைகளை யெல்லாம், அவ ரவர்களின் இருதயகமலத்தில் சாக்ஷி சொரூபமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஸாக்ஷாத் பரப் பிரம்மத்தின் அம்சமாகிய ஆத்மா அறிகின்றது. எப்பொழுது ஆத்மா அறிகின்றதோ அப்பொழுதே பரப் பிரம்மம் அறிந்ததாகும். 'ஆத்மா' 'பரப் பிரம்மம்' என்று நாமபேதமேயொழிய அதன் குணம் மாத்திரம் ஒன்றேயாம்: எப்படியெனில், ஏரியிலுள்ள ஜலம் ஊர் முழுதும் இருக்கப்பட்ட ஜனங்களின் தாகத்தைத் தணிக்கச் செய்கின்றது. குடத்து ஜலம் ஓர் குடும்பத்திலுள்ள ஜனங்களின் தாகத்தைத் தணிக்கச் செய்கின்றது. ஆதலால், பெரிது சிறிதென்னும் பேதமே யொழிய தாகந்தணிக்கும் தன்மை ஒன்றேயாம். அதுபோல், ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் உள்ளபேதமென்று அறியக்கடவாய்.

இப்படி சாக்ஷி சொரூபமாயிருக்கும் ஜீவாத்மா, யானையிலும் இருப்பதால், மேற்சொல்லிய சண்டாளனது கண்டத்தில் மாலையைத் தரிக்கும்படி, அந்த யானையினது மனத்திற்குத் தோன்றும்படி, ஆத்மா செய்வித்தது. அதனால் தன்னை எதிர்நோக்கி வரப்பட்ட மன்னாதி மன்னவர்களுக்கெல்லாம் மாலையைத் தரிக்காமல் சண்டாளனிருக்குமிடத்திற்கே நேராய்ச் சென்று அவன் கழுத்தில் மாலையைச் சூட்டிப் பிடரியில் ஏற்றிக்கொண்டு மந்திரிமார்களிடம் கொண்டுபோய் விடும்படியாய்ப் பரப்பிரம்மத்தின் அம்சமாகிய ஆத்மா, யானையினது மனத்திற்குச் சாவியைக் கொடுத்துத் திருப்பிவிட்டபடியால், அந்த யானை அவ்விதமாய்ச் செய்ததென்று அறியக்கடவாய். பிறகு,

யானையால் கொண்டுவரப்பட்ட இவனை மாதர்கள் அலங்கரித்தார்கள். பழைய மந்திரிமார்களும் சேனாதிபதி முதலானோர்களும் இவனை அரசனாக முடிசூட்டி, "கவலன்" என்கிற நாமமளித்து, அவனது ஆஞ்ஞையைச் சிரசாக வகித்து நடந்தார்கள்; அப்போது அந்த சண்டாளன் 'கீர தேசத்தை' நீதியாகச் செங்கோல் செலுத்திவந்தான். இப்படி எட்டு வருஷங்கள் கழியவே ஒரு நாள் தனியனாய், காலால் நடந்து, தன் அரண்மனையின் தெருப்புறத்தில், நீச வேஷத்தோடு உலாவுஞ் சமயத்தில், தன் ஊரில் தனக்கு பந்துவாயிருந்தவர்களில் சிலர் கீரதேசத்திற்குள் புகுந்து, ராஜன் அரண்மனைக்கு நேராய் வந்துகொண்டிருக்கும் போது, அவர்களில் ஒரு முதியோன் வந்து அரசனைப் பார்த்தவுடன் ஆசையோடு தழுவி முன்பெயரைச் சொல்லி, எங்களுக்குப் பழைய பந்துவாகிய நீ, எங்களைவிட்டு எங்கே போனாய்? இப்போது எவ்விடத்தி லிருக்கின்றாய்? என்று இவனது பழைய வரலாற்றை, உள்ளபடியே சொல்லி விசாரித்தான். அதைக்கேட்ட இவன், இங்குள்ளவர்கள் யாராயி

னும் இதனைக் கேட்பாராயின் தனக்குப் பழிபாய் முடியு மென்று நினைத்து அச்சண்டாள முதியோனை உரத்த சப் தத்தோடு அதட்டித் துரத்திவிட்டு, விரைவாகத் தனது அந் தப் புரத்தில் பிரவேசித்தான். சாளரவாயிலில் நின்று இவற்றை யெல்லாம் கண்டும் கேட்டுமிருந்த ஸ்திரீகளெல் லோரும், ராஜஸ்திரீ மந்திரிமார்கள் முதலான பேர்களுக் கும் அறிவிக்க, இவன் சண்டாளனாயிருக்கலாமென்று அவர் களும் நினைத்து, மிகவும் மனவருத்தமடைந்தார்கள். இவன் மாத்திரம் மனங் கலங்காமல், அவைகளை அறியாதவன் போல் பழைபடியே சிங்காசனத்திலிருந்தான். இவனை, மாதர்கள் மந்திரிமார் முதலானோர்கள் தீண்டுவதற்கு, அஞ்சினவராய் பிரேதத்தை அருவருத்தல் போல அரு வருத் திருந்தார்கள். இவனோ கல்வி செல்வங்களிரண்டு மில்லாத பிராணிகள்போல் இருந்தான். அந்த நகர மாந்த ரெல்லோரும், இவனுடைய சம்பந்தத்தால் நாமெல்லோ ரும் நீசரானோம், இனி ஒரு பிராயச் சித்தத்தினாலும் பரி சுத்த ராகமாட்டோம்; நாம் பரிசுத்த ராவதற்காக தீப் பாய்வோமென்று நிச்சயித்து, நெருப்பை வளர்த்தி அதில் எல்லோரும் வீழ்ந்து மடிந்தார்கள். இவன், அவர்கள் மடிந்ததைக்கண்டு, நமது தொடர்பாலல்லவோ இத்தனை பேரும் நாசமடைந்தார்கள்; இனி நாமும் மாண்டுபோ வதே தக்க காரியமென்று தானும் தீ மூட்டி, அதில் விழுந்தபோது, அந்தத் தீயானது இளந்தளிரை எரிப்பது போல் இவன் சரீரத்தை எரித்தது. உடனே நீரில் முழ்கி யிருந்த காதி யென்னும் பிராமணன், ஜலத்திற்குள் மூழ்கி யிருந்த சிரசை மேலெடுத்தவுடன் பிராமணன் சரீரம் பதைபதைத்து உடனே நீரைவிட்டு மேலெழுந்து மஹா மாயையினின்று நீங்கி ஈசுவரனது சர்வ சக்தியைக் குறித் துப் புகழ்ந்து மனங்களித்திருந்தான். இக்கதை இன்னும்

உண்டு. இவ்விடத்திற்கு வேண்டியது இவ்வளவேயாத லால் இம்மட்டில் நிறுத்தப்பட்டது. கதை முழுதும் அறிய விரும்புவோர் ஞானவாசிட்டம் உரு-வது, கதையில் விரிவாய்க் காணலாம்.

சிஷ்யன்:—சுவாமி! ஓர் முழுக்குப் போட்டு சிரசை எடுப்பதற்குள் எத்தனையோ வருஷங்கள் சென்றுவிட்ட னவே. இதற்குக் காரணம் யாது?

குரு:—குழந்தாய்! அதற்குக் காரணம் சொல்லுகின் ேறாம் கேள்; பிரமதேவருக்கு இருக்கப்பட்ட வயதை அனு சரித்துத் தன் மாயா சொரூபத்தை, காதியென்னும் பிரா மணன் தரிசிக்கும்படி பகவான் ஸங்கல்பித்தார். அதனால் அவன் அத்தனை வருஷங்கள் மாயையில் கட்டுப்பட்டிருந் தான். இவன் இன்னும் எத்தனையோ கோடி ஜன்மங்கள் எடுக்க வேண்டுமென்று பகவான் ஸங்கல்பித்தாலும் அத் தனை கோடி ஜன்மங்களையும் ஓர் முழுக்குப் போடுவதற்குள் எடுக்கவும் எடுக்கலாம். பிரமதேவருக்கு ஆயுட்பாகம் எப்படியென்றால், அதைச் சொல்லுகின்றோம் கேள். ஸ்ரீ பகமத்கீதை அத்தியாயம் 8, சுலோகம் 17.

ஸஹஸ்ரயுகபர்யந்த மஹர்யத் ப்ரஹ்மணோ விதுஃ
ராத்ரிம் யுகஸஹஸ் ராந்தாம் தே ஹோராத்ரவிதோ ஜநாஃ

கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்னும் நான்கு யுகங்களும் ஆயிரமானால் பிரம்மதேவருக்கு ஒரு பகலாகும். இதுபோல் நாலுயுகங்கள் ஆயிரமானால் ஒரு இராப்பொழுதாகும். இவ்விரண்டும் சேர்ந்து பிரம தேவருக்கு ஒரு நாளாகும். இந்நாட்கள் முப்பதானால் பிரமனுக்கு ஒரு மாதம். இம்மாதங்கள் பன்னிரெண்டா னால் ஒரு வருஷம். இவ்வருஷங்கள் நூறானால் பிரமதேவர் ஆயுர்பாகமும் முடியும். அதாவது, உத்தராயணம் தக்ஷி ணாயன மென்கிற மனிதவருஷம் ஒன்றானால் தேவர்களுக்

குப் பகலிரவு சேர்ந்து ஒருநாளாகும். 360-தேவநாட்கள் ஒருவருஷம். பதினேழுலக்ஷத்து இருபத்தி எட்டாயிரம் மனிதவருஷங்கள் கொண்டது ஒரு கிருதயுகம். பனி ரெண்டுலக்ஷத்துத் தொண்ணூற் றாறுயிரம் வருடங்களா ஞல் ஒரு திரேதாயுகம். எட்டுலக்ஷத்து அறுபத்துநாலா யிரம் வருடங்களானல் ஒரு துவாபரயுகம். நாலுலக்ஷத்து முப்பத்தி ஈராயிரம் வருடங்களானல் ஒரு கலியுகம்.

ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 8, சுலோகம் 18.

அவ்யக்தாத் வ்யக்தயஸ்ஸர்வா: ப்ரபவந்த்யஹராகமே
ராத்ரியாகமே ப்ரலீயந்தே தத்ரைவா வ்யக்தஸஞ்யகே.

பிரமனது விடியற்காலமாகிய பகற்கால ஆரம்பத்தில், மூலப் பிரகிருதி என்னும் மாயையினல் அகிலாண்டங்களும் உண்டாகின்றன. பிரமனுக்கு இரவாரம்பகாலத்தில் பிர கிருதி என்னும் மாயை லயமாகின்றது. அதாவது, பிரம்ம னது விழிப்பே உலகோற்பத்தி. அவரது நித்திரையே உல கலயம் (பிரளயம்);இப்படிப்பட்ட வருஷங்களும்அநித்திய மென்று அறிந்தவர்களே ஞானிகளாவார்கள். இதுபோல், பிரகிருதி என்னும் மாயையுடன் கூடியிருக்கும் மானவர்க ளின் மனமெல்லாம், பகற்காலங்களில் குரங்கைப்போல் ஓடோடியும் திரிந்துகொண்டிருக்கும் இவ்விதமாய்த் திரிந்துகொண்டிருக்கும் மனம், இராக்காலங்களில் எங்கும் ஓடாமல் ஒடுங்கியிருக்கும். இவ்வாறு கற்பங்கள் தோறும் இம்மனம் ஓய்வின்றி ஒவ்வொரு ஜன்மமெடுத்து திரிந்து கொண்டே வருகின்றது.

குழந்தாய்! பிரம்மதேவருக்கு முன் சொல்லிய நெடு நாள் ஆயுர்ப்பாகம் இருக்கின்றதென்று நினைத்து, என்னைப் போல் இவ்வளவுகாலம் யார் ஜீவித்திருக்கின்றார்களென்று நினைத்து அஹங்காரங்கொண்டு, அன்னவாகனத்தின் மீதேறி வைகுண்டம்போய்ச்சேர்ந்து விஷ்ணுமூர்த்தியைத்

தரிசித்து "பரமபுருஷா! பரந்தாமா! பராத்பரா! பரம பாவநா! புராண புருஷா! புருஷோத்தமா! புண்டரீக நயநா! புஜகேந்த்ர சயநா! தாரகநாமா! தாநவ பீமா! ராவண மர்த்தநா! ரகுவம்ச வர்த்தநா! ஜாநகிநாதா! ஜலதர ஸ்யாமா! ஜகதபி ராமா! பூர்ணேந்து வதநா! முநிமநஸ் ஸதநா! நிகமாந்த வேத்யா! பவரோக வைத்யா! ஸர்வ காருண்யா! ஸரஸிஜ ஹஸ்தா! ஜகத் பிரசித்தா! புதஜந ரஞ்ஜநா! துரித விபஞ்சநா! தேவ தேவோத்தமா! தேவதா ஸார்வபௌமா!" என்று இவ்விதமாய் வெகுவிதங்களாய்த் துதிசெய்து முடிந்தபிறகு "அநாதரக்ஷகா! நான் ஜீவித்தி ருக்கும் காலம் வரையில் ஜீவித்திருக்கும் புருஷன் யாராகி லும் உலகத்தில் இருக்கின்றார்களா" என்று கேட்டனர்.

"நீ சகல பிரபஞ்சத்தையும் சிருஷ்டித்த மஹானு பாவன்; உனக்குச் சமானமானவர்கள் மூன்று லோகங் களிலும் யாவருமில்லை; யாதொரு வியாதிகளுமில்லாமல் அநேககாலம் நீ ஜீவித்திருப்பாய். உன் மஹா மஹிமையை இப்படிப்பட்டதென்று நான் ஒருவனே வர்ணித்துச்சொல் வது ஒரு பெரிதானதல்ல; இன்னும் சில பெரியோர்களை விசாரித்தாலேயன்றி உன் பிரபாவம் தெரியவராது" என்று பகவானான விஷ்ணுமூர்த்தி பதில் சொல்லினர். "அப்படி யானால் அங்குபோய் விசாரித்துவரலாம் வருகின்றீர்களா" என்று பிரமதேவர் விஷ்ணுமூர்த்தியைக் கேட்டனர். அதற்கு விஷ்ணுமூர்த்தி சம்மதித்து, கருட வாகனரூடராய் பிரமதேவரை அழைத்துக்கொண்டு ஓர் காட்டின் மத்தி யில் நிவசித்துக்கொண்டிருக்கும் 'ரோமச மஹரிஷி'யைக் கண்டார்கள். அப்போது அகஸ்மாத்தாய் விஷ்ணுமூர்த்தி தரிசநம் ரோமச மஹரிஷிக்குக் கிடைத்தவுடனே, அவருக்கு உண்டாகிய பரமானந்தத்தினால் விஷ்ணுமூர்த்தியை மிக வும் துதிசெய்து, "சுவாமீ! தேவரீர் இவ்வளவுதூரம் வர

காரணம்யாதோ அறியாமலிருக்கின்றேன். அந்த தயை செய்து அனுக்கிரகிக்கவேண்டும்'' என்று ரோமச மஹரிஷி வேண்டிக்கொண்டனர். அப்போது விஷ்ணுமூர்த்தி முனீஸ்வரரைப் பார்த்து "ஐயா! முனிபுங்கவா! உன் ஆயுர்பாகத்தைத் தெரிந்துகொள்ள நாங்கள் இருவரும் இங்குவந்தோம்; அதுவிஷயம் இந்த பிரமதேவருக்குச் சற்றே தெரியச் சொல்லவேண்டும்'' என்று பகவானான விஷ்ணுமூர்த்தி சொல்லினர். அதைக்கேட்ட முனீசுவரர் விஷ்ணுமூர்த்தியை நமஸ்கரித்து "தேவா! ஸர்வஞ்ஞனான உமக்குத் தெரியாத விஷயமும் ஒன்றிருக்கின்றதோ? ஆயினும் அடியேனைக் கௌரவித்துக் கேட்டதனால் சொல்லுகின்றேன் கேளுங்கள். இந்த பிரமதேவன் மரணமடைந்தால் என் சரீரத்திலிருக்கும் ஒருமயிர் விழுந்துவிடும். இப்பேர்ப்பட்ட மயிர்கள் மூன்று கோடி ஐம்பதுலக்ஷம் மயிர்கள் என் சரீரத்திலிருக்கின்றன; அவைகளெல்லாம் விழுந்தவுடன் அடியேன் தேவரீருடைய பாதாரவிந்தம் வந்து சேர்ந்து சதானந்தத்தை அனுபவிப்பேன்'' என்றால், மூன்றுகோடி ஐம்பதுலக்ஷம் பிரமதேவர்கள் மரணமடைந்தால், அடியேன் சரீரத்திலிருக்கும் மூன்றுகோடி ஐம்பதுலக்ஷம் மயிர்களும் விழுந்து பகவானாகிய உமது பாதாரவிந்தம் வந்து சேர்வேன். என்று ரோமச மஹரிஷி சொல்லினர். அதற்கு விஷ்ணுமூர்த்தி "ஐயா! மூன்று கோடி ஐம்பதுலக்ஷம் பிரமதேவர்கள் மரணமடையும் வரையில் உமது தேகத்தைத ரக்ஷிப்பதற்காக வீடு இருக்கவேண்டியது அவஸ்யமல்லவா? அதை ஏன் நிர்ணயம் செய்து கொள்ளவில்லை'' என்று கேட்டனர். அதற்கு ரோமச மஹரிஷி மந்தஹாசம் செய்து "தேவதேவோத்தமா! இந்தத் தேகம் நீர்க்குமிழியைப் போன்றதென்று யதார்த்தமாய்த் தெரிந்தபிறகு இதை அவ்வளவு பத்திரமாய்க் காப்

பாற்ற வேண்டியதேன்? தேவரீருடைய பாதாரவிந்த சேவையிலிருக்கப்பட்டவர்களுக்கு தேகாபிமானமும்ஏது? தேகாபிமானம் இருக்கும்வரையில் துக்கமேயொழிய சுகமில்லை" என்று சொல்லினர். அதற்கு விஷ்ணுமூர்த்தி, மிகவும் சந்தோஷித்து அவருக்கு மஹா வாக்கிய தத்துவங்கள் சிலவற்றைச் சொல்லி, ரோமச மஹரிஷி சொல்லிய விஷயமே நிஜமென்று ஒப்புக்கொண்டு "போய் வருகின்றோம்" என்று விஷ்ணுமூர்த்தி சொல்லினர். அப்போது ரோமச மஹரிஷியானவர், மிகவும் பக்தியுடன் விஷ்ணுமூர்த்திக்குச் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று, இருகைகளையும் குவித்து நமஸ்கரித்து அஞ்சலி ஹஸ்தராய் நின்று, "சுவாமீ! தேவரீருடையசேவை மறுபடியும் அடியேனுக்கு எப்பொழுது லபித்து தன்னியனாவேனோ தெரியவில்லை" என்று சொல்லி மிகவும் விசாரப்பட்டு அவருடன் கூட சிலதூரம் வந்து வழிவிட்டுச் சென்றார். பிறகு விஷ்ணுமூர்த்தி பிரமதேவரை அழைத்துக்கொண்டு, மற்றொரு அரண்ணியமத்தியில் நிர்மல (பரிசுத்த) மான பிரதேசத்தில் பிரம்மானு சந்தானம் செய்துகொண்டிருக்கும் அஷ்ட (எட்டு) வக்கிரனென்னும் ரிஷியினிடம் சென்று தரிசனம் கொடுத்தார். அந்த ரிஷி, பகவானைக் கண்டவுடன், மஹா ஆனந்தமடைந்து விஷ்ணுமூர்த்தியை வெகுவிதங்களாய்த் துதிசெய்து "தேவதேவோத்தமா! தேவகீநாதா! தேவரீர் இவ்வளவு தூரம் விஜயம்செய்து அடியேனுக்குத் தரிசனம் கொடுத்ததைப்பார்க்க மிகவும் ஆச்சரியகரமா யிருக்கின்றது. அடியேனால் ஆகவேண்டிய வேலை ஏதாகிலும் இருந்தால் ஓர் வார்த்தை சொல்லியனுப்பும் பக்ஷத்தில் தலையால் நடந்துவரேனா! தேவரீருடைய பக்தவாத்சல்யம் என்னவென்று சொல்வேன்? தேவரீருடைய சன்னிதானத்திற்கு அடியேனை வரவழைத்தால் தாசனுக்கு

மார்க்க ஆயாசம் உண்டாகுமென்று எண்ணியல்லவோ தேவரீரே இங்குவந்தீர்கள். அடியேன் தன்னியனுனேன். வந்த காரியம் எதுவோ அதை தயைசெய்து சொல்லவேண்டும்'' என்று மிகவும் பக்தியுடன் கேட்டுக்கொண்டனர்.

அப்போது அரவிந்த நயனனுகிய பகவான் புன்சிரிப்பாய்ச் சிரித்து அஷ்டவக்கிர ரிஷியைப்பார்த்து "ரிஷிகுல திலகமே! உம்முடைய ஜீவிதகாலம் (ஆயுற்பாகம்) எவ்வளவென்று தெரிந்துகொள்ள இங்குவந்தோம். நீர் எவ்வளவு காலம் ஜீவித்திருப்பீரோ அந்த விஷயம் இப் பிரமதேவருக்குச் சற்றே தெரியச் சொல்லவேண்டும்'' என்று சொல்லினர். அதற்கு அஷ்டவக்ர ரிஷியானவர் "பரமேசுவரா! பரந்தாமா! சகல லோகத்திற்கும் ரக்ஷகனுயிருக்கும் உமக்குத் தெரியாத விஷயமும் ஒன்றுண்டோ? ஆயினும் உமது ஆஞ்ஞையை மீறி நடப்பது அடியேனுக்குத் தகுதியல்ல. என் சரீரத்தில் எட்டுக் கோணல்கள் இருக்கின்றன. அவைகளெல்லாம் நிமிர்ந்தால் என் ஆயுர்ப்பாகம் முடியும். அதாவது, மூன்றுகோடி ஐம்பதுலக்ஷம் பிரமதேவர்கள் மரணமடைந்தால் ரோமச மஹரிஷி ஆயுர்பாகம் முடியும். அப்படிப்பட்ட ரோமச மஹரிஷி எட்டுத் தடவைகளில் பிறந்து மரணமடைந்தால் என் தேகத்திலிருக்கும் எட்டுக் கோணல்களும் நிமிர்ந்துவிடும். கோணல்கள் நிமிர்ந்தவுடனே என் ஆயுர்பாகம் முடியும். அப்போது அடியேன் சுத்தப் பிரம்மமாய் விடுவேன்'' என்று சொல்லினர்

அப்போது விஷ்ணுமூர்த்தி அவரைப்பார்த்து "ஐயா! அதுவரையில் சரீர ரக்ஷணார்த்தமாய் வீடு ஒன்று இருக்கவேண்டுமல்லவா? அது என் இல்லாமலிருக்கின்றீர்'' என்று கேட்டனர். அதற்குரிஷியானவர்சொல்லுகிறுர், "மாஹானுபாவா! என்மனதைச்சோதிக்க இவ்வார்த்தையைக் கேட்

கின் நீர்போல் தோன்றுகின்றது; ஆயினும் என்னை ஒரு பொருட்டாய் நினைத்துக் கேட்பதனால் சொல்லுகின்றேன் கேளுங்கள். இந்தச் சரீரம் நீர்க் குமிழியைப் போன்ற தென்று எண்ணுமல் நித்தியமானதென் றெண்ணி இத்தேக ரக்ஷணார்த்தத்திற்கு குடிசை யிருந்தால் உம்மைத் துதி செய்ய லோபம் உண்டாகாதோ? சகல பிரபஞ்சத்தையும் சிருஷ்டிக்கவும் ரக்ஷிக்கவும் சம்ஹாரம் செய்யவும் நீர் கர்த்தராயிருக்க இதில் அடியேனுக்கு என்ன சம்பந்தமிருக் கின்றது? தேகாபிமானம் உள்ளவரையில் அஞ்ஞானம் நசிக்காதல்லவா? பூர்வ கர்மங்களினால் அபிமானம் உண்டா கின்றது. அப்படிப்பட்ட அபிமானத்தை நிவர்த்தி செய் வதே ஞானமென்று முன்னமே நீர் ஒருமுறை சொல்லி யிருக்கின்றீர். ஆதலால், தேகத்திற்குப் போஷணார்த்தம் அனுவசியமென்று தோன்றியபடியால் அதன் விஷயமாய் பிரயத்தின மொன்றும் செய்யவில்லை" என்று சொல்லினர்.

அதற்கு விஷ்ணுமூர்த்தி மிகவும் சந்தோஷித்து பர தத்வமான உபதேசங்கள் சிலவற்றை எண்கோண ரிஷிக்கு உபதேசித்து, எண்கோணரிஷி சொல்லிய வாக்கியமே சத்தியமானதென்று நிரூபித்து நான் சென்று வருகின் றேன் என்று ரிஷியினிடம் பகவான் சொல்லினர். அதற்கு ரிஷியானவர் மிகவும் வியசனமடைந்து "தேவரீருடைய சேவை இனி எப்பொழுது லபிக்குமோ, எப்பொழுது யான் தன்னியனுவேனோ?" என்று சொல்லிக்கொண்டே சிலதூரம் சென்று வழிவிட்டுப் பிறகு தன்னிருப்பிடம் சேர்ந்து பிரம்மானந்த மனுபவித்துக் கொண்டிருந்தார். பிறகு விஷ்ணுமூர்த்தியும், பிரமதேவரும் பரமபதம் போய்ச் சேர்ந்து, விஷ்ணுமூர்த்தி மாணிக்க மண்டபத்தி லுள்ள திவ்விய சிம்மாசனத்தின்மீது எழுந்தருளி பிரம தேவரைப்பார்த்து,

"ஐயா! பிரமதேவரே! நான் சொல்லப்போகும் விஷயங்களைச் சாவதானமாய்க் கேட்கக்கடவீர்; இந்திரியங்களை ஜயித்து அஞ்ஞானமென்னும இருளைச் சுட்டறுத்து, ஞானமென்னும் சூரிய பிரபையினால் ஜோதியை ஆநந்தமாய் தரிசித்த பரம பக்தர்களான ஜீவன்முக்த சத்புருஷர்களை நீ சேவித்து, அவர்களின் வசனாமிருதங்களைக் காதுகளால் கேட்டீரல்லவா? உமது பூர்வ புண்ணிய விசேஷத்தினால் அந்த மஹானுபாவர்களின் சேவை உமக்கு லபித்ததேயொழிய மற்றப்படிக்கு வேறல்ல. இனியாகிலும் பக்தியுடன் இருக்கக்கடவீர். உலகத்தில் அஹங்காரத்துடன் இருந்தவர்கள் இதுவரையில் யாராகிலும் கடைத்தேறி இருக்கின்றார்களா? அப்படிப் பட்டவர்களுக்கு அதோகதியே யொழிய சத்கதி (நல்லகதி) உண்டாக மாட்டா. எப்படிப் பட்டவர்களா யிருந்தபோதிலும் கர்வம் கெடுத்துவிடும். ஆதலால், நீர் கர்வத்தை விட்டு விடுவதே மிகவும் சிரேஷ்டமானது" என்று அஹங்கார நிராகாரங்களைக் குறித்துச் சற்றுநேரம் உபந்நியசித்தார்.

பிரமதேவர் அவ் வாக்கியங்களைக் கேட்டவுடனே, அறிவுண்டாய் விஷ்ணுமூர்த்தியை நமஸ்கரித்து, "தேவ தேவோத்தமா! தேவகிநாதா! என் இருதய ஆகாசத்தை மூடிக்கொண்டிருந்த அஹங்கார விகார காடாந்தகாரங்களெல்லா (இருளெல்லா)ம் தேவரீருடைய கடாக்ஷ வீக்ஷண்ய மென்னும் பிரகாசத்தினால் நீங்கி ஞானோதயமாயிற்று. லோகாபிமான பாசத்திலிருந்து விடுபட்டு முமூக்ஷுவானேன்" என்று விஞ்ஞாபனம் செய்து பகவானிடம் செலவு பெற்றுக்கொண்டு தன் லோகத்திற்குச் சென்றுவிட்டார்.

நாயனா! குமாரா; இவ்வளவு நீண்ட ஆயுர்பாகமுடைய பிரமதேவர் கண் ரெப்பையை மூடுவதற்குள், மானிட

ஜனனமெடுத்த மானவர்களெல்லோரும், கணக்கில்லாத அனேககோடி ஜன்மங்களை எடுத்து மாயா சக்கரமாகிய ஸம்ஸார சக்கரத்தில் அகப்பட்டு, பிரதிதினம் செய்து கொண்டிருக்கும் காரியங்களையே செய்துகொண்டு பிரதி தினம் இருபத்தினாலுமணி சேரமும் இஹலோக சுகமாகிய தன்மனைவி மக்களுக்கு ஆஸ்தி சேர்த்துக்கொண்டு, ஒரு நிமிஷமாகிலும் எந்த ஈசுவரத் தியானமும் இல்லாமல் இருந்து, ஜனனமரணங்களை அடைந்துகொண்டே வருகின்றார்கள். இந்த சம்சாரமென்னும் மாயாசக்கிரத்தில் நாரதர் அகப்பட்டுக்கொண்டு பட்டபாட்டை, ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனன் சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 5, சுலோகம் 15-ல், சொல்லியிருக்கின்றோம். அதை இவ்விடத்திலும் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

நாதத்தே கஸ்யசித் பாபம் நசைவ ஸுக்ருதம் விபுஃ
அஜ்ஞாநே நாவ்ருதம் ஜ்ஞாநம் தேந முஹ்யந்தி ஜந்தவஃ.

கிருஷ்ணன்:—ஆம். அவனவன் செய்யும் புண்ணிய பாபங்கள் ஈசுவரனைச் சேரமாட்டா. ஜீவர்களையேசேரும்.

அர்ஜுனன்:—இதென்ன அநியாயம்! ஈசுவரன் கர்மங்களினுடைய பலன் ஜீவர்களுக்குக் கொடுக்கவில்லை என்றும், ஜீவர்களுக்குச் சம்பந்தித்திருக்கும் மாயையே அந்தக் கர்மங்களைச் செய்கின்றதென்றும் நீர் இதற்குமுன் சொன்னீரல்லவா? அப்படியிருக்க கர்த்திருத்துவமில்லாத ஜீவனுக்கு, மாயையினால் செய்யப்படும் கர்மங்களினுடைய பலன்களாகிய புண்ணிய பாபங்கள் எப்படிச்சேரும்?

கிருஷ்ணன்:—அஃதெப்படி என்றால், ஜீவன் தான் ஒன்றும் செய்யாவிடினும், மாயையினால் செய்யப்படும் கர்மங்களைத் தான் செய்வதாய் எண்ணுகின்றான். அதனால் அந்த கர்மத்தைத் தன்மீது போட்டுக்கொள்கின்றான். இப்படிச் செய்வதே 'அஹங்கார' மென்று சொல்

லப்படும். இந்த அஹங்காரத்தினுல் அந்த கர்மபலன்கள் அவனைச் சேருகின்றன.

அர்ஜுனன்:—ஐயோ பாபம்! இந்த ஜீவன் நிர்நிமித்தமாய்த் தான் செய்யாத கர்மங்களைத் தன்மேல் சுமத்திக் கொண்டு அதனுல் என் பந்தத்தில் அகப்பட்டுக் கொள்ள வேண்டும்?

கிருஷ்ணன்:—அஞ்ஞானத்தினுல் அப்படிச் செய்கின்ருன். இந்த அஞ்ஞானத்திற்கே அவித்தை என்றும் பெயருண்டு. இதனுல் சமஸ்த ஜந்துக்களினுடைய ஞானம் மூடப்பட்டிருக்கின்றது. இந்த அஞ்ஞானத்தினுல் மோசம்போய் அஹங்காரத்தை வஹித்து அதனுல் பந்தப்பட்டிருக்கின்ருன்.

அர்ஜுனன்:—அந்தமாயை யாரால்கல்பிக்கப்பட்டது?

கிருஷ்ணன்:—ஈசுவரனுல் கல்பிக்கப்பட்டது.

அர்ஜுனன்:—அப்படியானுல், ஜகத் சிருஷ்டிக்குக் கர்த்தாவாகிய ஈசுவரனே இந்த மாயையை உண்டாக்கி அதனுல் ஜீவர்களை மோஹிக்கச் செய்துகொண்டு அதன் மூலமாய் அவர்களைக் கர்ம பந்தர்களாகச் செய்வித்துத் தான் எதுவும் செய்யாதவனைப்போல் எந்த பலன்களையும் பற்ருமல் விலக்ஷணனுய் எப்படி யிருக்கலாம்?

கிருஷ்ணன்:—ஈசுவரன் ஜீவர்களையும் மாயையும் சிருஷ்டி செய்தது வாஸ்தவமே! ஆனுல், மாயையினுல் கட்டப்பட்டிருக்கும் ஜீவர்களுக்கு, அந்த மாயையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் சக்தியையும் கொடுத்திருக்கின்ருர். அதுவே புத்தி என்று சொல்லப்படும். எந்த ஜீவனுக்கு மானிட ஜன்மம் வருகின்றதோ அப்பொழுது புத்தியைச் சரியாய் உபயோகப்படுத்தித், தன்னுடையவும் மாயையினுடையவும் சுபாவத்தைச் சரியாய்த் தெரிந்துகொண்டவனுய் ஸமஸ்த கர்மங்களுக்கும் மாயையின் சம்பந்தமே

என்றும், அவைகளினால் தனக்கு யாதொரு சம்பந்தமு மில்லை என்றும் அறிந்துகொண்டு எவனெவன் நடக்கின் றானோ, அப்படிப்பட்டவன் அந்த மாயையிலிருந்து நீங்கின வனாகின்றான். அப்படிப்பட்டவன், அந்த கர்மத்திற்குப் பாத்திரனாகமாட்டான். அப்படிச்செய்யாமல் எந்த ஜீவன் மனுஷ்ய ஜன்மம் அடைகின்றதோ அந்தஜீவன், பகவான் கொடுத்திருக்கும் புத்தியைச் சரியாய் உபயோகப்படுத்தா மல், 'அஹங்கார' 'மம' காரமுடையவனாய் மாயையால் செய்யப்படும் காரியங்களை எல்லாம் தானே செய்வதாய் நினைத்துக் கொள்ளுகின்றானோ அப்படிப்பட்டவன், மத யானை தன் தலையில் தானே மண்ணைவாரிப் போட்டுக் கொள்வதுபோல், மாயையினால்செய்யப்படும் கர்மங்களைத் தன்னில் உண்டாக்கிக்கொண்டு, அதனால் கர்மபத்தனாய் அந்தக் கர்மங்களின் பலாபலன்களை அனுபவிக்கின்றான். பகவான் அவனைக் கர்மபத்தனாய்ச் செய்வதில்லை. இதற் கோர் திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன் கேள்.

ஓர் யஜமான் இரண்டு சேவர்களை அழைத்து "நீங் கள் இருவரும் தாமரைத் தடாகத்திற்குச்சென்று தாமரை யிலைகளும் புஷ்பங்களும் கொண்டுவரவேண்டும்' என்று சொல்லி "அந்தத் தடாகத்தில் தாமரைக் கொடிகளும் அல்லிக்கொடிகளும் மிகவுமுண்டு, அவைகள் காலில் சுற் றிக் கொண்டால் நீங்கள் எவ்வளவு நீஞ்சல் கற்றவர்களா யிருந்த போதிலும் அது பிரயோஜனப் படமாட்டா. ஆத லால், நீங்களிருவரும் இவ்விரண்டு கத்திகளையும் கொண்டு போய் கொடிகள் காலில் சுற்றிக்கொள்ளும்போது அவை களைக் கண்டித்து விடுங்கள்" என்று சொல்லி இருவருக் கும் இரண்டு கத்திகளைக் கொடுத்தனுப்பினான். இருவர் களில் ஒருவன் தன் யஜமான் உத்திரவின்படி கத்தியை மற வாமல் எடுத்துக்கொண்டுபோய், காலில் சுற்றிக்கொண்ட

கொடிகளை எல்லாம் கண்டித்துக்கொண்டு அந்தக் கொடிகளால் கட்டுப்படாமல் இலைகளையும் புஷ்பங்களையும் பறித்துக்கொண்டு வந்தான் மற்றொருவனோ அப்படிச் செய்யாமல், யஜமான் கொடுத்த கத்தியை வீட்டில் வைத்து மறந்து சென்று கையில் ஆயுதமில்லாமலே தடாகத்திலிறங்கிச் சென்றவுடனே, கொடிகள் காலில் சுற்றிக்கொண்டபடியால் நீந்துவதற்குச் சக்தியில்லாமல் தத்தளித்துத் தடுமாறி பிராணனை விட்டான். இப்படியாய் பிராணனை விட்ட இவனுடைய மரணத்திற்குக் காரணபூதன் யஜமானா? அல்லது தானே யாகின்றானா?

அர்ஜுனன்:—யஜமான் காரணபூதனல்லன். ஏனென்றால் அவனை அந்த தடாகத்திற்கு அனுப்பும்போதே அவ்விடத்திலுள்ள கொடிகளின் விஷயங்களைச் சொல்லியும் அதை நிவர்த்தி செய்துகொள்வதற்குத் தகுந்த ஆயுதமும் கொடுத்தனுப்பினான். ஆனால், அந்த ஆயுதத்தை அவன் உபயோகப் படுத்திக்கொள்ளாமற் போனதனால் அந்த தோஷம் யஜமானனைப்பற்றாது.

கிருஷ்ணன் :—ஆனால், அந்த சங்கதி அறியாதவர்கள் என்ன சொல்வார்கள் ?

அர்ஜுனன்:—அந்த யஜமானனே அவன் மரணத்திற்குக் காரணபூதனென்று சொல்லுவார்கள்.

கிருஷ்ணன்:—அதுபோல், இந்தப் பிரபஞ்சத்திலுள்ள மனிதர்களும், அஞ்ஞானத்தினால், அவர்கள் அனுபவிக்கும் பலன்களுக்கு ஈசுவரன் காரணபூதனாய் இருக்கின்றானென்று எண்ணிக் கொள்ளுகின்றார்கள்.

அர்ஜுனன்:—ஆனால் பிரதி ஜீவனுக்கும், மானவ ஜன்மம் உண்டானபோது, மாயையை நிவர்த்தி செய்து கொள்ளச் சாதனமாகிய புத்தியை பகவான் கொடுத்திருக்க அப்புத்தியினால், மாயையை உதறிவிட்டு

மோக்ஷத்தை அடையத்தக்க பிரயத்தினத்தைச் சுலபமாய்ச் செய்யலாமல்லவா? அப்படியிருந்தும் அதுபோல் செய்பவர்கள் மிகவும் அரிதாய் இருக்கின்றார்கள்; என்றால், லக்ஷத்தில் ஒருவன் இருப்பதும் அரிதாயிருக்கின்றதே! அதற்குக் காரணமென்ன ?

கிருஷ்ணன்:—ஓ ஹோ ! மாயையை ஜயிப்பது சுலபசாத்தியமென்று நீ எண்ணிக் கொண்டாய்ப்போல் தோன்றுகின்றது. அந்த மாயா சக்தியைக் குறித்து ஓர்கதை சொல்லுகின்றேன் கேள்;

அர்ஜுனா ! பகவானுன என்னிடம் ஒரு சமயம் நாரதர் வந்து, "சுவாமீ ! எனக்கு மாயையைக் காண்பிக்க வேண்டுமென்று கேட்டனர். அதற்குப் பகவானுன நான், அப்படியே ஆகட்டுமென்று கூறிச் சும்மாயிருந்தேன். சில நாள் சென்றபிறகு ஒருநாள், நாரதரை என்னுடன்கூட ஓர் வனத்திற்குப் பிரயாணமாய் வரவேண்டுமென்று கேட்டேன்; அதற்கு நாரதர் சம்மதித்து இருவருமாக பிரயாணப்பட்டு அனேகதூரம் நடந்துவந்ததனுல் எனக்கு அதிக தாகமுண்டாயிற்று. அப்போது நாரதரைப்பார்த்து ஐயா! நாரதரே எனக்கு அதிக தாகமாயிருக்கின்றது. ஜலம் கொண்டுவாருமென்று அனுப்பினேன். நாரதர் உடனே ஜலம் கொண்டுவரச் சென்றார். அவர் போகும்வழியில், சற்றுதூரத்தில் கிராமம் ஒன்று தெரிந்தது. அக்கிராமத்தில் ஜலமகப்படுமென்று அங்குசென்றார். அவர் செல்லும் வீதியில் ஓர் பெரிதான மெத்தைவீட்டைக் கண்டு அவ்வீட்டின் கதவைத் தட்டினர். உடனே கதவைத் திறந்துகொண்டு அதிக அழகுடைய ஒரு பெண்மணி வந்து நின்றாள். நாரதர் அவளைக் கண்டவுடன் தாம்வந்த கார்யத்தை மறந்து, அப்பெண்ணுடன் வேடிக்கையாய்ப் பேச ஆரம்பித்து அன்றுமுழுதும் அவ்விடத்தைவிட்டு அவர் அசைய

வில்லை. மறுநாளும் அவ்விடத்திலேயே பேசிக்கொண்டிருந்தார். கண்ணன் ஜலம் கொண்டுவரச் சொன்னரே என்பதை அடியோடே மறந்துவிட்டார். பெண்ணுடன் பேசுவதே அவருக்கு ஆனந்தமாய் விட்டது. பேச்சு முற்றவே ஆசையுண்டாயிற்று. ஆசையினல், மோஹம் உண்டாயிற்று. மோஹத்தைத் தீர்த்துக்கொள்ளப் பெண்ணின் தகப்பனரிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு அப் பெண்ணை மணம் புரிந்து அவளுடன்கூடி இன்பமனுபவித்துக் கொண்டிருந்தார். இப்படியாகப் பன்னிரெண்டு வருஷங்கள் கழிந்தன. நாரதருடைய மாமனர் ஏதோ ஓர் வியாதி சம்பந்தத்தால் உலக வாழ்க்கையைத் துறந்தான். அவனுடைய சொத்துக்களெல்லாம் நாரதருக்குக் கிடைத்தன. விசேஷ தனமும் வீடும் நல்ல மனைவியும் தமக்கு நேர்ந்ததை எண்ணி, அதிக சுகமாக நாரதர் அக்கிராமத்தில் வாழ்ந்துகொண்டிருந்தார். அவர் அனேகங் குழந்தைகளைப் பெற்றெடுத்து அவைகளைச் சீராட்டி முத்தமிட்டு சம்சார சுகத்திலிருக்குங் காலத்தில் அக்கிராமத்திற்கு அடுத்த நதியில் வெள்ளம்வந்து இவரிருக்கும் கிராமத்திற்குப் புறண்டு வந்தது. அப்போது அவ்வூரிலுள்ள வீடுகளெல்லாம் வீழ்ந்து ஆடுமாடுகளையும் மற்றுமுள்ள ஜீவர்களையும் ஆற்றுவெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது. அப்போது நாரதர் தம் மனைவியை ஓர் கையிலும் இரண்டு குழந்தைகளை மற்றோர் கையிலும் மற்றுமிரண்டு குழந்தைகளை இரண்டு தோள்களின்மீதும் ஏற்றிகொண்டு வெள்ளத்தைத்தாண்டி அக்கரைச் செல்ல உத்தேசித்து நதியில் இறங்கிச் சென்றூர். பாதிநதி சென்றவுடன் மேல் வெள்ளம் அதிகமாய் வந்தபடியால் ஜலத்தின் உருட்டினல் எல்லாக் குழந்தைகளையும் மனைவியையும் இழந்து தான் மாத்திரம் மிகவும் கஷ்டத்துடன் நீந்தி அக்கரை ஏறினர்.

அந்தசமயத்தில் நாரதருக்கு எப்பேர்ப்பட்ட துக்கம் சம்பவித்திருக்கலாம்! அதை நீயே யோசித்துப்பார்! அந்த துக்கத்தை நாரதர் பொறுக்கமாட்டாமல் பூமியில் வீழ்ந்து ஓ! வென்று கூச்சலிட்டுப் புறண்டு கதறிஅழுதார். அத்தருணத்தில் கபடநாடக சூத்திரதாரியாகிய மாயவன் நாரதருடைய முதுகைத்தட்டி "ஐயா! நாரதரே! தாகம் தணிக்க ஜலமெங்கே" யென்றுகேட்டனர். ஜலம் கொண்டு வருகின்றேனென்று சொல்லிப்போய் இருபது வருஷம் சம்சாரத்தில் அகப்பட்டு அலைந்ததே மாயை. மனிதனுக்கு ஓர் விஷயம் கெட்டதென்று தெரிந்திருந்தாலும் அவ்விஷயத்திலேயே அவன் ஈடுபட்டிருப்பான். இப்படி ஈடுபட்டிருப்பதே மாயை. இந்த மாயையானது, எங்கும் பரிபூரணமாய் நிறைந்திருக்கும் ஆத்மாவை பற்றிக்கொண்டிருக்கும்.

அர்ஜுனன்:—ஆனால் சுவாமீ! ஆத்மா ஒன்றுதானே உள்ளது. மாயையொன்று ஆத்மாவுடன் சேர்ந்திருந்தால் வஸ்து இரண்டாகவில்லையா?

கிருஷ்ணன்:—ஆம். ஆத்மா ஒன்றென்பது உண்மையே. அதனுடன் மாயை என்பது ஒன்று சேர்ந்திருப்பதும் உண்மையே. ஆனால் வஸ்துக்கள் இரண்டாகவில்லை. எப்படியென்றால்; கயிற்றைப்பார்த்து பாம்பென்று பிரமை அடைகின்றான். அதனால் கயிறு ஒன்று பாம்பு ஒன்று ஆக இரண்டு பொருளாய்விடுமா? அது, இரண்டு பொருளானால் ஆத்மாவும் மாயையும் இரண்டு பொருளாகலாம். மேற்கூறிய உதாரணத்தால், கயற்றினிடத்துப் பாம்பு தோன்றினும் உற்று நோக்குங் காலத்தில் கயிறே சத்தியப் பொருளாயும், பாம்பின் தோற்றம் பொய்ப் பொருளாயும் போகின்றது. அதுபோல், உற்று நோக்காத தோஷத்தால் ஆத்மா ஒன்றும் மாயை யொன்றுமாய் இரண்டு பொருளாகத் தோன்றுகின்றது உண்மையாய் விசாரிக்கு

மளவில் ஆத்மா யதார்த்தப் பொருளாயும், மாயை தோற்றப் பொருளாயும் முடிகின்றது. ஒரே பொருள் பிரமையினால் பாம்பாகவும், பிரமைநீங்கித் தெளிவை அடைந்தபோது கயிறாகவும் தோன்றுவதுபோல், ஒரே பொருள் மருட்க்ஷியினால் மாயையாகவும் அதாவது, ஜகத் ஜீவர்களாகவும் தெளிவை அடைந்தபோது ஆத்மாவாகவும் தோன்றுகின்றது. கயிறு பாம்பாகத் தோன்றுங்காலத்தில் தோற்றம், கயிறு, பாம்பு, ஆக மூன்று தோன்றுகின்றது. அதுபோல் ஆத்மா, மாயை, ஜகத்ஜீவபரங்கள் ஆக மூன்றுள்ளன. கயிறும், தோற்றமும், பாம்பும் வியவகாரத்தில் மூன்றாய் இருப்பினும் உள்ளது கயிறு ஒன்றேயாம். கயிறுள்ள இடத்திலேயே தோற்ற மிருக்கின்றது; தோற்றமுள்ள யிடத்திலேயே பாம்பிருக்கின்றது. அவ்வாறே ஆத்மா உள்ளயிடத்தில் மாயை இருக்கின்றது; மாயையிலேயே ஜகத்ஜீவ பரங்க ளிருக்கின்றன. ஆதலால், மாயாசக்தி ஆத்மாவைக் காட்டிலும் வேறல்ல. இந்திரஜால வித்தையானது, அவ்வித்தையைக் கற்ற வித்வானைத் தவிர வேறில்லை. ஜகத்ஜீவ பரங்களுக்குக் காரணமாகிய மாயாசக்தியும், சத்தனாகிய ஆத்மாவைக் காட்டிலும் வேறன்று. இந்திர ஜாலவித்தை செய்யும்போதும் செய்யாதபோதும் இந்திர ஜாலவித்வான் இருப்பதுபோல், மாயாசக்தி இருக்கும்போதும் இல்லாதபோதும் ஆத்மா இருக்கும். இந்திர ஜாலவித்தையே பொய். வித்வானே மெய். அதுபோல் மாயையே பொய். ஆத்மாவே மெய் என்று அறியக்கடவாய்.

அர்ஜுனன்:—மாயை பொய்யானால் உலகம் பிரத்தியக்ஷமாய்த் தோன்றிக் கொண்டிருக்கின்றதே! பொய் என்று எப்படிச் சொல்லலாம்.

கிருஷ்ணன் :—அர்ஜுனா! கானல்நீர் தோன்றிக்

கொண்டிருக்கிறதல்லவா? அந்த நீர் சத்தியமா? அல்லது அசத்தியமா? சத்தியமானால் ஸ்நாநம் செய்யவும் தாகம் தீர்க்கவும் உபயோகப்படவேண்டும். அஸத்தியமானால் நீ சொல்லியதுபோல் அது தோன்றுமலல்லவோ இருக்க வேண்டும்! எது சத்து மல்லாமல் அசத்து மல்லாமல் இருக்கின்றதோ அது, கடைசியில் இல்லாமற் பொய்யாகவே முடியும். ஜீவபரங்கள் தோன்றியபோதிலும் அவைகள் சத்தியமல்ல. ஆத்மாவே சத்தியமாகிய பொருளென்று அறியக்கடவாய்.

அர்ஜுனன்:—ஓ சுவாமீ! கானல்நீர் தோற்றம் மாத்திரமா யிருக்கின்றது. மாயையா லுண்டாகிய உலகமோ அப்படியல்ல; அது தோன்றிக்கொண்டே இருப்பதுடன் அதிலுள்ள சுகதுக்கங்களை பிரத்தியக்ஷமாய் அனுபவிப்பதைக் காண்கின்றோம். அதை கானல் நீர்போல் அசத்தியமென்று எப்படிச் சொல்லலாம்.

கிருஷ்ணன்:—சொப்பனத்தில் காணும் உலகம் சொப்பன உலகமென்று சொல்லப்படும். சொப்பன உலகிற்கு ஆதாரம் மனதேயாம். மனதினால் உண்டாகிய சொப்பன உலகில் சப்த ஸ்பரிச ரூப ரச கந்தங்கள், அதாவது, சப்த (காதுகளினால் கேழ்ப்பது) பரிச (தேகத்தின்மீதிருக்கும் சர்ம(தோல்)மூலமாய் தொட்டு அறிவது) ரூப(கண்களால் பார்ப்பது) ரச (நாவினால் ருசி அறிவது) கந்த (மூக்கினால் வாசனை யறிவது) இவைகளினால் அனுபவிக்கின்றன. அதெப்படி என்றால், ஓர் காதலன் தான் நெடுநாளாய் ஆசைகொண்டிருந்த ஓர் காதலியை சொப்பனத்தில் கண்டு அவளை ஆலிங்கனம்செய்து அவளுடன் இன்ப சுகத்தை அனுபவிக்கின்றான். அப்போது அவன் அந்தக் காதலியையும் அவளால் உண்டாகிய சுகத்தையும் சத்தியமென்றே நினைக்கின்றான். சொப்பனம் நீங்கி விழித்தவுடன் அவ்வள

வும் பொய்யாய்ப் போகின்றதைக்கண்டு, அக்காதலன் மனம் நொந்து அவஸ்தைப் படுகின்றான்; உலக அனுபவமும் இவ்வாறே. எப்படி சொப்பன உலகம் ஜாக்கிர உலகை நோக்கப் பொய்யாயிற்றோ அதுபோல், ஜாக்கிர உலகும் ஆத்மாவை நோக்கப் பொய்யாகும். கயிற்றில் பாம்பும், கானல் நீரும், சொப்பன உலகமும் அந்தந்தக் காலத்தில் உண்மையாயும் அனுபவமாயும் இருந்தாலும், அந்தந்தக் காலங்களில் அவைகள் எப்படிப் பொய்யோ அப்படியே, இந்த உலகமும் உண்மைபோல் தோன்றி அனுபவத்திற்கு வந்தாலும் பொய்யேயாகும்.

அர்ஜுனன்:—ஆனால் இப்பொழுது நீர் சொல்லிய விஷயத்தை யோசித்துப் பார்த்தால் மனுஷ்யர்களில் யாரும் இந்த மாயையை ஜயிக்கமாட்டார்கள்போல் தோன்றுகின்றது. அத்யாயம் 5. சுலோகம் 16.

ஜ்ஞானேந து தஜ்ஞானம் யேஷாம் நாஶித மாத்மந:
தேஷா மாதித்யவ ஜ்ஞானம் ப்ரகாஶயதி தத்பரம்.

கிருஷ்ணன்:—அர்ஜுனா! நீ அப்படிச் சொல்லவேண்டாம். மாயையை ஜயிப்பது மிகவும் கஷ்ட சாத்தியமே. எல்லோரும் அப்படி ஜயிக்கமாட்டார்களென்று சொல்லலாகாது. மாயையை ஜயிப்பதற்கு புத்தி என்னும் சக்தி ஒன்றை பகவான் பிரதி புருஷனுக்கும் கொடுத்திருக்கின்றாரென்று இதற்குமுன் சொல்லி யிருந்தேனல்லவா? அதை அநேகர்கள் சரியாய் உபயோகப் படுத்தாவிடினும் அங்கங்கே ஒருவராயினும் அதைச் சரியாய் உபயோகப் படுத்திக்கொண்டு வருகின்றார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு ராகத் துவேஷாதிகள் நீங்கிவிடும். எப்பொழுது அவைகள் நீங்கிவிடுகின்றனவோ அப்பொழுது அவர்களுக்கு ஞானோதயமாகின்றது. அப்படிப்பட்ட ஞானம் எப்பொழுது உண்டாகின்றதோ அப்பொழுது சூர்யோதய மான

வுடனே, அதுவரையில் இருளில் திருஷ்டிக்குக் காணப்படாத வஸ்துக்களெல்லாம் எப்படி ஸ்பஷ்டமாய்க் காணப்படுகின்றனவோ, அதுபோல் அதுவரையில் அனுதியாய் வந்துகொண்டிருக்கும் ஆகாம்யத்தினல் உண்டாகிய சஞ்சிதமென்னும் மூட்டை எந்த ஞானத்தினுலே அதாவது, ஆத்மசொரூப விஷய ஞானத்தினுல்,(பஞ்சுப் பொதிகளில் நெருப்புப்பொறி பட்டவுடன் பொதிகளெல்லாம் பஸ்மமாவதுபோல்) நசிக்கப் படுகின்றதோ, அப்படிப் பட்டவர்களுக்கு சூர்யனுடைய பிரகாசம்போல் சகலத்தையும் பிரகாசிக்கச் செய்கின்றது. அப்போது அஞ்ஞானத்தினுல் மனே திருஷ்டிக்குக் காணப்படாமலிருந்த பரப் பிரம்ம சொரூபம் ஸ்பஷ்டமாய்க் காணப்படும். அதனுல் ஸம்ஸாரபந்தம் நீங்கிவிடும். இங்கு சொல்லவேண்டிய விஷயம் இவ்வளவேயாம். இதற்குமேல் விஷயங்கள் இந்நூலாசிரியரால் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதையில் விரிவாய்க்காணலாம். அத்யாயம் 9, சுலோகம் 7.

ஸர்வபூதாநி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம்
கல்பக்ஷயே புநஸ்தாநி கல்பாதௌ விஸ்ருஜாம்யஹம்.

ஓ அர்ஜுனா! பிரம கற்பத்தின் முடிவாகிய பிரளய காலத்தில் சகல சராசர பிரபஞ்சங்களும் ஈசுவரனுகிய எனது மாயையில் கலந்து லயமாகின்றன. பிறகு சிருஷ்டி காலத்தில் மறுபடியும் அவைகளை நான் சங்கல்பித்து (நினைத்து) சிருஷ்டி செய்கின்றேன்.

என்றுல், ஞானமடையாத ஜீவகோடிகளெல்லாம் பிரளயத்தில் எங்கு அடங்கியிருக்குமென்றுல், தட்டான் குந்தனவேலை செய்யும்பொழுது அணு அதாவது, கெம்புமத்தியில் புதைத்துவைத்த தங்கரேக்குகளை, சிறிய சலகையினுல் (உளியினுல்) செதுக்கும்போது சிதறிவிழும் சிறிய

தங்கங்களை எல்லாம் மெழுகில் ஒற்றியபோது, அது எவ் விதமாய் மெழுகில் பிடித்துக் கொள்ளுகின்றதோ, அது போல் பிரளயத்தில் ஜீவர்களெல்லோரும் அந்த பிரம்மத் தில் ஒட்டிக்கொண்டிருந்து மறுபடியும் பிரளயம் முடிந்த வுடன், மளிகைக்கடை வர்த்தகன் இரவில், உப்பு மிளகாய் புளி பருப்பு முதலாகிய கூடைகளை எடுத்து, ஒன்றின்மீது ஒன்றைவைத்து கடையைப்பூட்டி வீடுசென்று போஜன முண்டு நித்திரை செய்கின்றான்: அதுவே பிரளயமாக நினைக்கவேண்டும். மறுபடியும் பொழுது விடிந்தவுடன் கடையைத்திறந்து,உப்புக்கூடை யிருந்தயிடத்தில் உப்புக் கூடையும் மிளகாய் புளி பறுப்பு முதலிய கூடைகள் இருக்க வேண்டிய இடங்களில்,அவ் வவைகளை அந்தந்த இடத்தில் வைப்பதுண்டு. அதுபோல் பிரளயம் முடிந்தவுடன் எவ ரெவர்களை எங்கெங்கு சிருஷ்டி செய்யவேண்டுமோ அவ ரவர்களை ஆங்காங்கு சிருஷ்டி செய்கின்றனர். இதற்கு உபதேசகாண்டமும் ஸ்ரீ பகவத்கீதையும் பிரமாணம்;

முற்றொடுங்கிய காலமா பிரளய
　　முற்றுற வெந்தை யெம்பெருமா
னிற்று றுவுயிர்த் தொகையெலாந்
　　தன்னுழைக் கரந்தன னற்றைநா ளிரவிற்
கற்றைவார்குழற் சத்தியொ டருநடத்
　　தாண்டவங் கருணையிற் புரியு
முற்ற கங்கலீ றெம்பிரா
　　னிறப்புறு ஞானசத் தியைப்புரிந் துதவும்.

வாமமேமுதற் சைவமீ றுட்படு
　　சமயங்க ளாறையும் வகுத்துக்
காமரண்டமெண் ணிறந்தன புரிந்துமும்
　　முதன்மையா யாரையுங் காட்டித்

தோமின் முத்தொழி லவர்க்களித்
திருத்திரகணங்களைத் தொகுத்துவா னவரை
மாமுனிப்பெருந் தலைவரை மக்களை
மரங்களை மலைகளை வகுத்து.

ஆறொடைந்தெனு முருத்திர ருருத்திர
கணங்கள்பூ தங்கண்மற் றசுரர்
மாறில்பல்லுயிர்த் தொகுதிக ளாங்கவை
வழங்குறு புவனங்கள் யாவு
மூறுசிந்தையி னினைத்துள வாக்கிமற்
றுள்ளவை யாவையு மொருங்கவ்
வாறுசத்தியுண் டாக்குற வருத்தியாங்
கவையெலாம் வந்துழி மகிழும்.

இதம் ஞாநமுபாஶ்ரித்ய மம ஸாதர்ம்யமாகதா:
ஸர்கேபி நோபஜாயந்தே ப்ரளயே ந வ்யதந்திச.

அத்யாயம் 14, சுலோகம் 2, பிரளயகாலத்தில் சகல ஜீவர்களும் எனது மாயையில் அடங்கியிருந்து, மறுபடியும் சிருஷ்டிகாலத்தில் தம் தம் பூர்வ வாசனையின்படி அங்கங்கு ஜனனமெடுத்துப் பிறகு மாயையிலிருந்து விடுபட்டவர்கள், மறுபடியும் ஜனன மரணங்களில்லாமல் நிர்வாண (வெட்டவெளி) சுபாவமாகிய எனது சொரூபத்தை அடைவார்கள். இவ்வாறு அடையப்பட்டவர்களுக்கு நான் எப்படிப்பட்ட குருவாயிருக்கின்றேனென்றால். இதற்குத் திருஷ்டாந்தம் அத்யாயம் 10, சுலோகம் 11.

தேஷா மேவாநுகம்பார்த்த மஹ மஜ்ஞாநஜம் தம:
நாஶயா ம்யாத்மபாவஸ்தோ ஜ்ஞாநதீபேந பாஸ்வதா.

அவனவன் அஞ்ஞானத்தினாலுண்டான பொருளெனக் காட்டும் சம்சாரமென்னும் தமோயிருளை, பிரகாசித்துக்கொண்டிருக்கும் ஞானவிளக்கினால் அனுக்ரகிக்கும் குருவாகவும், உயிருக் குயிராகவும் நான் இருந்து சம்சார

பந்தத்தை நாசம் செய்கின்றேன் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

அப்பா நாயனு குழந்தாய்! நீ முன்கேட்ட விஷயங்களை எல்லாம் எதற்காக விசாரித்தாய்?

சிஷ்யன்:—சுவாமீ! மோக்ஷமடையும் பொருட்டு விசாரித்தேன்.

குரு:—மோக்ஷமென்றுல் விடுதலை. விடுதலை என்றுல் இதற்குமுன் ஏதாகிலும் ஓர் பிடிப்பு இருக்கவேண்டும். பிடிப்பு என்றுல் பந்தம்; மோக்ஷமடைய விருப்பங்கொள்ளும் நீ, இருபத்துநான்கு தத்துவங்களில் எந்தத் தத்துவம் உன்னைப் பிடித்துக்கொண்டிருக்கின்றதோ அதைஅறிந்து, விடுதலை செய்துகொள்ள வேண்டியதேயொழிய மாயை அஞ்ஞானம் ஜகத் சிருஷ்டி முதலானவைகளை விசாரிப்பதனுல் பிரயோஜனமில்லை.

சிஷ்யன்:—எனக்கு எதனுல் ஞானமில்லை.

குரு:—சிஷ்யா! சிவப்பு, கறுப்பு, வெளுப்பு, ருசி அருசி, பக்குவம், அபக்குவம், லாபம், நஷ்டம், நியாயம், அந்யாயம் முதலானவைகளை ஞானமில்லாமல் நீ எப்படி அறிகின்றுய்! உனக்கு ஞானமில்லாவிடில் அஞ்ஞானத்தினுல் அறிந்தாயா அல்லது ஞானத்தினுல் அறிந்தாயா?

சிஷ்யன்:—சுவாமீ! எனக்கு ஞானமிருப்பதாகவே ஏற்படுகின்றது. ஞானமென்றுல், எதுவோவென்றிருந்தேன். எனக்கு பிரம்மஞானமில்லை என்று தோன்றுகின்றது.

குரு:—பிரம்ம ஞானமென்று ஒன்றும், இந்திரிய ஞானமென்று ஒன்றும், சந்திர ஞானமென்று ஒன்றும் உண்டோ?

சிஷ்யன்:—சுவாமீ! அது அறியாத் தன்மையினுலல்லவோ கேட்க நேர்ந்தது. எந்த மார்க்கத்தை அனுஷ்

டித்தால் மோக்ஷமாகிய நித்தியானந்த பதவியை அடைவேனோ அம்மார்க்கத்தை அடியேனுக்கு அனுக்கிரகிக்க வேண்டும்.

குரு:—எந்தக் காரணத்தினால் உன்கால் நொண்டியாயிற்றோ அதை ஆலோசித்துப் பார். அப்படிப் பார்ப்பதே ஞானமார்க்கம். "ஸ்ரத்தாவாந் லபதே ஜ்ஞாநம்" என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லியிருப்பது போல் சிரத்தையுடைய புருஷன் ஞானமும் மோக்ஷமும் அடைவான்.

சிஷ்யன் தத்வங்களைப் பரிசோதனை செய்தல்.

சிஷ்யன்:—என் கால் எந்தக் காரணத்தினால் நொண்டியாயிற்றோ அதை ஆலோசித்துப்பார் என்று ஆசாரியர் சொல்லி யிருக்கின்றாரல்லவா? அதை இப்பொழுது ஆலோசிக்கலாம்.

என் கால் நொண்டியா யிருக்கின்றதே, இந்த நொண்டிசரீரம், நானே சிருஷ்டித்துக்கொண்டதல்ல. அப்படி நானே சிருஷ்டித்துக் கொள்ளும் பக்ஷத்தில் என் இஷ்டம் போல் நல்ல சரீரமாய் சிருஷ்டித்துக் கொள்வேனல்லவா? என் தாயின் கர்ப்பத்திலேயே யல்லவா இந்த நொண்டி சரீரம் எனக்குண்டாயிற்று.

என் தாயின் கர்ப்பத்தில் பிரவேசித்து என் காலை நொண்டியாய்ச் செய்வதற்கு மனுஷ்யர்களால் ஆகமாட்டாதல்லவா? நான் முன்செய்த பாப கர்மத்தினால் என் தாயின் கர்ப்பத்திலேயே என்னை எவரோ சிக்ஷை செய்ததாய் ஏற்படுகின்றது. ஆதலால், அப்படி சிக்ஷை செய்தவரே சர்வத்திற்கும் அதிகாரியான ஈசுவரனென்று அறிய வேண்டும்.

கர்ப்பத்திலேயே என்னை சிக்ஷித்திருப்பதால் இதற்கு முன்ஜன்மத்தில் நான் செய்த பாப கர்மத்திற்காக என்னை சிக்ஷித்தார்போல் தோன்றுகின்றது.

இந்த ஜன்மத்தில் நான் பாபம் செய்தால், மறு ஜன்மத்தில் எப்படிப்பட்ட சிக்ஷை எனக்கு ஏற்படுமோ தெரியவராது.

ஆனால், நான் முன் ஜன்மத்திலேயு மிருந்தேன்: இந்த ஜன்மத்திலேயு மிருக்கின்றேன்; வருகிற ஜன்மத்திலும் இருப்பேன். இது விஷயம் இப்படியே அந்தந்த ஜன்மங்களிலும் ஆலோசித்திருந்தால், மூன்று ஜன்மங்களும் தெரிய வரும். இந்த மூன்று ஜன்மங்களிலும் நான் இருப்பதாய் ஏற்படுகின்றது. ஆதலால், நான் நித்தியன்.

இதற்கு முன்ஜன்மத்தில் நான் இல்லாம லிருக்கும் பக்ஷத்தில் எனக்குப் பாபமிராது. பாபம் இல்லாவிட்டால் என் கால் நொண்டியாயிராது. பாபம் செய்யாதவனை சிக்ஷிப்பதற்கு நியாயமில்லை. பாபம் செய்யாதவனை சிக்ஷித்தால், அவன் ஈசுவர னாகமாட்டான்.

நான் முன்ஜன்மத்தில் மரணமடைந்திருந்தால், இந்த ஜன்மத்தில் எப்படிப் பிழைத்திருப்பேன்? மரணமென்றால், இந்த சரீரத்தைவிட்டு மற்றொரு சரீரத்தில் ஆத்மா பிரவேசிப்பதேயாகும். (ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 2. சுலோகம் 22. பார்க்க). நான் மறு ஜன்மத்தில் பசுவாய் ஜன்மித்தால் அப்பொழுது எனக்குக் கைகள் இருக்கமாட்டாதல்லவா? ஆதலால், கைகள் இந்த சரீரத்திலேயே நின்று விடுகின்றன. எனக்குக் கைகள் இருந்தால் நான் ஜன்மிக்கும் பசுவின் சரீரத்திலும் கைகள் இருக்கவேண்டும். அப்படியில்லாமல் அவைகள் இந்த சரீரத்திலேயே நின்றுவிடும். ஆதலால், கர்மேந்திரியங்கள் என்னைப் பிடித்துக்கொண்டிருக்க

வில்லை. கர்மேந்திரியங்கள் நானல்ல. கர்மேந்திரியங்கள் சரீர சம்பந்தமே யல்லாமல் அசரீரியாகிய எனக்குச் சம்பந்தமில்லை.

புழுவாய் ஜன்மித்தால் காதுகள் இல்லை. ஆதலால், அதுவும் சரீர சம்பந்தமே யல்லாமல் அசரீரியாகிய எனக்குச் சம்பந்தமானதல்ல. ஆதலால், ஞானேந்திரியங்கள் என்னைப் பிடித்துக்கொண் டிருக்கவில்லை.

விருக்ஷமாய் ஜன்மித்தால் இருபத்துநான்கு தத்வங்களும் இல்லை; இந்த இருபத்துநான்கு தத்துவங்களும் சரீரத்திற்கு சம்பந்தமே யல்லாமல், அசரீரியாகிய எனக்குச் சம்பந்தமானதல்ல. இந்த இருபத்துநான்கு தத்துவங்களும் என்னைப் பந்திக்கமாட்டா. எல்லா தத்துவங்களும் சரீரத்தையே பிடித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், விருக்ஷமானது எதை அறியுமென்றால் ஸ்பர்சத்தை மாத்திரம் அறிகின்றது. விருக்ஷமாய் ஜன்மித்தால் எல்லா தத்தவங்களும் நசித்து அறிவுமாத்திரம் சேஷித்து நித்தியமாய் இருக்கின்றது. சர்பங்களுக்குக் கண்கள் செவிகள் ஒன்றாயிருக்கின்றன. வௌவால் என்னும் பக்ஷிக்கு பிராணபானங்கள் ஒன்றாயிருக்கின்றன. இவ்விதமாய் அந்தந்த சரீரங்களுக்குத் தக்கபடி உயர்வு தாழ்வு யென்னும் ஸ்தான பேதமுண்டு. மனிதன் செய்யும் புண்ணிய பாபங்களுக்குத் தக்க சரீரம் ஏற்படுகின்றது. எதற்கும் ஸ்திரமான சரீரமேயில்லை. ஆதலால், சரீரம் நானல்ல. சரீரம் என்னைப் பந்தப்படுத்தவில்லை. நான் எப்படிப்பட்டவனென்றால், சரீரத்திற்கு உண்டாகும் சுகதுக்கங்களைத் தெரிந்துகொள்ளப்பட்டவன், ஆதலால் நான் அறிவுடையவனாகவே இருக்கின்றேன்.

பசுவாய் ஜன்மித்தால் புல்லை யல்லவோ புசிக்கவேண்டும். ஆதலால ஆகாரம் சரீர சம்பந்தமே யல்லாமல்

அசரீரியாயிருக்கும் எனக்குச் சம்பந்தமானதல்ல.

இந்த ஜன்மத்திலுள்ள தாய்தந்தைகள், மனைவி, புத்திரர்கள், புத்திரிகள் மரணமடைந்து மற்றொரு சரீர மெடுத்தபோது இவர்கள் எங்கு எவ்வித பந்துவா யிருப்பார்களோ, சத்துருவா யிருப்பார்களோ, மித்திரர்களா யிருப்பார்களோ, அல்லது எந்தத் தேசத்தில் ஜன்மிப்பார்களோ தெரியவராது. ஆதலால், இவர்களும் சரீர சம்பந்தமானவர்களே யல்லாமல் அசரீரியாகிய எனக்குச் சம்பந்தப் பட்டவர்க ளல்லர்.

இப்பொழுது இந்தச் சொத்துக்கள் என்னுடையதென்னும் எண்ணத்தினால் அண்டைவீட்டுச் சொத்தை அபகரிக்கக் கோருகின்றேன். அண்டைவீட்டில் நான் பிறந்தால் அப்போது, இந்தவீட்டுச் சொத்தை யல்லவோ அபகரிக்க அண்ணவேண்டும். ஆதலால், எனக்குச் சொந்தமாகிய சொத்துக்கள், இல்லை; இந்த சொத்துக்கள் சரீர சம்பந்தமே யொழிய அசரீரியாகிய எனக்குச் சம்பந்தமானதல்ல.

இந்த ஜன்மத்தில் நான் பிராமணனாய் ஜன்மித்திருக்கின்றேன். மற்றொரு ஜன்மத்தில் தீண்டாதவனாய்(சண்டாளனாய்) ஜன்மித்தால் இந்த வர்ணாசிரம தர்மம் அப்போதிராதல்லவா ? ஆதலால், இந்த வர்ணாசிரம தர்மம் சரீர சம்பந்தமாகவே இருக்கின்றன.

இப்பொழுது நான் சைவ மதத்திலிருந்து வைஷ்ணவ மதத்தைத் தூஷிக்கின்றேன். வைஷ்ணவனாய் ஜன்மித்தால் வைஷ்ணவ சின்னங்களைத் தரித்துக்கொண்டு சைவர்களை யல்லவோ தூஷிக்கவேண்டும். ஆதலால், மதங்களும் சரீர சம்பந்தமே யொழிய அசரீரியாகிய எனக்குச் சம்பந்தப் பட்டவைகளல்ல.

நான் ஜன்மித்த பதினோராவது நாள் புண்ணியாஹவாசனம் செய்து எனக்கு கிருஷ்ணனென்னும் பெயரை

என் தாய் தந்தையர்கள் வைத்தார்கள். இப்படிப்பட்ட பெயர்கள் முன் ஜன்மங்களில் எத்தனையோ பெயர்களை உடையவனுயிருந்தே னல்லவா? ஆதலால், எந்தப் பெயரும் எனக்குச் சொந்தமானதல்ல. பெயர்கள் சரீரத்திற்கே யொழிய, சொந்தமான பெயர் எனக்கு எதுவுமில்லை. ஆதலால் நான் நித்தியன். எனக்கு, ஆயுர்ப்பாகம் நூறு வருஷமென்றல்லவோ பிரமதேவன் சிருஷ்டித்தது. நான் அசுவமாய்ப் பிறந்தால் அசுவத்திற்கு முப்பத்திரெண்டு வருஷமல்லவா ஆயுர்ப்பாகம்? வேதத்தில் சரீரத்திற்கே ஆயுர்ப்பாகம் விதிக்கப்பட்டதே யல்லாமல் அசரீரியாகிய எனக்கு ஆயுர்ப்பாகம் விதிக்கப்படவில்லை. ஆதலால், நான் சதா மோக்ஷத்திலேயே இருந்துகொண்டிருக்கின்றேன்.

இதுவரையில் நான் என் அறிவினுல் பரிசோதித்தபடியால் எந்தத் தத்துவங்களும் என்னைப் பிடித்துக் கொள்ளாமலிருப்பதால், நான் நித்தியனுய் ஞான சொரூபனுய் மாத்திரமே இருக்கின்றேன். ஞான சொரூபனென்று சொன்னுல், ஞானத்தை அறியவேண்டியவன் ஒருவன் இருக்கவேண்டுமல்லவா? அதைக் குறித்து இனி ஆலோசித்துப் பார்ப்போம்.

நான் நித்தியனுய் அசரீரியா யிருக்கும் எனக்கு, சரீரம் எப்பொழுது வந்ததென்றுல், பஞ்சபூத சிருஷ்டிக்குப் பின்னல்லவோ வந்திருக்கவேண்டும். இதற்குமுன் அதாவது பஞ்சபூத சிருஷ்டிக்குமுன் எனக்குச் சரீரமில்லாமல் இருந்ததென்று ஸ்பஷ்டமாய்த் தெரிய வருகின்றது. ஆதலால், நான் நித்தியனுயும் ஞான சொரூபனுயு மிருக்கின்றேனென்று முந்தியே சொல்லியிருக்கின்றேன். இந்த ஞான சொரூபமே அறிவாயிருக்கின்றது. அறிவு வேறு, அந்த அறிவை அறியப்பட்டவன் வேறு என்று சொல்வ

தற்கு இடமில்லை. எப்படியென்றால், சுவாலைவேறு அக்கினி வேறு என்று சொல்வதற்கு எப்படிக் கூடாமையோ, அது போல் அறிவுவேறு ஞானம்வேறு என்று சொல்வதற்குக் கூடாமையா யிருக்கின்றது. அக்கினியே சுவாலையாயும், சுவாலையே அக்கினியாயும், எப்படி யிருக்கின்றதோ, அது போல் ஞானமே அறிவாகவும் அறிவே ஞானமாகவும் இருக்கின்றது. இப்படிப்பட்ட ஞானமுடையவனே பரப் பிரம்மம்; அந்த பரப்பிரம்மமே நான்.

இதனாலேயே யல்லவா பிரம்மஞானம் பரமாத்மா வென்றும், தத்வமஸி என்றும் வேதங்களில் சொல்லி யிருப்பதுமே யன்றி "ததேகோவசிஷ்டஃ சிவஃகேவலோ ஹம்," என்று ஸ்ரீ சங்கரா சாரியரும் சொல்லி யிருக்கின்றார். "சிவோஹம்," என்று இந்த அர்த்தத்தை அநுசரித் துச் சொல்லியிருக்கின்றது.

இப்படி அறிவாயிருக்கும் என்னை யாராயினும் அடிக் கலாமா, அல்லது கத்தியினால் வெட்டலாமா, அக்கினியால் தகிக்கலாமா, ஜலத்தினால் நனைக்கலாமா, காற்றினால் அலை யச் செய்யலாமா? எந்தப் பஞ்சபூத வஸ்துக்கள் என்னை ஸ்பர்சிக்கும் (தொடும்)? நான், ஒருவன் கைகளுக்கும் கண்களுக்கும் கருத்துக்கும் அகப்படப் பட்டவனல்ல. அறிவாயிருக்கும் எனக்கு எந்தச் சொத்துகளினா லாயி னும் என்னால், தாரேஷணை (பார்யாளின்மீது ஆசை) புத்தி ரேஷணை (புத்திரர்களின்மீது ஆசை) தநேஷணை (பொன் வெள்ளி முதலானவைகளின்மீது ஆசை) என்னும் ஈஷணாத் திரயங்களினா லாயினும் ராகத் துவேஷங்களினா லாயினும் அன்ன பானாதிகளினா லாயினும் மானாபி மானங்களினா லாயினும் லோபா லோபங்களினா லாயினும் என்ன பிர யோஜனமுண்டு.

சரீர சம்பந்தமானவைகள் எத்தனையோ வருவதும்

போவதுமுண்டு. அசரீரியாகிய எனக்குச் சொந்தமான சரீரம் ஒன்றுமில்லை. இப்பொழுது காமக் குரோதங்கள் எப்படி ஒழிந்தன? அவைகளை யெல்லாம் நான் அறிந்த பின்னல்லவோ என்னை விட்டொழிந்தன. இதற்குமுன் ஒழியென்றாலும் ஒழியுமோ? ஒழியமாட்டாதல்லவா?

எந்த மிலேச்சனோ (துலுக்கனோ) எந்த மிருகமோ ஒருவனுக்குப் பார்யாளாய் முறைகொண்டுவந்தது; இப் படியே அநேக புத்திரர்களும் புத்திரிகளும் ஒவ்வொரு வராய் முறைகொண்டு சந்தையிற் கூட்டம்போல் வந்து கூடிக்கொண்டிருக்கின்றார்கள். இப்படியாய் வந்தவர்களைப் புருஷர்கள் காப்பாற்றிக்கொண் டிருப்பார்கள். இந்த ஜன் மத்தில் இந்த வரிசையுடையவர்கள் வருகிற ஜன்மத்தில் தூஷிப்பதும், இப்பொழுது இந்த ஸ்தலத்தில் நிலம் வாங்கி இவ்விடம் வீடு கட்டுவதும், இதுபோல் மறு ஜன்மத்தில் வேறு நிலம் வாங்கி வேறு இடத்தில் வேறு வீடு கட்டுவது மாய் இருக்கின்றார்கள் "சீசீ" இது மிகவும் அறியாத் தன் மையா யிருக்கின்றது.

நான் இப்பொழுது கிரகிக்கவேண்டிய விஷயங்களைக் கிரகித்தேனா? முக்கியமாய்ச் செய்யவேண்டிய விஷயங்க ளைச் செய்தேனா? இன்னும் ஏதாகிலும் குறைவுபட் டிருக் கின்றதா? யோசித்துப் பார்ப்போம்.

"ஜ்ஞாநமேவ மோக்ஷ:" என்றிருக்கின்றது. ஆத லால், ஆத்ம விசாரணை செய்வதே மோக்ஷத்திற் கிடமென் றிருப்பதால் ஆத்ம விசாரணை செய்தபிறகு எந்தத் தபமும் ஜபமும் செய்யவேண்டியதில்லை யென்று ஸ்பஷ்டமாய்த் தெரியவருகின்றது. ஆகலால், நான் இனி செய்யவேண் டியது ஒன்றுமில்லை.

இதற்குத் திருஷ்டாந்தம், பரீக்ஷித்து சுகப் பிரம்மத்தி னிடம் ஞானோபதேசம் பெற்றபிறகு, மோக்ஷத்திற்கு

வேண்டிய தபசு முதலானவைகள் ஏதாகிலும் செய்தாரா? ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியினால் ஞானோபதேசம்பெற்ற அர்ஜு னன் ஏதாகிலும் செய்தாரா? நான் மாத்திரம் ஏன் செய்ய வேண்டும்?

ஞானோபதேசமான பிறகு பரீக்ஷித்துக்கு சாவகாச மிருந்தபடியால் பகவானுடைய குணநிசயங்களைக் கேட்டு ஆனந்தித்தார். அதுபோல், நானும் பகவத் குணங்களைக் கேட்டு ஆனந்திக்கின்றேன். அப்படி பகவத் குணங்களைக் கேட்டு ஆனந்திப்பதனால் மனம் தெளிந்து திடமாய் நிற்கும். இப்படி மனம் திடமாய் நிற்பதற்குச் சத்சங்கத்வ மும் வேண்டும். இதற்குப் பிரமாணம்:—

"ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம் நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம்
நிர்மோஹத்வே நிஸ்சலதத்வம் நிஸ்சலதத்வே ஜீவன்முக்திః."

சத்சங்கத்வே-ஞானிகளுடன் சஹவாசம் உண்டாவ தனால், நிஸ்சங்கத்வம்-புத்திர மித்திர களத்திராதிகளின் மீதிருந்த ஆசைநீங்கும். நிஸ்சங்கத்வே-களத்திராதிகளின் மீதுள்ள ஆசை நீங்குவதனால், நிர்மோஹத்வம்-அஞ்ஞானத் திற்கு மூலமாகிய மோகம் இல்லாமலிருக்கும். நிர்மோ ஹத்வே-மோகம் இல்லாம லிருப்பதனால், நிஸ்சலதத்வம்- அசலமாகிய பரதத்வம் உண்டாகும். நிஸ்சலதத்வே-அப் படிப்பட்ட பரதத்வமான நிஷ்டை உண்டானால், ஜீவன் முக்திః-ஜீவன் மோக்ஷத்தை யடையும்.

ஞானிகளுடன் சகவாசம் உண்டாவதனால், புத்திர மித்திர களத்திராதிகளின் மீதிருந்த ஆசை நீங்கும். களத் திராதிகளின் மீதிருந்த ஆசை நீங்குவதனால், அஞ்ஞானத் திற்கு மூலமாகிய மோகம் இல்லாமலிருக்கும். மோகம் இல்லாம லிருப்பதனால், அசலமாகிய பரதத்வ முண்டா கும். அப்படிப்பட்ட பரதத்வமான நிஷ்டை உண்டானால் ஜீவன், மோக்ஷத்தை யடையும்.

யார் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள்?

ஓ யோகீசுவரரே! நான், தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களை யெல்லாம் தெரிந்துகொண்டேன்; ஆயினும், தேவரீருடைய திருவாக்கால் இன்னும் சில ரகஸ்யங்களை ஸ்பஷ்டமாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். அதாவது, பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்பவர்கள் யார்? இதை, சற்றே விவரித்துச் சொல்லவேண்டும் சுவாமீ?

குழந்தாய்! நீ, மிகவும் புத்திசாலியாகவே யிருக்கின்றாய்; இதன் ரகஸ்யம் அனேகர்களுக்குத் தெரியவரமாட்டா? அப்படிப்பட்ட ரகஸ்யமான விஷயங்களை, நீ இப்போது கேட்கின்றாய். அதைச் சொல்லுகின்றோம் கேள்: இதற்கு திருஷ்டாந்தம் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 4, சுலோகம் 13,

> "சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்ம விபாகஶ:
> தஸ்ய கர்த்தார மபி மாம் வித்யகர்த்தாரம் மவ்யயம்."

கிருஷ்ணன்:—அர்ஜுனா! இந்த உலகத்தில் ஜனங்களுக்கு, நான்குவித குணபேதங்களுண்டு; அதைச் சொல்லுகின்றேன் கேள்: சிலர் கேவல ஸத்வகுண முடையவர்களும், சிலர் ஸத்வ ரஜோ குணங்க ளுடையவர்களும், சிலர் ரஜஸ்தமோ குணங்க ளுடையவர்களும், மற்றும் சிலர் கேவல தமோ குணமுடையவர்களுமா யிருக்கின்றார்கள். இதில், முதல் வகுப்பினர்கள் என்றால், கேவல ஸத்வகுண முடையவர்கள், கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகசர்மம் என்னும் ஐந்து இந்திரியங்களையும், மனதையும் ஜயித்து ஸத்வ குணத்துட னிருந்து தவம் செய்துகொண் டிருப்பவர்களே பிராமணர்கள்.

இரண்டாவது வகுப்பினர்கள் என்றால், ஸத்வ ரஜோ

குணங்க ளுடையவர்கள். மேற்சொல்லிய இந்திரியங்களும் இந்திரியங்களுக்கெல்லாம் அரசனு யிருக்கும் மனம் இவ் விரண்டினுலல்லவோ புண்ணிய பாபங்கள் உண்டாகின்றன வென்று தெரிந்துகொண்டு, இந்திரியங்களுடன்கூட யுத்தம் செய்பவர்களே க்ஷத்திரியர்கள்.

மூன்ருவது வகுப்பினர்கள் என்ருல், ரஜஸ்தமோ குணங்களுடையவர்கள், புண்ணிய பாபங்களின் ரகஸ்யார்த் தங்களை அறிந்து,புண்ணியம் செய்வதனுல் லாபமுண்டென் றும் பாபம் செய்வதனுல் நஷ்டமுண்டென்றும் தெரிந்து கொள்ளத்தக்க நிலையை அடைந்தவர்களே வைசியர்கள்.

நான்காவது வகுப்பினர்கள் என்ருல், கேவல தமோ குணமுடையவர்கள். இவர்கள், யாதொன்றும் அறியாமல் அஞ்ஞானமென்னும் இருளில் மூழ்கியிருப்பார்கள்; இப்ப டிப் பட்டவர்களே சூத்திரர்கள்.

சுலோ||ஸத்யம் ப்ரஹ்ம ஸௌசஞ்ச ப்ரஹமமிந்த்ரிய நிக்ரஹம்
ஸர்வஜீவதயா ப்ரஹ்மயேத ப்ராஹ்மணலக்ஷணம்.

ஒ அர்ஜுனா! குணத்தினுல் ஜாதிபேதம் ஏற்படு கின்றது அதைச் சொல்லுகின்றேன் கேள்: எவன் பூர்வஜன் மத்தில் வியாழதிசை பதினுறில், பத்து வருஷங்கள் நடந்த பின் மரணமடைகின்ருனே அவன் மறுபடியும்,சண்டாளன் வீட்டிலோ சூத்திரன் வீட்டிலோ வைசியன் வீட்டிலோ க்ஷத்திரியன் வீட்டிலோ பிராமணன் வீட்டிலோ பிறக்க வேண்டிய கர்மம் இருக்கும்பக்ஷத்தில் அந்தஜாதி தாயின் கர்ப்பத்தில் சிருஷ்டிசெய்து வைத்திருக்கும் தூலசரீரத்தில் மேற்படி ஜீவன் வந்துசேர்ந்து, பிறக்கும்போது முன் ஜன் மத்தில் வியாழதிசை பதினுறில் பத்துவருஷங்கள் செல்லு போய் மிகுதி நின்ற வருஷங்கள் ஆறும், சிசுவின் கூடவே ஜனனகாலத்தில் தொடர்ந்துவரும்: சிசு ஜனனமானவுடன் ஜோதிடன், ஜோஸ்யம் எழுதும்போது குழந்தை பிறந்த லக்கினத்தைக் குறிப்பிட்டு, வியாழதிசை கர்ப்பத்தில்

செல்லுபோய் கின்ற வருஷங்கள் ஆறு, என்று கணக்கெடுத்து ஜாதகம் எழுதுகின்றான். என்றால்,

பூர்வ ஜன்மத்தில், எந்த ஜாதியில் எங்கு பிறந்தானோ அந்த ஜாதியில் மரணமடைவதற்குமுன், வியாழதிசை பதினாரில், பத்துவருஷங்கள் நடக்கும்போது வியாதிவந்து மரணமடைவானாகில் மிகுதி வியாழதிசை ஆறும், அவன் மறுஜன்மத்தில் குழந்தையாய்ப் பிறக்கும்போது அவனைத் தொடர்ந்து வருகின்றதே யொழிய கர்ப்பத்தில் பத்து வருஷங்கள் செல்லுபோகவில்லை: இது, தேவரகஸ்யமாதலால், சில ஜோஸ்யர்களுக்குமாத்திரம் தெரியவரும்.

இன்னும் சொல்லுகின்றேன் கேள்: சூர்யன் அங்காரகன் பிரஹஸ்பதி புருஷ கிரகங்கள்; சந்திரன் சுக்கிரன் ராகு ஸ்திரீ கிரகங்கள்; புதன் சனி கேது நபும்ஸக (அலி) கிரகங்கள்; பிரஹஸ்பதி சுக்கிரன் பிராமண கிரகங்கள்; சூர்யன் அங்காரகன் க்ஷத்திரிய கிரகங்கள்; சந்திரன் புதன் வைசிய கிரகங்கள்; சனீஸ்வரன், சூத்திரர் முதலான ஜாதிகளுக்கு அதிபதி; ராஹு கேது சண்டாள கிரகங்கள்; தாய் தந்தைகள்கூடி பிண்டம் தரிக்கும்போது மேற் சொல்லியவைகளில் எந்த கிரகங்கள், அவனவன் கர்மத்திற்குத் தக்கபடி முன் ஜன்மத்தில் செல்லுபோய் மிகுதி யிருக்கின்றனவோ அவைகள் அக்குழந்தையைத் தொடர்ந்துவருவதனால், அக்குழந்தை அவ்வம்சமாகவே பிரகாசிக்கும்: எப்படியென்றால்,

பிராமணர்களின் வீட்டிலாகிலும் சூத்திரர்களின் வீட்டிலாகிலும் அல்லது, சண்டாளர்களின் வீட்டிலாகிலும் தாய்த் தந்தைகள் சேர்ந்து பிண்டம் தரிக்கும் சமயத்தில், பிரஹஸ்பதி சுக்கிர கிரகங்கள் ஆக்ஷி உச்ச திரிகோணம் முதலான சுப ஸ்தானங்களிலிருந்து ஆணாகவோ பெண்ணாகவோ பிறந்தால், அவர்கள் சத்தியவந்தர்களாயும் சுசி

ஆசாரமுடையவர்களாயும் இந்திரிய நிக்கிரஹ முடையவர்களாயும் பூததயை பச்சாதாப முடையவர்களாயும் பிரம்ம வேத்தர்களாயு மிருப்பார்கள். இந்த குணங்களுடன் கூடி யிருப்பவர்கள் பிராமணர்களேயொழிய பிராமண ஜாதியில் பிறந்து இப்படிப்பட்ட குணங்க ளில்லாவிடில் அவனை சூத்திரனாய் எண்ணவேண்டுமே யொழிய பிராமணனாய் எண்ணலாகாது குணத்தினால் பிராமணனே யொழிய ஜாதியினால் பிராமண னாகமாட்டான்.

எந்த ஜாதியிலாகிலும் பிண்டம் தரிக்கும்போது, சூரியன் அங்காரகன் வலுத்திருந்தால், இவை க்ஷத்திரிய கிரகங்கள்; இந்த கிரகங்களுடன்கூட பிறந்தவர்களுக்கு மேற்சொல்லிய க்ஷத்திரியகுண தர்மங்கள் ஏற்படும்.

எந்த ஜாதியிலாகிலும் பிண்டம் தரிக்கும்போது சந்திரன் புதன் வலுத்திருந்தால் அவை வைசிய கிரகங்கள்; இந்த கிரகங்களுடன்கூடி பிறந்தவர்களுக்கு மேற்சொல்லிய வைசியகுண தர்மங்கள் ஏற்படும்.

எந்த ஜாதியிலாகிலும் பிண்டம் தரிக்கும்போது சனீஸ்வர கிரகம் வலுத்திலிருந்தால் இது, சூத்திர கிரகம்; இந்த கிரகங்களுடன்கூடிப் பிறந்தவர்களுக்கு மேற்சொல்லிய சூத்திரகுண தர்மங்கள் ஏற்படும்.

இந்த நான்கு ஜாதிகளையும் இதரலோகத்தில் சிருஷ்டிக்கவில்லை; நான் மாயையை சிருஷ்டிசெய்யும் கர்த்தாவாயிருக்கின்றேன். அந்த மாயை என்னைப்பற்று; ஏனென்றால், என்னை விட வேறுவஸ்து இருந்தாலல்லவோ அந்த வஸ்துவை நான் சிருஷ்டித்தேனென்று சொல்லலாம். எல்லாம் நானாகவே யிருக்கின்றேன்; ஆதலால், என்னை அசம்சாரி (சம்சாரமற்றவன்) என்றே சொல்லலாம். அத்யாயம் 9, சுலோகம் 32,

மாம் ஹி பார்த்த! வ்யபாஶ்ரித்ய யேபி ஸ்யுః பாபயோநயః
ஸ்திரீயோ வைஶ்யாஸ்ததா ஶூத்ரா ஸ்தேபி யாந்தி பராங்கதிம்.

ஹே! குந்தீபுத்ரா! தோல் எலும்பு கொழுப்பு மயிர் முதலானவைகளுடன் கூடியிருக்கும் தான் யாரென்று அறியாமல், நான் ஆண் நான் பெண் நான் பிராமணன் நான் க்ஷத்திரியன் நான் வைசியன் நான் சூத்திரன் என்று பந்தத்தில் கட்டுண்டுகிடப்பது உயிர்களின் சுபாவகுணமாதலால், எல்லாம் கற்றும் அன்னியர்களுக்கு உரைத்தும் தன்னைத் தான் அறியாவிட்டால், அவன் பிராமணனுயிருந்தாலும் பிராமணனுகமாட்டான். இப்படிப்பட்டவர்கள் நீச ஜன்மங்களையே அடைவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதற்கு மநுஸ்மிருதி பிரமாணம்;

சூத்ரோ ப்ரஹ்மணதாமேதி ப்ராஹ்மணஸ்சேதி ஶூத்ரதாம்
க்ஷத்ரியாஜ் ஜாதமேவந்து வித்யாத் வைஸ்யாத் ததைவச.

சூத்திரன் பிராமணனுவான், பிராமணன் சூத்திரனுவான்: க்ஷத்திரிய வைசிய சண்டாள ஜாதியில் பிறந்தவர்களும் இப்படியே ஆவார்கள்; என்றுல், சண்டாளன் பிராமணனைப் பிறப்பானென்று எல்லா சுருதி, ஸ்மிருதிகளிலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

நவிஸேஷோஸ்தி வர்ணனும் ஸர்வப்ராஹ்ம மிதம் ஜகத்
ப்ராஹ்மணு பூர்வஸ்ருஷ்டம் ஹி கர்மபிர் வர்ணதாம்கதம்.

என்று ஸ்ரீ மஹாபாரதம் சாந்திபர்வம் 188-வது, அத்யாயத்தில், ஜாதியினுல் ஒன்றுமில்லை. ஆதியில் இந்த ஜகத்தெல்லாம் பிரம்மமாகவே இருந்ததென்று சொல்லியிருக்கின்றது. கர்மத்தினுல் ஜாதிபேத முண்டாயிற்றென்று சொல்லப்பட்டிருக்கின்றது. கிருதயுகத்தில் ஜாதிபேதமில்லையென்று வாயுபுராணம் எட்டாவது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது: எப்படிப்பட்டவனுயிருந்தபோதிலும் நல்ல நடவடிக்கையினுல் பிராமணு

வான்: பிராமணனாயிருந்து நல்ல நடவடிக்கை யில்லாவிட்டால் அவன் பிராமணனாகமாட்டான்; என்றால், சூத்திரனாய்ப் பிறந்து நல்ல நடவடிக்கையுடன் இருப்பானாகில், அவன் பிராமணனேயாவான்; இதற்கு சிலவாக்கியங்களை புராணத்திலிருந்து இங்கு திருஷ்டாந்தமாய்ச் சொல்லுகின்றோம்;

ஏபிஸ்து கர்மபிர்தேவிஸுபைரா சரிதைஸ்ததா ஸூத்ரோ ப்ராஹ்மணதாம் யாதி வைஸ்ய: க்ஷத்ரியதாம் வ்ரஜேத் * * * * நயோநிர்ணாபி ஸம்ஸ்காரோ நஸ்ருதம் நச ஸந்ததி: காரணானி த்விஜத்வஸ்ய வ்ருத்தமேவது காரணம் ஸர்வோயம் ப்ராஹ்மணோ லோகே வ்ருத்தேநச விதீயதே வ்ருத்தேஸ்திதஸ்து ஸூத்ரரபி ப்ராஹ்மணத்வம் நிசஸ்யதி.

என்று பாரதத்திலும், மஹேஸ்வரி ஸம்வாதத்திலும் இப்படிப்பட்ட நற்கார்யங்களை செய்வானாகில் சூத்திரனும் பிராமணனேயாவான் என்றும், ஜாதிபேதம் உபநயனம் வேதாத்யயனம் (வேதங்களை வாசிப்பது) சந்ததி முதலானவைகளினால் பிராமணனாகமாட்டானென்றும், நல்ல நடவடிக்கையினால் பிராமணனாவானென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. மஹாபாரதம் ஆரண்ய பர்வத்தில் தர்மராஜருக்கு வைசம்பாயனர் சொல்லுகின்றார்;

சுலோ || நகுலேந நஜாத்யாவா க்ரியாபிர் ப்ரஹ்மணோபவேத் சண்டாலோபி ஹி வ்ருததஸ்தோ ப்ராஹ்மண் ஸ யுதிஷ்டிர ஏக வர்ண மிதம் பூர்ணம் விஸ்வமாஸீத் யுதிருஷ்டிர கர்மக்ரிய விஸேஷேண சாதுர்வர்ண்யம் ப்ரதிஷ்டிதம் ஸர்வேவை யோநி ஜாமர்த்யாஹா: ஸர்வே மூத்ர புரீஷண: ஏகேந்த்ரியேந்த்ரியார்த்தஸ்ச தஸ்மாச்சீல குணைர்விஜ: ஸூத்ரோபி ஸீல ஸம்பந்நோ குணவாந் ப்ராஹ்மணோபவேத் ப்ராஹ்மணோபி க்ரியாஹீந: ஸூத்ராத் ப்ருத்யவரோ பவேத் * * * * நஜாதி தருஸ்யதே ராஜந்குண: கல்யாநகாரக: ஜீவிதம் யஸ்ய தர்மார்த்தம் ப்ரார்த்தே யஸ்ய ஜீவிதம்.

ஓ யுதிஷ்ட்டரா (ஓ தர்மராஜா) ஜாதியினால் பிராமணனாகமாட்டான்: கார்யத்தினால் பிராமணனாவான் நல்ல நடவடிக்கையுடையவன் சண்டாளனாயிருந்தபோதிலும் அவனே பிராமணனாவான். ஓ யுதிஷ்ட்டரா! இப்பிரபஞ்சமெல்லாம் ஒரே ஜாதியாயிருந்தது; கர்மத்தினால் நான்கு ஜாதி ஏற்படுத்தப்பட்டது. மனிதர்களெல்லோரும் ஓர் தாய் கர்ப்பத்திலிருந்து பிறந்தவர்கள். என்றால், ஒரேவிதமாகிய ஸ்திரீகளின் கர்ப்பத்திலிருந்து பிறந்தவர்கள்: இப்படிப்பட்டவர்களில், நல்ல ஆசாரம் நல்ல நடவடிக்கை எவனுக்குண்டோ அவனே பிராமணனாவான்! என்றால், சூத்திரனானாலும் சண்டாளனானாலும் சரி, எவனுக்கு நல்ல ஆசாரம் நல்ல நடவடிக்கையுண்டோ அவனே பிராமணனாவான். பிராமண ஜாதியில் பிறந்து நல்ல ஆசாரம் நல்ல நடவடிக்கை யில்லாவிட்டால் அவன் சூத்திரனேயென்று எண்ணவேண்டும். ஓ ராஜனே! ஜாதியினால் ஒன்றுமில்லை குணங்களே கல்யாண (மங்கள) மானது. எவன், தர்மார்த்தமாயும் பரோபகாரார்த்தமாயும் இருக்கின்றானோ அவனே பிராமணனென்று சொல்லப்பட்டிருக்கின்றது. மற்றோரிடத்தில் யக்ஷயன் கேள்விக்கு தர்மராஜர் சொல்லுகின்றார்:

ஸத்யம் தாநம் க்ஷமா ஸீலமாந்ரு ஸம்ஸ்யம் தபோ க்ருணா த்ருஸ்யந்தே யத்ரநாகேந்த்ர ஸ ப்ராஹ்மண இதி ஸ்ம்ருத꞉ ஸூத்ரேது யத்பவல்லேக்ஷ்ம்யத் விஜேதச்சந வித்யதேநவை ஸூத்ரோ பவேத் ஸூத்ரோ ப்ராஹ்மணோ நச ப்ராஹ்மண꞉, யத்ரைவலக்ஷ யதே ஸர்ப்பவ்ருத்தம் ஸ ப்ராஹ்மண꞉ ஸ்ம்ருத꞉ யத்ரைதந்ந பவேத் ஸர்வதம் ஸூத்ரமிதி நிர்த்தி ஸேத்.

ஓ நாகேந்த்ரா! ஸத்யம் தானம் பொறுமை சீலம் அஹிம்சை (கொன்று சாப்பிடாமலிருப்பது) தவம் கருணை முதலாகிய குணங்கள் எவனிடம் யிருக்கின்றதோ அவனே

பிராமணன். இக்குணங்கள் சூத்திரனிடத்திலிருந்தால் அவன் சூத்திரனாகமாட்டான். பிராமணனிடத்தில் இக் குணங்களில்லாவிட்டால், அவன் பிராமணனாகமாட்டான். என்றால், மேற்சொல்லிய குணங்கள் சூத்திரனிடத்திலிருந் தால் அவனே பிராமணன்; பிராமணனிடம் மேற்சொல் லிய குணங்களில்லாவிட்டால் அவனே சூத்திரன் என்று சொல்லப்பட்டிருக்கின்றது: ஆதி சங்கராசாரியர் பிராமண ஜாதியில் பிறந்தபடியால், அவருக்கும் அஞ்ஞானத்தினால் ஜாதி அபிமானம் உண்டாயிற்று: அதைபோக்கடிக்க பரம சிவன் சண்டாளவேஷம் தரித்துவந்து சொன்னவிஷயங் களை இதனடியில் சொல்லுகின்றோம்;

"இஹகலு பரமகாருணிகோ பகவாந் பரமசிவ:, அநர்த்த மக ராகாரே ஸம்ஸார ஸாகரே, நிமக்நம் லோகமுத்திதீர்ஷு: கதாசித் காஸீம் ப்ரதி, கச்சந்தமாசார்யம் ப்ரதி சண்டாள வேஷதாரீ மஹேஸ்வர:, ஸமாஜகாமதோ ஜகாத பகவா நாசார்ய:, ஹே சண்டாளாத்ம இதோ கச்ச கச்சேதி, ததஸ்சண்டாள வேஷமண் டித:, ஸிவ: ப்ரத்யாஹ."

இந்த உலகத்தில் பரம தயையுடையவனாயும், ஷட் குண ஐஸ்வர்ய ஸம்பத்துடையவனாயும் ஜல ஜந்துக்களுக்கு சமுத்திரமே ஆதாரமாயிருப்பதுபோல் துக்கமே சம்சார மென்னும் சமுத்திரத்திற்குக் காரணமாயிருந்து சதாகால மும் அதில் மூழ்கிக்கொண்டிருக்கும் ஜீவகோடிகளை உத்த ரிப்பதற்காக, பரமசிவன் சண்டாளவேஷம் தரித்து, காசிப் பட்டணம் வழியாய் வரும்போது, ஸ்ரீ சங்கராசாரியர் அவரைக்கண்டு 'ஹே சண்டாளா! விலகிப்போ' என்று சொல்லினர். அப்போது சண்டாள வேஷத்தைத் தரித் திருக்கும் பரமசிவன் சொல்லுகின்றார்:—

சுலோ॥"அந்நமயாதந்நமய மதவா சைதன்யமேவ சைதந்யாத்

யதிவர அரீகர்த்தும் வாஞ்சஸி கிம் ப்ரூஹி கச்ச கச்சேதி"

"ஹே யதிவர! அத்ரப்ரூஹி! கிமந்நமயாத் ஶரீராத், அந்நமயம் ஶரீரம் கச்ச கச்சேதி அரீகர்த்தும் வாஞ்சஸி, அதவா, சைதந்யாத் சைதந்யமேவ கச்சகச்சேதி வாஞ்சஸி நதாவதாதிமஃ, உபயோரப்யந்ந கார்யத்வேனைகத்வாத், ஶ்ரூயதே ஹி ஶரீரஸ்யாந்ந கார்யத்வம்."

ஹே! சந்நியாசிகளுக்கெல்லாம சிரேஷ்டனு யிருக்கப் பட்டவனே! நான் கேட்கப்பட்ட கேள்விகளுக்குத் தக்க பதில் சொல்லக்கடவாய். அன்னவிகாரமாகிய உன் சரீரத்தைவிட்டு, அன்னவிகாரமாகிய என் சரீரத்தை விலகும படிச் சொல்லுகின்ருயா? அல்லது, சைதன்ய சொரூப மான உன் பிரத்தியகாத்மாவிலிருந்து, பிரத்தியகாத்ம சொரூபமான, என் சரீரத்திலிருக்கும் பிரத்யகாத்மாவை, விலகிப்போவென்று சொல்லுகின்ருயா?

உன் சரீரம் எப்படி அன்னமயகோசத்தினுல் உண்டா யிற்ரே அதுபோல் என் சரீரமும் அன்னமயகோசத்தினு லுண்டாயிற்று. ஆதலால், இரண்டு சரீரங்களும் ஒன்ரு யிருக்க, உன் சரீரம் சுசியானதும் என் சரீரம் அசுசியானது என்று எப்படிச் சொல்லலாம்! என் சரீரம் அசுசி யென்ருல், உன் சரீரமும் அசுசியானதே! ஆதலால், சரீரத்தைப் பார்த்து விலகியிரு என்று சொல்வது யுக்தமான தன்று. நம்மிருவருடைய சரீரமும் அசுத்தமே யென்று சொல்வதற்கு வேதமே பிரமாணமாயிருக்கின்றது. அதாவது,

"ஸவா ஏஷ புருஷோந்நரஸமய இதி"

பிரபஞ்சமெல்லாம் மாயா சொரூபமா யிருக்கின்றது. ஆதலால், ஒரே விதமாயிருக்கும் அன்ன ரசத்தினுல் உண்டாகிய சரீரங்களைக்குறித்து அபிமானம் வைக்கலாகாது. சைதன்னிய சொரூபனுன பிரத்தியகாத்ம சொரூபம், உன்

சரீரத்திலும் என் சரீரத்திலும் இதர பிபீலிகாதி சரீரத்தி லும் ஒரே விதமாயிருக்கின்றது. இது விஷயத்திலும் நீ சொல்லலாகாது. இதற்கு சுருதிப் பிரமாணம் என்ன வென்றால்,

"சைதந்யஸ்ய ஸர்வத்ரைக ரூபத்வாத்." "ஏகோ தேவஸ் ஸர்வ பூதேஷு கூட: ஸர்வவ்யாபீ ஸர்வபூதாந்தராத்மா."

ஆத்மா ஒருவனே, சுயம் பிரகாசனாய் எல்லாப் பூதங் களிலும் அதிகோப்பியமாய் ஸாக்ஷிபூதனாய் பிரத்திய காத்மாவாய் இருக்கின்றான்.

'ப்ரத்யக் வஸ்துநி நிஸ்தரங்கஸஹஜா நந்தாவபோதாம்புதௌ'
'விப்ரோயம் ஶ்வபசோ ய மித்யபி மஹாந் கோயம் விபேதப்ரம:'
'கிம் கங்காம்புநி பிம்பிதேம்பரமணௌ சண்டாலவீதீ பய:பூரே'
'வாந்தரமஸ்தி காஞ்சநகடீ மருத்கும்பயோர்வாம்பரே.'

துக்கமயமாகிய அஹங்காரங்களுக்கெல்லாம் வேறா யிருந்து பிரகாசித்துக் கொண்டிருக்கும் பரப் பிரம்மத்து டன் சேர்ந்திருப்பவனுக்கு, அலைகளில்லாத சமுத்திரம் போல் சங்கல்ப விகல்ப (நினைப்புமறப்பு) இல்லாதவ னுக்கு, இவன் பிராமணனென்றும் இவன் சண்டாளனென் றும் பேதபுத்தி எங்கிருந்து உண்டாயிற்று கங்கா நதியி லும் சண்டாள வீதியிலும் இருக்கும் ஜலத்தில் பிரதிபிம் பித்திருக்கும் சூர்யனுக்கு எப்படி பேதமில்லையோ அப் படியே பிரத்தியகாத்மாவிற்கும், பரமாத்மாவிற்கும் பேத மில்லை. தங்கக் கலசத்திலும் மட் பாண்டத்திலும் நிறைந் திருக்கின்ற ஆகாசத்திற்கு குணபேதங்கள் எப்படி யில் லையோ அப்படியே ஆத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும், குணதோஷங்களில்லை. ஆத்மவஸ்துவில் பேதபுத்தியுடன் எவன் பார்க்கிறானோ அவன் ஜனன மரண ரூபமாயிருக் கும் சம்சாரத்திலிருந்து விடுபடமாட்டான். குடத்திலிருக் கும் ஆகாயத்தைக் கொண்டுபோவதில்லை; குடத்தை மாத்

திரம் கொண்டுபோகின்றன் அதுபோல் ஜீவனும் ஆகாயம்போல் எங்கும் நிறைந்திருக்கப்பட்டது. நாசமில்லாதது. அது எங்கும் அகண்டானந்த ரூபமாய் ஞானத்தினல் பிரகாசித்து சர்வகாலத்திலும் ஆநந்தத்துடன் கலந்து ஒன்ருயிருக்கும் பரப் பிரம்மம். அப்படிப்பட்ட பரப் பிரம்மத்திற்கு பேதபுத்தி யுண்டென்று நீ எப்படிச் சொல்லலாம் என்று சண்டாள வேஷதாரியாகிய பரமேசுவரன் சொல்லினர்.

"இத்தமீஶ்வரவாக்யம் நிஶம்ய ஸர்வஜ்ஞோ பகவாநாசார்யः ஸகல ஸாதந கலாபை ராஶ்ரிதாத்யாத்மஶாஸ்த்ரः நிரந்தர ப்ரதிஶய நிஜாநந்தாநு ஸந்தாநதயா உபஶாந்தஸ்வாந்தः அதயேவ விகளிதாபிமாநः புருஷவிஶேஷாந் காம்ஸ்சிதுபலக்ஷ்ய தேஷாம் விநைவ ஸமாதிம் ப்ராஹ்மண்ய த்யபிமாநாபநுத்தயே ஸ்வபதவிஶ்ராந்தயே ச பஞ்சபிः ஶ்லோகைः ஸ்வாநுபூதிமாவிஷ்கரோதி தத்ராபி ஜாக்ரதாத்யவஸ்தாவபாஸகத்வேந ப்ரதீசः ப்ரஹ்மாபேதம் தர்ஶயதி.

இவ்விதமாய் சண்டாள வேஷத்தைத் தரித்துவந்த பரமசிவனது வார்த்தையை, சர்வஞ்ஞனுயும் பூஜ்ஜியனுயும் இருக்கப்பட்ட ஸ்ரீ சங்கராசாரியர் கேட்டவுடன், ஜாதி பேதமில்லாதவராய் சில முமுக்ஷுக்களைப் பார்த்து அவர்களுக்கு சமாதியில்லாமலே வர்ணுச்சிரமாபிமான நிவர்த்திசசாக நிஜசொரூபமாகிய பிரம்மைக்யாநுபவத்தை அடைவதற்கு ஐந்து சுலோகங்களால் தமது சுவாநுபவத்தை வெளியிடுகின்ருர்.

"ஜாக்ரத்ஸ்வப்ந ஸுஷுப்திஷு ஸ்புடதரா யாஸம்வித்
உஜ்ஜ்ரும்பதே, யா ப்ரஹ்மாதி பிபீலிகாந்ததநுஷு ப்ரோதா
ஜகத்ஸாக்ஷிணீ, ஸைவாஹம் நச த்ருஶ்யவஸ்த்விதி த்ருட
ப்ரஜ்ஞாபியஸ்யாஸ்திசேத், சாண்டாளோஸ்து ஸது
த்விஜோஸ்து குருரித்யேஷா மநீஷா மம."

ஜாக்ரதை சொப்ந சுஷுப்திகளில் எந்த ஞானம் சுயம்பிரகாசமாய்ப் பிரகாசிக்கின்றதோ, எந்த ஞானம் ஜகத்திற்கு சாக்ஷியாயிருக்கின்றதோ, பிரம பிபீலிகாதி சரீரங்களில் எந்த சூத்ரம் (நூல்) ஆடிக்கொண்டிருக்கின்றதோ, அந்தச்சூத்ரமே "நான்" திருசியவர்க்கங்கள் (காணப்படும் வஸ்துக்கள்) நானல்ல. இப்படிப்பட்ட திட ஞானம் எவனுக்குண்டோ அப்படிப்பட்டவன் சண்டாளனு யிருந்தாலும் அல்லது பிராமணனு யிருந்தாலும் அவனே என் "குரு"வென்று ஸ்ரீ சங்கராசாரியார் சொல்லுகின்றார். செவிகள், தேகசர்மம், நேத்திரங்கள், நாக்கு, மூக்கு, என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும்; வாய், கைகள், கால்கள், குதம், மர்மஸ்தானம் என்னும் கர்மேந்திரியங்கள ஐந்தும்; மனம், புத்தி, சித்தம், அஹங்காரமென்னும் அந்தக்கரணங் (நினைப்பு மறப்பு) களுக்கு எது பிரத்தியக்ஷமாய்த் தெரிய வருகின்றதோ அதுவே ஜாக்கிராவஸ்தைஎன்று சொல்லப்படும். முன் சொல்லிய இந்திரிய வியாபாரங்களெல்லாம் நித்ரையில் காணப்படாமலிருந்தபோதிலும், பதார்த்தங்களினுடைய ஸ்மரணை நித்திரையில் காணப்படுவதே சொப்பநாவஸ்தையென்று சொல்லப்படும். அநாதியா யிருக்கும் மூல ஞானத்துடன் மனது எப்பொழுது லீனமாகின்றதோ (அடங்கியிருக்கின்றதோ) அதுவே, சுஷுப்தியாவஸ்தை யென்று சொல்லப்படும். இந்த மூன்று அவஸ்தைகளிலும் ஜாக்கிராவஸ்தையை அதாவது, ஜாக்கிரத்தில் சுஷுப்தியை பிரகாசிக்கும்படிச் செய்தால், ஜனன மரணங்களில்லாத பரமாத்மா பிரகாசித்துக்கொண்டிருக்கும். அதாவது, அவஸ்தா த்ரயங்களிலும் ஸாக்ஷியாயிருக்கும் பரமாத்மாவே 'நான்' என்று எவன் எண்ணுகின்றானோ அவன் தானாகவே பிரகாசித்துக் கொண்டிருப்பான். இந்த மூன்று அவஸ்தைகளிலும் சுயம்

பிரகாசனும் சித் சொரூபனும் இருக்கும் பரப் பிரம்மமே 'நான்' என்று எவன் எண்ணுகின்றானோ அவன் அப்படியே யாவான்.

இவ்விதமாய் ஞான சொரூபமாகிய பரமாத்மா, ஜீவர்களுக்கு பிரம்மபாவத்தை போதித்து, வியஷ்டி ஸமஷ்டி தேஹேந்திரியங்களைப் பின்னமாய்ச் செய்து அவைகளைப் பிரகாசிக்கும்படி செய்வித்து, ஜீவனுக்குப் பிரம்ம தத்துவத்தைக் காட்டுகின்றார். பரமாத்மா, தேஹேந்திரியாதிகளைப் பிரகாசிக்கச் செய்வதே யல்லாமல் ஜடமாகிய பிரபஞ்சத்தையுங்கூட பிரகாசிக்கச் செய்கின்றார். அதாவது, ஸர்வ ஜகத்தையும் பார்க்கப்பட்டவன் பரமாத்மா வென்பதேயாம். நல்லது, இப்படிப்பட்ட ஆத்மா ஏன் காணப்படுவதில்லை யென்றாலோ அதை மாயை மூடிக்கொண்டிருப்பதனால் காணப்படுவதில்லை. ஆத்மா ஓர் ரூபத்துடன் சேர்ந்து சமஸ்த ஜந்துக்களையும் பிரகாசிக்கச் செய்கின்றது. ஞான சொரூபமாயும் சாக்ஷிமாத்ரமாயும் இருக்கும் பரமாத்மா எதுவோ அதுவே 'நான்' காணப்படும் பிரபஞ்சம் 'நானல்ல.' தேஹமும் இந்திரியங்களும் இந்திரியங்களினால் செய்யப்படும் காரியங்களும் சாஸ்வதமானதல்ல. அனேககோடி ஜன்மங்களாய் சம்சார விஷயத்தை மனனம் செய்துகொண்டு வந்தபடியால், இந்த ஜன்மத்தில் எந்த உபதேசங்களும் இல்லாமல் காமக்குரோத லோப மோஹ மத மச்சரங்கள் எப்படி தனக்குத்தானாய் உண்டாகின்றனவோ அதுபோல், அனேக ஜன்மங்களாய்ச் செய்துகொண்டு வரும் ஈசுவரார்ப்பண சத்கர்மங்களினால் 'நானே பிரம்ம' மென்று எண்ணிக்கொண்டு வரப்பட்டவன் 'குரு' வில்லாமலும் சாஸ்திராப்பியாஸ முதலாகிய சாதனங்களில்லாமலே தீவிரமாய் பிரம்மசொரூபத்தை அடைகின்றான். இப்படிப்பட்ட யதார்த்த ஞானம் எவனுக்கு

உண்டோ அவனே பிரம்ம சொரூபனென்று தெரிந்துக் கொள்ளவேண்டும் இப்படிப்பட்டவன் சண்டாளனுயிருந் தாலும் அவனே பிராமணனென்று சொல்லப்படுவான். அப்படிப்பட்டவனே காரணகுரு.

சண்டாளனை எப்படி "குரு" வாய் வைத்துக்கொள் ளலாமென்று சந்தேகப்படுகின்றுயா என்ன? அப்படி சந்தேகப் படலாகாது. ஏனென்றால், நித்தியமானதும், சுத்தமானதும், அசங்கமானதுமாகிய ஆத்மஞானத்திற்கு ஜாதி குலம் என்னும் எந்த அபிமானமுண்டோ அந்த அபிமானமெல்லாம் நசித்துப்போவதால் அவன் சண்டா ளனுயிருந்தாலும், பரிசுத்தமுடையவனே என்று சொல்ல லாம். ஜீவேசுவரர்களுக்கு எப்படிபபட்ட அபிமானங்க ளும் இல்லையென்று ஸ்ரீ சங்கராசாரியரது அபிப்பிராயம்.

ஜாக்கிரதை சொப்ந சுஷுப்தியா வஸ்தைகளிலும், எந்த ஆத்ம ஸ்பஷ்டமாய்ப் பிரகாசித்துக்கொண்டு, பிரம தேவன் முதல் பிபீலிகாதி ஸகல சராசர சரீரங்களுக்கும், ஜகத்திற்கும் எது சாக்ஷியா யிருக்கின்றதோ அந்த ஞான சொரூபமாகிய பரமாத்மா நானே யொழிய, காணப்படும் பதார்த்தங்கள் நானல்ல என்னும் திடஞானம் எவனுக்கு உண்டோ, அவன் சண்டாளனுயிருந்தாலும் பிராமணனு யிருந்தாலும் அவனே காரண குருவென்று ஸ்ரீ சங்கரா சார்யருடைய அபிப்பிராயம்.

சுலோ|| "தத்ஸ்ருஷ்ட்வாததேவாநு ப்ராவிஶதித்யாதிஶ்ருதேः

ப்ரஹ்மைவாஹமிதம் ஜகச்ச ஸகலம் சிந்மாத்ரவிஸ்தாரிதம், ஸர்வம்சைததவித்யயா த்ரிகுணயா ஶேஷம் மயாகல்பிதம், இதம் யஸ்ய த்ருடா மதிஸ் ஸுகதரே நித்யே பரே நிர்மலே, சாண்டா லோஸ்து ஸதுத்விஜோஸ்து குருரித்யேஷா மநீஷா மம."

பரமாத்மா பிரபஞ்சத்தை ஸ்ருஷ்டிசெய்து அந்த

பிரபஞ்சத்திலேயே பிரவேசித் திருக்கின்றானென்று வேதங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்த பிரபஞ்சமெல்லாம், ஜீவேசுவரரூபமாய், சத்திவகுண ரஜோகுண தமோகுணங்களுடன் கூடி, சுகரூபனும் நாச ரஹிதனும் சுயம் பிரகாசனும் இருக்கும் பரப்பிரம்மத்தில் எவன் புத்தியைத் திடமாய் நிறுத்துகின்றானோ, அப்படிப்பட்டவன் சண்டாளனானாலும், பிராமணனானாலும் அவனே குருவென்று ஸ்ரீ சங்கராசாரியரது அபிப்பிராயம்.

எவன், "நித்தியமாயும் நிர்மலமாயும் இருக்கும் பரப்பிரம்மமே நான்" என்று நினைத்துக் காணப்படும் திருசியமாகிய ஜீவேசுவராதி பிரபஞ்சத்தை மாயை யென்று எண்ணுகின்றானோ, அவன் எவனானாலும் சரி அவனே எனக்கு குருவென்று ஸ்ரீ சங்கராசாரியர் சொல்லுகின்றார்.

"ஶஶ்வந்நஶ்வரமேவ விஶ்வமகிலம் நிஶ்சித்ய வாசா குரோர் நித்யம் ப்ரஹ்ம நிரந்தரம் விம்ருஶதா நிர்வ்யாஜஶாந்தாத்மநா, பூதம் பாவி ச துஷ்க்ருதம் ப்ரதஹதா ஸம்விந்மயே பாவகேப்ராரப்தாய ஸமர்பிதம் ஸ்வவபுரித்யேஷா மநீஷா மம."

குருவினுடைய வாக்கினால் தெரிந்துகொண்டு, சமஸ்தத் பிரபஞ்சங்களையும் அநித்தியமென்று அடிக்கடி நினைத்துக் கொண்டிருக்கப்பட்டவன், எப்பொழுதும் நாசமில்லாத பரப் பிரம்மத்தை ஸ்துதி செய்துகொண்டு, கபடமில்லாத சாந்த மனதுடையவனாய் ஞானரூபமான அக்கினியினால், அனேக ஜன்மங்களாய் வந்துகொண்டிருக்கும் ஸஞ்சிதமென்னும் புண்ணிய பாப கர்மங்களின் மூட்டைகளை யெல்லாம் பஸ்மம்செய்து, தனக்கு ஈசுவரனால் கொடுத்து அனுப்பப்பட்ட பிராரப்த கர்மத்தை மாத்திரம் அனுபவித்து, பிறகு மோக்ஷத்தை அடைகின்றான். இதற்கு கைவல்யம் பிரமாணம்;

பஞ்சினை யூழித் தீப்போற் பலசன்ம விவித வித்தாம்
சஞ்சித மெல்லாம் ஞானத் தழல்சுட்டு வெண்ணீ றாக்கும்
கிஞ்சிதா காமி யந்தான் கிட்டாமல் விட்டுப் போகும்
விஞ்சின பிராரத் தத்தின் வினையனு பவத்துத் தீரும்.

காரண குருவினுடைய வாக்கியத்தினால் இந்த பிரபஞ்சம் அநித்தியமென்று அறிந்து, திரிகாலத்திலும் (மூன்று காலத்திலும்) என்றால், ஜாக்கிரதை சொப்பன சுஷுப்தி என்னும் மூன்று அவஸ்தைகளிலும் இருக்கப்பட்டதும், பிரபஞ்சத்திற்கெல்லாம் அதிகப்பட்டதும், சுயம்பிரகாசமானதுமான எந்த பரப் பிரம்மமுண்டோ அந்த பரப் பிரம்மமே நானாகின்றேன் என்று எப்பொழுதும் நினைத்துக்கொண்டே யிருக்கவேண்டும். இந்த பிரம்ம பதவியை அடைவதற்கு அநேக காலம் பிடிக்கும். இதுவிஷயத்தைக் குறித்து பதஞ்சலிருஷி என்ன சொல்லுகின்றாரென்றால்;

"ஸது தீர்க்ககால நைரந்தர்ய ஸத்காராஸேவிதோ த்ருடபூமி:."

பிரம்மபதவி, அநேக ஜன்மங்களாய் நிரந்தரம் (எப்பொழுதும்) பிரம்மத்தை ஜபம் செய்துகொண்டு வருவதனால் உண்டாகின்றது. எல்லாக் கர்மங்களையும் சாஸ்திர விதிப்படி விட்டு என்றால், சந்நியாசியாய் அநேககாலம் விடாமல் செய்துகொண்டுவரும் திருட ஸம்ஸ்காரத்தினால் (பூர்வ ஜன்மங்களின் வாசனையினால்) தானாகவே ஞானரூபமான அகண்டானந்தத்தை அடைந்து நானே பிரம்ம சொரூபனென்று தெரிந்துகொள்ளுகின்றான். இதுபோல் சதாகாலமும் பிரம்மத்தை ஜபம் செய்துகொண்டு வரவேண்டுமென்று ஸ்ரீ சங்கராசாரியரது அபிப்பிராயம். "நிரவ்யாஜேத்யாதினா விதுஷ: தேநேத்யர்த்த:" அஹங்காரம் கபடம் அசுர குணங்கள் அதாவது, காமக் குரோத லோப மோஹ மத மச்சரங்கள் இல்லாதவர்களாகிய ஞானி

கள், தமது சரீரத்தை பிராரப்தத்திற்கு சமர்ப்பிப்பார்கள். அதாவது மனோ விகாரங்களில்லாமல் சுக துக்கங்களை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். "ஏதௌ வாஸநா மநோ நாசௌ கீத்ருசௌ," பூர்வ ஜன்மங்களாய் வரும் வாசனைகளின் நாசமும் மனோ நாசமும் எவ்விதமாய் உண்டாகின்றன. அவைகள் எப்படிப்பட்டது என்னும் கேள்விக்கு ஸமாதானம் என்னவென்றால்,

மனத்திற்கு டம்பம் முதலானவைகள் அகஸ்மாத்தாய் உண்டாவதற்குக் காரணம், பூர்வ ஜன்மங்களின் வாசனையேயாம். அதாவது, அனேக ஜன்மங்களாய் காமக் குரோதாதி அழுக்குகள் மனதுடன் கூடவே தொடர்ந்து கொண்டு வருவதே வாசனையென்று சொல்லப்படும். இந்தக் காமக்குரோதாதி குணங்கள் எப்படி நாசமாகுமென்றால் இது ஆத்மாவென்றும், இது அநாத்மாவென்றும் தெரிந்துகொள்ளாத அவிவேகத்தினால் உண்டாகிய காமக் குரோதங்கள் முதலாகிய அஹங்காரங்களும், அன்னிய பதார்த்தங்களினால் (ஆசா பாசங்களினால்) உண்டாகிய காமக் குரோதாதிகளும், தெய்வவாசனை உண்டான பிறகு நாசமாய்விடும். தீவட்டியிலிருந்து அநேக தீபங்கள் உண்டாவதுபோல் தெய்வ வாசனையிலிருந்து உண்டாகும் சாத்வீக விருத்திகளின் சமூகமே அந்தக்கரண பரிணாமமென்று தெரிந்துகொள்ளவேண்டும. அதாவது, இதர விஷயங்களில் மனம் ஓடாமலிருப்பது, அந்தக்கரண பரிணாமமென்று சொல்லப்படும். மனதிற்கு உண்டாகும் ஆசா பாசங்களென்னும் குரங்குச் சேஷ்டைகளெல்லாம், பிரம்ம நிஷ்டையினால் நாசமாகும். இந்த பிரம்ம நிஷ்டையை அப்பியாசம் செய்யவேண்டுமானால், இந்நூலில் சொல்லி யிருப்பதுபோல் பிராணாயாமம் அப்பியாசம் செய்து வரவேண்டும். காமக் குரோதாதி வாசனைகளை

யெல்லாம் போக்கடிப்பது தெய்வவாசனை. தெய்வவாசனை, தத்துவ ஞானத்திற்கு சாதனம் என்று சுருதிகளில் பிரசித்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. தன்னைவிட அன்னியமாயிருக்கும் தேஹேந்திரியங்களில் 'நான்' என்னும் எண்ணமே அபிமானமென்று சொல்லப்படும். இந்த அபிமானத்தை விடுவதே ஞானசாதனம். அபிமானத்தை விட்டு பரிசுத்தமான பரமாத்மாவை ஜபம் செய்யப்பட்டவன் ஆத்மாவை தரிசிக்கின்றான். "இதம் வாஸநாக்ஷயாதேஃ தத்வஜ்ஞான ஸாதநத்வம் ப்ரதர்ஶயந்நாஃ" வாசனைகளின் நாசமே தத்வ ஞானத்திற்கு முக்கியமென்று சொல்லுகின்றது. ஆகாம்மியம், சஞ்சிதரூபமான கர்ம த்வயங்களை அதாவது, புண்ணிய பாபங்களை பிரம்மாக்நியினால் பஸ்மம் செய்தபுருஷன் தன்னைவிட வேறு வஸ்து வில்லையென்று நினைக்கின்றான் அதனால் பிரம்மஞானிக்கு பாப சம்பந்தங்களில்லை. ஆனால் ஞானியானவன் தன் சரீரம் நசிக்கும் வரையில் பிராரப்த கர்மத்தை மாத்திரம் அனுபவிக்கின்றான்.

"மமேதம் சரீரம்........அநுபூயதே" இது என்னுடையது, இது என் சரீரம், இது என் கண்கள், இது என் காதுகள், இது என் பிராணன், இது என் மனம், இது என் புத்தி என்று வேறு வேறு பதார்த்தமாய் எண்ணுவது பிரதி புருஷனுக்கும் அனுபவமா யிருக்கின்றது. தேஹேந்திரியங்களை யெல்லாம் 'இது அது' என்றுவேறாய்ச் சொல்வதனால் ஆத்மா தேஹேந்திரியங்களை விட வேறாயிருக்கின்றதென்று ஸ்பஷ்டமாய்த் தெரிய வருகின்றது.

"ஆத்மாநு........அநுபூயந்தே," ஆத்மா "நான்" என்று சொல்லிக் கொண்டபோது அந்த "நான்" என்னும் ஆத்மா, தேஹேந்திரியாதி மனோ புத்திகளை விட வேறாகிய ஓர் வஸ்துவென்று, தேவ மனுஷ்யாதி சர்வ ஜந்துக்

களுக்கும், தம் தம் மனதிற்கு பிரத்தியக்ஷமாய்த் தோன்று கின்றது.

"அத இதம்காராஸ்பதத்வேந" "இது" "அது" என்று வேறு பதார்த்தமாய் எண்ணுவதனல் "தேஹாதீநாம்.......அபாவேந" கடம் முதலாகிய வேறு பதார்த்தங்களை "இது" "அது" என்று நாம் எப்படிச் சொல்லு கின்றோமோ அதுபோல் தேஹேந்திரியங்களையும் கூட "இது" "அது" என்று வேறு பதார்த்தமாய் நாம் சொல்லுகின்றோம். ஆதலால் கடாதிகளைப்போல், தேஹேந்திரியங்களுக்கெல்லாம் ஆத்மா, வேருயிருக்கின்றது என்று ஸ்பஷ்டமாய்த் தெரியவருகின்றது. "சித்தம்ப்ரஹ்மத்வம்" "நான்" என்று சொல்லப்பட்ட ஆத்மா சச்சிதானந்த சொரூபனை பிரம்மமே என்று நிச்சயிக்க வேண்டும். "இது" என்று சொல்லப்பட்ட தேஹேந்திரியங்கள் 'நான்' அல்ல, இதை அநாத்மாக்கள் என்றே சொல்ல வேண்டும்.

"சித்பாஸ்யத்வ........ப்ராந்திரேவ" எல்லா சரீரங் களும், பிரம்மமாகிய ஆத்மாவின் சகாயத்தினல் பிரகாசிக் கின்றதே யொழிய, சுயமாய்ப் பிரகாசிக்கத் தக்கதல்ல; அதனல் சரீரங்களை விட ஆத்மா வேறு யிருக்கின்றதென்று ஸ்பஷ்டமாய்த் தெரியவருகின்றது. இப்படிப்பட்ட சரீரத்தில் "நான்" என்னும் ஆத்மா எப்படி யிருக்கின்றதென்ருல், ஸ்படிகத்தின் முன் சிவப்பு வர்ணமுடைய புஷபத்தைக் காட்டியபோது அதனுடைய பிரதிபிம்பம்,ஸ்படிகத்தில் சிவப்பாய்த் தோன்றுவதுபோல் காணப்படும்.

"ப்ரத்யகாத்மநஃ....ஸ்வயமேவ ப்ரகாஶதே" நமக்குள் இருக்கும் மனம், புத்தி, சித்தம், அஹங்காரமென்னும் அந்தக்கரணங்கள் நான்கும், கண் இந்திரிய வழியாய்ச் சென்று, வெளியில் காணப்படும் பதார்த்தங்களின்மீது

விழுந்து, அவைகளின் பிரதிபிம்பத்தைத் தன்னில் நிறுத்தி விடுகின்றது. அதன் பிரதிபிம்பம் தன்னில் நிறுத்தியபிறகு அந்தப் பதார்த்தம் தன் எதிரில் காணவிட்டாலும் மனம் மாத்திரம் அதையே நினைத்துக் கொண்டிருக்கும். அதாவது அந்தக்கரணத்தில் வெளி வஸ்துக்களின் பிரதிபிம்பம் பிரதி பலித்துக்கொண்டேயிருக்கும். வெளியில் காணப் படும் பதார்த்தங்களின் ரூபங்களை அந்தக்கரணங்கள் தாமாகவே கிரகிக்கத்தக்க சுபாவ குணமுடையது அல்ல, ஆத்மாவின் சம்பந்தத்தினாலேயே அந்தக்கரணங்களுக்கு (மனம், புத்தி, சித்தம் அஹங்காரங்களுக்கு) கிரகிக்கத்தக்க சக்தியுண்டாகின்றது. ஆதலால், ஆத்ம சைதன்னியமே அந்தக்கரணத்தை ஜொலிக்கச் செய்கின்றது. இந்த அந்தக்கரணத்தையே இதுவரையில் "நான்" "நான்" என்று சொல்லிக்கொண்டு வந்தது. ஆதலால், அதை அந்தக்கரண மென்று சொல்லாமல் "நான்" என்பதே ஆத்மாவென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்தக்கரணத்தை ஆத்மா வென்று மந்தபுத்தி யுடையவர்களுக்குச் சொன்னதே யொழிய சூட்சுமபுத்தியுடையவர்களுக்குச் சொன்னதல்ல,

குருவானவர், சிஷ்யனுக்கு பிரம்மோபதேசம் செய்யும்பொழுது சிஷ்யனை படிப்படியாய்க் கொண்டுபோவதற்காக,முதல் அன்னமே பிரம்மமென்றும், பிறகு பிராணனே பிரம்மமென்றும், இவ்விதமாய் ஒன்றொன்றாய் உபதேசம் செய்து மறுபடியும் அந்த புத்தியைத் திருப்பி, அந்தக் கரணமே பிரம்மமென்று ஸ்தாபித்து, "நான்" என்னும் ஞானம் அந்தக்கரணத்திற்கே உண்டென்றும், அந்த அந்தக்கரணத்தினால் ஆத்மாவைத் தெரிந்துக்கொள்ளவேண்டு மென்றும், அந்தக்கரணங்களில் காணப்படும் பிரகாசத்திற் குக் காரண மென்னவென்றால், அதற்கு ஸாக்ஷி பூதமா யிருக்கும் ஆத்மாவே காரணமென்றும், இந்த ஆத்மாவை,

"நான்" என்னும் அறிவுடைய அந்தக்கரணத்தின் மூலமாகவே அறியவேண்டுமென்றும் குருவானவர் உபதேசிக்கின்றார்.

ஆத்மா சுயம் பிரகாசமாயிருக்க, அந்த ஆத்மாவைத் தெரிந்துகொள்ள "நான்" என்னும் அந்தக்கரணத்தின் சகாயமேன் என்றாலோ? ஆத்மாவை அஞ்ஞானம் மூடிக் கொண்டிருக்கின்றது; ஆதலால், ஆத்மாவைத் தெரிந்து கொள்ள அஞ்ஞானமென்பது நாசமாகவேண்டும்.

சுலோ || "யாதிர்யங்நரதேவதாபிரஹமித்யந்தঃ ஸ்புடாக்ருஹ்யதெ யத்பாஸா ஹ்ருதயாக்ஷ தேஹவிஷயா பாந்தி ஸ்வதோ அசேதநாঃ,தாம் பாஸ்யையঃபிஹிதார்க்கமண்டலநிபாம்ஸ்பூர்த்திம் ஸதா பாவயன் யோகீ நிர்வ்ருத மாநஸோ ஹி குருரித்யேஷா மநீஷா மம."

எல்லா ஜந்துக்களின் மனதிற்குச் சாக்ஷியா யிருந்து 'நான்' என்னும் எண்ணத்தைத் தெரிந்துகொள்ளத்தக்கதும், இந்திரிய வியாபாரங்களை யெல்லாம் ஆத்மா செய்விக்கின்றதென்றும், அந்த ஆத்மாவே சுயம் பிரகாசமான ஜோதி சொரூபமென்றும் அறிந்து, அதனால் உண்டாகும் பிரம்மாநந்த சுகத்தை எவன் அடைந் திருக்கின்றானோ அப்படிப்பட்டவனையே ஸ்ரீ சங்கராசாரியர் தன் குருவாய் நினைக்கின்றார்.

திரியக் ஜந்துக்கள் அதாவது, மிருகங்கள் பக்ஷிகள் புழுக்கள் முதலானவைகள் எவையுண்டோ அவைகளுக்கெல்லாம், 'நான்' என்னும் அந்தக்கரண விருத்திகள் காரணமாயிருந்து, எல்லாப் பூதங்களையும் மற்றொரு சகாயமில்லாமலே தனக்குத் தானாகவே பிரகாசிக்கச் செய்யும் ஞான சொரூபமே, அகண்டானந்த பிரம்மமாய் கிரகிக்கப் படுகின்றது. புழு முதலானவைகளுக்கெல்லாம் 'நான்' என்னும் அபிமானம் ஏது என்று கேட்கின்றாயா என்ன?

அதற்குக் காரணம் சொல்லுகின்றோம் கேள்; ஸர்ப்பமானது புருஷனைப் பார்த்தவுடன் ஓடிவிடுகின்றது. அப்படி ஓடுவதற்குக் காரணமென்னவென்றால் "நான்" என்னும் அறிவு இல்லாவிட்டாலும் தன்னைக் கொல்ல வருகின்றானென்று எண்ணி, தன் தேகத்தின்மீது அபிமானம் வைத்து ஓடுகின்றது. ஆதலால், அதற்கும் "நான்" என்னும் தேகாபிமானமுண்டு. அப்படிப்பட்ட பிரம்மத்தின் சகாயத்தினால், அந்தரேந்திரியம் அதாவது, மனம் புத்தி சித்த அஹங்காரங்களும், பாஹ்யேந்திரியம் அதாவது, வெளியில் காணப்படும் வஸ்துக்களின் தோற்றம் இவைகள் யாவும் காணப்படும். பரப் பிரம்மத்தின் சகாயத்தினாலேயே இந்த பிரபஞ்சமெல்லாம் பிரகாசிக்கின்றதென்று சுருதிப் பிரமாணமுண்டு.

சூர்யன் எங்கும் பிரகாசித்துக் கொண்டிருந்தபோதிலும் அவனை மேகங்கள் மூடியபோது, அந்த சமயம் மாத்திரம் சூர்ய பிரகாசம் மறைந்திருக்கும். சூர்ய பிரகாசம் காணப்படாமலிருப்பது மானவர்களின் கண்களுக்கேயல்லாமல் சூர்யனுக்கல்ல. அதுபோல் "நான்" என்னும் ஆத்மஞானம், பரோக்ஷமாய் எல்லோருக்கும் தெரிந்தாலும், அவர்களுக்கு அபரோக்ஷ ஞானமுண்டாகும் வரையில் அதாவது, பிரம்ம சாக்ஷாத்காரம் பிரத்தியக்ஷாநுபவமாய் உண்டாகும் வரையில், அஞ்ஞான மிருப்பதால் ஞானம் சித்திக்கமாட்டா.

தேஹேந்திரியங்களுக் கெல்லாம் வேறாய், சுயம்பிரகாசமாயிருக்கும் ஆத்மாவே "நான்" என்று, அறிந்த யோகியானவன், எப்பொழுதும் திட சித்தமாகவே யிருப்பான் இப்படி திட சித்தமாயிருப்பதே ஸம்பிரஞ்ஞாத சமாதியென்று சொல்லப்படும். மனதை ஒரே நிலையில் நிறுத்துவதே தியானமென்று பதஞ்சலி யோக சூத்திரத்

தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

அதாவது, விட்டுவிட்டுச் செய்வது தியானமென்றும், எப்பொழுதும் விடாமலிருப்பது சமாதியென்றும் சொல்லப்படும். இந்த தியான சமாதிகள் இரண்டும் இதனடியில் விவரித்துச் சொல்லியிருக்கின்றேம் கேள்;

"சித்தைகாக்ரியாத் * * உபதிஶ்யதே" மனதை ஒரே நிலையில் நிறுத்தினல் ஞானேதயமாகும். மனதை ஒரே நிலையில் நிறுத்தும் புருஷனது தாரதம்மியங்களைக் கண்டுபிடித்து, குருவானவர் சிஷ்யனுக்கு ஞானேபதேசம் செய்கின்றார். "விலாப்ய விக்ருதிம் * * சிதாநந்தம் சிந்தயேத்" யோகாப்பியாசம் செய்யும்போது மனதை ஒரே நிலையில் நிறுத்தி, மனே விகாரங்களை யெல்லாம் அடக்கி, பிறகு யோகாப்பியாசம் செய்யவேண்டும். சம்பிரஞ்ஞாத சமாதி எப்படிப்பட்டதென்றால், "ப்ரஹ்மாகார * * த்யாநாப்யாஸப்ரகர்ஷதஃ" அஹங்காரமில்லாமல் அதாவது, 'நான்' என்னும் அந்தக்கரணங்களுடன் சம்பந்தப்படாமல் தன்னைத்தான் மறந்து கெவல பிரம்ம சொரூபனுயிருப்பது, ஸம்பிரஞ்ஞாத சமாதி என்று சொல்லப்படும். இப்படிப்பட்ட சமாதிநிலை தியானப்பியாசத்தினல் உண்டாகின்றது.

"ஜ்ஞாநஸாதந முபதிஶந்நாஹ" 'நான்' என்பதே பிரம்மமென்று முதலில் உபதேசிக்கின்றார்கள். பிறகு 'நான்' என்பது பிரம்மமல்லவென்றும், அந்தக்கரண விருத்தி யென்றும், அந்த அந்தக்கரண விருத்தியினல் ஆத்மஞான முண்டாகுமென்றும், அந்த ஆத்மஞானத்தினல் பிரம்ம சாக்ஷாத்காரம் உண்டாகுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது; அதாவது 'நான்' என்னும் எண்ணத்தை விட்டுத் தன்னைத்தான் மறந்து பிரம்மானுசந்தானம் செய்துகொண்டிருக்க வேண்டுமென்றும் உபதேசிக்கின்றார்கள். "யோகிதி * * உபலக்ஷணம்" மனது

வெளியில் ஓடாமலிருப்பதே யோகம். அப்படி வெளியில் ஓடவிடாமல் மனதை நிறுத்தினவனே யோகி. இந்த யோகமே மௌனமென்று சொல்லப்படும். "மௌனம் ** ஏகதண்டிநః" யோகத்திற்கு சாதனம் என்னவென்றால், எண்ணங்களையெல்லாம் அடக்கி சாந்தமாயிருந்து எந்த எண்ணங்களுமில்லாதவனாய் சகல பூதங்களையும் சமமாய்ப் பார்ப்பவனே யோகியும், சந்நியாசியும் என்று சொல்லப் படுவான். இப்படிப்பட்ட குணங்களையுடைய சந்நியாசிக்கு உண்டாகும் பலனைச் சொல்லுகின்றோம் கேள்.

"ததா ச * பவதீதி பாவః" பிரம்மஞானியாகிய சந்நியாசி வாக்கு வியாபாரமும் மனோ வியாபாரமும் இல்லாததால் எப்பொழுதும், பிரம்ம பாவத்தினால் சுயம் பிரகாச சித்ரூப பிரம்மானந்தத்தை அடைகின்றான்.

"பரிப்ராப்த * * ஆநந்தோ ஹி விவர்ததே" ஆத்மானாத்ம விவேக முண்டாய் சம்சார பந்தங்களைவிட்டு, மனோ வியாபாரமாகிய சங்கல்பங்களையெல்லாம் ஒழித்திருக்கும் யோகிக்கு பிரம்மானந்தம் பிராப்தமாகுமென்று கிரந்தங்களில் சொல்லப் பட்டிருக்கின்றது.

"ஹி * * பாவ" யோகியானவன், இந்த பிரம்மாநந்தத்தில் சந்தோஷ மனதுடையவனாயிருப்பதனால், ஜீவப் பிரம்மைக்கிய ஸந்தானத்திலேயே யிருப்பான். இப்படிப் பட்டவனே என் குருவென்று ஸ்ரீ சங்கராசாரியர் சொல்லியிருக்கின்றார்.

> "யத்ஸௌக்யாம்புதி லேஶலேஶத இமே ஶக்ராதயோ நிர்வ்ருதா யச்சித்தே நிதராம் ப்ரஶாந்தகலநே லப்த்வா முநிர் நிர்வ்ருதః யஸ்மிந்நித்ய ஸுகாம்புதௌ களிததீர் ப்ரஹ்மைவ ந ப்ரஹ்மவித்யః கஸ்சித்ஸ ஸுரேந்த்ர வந்திதபதோ நூநம் மநீஷா மம."

'கு' என்றால் காடாந்தகாரம், (இருள்) 'ரு' என்றால் அந்த காடாந்தகாரத்தை நாசம் செய்யப்பட்டவன். இப்

படிப்பட்ட குருவினால் உபதேசம்பெற்ற மனனசீலன் எப்பொழுதும் பிரம்மத்தையே தரிசித்துக்கொண்டு எந்த எண்ணங்களுமில்லாமல் பிரம்மசுகத்தை அடைந்தவனாகின்றான். ஆதலால் அவன், நித்ய சுகமென்னும் சமுத்திரத்தில் மூழ்கியிருக்கும் மனதுடையவனா யிருப்பதால், அப்படிப்பட்டவன் பிரம்மமே யாகின்றான். இப்படிப்பட்டவன் எவனா யிருந்தபோதிலும் அவன் தேவதைகளால் நமஸ்கரிக்கப்படுவானென்று சுருதி சொல்லுகின்றது.

ஸங்கல்பமில்லாத மநநசீலன், நித்தியசுக சமுத்திரத்தில் மூழ்கிய மனதுடையவனா யிருப்பதால், அவனை தேவதைகள் நமஸ்கரிக்கின்றார்கள்.

சுயம் பிரகாசமானதும், ஞான சொரூபமானதுமான ஆத்ம சம்பந்தசுகம் எதுவோ அதுவே சௌக்கியமென்று சொல்லப்படும். அந்த சௌக்கியம் எங்கும் நிறைந்திருப்பதனால் சமுத்திரத்திற்கு ஒப்பிடப்பட்டது. அப்படிப்பட்ட சுகத்தில் இந்திராதி தேவதைகள் அணுமாத்திரம் அடைந்திருப்பவர்களாயிருக்கின்றார்கள். இந்த பிரம்மத்தில் அணுமாத்திரம் ஆஸ்ரயித்து, சமஸ்த பூதங்களும் ஜீவித்திருக்கின்றன. அந்த அணுமாத்திர பரப் பிரம்மத்தை மாயை மூடிக்கொண்டிருப்பதனால் அது ஜனன மரணங்களை அடைந்துகொண்டு வருகின்றது. இந்த மாயை நீங்கிய பிறகு, நித்திய நிரதிசயாநந்த பிரம்மமென்னும் ஸமுத்திரத்தில் மூழ்கியிருப்பான். அப்படி மூழ்கியிருப்பதே அசம்பிரஞ்ஞாத சமாதி, அதாவது, விருத்தி எண்ணங்கள் சூன்யமான மனது அசம்பிரஞ்ஞாத சமாதியென்பதற்குச் சுலோகமுண்டு. இப்படி பிரம்மானந்தத்தில் லீனமானவன், பரிபூர்ணமான ஆநந்தசொரூபன் தானே யாகின்றான்; அப்படிப்பட்டவனுக்கும் பிரம்மத்திற்கும் பேதமேயில்லை. அவனே பிரம்மமென்று சொல்

லப்படுவான். இப்படிப்பட்டவன், அளவில்லாத மாயை யென்னும் பாசத்தை அறுத்து சிவஞானியாவான்; உலகினர் இவனைப் புகழ்ந்து பூசிப்பார்கள். சிவகதியிற் செல்பவன் இவனே; அத்தகைய சிவ ஞானிக்கு அன்னமளித்தால், சிவபெருமானுக்கு அற்பணம் செய்ததாகும், அவ்வகைச் சிவஞானியை நிந்திப்பது சிவபெருமானை நிந்தித்ததாகும்; அவனை வாழ்த்துவது, சிவபெருமானை வாழ்த்துவதாகும்; ஈசுவரன் கிருபாநோக்கமுடையவர்கள், ஜீவன் முக்தர்களாவார்கள் என்று சூதமாமுனிவர் நைமிசாரிண்ய மஹரிஷிக்குச் சொல்லுகின்றார்.

எப்பரி சப்பரி சரன்பாலுள
மருத்தி யின்னெறிக்க ணியலாநிற்போ
னெப்பரிய பாசநீத் தொழிந்த
சிவஞானி யவனுலகோ ரேத்திச்
செப்பி யருச்சித்தற்றி முரிய
னவன் சிவகதியிற் செல்லாநிற்போ
னிப்புவனத் தவற் கனமீந்திடிற்
சிவனுக் கற்புதமா யிருக்குமன்றே.

அன்னவனை நிந்திப்ப தரனை
நிந்திப்ப தவன்றன்னை வாழ்த்தன்
முன்னவனை வாழ்த்துவதா மவ
னருட்கண்ணோக் கடைந்தார் முத்தராவ
ரென்னிலர னருச்சனை யேசெய்வேண்டு
மிவன் பெறுதற்கரிய வில்லை
சொன்னது சத்தியமென்றான் கேட்ட
முனிவரர் சடிலந் துளக்கிச் சொல்வார்

இப்படிப்பட்ட பிரம்மத்தைத் தெரிந்தவன் பிராமணனாகின்றானென்று சுருதி சொல்லுகின்றது. இப்படிப்பட்டவன் இந்திராதி தேவதைகளாலும் மனுஷ்யர்களாலும் பூசிக்கப்படுகின்றான். ஐசுவர்யத்தைக் கோரப்பட்ட புருஷன் பிரம்ம ஞானியைப் பூசிக்கவேண்டுமென்பது சுருதி

வாக்கிய ஆத்மாவைத் தெரிந்துகொண்ட பிரம்ம ஞானிக்கு, திரிமூர்த்திகளும் சுவாதீனமாகின்றார்களென்று ஸ்மிருதிகள் சொல்லுகின்றன.

ஆதலால், இதுவரையில் சொல்லிவந்த பிரம்ம ஞான சாதனர்களுக்கு, பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்னும் ஜாதிபேதம் இல்லை. இது, பரி பக்குவமடைந்த அந்தக்கரண முடையவர்களுக்கே அடையத்தக்கதுமா யிருக்கின்றது. இதற்கு சுருதிப் பிரமாணம் என்னவென்றால்,

சுழி || "ஜாதிரிதி ச ந சர்மணோ ந ரக்தஸ்ய ந மாம்ஸஸ்ய ந சாஸ்திந: ந ஜாதி ராத்மனோ ஜாதிர் வ்யவஹார ப்ரகல்பிதா."

உலகத்திலுள்ள சகல ஜனங்களின் சரீரம், அஸ்திகள் தோல் நரம்பு மாம்சம் கொழுப்பு ரத்தம் முதலானவைகளினால் நிறைந்திருக்கின்றது. ஆதலால், சரீரத்திற்கு ஜாதிபேதமில்லை. அன்றியும், ஸகல ஜீவஜந்துக்களின் சரீரத்தில், பரப் பிரம்மத்தின் அம்சமாகிய ஆத்மா ஒருவனே வியாபித் திருக்கிறான். அப்படிப்பட்ட ஆத்மாவிற்கு ஜாதி பேதமில்லை. உலக வியாபாரத்திற்காக ஜாதிபேதம் கற்பிக்கப்பட்டதே யொழிய சத்தியமாய் ஜாதிபேதம் இல்லவே யில்லை. ஆதலால், நீ ஜாதிபேதமென்னும் வர்ணாசிரம தர்மங்களை விட்டு கர்மத்தை அனுஷ்டித்து வரக்கடவாய்.

சிஷ்யன்:—ஓ சத்குரு நாதா! கர்மமென்றால் என்ன?

ஆசாரியர்:—கர்மமென்றால் ஓர் காரியம். அதாவது, கேட்பது, பார்ப்பது, வார்த்தை யாடுவது முதலாகிய ஒவ்வொரு காரியங்களும் கர்மமென்றே சொல்லப்படும். அந்தக் கர்மம், சாதாரணகர்மம், பாபகர்மம், சத்கர்மம், நிவிர்த்திகர்மம் என்று நான்கு விதங்களா யிருக்கின்றது. இதில் சாதாரணகர்மம் எப்படிப் பட்டதென்றால், தசேந்திரியங்கள் (பத்து இந்திரியங்கள்) செய்யப்பட்ட கார்யங்களேயாம். அவைகள் எவையென்றால்:—செவிகள், அதன்

விஷயமாகிய சப்தங்களைக் கேட்கச் செய்யும்; நேத்திரங்கள், அதன் விஷயமாகிய ரூபங்களைப் பார்க்கச் செய்யும்; நா, (நாக்கு) அதன் விஷயமாகிய ருசிகளை அறியச் செய்யும்; மூக்கு, அதன் விஷயமாகிய வாசனையை முகரச்செய்யும்; வாய், வார்த்தையாடும்; கைகள், கொடுக்கல் வாங்கல் முதலாகிய கார்யங்களைச் செய்துகொண்டிருக்கும், பாதங்கள் நடப்பது நிற்பது முதலான கார்யங்களைச் செய்துகொண்டிருக்கும்; குய்யம், மூத்திரம் விடும்; அன்றியும் சுக்கில சுரோணிதங்களை விட்டு ஆனந்திக்கும்; குதம், மல விசர்ஜ்ஜனை செய்விக்கும். த்வகிந்திரியம், (தேகசர்மம்) ஸ்பர்சம் என்றால் தொடுதல் என்பதை அறிவிக்கும்.

இந்தப் பத்து இந்திரியங்களும் செய்யும் கார்யங்களையெல்லாம் ஆத்மா, அஞ்ஞானத்தினால் மூடப்பட்டு 'நான் செய்கின்றேன்' என்று எண்ணி, புருஷன் சொல்லுகின்றான். இவ்விதமாய் எண்ணி முன்சொல்லிய இந்திரியங்களால் செய்துவரும் கார்யங்களை எல்லாம் தேக கர்மமென்றும், சாதாரண கர்மமென்றும் சொல்லப்படும். ஆனால்,

"இந்த்ரியாணாம் ப்ரஸங்கேஷு தோஷம் ருச்சத்ய ஸம்ஶயம்
ஸந்நியம்ய து தாந்யேவ ததஸ்ஸித்திம் நியச்சதி."

என்னும் மனுஸ்மிருதி வாக்கியரீதியாய், இந்திரியங்கள், அதனதன் காரியங்களைச் செய்துகொண்டிருப்பதனால், அதாவது, மனம் சப்த விஷயங்களில் ஓடுவதனால் தோஷம் (இச்சை) உண்டாகின்றது; அப்படி இந்திரியங்களை ஓடவிடாமல் நிறுத்தினால் தோஷம் ஒழிந்து மோக்ஷமென்னும் பதவியை அடைகின்றான். எப்படி என்றால், இந்திரியங்கள் சப்தாதி விஷயங்களில் ஓடினால் அந்த விஷயத்தில் புருஷனுக்கு ஆசை உண்டாகின்றது. அதாவது, பிடிப்பு உண்டாகும். அப்படி ஆசை உண்டாவதனால் காமம் (இச்சை) உண்டாகும். காமம் உண்டாவதனால் குரோதம் (கோபம்)

உண்டாகும். அப்படி குரோதம் உண்டாவதனுல் மோகம், அதாவது, தூஷிப்பதோ அடிப்பதோ கொல்லுவதோ முதலாகிய காரியங்கள் தன்னைத்தான் தெரியாமல் ஸ்மரணை தப்பிச் செய்து புத்தியை கெட்ட ஸ்திதிக்குக் கோபம் கொண்டுவந்துவிடும். அப்போது புருஷன், ஸ்மரணை தப்பி இந்திரியங்களை ஜயிக்கவேண்டுமென்னும் ஞப்தியை மறந்துவிடுகின்ருன். இப்படி ஸ்மரணை தப்புவதனுல், புத்திக்கு, ஆத்மஞானம் அடைய பங்கம் உண்டாகின்றது. அப்படி புத்திக்கு பங்கம் உண்டாவதனுல் புருஷன் சம்சாரமென்னும் சமுத்திரத்தில் மூழ்கிப்போகின்ருன். ஆதலால்,

"இந்த்ரியாணாந்து ஸர்வேஷாம் யத்யேகம் க்ஷரதீந்த்ரியம்
தேநாஸ்ய க்ஷரதி ப்ரஜ்ஞா த்ருதே: பாதாதிவோதகம்."

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய், இந்திரியங்களில் ஏதாகிலும் ஓர் இந்திரியம் சுவாதீன மாகாவிட்டால (சிறிய துவாரமுள்ள மிடாவில் ஜலம் சிறுகச் சிறுக ஒழிகிப்போவதுபோல்) புத்தி கெட்டவனுக்கு ஞானம் சிறுகச் சிறுக தினே தினே குறைந்துவிடும். ஆதலால்,

"வஸே க்ருத்வேந்த்ரிய க்ராமம் ஸம்யம்ய ச மநஸ்ததா
ஸர்வாந் ஸம்ஸாதயே தர்மாந் ந க்ஷிண்வன் யோகதஸ்தநும்."

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய் இந்திரியங்களை, பதார்த்தங்களில் ஓடவிடாமல் நாளாவட்டத்தில் வசப்படுத்தி, தன் சரீரத்தைக் கஷ்டப்படுத்தாமல் ஞான நிஷ்டையை அப்பியாசம் செய்து வரவேண்டும். ஆனல்,

"ந ததைதாநி ஸக்யந்தே ஸந்நியந்து மஸேவயா
விஷயேஷு ப்ரஜுஷ்டாநி யதா ஜ்ஞாநேந நித்யஸ:."

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய், விஷயங்களில் ஓடிக்கொண்டிருக்கும் இந்திரியங்களைத் திருப்பிக்கொள்ள எப்படிப்பட்டவனுக்கும் அசாத்தியமே. ஞானநிஷ்டா

னங்களினுல் மனதை அடக்கினுல் என்ருல், எதிலும் ஆசையில்லாமல் இருந்தால், இந்திரியங்களுக்கு விஷயங்களின் ஆசை உண்டாகமாட்டா. இந்திரியங்களை விஷயங்களிலிருந்து பலாத்காரமாய்த் திருப்பிக் கொள்ளவேண்டுமென்று எண்ணினுல் அந்த இந்திரியங்கள், தன் வசமாகாமல் அதனதன் காரியங்களையே செய்துகொண்டிருக்கும். என்ருல், சப்தாதி விஷயங்களில் இந்திரியங்கள் ஓடிக்கொண்டே யிருக்கும். ஆதலால், மனதை நிறுத்தாமல் இந்திரியங்களை பலாத்காரமாய் ஜயிப்பதற்கு பிரயத்தனப்படுபவனை, மூடனென்றே சொல்லலாம். இந்திரியங்களை அதனதன் காரியங்களைச் செய்யவிடாமல் நிர்ப்பந்தப்படுத்தினுல் சரீரம் நிறகமாட்டா.

"ம்ருத்வா ஸ்ப்ருஷ்ட்வா ச புக்த்வா ச த்ருஷ்ட்வா
ஜ்ஞாத்வா மு‑பாஸ‑பம்
ந ஹ்ருஷ்யதி க்ளாயதி யஃ ஸ மாந்த இதிகத்யதே."

"மருத்வா ஸ்ப்ருஷ்ட்வா ச த்ருஷ்ட்வா ச புக்த்வா
க்ராத்வா ச யோ நரஃ ந ஹ்ருஷ்யதி க்ளாயதி வா
ஸ விஜ்ஞேயோ ஜிதேந்த்ரியஃ."

என்னும் மஹோபநிஷத், மநு ஸ்மிருதி வாக்கியங்களின் ரீதிசாய், நேத்திரங்கள் ரூபங்களைப் பார்த்துக்கொண்டிருந்தபோதிலும், நா ருசி அறிந்தபோதிலும், மூக்கு வாசனை முகர்ந்துகொண் டிருந்தபோதிலும், வாய் வார்த்தையாடிக்கொண் டிருந்தபோதிலும், கைகள் கொடுக்கல் வாங்கல் முதலான கார்யங்களைச் செய்துகொண் டிருந்தபோதிலும், பாதங்கள் நடந்துகொண்டிருந்தபோதிலும், மர்மஸ்தானம் மூத்திரம் சுக்கிலம் விட்டுக்கொண் டிருந்தபோதிலும், குதம் மல விசர்ச்சனம் செய்துகொண் டிருந்தபோதிலும், அதது தம்தம் காரியங்களையே செய்துகொண் டிருக்கவேண்டும்: அவ்வாறு

செய்யவிடாமல் நிறுத்தினால் தேகத்திற்கு பாதை உண்டாகும். சரீர கர்மம் அல்லாமல், பாப கர்மம், புண்ணிய கர்மமென இரண்டு கர்மங்களுண்டு. அதாவது, ஜீவ இம்சைசெய்வது, பொய் சொல்வது, திருடுவது, அசத்திய மாடுவது, தூஷிப்பது, அடிப்பது, மனம் நோகப் பேசுவது, மோசம் செய்வது, பரஸ்திரீகளை மோகிப்பது முதலானவைகள் வேதவிருத்தமான பாப கர்மங்களென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட பாப கர்மங்களைச் செய்து மரணமடைந்தவுடன்,

"ஶரீரஜை: கர்மதோஷை ர்யாதி ஸ்தாவரதாம் வாசிகை:
பக்ஷீ ம்ருகதாம் மாநஸை ரந்த்யஜாதிதாம்."

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய், தேகத்தினால் அஹங்காரத்துடன் செய்யும் பாப கர்மங்களுக்காக பூலோகத்தில் ஸ்தாவரங்களாகிய, பர்வத விருக்ஷாதி ஜன்மங்கள் உண்டாகும். அஹங்காரத்துடன் வாக்கினால் செய்யும் பாபகர்மங்களுக்காக மிருக, பக்ஷி ஜன்மங்கள் உண்டாகும். அஹங்காரத்துடன் மனதினால் செய்யும் பாப கர்மங்களுக்காக மனுஷ்யர்களில் அதம ஜாதியாகிய சண்டாளஜாதி உண்டாகும். வேத விருத்தமாகிய பாப கர்மங்களைச் செய்ய கனவிலும் நினைக்கலாகாது; பாப கர்மங்கள் செய்ய வேண்டுமென்று மனதிலும் எண்ணலாகாது என்று அறியக்கடவாய்.

சிஷ்யன்:—சுவாமி! தேவரீர் வாக்கின்படி இனி பாப கர்மங்களைச் செய்வதில்லை; இதுவரையில் செய்துவந்த பாப கர்மங்கள் நசிப்பது எப்படி?

"க்ருத்வா பாபம் ஹி ஸந்தப்ய தஸ்மாத் பாபாத் ப்ரமுச்யதே
நைவம் குர்யாத் புநரிதி நிவ்ருத்யா பூயதே து ஸ:."

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய், இந்நூலில் உப

தேசித்திருக்கும் ராஜயோகத்தை நன்றாய்த் தெரிந்து கொண்டு அதுபோல் அப்பியசித்து ஈசுவரனை துதிசெய்து பச்சாத்தாபத்துடன் துக்கித்து, இனி சத்தியமாய்ப் பாப கர்மங்களைச் செய்வதில்லை என்று, பிரதிதினம் ஈசுவரனை துதி செய்து வருவாயாகில் இதுவரையில் நீ செய்துவந்த பாபகர்மங்கள் ஒழிவதுமேயல்லாமல், இனி பாப கர்மங்களைச் செய்ய எண்ணமும் உண்டாகமாட்டா.

"அகர்மேதி ச கர்த்ருத்வ போக்த்ருத்வா த்யஹங்கார தயா பந்த ரூபம் ஜந்மாதிகாரணம் நித்ய நைமித்திக யாக வ்ரத தபோ தாநாதிஷு பலாபி ஸந்தாநம் யத்ததகர்ம."

என்னும் சுருதிரீதியாய், ஸ்நாந செளச சந்தியாவந்தன ஸ்ரார்த்த தர்ப்பணாதி நித்திய நைமித்திக கர்மங்களும், யாக விரத தபோ தானாதி காம்மிய சர்மங்களும், அகர்மமென்று சொல்லப்படும். எப்படியென்றால், வேதோக்த கர்மங்களாகிய நித்திய நைமித்திக காம்மிய கர்மங்களை பிரதி மனிதனும் அபேக்ஷையுடன் செய்வதனால் அதன் பலனை அனுபவிப்பதற்காக, மறு ஜனனமெடுக்க வேண்டும்; பலாபேக்ஷையுடன் செய்யுங் கர்மங்கள், புண்ணிய கர்மங்களா யிருந்யபோதிலும் அவை புனர் (மறு) ஜன்மங்களுக்குக் காரணமா யிருந்து ஜீவனை பந்தத்தில் கட்டுப்படுத்துமே யொழிய மோக்ஷ சாம்ராஜ்ஜிய பதவியை உண்டாக்கமாட்டா. இதுவே அகர்மமென்று சொல்லப்படும். அதாவது, பலாபேக்ஷையுடன் செய்யும் நித்திய நைமித்திக கர்மங்களும் யாக விரத தபோ தானாதி காம்மிய கர்மங்களும் வேதோக்தமான புண்ணிய கர்மங்களா யிருந்தபோதிலும் அவைகள் மோக்ஷத்தைக் கொடுக்கமாட்டா.

"ஶுபாப்யதயம் சைவ நைஃரேயஸிகமேவ ச
ப்ரவ்ருத்தஞ்ச நிவ்ருத்தஞ்ச த்விவிதம் கர்மவைதிகம்."

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய், வேதோக்தமான கர்மங்களில், பிரவர்த்தி கர்மமென்றும், நிவிர்த்தி கர்மமென்றும் இரண்டுவித கர்மங்களுண்டு. சொர்க்கபதவியடைந்து அங்கு தேவபோகங்களை அனுபவிப்பது பிரவர்த்தி கர்மமென்று சொல்லப்படும். ஜனன மரணமென்னும் சமுத்திரத்தைத் தாண்டி முக்தி அடைவது நிவர்த்தி கர்மமென்று சொல்லப்படும் அதாவது,

"இஹம்சாமுத்ர வா காம்யம் ப்ரவ்ருத்தகர்ம கீர்த்யதே
நிஷ்காமம் ஜ்ஞான பூர்வந்து நிவ்ருத்த முபதிஸ்யதே."

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய், தன தான்னிய, தாரா புத்ராதி அஷ்ட ஐஸ்வர்யங்களும் அஷ்ட போகங்களும், பூலோக சுகங்களாதலால் பிரவர்த்தி கர்மமென்று சொல்லப்படும்.

சொர்க்கலோகத்திலுள்ள தேவபோகங்களில் இச்சை வைத்து செய்யும் நித்திய நைமித்தியக தபோ விரத யாக தானாதி புண்ணிய கர்மங்கள் காம்ய கர்மமாயிருப்பதால் இதுவும் பிரவர்த்தி கர்மமென்று சொல்லப்படும். பூலோக சுகங்களையும் தேவலோக சுகங்களையும் கோராமல் நிஷ்காம்யமாகிய என்றால், ஸம்ஸார அபேக்ஷையில்லாமல் செய்யும் ஞானநிஷ்டை (பிரம்ம நிஷ்டை) யிலிருப்பது நிவர்த்தி கர்மமென்று சொல்லப்படும்.

"ப்ரவ்ருத்திம் கர்ம ஸம்ஸேவ்ய தேவாநாமேதி ஸாம்யதாம்
நிவ்ருத்திம் ஸேவ்யமாநஸ்து பூதாநத்யேதி பஞ்சவை,"

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய், காம்ய என்றால், ஓர் பலனை விரும்பி செய்யும் கர்மங்களாகிய பிரவர்த்தி கர்மங்களைச் செய்தவன், மரணமடைந்தவுடன், தேவலோகத்தில் பிறந்து தேவபோகங்களை அனுபவித்து புண்ணியம் முடிந்தவுடன் "க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விஸந்தி"

என்னும் கீதாசாரியர் வாக்கியரீதியாய் மறுபடியும் தன் பூர்வ ஜன்மங்களின் புண்ணியத்திற்குத் தக்கபடி, பூலோகத்திலுள்ள சக்கரவர்த்திகளின் வீட்டிலோ அல்லது, பெறுத்த செல்வமுடையவர்களின் வீட்டிலோ பிறப்பான். நிஷ்க்காமியாய், ஞானநிஷ்டனாய் நிவர்த்தி கர்மங்கள் செய்தவன் என்றால், ஈசுவரார்ப்பணமாய்க் கர்மங்களைச் செய்பவன் ஜனனமரண மென்னும் சமுத்திரத்தைத் தாண்டி சரீரம்வாராத விதேகமுக்தியை அடைகின்றான். ஆதலால்,

"யதா பங்கேந பங்காம்ப: ஸுரயா வா ஸுராவ்ருத:
பூதஹத்யாம் ததைவைகாம் ந யஜ்ஞைர் மார்ஷ்டு மர்ஹதி"

சேற்றைச் சேற்றுச் ஜலத்தில் அலம்பினால் சேறு போகாமலிருப்பது போலும், கள் மிடாவை கள்ளினால் அலம்பினால் கள்நாற்றம் போகாம லிருப்பது போலும், கர்மத்தினால் உண்டாகிய ஜன்மம், மறுபடியும் காம்ய கர்மங்களாகிய பிரவர்த்தி, கர்மானுஷ்டானங்களினால் நிவர்த்தி யாகமாட்டா.

"யதோக்தாந்யபி கர்மாணி பரிஹாய த்விஜோத்தம:
ஆத்ம ஜ்ஞானே ஸமே ச ஸ்யாத் வேதாப்யாஸே ச யத்நவாந்"

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய்,ஜன்மங்களுக்குக் காரணமாயிருக்கும் ஜப தப விரத யாக யஞ்ஞாதிகளையெல்லாம் விட்டு, வேதாந்த விசாரணை செய்து இந்திரியங்களை அடக்கி, இந்நூலில் உபதேசித்திருக்கும் ராஜயோகத்தை அறிந்து சதாகாலமும் ஞான நிஷ்டையில் இருக்க வேண்டும்.

"ஏதத்தி ஜந்மஸாபல்யம் ப்ராஹ்மணஸ்ய விசேஷத:
ப்ராப்யைதத் க்ருதக்ருத்யோ பவதி நாந்யதா."

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய் முன் சொல்

லிய வேதாந்த விசாரணை, இந்திரிய நிக்கிரஹம், ஞானானுஷ்டானம் இம்மூன்றும் இல்லாதவன் பிராமணனாய் ஜன்மித்த போதிலும் அவன் பிராமண னாகமாட்டான்.

"அநந்தகர்ம சௌசஞ்ச ஜபோ யஞ்ஞ ஸ்ததைவச
தீர்த்தயாத்ராபி கமநம் யாவத் தத்வம் நவிந்ததி."

என்னும் பைங்கலோபநிஷத் வாக்கியரீதியாய், சௌச ஸ்நான ஜப தப தான யாக தீர்த்தயாத்திரை முதலானவைகள் காம்ய கர்மங்களாதலால் அவைகளினால் ஜனன மரணங்கள் வந்துகொண்டிருக்குமேயொழிய மோக்ஷம் உண்டாகமாட்டா. ஞானநிஷ்டை அறியாதவர்களே காம்ய கர்மானுஷ்டானங்களைச் செய்துகொண்டிருப்பார்கள்.

"ஜீவஸ்ய தத்வஜிஞ்ஞாஸா நார்த்தோ யஶ்சேஹ கர்மபிஃ
அசாதோ ப்ரஹ்ம ஜிஞ்ஞாஸா" என்னும் சுருதிரீதியாயும்,

"நிவ்ருத்திம் கர்ம ஸேவேத ப்ரவ்ருத்திம் மத்பரம் த்யஜேத்
ஜிக்ஞாஸாயாம் ப்ரவ்ருத்தோ நாத்ரியேத் கர்ம சோதநாம்"

என்னும் பிரமாண வாக்கியரீதியாய் ஞானிகள், மோக்ஷத்திற்கு சாதனமாகிய பிரம்மநிஷ்டை வேதாந்தசிரவண மனனாதி நிவர்த்தி கர்மங்களையே செய்துகொண்டிருப்பார்கள்.

"பரமாத்மநோ ரேகத்வ ஜ்ஞாநேந தயோர் பேத ஏவ
விபக்நஸ் ஸா ஸந்த்யா"

என்னும் பரமஹம்ஸோபநிஷத் வாக்கியரீதியாய் ஞானிகளுக்கு, சிவன் ஜீவன் இருவரையும் ஒன்றாய்ச் சேர்ப்பதே அதாவது, ஜீவப் பிரம்மைக்யமாகிய பிரம்ம நிஷ்டையில் இருப்பதே, சந்தியாவந்தனமா யிருக்கின்றது.

"ஜ்ஞாத்வா ஸ்வம் ப்ரத்யகாத்மாநம் புத்தி தத்வ்ருத்தி ஸாக்ஷிணம் ஸோஹமித்யேவ தத்வ்ருத்யா ஸ்வாந்யத்ராத்ம மதிம் த்யஜேத்."

என்னும் அத்தியாத்மோபநிஷத் வாக்கியரீதியாய், ஆத்மாவே பரப் பிரம்மமென்று போதிக்கும் "ஸோஹம்" மந்திரத் தியானமே ஞானிகளுக்கு ஞான காயத்திரியா யிருக்கின்றது. அப்படிப்பட்ட ஞான காயத்திரியே அஜபா காயத்திரியென்று சொல்லப்படும்.

"ஸ்வஸ்வரூப விஜ்ஜாநாத் ஜாதிகம் தீர்த்தமுச்யதே தரதி ஶோக மாத்மவித் ஜ்ஞாநேந தஸ்மாத் ஜ்ஞானமேவ பரமதீர்த்தம்'

எந்த ஞானத்தினால் ஜனன மரணமென்னும் சமுத்திரத்தைத் தாண்டி மோக்ஷமென்னும் கரை ஏறுகின்றார்களோ அந்த ஞானமே தீர்த்தமென்று சொல்லப்படுமே யொழிய, கங்காதீர்த்தம் ஞானிகளுக்குத் தீர்த்தமாக மாட்டா.

"அத்பிঃ காத்ராணி ஶுத்யந்தி மநஸ்ஸத்யேந ஶுத்யதி
வித்யாதபோப்யாம் பூதாத்மா புத்திர் ஜ்ஞாநேன ஶுத்யதி."

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய் தேகம், ஜலத்தினாலும்; மனது, ஸத்தியத்தினாலும்; ஜீவாத்மா, நிஷ்காம்ய பிரம்ம நிஷ்டையினாலும்; புத்தி, யதார்த்த ஞானத்தினாலும் பரிசுத்தமாகும்: உலகத்திலுள்ள ஜனங்களெல்லோரும் ஜலத்தினால் தேகசுத்தி செய்துகொண்டபோதிலும், அவர்களின், மனது ஜீவாத்மா புத்தி என்பவைகள் மாத்திரம் சுத்தியாகமாட்டா.

" யஸ்ய வாங்மநஸீ ஶுத்தே ஸம்யகுப்தே ச ஸர்வதா ஸ
வை ஸர்வமவாப்நோதி வேதாந்தோபகதம் பலம்."

என்னும் நாரத பரிவிராஜகோபநிஷத் வாக்கியரீதியாய் ஞானிகளுக்கு, ஞானதீர்த்த ஸ்நானத்தினால், வாக்கு மனது புத்தி ஜீவாத்மா என்னும் இந்நான்கும் பரிசுத்தமாவதனால் அவர்கள், லௌகிகமாகிய ஜல ஸ்நானத்தினால் உண்டாகும் தேகசுத்தியை முக்கியமாய் கவனியார்கள்.

"ஸர்வேஷாமபி தாநாநாம் ப்ரஹ்மதாநம் விஶிஷ்யதே
வார்யந்ந கோ மஹீ வாஸஸ்தில காஞ்சந ஸர்பிஷாம்."

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய், ஞானிகளை ஆசிரயித்த சிஷ்யர்களுக்கு ஸதா பிரம்ம ஞானத்தை உபதேசித்துக்கொண் டிருப்பதே ஞானதானமென்று சொல்லப்படும். ஜலதான அன்னதான கோதான பூதான வஸ்திரதான திலதான கன்னிகாதான முதலான தானங்களை விட ஞானதானமே சிரேஷ்டமா யிருப்பதனுல் ஞானிகள், எப்பொழுதும் ஞானதானமே செய்துவருவார்கள். ஆதலால்,

"யஜதே புருஷோ யஜமாநஃ புத்திம் பத்நீம் பரிக்ருஹ்ப தீக்ஷாம் ஸந்தோஷம் தீந்த்ரியாணி யஜ்ஞபாத்ராணி கர்மேந்த்ரியாண் யுபகரணுநி ஸத்ரே சாரீரகே தத்தத்தேவதா ஏவ த்விஜ ஸ்தடஸ்தா ஏவ யதாதேசம் யஜமான மநுயஜந்தே." "ஓமித்யாதமாநமவ்யக்ரோ ப்ரஹ்மண்யக்நௌ ஜுஹோதி யத், ஜ்ஞாநயஜ்ஞ ஸ்ஸ விஜ்ஞேய ஸ்ஸர்வயஜ்ஞோத்தமோத்தமஃ ஜ்ஞாந தண்டா ஜ்ஞாந சிகா ஜ்ஞாந யஜ்ஞோபவீதிநஃ. சிகா ஜ்ஞானமயீ யஸ்ய உபவீதஞ்ச தந்மயம் ப்ராஹ்மண்யம் ஸகலம் தஸ்ய இதி வேதாநுசாஸநம்"

என்னும் கர்ப்போபநிஷத், சாட்யாயநீய உபநிஷத் வாக்கியங்களின் ரீதியாய், தேஹமே யாகசாலையாயிருக்கின்றன. தேஹமென்னும் யாகசாலையில் ஞானேந்திரியங்களே யஜ்ஞ பாத்திரங்களாகவும், கர்மேந்திரியங்களே உபகரணங்களாகவும், சுக துக்கங்களைச் சமமாய் நினைத்துச் சந்தோஷப்படுவதே தீக்ஷையாகவும், அந்தந்த இந்திரியங்களின் தேவதைகளே த்விஜர்களாகவும், ஜீவனே யஜ்ஞம் செய்யும் யஜமானனுகவும், புத்தியே யஜ்ஞம் செய்யும் யஜமானனுடைய பார்யாளாகவும், கோபமே யஜ்ஞ பசுவாக

வும் இருக்கின்றன. ஆதலால், "ஸோஹம்" என்னும் மந்திரத்தை ஜபம்செய்து பரப் பிரம்மமென்னும் யாகாக்கினியில் ஜீவ சொரூபியாகிய தன்னைச் சேர்த்து ஹோமம் செய்துவந்தால் தன் ஜீவசொரூபம்கெட்டு தான் பிரம்ம சொரூபனாகின்றான். இப்படிப்பட்ட ஞான யஜ்ஞமே சகல யஜ்ஞங்களிலும் சிரேஷ்டமானது. இந்த ஞான யஜ்ஞம் ஞானதண்டம் ஞானசிகை (குடுமி) ஞானயஜ்ஞோபவீதம் (பூணூல்) எவனுக்கு உண்டோ அவனே, வேதோக்தமான பிராமணனேயொழிய மற்றவர்கள் பிராமணர்களல்லர்.

"இந்த்ரியத்வாரா ஸங்க்ராஹ்ய கந்தாத்யை ராத்மதேவதாம்
ஸ்வயம் பக்த்வா ஸமாராத்ய ஜ்ஞாதும் ஸோயம் மஹாமக:."

என்னும் பிரமாணரீதியாய் இந்திரியங்களை ஜயித்து, பரப் பிரம்மமாகிய ஆத்மாவை கந்தாதிகளால் பூஜைசெய்வதே ஞானயாகமென்று சொல்லப்படும். காராடுகளாகிய வெள்ளாடுகளைக்கொன்று கர்மயாகம் செய்வது யாகமல்ல.

"ஜ்ஞாநாம்ருத த்ருப்த யோகிநோ ந கிஞ்சத் கர்த்ருத்வமஸ்தி
அஸ்தி சேந் ந ஸ தத்வவித் பவதி."

என்னும் பைங்கலோபநிஷத் வாக்யரீதியாய், தேவாமிருதத்தைச் சாப்பிட்டு திருப்தி அடைந்தவனுக்கு மற்ற எந்த மதுரமான பதார்த்தங்கள் ருசிக்காமலும், அவைகளை வேண்டாமலும் இருப்பதுபோல், ஜ்ஞாநாமிருதத்தினால் திருப்தியடைந்த ஞானி, சர்வ சங்கல்பங்களையும் விட்டவனாதலால் அவன் பிரம ருத்திரேந்திராதி பதவியின் சுகங்களையும், பூலோக போக சுகங்களையும் நினைக்கமாட்டான். அன்றியும், அப்படிப்பட்ட தேவலோக பூலோக சுகங்களை அனுபவிப்பதற்காக வேண்டிய, யஜ்ஞ யாக தான தபோ விரதங்களையும் செய்யமாட்டான். இப்படிப்பட்ட ஞானி

கள் தவிர மற்றவர்களெல்லோரும், யஜ்ஞ யாக தான தபோ விரதங்களை அவஸ்சியமாய் அநுஷ்டித்து வரவேண்டும். ஏனென்றால்,

"ஸத்கர்ம பரிபாகதோ பஹூனாம் ஜன்மநாமந்தே
ந்ருணாம் மோக்ஷேச்சா ஜாயதே, ததா ஸத்குரு மாஸ்ரித்ய
சிரகால ஸேவயா பந்தாந் மோக்ஷம் கஸ்சித் ப்ரயாதி."

என்னும் பைங்கலோபநிஷத் வாக்கிய ரீதியாய், உலகத்திலுள்ளவர்களெல்லோரும் அனேக ஜன்மங்களாய் பலாபேக்ஷையுடன், யஜ்ஞ யாக தான தபோ விரதங்களாகிய ஸத் (நல்ல) கர்மங்களைச்செய்து அதன் பலனை அநுபவிப்பதற்காக, பிறந்துகொண்டும் இறந்துகொண்டுமாயிருப்பார்கள். இப்படி அனேக ஜன்மங்களாய் பலாபேக்ஷையுடன் செய்துவந்த ஸத் கர்மத்தினால் எதுவோ ஓர் ஜன்மத்தில், தான் செய்யும் தான தருமங்களெல்லாம் ஈசுவரன் கொடுக்கின்றானென்றும், அப்படிப்பட்ட ஈசுவரனே சகலத்திற்கும் கர்த்தனென்று நிச்சல பக்தி உண்டாகும்.

"தமேதம் வேதாநுவசநேந விவிதிஷந்தி ப்ரஹ்மசர்யேந
தபஸா ஸ்ரத்தயா யஜ்ஞேநாநாஸகேந."

என்னும் பிருஹதாரண்யோபநிஷத் வாக்கியரீதியாய், முன் சொல்லியதுபோல் ஈசுவரனிடத்தில் நிச்சல பக்தி உண்டாவதனால், மோக்ஷாபேக்ஷை உடையவர்களாய் தாம் செய்யும், ஜப தப தான தர்ம யஜ்ஞ யாகாதிகளை எல்லாம் பலாபேக்ஷையில்லாமல் ஈசுவரார்ப்பணமாய்ச் செய்து பக்தி அதிகரித்து சித்த சலனமில்லாமல் ஈசுவரனிடத்தில் லயித்திருப்பார்கள். இப்படி லயித்தபிறகு,

"தண்டுலஸ்ய யதா சர்ம தாம்ரஸ்ய காளிமா
நஸ்யதி க்ரியயா விப்ர புருஷஸ்ய ததா மலம்."

"குர்வந்நேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேத் ஸதம் ஸமா:.
ஏவம் த்வயி நாந்யதேதோஸ்தி ந கர்மலிப்யதே நரே."

என்னும் மஹோபநிஷத் வாக்கியரீதியாயும், ஈசாவாஸ்யோபநிஷத் வாக்கியரீதியாயும், மோக்ஷாபேக்ஷையுடைய முமூட்சுக்கள், ஈசுவரபக்தி அதிகரித்து பலாபேக்ஷையில்லாமல் ஈசுவரார்ப்பணமாய் பிரவர்த்தி மார்க்கமாகிய சத் கர்மங்களைச் செய்து வருவார்கள். இப்படிச் செய்து வந்தால் சித்தசுத்தி உண்டாகும் அதனல்,

ஈஸ்வராநுக்ரஹாதேவ பும்ஸாமத்வைத வாஸநா.''

ஈசுவரர் அனுக்கிரஹம் கிடைக்கும். ஈசுவர அநுக்கிரஹம் கிடைப்பதனல், திருக்கோவில் நியமும், அடியார்களிடத்தில் அன்பும் உண்டாய், உருத்திராக்ஷம் திருவெண்ணீறு என்னும் பஞ்சாக்கரத்தை மறக்க மனமில்லாமல் அதிக ஆசாரத்தோடிருந்து, ஆசார்யருடைய திருவருளைப் பெறவேண்டு மென்னும் கருத்துண்டாகும்: இதற்கு உபதேசகாண்டம் பிரமாணம்;

திருக்கோயி னியமமரன் பணிவிடையிற்
சிந்தை செலுந் தேசிகன்ற
னருட்கூர வேண்டுமெனுங் கருத்துண்டாந்
தொண்டரிடத் தன்பு முண்டா
முருத்திரவக்கம் பூதி யஞ்செழுத்தை
யிடைமறத்தற் குள்ள மோரா
திருக்குமா னருச்சனைபெற் றந்நிலையா
சாரத்தி னிருக்க வேண்டும்.

இவ்வாறு ஞானசார்யரை ஆசிரயித்து அவர்களின் மூலமாய் ஞான சாக்ஷாத்காரமடைந்து முத்தியை அடைவார்கள்.

"தேஹோயம் மானுஷோ ஜந்தோ: பஹுசர்மைக ளாதநம்
ஸதா ஸத்கர்ம ஸேவேத துஷ்கர்ம ஸததம் த்யஜேத்.''

என்னும் சுலோக ரீதியாய் பலாபேக்ஷையில்லாமல் செய்யும் ஸத்கர்மங்கள் ஈசுவரப் பிரீதியாகும்; ஈசுவரப்

ரீதியினல் ஞான முண்டாகும். ஆதலால், பலாபே க்ஷையை விட்டுச் செய்துவரும் கர்மங்களை ஈசுவரார்ப்பண மாய்ச் செய்துவரவேண்டும்.

" அந்தம் தம: ப்ரவிஶந்தி யே அஸம்பூதி முபாஸதே
ததோ பூய இவ தே தமோ ய உ ஸம்பூத்யாம் ரதா: "

என்னும் ஈசாவாஸ்யோபநிஷத் வாக்கியரீதியாய், பலாபேக்ஷை யில்லாமல் சத்கர்மங்களை ஈசுவரார்ப்பண மாய்ச் செய்யாதவர்களுக்கு ஞானம் உண்டாகமாட்டா. இப்படிப்பட்டவர்கள், மோக்ஷமென்னும் கரை காணமல் ஜனன மரணமென்னும் சமுத்திரத்தில் மூழ்கி சதா துக் கத்தையே அநுபவித்துக் கொண்டிருப்பார்கள். இது சத்தியம்! சத்தியம்! ஆதலால்,

"அஹம் ப்ரஹ்மேதி நிஶ்சித்ய அஹம்பாவம் பரித்யஜ
ஸர்வமேவ லயம் யாதி ஸுப்தஹஸ்தஸ்த புஷ்பவத்
ஸர்வவ்யாபாரமுத் ஸ்ருஜ்ய அஹம் ப்ரஹ்மேதி பாவய
அஹம் ப்ரஹ்ம ந ஸந்தேஹோ அஹம் ப்ரஹ்ம சிதாத்மகம்
ஸச்சிதாநந்தமாத்ரோஹமிதி நிஶ்சித்ய தத்த்யஜ."

என்னும் தேஜோபிந்தூபநிஷத் வாக்கியரீதியாய், தூங்கப்பட்டவனுடைய கையிலிருக்கும் வஸ்து எப்படி நழுவி விடுகின்றதோ அதுபோல், அஹங்கார மமகாரங்களை யெல்லாம் நீ, நழுவவிட்டு இதில் உபதேசமாய் சொல்லி யிருக்கும் "அஹம் ப்ரஹ்மாஸ்மி" என்னும் 'ஸோஹம்' மந்திரத்தை நன்ருய்த் தெரிந்துகொண்டு அதுபோல் அப் பியசித்து வருவாயாகில், உன் பாப கர்மங்களெல்லாம் 'ஸோஹம்' மந்திர ஜபத்தினல் பஸ்பமாய்விடும். இவ்வாறு அப்பியசித்துக்கொண்டு வந்து,

"யத்பரம்விமலமத்வயம்ஶிவம் தத் ஸதாஹமிதி மௌநமாஶ்ரய."

என்னும் சுருதிரீதியாய், சகல எண்ணங்களையும் சூன்

ளியமாய்ச்செய்து அதாவது "ஸோஹம்" மந்திரத்தை யும் மறந்து சிலை விக்கிரகம்போல் மௌன நிஷ்டையில் இருக்கக் கடவாய்.

அவதூதர்களுக்கு ஜாதிபேதமில்லை.

சரு || "அக்ஷரத்வாத் வரேண்யத்வாத் தூதஸம்ஸார பந்தநாத்
தத்த்வமஸ்யாதி லக்ஷ்யத்வாத் அவதூத இதீர்யதே."

என்னும் அவதூதோபநிஷத் வாக்கியரீதியாய் (அவதூத) என்னும் வாக்கியத்தில் ("அ" "வ" "தூ" "த") என்று நான்கு அக்ஷரங்கள் உண்டு. அதில் 'அ'-என்றால், நாசமில்லாதவன். 'வ' - என்றால், சகல மனுஷ்ய ஜனங்களுக்கெல்லாம் சிரேஷ்டமானவன், என்றால், பிரம்மசாரி கிரகஸ்தன் (சம்சாரத்துடன் இருப்பவன்) வானப் பிரஸ்தன் சன்னியாசி என்னும் நான்கு ஆசிரமத்தி லுள்ளவர்களுக்கெல்லாம் சிரேஷ்டன் சந்நியாசியேயாம்: "தேஹமே நான்" என்னும் அபிமானமே சம்சாரமென்று சொல்லப் படும்; அப்படிப்பட்ட அபிமானம் இல்லாமல் போவதே சம்சாரமில்லாமல்போவது. அன்றியும் சகல, எண்ணங்களையும் விட்டுவிடுவதே சம்சாரமில்லாமல் போவது. 'தூ'- என்றால், அப்படிப்பட்ட அபிமானமென்னும் சம்சார விஷயங்களை ;எல்லாம் விட்டவன் சந்நியாசி என்பதேயாம். 'த'-என்றால், தத்வமஸி என்னும் மஹா வாக்கியரீதியாய் "பிரம்மம்" "ஆத்மா" என்னும் பேதமில்லாமல் இவ்விரண்டையும் ஐக்கியம் செய்யப்பட்டவன் என்பதேயாம். ஆதலால், முன்சொல்லிய நான்கு அக்ஷரங்களின் ரஹஸ்யார்த்தம் தெரிந்தவனே "அவதூதன்" என்று சொல்லப்படும்.

சரு || யோ விலங்க்யாஸ்ரமாந் வர்ணாநாத்மந்யேவ ஸ்திதஃ
ஸதா அதிவர்ணாஸ்ரமீ யோகீ அவதூதஃ ஸ்கத்யதே.

என்னும் அவதூதோபநிஷத் வாக்கியரீதியாய், ஜாதி பேதம் குலகோத்திரம் முதலானவைகள் சரீரத்திற்கே யொழிய, சரீரத்திற்கு வேறாயிருக்கும் ஆத்மாவிற்கல்ல. இப்படிப்பட்ட ஜாதிபேதங்களைவிட்டு, பரப் பிரம்மத்தின் அம்சமாகிய ஆத்மாவிற்கு ஜாதிபேதம் இல்லை என்று அறிந்து அந்த பரப் பிரம்மமே தானென்று திட நிச்சயமுடையவனாய் சதாகாலமும் தான் தானாய் நின்றிருக்கப் பட்டவனே அவதூதன் என்று சொல்லப்படுவான்.

சரு || யஃ ஶரீரேந்திரியாதிப்யோ விஹீனம் ஸர்வஸாக்ஷிணம்
பாரமார்த் திகம் விஜ்ஞாநம் ஸுகாத்மாநம் ஸ்வயம்ப்ரபம்.
பரதத்த்வம் விஜாநாதி ஸோதிவர்ணாஶ்ரமீ பவேத்.

என்னும் நாரத பரிவிராஜகோபநிஷத் வாக்கிய ரீதியாய், தேஹம் இந்திரியங்கள் முதலானவைகளுக்கெல்லாம் வேறாய் சர்வ சாக்ஷியாய் மாயை இல்லாதவனாய் ஞான சொரூபனாய் ஆநந்த ரூபனாய் சுயம் பிரகாசனாய் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஆத்மாவே தானென்று அறிந்து எப்பொழுதும் தான் தானாய் இருப்பவனே அவதூதன் என்று சொல்லப்படுவான்.

சரு || வர்ணாஶ்ரமாதயோ தேஹே மாயயா பரிகல்பிதாஃ
நாத்மநோ போதரூபஸ்ய மம தே ஸந்தி ஸர்வதா
இதி யோ வேத வேதாந்தைஃ ஸோதிவர்ணாஶ்ரமீ பவேத்.

என்னும் நாரத பரிவிராஜகோபநிஷத் வாக்கியரீதியாய், கோத்திரம் ஜாதிபேதங்கள் மாயா சம்பந்தத்தால் தேகத்திற்கு உண்டாயிற்றேயொழிய, ஆத்ம சொரூபியாகிய எனக்கு ஜாதி பேதம் எதுவும் இல்லை. நான் என்னும் அபிமான முடையவர்களுக்கே ஜாதிபேதமுண்டே யொழிய, தேஹம் இந்திரியங்கள் முதலானவைகளுக்கெல்லாம் வேறாயிருக்கும் எனக்கு எந்த ஜாதிபேதமு மில்லையென்று நிச்சயித்து தான் தானா யிருக்கப்பட்டவனே அவதூதன் என்று சொல்லப்படுவான்.

சுரு || யஸ்ய வர்ணாஶ்ரமாசாரோ களித: ஸ்வாத்மதர்ஶநாத்
வர்ணாஶ்ரமாந் ஸர்வாநதீத்ய ஸ்வாத்மநி ஸ்தித:
யோதீத்ய ஸ்வாஶ்ரமாந் வர்ணாநாத்மந்யேவ ஸ்தித: புமாந்
ஸோதிவர்ணாஶ்ரமீ ப்ரோக்த: ஸர்வவேதார்த்த வேதிபி:.

என்னும் நாரத பரிவிராஜகோபநிஷத் வாக்கியரீதியாய், தூங்குகின்றவன் கையிலிருக்கும் வஸ்து நழுவி விழுந்து விடுவதுபோல் பிரம்ம நிஷ்டையில் தூங்கிக்கொண்டிருப்பவனுக்கு ஜாதிபேதம் ஒன்றும் தெரியாமல் தன்னைத்தான் மறந்திருப்பான். இப்படிப்பட்டவனே அவதூதனென்று சொல்லப்படுவான்.

சுரு || ஆநந்த மந்தர்நிஜமாஶ்ரயம் தமாஶாபிஶாசீமவமாநயந்தம்
ஆலோகயந்தம் ஜகதிந்த்ரஜாலம் ஆபத் கதம் மாம் ப்ரவிஶேத [ஸங்கம்
வர்ணாஶ்ரமாசாரயுதா விமூடா: கர்மாநுஸாரேண பலம்லபந் [தே
வர்ணாதி தர்மம் ஹி பரித்யஜந்த: ஸ்வாநந்த த்ருப்தா: புருஷா [பவந்தி

என்னும் மைத்ரேய்யுபநிஷத் வாக்கியரீதியாய், சின்முத்திரையுடன், இடுப்பு கூன் வளையாமல் நேராய் நிமிர்ந்து சித்திரப்பதுமைபோல் உட்கார்ந்து, கண்களை மூடி அந்தர் (உள்) முகமாய் சச்சிதாநந்த பரப்பிரம்மத்தை தரிசித்து, ஆசா பாசமென்னும் பிசாசை அவமானப்படுத்தி ஜகத்து இந்திரஜாலம் என்று நினைத்து தன்னில் தான் சிரித்துக் கொண்டு சகல துக்கங்களும் சரீரத்திற்குண்டேயொழிய அசரீரியாகிய (சரீரமில்லாத) எனக்கு எந்த துக்கங்களும் இல்லை. நான் சதா பிரம்மாநந்தமென்னும் சமுத்திரத்தில் மூழ்கி நிற்பயமாயிருக்கின்றேனென்று இருக்கப்பட்டவனே அவதூதன் என்று சொல்லப்படுவான். அஞ்ஞானிகளே, குலம் கோத்திரம் ஜாதிபேதமுடையவர்களாயிருந்து

அதற்கு வேண்டிய நித்திய நைமித்திய காம்மிய கர்மங்களைச் செய்து, அதன் பலனை அனுபவிப்பதற்காக மறு ஜனனம் எடுக்கின்றார்கள். ஆதலால், ஜாதிபேதம் விட்டு சர்வதா தன் நிஜ சொரூபத்தில் மனதை லயப்படுத்தி இருக்கப்பட்டவனே அவதூதன்: பிரம்மஞானம் இப்படிப்பட்டதென்று அறியாமல், கௌபீனத்துடனிருந்து திரிந்து கொண்டிருப்பவன் அவதூதனாகமாட்டான்.

ஜீவன் முக்தன் லக்ஷணம்.

சுரு || க்ரியாநாஸாத் பவேத் சிந்தாநாஸோ தஸ்மாத் வாஸநாக்ஷய:
வாஸநாப க்ஷயோ மோக்ஷ: ஸா ஜீவந்முக்தி ரிஷ்யதே.
[அத்யாத்மோபநிஷத்.]

சகல வியாபாரங்களும் நசிப்பதனுல், எந்த எண்ணங்களு மில்லாமலிருக்கும். எந்த எண்ணங்களு மில்லாமலிருப்பதனுல் வாசனுத் திரயங்கள் நசிக்கும். வாசனுத் திரயங்கள் நசிப்பதனுல் ஜீவன் முக்தியை அடைகின்றது.

சுரு || ப்ரஹ்மண்யேவ விலீநாத்மா நிர்விகாரோ விநிஷ்க்ரிய:
ப்ரஹ்மாத்மநோஶ் ஸோதிதயோ ரேகபாவாவகாஹிநீ.
நிர்விகல்பாச சின்மாத்ரா வ்ருத்தி: ப்ரக்ஞேதி கத்யதே
ஸா ஸர்வதா பவேத் யஸ்ய ஸ ஜீவன்முக்த இஷ்யதே."

"தேஹேந்த்ரியே ஷ்வஹம்பாவ இதம்பாவ ஸ்ததந்யகே
யஸ்ய நோபவத: க்வாபி ஸ ஜீவன்முக்த இஷ்யதே."

சுரு || ந ப்ரத்யக் ப்ரஹ்மணோர்பேதம் கதாபி ப்ரஹ்மஸர்கயோ:
ப்ரஜ்ஞயா யோ விஜாநாதி ஸ ஜீவன்முக்த இஷ்யதே."

"ஸாதுபி: பூஜ்ய மாநேஸ்மிந் பீட்யமாநேபி துர்ஜநை:
ஸமபாவோ பவேத்யஸ்ய ஸ ஜீவன்முக்த இஷ்யதே."
[அத்யாத்மோபநிஷத்.]

தீங்குறு மாயை சேரா வகைவினை திரிவி தத்தால்
நீங்கிட நீங்கா மூல நிறையிரு ளிரிய நேயத்
தோங்குணர் வகத்த டங்கி யுளத்துளின் பொடுங்க நேரே
தூங்குவர் தாங்கி யேகத் தொன்மையிற் றுகளி லோரே.

குறிப்பிடங் காலந்திக் காசனங்கொள்கை குலங் குணஞ்சீர்
சிறப்புறு விரதஞ் சீலந் தபஞ்செபந் தியான மெல்லாம்
மறுத்தற வொழிதல் செய்தன் மருவிடா மன்னு செய்தி [மே.
உறக்குறுபவர்போல் வாய்மையொழிந்தவை யொழிந்து போ

அகம்புற மென்றி ரண்டா லருச்சனை புரியு மிந்தச்
சகந்தனி லிரண்டு மின்றித் தமோமய மாகி யெல்லாம்
நிகழ்ந்திட மகிழ்ந்து வாழு நீர்மையார் போல ஞானந்
திகழ்ந்தகம் புறமெ னாத செம்மையார் நன்மை யாரே.

அண்டமே விடவ னைத்து மனைத்தையு மண்ட மேவிக்
கொண்டல்போ லெவையுஞானக் குறைவிலா நிறைதலாலே
கண்டதோர் பொருளை யந்தக் கருத்தினாற் காணிற்றனே
அண்டநா யகனார் மேனி யானதே லையமின்றே.

மண்முதற் கரண மெல்லா மறுவசத் தாக்கி ஞானக்
கண்ணினி லூன்றி யந்தக் கருத்தினா லெவையு நோக்கி
எண்ணியஞ் செழுத்துமாறியிறை நிறையுணர்ந்து போற்றல்
புண்ணியன் றனக்கு ஞான பூசையாய்ப் புகலு மன்றே.

தொண்டர்க டாமும் வானோர் தொழுந்திரு மேனிதானும்
அண்டருங் கண்டி லாத வண்ணலே யெனவ ணங்கி
வெண்டர ளங்கள் சிந்த விழிமொழி குளற மெய்யே
கண்டுகொண் டிருப்பர் ஞானக் கடலமு தருந்தி னோரே.

பிரம்மத்தில் லீனமான பிரம்மவித்து நிர்விகாரனுயும் நிஷ்கிரியனுயும் இருப்பான் பிரம்மமே ஆத்மாவென்றும், ஆத்மாவே பிரம்மமென்றும் தத்துவ விசாரணையினல் தெரிந்து சமரச ஐக்கிய பாவத்தை அடைந்து, சகல சங்கல்பங்களும் நசித்து சகலமும் மறந்து தானே தானுய் கேவல சாக்ஷி மாத்திரனு யிருக்கும் விருத்தியே பிரஞ்ஞை.

யெனப்படும்: இப்படிப்பட்ட பிரஞ்ஞை யுடையவனே ஜீவன் முக்தன்: நான், என் தேகம், என் இந்திரியங்கள் என்னும் அஹங்காரமே அஞ்ஞானம். இந்த அஞ்ஞானம் ஒருபோதும் இல்லாதவனே ஜீவன்முக்தன். பிரம்மத்திற்கும் ஆத்மாவிற்கும் எப்பொழுதும் பேதம் உண்டாக மாட்டா. பிரம்மமே ஆத்மா, ஆத்மாவே பிரம்மமென்று எவன் ஞானத்தினால் அறிகின்றானோ அவனே ஜீவன்முக்தன். சாதுக்கள் தம்மைப் பூசித்தாலும், அல்லது துர்ச்சனர்கள் தம்மைத் தூஷித்தாலும் கோப தாபங்களில்லாதவர்களாய் சர்வமும் சமமாய் நினைக்கப்பட்டவர்களே ஜீவன் முக்தர்கள் என்று சொல்லப்படுவார்கள்.

சுரு||"புருஷஸ்ய ஸுகதுஃகாதி லக்ஷணசித்ததர்மஃ
க்லேஶரூபத்வாத் பந்தோ பவதி தந்நிரோதநம் ஜீவந்முக்திஃ."
[முக்திகோபநிஷத்.]

நானே யஜமான் சர்வமும் என்னால் நடக்கின்றது என்று அஹங்காரங்கொண்டு ஓர் காரியத்தைச் செய்வது கர்த்ருத்துவமென்றும், அப்படிச்செய்து அதன் பலனை அனுபவிப்பது போக்த்ருத்வ மென்றும் சொல்லப்படும். மனமே நானாவித காரியங்களையும் செய்துகொண்டு, சுகதுக்கங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. மனதினாலேயே பந்தம் உண்டாகின்றதேயொழிய, நான் எந்தகாரியங்களையுஞ் செய்வதில்லை. நான் எதையும் அனுபவிப்பதில்லை, நான் கேவலம் சாக்ஷிமாத்ரன், அகர்த்தன், அபோக்தன் என்னும் நிச்சய ஞானமுண்டாகித் கர்த்ருத்துவ போக்த்ருத்துவமென்னும் அஹங்காரமில்லாதவனாய் மனோ விகாரங்களை நாசஞ்செய்து தான் கேவல சாக்ஷிமாத்திரனாய் சின்மாத்திர பிரம்மமா யிருப்பவனே ஜீவன்முக்தன்.

சுரு || த்ருஶ்யம் நாஸ்தீதி போதேந மனஸோ த்ருஶ்யமார்ஜனம்
ஸம்பந்நம் சேத் ததுத்பந்நா பரா நிர்வாண நிர்வ்ருதிஃ"
[மஹோபநிஷத்.]

காணப்படும் வஸ்துக்களெல்லாம் அசத்தியமென்று எண்ணி சகலமும் மறந்து, சுக சொரூபமா யிருப்பதே மோக்ஷமென்றுசொல்லப்படும். அப்படிப்பட்டஸ்திதியை அடைந்தவனே ஜீவன்முக்தன்.

சுரு || "ந மோக்ஷோ நபஸ: ப்ருஷ்டே ந பாதாளே ந பூதலே
ஸர்வாசா ஸம்க்ஷயே சேத: க்ஷயோ மோக்ஷ இதீஷ்யதே."
[அந்நபூர்ணோபநிஷத்.]

மோக்ஷமென்பது ஆகாசத்திலுமில்லை, பாதாள லோகத்திலுமில்லை, பூலோகத்திலுமில்லை. சகல ஆசைகளும் நசித்து, சித்தமும் நசித்து, சங்கல்ப சூன்னியமா யிருப்பதே மோக்ஷமென்று சொல்லப்படும். ஆதலால், எண்ணங்களையெல்லாம் நாசம்செய்தவனே ஜீவன்முக்தன்.

சுரு || "அத்யாத்மரதி ஶ்ராந்த: பூர்ணபாவநமாநஸ:
ப்ராப்தாநுத்தம விஶ்ராந்திர் ந கிஞ்சிதிஹ வாஞ்சதி."
"ஸர்வாதிஷ்டாந ஸந்மாத்ரே நிர்விகல்பே சிதாத்மநி"
[அந்நபூர்ணோபநிஷத்.]

அத்யாத்ம நிஷ்டையிலிருந்துகொண்டு, மனதை பரப் பிரம்மத்தில் லயிக்கச்செய்து சித்த விஸ்ராந்தி யடைந்து சகல போகங்களிலும் எண்ணமில்லாதவனாய், தாரா புத்ராதிகளின்மீது சிநேகமில்லாதவனாய், நிர்விகல்பமாய் பிரம்ம சொரூபத்தி லிருப்பவனே ஜீவன்முக்தன். இதற்கு, சிவப் பிரகாசம் பிரமாணம்;

தீங்குறு மாயை சேரா வகைவினை திரிவி தத்தால்
நீங்கிட நீங்கா மூல நிறையிரு ளிரிய நேயத்
தோங்குணர் வகத்த டங்கி யுளத்துளின் பொங்க நேரே
தாங்குவர் தாங்கி யேகத் தொன்மையிற் றுகளி லோரே.

இப்பாடல் இருமுறை சொல்லப்பட்டது.

சுரு||"அபேக்ஷண பரித்யாகோ வாஸநாயா ய உத்தம:
மோக்ஷ இத்யுச்யதே ஸத்பி: ஸ்ஸஏவ விமலக்ரம:"[மஹோ]

சகல மலின வாசனைகளும் பூர்த்தியாய் நசித்து சின்மாத்திரமாயிருப்பதே மோக்ஷமென்று சொல்லப்படும். அப்படிப்பட்ட ஸ்திதியை அடைந்தவனே ஜீவன்முக்தன்.

சுரு || "யே ஶுத்தவாஸநா பூயோ ந ஜந்மாநர்த்த பாகிநः.
ஞாதஜ்ஞேயா ஸ்தே உச்யந்தே ஜீவன்முக்தா மஹாதியः"
[மஹோபநிஷத்.]

டம்பமில்லாம லிருத்தல் காமக் குரோதாதி துர்க்குணங்க ளில்லாம லிருத்தல், சமதமாதிகள் சிரவண மனனாதிகள் என்பவைகளே சுத்த வாசனைகளென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட சுத்தவாசனை நசித்து புனர் ஜநந சூன்யமாய் சதா அபரோக்ஷ ஞான சாக்ஷாத்காரத்தை அடைந்தவனே ஜீவன்முக்தன். ஜீவன்முக்தனென்றால், இதரர்களுக்கு பந்தமுடைய சம்சாரிபைப்போலக் காணப்பட்டு லோக வியாபாரங்கள் செய்தபோதிலும் தான்மாத்திரம் தன்னிடத்தில் தோன்றப்பட்ட ஜீவ பிராந்தி நசித்து சாக்ஷிமாத்திர பரப் பிரம்ம சொரூபமாய் இருக்கப்பட்டவனென்பதேயாம்.

சுரு || "ஸர்வத்ர விகஸ்தநேஹோ யஸ்ஸாக்ஷிவ தவஸ்திதः
நிரிச்சோ வர்ததே கார்யே ஸ ஜீவந்முக்த உச்யதே"[மஹோ.]

தாராபுத்திராதிகளின்மீது ஆசையுடையவனுய் உலகத்தாருக்குக் காணப்பட்டபோதிலும், அந்தரங்கத்தில் அவர்களின்மீது ஆசை யில்லாதவனுய், தேஹேந்திரிய வியாபாரங்களுக்குத் தான் சாக்ஷியென்று எண்ணிக்கொண்டு கோரிக்கை யில்லாமலே, சௌச ஸ்நான போஜனாதி சகல காரியங்களையும் செய்துகொண்டிருப்பவனே ஜீவன்முக்தன்.

சுரு||"யேநதர்ம மதர்மஞ்ச மநோமநநமீஹிதம், ஸர்வமந்தः
பரித்யக்தம் ஸ ஜீவன்முக்த உச்யதே" . [மஹோபநிஷத்.]

வேதவிஹித தர்மா அதர்மங்களுடன் தனக்கு லாபமில்லையென்றும் அவைகளை நினைக்காமலும் அபேக்ஷிக்காமலும் சதா ஆத்மாநு சந்தானம்செய்யப்பட்டவனே ஜீவன் முக்தன்.

சுரு ||"யாவதீ த்ருஶ்யகலநா ஸகலேயம் விலோக்யதே
ஸா யேந ஷ்டு ஸந்த்யக்தா ஸ ஜீவந்முக்த உச்யதே"
[மஹோபநிஷத்.]

நாநா விசித்ர நாம ரூபங்களுடன் காணப்படும் பிரபஞ்சம் மாயா கற்பனையென்றும், அது அசத்தியமென்றும் தெரிந்து பிரபஞ்சத்தின் ஆசையை விட்டு சதா ஆத்மத்தியானம் செய்துகொண்டு தன்மயமாயிருப்பவனே ஜீவன் முக்தன்.

சுரு|| "கட்வம்ல லவணம் திக்த மம்ருஷ்டம் ம்ருஷ்டமேவச
ஸமமேவச யோபுங்க்தே ஸ ஜீவந்முக்த உச்யதே." [மஹோப]

கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, கசப்பு, துவர்ப்பு, இனிப்பு ஆகிய ஷட்ரசம் என்றால், ஆறுவித ருசி பேதங்களும், ருசியில்லாத அன்னமும் தெய்வாதீனமாய் எவ்வாறு பிராப்தித்தபோதிலும் அதில் ருசி அருசி விசாரிக்காமல் சமபாவத்துடன் புசித்து, சதா ஆத்மாநுசந்தானபரனாயிருப்பவனே ஜீவன் முக்தன்.

சுரு||"ஜராமரணமாபச்ச ராஜ்யம் தாரித்ரியமேவ ச
ரம்யத்யேவ யோ புங்க்தே ஸ ஜீவந்முக்த உச்யதே" [மஹோ]

சரீர சம்பந்தமாகிய மூப்பு (கிழத்தனம்) மரணம், ஆபத்து, ராச்சியம், சம்பத்து, தாரித்திரியம் முதலானவைகள் சம்பவித்தபோதிலும், அவைகள் தேகத்திற்கேயன்றி ஆத்மாவிற்கில்லையென்று நிர்ப்பயமாய் பிரம்மானந்த சொரூபமாய் இருப்பவனே ஜீவன் முக்தன்.

சுரு||"ஸர்வேச்சா ஸகலாஶ் ஶங்கா: ஸர்வேஹா ஸர்வநிஶ்சயா:
த்யா யேந பரித்யக்தா: ஸ ஜீவன்முக்த உச்யதே" [மஹோ]

சகல எண்ணங்களையும், சகல சந்தேகங்களையும், சர்வ பிரபஞ்ச விஷயங்களையும், சர்வ சாஸ்த்திர சித்தாந்தங்களையும் விட்டுவிட்டு லோகவாசனை, சாஸ்த்திரவாசனை, தேஹவாசனை என்னும் வாசனாத்திரய மில்லாதவனாய் சதா ஆத்மாநு சந்தானம் செய்துகொண்டிருப்பவனே ஜீவன் முக்தன்.

சுரு||"ஶாந்த ஸம்ஸார கலந: கலாவாநபி நிஷ்களா:
யஸ்ஸசித்தோபி நிஶ்சித்த ஸ ஜீவன்முக்த உச்யதே."[மஹோ]

சம்சாரத்திலிருந்தும் சம்சார பந்தங்களில்லாதவனையும், வித்வாம்சனா யிருந்தும் வித்வாம்ச னென்னும் கர்வமில்லாதவனையும், பரிசுத்த சித்தனாயிருந்து எந்த எண்ணங்களும் இல்லாமல் இருப்பவன் எவனோ அவனே ஜீவன் முக்தன்.

சுரு||"ஜாக்கிரத்யேவ ஸுஷுப்தஸ்த: குருகர்மாணிவை த்விஜ
அந்தஸ்ஸர்வ பரித்யாகீ பஹி:குரு யதாகதம்." [அன்னபூர்]

ஜாக்கிராவஸ்தையில் தூங்கிக்கொண் டிருப்பவனைப் போல் இருந்து, சகல காரியங்களையும் செய்துகொண்டு அந்தரங்கத்தில் காமக்குரோதாதிகள் இல்லாதவனாய், தான் சாக்ஷிமாத்ரனாய்ச் சுகித்துக்கொண்டு வெளிக்கு உலகத்தாரைப்போல் யதாவிதியாய் சகல காரியங்களையும் செய்துகொண்டிருப்பவனே ஜீவன் முக்தன்.

சுரு|| "தேஹேந்த்ரியேஷ் வஹம்பாவ இதம்பாவ ஸ்ததந்யகே
யஸ்ய நோபவத: க்வாபி ஸ ஜீவன்முக்த இஷ்யதே"[அத்யாத்]

தேஹேந்திரியங்களே நானென்னும் அஹங்காரத்தை விட்டு தேகத்திற்கு வேறாயிருக்கும் ஆத்மாவே நானென்று நினைக்கப்பட்டவனே ஜீவன் முக்தன்.

சுரு|| "ராகத்வேஷ பயாதீநா மநுரூபம் சரந்நபி
யோந்தர்வ்யோமவ தத்யச்ச ஸ ஜீவந்முக்த உச்யதே."
[வராஹோபநிஷத்.]

காமக்குரோத லோப மோஹாதி குணங்களையுடைய வனைப் நடித்துக்கொண்டிருந்த போதிலும், பண்டித திறமையைக் காட்டாமல் பாமரனைப்போலிருந்து எவன் மனம், பிரம்ம மயமாய் நிராகாரமாய் ஆகாசத்தைப்போல் பரிசுத்தமா யிருக்கின்றதோ, அவனே ஜீவன் முக்தன். இதற்கு கைவல்யம் பிரமாணம்;

காமமா திகள்வந் தாலுங் கணத்திற்போ மனத்திற் பற்றார்
தாமரை யிலைத்தண்ணீர்போற் சகத்தோடுங் கூடி வாழ்வார்
பாமர ரெனக்காண் பிப்பார் பண்டிதத் திறமை காட்டார்
ஊமரு மாவா ருள்ளத் தவகையாஞ் சீவன் முத்தர்.

சுரு||"அஹங்காரமயீம் த்யக்த்வா வாஸநாம் லீலயைவ யஃ
திஷ்டதி த்யேயஸம்த்யாகீ ஸ ஜீவந்முக்த உச்யதே."[மஹோ]

அஹங்கார ரூபமாகிய மலின வாசனைகளை விட்டு விட்டு, தேவதா உபாசனாதிகளை நிவர்த்தி செய்து, சதா ஆத்ம நிஷ்டையில் இருப்பவனே ஜீவன்முக்தன்.

சுரு|| "யஸ்யநேச்சா ததாநிச்சா ஜ்ஞஸ்ய கர்மணி திஷ்டதஃ
ந தஸ்ய லிப்யதே ப்ரக்ஞா பத்மபத்ர மிவாம்புபிஃ"[மஹோப]

எவன் இச்சையில்லாதவனாய் சகல கார்யங்களையும் செய்துகொண்டிருப்பானோ அவன், தாமரை யிலையின் மீதுள்ள ஜலத்தைப்போல், சுக துக்கங்களைப் பற்றாமல் அசங்கனா யிருப்பான். அப்படி யிருப்பவனே ஜீவன் முக்தன்.

சுரு||"ஜ்ஞாநாம்ருத த்ருப்த யோகிநோ ந கிஞ்சித் கர்தவ்யமஸ்தி
தஸ்ததிசேந்ந ஸ தத்வவித் பவதி" [பைங்கலோபநிஷத்.]

தேவாமிருதம் வயிறாரப் புசித்தவன் பசி தாகம் முதலானவைகளில்லாதவனாய் மிகவும் சந்தோஷமுடையவனாய்

அன்ன பானுதிகளை ஆசிரயிக்காதவனுய் எவ்விடத்திலும் சஞ்சாரம் செய்யாமல் இருந்த இடத்திலேயே சுகமாய்ப் படுத்துத் தூங்குவதுபோல், ஞானமிருதம் பானம் செய்து திருப்தியடைந்த ஞானி, சகல காரியங்களும் தெய்வாதீனமாய் பூர்வ கர்மங்களை அனுசரித்து நடக்கிறதே யொழிய, நான் எதுவும் செய்வதில்லை யென்னும் திட நிச்சயமுண்டாய் அஹங்கார சூன்யனுய் எந்த வியாபாரமும் செய்யாமல் நிச்சலனனுய் இருந்த இடத்திலேயே சதா பிரம்மாநந்த நித்திரையில் இருந்துகொண்டிருப்பான். அப்படிப்பட்டவனே ஜீவன் முக்தன். மனோ வியாபாரம் சூன்யமாகாவிடில் ஜீவன் முக்தனுகமாட்டான்.

சரு || "ப்ராப்தகர்ம பர்யந்தம் ஹி நிர்மோகவத் வ்யவஹரதி
சந்த்ரவச்சரதே தேஹீ ஸ முக்தஸ்சாநிகேதந:" [பைங்க]

பிராரப்த கர்மம் நசிக்கும் வரையில் எப்பேர்ப்பட்டவர்களுக்கும் தேஹம் நசிக்கா ததலால், ஞானி பிராரப்தம் நசிக்கும் வரையில் தேஹதாரணு யிருப்பான். அறுவடையான பயிர்த்தாள்கள் மறுபடியும் முளையாததுபோல், ஞானுக்கினியினுல், இனிமேல் தனக்கு புனர்ஜனன மில்லாதவனுய்ச் செய்துகொண்டு, பூர்ண சந்திரனைப் போல் நிஷ்களங்கனுய் எந்த தோஷங்களும் இல்லாதவனுய் கர்த்த்ருத்வ போக்த்ருத்வ மென்னும் அஹங்கார மமகாரங்கள் இல்லாதவனுய், சேற்றிலுள்ள பிள்ளைப்பூச்சி சேற்றைப் பற்றுமலிருப்பதுபோல், சம்சாரத்தி லிருந்தபோதிலும் அதில் பற்றுமல், மனம் இந்திரியம் முதலானவைகளை வஸ்யம் செய்து சகல ஜனங்களுக்கும் மித்திரனுய் அதிக தயாளத்வமுடையவனுய் கோபதாபங்கள் அசூயை பயம் முதலானவைக ளில்லாதவனுய் தனக் கிஷ்டமாகிய பதார்த்தங்கள் கிடைத்தால் சந்தோஷமும், தனக் கிஷ்டமில்லாத

பதார்த்தங்கள் கிடைத்தால் துக்கமும் இல்லாதவனும்த் தன்பூர்வ கர்மானுசாரமாய் எதெது பிராப்தமாகின்றதோ அததில் திருப்தியடைந்து தனக்குக் கிடைக்காத வஸ்துக்களுக்கு துக்கப்படாமல் தூஷணை பூஷணைகளை சமமாய் நினைத்து சதா பிரம்மைக்யாநு ஸந்தானம் செய்துகொண்டிருப்பவனே ஜீவன்முக்தன்.

சுரு||"ஸர்வலோக ஸ்துதிபாத்ரः ஸர்வதேஶ ஸஞ்சாரஶீலः
பரமாத்ம ககநே பிந்தும் நிக்ஷிப்ய ஶுத்தாத்வைதா
அஜாட்ய ஸஹஜாமநஸ்கயோகநித்ராகண்ட ஆநந்த
பதானுவ்ருத்யா ஜீவந்முக்தோ பவதி."

[மண்டல ப்ராஹ்மணோபநிஷத்.]

சர்வ உலகத்தாராலும் துதிக்கப்பட்ட ஞானி, யதேச்சையாய் நிர்ப்பயமாய் சர்வதேச சஞ்சார சீலனும் வெட்ட வெளியாகிய ஸச்சிதானந்த பிரம்மமே "நா" னென்றும் சதா அதிலேயே புத்தியை லயிக்கச் செய்து தனக்கு அந்நியமானது மற்றொன்று மில்லையென்றும், சர்வம் தானும் பரிசுத்த அத்வைத பிரம்ம சாக்ஷாத்காரத்தை யடைந்து சஹஜமான சுகயோக நித்திரையுடையவனும் சதா அகண்டானந்த விருத்தியுடனே யிருப்பவன் எவனோ அவனே ஜீவன் முக்தன்.

சுரு||தீர்த்தே ஶ்வபச க்ருஹேவா தநும் விஹாயயாதி கைவல்யம்
ப்ராணாநவதீர்ய யாதி கைவல்யம்." [பைங்கலோபநிஷத்.]

காசி ராமேஸ்வரம் முதலாகிய புண்ணிய ஸ்தலங்களிலாகிலும் சண்டாளனுடைய கிரஹத்திலாகிலும் எப்பேர்ப்பட்ட இடங்களிலாகிலும் ஞானி, பிராரப்தம் நசித்தவுடனே சரீரத்தை விட்டு பிரம்மைக்கியத்தை யடைவானாதலால், அவன் எப்பேர்ப்பட்ட இடத்தில் பிராணனை விட்டபோதிலும் தோஷமில்லை. பிரம்மஞானிக்கு இது பிராமண அக்ராரம், இது பறைச்சேரி யென்னும் பேதமில்லாமல் சர்வமும் சமமாய்ப் பார்ப்பான்.

சுரு||“யத்ர யத்ர ம்ருதோ ஜ்ஞாநீ யேநவாகேந ம்ருத்யுநா
யதா ஸர்வகதம் வ்யோமம் தத்ர தத்ர லயம் கதஃ”
“கடாகாஶ மிவாத்மாநம் விலயம் வேத்தி தத்வதஃ
ஸகச்சதி நிராலம்பம் ஜ்ஞாநாலோகம் ஸமந்ததஃ” [பைங்க]

ஞானி பறைச்சேரியிலாகிலும் அல்லது, பிராமண அக்கிராரத்திலாகிலும், வியாதி பீடிதனையும், வியாதி இல்லாதவனையும், அறிவை யுடையவனையும், அறிவில்லாதவனையும் இருந்து எப்படி மரித்தபோதிலும் அவனுக்கு தோஷமில்லை. ஜாதி பேதங்களும், குல கோத்திரங்களும், சகல ரோகங்களும், சகல துக்கங்களும், சரீரத்திற்கே யொழிய தனக்கில்லையென்றும் தானே பிரம்ம மென்றுந் தெரிந்து ஆனந்திக்கின்றானதலால் தான் மரித்த க்ஷணமே, கடம் உடைந்தவுடன் அந்த கடாகாசம் மஹாகாசத்தில் ஏகமாவதுபோல், சத்தியமாய்ச் சர்வ பரிபூரண பரப் பிரம்மத்தில் ஐக்கியமாகின்றான்.

சுரு||‘தக்தஸ்ய தஹனம் நாஸ்தி பக்வஸ்ய பசநம் யதா
ஜ்ஞாநாக்நி தக்ததேஹஸ்ய நச ஶ்ராத்தம் நச க்ரியா.”
[பைங்கலோபநிஷத்.]

“பிரம்மமே” தானென்னும் ஞானக்கினியினால் “தேஹமே” தானென்னும் பிராந்தி நசிக்கப்படுமாதலால், ஞானி தன் சரீரத்தை ஞானக்கினியினால் எறித்தவன் எனப்படுவான்.

அக்கினியில் வெந்து பஸ்மமாய்ப்போன வஸ்துவை மறுபடியும் சுடுவதில்லை; அதுபோல் ஞானக்கினியில் “தேஹமே” தானென்னும் பிராந்தி நசிக்கப்பெற்ற ஞானி மரணமடைந்தவுடன் அவன் தூலசரீரத்தை, மறுபடியும் மசான அக்கினியில் தகனம் செய்யலாகாது. அவனுக்குத் திலோதகம் (எள் ஜலம் விடுவது) பிண்டப் பிரதானம் (பிண்டம்) வைப்பது முதலாகிய கர்மக்கிரியைகள், ஶ்ராத்தம் (திதி)

முதலானவைகள் செய்யலாகாது. அவனது சரீரத்தைப் பூமியில் புதைத்து சமாதி கிரியைகள் செய்யவேண்டும்.

சுரு||"தத்ரகோ மோஹ: கஶ்ஶோக: ஏகத்வ மநுபஶ்யத:
தரதி ஶோகமாத்மவித் பித்யதே ஹ்ருதயக்ரந்தி:
சித்யந்தே ஸர்வஸம்ஶயா: க்ஷீயந்தேசாஸ்ய கர்மாணி
தஸ்மிந் த்ருஷ்டே பராவரே." [கடோபநிஷத்.]

சர்வம் தானான பரப் பிரம்மமே தானென்று அறிந்து தன்னைவிட அந்நியமான பதார்த்தம் மற்றொன்று உண்டென எண்ணாமல் சர்வம் தானாகப் பாவித்துத் தன்னைத்தான் தரிசித்துக்கொண்டிருக்கும் ஞானிக்கு சோக மோஹங்களில்லை. அவன் ஜநந மரண துக்க மென்னும் சமுத்திரத்தைக் கடந்து நித்யானந்தத்தை அடைவான். அவன், சகல சந்தேகங்களையும் சகல கர்மங்களையும் நசிக்கப் பெற்று பிரம்ம சொரூபனாகின்றான்.

சுரு||"ஜீவ: பஞ்சவிம்ஶக: ஸ்வகல்பித சதுர்விம்ஶதி தத்த்வம்
பரித்யஜ்ய ஷட்விம்ஶ பரமாத்மா ஹமிதி நிஶ்சயாத்
ஜீவன்முக்தோ பவதி." [மண்டல ப்ராஹ்மணோபநிஷத்.]

இருபத்தைந்தாவது தத்வமாய் ஜீவாத்மாவா யிருக்கும் தான், தேஹேந்திரியாதி இருபத்துநான்கு தத்துவங்களும் அல்லவென்றும், இருபத்தாறுவது தத்துவமாகிய பரப் பிரம்மமே தானென்னும் நிச்சயமுடையவனே ஜீவன்முக்தன்.

"ந கர்தா நைவ போக்தாச ந போஜயிதா ததா." [வராஹோப]

நான் கர்த்தனல்லன், எதையும் நான் செய்வதில்லை நான் போக்தனல்லன், எதையும் நான் அனுபவிப்பதில்லை; நான் இதரர்களை அனுபவிக்கச் செய்யப்பட்டவனு மல்லன்; கேவலம் சாக்ஷிமாத்ரன், அகர்த்தன், அபோக்தன் என்று நிச்சயித்து கர்த்ருத்துவ அஹங்காரமில்லாதவனு

யிருப்பவனே ஞானி. அப்படிப்பட்ட அஹங்காரமில்லாத ஞானி எந்த காரியங்களையும் செய்யமாட்டான். ஒரு வேளை செய்தபோதிலும் அவனுக்குத் தோஷமில்லை. இப்படிப்பட்ட ஞானிகள் பால (குழந்தை) உன்மத்தன் (பித்தன்)போல் இருப்பார்கள்.

சுரு||"யஃ ஸமத்தார்த்த ஜாலேஷு வ்யவஹார்ய அபி ஶீதலஃ
பார்த்தேஷ்விவ பூர்ணாத்மா ஸ ஜீவந்முக்த உச்யதே."
[வராஹோபநிஷத்.]

ஞானி, உலகத்தாரைப் போல் சகலமான காரியங்களையும் செய்தபோதிலும், இதரர்களினுடைய கார்யங்களில் பிடிப்பில்லாம லிருப்பதுபோல், தான் செய்யும் கார்யங்களில் பிடிப்பில்லாதவனாய் இருந்துகொண்டும், செய்துகொண்டும், ஜகத்து சொப்பனம்போல் மித்தை என்று எண்ணி, ஆசையில்லாதவனாய் நிராசையா யிருந்துகொண்டு பரம சாந்தியை வஹித்து பிரம்ம சொரூபனா யிருப்பவனே ஜீவன் முக்தன்: இதற்கு சிவப்பிரகாசம் பிரமாணம்;

அகம்புற மென்றி ரண்டா லருச்சனை புரியு மிந்தச்
சகந்தனி லிரண்டு மின்றித் தமோமய மாகி யெல்லாம்
நிகழ்ந்திட மகிழ்ந்து வாழு நீர்மையார் போலஞானந்
திகழ்ந்தகம் புறமெனாத செம்மையார் நன்மை யாரே.

சுரு || "ஜீவந்முக்த பதம் த்யக்த்வா ஸ்வதேஹே காலஸாத் க்ருதே விஶதி அதேஹ முக்தத்வம் பவநோ ஸ்பந்ததாமி அஸ்ப்த மஸ்பர்ஶ மரூபமவ்யயம் ததா ரஸம் நித்ய மகந்தவச்ச யத் அநாத்ய நந்தம் மஹதஃபரம் த்ருவம் ததேவ ஶிஷ்யத்யமலம் நிராமயம்."
[பைங்கலோபநிஷத்.]

ஞானி, ஞானக்கியினால், சஞ்சிதமென்னும் புண்ணிய பாபங்களையும், அதனால் உண்டாகிய சூக்கும சரீரத்தையும் கால நியமப்படி, அவைகளைக் காய்ந்த இரும்புண்ட

நீரைப்போல் பிரேத(பிண)மாய்ச் செய்து, தேஹமில்லாத விதேஹமுக்தியை யடைவான். அப்பொழுது, சப்த பரிச ரூப ரச கந்தமில்லாத நாம ரூப கிரியா சூன்னியமான ஸர்வோத்கிருஷ்டமா யிருக்கும் பரப் பிரம்மத்தில் கலந்து ஏகமாய்ப் போவான். இதற்கு கைவல்யம் பிரமாணம்;

அரியமெய்ஞ் ஞானத் தீயா லவித்தையா முடனீ ரூமே
பெரியதூ லமுங்கா லத்தாற் பிணமாகி விழுமந் நேரம்
உரியசூக் குமசரீர முலையிரும் புண்ட நீர்போல்
தரியமாய் விபுவாய் நின்ற சொரூபத்தி விறந்து போமே.

சரு||"தஸ்மாத் பாவாபாவௌ பரித்யஜ்ய
பரமாத்ம த்யாநேந முக்தோ பவதி." [மண்டல ப்ராஹ்ம]

பாவாபாவங்கள், அதாவது ஒன்றை நினைப்பது மறுபடியும் மறப்பது; இந்த நினைப்பு மறப்புகள் சூன்யமாய் சதா தான் தானய் இருப்பவனே முக்தன்.

சரு||"த்வேபதே பந்தமோக்ஷாய நிர்மமேதி மமேதி ச
மமேதி பத்யதே ஜந்து: நிர்மமேதி விமுச்யதே."[பைங்கலோப]

இது என்னுடையது, இது எனக்கு வேண்டுமென்பதே "மம" காரம்; ஞானனந்த ஸர்வ பரிபூரண பரப் பிரம்மமே நானகையால் இந்த தேஹாதி பிரபஞ்சம் எதுவும் எனதல்ல என்று நினைப்பதே "மம" கார மில்லாமற் போவது. இந்த இரண்டு எண்ணங்களே பந்த மோக்ஷத்திற்குக் காரணங்கள். ஆதலால்,

சரு || "அஹம் ப்ரஹ்மேதி நியதம் மோக்ஷஹேது ர்மஹாத்மநாம்." [பைங்கலோபநிஷத்.]

ஆத்மசொரூபியாகிய நானே பரப் பிரம்மம். அந்த பரப் பிரம்மமே நான் என்னும் "ஸோஹம்" பிரம்மத்தை, இந்நூலில் சொல்லியிருப்பதுபோல் ஜபித்து பிரம்மைக்கியா நு ஸந்தானம் செய்வதே, மோக்ஷத்திற்குக் காரணமா யிருக்கின்றது.

சம்சாரவாசனை வாசனுத் திரயங்கள்.

சரு || "த்ருட பாவநயா த்யக்த பூர்வாபர விசாரணம்
யதாதானம் பதார்த்தஸ்ய வாஸநா ஸா ப்ரகீர்திதா."
[முக்திகோபநிஷத்.]

இந்த சம்சாராநுபவம் தொன்றுதொட்டு அதாவது, பிரமதேவன் எப்பொழுது பிறந்தானே அப்பொழுதே நம்மையும் சிருஷ்டி செய்துவிட்டான். அதுமுதல் நாளது வரையில் நாசமாய்ப் போகத்தக்க இந்த அநித்யமான சம்சாரத்தையே திடமாய் நம்பி, முன் எதுவோ பின் எதுவோ என்னும் விவேக மில்லாமல், அந்த அநித்யமான சம்சாரத்திலேயே மனதை வைத்து, சதா ஸம்ஸார விஷயங்களையே நினைத்துக் கொண்டிருப்பதனால், பிராணனை விடும்போது அந்த ஸம்ஸார ஞாபகமே வருகின்றது; இந்த சம்சார ஞாபகமே நமக்கு விதையாயிருந்து மறுபடியும் ஜனனம் எடுக்கவேண்டியதா யிருக்கின்றது. இந்த ஜநநம் வாராமல் எப்பொழுது நசித்துவிடுமென்றால்,

சரு || "ஜந்மாந்தர ஶதாப்யஸ்தா மித்யா ஸம்ஸார வாஸநா
ஸா சிராப்யாஸ யோகேந விநா நக்ஷீயதே க்வசித்."
[முக்திகோபநிஷத்.]

அநேக ஜன்மங்களாய் பழக்கப்பட்ட, இந்த மாயா (மா=எது, யா=இல்லையோ, அதுவே மாயை) ஸம்ஸார வாஸனையானது, ஜீவப் பிரம்மைக்கிய ஞான யோகாப்பியாச மில்லாமல் நசிக்கமாட்டா. அதாவது, யுத்தத்திற்கு புருஷனது பலமும் ஆயுதமும் வேண்டும். பலமில்லாமல் எவ்வளவு கூர்மையுடைய ஆயுதமா யிருந்த போதிலும், புருஷனைக் கொல்லமாட்டா. அதுபோல், ஞானம்அடைய யோகம், முக்கிய பலமாயிருக்கின்றது.

யோகமில்லாமல் ஞானம் சித்திக்கமாட்டா. ஆனல், ஜட பரதர் முதலானவர்கள் யோகமில்லாமலே ஞானசித்தி அடையவில்லையா என்கிற கேள்வியுண்டாகும். அதற்குக் காரணம் சொல்லுகின்ரேம் கேளுங்கள். அவர்கள் பூர்வ ஜன்மங்களிலேயே யோகசித்தியை யடைந்தபடியால் பிறக்கும்போதே ஞான சொரூபமாகவே பிறந்தவர்களென்று அறிவீர்களாக. இஃதன்றியும் உலகத்தில் மூன்று வாசனைகள் உண்டு. அவையாவன:—

சரு || "லோக வாஸநயா ஜந்தோ ஶாஸ்த்ர வாஸநயாபி ச
தேஹவாஸநயா ஜ்ஞானம் யதாவந்நைவ ஜாயதே." [முக்தி]

லோகவாசனை, சாஸ்த்ரவாசனை, தேகவாசனை இம்மூன்று வாசனைகளும் ஆத்மஞானத்தை உண்டாக்கமாட்டா.

1. லோகவாசனை என்ருல்:—உலகத்தில், தான் செய்யப்பட்ட சத்விஷயங்களினுல் தன்னை எல்லோரும் புகழவேண்டுமென்று எண்ணமுடையதே லோகவாசனை.

2. சாஸ்த்ரவாசனை என்ருல்:—தாமே சகல சாஸ்திரங்களையுங்கற்ற பண்டிதர்களென்று கர்வித்து சிவ விஷ்ணுக்களுக்கு பேதத்தை உண்டாக்கி சிவனே பெரியவன், சிவமதமே சிரேஷ்டமான மதமென்று சிவ மதஸ்தர்களும், விஷ்ணுவே பெரியவன் வைஷ்ணவ மதமே சிரேஷ்டமான மதமென்று வைஷ்ணவ மதஸ்தர்களும், ஒருவரோடொருவர் வாதாடிப் போராடிக் கொண்டிருப்பதே சாஸ்த்ரவாசனை. இந்த சிவ விஷ்ணுக்களைக் குறித்து உபநிஷத்துகள் என்ன முறையிடுகின்றனவென்ருல்:—

"ராம எவ பரம்ப்ரஹ்ம" "ஶிவ எவ ஸ்வயம் ஸாக்ஷாதயம் ப்ரஹ்ம" "யோஹவை ந்ருஸிம்ஹோ தேவோ பகவாந், யஶ்ச ப்ரஹ்ம யஶ்ச விஷ்ணுঃ யஶ்ச மஹேஸ்வரঃ" "த்வம் யஜ்ஞ ஸ்த்

வம் வஷட்கார ஸ்த்வம் இந்த்ர ஸ்த்வம் ருத்ர ஸ்த்வம் விஷ்ணு ஸ்த்வம் ப்ரஹ்ம ஸ்த்வம் ப்ரஜாபதிः'' "ஶிவாய விஷ்ணு ரூபாய ஶிவரூபாய விஷ்ணவே, ஶிவஸ்ச்ய ஹ்ருதயம் விஷ்ணுர்விஷ்ணோஶ்ச ஹ்ருதயம் ஶிவः.''

என்னும் ராம ரஹஸ்யோபநிஷத், மஹோபநிஷத், ந்ருஸிம்மதாபி ந்யுபநிஷத், அதர்வசிகோபநிஷத், தைத்திரீயோபநிஷத், ஸ்கந்தோபநிஷத்துகளின் வாக்கியரீதியாய் விஷ்ணுவாகிய நானும், பரமசிவனும் நாங்க ளிருவரும் ஏக (ஒரே)பரப் பிம்ம சொரூபம்; விஷ்ணுவாகிய நானே பரம சிவன், பரமசிவனே நான்; எங்க ளிருவருக்கும் எவ்வித பேதங்களுமில்லை. மேலும் சிவனுடைய இருதயமே விஷ்ணு விஷ்ணுவினுடைய இருதயமே சிவன்; இவர்க ளிருவரிலும் எந்த பேதமும் காணப்படவில்லை. மேலும், ராமா ராமா வென்று உலகத்தார் கொண்டாடுகின்றார்களல்லவா? அந்த ராமனைக்குறித்து உபநிஷத் வாக்கியம் என்னவென்றால்:—

"ரமதீதி ராமः'' நான், ஞானிகளினுடைய இருதயத்தில் சேர்ந்திருப்பதனால் எனக்கு ராமனென்று பெயர் உண்டாயிற்று. இதை விவரித்துச் சொல்லுகின்றேன் கேள்.

அத்யோ 'ரா' தத் பதார்த்தஸ்யாத், 'ம' காரஸ்த்வம் பதார்த்த வாக், தயோः ஸம்யோஜந மஸீத்யர்த்தே தத்வவிதோ விதுः

என்னும் ராம ரஹஸ்யோபநிஷத் ரீதியாய் "ரா'' என்னும் அக்ஷரம் "தத்''பத லக்ஷியார்த்தமாகிய நிராகார பரப் பிரம்மமென்றும், 'ம' என்னும் அக்ஷரம் "த்வம்'' பத லக்ஷியார்த்தமாகிய ஜீவாத்மா என்றும் அர்த்தமாகின்றது. ஆகையால், அப்பேர்ப்பட்ட நிராகார பரப் பிரம்மமே ஒவ்வொரு ஜீவ ஜந்துக்களிலும் ஸாக்ஷிமாத்ரமாய் ஆத்ம சொரூபமாயிருக்கின்றது. அதனால் பிரம்மம் ஆத்மா என்னும் பேதமில்லை. ஆதலால், தேகத்ரய சாக்ஷியா

யிருக்கும் ஆத்மாவே ராமன் என்று சொல்லப்படும். இவ் வித ஆத்மா ராமனைக் கர்ம காண்டம் என்ன சொல்லுகிற தென்றால், ராமன் பிறந்து சீதையை மணம்புரிந்து இராவணனைக் கொன்றதாகச் சொல்லுகின்றது. உபநிஷத் வாக்கியரீதியாய் ஆத்மராமனே ராமன்; மனதே சீதை; காம, குரோத, லோப, மோஹ, மத, மச்சர, டம்ப, தர்ப்ப, ஈர்ஷை, அசூயை என்னும் பத்து குணங்களே பத்துதலை ராவணனென்று சொல்லப்படும். இந்தக் காமக் குரோதாதி பத்து குணங்களையும் இந்நூல் 66-வது, பக்கம் முதல் 68-வது, பக்கம் வரையில் பார்க்கவும், ஆதலால், காமக்குரோதாதி பத்து குணங்களை ஜயித்து,மனதென்னும் சீதையை ஆத்மா ராமனில் ஐக்கியம் செய்வதே ராமாயணத்தின் அந்தரார்த்தம். கர்மகாண்டத்தில் ராமனைத் தியானஞ் செய்யும்படி ஏன் ஏற்படுத்தினர்களென்றால், மனிதர்களுக்கு க்ஷணத்திற்குள் அநேக எண்ணங்கள் உண்டாகின்றன. அப்படி அநேக எண்ணங்கள் உண்டாகா வண்ணம் ராமனையே துதி செய்துகொண்டிருந்தால் மனம் ஓர் எண்ணத்தில் நிற்கும்; பிறகு குருமுகமாய்த் தெரிந்துகொண்டு, அந்த ஓர் எண்ணத்தையும் நாசம் செய்யட்டுமென்று ராமனை ஜபம் செய்யும்படி ஏற்படுத்தினர்கள். ஆதலால், சகல எண்ணங்களையும் நாசம் செய்வதற்காகவே இந்நூல் எழுதப்பட்டது. மேலும்,

"ரமந்தே யோகினோ நந்தே நித்யாநந்தே சிதாத்மநி
இதி ராமபதேநாஸௌ பர ப்ரஹ்மாபிதீயதே
சிந்மயஸ்யா த்விதீயஸ்ய நிஷ்கலஸ்யா சரீரிண:."

என்னும் ராமபூர்வதாபி ந்யுபநிஷத் வாக்கியரீதியாய், என் நிஜசொரூபமான கேவல ஸத்ய ஞாநாநந்த நித்ய நிர்மல நிராகார பரிபூர்ண பரப் பிரம்ம சொரூபத்தை பிரம்ம ஞானிகள் தனது ஆத்ம சொரூபமாய் அறிந்து, என் நிஜ

சொரூபமாகிய ஆத்மாவில் சதா ரமித்திருக்கின்றார்கள்; என்றால், சேர்ந் திருக்கின்றார்கள். ஆதலால், எனக்கு ராம னென்று பெயருண்டாயிற்று. வேதாந்தத்தை ஆழ்ந்து விசாரித்து என் நிஜரூபத்தை தரிசித்தவர்களுக்கே மோக்ஷம் உண்டாகும் என்று சொல்லப்பட் டிருக்கின்றது. பரப் பிரம்மமே, சிவ விஷ்ணுக்களின் ரூபத்தை அடையும். அதாவது, பரப் பிரம்மம் ஆகாச ரூபமுடையது. காற்றுடன் கலந்த பரிமளம் எங்கும் வியாபித்திருப்பதுபோல், பரப் பிரம்மம் எங்கும் வியாபித்திருக்கப்பட்டது. இந்த பரப் பிரம்மமே சர்வஞ்ஞனென்று சொல்லப்படும்.

காட்டிடுங் கரண மொன்று மில்லையேற் காணொ ணாதாம்
நாட்டிய விவற்றான் ஞான நணுகவு மொண்ணு முன்னம்
ஈட்டிய தவத்தி னாலே யிறையரு ளுருவாய் வந்து
கூட்டிடு மிவற்றை நீக்கிக் குரைகழல் குறுகு மாறே.

இப்படிப்பட்ட பரப் பிரம்மத்தை ஒருவன் ஈசுவரனாய் நினைத்து, அனேக வருஷங்கள் சிரத்தை பக்தி விசுவாசத்துடன் தவம் செய்துகொண்டுவந்தால், அப்படிப் பட்டவனுக்கு அந்த பரப் பிரம்மம், பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசமென்னும் பஞ்சபூதங்களினால், சூலம், டமரகம் (உடுக்கை) ரிஷப வாஹனம், தவளமேனி (வெண்மை தேகம்) முதலியன தரித்து ஈசுவர ரூபமாய் வந்து அவனுக்கு தரிசனம் தந்து, மறுபடியும் உடனே, பிருதிவி பிருதிவியிலும், அப்பு அப்புவிலும், தேயு தேயுவிலும், வாயு வாயுவிலும், ஆகாசம் ஆகாசத்திலும், அந்தந்த பூதங்களை அந்தந்த பூதங்களுடன் ஐக்கியம் செய்து, தான் முன்போல் பரப் பிரம்ம சொரூபமாகவே இருக்கும்.

மற்றொருவன், விஷ்ணு வாய் நினைத்து தவம் செய்து கொண்டு வந்தால், அப்படிப்பட்டவனுக்கு அந்த பரப்

பிரம்மம், பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசமென்னும் பஞ்ச பூதங்களினால் தான் சகுண ரூபமாய், சங்கு சக்கரம் கதை கரிய திருமேனி முதலானவைகளுடன் விஷ்ணு மூர்த்தியாய் வந்து தரிசனம் தந்து, மறுபடியும் முன் சொல்லியதுபோல் பஞ்ச பூதங்களையும் அந்தந்த பூதங்களில் ஐக்கியம்செய்து யதாரீதியாய்த் தான் பரப் பிரம்மமாகவே யிருக்கும்.

மற்றொருவன், அல்லாவாய் நினைத்து தவம் செய்தால் அப்படிப் பட்டவனுக்கு அந்த பரப் பிரம்மம், முன் சொல்லிய பஞ்சபூதங்களினால் அல்லா ரூபத்தைத் தரித்து அவனுக்குத் தரிசனம் தந்து, மறுபடியும் பஞ்ச பூதங்களையும் பஞ்ச பூதங்களுடன் ஐக்கியம் செய்து தான் முன் போல் பரப் பிரம்ம சொரூபமாகவே யிருக்கும்.

மற்றொருவன் 'ஏசு' நாதராய் எண்ணித் தவம் செய்தால், அப்படிப் பட்டவனுக்கு அந்த பரப் பிரம்மம், பஞ்ச பூதங்களினால் ஏசுரூபத்தைத் தரித்து, அவனுக்கு தரிசனம் தந்து மறுபடியும் பஞ்ச பூதங்களையும் பஞ்ச பூதங்களுடன் ஐக்கியம் செய்து தான் முன்போல் பரப் பிரம்ம சொரூபமாகவே யிருக்கும். ஆதலால் "யத் பாவம் தத் பவதி" என்பதுபோல், ஈசுவரனை யார் யார் எந்தெந்த ரூபமாய் நினைக்கின்றார்களோ அவரவர்களுக்கு அந்தந்த ரூபமாய் வந்து தரிசனம் கொடுக்கின்றார். இதற்கு நிஜானந்தபோதம் பிரமாணம்;

போமடா வெளியோடே வெளிதான் சேரும்
  புதுமையடா வாய்வோடே வாய்வு சேரும்
ஊமடா தீயோடே தீதான் சேரும்
  யுத்தமனே யப்புடனே யப்பு சேரும்
ஆமடா மண்ணுடனே மண்தான் சேரும்
  மவரவர்க ளினத்தோடே யவரவர்கள் சேர்ந்திடுவாரோ.

இதற்குத் திருஷ்டாந்தம் உபதேச காண்டமும், ஸ்ரீ கிருஷ்ணர்ஜுந சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத் கீதை அத்தியாயம் 4-சு. 11,

எத்திறத்துள மூர்த்தியி ஞயினு
மெமையுணர்ந் தருச்சனை யியற்றின்
முத்திநல்குது மாங்கதிற் பவித்திர
முழுமுத லிலிங்கவர்ச் சனையே
பத்தியிற்சிறு பச்சிலை யாயினும்
பனிமலர்ச் சிற்றித ழெனினுஞ்
சுத்தமென்புனற் றுள்ளியா யினுமதிற்
ஜெருகுப்பவ ரெமக்கெனத் தொகுப்பார்.

"யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம் ஸ்ததைவ பஜாம்யஹம்
மம வர்த்மாநு வர்தந்தே மநுஷ்யாஃ பார்த்த! ஸர்வஶஃ."

கிருஷ்ணன்:—ஹே பார்த்தா! நீ சொல்லியதுபோல் இந்த உலகத்தில் என் நிஜ ரகசியம் அறியாமல், என் அவதார சொரூபமே என் நிஜசொரூபமென்றெண்ணி பூஜை செய்யப்பட்டவர்கள் அனேகர் இருக்கின்றார்கள். அப்படிப் பட்டவர்களையும் நான் வியர்த்தம் செய்யமாட்டேன் அப்படிப் பட்டவர்கள், நான் பரிபூர்ண பரப் பிரம்மம் என்னும் ஞானத்தை அடையாமையால் மோக்ஷப் பிராப்தியைப் பெருவிடினும், அவர்களில் எவரெவர்கள் எந்தெந்தப் பலத்தைக் கோரி, என்னை எந்தெந்த தேவதா ரூபமாய் நினைத்துப் பூஜிக்கின்றார்களோ, அவ ரவர்களுக்கு நான் அந்தந்த தேவதா ரூபத்துடனே சென்று அந்தந்த பலன்களை நானே கொடுத்துக்கொண்டு வருகின்றேன். அதாவது, இந்த உலகத்திலுள்ள ஜனங்க ளெல்லோரும் என்னை அநேகாநேக ரூபங்களாய் நினைத்துப் பூஜிக்கின்றவர்களாயிருக்கின்றார்கள்; நான் ஆகாச வடிவமாய் எங்கும் நிறைந்திருக்கும் பரப் பிரம்மமென்று தெரிந்துகொள்ளமாட்

டார்கள். நான் நிராகார பரிபூரண பரப் பிரம்மமென்று புருஷர்கள் அறியாமல், ராமனேதெய்வமென்று ராமோபாசனை செய்தாலும், கிருஷ்ணனே தெய்வமென்று கிருஷ்ணோபாசனை செய்தாலும், நரஸிம்மனே தெய்வமென்று நரஸிம்மோபாசனை செய்தாலும், ஈசுவரனே தெய்வமென்று ஈசுவரோபாசனை செய்தாலும், என்னையே ஆராதித்தவர்களாகிறார்கள். இந்திராதி அஷ்டதிக் பாலர்களையும், நவக் கிரஹங்களையும், காளி முதலாகிய சக்திகளையும், மற்றுஞ் சில க்ஷுத்ர (பேய்ப் பிசாசாதி) தேவதைகளையும் ஆராதிக்கின்றார்கள். அந்தந்தத் தேவதைகளின் ரூபங்கள் என்னையன்றி வேறாய் இல்லாமையால் என்னையே ஆராதித்தவர்களாகின்றார்கள். இதற்கு நம்மாழ்வார் திருவாய்மொழி பிரமாணம்.

ஒடியோடிப் பலபிறப்பும்பிறந்து மற்றோர் தெய்வம்
பாடியாடிப் பணிந்துபல் படிகால்வழி யேறிக்கண்டீர்
கூடிவானவ ரேத்தநின்ற திருக்குருகூ ரதனுள்
ஆடுபுட்கொடியாதிமூர்த்திக் கடிமை புகுவதற்றே.

பாருருவில் நீரெரிகால் விசும்பு மாகிப்
  பல்வேறு சமயமாய்ப் பரந்து நின்ற
ஏருருவில் மூவருமே யென்ன நின்ற
  விமயவர்தந் திருவுருவே றெண்ணும் போது
ஒருருவம் பொன்னுருவ மொன்று செந்தீ
  ஒன்றுமா கடலுருவ மொத்து நின்ற
மூவுருவும் கண்டபோ தொன்றாம் சோதி
  முகிலுருவ மெம்மடிக ளுருவந் தானே.

இந்த பிரபஞ்சத்தில், பிபீலிகாதி பிரம பரியந்தமாயுள்ள சமஸ்த சராசரங்கள் என் சொரூபமே. "ஸ்ர்வதேவ நமஸ்காரஃ கேஸவம் ப்ரதிகச்சதி" என்பதுபோல் சர்வ விக்கிரகங்களின் மூலமாய்ச் செய்யும் ஆராதனைகள் யாவும் என்னையே சேருகின்றன. ஆதலால், அவரவர்கள் உபா

சிக்கும் தேவதா ரூபங்கள் மூலமாய் அவரவர்கள் கோரிய பலன்களை நானே கொடுத்துக்கொண்டு வருகின்றேன். இந்த உலகத்தில், கேவல மூடர்களும் நாஸ்திகர்களும் தவிர, பக்தியுடன் உபாசனை செய்யும் எம் மதஸ்தர்களும் தேவதைகளும் என்னையே ஆராதித்தவர்க ளாகின்றார்கள். ஆதலால், அவரவர்களின் மனோ நிச்சயத்திற்கும் பக்திக்கும் ஆராதனைக்கும் தக்கவாறு பலத்தை, நானே கொடுத்துக்கொண்டு வருகின்றேன். ஆதலால்,

சுரு || "தஸ்மாத் ஸாகாரமநித்யம் நித்யம் நிராகாரமிதி."

என்னும் மஹா நாராயணோபநிஷத் வாக்கியரீதியாய், ரூப நாமமுடைய என் ஸாகாரசொரூபம் அநித்தியமானது. ரூப நாமக் கிரியைகள் இல்லாத என் நிராகார சொரூபம், நித்தியமானதும் சத்தியமானதுமா யிருக்கும். இதுவே என் யதார்த்த சொரூபம்.

சுரு || " யத்ர நாந்யத் பஶ்யதி நாந்யத் ஶ்ருணோதி
நாந்ய த்விஜாநாதி ஸபூமா, யோவை பூமா ததம்ருதம்"

" அத யத்ராந்யத் பஶ்யத்யந்ய ஶ்ருணோதி
அந்ய த்விஜாநாதி ததல்பம், "

" அத யதல்பம் தந்மர்த்யம். "

" ஸம்பூர்ண மந்யத் ந்யூந மந்யத் ஸ்தாநம். "

என்னும் சாந்தோக்யோபநிஷத், ப்ருஹதாரண்யோபநிஷத் வாக்கியரீதியாய், என் நிஜ சொரூபமாகிய நிராகார சொரூபம், அகண்ட பரிபூரணமென்றும், நாசமில்லாததென்றும் சொல்லப்படும். என் ஸாகார (விக்கிரக) சொரூபம், அல்பமானதும் கண்டமானதும் மித்தியா சொரூபமானதும், அதாவது நசித்துப் போகத்தக்கதுமா இருக்கும்:

சுரு || "யோவை பூமா தத்ஸுகம் நால்பே ஸுக மஸ்தி
பூமைவ ஸுகம் பூமாத்வேவ விஜ்ஞாஸிதவ்ய இதி."

என்னும் சாந்தோக்யோப நிஷத் வாக்கியரீதியாய் எது அகண்ட பரிபூரணமாய் நிராகார சொரூபமாய் இருக்கின்றதோ அதுவே சுக சொரூபமானது. அல்பமானதில், அதாவது கண்ட சொரூபமான ஸாகாரத்தில் (விக்கிர ரூபத்தில்) அப்படிப்பட்ட சுகமிராது. அகண்ட பரிபூரண மாகிய நிராகாரமே (வெட்ட வெளியே) சுக சொரூப மானது. அப்படிப்பட்ட நிராகார பரப் பிரம்மத்தை மனிதர்கள் தெரிந்துகொள்ளமாட்டார்கள். ஆதலால்,

சுரு||"யஸ்ய வாங்மநஸீ ஶுத்தே ஸம்யக்ருப்தேச ஸர்வதா
ஸவை ஸர்வமவாப்நோதி வேதாந்தோப கதம் பலம்."

என்னும் நாரத பரி விராஜகோபநிஷத் வாக்கியரீதியாய் எவன் மனம்,சஞ்சலமில்லாமல் (அலையாமல்) வாக்கு மௌனமாய், இந்திரிய வியாபாரங்களில்லாமல் பரிசுத்தமா யிருப்பானோ, அவன் வேதாந்தத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஆத்மாநுபவத்தை அடைவான் என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல்லியிருக்கின்றார். இன்னும் விரிவாய்த் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விருப்பமுள்ளோர், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந சம்வாத ரூபமாம் எழுதிய ஸ்ரீ பகவத்கீதையில் விரிவாய்க் காணலாம்.

இப்படிப்பட்ட பரப் பிரம்மத்தின் உள்ளுரை தெரிந்து கொள்ளாமல் சிவ மதஸ்தர்களும் விஷ்ணு மதஸ்தர்களும் ஒருவரோடொருவர் வாதாடி தூஷிக்கின்றார்கள்.

இப்படிப்பட்டவர்கள் ரௌரவாதி நரகங்களையே அனுபவிப்பார்கள். இவர்களை, உபநிஷத்துகளைப் பாராத மூட பண்டிதர்களென்றே சொல்லலாம். இதற்கு உபதேசகாண்டம் பிரமாணம்;

ஈதெலா மிப்பரி செடுத்துக் காட்டின
வேதமப் பொருளெலாம் விரிந்த வாற்றினைப்

பேதுறப் பொய்மையென் றிழியப் பேசினோர்
தீதுறு நரகெலாஞ் சென்று வீழ்வாரே.

3. தேகவாசனை என்றால்:—தேகம் கெடாமலும், தலைமயிர் நரையாமலும், கிழத்தனம் வியாதிகள் மரணம் முதலானவைகள் வராமலுமிருக்க மூலிகைகள், சித்தௌஷதங்கள் முதலானவைகளைப் புசித்து காயசித்தி அடைய வேண்டுமென்னும் தேகாபிமான எண்ணமே தேகவாசனை யென்று சொல்லப்படும். இத்தேகாபிமானம் எதுவரையில் உண்டோ அதுவரையில் ஆத்மஞானம் உண்டாக மாட்டா. சதா ஆத்ம தியானம் செய்துகொண்டு ஆத்மானுபவ நிஷ்டை யென்னும் நிர்விகல்ப சமாதி நிஷ்டையை அப்பியாஸம் செய்யும் பெரியோர்களுக்கு இந்த வாஸனாத் திரயங்கள் நசிக்குமே யொழிய மற்றவர்களுக்கு நசிக்கமாட்டா. இந்த வாசனைகள் நசிக்கும் வரையில் அனேக யோனிகளிற் பிறந்து பிறந்து உழன்றுகொண்டே இருப்பார்கள். இதற்கு உபநிஷத்துப் பிரமாணம்.

“நாநாயோநி ஶதங் கத்வா ஶேதேசௌ வாஸநாவஶாத்.”
[த்ரிசிகி ப்ராஹ்மணோபநிஷத்.]

இந்த வாசனாத் திரயங்களினாலேயே நானாவித யோனிகளில் போய்ப் பிறக்கின்றார்கள். ஆதலால், அப்படிப்பட்ட யோனிகளில் போய்ப் பிறவாமல் தப்பித்துக் கொள்வதற்கு முக்திகோபநிஷத் பிரமாணம் என்னவென்றால்,

“வாஸநாஸ்த்வம் பரித்யஜ்ய அந்தஶ்ஶாந்த ஸமஸ்நேஹோ பவ சிந்மாத்ரவாஸநஃ, தாமப்யதஃ பரித்யஜ்ய மனோபுத்தி ஸமாந்தாம் ஶேஷஸ்த்திர ஶமாதாநோ ம்யித்வம் பவமாருதே, அஶப்த மஸ்பர்ஶ மித்யாதி.” *[முக்திகோபநிஷத்.]*

வாசனாத் திரயங்களும் மோக்ஷத்தின் இச்சையும். விட்டு விட்டு, ஜகத் சர்வம் அநித்தியமென்றும், பரப் பிரம்மமே ஸத்ய மென்றும் பிரம்மத்தையே தியானம் செய்யவேண்டும்.

பிறகு அந்தத் தியானத்தையும் விட்டுவிட்டு மனோ புத்திகள் இரண்டையும் சஞ்சலமில்லா (அசையா) மல் ஸ்திரமாய் நிறுத்தி,

"ஹ்ருதயம் நிர்மலம் க்ருத்வா சிந்தயித் வாப்யநாமயம்
அஹமேவபரம் ஸர்வமிதி பஸ்யேத்பரம் ஸுகம்." [பைங்க]

இருதயத்தை, எவ்வித சங்கல்பமுமில்லாமல் படிகம் போல் நிர்மலமாய்ச் செய்துகொண்டு, அதாவது பிரம்ம சிருஷ்டி நாள்முதல் நாளதுவரையில் நாம் அனேககோடி ஜன்மங்களை எடுத்துக்கொண்டே வருகின்றோம், இனியும் எத்தனையோ கோடி ஜன்மங்களையும் எடுக்கப் போகின்றோம்; இதற்குத் திருஷ்டாந்தம் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதரூபமாம் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 2, சுலோகம் 12.

"நத்வேவாஹம் ஜாதுநாஸம் நத்வம் நேமே ஜநாதிபாঃ
நசைவ நபவிஷ்யாம ஸர்வே வய மதঃபரம்."

ஓ அர்ஜுநா! நான் இவ்வளவு தூரம் சொல்லியும், விஷயம் தெரியாமலே இருக்கின்றாய். நீயாகிலும் நானாகிலும் நமது எதிரிலிருக்கும் இந்த ராஜர்களாகிலும் மற்றும் யாரா யிருந்தபோதிலும் ஒருபோ திருந்தும் மற்றொருபோதில்லாமலும் இருப்பதுண்டோ? நீ இதுவரையில் எத்தனையோ ஜன்மங்களெடுத்து இப்பொழுது இந்த ஜன்மம் எடுத்திருக்கின்றாயல்லவா? அப்படி யிருக்க நீ துக்கப்படுவது எதைப்பற்றி? தேஹத்தைப் பற்றியா? அல்லது ஆத்மாவைப் பற்றியா? தேஹம் போய்விடுகின்றதே என்று வியசனமுண்டானால் ஒரு தேஹம் போகவும் மற்றொரு தேஹம் வரவுமாகவே இருக்கிறபடியால், ஜடமாகிய தேஹம் ஒருநாள் அழிவது நிச்சயம். நிச்சயமாய் அழியும் சுபாவமுடைய தேஹத்தைக்குறித்து நீ விசனப்படுவத

ஞல்,அது அழியாமலிருக்குமோ? ஜடமாகிய தேஹத்தைக் குறித்து நீ வியசனப்படவேண்டியதேன்? ஆத்மா போய் விடுகின்ற தென்பதைப்பற்றி வியசனப் படுவதனுல், பின் சொல்லப்போகும் பல சுலோகங்களினுல் பரமாத்மா எப்படி நித்தியனே, அப்படியே ஜீவனும் நித்தியனென்று சொல்லப் பட்டிருப்பதனுல், அழிவற்ற சுபாவமுடைய ஆத்மாவைக் குறித்து நீ வியசனப் படவேண்டிய காரணமே யில்லை. தேஹத்தை அடைவதும் விடுவதும் ஜீவனுடைய கார்யமேயொழிய வேறல்ல; தேஹமும் ஜீவனும் ஒன்ருயிருந்தால் தேஹம் போனுல் ஜீவனும் போய் விடவேண்டியதல்லவா? ஒரு தேஹத்தை விடுவதும் மற்ருெரு தேஹத்தை அடைவதும் ஜீவனுடைய காரியமென்று சொல்லப்பட்டிருப்பதால், தேஹமே ஆத்மாவல்ல. ஆகையால் நீ துக்கப்படவேண்டாம். இதனுல் என்ன ஏற்படுகின்றதென்ருல், பகவானைப்போல் ஜீவனுகிய நீயும் அநாதி நித்தியனென்று ஏற்படுகின்றது. இத்தேஹத்தை விட்டு இன்னும் எத்தனையோ ஜன்மங்கள் எடுக்கவேண்டியவனு யிருக்கின்ருயல்லவா? இப்படிப்பட்ட விஷயத்தில் நீ இதுவரையில் இல்லாமலிருந்தாயென்றும், இப்போது மாத்திரம் இருக்கின்ருயென்றும், இனிமேல் இல்லாம லிருப்பாயென்றும் எண்ணலாமா?

அர்ஜுநன்;—அப்படி எண்ணலாகாது: நான் முன்னிருந்தேன்; இப்பொழுதும் இத்தேஹத்துடன் இருக்கின்றேன்; இனிமேலும் ஏதோ ஒரு தேஹத்தை அடையவேண்டியவனு யிருக்கின்றேன். சென்றகாலம் நிகழ்காலம் வருங்காலங்களிலும் இல்லாமல் இருப்பவனல்ல.

கிருஷ்ணன:—அதுபோல், நாமும் நமது எதிரிலிருக்கும் இந்த ராஜர்களும் மற்றும் யாவத்திராளும் மூன்று காலங்களிலும் இருக்கப்பட்டவர்களே யல்லவா? அப்படி

யிருக்க பீஷ்மாதிகள் இல்லாமற் போகின்றூர்களே என்னும் துக்கம் உனக்கேன் உண்டாயிற்று?

அர்ஜுனன்:—என் அபிப்பிராயத்தை நீர் சரியாய் கிரகிக்கவில்லைபோல் காணப்படுகின்றது. பீஷ்மாதிகள் பூர்த்தியாய் நாசமாய்ப் போகின்றூர்கள் என்றல்ல, நான் துக்கப்படுவது அவர்கள் இந்த ஜன்மத்தில் எந்த தேஹத்துடன் எனக்குப் பாட்டனுயும் குருவாயும் ஏற்பட்டு என்னிடத்தில் எவ்வளவோ பிரேமை யுடையவர்களாகச் சதா என் க்ஷேமத்தைக் கோரிக்கொண்டிருந்த மஹான்களாதலால் அவர்கள், அப்படிப்பட்ட அந்த தேஹத்தை விட்டு கிருதார்த்தர்க ளானபோதிலும் (மேன்மையை அடைந்தபோதிலும்) அப்படிப்பட்டவர்களின் சாங்கத்தியமும் (சேர்க்கையும்) ஆதரணையும், எனக்குத் தப்பிவிடுகின்றதல்லவா என்று துக்கப்படுகின்றேன்.

கிருஷ்ணன்:—ஓ ஹோ! அதுவா உன் துக்கத்திற்குக் காரணம்? அப்படி எண்ணுவதும் சரியல்ல. சுலோகம் 13.

"தேஹிநோ ஸ்மின் யதா தேஹே கௌமாரம் யௌவனம் ஜரா
 ததா தேஹாந்தர ப்ராப்திர் தீரஸ்த்ர ந முஹ்யதி."

எப்படியென்றூல் சொல்லுகின்றேன் கேள்:—இந்த பிரபஞ்சத்தில் மனிதர்கள் ஜன்மித்தவுடன் யாதொன்றும் தெரியாத சிசுவாயிருந்து, பிறகு சில நாட்களில் பால்ய தசை அடைந்து, ஆட்டம் பாட்டங்களில் காலங்கழித்து, சிலதுநாள் சென்றபிறகு யௌவனதசையடைந்து சந்தன புஷ்ப தாம்பூலாதிகளுடன் ஸ்திரீ போகமு மனுபவித்துக் காலங்கழித்துச் சிலநாள் சென்றபிறகு கிழத்தனமுண்டாய் கண்கள் தேஹசர்மம் முதலாகிய இந்திரியங்களின் பலங் குறைந்து கடைசியில் ஓர் ஊன்றுகோலாகிலும் இல்லாமல் நடக்கச் சக்தியற்றவனுய், பிறகு மரணமடைகின்றூனல்லவா? அப்படியாவதற்குக் காரணமென்ன? ஆத்மா

எப்பொழுதும் ஒரே விதமாய் இருக்கப்பட்டவனல்லவா? அப்படியிருக்க முதல் பிறந்தபோது எப்படி யிருந்ததோ அப்படியே யிராமல் தேஹம் இத்தனை விதங்களாய் மாற வேண்டியதேன்?

அர்ஜுநன்:—ஆம் வாஸ்தவமே. அது மனிதர்களுக்கு மாத்திரமே யல்ல; பிரதி ஜீவ ஜந்துக்களுக்கும் இப்படியே மாறுகின்றதைப் பார்க்கின்றோம். இதனை யோசிக்குமளவில் தேஹ தர்மமெனத் தோன்றுகின்றது.

கிருஷ்ணன்:—ஆம், நீ சொல்வது சரிதான். இப்படி மாறுபடுவது தேஹ தர்மமே யன்றி ஆத்ம சுபாவமல்ல; ஆதலால், ஒரு மனிதன் மரணமடைந்தால் தேஹ தர்மமுனென்று சொல்வதற்குக் காரணமா யிருக்கின்றது. தேஹதாரியாகிய ஆத்மா அந்தந்த தேஹத்தில் எப்படி பால்ய யௌவன கௌமார (கிழத்தன) தசைகளை அடைந்து அந்தந்த தேஹத்தை விட்டு மற்றொரு தேஹத்தில் பிரவேசிப்பது ஆத்மாவிற்கு இயல்பா யிருக்கின்றது. ஆதலால், பீஷ்மாதிகளினுடைய ஆத்மாவும் தேஹ தர்மானு குணங்களால் அந்தந்தத் தேகத்தை விடுவது சஹஜமா யிருக்கின்றது. ஞானியானவன், இப்படிப்பட்ட விஷயங்களில் உன்னைப்போல் வியசனப்பட மாட்டான். உனக்கு இப்படிப்பட்ட ஞானமில்லாததனல் நீ துக்கப்படுகின்றாய்.

அர்ஜுனன்:—நீர் சொல்லியவைகளெல்லாம் நிஜமே. எவ்வளவு வைராக்கிய சீலனுயிருந்தபோதிலும் இந்த பந்து ஜனங்கள் மரணமடைந்தால் கொஞ்சமேனும் வியசனமில்லாம லிருக்குமா?

இங்கு வேண்டிய திருஷ்டாந்தம் இவ்வளவே. இதற்கு முன் விஷயங்களை ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதையில் விரிவாய்க் காணலாம்.

ஆதலால், ஒவ்வொரு ஜன்மத்திலும் காமக் குரோதாதி அழுக்குகள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. இருதயத்திலிருக்கும் காமக் குரோதாதி அழுக்குகளெல்லாம், இந்நூலில் சொல்லியிருக்கும் "குரு" உபதேசம் இடைவிடாமல் அப்பியசித்து வந்தால், அந்தக் காமக் குரோதாதிகள் தனக்குத் தானாய் நசிந்துவிடும். பிறகு இருதயம், எவ்வித சங்கல்ப விகல்பங்களுமில்லாமல் படிகம் போல் நிர்மலமாய்விடும், மனதை வெளியில் ஓடவிடாமல் நிறுத்தி அந்த பரப் பிரம்மமே நான், நானே சர்வமென்று மௌனமாயிருப்பதே பரமசுகம். மௌனமென்றால் வார்த்தையாடாமல் வாயை மூடிக்கொண்டிருப்பதல்ல. மனதை வெளியில் ஓடவிடாமல் நிறுத்துவதே மௌனமென்று சொல்லப்படும்,

இருக்கலாம் எந்தெந்த யுகங்களுக்கும்
  ஏகாந்த மானதொரு பிரம்மந்தன்னில்
பெருக்கவே மனதடங்கி மௌனம்பெற்று
  பேராசை யாகவும் தான் பிரம்மத்துள்ளே
குருக்களைப்போல் அரசனைப்போ லிந்திரனைப்போற்
  குணமான மூவரைப்போற் பிரம்மத்தூடே
திருக்கெடுத்து எந்தெந்த வவதாரங்கள்
  செய்திடலாம் நிலையறிந்த பெரியோர்தானே.

பந்தமோக்ஷ ஆத்மா அநாத்மா லக்ஷணங்கள்.

"ஆத்மாநாத்மனோ ர்தேஹாதீந் ஸ்வேத்யஸ்யாத்மத்வேநாபிமந்ய
ஸோபிமாநஃ ஆத்மனோ பந்தஃ தந்நிவ்ருத்தி ர்மோக்ஷஃ" [தே

தானல்லாத தேஹம் இந்திரியங்கள் முதலானவைகளைத் தானென்றெண்ணி அபிமானித்துக்கொண் டிருக்கின்றது; அப்படி அபிமானிப்பதனால் உண்டான அபி

மானமே பந்தம். அந்த அபிமானத்தை விட்டுவிடுவதே மோக்ஷம். எப்படி என்றால்:—

"அநாத்யவித்யா வாஸநயா ஜாதோஹமிதி ஸங்கல்போ பந்தః,
பித்ருமாத்ரு ஸஹோதர தாராபத்ய க்ருஹாராமக்ஷேத்ராதி,
மமதா ஸம்ஸாராவரண ஸங்கல்போ பந்தః,
கர்த்ருத்வாத்யஹங்கார ஸங்கல்போ பந்தః,
அணிமாத்யஷ்டைஶ்வர்ய ஆஶாஸித்த ஸங்கல்போ பந்தః,
தேவ மநுஷ்யாதி உபாஸநாகாம ஸங்கல்போ பந்தః,
யமாதி அஷ்டாங்க யோகாப்யாஸாதி ஸங்கல்போ பந்தః,
வர்ணாஶ்ரம தர்ம கர்ம ஸங்கல்போ பந்தః,
ஆஜ்ஞாபய ஸம்ஶயாத்மகுண ஸங்கல்போ பந்தః,
யஜ்ஞ வ்ரத தபோதாந விதிவிதா நஜ்ஞாநஸங்கல்போபந்தః,
கேவல மோக்ஷாபேக்ஷா ஸங்கல்போ பந்தః,
ஸங்கல்பமாத்ர ஸம்பவோ பந்தః,
நித்யாநித்ய வஸ்து விசாராதநித்ய ஸம்ஸார ஸுகதுःக
விஷய ஸமஸ்த க்ஷேத்ரமமதாதி
ஸமஸ்த்தபந்த ஸங்கல்ப க்ஷயோ மோக்ஷः.

[நிராலம்போபநிஷத்]

சத்திய ஞானனந்த பரப் பிரம்மமே தானென்று அறியாமல், அநாதியாய் வந்துகொண்டிருக்கும் அஞ்ஞான மயமாகிய ஜீவனே 'தான்' என்னும் சங்கல்பமே (எண்ணமே) பந்தம்; சர்வ சாக்ஷியாகிய பிரம்மமே தானென்று அறியாமல் தனது தாய் தந்தைகள், சகோதரர், களத்திரம், புத்திரர், புத்திரிகள், தோட்டம், திரவு, வீடு, பூமி முதலானவைகளின்மீது இச்சைவைத்துக்கொண் டிருப்பதே பந்தம்; சுத்த நிர்குண பரப் பிரம்மமே தானென்று அறியாமல், 'நான்' 'என்னுடையது' என்னும் அஹங்கார மமகாரங்கள் உண்டாய், நானே எஜமான், எனது பார்யை எனது புத்திரர் முதலானவர்களை நானே போஷிக்கப் பட்டவன் என்னும் சங்கல்பமே பந்தம்; பிறப்பு இறப்பில்

லாத பிரம்மமே தானென்று அறியாமல் தனக்கு மரண முண்டென்று பயந்து, காயசித்தி யடைந்து சாகாம லிருக்க அணிமாதி அஷ்டமஹா சித்தியை அடையவேண்டு மென்னும் சங்கல்பமே பந்தம்; தானே சர்வாதாரமான பரப் பிரம்மமென்று அறியாமல், ஹரிஹராதி தேவதை களைத் தியானித்து இஷ்டார்த்தங்களை அடையவேண்டு மென்னும் சங்கல்பமே பந்தம்; நித்யமுக்த நிர்விகார கேவல அத்வைத பரப் பிரம்மமே தானென்று அறியாமல் எல்லாவற்றையும் மறந்து ஸாக்ஷிமாத்திரனாய் ஆநந்திக் காமல், தன்னைவிட வேறாய் பிரம்மம் உண்டென்று அஷ் டாங்க யோகங்களைச் செய்து புருவமத்தியில் திருஷ் டியை நிருத்தி, பஞ்ச முத்திரைகளில் தோன்றும் சித்தகளை களின் மண்டலங்களைப் பார்த்துக்கொண்டு அதுவே பிரம்மமென்னும் சங்கல்பமே பந்தம்; நாமரூபங்கள், குல கோத்திரங்க ளில்லாத பரப் பிரம்மமே தானென்று அறி யாமல், தனக்கு குல கோத்திரங்கள் ஜாதிபேதம் ஆசாரங் கள் உண்டென்னும் சங்கல்பமே பந்தம்; தான் கர்ம சூன் னியனான பரப் பிரம்மமென்று அறியாமல் ஜப தப விரத யஞ்ஞ தானாதிகளைக் கர்மகாண்டத்தின் ரீதியாய்த் தவறா மல் செய்யவேண்டுமென்னும் சங்கல்பமே பந்தம்.

நித்திய அனித்திய வஸ்து விவேகமுண்டாய், பிரம் மமே சத்தியமென்றும் ஜகத் மித்தையென்றும் அறிந்து, அநித்தியமாகிய, மனைவி புத்திரர் புத்திரிகள் வீடு தனம் தாந்யம் முதலானவைகளின்மீது உண்டாயிருக்கும் ஆசை களை விட்டுவிட்டு, ஸுக துக்கங்கள் சரீரத்திற்கேயொழிய ஸாக்ஷியாகிய எனக்கு இல்லையென்று தெரிந்து, ஆத்ம சொரூபியாகிய நானே பிரம்மமென்று அறிந்து, சகல சங் கல்பங்களையும் நசிக்கச்செய்து சதா பிரம்மானந்த சமுத் திரத்தில் மூழ்கி யிருப்பதே மோக்ஷம்.

"தஸ்மாத் பாவாபாவௌ பரித்யஜ்ய
பரமாத்ம த்யாநேந முக்தோ பவதி."
[மண்டல ப்ராஹ்மணோபநிஷத்.]

பாவாபாவங்கள் என்றால் நினைப்பு மறப்பு இந்த நினைப்பு மறப்பு சூன்னியமாய் சதா ஆகாசவடிவமாயிருப்பதே மோக்ஷம்: என்றால், எந்த ஆசைகளும் இல்லாமலிருந்தால் அதுவே மோக்ஷம்.

"த்வேபதே பந்தமோக்ஷாய நிர்மமேதி மமேதிச
மமேதி பத்யதே ஜந்துர் நிர்மமேதி விமுச்யதே."
[மஹோபநிஷத்.]

'இது என்னுடையது,' 'இது எனக்கு வேண்டும்' என்பதே 'மமகாரம். இந்த மமகாரத்தினால் நமக்கு ஜன்மங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. ஞானானந்த சர்வ பரிபூரண பரப்பிரம்மமே 'நா' னைகையால் இத்தேகாதிப் பிரபஞ்சம் சர்வமும் 'நா' னல்ல 'எதுவும் என்னுடையதல்ல' என்னும் எண்ணம் இல்லாமலிருப்பதே 'மம' காரங்களில்லாமல் இருப்பது. இந்த இரண்டு எண்ணங்கள் உள்ளதே பந்தம். 'மம' காரங்களில்லாமலிருப்பதே மோக்ஷம். அமிருத பிந்தூபநிஷத்தில் இன்னும் என்ன சொல்லியிருக்கிறதென்றால்,

"கவாமநேக வர்ணாநாம் க்ஷீரஸ்யாப்யேக வர்ணதா
க்ஷீரவத்பஶ்யதே ஜ்ஞாநம் லிங்கிநஸ்து கவாம் யதா."

பசுக்கள், நானாவித வர்ணங்களுடன் வெவ்வேறு ரூபங்களா யிருந்தபோதிலும், அவைகளால் உண்டாகும் பால் மாத்திரம் ஒரே நிறமா யிருப்பதுபோல், அனேக பேதபுத்தியுடையவன் சற்குருவை யடைந்து வேதாந்த சிரவண மனன நிதித்தியாசனங்கள் செய்து அவனுக்கு உண்டாயிருக்கும் பேதபுத்தி நசித்து, அபேதமாயுள்ள பிரம்ம

ஞானமுண்டானால், அவன் ஸர்வஜீவ சரீரங்களிலும் அபேதமாய் (பேதமில்லாத) கேவல ஞான சொரூபமான பிரம்மம் ஒன்றே வியாபித் திருக்கின்றதென்று அறிவான்.

"க்ருதமிவ பயஸி நிகூடம் பூதே பூதே ச வஸதி விஜ்ஞாநம்
ஸததம் மநஸி மந்தயிதவ்யம் மநோ மந்தா நபூதேந."

பாலில் நெய், ரகசியமாய் காணப்படாமல் மறைந் திருப்பதுபோல், சகல ஜந்துக்களிலும் பரப் பிரம்மத்தின் அம்சமாகிய ஆத்மா, ரகசியமாய்க் காணப்படாமல் மறைந் திருக்கின்றான்.

"கவாம்ஸர்பி ஶரீரஸ்தம் நகரோத்யங்க போஷணம்
ததேவ கர்ம ரசிதம் புநஸதஸ்யைவ பேஷஜம்."

கோக்களின் (பசுக்களின்) சரீரத்தில் சகஜமாய் நெய் யிருந்தபோதிலும், அவைகளின் சரீரம் புசிப்பதற்கு உபயோகப்படமாட்டா. பசுக்களின் பாலைச் கறந்து காய்ச்சி அதிலுண்டாகிய நெய் மாத்திரம் சாப்பிடுவதற்கும் வைத்தியத்திற்கும் உபயோகப்படும்.

"ஏவம் ஸர்வஶரீரஸ்த ஸர்பிவத் பரமேஶ்வரம்
விநாஶோ பாஸநாத்நேவோ ந கரோதி ஹிதம் ந்ருஷு."

இவ்விதமாய் நெய்யைப்போல் பரமேசுவரன், சகல சரீரங்களில் இருந்தபோதிலும், குரு உபதேசத்தால், சிரவண மனன நிதித்தியாஸனங்களினால் அதாவது, சிரவணமென்றால், குரு சொல்வதை நன்றாய்க் கவனித்துக் கேட்பது. மனனமென்றால், கேட்ட விஷயங்களை எல்லாம் நன்றாய் ஆலோசிப்பது. நிதித்தியாசனமென்றால், குரு சொன்னதுபோல் செய்துவருவது. இப்படிச் செய்யாவிட்டால், மனிதர்கள் பரமானந்த பிராப்தியை அடையமாட்டார்கள். ஜீவாத்மா, சகஜமாய் பரமாத்மாவிலிருந்து பின்னமாய் (வேறாய்) வந்தபோதிலும் இந்த ஜீவாத்மா

விற்கு அஞ்ஞானமென்பது, அனேக ஜன்மங்களின் (வாசனையினால்)பழக்கத்தால் துடர்ந்துகொண்டே வருகிற படியால் முன்சொல்லிய சிரவண (கேட்டல்) மனன (கேட்டதை சிந்தித்தல்) நிதித் தியாஸனம் (சிந்தித்ததை அனுபவத்திற்குக் கொண்டுவருதல்) இவைகளை, ஸ்திரீ புருஷர்கள் அனுபவத்திற்குக் கொண்டுவராவிட்டால், ஒவ்வொரு ஜன்மத்திலும் அஞ்ஞானம் மறைத்துக்கொண்டே வந்து, பிறகு ஏதோ ஓர் ஜன்மத்தில் தாம் ஜன்மாந்திரங்கள் தோறும் செய்துவந்த புண்ணிய விசேஷத்தினால், யோகிகளோ அல்லது ஞானவான்களோ சொல்லியவைகளில் மனதை நிறுத்தி மிகவும் சிரத்தையுடன் கேட்டு அவைகளையெல்லாம் சிந்தித்து, அதை அனுபவத்திற்குக் கொண்டு வந்தால் ஜீவாத்மாவிற்கு, அஞ்ஞானம் நீங்கி அபேத சாக்ஷாத்காரம் (பேதமில்லாத தன்மை) உண்டாய், பரமானந்த சொரூப பிராப்தியை அடையும்: இதற்கு கைவல்யம் பிரமாணம்;

தடைகளே தெனிலஞ் ஞானஞ் சந்தேகம் விபரீ தங்கள்
படர்செயு மிந்த மூன்றும் பலசன்மப் பழக்கத்தாலே
உடனுடன் வரும்வந் தக்கா லுயர்ஞானங் கெடுமிவற்றைத்
திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்தித்த றெளிதலாலே.

இந்த பரமாத்மா தங்கத்தைப் போன்றது, ஜீவாத்மா பொன்னைப் போன்றது. இதன் விவரம், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 2, சு - 16, பார்க்க. ஜீவாத்மாவிற்குப் பரமாத்மா ஸாக்ஷாத்காரம் உண்டாக வேண்டுமென்றால் அதற்கு என்ன செய்யவேண்டுமெனில்,

சுரு||"யதா பஞ்சாவதிஷ்டந்தே ஜ்ஞாநாநி மநஸா ஸஹ
புத்திஶ்ச நவிசேஷ்டத தாமாஹுர் பரமாம் கதிம்."
[கடோபநிஷத்.]

சுரோத்திரங்கள் (காதுகள்) நேத்திரங்கள் (கண்கள்) முதலாகிய ஞானேந்திரியங்கள் ஐந்தையும், மனதையும் ஆத்மாவில் நிறுத்தி, இதர வியாபாரங்க ளில்லாமல் சகல எண்ணங்களும் மறந்து நிச்சலனமாய் தன்மயமா யிருந்தால், ஆத்மாவிற்கு பரமாத்மா சாக்ஷாத்கார முண்டாகும். இப்படி உண்டாவதே மோக்ஷமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

"யத்துசஞ்சலதா ஹீநம் தந்மநோம்ருத முச்சதே
ததேவச தப ஶ்ஶாஸ்த்ர வித்தாந்தே மோக்ஷ உச்யதே."

என்னும் மஹோபநிஷத் வாக்யரீதியாய், மனம் சஞ்சலமில்லாமல் (வெளியில் ஓடாமல்) பரப் பிரம்மத்தில் லயித்து (சேர்ந்து) தன்மயமா யிருப்பதே மோக்ஷமென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

சுரு || "கதம ஆத்மேதி யோயம் விஜ்ஞாமநயஃ ப்ராணேஷு ஹ்ருத்யந்தர்ஜ்ஜோதிஃ புருஷஃ" "ஸவா ஏஷ மஹாநஜ ஆத்மா யோயம் விஞ்ஜாநமயஃ ப்ராணேஷு."

[ப்ருஹதாரண்யோபநிஷத்.]

சகல சரீரங்களின் இருதயத்தில் 'அஹம்' 'அஹம்' ('நான்' 'நான்') என்று ஸ்மரித்துக் கொண்டிருக்கும் கேவல ஞான சொரூபமான வஸ்துவே ஆத்மா வென்று சொல்லப்படும். அதாவது, சகல ஜீவராசிகளின் மூக்கின் வழியாய் ஆடிக்கொண்டிருக்கும் மூச்சானது உள்ளே செல்லும்போது 'ஸோ' என்றும், மறுபடியும் வெளியில் வரும்போது 'ஹம்' என்றும், தனக்குத் தானே ஜபம் செய்துகொண்டே இருக்கும். மேலும்,

சுரு || "கோயமாத்மேதி வயமுபாஸ்மஹே கதரஃ ஸ ஆத்மா யேநவாரூபம் பஶ்யதி, யேநவா ஶப்தம் ஶ்ருணோதி, யேநவா கந்தா நாஜிக்ரதி யேநவா வாசம் வ்யாகரோதி யேநவா ஸ்வாதுசா

ஸ்வாதுச விஜாநாதி ஸர்வாண்யேவைதானி ப்ரஜ்ஞாநஸ்ய நாம தேயாநி பவந்தி.'' [ஐதரேயோபநிஷத்.]

இச்சரீரத்தில் அந்தக்கரண (மனம் புத்தி சித்த அஹங்கார) விருத்தியினால், உச்சரிக்கப்படும் சப்தங்களை சுரோத்திரேந்திரிய (காதின்) வழியாய்க்கேட்டு, விமர்சிக்கும் சக்தியுடைய புத்தியினால், இது இவன் சப்தம் அது அவன் சப்தம் என்று எது அறிகின்றதோ, ஜலத்திலுள்ள உஷ்ணத்தை வேறுபடுத்துவதற்குச் சாத்திய மாகாவிடினும் துவகிந்திரிய (சர்ம)த்தால் பரிசித்து (தொட்டு) புத்தியினால், ஜலத்திலுள்ள உஷ்ணத்தை எது வேறு படுத்துகின்றதோ, சுவரில் எழுதப்பட்ட சித்திரங்களி லுள்ள வர்ணங்களை நீளம் குட்டையா யிருக்கும் ரூபங் களைப் பங்கிடுவதற்குச் சாத்தியப்படாவிடினும் சக்ஷூ ரிந்திரியங்களினால் (கண்களால்) பார்த்து புத்தியினால், அந்த வர்ணங்களை எது அறிகின்றதோ, ஜலத்தில் கலந்த ஆறு ரசங்களை வேறுபடுத்துவதற்குச் சாத்தியமாகா விடினும், ஜிஹ்வேந்திரிய (நாக்கின்) வழியாய் சகல ருசிகளை யும் எது அறிகின்றதோ, வஸ்திரங்களில் வியாபித்த வாசனைகளை வேறுபடுத்த சாத்திய மாகாவிடினும் கிரா ணேந்திரிய (மூக்கின்) வழியாய் ஆக்கிராணித்து (இழுத்து) புத்தியினால் இது சுகந்தம், இது துர்க்கந்தம், இது மிசிர கந்தமென்று எது அறிகின்றதோ, வாக்கிந்திரிய (வாயின்) வழியாய் சகல வார்த்தைகளையும் எது வார்த்தை யாடுகின் றதோ, மேலும், சகல இந்திரியங்களின் வழியாய் எது சகல விஷயங்களையும் அறிகின்றதோ, அதுவே ஞான சொரூபமாகிய ஆத்மாவென்று சொல்லப்படும். இதற்கு உண்மைவிளக்கம் பிரமாணம்;

ஆறு சுவையு மருந்தி யவைதன்னை
வேறொருவன் கூறியிடு மேன்மைபோ லாறாறு

மொன்றென்றாய் நாடியுணர்ந் தோதியதி
லுற்றறிவாய்நின்றபொரு டானேகா ணீ.

அருளுகிற பேச்செல்லாம் யான்தானேயா
அவனியெல்லாம் படைத்ததுவும் யான்தானேயா
இருளுகிற பேச்செல்லாம் யான்தானேயா
ஈசனென்று சொல்லுவதும் யான்தானேயா
வருளுகிற வாயுவெல்லாம் யான்தானேயா
வையகத்தில் நடப்பதெல்லாம் யான்தானேயா
உருளுகிற உற்பனமும் யான்தானேயா
உடையவன்தா னென்றதும் யான்தானுச்சே.

மேலும் ஜாக்கிரத்தில் ஞானேந்திரியம், கர்மேந்திரியம், அந்த ரிந்திரியங்களென்னும் சதுர் தசேந்திரியங்களினால் தான் அனுபவித்த சுக துக்கங்களையும், நித்திரையில் சுகமாய் நித்திரை செய்த விஷயங்களையும் சொல்வது ஒவ்வொருவருக்கும் உலகத்தில் அநுபவமா யிருக்கின்றது. ஆனால், அவஸ்தாத் திரயத்தின் விஷயங்களை, என்றால், ஜாக்கிரதை(விழித்துக்கொண்டிருப்பது) சொப்பன(கினவு காணுதல்) சுழுப்தி (கினவில்லாமல் தூங்குவது) இம்மூன்றையும், சரீரம் ஞாநமில்லாத ஜட பதார்த்தமா யிருப்பதால் அறியமாட்டா. தேகத்தைப் பார்க்கிலும் வேறொரு ஞான சொரூபமான வஸ்து இச்சரீரத்தி லிருந்துகொண்டு சகல விஷயங்களையும் அறிந்து சொல்லுகின்றதென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படிப்பட்ட ஞான சொரூபமாகிய வஸ்துவே ஆத்மாவென்று சொல்லப்படும். அவ்வாத்மா, ஜநந மரணமற்று உற்பத்திநாசம் விருத்தி க்ஷயங்கள் இல்லாமலிருக்கும்; இந்த ஆத்மா, கட்காதி ஆயுதங்களினால் வெட்டப் படாதது, அக்கினியினால் தகிக்கப் படாதது, ஜலத்தினால் நனைக்கப் படாதது, காற்றினால் அலைந்து சலிக்காதது, அணுவுமல்ல, மஹத்துமல்ல, ஆதி மத்ய அந்திய

மில்லாதது. பஞ்சவர்ணங்க ளில்லாதது, சப்த பரிச ரூப ரச கந்த மில்லாதது, ஆகாசாதி பஞ்சபூதங்களல்ல, ஆகாசத்தைப் போல் நிராகாரம், நிர்க்குணம், சர்வ பரிபூரணம், அநாதி, அசலம், பரிசுத்தம், சுயம் பிரகாசம், பரஞ்ஜோதி, சத்திய ஞானனந்த சொரூபமானது. தேகம் எப்படிப்பட்டதென்றால்:—

ஜநந மரணங்களுடையது, உற்பத்திநாசம் விருத்தி க்ஷயங்களோடு கூடினது, கட்காதி ஆயுதங்களினால் வெட்டுப் படுவது, அக்கினியினால் தகிக்கப் படுவது, ஜலத்தினால் நனைக்கப் படுவது, காற்றினால் அலைந்து சலிக்கப் படுவது, ஆகாசாதி பஞ்சபூதங்களினால் உண்டாக்கப் பட்டது, ஆறுவித விகாரங்க ளுடையது,கை கால்களே ஆதாரமாகக் கொண்டது, ஆதி மத்ய அந்த்ய முடையது, சாத்விக, ராஜச, தாமசமென்னும் முக்குணங்க ளுடையது, சப்த தாதுக்கள் மயமானது, அசுத்தமானது, அசத்தியமானது, அஞ்ஞான முடையது, துக்க சொரூபமானது, காரணமாகிய நூலே, காரியமாகிய வஸ்திரமானதுபோல், காரணமான இந்திரியங்களே, காரியமாகிய சரீர ரூபமா யிருக்கின்றது. இவ்வித இந்திரியங்களே சகல காரியங்களையும் செய்கின்றன. நிர்விகாரனும் நிர்க்குணனும் இருக்கும் ஆத்மா எந்தக் காரியங்களையுஞ் செய்வதில்லை. எப்படியென்றால்:—

சுரு ‖ "நநபோ கடயோகோ ஸுராகந்தேந லிப்யதே
ததாத்மோபாதி யோகேந தத்தர்மைர்ந லிப்யதே."

[அத்யாத்மோபநிஷத்.]

கள்குடத்தில் ஆகாசம் வியாபித்திருந்தபோதிலும், அக்குடத்திலுள்ள கள்ளினுடைய துர்க்கந்தம் அந்த ஆகாசத்தைப் பற்றாமலும், அந்த மிடாவின் விகாரங்களை ஆகாசம் (குடத்திலுள்ள வெளி) அடையாமலும் அசங்கனாய்

(அசையாமல்) இருப்பதுபோல், தேகத்தில் ஆத்மா வசித்தபோதிலும்,தேகத்தில் அசங்கனுய்,தேஹேந்திரியங் களினுடைய விகாரங்களும் தோஷங்களும் இல்லாதவனுய், அகர்த்தனுய் என்றால், தான் எந்தக் காரியங்களையும் செய் யாமலும், அபோக்தனுய் என்றால், தான் எதையும் அனு பவிக்காமலும், ஒருவரையும் அனுபவிக்கச் செய்யாமலும், கேவல சாக்ஷி மாத்திரமாய் ஞானனந்த சொரூபனு யிருக் கின்றான். அப்பேர்ப்பட்ட ஆத்மா, மாயா பிராந்தியினல் கட்டுப்பட்டு இதுவே தனது நிஜ சொரூபமென்று தனக் குத் தோன்றுவதே அத்தியாசமென்று சொல்லப்படும் அத்தியாசமென்றால், ஒரு வஸ்துவினுடைய குணங்கள் வேருெரு வஸ்துவில் யிருப்பதுபோல் தோன்றுதல். அவ் வித அத்தியாசத்தினல் தேஹேந்திரியங்களே நானெனவும், தேகத்திற்கு உண்டா யிருக்கும் ஜநந மரணுதி விகாரங்கள் தனக்கு உண்டெனவும், இந்திரியங்களினுடைய சுக துக் கங்கள் தனதெனவும், இந்திரியங்கள் செய்யும் காரியங் களை நான் செய்கின்றேனெனவும் நினைப்பதே அஹங்கார மெனவும் அபிமான மெனவும் சொல்லப்படும்.

சுரு||“க்ருஶோஹம் து:கபந்தோஹம் ஹஸ்தபாதாதிமாநஹம்
இதி பாவாநுரூபேண பத்யதே.” [மஹோபநிஷத்.]

ஆத்மாவாயிருக்கும் தான், அப்பேர்ப்பட்ட அபி மானத்தால், நான் ஜநந மரணமுடையவன், நான் சம்சார துக்கத்தினல் கட்டுப் பட்டிருக்கின்றேன்; நான் கை கால் அவயவங்களை யுடையவன், நான் அநாதிகாலமாய் கர்ம பாச பந்தனு யிருக்கின்றேன் என்று, தானல்லாதவற்றைத் தனதாக நினைத்துக் கொண்டிருக்கின்றான். ஆதலால், தேஹேந்திரியங்களை நானென்று எண்ணும் அபிமானமே பந்தமென்று சொல்லப்படும். அந்த அபிமானத்தை விட் டொழிப்பதே மோக்ஷமென்று சொல்லப்படும். எவ்வா றெனில்:—

"நாஹம் மாம்ஸம் ந சாஸ்தீநி தேஹாதந்ய: பரோஸ்ம்யஹம் இதி நிஸ்சிதவாநந்த: க்ஷீணவித்யோ விமுச்யதே" "நாஹம் து:கீ ந மே தேஹோ பந்த: கோஸ்யாத்மநி ஸ்தித: இதி பாவாநுரூபணே வ்யவஹாரேண முச்யதே." [மஹோபநிஷத்.]

தோல், மாம்ஸம், ரத்தம், நரம்பு, மூளை கொழுப்பு, அஸ்திகள் என்னும் ஸப்த (ஏழு) தாதுக்களின் மயமான சரீரம் 'நா' னல்ல, இந்திரியங்கள் 'நா' னல்ல. நான் இந்த தேஹேந்திரியங்களுக்கு வேறு யிருக்கின்றேன்; சரீரம் துக்க சொரூபமானது; இந்த சரீரத்திற்கு வேறு யிருக்கும் 'நான்' துக்கியல்ல, 'நான்' சதாநந்தன்; எனக்கு தேஹமில்லை; எந்தக் காரியங்களையும் நான் செய்வதில்லை, எதையும் நான் அநுபவிப்பதில்லை, கர்மம் நானல்ல, எனக்குக் கர்மமே இல்லை, நான் சுத்த நிர்க்குணன், நிர்விகாரன், பரப் பிரம்ம சொரூபன். பிரம்ம சொரூபனை எனக்கு பந்தமேது? நான் நித்யமுக்தன் என்று அறிவதே மோக்ஷமென்று சொல்லப்படும்.

"த்வேபதே பந்தமோக்ஷாய நிர்மமேதி மமேதி ச
மமேதி ப்த்யதே ஜந்துர் நிர்மமேதி விமுச்யதே." [மஹோ]

தேஹேந்திரியங்களே 'நான்' என்றும், இந்திரியங்கள் செய்யும் காரியங்களை 'நான் செய்கின்றே' னென்றும் நினைப்பதே அஹங்கார மெனப்படும். இந்த சரீரம் என்னுடையது. இந்த பார்யாள் புத்திரர்கள் தனம் கிருஹம்பூமி இவைக ளெல்லாம் என்னுடையதென்று எண்ணுவதே மமகார மெனப்படும்; அப்பேர்ப்பட்ட அஹங்கார மமகாரங்கள் ஆத்மாவிற் குண்டாயிருப்பதே பந்தமென்றும், அவைகளில்லாமற் போவதே மோக்ஷமென்றும் சொல்லப்படும்.

"யா ததபிமாநம் காரயதி ஸா ஹ்யவித்யா
ஸோபிமாநோ யயா நிவர்த்ததே ஸா வித்யா."

தேஹேந்திரியங்களே 'நான்' என்னும் அபிமானம் ஆத்மாவிற்கு எதனுல் உண்டாகின்றதோ, அதுவே அஞ்ஞானமெனவும் அவித்தையெனவும் சொல்லப்படும். அவ்வகைப்பட்ட அபிமானம் எந்த ஞானத்தினுல் நிவர்த்திக்கப் படுகின்றதோ, அந்த ஞானமே வித்தை எனப்படும்.

"ப்ரஹ்மைவாத்மா ஜ்ஞேயஃ ப்ரஹ்மஜ்ஞாநம் ஸமூலாநாத்ம நிவர்த்தகம் ஸத்ப்ரஹ்மணி விலீயதே," "அயமாத்மா ப்ரஹ்ம."
[ப்ருஹதாரண்யோபநிஷத்.]

ஆத்மாவே சத்ரூபமாகிய பரப் பிரம்மமென்று சொல்லப்படும். எப்படியென்ருல்:—

"அததி தத்வஸ்து ரூபேண வ்யாப்நோதீதி ஆத்மா"
"அத ஸாதத்ய கமநே இதி தாதுஃ"

எது சகல வஸ்துக்களிலும் வியாபித்து தனக்கு அந்நியமாய் இல்லாததாய், சர்வம் தாஞ யிருக்கின்றதோ அதுவே ஆத்மாவென்று சொல்லப்படும். இதன்றியும்,

'ப்ருஹிர் ப்ரஹ்ம வ்ருத்தௌ ப்ருஹதேர் தாதோஃ அர்தாநுகமாத் தேஶதஃ காலதஃ வஸ்துதஃ அபரிச்சிந்நம் யத்வஸ்து தத் ப்ரஹ்மேதி பாஷ்யம்."

ஒரு தேசத்தி லிருக்கின்றதும், ஒரு தேசத்தி லில்லாததும், ஒரு காலத்தி லிருக்கின்றதும், மற்ருெரு காலத்தில் இல்லையென்று சொல்லப்படாமல், எது சர்வகால சர்வ வஸ்துக்களினிடத்தும் பரிபூரணமாய் வியாபித்து தனக்கு இரண்டாவது இல்லாததாய் ஸர்வமும் தாஞயிருக்கின்றதோ, அதுவே பிரம்மமென்று சொல்லப்படும். பிரம்மம் ஆத்மா என்னும் சப்தங்கள் மாத்திரம் பேதமா யிருக்கின்றனவே யொழிய, இவ்விரண்டு சப்தங்களின் அர்த்தமும் ஒரு வஸ்துவையே குறிப்பிக்கின்றது; ஆதலால், பிரம்மமே ஆத்மா என்று சொல்லப்படும். அப்பேர்ப்பட்ட பிரம்ம

மாகிய ஆத்மா ஒன்றே, மாயா உபாதிகளினால் ஜீவாத்மா வென்றும் பரமாத்மா வென்றும் இரண்டு விதங்களாய்ச் சொல்லப் பட்டிருக்கின்றது. உபாதியை நீக்கிப் பார்த்த போது பரமாத்மா ஜீவாத்மா என்னும் பேதமே இல்லை. சர்வம் ஏகாத்ம சொரூபமாகவே இருக்கின்றது. ஆத லால், ஜீவாத்மாவே பரப் பிரம்மமென்றும், பரப் பிரம் மமே ஜீவாத்மா வென்றும் சொல்லப்படும். அப்பேர்ப் பட்ட பரப் பிரம்மமாகிய ஜீவாத்மாவைத் தவிர இதர வஸ் துக்கள் எல்லாம் அநாத்மாவென்று சொல்லப்படும்; அநாத்மாவாகிய வஸ்துக்களெல்லாம் பரப் பிரம்மமாகிய ஆத்மாவில் உற்பத்தியாய் அதாவது, அலைகளில்லாத சமுத்திரத்தில் காற்றினால் அலைகள் உண்டாய் அதிலிருந்து நுரைகள், குமிழிகள், திவலைகள் பிறந்து பிறந்து மறு படியும் நுரைகள், குமிழிகள், திவலைகள் யாவும் அந்த அலையில் அடங்கி, அலை சமுத்திரத்தில் ஐக்கியமாய்விடும். பிறகு, சமுத்திர ஜலம் மேகங்களால் இழுக்கப்பட்டு கங்கா யமுனா ஸரஸ்வதி ஸிந்து காவேரி முதலாகிய நதிகளில் மழையாய்ப் பெய்து, முன் சொல்லிய பெயர்களுடன் பிர வாஹமாய் ஓடி, மறுபடியும் சமுத்திரத்தில் போய்ச் சேரு கின்றது. அதுபோல், பரமாத்மாவிலிருந்து மாயையுடன், ஜீவாத்மாக்கள் பிறந்து, மாயையிலிருந்து விடுபட்டு மறு படியும் பரமாத்மாவில் போய்ச் சேர்ந்து ஐக்கியமாய் விடு வார்கள். அப்படி ஐக்கியமாய் விடுவதே மோக்ஷம்: பரப் பிரம்மமாகிய ஆத்மா நாசமில்லாதது, சத்தியமானது. அநாத்ம வஸ்துக்கள் யாவும், அசத்தியமாய் நசிக்கப் படுவது. ஆதலால்,

காற்றில் வைத்த தீபத்தைப்போல் இச்சரீரத்திற்கு உண்டாயிருக்கும் சம்பத்து, இந்திரஜாலம் போன்றது; புத் திர மித்திர களத்திர பௌத்திர சமூகம் (கூட்டம்) சொப்

பநத்தில் காணும் வியாபாரமா யிருக்கின்றது; ராச்சிய பரிபாலனம் தோல்பொம்மை நாடகமா யிருக்கின்றது.

சுரு || "அநாத்மாது ஸ ஜீவோ வியதாதி ப்ரபஞ்சஃ அநாத்ம மூலம் மாயா" "தேஹேந்த்ரிய ப்ராண மநோஹமாத்யஸ் ஸர்வே விகாரா விஷயா ஸ்ஸுகாதயஃ வ்யோமாதி பூதாந்யகிலஞ்ச விஶ்வ மவ்யக்த பர்யந்த மிதம் ஹ்யநாத்மா."

தேஹம், தசேந்திரியங்கள், பஞ்ச பிராணன்கள், அந்தக்கரண பிரதி பிம்பமாகிய சிதாபாச ஜீவன், மனோ புத்தி சித்த அஹங்காரங்கள், சப்தாதி விஷயங்கள், ஆகாசாதி பஞ்ச பூதங்கள், பஞ்சபூத மயமாகிய பிரபஞ்சம் இவைகளெல்லாம் அநாத்மா எனப்படும்.

சுலோ||"மாயா மாயாகார்யம் ஸர்வம் மஹதாதி தேஹபர்யந்தம்
அஸ்தித மநாத்மகம் த்வம் வித்தி மருமரீசிகா கல்பம்."

அநாத்மாவாகிய மஹத் தத்வம் முதல், அணு தேகம் வரையில் சகல தத்வங்களும், தேஹேந்திரியாதி ஜகத் சர்வம் மாயையினால் உண்டாயிற்று. இம்மாயையினால் உண்டாகிய தேஹேந்திரியாதி பிரபஞ்சம் சர்வம், வஸந்த ருதுவில் நிர்ஜல சவட்டுப் பூமிகளில் சூரிய கிரண வெப்பத்தினால் காணப்படும் கானல் நீரை, ஜலப் பிரவாஹம் போகின்றதென்று எண்ணி அந்த ஜலத்தைக் குடிக்க வேண்டுமென்று தாகமுடைய மிருகங்கள் அதைநாடி ஓடுகின்றன. அங்ஙனம் எவ்வளவோ தூரம் ஓடோடியும், எதிரில் கல்பனா ஜலம் காணப் படுகின்றதே யொழிய சத்தியமான ஜலமில்லை. அப்படிக் கண்களுக்குத் தோன்றினும், ஜலமில்லை யென்னும் நிச்சயம், புத்திக்குத் தோன்றும் வரையில் அந்த ஜலமில்லாமற் போகாது. அதுபோல், மோக்ஷத்தை அடைவதற்கு வழிதெரியாமல் கண்களுக்குத் தோன்றும் (அழிந்து போகத்தக்க) இல்லாத

வஸ்துக்களை நிஜமென்று நிச்சயித்திருப்பதனால், மனிதர்கள், சுழல் சுற்றித் திரிவதுபோல் அனேக ஜன்மங்களையெடுக்கின்றார்கள். அகண்ட பரிபூரணமாகிய ஆத்மாவில் இந்த சமஸ்த பிரபஞ்சங்களும் தோன்றுகின்றன. இந்த சமஸ்த பிரபஞ்சத்தையும் நிஜமென்று எண்ணிய மனிதர்கள் எதிரில் காணப்படும் வஸ்துக்களில் புத்தியை நிறுத்துவதே யொழிய வேறொன்றில்லை. எப்படி என்றால், கர்மகாண்டத்தைப் பார்த்தபோது கர்மங்களைச் செய்ய வேண்டும் என்னும் எண்ணமுடையவர்களாய் கர்மங்களைச் செய்துகொண்டு, இஹபர லோகங்களுக்கு வண்டியின் சக்கரம்போலத் திரிந்துகொண்டு முத்தியடைய சக்தியற்றவர்களாய் இருந்து, எப்படியோ ஒரு ஜன்மத்தில் ஞான காண்டத்தைப் பார்த்து, நிஜமாகிய ஸத்தையறிந்த மஹாநுபாவர்களுக்கு மாத்திரம் மோக்ஷம் சித்திக்கும்.

சுரு|| "ஸா ச ஆகாஶே மேகாதிரிவ த்ருஶ்யதே மாயாநாம அநாதி ரந்தவதீ ப்ரமாண ப்ரமாண ஸாதாரண ந ஸதீ நாஸதீ ஸத ஸத் அநிர்வாச்யா திஷ்டாந ஏவாவித்யமாநாம் தர்வாணி விகல்ப நீருப்யமாணேச்யாவச வ்யவஹார பேதவதீ யா நவித்யதே வஸ்துத: ஸ்ஸா மாயா தத் ஸ்வரூப மஜ்ஞாநம் ததேவ மூலப்ரக்ருதி குணஸாம்யா அவித்யேத்யா த்யநேகாகாரா ஜகதாகாரேண பரிணதா ஸததேவம் ப்ரஹ்மவிஜ்ஞாநா த்யநுபவதிச."

ரூபமில்லாத ஆகாசம், அனேக யோஜனை தூரம் போய்க் கொண்டிருப்பதனால், அந்த ஆகாசம் நேத்திரங்களுக்கு நீலம்போல் காணப்படுகின்றதேயொழிய அங்கு நீலவர்ண மில்லை; அதுபோல் சுத்தநிர்குண நிராகார பரிபூரண பரப் பிரம்மத்தில் மாயை தனக்குத் தானாகவே தோன்றும். அந்த மாயை அநாதியானது, நசித்துப் போகத்தக்கது, பிரமாண அப்பிரமாணங்களுக்குச் சாதாரணமானது. அது சத்தல்ல, அசத்தல்ல, சதசத்து

ரூபமல்ல, அநிர்வாச்சியமானது. அதாவது, இப்பேர்ப் பட்டது அப்பேர்ப்பட்டது என்று அதன் லக்ஷணத்தை அறிந்துச் சொல்வதற்குச் சாத்தியமாகாதது. சுத்த நிர்க்குண பரப் பிரம்மத்தில் தோன்றிய மாயை, பரப் பிரம்மத்தை மூடிக்கொண்டே, நாநாவித நாமரூபங்களை யுடைய ஜீவேசுவராதி பேதங்களாய் வியவகார தசை யில் தோன்றச் செய்கின்றது. யதார்த்தமாய் விசாரிக்கு மளவில் (யா-மா, ஸா-மாயா) என்பதுபோல் கால த்ரயங் களிலும் எது இல்லாமற் போகுமோ அதுவே மாயை என்று சொல்லப்படும். எது பிரதிபலித்து, வஸ்துவா யில்லாமல் ரஜ்ஜு சர்ப்பம், (கயற்றைப் பார்த்து பாம் பென்று பிரமை அடைவது.) கந்தர்வ நகரம், (ஆகாயத் தில் நகரம்போல் தோற்றுவது.) மலடியின் புத்திரன், தாணுபுருஷன், (இருளில் நின்றிருக்கும் மரத்துண்டைப் பார்த்து புருஷனென்று பயமடைவது.) சுத்தியில் ரஜிதம். (கிளிஞ்சலைப் பார்த்து வெள்ளியென்று பிரமையடைவது.) கானல்நீர் இவைகளைப்போல், எது கல்பிதமாய் பிராந்தி ரூபமாய் மித்தையாய் அசத்தா யிருக்கின்றதோ அதுவே மாயை என்று சொல்லப்படும். அந்த மாயை அஞ் ஞான சொரூபமா யிருக்கின்றது. அந்த மாயையே மூலப் பிரக்ருதி என்று சொல்லப்படும். அதுவே, சத்வ ரஜஸ் தமோ குணங்களை யுடையதாய், மாயை அவித்தை ஆவ ரணம், என மூன்று ரூபங்களா யிருக்கின்றது. அம்மாயை சத்வகுண ப்ரதானமானபோது மாயா சக்தியென்றும், ரஜோகுண பிரதானமானபோது அவித்யா சக்தியென் றும், தமோகுண பிரதானமானபோது அஹங்காரமென் றும், ஆவரண விக்ஷேப சக்தி என்றும் சொல்லப்படும். அந்த மாயையே சங்கல்ப விகல்பமா யிருக்கின்றது. பால் ஒன்றே நாநாவித ரூபங்களுடன், தயிர் மோர் வெண்ணை

நெய் முதலானவைகள் பாலிலிருந்து உண்டாவதுபோல், ஒரு மாயையே, நாநாவித நாம ரூபங்களுடன் சராசர ஜகத்து ரூபமாய்த் தோன்றுகின்றது. இப்படி மாயையினுடைய மித்தியா லக்ஷணமும், பிரம்மத்தின் ஸச்சிதாநந்த லக்ஷணமும் தெரிந்து துக்க சொரூபமான மாயையை நாசமாக்கி ஸச்சிதானந்த லக்ஷணமுடைய பிரம்மமே சத்தியமென்றும் அப்பேர்ப்பட்ட பிரம்மமே ஆத்மாவென்றுந் தெரிந்து, சதா ஆத்மாநு ஸந்தானம் செய்துகொண்டிருப்பதே பிரம்மஞ்ஞான மென்றும், பிரம்மநிஷ்டையென்றும் சொல்லப்படும். அப்படிப்பட்ட ஆத்மாநு ஸந்தானம் செய்பவனே, பிரம்மஞ்ஞானி யென்றும் பிரம்மவேத்தனென்றும் சொல்லப்படுவான்.

சரசாஸ்த்திரம்.

"வெள்ளி புதனொடு திங்க ளிடமெனத்
 * தள்ளுமின் கால சரம்."

"செவ்வாய் சனிஞாயிறு வலமாகவே கொள்ளி
 லிவ் வாறிடரு மில்.

"வளர்பொன் னிடம் பிறைத் தேய்வு வலமாம்
 வளர்பிரை யென்றே மதி."

"வலத்திற் சனிக்கே யிராப்பகல் வாயு
 செலுத்து போராது செயல்." [ஔவைக்குறள்.]

"மாறிவளர் பக்கமதிற் குறையும் பக்க
 மதிநாடி கதிர்நாடி வளர்பொன் னேடிப்
பேறுமிக வுண்டாகும் பிராண னிற்கும்
 பின்புறைத்த காரியங்க ளெல்லா மேலாம்

---

* தள்ளுமின் கால சரம்=காலை 4-மணி முதல் 6-மணி வரையில் நடத்தவேண்டிய சுவாசம்; முன்காலமென்பது காலை 4-மணி முதல் 6-மணி வரையில் முன்காலம்.

கூறுகின்ற சனிநாளிற் பகலி ராவிற்
குலவுசரம் வலமிடத்தே கோணு தோடில்
நாறுமலர்ப் பெருந்திருவே சொன்னே மிந்த
ஞாலமெங்கும் புகழ்பெறவே நடக்கு மென்றே.''

வெள்ளி புதன் திங்கள்—சந்திரநாடி. (இடது நாசி)
செவ்வாய் சனி ஞாயிறு—சூரியநாடி. (வலது நாசி)
வளர்ப்பிறை பொன் (வியாழம்)—சந்திரநாடி. (இடதுநாசி)
தேய்ப்பிறை பொன் (வியாழம்)—சூரியநாடி. (வலது நாசி)
சனிக்கிழமை இராப்பகல்—சூரியநாடி. (வலது நாசி)

காலை 4-மணி முதல் 6-மணி வரையில் மேற்சொல்லிய வாரங்களில் இடது, வலது நாசிகளில் சுவாசத்தை நிறுத்தி அப்பியாசம் செய்துவந்தால், மோக்ஷவீட்டுச் செல்வம் குறையடமாட்டா. சுவாசத்தை சூரிய நாடியில் நிறுத்தி எந்த காரியங்களைச் செய்தபோதிலும் எல்லாம் கைக்கூடும். அதை இதனடியில் சொல்லுகின்றோம். கவனமாய் வாசித்து அதுபோல் அப்பியாசம் செய்துவந்தால் சகல காரியமும் சித்திபெறலாம்.

சுவாசத்தை நாசிகளில் மாற்றும் விதம்.

சூரிய நாடி, சந்திர நாடி, சுழுமுனை நாடி
என நாடிகள் மூன்று.

சுவாசத்திற்கு உண்மைப்பெயர் "ஹம்ஸ" என்று சொல்லப்படும். இது வலது இடது நாசிகளில், ரேசக பூரகமாய் நடந்துகொண்டிருக்கும். இதற்கு சூரியநாடி, சந்திரநாடி என்றும், சிவன் சத்தி என்றும், இடை பிங்கலை என்றும் சொல்லப்படும். வலது நாசியிலிருந்துவரும் சுவாசம், (மூச்சு) சூரியநாடி. சிவன், பிங்கலைநாடி யென்றும் சொல்லப்படும்: இடது நாசியிலிருந்து வரும் சுவாஸம்,



ஸ்வாஸத்தைமாற்றும் விதம்.

హంసను మార్చు విధము.

Changing the course of the breath.

சந்திரநாடி, சத்தி, இடாநாடி யென்றும் சொல்லப்படும். சுழுமுனை நாடி யென்றால் மூலாதாரம் (குதஸ்தானம்) முதல் மஸ்த்தகம் (பிரம்ம கபாலம்) வரையில் திரிந்துகொண்டிருக்கும் நாடி. இதை மாற்றுவதற்கு, மேற்சொல்லியது போல், அதிகாலை 4-மணிக்கு முன்பே எழுந்திருந்து, இடது நாசியிலிருக்கும் சுவாசத்தை வலது நாசியில் மாற்ற வேண்டுமானால், ☞ எதிரிலிருக்கும் படத்தில் காட்டியது போல் இடதுகாலின்பேரில் வலதுகாலைச் சமமாய் வைத்துக் கொண்டு இடது கையைப் பூமியில் ஊன்றி வலதுகால் பெருவிரலின் பெரு நரம்பைக் கணுக்காலிடம் வலதுகை நடுவிரலால் அசைத்துக் காட்டி யிருப்பதுபோல் அசைத்துக் கொண்டே யிருந்தால், சூரிய நாடியில், அதாவது வலது நாசியில் மாறிவிடும். வலது நாசியிலிருக்கும் சுவாசத்தை இடது நாசியில் மாற்றவேண்டுமானால், மேற் சொல்லியது போல் வலது காலின்மேல் இடதுகாலைச் சமமாய் வைத்துக்கொண்டு, வலது கையைப் பூமியில் ஊன்றி, இடதுகை நடுவிரலால், இடதுகால் பெருவிரல் பெரு நரம்பை கணுக்காலிடம் முன் அசைத்ததுபோல் அசைத்துக்கொண்டே யிருந்தால், சந்திரநாடியில் அதாவது, இடது நாசியில் மாறும். இவ்விரண்டும் மாறுமிடம் புருவமத்திய (நெற்றி) ஸ்தானத்தில், தாமரைக் கோடியிலுள்ள நூலைப்போன்ற மிகவும் சிறிய ரந்திரம் உண்டு. அதுதான் திருவேணி சங்கமம் (கூடுதல்) என்று சொல்லப்படும். என்றால், இடை (சந்திரநாடி) பிங்கலை (சூரியநாடி) சுழுமுனை நாடிகள் மூன்றும் கலக்குமிடமாதலால் திரிவேணி ஸங்கமமென்று சொல்லப்படும். அவ்விடந்தான் ஸச்சிதாநந்தம் (உண்மை) அறிவு ஆனந்தம் இருக்குமிடம்.

சுலோ||"த்வநேரந்தர்கதம் ஜ்யோதிः ர்ஜோதிரந்தர்கதம் மநः
தந்மநோ விலயம்யாப்திः தத்விஷ்ணோ பரமம் பதம்."

பிராண மநோ புத்திகளையே, நாதபிந்து கலை என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இதற்குப் பிரமாணம்;

சுலோ||"ப்ராணஏவ ஸதாநாதஃ மநோபிந்து ஸ்ததைவச
களாது புத்தி ரித்யுக்தம் ஏவம் த்யாயேத் ஸதாயதிஃ."

நாத, பிந்து, கலைகளுக்கு ஆதாரம் திரிகூட ஸ்தானம். திரிகூட மென்றால், மூன்று மார்க்கங்கள் சேர்ந்தது; இதையே ஸ்ருங்காடகமென்று சொல்லுவார்கள். இந்த ஸ்ருங்காடகமே காசி, இதுவே புருவமத்ய ஸ்தானம். "ப்ருவோர் மத்யே வாரணஸீ தத்ரைவ பரஞ் ஜ்யோதிர் விராஜதே." இடை, பிங்கலை, சுழுமுனை அல்லது ஸச்சிதாநந்தம்; இந்த "ஸச்சிதாநந்தமே நீ" என்று சாந்தோக்யோபநிஷத்தில் அருணன் (சூர்யன்) சுவேத கேதுவிற்கு ஒன்பது முறை உபதேசித்தார். மேலும், உட்கார்ந்து யோக தண்டமாகிலும் அல்லது தனக்குத் தகுந்த உயரமுள்ள மணையையாகிலும், வலது அக்குளில் வைத்துக் கொண்டு அக்குளின் நரம்பு ஊன்றும்படிக்கு அழுத்தினால் சில நிமிஷங்களில் வலது நாசியிலிருக்கும் சுவாஸம், இடது நாசியில் மாறும். அன்றியும், அக்குளுக்கும் முழங்கைக்கும் மத்தியிலும் வைத்து நரம்பை ஊன்றினாலும் மாறும். சுவாசம் எப்பொழுதும் சூரிய நாடியிலிருப்பதற்காகவே யோகிகள் எப்பொழுதும் யோகதண்டத்தைத் தமது இடது அக்குளில் வைத்துக்கொண்டிருக்கின்றனர்கள். சுவாசத்திற்கு வாசியென்றும் பெயர். இந்த வாசியை மாற்றுவதனால், அந்த யோகதண்டத்திற்கு வாசிக்கோல் என்றும் பெயர் வந்தது. சாதாரணமாய் உட்கார்ந்தபோது, சந்திர நாடியிலிருக்கும் சுவாசத்தை சூரிய நாடியில் மாற்ற வேண்டுமானால், இடது கையைப் பூமியிலூன்றி இடது முதுகை மாத்திரம் சுவரிற் சார்ந்துகொண்டிருந்தால் சந்திரநாடியிலிருக்கும் சுவாஸம் சூரிய நாடியில் மாறும்.

சூரியநாடியிலிருக்கும் சுவாஸத்தை சந்திரநாடியில் மாற்ற வேண்டுமானல், வலது கையைப் பூமியிலூன்றி, வலது முதுகை மாத்திரம் சுவரில் சார்ந்துகொண் டிருந்தால் சுவாசம் சந்திரநாடியில் மாறும். படுக்கையில், சூரியநாடி யிலிருக்கும் சுவாஸத்தை சந்திரநாடியில் மாற்றவேண்டு மானல், வலதுபுறமாய் ஒஞ்சரித்துப் படுத்து, வலது கையைத் தலையின்கீழ் வைத்துக்கொண்டிருந்தால், சுவாசம் சூரியநாடியிலிருந்து சந்திரநாடியில் மாறும். சந் திர நாடியிலிருக்கும் சுவாசத்தை சூரியநாடியில் மாற்ற வேண்டுமானல், இடது பக்கம் ஒஞ்சரித்துப் படுத்து இடது கையைத் தலையின்கீழ் வைத்துக்கொண் டிருந் தால் சுவாசம், சந்திரநாடியிலிருந்து சூரிய நாடியில் மாறும். நடக்கும்போது குடையையாகிலும் அல்லது துண்டு வஸ்திரத்தையாகிலும் பந்தாகச் சுற்றி இடது அக் குளில் வைத்துக்கொண்டு சென்றல் சுவாசமானது சூரிய நாடியிலேயே இருக்கும். சந்திரநாடியி லிருக்கவேண்டு மென்றல், மேற்சொல்லியதுபோல் வலது அக்குளில் வைக்கவேண்டும். இந்த மஹா ரகசியமான விஷயங்களை, முன் சொல்லியதுபோல் சிலதுகாலம் அப்பியாசம் செய்து வந்தால், நிமிஷத்திற்கு இரண்டு மூன்று முறையும் சுவா சத்தை, அந்தந்த நாசிகளில் மாற்றலாம். பிரதி தினமும் தவருமல் காலை 4-மணிமுதல் 6-மணிவரையில், சுவாசம்மாற் றிக்கொண்டிருக்கவேண்டும். இதை அப்பியசிப்பவர்கள், எந்த ஆபத்துகளுமில்லாமல் எப்போதும் மனோ உல்லா சமா யிருப்பார்கள். சுவாசம் சூரியநாடியில் வைத்துக் கொண்டுசென்றல் சகல காரியங்களும் சித்தியுண்டாகும். யோகிகளானவர்கள் சற்றேனும் இடைவிடாமல் யோகாப் பியாசத்தைச் செய்துகொண்டு இரவும் பகலும் "சுவா சத்தை" சூரிய நாடியிலேயே வைத்துக்கொண்டிருப்பதால்

அவர்களுக்குச் சில காலத்தில் யோகம் சித்திக்கும். இந்த "சுவாசமே" சர்வ ஜீவஜந்துக்களின், தேகமத்தியில் பிராணவாயுவா யிருந்து ரேசக, பூரகமாய், (உசுவாச நிசுவாசங்களாய்) ஊர்த்துவ முகமாய் (தலை கீழாய்) நாபியிலிருந்து புறப்பட்டு மூக்கின் ரந்திரங்களின் வழியாய் மேலுக்கும் கீழுக்குமாய் ஆடிக்கொண்டிருக்கும். அபான வாயு, பூரகரூபமாய் அதோ முகமாய் (கீழ்ப்புறமாய்)த் திரிந்துகொண்டிருக்கும். இவ்விரண்டிற்கும் மத்தியிலிருக்கும் ஆத்மாவே "ஹம்ஸ" என்று சொல்லப்படும். இந்த ஹம்சத்தை பிரதிமாதம் அமாவாஸ்யை பிரதமை த்விதியை இந்நாட்களில் இரவும் பகலும் சூரிய நாடியில் செலுத்தினால்,அம்மாதமெல்லாம் நன்மையைத் தரும். பிரதி வருஷம் சித்திரைமாதம் அமாவாஸ்யை பிரதமை த்விதியை இம்மூன்று நாட்களிலும் மேற்சொல்லியதுபோல் சுவாசத்தை சூரியநாடியில் செலுத்தினால் அவ்வருஷ முழுமையும் சுகத்தைத் தரும். இவைகள் அனுபவத்தில் காணலாம்.

இதை அடியேனுக்கு உபதேசித்த குருவானவர் என்ன சொல்லி யிருக்கின்றாரென்றால், நீ இந்த மஹா ரகசியத்தை எவர்களுக்கும் உபதேசிக்கலாகாது. அப்படி உபதேசிப்பாயாகில் நீ காசியில் காராம்பசுவைக் கொன்ற பாபத்தில் போகக்கடவாய் என்று சாபமளித்திருக்கிறார். அடியேன் ஒருவன் பாபத்தை அனுபவித்து உலகத்திலுள்ள ஜனங்களெல்லோரும் சுகம் அனுபவித்தால் போதுமானதென்று எண்ணி, இந்த மஹா ரகசியத்தை உங்களுக்குப் புத்தக மூலமாய் இங்கு உபதேசித்திருக்கின்றோமென்று அறிவீர்களாக.

ஜீரணசக்தி, ஆயுர்விருத்தி.

ஐயா! நீங்கள் இரவிலாகிலும் பகலிலாகிலும் சாப்பிட்டுப் படுக்கும்போதாகிலும், அல்லது சும்மாய்ப் படுக்கும்போதாகிலும் இடதுகைப் புறமாய் ஒஞ்சரித்துப் படுக்கவேண்டும். ஏனென்றால், நமது தீனிப்பை வயற்றின் இடதுகைப் புறமாய் இருப்பதால், இடது பக்கம் ஒஞ்சரித்துப் படுக்கவேண்டும். அவ்வாறு படுப்பதனால் சாப்பிட்ட ஆஹாரமெல்லாம் சரியாய் ஜீர்ணமாய் வயிற்றிற்கு யாதொரு சங்கடமில்லாமல் இருப்பதுமேயன்றி சுவாசம் வலது நாசியில் ஓடிக்கொண்டிருக்கும். அதனால் ஆயுர் விருத்தியாகும். இதற்குக் காரணம் யாதெனில், வலது நாசியில் வரும் சுவாசம் (மூச்சு) 8-அங்குலமும், இடது நாசியில் வரும் சுவாசம் (மூச்சு) 12-அங்குலமும் வெளியில் வரும் வலது நாசியில் 8-அங்குல சுவாசம் வெளிவருவதனால் ஒவ்வொரு சுவாசத்திலும் 4-அங்குல சுவாசம் கூடிவருகின்றன. அதனால் ஆயுர் விருத்தியாகும். இடது புறமாய் ஒஞ்சரித்துப் படுப்பதனால் ஜீர்ணசக்தியும் ஆயுர் விருத்தியும் உண்டாகும். போஜனமுண்டு வலது கைப்புறமாய் ஒஞ்சரித்துப் படுத்தால், இடது கைப்புறமாயிருக்கும் தீனிப்பை வலது கைப்புறமாய்ப் புரளும். அப்படிப் புரளுவதனால் சாப்பிட்ட ஆஹாரம் சரியாய் ஜீர்ணமாகாமல் கெடுதியை உண்டாக்கும். அன்றியும் சுவாசம் 12-அங்குல நீளம் இடது நாசியில் ஓடும். அதனால் ஆயுர் க்ஷீணமாகும். போஜனமுண்டு வலது கைப்புறமாய்ப் படுத்தால் இவ்விரண்டுவித நஷ்டமுண்டாகும். ஆதலால், நீங்கள் சாப்பிட்டுப் படுக்கும்போது இடதுகைப் புறமாய்ப் படுத்தால் ஜீரணசக்தியும் ஆயுர் விர்த்தியும் உண்டாகுமென்று இதனால் அறிந்து நீங்கள் எல்லோரும் இரவிலாகி

லும் பகலிலாகிலும் போஜனமுண்டு படுத்தாலும் அல்லது சும்மாய்ப் படுத்தாலும் இடது கைப்புறமாய் ஒஞ்சரித்துப் படுக்கவேண்டும். இது, ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களும் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயமென்று அறியக் கடவீர்களாக.

பற்பொடியினுல் உண்டாகும் குணம்.

ஓ சஹோதரிகளே! ஓ சஹோதரர்களே! பல்லில் ஈர் கட்டுவதும், ரத்தம் உண்டாவதும், வாயில் நீர் சுரப்பதும், வாய் நாற்றம் உடையவர்களுமான அநேக ஸ்திரீ புருஷர்கள் பிரபஞ்சத்தில் உண்டு. அப்படிப் பட்டவர்களுக்கும், நல்ல பற்களை யுடையவர்களுக்கும் பல் ஆடாமல் பல்லின் வேர் கெட்டிப் படும்படியாகவும், காலையில் பல் தேய்ப்ப தற்காக கடைத் தினுசுகளிலுள்ள சில சாமான்களைச் சேர்த்துத் தாமாகவே பற்பொடி செய்து பல் தேய்ப்ப தற்காக இதனடியில் சொல்லப்போகின்றோம். அவ்வாறு செய்து வருவீர்களாகில், பல்லில் ரத்தம் வருதல், வாயில் ஜலம் சுரக்குதல் வாய் நாற்றமுண்டாகுதல் முதலானவைகள் உண்டாகமாட்டா. இவ்வாறு செய்ய உங்களால் சாத்திய மாகாவிட்டால், அடியில் கண்டிருக்கும் விலாசத்திற்கு எழுதிப் பெற்று ஒருநாளும் தவறுமல் பல் தேய்த்து வரவேண்டும். முசாபுரி (Circuit) அல்லது யாத்திரை சென்றால் தங்களுடன் கூடவே பற்பொடி எடுத்துக் கொண்டு செல்லவேண்டும். பல் தேய்க்கும்போது வெந்நீரால் வாய்கொப்பளித்துப் பற்பொடியினுல் பல்தேய்த்து, வெந்நீரால் வாய் அலம்பினுல் மிகவும் நன்மை. இனி கடைத்தினுசுகளின சாமான்களைச் சேர்க்கவேண்டிய விபரங்களை இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

மூன்று ரூபாய் எடை கொண்டது ஒரு பலம்.

படிகாரம்	பலம்	15
செத்தையில்லாமல் ஆய்ந்த மிளகு	,,	5
உப்பு	,,	5
பளிங்கு சாம்பிராணி	,,	5
பெப்பர்மிட் ஆயல்	அவுன்சு	1½

ஒரு பெரிய அகலச் சட்டியை அடுப்பின்மீதுவைத்து, 15-பலம் படிகாரத்தை மேற்படி சட்டியில் போட்டு எரியவிடவேண்டும். அப்போது அது உருகி (கரைந்து) அதிலுள்ள ஜலமெல்லாம் வற்றிப் பொரிந்து வெண்மையாகும். பொரிந்து வெண்மையான பிறகு தோசையைப் போல் அதை மறுபடியும் திருப்பிப் போடவேண்டும். அப்போது அதிலிருக்கும் நீரெல்லாம் வற்றிப்போகும். இது நீர்வற்ற ஏறக்குறைய இரண்டுமணிநேரம் செல்லும். பிறகு, பளிங்கு சாம்பிராணி, மிளகு, உப்பு, பொரிந்த படிகாரம் முதலானவைகளைச் சேர்த்து இடித்து நன்றாய்த் தூள்செய்து, அத்தூளை வஸ்திரகாயம் செய்து முடிந்தபின் அதில் மேற்சொல்லிய ஒண்ணரை அவுன்சு பெப்பர்மிட்டு ஆயல் கலந்து, காற்றுப்போகாத மேல்மூடியுடைய ஒரு புட்டியில் அல்லது ஜாடியில் போட்டு வைத்துக்கொண்டு அதிலிருந்து,ஒரு வாரத்திற்கு வேண்டிய பொடி மற்றொரு சிறியடப்பியில் போட்டுவைத்து,அதிலிருந்து கொஞ்சமாய் மேற்படி தூள் எடுத்துக்கொண்டு வெந்நீரால் வாய்கொப்பளித்துவிட்டு பல் பொடியால் பல்தேய்த்து வெந்நீரால் வாய்க்கழுவவேண்டும். இவ்வாறு செய்து வருவீர்களாகில் உங்கள் பற்கள் கெட்டியா யிருப்பதுமேயன்றி, பல்லில் ரத்தம் வருதல் வாயில் ஜலம் சுரக்குதல் வாய் நாற்றமுண்டாகுதல் ஈர் கட்டுதல் முதலானவைகளும் நீங்கும். ஆத

லால், இதை வாசிக்கும் ஒவ்வொரு குடும்பத்தி லுள்ளவர்களும், இவ்வாறு செய்துவரல் வேண்டும். அன்றியும் இது விஷயம் உங்கள் அன்பர்கள் யாவத்திராளுக்கும் சொல்லி அவர்களையும் இவ்வாறு செய்துவரும்படிச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றோம். இவ்வாறு கஷ்டப்பட்டுச் செய்துகொள்ள சாத்திய மாகாதவர்களுக்காக அடியில் கண்ட விலாசத்தில் செய்து விற்கும்படி ஏற்பாடு செய்திருக்கின்றது ஆதலால் வேண்டுபவர்கள்:—

ஸதானந்தன், வேப்பேரி போஸ்ட்டு, சென்னை.

என்று எழுதிப்பெறலாம்.

மற்றொரு பற்பொடி.

கருவேலம்பட்டை சதை	....	ரூபாயிடை	40
காசிக்கட்டி	....	,,	10
இந்துப்பு	....	,,	4
பொரித்த படிகாரம்	....	,,	4
வால்மிளகு	....	,,	2
லவங்கம்	....	,,	2
அப்பளாகாரம்	....	,,	4
கண்டுபாரங்கி (தேசாபுறம்)	....	,,	1
கெட்டி மிளகு	....	,,	2
லவங்கப்பட்டை (கருவாப்பட்டை)		,,	1
ஜாதிபத்திரி	....	,,	2
கர்ப்பூரம் (சூடம்)	....	,,	1

கருவேலம்பட்டை, தவிர மற்ற தினுசுகளை யெல்லாம் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்துவைக்கவேண்டும். பிறகு, கருவேலம்பட்டையை உலர்த்தி இடித்து வஸ்திர

காயம் செய்து, முன் வஸ்திரகாயம் செய்து வைத்திருந்த பொடியை நிறுத்து, அதற்குச் சமமாய் கருவேலம்பட்டைப் பொடியைச் சேர்க்கவேண்டும். இப்படிச் சேர்த்து தயார் செய்து வைத்து, பிறகு 4-ரூபா இடை நாட்டுக் கல்ஞர் கொண்டுவந்து அதை,ஜலம்விட்டு அரைத்துப் பில்லையாய்த் தட்டிநிழலில் உலர்த்தி வைத்துப் பிறகு, ஆவாரந்தழையை நன்ருய் அரைத்து மேற்படி பில்லையின்மீது பூசி நிழலில் உலர்த்திப் பிறகு மூன்றங்குலம் அகலமுள்ள ஓர் துண்டுத் துணியில் செம்மண் பூசி, அதை மேற்படி பில்லைகளின்மீது வெவ்வேருய்ச் சுற்றி உலர்த்தி, அப்பில்லைகளை ஓர் ஓட்டில் வைத்து அதை மற்ருெரு ஓட்டால்மூடி சந்துகளில்லாமல் சுற்றிலும் சாணம்பூசி, தயார் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு ஒருமுழம் அகலம், ஒருமுழம் நீளமாய்க் குழிதோண்டி, அதில் ஒரு வரிசை வரட்டி அடுக்கி நெருப்பிட்டு, அதன்மேல் வரட்டிகளை பாதிவரையில் அடுக்கி, அதன்மேல் முன் தயார் செய்துவைத்த கல்ஞர் ஓட்டை வைத்து, மற்றப் பாதியையும் வரட்டியால் மூடி மேலும் தீமூட்டி நன்ருய் எரித்து, மூன்ரும் நாள் மாலை யெடுத்து கல்ஞரைத் தூள்செய்து முன் தயார்செய்துவைத்த பொடியுடன் சேர்த்துக் கலந்து, ஒரு புட்டியில் போட்டுவைத்து பிரதிதினம் பல் தேய்த்து வரவேண்டும். இவ்வாறு பல் தேய்த்துவந்தால் சகல பல் வியாதிகளும் நீங்கி, வாயில் உண்டாகும் சகல நாற்றங்களும் ஒழியும். இதைச்செய்ய உங்களுக்குச் சாத்தியமாகாவிட்டால், அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதி மேற்படி பற்பொடி டப்பி வரவழைத்துக்கொள்ளலாம்;



பரமஹம்ஸ ஸச்சிதானந்தன்

ஸதானந்தன், சூளை, வேப்பேரி போஸ்ட்டு, சென்னை.
பற்பொடி இவ்விலாசத்திற்கு எழுதிப் பெறலாம்.

பல்நோய் பல் ஆட்டம் நிவாரணை.

அன்பர்களே! விசேஷமாய்ப் பல்நோய் உண்டானாலும் சரி அல்லது, பல் நோயுடன் பல் ஆட்டங் கொடுத்தாலும் சரி. அவர்கள், மூன்று வெற்றிலைக்கு வேண்டிய பாக்குடன் சுண்ணாம்புவைத்து பாக்குவுரலில் ஷெ வெற்றிலைப் பாக்கை நன்றாய் இடித்து அதை ஓர் வெற்றிலையில் வைத்துக் கொண்டு, ரப்பர் செடி இருக்குமிடம் சென்று ரப்பர் செடி கொடிகளை ஒடித்தால் அதிலிருந்து விசேஷமாய்ப் பால் ஒழுகும். கொடியை ஒடித்தவுடன் பால் ஒழுகும். எந்தப் பல் ஆட்டம்அல்லது நோய் இருக்கின்றதோ அந்த இடத்தில் மேற்படிபால் கொடியை வைக்கவேண்டும். அப்போது வாயிலிருந்து நீர் சுரக்கும்;இப்படி மூன்று அல்லது நாலுகொடிகளை உடைத்து நோயிருக்கும் பல்லினிடம் வைத்துமுடிந்தவுடன், இதுவரையில் இடித்துத் தயாராய் வைத்திருக்கும் வெற்றிலைப்பாக்கை வாயில் போட்டு மேற்படிநோயுடைய பல்லினால் மெதுவாய் அதிக நேரம் மென்றுவிழுங்கவேண்டும். இதனால் என்ன குணமுண்டாகின்றதென்றால், ரப்பர்ப் பால் நோயுள்ள பல் சந்துகளில் பிரவேசித்துச்சந்துகளெல்லாம் ரப்பர் பிசின் மூடிக்கொள்ளும். அதன்பிறகு வெற்றிலைப் பாக்கு மெல்லுவதனால் நோயுள்ள பற்களில் கரைகட்டும்; அதனால் நோய் உடனே நிவாரணையாகும். அப்படி நோய் நிவாரணையானபோதிலும், மூன்று தினங்கள் வரையில் காலை மாலைகளில் மேற்படி பால் வைத்து வந்தால் நோயுள்ள பல் நன்றாய் கரைகட்டி மரணகாலபரியந்தம் அந்தப் பல் ஆடாமலிருக்கும். இது, நோயுடைய அனேகர்களுக்குச் சொல்லி அதுபோல் செய்து பற்களில் கரைகட்டி மிகவும் சுகமடைந்திருக்கின்

றார்கள். ஆதலால், பல்நோயுடைய எல்லோரும் இதில் சொல்லியதுபோல் செய்துவர லோகோபகாரார்த்தமாய் இந்நூலில் எழுதப்பட்டதென்று அறிவீர்களாக.

வியாதிகளை மேற்கிளம்பச் செய்வது எது?

ஓ சகோதரர்களே! பிராணயாமம் செய்துவரும் புருஷனுக்கு, கர்ப்பத்தில் அடங்கி யிருக்கும் வியாதிகளையெல்லாம் மேல்கிளப்பும். மேல் கிளப்பி சரீரத்திலுள்ள வியாதிகளை எல்லாம் போக்கடித்து, எவ்வளவு தூலசரீரமாயிருந்த போதிலும் கச்சலாய்ச்செய்து சரீரத்தை, பரிசுத்தமும் ஆரோக்கியமும் சுறுசுறுப்பும் வாயுவேகமாய் நடக்கவும் குடும்பவிஷயத்தில் விரக்தியையும் உண்டாகும்படி, பிராணயாமம் செய்விக்கும். மேற்படி பிராணயாமம் செய்யும் பொழுது வியாதிகள் உண்டாவதுமே யன்றி, யோகாப்பியாசத்தை பின்னம் செய்ய, அவர்களின் குடும்ப விஷயத்தில் அனேகவித ஆபத்துகளையும், மிகவும் கஷ்ட தசையையும் உண்டாக்கிப் புருஷனை அதோகதி செய்விக்கும். இப்படிப்பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் சலிக்காமல் மனோதீரனுயிருந்து, பிரதிதினம் தவறுமல் பிராணயாமம் செய்துவரவேண்டும். அவ்வாறு செய்து வந்தால் முன் சொல்லிய வியாதிகளும் கஷ்டதசைகளும் நீங்கும். இவைகள் யாவும் அடியேனுக்குப் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தம். இதை அனுபவத்தில் நீங்களும் பிரத்தியக்ஷமாய்க் காணலாம்.

ஓ சுவாமீ! பிராணயாமம் செய்யும்பொழுது சரீரத்தில் அடங்கியிருக்கும் வியாதிகளை மேல் கிளப்பினலும் கிளப்புமென்று என் புத்திக்குத் தெரியவருகின்றது ஆனல் பிராணயாமம் செய்துவரும் புருஷர்களின் குடும்ப

விஷயத்தில் அனேக ஆபத்துகளையும், மிகவும் கஷ்டதசையையும் உண்டாக்கிப் புருஷனை அதோகதி செய்விக்குமென்றும், அவைகளுக்கெல்லாம் மனோதீரனயிருந்து பிராணயாமம் செய்துவர வேண்டுமென்றும் சொன்னீர்களல்லவா? அப்படிப்பட்ட ஆபத்துகளும் கஷ்டங்களும் உண்டாவதற்குக் காரணம் யாதோ? அது விஷயம் எனக்குத் தெரியச்சொல்லும் சுவாமி!

அப்பா குழந்தாய்! நீ மிகவும் சூட்சும புத்தி யுடையவனு யிருப்பதனுல் இப்படிப்பட்ட ரஹஸ்யமான கேள்வியைக் கேட்கவேண்டுமென்று உனக்குத் தோன்றியது. இது, மிகவும் விசேஷமான கேள்வியே அதற்குக்காரணம் சொல்லுகின்ருேம் கேள்.

பி. யே, (B. A.,) கிளாசில் ஒரு வருஷ முழுமையும் இராப்பகலாய் வாசித்துப் பரிக்ஷைக்குச்சென்று உபாத்தியாயர்களால் கொடுக்கும் பரீக்ஷைக் கடிதத்திலுள்ள கேள்விகளுக்கெல்லாம் சரியான பதில் எழுதிவிட்டால், ஐயோ பாவம்! இவன் அதிக கஷ்டப்பட்டு வாசித்தவனு யிருக்கின்ருனென்று B. L., கிளாஸ் போக ஸர்டிபிகேட்டு உபாத்தியாயர்கள் கொடுக்கின்ருர்கள். கஷ்டப்பட்டு வாசித்து, B. A., பாஸ் செய்தபடியால் கவர்னர் ஸந்தோஷித்து அவனுக்குத் தம் கையால் B. A., கவுன் கொடுக்கின்ருர். பரிக்ஷையில் தப்பி விட்டவனுக்கு அப்படிச் செய்யாமல் அவனை, மறுவருஷம் வாசிக்கும்படிச் சொல்லி பரிக்ஷையில் தேறும்படி உபாத்தியாயர்கள் மறுபடியும் அவனுக்குக் கற்றுக் கொடுப்பார்கள். அதுபோல், நாம் நமது சரீரத்திலிருக்கும் B. A., போன்ற ஜீவாத்மாவை, B. L., போன்ற பரமாத்மா கிளாசில் சேர்க்கப் பிரயத்தினப்பட்டு, பிராணயாம மென்னும் வித்தையை 'குரு' என்னும் உபாத்தியாயரால் தெரிந்து அப்பியாசம் செய்து

வரும்போது, முன் B. A, கிளாசில் உபாத்தியாயர்கள் பரிக்ஷித்ததுபோல் பகவான், பிராணயாமம் செய்துவரும் புருஷனை பரிக்ஷிப்பதற்காக அனேக பின்னங்களும் ஆபத்துக்களும் கஷ்டங்களும் உண்டாக்கி, இவனைப் பரிக்ஷிக்கின்றார்; அப்படிப்பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் சலிக்காமல் மனோ தீரனாயிருந்து கஷ்டப்பட்டு பிராணயாமம் செய்து பாஸ் செய்துவிட்டால் ('கவர்னர்' சந்தோஷித்து B. A., கவுன் கொடுத்ததுபோல்) 'பகவானுக்கு' அனுக்கிரகம் உண்டாய், மறுபடியும் அவனுக்கு எந்த விக்கினங்களும் உண்டாக்காமல் யோகசித்தியை அடையும்படிச் செய்வித்து தன்னில் ஐக்கியம் செய்துகொள்வார் இந்த ரகசியம் மானிடஜனங்கள் அறியாமல், இராப்பகலாய்க் கஷ்டப்பட்டு பிராணயாமம் செய்து மோக்ஷ மடைவதற்குப் பதிலாய், தமக்கு லக்ஷக்கணக்காய் இருக்கப்பட்ட ஆஸ்திகள் போதாதென்று எண்ணி, இராப்பகலாய் மோடார் கார்களின் மீதும், குதிரை வண்டிகளின் மீதும் ஏறிப் பறந்து அலைந்து திரிந்து திரிந்து, இன்னும் அதிகமாய்த் திரவ்யத்தைச் சம்பாதித்துக்கொண்டே வர வர, ஓர் நாளில் அகஸ்மாத்தாய் இருந்தாற்போ லிருந்து ஜீவர்கள், இந்த சரீரத்திலிருந்து கிளம்பி வேறோர் சரீரத்தில்போய்ப் புகுந்து, மறுபடியும் அந்த ஜன்மத்திலும் அவ்வாறே வியாபாரம் செய்துகொண்டு வருவார்கள். இதற்குக் காரணம் யாதெனில், அவர்களின் பூர்வஜன்ம கர்மங்களேயாம். நாம் ஜீவித்திருப்பது, தீர்க்க சொப்பனம் போன்றதா யிருக்கின்றது. அதாவது, நாம் 80-வருஷங்கள் ஜீவித்து மரணமடைவதே தீர்க்க சொப்பனமென்று நினைக்கவேண்டும். ஆதலால், இப்போது உன்னிடமிருக்கும் பதினாயிரம் ரூபாய்கள் உன் குடும்ப சவரக்ஷணைக்குப் போதுமானதா யிருக்கிறது. இதைச் சரியாய் வைத்துக் காப்பாற்றிக்

கொண்டு வருவாயாகில், உன் புத்திர பௌத்திராதிகள் தலைமுறை தலைமுறையாய் இருந்துகொண்டே இருக்கும். அதனால், சுகஜீவிகளாய் ஜீவித்து வரலாம். நீ இனி திரவ்வியம் அதிகமாய்ச் சேகரிக்கப் பிரயத்தினப் படாமல், இப்போது செய்துவரும் வியாபாரத்தை எல்லாம் இது வரையில் நிறுத்தி, உன் பிராணப் பிரயாணகாலத்திற்கு முன்,இந்நூலில் சொல்லியிருக்கும் ஞானமென்னும் தனத்தைச் சம்பாதித்து, சம்சார பந்தத்திலிருந்து நீங்கி மோக்ஷமென்னும் பதவியை அடையக்கடவாய்.

இந்த மோக்ஷமென்னும் பதவியைக் கொடுக்க பரமசிவன் உடுக்கை, மான், மழு, சூலங்களைக்காட்டி யமபட்டணம் போகப்பட்டவர்களை யெல்லாம் போக விடாமல் தடுத்து, அழைக்கும் ரஹஸ்யம் மறுபக்கம் மான், மழுகு, உடுக்கை, சூலத்துடன் இருக்கும் விக்கிரக படத்தைக் காட்டி, சொல்லுகின்றோம் கேளுங்கள்.

பரமசிவன் மான் மழுது உடுக்கை
சூலத்துடனிருந்து காக்ஷிதர அழைப்பது.

மேல் காட்டியிருக்கும் பரமசிவன் தெற்கு முகமாய் நின்று ஒரு கையில் மான், ஒரு கையில் மழுகு, மற்றொரு

கையில் சூலம், இன்னொரு கையில் உடுக்கைப் பிடித்து ஐந்து சர்ப்பங்களை ஆபரணங்களாய்ப் பூண்டு கழுத்தில் மண்டை ஓடுகளை மாலையாய்த் தரித்து மாயையென்னும் ராக்ஷதனை தன் காலால் மிதித்து இவ்வித வேஷத்துடன் இருந்து உலகத்தாருக்குக் காட்டும் ரகஸ்யம் இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

ஐயா! தெற்குமுகமாய் யமபட்டணமுண்டு. பிரபஞ்சத்திலுள்ள மானவ ஜனங்களெல்லோரும் அந்த யமபட்டணத்திற்குப் போகாம லிருப்பதற்காக உடுக்கை, மான், மழுகுடன் வேஷம் பூண்டிருக்கும் பரமசிவன் தெற்கு முகமாய்ப் பார்த்து நின்று, யமபட்டணம் போகப் பட்டவர்களைப் போகவிடாமல் தடுத்து, ஓ பாமரஜனங்களே! அங்கு போகவேண்டாம் வாருங்கள் வாருங்கள் என்று, அவர்கள் கேட்கும்படி, தன் கையிலிருக்கும் உடுக்கையை அடித்துக் கூப்பிட்டு, வடக்கு முகமாய் வாருங்கள் மோக்ஷமென்னும் வீடு இங்கு யிருக்கின்றது; உங்களை அங்கு அனுப்ப யான் இங்கு தக்ஷிண முகமாய்ப் பார்த்துக்கொண் டிருக்கின்றேன். ஆதலால், நீங்கள் வடக்குமுகமாய்த் திரும்புங்கள் என்று சொல்லி, அவர்களை எமபட்டணம் போகவிடாமல் தடுத்து, தன் முகமாய் வடக்குத்திசையை நோக்கிப் பார்க்கச்செய்து அவர்களுக்குத் தம் கையிலிருக்கும் ஆயுதங்களையும், சிரசிலும் கைகளிலும் மார்பிலும் அணிந்திருக்கும் ஆபரணங்களையும் காட்டி, பின் சொல்லப்போகும் விஷயங்களைச் சொல்லி எல்லோரையும் அழைப்பதற்காகப் பகவான் இவ்வித வேடம் பூண்டு காட்டுகின்றார் என்று தெரிவிப்பதற்காக முன்னுள்ள பெரியோர்கள் இவ்வித ரகஸ்யங்களை விக்கிரகங்களின் மூலமாய்க் காட்டி யிருக்கின்றார்கள். அதன் ரகஸ்யம் இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

மாயைக்குள் அகப்படாமல் விலக்ஷணனுயிருக்கும் பரமாத்மாவானவர், மானவ ஜனங்களின்மீது கிருபையுண்டாய், அவர்களை ரக்ஷிக்கும்பொருட்டு சிவவேடம் தரித்து தக்ஷிணுமூர்த்தியாய் வந்து நின்று, ஓ ஜனங்களே வாருங்கள் வாருங்கள் என்று தன் கையிலிருக்கும் உடுக்கையை அவர்கள் கேட்கும்படி அடித்துக் கூப்பிட்டு, தன் இடது கையிலிருக்கும் மானைக் காட்டி இதோ, இம்மானைப்போல் ஓடிக்கொண்டிருக்கும் உங்கள் மனதை சாம்பலாய் செய்ய என் கையில் மழுகு (அக்கி) வைத்துக்கொண்டிருக்கின்றேன், வாருங்கள் வாருங்கள்; என் கைகளிலும், காதுகளிலும், சிரசிலும் அணிந்துகொண்டிருக்கும் ஐந்து சர்ப்பங்களே, உங்கள் சரீரத்தில் பிராண அபாந உதாந ஸமாந வியாந னென்னும் ஐந்து வாயுக்களாய் இருந்து, உங்கள் சரீரத்தில் மூக்கின் ரந்திரங்களின் வழியாய் ஆடிக்கொண்டிருக்கின்றது. இப்படி ஸர்ப்பம்போல் ஆடிக்கொண்டிருக்கும் சுவாசத்தை யோகியானவன் பாம்பாட்டியைப் போல் பிடித்து அடக்கி ஆட்டுவானுகில் அப்போது, அவனுக்கு அனேக ஜன்மங்களாய் வந்துகொண்டிருக்கும் மாயையென்னும் ராக்ஷதனை என் காலால் மிதித்து, அவன் மனது யென்னும் வாயுவை என் சூலத்தினுல் குத்தி, என் கையிலிருக்கும் அக்கியினுல் அம்மனதுயென்னும் வாயுவை சாம்பலாய் எரித்து, அந்தச் சாம்பலை நான் விபூதியாய்ப் பூசிக்கொண்டு, மறுபடியும் அவர்கள் மண்டை ஓட்டிற்குள் புகாவண்ணம் அவர்களின் சிரசு ஓடுகளையெல்லாம் எடுத்து மாலையாய்க் கோர்த்து என் கழுத்தில் கட்டிக்கொள்ளுகின்றேன் என்று காட்டுவதற்காகவே பரமசிவன், ஸர்ப்பங்களையும் மண்டை ஓடுகளையும் ஆபரணங்களாய்ப் பூண்டிருக்கின்றுரே யொழிய மற்றப்படிக்கு வேறல்லவென்று

ஆதியிலிருந்த (முன்னுள்ள) பெரியோர்கள் விக்கிரக மூல மாய்க் காட்டியிருக்கின்றார்கள்.

அதாவது, உலகத்திலுள்ள ஜனங்களெல்லோரும், "புஸ் புஸ்" என்று சர்ப்பம்போல் சீறிக்கொண்டிருக்கும் சுவாசத்தை வெளியில் ஓடவிடாதபடி அடக்க, பிராணா யாமம் செய்து வரவேண்டுமென்றும், அப்படிச் செய்து வரப்பட்டவர்களின் மனதை ஈசுவரன் தன் சூலத்தினால் குத்தித் தன் கையில் வைத்திருக்கும் அக்கினியினால் அம் மனதை எரித்துச் சாம்பலாச்செய்து, அந்தச் சாம்பலைத் தான் விபூதியாய்ப் பூசிக்கொண்டு, மறுபடியும் அவர்களை மண்டை ஓட்டில் புகாவண்ணம் அவர்கள் சிரசின் ஓடுகளை யெல்லாம் எடுத்து மாலையாய்க் கோர்த்துத் தன் கழுத்தில் தரித்துக் கொள்ளுகின்றார் என்று காட்டுவதற்காகவே, பரமசிவன் இவ்வித வேடம் பூண்டு உலகத்தாருக்குக் காட்டி யிருக்கின்றார். ஆதலால், சர்ப்பம்போல் "புஸ் புஸ்" என்று சீறி நாபியிலிருந்து புறப்பட்டு உங்கள் மூக் கின் துவாரங்களின் வழியாய் வந்துகொண்டிருக்கும் சுவா சத்தைப் பிடித்து அடக்குவதற்காக பிராணாயாமம் செய்து வரவேண்டும். இந்த பிராணாயாமம் செய்யவேண்டிய முறை, இதனடியில் நடராஜன் ரஹஸ்யம் சொல்லிய பிறகு, அடியேனுடைய அப்பியாச யோக சாதனைகளை எல்லாம் அதனடியில் விவரித்துச் சொல்லுகின்றோம். ஆதலால் அதுவே குரு வாக்காய் எண்ணி அதில் சொல்லியிருப்பது போல் பிராணாயாமம் செய்து வரவேண்டும். தில்லை நட ராஜன் நடனம் செய்துகாட்டும் ரஹஸ்யம் இதனடியில் எழுதியிருக்கின்றோம்; அதை கவனித்து வாசிக்கவேண்டும்.

"நம சிவய" என்னும் பஞ்சாக்ஷரத்திலிருக்கும் 'ய' என்பது, சகல ஆன்மகோடிகளுக்கும் மூக்குத் தண்டின் வடிவமாயும், அத்தண்டின் இருபுறமும் பொருந்திய துவா

ரத்தில் ஆடும் மூச்சு, ஜீவனுயிருக்கின்றது; இந்த ஜீவன், 'ஹம்ஸ' ('ஸோஹம்') சொரூபமாய் இருந்து தில்லை (சிதம்பரம்) நடராஜனைப்போல், எப்பொழுதும் மூச்சு என்னும் காலைத்தூக்கி நடனஞ் செய்துகொண்டிருக்கும் பரமசிவன் பஞ்சாக்ஷரத்தையே திருமேனியாகக் கொண்டு யோகநிலை, யைத் தெரிவிக்கும் ரஹஸ்யம் இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

பரமசிவன் 'ஹம்ஸ' ('ஸோஹம்') சொரூபமா யிருக்கின்றார் என்பதை இங்கு, உங்களுக்கு பிரம்ம வித்யோபநிஷத் மூலமாய் நிரூபித்து பிறகு, பரமசிவனாகிய நடராஜன் பஞ்சாக்ஷரத்தையே திருமேனியாகக் கொண்டு தில்லையில் நடனம் செய்துகாட்டிய ரகஸ்யம் சொல்வோம்:

ஹம்ஸோ கணேஸோ விதிரேவ ஹம்ஸோ
ஹம்ஸோ ஹரிர் வில் வமய: ஸம்பு:
ஹம்ஸோஹ மாத்மா குருரேவ ஹம்ஸோ
ஹம்ஸோஹம் ஹம்ஸ: பரமாத்ம ஹம்ஸ:.

மேற்சொல்லிய 'ஹம்ஸ'யே, கணபதி ஹரி சம்பு: ஆத்மா குரு பரமாத்மாவென்று சொல்லப்படும்: இது விஷயம், ஹம்ஸ சூத்திர ரகஸ்யத்தில் இன்னும் விவரமாய் முன்சொல்வோம்; அதில் தெளிவாய்த்தெரிந்துகொள்ளுங்கள்: இங்கு வேண்டியது இவ்வளவேயாம்:

பஞ்சாக்ஷரத்தை நடராஜன் எவ்விதமாய்த் திருமேனி கொண்டு நடனம் செய்துகாட்டினரோ, அதை இதனடியில் சொல்லப்படும்:

உண்மை விளக்கம்.

எட்டு மிரண்டு முருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள்—சிட்டன்
சிவாயநம வென்னுந் திருவெழுத் தஞ்சாலே
யவாயமற நின்றாடு வான்.

எட்டு மிரண்டு முருவான லிங்கத்தே நட்டம் = எட்டும் இரண்டும் உருவமாயிருக்கிற 'ய' என்பது சகல ஆன்மாவினிடத்திலே ஜீவனாயிருந்து நடனம்; புதல்வா நவிலக்கேள் = பிள்ளாய் சொல்லக்கேள்; சிட்டன் = பரமசிவன்; சிவாயநமவென்னுந் திருவெழுத் தஞ்சாலே யவாயமற நின்றாடுவான் = அருள் தரத்தக்க சிவாயநம வென்னும் பஞ்சாக்ஷரத்தையே, பரமசிவன் திருவுருவங்கொண்டு ஆன்மாக்களின் பிறவி யறத்தக்க நடனஞ் செய்துகாட்டினார். அதாவது,

எட்டும் இரண்டும் சேர்ந்து (அ+உ) பத்து வடிவம்பொருந்தி, அடிபெருத்து நுனிசிறுத்து 'ய' போன்ற லிங்க வடிவமாயிருக்கும் மூக்குத் துவாரங்களில், சிவபெருமான் நின்று நடனம்செய்ய, 'சிவாயநம' வென்னும் பஞ்சாக்ஷரத்தையே அழகுபொருந்திய சரீரமாய் எடுத்து ஆன்மாக்களின் பிறவியறத்தக்க நடனஞ் செய்துகாட்டினார். அதை இதனடியில் சொல்லுகின்றோம்:

தில்லை நடராஜன்
நடனம்செய்துகாட்டும் ரஹஸ்யம்.

சேர்க்குந் துடிசிகரம் சிக்கனவா வீசுகர
மார்க்கும் யகர மபயகரம் பார்க்கிலிறைக்
கங்கி நகர மடிக்கீழ் முயலகனார்
தங்கு மகரமது தான். [உண்மைவிளக்கம்.]

டமரகம் (உடுக்கை) ஏந்திய கரமே (கையே) 'சி' காரமாகவும், வீசிக்காட்டும் வலது இடது இருகரங்களே 'வ'காரமாகவும், வலதுபாதம் மேல்தூக்கி சும்மாயிரு வென்று வலதுகையால் காட்டும், அபயகரமே (அய்யம் காட்டும் கையே) 'ய' காரமாகவும், அக்கியேந்திய கரமே (கையே) 'ந' காரமாகவும், மாயை யென்னும் ராக்ஷதனை மிதித்த பாதமே 'ம' காரமாகவும், பரமசிவன் அழகு பொருந்திய சரீரம் எடுத்து, தில்லையில் நடராஜராய் வந்து நடனம்செய்து யோகலீலையை அறிவிக்கும் ரஹஸ்யம், இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

"என்னை யறியாமல் எனக்குளே நீயிருக்க
உன்னை யறியாமல் உயிரிழந்தேன் பூரணமே
சத்திசிவம் இரண்டாகி தான்முடிவி லொன்றாகி
சித்திரமாய் நின்ற திறமறியேன் பூரணமே,"

எனக்குத் தெரியாமல் அனேககோடி ஜன்மங்களாய் நீ, எனக்குளே 'ஹம்ஸ' (ஸோஹம்) சொரூபமாயிருந்து, அல்லும் பகலுமாய் வலது இடது மூக்குத் துவாரங்களில் மாறிமாறி காலைத்தூக்கி நடனம் செய்கின்றாய்;

'ஹம்ஸ' சொரூபமா யிருந்து நடனஞ் செய்துவரும் உன்னைத் தெரிந்துகொள்ளாமல், யான், அனேக கோடான கோடி ஜன்மங்களாய் இறந்துகொண்டும், பிறந்துகொண்டுமாய் இருக்கின்றேன் பூரணமே;

இடதுநாசியும், வலதுநாசியும் இரண்டாய்ப் பிரிந்து, மூக்குத் துவாரங்களுக்கு முடிவாகிய புருவ மத்தியில் ஒன்றாய்ச்சேர்ந்து நடக்கின்ற சுவாசமென்னும் காலைத்தூக்கி சித்திரப் பதுமைபோல் நிறுத்த வழியறியேன் பூரணமே.

"சங்கு ரெண்டு தாரை யொன்று
ஜன்னல்பின்ன லாகையால்
மங்கிமாறுதே யுலகில்
மானிடர்க ளெத்தனை

சங்கு ரெண்டையும்
 தவிர்த்து தாரையூத வல்லிரேல்
கொங்கை மங்கை பங்கரோடு
 கூடிவாழ லாகுமே. ''

வலது இடது மூக்குத் துவாரங்கள் ஒன்றுசேருகின்ற இடம் புருவமத்யம்; அப் புருவ மத்யமே திருவேணி சங்கமென்று சொல்லப்படும்; அதாவது, (திரு= மூன்று) இடைகலை, பிங்கலை, சுழுமுனை என்னும் மூன்று நாடிகளும் சேருமிடம் திருவேணி சங்கமென்று சொல்லப்படும். அவ்விடம், சாரையுஞ் சர்ப்பமும் பின்னலாய்ப் பின்னி எழுந்துநின்று விளையாடுவதுபோல்; இடை, பிங்கலை, சுழுமுனை என்னும் மூன்று நாடிகளுங் கூடி விளையாடும் ரகஸ்யம் தெரிந்துகொள்ளாமல் மாண்ட மானிடர்களெத்தனையோ பேருண்டு;

வலது நாசி, இடது நாசி இவைகளில் சுவாசத்தைத் தனித்தனியாய் இழுத்து நிறுத்தி நடத்தி, பிறகு இரண்டு நாசிகளிலும் சுவாசம் இழுத்து நிறுத்தி நடத்த சக்தியுடையவர்களானல், பரஞான அபரஞானமென்னும் இரு ஸ்தனங்களைப் பொருந்திய வுமாதேவி பாகரோடு கூடி இருக்கலாம்;

'' நெருப்பைமூட்டி நெய்யைவிட்டு
 நித்தநித்தம் நீரிலே
விருப்பமோடு நீ குளிக்கும்வேதவாக்
 யம் கேளுமின்
நெருப்புநீரு யும்முளே நினை
 ந்துகூற வல்லிரேல்
சுருக்கமற்ற சோதியைதொடர்ந்து
 கூட லாகுமே. ''

ஸ்திரீ புருஷர்களின் நாபிக் கமலத்தில் நித்திரை செய்துகொண்டிருக்கும் குண்டலி சக்தியை, சுவாசமென்

னும் மூலக் கனலால் கிளப்பி, அதை எதிரில் காட்டிய முதகெலும்பிலிருக்கும் வெள்ளை நரம்பிலுள்ள சிறிய துவாரங்களினின் வழியாய் உச்சிவரையில் சுவாசத்தை ஏற்றி, அதனால் உண்டாகும் சூட்டால் பிரம்ம கபாலத்திலிருக்கும் அமிர்தம் உருகி சொட்டுச்சொட்டென் றொழுகவுண்டுகொண்டிருக்குஞ் சமயத்தில், சரீரமெல்லாம் விருப்பத்தோடு, பிரதிதினம் சுவாசம் நிறுத்தி பிராணாயாமம் செய்யும்பொழுது ஸ்நானஞ் செய்தவனைப்போல் வியர்த்திருப்பதே, வேதவாக்கிய ரகஸ்யம் சொன்னோம் சொன்னோம் கேளுங்கள்:

சுவாசமென்னும் நெருப்பும், வியர்வை யென்னும் நீரும் உப்மிடத்தி லிருப்பதை, அனுபவத்தா லறிந்து, சொல்ல வல்லமை யுடையவரானால் எல்லைக்கடந்த சோதி யில் சேர்ந்திருக்க லாகுமே:

உலகத்திலுள்ள மானவ ஜனங்களெல்லோரும், எல்லைக் கடந்த ஜோதியில் சேரும் பொருட்டே, தில்லையில் (சிதம்பரத்தில்) நடராஜர் காலைத்தூக்கி நர்த்தனம்புரிந்து காட்டினார். இது, தேவ ரகஸ்யம்.

தில்லை (சிதம்பரம்) ஆகாச அம்சம், திருவண்ணாமலை அக்கியாம்ஸம், காளஹஸ்திரி வாயுவாம்சம், காஞ்சீ பிருதிவியாம்சம், காசீ அப்புவாம்சம்:

சிதம்பரம், ஆகாச அம்சமாயிருப்பதனால், நடராஜன் இருக்கும் கனகசபை சமீபமாய், மூன்று சுவர்களாலும் ஒரு திரையா (படுதாவா)லும் மறைக்கப்பட்ட வெளியாகிய இடத்தை ரஹஸ்ய தரிசனமென்று பெயர்வைத்து அதைக் காட்ட, தீக்ஷிதர்கள் ரூபா ஒன்று பெற்றுக் கொண்டு, கற்பூரமேற்றி படுதாவை நீக்கி வெட்டவெளியாகிய ஆகாயத்தைக் காட்டி உடனே படுதாவை மறைத்து விடுவார்கள்; ஸ்திரீ புருஷர்களெல்லோரும் அந்த ரஹஸ்ய

தரிசனத்தைக் கண்டு, என்ன அங்கொன்று மில்லையே இருளா யிருக்கின்றதே அந்த இருள்தான் ரஹஸ்ய தரிசனமா என்று ஒருவரோ டொருவர் பேசிக்கொள்வதே யொழிய அதன் நிஜ ரஹஸ்யம் அனேகர்களுக்குத் தெரிய வராது. அதன் நிஜ ரஹஸ்யம் என்னவென்றால், ஈசுவர வடிவம் ஆகாசரூபம். என்றால், கடவுள் ஆகாச (வெட்ட வெளி) ரூபமா யிருக்கப்பட்டவன்: சிதம் பரம் ஆகாச வடிவ மாதலால், அந்த ஆகாசத்தை படுதாவால் மறைத்து ரஹஸ்ய தரிசனமென்று பெயர்வைத்துக் காட்டுகின்றார்கள்: இதுவே சிதம்பர ரஹஸ்ய தரிசனத்தின் அந்தரார்த்தம்: இனி நடராஜன் காலைத்தூக்கி நடனம் செய்துகாட்டும் ரஹஸ்யம் சொல்லுகின்றோம்.

நடராஜன், முதல் இடதுகாலை ஊன்றி வலது காலைத் தூக்கி சிலநேரம் நர்த்தனம் செய்து பிறகு, வலதுகாலை ஊன்றி இடதுகாலை மேல்தூக்கிச் சிலநேரம் நர்த்தனம் செய்து காட்டி பிறகு, வலது காலை காதுவரையில் நீட்டி இடது கையை மேல்தூக்கி நடனம் செய்யும்போது, காளி ஸ்திரீயா யிருப்பதனால் காலை காதுவரையில் நீட்ட வெட்கமுண்டாய் தோல்வி யடைந்தாளென்று, புராணங்களில் சொல்லுகின்றதென்று கற்பனைக் கதையாய்ச் சொல்லுகின்றார்களே யொழிய, அதன் நிஜ அந்தரார்த்தம் சொல்லுவா ரில்லை. அதன் நிஜமாகிய அந்தரார்த்தம் சொல்லுகின்றோம்.

பிராணாயாமம் அல்லது, ஸந்தியாவந்தனம் செய்பவர்கள் முதல், இடது நாசியை மூடி வலது நாசியில் சுவாசம் உள்ளுக்கிழுத்து நிறுத்தவேண்டுமென்று காட்டுவதற்காக நடராஜன், முதல் வலதுகாலைத் தூக்கி நடனம் செய்து காட்டினார். இதன் ரஹஸ்யமே முதல் வலதுகாலைத் தூக்கிக் காட்டுவதற்குக் காரணம். பிறகு,

வலது நாசியை மூடி,இடதுநாசியில் சுவாசம் இழுத்து நிறுத்தவேண்டும் என்று காட்டுவதற்காக, வலது காலை ஊன்றி இடதுகாலைத் தூக்கி நடனம்செய்து காட்டினார். பிறகு,

கன்னன், உலைக்களத்தில் இரண்டு துருத்திகளை வைத்து இரண்டு கைகளால் பிடித்து மாற்றி மாற்றி ஊதுவதுபோல், வலது கைப் பெருவிரல் மோதிரவிரல்களை, வலது இடது நாசிகளின்மீது வைத்து இரண்டு மூக்குத் துவாரங்களிலும் சுவாசம், இரண்டு விரல்களால் மாற்றி மாற்றி, இரண்டு சுவாசமும் ஒன்றாய்ச் சேர்த்துப் பின்னலாய் உள்ளுக்கிழுத்து நிறுத்தவேண்டுமென்று காட்டுவதற்காக நடராஜன் ஒத்தைக்காலைத் தூக்கி நடனம்செய்து காட்டினார். இதற்கு நெஞ்சறிவிளக்கம் பிரமாணம்;

ஒருபாதந் தன்னைத் தூக்கி யொருபாதந் தன்னை மாற்றி
இருபாத மாடுகின்ற வியல்பை நீ யறிந்தா யானால்
குருபாத மென்று கூறுங் குறிப் புனக்குள்ளே யாச்சு
விருபாத ஞகைநாதர் மலரடி காண்பாய் நெஞ்சே.

ஒருபாதந் தன்னைத் தூக்கி=வலதுகை மோதிரவிரலால் இடதுநாசியை மூடி,வலது நாசியில் சுவாசமென்னும் பாதத்தைத் தூக்கி (இழுத்து), ஐம்பது எண்ணும் வரையில் நிறுத்தி; ஒருபாதந் தன்னை மாற்றி=வலது நாசியில் இழுத்து நிறுத்திய சுவாசத்தை, வலதுகைப் பெருவிரலால் வலதுநாசியை மூடி, இடது நாசியின் வழியாய் மாற்றி, நாலங்குல சுவாசம் வெளியில் விட்டு; இருபாத மாடுகின்ற இயல்பை=அதை மறுபடியும் இடது நாசியில் இழுத்து, வலது நாசியில் மாற்றுந் தன்மையை; நீ யறிந்தா யானால்= சூட்சும புத்தியினால் அறிவாயாகில்; குருபாத மென்று கூறுங் குறிப்பு=அது நீயாவாய் என்று குருவினால் உபதேசிக்கப்பட்ட குறிப்பு; உனக்குளே ஆச்சு = உனக்

குள்ளே விளங்கும்; இருபாத நாகைநாதர்=இடைகலை பிங்கலையாய்நடக்கும் நாகனென்னும் சுவாசத்தைக் காட்ட, கால்களைத்தூக்கி நடனம் செய்துகாட்டிய நடராஜரது; மலரடி காண்பாய் நெஞ்சே=பாத கமலங்களைத் தரிசிப்பாய் மனமே.

அதாவது, வலதுகை மோதிரவிரலால் இடது நாசியை மூடி, வலதுநாசியில் சுவாசமென்னும் பாதத்தைத் தூக்கி (இழுத்து), ஐம்பது எண்ணும் வரையில் நிறுத்தி, வலது நாசியில் இழுத்து நிறுத்திய சுவாசத்தை,வலதுகைப் பெருவிரலால் வலதுநாசியை மூடி, இடது நாசியின் வழியாய் மாற்றி, நாலங்குல சுவாசம் விட்டு, அதை மறுபடியும் இடது நாசியில் இழுத்து மூடி, வலதுநாசியில் மாற்றும் தன்மையை, நீ சூட்சும புத்தியினால் அறிவாயாகில், அது நீயாவாய் என்று குருவினால் உபதேசிக்கப்பட்ட குறிப்பு உனக்குளே விளங்கும்; இடைகலை பிங்கலையாய் நடக்கும் நாகனென்னும் சுவாசத்தைக்காட்ட, கால்களைத்தூக்கி நடனம் செய்து காட்டிய நடராஜரது, பாத கமலங்களைத் தரிசிப்பாய் மனமே. என்றால்,

மாயை என்னும் பிசாசே நமக்குப் பெருத்த காளியா இருக்கின்றது. ஆதலால், நீங்கள் பிராணாயாமம் செய்து சித்தியடைந்தால், அப்போது உங்களைப் பிடித்துக்கொண்டிருந்த மாயை என்னும் ராக்ஷதனை ஜயிக்கலாம் என்று, மானவ ஜனங்களுக்குக் காட்டுவதற்காக நடராஜன் மாயை என்னும் ராக்ஷதனைத் தமது காலால் மிதித்து அவன் கர்வத்தை அடக்க நடனம்செய்து காட்டினார், என்று முன்னுள்ள பெரியோர்கள் விக்கிரகமூலமாய்க் காலைத்தூக்கிக் காட்டியிருக்கின்றார்கள். நாம் விடும் சுவாசத்திற்குக் கால் என்று பெயர். ஆதலால், நடராஜன் சுவாசமென்னும் காலைத்தூக்கிக் காட்டினார். என்பதேயாம். இந்த சுவாச

மென்னும் காலுக்கு, யஞ்ஞோபவீதமென்றும் பிரம்ம சூத்திரமென்றும் ஹம்ஸ என்றும் சுவாசமென்றும் மூச்சு என்றும் உயிர் என்றும் பிராணனென்றும் வாசி என்றும் குதிரை என்றும் நூல் என்றும் கயர் என்றும் இவ்வாறு அனேக பெயர்களை யுடையதாய் இருக்கின்றன. இப்படிப் பட்ட சுவாசமென்னும் நூல் என்றைக்கோ ஓர்நாள் அறு பட்டுப் போகப்போகின்றது இதற்கு நெஞ்சறிவிளக்கம் பிரமாணம்;

இறந்திடு மிருபத் தோ ராயிரத் தறுநூறு பேரும்
இறந்திடு மிக்காயம் போனு லீசனைக் காண்ப தென்னுள்
மறந்திடா தறிவான் மூல வாசியை மேலே யேற்றிச்
சிறந்த தற்பரத்து நாகை லிங்கரைத் தரிசி நெஞ்சே.

இறந்திடு மிருபத் தோ ராயிரத் தறுநூறு பேரும்= நிமிஷத்திற்கு பதினைந்து சுவாசங்களாய் மூக்குத்துவாரங் களின் வழியாய் ஆடி பிரதிதினம், இருபத்து நாலுமணி நேரத்திற்குள் நடந்து நடந்து கழிந்துவரும், இருபத்து ஓராயிரத்து அறுநூறு சுவாசமும்; இறந்திடு மிக்காயம் போனல்=இந்த சரீரத்திலிருந்து ஒவ்வொருவராய் அறு பட்டு இறந்துகொண்டே வந்தால்; ஈசனைக் காண்ப தென் னுள்=பரமசிவனை கண்டறிவது எப்போ; மறந்திடா தறி வான்=மறவாதபடி இமைக்கொட்டு மவ்வளவு நேரமும், சும்மாயிராமல் ஓயாதபடி ஆடி; மூலவாசியை மேலே யேற்றி=மூலாதார (குதத்தின்) வழியாய் நடக்கும்,சுவாச மென்னும் வாசியை முதுகெலும்பிலுள்ள வெள்ளை நரம்பு வழியாய் பிரம்ம கபாலத்திற்கு (உச்சிக்கு) யேற்றி; சிறந்த தற்பரத்து நாகை லிங்கரை=உயர்வாயிருந்து, தான் தானய் நடந்துகொண்டிருக்கும் நாகனென்னும் லிங்கத் தை (சுவாசத்தை); தரிசிநெஞ்சே=அறிவாய் மனமே:

நிமிஷத்திற்குப் பதினைந்து மூச்சுகளாய், பிரதிதினம் இருபத்து நாலுமணி நேரத்திற்குள் மூக்குத் துவாரங்களின் வழியாய், நடந்து நடந்து கழிந்துவரும், இருபத்து ஓராயிரத்து அறுநூறு மூச்சுகளும், இந்த சரீரத்திலிருந்து ஒவ்வொருவராய் அறுபட்டு இறந்துகொண்டே வந்தால், ஈசனைக் கண்டறிவதெப்போ; மறவாதபடி இமைக்கொட்டுமவ்வளவு நேரமும் சும்மயிராமல் ஓயாதபடி ஆடி, மூலாதார (குதத்தின்) வழியாய் நடக்கும், சுவாசமென்னும் வாசியை முதுகெலும்பிலுள்ள வெள்ளை நரம்புவழியாய் பிரம்ம கபாலத்திற்கு (உச்சிக்கு) யேற்றி, உயர்வாயிருந்து தான் தானாய் நடந்துகொண்டிருக்கும் நாகனென்னும் லிங்கத்தை அறிவாய் மனமே:

ஆதலால, சுவாசமென்னும் நூல் அறுபடாமுன்னமே நாமெல்லோரும் ஜாக்கிரதைப்பட பிராணயாமமோ, சிவராஜயோகமோ, மனோ ஒட்டத்தை நிறுத்த உபதேசித்த உபதேசமோ, பஞ்சாக்ஷரமோ ஜபம் செய்துவர இன்நூலில் உபதேசமாய் எழுதிவிட்டோம். இதில் எழுதி இருக்கும் உபதேசங்களுக்கெல்லாம் இதுவே குருவாக்காய் நம்பி, இதில்சொல்வதுபோல் ஜபம் செய்துவரவேண்டும். எல்லா உபதேசங்களும் இந்நூலில் எழுதிவிட்டோம்; இவைகளுக்கு உயர்ந்த உபதேசங்கள் இந்த பூலோகத்தில் எங்கும் இல்லவே இல்லை. எல்லா உபதேச ரஹஸ்யங்களை எழுதி வெளியிட்டுவிட்டபடியால், இனி யாம் கடப்பையை விட்டு கடிகோட்டை என்னும் மலையடிவாரம் ஓர் வனத்தில், சிறிய குஹை கட்டி அதில் சில வருடங்கள் சமாதி நிஷ்டையிலிருந்து பிறகு வெளிவரப்போகின்றோம். அடியேனுடைய சுவானுபவமே இந்நூலில் விசேஷமாய்ச் சொல்லி இருப்பதனல், இதில் சொல்லியதுபோல் நீங்களும் அனுஷ்டித்து வந்தால் சமாதிநிஷ்டை செய்ய ஸக்தி

யுடையவராவீர்க ளென்பதற்குச் சந்தேகமில்லை. இனி பிராணுயாமம் செய்யவேண்டிய வழியைச் சொல்லுகின்ருேம்.

பிராணுயாமாப் பியாசத்தினுல் ப்ராணன் சரீரத்திலிருந்து விடுபடுதல்.

"உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவை
கருத்தினுல் இருத்தியே கபாலமேற்ற வல்லிரேல்
விருத்தருமே பாலராவர் மேனியுமும் சிவந்திடும்
அருட்டரித்த நாதர்பாதம் அம்மைபாதம் உண்மையே."

"ஓடி ஓடி ஓடி ஓடி உள்கலந்த ஜோதியை
நாடி!நாடி நாடி நாடி நாள்களும் கழிந்துபோய்
வாடி வாடி வாடி வாடி மாண்டுபோன மானிடர்
கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே.

காணவேணும் என்றுநீர் கடல்மலைக ளேறுவீர்
ஆணுவமதல்லவோ அறிவில்லாத மூடரே
வேணுமென்று ஈசர்பாதம் மெய்யுளே விளங்கினுல்
காணலாகும் நாதனைக் கடந்துநின்ற சோதியே.

புத்தகங்க ளைச்சுமந்து பொய்களைப் பிதற்றுவீர்
செத்திடம் பிறந்திடம் தெங்கனென் றறிகிலீர்
அத்தனைய சித்தனை யறிந்துநோக்க வல்லிரேல்
உத்தமத்து ளாயசோதி யுணரும்யோக மாகுமே.

நாலுவேத மோதுவீர் ஞானமொன்று சொல்லுவீர்
பாலினுேடு நெய்கலந்த பான்மையை யறிவிரோ
ஆலமுண்ட கண்டனு மகத்துளே யிருக்கையில்
காலனென்று சொல்லுவீர் கனுவினு மங்கில்லையே."

"சாற்றடா என்மகனே மாணுகேளு
சத்தியமா யோகமென்ற தனுவைச் சொல்வேன்

எற்றடா பின்சொல்லும் மௌனம்பூட்டி
இன்பமுடன் பேரொளியு மெண்ணிக்காணும்."

பல்லவி - தரு.

பூசித்தேன் பிராணயவாசியோகம் ரேசித்து ஆண்டே
பூரித்துகும்பகம் கண்டேன் பாகம்.

அநுபல்லவி.

வாசித்து வாயுவையூதி வங்கென்றுந் தம்பித்துலாவி
துஷித்துக் கருவிகளைத் தொடர்ந்து கட்டறுத்தயான்
(பூசித்தேன்.)

சரணங்கள்.

கும்பித்துப் பூரகாதி தம்பித்துக் கும்பகந்தேடி
நம்பித்து மூவாண்டுமென்று அம்பிகாயோகத்தில் நின்று
கெம்பீரமாய்க் கண்ட தாரையில் எம்பிரான்
நம்பி கமலபாதந்தும்பி முகனைத் தொழுது (பூசித்தேன்)

நங்கென்றும் விஞடியூதி மங்கென்றுஞ சாதித்துபேதி
சிங்கென்றும் மூலத்துக்கேற்றி
வங்கென்றும் பரத்தைப்போற்றி
அங்கென றும் வாசிமேலாக வெங்கெங்கும் பிரகாரமாக
கங்குல் பகலகன்றேக திங்களுங் கதிரோக (பூசித்தேன்)

ஒவ்வென மூலத்திலோட்டி யொன்பது வாசலுங்கட்டி
அவ்வெனும் உவ்வெனுங்கூட்டி அப்புவை யப்புவிலூட்டி
நாசியில் வாசியோடாமல் வீசிய ஞானம் பாயாமல்
தேசிகன் பொற்பாதமேவி யூசியின் முனைவராமல் (பூசித்தே)

ஆதாரமப்புவு மூலத்தின் கீழோங்கார மூலம்
பிதாவைத்தொழுது முத்தி பிராணயாம தீபத்தையேற்றி
கங்கைமதி மலர் தன் கமல பாதாரவிந்தம்
கங்கா ஸ்நானங்கள்செய்து கெவனம்பாயவும் வாசி (பூசித்)

ஆசான் சற்குரு நாதாருளாலாண்டையே கேளீர்
பாசாபாசமறுத்து பரிபூரண சந்திரனை

தேசியெனுங் கெவனவாசிக் குதிரைமீதில்
நாசிப்புருவ நடுவிரேசித்தும் பாய்ந்துயான் (பூசித்தேன்.)

விஞடி கடிகைக்கொன்று விதமாய் சுழியில் நின்று
தினநாள் முப்பதும்வாசி யினமிந்தப்படி யேசி
கோசமெனு மக்கரங் குறித்து ஓராண்டமுறி
நாசம தாகுமுப்பாழ் நசித்து வெண்ணீற்தாக (பூசித்தேன்)

விந்து நாதமெனும் மேகங்கருவே சீலம்
அந்தமாதியுஞ் சூட்சுமம் அமுரிப்புளியும் வாசம்
சிவமுஞ் சத்தியுஞ்சேர்ந்து ஜெயநீர் திராவகமாச்சு
நவபாஷாணங்கள் நீறும் நவலோகங்கள் மாற்றேறும் (பூசித்)

தேவியெனு மம்பிகை சீர்பெரற்கமல நாடி
ஆவியெனுஞ் சுவாசமண்டம் பாயவுந் தேடி
ஊதுந்துருத்திவாசி ஓசை மூலத்தில் பாய்ந்தால்
வாத முன்னுக்குள்ளெய்து மதியால் ரவியுந்தோற்றும்(பூசித்)

இருவினைகளையுளையுஞ்சுட்டு இறப்பும் பிரப்புஞ்சுட்டுக்
கருவிதொண்ணூற்ருறுங் கனலால்வெந்து நீருக
வரசியென்ற பிராணயாமம் வாயுவைக்கும்பித்து மூலம்
நாசிவழிவாராமல் ராஜயோகஞ் செய்தேன்காண் (பூசித்தே)

விதியைவெல்லும் மதியால் மதியைவெல்லும் சுழியால்
பதியையறிய ஞானவழியீ தாண்டையே கேள்
மதியுன்னுக் குள்ளிருக்கும் வாரி சவாரிமேலாய்
விதியும்வாசிக்கப் போமோவிந்து நாதத்தின் கூறுல் (பூசித்)

மாய்கையகற்றி மூலமலமுஞ் ஜலங்கழியப்
பயமதுவுங்கிலேசம் பாழாயிந்திரிய மாண்டே
இந்த மதியைக்கண்டு வந்தவிதியைப்போக்கி
சொந்தமனையில் நின்றுஞ்சுந்தரர்க்கு முரைத்தேன்காண் (பூ)

ஆனை மும்மதங்கொண்டா லடக்கலாமோவடக்க
வானஞ்சுருக்கி விடத்தானேதானஞ் சுருங்கும்
பொங்குங்கடல் சூர்வாரிபொழியப் பொழியப்புனல்
எங்கும்பிரகாசமாகுமெண் சாண்தேக முந்தங்கம் (பூசித்தே)

பதினெண்பேர்களுஞ் சொன்னபரிபாஷையுந் தோணமல்
விதியின்வசமதென்று வெறுத்து மெய்க்குருகாணுர்
விதிஸய மதியால்வெல்லும் வேதசாரத்தையருட்
குருவின்வழியறிந்துங் குறைவாராது வாழயான்
சித்தேயன் பிராணுய வாசியோகம். (பூசித்தே)

[திருவள்ளுவ நாயனுர் அருளிச்செய்த ஞானவெட்டி]

வாற்றடா நித்தமுந்தான் ஒண்ணரைவீசம்
வளமான பிராணுயாமம் வசமாய்கூட்டு
போற்றடா பதினெட்டு மாதமட்டும்
புத்திரனே பிராணுயாமம் பொருந்தக்கூட்டே.
நாட்டமுடன் கும்பகபூ ரகத்திஞேடே
நலமான ரேசகமு மூன்றுமொன்ருய்
வாட்டமுட ஞென்ருகக் கலையேவாங்கி
வலுவாக மேல்நோக்கி யமுதமுண்ணு
தாட்டமுடன் சதகோடி ரவியுந்தோணுந்
தமர்திறக்கும் வாசலங்கே தயவாய்த்தோணும்
பூட்டமுடன் பூரகத்தி லேறிஞக்கால்
புத்திரனே பொல்லாப்பு போகுந்தானே.

நடத்துவா யோகமுந்தான் தாண்டிற்ருனல்
நலமான கும்பகத்தில் நாடிச்செல்லு
அடத்துவா யோங்காரத் துள்ளொடுங்கி
ஆதிவத்து வுண்டென்றும் அறிவிற்றங்கி
முடத்துவாய் முள்னணியாய்ப் பூஜைசெய்து
மூதண்ட பிரமனேயு மோதித்தாக்கிக்
கடத்துவாய் கரிமாலேக் குருவாய்க்கொண்டு
கருவிகளைக் களைந்துக்கடந் தேறுவாயே
எறுவாய் இப்படியே ஆனபின்பு
என்மகனே அங்குஷ்ட மாகிப்போவாய்
தேறுவாய் கற்பூரச் சுடர்போல் நிற்பாய்
தேவியுந்தா னனுதினமுந் தொண்டுசெய்வாள்

நேருவாய்ப் பரகதியு முனக்குக் கிட்டும்
    நேரான ரவிமதியு மாண்டுபோகும்
பாருபார் பராபரனு நீயுமாவாய்
    பழுதில்லாச் சித்தனென்று பகரலாமே.
நீஞ்சலா மிதைவிட்டாற் கற்பமில்லை
    நித்தமுந்தான் இம்மூலங் கொள்ளவேணும்
பாஞ்சலாஞ் சிகாரமுடன் மகாரம்மிரண்டும்
    பத்தியுடன் அணுவளவு விட்டிடாதே
வாஞ்சலாம் பதின்மூன்று வருடங்கொள்ளு
    வாசியென்ற மயில்மீதி லணைந்துநில்லு
ஆஞ்ஜலா மைவருந்தான் பட்டுப்போவார்
    ஆன்மாவைக் காணலா மறிந்துபாரே.

பாரப்பா அப்படியே உண்டேன்யானும்
    பலவிதயோ சனைகளெல்லாம் பாழாய்ப்போச்சு
ஆரப்பா மும்மூலம் மடுத்துக்கொண்டேன்
    ஆதிவஸ்தை யனுதினமும் பணிந்துகொண்டேன்
நேரப்பா யோகத்தி னிலையைக்கண்டேன்
    நிச்சயத்தைப் பக்தியுடன் நிலைத்துக்கொண்டேன்
சாரப்பா கருவிகளும் பட்டுப்போச்சு
    ஸச்சிதாநந்தனென்று பேருமாச்சு
ஆச்சப்பா ஆறுதலமை யூருக்குள்ளே
    அறிவான ஆத்மாவை யறிந்துகொண்டேன்
ஏச்சப்பா யிடைகலைபிங் கலையிரண்டும்
    இயல்பாக வாங்கிபினி யிழுத்துக்கொண்டேன்
வாச்சப்பா வாசிக்கால் விழுங்கிக்கொண்டேன்
    மாருத சீரஞ்சீவி வரமும்கொண்டேன்
மூச்சப்பா முக்கண்ணை யமுக்கிப்பார்த்து
    முன்னணியாய் நானுமினிக் கண்டிட்டேனே.

மாட்டினர் கும்பகத்தில் மதிக்கச்சொன்னேன்
    மாரும லமுதமதை யுண்ணச்சொன்னேன்
பூட்டினேன் புருவமையத் தமர்திறந்து
    பொல்லாத கருவிகளைப் போக்கச்சொன்னேன்

ஆட்டினேன் அண்டரண்ட வெளியிற்குள்ளே
அரும்பொருளா யனுதினமும் வாழச்சொன்னேன்
காட்டினேன் கருவையெல்லாந் திறந்துமைந்தா
கபடற்ற பூரகத்தைக் கண்டுகொள்ளே."

யோக தத்வோபநிஷத் பிரமாணம்.

(1) விஷ்ணுர்நாம மஹாயோகீ மஹாபூதோ மஹாதபா:
தத்த்வமார்க்கே யதாதீபோ த்ருஶ்யதே புருஷோத்தம:.

புருஷோத்தமனென மஹாவிஷ்ணு, மஹாயோகியாயும் சகல பூதங்களுக்கும் ஆதாரமாயும் விசேஷ தபஸ்வியாயும் தத்வ மார்க்கங்களுக்கெல்லாம் தீபம்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றார்.

(2) ஜந்மம்ருத்யு ஜரா வியாதிநாஶகம் ம்ருத்யுதாரகம்
நாநாமார்கைஸ்து துஷ்ப்ராபம் கைவல்யம் பரமம்பதம்.

பக்தி ஞான யோக மார்க்கங்களினால், ஜீவர்கள் மாயையிலிருந்து விடுபட்டு, கிழத்தனம் வியாதிகள் பிறப்பு இறப்புகளில்லாமல் முக்தியை அடைவதே பரமபதமென்னும் கைவல்யமேயாம்.

(3) பதிதாஶ் ஶாஸ்த்ரஜாலேஷு ப்ரஜ்ஞயா தேந மோஹிதா:
அநிர்வாச்யபதம்வக்தும் நஶக்யம் தைஸ் ஸுரைரபி
ஸ்வாத்ம ப்ரகாஶரூபம் தத்கிம் ஶாஸ்த்ரேண ப்ரகாஶ்யதே.

எல்லோரும் சாஸ்திரமென்னும் வலையில் அகப்பட்டு, அந்த சாஸ்திரங்களில் அதிக மோஹங்கொண்டிருக்கின்றார்கள். பரமபதமென்னும் கைவல்யம் தேவர்களுக்கும் கிடைக்கத் தக்கதல்ல. தன் பிரகாசம், சாஸ்திரங்களினால் பிரகாசிக்கச் செய்யத்தக்கதல்ல.

இனி யோக தத்வோப நிஷத்தில் யோகியினுடைய மஹிமையை சொல்லியிருப்பதை இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

(4) தாதுஸ்திரீ லௌல்யகாதீநி ம்ருகத்ருஷ்ணமயாநிவை
ஞாத்வா ஸுதீஸ்த்யஜேத் ஸர்வாந் விக்நாந் புத்தி ப்ரபாவதஃ

யோகாப்பியாச ஆரம்பகாலத்தில் அனேக விக்கினங்கள் உண்டாகும். அவை யாதெனில்; குடும்பவிஷயத்தில் அனேக கஷ்டங்களை உண்டாக்கும். யோகாப்பியாசிக்கு சோம்பேரித்தனம் தன்னைத்தான் புகழ்ந்துகொள்வது துஷ்ட சகவாசம் மந்திரங்களைச் சாதிப்பது ரசவாதம் (பொன்செய்வது) அதிக ஸ்திரீ சம்போகம் முதலானவைகள் இருக்கலாகாது. புத்திமான்கள், இவைகளையெல்லாம் புண்ணிய விசேஷத்தினால் கானல் நீர்போல் நினைத்து நீக்க வேண்டும்.

(5) ப்ராணாயாமம் ததஃ குர்யாத் பத்மாஸநகதஸ் ஸ்வயம்.

மேற்சொன்னவைகளை யெல்லாம் விட்டு பத்மாசனத்தில் உட்கார்ந்து பிராணாயாமம் செய்யவேண்டும்.

(6) ஸுசோபநம் மடம் குர்யாத் ஸுஸூக்ஷ்ம த்வாரந்து நிர்வ்ரணம்
ஸுவ்ஷ்டு லிப்தம் கோமயேந ஸுதயாவா ப்ரயத்நதஃ
மத்குணைர்மசகைர்லூதைர் வர்ஜிதம்ச ப்ரயத்நதஃ
திநேதிநேச ஸம்ம்ருஷ்டம் ஸம்மார்ஜந்யா விசேஷதஃ
வாஸிதஞ்ச ஸுகந்தேந தூபிதம் குக்குலாதிபிஃ.

மிகவும் அழகுடைய அறையில் காற்றுச் செல்ல துவாரம் வைத்து, சுண்ணம் படித்துப் பசுஞ் சாணத்தினால் மெழுகி, மூட்டுப்பூச்சி கொசுக்கள் எட்டுக்கால் பூச்சிக் கூண்டுகள் சேராதபடி பிரதிதினம் நன்றாய்க் கூட்டி, பளிங்கு சாம்பிராணி தூபம் போட்டு, வாசனை வஸ்துக்களை வைத்து உயர்ந்த ஊதுவத்திகளைக் கொளுத்தி வைக்க வேண்டும். பிறகு,

(7) நாத்யுச்சிரிதம் நாதிநீசம், சேலாஜிந குசோத்தரம்
தத்ரோபவிஶ்யமேதாவீ பத்மாஸந ஸமந்விதஃ
ருஜுகாயஃ ப்ராஞ்ஜலிஶ்ச ப்ரணமே திஷ்டதேவதாம்.

மிகவும் உயரமும் தாழ்வுமில்லாமல், ஒ ரங்குலம் உயரம், இரண்டடி நீளம், ஒண்ணரை அடி அகலமுடைய ஒரு பெரிய மணையை(பலகையை)ப் போட்டு, அதன்மேல் தர்ப்பாசனம் கிருஷ்ணஜினமும் (மான் தோலும்) அமைத்து, அதன்மேல் அபானவாயு படாதபடி வெள்ளை வஸ்திரம் மடித்து விரித்து, பத்மாசனத்துடன் உட்கார்ந்து, கூன் வளையாமல் சித்திரப் பதுமைபோல் நின்று தன்னிஷ்ட தேவதையையும் குருவையும் நமஸ்கரித்து அடியில் சொல்லப்போகும் பிராணயாமம் செய்துவர வேண்டும்.

(8) ததோ தக்ஷிண ஹஸ்தஸ்ய அங்குஷ்டேநைவ பிங்களாம்
நிருத்ய பூரயே த்வாயு மிடயாது ஶநைஶ் ஶநைஃ
யதாஶக்த்ய விரோதேந ததஃ குர்யாச்ச கும்பகம்.

பிறகு வலதுகைப் பெருவிரலால் வலதுநாசியை மூடி, இடது நாசியின் வழியாய் சுவாசத்தை யிழுத்து கும்பகம் செய்யவேண்டும். (நிறுத்தவேண்டும்.)

(9) தாரயித்வா யதாஶக்தி ரேசயேதிடயா ஶநைஃ
யயா த்யஜேத் தயா பூர்யதாரயேத் விரோததஃ.

முன் உள்ளுக்கிழுத்த சுவாசத்தை தன் சக்தியானுசாரமாய் கர்ப்பத்தில் நிறுத்தி, பிறகு சுவாசத்தை நிதானமாய் இடது நாசியை மூடி வலது நாசியால் விடவேண்டும். இதைச் செய்யவேண்டிய மார்க்கம் (முறை) இதனடியில் முன் விவரித்துச் சொல்லப்படும்.

(10) ஏவம் மாஸ த்ரயாப்யாஸாந் நாடீஶுத்திஸ்ததோ பவேத்
யதாது நாடீஶுத்திஃ ஸ்யாத் ததா சிஹ்நாநி பாஹ்யதஃ
ஜாயந்தே யோகிநோ தேஹே தாநி வக்ஷ்யாம்ய ஶேஷதஃ.

மூன்று மாதம் வரையில் சுவாசம், வலது நாசி இடது நாசி இரண்டு நாசிகளிலும் இழுத்து, அடியில் சொல்லப் போகும் கணக்குடன் நிறுத்தினல் நாடி சுத்தியாகும். எப்பொழுது நாடி சுத்தியாகின்றதோ அப்பொழுதே, யோகியினுடைய சரீர அடையாளம் மாறுகின்றது. மாறும் விஷயம் அடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

(11) ஸரீரலகுதா தீப்திர் ஜாடராக்நி விவர்த்தநம்
க்ருஸத்வம்ச ஶரீரஸ்ய ததா ஜாயேத நிஶ்சயம்.
யோகவிக்நக ராஹாரம் வர்ஜயேத் யோகவித்தம꞉.

சரீரம் மிகவும் லேசாயும் காந்தியுடையதாயும் ஆகும். ஜடராக்கினிக்கு அதிக உஷ்ணமுண்டாய் சாப்பிடும்பதார்த் தம் பஸ்மமாய்விடும். எவ்வளவு தூலதேகமா யிருந்த போதிலும் நலிந்து கச்சலாய்விடும். இவைகளெல்லாம் நிக்ஷயமாய் உண்டாகும். யோகாப் பியாசம் செய்யப் பட்டவர்கள், யோக விக்கினமுண்டாக்கும் பதார்த்தங்களை நிவர்த்தி செய்யவேண்டும்.

(12) அப்யாஸகாலே ப்ரதமம் ஶஸ்தம் க்ஷீராஜ்ய போஜநம்.

யோகாப் பியாசிகள், முதல் பாலுடன் போஜனம் செய்வது மிகவும் சிரேஷ்டமானது.

(13) கோதுமமுத்க ஶால்யந்நம் யோகவ்ருத்திகரம் விது꞉.

யோகாப் பியாசியானவன் எப்பொழுதும் கோதுமை பயறு நல்ல பச்சரிசிசாதம் இவைகளைச் சாப்பிட்டு வந் தால் யோகவிருத்தி உண்டாகும்.

(14) தத꞉பரம் யதேஷ்டந்து ஶக்த ஸ்யாத் வாயுதாரணே
யதேஷ்டதாரணாத் வாயோ ஸித்யேத் கேவல கும்பக꞉,
கேவலே கும்பகே ஸித்தே ரேசபூர விவர்ஜிதே
ந தஸ்ய துர்லபம் கிஞ்சித் த்ரிஷு லோகேஷு வித்யதே.

யோகசித்தி யடைந்தபிறகு, வாயுவை தன்னிஷ்டம் போல் நிறுத்த சக்தியுண்டாகும். இவ்வாறு தன்னிஷ்டம் போல் வாயுவை நிறுத்த அப்பியாசம் (சாதனம்) செய்து வந்தால், கேவல கும்பகம் சித்திக்கும். ரேசக பூரகங்க ளில்லாமல் கேவல கும்பகத்தில் இருப்பவனுக்கு மூன்று லோகங்களிலும் அவனுக்கு வேண்டுவது ஒன்றுமில்லை.

(15) ப்ரஸ்வேதோ ஜாயதே பூர்வம் மர்தம்தேந சகாரயேத்.

யோகாப் பியாசம் செய்யும்பொழுது வியர்வை உண் டாகும் அந்த வியர்வையை தேகத்தில் இமிடும்படி தைலம்போல் நன்ருய்த் தேய்த்துவிடவேண்டும். பிறகு அப்யாஸ முதிர்ச்சியினுல் வியர்வை உண்டாகாமல் கிரமக் கிரமமாய் நின்றுவிடும்; இவ்வாறு தேய்த்துவந்தால் சரீ ரத்திற்கு விசேஷ பலமுண்டாகும்.

(16) ததோபி தாரணுத்வாயோ: க்ரமேணைவ ஶனைஶ் ஶனை:
கம்போபவதி தேஹஸ்ய ஆஸந ஸ்த்தஸ்ய தேஹிந:.

கிரமக்கிரமமாய் வாயுவை அதிகநேரம் நிறுத்தப் பழகி வந்தால், பத்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும் யோகி யின் சரீரத்திற்கு நடுக்கல் உண்டாகும. அல்லது, சரீரம் அசையும்.

(17) ததோ திகதராப்யாஸாத் தாருணு ஸ்வேத உத்பவேத்
யதா சதார்த்ரோபாவ உத்ப்ளுத்யோத் ப்ளுத்ய கச்சதி
பத்மாஸந ஸ்த்திதோ யோகீ ததா கச்சதி பூதலே,
ததோதிக தராப்யாஸாத் பூமித்யாகஶ்ச ஜாயதே
பத்மாநஸ்த்தயே வாஸௌ பூமிமுத் ஸ்ருஜ்ய வர்த்தே.

பிறகு, கும்பகத்தில் அதிக நேரமிருக்கும் யோகிக்கு அதிக உஷ்ணமுண்டாய் சரீரமெல்லாம் விசேஷமாய் வியர்க்கும். அப்போது சரீரத்திற்கு தவளையைப்போல்துள் ளிக் குதிக்கும் சக்தி யுண்டாகும். பத்மாசனத்தி லிருக்

கும் யோகி இவ்விதமாய் எகிரிக் குதித்துக்கொண்டே போவான். வாயுவை இன்னும் அதிகநேரம் கும்பகத்தி லிருக்கப் பழகி வந்தால் பூமியிலிருந்து மேல் கிளம்ப சக்தியுண்டாகும்.

(18) அதிமாநுஷ சேஷ்டாதி ததா ஸாமர்த்ய முத்பவேத்
ந தர்ஶயேச்ச ஸாமர்த்யம் தர்ஶநம் வீர்யவத்தரம்
ஸ்வல்பம் வா பஹுவா துஃகம் யோகீ நவ்யததே ததா.

இவ்வப்பியாசத்தினுல், மனிதர்களால் செய்யத்தகாத அசாத்தியமான காரியங்களை மிகவும் சுலபமாய்ச் செய்ய சாமர்த்யம் உண்டாகும். இந்த சாமர்த்தியத்தை வெளி யிடலாகாது. இப்படிப்பட்ட யோகி மிகவும் பலசாலியா யிருப்பான். இந்த யோகி, துக்கம் அற்பமாயும் அதிக மாயும் இருந்தாலும் துக்கிக்கவே மாட்டான்.

(19) அல்பமூத்ர புரீஷஶ்ச ஸ்வல்ப நித்ரஶ்ச ஜாயதே
கீலவோ தூஷிகாலாலா ஸ்வேத துர்கந்ததா நநே
ஏதாநி ஸர்வதாதஸ்ய நஜாயந்தே ததஃ பரம்.

இப்படிப்பட்ட யோகிக்கு, மலமூத்திரம் நித்திரை மிகவும் சொல்பமாகவே யிருக்கும். அன்றியும், வியர்வை வாய் நாற்றம் சொள்ளு வடிதல் (கடைவாய் வடிதல்) காதுகளில் குரும்பி கண்களில் பீளைகட்டுவது முதலான வைகள் உண்டாகமாட்டா.

(20) ததோதிகதராப்யாஸாத் பலமுத்பத்யதே பஹு
யேந பூசரஸித்திஃ ஸ்யாத் பூசராணும் ஜயே க்ஷமஃ
வ்யாக்ரோவா ஶரபோவாபி கஜோ கவய ஏவவா
ஸிம்ஹோவா யோகிநா தேந ம்ரியதே ஹஸ்ததாடிதஃ.

கடைசியில், யோகாப்பியாசத்தினுல் அதிக பலமும் பூசர சித்தியும் உண்டாகும்; சகலமிருகங்களையும் ஜயிக்கும் சாமர்த்திய முண்டாகும். அன்றியும், புலி சிங்கம் யானை

முதலானவைகளை யோகி, தன் கையால் அடித்த மாத்திரத்தில் அவைகள் மரணமடையும். ஏனென்றால், யோகி வாயுவை விசேஷமாய் கும்பகத்தில் நிறுத்துவதனால் அந்த வாயுபலத்தால் அவைகள் மரணமடைகின்றது.

(21) கந்தர்பஸ்ய யதாரூபம் ததா ஸ்மாதபி யோகிந:
தத்ரூபவஶகா நார்ய: காங்க்ஷந்தே தஸ்யஸங்கமம்
யதிஸங்கம் கரோத்யேஷ தஸ்யபிந்துக்ஷயோ பவேத்
வர்ஜயித்வாஸ்திரியாஸ் ஸங்கம் குர்யா தப்யாஸமாதராத்
யோகிநோங்கே ஸுகந்தஶ்ச ஜாயதே பிந்துதாரணாத்.

இப்படிப்பட்ட யோகி, மன்மதனைப்போன்ற அழகுடையவனுயிருப்பான். ஸ்திரீகள் இவனைப் பார்த்தவுடன் மோஹிப்பார்கள். அப்போது யோகி அந்த ஸ்திரீகளுடன் சம்போகம் செய்தால் இந்திரியம் நஷ்டமாகும். ஆதலால், ஸ்திரீ சம்போகம் நிவர்த்திசெய்து மிகவும் சிரத்தையுடன் யோகாப்பியாசம் செய்துவரவேண்டும். இவ்விதமாய் யோகாப்பியாசம் செய்து, இந்திரியம் விடாமல் இருக்கும் யோகியின் சரீரம் மிகவும் பரிமள வாசனையுள்ளதாக ஆகும்.

(22) ததோ ரஹஸ்யுபாவிஷ்ட: ப்ரணவம் ப்லுதமாத்ரயா
ஜபேத் பூர்வார்ஜிதாநாந்து பாபாநாம் நாஶஹேதவே.

பிறகு, ஏகாந்தமான ஸ்தலத்தில் உட்கார்ந்து, பூர்வ ஜன்ம தோஷங்கள் (யோகாப்பியாசம் செய்யாதமுன் செய்த பாபங்களெல்லாம்) நசிப்பதற்காக, பிரணவமென்னும் ஓங்காரத்தினல் கும்பித்த சுவாசத்தை, கணக்குடன் ஜபித்து வரவேண்டும்.

(23) ஸர்வவிக்ந ஹரோமந்த்ர: ப்ரணவஸ் ஸர்வதோஷஹா
ஏவமப்யாஸயோகேந ஸித்திராரம்ப ஸம்பவா.

'ஓம்' என்னும் பிரணவம், சகல விக்கினங்களையும்

சகல பாபங்களையும் நசிக்கச் செய்யும். இப்படிச் செய்வதனால் சகலமும் சித்தியுண்டாகும்.

(24) ஏகவாரம் ப்ரதிதினம் குர்யாத் கேவலகும்பகம்.

பிரதி தினம் ஒருமுறை, கேவல கும்பகம் அப்பியாசம் செய்யவேண்டும். என்றால், சுவாசம் கர்ப்பத்தில் அதிகநேரம் நிறுத்தவேண்டும்.

(25) இந்திரியாணீந்த்ரியார்த்தேப்யோ யத் ப்ரத்யாஹரணம் ஸ்புடம்
யோகீ கும்பக மாஸ்தாய ப்ரத்யாஹாரஸ் ஸ உச்யதே.

யோகியானவன் கேவல கும்பகத்திலிருந்து, கண்கள் மூக்கு வாய் செவிகள் தேஹசர்மம் என்னும் ஐந்து இந்திரியங்களையும் விஷயங்களில் போகவிடாமல் திருப்புவதே, பிரத்தியாஹார மென்று சொல்லப்படும்.

(26) யாமமாத்ரம் ப்ரதிதினம் யோகீ யத்நாததந்த்ரிதஃ
யதாவா சித்ரஸாமர்த்யம் ஜாயதே யோகினோ த்ருவம்.

யோகியானவன், சோம்பலில்லாமல் பிரதிதினம் சுவாசம் ஒருமணி அதாவது இரண்டரை நாழிகை கும்பகம் செய்தால், அவனுக்கு அனேக சாமர்த்தியங்கள் உண்டாகும். அன்றியும்,

(27) அரஸ்ருதிர் தூர த்ருஷ்டிஃ க்ஷணாத் தூரகமஸ்ததா
வாக்ஸித்திஃ காமரூபத்வ மத்ருஶ்யகரணீ ததா
மலமூத்ர ப்ரலேபேந லோஹாதே ஸ்வர்ணதா பவேத்
பேசதி ஸ்தஸ்யஜாயேத ஸந்ததாப்யாஸ யோகதஃ.

தூரத்திலுள்ள சப்தங்களைக் கேட்கவும் பார்க்கவும், க்ஷணத்திற்குள் தூர பிரயாணம் செல்லவும், இஷ்டமான ரூபங்களை எடுக்கவும், தன்னை இதரர்கள் அறிந்துகொள்ளக்கூடாத சக்தியும் உண்டாகும. இப்படிப்பட்ட யோகியினுடைய மலமூத்திரங்களை இரும்பில் பூசினால் தங்கமாகும். எப்பொழுதும் யோகாப்பியாசம் செய்துகொண் டிருக்கப்

பட்டவனுக்கு ஆகாசத்தில் சஞ்சரிக்கும் சக்தியும் உண்டாகும்.

(28) ததா புத்திமதா பாவ்யம் யோகினா யோகவித்தயே
ஏதேவிக்னா மஹாஸித்தேர்னரமேத்தேஷு புத்திமாந்.

யோகியானவன், தனக்கு யோகம் சித்திக்குமென்னும் எண்ணத்தினுல் பிரதிதினம் யோகாப்பியாசம் செய்துவரவேண்டும். யோகாப்பியாசம் சித்தியான பிறகு, முன் சொல்லிய தூர சிரவண முதலாகிய ஸித்திகளெல்லாம் பரமாத்மா சம்பந்தத்திற்கு (யோகத்திற்கு) விக்கினங்கள். ஆதலால், புத்திமான்கள் அப்படிப்பட்ட விஷயங்களில் இச்சை வைக்கலாகாது.

(29) ஶிஷ்யாஶ்ச ஸ்வஸ்வ கார்யேஷு ப்ரார்த்தயந்தி ந ஸம்ஶயஃ
தத்தத்கர்மகரவ்யக்ர ஸ்வாப்யாஸோ விஸ்ம்ருதோ பவேத்.

சிஷ்யர்கள், தங்கள் காரணார்த்தமாய் யோகியை பிரார்த்திப்பார்கள். அந்த காரியங்களில் யோகி பிரவேசிப்பானுகில், தன் யோகாப்பியாசத்திற்கு விக்கினமுண்டாகும். ஆதலால்,

(30) அவிஸ்ம்ருத்ய குரோர்வாக்ய மப்யஸேத் தத ஹர்நிஶம்.

குரு வாக்கியத்தை மறவாமல், எப்பொழுதும் யோகாப்பியாசம் செய்துவரவேண்டும்.

(31) ததஃ பரிசயாவஸ்தா ஜாயதே ப்யாஸயோகதஃ.

யோகாப்பியாசம் சித்தியான பிறகு, பரமாத்மாவிற்குக் கேவல சமீபத்திலிருக்கும் ஸ்திதிக்கு வருகின்றான். என்றால், யோகத்தில் அனுபவம் அதிகமுண்டாய் மோக்ஷமடையும் ஸ்திதிக்கு வருவான் என்பதேயாம்.

(32) வாயுஃ பரிசிதோ யத்நா தக்நிநா ஸஹ குண்டலீ
பாவயித்வா ஸுஷும்நாயாம் ப்ரவிஶேத நிரோததஃ
வாயுநா ஸஹசித்ரம் ச ப்ரவிஶேச்ச மஹாபதம்.

தன் பிரபத்தினத்தால், நாபியிலிருக்கும் குண்டலி சக்தியை சுவாசத்தினுல் கிளப்பினவுடன், அது முது கெலும்பில் இருக்கும் சுஷும்நா என்னும் வெள்ளை நரம் பிலுள்ள துவாரத்தில், மிகவும் விசித்திரமாய்ப் பிரவேசிக் கும்.

(33) ப்ரஹ்மண: ப்ரளயே நாபி ந ஸீததி மஹாமதி:
ஸமப்யஸேத் ததா த்யாநம் கடிகா ஷஷ்டிமேவச.

மேற்சொல்லியவைகளை யெல்லாம் அப்யாசம் செய்த யோகி, பிரம பிரளயத்திலும் மரணமடையமாட்டான். ஆதலால், அல்லும் பகலுமாய் அறுபது நாழிகையும் விடா முயற்சியாய் யோகாப்பியாசம் செய்துவரவேண்டும்.

(34) வாயும் நிருத்ய மேதாவீ ஜீவந்முக்தோ பவத்யயம்
ஸமாதிஸ் ஸமதாவஸ்தா ஜீவாத்ம பரமாத்மநோ:.

மஹா புத்திமானு யிருக்கும் யோகி, வாயுவை நிறுத்தி ஜீவன் முக்தனுகின்ருன். ஜீவாத்மா பரமாத்மா ஐக்கியமே சமாதி என்று சொல்லப்படும்.

(35) யதி ஸ்வதேஹ முத்ஸ்ரஷ்டுமிச்சாசே துத் ஸ்ருஜேத் ஸ்வயம்
பரப்ரஹ்மணி லீயேத ந தஸ்யோத்க்ராந்தி ரிஷ்யதே.

இவ்வாறு சித்தியடைந்த யோகியானவன், தன் சரீ ரத்தை விட்டுவிடவேண்டுமென்று நினைத்தால் விட்டுவிட லாம். இப்படிப்பட்ட யோகி பரப் பிரம்மத்தில் ஐக்கிய மானபிறகு, அவன் மறுபடியும் அதிலிருந்து விடுபடமாட் டான். மேலும்,

(36) அதநேச்சேத் ஸமுத்ஸ்ரஷ்டும் ஸ்வஶரீரம் ப்ரியம் யதி
ஸர்வலோகேஷு விஹரந் நணிமாதி குணாந்வித:.
கதாசித் ஸ்வேச்சயா தேவோ பூத்வா ஸ்வர்கே மஹீயதே
மநுஷ்யோ வாபி யக்ஷோவா ஸ்வேச்சயாபி க்ஷணாத் பவேத்.

முன் சொல்லிய யோகி, தன் சரீரத்தைவிட இஷ்ட மில்லாவிட்டால், அணிமாதி ஸித்திகளால் சகல லோகத்தி லும் சஞ்சரித்து, ஒரு சமயத்தில் விஷ்ணுரூபம் தரித்து சொர்க லோகத்திலும் பூஜிக்கப்படுவான். இந்த யோகி, மனுஷ்யனு யிருந்தபோதிலும் தன்னிஷ்டம்போல் யக்ஷனு யும் ஆகலாம். அன்றியும்,

(37) ஸிம்ஹோ வ்யாக்ரோ கஜோவாஶ்வ ஸ்வேச்சயா பஹு-
தாயியாத், யதேஷ்டமேவ வர்தேத யத்வா யோகீ மஹேஶ்வர:
அப்யாஸபேததோ பேத: பலந்து ஸமமேவஹி.

சிங்கம் புலி யானை குதிரை முதலானவைகள், யோகியி னுடைய இஷ்டம்போல் நடந்துகொள்ளும்; யோகி தன் னிஷ்டம்போல் நடந்துகொள்ளலாம். மஹேசுவரனுயும் அவதாரம் செய்யலாம்.

(38) நிஶ்சிதம் த்வாத்மமாத்ரேணு வஶிஷ்டம் யோகஸேவயா
ஸஹநாவவ த்விதிஶாந்தி: இத்யுபநிஷத்.
இதி யோகதத்வோபநிஷத் ஸமாப்தா.

ஜனங்கள் இல்லாத ஏகாந்தமான இடத்தில் உட் கார்ந்து, நவ துவாரங்களிலும் சுவாசம் போகாதபடி நிறுத்தி யோகாப்பியாசம் செய்துவந்தால் "தானேதா ணுய்" ஆகலாம் என்று யோக தத்துவோபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. யோகாப்பியாசம் செய்யும் மார்க்கம் இதனடியில் இனி சொல்லப்போகின்றோம். ஆத லால், இதையே குருவாக்காய் நினைத்து இதில் சொல்லியது போல் யோகாப்பியாசம் (பிராணுயாமம்) செய்து வரப்பட்ட வர்கள், முன் சொல்லிய பதவியை சத்தியமாய் அடைய லாம்.

(39) சுலோ || ரேசகோஸ்வாஸ நிஶ்வாஸ: பூரக: பரிசக்ஷதே
தத்ரோத: கும்பகஶ்சைவ ப்ராணுயாம: ஸ உச்யதே.

உஸ்வாஸ நிஸ்வாஸ: = பிராணவாயுவை வெளியில் விடுவதும் உள்ளுக் கிழுப்பதும்; ரேசக = ரேசகமென்றும், பூரக: = பூரகமென்றும், பரிசக்ஷதே = சொல்லப்படுகின்றது. தத்ரோத: = அந்த பிராணவாயுவை உள்ளுக்கும் வெளிக்கும் போகவிடாமல் நிறுத்துவது, கும்பக: = கும்பகமென்றும், பரிசக்ஷதே = சொல்லப்படுகின்றது, ஸ: = அது, ப்ராணுயாம: = பிராணுயாமமென்று, உச்யதே = சொல்லப்படுகின்றது.

தாத்பரியம்:—பிராணவாயுவை வெளியில் விடுவது ரேசகமென்றும், உள்ளுக்கிழுப்பது பூரகமென்றும் சொல்லப்படுகின்றது. அந்த பிராணவாயுவை உள்ளுக்கிழுத்து வெளியில் போகவிடாமல் நிறுத்துவது கும்பகமென்று சொல்லப்படுகின்றது. என்றால், பிராணனை அடக்கி ஆளுவதே பிராணுயாமமென்பர். இம்மூன்றையும் விவரித்துச் சொல்லுகின்றோம்; கேளுங்கள்.

ரேசகமேன்பது:—நுரை ஈரலில் தங்கி இருக்கும் சுவாசத்தை மூக்குத் துவாரங்களின் வழியாய் வெளியில் விடுவது. இதற்கு உசுவாஸமென்று சொல்லப்படும்.

பூரகமேன்பது:—வெளிக்காற்றை, மூக்குத் துவாரங்களின் வழியாய் உள்ளுக்கிழுப்பது. இதற்கு நிசுவாஸமென்று சொல்லப்படும்.

கும்பகமேன்பது:—உள்ளுக்கிழுத்த சுவாசத்தை என்றால் மூச்சை, வெளியில் போகவிடாமல் நுரை ஈரலில் நிறுத்துவது. (இதன் விவரங்களை, ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம்-4, சுலோகம்-29,29½ யில் சொல்லியதை முன் சொல்லப் போகின்றோம்.

இது, குருவினால் தெரிந்துகொண்டு அப்பியாசம் செய்து வரவேண்டும். ஆதலால், இந்த பிராணுயாமாப்

பியாசம் செய்துவரவேண்டுமென்று நினைக்கப்பட்ட புருஷர்கள் இதையே குருவாக்காய் நினைத்து இதில் சொல்லியிருப்பதுபோல் பிராணுயாமம் செய்துகொண்டு வருவார்களாகில், அவர்கள் யோகசித்தியைத் தப்பாமல் அடைவார்களென்று அறிவீர்களாக.

அன்பர்களே! ஏகாந்தமான ஸ்தலத்தில் காற்றுச் செல்லாத ஒரு பரிசுத்தமான இருட்டு அறையில், பரிமள சுகந்தவாசனைகளைவைத்துத் தயார் செய்துவைக்கவேண்டும். பிறகு, எறும்புமூட்டைப்பூச்சிமுதலானவைகள்கடிக்காமலிருப்பதற்காக மிகவும் உயரமாயும் தாழ்வாயும் இல்லாமல், ஒரு அங்குல உயரமுள்ள ஒரு பெரிய மணையைப் போட்டு, மனம் வெளியில் ஓடாமல் நிறுத்தி யோகாப்பியாசம் செய்வதற்காக, அந்த மணையின்மீது தர்ப்பாசனமும், அதன்மீது மான்தோலும் போட்டு பிராணுயாமம் செய்யும்போது சுவாசத்தை மூக்குத் துவாரங்களின் வழியாய் இதனடியில் சொல்வதுபோல் இழுத்து, அதை வெளியில் விடாமல் இருதயத்தில் நிறுத்தவேண்டும். பிறகு, இருதயத்தில் நிறுத்திய சுவாசம் வெளியில் வராதபடி கண்டத்தை மூடிவிடவேண்டும். சுவாசம், மூக்கின் துவாரங்களின் வழியாய் விடாமல் கண்டத்தினிடம் மூடிவிட்டால் அந்த சுவாசமானது குதஸ்தானத்தின் வழியாய் அபான வாயுவாய்ப் போகும்.

அந்த அபானவாயு மேற்சொல்லிய மான்தோல்மீது படாமலிருப்பதற்காக அதன்மேல் வெள்ளை வஸ்திரம் விரித்துப்போட்டு * பத்மாசனத்திலாவது அல்லது

---

* பத்மாசன மென்றால், வலது பாதத்தை இடது தொடையின் மீதும், இடது பாதத்தை வலது தொடையின் மீதும் வைத்து இரண்டு பாதங்களும், ஆகாசத்தைப் பார்க்கும்படி வைப்பது பத்


Adenoid growth
air path (காற்றுப்பை)
food path (தீனிப்பை)
№1 Shut (மூடு)

† சித்தாசனத்திலாவது உட்கார்ந்து இனிமேல் சொல்லப் போகும் யோகத்தை அப்பியாசம் செய்துவரவேண்டும்.

யோகாப்பியாசம் நாளுக்குநாள் விருத்தியாய் வருவதனுல் உள்ளே நிறுத்தியிருக்கும் வாயு (சுவாசம்) குடலில் பிரவேசிக்கும். குடலில் பிரவேசித்த சுவாசமானது சும்மா இராமல் மேலுக்கும் கீழுக்கும் ஏறிக்கொண்டும் இறங்கிக் கொண்டும், மல மூத்திரங்களை வெளியில் தள்ளச்செய்யும். ஆதலால், முதல் மல மூத்திரங்களை விசர்ச்சனம் செய்த பிறகு (விட்டபிறகு) பிராணுயாமம் செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

எதிரில் 'சிரசுனுடைய படம்' ☛ காட்டியிருக்கின்றது. அந்தப் படத்தில் காட்டியிருக்கும் காற்றுப்பை வழியாய்ச் சென்று, நுரையீரலில் (Lungs ல்) தங்கியிருக்கும் சுவாசத்தை யெல்லாம் (மூச்சை எல்லாம்) வெளியில் விட்டுவிடவேண்டும். இப்படி விட்டுவிடுவதே 'ரேசக' மென்று சொல்லப்படும். இவ்விதமாய் சுவாசம் (மூச்சு)

மாசனமென்று சொல்லப்படும். இந்த பத்மாசனம் இன்நூல் முதலில் இன் நூலாசிரியர் படத்தில் பாருங்கள்.

† சித்தாசனமென்ருல், இடது பாதத்தை வலது தொடையின் கீழ் வைத்து, வலதுபாதத்தை, இடது தொடைக்கும் முழங்கால் கணுக்கால் இரண்டிற்கும் மத்தியில் வைத்து, கழுத்து சிரசு மார்பு இவைகளை சமமாய் நிறுத்தி இடுப்பு கூன்வளையாமல் ஸ்தம்பம் போல் நிறுத்தி சிந்முத்திரையுடன் 'நிஷ்டை'யில் இருப்பது. இந்த சித்தாசனம் தெரிந்துகொள்ள வேண்டுமானுல், இன்நூலில் இதுவே சிவராஜயோக ஸமாதி இதை ஜபம் செய்யுங்கள். என்னும் அட்டவணையில், அடியேன் சித்தாசனத்துடன் உட்கார்ந்து மூக்குத் துவாரங்களின் வழியாய், "ஸோஹம்" மந்திரம் சுவாசத்துடன் சேர்த்து உள்ளுக்கிழுத்துக் காட்டும் படத்தைப் பாருங்கள் அவ்வாறு உட்கார்ந்திருப்பதே சித்தாசனம். சிந்முத்திரையின் விவரம் இனிமேல் சொல்லப்போகின்ருேம்.

வெளியில் விட்டவுடன், அதன் தொடர்ச்சியாகவே சுவாசத்தை (மூச்சை) இனிமேல் சொல்லப்போகும் 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்துடன் உள்ளுக்கிழுத்து நுரை ஈரலில் நிறுத்துவதுதான் சரியான 'காயத்திரீ' ஜபமேயொழிய, வலதுகைப் பெருவிரல் மோதிர விரல்களை வலது இடது நாசிகளின்மீது வைத்து,

ஓம் பூ:; ஓம் புவ:, ஓம் ஸுவ:, ஓம் மஹ:, ஓம் ஜந:, ஓம் தப:, ஓம் ஸத்யம், தத்ஸவிதுர்வரேண்யம், பர்கோ தேவஸ்யதீமஹி, தியோ யோந: ப்ரசோதயாத், ஓம் ஆபோஜ்யோதீ ரஸோம்ருதம் ப்ரஹ்ம பூர்புவ ஸ்வரோம்.

என்னும், 'காயத்திரீ' மந்திரத்தை கர்மவாக்கினால் சொல்லி, உசுவாச நிசுவாசங்களை (மூச்சு) விட்டும் இழுத்தும், இடதுகை விரல்களை மடிப்பது காயத்திரியாகமாட்டா. இந்த "காயத்திரீ" மந்திரம் பிராணாயாமம் செய்யும்போது சொல்லவேண்டிய மந்திரம்.

சிறு பிள்ளைகளுக்கு எட்டாவது வயதில் உபநயனம் செய்யும்போது பிராணாயாமம் செய்யும் வழியைச் சொல்ல மாட்டார்கள்; ஏனென்றால், பிராணாயாமம் செய்ய தமக்கே சக்தியில்லாம லிருக்கின்றார்கள். ஆதலால், சுவாசத்தை (மூச்சை) நிறுத்தினவனைப்போல் மூக்கைப் பிடித்துக் காட்டுவதற்காக சிறுவர்களின் வலது இடது மூக்கின் மீது மோதிரவிரல் பெருவிரல்களை எவ்விதமாய் வைக்க வேண்டுமோ அவ்விதமாய் வைத்துக் காட்டிக்கொடுத்து, முன் சொல்லிய 'காயத்திரீ' மந்திரத்தைச் சொல்லும்படி கற்றுக் கொடுப்பார்கள். அதுபோல் சிறுவர்கள், எட்டு வயது முதல் எண்பது வயதுவரையில் அதையே ஜபித்து வந்து, பிராணாயாமத்தின் ரஹஸ்யம் தெரிந்துகொள்ளாமல் மரணமடைகின்றார்கள். அதன் ரகசியத்தை இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

மூக்கு இரண்டு துவாரங்களின் வழியாய் அடிக்கடி மாறி மாறி நடந்துகொண்டிருக்கும் சுவாச மென்னும் குதிரைகளை அடக்கவும் விடவும் தெரிவதில்லை; இந்த சுவாசமென்னும் குதிரைகளை கணக்குடன் நிறுத்தியும், விட்டும் வருபவர்களுக்கு யமனை வெல்லும் தன்மையுண்டாகும்; அதிவேகமாய் மூக்குத் துவாரங்களின் வழியாய் ஓடிக்கொண்டிருக்கும் வாசியென்னும் குதிரைகளை இழுத்துப்பிடிக்க குரு உபதேசம் பெற்ருல், அக்குதிரைகள் வசப்படுந்தானே; ஆதலால், இந்த வாசி யென்னும் குதிரைகளின் ஓட்டத்தை அடக்கி மிகவும் நிதானமாய் நடத்த இதனடியில் சொல்லப்போகின்ருேம். ஆதலால், அதையே குரு வாக்காய் எண்ணி,

ஸதானந்தன் வெப்பேரி போஸ்டு, சென்னை இவ்விலாசத்திற்கு எழுதி, இன் நூலாசிரியரது சின் முத்திரைப் படம் வரவழைத்து, அப்படத்திற்கு எள்ளுடன் நீரிறைல், உடல் பொருள் ஆவி இம்மூன்றையும் தத்தம்செய்து, அடியில் சொல்வதுபோல் பிராணுயாமம் செய்துவந்தால் சித்தி பெறுவார்கள்; திருமந்திரத்தில் குருவினுல் தெரிந்துகொள்ளவேண்டுமென்று சொன்னபடியால், மேற்சொல்லியதுபோல் உங்களைச் செய்யும்படி யாம் சொன்னேம்;

எற்றி யிறக்கி யிரு காலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக் குங் கணக் கறிவா ரில்லை
காற்றைப் பிடிக் குங் கணக் கறிவா ளர்க்கு
கூற்றை யுதைக் குங் குறி யது வாமே.

ஆரிய னல்லன் குதிரை யிரண்டுள
வீசிப் பிடிக்கும் விர கறிவா ரில்லை
கூரிய நாதன் குருவி னருள் பெற்ருல்
வாரிப் பிடிக்க வசப் படுந் தானே. [திருமந்திரம்.]

இனி, பிராணுயாமம் செய்யவேண்டிய முறையைத் தெரிவிக்கின்ருேம்.

அன்பர்களே! நூதனமாய் யோகாப்பியாசம் செய்யப்பட்டவர்கள், பத்மாசனத்தில் உட்கார்வது மிகவும் கஷ்டம். ஆதலால், முன் சொல்லியதுபோல் சித்தாசனத்தில் உட்கார்ந்து நான்கு விழுங்கு ஜலம் சாப்பிட்டு பிறகு கண்களை மூடி சுவாசம் (மூச்சு) வலது நாசியில் சென்றாலும்சரி, அல்லது இடது நாசியில் சென்றாலும் சரி அதை கவனிக்காமல் வலதுகைப் பெருவிரல் மோதிரவிரல் இவைகளை வலது இடது நாசி (மூக்கு) களின்மீது வைத்து, இடது நாசியையும் வாயையும் கண்களையும் மூடி, வலது நாசியைத் திறந்து, வலது விலா நுரையீரலில் தங்கியிருக்கும் சுவாசத்தையெல்லாம் வெளியில் விட்டுவிட்டு அதன் தொடர்ச்சியாகவே சுவாசத்தை வலது நாசியில் இழுக்க வேண்டும். சுவாசம் இழுக்கும்போது, மேற்சொல்லிய 'காயத்திரீ'யி லிருக்கும், ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! என்னும் பிரணவத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு, அஜபாவாய் (மனதினுலேயே) சுவாசத்துடன் சேர்த்து, நுரையீரலில் எவ்வளவு சுவாசம் கொள்ளுகின்றதோ அவ்வளவு சுவாசத்தை ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! என்று மனதில் நினைத்துக்கொண்டே உள்ளுக்கிழுத்துவிழுங்கி, மறுபடியும் இன்னும் சுவாசம் உட்கொள்ளுகின்றதா என்னவென்று பார்ப்பதற்காக அதே நாசியில் சுவாசத்தை ஓம் என்று மனதில் நினைத்து இழுத்துப் பார்க்கவேண்டும்; அச்சமயம் அரை ஒன்று இரண்டு மூன்றங்குல நீளம்வரையில் சுவாசம் உள்ளுக்குச் செல்லும்; அப்படிச் சென்ற சுவாசத்தையும் மறுபடியும் விழுங்கவேண்டும். இதுவே "பூரக" மென்று சொல்லப்படும். இவ்விதமாய் இழுத்து விழுங்கியபின் மூக்கின்மீதிருந்த கையை எடுத்துவிடவேண்டும். பிறகு, சுவாசம் வெளியில் வராம லிருப்பதற்காக 409-வது, பக்கத்தில் காட்டியிருக்கும் சிரசுனுடைய படத்தில் No 1.

என்று குறித்திருக்கும் இடத்தில் கண்டத்தை (தொண்டையை) முடவேண்டும். மூடினவுடன் இரண்டு கைகளையும் இரண்டு தொடைகளின்மீதுவைத்து கண்களை மூடி 1, 2, 3, 4, 5 என்று மனதில் நினைத்துக்கொண்டே வலது கை, ஐந்து விரல்களையும் மடக்கவேண்டும். இவ்விதமாய் வலதுகை ஐந்து விரலையும் மடக்கியபின், இடதுகைச் சுண்டுவிரலை மடக்கவேண்டும்.

இவ்வகையில் இடதுகை ஐந்துவிரல்களையும் மடக்கிஞல் அது, கணக்கில் $5 \times 5 = 25$, ஐயைந்து இருபத்தைந்து ஆகின்றது. 25 ஆனவுடன், இடதுநாசியை மூடி, உள்ளே நிறுத்தியிருக்கும் சுவாசத்திலிருந்து ($1\frac{1}{2}$) ஒண்ணரை அடி நீள சுவாசம் அதாவது, நாபி (தொப்புள்) வரையில், ஓம்! ஓம்! ஓம்! ஓம் என்று வலது நாசியின் வழியாய் விட்டு, உடனே அதன் தொடர்ச்சியாகவே எவ்வளவு சுவாசம் உட்கொள்ளுகின்றதோ அவ்வளவு சுவாசமும் பூர்த்தியாய் வலது நாசியில் ஓம்! ஓம்! ஓம்! ஓம் என்று உள்ளுக்கிழுத்து விழுங்கி, 1 என்று, பெரியலக்கமாய் மனதில் நினைத்து புருவமத்தியில் வைத்து, அந்த லக்கத்தின்மேல் மிகவும் ஜாக்கிரதையாய் திருஷ்டிவைத்துப் பார்த்துக்கொண்டே, மறுபடியும் வலதுகை ஐந்து விரல்களையும் விட்டு இடதுகைச் சுண்டுவிரலை மடக்கவேண்டும்; இவ்விதமாய் இடதுகை ஐந்து விரலையும் மடக்கிஞல் அது, கணக்கிற்கு இருபத்தைந்து ஆகின்றது; 25 ஆனவுடன் மறுபடியும் முன்போல் இடது நாசியை மூடி வலது நாசியின் வழியாய், நாபிவரையில் சுவாசம் ஓம்! ஓம்! ஓம்! ஓம் என்று விட்டு, அதன் தொடர்ச்சியாகவே சுவாசத்தை பூர்த்தியாய் ஓம்! ஓம்! ஓம்! ஓம் என்று உள்ளுக்கிழுத்து விழுங்கி புருவமத்தியில் முன்னிருந்த 1, என்னும் லக்கத்தை மனதிஞல் எடுத்துவிட்டு அந்த இடத்தில் 2, என்னும் லக்கத்தை மன

தில் நினைத்து வைத்து, மறுபடியுப் 25 எண்ணி முடிந்தவுடன், முன்போல் நாபிவரையில் சுவாசம் ஓம்! ஓம்! ஓம்! ஓம் என்று விட்டு, அதன் தொடர்ச்சியாகவே சுவாசத்தைப் பூர்த்தியாய் ஓம்! ஓம்! ஓம்! ஓம் என்று உள்ளுக்கிழுத்து விழுங்கி, புருவ மத்தியில் முன்னிருந்த 2 என்னும் லக்கத்தை மனதினால் எடுத்துவிட்டு அந்த இடத்தில் 3 என்னும் லக்கத்தை மனதில் நினைத்து வைத்து, மறுபடியும் 25 எண்ணி முடிந்தவுடன் முன்போல் நாபிவரையில் சுவாசம் ஓம்! ஓம்! ஓம்! ஓம் என்று உள்ளுக்கிழுத்து விழுங்கி, புருவ மத்தியில் முன்னிருந்த 3 என்னும் லக்கத்தை மனதினால் எடுத்துவிட்டு அந்த இடத்தில் 4 என்னும் லக்கத்தை மனதில் நினைத்து வைக்கவேண்டும்; இவையெல்லாம் சேர்ந்து கணக்கிற்கு 125-எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தினதாகின்றது.

125-எண்ணும் வரையில் சுவாசத்தை நிறுத்துவது மிகவும் கஷ்டமாயிருக்கும்; ஆதலால், இருபத்தி ஐந்துக்கு ஒருமுறை சுவாசம் நாபிவரையில் விட்டு உள்ளுக்கிழுத்து விழுங்கி, மறுபடியும் இருபத்தி ஐந்து எண்ணினால் அவ்வளவு கஷ்டமிராமல் மிகவும் சுலபமா யிருக்கும்; இதுபோல், இருபத்தி ஐந்துக்கு ஒருமுறை சுவாசம் விட்டு இழுத்து நூற்றிருபத்தி ஐந்து வரையில் செய்துபாருங்கள், அப்போது கஷ்டமில்லாமல் மிகவும் சுலபமாய்ச் செய்யலாம்.

நான்குமுறை சுவாசம் விட்டு, 125 எண்ணும் வரையில் செய்ய உங்களுக்கு கஷ்டமா யிருந்தால், 25 எண்ணி முடித்து, சுவாசம் நாபிவரையில் விட்டு, மறுபடியும் உள்ளுக்கிழுத்து இருபத்தி ஐந்து எண்ணும்வரையில் மாத்திரம் செய்யுங்கள். அப்போது 50-எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தினதாகின்றது. இருபத்தி ஐந்து எண்ணி, சுவா

சம் விட்டு இழுத்து, மறுபடியும் இருபத்தி ஐந்து எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தினல் மிகவும் சுலபமாயிருக்கும்; இவ்வாறு இருபது தினங்கள் செய்தபிறகு, சுவாசம் இரண்டுமுறை விட்டுச்செய்யுங்கள், அப்பொழுது 75 எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தினதாகின்றது. இவ்வாறு இருபதுதினங்கள் செய்தபிறகு, சுவாசம் மூன்றுமுறை விட்டுச் செய்யுங்கள், அப்போது நூறு எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தினதாகின்றது. இவ்வாறு இருபது தினங்கள் செய்தபிறகு சுவாசம் நான்கு முறைவிட்டுச் செய்யுங்சள், அப்பொழுது நூற் றிருபத்தி ஐந்து எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தினதாகின்றது.

இருபத்தி ஐந்துக்கு ஒருமுறை சுவாசம் வெளியில் விட்டு உள்ளுக்கிழுத்து, ஒவ்வொரு முறையும் ஒன்று இரண்டு மூன்று நான்கு என்று லக்கங்களை புருவமத்தியில் வைத்து அதை மிகவும் ஜாக்கிரதையுடன் திருஷ்டித்துப் பார்க்கவேண்டுமென்று சொல்வதற்குக் காரணம் யாதெனில், சுவாசத்தை உள்ளுக்கிழுத்து நிறுத்தியபோது சரீரத்திற்கு உண்டாகும் நோயினலும், கணக்குகளை மனதில் நினைத்து எண்ணுவதனலும் சுவாசம் இத்தனைமுறை வெளியில் விட்டு இழுததோம் என்பது ஞாபகம் இராது; புருவமத்தியில் 1, 2, 3, 4 என்று லக்கங்களை வைத்து அந்த லக்கங்களை மனக்கண்ணல் பார்த்துக்கொண்டு வந்தால், இத்தனைமுறை சுவாசத்தை விட்டு இழுத்தோம் என்று நன்றாய் ஞாபகம் இருக்கும்; அப்படிக்குச் செய்யாமல், எத்தனைமுறை சுவாசம் விட்டோமென்று மனதில் நினைத்துப் பார்த்தால் ஞாபகமே யிராது; இதற்காகவே சுவாசம் விட்டு இழுத்து இருபத்தி ஐந்துக்கு ஒருமுறை லக்கங்களை புருவமத்தியில் மாற்றிவைத்து வரவேண்டுமென்று உங்கள் எல்லோருக்கும் இப்போது இந்நூலில் தெரிவித்

திருக்கிறோம். இதன் விபரம் அநேகர்களுக்குத் தெரியாமல் அடியேனை நேரில் வந்து கேட்டதனுலும், கடித மூலமாய் எழுதித் தெரிந்துகொண்டதனுலும் இப்படியே எல்லோருக்கும் இதில் சந்தேகம் உண்டாகுமென்று எண்ணி, பிராணுயாமம் செய்யவேண்டிய விதியை மிகவும் தெளிவாய் இந்நூலில் இப்போது தெரிவித்துவிட்டோம்; இனி எவர்களுக்கும் யாதொரு சந்தேகமும் இருக்கவே மாட்டா.

சிலது மாதங்கள் 125 எண்ணும் வரையில் பழகிய பின், இன்னும் லக்கத்தை உயர்த்திக்கொண்டுபோக உங்களுக்கு சந்தோஷத்தை யுண்டாக்கும்; அப்போது முதலில் ஐம்பது எண்ணும் வரையில் சுவாசத்தை நிறுத்தி, ஐம்பது எண்ணி முடிந்தவுடன், நாபிவரையில் சுவாசம் வெளியில் விட்டு உள்ளுக்கிழுத்து 1 என்று பெரிய லக்கமாய் மனதில் நினைத்து புருவமத்தியில் வைத்து அந்த லக்கத்தின்மேல் திருஷ்டிவைத்து, மறுபடியும் 50 எண்ணி முடிந்தவுடன், முன்போல் நாபிவரையில் சுவாம் வெளியில் விட்டு உள்ளுக்கிழுத்து விழுங்கி, புருவமத்தியில் முன்னிருந்த 1 என்னும் லக்கத்தை மனதினுல் எடுத்துவிட்டு அந்த இடத்தில் 2 என்னும் லக்கத்தை மனதினுல் நினைத்து வைத்து, மறுபடியும 50 எண்ணி முடிந்தவுடன், முன்போல் நாபிவரையில் சுவாசம் வெளியில் விட்டு உள்ளுக்கிழுத்து விழுங்கி, புருவமத்தியில் முன்னிருந்த 2 என்னும் லக்கத்தை மனதினுல் எடுத்துவிட்டு அந்த இடத்தில் 3 என்னும் லக்கத்தை மனதினுல் நினைத்துவைத்து, மறுபடியும் 50 எண்ணி முடிந்தவுடன், முன்போல் நாபிவரையில் சுவாசம் வெளியில் விட்டு உள்ளுக்கிழுத்து விழுங்கி புருவமத்தியில் முன்னிருந்த 3 என்னும் லக்கத்தை மனதினுல் எடுத்துவிட்டு அந்த இடத்தில் 4 என்னும் லக்

கத்தை மனதினுல் நினைத்து வைக்கவேண்டும்; இவை யெல்லாம் சேர்ந்து கணக்கிற்கு 250 எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தினதாகின்றது.

இவ்வாறு சிலமாதம் சென்றபிறகு 75-க்கு ஒருமுறையாய் நான்குமுறை சுவாசம் விட்டு இழுத்துப் பழகிவர வேண்டும்; அப்போது முந்நூற்றெழுபத்தி ஐந்து எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தினதாகின்றது; இதுபோல் மாதக்கணக்காய் சிறுகச்சிறுக சுவாசம் நிறுத்தி உயர்த்திக் கொண்டே போகப்போக நாளாவட்டத்தில் உங்கள் மனேவோட்டமெல்லாம் சிறுகச் சிறுக குறைந்துகொண்டே வந்து கடைசியில், உலக வியவகாரங்களில் விரக்தியையுண்டாக்கிக்கொண்டே வரும்; இவை யாவும் நீங்கள் செய்துவரும் யோகாப்பியாசத்தினுல் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாய்த் தெரிந்துகொள்ளலாம். இவ்வாறு யோகாப்பியாசம் கணக்குடன் நாளா வட்டத்தில் உயர்த்திக் கொண்டே சென்றுல் அவர்களுக்கு யாதொரு கெடுதியும் சம்பவிக்காமல் யோகம் சித்திக்கும்; அநேகர்கள் இவ்வித கணக்குடன் செய்யாமல் மூச்சைப்பிடித்துத் தம்மிஷ்டம் போல் சுவாசம் நிறுத்தி மாண்டவர்கள் அநேகர் உண்டு, இவர்களின் விஷயம் முன் சொல்வோம்; இதுவரையில் சுவாசத்தை நிறுத்தவேண்டிய விஷயங்களைச் சொன்ேனும்; உள்ளே நிறுத்திய சுவாசத்தை எவ்விதமாய் வெளியில் விடவேண்டுமோ அதன் விபரங்களை இதனடியில் சொல்லுகின்றேம், அதுபோல் சுவாசம் வெளியில் விட்டுவாருங்கள். அது எவ்விதமாய் விடவேண்டுமென்றுல், முதல் சுவாசம், வலது நாசியில் இழுத்தபடியால் விடும்போது இடது நாசியில் விடவேண்டும். ஆதலால், வலதுகைப் பெருவிரல் மோதிரவிரல்களை வலது இடது நாசிகளின்மீது வைத்து வலது நாசியை மூடி, தவடைப் பற்களைக் கெட்டி

யாய் இறுக்கிக்கொண்டு இடது நாசியின் வழியாய், 4 அங்குலம் சுவாசத்தை 'ஓம்' என்னும் மந்திரத்துடன் வெளியில் விட்டு, மறுபடியும் அந்த 4 அங்குலம் சுவாசத்தை அதே நாசியில் 'ஓம்' என்னும் மந்திரத்துடன் உள்ளுக்கிழுத்து இடது நாசியை மூடி, வலது நாசியைத் திறந்து முன்போல் நாலங்குலம் சுவாசம் 'ஓம்' என்னும் மந்திரத்துடன் வெளியில் விட்டு, அதே நாசியில் நாலங்குல சுவாசம் 'ஓம்' என்னும் மந்திரத்துடன் உள்ளுக்கிழுத்து, மறுபடியும் வலது நாசியை மூடி இடது நாசியில் நாலங்குலம் சுவாசம் 'ஓம்' என்று விடவேண்டும். இவ்விதமாய் சுவாசத்தின் வேகம் அடங்கும் வரையில் நாசிகளை விரல்களால் மாற்றி மாற்றி, ஐந்து நிமிஷங்கள் வரையில் நிதானமாய் சுவாசத்துடன் ஓம் என்னும் மந்திரம் சேர்த்து வெளியில் விட்டுக்கொண்டும், உள்ளுக் கிழுத்துக்கொண்டுமா யிருக்க வேண்டும். பிறகு, சுவாசம் வேகம் அடங்கியபின், நாசிகளின் மீதிருக்கும், கை விரல்களை எடுத்துவிட்டு அந்த நாலங்குல சுவாசத்தை மாத்திரம் உசுவாச நிசுவாசங்களாய் விட்டுக்கொண்டு, இளைப்பாறுவதற்காக ஐந்து நிமிஷங்கள் வரையில் நிஷ்டையில் இருக்கவேண்டும். அப்போது முன் சொல்லியதுபோல் நாலங்குல சுவாசம் மாத்திரம் வெளிக்கும் உள்ளுக்குமாய் விட்டுக்கொண்டு மற்ற சுவாசத்தை எல்லாம் கர்ப்பத்தில் நிறுத்திவைக்கவேண்டும். இவ்விதமாய் 'ஓம்'என்னும் பிரணவத்துடன் கர்ப்பத்தில் நிறுத்திவைத்த பிராணவாயுவானது, வெளியில் ஓடிக்கொண்டிருக்கும் 'மனது' என்னும் வாயுவை வெளியில் ஓடாதபடி நிறுத்தும். மனோ ஓட்டம், பிராணயாமம் ஒன்றிற்கே மிகவும் சீக்கிரமாய்க் கட்டுப்படும் இவ்விதமாய் அப்பியாசம் செய்யும்போது சுவாசம், சர்ப்பம்போல் சீறிக்கொண்டு "புஸ்" "புஸ்" என்று அதிவேகமாய் வெளி

பரமஹம்ஸ ஸச்சிதாநந்தயோகீஸ்வரர் நிர்விகல்ப ஸமாதிநிஷ்டை.

‘சின்முத்ரை’ இதன் கருத்து யாதெனில், ஸ்தூல ஸூக்ஷ்ம காரண ஸரீரங்கள் மூன்றையும் நீக்கி ஜீவாத்மாவை பரமாத்மாவில் ஐக்யம்செய், என்று காட்டும் குறி. வலதுகை படத்தில் காட்டிய 1. (முதல்குறி) ஸ்தூல ஸரீரம். அதாவது கண்களுக்குக் காணப்படும் ஸரீரம் 2. (இரண்டாங்குறி) ஸூக்ஷ்ம ஸரீரம் இது, ஸ்தூலத்தி லிருந்துகொண்டு நித்ரையில் ஸ்வப்னமும் ஜாக்ரத்தில் உலக வியாபாரத்திலும் சென்றுகொண்டிருப்பது 3. (மூன்ருங்குறி) காரண ஸரீரம். இதுவே ஸஞ்சித மென்னும் புண்யபாபங்களின் மூட்டை. இந்த ஸஞ்சிதத்திலிருந்து ஸ்தூல ஸூக்ஷ்ம ஸரீரங்கள் வரத்துப்போக்காயிருப்பதே காரண ஸரீரம். இம்மூன்று ஸரீரங்களையும் நீக்கி, பரமாத்மா ஆகாஸ வடிவமுடையது. ஆதலால், 5 (ஐந்தாங் குறியாகிய) பெருவிரல் ஆகாஸத்தைநோக்கிக் காட்டுகின்றது. அப்பேர்ப்பட்ட



பரமாத்மாவில் ஜீவாத்மாவை ஐக்யம் செய்யவேண்டும். ஆதலால், 4 (நாலாங் குறியாகிய) ஆள்காட்டும் நுனிவிரலே ஜீவாத்மா. இந்த ஜீவாத்மாவை பரமாத்மாவில் ஐக்யம் செய்யவேண்டும் என்று ஆள்காட்டும் நுனிவிரலை அங்குஷ்ட அளவின் கோட்டில் சேர்ப்பதே சின்முத்ரையென்றும், ஜீவாத்மா பரமாத்மஸ்வரூபத்தை அடையத்தக்கது என்றுங் காட்டும் குறியே சிந்முத்ரை யென்றும் சொல்லப்படும்.

ஸ்ரீ ஸ்வாமிகள் நிர்விகல்ப ஸமாதியில் இருக்கும்போது பிடித்த 8½-அங்குலம் உயரம் 6½-அங்குலம் அகலமுள்ளது. மிகவும் சுத்தமானபோடோ காபி ·1-க்கு வி. பி. உள்பட ரு. 2-4-0 அந்தப் படத்தின் நெற்றியில் யோகாக்நி ஜ்வாலை காணலாம். ஷை ஸ்வாமிகள் நாபியிலிருக்கும் குண்டலி ஸக்தியைக் கிளப்பி யோகாக்நி ஜ்வாலையை உண்டாக்கி சிந்முத்ரையுடன் நிஷ்டையிலிருக்கும்போது பிடித்த போடோ. இந்த சிந்முத்ரை போடோ வேண்டுபவர்கள் “ஸதாநந்தன்” வேப்பேரி போஸ்ட், சென்னை, என்று

யில்வரும். அப்படி சீறிக்கொண்டுவரும் சுவாசத்தை அதிவேகமாய் ஓடவிடாமல் அடக்கி முன்சொல்லியதுபோல் "ஓம்" என்னும் மந்திரத்துடன், 4-அங்குல சுவாசம் வெளியிலும், 4-அங்குல சுவாசம் உள்ளுக்குமாய் விட்டுக்கொண்டு சிங்முத்திரையுடன் எதிரிலிருக்கும்படத்தில் ☞ காட்டியதுபோல் உட்கார்ந்து சிரமம் தீருவதற்காக, 5 நிமிஷங்கள் வரையில் † நிஷ்டையில் இருக்கவேண்டும். இது முதல் பிராணாயாமம் செய்து முடித்ததாகும். இந்த சிங்முத்திரையின் விபரம் எதிரிலிருக்கும் படத்தில் காண்க. இவ்வாறு பழகிவந்தால் விருத்தரும் பாலராவார்; இதற்குத் திருமந்திரம் பிரமாணம்;

வளியினை வாங்கி வயத்தி லடக்கில்
பளிங்கொத்த காயம் பழுக்கினும் பிஞ்சாற்
தெளியக் குருவின் றிருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியனு மாமே.

செத்துப் பிறக்கக் கொடாதெங்கள் முத்திரை
செம்பிற் செறிக்கப் படாதெங்கள் முத்திரை
யத்தத்தி னுத்திர மாமெங்கள் முத்திரை
யாலின்கீழ் நால்வர்க் கரன்சொன்ன முத்திரை. (சு)

எண்ணி விலக்கிட் டிடாதெங்கள் முத்திரை
யெண்ணுவா ரெண்ணங் கடந்திட்ட முத்திரை

---

† நிஷ்டை என்றால், எவ்வித சங்கல்பங்களும் எந்த ஈசுவர தியானமும் பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர முதலாகிய மந்திர தந்திர ஜபங்களும் இல்லாமல் சும்மாயிருப்பதே நிஷ்டையென்று சொல்லப்படும். இதை மௌனமென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள். தலை மொட்டையடித்து கௌபீனம் கட்டி வாய்மூடி பேசாமல் எழுதிக்காட்டுவது மௌனமல்ல. மனதை வெளியில் ஓடவிடாமல் நிறுத்துவதே மௌனமாகும்.

பண்ணி யழிக்கப் படாதெங்கள் முத்திரை
பார்ப்பரப் பார்க்கும் பரஞான முத்திரை. (உ)

வெண்ணாவிற் கோவைப் படாதெங்கள் முத்திரை
வேதமா நூலின் விளைகின்ற முத்திரை
பெண்ணு ணலாத பெருமான் றன்முத்திரை
பேசற் கரிய பெரியோன்றன் முத்திரை. (ங)

குன்றாத மூவுருவாய் அருவாய் ஞானக்
கொழுந்தாகி யறுசமயக் கூத்து மாடி
நின்றாயே * மாயையெனும் திரையை நீக்கி
நின்னையா ரறியவல்லார் நினைப்போர் நெஞ்சம்
மன்றாக வின்பக் கூத்தாட வல்ல
மணியேயென் கண்ணேமா மருந்தே நால்வர்க்
கன்றாலின் கீழிருந்து மோனஞான
மமைத்த 'சிந்முத்திரை'க்கடலே யமரரேறே.

ஸனகர், ஸனந்தரர், ஸனாதரர், ஸனத்குமாரர்களாகிய நால்வரும், பிரமதேவரது குமாரர்கள்; பரமசிவனே ஞானாசாரியராய்வந்து ஞானோபதேசம் செய்யவேண்டுமென்று இந்நால்வரும், கல்லால விருக்ஷத்தின் கீழ் வடக்குமுகமாய் உட்கார்ந்து தவம் செய்து வந்தார்கள்; இவ்வாறு, தவம் செய்துவந்த நால்வரின்மீது ஈசுவரருக்குக் கருணையுண்டாய் தாம், பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசமென்னும் ஐந்து பூதங்களையும் சமஷ்டி வியஷ்டியாய்ச் செய்து

---

* மாயையென்னும் திரை யாதெனில், பசு, பதி, பாசமேயாம் பசு=நாம் (ஜீவாத்மாக்கள்). பதி=பரமாத்மா. பாசம்=ஜீவாத்மாவாகிய நமக்கும், பரமாத்மாவிற்கும் மத்தியிலுள்ள திரை. இத்த திரையை யார் ஒருவர் நீக்கி விடுகின்றார்களோ அவர்களின் ஆத்மா, பரமாத்மாவில் சேர்ந்து ஐக்கியமாய்விடும். என்பதேயாம்.



ஸ்ரீ சங்கரர்

பிரமதேவர் குமாரரின் கேள்விக்கு பதிலளித்தல்.

శ్రీ శంకరులు బ్రహ్మదేవుని కుమారులయొక్క శంక నివర్తి చేయుట.

Sri Sankara initiating the four sons of Brahma.

SOLDEN & CO., MADRAS, S.E.

ஸ்ரீ சங்கராசாரியராய் மானிடச் சட்டையைத் தரித்து,
வடக்குமுகமாய் நால்வரிருக்கும் கல்லாலவிருக்ஷ அடியில்
வந்து தெற்குமுகமாய் நின்றனர். அப்போது, நால்வரும்
கண்களை விழித்துப் பார்த்து ஆனந்தக்கடலில் மூழ்கி,
ஸ்ரீ சங்கரரை அனேக விதங்களாய்த் துதிசெய்து, ஆசனத்
தின்மீதெழுந்தருளச்செய்து, நால்வரும் வேத ஸாஸ்த்திர
மடங்கிய ஓலையேடு புத்தகங்களைக் கையில் பிடித்து ஸ்ரீ சங்
கரருடன் தர்க்கம் செய்ய ஆரம்பித்தார்கள். ஓலையேட்
டைக் கையில் பிடித்து ஸ்ரீ சங்கரருடன் தர்க்கம் செய்யும்
படம் எதிரில் காட்டப்பட்டிருக்கின்றது. ☞ அத்தர்க்கத்
திற்கு ஸ்ரீ சங்கரர் பதில் அளித்தார். பதில் சொன்னதற்
குக் கேள்வி கேட்டார்கள்; அக் கேள்விக்கும் விடை
கொடுத்தனர். விடை கொடுத்ததற்குப் பதில் சொல்லும்
படி கேட்டனர்கள்; அதற்கும் பதில் சொல்லினர். பதில்
சொன்னதற்கு மறுபடியும் பதில் கேட்டனர்கள்; அதற்
கும் பதிலளித்தனர். அதற்கும் பதில் கேட்டார்கள்;
பதில் சொன்னவைகளுக்கெல்லாம் தர்க்கம் செய்து
கொண்டே வரும்போது, ஸ்ரீ சங்கரர் ஆலோசித்து, இத்
தர்க்கங்கள், அனேக ஆயிர வருடங்கள் செய்துவந்த
போதிலும் சம்பூர்த்தி யாகமாட்டாதென் றெண்ணி,
ஸ்ரீ சங்கரர் கண்களைமூடி சின்முத்திரையை விரல்களால்
பிடித்துக்காட்டி மௌன சமாதியில் நின்றுவிட்டனர்.
பிரமதேவர் குமாரர்கள் நால்வரும் மிகவும் சூக்ஷ்ம
புத்தி யுடையவர்க ளாதலால், ஸ்ரீ சங்கரர் பிடித்துக்காட்
டிய சின்முத்திரையின் கருத்தை எவ்விதமாய் நினைத்துத்
தாமும் சின்முத்திரையைப் பிடித்து சமாதியில் உட்கார்ந்
தார்க ளென்றால், சுண்டுவிரல் குறி, கண்களுக்குக் காணப்
படும் தூல சரீரமென்றும், மோதிரவிரல் குறி, கண்களுக்
குக் காணப்படாத மனம் புத்தி சித்தம் அஹங்கார மென்

பதே சூக்ஷ்ம சரீரமென்றும்; நடுவிரல்,ஸஞ்சிதமென்னும் புண்ணிய பாப இருவினைகளே காரண சரீரமென்றும்; கடவுள் (பரமாத்மா) ஆகாய ரூபம்போல் எங்கும் நிறைந்து வெட்டவெளியாய் இருக்கின்றார். ஆதலால், நீங்கள் ஜீவாத்ம சொரூபமா யிருக்கின்றீர்கள்; முன் சொல்லிய தூல சூக்ஷ்ம காரண மென்னும் மூன்று சரீரங்களையும் நீக்குங்கள். ஆள்காட்டும் விரலே ஜீவாத்ம சொரூபம்; பெருவிரலே பரமாத்ம சொரூபம்; ஆதலால், எந்த தர்க்கமும் செய்யாமல் சும்மாயிருந்து உங்கள் மனதை வெட்டவெளியாகிய பரமாத்ம சொரூபத்தில் சேருங்கள் என்று, ஜீவாத்ம சொரூபமாய்க் காட்டிய ஆள்காட்டும் விரலை, பரமாத்ம சொரூபத்தை, மேல்நோக்கிக் காட்டும் பெருவிரலின் அங்குஷ்ட கோட்டில், உங்கள் ஆள்காட்டும் விரலைச் சேருங்கள் என்று, சங்கரரது ஆள்காட்டும் விரலை அங்குஷ்ட அளவு கோட்டில் சேர்த்துக் காட்டினார் என்று மிகவும் புத்தி சூக்ஷ்மமுடைய பிரமதேவரது குமாரர்கள் நால்வரும் அறிந்து, அதுபோல் தாமும் சின்முத்திரையைப் பிடித்து எந்த எண்ணங்களுமில்லாமல் சும்மாய் உட்கார்ந்து பிரம்மானந்த சுகத்தை அறிந்து, கண்களை விழித்து ஆஹா! இவர், நாம் தர்க்கம் செய்யாமுன்னமே இச் சின்முத்திரையைப் பிடித்துக் காட்டலாகாதா! அனேக வருடங்கள் தர்க்கம் செய்தவைகளுக்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டேவந்து, இத்தர்க்கம் முடிவுபெறு தென்றெண்ணி, கடைசியில் சின்முத்திரையைப் பிடித்துக்காட்டினதாய்த் தெரியவருகிறது; இச் சின்முத்திரை ரஹஸ்யம் முன்னமே காட்டினால், இதுவரையில் நாங்கள் எவ்வளவு பிரம்மானந்த சுகத்தை அடைந்திருப்போம், எனதையனே என்றடிக்கடி போற்றினார்கள்; பிரமதேவரது குமாரர்களாகிய நால்வருக்காகவே ஸ்ரீ சங்கராசாரியர் அவதரித்

தார் என்று சாஸ்திரங்களால் தெரியவருகின்றது. இதற்குப் பெரிய புராணம் பிரமாணம்;

கல்லாலின்புடை யமர்ந்து நான்மறை யாறங்கமுதற்
கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய்
மறைக் கப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி
இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்து பவத
தொடக்கை வெல்வாம்.

அன்றியும், ஸ்ரீ சங்கரர் நால்வரிடம் வரும்போது மூன்று மூங்கில் குச்சியை ஒன்ருய்ச் சேர்த்து நூலிழையால் கட்டி அக்குச்சி நுனியில் கொடிகட்டி புஜத்தின் மேல் வைத்துக் காட்டிக்கொண்டு நால்வரிடம் வந்தார். இவ்வாறு காட்டிக்கொண்டு வருவதற்குக் காரணம் யாதெனில், யான் மண்ணாசை பெண்ணாசை பொருளாசை என்னும் இம் மூன்று ஆசைகளேயும் ஜயித்தேன். இம் மூன்றையும் ஜயித்தால், ஆணவம் மாயை காமியம் என்னும் மும் மலங்களேயும் ஜயிப்பான், என்று காட்டுவதற்காக ஸ்ரீ சங்கரர் மூன்று மூங்கில் குச்சிகளேயும் ஒன்ருய்ச் சேர்த்துக் கட்டி அக்குச்சி நுனியில் கொடிகட்டிக் காட்டினர்; இதன் திருஷ்டாந்தம் பார்க்கவேண்டுமானல், ஸ்ரீ காஞ்சி, ஸ்ரீரங்கம் முதலாகிய இன்னும் அனேக விஷ்ணு ஆலயங்களில் பார்க்கலாம்; விஷ்ணு ஆலயங்களில் நடந்தேறிவரும் பிரம்மோச்சவத்தில், பெருமாள் முன்னும் பின்னுமாய் பிராமணர்கள் வேதபாராயணம் செய்துகொண்டே செல்லுவார்கள். பெருமாள்முன் வேதபாராயணம் செய்துகொண்டு செல்லும் பிராமணர்களுக்குமுன், ஒரு பிராமண சந்யாசி சிகா யஞ்ஞோபவீதவிஸர்ஜ்ஜநம் என்ருல், பூணூல்

கழற்றி மொட்டையடித்து, முழங்கால் வரையில் காஷாய வஸ்திரம் கட்டி, (முன் ஸ்ரீ சங்கரர் பிடித்துக்காட்டிய மூன்று மூங்கில் குச்சிகளுக்கும், திரிதண்டமென்று சொல்லப்படும்; இத் திரிதண்டத்தை) சன்னியாசி வேடம் பூண்டிருக்கும் முன் சொல்லிய பிராமணர் வலது புஜத்தின் மேல் திரிதண்டம் வைத்து பெருமாள் எதிரில் வேதபாராயணம் செய்யும் பிராமணர்களுக்கு முன் நின்று மெதுவாய் நடந்துபோவார். இவருக்கு ஜீயர் என்று பெயர்; இவருக்குப்பின், வேதகோஷ்டிகள் வேதபாராயணம் செய்து வருவார்கள்; மேற்படி சந்யாசி எந்த காரணத்தினுல் மூன்று மூங்கில் குச்சியையும் ஒன்ருய்ச் சேர்த்துக்கட்டி குச்சி நுனியில் கொடிபோட்டுப் போகின்ருரென்ருல், யான் மண்ணுசை பெண்ணுசை பொருளாசை என்னும் இம் மூன்று ஆசைகளையும் ஜயித்தேன்; இவைகளை ஜயித்ததனுல், ஆணவம் மாயை காம்யம் என்னும் மும்மலங்களையும் வென்றேன்; நீங்களும் என்னைப்போல் மூன்று ஆசைகளையும் ஜயிக்கவேண்டும் என்று காட்டுவதற்காக மேற்சொல்லிய பிராமணர் சிகா (குடுமி) யஞ்ஞோபவீதம் (பூணூல்) களை எடுத்து எல்லோருக்கும் முன், வழிகாட்டி நடக்கும்போது, எல்லா பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திர ஜனங்களெல்லோரும் மூன்று ஆசைகளையும், மும்மலங்களையும் ஜயித்தவர் நீரல்லவோ என்று மேற்படி சந்யாசி பாதத்தில் சாஷ்டாங்கமாய் வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து நின்று இருகைகளையும் குவித்துக் கும்பிடுவார்கள். ஆணவம் மாயை காம்யம் என்னும் மும்மலங்களையும் ஜயித்தவன் ஆத்மா, பரமாத்மாவில் சேர்ந்துவிடும் என்னும் குறியே, இரண்டு கைகளையும் ஒன்ருய்ச் சேர்த்துக் கும்பிடுவதின் ரஹஸ்யார்த்தம்; திரிதண்டம் (கொடியுடனிருக்கும் மூன்று மூங்கில் குச்சி) கையில் பிடித்து குடுமி பூணூலை

யெடுத்து காஷாயவஸ்திரம் முழங்கால் வரையில் கட்டி வேதபாராயணம் செய்யும் பிராமணர்களுக்கு முன் செல்லும் சந்நியாசி வேடம் பூண்டிருக்கும் ஜீயர் என்னும் பிராமணருக்கு முதல் தீர்த்தப்பிரசாதங்கள் யாவும் கொடுத்து, பிறகு மற்ற எல்லாப் பிராமணர்களுக்கும் கொடுப்பார்கள்; இதுதான் சரியான சந்யாச ஆசிரமம். சந்யாசமென்றால் எல்லா பந்த பாசங்களும் நாசம் செய்தவனே சந்யாசி என்று சொல்லப்படும்

O Thou Imperishable Triple From, and Formless! O [Thou Supreme-
Intelligence Working Steadfast in the six forms of Religion Who could know thee after raising the curtain of **Maya?**
Thou dost dance in the hearts of Those who think of Thee
Thou art the priceless jewel ; Thou my eye ;
Thou the supreme panacea ;
Thou the Ocean of **Chinmudra** Wisdom,
Who didst teach the four ancient sons,
Mauna Juana from under the Sacred Banyan Tree
Thou, the Deva of Devas,

மேற்சொல்லியதுபோல், சின்முத்திரையுடன் நிஷ்டையிலிருந்து, முதல் பிராணயாமம் செய்து முடித்தபின், இரண்டாவது பிராணயாமம் இடது நாசியில் செய்ய வேண்டும். செய்யும்பொழுது மறுபடியும், நான்கு விழுங்கு ஜலம் சாப்பிட்டு ஒரு நிமிஷம் சென்றபிறகு, இடது விலாநுரையீரலில் முன் தங்கியிருக்கும் சுவாசத்தை எல்லாம் வலது நாசியை மூடி, இடது நாசியின் வழியாய் முதல் பிராணயாமத்தில் விட்டுவிட்டதுபோல் விட்டுவிட்டு, அதன் தொடர்ச்சியாகவே முன் சொல்லிய 'காயத்திரி' யில்

இருக்கும், ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம் என்னும் பிரணவத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு, அஜபாவாய் (மனதினாலேயே) சுவாசத்துடன் சேர்த்து, இடது நரையீரலில் எவ்வளவு சுவாசம் கொள்ளுகின்றதோ, அவ்வளவு சுவாசத்தை, ஓம்!ஓம் என்று உள்ளுக்கிழுத்து, மறுபடியும் இன்னும் சுவாசம் உட் செல்லுகின்றதா வென்று பார்ப்பதற்காக சுவாசத்தை இடது நாசியில் ஓம் என்று இழுத்துப் பார்க்கவேண்டும், அச்சமயம் முன்போல் அரை, ஒன்று, இரண்டு, மூன்று அங்குல நீளம் வரையில் சுவாசம் மூக்கில் உள்ளுக்குச் செல்லும்; அப்போது அதையும் விழுங்க வேண்டும். விழுங்கியபின் சுவாசம் வெளியில் செல்லாமலிருப்பதற்காக, கண்டத்தை (தொண்டையை) மூடி, இரண்டு கைகளையும் இரண்டு துடைகளின்மீது வைத்துக்கொண்டு வலதுகை ஐந்து விரல்களையும் மடக்கவேண்டும். இவ்விதமாய் வலதுகை ஐந்து விரல்களையும் மடக்கியபின், இடதுகைச் சுண்டுவிரலை மடக்கவேண்டும். இவ்வகையில் இடதுகை ஐந்து விரல்களையும் மடக்கினால் இது, கணக்கில் $5 \times 5 = 25$, ஆகும். 25-ஆனவுடன், முன் வலது நாசியில் நான்கு முறை சுவாசம் விட்டு செய்ததுபோல், இடது நாசியிலும் செய்யவேண்டும் இவ்வாறு செய்தபின், உள்ளே நிறுத்தியிருக்கும் சுவாசத்தை வெளியில் விடவேண்டும். அது எவ்விதமாய் விடவேண்டுமென்றால், வலதுகை மோதிரவிரலால், இடது நாசியை மூடித் தவடைப் பற்களைக் கெட்டியாய் இறுக்கிக்கொண்டு, வலது நாசியின் வழியாய் சுவாசத்தை விடவேண்டும். சுவாசம் வெளிவிடும்போது, 'புஸ்' 'புஸ்' என்று சர்ப்பம்போல் சீறிக்கொண்டு அதிவேகமாய் வெளியில் வரும். அப்படிச் சீறிக்கொண்டுவரும் சுவாசத்தை யெல்லாம், வெளியில் விட்டுவிடாமல் அடக்கி 4-அங்குல நீளம் வரையில் 'ஓம்'

என்னும் பிரணவத்துடன் வலது நாசியில் வெளியில்விட்டு, மறுபடியும் அந்த 4-அங்குலம் சுவாசத்தை ஓம் என்னும் பிரணவத்துடன் உள்ளுக்கிழுத்து வலது நாசியை மூடி, மறுபடியும் இடது நாசியைத் திறந்து, மேற்சொல்லியது போல், 4-அங்குல நீளம் வரையில் சுவாசத்தை வெளியில் விட்டு மறுபடியும் அந்த 4-அங்குல சுவாசத்தையே ஓம் என்று உள்ளுக்கிழுத்து, இடது நாசியை மூடி, வலது நாசியைத் திறந்து மேற் சொல்லியதுபோல், 4-அங்குல சுவாசத்தை வெளியில் விட்டு மறுபடியும், 4-அங்குல சுவாசத்தையே உள்ளுக்கிழுத்து, வலது நாசியை மூடி இவ்விதமாய் சுவாசத்தின் வேகம் அடங்கும் வரையில், ஓம் என்று ஒவ்வொரு சுவாசத்திலும் மனதினுல் நினைத்துக்கொண்டே தராசைப்போல், சமமாய் சுமார் ஐந்து நிமிஷங்கள் வரையில், "ஓம்" என்னும் பிரணவத்துடன் உச்சரித்துக் கொண்டே (மனதில் நினைத்துக்கொண்டே) நிதானமாய் சுவாசத்தை விட்டுக்கொண்டிருந்து சுவாசத்தின் வேகம் அடங்கினபிறகு, கையை எடுத்துவிட்டு சின்முத்திரையுடன், 5-நிமிஷங்கள் வரையில் முன் சொல்லியதுபோல் இளைப்பாற நிஷ்டையில் இருக்கவேண்டும். இது, இரண்டாவது பிராணுயாமம் செய்து முடித்ததாகும்.

வலது இடது நாசிகளில் பிராணுயாமம் செய்து முடித்தபின், இரண்டு நாசிகளிலும் சுவாசத்தை யிழுத்து அப்பியாஸம் செய்யவேண்டும். இரண்டு நாசிகளின் வழியாய்ச் சுவாசம் உள்ளுக்கிழுத்து நிறுத்துவதே சுஷும்ன நாடி பிராணுயாமமென்று சொல்லப்படும். இதற்கு திருச்சந்தூர் புராணமும், வாதவூரர் புராணமும், திருமந்திரமும் பிரமாணம்;

விழிதுயில் வாரேபோல
மிக்குயர் பிராணயாமத்
தழிவிலா யோகமுற்றி
யைந்தெறும் பிராணமாயைக்
குழுவினை யொன்றதாகக்
கூட்டமிட் டவையையேலைச்
சுழிமுனையதனிற் கூட்டித்
தொடர்வினை யகற்றுந்தூயோன்.

மூக்கு ணம்புல னைந்துடனடக்கி
மூலவாயுவை யெழுப்பிரு வழியைச்
சிக்கெ னும்படி யடைத்தொரு வழியைத்
திறந்து தாண்டவச் சிலம்பொலி யுடன்போய்த்
தக்க வஞ்செழுத் தோரெழுத் துருவாந்
தன்மை கண்டரு டரும்பெரு வெளிக்கே
புக்க மூந்தின ரெமதுருப் பெறுவார்
புவியில் வேட்டுவ னெடுத்தமென் புழுப்போல்.

மேலையணுவில் ஷிரைந்திரு காலிடிற்
காலனுமில்லை கதவுந் திறந்திடும்
ஞாலமறியா நரைதிரை மாறிடும்
பாலனுமாவான் பராநந்தி யாணையே.

எங்கே யிருக்கினும் பூரியிடத்து வலத்
தங்கேயது செய்ய வாக்கைக் கழிவில்லை
யங்கேபிடித் ததுவிட்டளவுஞ் செல்லச்
சங்கே குறிக்கத் தலைவனு மாமே.

முக்கோண வட்டக் கிணற்றுக் குள்ளே மூல
மண்டல வாசிப் பழக்கத் திலே
அக்கோண வட்டச் சக்கரத்தில் வாலை
யமர்ந் திருக்கிருள் வாலைப் பெண்ணே.

இரண்டு காலா லொரு கோபுரமாம் நெடு
நாளா யிருந்து அமிழ்ந்து போகும்
கண்டது போது கோபுர மிருக்கும் வாலை
காணவு மெட்டா னிலைக்க வொட்டாள்.

அதாவது, இடைகலை பிங்கலை சுழுமுனை என்னும் மூன்று நாடிகளாட, இரண்டு மூக்குத் துவாரங்களுக்கும் நடுவாய் மூக்குத்தண்டு அடி பெருத்து நுனி சிறுத்து கோபுரமாய் நின்று, அதில் நடுநாயகனு யிருந் தமர்ந்து விளையாடும் பாம்பின் வாலைக் கண்டுபிடித்து நிலைநிறுத்த வழியறியார்; அப்பாம்பின் வாலைப் பிடித்து நிலை நிறுத்த வழி இதனடியில் சொல்லுகின்றோம்.

முன், வலது இடது நாசிகளில் சுவாசம் இழுத்து நிறுத்தியதுபோல், இரண்டு நாசிகளிலும் சுவாசம் இழுத்து நிறுத்துவதற்காக நான்கு விழுங்கு ஜலம் சாப்பிட்டு ஒரு நிமிஷம் சென்றபிறகு, வலது இடது விலா நுரையீரல் களில் முன் தங்கியிருக்கும் சுவாசத்தையெல்லாம் வெளி யில் விடவேண்டும். அது எவ்விதமாய் விடவேண்டுமென் ருல், வலதுகைப் பெருவிரல் மோதிரவிரல் இவைகளை வலது இடது நாசிகளின்மீது வைத்து இடது நாசியை மூடி, வலது நாசியின் வழியாய் 4-அங்குல சுவாசம் வெளி யில் ஓடும்படி விட்டு வலது நாசியை மூடி, இடது நாசி யைத் திறந்து முன் விட்டதுபோல் 4-அங்குல சுவாசம் வெளியில் ஓடும்படி விட்டு இடது நாசியை மூடி, மறுபடி யும் வலது நாசியைத் திறந்து முன்போல் 4-அங்குல சுவா சம் விட்டு இவ்விதமாய் உள் தங்கியிருக்கும் சுவாசத்தை யெல்லாம், இரண்டு நாசிகளின் வழியாய் மாற்றி மாற்றி சுவாசத்தை வெளியில் விட்டுக்கொண்டே வந்து, கடைசி யாய் வலது நாசியில் எல்லா சுவாசத்தையும் விட்டுவிட்டு, அதன் தொடர்ச்சியாகவே மறுபடியும் வலது நாசியில்

4-அங்குல சுவாசத்தை ஓம் என்று உள்ளுக்கிழுத்து வலது நாசியை மூடி, இடது நாசியைத் திறந்து 4-அங்குல சுவாசத்தை ஓம் என்று இழுத்து இடது நாசியை மூடி, வலது நாசியைத் திறந்து 4-அங்குல சுவாசத்தை 'ஓம்' என்று இழுத்து மூடி, இவ்விதமாய் நுரையீரலில் எவ்வளவு சுவாசம் கொள்ளுகின்றதோ அவ்வளவு சுவாசத்தை 'ஓம்' என்னும் பிரணவத்துடன் இழுத்துக்கொண்டே வந்து கடைசியாய் வலது நாசியில் எல்லா சுவாசத்தையும் இழுத்து விழுங்கிக் கண்டத்தை மூடி, முன்னிரண்டு முறைகளில் செய்ததுபோல் 25-எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தி முடிந்தவுடன், இடது நாசியை மூடி வலது நாசியில் நாபி வரையில், ஓம்! ஓம்! ஓம்! ஓம் என்றுவிட்டு வலது நாசியை மூடி, முன்விட்ட அவ்வளவு சுவாசமே இடது நாசியில் நாபிவரையில், ஓம்! ஓம்! ஓம்! ஓம் என்று விட்டு, அவ்விரண்டு சுவாசங்களேயும் மறுபடியும் வலது இடது நாசிகளின் வழியாய் பூர்த்தியாய் ஒரே முறையாக சமமாய் இழுத்து விழுங்கி, புருவமத்தியில், 1 என்று முன்போல் லக்கம் வைத்து, மறுபடியும் 25-எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தி, முன்போல் வலது இடது நாசிகளில் நாபி வரையில் சுவாசம் சமமாய் விட்டு மறுபடியும் இரண்டு நாசிகளிலும் சமமாய் இழுத்து, இவ்வாறு நான்குமுறை செய்தால் 125-எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தினதாகின்றது; பிறகு சுவாசம் விடும்போது, வலது நாசியை மூடி இடது நாசியின் வழியாய் 4-அங்குல சுவாசம் வெளியில்விட்டு, மறுபடியும் 4-அங்குல சுவாசம் ஓம் என்று உள்ளுக்கிழுத்து இடது நாசியை மூடி, வலது நாசியைத் திறந்து 4-அங்குல சுவாசம் வெளியில் விட்டு, மறுபடியும் 4-அங்குல சுவாசம் ஓம் என்று உள்ளுக்கிழுத்து இவ்விதமாய் முன்போல் நாசிகளே விரல்களால் மாற்றி மாற்றி

431,432 PAGE MISSING IN BOOK

படியால் நீங்களும், 4-அங்குல சுவாசம் வெளியில் விட்டு மற்ற சுவாசமெல்லாம் கர்ப்பத்தில் நிறுத்தவேண்டுமென்று இதில் சொல்லியிருக்கின்றோம்.

அடியேன் 1920ஆம் தேச ஸஞ்சாரார்த்தமாய்ப் புறப்பட்டு ஒசூர் என்னும் கிராமத்திற்குச் சென்றிருந்தபோது, இதுவரையில் இந்நூலில் சொல்லியிருக்கும் பிராணுயாமத்தை, கிருஷ்ணகிரி என்னும் கிராமத்தில் இருந்த நாராயணதாஸ் என்பவன், அப்யாஸம் (சாதனம்) செய்து கொண்டு வந்தான். இவன், தன் அப்யாஸம் சரியா யிருக்கின்றதா இல்லையா என்று தெரிந்துகொள்வதற்காக ஒசூர் வந்து, தன் அப்பியாஸத்தை, அடியேன் எதிரில் செய்து காட்டினுன். இவன் சுவாசம் நிறுத்திக் கும்பகம் செய்தது சரியா யிருந்தது. ஆனல், சுவாசம் விடும்போது இந்நூலில் சொல்லியதுபோல் சுவாசம் அடக்கி 4-அங்குலம் விடாமல், உள்ளே நிறுத்திய சுவாசமெல்லாம் ஒரே முறையாய் வெளியில் விட்டுவிட்டு, மறுபடியும் விட்ட அவ்வளவு சுவாசம் உள்ளுக்கிழுத்து மறுபடியும் அதிவேகமாய் சுவாசம் வெளியில்விட்டு மாற்றி மாற்றிக் காட்டினுன். இவ்வாறு சுவாசம் அதிவேகமாய் வெளிவிடலாகாது. அப்படி அதிவேகமாய் விட்டால் மனது லயப்படமாட்டா. மனது எப்படி லயப்படுமென்றுல், சுவாசம் உள்ளுக்கிழுக்கும்போது, சுமார் இரண்டு அல்லது மூன்றடி சுவாசம் நுரை ஈரலில் கொள்ளும். இவ்வாறு இரண்டு மூன்றடி சுவாசம் உள்ளுக் கிழுத்து, ஐம்பதோ நூறோ நூற்றி ஐம்பதோ இருநூறோ முந்நூறோ நாநூறோ ஐந்நூறோ அல்லது ஆயிரமோ எண்ணும் வரையில் நிறுத்தி, முடிந்தவுடன் சுவாசம் விடும்போது, மூன்றடி நீளமும் வெளியில் விடாமல் அதிலிருந்து நாலங்குல நீள சுவாசம் மாத்திரம் வெளியில் ஒடும்படி விட்டு அதை உசு

வாஸ நிசுவாசங்களாய் விட்டுக்கொண்டு, மற்ற இரண்டடி எட்டங்குல சுவாசம் இருதயத்திலேயே நிறுத்திவைக்க வேண்டும். அப்படி சுவாசம் இருதயத்தில் நிறுத்தி, சிந் முத்திரையைப் பிடித்து நிஷ்டையில் இருப்பார்களாகில், இருதயத்தில் நிறுத்திவைத்த பிராணவாயுவானது, மனதை வெளியில் ஓடவிடாமல் செய்து ஆத்மாவுடன் ஐக்கியம் செய்துகொள்ளும். ஆதலால், சுவாசம் அடக்கி அவரவர் களின் கணக்குப்படி எண்ணி முடித்து சுவாசம் விடும் போது அந்த சுவாசமானது, காட்டிலிருந்து பிடித்துக் கொண்டுவந்த புது சர்ப்பம், 'புஸ்' 'புஸ்' என்று அதிவேக மாய்ச் சீறி சுவாசம் எவ்விதமாய் வெளிவிடுகின்றதோ, அதுபோல் சுவாசத்தை நிறுத்திக்கணக்குப்போல் எண்ணி முடித்து வெளிவிடும்போது சுவாசம் அதிவேகமாய் 'புஸ்' 'புஸ்' என்று சீறிக்கொண்டே வெளிவரும். அப்போது அதை அதிவேகமாய் வெளிவிடாமல் அடக்கி 4-அங்குல சுவாசம் வெளிவிட்டு அந்த 4-அங்குல சுவாசத்தை, விட்ட நாசியினுலேயே இழுத்து மூடி, நாசிகளை மாற்றி மாற்றி சுவாசத்தின் வேகம் அடங்கும் வரையில் நிதானமாய் விட்டு சுவாசத்தின் வேகம் அடங்கியபின், நாசிகளின் மீதிருக்கும் கையை எடுத்துவிட்டு சிந்முத்திரையை விரல் களால் பிடித்து இரண்டு தொடைகளின்மீது வைத்து, இடுப்பு கூன் வளையாமல் மார்பைச் சரியாய் நிமிர்த்தி, முகம் நேராய் நிறுத்தி நிஷ்டையில் இருக்கவேண்டும்.

இவ்வாறு சுவாசம் அடக்கி பிரதிதினம் பழகிவந்தால், சுவாசத்தின் வேகம் நாளாவட்டத்தில் சிறுகச் சிறுக அடங்கிவிடும். எப்படியென்றால், அனேக தினங்கள் இரையில்லாமலிருக்கும் பாம்பானது, வேகமாய் ஓட சக்தி யில்லாமல் எப்படித் தட்டுத் தடுமாறி மிகவும் மெதுவாய் நகருகின்றதோ, அதுபோல் பிராணுயாமம் செய்துவரும்

புருஷன், சர்ப்பம்போல் சீரிக்கொண்டுவரும் சுவாசத்தை நாளாவட்டத்தில் அடக்கி மெதுவாய் விட்டு பழகி வருவானாகில் அப்போது, சுவாசத்தின் வேகமெல்லாம் அடங்கி, மூன் சொல்லிய பாம்பைப்போல். சுவாசம் மெதுவாய் நடக்கும். ஜீவராசிகள் விடும் சுவாசமும் பாம்பிற்குச் சமானமானதென்று அறியுங்கள்; மூக்குரந்திரங்களின்வழியாய் பாம்பைப்போலச் சீறிக்கொண்டுவரும் சுவாசத்தின் ரஹஸ்யார்த்தம் புருஷர்கள் தெரிந்துக்கொள்ளாம லிருக்கின்றூர்கள். ஆதலால், இந்த சுவாசமென்னும் பாம்பை, அடக்கி ஆட்டி அப்பியசித்து வருவீர்களாகில் அப்போது இருதயத்தில் நிறுத்திவைத்திருக்கும் பிராணவாயு, உங்கள் மனதை வெளியில் ஓடவிடாமல் நிறுத்தச் செய்யுமென்று அறியக்கடவீர்களாக: நாராயணதாஸை இங்கு குறிப்பிட்டு சொல்வதற்குக் காரணம் யாதெனில், பிராணயாமம் செய்துவரும் அனேக புருஷர்கள், சுவாசம் விடும்போது இவனைப்போல் அதிவேகமாய் விட்டுக்கொண்டு வருகிறபடியால், இனியாகிலும் அவ்வாறு விடாமல் சுவாசம் அடக்கி விடவேண்டுமென்று சொல்வதற்காக இவனை இங்கு திருஷ்டாந்தமாய்க் காட்டப்பட்டது:

அன்றியும், 1922ஹு டிசம்பர்மீ மறுபடியும் அடியேன் தேச சஞ்சாரார்த்தமாய்ப் புறப்பட்டு, அங்கங்கு சென்று வரும்போது, அடியிற் கண்டிருக்கும் ஊர்களிலிருந்து, தாம் செய்துவரும் பிராணயாம அப்யாஸம் சரியோ சரியல்லவோ என்று காட்டுவதற்காக அடியேனிடம் வந்தார்கள். அவர்கள் யாரென்றூல், 1. தாராபுரம் தாலூக்கா குள்ளாயிபாளையம் என்ற ஊரில் இருக்கும் கிருஷ்ணசாமி கவுண்டன்; 2. ஷை தாலூக்கா பிரமயம் என்ற ஊரில் இருக்கும் ஏகானந்தசுவாமி; 3. பாபநாசனம் தாலூக்கா பள்ளியூரில் இருக்கும் வீரய்யன்; 4. சேலம்

ஜில்லா செவ்வாப் பேட்டையி லிருக்கும் கோபால சர்மா. இந் நால்வரையும் பிராணுயாமத்தில் பரீக்ஷித்தபோது, இவர்கள் யாவரும் உப்பு புளி காரம் முதலானவைகளை நீக்கி அரைக்கால்படி பச்சரிசி, அரைக்கால்படி முழு பச்சைப்பயர் கலந்து உப்பில்லாமல் பொங்கி மிகவும் கஷ்டத்துடன் சாப்பிட்டவனும், உடைத்த பயரும் அரிசியும் கலந்து உப்பில்லாமல் பொங்கி, சாப்பிட்டவனும், ஒரு பிடி பச்சைப்பயர் கஞ்சி காய்ச்சி சாப்பிட்டு இவ்வாறு பலரும், தாம் தாமாகவே அதிக கடினமான பத்தியங்களை ஏற்படுத்திக் கொண்டதனுல், சரீரத்திற்கு ரத்தபலம் குறைந்து விட்டது; ரத்தபலம் குறைந்து விட்டபடியால் பிராணுயாமம் செய்யும்பொழுது தலை விசேஷமாய் ஆடப்பட்டவனும், சுவாசம் கண்டத்தை உதைத்து குடலில் செல்லும் போது அதைத் தாள சக்தியில்லாமல் ஓர்விதமாகிய கூச்சல் இடப்பட்டவனும், மற்றொருவனுக்கு சுவாசம் கண்டத்தை ஊன்றி குடலில் செல்லும்போது அதைத் தாள முடியாமல் பல்லைக் காட்டுவதுமாய் இவ்வாறு அனேக சேஷ்டை யுடையவர்களாய் இருந்தார்கள், பிறகு, அவர்களை சிலது நாட்கள் அடியேன்கூட அங்கங்கு அழைத்துச் சென்று உப்பு, புளி, காரம், சொல்பமாயும் நெய் பால் தயிர் விசேஷமாய்சேர்த்துச் சாப்பிடும்படிச்செய்து சரீரத்திற்குப் பலத்தை உண்டாக்கி பிராணுயாமம் செய்யச் சொல்லி பார்த்தபோது,முன்னிருந்த சேஷ்டைகள் யாவும் இல்லாமல் மிகவும் சுகமாய்ச் செய்துவந்தார்கள். யாம் பிராணுயாமத்தில் சொல்லியதுபோல், நாலங்குல சுவாசம் வெளிவிட்டு நாலங்குல சுவாசம் உள்ளுக்கு இழுத்தபோதிலும், சரீரத்தில் ரத்தபலம் குறைந்துவிட்டபடியால் பிராணுயாமம் செய்ய சக்தியில்லாதவர்களாய் விட்டார்கள். ஆதலால், இந்நூலில் சொல்லியதுபோல் அனேகர்

கள் பிராணுயாமம் செய்து வரப்பட்டவர்களா யிருக்கின்ருர்கள். அவர்கள் யாவரும் முன் சொல்லியவர்களைப் போல் உப்பு புளி காரங்களை நீக்காமல் சாதாரணமாய் மூன்று வேளைகளிலும் சாப்பிடும் ஆஹாரத்தில் காலையில் அரை வயறும், பகலில் (உச்சிக்காலத்தில்) முக்கால் வயறும், இரவில் அரை வயறும் நல்ல நெய் பால் தயிருடன் சாப்பிட்டு வருவீர்களாகில் உங்கள் சரீரத்திற்கு நல்ல பலமுண்டாய் பிராணுயாமம் செய்ய அதிக ஊக்கத்தை உண்டாக்கும். புளி வேண்டாம், புளிக்குப்பதில் எலுமிச்சம் பழம் ரசம் சேர்த்துக்கொள்ளுங்கள். காரத்திற்காக மிவகு சேர்த்துக் கொள்ளுங்கள். மிளகாய் வேண்டாம். இது வரையில் உப்பு புளி காரங்களை நீக்கி, பிராணுயாமம் செய்து வரப்பட்டவர்களுக் காகவே முன் சொல்லிய ஊராரை இங்கு திருஷ்டாந்தமாய்க் காட்ட நேர்ந்தது. புளியும் காரமும் நீக்கி எலுமிச்சம்பழம் புளிப்பும், மிளகு காரமும், உப்புக்குப் பதிலாய் இந்துப்பு சேர்த்துக் கொள்ளுக்கள்.

பிராணுயாமம் செய்துவரும் வியர்வையை சரீரத்திலேயே ஊறும்படி தேய்த்துவிடவேண்டும். துணி முதலியவைகளால் துடைக்காமல் சரீரத்தில் ஊறும்படி தேய்த்து வந்தால் அவ்வேர்வை சரீரத்திற்கு மிகவும் பலத்தை உண்டாக்கும்; அப்போது அவர்கள் எந்த ஜீவ ஜந்துக்களையாகிலும் தன் கையால் அறைந்தால் அவை மரணமடைந்துவிடும். இது விஷயம் முன் யோகதத்வோப நிஷத்து, சுலோகம் 15-ல், சொல்லியிருக்கின்ருேம். ஆதலால், பிராணுயாம அப்பியாசத்தினுல் சரீரத்தில் உண்டாகும் வியர்வையை சரீரத்திலேயே இமுடும்படி தேய்த்து விட்டால் சரீரத்திற்கு அதிக பலத்தை உண்டாக்கும். ஆதலால், பிராணுயாமாப் பியாசத்தினுல் உங்கள் சரீரத்

தில் உண்டாகும் வியர்வையை, சரீரத்திலேயே வற்றும்படி தேய்த்து சரீரத்திற்குப் பலத்தை உண்டாக்கிக் கொள்ளுங்கள்.

முன் சொல்லிய வீரய்யன் 7-நிமிஷங்கள் வரையில் சுவாசம், இந்நூலில் சொல்லியதுபோல் நிறுத்தப் பழகியிருக்கின்றான். இவன் உப்பு, புளி, காரம், தள்ளிவிட்டபடியால் சரீரத்திற்கு அதிக பலம் குறைந்து, சுவாசம் கும்பகத்தில் நிறுத்தி பிறகு அது கண்டத்தை உதைத்து வெளிவரும்போது அதைத்தாள சக்தியில்லாமல் உதட்டைத் திறந்து பல்லைக் காட்டிக்கொண்டு வந்தான். உப்பு, புளி, காரம், சேர்த்து சாப்பிட்டு பலம் வந்தபிறகு வீரய்யன் உதட்டைத் திறந்து பல்லைக் காட்டுவதில்லை. மேற்சொல்லியவர்கள் இன்னும் அனேக ஆயிரம் எண்ணும் வரையில் சுவாசத்தை நிறுத்தினால் பசி உண்டாகவே மாட்டா. ஏனென்றால், குடல் நிறைய சுவாசம் சதாகாலம் தங்கி யிருப்பதனால் பசி உண்டாகவேமாட்டா. அப்படி பசி உண்டாகாமல் போவதே வாயுபக்ஷணை என்று சொல்லப்படும். அக்காலத்தில் பால் பழம் மாத்திரம் சிறிது சாப்பிட்டு சமாதி நிஷ்டை என்றால், எந்த எண்ணங்களுமில்லாமல் சும்மாயிருக்க சாதனம் செய்து வர வேண்டுமென்று அறியக்கடவீர்களாக.

அன்றியும் 1924ஹு டிசம்பர்மீ 17உ பினங்கு சேர்ந்து அங்கு உபந்யாசம் செய்து, அலஸ்டார் (கிட்டா) சுங்கைப்பட்டாணி பட்டர்வொர்த் (கோலப்பிரை) சப்பல பத்தாஸ் பாரபந்தா தைபிங் கோலாகங்சர் லங்கோ சுங்கை சிப்பு சிற்றியாவான் ஈப்போ வத்துக்காஜா கம்பார் தாப்பா தஞ்சமாலிம் கோலகுப்பு ராவுப் கோலாலிப்பிஸ் கோலாலம்பூர் கோலகிள்ளான் கிள்ளான் வத்துதீகா கோலசிலங்கூர் காஜாங் சிரம்பான் கோலபிலா தம்பின் மலாகா மூவார்

கிமாஸ் சிகமெட் ஜோஹூர் சிங்கபூர் முதலான ஊர்கள், தேச சஞ்சாரார்த்தமாய்ப் புறப்பட்டு வரும்போது அனேகர்கள், பிராணயாமம் ராஜயோகம் பஞ்சாக்ஷரம் முதலானவைகள் உபதேசம் பெற்றுக்கொண்டு வரும்போது கிள்ளானில், ராஜு பகீரிசாமி என்பவர்கள் இந்த ஜீவப் பிரமைக்யத்தில் சொல்லியிருக்கும் பிராணயாமத்தை, புஸ்தகத்தில் சொல்லி யிருப்பதுபோல் அனேகநாட்களாய்த் தாம் செய்துவரும் யோகாப்பியாசப் (பிராணயாமம்) சரியோ சரியல்லவோவென்று காட்டுவதற்காக 10-6-24 லில், கிள்ளானிலிருந்து கோலாலம்பூர் வந்து தம் யோகாப்பியாசத்தை அடியே னெதிரில் செய்து காட்டினார்கள். புஸ்தகத்தில் எவ்வாறு சொன்னேமோ அதுபோல் சரியாய்ச் செய்தார்கள். இவர்களை இங்கு திருஷ்டாந்தமாய்க் காட்டுவதற்குக் காரண மென்னவென்றால், குருவில்லாமல் புஸ்தகத்திலுள்ள படத்தையே குருபாவனையாய் நினைத்து மிகவும் அன்புவைத்து யாம் புஸ்தகத்தில் சொல்லியது போல் பிராணயாமம் செய்து வருகின்றார்கள். இவ்வாறு அனேகர்கள், அடியேனால் தெரிந்துகொள்ளாமல் புஸ்தகத்தை சரியாய் வாசித்து அதில் சொல்லியதுபோல் பிராணயாமம் செய்து வருகின்றார்கள். இனி, இப்பிராணயாமம் உலகமெங்கும் பரவி விசேஷமாய் விருத்தியாய்க் கொண்டே வரும். இதன்றியும் தைபிங் F. M. S. ஸ்டேஷன் மாஸ்டர் P. தம்பையா என்பவரும், கோலா கங்சர் F. M. S. ல், யாழ்ப்பாணம் தாவடி சைவம் சிவ சுப்ரமண்யம் பென்ஷனியர்; இவ்விருவரும் உபதேசகாண்டம் படலத்தில்,

வலது மூக் கங்குட்டத்தாற் புதைத்
  தீரெண் குடிலை வாங்கி யேற்றி
புலவு மெண்ணெண் பிரணவத்தைச் சுவாசம்
  விடா தருவேற்றி யகத்துக் கும்பித்

திலகிட நாசியைப் புதைத்த
வலமூக்கா லந்த வெண்ணெண் பிரணவத்தைச்
சலவ வெளி விருக முப்பானிரண்டு
பிரணவ மாக்கிச் சுவாசத் தோடும்.

இட நாசி நடுவிரலிற் புதைத்து
வல நாசியி னப்பரிசி னேற்றி
நெடுநாசி வலம் பொத்தி யிட நாசிவழி
முன்னர்நிகழ்ந்த வாறே
விடலீது பிராணயாம மிது விரண்டுவிதஞ்
சகற்பங் கற்ப வென்னப்
படலாகு மாங்கவற்றி னிலைமை
யுரைப்பக் கேண்மினெனப் பகர்வ தானன்.

மேற்சொல்லிய பாடல்களைப் பார்த்து அதன் அர்த்தம் விளங்காமல், வலது நாசியில் சுவாசம் பதினாறு எண்ணும் வரையில் உள்ளுக்கிழுத்து, அறுபத்துநாலு எண்ணும் வரையில் நிறுத்தி பிறகு, முப்பத்திரெண்டு எண்ணிக்கொண்டே சிறுகச் சிறுக எல்லா சுவாசத்தையும் விட்டு விடுவது வழக்கம். இவ்வாறு கோலாகங்சரில், யாழ்ப்பாணம் தாவடி சைவம் சிவ சுப்ரமண்யம் என்பவர், ஏழு வருஷங்களாய்ச் செய்தும், மன நிலையைக் கண்டறியவில்லை. F. M, S. தைபிங் ஸ்டேஷன்மாஸ்டர் P. தம்பையா என்பவர், மூக்கை விரல்களால் மூடாமல் ஒரே மூச்சா யிழுத்து யாதொரு கணக்குமில்லாமல் சற்றுநேரம் நிறுத்தி பிறகு, எவ்வளவு சுவாசம் இழுத்தாரோ அவ்வளவு சுவாசமும் எந்த மூக்கையும் மூடாமலே எல்லா சுவாசத்தையும் விட்டுவிட்டார். இவ்வாறு இவர் மூன்று வருஷங்களாய்ச் செய்துவந்தார். ஆதலால், நூல்களில் சொல்லியிருக்கும் பிராணயாமத்தின் பாட்டிலுள்ள அர்த்தம் விளங்காமல் அவரவர்களுக்கு எவ்வாறு தோன்றுகின்றதோ அதுபோல், உலகத்திலுள்ள அனேகர்கள் பிராண

யாமம் செய்துவருகின்றூர்கள். முன் சொல்லிய சிவ சுப்ர மண்யம், ஸ்டேஷன்மாஸ்டர் P. தம்பையா இவ்விருவர் களுக்கும் இன் நூலில் சொல்லியிருப்பதுபோல் சுவாசம் உள்ளுக்கிழுத்து ஐம்பது எண்ணும் வரையில் நிறுத்தி,மறு படியும் எல்லா சுவாசமும் விட்டுவிடாமல் நாலங்குலம் நீளம் வரையில் சுவாசம் வெளியில்விட்டு, அந்த நாலங்குல சுவாசத்தையே உள்ளுக்கிழுத்து அதை மற்றொரு மூக்கில் மாற்றி நாலங்குலம் வெளியில்விட்டு அந்த நாலங்குல சுவா சத்தை மறுபடியும் அதே மூக்கில் இழுத்து அடுத்த மூக் கில் மாற்றி இவ்வாறு அதன் வேகம் அடங்கும் வரையில் சுவாசம் ஒரே கணக்காய் இரண்டு மூக்கிலும் மாற்றிமாற்றி விடும்படி காட்டிக்கொடுத்தோம். சிவசுப்ரமண்ய பிள்ளை பென்ஷனியரா யிருப்பதால் அடியேனுடன் கூட அழைத் துச் சென்றே,யோகநிலையைக் காட்டிக்கொண்டுவந்தோம். முன், ஏழுவருஷங்கள் வழிதெரியாமல் யோகாப்பியா சம் செய்துவந்தபடியால் மனநிலையைக் கண்டறியவில்லை. பிறகு அடியேனுடன் கூட வந்த நாலுமாதத்திற்குள், யோகபலத்தினுல் மன நிலையைக் கண்டறிந்து சந்தோஷ மடைந்தனர். இவருக்கு மனைவியார் இல்லை; அடியேன் இதுவரையில் பார்த்த அனேகர்களில் இவர் ஒருவரே, மிக வும் சாந்தம் கருணை பொறுமை தயை கோபமில்லாதவ ராய் இருப்பதனுல் இவரது குமாரருக்கு யாழ்ப்பாணத்தில் விவாகம் முடித்து, கடிகோட்டை வந்து சேரும்படி ஆஞ் ஞாபித்தோம்; இவருக்கு ரூபா 95-0-0 பென்ஷன் வரு கின்றது. எல்லாவற்றையும்விட்டு சென்றுவிடுவதே வானப் பிரஸ்தமென்று சொல்லப்படும்; வானப் பிரஸ்தம் (காட் டுக்குச்) சென்று மனதை நாசம் செய்வதே சன்யாச மென்று சொல்லப்படும். காஷாய வஸ்திரங்களைக் கட்டிக் கொள்வது சந்யாசமல்ல; மனதை வெளி வியவகாரங்

களில் ஓடவிடாமல் நிறுத்துவதே சன்யாசம். குடும்பத்தி லுள்ளவர்களும், மனதை வெளி வியவகாரங்களில் ஓட விடாமல் நிறுத்துவாராகில் அவர்களே சந்யாசிகள். ஆத லால், எல்லா ஆசிரமத்தைவிட கிருகஸ்தாசிரமமே மிக வும் சிரேஷ்டமானது. இனி யோகாப்பியாசி இருக்க வேண்டிய வழியைச் சொல்லுகின்றோம்.

யோகாப்பியாசம் செய்பவர்கள், அதிக தூரம் நடக்க லாகாது; வெய்யலில் திரியக்கூடாது; ஸ்திரீ சம்போகம் மாதவிடாயான ஆறுதினங்கள் முதல், பதினறு தினங்களுக் குள் இரண்டு முறைக்குமேல் சம்போகம் செய்யலாகாது; அதற்குமேல் சம்போகம் செய்தால் பலங் குறைந்து பிராணயாமம் செய்ய சக்தி யில்லாதவர்களாய் விடுவார் கள். இது விஷயத்தில் அதிக ஜாக்கிரதையா யிருங்கள்.

யோகாப்பியாசம் செய்பவர்களுக்காகிலும் சரி, அல் லது மற்த எவர்களுக்காகிலும் சரி, வயிர் கடுத்து சீத பேதியா யிருக்கப்பட்டவர்களுக்காயினும், அல்லது மலத் துடன் ரத்தம் விழப்பட்டவர்களுக்காயினும் சாப்பிட வேண்டிய ஒளஷதம் இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

காசிக்கட்டியை நன்றாய்த் தூள்செய்து, பெரிய நெல் லிக்காய்ப் பிரமாணம் எருமை வெண்ணெயில் ஷை காசிக் கட்டித் தூளில் மூன்று சுண்டக்காய்ப் பிரமாணம் தூள் எடுத்து ஷை வெண்ணெயைப் பள்ளம்செய்து அதில் வைத்து மூடி, மூன்றுநாள் காலை மாலைகளில் சாப்பிட்டால் சீத பேதி உடனே நிவாரணையாகும். இதற்குப் பத்தியம் புளித்த எருமைத் தயிரில் உப்புச்சேர்த்து சாதத்துடன் கலந்து சாப்பிடலாம். எலுமிச்சங்காய் ஊர்காயாகிலும் மற்ற எந்த ஊர்காயாகிலும் சேர்த்துக்கொள்ளலாம். காரம் புளி, பேதி நிற்கும் வரையில் நிறுத்தவேண்டும்.

பல்லவி.

ஸாக்ஷாத்காரத்தைப்பாரு பவ சாகரக்கரையேறு ஓ
மனமே நீ சாக்ஷாத்காரத்தைப்பாரு

அநுபல்லவி.

சூக்ஷ்மாதி சூக்ஷ்மமதாகிய ஜோதிச் சுடரொளியை
அறிந்து மகிழ்ந்து நீ ஸாக்ஷாத்காரத்தைப் பாரு.

சரணம்.

இடைகலை பிங்கலை இரண்டுமே சேர்த்து
ஏகமதாய் சுழிமுனையிலே கோர்த்து
திடமுடன் பஞ்சகோசத்தை அறுத்து
திவ்யானந்த அமிர்தத்தை புசித்து ஸாக்ஷாத்

ஐந்து சபைகளையும் அறிவாலறிந்து
ஆநந்தக்கூத்தைக்கண்டு மகிழ்ந்து
அந்த்யமதாகிய மத்யமதான
† 'அ'கார ‡ 'உ' கார * 'ம' காரமதாகிய ஸாக்ஷாத்.

காமிய ஆணவ மாய்கையை போக்கி
அகண்ட மகாரம் தனிலேதாக்கி பரமஹம்ஸன்
தொழும் ப்ரஹ்மத்தில் சொக்கி
ஸச்சிதானந்த சிவத்தையே நோக்கி ஸாக்ஷாத்

இந்த பிராணயாமம் சீக்கிரமாய்ச் சித்திக்கவேண்டு மென்று எண்ணி சுவாசத்தை நிறுத்தி, 50, 100, 150, 200. 300, 400, 500 இவ்விதமாய் ஒருவாரம், இரண்டு வாரம், மூன்றுவாரம், நான்கு வாரங்களில் உயர்த்திக் கொண்டு போகலாகாது; பின் எப்படியென்றால்:—

† 'அ' காரம்-சுவாசத்தை வெளி விடுதல், ‡ 'உ' காரம்-சுவாசத்தை உள்ளுக்கிழுத்தல், * 'ம'காரம் - உள்ளுக்கிழுத்த சுவாசத்தை வெளிவிடாமல் நிறுத்தல்.

"யதா ஸிம்ஹோ கஜோ வ்யாக்ரோ பவேத் வஶ்ய ஶனைஃ ஸனைஃ
ததைவ ஸேவிதோ வாயு ரந்யதா ஹந்தி ஸாத்கம்.
யுக்தம்யுக்தம் த்யஜேத் வாயும் யுக்தம்யுக்தம் ப்ரபூரயேத்
யுக்தம்யுக்தம் ப்ரபத்நீயாதேவம் ஸித்திமவாப்நுயாத்."

"ப்ராணுயாமோ யுக்தேந ஸர்வரோகக்ஷயோ பவேத்
ப்ராணுயாம வியுக்தேப்யஃ ஸர்வரோக ஸமுத்பவஃ.
ஹிக்கா காஸஸ்ததா ஶ்வாஸஃ ஶிரஃ கர்ணுக்ஷிவேதநாஃ
பவந்தி விவிதா ரோகாஃ பவநவ்யத் யக்ரமாத்."

[யோகசூடா மண்யோபநிஷத்.]

"அப்யாஸகாலே ப்ரதமே ஶஸ்தம் க்ஷீராஜ்யபோஜநம்
ததோப்யாஸே த்ருடீ பூதே ந தாத்ருங் நியமக்ரஹஃ
யதா ஸிம்ஹோ கஜோ வ்யாக்ரோ பவேத் வஶ்ய ஶனைஶ் ஶனைஃ
ததைவஸேவிதோவாயு ரந்யதா ஹந்தி ஸாதகம்.

இந்த உபநிஷத்துகளின் வாக்கியரீதியாய், வனத்தில் (காட்டில்) வசித்துக்கொண்டிருக்கும், சிங்கம் யானைகளை ஒருவன் கொண்டுவந்து, தான் சொல்லுவதுபோல் அவைகள் நடந்துகொள்வதற்காக நாளாவட்டத்தில் கிரமக்கிரமமாய் அவைகளை தன் வசப்படுத்திக் கொள்ளவேண்டும். அப்படிக்குச் செய்யாமல் சிலநாள் அப்பியாசத்தால் அவைகளின் சமீபத்தில் சென்ருல் அவைகள் சமயம் பார்த்து அவனைக் கொல்லும். அதுபோல், யோகாப்பியாசி எப்பொழுதும் பால்சாதம் புசித்துக்கொண்டு நாளாவட்டத்தில் கிரமக் கிரமமாய் சிறுகச் சிறுக நிதானமாய் சுவாசத்தை நிறுத்தி உயர்த்திக்கொண்டே வரவேண்டும். இப்படி அப்பியசித்து வருவானுகில், அவன் சரீரத்திலிருக்கும், இருமல் க்ஷயம் பித்தகாசம் கண் காது நோய்களும், கருமேகம் இன்னும் அனேக விதங்களாகிய படைகளும் சகல வியாதிகளும் தினே தினே மேல்வீசி, பிறகு அவைகள் யாவும் சீக்கிரமாய் நாளாவட்டத்தில்

நீங்கி சரீரம், பரிசுத்தமான தங்கத்திற்குச் சமமாய்விடும். இதுபோல் அப்பியசிக்காமல் துரிதப்பட்டு சுவாசத்தை நிறுத்தி எண்ணிக்கைகளை அதிகமாய் உயர்த்திக்கொண்டே சென்றால் அஃது, வித்தியாசப்பட்டு அனேக வியாதிகளை உண்டாக்கி மனிதனை அதோகதி செய்விக்கும். ஆதலால், காட்டில் வசித்துக்கொண்டிருக்கும் சிங்கம் யானை புலி முதலானவைகளைப் பிடித்துக் கொண்டுவந்து நாளாவட்டத்தில் வசப் படுத்திக்கொள்வதுபோல், பிராணுயாமம் செய்யும் புருஷன், நாளாவட்டத்தில் கிரமக் கிரமமாய் சுவாசத்தை நிறுத்தி எண்ணிக்கைகளை உயர்த்திக் கொண்டே போகவேண்டும்.

இந்த மூன்று பிராணுயாமங்களையும், காலை பகல் மாலைகளில் அப்பியாசம் செய்துமுடித்து, 15-நிமிஷங்கள் சென்ற பிறகு போஜனம் செய்யவேண்டும். பிரதிதினம் காலை பகல் மாலை இம்மூன்று வேளைகளிலும் பிராணுயாமம் செய்துவரவேண்டும். காட்டிலிருக்கும் 'பாம்பை' பாம்பாட்டியானவன் பிடித்துப் பெட்டியில் அடைத்துக் கொண்டுவந்து, எல்லோருக்கும் வேடிக்கை காட்டுவதற்காகப் பெட்டியின் மேல் மூடியைத் திறக்கின்றான்; அது, புது 'ஸர்ப்ப' மானபடியால் மேல் மூடியை எடுத்தவுடன் சுமார் ஒரு முழத்திற்கு மேற்கிளம்பிப் படத்தை யெடுத்துக்கொண்டு "புஸ்" "புஸ்" என்று சீறி அடித்து ஆடும். இவ்விதமாய் ஒரு வாரம் வரையில் அனேக முறைகளில் மேல் மூடியை எடுத்து ஆட்டிக்கொண்டே வருவானாகில், 4-தினங்களுக்கெல்லாம் அதன் பலம் குறைந்துவிடும். 4-தினங்கள் சென்றவுடன் மேல் மூடியைத் திறந்தால், முன்போல் மேல் கிளம்ப சக்தியில்லாமல் படத்தை விரித்துக் கொண்டே ஜாணளவில் மேல் கிளம்பி, உடனே பெட்டியில் படுத்துக்கொள்ளும். இவ்விதமாய் 4-தினங்கள்

சென்றபிறகு மேல் மூடியைத் திறந்தால் முன்போல் ஜாணளவும் மேல் கிளம்ப ஸக்தியில்லாமல், பெட்டியில் படத்தை விரித்துப் படுத்துக்கொண்டே யிருக்கும். அப்போது பாம்பாட்டியானவன் பாம்பை தன் கையினுல் குத்தி எழுப்புகின்றான். அச்சமயத்தில் சர்ப்பம் எழுந்திருக்கச் சக்தியில்லாமல் படத்தை விரித்துக்கொண்டு மெதுவாய் சிரசை எடுத்துக்காட்டி மறுபடியும் பெட்டிக்குள் படுத்துக்கொள்ளும். இதற்கு பாம்பாட்டி சித்தர் பாடல் பிரமாணம்;

வளை புகும் போதே தலை வாங்கும் பாம்பே
மண்டல மிட் டுடல் வளை வண்ணப் பாம்பே
தளைக் கஞ்சி நின் றிடும் சத்தியப் பாம்பே
தலை யெடுத் தே விளை யாடு பாம்பே,
ஆதிசேட ஞகினு மெம் மங்கையி ஞலே
ஆட்டி விடுவோ மெங்க ளாக்கினைக் குள்ளே
நீதியோ டடங்கியே நின்றிடச் செய்வோம்
நின்ற நிலை தவறும லாடு பாம்பே.

இதுபோல் சுவாசமும் சர்ப்பமென்று அறிக; சுவாசமாகிய சர்ப்பத்தை அடக்கிக் கொண்டுவரப்பட்டவனே பாம்பாட்டி. இவன் சுவாசத்தை முன்சொல்லிய பாம்பாட்டியைப்போல் பிடித்து ஆட்டுவானுகில், சுவாசத்தின் வேகம் அடங்கிவிடும். இந்த அப்பியாசம் பிரதிதினம் தவறுமல் செய்து சுவாசத்தை அதிகநேரம் நிறுத்தப் பழக்கம் செய்யவேண்டும்.

அப்போது 'பிராணன் சரீரத்திலிருந்து' விடுபட்டுக்கொண்டே வரும். அது விடுபடுவது நன்றுய்த் தெரிய வரும். இதற்கு திருஷ்டாந்தம் என்னவென்றுல், 'எலக்ட்ரிக் பாட்டரி' (Electric Battery) இருக்கும் சிறிய பெட்டியின் வெளிப்புறத்தில் இரண்டு செப்புக் குழாய்கள் இருக்

கின்றன. அவ்விரண்டையும் இரண்டு கைகளில் ஒருவன் பிடித்துக் கொள்ளுகின்றான். மற்றொருவன் பெட்டிக்குச் சாவி கொடுக்கின்றான். அப்போது பெட்டிக்குள் இருக்கும் 'பாட்டரி' (Battery) அசைவதனுல், அவன் சரீரத்திலிருக்கும் நரம்புகளையெல்லாம் இழுக்கும். அது, இழுப்பது நன்றாய்த் தெரியவரும். அதுபோல், பிராணுயாமம் செய்து முடித்த யோகி, சாதாரணமாய் நின்றாலும் உட்கார்ந்தாலும் படுத்தாலும் அல்லது, சுகாசனமாய் பிரஞ்ஞையுடன் தன் இஷ்டம்போல் நிஷ்டையி லிருந்தாலும், பாதத்திலிருந்து முழங்கால் தொடை இடை வரையிலும், புஜத்திலிருந்து கைகளின் நுனி விரல்கள் வரையிலும், ஒவ்வொரு அங்கத்திலும் ஜாணளவு தூரம் நரம்புகளையும் சதைகளையும் இருந்தாற்போ லிருந்து அடிக்கடி இழுத்துக் கொண்டே வரும். இது, இந்நூலாசிரியருக்கு பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமா யிருந்தபடியால் இதை இங்கு சொல்ல நேரிட்டது. இதை நீங்களும் அனுபவத்தில் காணலாம். யோகாப்பியாசம் செய்து சித்தியடைந்த மஹாத்மாக்களுக்கு 'பிராணன், சரீரத்தில் பிசினைப்போல் பிடித்துக் கொண்டிராமல்' பிரத்தியேகமா யிருக்கும். இப்படிப் பட்டவர்கள் தம் சரீரத்தை விட்டு மற்றொரு சரீரத்திலும் பிரவேசிப்பார்கள். இதை பரகாயப் பிரவேசமென்றும் சொல்லுவார்கள். இதற்குத் திருஷ்டாந்தம் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

"ஸ்ரீ ஆதி சங்கராசாரியர், சகல தேசங்களும் சென்று, துர்மதங்களையெல்லாம் கண்டித்து துராசாரங்களைத் தூரப்படுத்திக்கொண்டே வந்து, கடைசியில் காசீ நகரம் போய்ச் சேர்ந்தார். அவ்விடம் மண்டநமிசிரன் என்பவன் பிரசண்ட வித்துவானுய் இருந்தான். அவனை ஸ்ரீ சங்கராசாரியர் ஜயித்தார். உடனே அவனது பத்நி

யானவள், ஸ்ரீ சங்கரரைப்பார்த்து, என்னையுங்கூட ஜயித்தா லல்லவோ சம்பூர்ண ஜயமாகும் என்று சொல்லி, ஸ்ரீ சங்கரருடன் வாதாடினள். இப்படி சிலநாள் அவள், ஸ்ரீ சங்கரருடன் வாதாடி அவரது அளவில்லாத வாக்கியங்களைக் கேட்டுப் பயந்து, இவர் சாதாரணமான சங்கரரல்ல சாக்ஷாத் பரமசிவனே சங்கராசாரிய ரூபமாய் அவதரித்தவர்; இவரை ஜயிக்க நம்மால் சாத்தியப் படமாட்டா. இவர் சிறு பிராயத்திலேயே சந்நியாசம் பெற்றவ ராதலால் இவரை கொக்கோக முதலிய காம சாஸ்திரத்தினால் ஜயிக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டு, கொக்கோகத்தி லுள்ள சில விஷயங்களைக் கேட்கலாம், அதற்குப் பதில் சொல்லுவா ராகில் இவர் பால்யத்திலேயே சந்நியாசம் பெற்றுக்கொண்டபடியால் இவருக்கு இவ்விஷயம் எவ்விதமாய்த் தெரிந்ததென்று பிரஜைகளால் அவமானப் படட்டுமென்று எண்ணங்கொண்டவளாய்க் கொக்கோக சாஸ்திரத்தில் சில கேள்விகளைக் கேட்டாள். அக் கேள்விகளுக்குத் தாம் விடைகொடுக்க சக்தியுடையவரா யிருந்தபோதிலும் உலகத்தாருக்காக அச்சமுண்டாய், சிலகாலம் சென்ற பிறகு இதற்குப் பதில் சொல்லலாமென்று எண்ணி, அவளிடத்தில் சிலகாலம் தவணை (கெடுவு) பெற்றுக்கொண்டு, ஆங்காங்கு சஞ்சரித்துக்கொண்டு வரும்போது ஓரிடத்தில் அநேக ஸ்திரீகள் கூடிக் கூக்குரலிட்டு ஓ வென்று கதறி அழுதுகொண்டிருப்பதை ஸ்ரீ சங்கரர் பார்த்து, அவ்வூர் அரசன் மாண்டானென்று தெரிந்துகொண்டு அவ்விடமிருந்து தம் சிஷ்யர்களுடன் சிலதூரம் சென்று, தன் சரீரத்தை (பிணத்தை) ரகசியமான இடத்தில் வைத்துக் காப்பாற்றவேண்டுமென்றும், பிணத்திற்கு ஏதாகிலும் ஆபத்து வந்தால் "தத்வமஸி தத்வமஸி தத்வமஸி ராஜந்" என்று அரண்மனைச் சுற்றிலும் சொல்வீர்களாக என்று சொல்லி

விட்டுத் தாம் கீழே சயனித்து ஆத்மா, தன் சரீரத்தைவிட்டுக் கிளம்பி ராஜன் சரீரத்தில் போய்ப் பிரவேசித்தது; ஆத்மா ராஜன் சரீரத்தில் பிரவேசித்தவுடன், ராஜன் எழுந்து உட்கார்ந்தான். ஸ்திரீகளும் மந்திரிமார்களும் பிரஜைகளும் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டு சந்தோஷித்தார்கள். ராஜன், முன்போல் ராஜ்ஜிய பரிபாலனஞ் செய்து சமஸ்த போகங்களையும் அனுபவித்தார். அப்போது அந்த தேசம் இரண்டாவது சொர்க்கம்போல் காணப்பட்டது. 'பட்டத்து அரசி' யானவள், சயனித்ததில் (படுக்கையில்) சந்தேகம் கொண்டு "இவர் முன் ராஜனல்ல இந்த சரீரத்தில் யாரோ மஹாத்மா பிரவேசித்திருக்கின்று" ரென்று நன்ருய் அறிந்துகொண்டு, மந்திரிமார்களை வரவழைத்து இந்த ரகசியங்களையெல்லாம் அவர்களுக்குச் சொல்லினள்.

அதற்கு மந்திரிமார்கள் "தாயே! நாங்களும் பரிக்ஷித்தோம்; இந்த ராஜன் பூர்வ ராஜனைப்போல் இராமல் சகல வித்தைகளிலும் புத்தி நுட்பத்திலும் யோசனையிலும் இவரைப்போன்ற அரசர் எவ்விடத்திலும் இருக்கமாட்டார்க" ளென்று சொல்லினர்கள். இந்த புருஷனை இந்த சரீரத்திலேயே இருக்கச் செய்வது மிகவும் நன்மையென்று யோசித்து, நமது ராஜ்ஜியத்தில் இறந்த சரீரங்கள் (பிணங்கள்) எங்கெங் கிருக்கின்றனவோ அவைகளை எல்லாம் எடுத்து தகனம் செய்விக்கவேண்டும் என்று பட்டத்து அரசி சேவகர்களுக்கு ஆஞ்ஞாபித்தாள். அதுபோல் சேவகர்கள் சென்று ஆங்காங்கிருக்கும் பிணங்களை யெல்லாம் எடுத்துத் தகனம் செய்துகொண்டேவந்து, பிறகு அதிக கோப்பியமாய் (ரகஸ்மாய்) வைத்திருக்கும் ஸ்ரீ சங்கரரது பிணத்தைக் கண்டு பிடித்துக் காஷ்டத்திற்குக் கொண்டு போய்த் தீ மூட்டினர்கள். அப்போது, சிஷ்யர்க ளெல்

லோரும் அரன்மனைச் சுற்றிலும் "தத்வமஸி தத்வமஸி தத்வமஸி ராஜந்" என்று சொல்லித் திரிந்தார்கள். ஆசாரியர் படுத்துக்கொண்டே அந்த வாக்கியத்தைக் கேட்டவுடன் ஆசாரியரது ஆத்மா, ராஜன் சரீரத்தை விட்டுச் சுடலையிலிருக்கும் தம் சரீரத்தில் போய்ப் பிரவேசித்து,

சுலோ || ஸ்ரீமத் பயோநிதி நிகேதந சக்ரபாணே
யோகீந்த்ர போகமணி ராஜித புண்யமூர்த்தே
யோகீஶாஶ்வத ஶரண்ய பவாப்திபோத
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்.

என்று பாடினமாத்திரத்தில், அக்கினிசுவாலை தணிந்து அங்கயீனமாகாமல், படுத்து எழுந்தவர்போல் தன் யதா ரூபத்துடன் எழுந்து பக்தர்களைக் கடாக்ஷித்து, மேற்படி ஸ்திரீயை ஜயித்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இஃதன்றியும்,

"ஸ்ரீ சுகர் கபீர்தாஸ் ரூபமாய் லோகோத் தாரணார்த்தமாய் அவதரித்து, உலகத்திலுள்ள துன்மார்க்க மதங்களையெல்லாம் கண்டித்து, அனேகர்களுக்கு பக்திரசத்தை ஊட்டி தத்வோபதேசம் செய்து, தான் வந்த காரியங்களையெல்லாம் பூர்த்திசெய்தவுடன், ஸாக்ஷாத் நாராயணமூர்த்தி அவருக்கு பிரசன்னமாய், "கபீர் நீ அவதரித்த காரியங்களெல்லாம் முடிந்தன, இனி நீ பரமபதம் வந்து சேரக்கடவாய்." என்று ஆஞ்ஞாபித்து, கபீர் பார்யாள் சுந்தராதேவியை தம்முடன்கூட அழைத்துச் சென்றார். பகவான் சென்றவுடன், கபீர் பத்மாசனத்தில் உட்கார்ந்து பிராணாயாமம் செய்து, நாபியிலிருக்கும் குண்டலி சக்தியைக் கிளப்பி பிரம்ம கபாலத்தைத் திறந்துகொண்டு சுகப் பிரம்மரிஷியாய்த் திவ்விய விமானமேறி சுரர்களும் முனிவர்களும் எதிர்கொண்டுவந்து, பகுவித மரியாதையுடன் அழைத்துச் சென்றார்கள். இந்த கபீர்தாஸ் சரித்திரம்

தனியாய் எழுதியிருக்கின்றேம்; இது, வாசிப்பதனல் மன திற்கு பக்திரசம் அதிகரித்து வரும். அதனல் பாபகாரி யங்களைச் செய்ய கனவிலும் இடங்கொடாமல் எப்போதும் நல்ல காரியங்களைச் செய்ய இச்சையை உண்டாக்கும். இது, சாதாரணமான கபீர்தாஸ் சரித்திரமென்று எண்ண வேண்டாம். இந்த சரித்திரம் ஆதியில் ஸம்ஸ்கிருத பாஷை யில் உண்டானது. இது, மைசூர் தேசத்தை ஆண்டுவந்த அரசர்களில் 21-வது, சந்ததியில் வந்த ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார் பஹதூர் அவர்களால் கன்னடத்தில் மொழி பெயர்த்து எழுதப்பட்டது. இதுவரையில் அதைத் தமிழ் பாஷையில் மொழி பெயர்த்து எழுதினேரில்லை. இப் போதுதான் அது, தமிழில் மொழிபெயர்த்து அச்சிடப் பட்டது. இக்கபீர்தாஸ் சரித்திரம் இந்நூல் விற்கும் கம்பெனியில் விற்கின்றன; ஆதலால், இதனை ஒவ்வொரு வரும் வாங்கி வாசித்தால் தம்மில் இருக்கும் துர்க் குணங்களெல்லாம் நசித்து பக்தி அதிகரித்து முக்திபெற மார்க்கம் உண்டாகுமென்று அறியவேண்டும். இப்படிப் பட்ட அருமையான பிராணயாமமென்னும் பிரம்ம வித் தையைத் தெரிந்து, இந்நூலில் பிராணயாமத்தில் சொல்லி யதுபோல் சுவானுபவத்திற்குக் கொண்டுவந்தால் அவன் சரீரம் எப்படியாகுமென்றல்

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கி
லுறுப்புச் சிவக்கு முரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரி சடையோனே.

[திருமந்திரம்.]

புருவமெ னுஞ்சுழி யூடே சார்வையும்
வலமிட முஞ்செய வேதான் வாயுவை
ரையுள தெங்கனல் மேலே தேடிய பதியோராய்

புசியமு துஞ்சிர சூடே நாடியி
  லொழுகிவ ரும்படி யாமே தாரணை
  புரியுமி தம்பெற வேதான் ரேசக   புணர்வாரும்

இருதய முஞ்சில நாளா யூகையு
  ளுருகிம கிழ்ந்திட வேதோ வாதனை
  யிடர்கட விர்ந்திட லாமோ ஞானமு   மிது தானே

இமையவர் கஞ்சன்மு ராரீ யீசனு
  மறவியும் விண்குடி போனா ராசையி
  லெவர்களி ருந்தவர் கூறாய் காதைகள்   வழுவாமல்

சொரூபம றிந்தவர் யாரோ பார்மிசை
  சருவப ரம்பரை யோகி நீயறி
  சுகருமி னந்தெரி யாதே போயினர்   தொலைதூரம்

சுடுசுடு நெஞ்சையு னாலே தீமையை
  விடுவிடு வைம்புல னாலா மாயையை
  துறைதுறை சங்கைசெ யாதே நீடிய   வியலீதே

இடைக யிற்றிகழ் சோட சந்தனை
  ரவிகலை யிற்புக லாகவுஞ்செய
  விருகலை யைத்திசை மாறி மாறியே   யிதுபோல

இசையுமி தக்ஷணை பூரகந்தனி
  விருதொகை தப்பிவி டாம னின்றிடு
  வெழில்புரு வச்சுழி மூல நாடியி   விருநீயே

இனியச துர்த்திவி ரோக னஞ்செய
  நவமினி லைப்படு பாதி கங்குலி
  லிருவிழி யுச்சியை மேவி பாருசி   யிருசாமம்

இடமுத விற்பைவி தாய கந்தனி
  லுழைகரு மத்துயின் மீத லங்கிரு
  யமனுகெ திர்த்து வரா ஞாயமு   மிதுவாமே

அடருமனத்தைவி டாதே யைம்பொறி
  விடயமு னைப்பழி போட வந்திடு
  மதிகப சிக்கொரு நேர மேறுக   ரரைகாலாய்

அறுசுவை யிச்சைகொளாத கன்றிடு
புகயிலை நித்திரை கோப முந்தலு
யபினிக ளைக்குடி யாதே லாகிரி விடவேணும்

நூதனமாய் யோகாப்பியாசம் செய்யப்பட்டவர்கள் இரண்டு மாதங்கள் 50-எண்ணும் வரையில் சுவாசத்தை நிறுத்தவேண்டும். 50-துக்குமேல் உயர்த்தலாகாது. இது ஆரம்பத்தில் வயற்றில் சற்று நோயை உண்டாக்கும். இந்த நோய், சுவாஸம் நிறுத்தும்போது மாத்திரம் இருக்குமே யல்லாமல் மற்றக் காலங்களில் இராது. அப்பியாச முதிர்ச்சியினுல் இரண்டு மாதத்திற்குள் மேற்படி நோய் நிவாரணையாகும். நிவாரணையானவுடன், வலது நாசியில் 75, இடது நாசியில் 75, இரண்டு நாசியில் 75-எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தப் பழகவேண்டும். அப்போது முன்போல் மறுபடியும், வயிற்றில் நோயை உண்டாக்கும். இரண்டுமாதம் அப்பியாசம் செய்தால் அந்த நோய் நிவாரணையாகும். நிவாரணையானவுடன் வலது நாசியில் 100, இடது நாசியில் 100, இரண்டு நாசிகளிலும் 100-எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தப் பழகவேண்டும். அப்போது முன்போல் சற்று நோயை உண்டாக்கும். இவ்விதமாய் இரண்டுமாதம் அப்பியசித்தால் மேற்படி நோய் நிவாரணையாகும்.

இவ்வாறு பழகும்போது மாதம் மூன்று முறைக்கு மேல் ஸ்திரீ சம்போகம் செய்யலாகாது. இதற்குமேல் சம்போகம் செய்யப் பட்டவர்கள், 100-ல், இருந்து 80-க்கு, இறங்கிவிடுவார்கள். ஏனென்றுல், அதிக 'பிந்து' என்றுல், இந்திரியம் நஷ்டமாவதனுல் பலம் குறைந்துவிடுகின்றது. பலம் குறைவதனுல் சுவாசத்தை நிறுத்த சக்தியற்றவனுகின்ருன்; அதனுல், 100-ரில், இருந்து 80-க்கு இறங்கிவிடுகின்ருன். பிந்து இச்சரீரத்திற்கு ரத்திநத்தைப் போன்

றதா யிருக்கின்றது. ஆதலால், "ரதன்கு ஜதங்க்ரோ! வதங்மே கர்ச்கரோ" என்று மகம்மதியர்களுக்கு ருஷியா யிருக்கப்பட்டவர்கள் சொல்லி யிருக்கின்றார்கள். ஆதாவது, இந்த ரத்திநம், நாம் புசிக்கப்பட்ட ஆஹாரத்திலிருந்து ரசமுண்டாய் அந்த ரசம் ரத்தரூபமாய், அந்த ரத்தம் மாமிசத்தில் பிரவேசித்து, மாமிசத்திலிருந்து கொழுப்பிலும், கொழுப்பிலிருந்து அஸ்திகளிலும், அஸ்திகளிலிருந்து சிரசு மூளையிலும், மூளையிலிருந்து சுக்கிலம் உண்டாகின்றது. இன்று புசித்த பதார்த்தங்களின் ரசம் எட்டாவது தினத்தில், உழக்கு ரத்தம் சுண்டி ஒரு துளி சுக்கிலம் உண்டாகின்றது. இப்படிப்பட்ட சுக்கிலங்கள் ஒரு சம்போகத்திற்கு, 30-துளிகளுக்குமேல் செலவழிந்து விடுகிறபடியால் 7½-படி ரத்தம் நஷ்டமாய்விடும். அப்போது, யோகாப்பியாசத்தில் சுவாசம் அதிகநேரம் நிறுத்த சக்தியற்றவனாகின்றான். இப்படிப்பட்ட ரத்திநத்தை அதிகமாய்ச் செலவழிக்கப் பட்டவர்களினுடைய தேகசர்மம், 60-வது, வயதிற்கெல்லாம் சுருக்க முண்டாய், கண் பார்வை குறைந்து கையில் ஓர் ஊன்றுகோல் இல்லாமல் அவர்கள் நடக்கமாட்டார்கள். இதற்குக் காரணம் யாதெனில், நமது இந்து தேசம் மிகவும் உஷ்ணபூமி. அதனால், இந்தியர்களுக்குக் காமத்தை அதிகமாய் உண்டாக்கும். ஐரோப்பா தேசம் மிகவும் குளிர்ச்சியான தேசமாதலால், அவ்விடம் காமம் அதிகமாய் உண்டாகமாட்டா. அதனால் ஆங்கிலேயர்கள் 40-வயதிற்குமேல் விவாஹம் செய்துகொண்டு ஸம்போகம் சொற்பமாய் அனுபவித்துக் கொண்டு வருவதனால் அவர்களின் சரீரம் தளர்ச்சியடையாமல் மிகவும் வலிமையுடையதா இருக்கின்றது; ஆதலால், இதனை வாசிக்கப்பட்ட அன்பர்கள் யாவரும், மாதம் மூன்று முறைக்குமேல் சம்போகம் செய்யாமலிருந்தால்

சரீரம் தளர்ச்சி படையாமலும் கண்பார்வை குறையாமலும் அதிக பலமுடையவர்களாய் இருக்கலாம். மாதம் இரண்டு முறை சம்போகம் செய்தால் இதைவிட விசேஷமே. இவ்விதமாய் ஸ்திரீ பத்தியத்துடன் இருந்து ஒவ்வொரு நாசியிலும், 200-எண்ணும் வரையில் சுவாசத்தை நிறுத்தப் பழகவேண்டும். பழகியபின் முன் சொல்லியது போல், கர்ப்பத்தில் நிறுத்தியிருக்கும் சுவாசத்திலிருந்து, $1\frac{1}{2}$-அடி நீளம் சுவாசத்தை, இடது நாசியை மூடி வலது நாசியின் வழியாய் வெளியில்விடடு, அதாவது நாபிவரையில் விட்டு, விட்ட அவ்வளவு சுவாசத்தை உள்ளுக்கிழுத்து மறுபடியும் 200-எண்ணும் வரையில் சுவாசத்தை நிறுத்தி இவ்வாறு நான்குமுறை முன்போல் செய்யவேண்டும்.

பிராணுயாமம் செய்யச்செய்ய அதாவது சுவாசத்தை நிறுத்த அதிகமாய் உயர்த்திக்கொண்டு போகப்போக தேகமெல்லாம் விசேஷமாய் வியர்க்கும்; அக்காலத்தில் வேஷ்டியினுல் துடைக்காமல் தேகத்திலேயே இழுத்துக் கொள்ளும்படியாய் தைலம்போல் கைகளால் ஒவ்வொரு முறையும் தேய்த்துப் பிறகு, நிஷ்டையில் இருக்கவேண்டும். வியர்வையை சரீரத்தில் இழுத்துக்கொள்ளும்படி தேய்த்துவிட்டால் சரீரத்திற்கு விசேஷ பலத்தை உண்டாக்கும். இந்த பிராணுயாமம் செய்யும்போது தேகத்திற்கு அதிக உஷ்ணத்தை உண்டாக்கும். அந்த உஷ்ணம் தணிக்க ஸ்நானம் இதனடியிய் எழுதியிருக்கின்ருேம் அதுபோல் வாரத்திற்கு இரண்டுமுறை ஸ்நாநம் செய்து வந்தால் உஷ்ணம் சாந்தியாகும்.

உஷ்ணம் தணிக்க ஸ்நானம் செய்யும் முறை,

யோகாப்பியாசம் செய்துவருங்காலத்தில் தேகத்தில் உஷ்ணம் அதிகரித்து, சிரசுமுதல் பாதம்வரையில் அக்கினி சுவாலையைப்போல் வீசிக்கொண்டிருக்கும். அதைச் சாந்தி செய்யும் விபரமாவது:—

வெள்ளை மிளகு	...	....	பலம்	10
பாதம் பருப்பு	....	....	,,	2½
கஸ்தூரி மஞ்சள்	....	....	,,	2½
கடுக்காய்த் தோல்	....	....	,,	2½
நெல்லிக்காய்த் தோல்	....	....	,,	2½
பூலாங்கிழங்கு (கச்சூரம்)	....	....	,,	2½
வேப்பம் பருப்பு	....	....	,,	2½
			ஆக பலம்	25

இவைகளை உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு, ஆழாக்குப் பசுவின் பாலில் இந்தத் தூள் ஒரு பலம் சேர்த்து சுண்டக்காய்ச்சி, * இதரர்களால் சிரசில் தேய்த்துக்கொள்ளாமல் தாமாகவே பத்து நிமிஷங்கள் வரையில் தேய்த்துக்கொண்டு, நகசிக பரியந்தம் (பாதப் பெருவிரல் முதல் உச்சி வரையில்) நன்ருய் அரக்கித் தேய்த்து அரைமணி நேரம் ஊறியபிறகு, அருணோதயத்திற்கு முந்தியே குளிர்ந்த ஜலத்தில் ஸ்நாநம் செய்து வரவேண்டும். இவ்வாறு வாரத்திற்கு இரண்டுமுறை

---

* இதரர்களால் ஏன் தேய்த்துக்கொள்ளக் கூடாதென்ருல், அவர்களுக்கு அனேக வியாதிகள் இருக்கலாம். அவர்களின் ஹஸ்தம் சிரசின்மேல் வைத்துத் தேய்க்கும்போது சூடுண்டாய் அவன் வியாதி இவனுக்குச் சேரும். அதனல் இதரர்களால் தேய்த்துக் கொள்ளலாகாது.

ஸ்நானம் செய்துவந்தால், உஷ்ணம் சாந்தியாகும். மேற்படி மிளகு கல்பம் சரீரமெங்கும் நன்றாய் அரக்கி (அழுத்தி)த் தேய்க்கவேண்டும்; அப்போது, அக்கி சுவாலையைப்போல் சரீரமெங்கும் அரைமணிநேரம் வீசும். அந்த அக்கிசுவாலை அடங்கும் வரையில் இருந்து, பிறகு குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்யவேண்டும். தேய்க்கும்போது சரீரமெல்லாம் எரிச்சலென்று எண்ணவேண்டாம். உள் தங்கியிருக்கும் உஷ்ணமெல்லாம் வெளிவந்து அனலைப்போல் வீசுவது எரிச்சல்போல் தோன்றுமேயொழிய அது எரிச்சலல்ல; உள்ளிருந்து வீசுவது அக்கி சுவாலையென்று எண்ணுங்கள். இவ்வாறு மிளகு கல்ப ஸ்நானம் செய்து பிறகு,

வெட்டைச்சூட்டைத் தணிப்பதற்குக் காப்பித்தூளுக்குப் பதில் தூள்.

நன்னாரிவேர்	....	....	பலம்	20
பறங்கிச்சக்கை	....	....	,,	10
மொக்கில்லாத ஆவாரம் புஷ்ப இதழ்கள்				5
சுக்கு	....	....	,,	5
ஏலரிசி	....	....	,,	5
தனியா (கொத்தமல்லி)		....	,,	5
			ஆக பலம்	50

இவைகளை நன்றாய் உலர்த்திப் பொடிசெய்து ஒரு டப்பியில் வைத்துக் காலை மாலைகளில் காப்பித்தூளுக்குப் பதிலாய் மேற்படி பொடியை உபயோகம் செய்துகொண்டு வந்தால், அதன் பலன் யாதெனில், வெட்டைச்சூட்டைத்

தணிக்கச்செய்து மலச்சிக்கலை நீக்கி தேகத்திற்கு ஆரோக்கியமும் ஜீர்ண சக்தியும் உண்டாக்கி, சரீரத்தைக் கலகலத்திருக்கும்படிச் செய்விக்கும். காப்பித்தூள் உபயோகப் படுத்தும்போது இருந்த சுகமும், மேற்படி தூளை உபயோகப் படுத்தும்போது இருக்கும் சுகமும் சுவாநுபவத்தில் காணலாம். வெல்லத்திற்குப் பதிலாய் வெள்ளைச் சர்க்கரை உபயோகப் படுத்தவேண்டும். முன் சொல்லியதுபோல் ஸ்நானம் செய்து நன்னாரிவேர் காப்பி சாப்பிட்டு உஷ்ணம் தணிக்கச் செய்துகொண்டு பிராணாயாமம் செய்துவரவேண்டும்.

இனி யோகாப்பியாசிகள் சாப்பிடவேண்டிய ஆஹாரம் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

வறுத்து உடைத்து புடைத்த பச்சைப்பயர் வீசம் (1/16) படி, பச்சரிசி வீசம் (1/16) படி இவ்விரண்டும் சேர்த்துக் கழுவி உப்புக்குப் பதிலாய் இந்துப்பு சேர்த்துப் பொங்கலாய்ச் செய்து இறக்கும் சமயத்தில், மிளகு இஞ்சி இவ்விரண்டும் நெய்யில் வறுத்து, இவைகளுடன் நல்ல நெய் ஒரு பலம் (மூன்று ரூபாயிடை) விட்டு மேற்படி பொங்கலை, கரண்டியால் கலந்து இறக்கவேண்டும். இது சாப்பிடும்போது தொட்டுக்கொள்ள துகையல் வேண்டும். அத்துகையல் செய்யும் முறை சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

பச்சைக் கொத்தமல்லி இலை, அல்லது புதினா இதனுடன், நெய்யில் வறுத்த மிளகும் இந்துப்பு எலுமிச்சம் பழ ரசம் சேர்த்து, துகையல் அரைத்துத் தொட்டுக்கொண்டு சாப்பிடவேண்டும். அல்லது, இஞ்சி மிளகு, நெய்யில் வறுத்து இந்துப்பு எலுமிச்சம்பழ ரசம் சேர்த்து துகையல் செய்து தொட்டுக்கொண்டு சாப்பிடலாம். அல்லது கடையில் விற்கும் உலர்ந்த ரோஜா மொக்குகளைக்

கொண்டுவந்து காம்பு முதலான செத்தைகளை எடுத்து சுத்திசெய்து அம்மொக்குகளையும் மிளகையும் நெய்யில் வதக்கி இந்துப்பு எலுமிச்சம்பழ ரசம் சேர்த்து துகையல் அரைத்து மேற்படி மிளகு பொங்கலில் தொட்டுக்கொண்டு சாப்பிடலாம். அல்லது, இஞ்சி தயிர் பச்சடியில் இந்துப்பு எலுமிச்சம்பழ ரசம் சேர்த்து மேற்படி பொங்கலில் தொட்டுக்கொண்டு சாப்பிடலாம். பகற்காலங்களில் இவ்வாறு சாப்பிட்டு இரவில் பால்சாதம் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட்டு வரலாம். யோகாப்பியாசிகள் இவ்வித பத்தியத்துடனிருந்து, யோகாப்பியாசம் செய்துவரவேண்டும். இவர்கள், சமுத்திர உப்பு புளி மிளகாய் சாப்பிடலாகாது. இவ்வாறு பத்தியத்துட னிருந்து அடியில் சொல்வது போல் சுவாசம் நிறுத்தி எண்ணிக்கைகளை உயர்த்திக் கொண்டே போகவேண்டும்.

அன்பர்களே! 200-எண்ணும் வரையில் சுவாசத்தை நிறுத்தும்படியல்லவோ முன் சொல்லி யிருக்கின்றோம். சொன்னவிஷயமே மறுபடியும் சொல்லுகின்றோமென்று எண்ணவேண்டாம்; உங்கள் மனதிற்கு நன்றாய்ப் பிடிபடும்படியாய் பல முறைகளில் சொல்லிக்கொண்டு வந்தால் நன்ருய்த் தெரியவரும். ஆதலால்,

முதல் வலது நாசியை எடுத்துக்கொள்வோம்.

இடது நாசியை மூடி, வலது விலா நுரையீரலில் தங்கியிருக்கும் சுவாசமெல்லாம் வலது நாசியில் ஓம் என்று மனதில் நினைத்துக்கொண்டே வெளியில் விட்டு, அதன் தொடர்ச்சியாகவே சுவாசம் வலது நாசியில் ஓம் என்று உள்ளுக்கிழுத்து விழுங்கி, 100-எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தி, மறுபடியும் இடது நாசியை மூடி வலது நாசியின் வழியாய் $1\frac{1}{2}$-அடி நீளம், அதாவது நாபிவரையில்

சுவாசம் ஓம் என்று வெளியில் விட்டு, மறுபடியும் ஓம் என்று உள்ளுக்கிழுத்து,

(1) 100-எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தி, மறுபடியும் இடது நாசியை மூடி வலது நாசியின் வழியாய் $1\frac{1}{2}$-அடி நீளம் சுவாசம் ஓம் என்று வெளியில் விட்டு, மறுபடியும் ஓம் என்று உள்ளுக்கிழுத்து,

(2) 100-எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தி, மறுபடியும் இடது நாசியை மூடி வலது நாசியின் வழியாய் $1\frac{1}{2}$-அடி நீளம் சுவாசம் ஓம் என்று வெளியில்விட்டு, மறுபடியும் ஓம் என்று உள்ளுக்கிழுத்து,

(3) 100-எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தி, மறுபடியும் இடது நாசியை மூடி வலது நாசியின் வழியாய் $1\frac{1}{2}$-அடி நீளம் சுவாசம் ஓம் என்று வெளியில் விட்டு, மறுபடியும் உள்ளுக்கிழுத்து,

(4) 100-எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தி, மறுபடியும் இடது நாசியை மூடி வலது நாசியின் வழியாய் $1\frac{1}{2}$-அடி நீளம் சுவாசம் ஓம் என்று வெளியில் விட்டு, மறுபடியும் ஓம் என்று உள்ளுக்கிழுத்து நிறுத்தவேண்டும். இவ்விதமாய் நான்குமுறை வலது நாசியின் வழியாய் ஓம் என்று சுவாசம் விட்டு நான்குமுறை ஓம் என்று உள்ளுக்கிழுக்கவேண்டும். இவையெல்லாம் சேர்ந்து கணக்கிற்கு 500-ஆகும்.

பிறகு சுவாசம் வெளி விடும்போது வலது நாசியை மூடி, இடது நாசியில் 4-அங்குலம் சுவாசம் ஓம் என்று வெளியில் விட்டு, விட்ட அவ்வளவு 4-அங்குல சுவாசம் மாத்திரம் மறுபடியும் இடது நாசியில் ஓம் என்று உள்ளுக்கிழுத்து இடது நாசியை மூடி, வலது நாசியின் வழியாய் 4-அங்குல சுவாசம் ஓம் என்று வெளியில் விட்டு, மறுபடியும் 4-அங்குல சுவாசம் வலது நாசியில் உள்ளுக்கிழுத்து,

இவ்விதமாய் நாசிகளை மாற்றி மாற்றி * உசுவாச † நிசுவாசங்களாய் (மூச்சுகளாய்) விட்டு மிகுதி சுவாசத்தையெல்லாம் கர்ப்பத்திலேயே நிறுத்தி வைத்துக்கொண்டு, நிஷ்டையில் இருக்கவேண்டும். அப்போது குடலில் தங்கியிருக்கும் வாயுவானது, மனோவாயுவை அதாவது, பலவித எண்ணங்களையுடைய மனது என்னும் குரங்கை வெளியில் ஓடவிடாமல் நாசம் செய்யும். 500-எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்த மிகவும் கஷ்டமா யிருக்கும். இதுவிஷயம் யாவும் முன் விவரமாய்ச் சொல்லியிருக்கின்றோம். ஆதலால்' நூற்றிற்கு ஒருமுறை கோஞ்சம் சுவாஸம் வெயில்விட்டு உள்ளுக்கிழுத்து நான்குமுறை செய்யவேண்டும். இவையெல்லாம் சேர்ந்து 500-எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தினதாகின்றது. நான்குமுறை சுவாசம் உள்ளுக்கிழுத்தால் 400 - அல்லவோ கணக்கிருக்கவேண்டும். 500 - எப்படி கணக்காகுமென்று ஓர் சந்தேகம் உங்களுக்குத் தோன்றும், அந்த சந்தேகம் தெளிவற இங்கு சொல்லுகின்றோம்; அதாவது, முதல் சுவாசம் இழுத்து நிறுத்தி புருவமத்தியில் யாதொரு லக்கமும் வையாமல் 100-எண்ணி முடித்து சுவாசம்விட்டு இழுத்தது முதல் 4-வரையில் லக்கம் வைத்தபடியால் இவைகளுக்கு 400-ரும், முதல் லக்கம் வையாமல் எண்ணிய 100-ரும் சேர்த்தால் 500-ஆகின்றது.

ஆரம்பத்தில் சொல்லிய பிராணயாமத்தில் 25-லக்கம் சொல்லியதுபோல், முதல் இழுத்த சுவாசத்திற்குக் கணக்கில்லாததனால், கடைசியில் 125-என்று கணக்கு சேர்த்து சொல்லி யிருக்கின்றது. இவ்விதமாய் வலது நாசியில் செய்து முடிந்தவுடன்,

---

* உசுவாசம்=சுவாசம் வெளியில் விடுவது.

† நிசுவாசம்=சுவாசம் உள்ளுக் கிழுப்பது.

இடது நாசியிலும் மேற்சொல்லியதுபோல் அப்பியாசம் செய்யவேண்டும். வலது இடது நாசிகளில் செய்து முடிந்தவுடன் இரண்டு நாசிகளிலும் செய்யவேண்டும். அதாவது,

வலதுகைப் பெருவிரல் மோதிர விரல்களை, வலது இடது நாசிகளின்மீது வைத்து, இடது நாசியை மூடி வலது விலா நுரை ஈரலில் தங்கியிருக்கும் சுவாசத்தில், வலது நாசியில் கொஞ்சம் சுவாசம் ஓம் என்று வெளியில் விட்டு வலது நாசியை மூடி, இடது நாசியைத் திறந்து, இடது விலா நுரை ஈரலில் தங்கியிருக்கும் சுவாசத்தை இடது நாசியில் கொஞ்சம் சுவாசம் ஓம் என்று வெளியில் விட்டு இடது நாசியை மூடி, வலது நாசியைத் திறந்து கொஞ்சம் சுவாசம் ஓம் என்று வெளியில் விட்டு வலது நாசியை மூடி இவ்விதமாய் நாசிகளை மாற்றி மாற்றி நுரையீரலில் தங்கியிருக்கும் சுவாசத்தையெல்லாம் கடைசியாய் வலது நாசியில் ஓம் என்று மனதில் நினைத்து விட்டு விட்டு, அதன் தொடர்ச்சியாகவே வலது நாசியில் நாலங்குலம் நீளமவ்வளவு சுவாசம் ஓம் என்று மனதில் நினைத்து உள்ளுக்கிழுத்து வலது நாசியை மூடி, இடது நாசியைத் திறந்து நாலங்குல சுவாசம் ஓம் என்று யிழுத்து மூடி, மறுபடியும் வலது நாசியைத் திறந்து நாலங்குல சுவாசம் ஓம் என்று இழுத்து மூடி, இவ்விதமாய் இரண்டு நாசிகளிலும் தராசைப்போல் சமமாய் எவ்வளவு சுவாசம் நுரையீரலில் கொள்ளுகின்றதோ அவ்வளவு சுவாசம் உள்ளுக்கிழுத்து விழுங்கி, முன் சொல்லிய கணக்கைப்போல் நூறு நூறாக 500-எண்ணும் வரையில், சுவாசம் நிறுத்தி முடிந்தவுடன், கடைசியில் சுவாசம் விடும்போது, வலது நாசியை மூடி இடது நாசியில் நாலங்குலநீள சுவாசம் ஓம் என்று மனதில் நினைத்து வெளியில் ஓடும்படி விட்டு, விட்ட அவ்வளவு

சுவாசம் ஓம் என்று உள்ளுக்கிழுத்து மூடி, மறுபடியும் வலது நாசியைத் திறந்து முன்விட்ட அவ்வளவு சுவாசம் ஓம் என்று உள்ளுக்கிழுத்து மூடி, மறுபடியும் வலது நாசியைத் திறந்து முன்விட்ட அவ்வளவு சுவாசம் வலது நாசியில் ஓம் என்று உள்ளுக்கிழுத்து இவ்விதமாய் சுவாசத்தின் வேகம் அடங்கும் வரையில் நிதானமாய் 'ஓம்' என்னும் மந்திரத்துடன் விடவேண்டும். சுவாசத்தின் வேகம் அடங்கியபின், கை யெடுத்துவிட்டு நிஷ்டையில் இருக்க வேண்டும். இந்த மூன்று நாசிகளிலும் செய்த மொத்தத் தொகை எவ்வளவென்ருல், 1,500 - ஆயிரத்தி ஐந்நூறு ஆகின்றது. இவ்விதமாய் அப்பியாசம் செய்து உயர்த்திக் கொண்டு, 3,000-முதல் 5,000-எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தப் பழகவேண்டும். அப்படி பழகியபின் சுவாசம் குடலில் பிரவேசிக்கும். அது பிரவேசிப்பது நன்ருய்த் தெரியவரும். குடல், 22-அடி நீளமுள்ளது. பெட்டியில் சர்ப்பம் சுற்றிக்கொண் டிருப்பதுபோல், குடல் வயற்றில் சுற்றிக்கொண்டிருக்கும். யோகாப்பியாசம் செய்யும் சமயத்தில் மாத்திரம் தேகத்திற்கு அதிக நோயாயிருக்கும். அந்த நோய்க்குச் சகித்துக்கொண்டு அப்பியாசம் செய்துவரவேண்டும். இவ்விதமாய் அனேக தினங்கள் செய்துவந்தால், சுவாசம் நுரையீரல் (Lungs) நிறைந்து 4,000-எண்ணும் வரையில் அவ்விடம் தங்கியிருக்கும். இப்படித் தங்கி மறுபடியும் சுவாசம் நுரையீரலில் இருந்து வெளியில் வரும். அப்போது அதை வெளியில் போக விடாமல் 409-பக்கம் சிரசினுடைய படத்தில் No. 1 என்று காட்டியிருக்குமிடத்தில் யோகி கண்டத்தை மூடி விடுகின்ருன். அதனுல் அந்த சுவாசம் வெளியில் செல்வதற்கு வேறு மார்க்க மில்லாததனுல், கண்டத்தை ஊன்றிக்கொண்டு (கண்டத்தை உதைத்து) மறுபடியும் சுவா

சம் நுரையீரலில் செல்லாமல் தீனிப்பை வழியாய்க் குடலில் செல்லும். "குடல் பெட்டியைப்போல் சுற்றிக்கொண்டிருப்பதனுல்" சுவாசம் நேராய் குடலில் பிரவேசிப்பதற்குச் சக்தியில்லாமல் சிலதூரம் சுவாசம் குடலில் சென்ற பிறகு, சுவாசத்தின் பலம்குறைந்து, மறுபடியும் வெளியில் வர பிரயத்தினப்படும். அதை வெளியில் போக விடாமல் கண்டத்தை மூடியிருப்பதனுல், (ஒரு சிறிய கால்வாயைத் தாண்டும்போது பாதத்தை ஊன்றிக்கொண்டு தாண்டுகின்றோம்; பெரிய கால்வாயைத் தாண்டவேண்டுமானுல் சிலதூரத்திலிருந்து ஓடிவந்து பாதத்தை ஊன்றித் தாண்டுகின்றோம்; அதுபோல்) சுவாசம், கண்டம் வரையில் வந்து, (அதாவது காற்றுப்பை தீனிப்பை படத்தில் No 1 என்று காட்டியிருக்கும் இடத்திற்குச் சுவாசம் குடலிலிருந்து பின்னுக்கேவந்து) கண்டத்தை ஊன்றிக்கொண்டு மறுபடியும் சுவாசம் முன் சென்றதைவிட சில தூரம் அதிகமாய்க் குடலில் செல்லும். மறுபடியும் சுவாசத்திற்கு பலம் குறைவதால் சுவாசம் மறுபடியும் பின்னுக்கே வந்து கண்டத்தை ஊன்றிக்கொண்டு, குடலில் வேகமாய்ச் செல்லும். அப்போது முன் சென்றதைவிட சில தூரம் அதிகமாய்ச் சுவாசம் குடலில் செல்லும். சுவாசம் உள்ளே சென்று அதன் பலம் குறைந்தவுடன் மறுபடியும் சுவாசம் பின்னுக்கே வந்துகண்டத்தை ஊன்றிக்கொண்டு அதிக வேகமாய் மறுபடியும் குடலில் செல்லும். குடல் பெட்டியைப்போல் சுற்றிக்கொண்டிருப்பதை ☞ எதிரிலிருக்கும் படத்தில் காட்டியிருக்கின்றது. இது, 22-அடி நீளமுள்ளது. முன் சொல்லியதுபோல் சுவாசம் கண்டத்தை ஊன்றிக்கொண்டு 22-அடி நீளமுள்ள குடல் முழுமையும் சென்று கடைசியில் குதஸ்தானத்தின் வழியாய், அபான வாயு செல்லுவதுபோல் அந்த சுவாசம் செல்லும். அச்



№ 2 நுரைசால்
Liver.
Bowels (குடல்)

சமயத்தில் அதை வெளியில் போகவிடாமல் இரண்டு பிருஷ்டங்களையும் கெட்டியாய் இடுக்கிப் பிடிக்கவேண்டும். எவ்வளவு இடுக்கிப் பிடித்தபோதிலும், கர்ப்பத்தில் நிறுத்திய சுவாசம், சிறிதாகிலும் அபான வாயுவாய் வெளியில் செல்லும். அச்சமயத்தில் விசேஷ நோயை உண்டாக்கும். இதற்கு அழுகணிச் சித்தர் பாடல் பிரமாணம்:

கொல்ல னுலை போற் கொதிக்குதடி யென் வயிறு
நில் லென் று சொன்னுல் நிலைநிறுத்தக் கூடுதில்லை
நில் லென்று சொல்லி யல்லோ நிலை நிறுத்த வல்லார்க்குக்
கொல் லென்று வந்த நமன் என்கண்ணம்மா
குடி யோடிப் போகா னே.

சுவாசம் குடலில் செல்லும்போது, கொல்லன் உலை கொதிப்பதுபோல் மேலும் கீழுமாய், ஏறி இறங்கிக் கொண்டிருக்கும்:—

வளியினை வாங்கி வயத்தி லடக்கில்
பளிங்கொத்து காயம் பழுக்கினும் பஞ்சாற்
றெளியக் குருவின் றிருவருள் பெற்ருல்
வ ளியினும் வேட்டு வளியது மாமே.

[திருமந்திரம்.]

இது, செய்யும்பொழுது நோய் உண்டாகும். யெல்லா நோயைவிட இது, அதிகமாயிருக்கும். சிலமாத அப்பியாசத்தினுல் மேற்படி நோய் நிவாரணமாகும். குடலில் வாயு பிரவேசிக்க ஆரம்பித்தவுடன் குடல் கூச்சலிடும். அந்தக் கூச்சல் எப்படி யிருக்குமென்ருல், தவளையை சர்ப்பம் பிடித்தபோது அத்தவளை எவ்விதமாய்க் கூச்ச லிடுகின்றதோ அதுபோலக் கூச்சலிட்டு, வயிற்றின் வலது இடது பாகங்களிலும் நாபியின் கீழும், குடுகுடுவென் றிரைந்து கொண்டோடும். இதை உங்கள் அனுபவத்தில் காணலாம். பிராணுயாமம் அதாவது, வலது நாசியிலும் இடது நாசியிலும் இரண்டு நாசிகளிலும் சுவாசம் இழுத்து நிறுத்

துவதற்குமுன், நான்கு விழுங்கு ஜலம் சாப்பிட்டு ஒரு நிமிஷம் சென்றபிறகு சுவாசத்தை உள்ளுக்கிழுத்து அப்பியாசம் செய்யவேண்டும். ஜலம் சாப்பிட்டு சுவாசம் இழுக்க வேண்டு மென்று, பிராணயாம ஆரம்பத்திலேயே சொல்லி யிருக்கின்றோம்; அவ்வாறு சொல்லி யிருந்த போதிலும், அதை நீங்கள் மறந்திருக்கலாம். ஆதலால், பிராணுபாமம் செய்வதற்குமுன், நான்கு விழுங்கு ஜலம் சாப்பிட்டு பிராணயாமம் செய்யவேண்டுமென்று மறு முறையும் இங்கு சொன்னோம். ஜலம் சாப்பிடாமல் சுவாசத்தை மாத்திரம் உள்ளுக் கிழுத்தால் அபாயமுண்டாகும். ஜலம் சாப்பிடுவதனல் சுருங்கியிருக்கும் குடலானது, கொஞ்சம் தளர்ச்சி யடைகின்றது; அப்பொழுது உள்ளுக் கிழுக்கும் சுவாசம் தாராளமாய்க் குடலில் செல்லும், இதுபோல், போஜனகாலத்தில் முதல் சாப்பிடுஞ் சாதம் நெய் கலந்து சாப்பிடவேண்டும். அப்படிச் சாப்பிடுவதனல் குடலெல்லாம் நெய் பட்டிருக்கும்; அதனல் சாப்பிடும் ஆஹாரம் தாராளமாய்க் குடலில் நழுவிச்செல்லும். நெய்விட்டு சாப்பிடச் சக்தியில்லாதவர்கள் நான்கு விழுங்கு ஜலம் போஜனத்திற்குமுன் சாப்பிட்டு ஐந்து நிமிஷங்கள் சென்ற பிறது போஜனம் செய்யவேண்டும். 'ஆங்கிலேயர்கள்' நெய்யிற்குப் பதிலாய் முதல் 'சூப்' சாப்பிட்டு பிறகு ஆகாரத்தைப் புசிக்கின்றார்கள்; அந்த சூப்பில் நெய்ப் பசை யிருப்பதால், சூப் சாப்பிட்டபிறகு புசிக்கும் ஆஹாரம் குடலில் தாராளமாய் நழுவிச்செல்லும். இல்லாவிடில் விக்கல் உண்டாவது ஒவ்வொருவருக்கும் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தம். அச்சமயம் உடனே ஜலம் சாப்பிடுவதனல், புசித்த ஆஹாரம் குடலில் தாராளமாய் நழுவிச்செல்லும். அதுபோல், யோகிகள் காற்றைப் புசிப்பதற்கு முன் நான்கு விழுங்கு ஜலம் சாப்பிடவேண்டும்.

காற்றைப் புசிப்பதே வாயுபக்ஷணே என்று சொல்லப்படும். யோகிகள் எப்பொழுதும் கமண்டலத்தில் ஜலம் வைத்துக் கொண் டிருப்பதற்குக் காரணம் இதுவேயாம். இவ்வித மாய் கஷ்டப்பட்டு வாயுவைக் குடலில் நிறுத்திவைத்தால் அந்த வாயுவானது, வெளியில் ஓடித்திரியும் மனே வாயுவை வெளியில் ஓடவிடாமல் நாசம் செய்யும். அஃ தெப்படியெனில், வண்டல் ஜலத்தைத் தெளிவிப்பதற் காகத் தேற்றுங் கொட்டையின் சந்தனத்தை, வண்டல் ஜலத்தில் விட்டு அதை நன்ருய்க் கலக்கிவிட்டபோது அந்தச் சந்தனமானது வண்டலே அடியில் தங்கச் செய்து, தேற்றுங் கொட்டையின் சந்தனமும் அந்தச் சேற்றுடன் அடியில் அழுந்தி, அந்த ஜலத்தை சுத்தோதகமாய்ச் செய் வதுபோல், மனேவாயுவானது, குடலில் தங்கிய பிராண வாயுடன் கலந்துவிடுவதனுல்,பரிசுத்தமான பிரம்ம சொரு பம் தனக்குத்தானுய் பிரகாசித்துக் கொண்டிருக்கும். ஆத்ம சொருபமாயிருக்கும் பரப் பிரம்மத்திற்கு மனம் சத்துருவா யிருக்கின்றது. அந்த மனம் சூன்னியமானுல் தன் நிஜசொருபம் தானுகவே பிரகாசித்துக் கொண்டிருக் கும்.

சுகப் பிரம்ம ருஷியினுடைய யோக சாஸ்திர விதிப் படி, 6-நிமிஷங்கள் சுவாசம் நிறுத்தப் பழகினவன் பிராணு யாமம்செய்து முடித்தவ ஞவான் எனவும், காசிகாண்டத் தில், 500-விநாடிகள் சுவாசம் நிறுத்தப் பழகினவன் பிராணுயாமம் செய்து முடித்தவ ஞவான் எனவும் சொல் லப் பட்டிருக்கின்றது. இப்படிப் பிராணுயாமம் செய்து முடித்த யோகிகள், தங்கள் மனதை சங்கல்பத்திற் செல் லாவண்ணம் நிறுத்த மனித சஞ்சாரமில்லாத ஏகாந்த மான இடங்களே நாடிச்சென்றிருந்து, மனதை ஒரே நாட் டத்தில் நிறுத்தப் பழகுவார்கள்.

அன்பர்களே! மேற்சொல்லியதுபோல் பிராணயாமம் செய்வதனால் உண்டாகும் பலன் யாதெனில், "ததஃ க்ஷீய தே ப்ரகாஸா வரணம்" பிரகாசமென்றால் சுத்த சைதந்யம், இதை மூடிக்கொண்டிருப்பது தமோகுணம். இந்தத் தமோகுணம் நித்திரை ஆலஸ்யம் முதலாகிய தோஷங்களை யுண்டாக்கும். இப்படிப்பட்ட தமோகுணம் பிராணயாம அப்பியாசத்தினால் நசிக்கும். இதுவே பிராணயாமத்தின் பலன். இஃதன்றியும், மற்றொரு பலனும் உண்டு. அஃது யாதெனில், "தாரணாஸு யோக்யதா மநஸஃ" மூலாதாரம் நாபிசக்ரம் இருதயகமலம் புருவ மத்தியம் பிரம்ம ரந்திரம் இவை முதலாகிய இடங்களில், மனதை யிழுத்து நிறுத்தச்செய்யும், "தேஸபந்தஸ்ச் சித்தஸ்ய தாரணா" இந்த ஸூத்திரத்தினால் மூலாதாராதி இடங்களில் சித்தமானது நின்றிருக்கும். இந்த பிராணயாமம் ரஜோகுணத்தில் உண்டாகும் நித்திரா லஸ்யாதி தோஷங்களை நிவர்த்திசெய்து மனதை சுத்த சத்துவப் பிரதானமாய்ச் செய்து ஸ்திரமாய் நிற்கும்படிச் செய்விக்கும். இஃதன்றியும்,

"ப்ராணயாமோ பவேத்தேவம் பாதகேந்தந பாவகஃ" புண்ணியபாபங்க ளென்னும் விறகுகளை, பிராணயாமமென்னும் அக்கினியானது தக்தம் (தஹனம்) செய்கின்றது. இந்த அக்கினி நாபியிலிருந்து உண்டாகும். அது, இந்நூலுக்கு முதல், சுவாமிகளின் படத்திற்குமுன் காட்டியிருக்கும் கணபதி படத்திற்கு நான்காவது படத்தில் காணலாம். புண்ணியபாபங்கள் எப்பொழுது ஒழிந்து விடுகின்றனவோ, அப்பொழுதே முன் சொல்லிய சஞ்சிதமென்னும் மூட்டை பஸ்மமாய் விடுகின்றது. அதனால், புனர் (மறு) ஜெனனமில்லாத விதேஹ முக்தியை அடைகின்றான். யோகியானவன் அநேககோடி ஜன்மங்களாய்ச்

செய்து வந்த சஞ்சிதமென்னும் புண்ய பாபங்களின் மூட்டைகளை எல்லாம், மேற்சொல்லிய யோகாக்கியானது சாம்பலாய் எரித்துவிடும். யோகியினுடைய புண்ய பாபங்களையெல்லாம் எரித்துவிட்டபிறகு, அவன் தந்தையினுடைய சஞ்சிதமென்னும் புண்ய பாபங்களின் மூட்டையை பஸ்பம் செய்விக்கும். யோகியின் தந்தையின் சஞ்சித கர்மங்களை பஸ்மமாய் எரித்தபிறகு, யோகியின் பாட்டன் சஞ்சித கர்மங்களை எரித்துவிடும். இவ்விதமாய் யோகியின் இருபத்து ஒரு தலைமுறையார் எங்கெங்கு பிறந்திருக்கின்றார்களோ அவர்களின் சஞ்சிதமென்னும் கர்மங்களையெல்லாம் யோகியின் யோகாக்கி பஸ்மம் செய்துவிடுவதனால், அவர்களெல்லோரும் மோக்ஷத்தை அடைகின்றார்கள். ஆதலால், ஒரு குடும்பத்தில் ஒருவன் யோகியானால் அவனது இருபத்து ஒரு தலைமுறையாரும் மோக்ஷத்தை அடைவார்களென்று சுருதிப் பிரமாணமுண்டு. ஆதலால், நீங்கள் எவ்வளவு கஷ்டமா இருந்தாலும் அக்கஷ்டங்களுக்கெல்லாம் சகித்துக்கொண்டு யோகாப்பியாசம் செய்யுங்கள். இதனை இன்னும் விவரித்துச் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

"கூடஸ்த நிஜகர்மாணி கோடிஜந்மார்ஜிதாந்யபி
ஜ்நேநைவ விநஸ்யந்தி நது கர்மாயுதைரபி"

"ஜ்ஞாநாதூர்த்வம் சயத்கிஞ்சித் புண்யம் வா பாபமேவ
வா க்ரியதே பஹூவாப்யல்பம் ந தேநாயம் விலிப்யதே"

"ஸரீராரம்பகம் யத்து ப்ராரப்தம் கர்மதந்மதம்
தத்போகேநைவ நஷ்டம் ஸ்யாந்நது ஜ்ஞாநேந நஸ்யதி."

[பத்மபுராணம் சிவகீதை.]

அநேக ஜன்மங்களாய் யோகி சம்பாதித்துக் கொண்டு வந்த புண்யபாப கர்மங்களினால் சஞ்சிதமென்னும் கர்

மம் நசிக்கமாட்டா. அது, ஞானத்தினுல் நசிக்கும். ஞானத்தைவிட புண்ணியங்கள் எவ்வளவு செய்தபோதி லும் மோக்ஷம் உண்டாகவே மாட்டா. சரீராரம்பத்தி லேயே உண்டாகிய பிராரப்தகர்மம், அனுபவித்தே தீர வேண்டும். இந்த சஞ்சிதமென்னும் கர்மம் ஒழிக்கவேண்டு மென்று கோரப்பட்ட புருஷன் எதையும் பகவ தற்பண மாய்ச் செய்துவரவேண்டும். அப்படிச் செய்வதனுல் காலக்கிரமமாய் சம்சார பந்தத்திலிருந்து விடுபட்டு விமுக்தி என்னும் பெருத்த பலனே அடைகின்ருன். இதை சொல்பமாய்ச் செய்தபோதிலும் அதற்குத்தக்க பலத் தைக் கொடுக்குமே யொழிய விருதா வாகமாட்டா. இதற்கு திருஷ்டாந்தம் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூப மாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம், 2-சுலோகம், 40. என்னவென்ருல்,

நேஹாபிக்ரம நாேஸா ஸ்தி ப்ரத்யவாயோ ந வித்யதே
ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்.

கிருஷ்ணன்:—அர்ஜுனா! இப்பொழுது நான் சொல் லப்போகிற கர்மயோகம் எப்படிப்பட்டதென்ருல், இதை யாராகிலும் பிராரம்பித்தவுடனே நிவர்த்தி செய்து கொண்டபோதிலும், அதற்குத்தக்க பலத்தைக் கொடுக் குமேயன்றி, பூர்த்தியாய் நிஷ் பிரயோஜன மாகமாட்டா. ஏனென்ருல், இதை சொல்பமாய் அனுஷ்டித்தபோதிலும், அது மஹத்தாயிருக்கும் சம்சார பந்தத்தைக் காப்பாற் றும்.

அர்ஜுனன்:—கர்மயோகம் பிராரம்பித்தவுடன் அது எப்படி நாசமாகும்? யாவராயினும் ஏதாகிலும் ஒரு காரி யத்தைப் பிராரம்பித்தவுடனே நிவர்த்தி செய்துகொண் டால் அது எப்படி பிரயோஜனத்தையுண்டாக்கும் சொல் லும் கிருஷ்ணு?

கிருஷ்ணன்:—அர்ஜுனா! இந்த கர்மயோகம் மற்ற எல்லா கார்யங்களைப் போன்றதல்ல; சித்த சுத்தி உண்டாகிப் பலாபேக்ஷையில்லாதவனுய் பகவதர்ப்பணமாகச் செய்யும் காரியமா யிருக்கின்றது. எப்பொழுது பகவதர்ப்பணமாய்ச் செய்யப் படுகின்றதோ அப்பொழுதே அக்கார்யத்திற்கு அதிக சிரேஷ்டம் உண்டாகின்றது. ஆதலால், அது சொல்பமா யிருந்தபோதிலும் காலக்கிரமமாய் (வரவர) சம்சார பந்தத்திலிருந்து விடுபட்டு விமுக்தி (விடுதலை) என்னும் பெருத்த பலனைக் கொடுப்பதற்குக் காரணமா யிருக்கின்றது. எப்படியென்றால்,

பயிரிடுவோன் பயிர்த்தொழில் ஆரம்பிக்கும்போது அந்தந்தக் காலங்களில், சரியாய் மழை பொழியுமோ பொழியாதோ, பயிர் விளையுமோ விளையாதோ என்னும் சந்தேஹம் உண்டாகும். ஈசுவரார்ப்பணமாய்ச் செய்யும் கர்மத்தை ஆரம்பிக்கும்போது அப்படிப்பட்ட சந்தேகம் வேண்டியதில்லை. ஏனென்றால், ஈசுவரார்ப்பண கர்மம் செய்தால் அதன் பலன் தப்பாமல் உண்டாகுமென்று சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதனால், சாஸ்திரங்களை நம்பப்பட்டவர்கள் ஈசுவரார்ப்பண கர்ம பலன்களை குறித்துச் சந்தேகப் படவேண்டியதில்லை. இதன்றியும், வியாதியைப் போக்கடித்துக்கொள்ள ஔஷதம் சாப்பிடும்போது அதனால் வியாதி தீராவிட்டால் மரணம் கிட்டுமென்று நிச்சயிக்கின்றார்கள். கர்மத்தைச் செய்வது அப்படியல்ல. கர்மத்தைச் செய்வதனால் அந்தக் கர்மம் அதற்குத் தக்க பலனைக் கொடுக்கின்றது. இதன்றியும்,

ஸர்வபாப ப்ரஸக்தோபி த்யாயந் நிமிஷமச்யுதம்
பூயஸ் தபஸ்வீ பவதி பங்க்திபாவந பாவநஃ.

ஸமஸ்தபாபங்களுடன் கூடினவனுய் இருந்தபோதிலும், ஒரு க்ஷணம் பகவத்தியான ரூபமாகிய பிராண

யாமம் செய்து யோக சமாதியிலிருந்தால் அவனே, கிரமக் கிரமமாய் சமாதிநிஷ்டனென யோகியென்றே சொல்லப்படு வான். அப்படிப்பட்டவன், பந்தியில் போஜனம் செய்ய மாட்டான். அப்படி ஒருவேளை போஜனம் செய்தபோதி லும், அவனுடைய பந்தியில் இருக்கப் பட்டவர்களெல் லோரும் பவித்திரர்களாகின்றார்கள். அதனால் அவனுக்கு பந்தி பாவனனென்று சுருதிப் பிரமாணங்கள் உண்டு. ஈசுவரார்ப்பணமாய்ச் செய்யப்பட்ட கர்மயோக ரூபமாகிய தர்மம் எவ்வளவு சொல்பமா யிருந்தபோதிலும் அது, பெரிதாகிய சம்சார பயத்திலிருந்து ரக்ஷிக்கின்றது. அஃ தில்லாமல் செய்யும் காம்மிய கர்மங்கள் (இச்சைகொண்டு செய்யும் கர்மங்கள்) அப்படிச் செய்யமாட்டா. ஏனென் றால் "க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விஸந்தி" என்கிற கீதா வாக்கியத்தால், தான் எந்த பலத்தை அனுபவிக்க எண்ணி எவ்வளவு புண்யம் செய்தானே அவ்வளவு புண்ய மும் செலவழிந்தவுடன், அந்த தேவலோக போகங்களை விட்டு மறுபடியும் பூலோகத்தில் பிறக்கின்றான். ஜன்ம பரம்பரையாய் வந்துகொண்டிருக்கும் சம்சாரமென்னும் கர்மம், சம்சார மூலமாச் செய்துவரும் காம்மிய கர்மத் தினால் நாசமாகமாட்டா. அத்யாயம்-2. சுலோகம்-41.

> வ்யவஸாயாத்மிகா புத்தி ரேகேஹ குருநந்தந !
> பஹுஶாகா ஹ்யநந்தாஶ்ச புத்தயோ வ்யவஸாயிநாம்.

ஆதலால், ஓ அர்ஜுநா! பலாபேக்ஷை யில்லாமல் பகவதர்ப்பணம் செய்து, அதனால் உண்டாகும் சுகதுக்கங் களில் சமபாவ முடையவனாய் இருக்கின்றவன் எவனே அப்படிப் பட்டவனுடைய மனது, எந்த விகாரங்களையும் அடையாமல் மோக்ஷத்திலேயே நின்று எப்பொழுதும் ஒரே நிலையிலிருக்கும்.

ஆதலால், இது விஷயத்தில் நீ எவ்வளவேனும் சம் சயம் வைக்கவேண்டாம். "ஸம்ஸயாத்மா விநஸ்யதி" என்னும் சுருதிரீதியாய் சம்சய முடையவன் கெட்டுப் போவான்; நான் சொல்லியதுபோல் செய்து வரக்கடவாய். நிஷ்காம்ய கர்மத்தைச் செய்யப்பட்டவன் எப்பொழுதும் சத்கர்மத்தை (நல்ல கர்மத்தை) ஆசிரயித்துக் கொண்டு பகவ தர்ப்பணமாய்ச் செய்து, அந்த பகவத் பிரசாதத்தினுல் மோக்ஷரூபமாகிய ஓர் பலத்தையே நினைத்து, எப்பொழுதும் சமாதி சாதனம் செய்துகொண் டிருக்க வேண்டும். காம்ய (இச்சை கொண்டு) கர்மங்களைச் செய்யப்பட்டவன் அனேக விஷயங்களில் புத்தியை செலுத்தவேண்டியதா யிருக்கின்றது. எப்படி யென்றுல்:—

சொர்க்கத்தைக்கோரி யாகம் செய்ய நினைத்தபோது, அதற்குத்தக்க சாமக்கிரியைகள் தயாராயிற்றே இல்லையோ என்றும், யாகத்திற்கு நல்ல பசுக்கள் அகப்படவேண்டுமே என்றும், யாகம் யாதொரு விக்கினமில்லாமல் பூர்த்தியாகவேண்டுமே என்றும் இவை முதலாகிய அநேக விஷயங்களில் மனம் ஓடிக்கொண்டிருக்கும். இப்படிப்பட்டவைகளின்மீது ஆசை அதிகமா யிருப்பதனுல் அதன் பலன் குறைந்துவிடும் அப்படிப்பட்ட கர்மங்களின் ஆசையைவிட்டு நிஷ்காம்ய கர்மத்தை பகவ தர்ப்பணமாய்ச் செய்தால். சித்தசுத்தியும், அதன் மூலமாய் ஞானமும் அந்த ஞானத்தினுல் பரம புருஷார்த்தமான மோக்ஷமும் உண்டாகும்.

அர்ஜுனன்:—ஓ கிருஷ்ணமூர்த்தியே! நீர் இப்படிச் சொல்லுகின்றீரல்லவா? இவ்வுலகத்தில் பண்டிதர்களா யிருக்கும் அனேகர்கள், இஹ பரங்க ளிரண்டினும் பலத்தைத்தரும் கர்மங்கள் என்றுல், அக்னி ஹோத்ர காமேஷ்டி முதலாகிய கார்யங்களும், அன்னதானுதி முதலாகிய

அனேக தர்மங்களும் செய்யவேண்டுமென்று சொல்லு வதுமே யல்லாமல், அவைகளுக்கு உபமானமாய் வேத வாக்கியங்களேயும் பிரமாணமாய்ச் சொல்லுகின்ருர்களே! இதனை யோசிக்குமளவில் எதையாகிலும் ஓர் பலத்தை எண்ணியே யல்லவா எந்த கர்மத்தையாகிலும் செய்ய வேண்டுமென்று வேதங்களினுல் தெரியவருகின்றது. அப் படியிருக்க எந்த பலாபேக்ஷையு மில்லாமலே கர்மத்தை செய்ய வேண்டுமென்று நீர் சொல்லுவதற்குக் காரண மென்ன?

இதற்குமுன் விஷயங்களே யெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணர் ஜுநு சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதையில் விரி வாய்க் காணலாம். நாயனு! பிராணுயாமம் செய்யும் புரு ஷர்கள்;

கொள்ளவேபா சிப்பயறு படியரைக்கால்
குருவைநெல் பச்சரிசி படியரைக்கால்
மெள்ளவே ஆவின்பால் தன்னிற்பொங்கி
மெய்ஞ்ஞானம் வேணுமென்று விரும்பிநீயுந்
தள்ளவே நித்தமொரு நேரங்கொள்ளு
தப்பாமற் பசிதானும் தளர்ந்துபோகும்
விள்ளவே யோகமதை விரும்பிப்பாரு
மெஞ்ஞானி யென்றுவெளி யேறலாமே.

மேற் சொல்லியதுபோல் அரைக்கால்படி பயறு வறுத்து உடைத்து அப்பறுப்பில், குருவை, பச்சரிசி அரைக்கால்படி சேர்த்து பால்விட்டு இந்துப்பு சேர்த்துப் பொங்கல் செய்து பிரதிதினம் பகல் ஒருவேளேப் புசித்து பிராணுயாமம் செய்துவரும் புருஷர்களுக்கு சில காலத் தில் வாயு குடலில் பிரவேசிக்கும். அச்சமயம் ஆகா ரத்தை நீக்கவேண்டும். அஃதெவ்வாறெனில், சாதாரண

மாய் ஒவ்வொருவரும் சாப்பிடும் சாதம், 21 பிடிகள், இதை நாளாவட்டத்தில் ஒவ்வொரு பிடியாய்க் குறைத்துக்கொண்டு வந்து, கடைசியாய் 12-பிடிகளில் நிறுத்திப் பிறகு கோதுமையினல் செய்த, ரோட்டி, பூரி, உப்புமா, நெய், சர்க்கரை, பழம், பாலும் சாப்பிடலாம். அன்றியும் அரை ஆழாக்கு கோதுமை நொய்யுடன் அரை ஆழாக்கு ஜவ்வரிசிசேர்த்துப் போங்கி அரைப்படி கட்டித்தயிரில், சீரகம் உளுத்தம் பருப்பு பச்சைக் கறிவேப்பிலை இஞ்சியுடன் நெய்யில் வதக்கி மேற்படி தயிரில் கலந்து அதை, பொங்கிய நொய்யுடன் சேர்த்து அதனுடன் 6-பலம் வெண்ணெய் கலந்து நன்ருய்க் கரைத்து விடவேண்டும். இதை பங்களாபாத் என்று சொல்லுவார்கள். இதற்கு வேண்டும் இந்துப்பு சேர்த்துக் கொள்ளலாம். இது, உஷ்ணம் தணிக்கச்செய்யும். இவ்விதமாய்ச் சாப்பிட்டு ஸ்திரீ பத்தியத்துடன் இருந்து யோகசாதனம் செய்யவேண்டும்,

பிராணயாமம் செய்யும்போது, சுவாசத்தை யிழுத்து நிறுத்தி, 1-2-3-4-5-6-7-8-9-10-11-12-13.14-15-16-17-18-19-20-30-40-50-100-200-300-400-500-600-700-800 900-1,000 ஆயிரம் என்று மனதினுல் எண்ணிக்கொண்டே, ஏன் செய்துகொண்டு போகலாகாதென்று யோசிக்கின்ருர்களா என்ன? அதற்குக் காரணம் சொல்லுகின்ருேம் கேளுங்கள்:—

மூக்கு ரந்திரங்களில் ஆடிக்கொண்டிருக்கும் சுவாசமே, சர்ப்பம் (நாகன்) என்று சொல்லப்படும்: இந்த சுவாசமென்னும் சர்ப்பத்தை வலது நாசியில் இழுத்து நிறுத்தி அடக்கி ஆட்டும்போது, அந்த சுவாசமென்னும் சர்ப்பத்திற்கு, விசேஷ கோபமுண்டாய் மூக்கு ரந்திரங்களின் வழியாய் சீறிவர பிரயத்தினப்படும். அப்போது, யோகியானவன் சுவாசமென்னும் பாம்பை வெளிவிடா

மல் கண்டத்தினிடம் மூடி, எண்ணிக்கைகளை நாளாவட்டத்தில் உயர்த்திக்கொண்டே போகும்போது, ஆயிரத்து நூற்றி ஒன்று, ஆயிரத்து நூற்றி இரண்டு, ஆயிரத்து நூற்றி மூன்று, ஆயிரத்து நூற்றி நான்கு என்று இவ்வாறு சொல்லிக்கொண்டே எண்ணிக்கைகளை உயர்த்திக்கொண்டு போக அவ்விடம் அவகாசமிராது: ஆதலால், எண்ணிக்கைகளை மிகவும் இலேசாய் எண்ணவேண்டிய வழியைச் சொல்லுகின்றோம்; அதாவது, கண்களைமூடி, சுவாசம் வலது நாசியில், ஓம்! ஓம்! ஓம் என்று இழுத்து விழுங்கி அதை வெளிவிடாமல் நிறுத்தி, வலதுகை ஐந்து விரல்களையும் மடித்து, இடதுகைச் சுண்டுவிரலை மடக்கி, மறுபடியும் வலதுகை ஐந்து விரல்களையும் மடித்து, இடதுகை மோதிர விரலை மடிக்கவேண்டும்; இவ்வாறு, இடதுகை ஐந்து விரல்களையும் மடித்தால் அது இருபத்தி யைந்தாகின்றது. இவ்வாறு இடதுகையில் அறுநூறு எண்ணும்வரையில் சுவாசம் நிறுத்தினல் அது கணக்கிற்கு,

(1) பதினையாயிரம் ஆகின்றது: பதினையாயிரம் எண்ணி முடிந்தவுடன் இடது நாசியை மூடி, வலது நாசியின் வழியாய்ச் சுவாசம் நாபி (தொப்புள்) வரையில் விட்டு, மறுபடியும் வலது நாசியில் சுவாசம் பூர்த்தியாய், ஓம்! ஓம் என்று இழுத்து விழுங்கி,

(2) பதினையாயிரம் எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தி, மறுபடியும் இடது நாசியைமூடி, வலது நாசியின் வழியாய்ச் சுவாசம் நாபி (தொப்புள்) வரையில் விட்டு, மறுபடியும் வலது நாசியில் சுவாசம் பூர்த்தியாய் ஓம்! ஓம் என்று இழுத்து விழுங்கி,

(3) பதினையாயிரம் எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தி, மறுபடியும் இடது நாசியைமூடி, வலது நாசியின் வழியாய் சுவாசம் நாபி (தொப்புள்) வரையில் விட்டு, மறு

படியும் வலது நாசியில் சுவாசம் பூர்த்தியாய் ஓம், ஓம் என்று இழுத்து விழுங்கி,

(4) பதினையாயிரம் எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தினால் இது, கணக்கிற்கு அறுபது நாயிரம் எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தினதாகின்றது: இவ்வாறு நிறுத்தி எண்ணி முடிந்தவுடன், அந்த சுவாசமென்னும் பாம்பை விரல்களால் அடக்கி இறுக்கி ஒடுக்கி, நாசிகளை மாற்றி மாற்றி பற்களைக் கெட்டியாய் இடிக்கிப்பிடித்து நாலங்குல சுவாசம் வெளியில் விட்டு, மறுபடியும் அந்த நாலங்குல சுவாசமே உள்ளுக்கிழுத்து அதன் கொழுப்பு (வேகம்) அடங்கும் வரையில், பத்து நிமிஷங்கள் வரையில் நிதானமாய் விரல்களால் ஆட்டி ஆட்டி விடவேண்டும்; இதற்கு பாம்பாட்டிச் சித்தர் பாடல் பிரமாணம்:—

தெளிந்து தெளிந்து தெளிந்தாடு பாம்பே - சிவன்
சீர்பாதங்கண்டு தெளிந் தாடு பாம்பே
ஆடுபாம்பே தெளிந் தாடு பாம்பே - சிவன்
அடியினை கண்டோமென் றாடு பாம்பே.

எள்ளிலெண்ணெய் போல வுயிரெங்கு நிறைந்த
ஈசன்பத வாசமல ரெண்ணி யெண்ணியே
உள்ளபடி யன்புபத்தி யோங்கி நிற்கவே
ஒடுங்கி யடங்கித்தெளிந் தாடு பாம்பே.

அண்டபிண்டந் தந்தவெங்க ளாதி தேவனை
அகலாமலே நினைந் தன்புடன் பணிந்
தெண்டிசையும் புகழ்ந்திட வேத்தி யேத்தியே
ஏகமன மாகநாடி யாடு பாம்பே.

சோதிமய மானபரி சுத்த வஸ்துவைத்
தொழுதழு தலறித் தேர்ந்தோமென வே
நீதி தவறு வழியி னின்று நிலைபாய்
நினைந்து நினைந்துருகி யாடு பாம்பே.

அருவாயு முருவாயு மாதி யாயும்
அந்தமாயு மொளியாயு மாகம மாயும்
திருவாயுங் குருவாயுஞ் சீவ னுயும்
செறிந்தவஸ்துவைப் போற்றி யாடு பாம்பே.

சுட்டிக் காட்ட வொண்ணுத பாழ் சூனியந்தனைச்
சூட்சமதியா லறிந்து தோஷ மறவே
எட்டிப் பிடித் தோமென் றனந்த பாம்பை
யெடுத்து விரித்து நின் றாடு பாம்பே.

உள்ளங்கையிற் கனி போல வுள்ள பொருளை
உண்மையுடன் காட்ட வல்ல வுண்மை குருவைக்
கள்ளமனந் தன்னைத் தள்ளிக் கண்டுகொண் டன்பாய்க்
களித்துக் களித்து நின் றடாய் பாம்பே.

பொய்மதங்கள் போதனை செய் பொய்க் குருக்களைப்
புத்திசொல்லி நன் னெறியிற் போக விடுக்கும்
மெய்மதந்தா னின்ன தென் று மேவ விளம்பும்
மெய்க்குருவின் பதம் போற்றி யாடாய் பாம்பே.

வேதப்பொரு ளின்ன தென்றும் வேதங் கடந்த
மெய்ப்பொருளைக் கண்டு மன மேவி விரும்பிப்
போதப்பொரு ளின்ன தென்றும் போதனை செய்யும்
பூரணசற்குரு தாள் கண் டாடாய் பாம்பே.

இவ்வாறு, இதில் சொல்லியிருக்கும் வாக்கே சற்குரு வாக்கென்று நினைத்து மேற் சொல்லியதுபோல் சுவாச மென்னும் பாம்பை, அறுபதுநாயிரம் எண்ணும் வரையில் வலது நாசியில் நிறுத்தி, கடைசியாய் விடும்போது வலது நாசியை மூடி, இடது நாசியில் நாலங்குல நீள சுவாசம் வெளியில் விட்டு, அந்த நாலங்குல நீள சுவாசமே மறுபடியும் உள்ளுக்கிழுத்து இடது நாசியை மூடி, மறுபடியும் வலது நாசியில் நாலங்குல சுவாசம் வெளியில்விட்டு அந்த நாலங்குல சுவாசமே உள்ளுக்கிழுத்து வலது நாசியைமூடி, இடது நாசியில் நாலங்குல சுவாசம்விட்டு இவ்விதமாய்

நாசிகளை மாற்றி மாற்றி, பற்களைக் கெட்டியாய் இறுக்கிப் பிடித்து சுவாசத்தை அடக்கிவிட் டிழுக்கும்போது, சுவாச மென்னும் சர்ப்பம் அதிவேகமாய்ச் சீறி விளையாடி, மின்னலைப்போல் பளிச் பளிச்சென்று புருவமத்தியில் தோன்றும்: இவ்வாறு நாலங்குல சுவாசம் வெளியில் விட்டு நாலங்குல சுவாசம் உள்ளுக்கிழுத்து அடக்கி ஆட்டி வந்தால் சுவாசமென்னும் பாம்பின் கொழுப்பு அடங்கி கடைசியில் அதிவேகமாய் சீறி வெளிவர சக்தியற்று, அனேகதினங்கள் இரையில்லாத பாம்பு, ஓட சக்தியில்லா மல் மெதுவாய் தட்டுத்தடுமாறி நகருவதுபோல், சுவாசம் மூக்கில் ஆடுவது தெரியாமல் மிகவும் மெதுவாய் நடக்கும் இதற்குத் திருஷ்டாந்தம் அடியேனுடைய மூக்குத் துவா ரங்களில் விரல்களை வைத்துப் பார்த்தால் சுவாசம் வெளி வரும் சூடு (உஷ்ணம்) கைவிரலில் படமாட்டா: ஏனென் றால், சுவாசத்தின் கொழுப்பு அடங்கி அதன் பலம் குறைந்து விட்டபடியால் மெதுவாய் ஆடும். அப்போது சுவாசத்தின் சூடு காணப்படமாட்டா: இவ்வாறு, நாலங் குல சுவாசத்தை * உசுவாச † நிசுவாசங்களாய் ஆடச் செய்து, மிகுதி சுவாசத்தை எல்லாம் கர்ப்பத்திலேயே நிறுத்தி வைக்கவேண்டும். முன் சொல்லிய இலக்கங்க ளெல்லாம் சேர்ந்து, அறுபதுனாயிரம் எண்ணும்வரையில் சுவாசத்தை நிறுத்தினதாகின்றது.

மூச்சைப்பிடித்து அறுபது நாயிரம் எண்ண அவ்வி டம் அவகாசமிராது. ஆதலால், சுவாசம் உள்ளுக்கிழுத்து மூச்சைப்பிடித்து வலதுகை ஐந்து விரலையும் 1, 2, 3, 4, 5, என்று எண்ணி இடது கை ஒரு விரலை மடக்கவேண்டும். இவ்விதமாய் இடது கையில் 600-விட்டால், 600 × 25 =

---

* உசுவாசம்-சுவாசம் வெளியில் விடுவது.

† நிசுவாசம்-சுவாசம் உள்ளுக்கிழுப்பது.

15,000-இது கணக்கில் பதினையாயிரம் ஆகும். இவ்வித மாய் சுவாசம் நான்குமுறைவிட்டு நான்குமுறையிழுத்து நிறுத்தினால் அது, அறுபதுநாயிரம் ஆகும். முதல் இந்த அறுபதிநாயிரமும் வலது நாசியில் செய்துமுடித்து, 10-நிமிஷங்கள் நிஷ்டையிலிருந்து, மறுபடியும் முன்போல் இடதுநாசியில் சுவாசத்தை யிழுத்து அறுபதிநாயிரம் எண்ணும்வரையில் நிருத்தி முடிந்தவுடன் 10-நிமிஷங்கள் நிஷ்டையிலிருந்து, மறுபடியும் இரண்டு நாசிகளிலும் முன் செய்ததுபோல் அறுபதுநாயிரம் எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தி முடிந்தவுடன் நிஷ்டையில் இருக்கப்பட் டவர்களின் சரீரம், பிரஞ்ஞை தப்பி தன்னைத்தான் மறந்து பிரம்மானந்த சமாதி நிலையில் நின்றிருப்பார்கள். ஆபிர மேன்? தன் மனதை யோகத்தினால் நிறுத்த அப்பியாசம் செய்துகொண்டு வந்தால், கடைசியில் அந்தயோகம் பழுத்து சித்தசாந்தி உண்டாகும். எப்பொழுது சாந்த சித்த னாகின்றானோ அப்பொழுதே என்னை அடைந்தவ னாகின்றான். என்றால், ஜனனமரணாதி சம்சாரம் நசித்து விஸ்ராந்தியை அடைகின்றான் என்று கீதை அத்யாயம் 6, சு-15-ல், சொல்லி யிருக்கின்றது. இதன் விவரங்களை இன்னும் விசிதமாய்த் தெரிந்துகொள்ள வேண்டுமானால், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத் கீதை அத்தியாயம் 6, சு-11,12, 13, 14-லில் பார்க்க. இது விஷயம், பிராணாயாம பிரத்தியாஹார தாரண தியான சமாதியிலும் விவரமாய் முன்சொல்வோம். அறுபதுநாயி ரம் எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தினால் சமாதி நிலையை அடையலாம். இவ்வாறு சமாதி நிலை யடைந்த வர்களின் புண்ய பாபமென்னும் கர்மங்களெல்லாம், யோக பலத்தினால் நசித்துவிடும். அப்போது நாவினிடம் ஸரஸ்வதி நடனம் செய்துகொண்டிருப்பதனால் யோக

జలముపై శయనించి యోగనిష్ఠయందుండుట.

Yoganishta lying flat on the surface of water.

நிலையைத் தெரிவிக்க சக்தியுண்டாகும்: இதற்கு காக புசண்டர் பிரமாணம்;

ஆறுவா ளந்தி சந்தி யுச்சி யென்றால்
அப்பனே ரவி மதியுஞ் சுடர் மூன்றாகும்
ஏகமாய் மூன்று மொன்றாய்ப் பின்ன லாகி
யிருந்திட மே பிரம்மாண்ட நிலை யதாகும்
போகுமே நீ செய்த கர்ம மெல்லாம்
புவனை திரி சூலியுட கிருபை யாலே
வாகுமே வழி யோடே சேர்த்தா யானால்
வாணியுந்தான் நாவில் நடனஞ் செய்வாள் பாரே.

சுவாசத்தை கர்ப்பத்தில் நிறுத்தி, சிங்முத்திரையைப் பிடித்து அலைகளில்லாத ஜலத்தின்மீது சயனித்து சமாதியிலும் இருக்கலாம். அலைகளிருந்தால் சரீரம் ஜலத்தின் மீது அசைந்து கொண்டேபோகும், சின்முத்திரையைப் பிடித்து ஜலத்தின்மீது அசையாமல் சயனித்திருப்பது எதிரிலிருக்கும் படத்தில் ☞ காட்டப்பட்டிருக்கின்றது.

ஓ ஸகோதரிகளே! ஓ ஸகோதரர்களே! இந்த யோகத்தைக்குறித்துக் கீதையின் சில திருஷ்டாந்தங்கள் இங்கு சொல்லுகின்றோம். அதை கவனித்து வாசிக்கவேண்டும் அதாவது அத்தியாயம், 8, சு-13,

ஓ மித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரந் மா மநுஸ்மரந்
யஃ ப்ரயாதி த்யஜன் தேஹம் ஸ யாதி பரமாங் கதிம்.

எவன், தன்னுடைய சமஸ்த இந்திரிய துவாரங்களை நன்றாய் அடக்கி மனதை, இருதய கமலத்திலிருக்கும் அந்தர்யாமியாகிய என்னிடத்தில் நிறுத்தி, ஸகஸ்ராரமென்னும் பிரம்ம கபாலத்தில் பிராணவாயுவைக் கொண்டு போய் நிறுத்தி, தியானயோகத்தி லிருந்துகொண்டு பிரம்மத்தை அறிவிக்கிற "ஓம்" என்னும் ஏகாக்ஷரத்தை மனதினால் உச்சரித்து, அதற்கு லக்ஷ்யார்த்தமான என்னை தியா

னிக்கிறவனுயும், தன் சரீரத்தை அபிமானிக்காதவனுயும் இருக்கப்பட்டவன் எவனே அவன், சிரேஷ்டமான கதியை அனுபவிப்பானென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது,

முதல் சரீராபிமானத்தை விட்டு முன்சொல்லிய "ஓம்" என்னும் பிரணவத்தை அஜபாவாய் (மனதினுலேயே) சுவாசத்துடன் சேர்த்து, நாசித் துவாரங்களின் வழியாய் உள்ளிக்கிழுத்து விழுங்கி, தேகத்திலுள்ள ஒன்பது துவாரங்களின் வழியாய் அந்த சுவாசத்தைப் போகவிடமால் கண்டத்தையும், குதத்தையும் மூடி மூச்சை எவ்வழியாயும் போகவிடாமல் நிறுத்தி; வலதுகை ஐந்துவிரல்களால் 1, 2, 3, 4, 5 என்று எண்ணி முடித்து, இடது கை சுண்டுவிரலை மடக்கவேண்டும்; இப்படி இடதுகை ஐந்து விரல்களையும் மடக்கினுல் அது கணக்கில் 25 ஆகும். இருபத்தைந்து ஆனவுடனே புருவமத்தியில், 1-என்று மனதினுலேயே லக்கமிட்டு அந்த இலக்கத்தின்மீது திருஷ்டியை நிறுத்தி, மறுபடியும் 25 எண்ணி முடிந்தவுடன், எந்த நாசியில் உள்ளுக்கு மூச்சை யிழுத்ததோ அந்த நாசியிலேயே நாபி வரையில் சுவாசம் மெதுவாய் விட்டு, விட்டதிலேயே நிரம்ப சுவாசம் இழுத்துக் கண்டத்தை மூடி புருவமத்தியில் முன்வைத்த 1, என்னும் இலக்கத்தை மனதினுல் எடுத்து விட்டு, அந்த இடத்தில் 2 என்னும் லக்கத்தைப் போடவேண்டும். அப்போது 50-எண்ணும் வரையில் சுவாசத்தை நிறுத்தினவனுகின்முன். இவ்விதமாய் 50-எண்ணி முடிந்தவுடன், சுவாசத்துடன் கூட 'ஓம்' என்னும் பிரணவத்தைச் சேர்த்துக்கொண்டு, நாசிகளை மாற்றிமாற்றி சுவாசம் நிதானமாய் விடவேண்டும். இப்படி கிரமக் கிரமமாய் நாளாவட்டத்தில் சுவாசம் நிறுத்தி உயர்த்திக்கொண்டு வருவதே அப்யாச யோகமென்று

சொல்லப்படும். இந்த அப்பியாச யோகத்தினல் மனம் உலக வியாபாரங்களில் செல்லாமல் நின்றுவிடும்

இன்னும் அத்தியாயம் 6, சுலோகம் 20, 21, 22, 23-ல், ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லுகின்ருர்.

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுன! யோகாப்பியாசம் செய்யப்பட்ட மஹாத்மாவினுடைய லக்ஷணம் இன்னும் எப்படிப்பட்டதென்ருல், அதைச் சொல்லுகின்றேன்கேள்:—

யோகாப்பியாசம் செய்வதனல் காற்றில்லாத இடத்தில் இருக்கப்பட்ட தீபம்போல் நிச்சலனமாய் (ஒரே நிலையாய்) இருக்கப்பட்டவனுடைய மனது, சுவாநுபவ ரூப சமாதியிலிருந்து சலிக்காமலிருக்கும்: அந்த சமாதியினல், அந்தக் கரணம் என்ருல், மனம் புத்தி சித்தம் அஹங்காரம் பரிசுத்தமாய் பரஞ்ஜோதி சொரூபத்தை யடைந்து, ஆநந்தித்துக் கொண்டிருப்பான். இந்த பரஞ்ஜோதி சொரூபம், கண்கள் மூக்கு வாய் செவிகள் தேஹசர்மம் என்னும் ஐந்து இந்திரியங்களால் தெரிந்துக் கொள்ளத் தக்கதல்ல. அதாவது, நேத்திரங்களால் பார்க்கத்தக்கதும், செவிகளால் கேட்கத்தக்கதும், மூக்கினல் முகரத்தக்கதும், வாக்கினல் சொல்லத்தக்கதும், தேகத்தினல் பரிசிக்க (தொட)த்தக்கதுமல்ல; பின் எப்படிப்பட்டதென்ருல், ஞான கர்மேந்திரிய விஷயங்களென்னும் பொறி புலன்களுக்கு எட்டாததும், யோகாப்பியாசத்தினல் உண்டாகும் பரிசுத்தமான புத்திக்கு மாத்திரம் எட்டுவதுமாய் இருக்கப்பட்டது. இவ்வித சுகத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவன் அந்த ஸுகத்தைவிட்டு நீங்கான். அப்படிப்பட்ட அநுபவ சுகத்திலிருப்பவன் இதரமான சுகங்களை மித்தையென்றும், துச்சமானதென்றும் நினைப்பான். மித்தியா பூதமான பிரபஞ்சத்தில் சரீரம் இருக்கும் வரையில், பிராரப்த வசத்தினல் உண்டாகும் சோகாதி துக்கங்களுக்கு விய

சனப் படமாட்டான். சமஸ்த துக்ககரமாகிய சம்சாரத்தி லிருந்து விடுதலை யடைவதற்குச் செய்யப்படும் முயற்சியே யோகமென்று சொல்லப்படும். இந்த யோக சித்தியைப் பிடிவாதத்துட னிருந்து அப்பியாசம் செய்யப் பட்டவன், அதாவது ரசவாதம் செய்யப்பட்ட புருஷன் பொன் வெள்ளி செய்வதற்காக, எவ்வளவு கஷ்டமான பாடு களைப் பட்டுக்கொண்டு வந்தபோதிலும் சித்தியாகா விட் டால் வியசனப்படாமல், மறுபடியும் அதைவிடாமல் முயர்ச்சிப்பதுபோல், யோகியானவன் யோகாப்பியாசம் செய்யும்போது சரீரத்திற்கு விசேஷ நோயை உண்டாக் கும். அன்னேய்களுக்கெல்லாம் சட்டை பண்ணுமல் இவ் வளவு காலம்வரையில் யோகம் செய்தும் சித்திக்கவில் லையே என்னும் மனக்கவலை யில்லாதவனுய், எவ்வளவு கஷ்டமா யிருந்தாலும் அந்த கஷ்டங்களுக் கெல்லாம் சகித்துக்கொண்டு யோகசித்தியை அடையவேண்டுமென் னும் வைராக்கியத்துட னிருந்தால்தான். அப்படிப்பட்ட யோகசித்தி அவனுக்கு லபிக்கும். இன்னும் அத்யாயம் 6, சுலோகம்-24, 25 என்ன சொல்லுகின்றுரென்றுல்:—

ஸங்கல்ப ப்ரபவாந் காமாம் ஸ்த்யக்த்வா ஸர்வாந பேஷதஃ
மநஸை வேந்த்ரியக்ராமம் விநியம்ய ஸமந்ததஃ.
பநை ஃபநை ருபரமே த்புத்யா த்ருதிக்ருஹீ தயா
ஆத்ம ஸம்ஸ்தம் மநஃ க்ருத்வா நகிஞ்சிதபி சிந்தயேத்.

ஓ அர்ஜுநா! யோகியானவன் முக்கியமாய்ச் செய்ய வேண்டிய விஷயம் என்னவென்றுல், இந்திரியங்களை நிறுத் தவேண்டும். நிறுத்துவதென்றுலோ, கண்கள் மூக்கு வாய் செவிகள் முதலானவைகளினுல் செய்யத் தக்கதல்ல; ஏனென்றுல் ஓர் வஸ்துவை நேத்திரங்களால் பார்த்து, அதில் இச்சையுண்டானபோது நேத்திரங்களை மூடிக் கொண்டால், அந்த வஸ்துவி லுண்டாகிய ஆசை அவ்வள

விலேயே விட்டு ஒழியமாட்டா. இப்படியே ஒவ்வோ ரிந்திரியங்களினுலும் உண்டாகிய ஆசை, அந்தந்த இந்திரியங்களே மூடிக்கொண்ட மாத்திரத்திலேயே நிவர்த்தியாக மாட்டா. பின் எப்படி நிவிர்த்தியாகுமென்ருல், மனதினுல் மாத்திரம் நிவர்த்தி யாகவேண்டியதா யிருக்கின்றது. ஏனென்ருல், கண்கள் மூக்கு வாய் செவிகள் தேஹசர்மம் என்னும் ஐந்து இந்திரியங்களும், எந்த விஷயங்களில் ஓடிக்கொண்டிருக்கின்றனவோ, அந்த விஷயங்களில் உண்டாகும் இச்சை சங்கல்பத்தினுல் (எண்ணங்களினுல்) உண்டாகின்றது. அந்த சங்கல்பத்திற்கு உற்பத்தி ஸ்தானம் மனதாகவே இருக்கின்றது. ஆதலால், சங்கல்பத்திற்கு மனது இடங் கொடாமலிருந்தால் எண்ணங்கள் உண்டாகாமலிருக்குமல்லவா? யோகியானவன், தன் மனதுக்கு எப்பேர்ப்பட்ட சங்கல்பத்தையும் சங்கல்பிக்க இடங்கொடுக்கலாகாது. அப்படிச் செய்வதனுல், அவனுடைய மனதில் அநேக எண்ணங்கள் உண்டாகமாட்டா. எப்பொழுது எண்ணங்கள் இல்லாமலிருக்கின்ருனே அப்பொழுது, அவனுடைய இந்திரியங்கள் எந்த விஷயங்களில் ஓடியபோதிலும் அந்த விஷயங்களில் அவனுக்கு இச்சையிராது. அதனுல் அவன், இந்திரியங்களே மனதினுல் ஜயித்தவனுகின்ருன். ஆனுல் அப்படிச்செய்வது, புத்தி பலமுடையவனுக்கே யன்றி சலிக்கின்ற மனதுடையவனுக்கல்ல. திடமான நிச்சயமுடைய புத்தியினுல் மனதை, மேற்சொல்லியதுபோல் வசப்படுத்த வேண்டும். அத்யாயம் 6, சுலோகம் 26.

யதோ யதோ நிஶ்சரதி மநஶ்சஞ்சல மஸ்திரம்
தத ஸ்ததோ நியம்யைத தாத்மந்யேவ வஶம்நயேத்.

ஆனுல், ஓ அர்ஜுநா! மனது அலேந்து கொண்டிருக்கும் சுபாவமுடையததலால், அதை எவ்வளவு இழுத்துப்

பிடித்த போதிலும் நிலையாய் நிற்கமாட்டா. அது, ஏதாகிலும் ஒருவிஷயத்தில் ஓடிக்கொண்டே யிருக்கும். அஃதெப்படியென்றால், மனம், ஏதாகிலும் நல்ல வஸ்துக்களைப் பார்த்தபோது, அது வேண்டுமென்று ஆசை கொள்ளும்; ஏதாகிலும் சங்கீதம் பாடக் கேட்கும்போது அதை இன்னும் சற்றுக் கேட்கவேண்டு மென்றே இச்சையை உண்டாக்கும்; ருசிகரமாகிய பதார்த்தத்தைக் கண்டால் அதை புசிக்கவேண்டுமென்றே நினைக்கும்; சுகந்த வாசனை வந்தபோது அதை ஆக்கிராணிக்க (இழுக்க) வேண்டுமென்றே எண்ணும்; வெய்யிற்காலங்களில் குளிர்ந்த காற்று வேண்டுமென்று நினைக்கும்; குளிர்க்காலங்களில் உஷ்ணத்தை விரும்பும். இப்படியே எப்பொழுதும் எதிலேயோ ஒன்றில் மனதிற்கு ஆசை உண்டாகின்றதோ அதை அப்போதைக்கப்போது அந்த விஷயங்களிலிருந்து மனதைத் திருப்பிக்கொண்டே வந்தால், சிலது காலத்திலேயே அந்த மனம் விஷயங்களிலிருந்து நீங்கி ஆசை ஒழிந்து தன் சுவாதீனமாகும். அதாவது, மனம் சாந்தியடையும் என்பதாம். அன்றியும், அத்தியாயம் 6, சுலோகம் 27.

ப்ரஶாந்தமநஸம் ஹ்யேநம் யோகிநம் ஸுகமுத்தமம்
உபைதி ஶாந்தரஜஸம் ப்ரஹ்மபூத மகல்மஷம்.

அப்படி மனது எப்பொழுது சாந்தியை அடைகின்றதோ அப்பொழுது யோகியானவன், ரஜோ குணத்தினால் உண்டாகும் காமக் குரோதாதிகள் இல்லாதவனாய் புண்ணிய பாபங்களை உதறிக்கொண்டு ஜீவன் முக்தனாவான். இந்த காமக் குரோதங்களே, ஸமஸ்த பாபங்களுக்கு ஏதுபூதமா யிருக்கின்றன. இவைகள் எப்பொழுது புருஷனை விட்டு ஒழிகின்றனவோ அப்பொழுதே எந்தக் கெட்ட குணங்களும் இல்லாதவனாகின்றான். அதாவது, பிரம்ம சொரூபனாகின்றான்: என்றால், புண்ய பாபங்கள் எப்

பொழுது ஒழிகின்றனவோ அப்பொழுது எல்லாவற்றிலும் சிரேஷ்டமானதும், சாசுவதமானதுமாகிய் பிரம்மானந்தத்தை யோகி அடைகின்ருன். சங்கல்பத்திஞல் உண்டாகும் மனதைக்குறித்து சுலோகம்.

"ந யாஹி சேதஸ்த்வமிதஸ்ததோபி தேஹேந்த்ரியாத்யைர் ந க்ருஷ்வகர்ம த்வம் யத்ரகுத்ராப்யுபவிஶ்ய நித்யம் விசாரயஸ்வ ஸ்வநிதாநமந்தஃ".

ஓ சஞ்சலமுடைய மனமே! உன்னிஷ்டம்போல் இங்குமங்கும் குரங்கைப்போல் ஓடாதே; கண்கள் மூக்கு வாய் செவிகள் தேஹசர்மம் என்னும் ஐந்து இந்திரியங்களுடன் கூடி, மோக்ஷத்திற்கு விரோதமாயிருக்கும் விஷயானந்த கர்மங்களைச் செய்யாதே; அப்படிப்பட்ட விஷய ஆனந்தக் கர்மங்களை விட்டு, நீ முதலாகிய சமஸ்த பிரபஞ்சத்திற்கும் ஆதிமுதலாயிருக்கும் ஆத்மாவை விசாரணை செய். அதாவது, அவித்தை (அஞ்ஞானம்) நசித்து சுயசொரூபம் உண்டானபோது, மித்தையாகிய ஜகத் உண்டென்னும் பிரமை நீங்கும். ஆதலால், யோகாப்பியாசம் செய்யும்போது, எவ்வளவு கஷ்டங்களிருந்தபோதிலும் அந்த கஷ்டங்களுக்கெல்லாம் துக்கப்படாத மனதையுடையவனுயிருந்து அப்படிப்பட்ட தியானயோக சித்தியை அடையவேண்டுமென்று பிடிவாதத்துடனிருந்து அடைவேண்டும்.

யோகாப்பியாசம் செய்து மனதை நிறுத்தவேண்டுமென்னும் பிடிவாதம் இருக்கும்பக்ஷத்தில் அந்தப் பிடிவாதத்திஞல் யோகாப்பியாசத்தில், தன் தேகத்திற்கு எவ்வளவு நோய்கள் உண்டானபோதிலும் அந்த நோய்களுக்கெல்லாம் பொறுத்துக்கொண்டு, எவன் யோகாப்பியாசம் செய்கின்ருனே, அப்படிப்பட்டவன் தியானயோக(மனதை நிறுத்த) சித்தியை அடைவான். இதற்குப் பின்வரும் விஷ

யங்களை ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத் கீதையில் விரிவாய்க் காணலாம்.

ஐயா! நீங்கள் எப்போது, மூவாயிரம் முதல் ஐயாயிரம் எண்ணும் வரையில் சுவாசம் (மூச்சு) நிறுத்தப் பழகுகின்றீர்களோ அப்பொழுது, தேள் கொட்டி விட்டால் எவ்வாறு கடுத்துக்கொண்டு ஏறுகின்றதோ அதுபோல், சுவாசம் (மூச்சு) நிறுத்தி மூவாயிரம் முதல் ஐயாயிரம் எண்ணும் வரையில், மயிர்கால் மயிர்காலுக்கு தேள் கொட்டி விட்டால் எப்படி ஏறுகின்றதோ அதுபோல் சரீரமெல்லாம் சுவாசம் தேள் கொட்டியதுபோல் ஏறிக் கொண்டே இருக்கும். சுவாசம் விட்டுவிட்டால் ஏறுதல் நின்றுவிடும். இது அடியேனுக்கு பிரத்தியக்ஷ திருஷ்டாந்தம். இந்நோயினால் மிகவும் கஷ்டப்பட்டு பிறகு சுகமடைந்த சரீரம் இது. இப்படிப்பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் பொறுத்துக் கொண்டிருந்தால் யோக சித்தியைப் பெறலாம். யாம் யோக சித்தியினால் மனதை ஜயித்தபடியால் உங்கள் எல்லோருடைய மனதை, பிரம்ம சூத்திர மென்னும் யஜ்ஞோப வீதத்தினால் (நூலால்) 'ஸோஹம்' என்னும் இரண்டு மந்திரங்களைச் சேர்த்துக் கட்டி ஒரேசமாதி நிலையை அடைய, இந்நூலில் ராஜயோகத்தில் சொல்லி விட்டோம்; யாம் மூன்றும்படியாகிய யோக மார்க்கத்தில் இருப்பதனால் அதற்குக் கீழ்ப்படி, உபநிஷத்துகளில் சொல்லிய ராஜயோகத்தை, உங்களுக்கு உபதேசம் செய்ய மிகவும் சுலபமாய்த் தெரியவரும். இதில் சொல்லிய ராஜயோகத்தினால் அனேகர்கள், தம் மனதை மூச்சு என்னும் நூலால் கட்டி வெளியில் ஓடவிடாமல் நிறுத்தித் தன்னைத்தான் மறந்திருக்கின்றார்கள். பிராணாயாமம் செய்வது மிகவும் கஷ்டமானவழி ஆத

லால் எல்லோரும், இதில் சொல்லியிருக்கும் ராஜயோகத்தையே ஜபம் செய்து வரவேண்டும்.

இயம நியமமே யெண்ணிலா வாதன
நயமுறு பிராணுயாம நன் பிரத்தியாகாரஞ்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
பயமுறு மட்டாங்க மாவது மாமே. [திருமந்திரம்.]

மேற்சொல்லிய யோகம், இயமம், நியமம், ஆசனம்' பிராணுயாமம், பிரத்யாகாரம், தாரணை, தியான, சமாதி என்று எட்டு அங்கமுடையது. இவைகளே யோகத்திற் குறிய அஷ்ட (எட்டு) வித படிகளென்று சொல்லப்படும்.

எய்து மெட்டு யோகத்தி னியம
மென்ப தொருவர்க்கு மிடர் செய்யாமை
பொய் களவு பிறர்பொருளை நயத்த
லொழிந் திந்திரியப் புலத்தை வெல்லல்.

கொல்லான் பொய்கூறுன் களவிலா னெண்குண
னல்லா னடக்கமுடையா னடுச் செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காம
மில்லா னியமத் திடையி னின்றுனே.

இயமம்

போதுகந் தேறும் புரிசடை யானடி
யாதுகந் தாரம ராபதிக் கேசெல்வ
ரேதுகந் தானிவ னென்றருள் செய்திடு
மாதுகந் தாடு மால்விடை யோனே, [திருமந்திரம்.]

இயமம்:—அஹிம்சை; அதாவது ஜீவ கோடிகளை வார்த்தைகளினுலாவது, அல்லது கெட்ட எண்ணங்களினுலாவது, இம்சைசெய்து மனதை நோகும்படிச் செய்யாமலிருப்பது. "அஹிம்ஸா பரமோ தர்மஃ" என்று வியாசசூத்திரமாகிய பிரம்ம சூத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது

எல்லா தாமங்களிலும் "அஹிம்ஸையே" பிரதானமான தர்மம். இம்சை என்றால், ஒரு ஜீவனை வதைப்பது மாத்திரமேயல்ல; தம்மைவிட தாழ்ந்த புருஷனை மனம் நோகப் பேசுதலும் இம்சையேயாகும். சத்திய நிலையிலிருப்பது, பொய் சொல்லாமலிருப்பது, திருடாமலிருப்பது, இதரர்களின் பொருளை மோசம் செய்யாமலிருப்பது எதிலும் இச்சையில்லாமலிருப்பது, தான் செய்த விஷயங்களுக்குப் பிரதி பிரயோஜனம் விரும்பாமலிருப்பது, அன்னிய ஸ்திரீகளை மோகிக்காமலிருப்பது, பூததயை, க்ஷமம் (பொறுமை) சொல்ப ஆஹாரம் சொல்ப நித்திரையுடன் இருப்பது இந்திரியங்களை வசப்படுத்துவது, இவையெல்லாம் இயமம். இந்த இயமமானது மனதை நிர்மலமாகச் செய்யும். இயமம் முடித்தவர்கள் தேவலோக பதவியையும் ஹரன் ஹரி திருவருளையும் அடைவார்கள்.

துய்ய நியமங் கோப மொழிந்து
பெறுவன நயந்து துநீர் கன்மஞ்
செய்து குரு மொழி வழிப்பட்
டருச்சித் தாசாரத்திற் சிறப்ப தாமே.

தூய்மை யரு ளூண்சுருக்கம் பொறை செம்மை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமங் களவு கொலை யெனக் காண்பவை
நேமி யீ ரைந்து நியமத்த னாமே.

நியமம்.

பற்றிப் பதத்தன்பு வைத்துப் பரன்புகழ்
கற்றிருந் தாங்கே கருது மவர்கட்கு
முற்றெழுந் தாங்கே முனிவ ரெதிர்வரத்
தெற்றுஞ் சிவபதஞ் சேர்தலு மாமே. [திருமந்திரம்.]

நியமம்:—சௌசம், தேகசுத்தி, ஆசாரம், கெடுதி செய்தவர்களுக்குக் கெடுதி செய்யாமலிருப்பது, கோப

மில்லாமலிருப்பது, கிடைத்தவரையில் திருப்தியடைந்து தேகாபிமானம் விட்டுவிடுவது, எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பது, குருவாக்கைப்போல, சிருஷ்டி செய்யப்பட்ட ஏக பிரம்மத்தை விக்கிரக ரூபமாய்ச் செய்து, அதை அலங்கரித்து ஒரே தியான ததிலிருப்பது, வேதாந்த சிரவணம் (கேட்பது) ஜபம் செய்வது இவையெல்லாம் 'நியமம்.' இதை முடித்தவர்கள், ஹரன்ஹரி திருப்புகழை யுணர்ந்த முனிவர்க ளெதிர்கொண்டு பரலோகத்தை யடைவார்கள்.

ஆ ஸ ன ம்.

துரிசில் வலக்காலைத் தோன்றவே மேல்வைத்து
வரிய முழந்தாளி லங்கைகளை நீட்டி
யுருகியிடு முடற் செவ்வே யிருத்திப்
பரிசு பெறுமது பத்திராசன மாமே.

பாத முழந்தாளிற் பாணிகளை நீட்டி
யாதரவோடும் வா யங்காந் தழகுறக்
கோதி னயனங் கொடிமூக் கிலே யுறச்
சீர்திகழ் சிங்காதன மெனச் செப்புமே.

வருந்தித் தவஞ்செய்து வானவர் கோவாய்த்
திருந்தம ராபதிச் செல்வ னிவனெனத்
தருந்தண் முழவங் குழலு மியம்ப
விருந்தின்ப மெய்துவ ரீச னருளே. [திருமந்திரம்.]

ஆஸனம்:—சுவஸ்திகம், கோமுகம், வீரம், சிங்கம், பதுமம், மயூரம், சித்து, பத்மம், சுகாசனம் என்று ஒன்பதுவித ஆசனங்களுண்டு. இந்த ஆசனம் முடித்தவர்கள் தவங்களெல்லாம் முடிந்தவர்களாய்த் தேவர்கட்கு அதிபராய் இந்திரனென்று சொல்லும்படி, மத்தளம் வேய்ங்

குழல் முதலிய வாத்தியங்கள் கோஷிக்க, சங்கநிதி பதும நிதி சிந்தாமணி முதலிய போகங்க ளனுபவிப்பார்கள்.

பிராணுயாமம்.

ஐவர்க்கு நாயக னவ்வூர்த் தலைமக
னுய்யக் கொண்டேறுங் குதிரைமற் றென்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக்கொடுக்குங் கொடாது போய்ப்
பொய்யரைத் தள்ளி விழுத்திடுந் தானே.

செம்பொற் சிவகதி சென்றெய்துங் காலத்துக்
கும்பத் தமரர் குழாம்வந் தெதிர்கொள்ள
வெம்பொற் றலைவ னிவனு மெனச்சொல்ல
வின்பக் கலவி யிருக்கலு மாமே. [திருமந்திரம்.]

பிராணுயாமம்:—மூக்குத் துவாரங்களின் வழியாய் 'ஓம்' என்னும் பிரணவத்தை சுவாசத்துடன் அஜபாவாய் (மனதினுலேயே) சேர்த்து உச்சரித்து குடல் நிரம்ப பூர்த்தியாய் உள்ளுக்கிழுத்து விழுங்கி, ஐயாயிரம் எண்ணும் வரையில் மேற்படி சுவாசத்தை வெளிவிடாமல் நிறுத்தி, பிறகு கொஞ்சம் சுவாசத்தை அதாவது, நாலங்குலம் சுவாசம் வெளியில் ஓடும்படி விட்டு, மறுபடியும் அந்த நாலங்குல சுவாசத்தையே என்றுல், எவ்வளவு சுவாசம் வெளியில் விடுகின்றீர்களோ அவ்வளவு சுவாசத்தை மாத்திரம் உள்ளுக்கிழுத்து, சுவாசத்தின் வேகம் அடங்கும் வரையில் நாசிகளை மாற்றி மாற்றி நிதானமாய் விட்டு அதை உசுவாச நிசுவாசங்களாய் விட்டுக்கொண்டு, மற்ற சுவாசத்தை யெல்லாம் வயிற்றிலேயே நிறுத்தி, சிந்முத்திரையை விரல்களால் பிடித்து நிஷ்டையி லிருக்கவேண்டும். அப்போது குடலில் தங்கியிருக்கும் வாயுவானது, வெளியில் ஓடிக்கொண்டிருக்கும் மனுவாயுவை வெளியில் ஓடவிடாமல் நிறுத்தும். பிராணுயாமம் முடித்தவர்கள், கும்

Floating in water in Yoga practice with Padmasana posture

after a deep inhalation of air into the lungs.

குடலில் ஸ்வாஸத்தை நிறுத்தி ஜலததின்மீது பத்மாஸனத்துடன் ஸயநித்து
யோக நிஷ்டையிலிருப்பது.

గర్భమునందు శ్వాసమును స్తంభించి జలముపై పద్మాసనముతో
యోగనిష్ఠయందుండుట.

பம் முதலிய எண்வகை மங்களங்களால் தேவர் கூட்டம் தாங்கி எதிர்கொண்டு எங்கள் தலைவர்க ளிவர்களென்று சொல்லும்படி, ஹரன்ஹரி இவர்களின் பதவியைப் அடைந்து இன்பம் அனுபவிப்பார்கள்.

குடல் நிறைய சுவாசத்தை நிறுத்தி ஜலத்தின்மீது சயனித்து 12-அங்குலம் சுவாசத்தை வெளியில் ஓடவிட்டு அந்த 12-அங்குல சுவாசத்தையே மறுபடியும் உள்ளுக் கிழுத்துக்கொண்டு அதை உசுவாச நிசுவாசங்களாய் விட் டுக்கொண்டு ஜலத்தின்மீது பதுமாசனத்துடன் சயனித்த படியே உபங்யாஸமும் செய்யலாம். ஜலத்தின்மீது பது மாசனத்துடன் சயனித்திருப்பதை எதிரிலிருக்கும் படத் தில் ☞ காட்டப்பட்டிருக்கின்றது. (இதன் விவரங்களை யெல்லாம் ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம் 4, சு-29-29½, பார்க்க.

பிரத்தியாகாரம்.

நாபிக்குக் கீழே பன்னிரண் டங்குலந்
தாபிக்கு மந்திரந் தன்னை யறிகிலா
தாபிக்கு மந்திரந் தன்னை யறிந்தபின்
கூவிக்கொண் டீசன் குடி புகுந்தானே.

சேறுருகாலந் திசைநின்றதேவர்க
ளாரிவனென்ன வரனுமவனென்ன
வேருறுதேவர்களெல்லா மெதிர்கொள்ளக்
காருறுகண்டனை மெய்கண்டவாறே.

பிரத்தியாகாரம்:—பதிநாயிரம் எண்ணும் வரையில் சுவாசத்தை நிறுத்தி முடிந்தவுடன், நாலங்குல சுவாசத்தை வெளியில் விட்டு அந்த நாலங்குல சுவாசத்தையே உசு வாச நிசுவாசங்களாய் விட்டுக்கொண்டு நிஷ்டையிலிருக்க வேண்டும்; அச்சமயம் முதல், 'ஓம்' என்னும் சப்தம்

காதில் கேட்கும்; அந்த ஓங்காரத்தில் மனதை நாட்டி கேட்கும்போது, அதில் உண்டாகும் சப்தங்களை யெல்லாம் வெவ்வேருய்ப் பிரித்துப் பார்த்தால் அங்கு பத்துவித நாதசப்தங்களைக் கேட்கலாம். இந்த பத்துவித நாத சப்தங்களிலும், இரவு பன்னிரெண்டு மணிக்கு, கண்டா நாதம் கேட்கும்; இந்த பத்து நாதங்களிலும் மேற்சொல்லிய கண்டாளுதமே, கேட்கக் கேட்க மிகவும் ஆனந்தமாயிருக்கும்; இந்த பத்து நாதங்களிலும் எந்த நாதம் சிரேஷ்டமானதென்று ஆழ்ந்து பார்க்கும்போது, எல்லாவற்றிற்கும் சிரேஷ்டமாயிருந்தது கண்டாநாதமேயென்று கண்டுபிடித்து, அதன் அனுபவத்தை இங்கு உங்களுக்கு புஸ்தகத்தில் சொன்னேம்; இவைகளை யெல்லாம் பெரியோர்கள் அனுபவித்து, தம் அனுபவத்தைச் சொல்லாமல் மறைத்துப் பாடல்களாய்ச் சொல்லிச் சென்ருர்கள்; இங்கு யாம் அவ்வாறு மறைபொருளாய்ச் சொல்லாமல், எவ்வாறு யோகாப்பியாசம் செய்வதும், அதனுல் என்னென்ன பலன்களை அடைவதென்பதும் உங்களுக்குப் புஸ்தகமூலமாய்த் தெரிவித்தோம்; ஆனல் இந்த நாதசப்தங்களே சிரேஷ்டமானதென்று எண்ணவேண்டாம்; இந்த நாத சப்தங்களையும் கடந்து சுத்த சூன்யமாயிருக்கும் ஆகாயவடிவத்தில், நாத சப்தங்களைக் கேட்டுக்கொண்டிருந்த மனம் போய் லயித்து, பிரம்மானந்தத்தில் சொக்கியிருப்பதே சிரேஷ்டமானது; இந்த நாத சப்தங்களுக்குத் திருஷ்டாந்தம், நிஷ்டானுபூதி இங்கு சொல்லுகின்றேம்;

துன்னிய வந்த மூடநீங் கிடமெய்த்
தூயசற் குருவினைத் தொழுதே
மன்னுகா ரணமா மனுவினைப் பெற்றே
மனம்விட யத்துரு திருந்தே

யந்நிலைப் பதிணு யிரந்தரஞ் செபிக்க
வகன்றிடு மகன்றிடா துறுமேற்
பின்னுமச் செபத்தை பொருபதாண் டளவும்
பெட்புடன் செபிக்கநீங் கிடுமே.

இத்திற மான யோகசா தனையி
லிருந்துசா திப்பவர் தமக்குச்
சுத்தமா நாதத் தொனிகளும் பலவாத்
தோன்றிடு மணிகடன் மேக
மத்தளம் பேரி யாழ்குழலி சிலம்பு
வளையளி தாளமென் றுமையாட்
சத்தனு மொழிந்தா னன்றியு முரவோ
ராய்ந்தெடுத் துரைத்தன ரன்றே.

ஒத்தவந் நாதந் தோன்றிய பொழுதே
யொலியிணு லுயர்ந்தெழு படம்போற்
றத்துவஞ் சகல கேவல நீங்கித்
தனையறி பவர்க்கிலை மூட
மித்திற மலாது சகலத்து மெய்தா
திரும்பர கேவலத் தடையா
மத்தியத் தந்த மூடமே யுற்றால்
வகையதற் குரைக்குது மன்றே.

மேற்சொல்லிய நாத சப்தங்களைக் கேட்டுக்கொண் டிருக்கும் சமயத்தில், பஞ்சபூதங்களும் மனமும் இறந்து தன்னைத்தான் மறந்துவிடுவார்கள்; ஆதலால், இப் பிராணு யாமத்திலும் மற்றவைகளிலும் சொல்லியிருப்பதை குரு வாக்காய் நம்பி செய்துவரப்பட்டவர்களுக்கு மூடம் நீங்கி யோக ஞான சித்திகளைப் பெறுவார்கள்.

தா ர ணை.

கோணு மணத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணுத் தண்டூடே வெளியுறத்தா னேக்கிக்
காணுக் கண்களே செவியென் றிருப்பார்க்கு
வாணு ளடைக்கும் வழி யதுவாமே.

கடைவாசலைக் கட்டிக் காலை யெழுப்பி
யிடைவாச னேக்கி யினிது ளிருத்தி
மடைவாயிற் கொக்குப்போல் வந்தித் திருப்பா
ருடையாம லூழி யிருக்கலு மாமே.

நல்வழி நாடி நமன்வழிமாற்றிடுஞ்
சொல்வழியாளர் சுருங்காப் பெருங்கொடை
யில் வழியானரிமையவ ரெண்டிசைப்
பல் வழியெய்தினும் பார்வழியாகுமே. [திருமந்திரம்.]

தாரணை:—பத்மாசனத்தில் உட்கார்ந்து, கண்களை மூடி மூலாதாரமாகிய குதஸ்தானத்தை, இரண்டு பிரஷ்டத்தால் இறுக்கிக் கெட்டியாய்ப் பிடித்து, இடது நாசியை மூடி வலது நாசியில் சுவாசமென்னும் காலை உள்ளுக் கிழுத்து, வீணுதண்டு என்று சொல்லும் முதுகெலும்பி லுள்ள வெள்ளை நரம்பு வழியாய் மேலே யேற்ற, பதினையாயிரம் எண்ணும் வரையில் சுவாசத்தை நிறுத்தவேண்டும். சுவாசம் நிறுத்தி பதினையாயிரம் எண்ணி முடிந்தவுடன் மறுபடியும் இடது நாசியை மூடி, தவடைப் பற்களைக் கெட்டியாய் இறுக்கிப் பிடித்து, சுவாசத்தை நாபிவரையில் வலது நாசியில் ஓம் என்று விட்டு, மறுபடியும் சுவாசம் பூர்த்தியாய் ஓம் என்று உள்ளுக்கிழுத்து விழுங்கி, 1 என்னும் இலக்கம் மனதினுல் நினைத்து புருவமத்தியில் வைத்து, அவ்விலக்கத்தை மனக்கண்ணுல் பார்த்துக் கொண்டே மறுபடியும், பதினையாயிரம் எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தி, மறுபடியும் இடது நாசியை மூடி

தவடைப் பற்களை கெட்டியாய் இறுக்கிப் பிடித்து, சுவா சத்தை நாபிவரையில் வலது நாசியில் ஓம் என்று விட்டு, மறுபடியும் சுவாசம் பூர்த்தியாய் ஓம் என்று உள்ளுக் கிழுத்து விழுங்கி, புருவமத்தியில் முன் வைத்த 1 இலக் கத்தை மனதினுலேயே எடுத்து விட்டு அவ்விடத்தில் 2 என்னும் இலக்கம் மனதினுல் நினைத்து புருவமத்தியில் வைத்து, அவ்விலக்கத்தை மனக்கண்ணுல் பார்த்துக் கொண்டே மறுபடியும், பதினையாயிரம் எண்ணும்வரை யில் சுவாசம் நிறுத்தி, மறுபடியும் இடது நாசியை மூடி தவடைப் பற்களை கெட்டியாய் இறுக்கிப் பிடித்து, சுவா சத்தை நாபிவரையில் வலது நாசியில் ஓம் என்றுவிட்டு, மறுபடியும் சுவாசம் பூர்த்தியாய் ஓம் என்று உள்ளுக் கிழுத்து விழுங்கி, புருவமத்தியில் முன்வைத்த 2 என் னும் இலக்கம் மனதினுலேயே எடுத்துவிட்டு அவ்விடத் தில் 3 என்னும் இலக்கம் மனதினுல் நினைத்து புருவமத்தி யில் வைத்து, அவ்விலக்கத்தை மனக்கண்ணுல் பார்த்துக் கொண்டே மறுபடியும், பதினையாயிரம் எண்ணும் வரை யில் சுவாசம் நிறுத்தி, மறுபடியும் இடது நாசியை மூடி தவடைப் பற்களை கெட்டியாய் இறுக்கிப் பிடித்து, சுவா சத்தை நாபிவரையில் வலது நாசியில் ஓம் என்று விட்டு, மறுபடியும் சுவாசம் பூர்த்தியாய் ஓம் என்று உள்ளுக் கிழுத்து விழுங்கி, புருவமத்தியில் முன்வைத்த 3 என் னும் லக்கம் மனதினுலேயே எடுத்துவிட்டு அவ்விடத்தில் 4 என்னும் இலக்கம் மனதினுல் நினைத்து புருவமத்தியில் வைத்து, அவ்விலக்கத்தை மனக்கண்ணுல் பார்த்துக் கொண்டே மறுபடியும் பதினையாயிரம் எண்ணும்வரையில் சுவாசம் நிறுத்தவேண்டும்; இவ்வாறு நான்குமுறை சுவா சம் விட்டு இழுத்து நிறுத்தினுல்; அப்போது எழுபத்தி ஐயாயிரம் எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தினவனுகின்

ருன். இதுபோல் இடது நாசியிலும் இரண்டு நாசியிலும் ஆக மூன்று நாசியிலும் செய்தால், ஒரு பிராணயாமம் செய்து முடித்தவனுகின்ருன்; நாலுமுறை சுவாசம் வெளியில் விட்டு நாலுமுறை உள்ளுக்கிழுத்து 1, 2, 3, 4 லக்கம் புருவமத்தியில் வைப்பதற்குக் காரணம் இதனடியில் சொல்லப்படும்.

சுவாசம் உள்ளுக்கிழுத்து ஒரே முறையாய் எழுபத்தி ஐயாயிரம் எண்ணும் வரையில் நிறுத்த மிகவும் கஷ்டமாயிருக்கும்; பதினையாயிரத்திற்கொருமுறை சுவாசம் வெளியில் விட்டு உள்ளுக்கிழுத்து நிறுத்தினல், மறுபடியும் பதினையாயிரம் எண்ண மிகவும் சுலபமாயிருக்கும். ஆதலால், பதினையாயிரத்திற் கொருமுறை சுவாசம் வெளியில் விட்டு உள்ளுக்கிழுத்து, இவ்வாறு நான்குமுறை செய்ய வேண்டும்.

சுவாசம் எத்தனைமுறை வெளியில் விட்டோமென்று அச்சமயத்தில் ஞாபகமிராது; ஆதலால், பதினையாயிரம் எண்ணி ஒருமுறை சுவாசம் விட்டு உள்ளுக்கிழுத்து புருவமத்தியில் 1 இலக்கம் வைத்தால் ஒருமுறை சுவாசம் விட்டோமென்றும், 2 வைத்தால் இரண்டுமுறை விட்டோமென்றும், 3 மூன்று வைத்தால் மூன்றுமுறை விட்டோமென்றும், 4 நான்கு வைத்தால் நான்குமுறை விட்டோமென்றும் ஞாபகமிருப்பதற்காகவே மேற்படி இலக்கங்கள் புருவமத்தியில் வைத்து அந்த இலக்கத்தை மிகவும் ஜாக்கிரதையாய் மனக்கண்ணுல் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். அந்த இலக்கத்தின்மேல் ஞாபகம் சரியாய் வைக்காமலிருந்தால் அந்த இலக்கம் மறைந்து இத்தனைமுறை சுவாசம் வெளியில் விட்டோமென்று ஞாபகத்திற்கு வராது; இதை நீங்கள் உங்கள் அனுபவத்தில் தெரிந்துகொள்ளலாம்; இவ்வாறு வலது நாசியில் எழு

பத்தி ஐயாயிரம் செய்துமுடித்து கால்மணியோ, அரை மணியோ இளைப்பாறுவதற்காக நிஷ்டையிலிருந்து பிறகு, இடது நாசியிலும், இரண்டு நாசிகளிலும் முன் சொல்லியதுபோல் செய்துமுடித்து நிஷ்டையிலிருந்தால், நாலு தினமோ ஒருவாரமோ அல்லது ஒருமாதமோ தன்னைத் தான் மறந்து சமாதிநிலையில் நின்றுவிடுவான். இவ்வாறு பழகிவந்தால் வருஷக்கணக்காய் சமாதியில் இருப்பான். அந்த சமாதியில் மனம் இறந்துவிடுவதனுல் தான் பிரம்ம சொரூபமாய்விடுவான். இப்படி நின்றுவிடுவதே தியானமென்றும் சமாதியென்றும் சொல்லப்படும். தாரணை முடித்தவர்களின் மனது, காற்றில்லாத இடத்தில் வைக்கப்பட்ட தீபம்போல் அசையாமலிருந்து, யமவாதனை நீங்கி எவ்விடத்தி லிருக்கினும் முக்திநிலையை யடைவார்கள். இதற்குத் திருஷ்டாந்தம் ஸ்ரீ கிருஷ்ணர்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம், 6-சு, 19.

யதா தீபோ நிவாதஸ்தோ நேங்கதே ஸோபமா ஸ்ம்ருதா
யோகிநோ யதசித்தஸ்ய யுஞ்ஜதோ யோக மாத்மநஃ.

அர்ஜுனா! அப்படிப்பட்ட யோகியினுடைய மனது எப்படி யிருக்குமென்றால், யோகத்தை அப்பியசித்துக் கொண்டே வரவர, பதினையாயிரம் எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தப் பழகினவன் மனது காற்றில்லாத இடத்தில் வைக்கப்பட்ட தீபம் எப்படி அசையாமல், தன் சமீபத்திலிருக்கும் வஸ்துக்களை மாத்திரம் பிரகாசிக்கச் செய்கின்றதோ அதுபோல், சுவாதீனமான மனதுடைய யோகி, சகல எண்ணங்களையும் மறந்து சிலாவடிவமாய்ச் சலிக்காமலிருப்பான். அப்பொழுது அவனுடைய இந்திரியங்கள் விஷயங்களில் போகாமல், அசையாத தீபம்போலிருக்கும். அஃதெப்படியென்றால், தீபத்தை அசையும்

படிச் செய்வது வாயுவல்லவா? வாயுவில்லாவிடில் தீபம் அசைவதற்குக் காரண மில்லையல்லவா? அதுபோல் மனதை அசையும்படிச் செய்வது, கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகசர்மம் என்னும் ஐந்து இந்திரியங்களேயாம். சமாதிநிலையில் நின்றபோது மேற்சொல்லிய இந்திரிய விஷயங்களும் மனதும், மேற்படி தீபம்போல் அசையாமலிருக்கும். ஆதலால், யோகியினுடைய மனது, அசையாமல் மேற்படி தீபநிலைக்கு எப்பொழுது வருகின்றதோ அப்பொழுது அந்த மனது சாந்தத்தை அடைந்ததாகும். அதனல் அவன் யோகசித்தியை அடைந்தவ னுகின்றுன். கஷ்டப்பட்டு பதினையாயிரம் எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தப் பழகினவனுடைய மனதானது, எல்லா விஷயங்களிலும் தனக்குத் தானுகவே யோகபலத்தினல் விரக்தியை அடையச்செய்யும். அப்பொழுது சாதாரண மனுஷ்யனுக்கும் தனக்கும் எவ்வளவோ பேத மிருக்கின்றதென்று தன் மனதிற்கே தோன்றி இதரர்களிடம் யாதொன்றும் பேச எண்ணமில்லாத ஸ்திதியில் கொண்டுவந்து, மனதை ஒரே நிலையில் நிறுத்திவிடும். ஆதலால், இதை வாசிக்கப்பட்ட அன்பர்கள் யாவரும் எப்படியாயினும் கஷ்டப்பட்டு நாளாவட்டத்தில் கிரமக் கிரமமாய்ச் சிறுகச்சிறுக சுவாசம், முதலில் ஐம்பது எண்ணும் வரையில் நிறுத்த கஷ்டமாயிருந்தால், இருபத்தைந்து எண்ணும் வரையில் நிறுத்தி, சிலநாள் பழகி, பிறகு ஐம்பது எண்ணும் வரையில் நிறுத்தி சிலநாள் பழகி பிறகு எழுபத்தைந்து எண்ணும் வரையில் நிறுத்தி, இப்படிச் சிலநாள் பழகி, பிறகு நூறு எண்ணும் வரையில் நிறுத்தி, இப்படிச் சிலநாள் பழகி. பிறகு நூற்றிருபத்தைந்து எண்ணும் வரையில் நிறுத்தி, இவ்விதமாய் பதினையாயிரம் எண்ணும் வரையில் சுவாசத்தை நிறுத்த உயர்த்திக்கொண்டே வந்தால் மேற்சொல்

லிய விஷயங்களை எல்லாம் சுவானுபவத்தில் பிரத்யக்ஷமாய்க் காணலாம். இதற்குமுன் விஷயங்கள், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதையில் விரிவாய்க் காணலாம்.

தியானம்.

தூங்கவல் லார்க்குந் துணையேழ் புவனமும்
வாங்க வல்லார்க்கும் வலிசெய்து நின்றிட்டுத்
தேங்க வல்லார்க்குந் திளைக்கு மமுதமும்
தாங்க வல்லார்கட்குந் தன்னிட மாமே.

தியானம்:—யோகி, மேற்சொல்லிய தாரணையில் நின்ற பிறகு, தான் ஆனந்தஜோதி மயமாகின்றான். அதாவது, யோகி, அனேக வருடங்கள் நிர்விகல்ப சமாதியில் நின்று தன்னைத்தான் மறந்து பிரம்மானந்தத்தில் சொக்கி தேனையுண்ட வண்டுபோல், ஆனந்தமய ஜோதியில் சொக்கியிருப்பான்; தேனையும், வண்டை இங்கு, குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணமென்னவென்றால், தேனில் மயக்கமுண்டு; அத்தேனை வண்டுகள் சாப்பிட்டவுடன் தன்னைத் தான் மறந்து சொக்கியிருக்கும். இதுபோல் யோகியும், காற்றை விசேஷமாய்ச் சாப்பிட்டு அதில் நாலங்குல காற்றை மூச்சாய் வெளியில்விட்டு அந்த நாலங்குல காற்றையே மறுபடியும் உள்ளுக்கிழுத்து அதை உசுவாச நிசுவாசங்களாய் விட்டுக்கொண்டு மற்ற காற்றையெல்லாம் கர்ப்பத்தில் நிறுத்தி உட்கார்ந்திருப்பான்; மனது காற்றுருவ மாதலால், அம்மனது மூச்சுடன் அடிக்கடி பிறந்து பிறக்கும். அப்படிப்பட்ட மூச்சின் வேகமும், கொழுப்பும் அடங்கிவிடுவதனுல் மனோ ஒட்டம் நின்றுவிடும்; என்றால், மனம் இறந்துவிடும்; எப்பொழுது மனம் இறந்துவிடுகின்றதோ அப்போதே சமாதியை அடைந்து ஆனந்த

ஜோதி மயமாகின்முன். இந்த ஜோதியை வேதாந்திகள் துரிய பூமியென்றும், யோகிகள் ஆத்ம சொரூபம் என்றும் சொல்லுவார்கள். யோக சமாதியி லுள்ளவர்கள், ஏழுலகத்திலும் சஞ்சரிக்க வல்லவர்களும் காயசித்தியடைந்தவர்களும் தேவாமிருதம் புசிக்க வல்லவர்களும் தம் மிடத்தையும் (மோக்ஷத்தையும்) பேரும் பெறுவார்கள்.

சமாதி.

காரிய மானவுபாதியைத் தான்கடந்
தாரிய காரண மேழுந்தன் பாலுற
வாரிய காரண மாய்த்த வத்திடைத்
தாரியல் தற்பதஞ் சேர்தல் சமாதியே.

சமாதி:—யோகிகள், வாயுவைப் புசித்து, அன்ன ஆஹார மில்லாமல், ஜாக்கிரம் சொப்பனம் கடந்து சுஷுப்தியாவஸ்தையில் இருளடைந்திருக்கும்போது அவ்விருளை அறிவினல் போக்கி, நிர்விகல்ப சமாதியில் நின்று, மதுவை (தேனை) யுண்ட பிரமரம் (வண்டு) போல் ஸ்தம்பித்து இருப்பார்கள். சமாதி முடித்தவர்கள், மனம் புத்தி சித்த அஹங்காரமென்னும் அந்தக்கரணங்களின் உபாதியையும், ஜாக்கிரதை சொப்பனவஸ்தைகளையும் ஒழித்து, தவத்திற் றேர்ந்து பிரம்மமாவார்கள். இதற்கு ஞானசூரியன் பிரமாணம்;

சாக்கிர சொப்பனங்க ளிரண்டையுந்
    தாண்டிப் போனற்
சூக்கமாஞ் சுழுத்தி வந்து
    தொல்லிரு ளாகிமூடும்
ஆக்கமு மழிவு மில்லா
    தறிவின லதுவும்போனற்
போக்கொடு வரவு மில்லாப்
    பூரணப்பொருள் வந்தெய்தும்.

இந்த சமாதிநிலைமையைக் குறித்து கீதை, அ-8.

சு-14. அநந்யசேதாஸ் ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யஸ:
தஸ்யாஹம ஸுலப: பார்த்த! நித்யயுக்தஸ்ய யோகிந:.

"இதர விஷயங்களில் போகவிடாத மனதையுடைய எந்த யோகி, என்னை எப்பொழுதும் தியானம் செய்து கொண்டிருக்கின்றனோ, அப்படிப்பட்ட ஸ்திரமான சமாதியையுடைய தியானுப்பியாசிக்கு நான் பிரயாசையில்லாமல் அடையத்தக்கவனு யிருக்கின்றேன்" என்று சொல்லுகின்றது.

அதாவது, எந்த இதர விஷயங்களிலும் மனதை போகவிடாமல் பரமாத்ம சொரூபத்திலேயே ஐக்கியம் செய்தவனே யோகி: மனம் புத்தி சித்தம் அஹங்காரமென்னும் அந்தக்கரணங்கள் நசித்து, தன்னை ஆனந்தஜோதி மூடிக்கொண்டு ஆத்ம சொரூபியா யிருப்பதே, சமாதி நிஷ்டை யென்று சொல்லப்படும்.

பிணத்தையும் சமாதி யென்று சொல்லலாமோ வெனில், கூடாது. பிணத்திற்கு மேற்சொல்லிய அந்தக் கரணங்களும் ஆத்மாவும் போய்விடுவதனுல், அந்தப் பிணத்தை சமாதியென்று சொல்லலாகாது. சமாதிநிஷ்டையி லிருக்கப்பட்டவனுக்கு, அந்தக் கரணங்கள் லயித்துத் தான் ஆத்ம சொரூபனு யிருப்பதே சமாதிநிஷ்டை யென்று சொல்லப்படும். இதற்குத் திருஷ்டாந்தம், ஸ்ரீ கிருஷ்ணர்ஜுந சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத் கீதை அத்தியாயம் 6, சு. 18,

யதா விநியதம் சித்த மாத்மந்யேவா வதிஷ்டதே
நிஸ்ப்ருஹ ஸ்ஸர்வகாமேப்யோ யுக்த இத்யுச்யதே ததா.

கிருஷ்ணன்:—ஆதலால், ஓ அர்ஜுநா! நான் சொல்லியதுபோல் மனதை நிருத்தி யோகத்தை அப்யசித்துக்

கொண்டே வந்தால், சில காலங்களுக்கெல்லாம் அந்த யோகியினுடைய மனது, தனக்குத் தானாய், பரமாத்ம சொரூபத்தில் (கர்பூரத்தை எரித்தபோது அது ஒன்று மில்லாமல் எரிந்து ஜோதியில் கலந்துவிடுவதுபோல்) கலந்துவிடும். அப்படிப்பட்ட மஹா யோகியானவன் எத்தொழிலைச் செய்தாலும், அவனுடைய இந்திரியங்கள் விஷயங்களில் ஓடிக்கொண்டிருந்தாலும், மனது மாத்திரம் எந்த விஷயங்களிலும் அகப்படாமல் எப்பொழுதும் ஆத்ம சொரூபத்திலேயே லயித்திருக்கும். அவன் மனது எப்பொழுது அப்படிப்பட்ட ஸ்திதிக்கு வருகின்றதோ, அப்பொழுது அவன் யோகசித்தியை அடைந்தவனாகின்றான். என்றால், யோகாப்பியாசம் செய்யப்பட்டவனுடைய மனது, பிரம்ம சொரூபத்தில் ஒன்றாய்ச் சேர்ந்து நிச்சலமாய் இருக்கவேண்டும். அப்படி இருப்பவன், சமாதி நிஷ்டனென்றே சொல்லப்படுவான்.

அர்ஜுநன்:—அவ்வாறு எவ்வளவுகாலம் அப்யசித்தால் யோகசித்தியை அடைவான்?

கிருஷ்ணன்:—பிரதிதினம் நியமம் தவறாமல் காலை மாலைகளில் அப்யசித்து வந்தால் நிர்மல நிஸ்சல சித்த விருத்தியுடைய புருஷர்களுக்கு ஷட் (ஆறு) மாதங்களிலும், மந்தபுத்தியுடையவர்களுக்கு வருஷத்திலும், கேவல மூடாத்மாக்களுக்கு பன்னிரெண்டு வருஷங்களிலும் சித்திக்கும்.

அர்ஜுநன்;—ஐயா! கிருஷ்ணமூர்த்தியே! யோகாப்பியாசம் செய்துகொண்டேவர அவன் மனது பரமாத்ம சொரூபத்தில் கலந்துவிடுமென்று சொன்னீரல்லவா? அப்பொழுது அவன் மனது எவ்விதமா யிருக்கும்? இதற்கு முன் விஷயங்களை ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதையில் விரிவாய்க் காணலாம். இந்த

சமாதி நிஷ்டையே தியானமென்று, கீதையில் பலயிடங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இச்சமாதி நிலையில் இருக்கும்பொழுது நாபிமுதல் உச்சிவரையில் யோகாக்கினி சுவாலை உண்டாகும். அந்த சுவாலையினால் பிரம்மரந்திரத்திலிருந்து அமிர்தமானது கரைந்து கண்டத்தின் மூலரந்திரவழியாய்ச் சொட்டுச் சொட்டென்று விழுந்து கொண்டிருக்கும்; இதற்கு சுருதிப் பிரமாணம்:—

"ஷஷ்டம் தாலுசக்ரம் தத்ர அரும்ததாரா ப்ரவாஹ
கண்டிகா மூலரந்த்ர ராஜதந்தி ஸந்திநி விவரத்வாரம்
தத்ர ஸூந்யம் த்யாயேத் சித்தலயோ பவதி."

அந்த சுவாலை, இந்நூல் முதலில் கிரந்தகர்தா படத்திற்குமுன் இருக்கும் கணபதி படத்திற்கு நான்காம் விக்கிரகத்தில் காட்டப்பட்டிருக்கின்றது. அந்த சுவாலை, முன் ஜன்மங்களில் செய்துவந்த சஞ்சிதமென்னும் கர்மங்களையெல்லாம் பஸ்மம் செய்விக்கும்.

இப்படிப்பட்ட பிரம்ம நிஷ்டாபரர்களாகிய ஞானிகளுக்கு மனம் தோன்றி சகல காரியங்களைச் செய்து கொண்டிருந்தபோதிலும்,

சுரு || "ப்ரபஞ்சஸ்ய மநஃகல்பிதத்வாத் ததோ பேதாபாவாத்
கதாசித் பஹிர்கதேபி மித்யாத்வபாவநாத்
ஸக்ருத்விபாத ஸதாநந்தா நுபவைக கோசரோ
ப்ரஹ்மவித் ததேவ பவதி."

[மண்டல ப்ராஹ்மணோபநிஷத்.]

பரபுருஷ கவனமுடைய ஸ்திரீ, தன் கணவனோடு சம்போகம் செய்துகொண்டிருந்தாலும், அவளது மனம் மாத்திரம் பரபுருஷன்மீது நிறுத்தி அவன்மீதே ஞாபகமாயிருப்பதுபோல், பிரம்மநிஷ்டையில் மனம் லயித்து பிரமானந்தத்தை அடைந்திருக்கும் ஞானிகள், நிஷ்டை

கலந்து மனம் உதித்து பிரபஞ்சத்திலுள்ள சகல காரியங்களையும் செய்துகொண்டிருந்தபோதிலும், இந்த ஜகத்து மனோகல்பிதமென்று திடநிச்சயமுண்டாய், தாமே பிரம்மமென்று ததேகத் தியானமாயிருப்பார்களாதலால், அவர்களுக்கு ஜகத்து தோன்றினும் தோஷமில்லை. அதாவது, அக்கினியினால் தக்தமான (வெந்த) வேஷ்டிகள் மடிப்புகளுடன் இருந்தபோதிலும், அவைகளை எடுத்துக் கட்டிக் கொள்ள எப்படி முடியாதோ அதுபோல், ஞானிகளின் மனம் ஞானக்கினியினால் பஸ்மமாய் விடுவதனால், கர்த்திருத்துவ சூந்யமாய், அதாவது அவர்கள் செய்யும் தொழிலில் மனமில்லாமல் செய்வார்கள். அஹங்காராதி விஷயங்களினுடைய சேஷ்டைகள், இப்படிப்பட்ட பிரம்ம வேத்தர்களைப் பற்றமாட்டா. இதற்கு திருஷ்டாந்தம் என்னவென்றால், தாமரையிலையில் ஜலம் ஒட்டாமலிருப்பது போல், இந்த தேஹமென்னும் தாமரையிலையில் விஷயங்களென்னும் ஜலம் எப்பொழுதும் ஒட்டமாட்டா. இப்படிப்பட்ட பிரம்ம வேத்தர்களை சில மனிதர்கள் தெரிந்து கொள்ளாமல், நம்மைப்போல் சம்சாரியாய் சமஸ்த வியவகாரங்களையும் செய்கின்றான் ஆதலால், இவனை ஹம்ஸ சொரூபனென்று எப்படிச் சொல்லலாமென்று தூஷிக்கப் பட்டவர்களுக்கு, அந்த மஹா யோகியினுடைய பாப கர்மங்கள், அப்போதே அவர்களைச் சேருகின்றது. இதற்குத் திருவள்ளுவர் குறள், கைவல்யம் பிரமாணம்;

எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத் தொழுகு வார்.

ஒருவன் தீயினாற் சூடுபட்டானாயினும், அச்சூட்டை ஆற்றிக்கொள்ளுதல்கூடும். பெரியோரைப் பிழைத்தவர்கள் எவ்வகையாலும், அவர்களின் சூட்டை ஆற்றிக்

கொள்ளமாட்டார்கள்: என்றால், பெரியோர்களை, தூஷித்தவர்கள் ஈடேறமாட்டார்கள்.

பொறுமையாற் பிராரத்தத்தைப் புசிக்குநாட் செய்தகன்மம்
மறுமையிற் ருெடர்ந்திடாமல் மாண்டுபோம் வழியேதென்னின்
சிறியவரிகழ்ந்து ஞானி செய்த பாவத்தைக் கொள்வர்
அறிபவரறிந்து பூசித் தறமெலாம் பறித்துண் பாரே.

மூடர்கள், பொறுமையா யிருக்கும் ஞானி அல்லது யோகிகளை தூஷிப்பதனல், முன் ஜன்மங்களுக்கு விதையாயிருக்கும் அவர்களின் சஞ்சிதமென்னும் பாபகர்மங்களின் மூட்டையைப் பங்கிட்டுக்கொள்ளுகின்ருர்கள்: அப்படிப்பட்டவர்களை, சிவ சொரூபமென்றறிந்து அவர்களை ஆதரணைசெய்து வரும் புருஷர்கள், அம் மஹான் களினுடைய புண்ணிய கர்மங்களைப் பங்கிட்டுக்கொள்ளுகின்ருர்கள்: இப் புண்ணிய பாப கர்மங்கள் அவர்களை விட்டு நீங்கிய உடனே மோக்ஷமென்னும் பெரிய வீட்டை அடைவார்கள்.

ஆதலால், இப்படிப்பட்ட பிரம்மாத்மா அநுபவமுடைய இந்த அத்யாத்ம வித்தையைத்தெரிந்து கொள்ளாமல் சரீரம் 'நான்' என்னும் மாயையில் வீழ்ந்து, பந்தத்தில் அகப்பட்டு இருக்கப்பட்டவர்களுக்கு இந்த ஜீவன் முக்தி அனுபவம் எவ்விதமாய் உண்டாகும்.

ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 4, சுலோகம் 28-ல், அர்ஜுனன் கேட்கின்ருன்:

அர்ஜுனன்:—ஓ சுவாமி! இப்பொழுது நீர் சொல்லிய யக்கியத்தில் யோக யக்ஞமும் அதாவது, இயம நியம பிராணுயாமாதி அஷ்டாங்க யோகத்தையும், ஓர் யக்ஞமாய்ச் சொன்னீரல்லவா? அது எப்படி யக்ஞமாகும்? அதில்

அவிஸ் எது? அக்கினி எது? விவரித்துச் சொல்லும் கிருஷ்ணா!

அ-4. அபானே ஜுஹ்வதி ப்ராணம் ப்ராணேபானம் ததாபரே
ப்ராணாபானகதீ ருத்வா ப்ராணயாம பராயணா:. சு-29
அபரே நியதாஹாரா: ப்ராணாந் ப்ராணேஷு ஜுஹ்வதி-29½

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுனா! யோக யக்ஞமென்பது உனக்குச் சரியாகத் தெரியவில்லைபோல் தோன்றுகின்றது. அதனை மறுபடியும் விவரித்துச் சொல்லுகின்றேன் கேள். யோகத்திற்கு முக்கியமான அங்கம் பிராணாயாமம். அந்த பிராணாயாமம் எப்படிப்பட்டதென்றால், மூக்குத் துவாரங்களில் நடந்து கொண்டிருக்கும் சுவாசத்தை மந்திரபூர்வகமாய்க் கர்ப்பத்தில் (வயற்றில்) நிறுத்தவேண்டும். பிராணாயாமம் செய்வதற்கு, ரேசக பூரக கும்பகமென்று மூன்று வித சாதனங்களுண்டு. ரேசக மென்றால், கர்ப்பத்திலிருக்கும் சுவாசத்தை மூக்குத் தூவாரங்களின் வழியாய் வெளியில் விடுவது; இது உசுவாசமென்று சொல்லப்படும்: பூரகமென்றால், வெளிவாயுவை மூக்குத் தூவாரங்களின் வழியாய் சுவாசத்தை உள்ளுக்கிழுப்பது; இது நிசுவாசமென்று சொல்லப்படும். இதன் பாகமே குதஸ்தானத்தின் வழியாய்ப் போகும் இது அபான னென்று சொல்லப்படும். கும்பக மென்றால், உள்ளே இழுத்த சுவாசத்தை வெளியில் விடாமல் மந்திரபூர்வகமாய் கர்ப்பத்தில் நிறுத்துவது. பிராணனென்றால் இருதயத்திலிருக்கப்பட்ட வாயு. அபானனென்றால், குதஸ்தானத்தி லிருக்கப்பட்ட வாயு. ஊர்த்துவமுகமாய் (மேல்நோக்கி) இருக்கப்பட்ட வாயு பிராணனென்றும், அதோமுகமாய் (கீழ்நோக்கி) இருக்கப்பட்ட வாயு அபானனென்றும் சொல்லப்படும். பிராணாயாமம் செய்யப்பட்டயோகி, ஓர் மூக்கைமூடி மற்றோர் மூக்கில் வாயுவை இழுத்து நிறுத்தி மறுபடியும் சுவாசத்தை விடும்

போது முன் மூடியிருந்த மூக்குத்துவாரங்களின் வழியாய் விடுகின்றான். இவ்விதமாய் வாயுவை அப்பியாசம் செய்வதனால், ஊர்த்துவ வாயுவும் அதோவாயுவும் சேர்ப்பித்தவனாகின்றான். ஆதலால், பிராணனை அபானத்தில் சேர்த்ததாகின்றது. இப்படிச் செய்வதே பிராணனை அபானத்தில் ஹோமம் செய்வது என்று சொல்லப்படும். இதற்கே பூரகமென்றும், நிசுவாசமென்றும், அபானனென்றும் பெயர். உள்ளுக்கிழுத்த வாயுவை வெளியில் விடுவதால் அதோமுகமா யிருக்கும் வாயு ஊர்த்துவமுகமாய்ச் செல்லும். அதாவது, அபானததைப் பிராணனுடன் சேர்த்ததாகின்றது. இதுவே ரேசகமென்றும் உசுவாசமென்றும் சொல்லப்படும்: சிலர் சொற்ப ஆஹாரத்தைப்புசித்து பிராணவாயுவை வெளியில் விடாமல் கர்ப்பத்திலேயே நிறுத்துவார்கள்; இதுவே கும்பகமென்னும் பிராணுயாமம் இப்படிச்செய்து பிராணவாயுவை நிறுத்துகின்றார்கள். அதாவது, பிராணுபான, வியானோதான, சமானனென்னும் பஞ்ச பிராணன்களினுடைய வியாபாரங்களாகிய உசுவாச நிசுவாசங்களையும், நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சயனென்னும் உபப்பிராண வாயுக்களையும் நிறுத்தி நிச்சேஷ்டிதராய் (எந்த மனோவிகார சேஷ்டைகளும் இல்லாதவர்களாய்) இருப்பார்கள். (இந்த பத்து வாயுக்களையும் இந்நூல் 147-ம், பக்கம் பார்க்கரும்.)

அர்ஜுனன்:—ஸ்வாமீ! அப்படிச் செய்வது கேவல சரீரசாதனமாயிருக்கின்றது. இது சாதாரணமாய் காரடி வித்தைக்காரன் உதரபோஷணார்த்தமாய் அப்பியசிக்கும் வித்தையா யிருக்கின்றது. இப்பேர்ப்பட்ட வித்தை எப்படி மோக்ஷசாதனமாகும்? இதனால் யோகிகளுக்கு என்ன பிரயோஜனம்?

கிருஷ்ணன்:—அர்ஜுனா! நீசொல்லியது வாஸ்தவமே.

ஆனல் காரடிவித்தை செய்பவன், தான் வாயுதாரணையின் சாமார்த்தியங்களை இதரர்களுக்குக் காட்டி, அதன் மூலமாய் உதரபோஷணம் செய்துகொள்ளுகின்றனேயொழிய, அவனுக்கு அது மோக்ஷசாதனமல்ல. யோகிகளோ அப்படியல்ல. அவர்கள் இந்த பிராணுயாமத்தை ஏன் அப்பியசிக்கின்ருர்களென்ருல், மனம் எங்கும் ஓடாமல் ஓர் லக்ஷியத்தில் நின்றிருப்பதற்கு அனுகூலமானதாய் இருக்கின்றதென்று அப்பியசிக்கின்ருர்கள். என்ருல், அவர்கள் தமது மனதை பரமாத்மாவில் ஐக்கியம் செய்பவர்களாயிருக்கின்ருர்கள். மனதை பரமாத்மாவில் ஐக்கியம் செய்ய இந்த பிராணுயாமமே மிகவும் முக்கியமானதா யிருக்கின்றது. ஆதலால், இதனை யோகிகள் அப்பியாசம் செய்கின்ருர்கள். இது மோக்ஷ சாதனத்திற்கு முக்கியமானதாயிருக்கின்றது

அர்ஜுனன்:—சுவாமீ! இப்பொழுது நீர் சொல்லிய பிராணுயாமங்களில் கும்பகமென்னும் பிராணுயாமத்திற்கு மித ஆஹாரத்தைப்புசித்து, பிராணவாயுவைவெளிவிடாமல் கர்ப்பத்திலேயே நிறுத்திவைப்பார்களென்று சொல்வதற்குக் காரணமென்ன? மற்ற பிராணுயாமங்களுக்கு இல்லாத சொற்பஆஹாரம் இதற்குமாத்திரம் எப்படி உண்டாயிற்று சொல்லும், கிருஷ்ணு!

கிருஷ்ணன்:—அர்ஜுனா! இந்த கும்பகமென்னும் பிராணுயாமம், மித ஆஹாரத்தைப் புசிப்பவர்களுக்கு மாத்திரமே சாத்தியமாகுமேயொழிய இதரர்களுக்குச் சாத்தியமாகமாட்டா. ஏனென்ருல், இந்த பிராணுயாமம் செய்வதனல் பிராணவாயுவை வெளிவிடாமல் கர்ப்பத்தில் நிறுத்தக்கூடும். அப்படி நிறுத்துவதற்குக் குடலில் இடம் வேண்டியதாயிருக்கின்றது. ஆதலால், மித ஆஹாரம் புசிக்க வேண்டும். வயிருரப்புசித்தால், குடலில் பிராணவாயு

தங்குவதற்கு இடமில்லாமலிருக்கும். பிராணுயாமம் செய்பவர்கள், மித ஆஹாரம் புசிக்கவேண்டும். அங்ஙனம் புசித்தால் தான் பிராணவாயு, கும்பகத்தில் குடலில் தங்கியிருக்கும்.

கீதை அத்தியாயம் 6, சுலோகங்கள் 11, 12, 13, 14-ல், இன்னும் என்ன சொல்லியிருக்கின்ருரென்ருல்,

ஶுசௌ தேஶே ப்ரதிஷ்டாப்ய ஸ்திர மாஸந மாத்மந:
நாத்யுச்ரிதம் நாதிநீசம் சேலாஜிந குஶோத்தரம்.

தத்தைகாக்ரம் மந:க்ருத்வா யத சித்தேந்திரிய க்ரிய:
உபவி ஶ்யாஸநே யுஞ்யா த்யோக மாத்ம விஶுத்தயே.

ஸமம் காயஶிரோக்ரீவம் தாரயந்ந சலம் ஸ்திர:
ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்ரம் ஸ்வம் திஶஶ்சா நவலோகயந்.

ப்ரஶாந்தாத்மா விகதபீ ர்ப்ரஹ்மசாரி வ்ரதே ஸ்தித:
மந ஸம்யம்ய மச்சித்தோ யுக்தஆஸீத மத்பர:.

கிருஷ்ணன்:—அர்ஜுநா! இன்னும் சொல்லுகின்றேன் கேள். யோகாப்பியாசம் எப்படி செய்யவேண்டுமென்ருல், ஏகாந்தமான ஸ்தலத்தில் பரிசுத்தமான இடத்தில் எறும்பு மேட்டுப்பூச்சி முதலானவைகளின் பாதையில்லாமல் இருக்க ஓரங்குலம் உயரமுள்ள ஓர் பெரிய பீடத்தை அதாவது, (ஓரங்குல உயரமுள்ள பலகையை) அமைத்து, மனது சலனமில்லாமல்நிச்சலனமாய்நின்று யோகாப்பியாசம் செய்வதற்காக அந்த மணையின்மீது தர்ப்பாசனமும், அதன்மீது மான்தோலும் போட்டு, பத்மாசனத்துடன் உட்கார்ந்து பிராணுயாமம் செய்யும்போது சுவாசத்தை, மூக்கு துவாரங்களின் வழியாய், யாம் சொல்லியதுபோல் இழுத்து, அந்த சுவாசம் வெளிவராதபடி கண்டத்தினிடம் மூடிவிடவேண்டும். அப்போது அந்த வாயு குதஸ்தானத்தின் வழியாய் அபானவாயுவாய்ப் போக ஆரம்பிக்கும்.

அச்சமயத்தில் அதை வெளியில் போகவிடாமல், இரண்டு பிருஷ்ட பாகங்களையும் கெட்டியாய் இறுக்கிப் பிடிக்க வேண்டும். நூதன யோகாப்பியாசிகள் எவ்வளவு இறுக்கிப் பிடித்தபோதிலும், அந்த சுவாசம் அபானவாயுவாக வெளியில் செல்லும். சுவாசம் அதிகநேரம் நிறுத்தப் பழகினவர்களுக்கு வாயு குடலில் நின்றுவிடும்; ஆதலால் அபானவாயு மேற்படி மான்தோல்மீது படாமலிருப்பதற்காக, அதன்மேல் வெள்ளை வஸ்திரம் மடித்துப்போட்டு உட்கார்ந்து மனதை, கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகசர்மம் என்னும் ஐந்து இந்திரியங்களின் வழியாய் ஓட்விடாமல் திருப்பி, நிச்சலனமாய்ச் செய்து அந்தக்கரண பரிசுத்த நிமித்தமாய் யோகாப்பியாசம் செய்யவேண்டும். இவ்வப்பியாசம் செய்வதற்குமுன், தன் சரீரத்தை எப்படிப் பழகவேண்டுமென்றால், சொல்லுகின்றேன் கேள்:—

சிரசு கண்டம் இடுப்பு முதலானவைகளை அசைக்காமலும் சாய்க்காமலும், அசதி சோம்பல் முதலிய தேக குற்றங்கள் இல்லாமல் நேர் நிமிர்ந்து நிற்கும்படி செய்து, இங்குமங்கும் திக்குகளைப் பாராமல் அசையாதவனாய்த் தன் மூக்கு நுனிக்குறியில் திருஷ்டியை நிறுத்தி, பிறகு யோகாப்பியாசத்தை அனுஷ்டித்து வரவேண்டும். சரீரம் நிற்பதற்காக பிக்ஷை எடுத்துச் சாப்பிட்டு ஸ்திரீ எண்ணமில்லாதவனாய் பிரம்மசாரியா யிருந்து ஸம்சார சமுத்திரத்தை எவ்விதமாய்க் கடப்பேன் என்னும் பயமுடையவனாய் மனதை விஷயங்களில் போகவிடாமல் திருப்பிக்கொண்டு நிச்சலன மனதுடையவனாய் தன் ஆத்மாவில் மனதைச் சேர்ப்பிக்க தியானயோகத்தை அப்பியசிக்கவேண்டும். தன் மூக்கு நுனியில் திருஷ்டியை நிறுத்தச்சொல்லிய காரணமென்னவென்றால்:—மூக்கு நுனியில் திருஷ்டியை நிறுத்தினால் மனது, மூக்கு நுனிக் குறியிலேயே நின்

திருக்குமென்று அறியக்கடவாய். தியான யோகத்தின் படி சொல்லப்படும் பிரமாணம் என்னவென்றால்:—

'சுலோ || ஸாகாஸநே ஸமாஸீநஃ தத்வாப்யாஸம் ஸமாசரந் ஸதாப்யாஸேந ததஃ கார்யாத் பரதத்வ ப்ரகாஸநம். ஆஸநம் ப்ராண ஸம்ரோதஃ ப்ரத்யாஹாரோ தாரணு த்யாநம் ஸமாதி ரேதாநி யோகாங்காநி வராநநே, ஏகாந்தே விஜநே ரம்யே குஹாயாம் புண்யபூமிகே ரஹிதே மஸகைர்தம்பிஸார் தேவாயதநகேபி வாவித்தக்ஷேத்ரே மஹாதீர்த்தே தியாநவித்திஃ ப்ரஜாயதே, தத்ரவித்தாஸநம் பத்வா குஜாகாயஸ்து காரயேத்.''

"யுக்தாஸநம் ஸமாருஹ்ய ஸமகாயஸிரோதரஃ நாஸாக்ர த்ருஷ்டிரேகாந்தே ஜபேதோங்காரமவ்யயம், பூர்புவஃ ஸ்வரிமே லோகாஃ ஸோமஸூர்யாக்நிதேவதாஃ யஸ்யமாத்ராஸு திஷ்டந்தி தத்பரம் ஜ்யோதிரோமிதி. ஆஸநேந ருஜம் ஹந்தி ப்ராணுயாமேந பாதகம், விகாரம் மாநஸம் யோகீ ப்ரத்யாஹாரேண முஞ்சதி, தாரணுபிஃ மநோதைர்யம் த்யாநம் நிச்சலமத்புதம் ஸமாதௌ மோக்ஷமாப்நோதி த்யக்த்வா கர்ம ஸுபாஸுபம்.''

என்னும் யோக மார்த்தாண்ட வாக்கிய ரீதியாய், மனது சஞ்சலமில்லாமல் நிச்சலனமாயிருக்க, சித்தாசனத்தில் உட்கார்ந்து பரதத்வத தியானுப்பியாசம் செய்துகொண்டு, அந்த அப்பியாச விசேஷத்தினுல் பரதத்வ சாக்ஷாத்காரத்தை அடையவேண்டும். யம, நியம, ஆசன, பிராணுயாம, பிரத்தியாஹார, தாரண, தியான சமாதி யென்னும் இந்த எட்டும், யோகங்களென்று சொல்லப்படும். யோகாப்பியாசம் செய்யப்பட்டவன் ஜன ஸஞ்சாரமில்லாததாகியும், வியாக்ராதி (புலி முதலாகிய) ஜந்துக்களின் பயங்கரத்தொனி இல்லாததாயும் இருக்கப்பட்ட குகையிலாகிலும், மகான்கள் இருந்து பவித்திரமான பிரதேசங்களிலாகிலும், கிராமத்திற்குத் தூரமாய் ஏகாந்தமா யிருக்கப்பட்ட பாழடைந்த தேவாலயங்களிலாகிலும், யோகிகள் சித்தியடைந்த ஆசிரமங்களிலாகி

லும், புண்ணியதீர்த்தக் கரைகளிலாகிலும் சுகாசனத்தில் உட்கார்ந்து, இடுப்பு மார்பு கழுத்து சிரசு முதலானவை களைச் சரியாய் நிறுத்தி யோகாப்பியாசம் செய்துவந்தால் யோகசித்தியை அடையலாம். யோகாப்பியாசி எந்த ஆச னத்திலாகிலும் உட்கார்ந்து காயத்திரியில் சொல்லியிருக் கும் ரஹஸ்யத்தை அறிந்து அதாவது "தத்ஸ விதுர்வ ரேண்யம்" "பர்கோ தேவஸ்யதீமஹீ" தியோ யோநஃ ப்ர சோதயாத்" என்னும் இம்மூன்று வாக்கியங்களும் 'அ' கார, 'உ' கார, 'ம' காரங்களாய் 'ஓங்காரமா யிருக்கின் றது. இந்த பிரணவாக்ஷரம் ரேசகமே (சுவாசம் வெளி யில் விடுவதே) 'அ' காரம், பூரகமே (சுவாசம் உள்ளுக் கிழுப்பதே) 'உ' காரம், கும்பகமே (உள்ளுக்கிழுத்த சுவா சம் வெளியில் விடாமல் நிறுத்துவதே) 'ம' காரம்; இந்த ஓங்காரமே 'ஸோஹம்' 'ஸோ' என்பதில் 'ஓ' என்னும் ஜீவாக்ஷரமும் 'ஹம்' என்பதில் 'ம்' என்னும் ஜீவாக்ஷர மும், சேர்ந்து 'ஓம்' என்னும் சப்தம் உண்டாயிற்று; இந்த ஓம் என்பதை உசுவாச நிசுவாசங்களில் அதாவது, மூச்சுடன் 'ஓம்' என்னும் மந்திரம் சேர்த்து உள்ளுக் கிழுத்து நிறுத்தப் பழகி வரவேண்டும். இந்த மூன்று அக்ஷரங்கள் அடங்கிய ஓங்காரமே சமஸ்த பிரம்மாண்ட மாயும், சூரியன் சந்திரன் அக்கினி முதலான தேஜோ வஸ் துக்களாயும்,சிருஷ்டி ஸ்திதி லயங்களுக்குக் காரணமாகிய, பிரம்மா விஷ்ணு ருத்திரர்களாயும், இவைகளுக்கெல்லாம் மூலமாகிய பரப் பிரம்ம சொரூபமாயும் இருக்கின்றது. சாஸ்வதமான ஓங்கார வாக்கியத்திற்கு லக்ஷியமான ஜோதி சொரூபமாகிய தன் நிஜ சொரூபத்தில் மனதை ஐக்கியம் செய்யவேண்டும். யம நியமங்களினால் ஐந்து பொறிகளும் அடங்கும். ஆசன சுத்தியினால் சகல வியாதி களும் நிவாரணையாகும். பிராணயாமம் செய்வதனால்

பாபங்களெல்லாம் நசிக்கும். பிரத்தியாஹாரம் செய்வதனுல் மனே விகாரங்களெல்லாம் தீரும். தாரணை செய்வதனுல் யோகசித்தியை அடைவோமென்னும் மனேதைரியம் உண்டாகும். தியானத்தினுல் தன் சரீரம் மறந்து இதரர்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கும். சமாதியில் இருந்தால், புண்ணிய பாபங்கள் ஒழிந்து மோக்ஷத்தை அடையலாம்.

பன்னிரெண்டு பிராணயாமம் செய்தால் ஒரு பிரத்தியாஹாரம்; அதாவது, பன்னிரெண்டு பிராணயாமம் செய்வது எவ்வளவு கஷ்டமோ, ஒரு பிரத்தியாஹாரம் செய்வது அவ்வளவு கஷ்டம்; பன்னிரெண்டு பிரத்தியாஹாரம் செய்தால் ஒரு தாரணை; அதாவது, பன்னிரெண்டு பிரத்தியாஹாரம் செய்வது எவ்வளவு கஷ்டமோ, ஒரு தாரணை செய்வது அவ்வளவு கஷ்டம்; பன்னிரெண்டு தாரணை கஷ்டப்பட்டு செய்தால் தியானம் சித்திக்கும். அந்த தியானத்திலிருந்து சமாதியை அடையலாம். இப்படி அனேக காலம் செய்து நிச்சலனமாய் சமாதியிலிருந்த யோகி பிரம்ம ஸாக்ஷாத்காரத்தை அடைவான். இதற்கு சாமவேதம் 46-வது யோக சூடாமண்யோபநிஷத் பிரமாணம்.

“ப்ராணயாம த்விஷட்கேந ப்ரத்யாஹாரஃ ப்ரகீர்திதஃ, ப்ரத்யாஹார த்விஷட்கேந ஜாயதே தாரணு ஶுபா, தாரணு த்வாதஶ ப்ரோக்தம் த்யாநம் யோகவிஶாரதைஃ, த்யாந த்வாதஶகேநைவ ஸமாதி ரபிதீயதே. ஸமாதௌ பரஞ்ஜோதி ரநந்தம் விஶ்வதோமுகம், தஸ்மின் த்ருஷ்டே க்ரியா கர்ம யதா யதேந வித்யதே.”

“ஸூர்யநாட்யா ஸமாக்ருஷ்ய வாயுமப்யாஸயோகிநா, விதிவத்து கும்பகம் க்ருத்வா ரேசயேத் சீதரஶ்மிநா. உதரே பஹுரோகக்நம் க்ரிமிதோஷம் நிஹந்தி ச, முஹுர்முஹுரிதம் கார்யம் ஸூர்யபேதமுதாஹ்ருதம், நாடீப்யாம் வாயுமாக்ருஷ்ய

குண்டல்யாஃ பார்ஸ்வயோஃ க்ஷிபேத், தாரயேதுதரே பஸ்சாத் ரேசயே திடயா ஸுதீஃ. கண்டே கபாதிதோஷக்நம் ஸரீராக்நி விவர்த்தனம், நாடீஜலாபஹம் தாதுகத தோஷவிநாஸநம், கச்ச தஸ் திஷ்டதஃ கார்யமுஜ்ஜாயாக்யம் து கும்பகம். முகேந வாயும் ஸங்க்ருஹ்ய க்ராணரந்த்ரேண ரேசயேத். ஸீதலீகரணம் சேதம் ஹந்தி பித்தம் க்ஷுதாம் த்ருஷம், ஸ்தநயோரத பஸ்த்ரேவ லோஹகாரஸ்ய வேகதஃ, ரேசயேத் பூரயேத் வாயுமாஸ்ரமம் தேஹகம் தியா யதாஸ்ரமோ பவேத் தேஹே ததா ஸூர்யேண பூரயேத், கண்டஸங்கோசநம் க்ருத்வா புநஸ்சந்த்ரேண ரேச யேத், வாதபித்த ஸ்லேஷ்மஹரம் ஸரீராக்நி விவர்தநம், குண்டலீ போதகம் வக்த்ரதோஷக்நம் ஸுபதம் ஸுகம். ப்ரஹ்மநாடீ முகாந்தஸ்த கபாத்யர்கள நாஸநம்,ஸம்யக்பந்த ஸமுத்பூதம் க்ரந்தி த்ரயவிபேதகம், விஸேஷேணைவ கர்தவ்யம் பஸ்த்ராக்யம் கும்ப கம் த்விதம். பந்த த்ரயமதேதாநீம் ப்ரவக்ஷ்யாமி யதாக்ரமம், நித் யம் க்ருதேந தேநாஸௌ வாயோர்ஜயமவாப்நுயாத்.''

[யோகசிகோபநிஷத்.]

''ப்ராணாயாமோ பவேதேவம் பாதகேந்த நபாவகஃ.''

இந்த பிராணாயாமம் செய்வதனல் சர்வ நோய் களும் நிவாரணை யாவதுமேயன்றி புண்ணிய பாபங்க ளென்னும் விறகுகளை, பிராணாயாமமென்னும் அக்னி தக் தம் செய்துவிடும். புண்ணிய பாபகர்மங்கள் எப்பொழுது ஒழிந்துவிடுகின்றனவோ அப்பொழுதே, சஞ்சிதமென்னும் மூட்டைகள் பஸ்மமாய் விடுகின்றது. சஞ்சிதமென்னும் மூட்டைகள் எப்பொழுது பஸ்பமாய் விடுகின்றனவோ அப்பொழுதே, புனர் ஜனனமில்லாத விதேஹ முத்தியை அடைகின்முன் என்று அறியக்கடவாய்.

அர்ஜுநன்:—ஓ! கிருஷ்ணமூர்த்தியே! யோகி தியா னம் செய்யும்பொழுது தேகம் சிரசு கண்டம் முதலான வைகளை அசைக்காமலும் இங்குமங்கும் திக்குகளைப் பாரா மலும் அசையாதவனைத் தன் மூக்குநுனியில் திருஷ்டி

நிறுத்தவேண்டுமென்று சொன்னீரல்லவா? அவ்வாறு ஏன் நிறுத்தவேண்டும்.

கிருஷ்ணன்:—அர்ஜுனா! அப்படிச் செய்வதனுல் அவனுடைய திருஷ்டி, சுற்றுப் பக்கங்களிலிருக்கும் இதர விஷயங்களில் ஓடாமலிருக்கும்; அதனுல் அவனுடைய மனது விஷயங்களின்மீது ஓடுவதற்கு அவகாசமிராது.

அர்ஜுனன்:—பிராணவாயுவை பந்தனம் செய்வதனுல் பிராணத்திற்கு அபாயம் உண்டாகாதா?

கிருஷ்ணன்:—அர்ஜுனா! யோகாப்பியாசம் செய்யப்பட்டவன் கிரமக்கிரமமாய் நாளாவட்டத்தில் பிராணவாயுவை நிறுத்தி எண்ணிக்கைகளைச் சிறுகச்சிறுக உயர்த்திக்கொண்டே வருவானுகில் அபாயம் உண்டாகாது. அதனுல் மனது ஒரே திருஷ்டியில் சலிக்காமலிருந்து பகவத் சொரூப லக்ஷியத்தில் நின்றுவிடும். இது குருவினுல் தெரிந்துகொள்ளவேண்டும். அந்த குரு எப்படிப்பட்டவனு யிருக்கவேண்டுமென்றுல்:—யோகாப்பியாசத்தினுல், இந்திரியங்கள் மனம் புத்தி பிராணவாயுவினுடையவும் சரீரத்தினுடையவும் வியாபாரங்களை யெல்லாம் இதுவரையில் சொல்லியதுபோல் நிறுத்தினவனு யிருக்கும் ஓர் சற்குருவை ஆசிரயித்து, அவருக்கு சிசுரூஷை செய்து அவரால் உபதேசம் பெற்று ஜன சமூகமுள்ள இடங்களில் இல்லாமலும், ஒருவேளை தன்னிடம் ஜனங்கள் வந்தபோதிலும் அவர்களுடன் தான் கலக்காமலும், பிக்ஷான்னம் புசித்து ராகத் துவேஷங்கள் அதாவது, பரஸ்திரீ கமனம், தன் குற்றத்தைக் காட்டாமல் இதரர்கள் குற்றங்களைக் காட்டித் தூஷிப்பது இது முதலாகிய குணங்கள் இல்லாதவனு யிருந்து யாரிடத்தும் எந்த காரணத்தினுலும் விரோதிக்காமல் இருப்பதே, பிரமசரிய விரதமென்று சொல்லப்படும். ஆதலாம், அப்படிப்பட்ட விருத்தியி

விருந்து சதா என்னிடத்திலேயே மனதை நிறுத்தி என்னையே தியானித்துக்கொண் டிருக்கவேண்டும். அத்தியாயம் 6-சுலோகம் 15,

யுஞ்ஜந்நேவம் ஸதாத்மாநம் யோகீ நியதமாநஸ:
ஶாந்திம் நிர்வாணபரமாம் மத்ஸம்ஸ்தாமதி கச்சதி.

அர்ஜுநா! (10-11-12-13-14-சுலோகங்களில் சொல்லியதுபோல்) தன் மனதை, யோகத்தினுல் நிறுத்த அப்பியாசம் செய்துகொண்டு வந்தால், கடைசியில் அந்த யோகம் பழுத்துச் சித்தசாந்தி உண்டாகும். எப்பொழுது சாந்த சித்தனுகின்றுனே அப்பொழுது என்னை அடைந்தவனுகின்றுன். என்றுல், ஜனனமரணுதி சம்சார விஷயங்கள் யாவும் நாசமாய் நிர்வாண பதவியை என்றுல், பரமாத்ம சொரூபத்தை அடைகின்றுன். அத்தியாயம்-6 சுலோகம் 16.

நாத்யஶ்நதஸ்து யோகோ ஸ்திநசைகாந்த மநஶ்நத:
நசாதி ஸ்வப்ந ஶீலஸ்ய ஜாக்ரதோ நைவ சார்ஜுந.

அர்ஜுநா! இப்பொழுது யோகியினுடைய ஆஹாராதி விஷயத்தைக் குறித்துச் சொல்லுகின்றேன் கேள். தியான யோக சமாதி சித்தியடையும் வரையில் நிச்சலனமாய் சரீரம் நிற்பதற்கு வேண்டிய சொல்ப ஆஹாரம் சொல்ப நித்திரைமாத்திரம் இருக்கவேண்டும். இதற்கு சுப தப பிரமாணம் என்னவென்றுல்,

"யதுஹவா ஆத்மஸம்மித மந்நம் ததவதி தந்ந ஹிநஸ்தி
யத் பூயோ ஹிநஸ்தி தத் யத் கநீயோ ந ததவதி."

சரீரம் நிற்பதற்காக வேண்டிய சொல்ப ஆஹாரத்தை மாத்திரம் புசித்தால் அது, யோகாப்பியாசி மனதை, வெளியில் ஓடவிடாமல் நிறுத்தி அவனைக் காப்பாற்றுமேயொழிய அநர்த்தத்தை உண்டாக்கமாட்டா.

'பூரயே தஸநோர்த்தம்த்ருதீயமுதகேந து வாயோஸ் ஸஞ்சாரணர்த்தாய சதுர்த்த மவஸேஷயேத்' அர்த்தமஸ்நஸ்ய ஸ்வயஞ்ஜநஸ்ய த்ருதீய முதகஸ்ய து வாயோஸ் ஸஞ்சாரணர்த் தந்து சதுர்த்வமஸேஷயேத்.'

யோகாப்பியாசி தன் வயிற்றில் இவ்வளவு தான் செல்லுமென்று தோன்றிய ஆஹாரத்தில் பாதி புசிக்க வேண்டும்; மூன்றுவது பாகத்தை ஜலம் சாப்பிட்டு நிரப்ப வேண்டும்; பிராணவாயு குடலில் தாராளமாய் நடப்பதற்காக, நான்காவது பாகத்தை காலியாய் விட்டுவைக்க வேண்டும். என்றால், அரைவயறு சாதம் கால்வயறு ஜலம் கால்வயறு காற்று தங்கும்படிச் செய்யவேண்டும். இதற்கு அதிகமாய்ப் புசித்தால் அது அநர்த்தத்தை உண்டாக்கும். என்றால், அதிகமாய்ச் சாப்பிட்ட ஆஹாரம் இந்திரியங்களுக்கு மிகவும் பலத்தை உண்டாக்கி, விஷய போகங்களில் இச்சை அதிகரித்து யோகத்திற்கு கெடுதியை உண்டாக்கும். பிராமண வைதவ ஸ்திரீகள் இரண்டுவேளை சாப்பிட்டால், இந்திரியங்களுக்கு மிகவும் பலத்தையுண்டாக்கி விஷயபோகங்களில் இச்சையை உண்டாக்குமென்றும், பகல் ஒருவேளை சாப்பிடுவதனல், இந்திரியங்களுக்குப் பலங் குறைந்து விஷய போகங்களில் இச்சை யுண்டாக்காதென்றும், இராக்காலங்களில் சொல்பபக்ஷணத்துடன் உபவாசமாய் வைக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால்,மிதமான ஆஹாரத்தைப் புசித்தால் சரீரத்திலுள்ள இந்திரியங்களுக்கு பலங் குறைந்து, மனம் ஆத்மாவோடு கலந்து தான் தானய் நிற்கும் யோக்கியதையைஉண்டாக்கி ரக்ஷிக்கும். ஆதலால், யோகாப்பியாசியானவன் ஆஹாரத்தை சாஸ்திரத்தில் சொல்லியதைவிட அதிகமாகவேனும் குறைவாகவேனும் புசிக்கலாகாது. அது போல் யோகி, இந்திரியங்களின் அலுப்பைத் தீர்த்துக்

கொள்ள மிதமான நித்திரை செய்யவேண்டும். அதிக நித்திரை செய்தால் நித்திரை உண்டாகுமே யொழிய யோகம் கிட்டமாட்டா; யோகி நித்திரை பூர்த்தியா யில்லாமலும் இருக்கலாகாது. நித்திரையில்லாம லிருந்தால் இந்திரியங்கள் மிகவும் அலுப்புண்டு யோகாப்பியாசம் செய்ய அதிக கஷ்டத்தை உண்டாக்கும். உலகத்திலுள்ள மற்ற ஜனகள், அதிக நித்திரைசெய்து விழித்துக்கொண்டு தம்தம் விஷயங்களில் செல்லுவதுபோல், யோகியும் இருப்பானுகில் யோகத்திற்குப் பங்கத்தை உண்டாக்கும். இதற்கு நாரத புராணம் பிரமாணம்.

"நித்ராஹார பயவிச்வாஸ சேஷ்டா தந்த்ராதி வர்ஜநம்
க்ருத்வா நிமீலிதாக்ஷஸ்து ஸக்தோ த்யாயந் ப்ரஸித்யதி."

அதிக ஆஹாரம், அதிக நித்திரை, அதிக உணவு, பயம், விசுவாசம், இந்திரியங்களின் சேஷ்டை, சோம்பல், கைகளாலும் கால்களாலும் செய்யப்பட்ட வியாபாரங்கள், மந்தபுத்தி முதலானவைகளை விட்டு நேத்திரங்களை மூடி தியானத்தி லிருப்பவனே யோகசித்தியை அடைவான். இந்த ஆஹாரவிஷயம் அத்யாயம் 4, சுலோகம் 29-29½ யிலும், முன் சொல்லப்பட்டிருக்கின்றது. அத்யாயம்-6, சுலோகம் 17-ழிலும், சொல்லுகின்றோம் கேள்.

யுக்தாஹார விஹாரஸ்ய யுக்தசேஷ்டஸ்ய கர்மஸு
யுக்தஸ்வப்நாவபோதஸ்ய யோகோ பவதி துஃகஹா.

கிருஷ்ணன்:—யோகிக்கு, தியானயோகம் எவ்வாறு உண்டாகுமென்று கேட்கின்றாயோ? சொல்லுகின்றேன் கேள்:—யோகாப்பியாசி, மித ஆஹாரம், மிதநடை, குடும்ப சவரக்ஷணைக்கு எவ்வளவு அவஸ்யமோ அவ்வளவுவரையில் ஆஹாரத்திற்கு வேண்டிய சம்பாதனையைச் சம்பாதித்து, மிதநித்திரை மிதவிழிப்பு உள்ளவனுக்குத் தியானயோகம் சித்திக்கும். அத்யாயம்-6, சுலோகம்-18.

யதா விநியதம் சித்த மாத்மந்யேவா வதிஷ்டதே
நிஸ்ப்ருஹ ஸ்ஸர்வகாமேப்யோ யுக்த இத்யுச்யதே ததா.

கிருஷ்ணன்:—ஆதலால் ஓ அர்ஜுநா! இப்படி நான் சொல்லியதுபோல், மனதை நிறுத்தி யோகத்தை அப்பிய சித்துக்கொண்டே வருவானுகில், கற்பூரத்தை எரித்த போது கற்பூரம் ஒன்றும் சேஷமில்லாமல் எரிந்து ஜோதியில் கலந்துவிடுவதுபோல், அந்த யோகியினுடைய மனது பரமாத்ம சொரூபத்தில் கலந்துவிடும். அப்படிப்பட்ட மஹா யோகியானவன்,

"எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கு மோனத்தே—வித்தகமாய்த்
தாதிவிளையாடி யிருகைவீசி வந்தாலுந்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்."

என்னும் பட்டினத் தடிகளின் வாக்கின்படி, சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி முதலிய எந்த அவஸ்தைகளிலிருந்தாலும், அவனுடைய இந்திரியங்கள் விஷயங்களில் ஓடிக்கொண்டிருந்தாலும், குக்ஷிபாதையின்பொருட்டு எவ்விதத் தொழில்களைச் செய்துகொண் டிருந்தாலும் அவன் மனது மாத்திரம், எந்த விஷயங்களிலும் அகப்படாமல், எப்பொழுதும் ஆத்ம சொரூபத்திலேயே லயித்திருக்கும். அவனுடைய மனது எப்பொழுது அப்படிப்பட்ட ஸ்திதிக்கு வருகின்றதோ அப்பொழுது அவன் யோகசித்தியை அடைந்தவனுகின்ருன். என்ருல், யோகாப்பியாசம் செய்யப்பட்டவனுடைய மனது, அசையாமல் இருந்து பரமாத்ம சொரூபத்தில் ஐக்கியமாகவேண்டும். அப்படி இருப்பவனே சமாதிநிஷ்டனென்று சொல்லப்படுவான்.

அர்ஜுநன்:—ஓ சுவாமீ! அப்படி எவ்வளவுகாலம் அப்பியசித்து வந்தால் யோகசித்தியை அடையலாம்?

கிருஷ்ணன்;—அர்ஜுனா! பிரதிதினம் நியமம் தவறுமல் காலை பகல் மாலைகளில் அப்பியசித்துவந்தால் நிர்மல நிச்சல சித்தவிருத்தியுடைய புருஷர்களுக்கு ஆறுமாதங்களிலும், மந்தபுத்தி யுடையவர்களுக்கு வருஷத்திலும், கேவல மூடாத்மாக்களுக்குப் பன்னிரண்டு வருஷத்திலும் சித்தியாகுமென்று யோகசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

அர்ஜுனன்:—சுவாமீ! யோகாப்பியாசம் செய்து கொண்டேவர அவன் மனது பரமாத்ம சொரூபத்தில் கலந்து விடுமென்று சொன்னீரல்லவா? அப்பொழுது அவன் மனது எவ்விதமா யிருக்கும்? அத்யாயம்-6, சுலோகம்-19.

யதா தீபோ நிவாதஸ்தோ நேங்கதே ஸோபமாஸ்ம்ருதா
யோகிநோ யதசித்தஸ்ய யுஞ்ஜதோ யோக மாத்மந:.

கிருஷ்ணன்:—அர்ஜுனா! அப்படிப்பட்டவனுடைய மனது எப்படி இருக்குமென்றால், யோகாப்பியாசம் செய்து, ஐயாயிரம் பிரணவங்களை உச்சரிக்கும் வரையில் சுவாசத்தை நிறுத்தப் பழகினவன் மனது, காற்றில்லாத இடத்தில் வைக்கப்பட்ட தீபம் எப்படி அசையாமல், தன் சமீபத்திலிருக்கும் வஸ்துக்களை மாத்திரம் பிரகாசிக்கச் செய்கின்றதோ, அதுபோல் சுவாதீனமான மனதுடைய யோகி, சகல எண்ணங்களையும் மறந்து சிலாவடிவமாய் அசையாம லிருப்பான். அப்பொழுது, அவனுடைய கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகசர்மம் என்னும் ஐந்து இந்திரியங்கள், உலக வியாபார விஷயங்களில் ஓடாமல் அசையாத தீபம்போல் இருக்கும். அஃதெப்படியென்றால், தீபத்தை அசையும்படிச் செய்வது வாயுவல்லவா? வாயு இல்லாவிடில் தீபம் அசைவதற்குக் காரணமில்லையல்லவா?

அதுபோல் மனதை அசையும்படிச்செய்வது மேற்சொல்லிய இந்திரியங்கள். சமாதிநிலையில் நின்றபோது, இந்திரியங்களும் மனதும் மேற்சொல்லிய தீபம்போல் அசையாமலிருக்கும். ஆதலால், யோகியினுடைய மனது அசையாமல் மேற்படி தீபநிலைக்கு எப்பொழுது வருகின்றதோ, அப்பொழுது அந்த மனது சாந்தமடைகின்றது. அதனுல் அவன் யோகசித்தியை அடைந்தவனுகின்ருன். கஷ்டப்பட்டு பதினையாயிரம் எண்ணும் வரையில் சுவாசத்தை நிறுத்தப் பழகினவனுடைய மனதானது எல்லா விஷயங்களிலும் தனக்குத் தானுகவே யோகபலத்தினுல் விரக்தியை அடையச்செய்யும். அப்பொழுது சாதாரண மனிதனுக்கும் தனக்கும் எவ்வளவோ பேத மிருக்கின்றதென்று தன் மனத்திற்கே தோன்றி இதரர்களிடம் யாதொன்றும் பேச எண்ணமில்லாத ஸ்திதியில் கொண்டுவந்து மனதை ஒரே நிலையில் நிறுத்துகின்றது. ஆதலால், கஷ்டப்பட்டு நாளாவட்டத்தில் கிரமக்கிரமமாய் சிறுகச்சிறுக சுவாசத்தை முதல் 25 எண்ணும் வரையில் நிறுத்திச் சிலமாதங்கள் பழகி, பிறகு 50 எண்ணும் வரையில் நிறுத்தி இப்படி சில மாதங்கள் பழகி, பிறகு 75 எண்ணும் வரையில் நிறுத்தி இப்படி சில மாதங்கள் பழகி, பிறகு 100 எண்ணும் வரையில் நிறுத்தி இப்படி சில மாதங்கள் பழகி, பிறகு 125 எண்ணும் வரையில் நிறுத்தி இவ்விதமாய்ச் சிறுகச் சிறுக பதினையாயிரம் எண்ணும் வரையில் சுவாசத்தை நிறுத்த உயர்த்திக்கொண்டே வந்தால் மேற்சொல்லிய விஷயங்களை எல்லாம் சுவானுபவத்தில் பிரத்தியக்ஷமாய்க் காணலாம். மேற்சொல்லியவைகள் யாவும் இந்நூலாசிரியருக்குப் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தம். அத்யாயம்-6, சு-28.

யுஞ்ஜ ந்நேவம் ஸதாத்மாநம் யோகீ விகதகல்மஷ:
ஸுகேந ப்ரஹ்மஸம்ஸ்பர்ஶ மத்யந்தம் ஸுக மஶ்நுதே.

ஆதலால், இப்பொழுது நான் சொல்லியதுபோல் எவனொருவன் தன் மனதை விஷயங்களிலிருந்து திருப்பிக் கொண்டு, யோகாப்பியாசத்தை அப்பியசித்துக்கொண்டு வருகின்றானோ அப்படிப்பட்டவன் விகத கல்மஷனைப் என்றால், இதற்குமுன் சொல்லிய ஆகாம்யம், சஞ்சிதம் என்னும் புண்ணியபாபங்க ளில்லாதவனைப் பரப்பிரம்ம சொரூபனைப் நித்தியாநந்தத்தை அனுபவிப்பான். இப்படிப் பட்டவனுக்கு வினைப்பயன் சேஷம் (மிகுதி) இருந்தால் மறுஜன்மத்தில் ஞானியாய் பிறப்பான். யோகியாய்பிறக்க மாட்டான். இதற்குத் தாயுமானவர் பிரமாணம்;

யோகியர்க்கே ஞான மொழுங்காம் பேரன்பான
தாகியரும் யோகமுன்னே சார்ந்தோர் பராபரமே.

நில்லடா வாசியைத்தான் வாங்கிக் கொள்ளு
நீங்காத கருவிகளை வதைத்துப் போடு
அல்லடா என்னைப்போல் ஆசா னப்பா
அப்பனே யுன்றனுக்கு வாய்க்கா தப்பா
சொல்லடா சிவஞானந் தன்னைத் தேர்ந்து
சொற்பெரிய முமுட்சுத் தன்னைப் போற்றி
செல்லடா சிவஞான கருவுக் குள்ளே
தினந்தினந்தான் பணிந்துமினித் திடமாய் நில்லே.
ஆட்டமடா ஆசையற்று ரோஷ மற்று
அன்னைசுற்றந் தனைமறந்து அகண்ட மேவும்
பூட்டமடா நவத்துவாரங்கள் தன்னைப்
பொறிகளைந்துஞ் சேருமடா புனிதமாக
காட்டிலென்ன நாட்டிலென்ன மௌனங் கொண்டால்
காமதேனு கற்பகமும் உனக்கே சித்தி
வீட்டிலே தீபம்வைத்தாற் பிரகாசிக்கும்
வெளியேறி லற்றீபம் விழலாய்ப் போமே.

வாசியை யடைக்கி யடையும் பலன்.

முன் சொல்லியதுபோல் செய்யும் யோகாப்பியாசிகள், சூரிய சந்திர கலைகளில் பிராணவாயுவை செலுத்த வேண்டும்; அப்போது, பிரிதிவி (பூமி), அப்பு (ஜலம்) தேயு (அக்கி), வாயு (காற்று) என்னும் நான்கு தத்துவங்களும் விலகும். அப்போது அப்பிராணவாயு, ஆகாய தத்துவத்தை (வெட்டவெளியை) அடையும்; அச்சமயம் சுவாசம் குறைந்து வரும்; அக்காலத்தில் சுவாசபந்தனம் செய்யக்கூடும். அதாவது,

பன்னிரெண்டங்குல சுவாசத்தில் ஒரு அங்குலம் சுவாசம் நிறுத்தி பதினோரங்குலம் ஆடச்செய்தால், இவ்வுலக இச்சை நீங்கிவிடும்; இரண்டங்குலம் நிறுத்தி பத்தங்குலம் ஆடச்செய்தால், மனம் ஆனந்திக்கப்பட்டு ஞான செல்வமுண்டாகும்; மூன்றங்குலம் நிறுத்தி ஒன்பது அங்குலம் ஆடச்செய்தால், விவேகியாவான்; நாலங்குலம் நிறுத்தி எட்டங்குலம் ஆடச்செய்தால், தூரதேசத்தில் நடக்கும் விஷயங்களைச் சொல்லுவான்; ஆறங்குலம் நிறுத்தி ஆறங்குலம் ஆடச்செய்தால், ஆகாசத்திலுள்ள சகலமும் கண்டுகொள்வான்; ஏழங்குலம் நிறுத்தி ஐந்தங்குலம் ஆடச்செய்தால், சரீரம் காயசித்தி அடையும்; எட்டங்குலம் நிறுத்தி நாலங்குலம் ஆடச்செய்தால், அணிமாதி சித்திகளை அடைவான்; ஒன்பதங்குலம் நிறுத்தி மூன்றங்குலம் ஆடச்செய்தால், நவ கண்டங்களில் சஞ்சரிப்பான்; பத்தங்குலம் நிறுத்தி இரண்டங்குலம் ஆடச்செய்தால், ஒரு தேசத்தைவிட்டு மற்றொரு தேகத்தில் பிரவேசிப்பான்; பதினோரங்குலம் நிறுத்தி ஒரு அங்குலம் ஆடச்செய்தால், தனது ஆத்மாவில் ஐக்யமாவான்; பன்னிரெண்டங்குல சுவாசமும் வெளிவிடாமல் நிறுத்தினால்

அந்த சுவாசம் உதித்த இடத்திலேயே சுழன்றுகொண்டிருக்கும்; இவ்வாறு சுவாசம் சுழன்றுகொண்டிருப்பதை இந்நூல் முதல் சில பக்கங்களுக்குமுன் காட்டியிருக்கும் பார்வதி படத்திற்கு மூன்றுவது படம், 5-வது, நெம்பரில் காட்டியிருப்பதைப் பார்க்கவும்; இப்படிப்பட்ட பரம யோகி காலனை ஜயித்து அன்னபானுதிகளில்லாமல் நீடூழி காலம் சமாதியில் நின்று சொக்கியிருப்பான்.

ஓ சகோதரிகளே! ஓ சகோதரர்களே! ருஷிகளும் அனேக மன்னுதி மன்னர்களும் (அனேக அரசர்களும்) மனோ லயத்திற்காக கானகம் (காட்டுக்கு) சென்றுவிட்டார்கள். ஆதலால், அடியேனுக்கு வயதோ அறுபதாய் விட்டது; இனி சங்கல்ப விகல்பமற்று நிர்விகல்ப சமாதியிலிருக்க கடப்பையை விட்டு கடிகோட்டை என்னும் மலையடிவாரம் போய்ச் சேர்ந்துவிட்டோம்.

தத் ஸத்

ஸ்ரீ பரப் பிரம்மணேநமஃ.

பிராணுயாமமென்னும் யோகசித்தி முற்றிற்று.

பரமஹம்ஸ ஸச்சிதானந்தன்

கடிகோட்டை வீரபல்லி போஸ்டு

ராயசோடி தாலூக்கா கடப்பை ஜில்லா.

யோகாப்பியாச காலத்தில் இந்நூலாசிரியருக்கு உண்டாகிய தேகபாதை.

இதை வாசிக்கும் சகோதரி சகோதரர்களே! அடியில் சொல்லப்போகும் விஷயங்கள் மிகவும் முக்கியமானவைகள். அதாவது, உங்கள் புண்ணியபாப கர்மங்களென்னும் மூட்டைகளை யோகாக்கினியினால் தகனம் செய்து, ஜனன மரணமென்னும் சம்சார சமுத்திரத்தைத் தாண்டிக் கரையேற, இந்நூல் படகைப்போன்றதா யிருக்கின்றது. ஆதலால், இதை சிரத்தையுடன் வாசித்து இச் ஜன்மத்திலேயே முத்திபெற ஒவ்வொருவரும் யோகாப்பியாசம் செய்யவேண்டும். இந்நூலாசிரியர் யோகாப்பியாசம் செய்யும்போது பட்ட கஷ்டங்களை யெல்லாம் இதனடியில் சொல்லுகின்றேன் கேளுங்கள்.

இந்நூலாசிரியர், பிராணயாமம் செய்யும் மார்க்கங்களை முதல் பதிப்பைவிட இரண்டாம் பதிப்பில் அதிகமாயும், இரண்டாம் பதிப்பைவிட மூன்றாம் பதிப்பில் விசேஷமாயும், மூன்றாம் பதிப்பைவிட நான்காம் பதிப்பில் இன்னும் அதிக விசேஷமாயும், ஐந்து ஆறு ஏழு எட்டாம் பதிப்புகளில் பூரணமாய் எழுதிவிட்டார். ஆதலால், எல்லோரும் இதை நன்றாய் வாசித்து அப்பியாசம் செய்யவேண்டிய குரு ரஹஸ்யங்களை எல்லாம் இதில் மிகவும் தெளிவாய் எழுதி யிருக்கின்றார். பிராணயாமம் செய்யும் கிரமம், ஒரே பதிப்பில் எழுதினால் வாசிக்கப்பட்டவர்கள் பயந்து அப்பியாசம் செய்யாமல், விட்டுவிடுவார்களென்று எண்ணியே ஒவ்வொரு பதிப்பிலும் சுவாசம் வெளிவிடாமல் நிறுத்த சிறுகச்சிறுக வுயர்த்திக்கொண்டே வந்து, ஐந்து ஆறு ஏழு எட்டாம் பதிப்பில் எல்லாம் முடிவாய்

உபதேசித்துவிட்டனர். இனி ஒன்பதாம் பதிப்பு முதல் இந்நூலையே அச்சிட்டுக்கொண்டு போகப்படும்; இதில் சேர்ப்பது ஒன்றுமில்லை.

ஓர் அரசன், வேற்றரசனை ஜயிக்கக் காட்டின் வழியாய்ச் செல்லும்போது, முதலில் பயனீர் (pioneer) பட்டாளம் காடுகளை வெட்டி (ரோட்டு) பாட்டை போட்டுக்கொண்டே செல்வார்கள். பிறகு, அவர்களைப் பின்தொடர்ந்து பதாதிகளும், (சிப்பாய்களும்) அவர்களுக்குப்பின் குதிரைவீரர்களும், அவர்களுக்குப்பின் பீரங்கிகளும், அவைகளுக்குப்பின் அஜிடன் மேஜர் கர்னல் முதலானவர்களுடன் சென்று யுத்தகளம் சேர்ந்து, வேற்றரசனை ஜயிக்கின்றார்கள். அதுபோல் இந்த தேகமென்னும் காட்டில் 'ஆத்மா' என்னும் அரசன் வசித்துக்கொண்டிருக்கின்றான். அவனை தரிசிப்பதற்காக, மூக்கு ரந்திரங்களின் வழியாய் சுவாசத்தை யிழுத்து, நுரையீரல் வலது இடது அல்லையில் (விலாக்களில்) இருக்கும் நுரையீரல் நிறையப் பிடித்து நிறுத்தவேண்டும் சரீரத்தில் எழுபத்தீராயிரம் ரோமத் துவாரங்களுண்டு. இந்த ரோமத்துவாரங்கள், மாமிசம், ரத்தம், கொழுப்பு முதலானவைகளினால் மூடப்பட்டிருக்கின்றன. அவைகளை யெல்லாம், முன் நுரையீரலில் நிறுத்திவைத்திருந்த சுவாசமானது, இந்தச் சரீரத்தில் ஓடிக்கொண்டிருக்கும் ரத்தக்குழாய்களின் வழியாய் கூரான அம்புபோல், எழுபத்தீராயிரம் ரோமத் துவாரங்களின் வழியாய்ச் சென்று, தூர்மலங்களை யெல்லாம் வியர்வையுடன் சேர்த்து, ஒவ்வொரு ரோமத் துவாரங்களின் வழியாய் வெளியில் கொண்டுவந்துவிடும். அந்த சமயத்தில் தேள் கொட்டிவிட்டால் எவ்வளவு பாதையை உண்டாக்குமோ அவ்வளவு பாதையை, யோகாப்பியாசியினுடைய சரீரமெங்கும் உண்டாக்கும். அப்போது, சரீர

மெல்லாம் அலண்டு அந்தந்த நாடி நரம்புகள் தளர்ந்து, தம்தம் ஸ்தானங்களை விட்டுக் கிளம்பி அந்த நாடிகள் சர்ப்பம்போல் சீறிக்கொண்டு, காதுகளின் வழியாய் தச (பத்து) வித வாத்தியங்கள், 'ஓம்' என்னும் சப்தத்தி லிருந்து உண்டாய் சதாகாலமும் நாதசப்தம் காதில் கேட்டுக்கொண்டிருக்குமென்றும், இதை அனுபவத்தால் பிரத்தியக்ஷமாய்க் காணலாம் என்றும் சொல்லினர். இது விஷயம் "தசவித நாதங்கள்" என்பதில் சுருதிப் பிர மாணங்களுடன் இந்நூலில் முன் சொல்லப்போகின்றார்.

இவ்வித கஷ்டத்துடன் பிராணயாமம் செய்யப்பட்ட வர்களுக்கு சுவாசம் தேகமாத்யந்தம் கூரான அம்புபோல் செல்வதனால் பாதப் பெருவிரல்முதல் உச்சிவரையிலுள்ள அவயவங்களெல்லாம் ரணம்போலிருக்குமென்றும், அப் படிப்பட்ட சமயத்தில் ஆகாரம் புசிக்கவேண்டுமென்று நினைத்து எந்தக் கைகளையாகிலும் சரி, வாயினிடம் கொண்டுபோக நினைத்தால் கை மேல்கிளம்ப சக்தியற்றதா யிருக்குமென்றும் சொல்லினர். அப்போது இடதுகைச் சகாயத்தினால், வலதுகையை மெதுவாய் மேலுக்கெடுத்து, வாயினிடம் கொண்டுபோய் வைக்கவேண்டுமென்றும், இவர் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து யோகாப்பி யாசம் செய்யவேண்டுமென்று எண்ணினால், தேகமெல் லாம் அதிக நோயாய் இருப்பதனால் அதுசமயம் எழுந் திருக்கச் சக்தியற்று மெதுவாய்க் கைகளை ஊன்றி எழுந் திருக்க இரண்டு நிமிஷங்கள் செல்லுமென்றும், படுக்க வேண்டுமென்றாலும் அவ்வளவு கஷ்டமாகவே படுக்க வேண்டுமென்றுஞ் சொல்லினர். இவ்விதமாய் எவ்வளவு, கஷ்டங்க ளிருந்தபோதிலும் அந்த நோய்களையெல்லாம் சகித்துக்கொண்டு பிரதிதினம் காலை பகல் மாலைகளிலும் தவறாமல் பிராணயாமம் செய்துவந்தால், முன்சொல்லிய

பயாீர்பட்டாளம் ஆயுதங்களுடன் சென்று, காட்டை வெட்டி பாட்டை போட்டதுபோல், முன் நுரையீரலில் நிறுத்திவைத்திருந்த சுவாசமானது, கூரான அம்பு போன்ற ஆயுதம் போல் சென்று தேக மென்னும் காட்டைத் துளைத்துக்கொண்டு சுவாசம் சரீரமெங்கும் தாராளமாய்ச் செல்ல பாட்டையை உண்டாக்கிக்கொள்ளு மென்றும், சுவாசம் தாராளமாய்ச் செல்ல பாட்டை உண்டான பிறகு முன் சொல்லிய நோய்களெல்லாம் நீங்கிற் றென்றும், நோய் நீங்கின பிறகு தேகத்திற்கு அதிக பலம் வந்ததென்றும் சொல்லினர், சுவாசம், தேகமெல்லாம் தாராளமாய் ஓடித்திரிய வழியை உண்டாக்கிக்கொண்ட பிறகு சுவாசம் நாபிக் கமலத்தினிடம் சென்று, அவ்விட மிருக்கும் குண்டலிசக்தியை மேற் கிளப்புகின்றது. மேல் கிளப்பினவுடனே அதிலிருந்து யோகாக்நிசுவாலை உண்டா கின்றது. அந்த யோகாக்நிசுவாலை இந்நூலுக்கு முதலில் சுவாமிகளின் படத்திற்கு முன்னிருக்கும் கணபதி படத் திற்கு நான்காவது விக்கிரகத்தில், யோகாக்னி அக்நிஹோத்ர தியாந சமாதிபூஜா என்று ஆங்கிலேய பாஷையில் எழுதப் பட்டிருக்கின்றது. அந்த யோகாக்நியினால், சஞ்சித மென்னும் புண்ணிய பாபங்களின் மூட்டையை பஸ்மம் செய்விக்கவேண்டுமே யொழிய, மற்ற எப்படிப்பட்ட யக்ஞ யாகாதிகளைச் செய்து உண்டாகும் புண்ணியங்களி னால் சஞ்சிதமென்னும் மூட்டை பஸ்மமாகமாட்டா: அந்த யக்ஞ யாகாதிகளினால் புண்ணியம் விசேஷித்து மேலான ஜன்மங்களை யெடுத்துக்கொண்டு செல்லுமே யொழிய மோக்ஷ சாம்ராஜ்ஜிய பதவியை உண்டாக்கமாட்டா. முன் சொல்லிய நோய்களை யெல்லாம் இந்நூலாசிரியர் 1891ஸு மனுபவித் திருக்கின்றார். இப்படிப்பட்ட கஷ்டசாத்திய மான பிராணாயாமம் எவ்வளவு செய்து விட்டுவிடுகின்றார்

களோ அதற்குத்தக்க பலத்தைத் தரும். இவ்வித நோய்களுடன் கஷ்டப்பட்டு சுவாசத்தை சுவாதீனம் செய்துகொண்டு நிர்விகல்ப சமாதியிலிருந்தால் என்ன பலன் அடையலாமென்றால்,

"யாமமாத்ரம் வாஸுதேவம் சிந்தயேத் கும்பகேந ய:
ஸப்தஜந்மார்ஜிதம் பாபம் தஸ்ய நஶ்யதி யோகிந:'

என்னும் த்ரிசிகி பிராஹ்மணோபநிஷத் வாக்கியரீதியாய், ஒருமணி (இரண்டரை நாழிகை) சுவாசம் வெளிவிடாமல் கர்ப்பத்தில் நிறுத்தினால், தன் மனம் வாசுதேவனில் லயிக்கும். அப்படி ஒரு மணிநேரம் வாசுதேவனில் அதாவது பிரம்மத்தில் லயித்திருந்தால், ஏழு ஜன்மங்களாய்ச் செய்துவந்த புண்ணிய பாபங்கள் முன்சொல்லிய யோகாக்கினியினால் பஸ்மமாகும். சதாகாலமும் நிர்விகல்ப சமாதியி லிருந்தால் அனேக ஜன்மங்களாகச் செய்துகொண்டுவந்த புண்ணிய பாபங்களெல்லாம் யோகாக்கினியினால் எரிந்துவிடும். பிறகு அவர்களின் வம்சத்தில் வந்த இருபத்தோர் தலைமுறையாற் எங்கெங்கு ஜனித்திருக்கின்றார்களோ அவர்களின் புண்ணிய பாபங்களும் பஸ்பமாய். அவர்களும் மோக்ஷமடைகின்றார்கள். முன் சொல்லிய சமாதியில் இருக்கக் கடப்பை ஜில்லா ராயசோடி தாலூக்கா வீரபல்லி போஸ்டைச் சார்ந்த கடிகோட்டை என்னும் மலையடிவாரத்தில் குஹாலய கட்டடம் கட்ட ஏற்பாடு செய்திருப்பதனால் அதற்குப் பொருள் சகாயம் வேண்டும். கிருகஸ்தாசிரமம் எப்படிப்பட்டதென்றால், வரப்பட்ட அதிதி அப்பியாகதிகளுக்கு உண்டாகும் பசியைத் தணிப்பதற்கும், ஸந்நியாசிகள் யோகிகள் இச்சைகொண்டிருக்கும் காரியங்களைத் தம்மால் இயன்றவரையில் ஈசுவரார்பணமாய்த் தந்து அவர்களின் மனோபீஷ்டத்தைப் பூர்த்திசெய்யும் பொருட்டு, இல்லற தருமம் ஏற்பட்

தென்று பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது. இதற்கு சுருதிப் பிரமாணம்:

சுரு || ஸர்வேஷாமபி சைதேஷாம் வேத ஸ்மிருதி விதாநத:
க்ருஹஸ்த உச்யதே ஸ்ரேஷ்ட: ஸத்ரீநேதாந் பிபர்த்தி ஹி.

என்னும் மநுஸ்மிருதி வாக்கியரீதியாய், பிரம்மசர்யன் கிருகஸ்தன், வாநப்பிரஸ்தன், ஸந்யாசி என்னும் நான்கு ஆசிரமங்களிலும் கிருகஸ்தனே என்றால், பார்யாளுடன் கூடி சம்சாரியாய் இருக்கப்பட்டவனே சிரேஷ்டன். மற்ற மூவரும் அதாவது, பிரம்மசாரி (விவாகமில்லாதவன்) வானப்பிரஸ்தன், ஸந்யாசி இம்மூவரையும் கிருகஸ்த்தனே என்றால், சம்சாரத்துடன் இருக்கப்பட்டவனே அன்ன பானுதிகளைக் கொடுத்துக் காப்பாற்றுகின்றான். ஆதலால், சம்சாரியே எல்லோரிலும் மிகவும் சிரேஷ்டமானவன்.

சலோ || யதா நதீநதாஸ்ஸர்வே ஸாகரே யாந்தி ஸம்ஸ்த்திதிம்,
தைத வாஸ்ரமிண ஸ்ஸர்வே க்ருஹஸ்த்தே யாந்தி
[ஸம்ஸ்த்திதிம்.

என்னும் மநுஸ்மிருதி வாக்கியரீதியாய், சகல நதிகளும் சமுத்திரத்தில் சேருவதுபோல் பிரம்மசர்யன், வாநப்பிரஸ்தன், ஸந்யாசி இம்மூவரும் சம்சாரியை ஆசிரயித்து ஜீவித்திருப்பதனுல் எல்லோரிலும் சம்சாரியே சிரேஷ்டமானவன். இதற்கு நிஷ்டானுபூதி பிரமாணம்,

"நிட்டை மேவு நிருமல யோகியர்
கட்ட வோற் கலைக ளுதவுவோ
ணிட்ட மாயிரு பத்திரண் டாம்பவத்
தெட்ட ரும்பத மெய்துவ துண்மையே."

"சாத னைக்குண் முயலுந் தகைமையோர்
பாத முச்சிப் படியப் பணிபவ
ரோது மங்க மொருப திரட்டியிற்
றீதில் வீடு பெறுவது திண்ணமே."

"ஞான கிட்டையை நல்குநற் றேசிகன்
மான முற்றிடு மானிட னல்லனால்
வான முற்று வளர்கயி லைப்பரன்
றானெ னத்தினஞ் சாற்றிட லாகுமால்."

ஆணவம் காம்யம் மாய்கையென்னும் மும்மலங்களையும் ஜயித்து நிஷ்டை செய்துகொண்டிருக்கும் யோகிகளுக்கு, கட்ட வஸ்திரம் கொடுக்கப்பட்டவர்களும், அவர்கள் மனதை சந்தோஷப்படுத்தினவர்களும் திடமாய் இருபத்தி இரண்டாம் பிறப்பில், கிடைப்பதற்கு அரிதாகிய பதவியை அடைவார்கள்.

சாதனை செய்யும் யோகிகளையும், பெரியோர்களையும் பாதம் முதல் உச்சிவரையில் பூமியில் படும்படி சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்து பணிந்து பூசித்து வரப்பட்டவர்கள், இருபதாவது பிறப்பில் மோக்ஷமென்னும் வீட்டை அடைவார்கள்.

சந்தியாவந்தனம் முறைப்படி செய்து அதின் அநுபவத்தால் பிராணாயாம விதிகளைக் காட்டி யோகநிஷ்டையை அறிவிக்கும் உண்மை குருவானவர் மானிட சட்டையைத் தரித்திருப்பினும் அவரை மானிடராய் நினையாமல், ஆகாயத்தை அளாவி உயர்ந்த கைலயங்கிரியில் எழுந்தருளியிருக்கும் பரமசிவனேயென்று நினைத்து அவரை எப்பொழுதும் பூஜித்துவரவேண்டும்.

சுலோ || "த்ருதிः க்ஷமா அஸ்தேயம் பௌசமிந்த்ரிய நிக்ரஹः
தீர்வித்யா ஸத்யமக்ரோதோ தஸகம் தர்மலக்ஷணம்."
"தஸல ஹணநி தர்மஸ்ய யே விப்ரா ஸ்ஸமதீயதே
அதீத்ய ஸாநுவர்தந்தே தே யாந்தி பரமாம் கதிம்."

என்னும் மநுஸ்மிருதி வாக்கியரீதியாய், சந்தோஷம் கெடுதிசெய்தவனுக்குக் கெடுதிசெய்யாமலிருப்பது திருட்

டுத்தன மில்லாமலிருப்பது, நல்ல ஆசாரத்துடன் இருப்பது, கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகசர்மம் என்னும் ஐந்து இந்திரியங்களின் வழியாய் மனதை ஓடவிடாமல் நிறுத்துவது, வேதாந்த சாஸ்திர விசாரணைசெய்வது, சத்தியம் தவறாமலிருப்பது, கோபமில்லாமலிருப்பது, மனதின் இஷ்டம்போல் நடவாமலிருப்பது, ஆத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் பேதம் நினையாமலிருப்பது, இந்த பத்து தர்மங்களும் உடையவனே மோக்ஷமடைவான்; மற்றவர்கள் அடையார்கள். சம்சாரிக்கு இந்த பத்துகுணங்களும் இருக்கும்பக்ஷத்தில் சத்தியமாய் அவனே மனோ ஸந்நியாசமடைந்த மஹாத்மா என்று சொல்லப்படும்.

இல்வாழ்வா னென்பானியல் புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை.

ஆதலால், நீங்கள் ஈசுவரார்ப்பணமாய்த் தர்மம் செய்துவந்தால், அதனால் உண்டாகும் புண்ணியம் சஞ்சிதம் என்னும் புண்ணியத்தில் போய்ச் சேரமாட்டா. அவ்வாறு புண்ணியம் உண்டாகாவிட்டால் என் தர்மம் செய்ய வேண்டும் என்று ஓர் கேள்வி உண்டாகின்றதல்லவா? அதற்குக் காரணம் சொல்லுகின்றோர் கேளுங்கள். இச்சைக் கொண்டு காமியரூபமான கர்மங்களைச் செய்துவரும் புண்யத்தினால், சரீரமெடுத்து அந்த புண்யபலனை அனுபவிக்கவேண்டும். பலன்களைக்கோராமல் நிஷ்காம கர்மரூபமான கர்மங்களைச்செய்து வருவார்களாகில் மோக்ஷத்தைத் தரத்தக்க புண்ணியம் உண்டாகும். ஆதலால், இதை வாசிக்கும் ஸகோதரிகளும் ஸகோதரர்களும் சுவாமிகளின் கட்டட தர்ம கைங்கரியத்திற்காக அவரவர்களுக்கு இயன்றவரையில், சக்தியானுசாரம் ஈசுவரார்ப்பணமாய் தருமம் (கொடுக்கும்) தொகையை அடியில்கண்ட சுவாமிகளின் விலாஸத்திற்கு அனுப்பவேண்டும். இது விஷயமாய்

தேககஷ்டமெடுத்துத் தொகை வசூல்செய்து அனுப்பப் பட்டவர்களுக்கு விசேஷ புண்யம் உண்டாகும்.

அந்தமில் ஞானி யருளை யடைந்தக்கா
லந்த வுடலுன் குகைசெய் திருத்திடிற்
சுந்தர மன்னருந் தொல்புவி யுள்ளோரு
மந்தமி லின்ப வருள் பெறுவாரே.

சச்சிதா நந்த சங்கர னாகவே
யச்ச நீங்குபு தன்னை யறிந்தவன்
றுச்ச மாந்துயர்த் தோன்மலி யாக்கையை
யிச்சி யானதை யானென வெண்ணியே.

எப்பொரு டனக்கு மியானெனத் திருத்தலா லெனக்கி யாரு
மொப்பர்க ளினிய ரின்னு தாரென வொருவ ரில்லை
யிப்படி யறியு மன்பர் பக்கலே யானு நிற்ப
னப்படி யவரு மென்பா லங்ஙன மமர்ந்து நிற்பார்.''

என்னும் திருமந்திரம் வாக்கியரீதியாய் வெளியூர்களி லுள்ள பக்தஜன சிரோன்மணிகள் சுவாமிகளின் கட்டட தர்ம கைங்கரியத்திற்காக வசூல்செய்து,

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீசுவரர்,
கடிகோட்டை, வீரபல்லி போஸ்டு,
ராயசோடி தாலுக்கா,
கடப்பை ஜில்லா.

என்னும் விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

உபநயந காயத்ரீ ரகசியம்.

"ஜன்மநா ஜாயதே ஶூத்ர:, கர்மணா ஜாயதே த்விஜ:
வேதபாடந்து விப்ராணாம்,ப்ரஹ்மஜ்ஞாநந்து ப்ராஹ்மண:."

ஜன்மநா ஜாயதே ஶூத்ர: = குழந்தையாய்ப் பிறந்தவுடன் சூத்திரனாயிருக்கின்றான்; கர்மணா ஜாயதே த்விஜ: = உபநயநமென்னும் கர்மம் செய்வதனால் த்விஜ (இரண்டாவது ஜனனம் அடைந்தவ) னாகின்றான்; வேதபாடந்து விப்ராணாம் = வேதங்களை வாசிப்பதனால் விப்பிரனாகின்றான்; ப்ரஹ்ம ஜ்ஞானந்து ப்ராஹ்மண: = பிரம்ம ஞானமடைந்தவன் பிராமணனாகின்றான்.

ஓ சகோதரிகளே! ஓ சகோதரர்களே! குழந்தையானது பிறந்தவுடன் சூத்திரனா இருக்கின்றான், அவனுக்கு எட்டாவது வயதில் உபநயநம் (உப = மேல் இருக்கப்பட்ட, நயநம் = கண், அதாவது, மூன்றாவது கண்ணைத் திறப்பிப்பது உபநயநம்.) என்றால், நெற்றிக்கண்ணைத் திறக்கச்செய்தால், இரண்டாவது ஜன்மத்தை அடைந்தவனாகின்றான். உபநயந காலத்தில் மூன்று இழைகளையுடைய பூணூலை (பூணும் நூல்-பூநூல்,) மாத்திரம் கழுத்தில் போடுகின்றார்கள்.

ஓ யோகீசுவரரே! உபநயநகாலத்தில் 2, 4, 5, இழைகளையுடைய பூணூலைப் போடாமல் மூன்று இழைகளையுடைய பூணூலைமாத்திரம் கழுத்தில்போடுவதற்குக் காரணமென்ன? இதன் ரகஸ்யத்தைத் தெரியச்சொல்லும் சுவாமி

நாயநா! பெரியோர்கள் இதை மஹா கோப்பியமாய் வைத்து எவர்களுக்கும் உபதேசம் செய்யாமல் அனேகர்களை பரீக்ஷித்து மர்க்கட (குரக்குப்பிடி) ரூபமாயிருக்கும் சிஷ்யனுக்கு உபதேசித்துப் பிறகு, தாம் மார்ஜால (பூனை)

ரூபமாயிருந்து கற்றுக் கொடுக்கின்றார்கள். அதாவது, குரங்கின் குட்டி அரைநிமிஷமாகிலும் தாயை விடாமல் வயிற்றைச் சேர்த்து அணைத்துப்பிடித்துத் தாய் எத்தனைக் கிளைகளின்மீது ஏறி எகிரிக் குதித்தாலும், குரங்குக்குட்டி தாயை விடாமல் தானும் தாயின் வயிற்றைக் கட்டிக் கொண்டு அதனுடன் கூடவே எகிரிக்கொண்டும், நடக்கும் போது வயிற்றைவிடாமல் கவ்விக்கொண்டும் செல்லும். இதுவே மர்க்கடரூபமென்று சொல்லப்படும். அதுபோல், மேற்படி குரங்குக்குட்டியைப்போல் விடாமல் சதாகால மூம் குருசேவை செய்துகொண்டுவரும் சிஷ்யன்மீது குரு விற்கு அனுக்கிரகம் உண்டாய், குரு ரகசியத்தை உப தேசிக்கின்றார். பிறகு பூனை குட்டிபோட்டவுடன் அதை ஓரிடத்திலேயே வையாமல், தான் எங்கெங்கு செல்லுகின் றதோ ஆங்காங்கு குட்டிகளை வாயில் கவ்விக்கொண்டு போய் பல இடங்களில் வைப்பதுண்டு. அதுபோல் குரு வானவர்,குரங்குப் பிடியைப்போல் தன்னுடன் கூடவே யிருந்த சிஷ்யனுக்கு உபதேசம் செய்த பிறகு, மேற்படி குருவானவர்,முன்சொல்லிய பூனைக்குட்டியைப்போல் சிஷ் யனை கைவிடாமல் தான் எங்கெங்கு சென்றாலும் அவனை ஆங்காங்கு அழைத்துச்சென்று, தன் சமீபமாய் வைத்துக் கொண்டு பிரதிதினம் தான் உபதேசித்ததை ஜபம் செய் யும்படி தூண்டிக்கொண்டே யிருப்பார். உபதேசிப்பத னால் இப்படிப்பட்டகஷ்டங்கள் தமக்கு உண்டாகுமென்று எண்ணியே, பெரியோர்கள் மிகவும் ரகஸ்யமானபொருளை உபதேசம் செய்யாமல் ஏதோ ஓர் மந்திரம் ஜபிக்கும்படிச் சொல்லிவிட்டுச் சென்று விடுவார்கள். அப்படிப்பட்ட மகா ரகஸ்சியம் நீ இப்போது கேட்கின்றாய்அதை எல்லோ ரும் அறிந்து, அதுபோல் சுவானுபவத்திற்குக் கொண்டு வர, இந்நூலில் சொல்லுகின்றோம் கேட்கக் கடவாய்.

"அறியாத பாவிக்கு ஞானமேது
ஸச்சிதாநந்தன் சொன்னதொரு நூலைப்பாரு
பரிபாஷை யாகவுந்தான் சொல்லவில்லை
பிரம்மைக்கிய மென்னுடைய நூலைப்பாரு
விரிவாகச் சித்தர்சொன்ன நூலையெல்லாம்
வீணுக மறைப்பாகச் சொன்னுரையா
குறியான அண்டமதை யொளித்தேவிட்டார்
கூறினர் வெவ்வேருய்க் குற்றந்தானே"

நாயனு ! எல்லா சாஸ்திரங்களிலும் மறைவாகச்சொல்லியதுபோல் இந்த ஜீவப் பிரம்மைக்யத்தில் சொல்லாமல் எல்லா ரகசியமும் வெட்டவெளியாய் இதில் கூறியிருக்கின்ரேம். ஏனென்ருல், எங்கள் பரம்பரை வெட்டவெளியாயிருப்பதனுல், எல்லா ரகசியங்களும் இந்நூலில் வெட்டவெளியாகவே சொல்லிக்கொண்டு வருகின்ரேம். இப்போது நீ கேட்ட கேள்வியும் வெட்டவெளியே. அதற்குப் பதில் சொல்லப்போவதும் வெட்டவெளியே. அதாவது, இப்பொழுது சொல்லப்போகும் விஷயத்தை நீ அப்பியசித்து வருவாயாகில் மனம் சூந்யமாய் வெட்டவெளியில் ஐக்கியமாய் விடுவாய். ஆதலால், அதனை இதனடியில் சொல்லுகின்ரேம் கேள்.

நமது சரீரத்தில் எழுபத்தீராயிரம் ரோமத் துவாரங்களுண்டு. இதையே, எழுபத்தீராயிரம் நாடிகளென்று சொல்லுவார்கள். இதில் நூற்றெட்டு நாடிகள் சிரேஷ்டமானவைகள். அவைகளில் சுழுமுனை, இடைகலை, பிங்கலை, குஹூ, சரஸ்வதி, யசஸ்வநி, பூஷ, விசுவோதர, வருண, அஸ்திஜிம்ஹ, பயஸ்வநி, சங்கினி, காந்தாரி, அலம்புஸ என்னும் இந்த பதினன்கு நாடிகளும் சிரேஷ்டமானவைகள். இவைகளிலும் இடைகலை பிங்கலை சுழுமுனை என்னும் இம்மூன்று நாடிகளும் மிகவும் சிரேஷ்டமானவைகள்.

இம்மூன்று நாடிகளும் வலது இடது நாசிகைகளிலும் புருவமத்தியிலும் இருந்துகொண்டு உசுவாச நிசுவாசங்களாய் ஆடிக்கொண்டிருக்கின்றன. இந்த மூன்றுநாடிகளே மூன்று யஞ்ஞோபவீதமென்று (பூணூலென்று) அறியக்கடவாய். கழுத்தில் தரித்திருக்கும் யஞ்ஞோபவீதம், கைகளால் பிடித்து அறுக்கத்தக்கதும், ஆவணியாவட்ட தினத்தில் கழற்றி எறியத் தக்கதுமா யிருக்கின்றது. சரீரத்தில் மூக்கின் துவாரங்களின் வழியாய் ஆடிக்கொண்டிருக்கும் யஞ்ஞோபவீதம், கைகளால் பிடித்து அறுக்கத்தக்கதும் ஆவணியாவட்ட காலத்தில் கழற்றி எறியத்தக்கதுமல்ல; அன்றியும், உபநயநகாலத்தில் வந்த நூலிழை யஞ்ஞோபவீதம்போல் மத்தியில்வந்ததல்ல. இது, அனேக ஜன்மங்களாய் ஜாதி குலபேதமில்லாமல் அந்தந்த வம்சத்தில் ஜனனகாலம் முதல் மரணகாலம் வரையில் சரீரத்துடன் கூடவே வந்து கொண்டிருக்கின்றது. இதுவே சகல ஜீவஜந்துக்களின் சரீரங்களிலும் மூக்கின் துவாரங்களின் வழியாய், உசுவாச நிசுவாசங்களாய் ஆடிக்கொண்டிருக்கும் சுவாசமே யஞ்ஞோபவீதமென்று சொல்லப்படும். மத்தியில் உபநயனமென்று பெயர் வைத்து மூன்று நூலிழைகளையுடைய பூணூலை கழுத்தில் தரித்துக்கொள்வது யஞ்ஞோபவீதமல்ல. இந்த பூணூலின் அந்தரார்த்தம் இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—இந்தப் பூணூல் செய்யும் முறை நான்குவகையுண்டு. அதாவது, தங்கத்தினால் செய்வது தர்ப்பையினால் செய்வது மரத்தின் நார்களினால் செய்வது பருத்தி நூலினால் செய்வது என்று ஆகமங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. உலகத்தில் விசேஷமாய் பருத்திநூலில் பூணூல் செய்துகொண்டு வருகின்றார்கள். இதைச் செய்யும் பிராமணர்கள் ஸாஸ்த்திர விதிப்படிச் செய்வதில்லை. பூணூல் ஸாஸ்த்திர விதிப்படிச் செய்ய

வேண்டிய முறை இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

பரித்திச் செடியிலிருக்கும் விரிந்தபரித்தியை, கன்னிகைப் பெண்கள் கொண்டுவந்து அவர்களே அப்பரித்தியை ராட்டினத்தில் வைத்துத் திருப்பி விதை எடுத்து அப்பரித்தியை நூலாய்த் திரித்து, அந்த நூலை அக்கன்னிகைகளே, மூன்று இழைகொண்ட பூணூலாக முறுக்கவேண்டுமென்று, ஆகமங்களில் சொல்லியிருக்கின்றது. பூணூலைக் கன்னிகைப் பெண்கள் முறுக்கும்போது தொண்ணூற்றாறு பிடி நீளம் மூன்றிழையாய் முறுக்கி, அந்நூலை அதாவது, இடதுகை ஆள்காட்டும் விரல் நடுவிரல் மோதிரவிரல் சுண்டுவிரல் இந்நான்கு விரல்களினும் சுற்றி அதை மூன்றாய் மடித்து முறுக்கி, சாவித்திரி யென்றும், பிரம்ம கிரந்தி யென்றும், நாகபாசமென்றும் சொல்லப்பட்ட பெயரையுடைய முடிச்சியில் ஒரு முடிபோட்டு வைக்கவேண்டும். இப்பூணூல் மூன்றிழையாய் முறுக்கி ஒன்றாய் மடிப்பதால், மொத்தம் ஒன்பது இழையாகின்றது. இப்பூணூல், பிராமண க்ஷத்திரிய வைசியர்களில், பிள்ளை பிறந்த எட்டு பன்னிரெண்டு பதினாறு வயதில் அவரவர்களின் ஜாதிக்குத் தக்கபடி பூணூல் கழுத்தில் போடுவார்கள். வைதீக பிராமணர்கள், தன் குமாரனுக்கு உபநயனம் செய்த பிறகு, அவன் கையில் ஜலம் வாங்கிச் சாப்பிட்டு அவனுடன்கூட பந்திபோஜனம் செய்வார்கள். அதற்குமுன் அவன் பிள்ளையாயிருந்த போதிலும், அவனைச் சூத்திரனைப்போல் நினைப்பார்கள். ஏனென்றால், பூர்வஜன்மத்தில் அவன், சண்டாளனோ மிலேச்சனோ (மகம்மதியனோ) சூத்திரனோ வைசியனோ க்ஷத்திரியனோ தெரியவராது. அப்படிப்பட்டவனுக்கு உபநயனம்செய்து தம் பிராமண குலத்தில் சேர்த்துக்கொள்ளுகின்றார்கள். அவனை இவ்வாறு சேர்த்துக்கொண்ட பிறகு,

அவன் கர்மவிதிப்படி பிரதிதினம் செய்யவேண்டிய கர்மா னுஷ்டானங்களைச் செய்துகொண்டு வருவான். என்றால், ஸாஸ்திர விதிப்படி பூணூல் தரித்தால் அவன் சிவபூஜை, பிராமண பந்திபோஜனம் முதலானவைகள் செய்ய யோக்கியதை உடையவனாவான் என்று சாஸ்த்திரமுறை இருக்கின்றது. அதன் ரஹஸ்யார்த்தம் இதனடியில் தெரிவிக்கின்றோம் கேளுங்கள்:—

உலகத்திலுள்ள ஜனங்களில் சிலர் பிராமண க்ஷத்திரிய வைசிய இம்மூன்று ஜாதியாரும் பூணூல் போடவேண்டுமென்றும், சூத்திரர்கள் போடலாகாதென்றும் ஒருவரோடொருவர் வாதாடிக்கொண்டிருப்பார்கள். இப்பூணூல் எல்லோரும் அணியத்தக்கதேயாம். சூத்திரர்கள் சரியான ஆசாரத்துடன் இராததனால் அவர்களுக்கு விவாக காலத்திலும், பிதுர் தர்ப்பணங்கள் செய்யும்போதும், உத்தர கிரியைகள் செய்யும்போதும் கழுத்தில் பூணூல் போடுகின்றார்கள். இப்பூணூல் கர்மத்திற்கேயொழிய ஞானத்திற்கு இல்லை.

அதாவது, பூணூல் என்பது சகல ஜீவராசிகளின் மூக்கு ரந்திரங்களின் வழியாய் உள்ளுக்கும் வெளிக்குமாய் ஆடிக்கொண்டிருக்கும் மூச்சுக்கே, யக்ஞோபவீத மென்றும் பிரம்ம சூத்திரமென்றும் ஹம்ஸமென்றும் பூணூலென்றும் சுவாசமென்றும் மூச்சென்றும் பிராணனென்றும் வாசியென்றும் காலென்றும் சொல்லப்படும். முதல் கர்மவிதிப்படி நூலிழைகளையுடைய பூணூலைக் கழுத்தில் போட்டு, எல்லா கர்மங்களையும் செய்துமுடித்து பிறகு மூக்கு ரந்திரங்களின் வழியாய் ஆடிக்கொண்டிருக்கும் பூணூல் ரஹஸ்யம் குருவினால் தெரிந்துக்கொள்ளும் வரையில், கழுத்தில் பூணூல் போட்டு கர்மவிதிகளைச் செய்து வருவதற்காக நூலிழைகளையுடைய பூணூல் கழுத்தில்

போடும்படி, ஆகமங்களில் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அதாவது, பருத்தியை நூலாய் முறுக்கி அதை மூன்றாயும் ஆறாயும் ஒன்பதாயும் மடித்துக் கழுத்தில் போடுவதற்குக் காரணம் இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

அய்யா! பூணூலுக்கு ஆதாரம் பருத்தி: பருத்திக்கு ஆதாரம் விதை; பருத்தியிலிருக்கும் விதையை பிரத்தியேகப்படுத்தினால் அப்பருத்தி பரிசுத்த வெண்மையாகும். இதுபோல் ஜன்மத்திற்கு ஆதாரம் ஆசை என்னும் விதை. இவ்வாசை யென்னும் விதையை பிரத்யேகப்படுத்தினால் ஜீவன், மேற்சொல்லிய பரித்தியைப்போல் பரிசுத்த வெண்மையாய் மோக்ஷத்தைபடையும். என்றால், சகல ஆசைகளையும் ஒழித்தவன் சுத்தப்பிரம்மமாகின்றான். மேற்சொல்லிய பருத்தியானது முதல் அணு அணுவாய்ச் சேர்ந்து பிறகு பருத்தியாயிற்று. அதுபோல் ஜீவர்களும், பிரம்மத்திலிருந்து அணு அணுவாய் வந்து ஜன்மித்திருக்கின்றார்கள். அணுவாய் ஜன்மித்த ஜீவர்களெல்லோரும் எந்த ஜன்மத்திலேயோ ஓர் ஜன்மத்தில் மாயை யென்னும் திரையை நீக்கிக்கொண்டு, மறுபடியும் அந்த பிரம்மத்தில் போய்ச் சேரவேண்டியது நிஸ்சயம். மேற்சொல்லிய பருத்தியை உடைத்து விதை எடுத்து அப்பஞ்சை ராட்டினத்தில் வைத்து முறுக்கினால் அப்பஞ்சு நூலாகின்றது. தொண்ணூற்றாறு தத்துவங்கள் இருப்பதனால் மேற்படி நூலை தொண்ணூற்றாறு விரக்கடையாய் மடிக்கவேண்டும். இவ்வாறு மடித்தபின் நமது சரீரத்தில் அனேக நாடிகளுண்டு. அந்த நாடிகளில் ஒன்பது நாடிகள் சிரேஷ்டமானது இவ் ஒன்பது நாடிகளிலும் சுழுமுனை நாடியே மிகவும் முக்கியமானதாதலால் மேற்படி நூலை ஒன்பது மடிப்பாய் மடித்து மத்தியில் ஒரு முடி போடுவார்கள். இம்முடியே சுழுமுனை நாடி; மேற்சொல்லிய பத்து நாடிகளிலும், நமது

மூக்கின் ரந்திரங்களின் வழியாய், இடைகலை பிங்கலை சுழு முனை என்னும் மூன்று நாடிகள் ஆடிக்கொண்டிருப்பதனால், இம்மூன்று நாடிகளையும் ஒன்றாய்க் குறிப்பிட்டு காட்டுவதற்காக, மூன்று இழைகளையுடைய பூணூலை ஒன்றாய்ச் சேர்த்து, உபநயனகாலத்தில் சிறுவர்களின் கழுத்தில் போட்டுக் காட்டுகின்றார்கள். மேற்படி பூணூல் மத்தியில் போட்டிருக்கும் முடியைச் சுழுமுனை நாடியாய்க் காட்டியிருக்கின்றார்கள். சுழுமுனைநாடி நாபியில் இருப்பதால், மேற்படி பூணூல் முடியை நாபியினிடம் நிறுத்த வேண்டும். நாபியிலிருக்கும் சுழுமுனை நாடியை, யோக பலத்தினால் மூலாதாரத்தைத் திறந்து முதுகெலும்பு மத்தியிலிருக்கும் வெள்ளை நரம்பிலுள்ள சிறிய துவாரங்களின் வழியாய் சுவாசத்தைக் கொண்டுபோய் பிரம்ம கபாலத்தில் நிறுத்தினால், தன்னைத்தான் மறந்து பிரம்மத்தில் சேர்ந்து சொக்கி யிருப்பதே பிரம்மானந்த மென்றும், மோக்ஷமென்றும் சொல்லப்படும். ஆதலால்,

பெரியோர்கள் குருவாய் வந்து தொண்ணூற்றாறு தத்துவங்களையும் தொண்ணூற்றாறு விரக்கடை பூணூலாய்க் காட்டி, நமது சரீரம் எண்ஜாணில் அடங்கியிருப்பதனால் அப்பூணூலை எண்ஜாணாய் மடித்து கழுத்தில் போட்டு, எண் ஜாண் சரீரத்தில், உன் கழுத்தில் போட்ட பூணூலைப் போன்ற நூல், இடைகலை பிங்கலை சுழுமுனை என்னும் பெயருடன் என்றால், இடதுநாசி வலதுநாசி இரண்டு நாசியிலும் நூல் (சுவாசம்) ஆடிக்கொண்டிருக்கின்றது. ஆதலால், இந்த சுவாசமென்னும் நூலை வலது இடது நாசியில் செலுத்தாமல் மூலாதார வழியாய்ச் சுழுமுனை நாடியில் செலுத்தி, பிரம்ம கபாலத்தில் கொண்டுபோய் நிறுத்த வேண்டும். இவ்வாறு நிறுத்தியபின் தானே பிரம்மமாய் விடுவான் என்று பூணூல் மூலமாய் பிரம்மத்தை அறியும்

படி காட்டியிருக்கின்றார்கள். இதற்கு நெஞ்செறி விளக்கம் பிரமாணம்;

சத்தியுஞ் சிவமு மாகித் தாண்டவமாடும் வாசி
சுத்திய மூலாடிச் சுழிமுனை கம்பத் துள்ளே
புத்தியைச் செலுத்தி மேலாம் பொருடனை யெடுக்கவல்லார்
பத்திசெய் நாகைநாதர் பதிதனைப் பார்ப்பார் நெஞ்சே.

ஒவ்வொரு விஷயமும்,சுருதி குரு சுவானுபவ மில்லாவிடில் அவ்விஷயத்திலுள்ள ரகஸ்யம் தெரிந்துகொள்ள மாட்டார்கள். ஆதலால், கலி பெருகப்பெருக, நாமே பூணூல் போட்டுக்கொண்ட பிராமணர்கள் நம்மைவிடப் பெரியோர்கள் ஒருவருமில்லையென்று அஹங்காரங்கொண்ட சிலபிராமணர்கள், மறுஜன்மத்தில் எந்த தாழ்ந்தஜாதியிலேயோ போய்ப் பிறந்து பாழாவார்கள். ஆதலால், சுவாசமென்னும் யஞ்ஞோபவீதத்தை வெளிவிடாமல் கருப்பத்தில் நிறுத்தி ஸ்திரீ புருஷர்களும் காயத்திரீ மந்திரம் ஜபித்துவரவேண்டும். புருஷர்கள் மாத்திரம் அப்பியசித்து ஸ்திரீகள் அப்பியசிக்காவிட்டால் அவர்களை சூத்திர ஸ்திரீகளே என்று சொல்லலாம். ஸந்தியா வந்தனமென்பது பிராணாயாமமே யொழிய, மூக்கின்மீது விரல்களை வைத்து சுவாசம் விட்டுக்கொண்டு, காயத்திரீ மந்திரம் கர்மவாக்கால் ஜபித்துக்கொண் டிருப்பதல்ல. அப்படி ஜபம் செய்பவர்களைக் கர்ம பிராமணர்க ளேன்றே சொல்லப்படும். இந்த கர்ம பிராமணர்கள் வேளைதப்பி காலை 8-மணிக்கும், மாலை 7 அல்லது 8-மணிக்கும் சந்தியா வந்தனம் செய்து வருகின்றார்கள். சந்தியா வந்தனம் அந்தரார்த்தம் இவர்களுக்குத் தெரியாததனால் இவர்கள் சந்தியாவந்தனம் காலம் தவறி செய்து வருகின்றார்கள். அதன் அந்தரார்த்தம் இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள். 'ஸந்தி' என்றால் இரவும் பகலும் கூடும்வேளை;

அதாவது, இருள் நீங்குவதற்காக சூரியன் கிரணங்களுடன் புறப்பட்டு உதயமாகின்றான். அதுபோல் பகல் சென்று இருள் வருவதற்காக சூரியன் அஸ்தமிக்கின்றான். சூரியன் உதயமாகும் பொழுதும், அஸ்தமிக்கும் பொழுதும் இராக்ஷதர்கள் வந்து சூரியனைக் குறுக்கிடுகின்றார்களென்றும் அக்காலத்தில் சந்தியாவந்தனம் செய்யும்பொழுது, குளத்திலுள்ள ஜலம் இரண்டு கைகளிலும் எடுத்து அர்க்கியம் விடும்பொழுது அந்த ஜலத்திலிருந்து அணு சொரூபமாய்ப் புறப்படும் ஜலபிந்துவானது கூரான அம்புபோல் சென்று மேற்படி ராக்ஷதர்களை வதைக்கும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதற்கு கந்தபுராணம் பிரமாணம்;

ஐயர் கையில் வந் தவுணரைத் தெறுந்
துய்ய தீம் படை தோகை கண்ணுறு
வெய்ய சூர் கிளை வீட்ட வந்தென
மை புலாய கண் வாரி மிக்கதே.

ஐயர் கையில் வந் தவுணரைத் தெறுந் = தவத்திற் சிறந்த பெரியோர்களும், தபோதனர்களும், முனிவர்களும், தேவர்களும் ஒழுக்கமுடைய பிராமணர்களுமே யல்லாமல் எந்தத் தாழ்ந்த ஜாதியாரு யிருந்தபோதிலும் சரி, சந்தியாவந்தனம் செய்யும்போது குளத்திலுள்ள ஜலம் இரண்டு கைகளால் எடுத்து அர்க்கியம் விடும்போது, துய்ய தீம்படை = அதிலுண்டாகும் பரிசுத்தமான நீர்த் துளி பிந்துகள் வருணனது அஸ்திரமாய்ச் சென்று மாந்தேகர் என்னும் அசுரர்களைக் கொல்வதற்காக, தோகை கண்ணுறு வெய்ய சூர் கிளை வீட்ட வந்தென மை புலாய கண் வாரி மிக்கதே = இந்திராணி மையிடும் கண்ணில் போய்ச் சேர்ந்து, கொடிய சூரர்களாகிய சூரபத்மன் முதலானவர்களைக் கொல்வதற்காக, கண்ணினின்று விஷபாணம் போன்ற கண்ணீர் ஆறாய்ப் பெருகியது;

இங்கு ஐயர்என்பது, சாதாரண பிராமணர்களல்ல; தவத்திற்சிறந்த பெரியோர்களும், தபோதனர்களும், முனிவர்களும், தேவர்களும், ஒழுக்கமுடைய பிராமணர்களுமேயல்லாமல், எந்த தாழ்ந்த நீச ஜாதியாரா யிருந்தபோதிலும், ஆசாரத்துடனிருந்து தைவபக்தியில் சிறந்து சந்தியாவந்தனம் மந்திரங்களைக் கற்று, குளத்திலுள்ள ஜலம் இரண்டு கைகளால் எடுத்து அர்க்கியம் விடுவானாகில், அதிலிருந்து ஓடும் ஜலபிந்துவானது வருணனது அஸ்திரமாய் இராக்ஷதர்களை வதைக்கச் செல்லும். இவ்வஸ்திரங்கள் சென்றவுடன், அவ் விராக்ஷதர்கள் சூர்யனை விட்டு விலகி ஓடிப் போவார்கள். ஆதலால், எந்த ஜாதியாரா யிருந்தபோதிலும் சந்தியாவந்தனம் மந்திரங்களைக் கற்று கர்ம விதிப்படி சந்தியாவந்தனம் செய்துவருவானாகில், கர்ம பிராமணனாய்ப் பிறகு ஞான பிராமணனாவான். ஆதலால், சந்தியாவந்தனம் விதிப்படி தவறாமல் செய்து வரவேண்டும்.

சந்தியாவந்தனம் வீட்டில் செய்யும்பொழுது பஞ்சபாத்திரத்திலுள்ள ஜலம் எடுத்துப் பூமியின்மேல் அர்க்யம் விட்டால் அதிலிருந்து ஜலபிந்து ஓடமாட்டா. குளத்திலுள்ள ஜலம் இரண்டு கைகளாலெடுத்து குளத்து ஜலத்தில் அர்க்யம்விட்டால், அச் ஜலத்தின்மேல் நீர்த்துளிகள் ஓடும். ஆதலால், எல்லோரும் சந்தியாவந்தனம் குளத்தில் செய்ய வேண்டுமே யொழிய வீட்டில் பஞ்சபாத்திரத்திலுள்ள ஜலத்தால் ஸந்தியாவந்தனம் செய்யலாகாது. காலை மாலைகளில் தவறாமல் குளத்திற்குச் சென்று சந்தியாவந்தனம் செய்து வரவேண்டும் சந்தியா வந்தனம், காலை சூரியன் கிரணங்களுடன் புறப்படாமுன்னும், மாலை அஸ்தமிக்கும் சமயத்தில் சூரியன் மாரளவு இருக்கும்போதும், சந்தியா வந்தனம் செய்து வரவேண்டுமேயொழிய காலை 8-மணிக்கும், மாலை 7 அல்லது, 8-மணிக்கும் சந்தியா

வந்தனம் செய்வதனுல் யாதொரு பிரயோஜனமு மில்லை. அப்படிச் செய்வதைவிட சும்மா யிருப்பதே உத்தமம்.

சந்தியா வந்தனம் பார்த்தும் பாராமலும் செய்ய வேண்டும். என்றால், மாலையில் சூர்யனைப் பார்த்து மாரளவு பொழுது இருக்கும்போது சந்தியாவந்தனம் செய்யவேண்டும். காலையில் சூர்யனைப் பார்க்காமுன்னமே அதாவது சூர்யன் புறப்படாமுன்னமே சந்தியாவந்தனம் செய்யவேண்டும் என்பதேயாம்.

நமக்கு சந்தியாவந்தனம் எப்படி முக்கியமோ, அது போல் மகம்மதியர்களுக்கு நிமாஸ் என்பது மிகவும் முக்கியமானதா யிருக்கின்றது. மஹம்மதியர்கள் நிமாஸ்காலம் தவிர மற்றக் காலங்களில் நிமாஸ் செய்யமாட்டார்கள். இவர்கள், ரெயில் பிரயாணமாகச் சென்றால் பகற்காலங் களிலாகிலும் மாலையிலாகிலும் நிமாஸ்காலம் சமீபித்து விட்டால் ரெயிலில் உட்கார்ந்திருக்கும் புருஷர்களை சற்றே விலகி யிருக்கும்படிச் சொல்லி, குட்டையைக் கீழே விரித்துப்போட்டு அதன்மீது உட்கார்ந்து நிமாஸ் செய்கின்றார்கள். இவர்கள் கால்நடையாலாகிலும், வண்டிகளிலாகிலும் சென்றால் நிமாஸ்காலம் நெருங்கிவிட்டால், வண்டிகளை நிறுத்தி பாட்டைக்குச்சமீபமாய் இருக்கும் மைதானத்தில் குட்டையை விரித்துப்போட்டு அதன்மீது உட்கார்ந்து நிமாஸ் செய்கிறார்கள். இதுபோல் மோக்ஷத்தை விரும்பும் புருஷர்கள் எல்லோரும் எங்கு சென்றாலும், சந்தியா வந்தனம் காலம் தவறாமல் சூரியன் காலை கிரணங்களுடன் உதயமாகா முன்னும், மாலை அஸ்தமிக்க மாரளவு பொழுது இருக்கும்பொழுதும் பிரதிதினம் தவறாமல் சந்தியா வந்தனம் செய்து வரவேண்டும்.

சந்தியா வந்தன காலத்தில், காயத்ரீ மந்திரம் ஜபம் செய்யும்பொழுது பூணூலைப் பெருவிரல் ஆள்காட்டும்

விரல்களுக்கு மத்தியில் வைத்து, அந்நூலைக் கெட்டியாய்ப் பிடித்து அதைக் குட்டையால் மூடி இருதயத்திற்கு நேராய் நிறுத்தி காயத்திரீ மந்திரம் ஜபம்செய்து வருகின்றூர்கள். இதை, மிகவும் வைதீகமுள்ள சில பிராமணர்கள் மாத்திரம், முன் சொல்லியதுபோல் பூணூலை விரல்களால் பிடித்து மிகவும் நிதானமாய்க் காயத்திரீ மந்திரங்களைச் சொல்லி ஜபித்து வருகின்றூர்கள். வைதீகமில்லாத மற்றுமுள்ள பிராமணர்கள் எல்லோரும், இமைக் கொட்டுவதற்கு முன்னமே பூணூலை விரல்களால் தொட்டு சந்தியா வந்தனம் முழுமையும் ஐந்து நிமிஷங்களுக்குள் செய்து முடித்து எழுந்துவிடுகின்றூர்கள். இவர்கள் இவ்வளவு சுருக்கமாய்ச் செய்துமுடிப்பது சரியானதன்று. முன்சொல்லிய வைதீக பிராமணர்கள், பூணூலை விரல்களால் பிடித்துக் காயத்திரீ மந்திரம் மிகவும் நிதானமாய் ஜபித்து வந்தபோதிலும் அதன் அந்தரார்த்தம் நூற்றிற்கு ஒருவர் தெரிந்துகொள்வதும் மிகவும் கஷ்டம். இதன் அந்தரார்த்தம் என்னவென்றூல், பூணூலே பரமாத்ம சொரூபம், விரல்களேமனது. ஆதலால், நமது இருதய கமலமத்தில் இருக்கும் பரமாத்ம சொரூபத்தில் மனதைச் சேர்ப்பிக்கவேண்டும் என்று, பூணூலை பெருவிரல் ஆள்காட்டும் விரல்களுக்கு மத்தியில் வைத்துப் பிடித்து இருதயத்திற்கு நேராய் நிறுத்தி காயத்திரீ மந்திரம் சொல்லி ஜபம் செய்துவரக் காரணமாயிருக்கின்றதென்று அறியக்கடவீர்களாக. ஆதலால், காயத்திரீ மந்திரம் ஜபம் செய்யும்பொழுது பிராணவாயுவைக் கும்பித்து (நிறுத்தி) ஸப்த வியாஹ்ருதிகள், காயத்திரீ மந்திரம், சிரோ மந்திரங்களுடன் மூன்று முறைகள் ஜபிப்பது ஒரு பிராணுயாமமாகின்றது.

என்றூல், முதல் இடது நாசியை மூடி வலது நாசியில், உள் தங்கியிருக்கும் சுவாசமெல்லாம் சிறிதேனும் இராமல்

எல்லா சுவாசமும் வெளியில் விட்டு, அதன் தொடர்ச்சியாகவே வலது நாசியில், இருதயத்தில் எவ்வளவு சுவாசம் கொள்ளுகின்றதோ அவ்வளவு சுவாசம், ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம் என்று மனதில் நினைத்துக்கொண்டே சுவாசத்துடன் சேர்த்து கண்களை மூடி உள்ளுக்கிழுத்து நிறுத்தி,

புருவமத்தியில் ஒரு இலக்கம்வைத்து 1 ஓம்பூஃ, ஓம்புவஃ, ஓம்ஸ்வஃ, ஓம்மஹஃ, ஓம்ஜநஃ, ஓம்தபஃ, ஓம்ஸத்யம் என்றுசொல்லி பிறகு புருவமத்தியில் இரண்டு இலக்கம் வைத்து 2 ஓம்பூஃ, ஓம்புவஃ, ஓம்ஸ்வஃ, ஓம்மஹஃ, ஓம்ஜநஃ, ஓம்தபஃ, ஓம்ஸத்யம் என்றுசொல்லி பிறகு புருவமத்தியில் மூன்று, லக்கம்வைத்து 3 ஓம்பூஃ, ஓம்புவஃ, ஓம்ஸ்வஃ, ஓம்மஹஃ, ஓம்ஜநஃ, ஓம்தபஃ, ஓம்ஸத்யம் என்று இவ்வேழு மந்திரங்களையும் மூன்றுமுறை மனதில் நினைக்கவேண்டும். கண்களைமூடி சுவாசம் நிறுத்தி மந்திரம் மனதில் நினைப்பது இத்தனைமுறை யாயிற்றென்று உங்களுக்கு ஞாபகமிராது. ஆதலால், சுவாசம் நிறுத்தினவுடன் முதல் 1 என்னும் இலக்கம் மனதினால் நினைத்து புருவமத்தியில் வைத்து பிறகு ஓம்பூஃ, ஓம்புவஃ என்னும் ஏழு மந்திரங்களைச் சொல்லி பிறகு முன் புருவமத்தியில் வைத்த 1 என்னும் இலக்கம் மனதினால் எடுத்துவிட்டு அந்த இடத்தில் மறுபடியும் 2 இலக்கம் வைத்து மறுபடியும் ஓம்பூஃ, ஓம்புவஃ என்னும் ஏழு மந்திரங்களையும் சொல்லி பிறகு புருவமத்தியில் வைத்த 2 என்னும் இலக்கம் மனதினால் எடுத்துவிட்டு அந்த இடத்தில் 3 இலக்கம் வைத்து மறுபடியும் ஓம்பூஃ, ஓம்புவஃ என்னும் ஏழு மந்திரங்களைச் சொல்லி முடிப்பதே ஸப்த வியாஹ்ருதிகள் என்று சொல்லப்படும். நீங்கள் இலக்கம் புருவமத்தியில் வைத்து ஜபம் செய்யாவிட்டால் இத்தனைமுறை செய்தோமென்று உங்களுக்கு ஞாபகமிராது ஆதலால், மேற்சொல்லியதுபோல்

புருவமத்தியில் இலக்கம் வைத்தே தீரவேண்டும். சுவாசம் நிறுத்தி, மேற்சொல்லியதுபோல் ஏழு மந்திரங்களையும் மூன்றுமுறை சொல்லி முடித்தவுடன், அந்த சுவாசத்தை வெளிவிடாமலே மறுபடியும் புருவமத்தில் 1 என்னும் இலக்கம் வைத்து ஓம்பூ:, ஓம்புவ:, ஓம்ஸ்வ:, ஓம்மஹ:, ஓம்ஜந:, ஓம்தப:, ஓம்ஸத்யம், தத்ஸ விதுர்வரேண்யம், பர்கோ தேவஸ்ய தீமஹீ, தியோயோந: ப்ரசோதயாத், ஓம் ஆபோ ஜ்யோதி ரஸோம்ருதம் ப்ரஹ்ம பூர்புவ ஸ்வரோம் என்னும் பதினொரு காயத்ரீ மந்திரங்களையும் சுவாசம் நிறுத்தி, முன்போல் புருவமத்தியில் மூன்றுமுறை 1, 2, 3, இலக்கங்கள் வைத்துச் செய்யவேண்டும். இப்படி மூன்றுமுறை செய்வதே சிரோ மந்திரங்கள் என்று சொல்லப்படும். இவ்வாறு ஒவ்வொரு மூக்கிலும் சுவாசம் நிறுத்தி ஓம்பூ: என்னும் பதினொருமந்திரங்களையும் மூன்று முறைச் செய்தால் ஒருகாயத்ரி, அல்லது ஒரு பிராணயாமமென்று சொல்லப்படும். சந்தியாவந்தனம் செய்பவர்கள் ஒரு நிமிஷத்திற்குள் வலது விரல்களால் ஜலத்தைவாரி இறைத்துக்கொண்டு, கண்கள் வாய் மார்பு சிரசு பூணூல் முதலானவைகளைத் தொட்டு முடித்து வலதுகையை குட்டையால்மூடி முணமுணவென்று மந்திரம் வாயால் உதடசயச் சொல்லி சந்தியா வந்தனம் செய்கின்றார்கள். காகம் நீரை ரெக்கையால் வாரித் தம் தேகமெல்லாம் இறைத்து வாயால்தேய்த்து தம்தேகங்களைச் சுத்திசெய்து கொள்வதுபோல் அனேகர்கள் உள் அழுக்கைக் கழுவாமல் காகம்போல் நீரில் முழுகி மேலழுக்கைக் கழுவி விபூதி பூசி முணமுணவென்று உதடசய மந்திரங்களைச் சொல்லி விட்டால் யோகசித்தி அடையமாட்டார்கள். சுவாசம் நிறுத்தி காயத்ரீ மந்திரம், சிரோமந்திரம் ஜபம் செய்து வரப்பட்டவர்களே பிராமணர்களென்றும், பிரம்ம ஞானிக

ளென்றும், பெரியோர்களென்றும், யோகிகளென்றும், ஜீவேஸ்வரர்களென்றும் என்றால், ஜீவனை ஈசுவரனிடத்தில் ஐக்யம் செய்யப்பட்டவர்களென்றும் சொல்லப்படும்.

சண்டாளனானாலும், மிலேச்சனானாலும் (மகம்மதீயனானாலும்) சூத்திரனானாலும், வைஸ்யனானாலும், க்ஷத்திரியனானாலும், பிராமணனானாலும் சுவாசம் நிறுத்தி, முன்சொல்லியதுபோல் காயித்ரீ மந்திரம், சிரோமந்திரம் மனதில் நினைத்து ஜபம் செய்துவந்தால் அவர்களே பிராமணர்களாவார்கள்: இது, மைத்திரேயி சுலப சாரங்கி சாண்டிலி தபஸ்வினி முதலாகிய ஸ்திரீகளும் இன்னும் அனேகர்களும் அப்பியசித்துவந்து யோகசித்திபெற்று ஞானமடைந்தார்கள். ஆதலால், பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களாகிய நான்கு வருணஸ்தர்களும் சந்தியா வந்தனம் செய்யவேண்டிய கிரமம் இதனடியில் சொல்லுகின்றோம். அதுபோல் ஒவ்வொருவரும் அப்பியசித்து வரவேண்டும்.

“ஆகுவா னந்திசந்தி யுச்சி யென்றால்
அப்பனே ரவிமதியுஞ் சுடர்மூன் றாகும்
ஏகுவாய் மூன்றுமொன்றாய்ப் பின்ன லாகி
யிருந்திடமே பிரம்மாண்ட சிலைய தாகும்
போகுமே நீசெய்த கரும மெல்லாம்
புவனை திரி சூலியுட கிருபை யாலே
வாகுமே வழியோடே சேர்த்தா யானால்
வாணியுந்தான் நாவினடனஞ் செய்வாள் பாரே.”

இதனடியில் சொல்லப்போகும் மூன்று நாடிகளையும் ஒன்றாய்ச் சேர்த்து காயத்ரீ மந்திரம் ஜபித்துவந்தால், சஞ்சிதமென்னும் கர்மமெல்லாம் பஸ்மமாய் ஸ்தூல, சூட்சும, காரண சரீரங்கள் மூன்றும் நசிந்து, மகத்தாகிய மோக்ஷானந்த பதவியை அடையலாம். மோக்ஷ மென்னும் பதத்

திற்கு நிஜமாகிய அர்த்தம் யாதெனில், விடுதலை. விடுதலை என்றால், பந்தத்திலிருந்து விடுபடுதல். இந்தப் பந்தத்திற்கு நிஜமாகிய அர்த்தம் யாதெனில், பெண்டு பிள்ளைகளின் மீதும் பந்துக்களின்மீதும் தனம் தான்னியம் கிருகம் பூமி தோட்டம் துரவுகள் முதலானவைகளின்மீதும் வைத்திருக்கும் ஆசைகளே பந்தமென்று சொல்லப்படும். இவ்வாசைகளையெல்லாம் ஒழித்து விட்டால், ஆத்மாவைப் பிடித்துக்கொண்டிருந்த பந்தமென்னும் பிடிப்பு விட்டு ஒழியும். அப்பந்தம் ஒழிந்து விடுவதே மோக்ஷம். ஆத்மாவைப் பற்றிக்கொண்டிருக்கும் முன்சொல்லிய பந்தங்களெல்லாம் ஒழிந்துவிட்டால், மறுபடியும் ஜன்மம் உண்டாவதற்கு ஏதுவில்லை. ஜன்மங்களுக்குக் காரணம் முன்சொல்லிய ஆசாபாசங்களே, வித்தாய் (விதையாய்) இருந்துகொண்டு அனேககோடி ஜன்மங்களை (பிறப்புகளை) எடுக்கும்படி செய்விக்கின்றன. இப்பிறப்பெனும் சமுத்திரத்திற்கு, ஆசையென்னும் வாசனையே முதலையாயிருக்கின்றது; இம் முதலைக்கு மனமே மூலகாரணமாயிருந்து, ஆசையென்னும் முதலையைப் பிடித்திழுக்க, அதன்வழியாய் மரணமென்பது காத்திருக்கின்றன வென்பதை அறிவாலறிந்த புண்ணிய புருஷர்கள், மலினவாசனையுடைய மனதை மலினமற்ற மனதினால் உறவுசெய்வாராயின், ஆத்மாவென்னும் ராமனே யாவார்கள்:—

எந்தெந்த வாசனைகள் மனதில் உதிக்கின்றதோ, அந்தந்த வாசனைகளை அப்போதைக் கப்போதே நாசம் செய்து வருவார்களாகில் அந்த நாசமே மாயையை நாசம் செய்ததாகும்: இம்மாயையே மன உருவமா யிருப்பதால், மாயையென்னும் மனதை (நினைப்பு மறப்பை) அறச்செய்வாராயின், நிர்விகல்ப சமாதினிலையை அடைவார்கள்:

என்றால், நினைப்பு மறப்பற்றதே நிர்விகல்ப சமாதியெனப் படும்: இவைகளுக்கு ஞானவாசிட்டம் பிரமாணம்:

பிறவிக் கடலிற் காத லெனும் பெருவாய்
முதலை பிடித் தீர்க்க
விறவுச்சுழி பாற் சுழலு மவர்க் கிதய
நாவா யெட்ட வா
மற முற் றுளத்தை யுளத்தாலே மாய்த்துப்
பிறப் பில் வருந்தாம
லற வுற் றனை நீ யுய்விப்பா யுயிர்க்குப்
பிறரா லுய்வுண் டோ.

எந்த வெந்த வாதனைக ளிதயத் தெழுந்த
வவை யெல் லா
மந்த வந்த விடத் தழிக்கி லதுவே
மாயைக் கழி வாகு
முந்து போக பேத மென மொழிந்த
விரு வாதனை விட்டு
வந்த பாவா பாவங் கண் மாற்றி
விகற்ப மற மகிழ்வாய்.

இப்படி விதையாயிருக்கும் ஆசாபாசங்களை எல்லாம் வேருடன் களைந்து யோகாக்கினியினால் சுட்டுச் சாம்பலாய்ச் செய்துவிட்டால், மறுபடியும் ஜன்மம் எடுக்க, ஆசாபாசங்களென்னும் விதைகள், இல்லாமல் போகின்றது. ஆசைஎன்னும்பந்தத்திலிருந்துவிடுபட்டவர்களே,மோக்ஷமென்னும் சாம்ராஜ்ஜிய பதவியை தப்பாமல் அடைவார்கள். இதுவே மோக்ஷமென்னும் பதத்திற்கு நிஜமாகிய அர்த்தம். உலகத்திலுள்ளவர்களெல்லோரும் மோக்ஷத்தை விரும்புகின்றார்கள். அது எவ்வாறு சித்திக்கும். ஆசா பாசங்களை எல்லாம் சுட்டு பஸ்மம் செய்தாலல்லவோ, மோக்ஷமென்னும் பதவி உண்டாகும். இனி உபநயந காயத்ரீ மந்திர உபதேசம் சொல்லப் போகின்றோம் கேளுங்கள்.

உபநயந காயத்ரீ மந்த்ரோபதேசம்.

"ஓம் பூ: ஹம்ஸஸ்ஸோஹம்-ஓம் புவ: ஹம்ஸஸ்ஸோஹம்
ஓம் ஸ்வ: ஹம்ஸஸ்ஸோஹம்-ஓம் மஹ: ஹம்ஸஸ்ஸோஹம்
ஓம் ஜந: ஹம்ஸஸ்ஸோஹம்-ஓம் தப: ஹம்ஸஸ்ஸோஹம்
ஓம் ஸத்யம் ஹம்ஸஸ்ஸோஹம்-ஓம் தத்ஸவிதுர்வரேண்யம்
ஹம் ஸஸ்ஸோஹம்.
ஓம் பர்கோ தேவஸ்யதீமஹீ ஹம்ஸஸ்ஸோஹம்
ஓம் தியோ யோந: ப்ரசோதயாத் ஹம்ஸஸ்ஸோஹம்
ஓம் ஆபோ ஜ்யோதீ ரஸோம்ருதம் ப்ரஹ்ம
பூர்புவ ஸ்வரோம் ஹம்ஸஸ்ஸோஹம், தத்வமஸி."

இந்த காயத்ரீ மந்திர ரகசியத்தினல் "தத் த்வமஸி" ஆகின்ருய்: அதாவது, தத் என்ருல், அந்த பரப் பிரம்மம், த்வம் என்ருல், ஜிவாத்ம சொரூபியாயிருக்கப்பட்ட நீ, அஸி = ஆகின்ருய். அதாவது, இந்த காயத்ரீ மந்திரம் ஜபித்துவந்தால், "ஜீவாத்ம சொரூபியா யிருக்கும் நீ அந்த சாக்ஷாத் பரப் பிரமம சொரூபமாகின்ருய்."

'ஓம்' என்னும் பீஜம் வேதங்களுக்குப் பிரதம அக்ஷரமா யிருக்கின்றது. மேற்சொல்லிய ஹம்ஸ காயத்திரியில், தத்ஸ விதுர்வரேண்யம் பர்கோதேவஸ்யதீமஹீ தியோ யோ ந: ப்ரசோதயாத் என்னும் இம்மூன்று வாக்கியங்களும் 'அ' கார 'உ' கார 'ம' காரங்களாய் 'ஓங்' காரமா யிருக்கின்றது. இந்த பிரணவாக்ஷரம் ரேசகமே 'அ' காரம் பூரகமே 'உ' காரம், கும்பகமே 'ம' காரம், இந்த 'ஓங்' காரமே 'ஸோ ஹம்'. 'ஸோ' என்பதில் 'ஓ' என்னும் ஜீவாக்ஷரமும் 'ஹம்' என்பதில் 'ம்' என்னும் ஜீவாக்ஷரமும் சேர்ந்து 'ஓம்' என்னும் சப்தம் உண்டாயிற்று. ஆதலால், இந்த மூன்றுலோகமும்ஓங்காரமாகவேயிருக்கின்றது. இந்த

'அ' கார 'உ' கார 'ம' காரமென்னும் * ரேசக, † பூரக, ‡ கும்பகங்களினல், நாபியிலிருக்கும் குண்டலி சத்தி மேல் கிளப்பி தசவித வாத்தியங்கள் கேட்கும்படி செய்விக்கும். இது விஷயம் முன் தசவித நாதங்கள் என்னும் அத்யாயத்தில் சொல்லப்படும்.

நுரையீரலில் தங்கியிருக்கும் சுவாச மெல்லாம் மூக்கின் துவாரங்களின் வழியாய் வெளியில் விட்டுவிடுவதே 'அ' காரம். அதன் தொடர்ச்சியாகவே சுவாசம் உள்ளுக்கிழுப்பதே 'உ' காரம். உள்ளுக்கிழுத்த சுவாசத்தை வெளிவிடாமல் கர்ப்பத்தில் நிறுத்துவதே 'ம' காரம். இந்த 'அ' கார 'உ' கார 'ம' காரங்களின் ரகஸ்யம் இதன்டியில் சொல்லுகின்றோம் கேளுங்கள். அதாவது, பத்மாசனத்திலாவது, அல்லது சித்தாசனத்திலாவது உட்கார்ந்து கண்களும் வாயையும் மூடி, கூன் வளையாமல் சரியாய் நிமிர்ந்து வலதுகை மோதிரவிரலால் இடது நாசியைமூடி, வலது விலா நுரையீரலில் தங்கியிருக்கும் சுவாசத்தையெல்லாம் வலதுநாசியின் வழியாய் வெளியில் விட்டுவிட்டு, அதன் தொடர்ச்சியாகவே சுவாசம் எவ்வளவு நுரையீரலில் பிடிக்கின்றதோ அவ்வளவு சுவாசம் உள்ளுக் கிழுக்க வேண்டும். உள்ளுக் கிழுக்கும்போது ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! என்னும் மந்திரம் சுவாசத்துடன் சேர்த்து மனதில் நினைத்து உள்ளுக்கிழுத்து முடிந்தவுடன், மூக்கின் மீதிருக்கும் கை யெடுத்துவிட்டு சுவாசம் வெளியில் விடாமல் கண்டத்தை மூடி, இரண்டு கைகளையும் இரண்டு தொடைகளின் மீது வைத்து,

---

* ரேசகம்=சுவாசம் வெளியில் விடுவது.

† பூரகம்=சுவாசம் உள்ளுக்கிழுப்பது.

‡ கும்பகம்=உள்ளுக்கிழுத்த சுவாசத்தை வெளியில் விடாமல் நிறுத்துவது.

"ஓம் பூ:, ஓம் புவ:, ஓம் ஸ்வ:, ஓம் மஹ:, ஓம் ஜந:, ஓம் தப:, ஓம் ஸத்யம், தத்ஸ விதுர்வரேண்யம், பர்கோதேவஸ்ய தீமஹி, தியோ யோந: ப்ரசோதயாத், ஓம் ஆபோஜ்யோதீ ரஸோம்ருதம் ப்ரஹ்ம பூர்புவ ஸ்வரோம்."

என்னும் காயத்ரீமந்திரம் மனதினல் உச்சரித்து முடிந்தவுடன், மறுபடியும் இடது நாசியைமூடி வலது நாசியின் வழியாய் ஒண்ணரை அடி நீளம் சுவாசம் "ஓம்" என்று மனதில் நினைத்து வெளியில் ஓடவிட்டு அதன் தொடர்ச்சியாகவே மறுபடியும் சுவாசம் எவ்வளவு உட் கொள்ளுகின்றதோ அவ்வளவு சுவாசம், "ஓம்" என்னும் மந்திரத்துடன் சேர்த்து வலதுநாசியின் வழியாய் உள்ளுக் கிழுத்து விழுங்கி, புருவமத்தியில் 1-என்று மனதினல் இலக்கம் வைத்து அந்த இலக்கத்தின்மீது திருஷ்டியை நிறுத்தி, முன்சொல்லியதுபோல் காயத்ரீமந்திரம் சொல்லி முடிந்தவுடன், முன்போல் இடதுநாசியைமூடி வலதுநாசி யின் வழியாய் ஒண்ணரை அடி நீளம் சுவாசம "ஓம்" என்று மனதில் நினைத்து வெளியில் ஓடவிட்டு, மறுபடியும் "ஓம்" என்னும் மந்திரம் சுவாசத்துடன் சேர்த்து வலது நாசியின் வழியாய் உள்ளுக்கிழுத்து விழுங்கி, புருவமத்தி யில் முன்வைத்திருந்த 1-என்னும் இலக்கத்தை மனதினல் எடுத்துவிட்டு, அந்த இடத்தில் மனதினலேயே 2-என்று இலக்கம் வைத்து, அந்தஇலக்கத்தின்மீது திருஷ்டிநிறுத்தி, மறுபடியும் முன் சொல்லியதுபோல் காயத்ரீ மந்திரம் சொல்லி முடிந்தவுடன், முன்போல் இடதுநாசியைமூடி வலதுநாசியின் வழியாய் ஒண்ணரை அடி நீளம் சுவாசம் "ஓம்" என்று மனதில் நினைத்து வெளியில் ஓடவிட்டு, மறு படியும் "ஓம்" என்னும் மந்திரம் சுவாசத்துடன் சேர்த்து வலது நாசியின் வழியாய் உள்ளுக்கிழுத்து விழுங்கி, புருவ மத்தியில் முன் வைத்திருந்த 2-என்னும் இலக்கத்தை

மனதினல் எடுத்துவிட்டு அந்தயிடத்தில் 3 - என்று மனதினல் இலக்கம் வைத்து, அந்த இலக்கத்தின்மீது திருஷ்டி நிறுத்தி, மறுபடியும் முன் சொல்லியதுபோல் காயத்ரீ மந்திரம் சொல்லி முடிந்தவுடன், வலதுகைப்பெரு விரலால் வலதுநாசியைமூடி தவடைப்பற்களைக் கெட்டியாய் இறுக்கிக்கொண்டு இடதுநாசியில் "ஓம்" என்னும் மந்தி ரத்துடன் 4-அங்குல சுவாசம் வெளியில்விட்டு, மறுபடியும் அந்த 4-அங்குல சுவாசத்தையே "ஓம்" என்று உள்ளுக் கிழுத்து இடது நாசியைமூடி, வலது நாசியைத்திறந்து முன் சொல்லியதுபோல் "ஓம்" என்னும் மந்திரத்துடன் 4-அங்குலம் சுவாசம் வெளியில் விட்டு அதே அளவு சுவா சத்தை மறுபடியும் "ஓம்" என்னும் மந்திரத்துடன் உள் ளுக்கிழுத்து, இவ்விதமாய் நாசிகளை மாற்றிமாற்றி சுவாசத் தின் வேகம் அடங்கும் வரையில் நிதானமாய் விட்டு, மற்ற சுவாசத்தை எல்லாம் கர்ப்பத்தில் நிறுத்திவைக்கவேண் டும். இவ்விதமாய் சுவாசத்தை நிறுத்தி வலதுநாசியில் மூன்று காயத்ரீ ஜபம் செய்தால் இது ஒரு காயத்ரீயாகும். ஒரு காயத்ரீசெய்து முடிந்தவுடன், இளைப்பாறுவதற்காக ஐந்து நிமிஷங்கள் * நிஷ்டையிலிருந்து மறுபடியும் முன் செய்ததுபோல் இடது நாசியிலும் செய்யவேண்டும்.

வலது இடது நாசித்துவாரங்களில் செய்துமுடித்த வுடன், மறுபடியும் இருதயத்தில் தங்கியிருக்கும் சுவாச மெல்லாம் இரண்டு நாசித் துவாரங்களின் வழியாய் வெளி விடுவதற்காக, பெருவிரல் மோதிரவிரல்களை வலது இடது நாசிகளின்மீது வைத்து, (உலேச்களத்தில் கன்னன் இரண்டு

---

* நிஷ்டை என்றால் எந்த எண்ணங்களும், எந்த ஈசுவர தியானமும், பஞ்சாக்ஷர, அஷ்டாக்ஷர முதலாகிய மந்திர தந்திர ஜபங்களும் இல்லாமல் சும்மாயிருப்பதே நிஷ்டையென்று சொல் லப்படும். இதை மௌனமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்

துருத்திகளை வைத்து இரண்டு கைகளால் மாற்றி மாற்றி ஊதுவதுபோல்) உட் தங்கியிருக்கும் சுவாசமெல்லாம் சிறுகச்சிறுக இரண்டு நாசித் துவாரங்களின் வழியாய் விரல்களால் மாற்றி மாற்றி, எல்லா சுவாசமும் இரண்டு நாசித் துவாரங்களிலும் சமமாய் வெளியில் விட்டு, அதன் தொடர்ச்சியாகவே இரண்டு நாசித் துவாரங்களிலும் ஓம் என்னும் மந்திரத்துடன் சிறுகச் சிறுக சுவாசம் சமமாய் உள்ளுக்கிழுத்து நிறுத்தி, முன் சொல்லியதுபோல் காயத்ரீ மந்திரம் மூன்று முறைகள் ஜபிக்கவேண்ண்டும். இவ்விதமாய் காலை பகல் மாலை இம்மூன்று வேளைகளிலும் பிரதி தினம் அப்பியாசம் செய்துவரவேண்டும். இதற்குப்பலன் யாதெனில், பிரதிதினம் செய்துவரும் ஆகாம்யமென்னும் புண்ணிய பாபங்களெல்லாம், காயத்ரீ ஜப அக்கினியினால் பஸ்மமாய் விடுவதே யல்லாமல், அனேக ஜன்மங்களாய் வந்துகொண்டிருக்கும் சஞ்சித மென்னும் புண்ணிய பாபங்களின் மூட்டையும் பஸ்மமாய் விடும். இந்த ஆகாம்யம் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளோர் இந்நூல் 51-வது, பக்கம் பார்க்க. அதாவது, ஸ்தூல ஸூக்ஷ்ம காரண சரீரங்களுக்கு விதையாயிருக்கும் ஸஞ்சிதமென்னும் மூட்டை எரிந்துபோவதனால் மறு ஜனனமில்லாத விதேஹ (தேஹம்வாராத) கைவல்லிய பதவியை அடையலாம்.

சுவாசத்தை நிறுத்தி முன்சொல்லிய பதினாறு காயத்ரீ மந்திரங்களையும் ஜபிப்பதற்கு உங்களால் சாத்திய மாகமாட்டா. பின் எவ்வாறு ஜபிக்கவேண்டுமென்றால், சுவாசத்தை முன்சொல்லியதுபோல் மூக்குத் துவாரங்களின் வழியாய் இழுத்து நிறுத்தி "ஓம் பூஃ," "ஓம் புவஃ," "ஓம் ஸ்வஃ," "ஓம் மஹஃ," "ஓம் ஜநஃ," என்னும் இந்த ஐந்து மந்திரங்களையும் ஜபித்து முடிந்தவுடன் "ஓம்" என்னும் மந்திரத்துடன் நாபி வரையும் சுவாசம் வெளி

யில் விட்டு மறுபடியும் "ஓம்" என்னும் மந்திரத்துடன் விசேஷமாய் சுவாசம் எவ்வளவு கொள்ளுகின்றதோ அவ்வளவு சுவாசம் உள்ளுக்கிழுத்து, நிறுத்தி மறுபடியும் முன் சொல்லிய ஐந்து மந்திரங்களை ஜபித்து இவ்விதமாய் மூன்று முறைகள் ஒவ்வொரு நாசியிலும் ஒருமாதம் வரையில், பிரதிதினம் மூன்று வேளையாகிலும் அல்லது இரண்டு வேளையாகிலும் செய்துவந்து, பிறகு இனி ஓர் மந்திரம் அதிகமாய்ச் சேர்த்துக் கொள்ளலாமென்று உங்களுக்கு மனோதைரியம் உண்டானால், அப்போது "ஓம் ஜநः" என்னும் ஓர் மந்திரம் அதிகமாய்ச்சேர்த்து சுவாசத்தை நிறுத்தப் பழகியபின் உங்கள் சரீரத்திற்கு யாதொரு நோயுமில்லையென்று மனோ தைரியமிருந்தால், "ஓம் தபः" என்னும் இன்னொருமந்திரம் அதிகமாய் உச்சரிக்கும்வரையில் சுவாசத்தை நிறுத்தப் பழகவேண்டும். இவ்விதமாய் பதினொரு மந்திரங்களையும் சிறுகச்சிறுக நாளாவட்டத்தில் ஒவ்வொரு மந்திரமாய் உயர்த்திக்கொண்டு போக வேண்டியதே யொழிய சீக்கிரமாய்ச் சித்தி, அடையவேண்டுமென்று எண்ணி, முரட்டுத் தனமாய் சுவாசத்தை அதிகநேரம் நிறுத்தலாகாது. அப்படி நிறுத்துவீர்களானல்;

"யதா ஸிம்ஹோ கஜோ வ்யாக்ரோ பவேத்வஶ்ய ஶனைஶ் ஶனைः
ததைவ ஸேவிதோவாயு ரந்யதா ஹந்தி ஸாதகம்."

என்னும் சாண்டில்யோபநிஷத் வாக்கியரீதியாய், சிங்கம் யானை புலி முதலானவைகளை நாளாவட்டத்தில் வசப்படுத்திக்கொள்ளவேண்டும். வசமாகாமுன் அதன் சமீபமாய்ச் சென்றால் அது அவனை, சமயம்பார்த்துக் கொல்லும். அதுபோல் சிறுகச்சிறுக நாளாவட்டத்தில் சுவாசம் (மூச்சு) நிறுத்த அப்பியாசம் செய்துவந்தால் அந்த சுவாசம் (மூச்சு) வசமாகும். அப்படிக் கில்லாமல் சுவாசம்

நிறுத்தி எண்ணிக்கைகளை சீக்கிரம் சீக்கிரமாய் உயர்த்திக் கொண்டுவந்தால் அது, முன்சொல்லிய சிங்கம் புலி முதலானவைகளைப்போல், யோகாப்பியாசியைக் கொல்லும். ஆதலால், நீங்கள் சுவாசத்தை நிறுத்தி காயத்ரீ மந்திரங்களை ஒன்றின்பின் ஒன்றாக நாளாவட்டத்தில் உயர்த்திக் கொண்டே வரவேண்டும்.

ஆனால், இந்த காயத்ரீ மந்திரம் கடைசியில் ஓம் ஆபோ ஜ்யோதீ ரஸோம்ருதம் ப்ரஹ்ம பூர்புவ ஸ்வரோம்' என்று ஜாணளவுநீளம் சொல்லவேண்டியதா யிருக்கின்றது; சுவாசத்தை நிறுத்தி இவ்வளவு பெரிதாகிய மந்திரம் ஜபிக்க அவ்விடம் அவகாசமிராது. ஆதலால், இதைவிட பிராணயாமத்தில் சொல்லியதுபோல் 1, 2, 3, 4, வலதுகை விரல்களைவிட்டு எண்ணி, இடதுகைச் சுண்டு விரலை மடக்கி இவ்விதமாய் இடதுகை ஐந்து விரல்களையும் மடக்கி ஜபித்துவந்தால் அவ்வளவு கஷ்டமிராது. ஆதலால், இதைவிட பிராணயாமம் செய்து வருவதே விசேஷமானதா யிருக்கின்றதென்று தோன்றுகின்றது. ஆனால், உங்கள் எண்ணம் எப்படி யிருக்கின்றதோ அதுபோல் செய்துவரலாம். அதாவது, பிராணயாமம் செய்ய இஷ்டமோ அல்லது காயத்ரீ செய்ய இஷ்டமோ அதுபோல் செய்து வரலாம்.

பிராணயாமம் அல்லது, காயத்ரீ ஜபம் செய்துவரப் பட்டவர்களுக்கு ஸதாகாலமும் நாதசப்தம் காதில் கேட்டுக்கொண்டேயிருக்கும். அது உபநிஷத்துகளின் திருஷ்டாந்தங்களுடன் முன் சொல்லப்படும்.

நில்லடா வாக்குமன மொன்றாய் நில்லு
நிச்சயத்தைப் பற்றியினி நினைவாய் நில்லு
அல்லடா ஆறுதலங் கடந்தீ ரானல்
ஆயிரத் தெட்டுமாற் றழகு முண்டு

வல்லடா வாசியைத்தான் மேலே நோக்கு
மைந்தனே கீழ்நோக்க மாட்டா தப்பா
அல்லடா இதையறிந்து செய்தீ ராஞல்
ஆத்மாவும் நீயாச்சு ஐயா பாரே.

முன்சொல்லியதுபோல், கஷ்டப்பட்டு சுவாசத்தை நிறுத்தி காயத்ரீமந்திரம் ஜபித்துவருவதனுல் உண்டாகும் பலன் யாதெனில்,

யாமமாத்ரம் வாஸுதேவம் சிந்தயேத் கும்பகேநய:
ஸப்தஜன்மார்ஜிதம் பாபம் தஸ்ய நஶ்யதி யோகிந:''.

என்னும் திரிசிகி பிராஹ்மணேபநிஷத் வாக்யரீதியாய், இரண்டரைமணிநேரம் சுவாசம் வெளியில் விடாமல் கர்ப்பத்தில் நிறுத்திஞல், ஏழுஜன்மங்களாய்ச் செய்துவந்த புண்ணிய பாபங்க ளெல்லாம் பஸ்மமாய் (சாம்பலாய்) விடும். இதுபோல், சதாகாலமும் சுவாசம் வெளியில் விடாமல் கர்ப்பத்தில் நிறுத்தி அப்பியசித்துவரும் புண்ணிய புருஷர்களின் மகிமையைச் சொல்லவும் வேண்டுமோ! ஆதலால், இதை வாசிக்கும் அன்பர்கள் யாவரும் பிராணுயாமம் செய்யும்பொழுது சுவாசம் கர்ப்பத்தில் நிறுத்தவேண்டும். அந்தச் சமயம் மாத்திரம் கர்ப்பத்தில் கொஞ்சம் நோவை உண்டாக்கும். பிராணுயாமம் செய்வது கஷ்டமென்று யோசிக்கவேண்டாம். 50-எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்த கஷ்டமா யிருந்தால், 25-எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தப் பழகவேண்டும். இவ்விதமாய் ஒரு மாதம் பழகியபின் இரண்டாம்மாதம், ஐம்பது எண்ணும் வரையில் சுவாசம் நிறுத்தவேண்டும். இவ்விதமாய் ஒரு மாதத்திற் கொருதரம் இருபத்தைந்து உயர்த்திக்கொண்டே சென்ருல், எவ்வித கஷ்டங்களும் இல்லாமல் சித்திபெறலாமென்று அறிவீர்களாக.

ஐயா! இவ்வாறு செய்ய வழிதெரியாமல் அனேகர்கள் சுவாசம் (மூச்சு) உள்ளுக்கிழுத்து கணக்கில்லாமல் நிறுத்துகின்றார்கள். அவ்வாறு இழுத்து நிறுத்துவதனால், சுவாசம் நிற்கும் கணக்குத் தெரியாமல் ஒருநாள் இரண்டு மூன்று நிமிஷங்கள் குறைவாயும், ஒருநாள் இரண்டுமூன்று நிமிஷங்கள் அதிகமாயும் நிற்கும். இவ்வாறு சுவாசம் கணக்கில்லாமல் நிறுத்துவதனால் அந்த சுவாசம் பீசத்திலோ குடலிலோ விலாக்களிலோ ரத்தக்குழாய்களிலோ இருதயத்திலோ நாடிகளிலோ போய்த்தங்கி மறுபடியும் சுவாசம் வெளிவராமல் நின்றுவிடும். அப்போது இறந்தானென்று நினைப்பார்கள். அவன் இறந்தவனல்லன். அப்படிப்பட்டவன் சரீரமெங்கும், ஒவ்வோரிடத்திலும் நன்றாய்க் கையினால் அறைந்தால், அந்தச்சமயம் மூச்சு அடங்கியிருந்த இடம்விட்டு மூக்கு ரந்திரத்தில் வந்து ஆடும். கணக்கில்லாமல் மூச்சு நிறுத்துவதனால் இப்படிப்பட்ட ஆபத்துகள் உண்டாவது வழக்கம். இப்படிக்கில்லாமல் இன்னும் சில கெடுதிகளையும் உண்டாக்கும். அது எதென்றால், சுவாசம் ஆடும், விதை வீங்கும். குடல் நோய் உண்டாக்கும். ஜீர்ணமாகமாட்டா. கைகால் வீக்கம் உண்டாக்கும். இன்னும் இப்படிப்பட்ட அனேக விதங்களான கெடுதிகளை உண்டாக்கும். சுவாசம் நிறுத்தி இதில் சொல்லிய கணக்குடன் நாளாவட்டத்தில் இருபத்தி ஐந்து இருபத்தி ஐந்தாய் உயர்த்திக்கொண்டே சென்றால், எப்படிப்பட்ட கெடுதிகளையும் உண்டாக்காமல் யோகத்தை விருத்தி செய்துக்கொண்டே போகும்; இதனால் யோகசித்திபெற்று இந்நூல் 396-வது, பக்கம் 5-வது, வரியில் யோக தத்வோபநிஷத் முதல் 406-வது, பக்கம் வரையில் சொல்லிய பதவியைத் தப்பாமல் அடைவானென்று அறியக்கடவீர்களாக.

பிராணயாம பிராணலயம்.

"ஜ்ஞாத்வா ஸுஷும்நா ஸத்பேதம் க்ருத்வா வாயும் சமத்யகம் ஸ்தித்வா ஸதைவ ஸுஸ்தானே ப்ரஹ்மரந்த்ரே நிரோதயேத்."

"ஸுராஜ்யே தார்மிகீ தேசே" நல்ல ராஜ்ஜியமும் தர்மமுடைய தேசமும் என்று சொல்லப்பட்ட லக்ஷண முடைய நல்ல ஸ்தலத்தில் வசித்து, ஸுஷும்நா என்னும் சத்திய நாடியை பிராணயாமத்தில் சொல்லியதுபோல், பிரம்மதண்டின் (முதுகெலும்பின்) மத்தியிலிருக்கும் வெள்ளை நரம்பிலுள்ள சிறிய துவாரத்தின் வழியாய்ப் பிராணவாயுவைப் போகும்படிச்செய்து பிரம்ம ரந்திரத்தில் நிறுத்தவேண்டும். வாஸிஷ்டத்தில்,

"அப்யாஸேந பரிஸ்பந்தே ப்ராணாநாம் க்ஷயமாகதே
மநஃ ப்ரஸமமாயாதி நிர்வாணமவஸிஷ்யதே."

அப்பியாசத்தினால் பிராணனுடைய அசைவிற்கு நாசம் உண்டானபோது, மனம் மிகவும் சாந்தி அடைகின்றது; அப்போது ஆகாசம் (ஒன்றுமில்லாத வஸ்து) சேஷமாய் நிற்கும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. பிராணவாயு, மனோவாயு இவ்விரண்டும் லயமானபோது (லயம்-கூடுதல்) எண்ணங்களெல்லாம் சமாதியிற் கூடிய அந்தக்கரணத்தில் ஐக்கியமாய், ஆத்ம சாக்ஷாத்காரமுண்டாகின்றது. அப்போது, ஜீவ சொரூபியாயிருந்து முக்தனாகின்றான். ஸுஷும்நா மார்க்கமாய் வாயு, பிரம்ம ரந்திரத்தில் எப்பொழுது போகின்றதோ, அப்பொழுது அல்லும் பகலும் சொரூபமானகாலம் அல்லாததால் "ஸுஷும்நா" காலத்தைப் புசிக்கத்தக்கதா யிருக்கின்றது என்று சொல்லப்படும்.

எதுவரையில் பிரம்ம கபாலத்தில் வாயு செல்லுகின்றதோ அதுவரையில், யோகிகளுக்கு ஆயுர் விருத்தியாகின்றது. தீர்க்ககாலம் சமாதியை அப்பியசித்த யோகியானவன், பூர்வமே மரணகாலத்தைத் தெரிந்துகொண்டு பிரம்மரந்திரத்தில் பிராணவாயுவை நிறுத்திக் காலனை ஜயிக்கின்றான்; தனக்கிஷ்டமானபோது பிராணனை விட்டுவிடுவான். (இதற்கு திருஷ்டாந்தம் ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம் பார்க்க.)

"த்வா ஸப்ததி ஸஹஸ்ராணி நாடீ த்வாராணி பஞ்ஜரே
ஸுஷும்நா ஶாம்பவீ ஶக்திஃ ஶேஷாஸ்த்வேவ நிரர்த்தகாஃ."

இச்சரீரக் கூண்டில், எழுபத்தீராயிரம் நாடிகளிலும், வாயு பிரவேசிக்கும் மார்க்கம் உண்டு. அவைகளில் ஸுஷும்நா (சுழுமுனை) என்னும் மத்தியநாடி சாம்பவீ சத்தியாகும். மற்ற இடை, பிங்கலை முதலானவைகள் பிரயோஜன மற்றவைகள். எழுபத்தீராயிரம் நாடிகளில் ஸுஷும்நா, இடை, பிங்கலை, குஹு, ஸரஸ்வதி, யஸஸ்விநி, பூஷ, விஸ்வோதர, வருண, ஹஸ்திசிங்குவை, பயஸ்விநி, சங்கினி, காந்தாரி, அலம்புஸ என்னும் பதினான்கு நாடிகள் சிரேஷ்டமானவைகள். இவைகளிலும் ஸுஷும்நா, இடை, பிங்கலை என்னும் மூன்று நாடிகள் பிரதானமானவைகள். இவைகளில் ஸுஷும்நா நாடியே மிகவும் சிரேஷ்டமானது. இதுவே ப்ரஹ்மநாடியென்று சொல்லப்படும். இதற்குத் தேவதை சிவன். ஸுஷும்நா நாடிக்கு இடது பாகத்திலிருப்பது இடாநாடி. அது இடதுநாசியில் வியாபித்திருக்கும். இதற்கு தேவதை பிரமன். ஸுஷும்நா நாடிக்கு வலது பாகத்திலிருப்பது பிங்கலைநாடி. அது வலதுநாசியில் வியாபித்திருக்கும். இதற்கு தேவதை விஷ்ணு. இப்படியாகப் பதினான்கு நாடிகளிலும் பதினான்கு தேவதைகள் வசித்துக்கொண்டு,

அரச இலையில் ஓடியிருக்கும் நரம்புகளைப்போல், நமது சரீரத்தில் நரம்புகள் கிளை கிளைகளாய் ஓடியிருக்கின்றன. இந்த நாடிகளின் வழியாய் ஓடிக்கொண்டிருக்கும் பிராண வாயு யோகாப்பியாசத்தால் கட்டப்படும்.

"பவநோ பத்யதே யேந மநஸ்தேநைவ பத்யவே
மநஸ்ச பத்யதே யேந பவநஸ்தேந பத்யதே."

"மனமன மெங்குண்டு வாயுவும் அங்குண்டு, மனமன மெங்கில்லை வாயுவும் அங்கில்லை" என்பதுபோல், எந்த யோகியினுல் பிராணவாயு கட்டப்படுகின்றதோ, அந்த யோகிக்கு மனம் கட்டுப்படுகின்றது. எவனுல் மனம் கட்டுப் படுகின்றதோ, அவனுக்குப் பிராணன் கட்டுப்படு கின்றது. மனம் பிராணன் என்னும் இவ்விரண்டில் ஒன்றைக் கட்டினுல், இரண்டாவதும் கட்டுப்படுவது திண்ணம்.

"ஹேதுத்வயம்து சித்தஸ்ய வாஸநா ச ஸமீரிண:
தயோர்வி நஷ்ட ஏகஸ்மிம் ஸ்தெளத்வாவபி விநஸ்யத:."

மனதிற்குப் பிராணசலனம் வாசனை. அவைகளில் ஒன்று நஷ்டமானுல், இரண்டாவதும் உடனே நஷ்டமாகு மென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

"ஸது தீர்க்ககால நைரந்தர்ய ஸத்காரா ஸேவிதோ த்ருடபூமி:"

அநேக ஜன்மங்களாய் சிரத்தை பக்தியுடன் செய்து வருகிற பிராணுயாம அப்பியாசத்தினுல், அநாதியாய் வந்து கொண்டிருக்கும் எல்லா வாசனைகளும் நசித்து முக்திபெற மார்க்கத்தை யுண்டாக்கும். யோகாப்பியாசம் அப்பியசிக்க எண்ணங்கொண்ட புருஷன் தினக் கணக்கு களிலாகிலும், மாதக் கணக்கு களிலாகிலும் யோக சித்தியை அடையவேண்டுமென்று எண்ணங்கொண்டால் சித்தியாகும். எப்படியென்றுல், அநேக வருஷங்களி

லாகிலும் அநேக ஜன்மங்களிலாகிலும் யோகம் சித்திக்குமென்று எண்ணி, அநேககாலம் அப்பியசிக்கவேண்டும். யோகம் அநேககாலம் செய்தாலேயொழிய சித்தியுண்டாக மாட்டாதென்று உபநிஷத்துகளில் சொல்லப்பட்டிருக்கின்றது.

"அநேகஜன்மஸம்ஸித்திஃ ததோ யாதி பராங் கதிம்."

அநேக ஜன்மக்களாய் யோகம் அப்பியசிப்பதனால் சித்தியுண்டாகும். பிறகு மோக்ஷம் சித்திக்கும் என்று சொல்லப் பட்டிருக்கின்றது.

"ஞஸ்ய கஸ்மிந் ஸமீதே வாங்கபவத்யதீஃ நித்யத்ருப்த ப்ரஸாந்தாத்மா ஸ ஆத்மந்யேவ திஷ்டதி."

தத்வ ஞானமுடைய யோகி, ஆத்மாவிற்கு வியதிரிக்தமான எப்படிப்பட்ட விஷயங்களிலும் புத்தியை ஓடும்படிச் செய்யமாட்டான். ஸர்வகாலத்திலும் அதிக திருப்தியுடையவனாய் ராகத் துவேஷாதி சூன்யமாய் பரமாத்மாவிலேயே நிஷ்டையுடையவனா யிருப்பான்.

"மஹாவ்ருக்ஷோ யச்சித்தம் தத்ஸர்வதா மய்யேவாவதிஷ்டதே தஸ்மாத் ஹம்ஸஃ தஸ்மிந்நேவ ஸ்தீயதே.

என்னும் உபநிஷத்து வாக்கியரீதியாய், வேதோக்தமாகிய ஞான கர்மங்களை அனுஷ்டிக்கப்பட்டவர்களில், யோகியாகிய பரமஹம்ஸர் மிகவும் உத்தமர். ஆதலால், அவரை மஹா புருஷனென்றே சொல்லப்படும். அந்த மஹாபுருஷர், சம்சார விஷயங்களில் ஓடிக்கொண்டிருக்கும் எண்ணங்களையெல்லாம் அப்பியாச வைராக்கியத்தினால் நிறுத்திவிடுவதனால் தனது சித்தம், ஸச்சிதாநந்த பரப் பிரம்ம சொரூபத்துடன் ஐக்யமாய் விடும். அஞ்ஞானிகளாகிய புருஷர்கள் மாயையால் மூடப்பட்டிருப்பார்கள். ஆதலால், அவர்களிடத்தில் நான் இருக்கமாட்

டேன்; தத்வவேத்தர்களாக இருந்தபோதிலும் யோகியாகாவிட்டால், வெளி விஷயங்களில் எண்ணமுடையவர்களாகவே இருப்பார்கள்; ஆதலால், அவர்களிடத்திலும் நான் இருக்கமாட்டேன் என்று சுருதியில் சொல்லப்பட்டிருக்கின்றது.

"தர்மநாதர்மநே ஹித்வா ஸ்வயம் கேவலரூபதஃ
யஸ்திஷ்டதி ஸது ப்ரஹ்மாந் ப்ரஹ்மந ப்ரஹ்மவிஸ்வயம்."

எப்புருஷன் ஞான அஞ்ஞானங்கள் இரண்டையும் கேவல சொரூபத்தில் பிரகாசிக்கச் செய்கின்றானே அப்புருஷன், ஸாக்ஷாத் பரப் பிரம்மமேயொழிய பிரம்ம வேத்தனென்று சொல்லப்படமாட்டான்.

சுலோ|| "ஸர்வேப்ரஹ்ம வதிஷ்யந்தி ஸம்ப்ராப்தேது கலௌயுகே
நாநுதிஷ்டந்தி மைத்ரேய ஶிஸ்நோதர பராயணாஃ."

கலியுகம் உண்டானவுடன் பிரபஞ்சத்திலுள்ள மனிதர்கள், பரப் பிரம்மமென்று சொல்லுகின்றார்களேயொழிய ஞானனுபவ ரூபமான அனுஷ்டானங்களில்லாமல் ஸ்திரீ சம்போகம் உதரபோஷணம் இவைகளில் ஆசையுடையவர்களா யிருக்கின்றார்கள். யோகிகளாகிய பரமஹம்ஸர்களுக்கோ இவ்வித தோஷங்களில்லாமலிருக்கும்.

சுரு|| 'தஸ்ய புத்ரா தாயமுபயந்தி ஸுஹ்ருதஸ்ஸாது
க்ருத்யாந் த்விஷந்தஃ பாபக்ருத்யாம்."

தத்துவ ஞானமுடைய யோகியின் கிருக க்ஷேத்திராதி திரவ்வியங்களைப் புத்திரர்கள் கிரகிக்கின்றார்கள். அன்னபானுதி பூஜைகளினுல் ஞானிகளை ஆதரிக்கும் ஸஜ்ஜனர்கள், ஞானிகளின் புண்ணியத்தைக் கிரகிக்கின்றார்கள். அவர்களைத் திரஸ்காரம்செய்து பரிகாசாதி கிருத்தியங்களைச் செய்யப்பட்டவர்கள் அவர்களின் பாப கர்மங்களைப் பங்கிட்டுக் கொள்ளுகின்றார்கள்.

சுலோ||"ஏதாவதேவ கலுலிங்கமலிங்க மூர்த்தேஸம், ஶாந்தஸம் ஶ்ருதி சிரப்ரம நிர்வ்ருதஸ்ய தக்ஞஸ்ய யர்மதந கோபவிஷாத மோஹ லோபாபவதாமநுதிநம் நிபுணம் தநுத்வம்."

பரம தத்வஞான விசிஷ்டனுக்கு, அநேக ஜன்மங்களாய் வந்துகொண்டிருக்கும் சம்சார பிராந்தி நசித்ததனல், காமக்குரோத விஷயாதிகளும் மோக லோபாதி தோஷங்களும் தினே தினே க்ஷீணித்துப்போவதே திருஷ்டாந்தம்.

சுலோ||"மநஶ் ஸக்ஷுரேந்த்ரியாணும் ச ஐகாக்ரியம் பரமம் தபஃ
தஜ்ஜயாயஸ் ஸர்வதர்மேப்யஃ ஸ தர்மஃ பர உச்யதே."

மனம் கண்கள் முதலாகிய இந்திரியங்களை ஒரே நிலையில் நிறுத்துவதே, சிரேஷ்டமாகிய தபசு என்று முனிவர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தத் தவத்தினல் ஜனன மரணங்களில்லை. நிர்விகல்பசமாதியும் தவம் என்று சொல்லப்படும்.

"யாவத்விலீநம் ந மநோ ந தாவத் வாஸநாக்ஷயஃ
ந க்ஷீணு வாஸநா யாவச்சித்தம் தாவந்ந ஶாம்யதி.

யாவந்ந தத்வ விஜ்ஞாநம் ந தாவச்சித்தோபஶமஃ
யாவந்ந சித்தோபஶமஃ ந தாவத் தத்வவேதநம்
யாவந்ந வாஸநாநாஶஃ தாவத் தத்வாகமஃ குதஃ
யாவந்ந தத்வஸம்ப்ராப்திஃந தாவத் வாஸநாக்ஷயஃ.

தத்வஜ்ஞாநம் மநோநாஶோ வாஸநாக்ஷய ஏவ ச
மிதஃ காரணதாம் கத்வா துஸ்ஸாத்யாநி ஸ்திதாந்யதஃ.
த்ரய ஏதஶ்ஸமம் யாவந்ந த்வப்யஸ்தா முஹுர் முஹு
யாவந்ந தத்வஸம்ப்ராப்திஃ பவத்யபி ஸமாஶ்ருதேஃ."

மனம் லயமாகும்வரையில் வாசனை நசிக்கமாட்டா; வாசனை நசிக்கும் வரையில் சித்தம் நசிக்காது; சித்தம் நசிக்கும் வரையில் தத்வஞானம் உண்டாகமாட்டா; தத்வஞானம் உண்டாகும் வரையில் வாசனுக்ஷயம் என்



உள்ளுக்கிழுக்கும் மூச்சால்
கெட்ட ரத்தம், நல்ல ரத்தமாய் இருதய கமலத்தில்
மாறுவதைக் காட்டும் படம்.

లోపల బీల్చు శ్వాసమువలన, చెడురక్తము హృదయమున, మంచి
రక్తముగా మారుట.

ருல், மண்ணுசை பெண்ணுசை பொருளாசை என்னும் மூன்று ஆசைகளும் நகிக்கமாட்டா; தத்வஞானம். மனோநாசம், வாசனக்ஷயம் என்னும் இம் மூன்றும் ஒன்றையொன்று காரண ஸ்திதியை அடைந்து சாதிப்ப தற்கு எதுவரையில் சாத்தியப்படமாட்டாதோ, அது வரையில் தத்வஞானம் உண்டாகமாட்டாது என்று அந்நபூர்ணோப நிஷத்திலும், முக்திகோப நிஷத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

தசவித நாதங்கள்.

கேளப்பா கேசரமே அண்டவுச்சி
  கெட்டியாய்க் கண்டவர்க்கே மௌனமாகும்
ஆளப்பா பரப்பிரம்மம் யோகமென்று
  அடுக்கையிலே போதமுந்தான் உயரத்தூக்கும்
வாளப்பா கெவுனமணி விந்துநாதம்
  வலுத்துதடா கெட்டியாய்த் திரண்டுபோகும்
நாளப்பா அண்டமெலாஞ் சித்தியோடும்
  நடனமிடுஞ் சிலம்பொலியுங் காணலாமே.

அடியில் சொல்லுவதுபோல், பிராணவாயுவை (சுவாசத்தை) ஓம் என்னும் மந்திரத்துடன் மூக்குத் துவாரங்களின் வழியாய் உள்ளுக்கிழுத்து நிறுத்தவேண்டும். நிறுத்தினவுடன் அப்பிராணவாயு, விலாப் பக்கங்களிலிருக்கும் இரண்டு நுரை ஈரல்களிலும் போய்த்தங்கும். அந்த நுரை ஈரல் எதிரிலிருக்கும் படத்தில் ☛ காட்டப்பட்டிருக்கின்றது. நுரைஈரல் மத்தியில் இருதயகமலம் (Heart) இருக்கின்றது. அந்த கமலத்தில், நீலவர்ணமாயுள்ளயிடத்தில் அடிக்கடி வந்துசேரும், நீல (கெட்ட) ரத்தங்களையெல்லாம் (Venous Blood) முன் நுரையீரலில் நிறுத்திய

பிராணவாயு, சிவப்பு ரத்தமாய்ச் சுத்திசெய்கின்றது. இவ்வாறு பிராணவாயுவால், நீல (கெட்ட) ரத்தங்களையெல்லாம் சிவப்புரத்தமாய்ச் சுத்திசெய்தபிறகு, மறுபடியும் அந்த சிவப்பு ரத்தம், இருதயகமல இடது பாகத்தில் சிவப்பாய்க் காட்டியிருக்கும் இடத்திற்கு, ஓடும் ரத்த நரம்பு குழாய் மூலமாய் (Artery) அனுப்பப்படுகின்றது. இவ்வாறு அனுப்பப்பட்ட சிவப்பு ரத்தமானது, அவ்விடமிருந்து சிவப்பு ரத்தக்குழாய் நரம்புகளின் மூலமாய்ச் சரீரம் முழுதும் ஓடுகின்றது; மேற்படி சிவப்புரத்தம், சரீரத்திலிருக்கும் தசை (மாமிசம்) நரம்பு கொழுப்பு எலும்பு மூளை முதலான இடங்களுக்கெல்லாம் ஓடி, மேற்படி மாமிசம் நரம்பு கொழுப்பு எலும்பு மூளை முதலானவைகளுடன் அந்த சிவப்புரத்தம் சம்பந்தப்படுவதனுல் மறுபடியும் அந்த சிவப்புரத்தம் நீல (கெட்ட) ரத்தமாய் மாறுகின்றது. இப்படி நீலரத்தமாய் மாறி, சரீரத்தில் ஆங்காங்குள்ள நீல ரத்தக் குழாய்களின் வழியாய் (Veins) மறுபடியும், சுறுப்புசுரல் நுரைசுரல் இருதயகமலத்தின் வலது பாகத்தில் நீலவர்ணமாய்க் காட்டியிருக்கும் இடங்களுக்கெல்லாம், முறைமுறையே சென்று உள்ளுக்கிழுக்கும் சுவாசத்தினுல் அந்த நீலரத்தம் சுத்தி செய்யப்பட்டு மறுபடியும் இருதயகமலத்தின் இடதுபாகத்திற்கு சிவப்பு ரத்தமாய்க் கொண்டுவந்து விடப்படுகின்றது; இவ்விதமாய் சகல பிராணிகளின் சரீரத்திலிருக்கும் நீல (செட்ட) ரத்தமானது ஒவ்வொருமுறை உள்ளுக்கிழுக்கும் சுவாசத்தினுல் அடிக்கடி சிவப்புரத்தமாய் நுரைசுரலில் மாறுவதை இதனடியில் சுரல்படத்தில் காட்டப்படும். நுரைசுரலில் சிவப்பு ரத்தமாய் மாறி இருதய கமலத்திற்குச்சென்று அவ்விடமிருந்து சிவப்பு ரத்தகுழாய்களின் வழியாய் முன் சொல்லிய இடங்களுக் கெல்லாம்போய் மறுபடியும்

கெட்ட, நல்ல ரத்தங்கள் ஓடும் நரம்புகள்.
చెడ్డ, మంచి రక్తములు పారు నరములు.



SOLDEN & Co. BLOCK MAKERS MADRAS

நீலரத்தமாய் மாறி, இதுவும் ஓர் பிரம்ம சிருஷ்டி வேலையாய்ச் செய்து வருகிறது. உள்ளுக்கிழுக்கும் சுவாசமானது, நுரைஈரலிலிருக்கும் நீல (கெட்ட) ரத்தத்துடன் கலக்கும்போதெல்லாம் அந்த நீலரத்தத்திலிருக்கும் விஷத்தன்மை விஷவாயுவாய் மாறி மூக்கு ரந்திரங்களின் வழியாய் வெளிவருகின்றது. இப்படிவரும் வாயுவே, உஸ்வாசமென்றும் வெளிவிடும் மூச்சென்றும் கார்போனிக் ஆசிட் கியாஸ் (Carbonic acid gas) என்று சொல்லப்படும். நீலம் சிவப்பு ரத்தம், ரத்தக்குழாய்களில் ஓடுவதை எதிரிலிருக்கும் படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது. ☞

பிராணயாமம் செய்யும்பொழுது மூக்குத் துவாரங்களின் வழியாய் சுவாசத்துடன், ஓம்! ஓம்! ஓம்! ஓம் என்னும் பிரணவ மந்திரத்தைச் சேர்த்து உள்ளுக்கிழுத்து, மறுபடியும், சுவாசம் வெளிவராதபடி கண்டத்தினிடம் மூடிவிடவேண்டும். அப்போது அந்த சுவாசம் நுரைஈரலில் சிலநேரம் தங்கியிருக்கும். பிறகு, அந்த சுவாசம் நுரை ஈரலில் இருந்து வெளிவரும்; அப்போது யோகியானவன் கண்டத்தினிடம் மூடிவிடுவதனல், அந்த சுவாசம் மூக்குத் துவாரங்களின் வழியாய் வெளிவராமல், தொண்டைக்குப் பின்புறமாயிருக்கும் தீனிப்பை குழாய் வழியாய், 22-இருபத்திரெண்டடி நீளமுள்ள குடல் முழுமையும் அந்த சுவாசம் செல்லும்; பிறகு, அவ்விடமிருந்து மூலாதாரமென்று சொல்லும் குதத்தினிடம்போய் அந்த சுவாசம் அபானவாயுவாய் வெளியேபோக ஆரம்பிக்கும். அப்போது யோகியானவன், அந்த சுவாசத்தை அபான வாயுவாய்ப் போகவிடாமல் இரண்டு பிருஷ்ட (பிட்ட)ங்களையும் கெட்டியாய் இடுக்கிப் பிடிக்கவேண்டும். அப்போது அந்த சுவாசமானது அபானவாயுவாய்ப் போகாமல் பின்புறமா யிருக்கும் முதுகெலும்பில், 33 எலும்பு கூண்டுகள் படிப்படியாய் அமைக்கப்பட்டிருக்கின்றது.

அது, ☞ எதிரிலிருக்கும் படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது.

அந்த துவாரமத்தியில் வெள்ளை நரம் பொன்றிருக்கின்றது. அந்த வெள்ளை நரம்பிற்கு ஸ்பியானியல் கார்டு (Spinal cord) என்றும், சுஷும்நா நாடியென்றும் சொல்லப்படும். இந்த சுஷும்நா நாடியும் மேற்படி முதுகெலும்பு மத்தியில் இருக்கின்றது. தாமரைக் கொடியிலிருக்கும் சிறிய நூலைப்போன்ற சிறிய துவாரங்கள், மேற்படி வெள்ளை நரம்பில் உண்டு; மூக்குத் துவாரங்களின் வழியாய் உள்ளுக்கிழுத்து நிறுத்திய சுவாசமானது, அப்பியாச முதிர்ச்சியினால் மெதுவாய் அவ்வெள்ளை நரம்பில் ஏறிச் செல்லவேண்டும். பிராணாயாமம் செய்பவர்களுக்கு மாத்திரம், முதுகெலும்பிலிருக்கும் வெள்ளை நரம்பிலுள்ள சிறிய துவாரங்களின் வழியாய்ச் சுவாசம் மேலுக்கேறிச் செல்லும். இதற்கு காகபுஜண்டர் பிரமாணம்,

போமடா முன் சொன்ன நரம்பி னூடே
பூரித்த ரவி மதியுஞ் சுடர்தான் மூன்றும்
ஆமெடா பின்னியுந் தான் கீழே பாயும்
அந்தரங்கந் தன்னை பார்க்க அடங்கிப் போகும்
நாமெடா வெளி திறந்து சொல்லி விட்டோம்
நாதாந்த பரப் பிரம்ம நாட்டந் தன்னை
ஓமடா விந்துவுந் தான் அண்ட வுச்சி
உறுதி யுடன் சித்தமதை யூணிப் பாரே.

பூரித்த ரவி மதியுஞ் சுடர்தான் மூன்றும் என்றால், வலதுநாசி இடதுநாசி இரண்டு நாசிகளிலும் உள்ளுக்கிழுத்து நிறுத்திய மூன்று சுவாசத்திற்கும் அதிக கோபமுண்டாய், அக்நி ஜுவாலையைப்போல் கிளம்பி குத ஸ்தானத்திற்கு கீழ்நோக்கி சிங்கக்குட்டியைப்போல் அதிவேக

BACK BONE..



முதுகெலும்பு.

వీపెముక.

மாய்ப் பாய்ந்து, முதுகெலும்பு வழியாய் மேலேயேறி மூலஸ்தானம் சேர்ந்து அங்குள்ள விந்து என்று சொல்லும் அமிர்தத்தை தமது உஷ்ணத்தினுல் உருக்கி கண்டத்தில் விழச்செய்து, தான் நாதானந்த ஸப்தத்தில் ஐக்யமாய்விடும். இதை அடையவேண்டுமென்று எண்ணங்கொண்ட புருஷன், திட சித்தமுடையவனு யிருந்து பிராணுயாமம் செய்து வரவேண்டும்; யோகாப்பியாசத்தினுல் சுவாசம் முதுகெலும்பு வழியாய் மேலே ஏற்றி சகல நாடிகளையும் கிளப்பினவுடன் நாதசப்தங்கள் உண்டாகும் அதை இதனடியில் சொல்லுகின்ருேம்.

பதுமாசனத்திலாவது சித்தாசனத்திலாவது முன்சொல்லியதுபோல் உட்கார்ந்து கண்களை மூடி, இடது நாசியை வலதுகை மோதிரவிரலால் மூடி, உள் தங்கிய சுவாசத்தையெல்லாம் வலது நாசியின் வழியாய் விட்டு, அதன் தொடர்ச்சியாகவே சுவாசத்தை உள்ளுக்கிழுத்து விழுங்கி, இன்னும் சுவாசம் ஏதாகிலும் உட்கொள்ளுகின்றதா என்னவென்று பார்ப்பதற்காகக் கொஞ்சம் சுவாசத்தை மறுபடியும் இழுத்துப் பார்க்கவேண்டும். அப்போது மூன்றங்குலம், இரண்டங்குலம், ஒரு அங்குலம், அல்லது அரை, கால் அங்குலமாகிலும் சுவாசம் உள் பிரவேசிக்கும். அதையும் இழுத்து விழுங்கி மூக்கின்மீதிருக்கும் கை எடுத்துவிட்டு இரண்டு தொடைகளின்மீது இரண்டு கைகளை வைத்துக்கொண்டு வலதுகை 1, 2, 3, 4, 5, விரல்களையும் எண்ணி, இடதுகைச் சுண்டுவிரலை மடக்கவேண்டும். இப்படி இடதுகை ஐந்து விரல்களையும் விட்டபிறகு புருவமத்தியில் 1 என்று லக்கம்வைத்து அதன் மீது திருஷ்டியை நிறுத்தி மறுபடியும் இடதுகை ஐந்து விரல்களையும் விட்டபிறகு, முன் புருவமத்தியில் மனதினுல் நினைத்துவைத்த 1 என்னும் இலக்கத்தை மனதினுலேயே

எடுத்துவிட்டு, **2** என்று இலக்கம்வைத்து இவ்வாறு இடதுகையில் 30-முறை விடவேண்டும். அப்போது அது முப்பத்திக்கால் $7\frac{1}{2}$-ஆகும். அதாவது, இருபத்தைந்தை முப்பதால் பெருக்க எழுநூற்றைம்பது $25 \times 30 = 750$ எண்ணும் வரையில் சுவாசத்தை நிறுத்தினதாகின்றது. இடதுகையில் 30-எண்ணி முடிந்தவுடன், வலதுகை மோதிரவிரலால் இடது நாசியைமூடி முன் கர்ப்பத்தில் நிறுத்தியிருந்த சுவாசத்திலிருந்து கொஞ்சம் சுவாசத்தை வலது நாசியில், நாபிவரையில் வெளியில் விட்டு, மறுபடியும் அதன் தொடர்ச்சியாகவே சுவாசம் உள்ளுக்கிழுத்து, இவ்விதமாய் 4-முறை செய்யவேண்டும். இவையெல்லாம் சேர்ந்து நால் முக்கால் மூன்று கணக்காகும். அதாவது, எழுநூற்றைம்பதை நாலால் பெருக்க மூவாயிரம் $(750 \times 4 = 3000)$ எண்ணும்வரையில் சுவாசத்தை நிறுத்தினவனாகின்றான். இதற்கு 5-நிமிஷங்களாகும். இதுமுடிந்தவுடன், இடது நாசியிலும் இவ்வாறே செய்து முடித்து, மறுபடியும் வலது இடது இரண்டு நாசிகளிலும் அப்பியாசம் செய்து நிஷ்டையில் இருக்கவேண்டும். அப்போது சுவாசமானது, முன்சொல்லிய சுழுமுனை நாடியின் வழியாய்ச்சென்று பிரம்மகபாலத்தைத் தாக்கி அவ்விடமிருந்து இச்சரீரத்திலிருக்கும் எழுபத்தீராயிரம் நாடிகளிலும் சென்று, அந்தந்த நாடிகளை அவ்வவ்விடம் தங்கவிடாமல் அந்தந்த ஸ்தானங்களிலிருந்து அவைகளையெல்லாம் கிளப்பிவிடுவதனால், நாடிகள் யாவும் தம்தம் ஸ்தானத்தை விட்டுக்கிளம்பி சர்ப்பம்போல் சீறிக்கொண்டு 'ஓங்' காரத்துடன் சிணிசிணி, சிணீ, சங்கம், வேணு, வீணை, தாளம், கண்டா, பேரி, மிருதங்கம், மேக நாதங்கள் முதலான இப்பத்துவித வாத்தியங்களும் முன்சொல்லிய நாடிகளிலிருந்து தொனித்துக் கொண்டு, காதின் வழியாய்

சதாகாலமும் கேட்டுக்கொண்டே யிருக்கும். இதற்கு ஹம்ஸோபநிஷத்தும், நிஷ்டானுபூதி, நெஞ்சரி விளக்கம் பிரமாணம்.

"தர்ஜன் யங்குஷ்டாப்யாம் கர்ண ரந்த்ரே நிமீல்ய நாதம் ஶ்ருணுயாத், ப்ரதமம் சிணி, சிணி, த்விதீயா சிணீ, த்ருதீயா ஶங்கநாதஃ, சதுர்த்தோ வேணுநாதஃ, பஞ்சமம் வீணாநாதஃ, ஷஷ்டம் தாளஃ, ஸப்தமம் கண்டா, அஷ்டமம் பேரி, நவமம் ம்ருதங்கஃ, தஶமோ மேகநாதஃ, நவமம் பரித்யஜ்ய தஶமமே வாப்யஸேத் தத்ர "ஓங்" காரே மனோ லீநம் பவதி."

இத்திற மான யோகசா தனையி
　　லிருந்துசா திப்பவர் தமக்குச்
சுத்தமா நாதத் தொனிகளும் பலவாத்
　　தோன்றிடு மணிகடன் மேக
மத்தளம் பேரி யாழொலி சிலம்பு
　　வளையளி தாளமென் றுமையாட்
கத்தனு மொழிந்தா னன்றியு முரவோ
　　ராய்ந்தெடுத் துரைத்தன ரன்றே.

சூரியகாந்தம் பஞ்சைச் சுட்டிடுஞ் சுடரே போலக்
கூரிய வடிமூலத்தின் குண்டலிக் கனலை மூட்டி
வீரிய விந்து நாதவெளிவீடு தன்னிற் சென்றே
ஆரிய நாகைநாத ரடியிணை தொழுவாய் நெஞ்சே.

என்னும் பிரமாணத்தினுல், மேற்சொல்லிய வாத்தியங்களுடன் சதா தொனித்துக் கொண்டே யிருக்கும். (இது விஷயம் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம், 5-சு. 27, 28 பார்க்க) ஓர்கிழ அரசன் பேரில் வேற்றரசன் யுத்தத்திற்கு வந்தபோது கிழ அரசன் தன் குமாரனை வரவழைத்து, "அப்பா! குழந்தாய்! வேற்றரசன் நம்மீது படையெடுத்து வந்திருக்கின்றான் நீ சென்று அந்த வேற்றரசனை வெற்றிபெற்று வரக்கடவாய்" என்று குமாரனை ஆசீர்வதித் தனுப்ப, அந்தக்

குமாரன் சென்று வேற்றரசனை வெற்றியடைந்து ஜயத்துடன் திரும்பிவருகையில், அவன் தந்தையாகிய கிழ அரசன் கேள்விப்பட்டுத் தன்னிடமிருக்கும் ராஜ வாத்தியங்களை யனுப்பி குமாரனை எதிர் கொள்வதுபோல், நமது பகவானனவர், அப்பா! கஷ்டப்பட்டு பிராணு யாமம் செய்து சம்சார மென்னும் சமுத்திரத்தைக் கடந்து கரையேறி விட்டாயா 'வென்று சந்தோஷித்து, மேற்கூறிய தசவித நாதங்களையும் காதில் கேட்கும்படி முந்தி அநுபவிக்கத் தந்து, பிறகு காட்சியைத் தருகின்றார். இந்த உண்மை யநுபவத்தை நமது புராதனமாயுள்ள சகல ஆலயங்களிலும் பிரத்தியக்ஷமாய்க் காணலாம். எப்படியென்றால்:—

நமது ஆலயங்களில் அபிஷேகம் செய்கின்ற காலங்களில், நாம் அங்குள்ள மூர்த்திகளைத் தரிசிக்கப்போகும் போது, சர்வ வாத்திய மண்டபத்தில் தசவித (பத்துவித) வாத்தியங்களும் வாசிக்கக் கேட்கின்றோம். பிறகு, நாம் மூலவரை சேவிக்கப்போகுங் காலத்தில், அந்த வாத்தியங்களைக் கேட்டுக்கொண்டே மூலஸ்தானம் சென்று அந்த மூலவிக்கிரஹ சொரூபத்தின்மீது நமது பூர்ண திருஷ்டியை வைத்தபோது, அந்த விக்கிரஹ சொரூபத்தில் மனம் லயித்துவிடுகின்றமையால், அதற்குமுன் கேட்டுக்கொண்டிருந்த வாத்திய சப்தங்கள் கேளாமற் போய்விடுகின்றது. அதுபோல் இந்த தேக மென்னும் ஆலயத்தில், மேற்கூறிய பத்துவித நாதசப்தங்களைக் கேட்டுக்கொண்டிருந்து, பிறகு அதைக் கடந்து பிரம்ம கபாலத்திலிருக்கும் ஆகாசவடிவத்தில் மனம் ஐக்யமாய்விடும். மனம் ஐக்யமாய்விடுவதால், தனது நிஜ சொரூபம் தானகவே நின்றுகொண்டிருக்கும் அதாவது, தனே தானுவான்.

முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அதிகப்பட்ட இந்த

நாத சப்தத்தை யார் கேட்கின்றார்களோ, அவர்களே முக்தர்கள்; அவர்களே பிரம்ம ஞானிகள். இப்படி அப்பிய சித்த மோக்ஷவீ டடைந்திருக்கும் மஹானுபாவர்கள் யாரென்றால்:—

"நிமிஷார்த்தம் நதிஷ்டந்தி வ்ருத்திம் ப்ரஹ்மமயீம் விநா
யதா திஷ்டந்தி ப்ரஹ்மாத்யா ஸநகாத்யா ஶுகாதய:
தஸ்மாத் ஸர்வம் பரித்யஜ்ய தத்வநிஷ்டோ பவாநக
போகேஸ்ச்சாம் தூரதஸ்த்யக்த்வா த்ரயமே தத்வமாசர.

வாஸநாக்ஷய விஜ்ஞாந மநோநாஶா மஹாமதே
ஸ்வஸ்வரூபாநு ஸந்தாநமேவம் க்ருத்வா ஸுகீபவ.
ஸ்வஸ்ரூபாநு ஸந்தாந வ்யதிரிக்தாந்ய ஶாஸ்த்ராப்யாஸை
ருஷ்ட்ரகுங்கும பாரவத் வ்யர்த்ததா.

ஸ்வரூபாநு ஸந்தாநம் விநாந்யதாசா ரபரோ நபவேத்.
ஸம்ஶாந்த ஸர்வஸங்கல்ப: ப்ரஶாந்த ஸர்வேஷண:
நிர்விகல்ப பதங் கத்வா ஸ்வஸ்தோபவ முநீஸ்வர."

தேஜோபிந்தூபநிஷத், துரியா தீதாவதோபநிஷத், அன்னபூர்ணோப நிஷத், ஸந்யாஸோபநிஷத், வராஹோப நிஷத், மஹோபநிஷத், இத்யாதி சுருதி வாக்கியங்களின் ரீதியாய் ஸநக ஸநந்தநாதிகள், சுகப்பிரம்மம், வஸிஷ்டர் முதலாகிய மஹானுபாவர்கள் பிரம்மாநந்தத்தில் சொக்கி இடைவிடாத மௌன நிஷ்டையிலிருந்து சுகித்ததுபோல், யார் ஒருவர் சகல எண்ணங்களையும்விட்டு சித்த விஸ்ராந்தி அடைந்து அந்நிய சாஸ்திரங்களிலும் சமஸ்த போகங்களிலும் இச்சை யில்லாத வர்களாய் மாயைஎன்னும் பிரமை வலையில் அகப்படாமல் சுயம்பிரகாசமான பிரம்ம ஞானத்தினால் நிர்விகல்பசமாதியி லிருப்பார்களோ, அவர்களே ஜீவன் முக்தர்கள். மேற்சொல்லிய மஹானுபாவர்கள் தேவலோகஞ்சென்று, தேவசபையில் மாத்திரம் மனதையுடையவர்களைப்போல் பேசி, தேவசபை கலைந்து வெளி

யில் வந்தவுடன், அவர்களின் மனமானது எப்படி யிருக்குமென்றால்:—

"பத்மபத்ரம் யதா தோயைः ஸ்வஸ்த்தைரபி ந லிப்யதே
ஶப்தாதி விஷயாம்போபிः தத்வஜ்ஞாநீ ந லிப்யதே.
யஸ்மாந் மந்த்ரபலோபேதः க்ரீடன் ஸர்ப்பைர்ந தஶ்யதே
க்ரீடந்நபி ந லிப்யதே தத்வதிந்திரிய பந்நகைः.

தாமரை யிலையின்மீது, நீர்த்துளி இருந்தபோதிலும் அந்த நீர், தாமரையிலையில் ஒட்டாம லிருப்பது போல், அவர்களுடைய விஷயங் (சங்கல்பங்) களும் அந்த ஜலத்தைப்போல் மனதில் ஒட்டமாட்டா. எப்படியென்றால்:—

மாந்தரீகத்தைக் கற்றவர்கள், சர்ப்பங்களுடன் விளையாடிக் கொண்டிருந்த போதிலும் அந்த சர்ப்பங்களின் கடிக்கு மாந்தரீகர்கள் உட்படாமல் எப்படி தப்பித்துக் கொள்ளுகின்றார்களோ, அதுபோல், முன் சொல்லிய மஹானு பாவர்களுடைய இந்திரியங்கள், சர்ப்பங்களின் விஷம் போன்ற விஷயங்களில் (எண்ணங் களில்) மனம் சேரமாட்டா. அப்பேர்ப்பட்டவர்களின் மனம் பிரம்மத்தில் எப்படி ஐக்கியமாகிற தென்றால்:—

"லவணம்தோய ஸம்ஸ்பர்ஶாத் த்ரவதோயமயம் பவேத்
மநோஹி ப்ரஹ்ம ஸம்ஸ்பர்ஶாத் ததா ப்ராஹ்மமயம்பவேத்."

உப்பு, ஜலத்தில் போட்டவுடன் அவ்வுப்பு கரைந்து ஜல மயமாவதுபோல், மனம் பிரம்மத்திற் கலந்தவுடனே அம்மனம் பிரம்ம சொரூபமாகின்றது. அப்படிக்கு அந்த மனம் பிரம்ம சொரூபமானவுடனே, மனோமயமாகிய பிரபஞ்சமெல்லாம் பிரம்ம சொரூபமே யாகின்றது. ஆதலால்,

"மநஸா வசஸா த்ருஷ்ட்யா க்ருஹ்யதே ஞை ரபீந்த்ரியைः
அஹமேவ ஸமத்யோந்ய திதி புத் த்யத்வ மஞ்ஜஸ."

மனதினலும், வாக்கினலும், சதுர் தசேந்திரிய வியா

பாரங்களினுலும் (அதாவது-மனம், புத்தி, சித்தம், அஹங்கார மென்னும் உள் இந்திரியங்கள் நான்கும், சுரோத்திரம் (செவிகள்), துவக்கு (தேகசர்மம்), நேத்திரம் (கண்கள்), சிங்குவை (நாக்கு), கிராணம் (மூக்கு), என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும், வாக்கு (வாய்), பாணி (கைகள்), பாதம் (கால்கள்), குய்யம், குதம் என்னும் கர்மேந்திரியங்கள் ஐந்தும் ஒன்ருய்க் கூடினதே சதுர் தசேந்திரிய வியாபாரங்கள் என்று சொல்லப்படும்.) இவைகளினுல் பார்ப்பது, வார்த்தை யாடுவது எண்ணுவது முதலானவைகளெல்லாம் பரப் பிரம்மமே என்றும், அந்த பரப் பிரம்மமே தானென்றும் சஞ்சலமில்லாமல் இருப்பார்கள். மனம் முதலாகிய பதினன்கு இந்திரியங்களும் அடங்கி ஜீவன் கேவல பிரஜ்ஞா சொரூபமா யிருப்பதே துறியாவஸ்தை என்று சொல்லப்படும்.

ஒடுங்கினேன் ஓங்கார நிலையிற் குள்ளே
உற்பனமாய்ச் சிவலிங்க மூள்ளே கண்டேன்
நடுங்கினேன் மும்மூலங் கொள்ளும் போது
நாற்பத்து முக்கோணம் நடுவாய்ச் சென்றேன்
அடங்கினே னன்மாவுக் குள்ளே மைந்தா
அடங்காத சித்தனென்று அறிவிற் சேர்ந்தேன்
தடங்கினேன் நந்திதனி லேறிக் கொண்டே
தாய்பதத்தை எந்நாளும் போற்றி னேனே.

மனம் உதிக்கும் இடத்தை உபதேசித்தல்.

பக்தஜன சிரோன் மணிகளே! ஜீவன்முக்தி பதவியை அடைவதற்கு யோகாப்பியாசம் செய்ய கஷ்டமா யிருக்கப்பட்டவர்கள், "ஸோஹம்" என்னும் ராஜயோக ரகசியத்தை, இந்நூலில் "இதுவே சிவராஜயோக ஸமாதி இதை ஜபம் செய்யுங்கள்" என்பதில் படத்தைக்காட்டி அதில் சொல்லியிருப்பதுபோல், இடைவிடாமல் சதா காலமும் அப்பியசித்து, மனதை ஒரே நாட்டத்தில் நிறுத்தி பிறகு அந்த ஓர்நாட்டத்தையும் சூந்நியமாய்ச் செய்து, எப்பொழுதும் சுகாசனத்திலேயே என்றால், தன் இஷ்டம்போல் சயனித்தோ, உட்கார்ந்தோ நிஷ்டைசெய்யலாம். அதாவது,

ஸ்ரீ ரங்கநாதர்.

ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ரங்கநாதர் சர்வ சங்கல்பங்களை (எண்ணங்களை)யும் விட்டு ஒழித்து, மேற்சொல்லியதுபோல்

சுகாசனமாய் ஆதிசேஷன்மீது சயனித்து, யோக நித்திரை செய்கின்றார். யோகநித்திரைசெய்யும்விக்கிரஹம் எதிரில் காட்டியிருக்கின்றது. கர்மகாண்ட விதிப்படி, தேவலோக, நரலோகமென்று சொல்லப்பட்ட இடங்களிலாகிலும், அல்லது இன்னும் எந்த லோகத்திலாகிலும் ஐந்து சிரஸை யுடைய ஸர்ப்பம் இல்லவேயில்லை: ஐந்து சிரசையுடைய சர்ப்பத்தின்மேல் ஸ்ரீ ரங்கநாதர் சயனித்திருப்பதாய்ச் சொல்வதற்குக் காரணம் இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

நமது சரீரத்தில் பிராண, அபான, உதான, ஸமான, வியானனென்னும் ஐந்து பிராணன்களும் பிரதானமான தாய் இருக்கின்றன: இவைகளுக்கு ஆதாரமாய் ஐந்து உப வாயுக்களும் இருக்கின்றன: அவை யாதெனில், நாகன் கூர்மன் க்ருகுரன் தேவதத்தன் தனஞ்சயன்; இந்த பத்து வாயுக்கள் பத்து நாடிகளிலும் திரிந்துகொண்டிருக்கும். இப்பத்து வாயுக்களிலும், பிராண அபான உதான ஸமான வியான னென்னும், ஐந்து வாயுக்களே பிரதானமான ஐந்து சர்ப்பங்களா யிருக்கின்றது. சர்ப்பம்போலிருக்கும் இந்த பிரதான ஐந்து வாயுக்களேயும், யோகபலத்தினுல் நிறுத்திவிட்டால், யோகநித்திரை செய்யலாம் என்று காட்டுவதற்காகவே, ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ரங்கநாதர் ஐந்து சிரசையுடைய சர்ப்பத்தின்மேல் ஸயனித்து யோகநித் திரை செய்வதாய் உலகத்தாருக்கு பெரியோர்களால் காட்டப்பட்டிருக்கின்றதேயொழிய ஐந்து சிரசையுடைய நாகன் இருக்கின்றதென்று நம்பவேண்டாம். இந்த பத்து வாயுக்களின் குணங்களே முன் சொல்லியிருக்கின்றோம்: ஆதலால், மேற்சொல்லிய யோக நித்திரையே நிஷ்டை என்று சொல்லப்படும். அதுபோல் நாமும் யோகாப் பியாசத்தினுலாவது அல்லது ராஜ யோகத்தினுலாவது,

சகல எண்ணங்களேயும் நசிக்கச்செய்து மனதையடைக்கி யோகநித்திரை செய்யவேண்டும். இதற்கு நிஷ்டானுபூதி பிரமாணம்;

அலேயு மனத்தை யகத்தடக்கு மவனே சரிகை கடந்தோனும்
அலேயு மனத்தை யகத்தடக்கு மவனே கிரியை முடிந்தோனும்
அலேயு மனத்தை யகத்தடக்கு மவனே யோக தற்பரனும்
அலேயு மனத்தை யகத்தடக்கு மவனே ஞானி யதிசூரன்.

இப்படிப்பட்ட, மனம் லயப்படுவதற்காக இன்னும் சில விஷயங்களே இதனடியில், உபநிஷத்துகளின் திருஷ்டாந்தங்களுடன் சொல்லுகின்ருேம். அதை உபாயமாய்ப் பார்த்து சிரத்தையுடன் அப்பியசிக்கப்பட்டவர்களின் சங்கல்பம் (எண்ணங்கள்) நசிந்து, எந்த எண்ணங்களுமில்லாமல் தன்னேத்தான் மறந்து மௌன சமாதியில் நின்றிருக்கலாம். மனதை நிறுத்துவதற்காக அனேகவழிகள் உண்டு; அவைகளெல்லாம் இந்நூலில் எழுதப்பட்டிருக்கின்றன. இதில் எவ ரெவர்களுக்கு எதெது வேண்டுமோ அதை எடுத்துக்கொண்டு சுவானுபவத்திற்குக் கொண்டு வரலாம்.

மனே ஓட்டத்தை நிறுத்த உபாயம்.

'சித்தம் ஸஞ்ஜாயதே ஜந்ம ஜராமரண காரணம்.'' [முக்திகோப]

மனதே, ஜனன மரணங்களே உண்டாக்குவதற்குக் காரணமா யிருக்கின்றது. ஆதலால்,

"யஸ்ய ஸங்கல்பநாஶஸ்யாத் தஸ்யமுக்திஃ கரே ஸ்திதஃ.
[மண்டல ப்ராஹ்மணேபநிஷத்.]

எவர்களுக்கு எண்ணங்களெல்லாம் நசிந்து விடுகின்றனவோ அவர்களுக்கு, மோக்ஷம் கரதலாமலகம் (உள்ளங்கை நெல்லிக்கனி) போல் இருக்கும்.

"யதா ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யேஸ்ய ஹ்ருதி ஸ்திதாঃ
அத மர்த்யோ ம்ருதோ பவத்யத்ர ப்ராஹ்ம ஸமஸ்நுதே."
[கடோப நிஷத்.]

எப்பொழுது சகல எண்ணங்களையும் நசிக்கச் செய்கின்றார்களோ அப்பொழுதே, பிரம்ம சொரூபர்களாய் முக்தியை அடைகின்றார்கள். சகல எண்ணங்களையும் நசிக்கச்செய்ய ஓர் உபாயம் சொல்லுகின்றோம் அதை சிரத்தையுடன் கவனித்து அதுபோல் அப்பியாசம் செய்து வந்தால், சகல எண்ணங்களும் ஒழிந்து பிரம்மாநந்த பதவியை அடையலாம். எண்ணங்களினாலேயே ஜன்மங்கள் உண்டாகின்றன; எண்ணங்கள் இல்லாவிடில் ஜன்மங்களில்லை யென்று உபநிஷத்துகளில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால்,

" அவாவென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து. [திருக்குறள்.]

" உபாய ஏக ஏவாஸ்தி மந ஸ்வஸ்ய நிக்ரஹே
மாநஸேப்யுதயே நாஸோ மநோநாஸோ மஹோதயঃ."
[முக்திகோபநிஷத்.]

சகல எண்ணங்களையும் தலையெடுக்க விடாமல் செய்வதே மனோ நாசனத்திற்கு முக்யமான உபாயம். எப்படியென்றால், நமக்கு எண்ணங்க ளெல்லாம் பிரம ஸ்தானத்திலிருந்து உண்டாகின்றன; பிரம ஸ்தானமென்றால், மஹா பிரளயம் முடிந்தயுடன், ஸ்ரீமந் நாராயணமூர்த்தி, பிரம தேவரை நினைத்தவுடனே, ஸ்ரீமந் நாராயணமூர்த்தியின் நாபியிலிருந்து பிரமதேவர் உற்பவித்தார். பிரமதேவர் நாபியிலிருந்து உற்பவித்தது மறுபக்கம் படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது:—



ஸ்ரீமந் நாராயணமூர்த்தி நாபியில்
பிரமதேவர் பிறந்தார்.

அந்த பிரமதேவர் மூலமாய், எண்பத்து நாண்குலக்ஷ, ஜீவராசிகளும் சிருஷ்டிக்கப்பட்டன; ஆகையால், நமக்கு உண்டாகும் எண்ணங்கள் யாவும் அந்த 'நாபி' யிலிருந்தே பிறக்கின்றன. அந்த நாபிஸ்தானத்தை வெட்ட வெளி யாய்ப் பார்த்தபோது எண்ணங்க ளெல்லாம், உதித்த

இடத்திலேயே ஒடுங்கும். எப்படியென்றால் "சென்னபட்டணம்" என்று மனம் நினைக்க ஆரம்பித்த வுடனே 'சே' என்னும் அக்ஷரம் நாபியிலிருந்து புறப்படும். அதை நாபியிலிருந்து வெளியில் வரவிடாமல் அந்தர் (உள்) முகமாய் அந்த நாபிஸ்தானத்தை ஆகாச ரூபமாய்ப் பார்த்தபோது என்றால், வெட்டவெளியாய் அதாவது சும்மாயிருந்தால் 'சே' என்னும் எழுத்து உதித்த இடத்திலேயே ஒடுங்கும். முதல் எழுத்து ஒடுங்குவதனால் அதன்பிறகு வரும் எழுத்துகளெல்லாம்(எண்ணங்களெல்லாம்) ஒடுங்கிவிடும். இந்த எண்ணங்களையே மனமென்று சொல்லப்படும். இதற்கு முத்திமுடிவு ஞானவாசிட்டம் பிரமாணம்;

ஒரு பொரு ணினைவு போய்ப் பின்
　　னொரு பொரு ளினையு முன்னாய்
மரு விடை வெளி யிலே யுன்
　　மன மிலை யாகை யாலே
சொரூப நீ தானாய்த் தோன் றுந்
　　துலை மனங் கொண்டங் குன்னி
லொரு திரி புடியு முண்டா
　　யொழியு மச் சொரூப மென்றும்.

சொரூபம் விட் டகலன் மோகமாம் வே று
　　சொல்லிட முன்பு பின் பில்லை
யொருபொரு ணினைவை யொழித்து மே லப்பா
　　லொரு பொரு ணினைவுறி லந்த
விருபொரு ணடுவு ணினை வற விருக்கு
　　மிது சொரூபத் தியல் பிதுதான்
மருவு கற்பனை மாண் டசைவில் கற்போலாய்
　　வரு நனைச்சுழுத்தி நீர் வடிவாம்.

உள்ளூறு சங்கற்பத்தினாற் றோன்று முள்ள
　　மற் றதனினு லொடுங் குந்
தள் ளூறு காற்றா லெழுந்த தீக்
　　கொழுந்து சமிப்பதுங் காற்றினாற் போல

நன் ஞூறு பிரம மன்று நானென்று
நாடுதன் மனத் துறு பந்த
மென் ஞூறு மிடமும் பிரிவ லாப்
பொருளே யாமெனு மமுத்தமே வீடாம்.

செப்பிய வறிவு முடிவில் சங்கற் பஞ்
செய்ததிற் சென்றிடு மிது தா
னிப் பிரம்மத் தின் மனமதா மிதனுக்
கெண்ணில் சத்துக ளுள் வாகுங்
கப்பிலா தெங்கு நிரந்தரஞ் செய் யுங்
கடுமையா மிம் மனந் தனிலே
யப் பிலே தோன் றுந் திரைகள் போற்
பேத மாகிய வல்லபந் தோன் றும்.

என தன்பர்களே! மனதின் நிலையை உங்கள் புத்திக்கு நன்ருய் விளங்கும்படி தெரிவிக்கின்ருேம்: இதை கவனமாய் வாசித்து ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களும் சாதனம் செய்துவரவேண்டும். இந்நூலில் முக்கியமான விஷயங்களை இரண்டுமுறை சொல்லியிருக்கின்ருேம். ஏனென்ருல், உங்களுக்கு ஞாபகமிராது ஆதலால், இரண்டுமுறை சொன்னுல் சிறிது ஞாபகத்தில் வைப்பீர்களென்று இரண்டாவது முறையும் அங்கங்கு சொல்லியிருக்கின்ருேம்:

காற்றினுல் எரியும் அக்நியானது காற்றினுல் அணைவதுபோல், சுவாசத்தினுல் (மூச்சினுல்) உண்டாகும் எண்ணம், சுவாசத்திலேயே ஒடுங்கவேண்டும். மனதின் சுபாவ குணம் எண்ணங்களேயாம்: இம்மனதிற்கு சமுத்திரத்தை இங்கு திருஷ்டாந்தமாய்ச் சொல்லி உங்கள் மனதை ஓட்டத்தை நிறுத்திவிடப் போகின்ருேம்:

சமுத்திரம் எப்படிப்பட்ட தென்ருல், காற்றில்லாமலிருக்கும்போது யாதொரு சிறிய அலையும் குளத்தில் உண்டாகாமல்அசைவற நின்றிருப்பதுபோல், இருக்கப்பட்டது

சமுத்திரஜலம்: அவ்வாறு, அசைவற நின்றிருக்கும் சமுத்திர ஜலத்தில் எப்பொழுதும் ஓயாமல் அலைகள் பிறந்து பிறந்து நசிந்துவிடுவதற்குக் காரணம் என்னவென்றால், எந்த மலைகளும் செடிகளும் இல்லாமல் ஏக வெளியாயிருக் குமிடத்தில், எப்பொழுதும் விசேஷமாய்க் காற்று வீசிக் கொண்டேயிருக்கும். கடல் ஏக வெளியா யிருப்பதனால், அவ் வெளியிலிருந்து காற்றானது சொல்பவேகமாய் ஓடிவரும்போது, சமுத்திர ஜலத்திற்குள் மூன்றங்குல ஆழத்தில் அக்காற்று பிரவேசிக்கும். காற்று ஜலத்திற்குள் பிரவேசித்தவுடன் அசையாமல் நின்றிருந்த சமுத்திர ஜலம் அசைந்து புரண்டு அலையாய் மேல் கிளம்பி அதிலிருந்து, குமிழிகளும் சிறிய சிறிய திவலைகளும் நுரைகளும் உடனுக்குடனே பிறந்து பிறந்து, அவையாவும் அலையில் அடங்கி அவ்வலை சமுத்திரஜலத்தில் மறைந்துவிடும்: காற்று இன்னும் விசேஷவேகமாய் ஓடிவரும்போது, அக்காற்று அரையடி ஆழத்தில் பிரவேசிக்கும்: காற்று ஜலத்திற்குள் அரையடி ஆழம் பிரவேசித்தவுடன், முன் அலைகளைவிட இன்னும் அதிக உயரமாய் அலைகள் கிளம்பும்: காற்று இன்னும் அதிவேகமாய் ஓடிவரும்போது அக்காற்று, முக்காலடி ஆழத்திற்குள் புகுரும். அப்போது, சமுத்திரஜலம் ஆள் உயரத்திற்குமேல் அலையாய் எழும்பி மலைபோல் புரண்டுவரும்: அப்போது அதில் விசேஷ குமிழிகள் திவலைகள் நுரைகள் உண்டாய் மறைந்து மறைந்து ஓடி, மறுபடியும் ஒன்றுங்காணாமல் ஜலத்தில் மறைந்துவிடும்: அசையாமலிருந்த சமுத்திரஜலம் காற்றினால் அசைந்து, அதிலிருந்து அலைகளும் குமிழிகளும் திவலைகளும் நுரைகளும் உண்டாயிற்று. அதுபோல், சுவாசமென்னும் காற்று நாபியில் பிறந்து,மூக்குத்துவாரங்களின் வழியாய் ஓயாமல் வெளிவந்து, ஒவ்வொரு சுவாசமாய்

இறந்துகொண்டே வரும்போது, முன் அலையில் கிளம்பிய குமிழ் திவலை நுரைகளைப்போன்ற சிறிய சிறிய உதவியற்றதும், ஞாபகமிராததுமாகிய அனேக எண்ணங்கள், நாபியிலிருந்து வெளிவரும் சுவாசமென்னும் காற்றில், மனதென்னும் எண்ணங்கள் அடிக்கடிப் பிறந்து மறைந்து நசித்துக் கொண்டேவரும். இப்படி காற்றுருவமாயிருக்கும் மனதை நிறுத்த உபாயம் சொல்லுகின்றோம் கவனியுங்கள்.

ஓர் புற்றிலிருந்து பாம்பானது வெளிவரும் சமயத்தில் அப்புற்றினிடம் ஒரு புருஷன் நின்றிருந்தால், அவனை பாம்பு பார்த்தவுடன் பயந்து வெளிவராமல் புற்றுக்குள் போய்விடும். மறுபடியும் பத்து நிமிஷங்கள் சென்றபிறகு அப்பாம்பு புற்றினிடம் வந்து எட்டிப்பார்க்கும்போது அப்புருஷன் அவ்விடமேயிருந்தால், அப்பாம்பு மறுபடியும் புற்றுக்குள் போய்விடும். அப்புற்றைவிட்டு புருஷன் விலகிப்போகாமலிருந்தால், பாம்பு புற்றுக்குள்ளேயேயிருக்கும். புருஷன் புற்றினிடமிருந்து விலகிப்போய்விட்டால் பாம்பு வெளியே ஓடும். அதுபோல், நாபி புற்றென்றும், சுவாசம் (மூச்சு) பாம்பென்றும், அந்த சுவாசமென்னும் பாம்பில் அனேகனேக எண்ணங்கள் அடிக்கடி உதித்து உதித்து, முன்சொல்லிய குமிழிகள் திவலைகள் நுரைகள் அடிக்கடி அலையில் பிறந்து பிறந்து நசிப்பது போல், சகல எண்ணங்களும் சுவாசமென்னும் அலையில் அடிக்கடி பிறந்து நசித்துவிடும். இந்த எண்ணங்களையே மனது என்று சொல்லுவார்கள். இம்மனமானது காற்றினுருவமாயிருந்தபோதிலும் அதன் குணத்தைச் சொல்லுகின்றோம் கேளுங்கள். அதாவது,

எந்த எண்ணங்களுமில்லாமல் வெளிவெளியாயிருக்கும் நாபியிலிருந்து, கடைக்குப் போகவேண்டும் இன்னின்ன வஸ்துக்களை வாங்கவேண்டுமென்றும், இப்படிப்

பட்ட அனேகவிதங்களாகிய எண்ணங்கள் ஒன்றின்பின் ஒன்றாய் உதித்து உதித்து, அலையிலிருந்து உண்டாகிய குமிழிகள் திவலைகள் நுரைகள் உடனுக்குடனே மறைந்து விட்டதுபோல், ஆயிரக்கணக்காய் உதித்த எண்ணங்கள் யாவும், அலைகள் நுரைகள் திவலைகள் குமிழிகள் சமுத்திர ஜலத்தில் மறைந்ததுபோல், மனது என்னும் நீர்க்குமிழி கள் சுவாசமென்னும் அலையில் பிறந்து சுவாசமென்னும் அலையிலேயே மறைந்துபோகும். அப்போது என்னசெய்ய வேண்டுமென்றால், முன் சொல்லிய புற்றுக்குள் ளிருந்த பாம்பானது, வெளிவராமல் எப்படி புற்றுக்குள் அடங்கி யிருந்ததோ அதுபோல், நாபியென்னும் புற்றுக்குள் ளிருந்து சுவாசமென்னும் பாம்பு புறப்படும்போது அதி லிருந்து, கடைச்குப் போகவேண்டும் இன்னின்ன வஸ்துக் களை வாங்கவேண்டுமென்று எண்ணம் உதிக்கும். அப் போது முதல் எழுத்தாகிய 'க' என்னும் எழுத்து புறப் பட்டவுடனே 'நில்' நீ எங்கே புறப்படுகின்றாய் மனமே, புறப்படு பார்ப்போமென்று கண்களைமூடி நாபியினிடம் அகத்தில் (உள்ளே) வெளிவெளியாய் என்றால், எந்த யெழுத்து நாபியிலிருந்து முதல் பிறக்கின்றதோ அவ் வெழுத்தைப் புறப்படாவண்ணம் நாபியினிடம் வெளி வெளி வெளியாய்ப் பார்க்கவேண்டும் அப்போது, உல கத்தையெல்லாம் ஆளும் சக்ரவர்த்தி அரசர்களையெல்லாம் தம் ஆஞ்ஞைக்குள் நிறுத்துவதுபோல், இந்திரிய வியா பாரங்கள் யாவும் நின்றுவிடும். இதற்கு ஞானவாசிட்டம் பிரமாணம்:

ஊக்க முளதாய் மன மொன்றி னுறைக்கி
லதுவா மாதலி னற்
றாக்கு மனதை மனத்தா லே தள்ளி
யேறித் தளர் வின்றி

யாக்க மழிவில் பதம் விரைவி லடைவாய்
மனதை மனத்தா லே
நீக்க வலதாங் தகை மைத்தா நிருப
நிறுத்து நெறி போல.

ஆதலால், அசுத்தமான மனதை என்றால், எல்லாவற்றிலும் ஆசையுடைய மனதை ஆத்ம ஞானத்தினால் நாசம் செய்தவுடன் மனம் வெளி வியவகாரங்களில் ஓடாமல் நின்றுவிடும். மனம் எப்பொழுது நின்றுவிடுகின்றதோ அப்போதே 'மூச்சு' ஆடாமல் நின்றுவிடும். மூச்சு நின்றவுடன், காதினால் கேட்பது மூக்கினால் வாசனை அறிவது வாயினால் பேசுவது கண்களினால் பார்ப்பது சீதோஷ்ணங்களாகிய காற்றுகளை மேல்தோலால் அறிவது முதலாகிய இந்திரிய வியாபாரங்கள் ஒடுங்கி தான்தானாய் கல் பொம்மையைபோல் சமாதிநிலையில் நின்று பிரம்மானந்தத்தில் என்றால், ஒருவிதமான சுகத்தில் சொக்கி யிருப்பான். மூச்சு நாபிஸ்தானத்திலிருந்து பிறக்கின்றது. அதாவது, தொப்புளிலிருந்து மூச்சு புறப்படுகின்றது; அந்த தொப்புளிலிருக்கும் இடமே சிதாகாசம் (சித் = சிறிய, ஆகாசம் = வெளி,) என்று சொல்லப்படும்: அந்த சிதாகாசம் இதனடியில் மூன்று கைக்குறி படத்தால் காட்டி மனநிலையைச் சொல்லுகின்றோம். என்றால், இடைவிடாமல் எங்கும் நிறைந்து ஏகவெளியா யிருக்கும் ஆகாயத்தை இங்கு கைக்குறியில் பிடித்துக்காட்டி யிருக்கின்றோம்: அக்கைக் குறியை கண்களை மூடி உங்கள் நாபியில் நிறுத்தி அதை உள்முகமாய் மனக்கண்ணால் ஊன்றிப் பார்த்து அரை நிமிஷநேரம் நிஷ்டைகூடி பாருங்கள்: என்றால், எந்த எண்ணமும் உதிக்காமல் சும்மாயிருந்து பார்ப்பதே நிஷ்டைகூடுதல் என்பதாம். இதற்கு நெஞ்சறிவிளக்கம் பிரமாணம்;

நீக்க மில்லாம லெங்கு நிறைந்ததோர் வெளியை யுன்னுள்
தாக்கியே யறிவினாலே தனை மறந் திருந்து பார்வை
நோக்கியே நிஷ்டை கூடி நொடியரை நிமிஷம் பாரே.

கைக்குறி சிதாகாசத்தில்
மனதை லயப்படுத்தும் படம்.

☞ எதிரில் முதல் காட்டிய ஒன்றுமில்லாத கைக்குறி சிதாகாச படத்தில், கடைக்குப் போகவேண்டும் இன்னின்ன பதார்த்தங்களை வாங்க வேண்டும் என்று உதிப்பதற்குமுன் 'க' என்னும் எழுத்து முதல் தோன்றும்: அந்த 'க' என்னும் எழுத்தை இரண்டாவது கைக்குறி சிதாகாச படத்தில் காட்டியிருக்கின்றோம்: 'க' என்னும் எழுத்து வெளி புறப்படும் போது 'நில் நீ எங்கே புறப்படுகின்றாய் மனமே புறப்படு பார்ப்போம் என்று கண்களைமூடி தொப்புளிடம் மனக்கண்ணால், கைக்குறி படத்தில் தோன்றும் 'க' என்னும் எழுத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டேயிருந்தால், அவ்வெழுத்து உதித்தயிடத்திலேயே ஒடுங்கும். எப்படியென்றால், கண்ணில் ஒளியிருந்தபோதிலும், இரவில் தீபப்பிரகாசம் இல்லாவிடில் தானாகவே ஒரு பொருளை காணமாட்டா: விளக்கொளி சகாயத்தினாலாகிலும் சூர்யனது ஒளி சகாயத்தினாலாகிலும் கண்ணானது காணும்: கண்ணொளியானது தனியாய் எதையும் காணமாட்டா: கண்ணொளி, விளக்கொளி அல்லது சூர்ய ஒளியோடு கலந்து காணும்: அதுபோல், மேல் காட்டிய சிதாகாச ஒளியில் மனக்கண் ஒளி கலந்து தனது நிஜசொரூபத்தை அறிந்துதான் தானாய் இருந்துவிடும்: இதற்கு சிவப் பிரகாசமும் வாசிட்டமும் பிரமாணம்;







கண்ணொளி விளக் களித்துக் காட்டிடு மென்னின் முன்னங்
கண்ணொளி யொன்று மின்றும் விளக்கொளி கலந்த வற்றைக்
கண்ணொளி யகல நின்றே கண்டிடும் வேறு காணு
கண்ணொளி விளக்கின் சோதி கலந்திடுங் கருத் தொன்றன்றே.

அறிபவத் தாசை யறி லதுதானே
யவித்தையு மனமு மாண் டதுவாம்
பொறிபயி லாசை துன்பமா நிராசை
புக லரு முத்தியா மின்பம்
பிறிவரு தனது முயற்சியா லுண்டாம்
பேதைய ருண் டேனு மவித்தை
செறிதரு பொய்யாய் நாமமாத் திரமாய்ச்
சித் தெனத் தேர்ந்திடி லிலதாம்.

மனத்திற்கு எது தோன்றுகின்றதோ அத்தோற்றத்தின் இச்சை (ஆசை) நீங்கினல், அதுவே அஞ்ஞானமும் மனமும் நசித்ததாகும்; என்றால் மன மிறந்ததாகும்: சகல விஷயங்களில் ஓடிக்கொண்டிருக்கும் மனதிற்கு துன்பம் அதிகமாய் உண்டாகும்: மனதை ஓடவிடாமல் நிறுத்தினல் துன்பம் நீங்கும்: ஆதலால்,

உங்கள் எல்லோருக்கும் எண்ணங்கள் உதிப்பதற்கு முன் எந்த எழுத்து முதல் புறப்படுகின்றதோ அந்த யெழுத்தை உற்று நோக்குவாராயின், அவ்வெழுத்து உருவம் மறைந்து மூன்றுவது கைக்குறி படத்தில் காட்டிய ஆகாயவடிவம் தோன்றி, பிறகு அவ் வாகாய வடிவத்திலேயே மனமும், பார்வையும் அழிந்து பெரிய வெளியாய் விடும். எப்படி யென்றால்,

மெத்து நின்ற வாத னையை விட்டான் மேலா நல முளதாஞ்
சத்தி னசத்தி னிடை நின்று சைதன் னியத்திற் சாட்டி யத்தி
லொத்து நடு நின் றலேவதுவே யுள்ள மாகு மிவ் வுள்ளஞ்
சித்தின் முயல்வாற் சித்தாகுஞ் செடத்தின் முயல்வாற் செடமாகும்.

[வாசிட்டம்.]

அற்பமாகிய இஷ்டவஸ்துவை விட்டு ஒழித்தால், விசேஷ இன்ப முண்டாகும். சாஸ்வதமாய் இருக்கப்பட்ட பிரம்மத்திற்கும், இல்லாததாகிய ஜகத்திற்கும் மத்தியில் நின்று, எப்பொழுதும் கானல் நீர்போல் சலித்துக்கொண்டிருப்பதே மனமென்று சொல்லப்படும். இம்மனம் இறந்தால் ஞானமாகும் இறக்காவிட்டால் உலகமாகும். மனம் இறந்தவுடன், கேட்பது வாசனையறிவது பேசுவது பார்ப்பது சரீரத்தின்மேல் வீசும் குளிர் உஷ்ணங்களை அறிவது முதலாகிய இந்திரிய சேஷ்டைகள் நின்றுவிடும். இது விஷயம் முன்னும் சொன்னோம். ஆதலால், இந்த ரகசியம் தெரிந்துகொண்டவர்கள், எந்த வேதாந்த சாஸ்திரங்களை வாசிக்கவும் வேண்டாம்; எந்த உபந்யாசமும் கேட்கவும் வேண்டாம் மனோஓட்டத்தை நிறுத்தி எப்போதும் சும்மாயிருந்து இந்த சுகத்தையே அனுபவித்து வாருங்கள்; உலகத்திலுள்ள ஜனங்களின் மனோ வோட்டத்தை நிறுத்த அனேகவிதங்களாகிய வழியை இந்நூலில் சொல்லியிருக்கின்றோம். அடியேன் இதில் சொல்லியதுபோல் சாதனம் செய்து வரப்பட்டவர்களின் மனோவோட்டம் எப்படி நின்றுவிடுமென்றால், அதிவேகமாய் ஓடும் மெயில் இஞ்சனுக்கு ஸ்டீம் பிரேக்கு போட்டவுடன் அப்பிரேக்கானது ஓடும் சக்கரங்களையெல்லாம் இடுக்கி கெட்டியாய்ப் பிடித்து டக்கென்று வண்டிகளையெல்லாம் எவ்வாறு நிறுத்திவிடுகின்றதோ அதுபோல், மனோவோட்டத்தின் வேகமெல்லாம், இவ் வுபதேசத்தினால் டக்கென்று நின்றுவிடும்.

ஐயா ! மேல் காட்டியிருக்கும் கைக்குறி படத்தை, நாபியினிடம் நினைத்து நிறுத்தி அதை மனக்கண்ணால் பார்க்கும்படி மேல் சொல்லியிருக்கின்றோம். ஒருவேளை அக்குறி உங்கள் நாபியில் நிற்காவிட்டால், அடியில் காட்டியிருக்கும் 'க' என்னும் எழுத்தில்லாத வெறும் பாழ் கைக்குறி வெளியை பார்க்கவேண்டும்.

கைக்குரி சிதாகாசத்தில் மனதை லயப்படுத்தும் படம்.



கண்களை மூடி மேல்காட்டியிருக்கும் கைக்குரி படத்தை புருவமத்தியில் வைத்து மனதினால் நினைத்து மனக்கண்ணால் பாருங்கள். அக்குரி உங்கள் மனதிற்கு அங்கு நன்றாய்ப் புலப்படும். அப்போது, மனதை அங்குமிங்கும் செதரவிடாமல், கைக்குரி துவாரத்தில் திருஷ்டியை நிறுத்திப் பாருங்கள். இவ்வாறு, சில நிமிஷங்கள் கைக்குரியிலுள்ள ஆகாசத்தைப் பார்த்துக்கொண் டிருப்பீர்களாகில், பெருவிரல் ஆள்காட்டும் விரல்களெல்லாம் மறைந்து விடும். விரல்கள் மறைந்தவுடன், உங்களை நீங்கள் மறந்து விடுவீர்கள். இவ்வாறு மறந்து விடுவதே நினைவிற் சுழுப்தியென்றும், தூங்காமற் தூங்கிச் சுகம்பெறுவதென்றும் சொல்லப்படும். இவ்வாறு செய்தும் உங்கள் மனோவோட்டம் நிற்காவிட்டால், மற்றோருபாயம் இதனடியில், மனோ ஓட்டத்தை நிறுத்திக்காட்டுதல் என்னும் அத்யாயத்தில்

வாய்த்திறந்த படத்தைக்காட்டி, அதன் மூலமாய் மனோவோட்டத்தை நிறுத்தும் வழி சொல்லியிருக்கின்றோம்: அதை சாதனம் செய்துபாருங்கள்; இம்மூன்று சாதனங்களில், எதிலாகிலும் ஒன்றில் உங்கல் மனோவோட்டம் நின்றுவிடும்: அடியேன் உலக நன்மைக்காக அனேக விஷயங்களைச் செய்துவந்த போதிலும் அச்சமயங்களில் மாத்திரம் மனதுயென்னும் வாயுவை உபயோகப்படுத்தி எல்லா காரியங்களையும் செய்து முடித்தவுடன், மேற்படி மனது என்னும் வாயுவை வேறு எந்த விஷயங்களிலும் ஓடவிடாமல் யோகபலத்தினால் நிறுத்திக்கொண்டு வருகிறபடியால், உங்கள் மனோ வோட்டத்தை நிறுத்த மிகவும் சுலபமானவழியை இங்கு உங்களுக்குச் சொன்னோம்: இதை விடாமுயர்ச்சியாய் சாதனம் செய்துவாருங்கள். எப்பொழுது உங்கள் மனோ ஓட்டம் நின்று விடுகின்றதோ அப்போதே பிரம்மானந்த சுகத்தைத் தப்பாமல் அடைவீர்கள்.

நான்முக னுக்கிட மானவூ ரெங்களூர்
நான்மறை யுந்துதி செய்யுமூ ரெங்களூர்
தேவுக்குந் தேவா யிருக்குமூ ரெங்களூர்
தேவர்க ளன்றித் திரியுமூ ரெங்களூர். (1)

தோற்றர வாகத் துணிந்தவூ ரெங்களூர்
சோகமோ கங்க டெறந்தவூ ரெங்களூ
ராற்ற லுடையார்க் கடைத்தவூ ரெங்களூ
ரானந்த மாயே யிருக்குமூ ரெங்களூர். (2)

காமக் குரோதங் கழிந்தவூ ரெங்களூர்
கல்விக் கடலைக் கடந்தவூ ரெங்களூர்
நாமரூ பங்க டவிர்ந்தவூ ரெங்களூர்
ஞானமே யாக நவின்றவூ ரெங்களூர். (3)

அறிவிட் டறியாமை போக்குமூ ரெங்களு
ரன்னிய மொன்றுமி லாதவூ ரெங்களூர்
குறியிட்டி தென்னவொண் ணாதவூ ரெங்களூர்
கோசங்க ளைந்துங் குலைந்தவூ ரெங்களூர். (4)

புத்தி விகற்ப மறுக்குமூ ரெங்களூர்
பூரண போதமே யானவூ ரெங்களூர்
வித்தும் விளைவு மிலாதவூ ரெங்களூர்
விண்முதற் பூதம் விளைந்தவூ ரெங்களூர். (5)

எட்டுத் திசையு நிறைந்தவூ ரெங்களூர்
ஏகாந்த மாகி யிருக்குமூ ரெங்களூர்
தட்டற்ற யோகிக ளங்குமூ ரெங்களூர்
தன்மபா வங்க டவிர்ந்தவூ ரெங்களூர் (6)

உலகத்தை யெல்லா மொருக்குமூ ரெங்களூர்
உண்மையொன் றாகியொன் றானவூ ரெங்களூர்
சிலுகற்ற சற்பர மானவூ ரெங்களூர்
சிந்தனை விட்டுத் தெளிந்தவூ ரெங்களூர். (7)

உன்னப் படாவுணர் வானவூ ரெங்களூர்
உள்ளொளி யாகி யிருக்குமூ ரெங்களூர்
கண்ணுக் கணித்தா யிருக்குமூ ரெங்களூர்
கள்ளப் புலனைக் கழிந்தவூ ரெங்களூர். (8)

கத்துஞ் சிலுகு மிலாதவூ ரெங்களூர்
காண்பானுங் காட்சியு மற்றவூ ரெங்களூர்
சுத்த வெளியிலே தோன்றுமூ ரெங்களூர்
சோம்பர் சுகமென் றுணர்ந்தவூ ரெங்களூர். (9)

உலக முழுது முதித்திட ரெங்களூர்
ஒருதே வையு மற்றிட மெங்களூர்
கலகா நிலை யாகிய தெங்களூர்
கருணாகர ஞர்கழ லெங்களூர். (10)

இந்தி யக்கள்வர் சேர்வில தெங்களூர்
 ரின்ப நற்பயி ரோங்கிய தெங்களூர்
பந்த மற்றவர் பற்றிட மெங்களூர்
 பார்வை யற்ற பரம்பொரு ளெங்களூர் (11)

விரகர்க் கதி தூரம தெங்களூர்
 விமலர் கட்கண்ணி தாகிய தெங்களூர்
துரியத் தொளிர் சோதிய தெங்களூர்
 துய்ய நற்கரு ணைக்கழ லெங்களூர். (12)

தேடிக்கண்டு கொண்டேன் தேஜோமய மென்னுளே
தேடித் தேடியுங் காணொணாத் தேவனைத் (தேடி)
வாடி யலைந்துநான் மறைகட்கு மெட்டாத
நாடு சாதுர்முக னுதித்த இடந்தனைத் (தேடி)
பாயு மனதினைப் பாய வொட்டாமலே
நாயேன் மன மெழும் நல்ல இடந்தனைத் (தேடி)

சந்தியாவந்தனவேளையில்தெரிந்துகொள்ளும்தேவனை (கடவுளை)த் தேடி கண்டுகொண்டேன். கூர்மாவதாரம் எடுத்த விஷ்ணுவும், அந்த வாகனத்தின் மீதேறிச்சென்ற பிரமதேவனும் தேடித்தேடிக் கண்டறியாத தேவனை, நான் என்னுளே தேடிக் கண்டுகொண்டேன். அனேக ஆயிரங் கோடானகோடி ஜன்மங்களை யெடுத்தெடுத்து ஒவ்வொரு ஜன்மத்திலும் வாடி அலைந்தலைந்து, வேதங்களுக்கும் எட்டாத தேவனை யான் இச் ஜன்மத்தில், நான்முகன் பிறந்த யிடத்தில் திருடனைப்போல் ஒளிந்திருக்கும் தேவனை நான், என்னுளே தேடி கண்டுகொண்டேன். இத் தேவனை எவ்வாறு கண்டுபிடிக்கலாமென்றால், குரங்கானது ஓர் கிளையிலிருந்து எல்லாக் கிளைகளின்மீதும் தாவி எகிரி குதித்துக்கொண்டோடுவதுபோல், நமக்குள் ளிருக்கும் மனக்குரங்கானது சற்றுனேரம், மனைவியின்மீதும் சற்று

னேரம் பிள்ளைகளின்மீதும் குமார்த்திகளின்மீதும் மருமகன் (மாப்பிள்ளை) மருமகள் (நாட்டுப்பெண்) மீதும் வியாபாரத்தின்மீதும் தன தான்ய வஸ்து வாகனுதிகளின் மீதும தோட்டம் துரவுகளின்மீதும் உத்யோகம் கோர்ட்டு வியவகாரங்களின்மீதும் வேதாந்த உபந்யாசங்களின்மீதும் தாசிகளின் கச்சேரிகளின்மீதும் நாடகங்களின்மீதும் பாடல் வீணை மிருதங்க தாள துருத்தி வாத்தியங்களின் மீதும் பரஸ்திரீகளின்மீதும் விவாகங்களின்மீதும் சந்தானங்களின்மீதும் இவ்வாறு ஒன்றிலிருந்து மற்றேர் விஷயங்களில் மேற்படி குரங்கைப்போல் ஒன்றைவிட்டு மற்றென்றில் பாய்ந்து ஓடிக்கொண்டிருக்கும் மனக்குரங்கை ஓடவிடாமல் நிறுத்தினுல் அந்த தேவனை கண்டுபிடிக்கலாமென்று அறியக் கடவீர்களாக. இம் மனக்குரங்கு ஓட்டத்தை நிறுத்த உபாயம் இதனடியில் சொல்லுகின்றேம்.

மனே ஓட்டத்தை நிறுத்திக் காட்டுதல்.

☞ எதிரில் காட்டியிருக்கும்படத்தில், அடியேன் சித்தாசனத்தில் சுகாசனமாயிருத்து கண்களைமூடி, தொண்டையினிடமிருக்கும் அண்ணுக்கை உண்ணுக்கில் படும்படி உயர்த்திக் காட்டியதுபோல், நீங்களும் செய்யவேண்டும். அடியேன் உட்கார்ந்துக்காட்டியதுபோல், நீங்களும் உட்கார சாத்தியமாகாவிட்டால், உங்களுக்கு எவ்வாறு உட்கார சாத்யமோ அதுபோல் உட்காரலாம். தம் இஷ்டம் போல் உட்காருவதே சுகாசனமென்று சொல்லப்படும். இவ்வாறு சுகாசனத்தில் உட்கார்ந்து கண்களை மூடி, அண்ணுக்கை உண்ணுக்குடன் சேர்க்கும்போது, அதற்குத் தக்கபடி தானுகவே எவ்வளவு அளவுடன் வாய்திறக்க வேண்டுமோ அவ்வளவு அளவுடன் வாய்திறந்து நிற்கும்.



வாய்த்திறந்து, மனோ ஓட்டத்தை நிறுத்திக்காட்டும் படம்.

నోరు తెరచి మనో వేగమును నిలిపి చూపుపటము.

அளவுடன் வாய்த் திறந்திருப்பதை மேற்படி படத்தில் கவனியுங்கள். இவ்வாறு நின்றபிறகு, மூக்குநுனிக்குரியில் மனதை நிறுத்தி, மனக்கண்ணால் அம்மூக்கு நுனிக்குரியை திருஷ்டித்துப் பார்க்கவேண்டும். அப்போது, கண்களி லுள்ள இரண்டு கரிவிழிகளும் புருவநுனியில் வந்துசேரும். இவ்வாறு, மூக்குநுனியை திருஷ்டித்துப்பார்க்கும்போது, மனோவோட்டம் சிறுகச்சிறுக நின்றுகொண்டேவந்து, கடைசியில் பூர்த்தியாய் நின்றுவிடும். அப்போது அங்கு, நீலம் பச்சை சிகப்பு இன்னும் அனேக தோற்றங்கள் தோன்றினாலும், தோன்றாவிட்டாலும் அதை நீங்கள் கவ னிக்லாகாது. இவ்வாறு பார்த்துக்கொண்டிருக்கும்போது, மூக்குநுனிப்பார்வை அழிந்து சரீரபிரஞ்ஞைதப்பி உலக வியாபாரமும் பூர்த்தியாய் நசிந்து தன்னைத்தான் மறந்து சிலாவடிவமாய் கல் பொம்மைபோல் நின்றுவிடுவீர்கள். இதுவே தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவது என்று சொல் லப்படும். இவ்வாறு நின்றுவிடுவதே நிர்விகல்ப சமாதி யென்றும் சொல்லப்படும். என்றால், சங்கல்ப விகலப்பம் (நினைப்பு மறப்பு) அற்று யிருப்பதே நிர்விகல்பம். இந்த நிர்விகல்பத்தில் சுவாசம் ஆடாமல் நின்றுவிடும்: மனம் மறுபடியும் உதித்தவுடன் சுவாசம் ஆடும். சுவாசம் ஆடுகின்றதா என்னவென்று நீங்கள் நினைக்கலாகாது. அப் படி நினைத்தவுடன், உடனே சுவாசம் ஆடும். சுவாசமும் மனமும் ஒன்றாதலால், மனம் உதித்தவுடன் சுவாசம் ஆடும். ஆதலால், இதை வாசிக்கும் அடியேனுடைய சகோதரி சகோதரர்க ளெல்லோரும், ஒரு ஏகாந்த சிறிய இருட்டு அறையில் உயர்ந்த சாம்ராணி புகைபோட்டு, வாசனை வஸ்துக்களைவைத்து, ஒரு அங்குலம் உயரமுள்ள பெரியமணை (பலகை) மேல் மான்தோல்போட்டு வடக்கு முகமாய் உட்கார்ந்து, மேல்படி படத்தில் காட்டியது

போல், அண்ணுக்கை உண்ணுக்கில் படும்படி உயர்த்தி ஒரு அங்குலம் அளவில் வாய்த்திறந்து உங்கள் இஷ்டம்போல் மேற்சொல்லிபபடி எந்த சுகாசனத்திலாகிலும் உட்கார்ந்து கண்களை மூடி மூக்குநுனிக்குறியை, மனக்கண் பார்வையால் பார்க்கவேண்டும்: அப்போது, மனம் வெளியில் ஓடாமல் நின்றுவிடும் அனுபவம் உங்களுக்குப் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாய்த் தெரியவரும். வாஸனை வஸ்துக்கள் அடங்கிய இருட்டு சிறிய அறையில் கதவைச் சாற்றித் தாள்போட்டு உட்கார்ந்து சாதனம் செய்து வரப் பட்டவர்களுக்கு மாத்திரம் மேற்சொல்லிய மனோவோட்டத்தை நிறுத்த முடியுமே யொழிய, வீட்டில் வெளியாயிருக்கு மிடத்தில் உட்கார்ந்து, கண்களைமூடி செவி இந்திரியவழியாய்ச் சப்தங்களைக் கேட்டுக்கொண்டும், பல எண்ணங்களை எண்ணிக்கொண்டும் இருக்கப் பட்டவர்களுக்கு மனம் கட்டுப்பட மாட்டா. நிச்சப்தமான (சப்தமில்லாத) மடம், நிச்சப்தமான இடம், பாழடைந்த கோயில், பெரியோர்கள் தவம் செய்தயிடம், மலைக்குகைகள் இப்படிப்பட்ட இடங்களிலிருந்து, மனோ ஓட்டத்தை நிறுதத சாதனம் செய்யவேண்டுமென்று, வேதங்களும் பெரியோர்களும் சொன்னதை இங்கு சொன்ஞேம் சொன்ஞேம். உங்களுக்கு அப்படிப்பட்ட இடங்கள் கிடைக்காதாதலால், வீட்டில் ஒரு சிறிய இருட்டு அரையை ஏற்படுத்திக்கொண்டு சாதனம் செய்து வாருங்கள்; அப்போது, அவ்வறை மேற்சொல்லிய குகைக்குச் சமானமானதாயிருக்கும். இப்படிப்பட்ட அரையில் மேற்சொல்லியதுபோல் உட்கார்ந்து மனதைஅடக்க சாதனம் செய்துவந்தால், உடனே மனம் நசிந்து ஆனந்த சுகத்தை அடையலாம். மனம் போகும் வழியாய்ப் போகாமலும் யாதொன்றும் நினையாமலும் சும்மாயிருப்பீர்களாகில் அதுவே சமாதினிலையென்று சொல்லப்படும்.

மனக்குரங்கை ஈசுவரனிடத்தில்
அர்ப்பணம் செய்தல்.

"ஸதா மோஹா டவ்யாம் சரதி யுவதீநாம் குசகிரௌ
நடத்யாஶா ஶாகாஸ்வடதி ஜடிதி ஸ்வைரம்பித:
கபாலிந் பிக்ஷோ மே ஹ்ருதய கபி மத்யந்த சபலம் த்ருடம்
பக்த்யா பத்வா சிவ பவததீநம் குரு விபோ."

"எவமீஶ்வர ப்ரீதிம் ஸம்ப்ரார்த்தயந் மம சித்த சாபல்யம் பரிஹ்ருத்யமச்சித்தம்த்வவததீநம் குருஷ்வேதி ப்ரார்த்தயந் யந்நாஹ ஸதா மோஹேதி" "போ விபோ ஸர்வ வ்யாபக, போ ஶிவ ஸுக ஸ்வரூப, போ கபாலிந் கபால மஸ்யாஸ்தீதி தஸ்ய ஸம்புத்தி: போ பிக்ஷோ ஹ்ருதயகபி: ஸதா ஸர்வதா மோஹா டவ்யாம் மோஹ: ஸம்ஸா ரேச்சாஸ்வ பாவாடவீ அரண்யம் தஸ்யாம் சரதி ஸஞ்சரதி யுவதீநாம் நாரீணாம் குசகிரௌ ஸ்தநபர்வதே குசாவேகிரி: தஸ்மிந் அடதி ந்ருத்யம் கரோதி, ஆஶா ஶாகாஸு ஆஶா எவ புத்ரதாராதிஷு ப்ரேமாண: தா எவ ஶாகா: விடபா: தாஸ்வடதி ஸஞ்சரதி ஜடிதி ஶீக்ரம் அபித: இதஸ்தத: ஸ்வைரம் ஸ்வேச்சா விஹாரம் யதா ததா அடதி ஸஞ்சரதி அத்யந்தம் சபலமதி சபலம் மே மம ஹ்ருதய கபிம் ஹ்ருதயமேவக பிரிதி ரூபகம், தம்சித்த வாநரம் த்ருடம் நிதராம் தம் பக்த்யாக்யயா ரஜ்வா பத்வா சேஷ்டா ரஹிதம் க்ருத்வா பவதீநம் த்வத்வஶம் குரு குருஷ்வ ஸம்ஸார நிமக்நம் மச்சித்தம் ஸதா ஸ்வதேக ஶரணம் குர்விதி தாத்பர்யம்." [ஶிவாநந்த லஹரி, இது ஸ்ரீ ஶங்காராசார்யர் சொல்லியது.]

"பெண்ணாகி வந்தொரு மாயப்பிசாசம் பிடித்திட் டென்னைக்
கண்ணால் வெருட்டி முலையால் மயக்கிக் கடிதடத்துப்
புண்ணாங் குழியிடைத் தள்ளி யென்போதப் பொருள்பறிக்க
எண்ணா துனைமறந்தே னிறைவா கச்சி யேகம்பனே."

[பட்டினத்தடிகள்.]

பிண்டியார் மண்டை யேந்திப் பிறர்மனை திரிதந் துண்ணும்
உண்டியான் சாபந் தீர்த்த வொருவனூர் உலக மேத்தும்
கண்டியூ ரரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லை யென்று
மண்டினார் உய்யி லல்லால் மற்றையார்க் குய்ப லாமே.

[திருக்குறுந்தாண்டகம்]

வெந்தா ரென்பும் சுடுநீறும் மெய்யிற் பூசிக் கையகத்தோர்
சந்தார் தலைகொண் டுலகேழுந் திரியும் பெரியோன் றான்சென்
எந்தாய் சாபந் தீரென்ன இலங்க முதுநீர் திருமார்பில் [றென்
தந்தான் சந்தார் பொழில்சூழ்ந்த சாளக் கிராம மடைநெஞ்சே.

கொங்கை சிறு வரையென்னும்பொ தும்பி னில்வீழ்ந்து வழுக்கி
அங்கோர் முழையினில் புக்கிட் டழுந்திக் கிடந் துழல்வேனை
வங்கக் கடல் வண்ணனம்மான் வல்வினையா யினமாற்றி
பங்கப் படா வணஞ்செய்தான் பண்டன் றுபட் டினங்காப்பே.

[பெரியாழ்வார் திருமொழி.]

ஆயிழை யார்கொங்கை தங்கும் அக்காத லளற்றழுந்தி
மாயுமென் னாவியை வந்தெடுத் தானின்று மாமலராள்
நாயக னெல்லா வுயிர்கட்கும் நாத னரங்கனென்னும்
தூயவன் தீதி லிராமா நுசன்தொல் லருள்சுரந்தே.

[இராமாநுஜ நூற்றந்தாதி.]

ஹே விபோ! - ஓ சர்வ வியாபகனு யிருக்கப்பட்டவனே, ஹே சிவ - ஓ ஸுக சொரூபனே, ஹே கபாலிந் - ஓ பிரம கபாலத்தை ஹஸ்தத்தில் (கையில்) வைத்துக் கொண் டிருக்கப்பட்டவனே, சதா - எப்பொழுதும், மே - என்னுடைய, சித்தம் - மனமானது, மோஹாடவ்யாம் - ஸம்ஸாரமென்னும் காட்டில் திரிந்துக்கொண்டு, யுவதீநாப் - ஸ்திரீகளினுடைய, குச - ஸ்தனங்களென்னும்; கிரௌ - பர்வதத்தின்மீது, நடதி - நடனம் செய்துகொண்டு, ஆசா - தாராபுத்ராதிகளின் மீதுள்ள ஆசை என்னும், சாகாஸு - கிளைகளின்மீது, அடதி - திரிந்துகொண்

டிருக்கிறது ; ஜடிதி - சீக்கிரமாய், அபிதঃ - எல்லா இடங்களிலும், யதா ததா - தன்னிஷ்டம்போல், அடதி - ஓடுகின்றது, அத்யந்தசபலம் - அதிக சஞ்சலமான, மே - என்னுடைய, ஹ்ருதய - மனது என்னும், கபிம் - வானரத்தை (குரங்கை) த்ருடம் - திடமாய், பக்த்யா - உன் பக்தியென்னும் கயிற்றால், பத்வா - கட்டி, பவததீநம் - உன் சுவாதீனம் செய்து கொள்ளக் கடவாய்.

எங்கும் பரிபூரணமாய் நிறைந் திருக்கப்பட்டவனே! பிரம கபாலத்தை ஹஸ்தத்தில் (கையில்) வைத்துக் கொண்டு பிக்ஷை எடுக்கப்பட்டவனே! என் மனது என்னும் குரங்கானது, எப்பொழுதும் ஸ்திரீகளின் ஸ்தனங்களென்னும் பர்வதத்தின்மீது நாட்யம் (நடனம்) செய்துகொண்டு, தாராபுத்ராதிகளென்னும் (பார்யாள் புத்ரர்களென்னும்) கிளைகளின்மீது திரிந்து, மோகமென்னும் ஆரண்ணியத்தில் (காட்டில்) அலைந்துகொண் டிருக்கின்றது. இவ்விதமாய் தன் இஷ்டம்போல் அலைந்துகொண்டிருக்கும், என் மனது என்னும் குரங்கை, திடமாய் உன் பக்தி என்னும் கயற்றால் கட்டி, உன் சுவாதீனம் செய்துகொண்டால், அதனால் பிக்ஷை எடுக்க உனக்கும் நலமாயிருக்கும். அது, என்னை விட்டு ஒழிவதனால் நானும் நல்ல கதியை அடைவேன். ஆதலால், அடியேன்மீது அனுக்கிரஹம் வைத்து, என் மனது என்னும் குரங்கை உன் சுவாதீனம் செய்துகொண்டு என்னை பந்தத்திலிருந்து விமுக்தனாகச் செய்யக்கடவாய்.

அன்பர்களே! இரவில் சயனிக்கும்போது ஈசுவரனை துதிசெய்து, நாள்தோறும் செய்துவரும் புண்ணிய பாபங்களை எல்லாம் அவருக்கு அர்ப்பணம் செய்து சயனித்து வந்தால், பந்தத்திலிருந்து விமுக்தர்களாகலாம். அதை இதனடியில் உபதேசித் திருக்கின்றோம்; கவனமாய்

சிரத்தையுடன் வாசித்து அதுவே குரு வாக்காய் நினைத்து சகல ஸ்திரீ புருஷர்களும், படுப்பதற்குமுன் படுக்கையில் உட்கார்ந்து அடியில் சொல்வது போல் துதி செய்து பிரதி தினம் படுத்தால், அவரவர்களின் பாப கர்மங்களெல்லாம் ஒழிந்து நற்கதி அடைவார்கள்.

இரவில் ஈசுவரனைத் துதிசெய்து சயனித்தல்.

ஓசகோதரிகளே! ஓசகோதரர்களே! உலகத்திலுள்ள மனிதர்களெல்லோரும், காலை முதல் மாலைவரையில் அவரவர்களுக்குத் தக்க வியாபாரமோ அல்லது உத்தியோகங்களோ செய்து, போஜன முண்டு வீண் வார்த்தைகளாடி எந்த ஈசுவரத் தியானமும் இல்லாமல் சயனித்து தன் மனம் சம்சார விஷயத்திலோ, புத்திரர்களின் விஷயத்திலோ, புத்திரிகைகளின் விஷயத்திலோ, மனைவி தன்னிஷ்டம்போல் நடக்கவில்லையே என்னும் விஷயத்திலோ, மருமகன் மகனைக் கஷ்டப்படுத்தும் விஷயத்திலோ, மருமகள் விஷயத்திலோ, சந்தான மில்லையே யென்னும் விஷயத்திலோ, ஒரு வேளை சந்தான மிருந்தால் துன்மார்க்கனாய் வந்து பிறந்தானே என்னும் விஷயத்திலோ, உத்தியோக விஷயத்திலோ, வியாபார விஷயத்திலோ, கோர்ட்டு விஷயத்திலோ, பொருள் விஷயத்திலோ, வட்டிவிஷயத்திலோ இதுவரையில் செய்து நின்றிருக்கும் காரியங்களின் விஷயத்திலோ, இனிச் செய்யவேண்டிய காரியங்களின் விஷயத்திலோ, ஒருவர் சொத்தை அக்கிரமமாய் அபகரிக்கும் விஷயத்திலோ, ஒருவரை மோசம் செய்ய வேண்டிய விஷயத்திலோ, ஊர் வியவகார விஷயத்திலோ, கோர்ட்டில் பொய் சாக்ஷிகளை தயார் செய்யும் விஷயத்

திலோ, ஒருவரைக் கொலை செய்யும் விஷயத்திலோ, அல்லது ஸ்திரீகளின்மீது மோஹங் கொண்டிருக்கும் விஷயத்திலோ இவ்விதமாய் எதிலேயோ ஒன்றில் விருதாவாய் மனதை செலுத்திக்கொண்டே நித்திரை செய்துவிடுகின்றார்கள். இவ்விதமாய் அனேக எண்ணங்களை யெண்ணிக் கொண்டு நித்திரை செய்வதனால், அவர்களுக்கு அனேக வித கெட்ட சொப்பனங்கள் வந்துகொண்டே யிருக்கும். ஆதலால்,

இதை வாசிக்கும் அன்பர்கள் யாவரும் இரவு, எல்லா வேலைகளையும் முடித்துக்கொண்டு, சயனிப்பதற்காகப் படுக்கையில் உட்கார்ந்து. கூன் வளையாமல் நேராய் நிமிர்ந்து சித்திரப் பதுமைபோலிருந்து வாய் கண்களை மூடி இரு கைகளையும் குவித்து, "எங்கும் பரிபூரணமாய் நிறைந்து எண்பத்து நான்குலக்ஷ ஜீவாராசிகளிலும் ஸாக்ஷி சொரூபமாய் ஜீவாத்மாவாய் வியாபித்திருக்கும் ஓ பரப் பிரம்மமே! யான் இன்று காலை நித்திரை விட்டு எழுந்தது முதல் இப்பொழுது சயனிக்க படுக்கையில் உட்காரும் வரையில் அடியேன், கால்களாலும் கைகளாலும் மனதினலும், வாக்கினலும் தெரிந்தும் தெரியாமலும் செய்த புண்ணிய பாபங்களை யெல்லாம் உனக்கு அர்ப்பணம் செய்து விட்டேன். நீ என்னுளே ரஹஸ்யமாயும் சாக்ஷி சொரூபனுயும் இருப்பதனல், நான் இன்றிரவு தூங்கி எழுந்தவுடன், மறுபடியும் மறுநாள் இரவு படுக்கும் வரையில் என் மனதை, பாபகாரியங்களைச் செய்யவிடாமல் நற்காரியங்களிலேயே நடக்கும்படி, உன் கருணை யென்னும் சாவியைக் கொடுத்துத் திருப்பக்கடவாய்" என்று சில நேரம் மனதினல் துதிசெய்து முடிந்தவுடன் இந்நூல் 419-வது பக்கம் இருக்கும் படத்தில், இந்நூலாசிரியர் 'சின்முத்திரை'யுடன் உட்கார்ந்து, எந்த எண்ணங்களுமில்லாமல் பிரம்ம நிஷ்டையில், இருப்பதுபோல் நீங்களும்

சிலநேரம் எந்த எண்ணங்களுமில்லாமல் இருந்து, இடது கைப்புறமாய்ச் சயனித்து, மறுபடியும் மனக் குரங்கை இருதயத்தில் பிரவேசிக்க விடாமல் கண்களை மூடிக் கொண்டே மூக்கு நுனிக்குறியில் திருஷ்டி நிறுத்தி, சுவாசத்தில் 'ஸோ' என்னும் மந்திரம் சேர்த்து உள்ளுக்கிழுத்து மறுபடியும், சுவாசம் வெளிவிடும்போது அந்த சுவாசத்துடன்கூட 'ஹம்'என்னும் மந்திரம் சேர்த்து வெளியில் விட்டுக்கொண்டு இவ்வாறு முப்பது அல்லது நாற்பது மந்திரங்கள் ஜபம் செய்துகொண்டிருந்தால், உடனே மனம் சுவாசத்துடன் கட்டுப்பட்டுத் தன்னைத்தான் மறந்து தூங்கி விடும். இதுபோல் நீங்கள் மறவாமல் பிரதிதினம் செய்து வாருங்கள். இதன் அனுபவம் உங்களுக்குப் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாய்த் தெரியவரும். அப்படித் தூங்குவதனால், எந்த கெட்ட சொப்பனங்களும் உண்டாகவே மாட்டா. ஒருவேளை சொப்பனம் உண்டானால், அது உண்மையாய் நடக்கும் சொப்பனமாகவே யிருக்கும். முன் சொல்லிய விஷயங்கள் யாவையும் பாடம் செய்து இரவில் சயனிக்க படுக்கையில் உட்கார்ந்து கண்களையும் வாயையும்மூடி இருகைகளையும் குவித்து பிரதிதினம் மனதினால் ஸ்மரித்துக்கொண்டே வரவேண்டும்.

ஐயா! நீங்கள், மனதை நிறுத்தவேண்டுமென்று மேற் சொல்லியதுபோல் உட்கார்ந்தால், அந்த சமயத்தில் தான் இல்லாத எண்ணங்களெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாய் அனேகனேக எண்ணங்கள் வந்துகொண்டே யிருக்கும். இந்த எண்ணங்களை பிராணாயாமம் ஒன்றுதான் நாசப் படுத்துமே யொழிய, மற்ற எதுவும் நாசம் செய்யமாட்டா. இந்த பிராணாயாமம் செய்வது மிகவும் கஷ்டம். இதற்குக் கீழ்ப்படி ராஜயோகம் இந்த ராஜயோகம் ஒவ்வொரு குடும் பத்திலுள்ள ஸ்திரீ புருஷர்களும் அப்பியாசம் செய்துவரலாம்.

இந்த ராஜயோகம் செய்யும் மார்க்கம் இற்தகு முன் சொல்லப்படும் அதை இவ்விடத்திலும் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

பிரதிதினம் இரவில் போஜனம்செய்து எல்லா வேலைகளையும் முடித்துக்கொண்டு மறுபடியும் யாருடன் பேசாமல் படுக்கையில் உட்கார்ந்து கண் வாய்களை மூடி இருகைகளையும் குவித்து முன் சொல்லியதுபோல் பரப் பிரம்மத்தைத் துதிசெய்து முடிந்தவுடன், உடனே இடதுகைப் புறமாய் ஒஞ்சரித்துச் சயனிக்கவேண்டும். அப்படி சயனித்தால் சுவாசம் சூரியநாடியில் அதாவது வலது நாசியில் ஓடிக்கொண்டிருக்கும். இவ்வாறு சயனித்துக்கொண்டு கண்களைமூடி 'ஸோ' என்னும் மந்திரத்தை கர்மவாக்கினால் சொல்லாமல் அஜபாவாய் (மனதினாலேயே) அந்த சுவாசத்துடன் 'ஸோ' என்னும் மந்திரம் சேர்த்து உள்ளுக்கிழுத்து, மறுபடியும் சுவாசம் வெளியில் விடும்போது 'ஹம்' என்னும் மந்திரத்துடன் சேர்த்து விடவேண்டும். இவ்விதமாய் ஒவ்வொரு சுவாசத்திலும் மேற்சொல்லிய இரண்டு மந்திரங்களையும், சுவாசம் உள்ளுக் கிழுக்கும்போதும், வெளியில் விடும்போதும் சேர்த்து விட்டுக்கொண்டே நித்திரை செய்யவேண்டும். ஆனால் சுவாசம் வலதுமூக்கில் நடக்கவேண்டுமா, இடதுமூக்கில் நடக்கவேண்டுமா என்னும் சந்தேகம் வேண்டாம். எந்த மூக்கில் நடந்தாலும் நடக்கலாம். ஆதலால், இந்த சுவாசமானது நாசிக்குள் பிரவேசிக்கும்போது தனக்குத் தானாகவே 'ஸோ' என்னும் மந்திரத்தை ஜபித்துக்கொண்டே சென்று, மறுபடியும் சுவாசம் வெளிவரும்போது தனக்குத் தானாகவே 'ஹம்' என்னும் மந்திரத்தை ஜபித்துக்கொண்டேவரும். இவ்விதமாய் நிமிஷத்திற்கு பதினைந்து சுவாசங்கள் நடந்து, நாள் ஒன்றுக்கு இருபத்துநான்கு மணிநேரத்தில், அதா

வது, நிமிஷத்திற்கு 15-சுவாசம் நடக்கின்றது. மணிக்கு 60-நிமிஷங்கள். ஆதலால், $15 \times 60 = 900$ பதினைந்தையும் அறுபதையும் பெருக்கினால் மணிக்குத் தொளாயிரம் சுவாசங்கள் நடக்கின்றது. நாள் ஒன்றிற்கு 24-மணிநேரம். ஆதலால், இருபத்துநான்கையும் தொளாயிரத்தையும் பெருக்கினால், இருபத்தி ஒராயிரத்து அறுநூறு சுவாசங்கள் தனக்குத்தானாகவே "ஸோஹம்" என்னும் மந்திரத்தை ஜபித்துக்கொண்டு, மரணகாலபரியந்தம் நடந்து கொண்டேயிருக்கும். இந்த ரகசியத்தைத் தெரிந்துகொள்ளாத சில புருஷர்கள், சுவாசத்திற்கும் 'ஸோஹம்' மந்திரத்திற்கும் யாதொரு சம்பந்தமில்லாமலே "ஸோஹம், ஸோஹம் ஸோஹம், ஸோஹம்" என்று ஸதாகாலமும் கர்ம வாக்கினால் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். இவ்விதமாய் நாள் ஒன்றுக்குப் பதினாயிரம்முறை செய்துவந்த போதிலும் முன்சொல்லிய ஒரு "ஸோஹம்" மந்திரத்திற்கு இணையாகமாட்டா. ஏனென்றால், "ஸோஹம்" மந்திரம் சர்மவாக்கினால் ஜபித்துக்கொண்டு வந்தாலும், மனம் வேறு விஷயங்களில் ஓடிக்கொண்டேயிருக்கும். ஆதலால், இந்த மந்திரத்தை வாக்கினால் சொல்லாமல் மனதினால் சுவாசத்துடன் கூடவே சேர்த்து சுவாசம், உட் செல்லும்போதும் வெளிவரும்போதும் முன்சொல்லிய இரண்டு மந்திரங்களையும் ஜபித்துக்கொண்டுவந்தால், மனம் வெளியில் ஓட அவகாசமிராமல், சுவாசத்திலேயே லயித்துவிடும். அந்த சமயம் புருஷன் தன்னைத்தான் மறந்து சிலா வடிவமாய் நின்றுவிடுவான். இதுவே, ஜாக்கிரத்தில் சுழுப்தி யென்றும், தூங்காமற்றூங்கி சுகம் பெறுவது என்றும் பெரியோர்கள் சொல்லிய திதுவே. இதுவே ராஜயோகத்தின்ரஹஸியம். இதுவே தாரகமந்திரம். இதுவேத வாக்கியம். மஹா ரஹஸ்யமானது; குருவினால் தெரிந்துக்

கொள்ளத்தக்கது. இப்படிப்பட்ட மஹா ரஹஸியத்தை உங்களுக்குப் புஸ்தகமூலமாய் உபதேசித்திருக்கின்றோம். ஆதலால், நீங்கள் வியாபாரம் அல்லது, உத்தியோகங்கள் செய்யும்போது மாத்திரம், மேற்படி 'ஸோஹம்' மந்திரம் ஜபிப்பதை நிறுத்தி, அந்தந்த வியாபார உத்தியோகங்கள் செய்து முடிந்தவுடன் மற்றக் காலங்களிலெல்லாம் அதாவது, நடக்கும்போதும் உட்காரும்போதும் மலஜலம் விடும்போதும், படுக்கும்போதும் அணுவேனும் சோராமல் தைலதாரையைப்போல் சதாகாலமும் இவ்விரண்டு மந்திரங்களையும் ஜபம்செய்து வருவீர்களாகில், சாக்ஷி சொரூபமாயிருக்கும் பரப் பிரம்மத்தின் அம்சமாகிய ஆத்மா, உங்கள் மரணகாலத்தில் எந்த சம்சார பந்தத்தையும் கிட்ட நெருங்கவிடாமல் செய்வித்து, நற்கதியை அடையும்படிச் செய்விக்கும்.

பாரப்பா சீஷர்களை யழைப்பான் பாவி
பணம்பறிக்க வுபதேசம் பகர்வோ மென்பான்
ஆரப்பா பிரம்மநிலை காட்டா மற்றான்
ஆகாசப் பொய்களையு மவன்தான் சொல்வான்
நேரப்பா சீஷனுக்குப் பாவ மாச்சு
நிஷ்டை சொல்லுங் குருக்களுக்குத் தோஷமாச்சு
வீரப்பா அடங்குகின்ற இடத்தைப் பாரான்
விதிபோலே முடிந்ததென்று விளம்பு வானே.

ஏழு சக்கரங்களிலும் சுவாசம் நடந்து நம்முடைய ஆயுட்பாகம் காட்டுதல்.

"ப்ரணஷ்ட ஶ்வாஸ நிஶ்வாஸ ப்ரத்வம்ஸ விஷயக்ரஹः
நிஶ்சேஷ்டோ நிர்விகாரஶ்ச லயோ ஜயதி யோகிநாம்."

நாம் உள்ளுக்கிழுக்கும் சுவாசம் நிசுவாசமென்றும், வெளியில் விடும் சுவாசம் உசுவாசமென்றும் சொல்லப் படும். இந்த நிசுவாச உசுவாசங்கள் நஷ்டமானல் சப்தாதி விஷயங்களும், சரீர வியாபாரங்களும், எந்த விகாரங்களும் அதாவது மனம், புத்தி, சித்தம், அஹங்காரத்தின் சேஷ்டைகளும் இல்லாமலிருக்கும். இதுவே லயமென்று சொல்லப்படும். இந்த லயமே யோகிகளுக்குச் சிரேஷ்டமானது. இந்த நிசுவாச உசுவாசங்களே "ஹம்ஸ" என்று சொல்லப் படும். இந்த "ஹம்ஸ" என்னு சுவாசமானது, மூலாதார சுவாதிஷ்டான மணிபூரக அநாஹத விசுத்தி ஆஞ்ஞேய ஸஹஸ்ராரம் என்னும் ஏழு சக்கரங்களிலும் திரிந்து கொண்டு நம்முடைய ஆயுட்பாகத்தைக் காட்டுகின்றது. இதற்குச் சுருதி பிரமாணம்.

"ஷட்ஶதம் கணநாதஸ்ய ஷட்ஸஹஸ்ரம் ப்ரஜாபதேः
ஷட்ஸஹஸ்ரம் மஹாவிஷ்ணோः ஷட்ஸஹஸ்ரம் மஹேஶிதுः
ஸஹஸ்ரம் ஜீவரூபஸ்ய ஸஹஸ்ரம் ஈஶ்வராத்மநः
ஸஹஸ்ரம் குருரூபஸ்ய ஏகம்புத்யா ப்ரகல்பயேத்."

1. மூலாதாரத்திற்கு, அதாவது குத ஸ்தானத்திற்கு அதிதேவதை கணபதி. அவருக்கு காலே 6-மணி முதல் 6-40, நிமிஷங்கள் வரையில் 600, (அறுநூறு) சுவாசங்கள் நடக்கும்; நடந்தவுடன் கணபதிக்கு வயர் நிறைந்து, சுவாதிஷ்டானத்திற்குள் பிரவேசிக்கும்.

2. சுவாதிஷ்டானத்திற்கு அதாவது, குய்யஸ்தானத்திற்கு அதிதேவதை பிரஜாபதி (பிரமன்) அவருக்கு காலே

6-40, மணி முதல் பகல் 1-20, மணிவரையில் 6,000-(ஆறுயிரம்) சுவாசங்கள நடக்கும்; நடந்தவுடன் அவருக்கு வயர் நிறைந்து, மணிபூரகத்திற்கு அதாவது நாபிக்குள் பிரவேசிக்கும்.

3. மணிபூரகத்திற்கு அதிதேவதை விஷ்ணு. அவருக்குப் பகல் 1-20 மணி முதல், இரவு 8-மணி வரையில் 6,000 (ஆறுயிரம்) சுவாசங்கள் நடக்கும்; நடந்தவுடன் அவருக்கு வயர் நிறைந்து அநாஹதத்திற்கு அதாவது இருதயத்திற்குள் பிரவேசிக்கும்.

4. அநாஹதத்திற்கு அதிதேவதை ருத்திரன். அவருக்கு இரவு 8-மணிமுதல், காலை 2-40, மணி வரையில் 6,000 (ஆறுயிரம்) சுவாசங்கள் நடக்கும்; நடந்தவுடன் அவருக்கு வயர் நிறைந்து, விசுத்தியில் அதாவது அடிநாவில் (நெஞ்சுக்குழியில்) பிரவேசிக்கும்.

5. விசுத்திக்கு அதிதேவதை மஹேஸ்வரன். அவருக்கு 2-40 மணி முதல், காலை 3-46, மணி வரையில் 1,000 (ஆயிரம்) சுவாசங்கள் நடக்கும்; நடந்தவுடன் அவருக்கு வயர் நிறைந்து ஆஜ்ஞேயத்திற்கு அதாவது நெற்றிற்கு பிரவேசிக்கும்,

6. ஆஜ்ஞேயத்திற்கு அதிதேவதை ஜீவன். அவருக்கு காலை 3-46, மணி முதல், 4-53 மணி வரையில் 1,000 (ஆயிரம்) சுவாசங்கள் நடக்கும்; நடந்தவுடன் அவருக்கு வயர் நிறைந்து சஹஸ்ராரமென்னும் பிரம்ம கபாலத்திற்கு (தலை உச்சிக்குப்) பிரவேசிக்கும்.

7. சஹஸ்ராரத்திற்கு அதிதேவதை பரமாத்மா. அவருக்குக் காலை 4-53 மணி முதல், 6-மணி வரையில் 1,000 (ஆயிரம்) சுவாசங்கள் நடக்கும்; நடந்தவுடன் அவருக்கு வயர் நிறைந்து, மறுபடியும் மறுநாள் காலை 6-மணிக்கு மூலாதரத்திற்குப் பிரவேசிக்கும்.

கடியாரத்திலுள்ள பெண்டுலமானது ஆடிக்கொண்டே மணியைக் காட்டுவதுபோல், இந்த சுவாசமானது முன் சொல்லிய ஏழு சக்கரங்களிலும் மேற்கூறிய கணக்கைப் போல், நிமிஷத்திற்கு 15சுவாசங்கள்நடக்கும்; ஒருமணிக்கு அறுபது நிமிஷமாதலால், அறுபதையும் பதினைந்தையும் பெறுக்கினல் தொளாயிரம் ஆகின்றது. (15 × 60 = 900.) அதாவது, ஒருமணிநேரத்திற்குள் தொளாயிரம் சுவாசங்கள் நடந்து, நாள் ஒன்றிற்கு 24 - மணி நேரத்திற்குள் (900 × 24 = 21,600) இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசங்கள் நடந்துகொண்டு, நம்முடைய ஆயுட்பாகத்தைக் காட்டுகின்றது. கடியாரத்திற்கு மணியைக்காட்டும் தொழிலும், சூர்ய சந்திராதிகளுக்கு நாள்கள், வாரங்கள், மாதங்கள், வருஷங்கள், யுகங்கள் காட்டும் தொழிலும், ஜீவகோடிகளுக்குச் சுவாசம் ஆயுட்பாகத்தைக் காட்டும் தொழிலாயிருக்கின்றது. இதற்கு நெஞ்சறி விளக்கம் பிரமாணம்,

> இறந்திடும் இருபத் தோராயிரத் தறுநூறு பேரும்
> இறந்திடு மிக்காயம் போனு லீசனைக் காண்பதென்னுன்
> மறந்திடா தறிவான் மூலவாசியை மேலே யேற்றிச்
> சிறந்த தற்பரத்து நாகலிங்கரைத் தரிசி நெஞ்சே.

இறந்திடும் இருபத்தோராயிரத் தறுநூறு பேரும் = பிரதிதினப், நிமிஷத்திற்கு, 15-சுவாசங்களாய் நடந்து, நாள் ஒன்றிற்கு இருபத்தி ஓராயிரத்து அறுநூறு சுவாசங்கள் நடந்து நடந்து; இறந்திடு மிக்காயம் போனுல் = இவர்களெல்லோரும் மூக்கு ரந்திரங்களின் வழியாய் ஆடி, ஒவ்வொருவராய் இறந்துகொண்டேவந்து இத்தேகத்தை விட்டு நீங்கினுல்: ஈசனைக் காண்ப தெண்ணுள் = கடவுளைக் கண்டறிவது எப்போ; மறந்திடா தறிவான் மூலவாசியை மேலே யேற்றி = சற்றுநேரமும் ஓயாமல் மூலாதார (குதத்

தின்) வழியாய் நடந்துகொண் டிருக்கும் சுவாசத்தை, முதுகெலும்பிலுள்ள வெள்ளை நரம்பின் துவாரங்களின் வழயாய் மேலே யேற்றி; சிறந்த தற்பறத்து நாகலிங்கரைத் தரிசி நெஞ்சே=உயர்வாயும் தனக்குத்தானே பரமாயு முள்ள சிதாகாசமென்னும் வெளியை தரிசிப்பாய் மனமே.

பிரதிதினம், நிமிஷத்திற்கு 15-சுவாசங்களாய் நடந்து நாள் ஒன்றிற்கு இருபத்து ஓராயிரத்து அறுநூறு சுவாசங்கள் நடந்து நடந்து, இவர்களெல்லோம் மூக்கு ரந்திரங்களின் வழியாய் ஆடி,ஒவ்வொருவராய் இறந்துகொண்டே வந்து இத்தேகத்தைவிட்டு நீங்கினுல், கடவுளைக் காண்பதென்னுள். சற்றுமேனரமும் ஓயாமல் மூலாதார (குதத்தின்) வழியாய் நடந்துகொண்டிருக்கும் சுவாசத்தை,முதுகெலும்பிலுள்ள வெள்ளை நரம்பின் துவாரங்களின் வழியாய் மேலேயேற்றி, உயர்வாயும் தனக்குத்தானே பரமாயுமுள்ள சிதாகாசமென்னும் வெளியை தரிசிப்பாய் மனமே. ஆகதால், சரீரத்திலுள்ள ஆறு சக்கரங்களே திருப்பதியின் ஆறு பருவதங்களாயும், ஏழாவது சக்கரமாகிய சஹஸ்ராரத்தில் (உச்சியில்) பரமாத்மா நிவசித்துக்கொண்டிருப்பதே, திருப்பதி ஏழாவது மலையில் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் நிவசித்துக்கொண் டிருப்பதாயும், அன்றியும் இந்த ஆறு சக்கரங்களே ஸ்ரீரங்கத்திலுள்ள ஆறு பிராகாரங்களாகவும், ஏழாவது சக்கரமாகிய சஹஸ்ரத்திலுள்ள பரமாத்மாவே ஏழாவது பிராகாரத்தில் ஸ்ரீ ரங்கநாதர் நிவசிப்பதாகவும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பரமாத்மா 'ஹம்ஸ' ரூபமாய் 'ஸோஹம்' பாவமாய் 'ஓங்' காரமாய் பிரபஞ்சமெங்கும் நிறைந்திருக்கின்றது. இந்த 'ஸோஹ'மே' 'ஓம்' என்னும் தாரக மந்திரம். இந்த ரகசியத்தை யோகிகளாகிய மஹானுபாவர்கள் தெரிந்துகொண்டு ஏழாவது சக்கரமாகிய சஹஸ்ராரத்தில்

சுவாசத்தைக் கொண்டுபோய் நிறுத்துவார்கள். அப்போது அவர்கள் காலனை ஜயித்து அநேக யுகங்கள் பரியந்தம் சமாதியில் இருப்பார்கள். நம்முடைய ஆயுட்பாகம் இந்த சுவாசமேயொழிய, சூர்ய சந்திரர்கள் நடக்கும் நாட்களல்ல. ஒவ்வொரு மனிதனுக்கும் இத்தனை கோடி சுவாசங்களென்று ஜனனகாலத்திலேயே பஞ்சபூதங்களினால் உண்டான சரீரத்தில் சேர்க்கப் பட்டிருக்கின்றது. இப்பேர்ப்பட்ட மஹா ரஹஸ்யமாகிய சுவாசத்தைத் தெரிந்து கொள்ளாமல், மனிதர்கள் சாதாரணமாய்ப்,

பேசும்பொழுது 12-அங்குல சுவாசம் வெளியில் வந்து, 8-அங்குல சுவாசம் உட்சென்று, 4-அங்குல சுவாசம் வெளியில் நஷ்டமாய் விடும்;

நடக்கும்போது 16-அங்குல சுவாசம் வெளியில் வந்து, 8-அங்குல சுவாசம் உட்சென்று, 8-அங்குல சுவாசம் நஷ்டமாய் விடும்;

கைத்தொழில் செய்யும்போது 20-அங்குல சுவாசம் வெளியில் வந்து, 10-அங்குல சுவாசம் உட்சென்று, 10-அங்குல சுவாசம் நஷ்டமாய் விடும்;

சண்டையில் 24-அங்குல சுவாசம் வெளியில் வந்து, 12-அங்குல சுவாசம் உட்சென்று, 12-அங்குல சுவாசம் நஷ்டமாய் விடும்;

நித்திரையில் 48-அங்குல சுவாசம் வெளியில் வந்து 30-அங்குல சுவாசம் உட்சென்று, 18-அங்குல சுவாசம் நஷ்டமாய் விடும்;

ஓடும்பொழுது 54-அங்குல சுவாசம் வெளியில் வந்து, 27-அங்குல சுவாசம் உட்சென்று, 27-அங்குல சுவாசம் நஷ்டமாய் விடும்;

சம்போக காலத்தில் 64-அங்குல சுவாசம் வெளியில்

வந்து, 24-அங்குல சுவாசம் உட்சென்று, 40-அங்குல சுவாசம் நஷ்டமாய் விடும்;

இவ்விதமாய் ஒவ்வொருவரும் நாள் ஒன்றிற்கு முப்பது, நாற்பது, (30, 40) ஆயிரக்கணக்காய் சுவாசத்தைச் சிலவழித்துவிட்டு எழுபது, எண்பது, (70, 80) வருஷத்திற்குள் மரணமடைகின்றார்கள். சகல ஜீவஜந்துக்களுக்கும், நாள் ஒன்றிற்கு இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசங்கள் கணக்கு ஏற்பட்டிருக்கின்றது. மனிதர்களுக்கு ஈசுவரனால் கொடுக்கப்பட்ட வயது நூறுயிருந்தபோதிலும், மேற்சொல்லியதுபோல் சுவாசத்தை மனிதர்கள் விசேஷமாய்ச் சிலவழித்து விடுவதனால், எண்பது (80) வயதிற்குமேல் ஜீவித்திருக்கமாட்டார்கள்.

குழந்தையானது பிறந்த மூன்றும் மாதம் இறந்துவிட்டால், அக்குழந்தைக்கு (19,44,000) பத்தொன்பது லக்ஷத்து நாற்பத்து நாலாயிரம் சுவாசமேயிருந்தபடியால் அவை சிலவழிந்தவுடன் ஜீவன் போய் விட்டது என்று அறியலாம். பத்தொன்பது லக்ஷத்து நாற்பத்து நாலாயிரம் சுவாசம் எவ்விதமாய் வந்ததென்றால், மாதம் மூன்றுக்கு நாட்கள் தொண்ணூறு (90) நாள் ஒன்றுக்கு (21,600) இருபத்து ஓராயிரத்து அறுநூறு சுவாசங்கள் நடக்கின்றன; ஆதலால், 21,600 × 90 = 19,44,000) இருபத்தி ஓராயிரத்து அறுநூறும், தொண்நூறும் பெருக்கினால், பத்தொன்பது லக்ஷத்து நாற்பத்து நாலாயிரம் சுவாசங்கள் ஆகின்றன. ஆதலால்,

ஒவ்வொரு ஜீவர்கள் என்னாள்வரையில் பிழைத்திருக்கவேண்டுமோ அன்னாட்களுக்கு வேண்டிய சுவாசத்தை ஈசுவரன் ஏற்படுத்தி, ஜீவர்களை சிருஷ்டிசெய்து அனுப்பிவிடுகின்றான். இச் ஜீவர்களை ஈசுவரன், பரீக்ஷிப்பதற்காக ஆயிர வருஷங்களுக்கு வேண்டிய சுவாசத்தைக்

கொடுத்து அனுப்பியபோதிலும், இவர்கள் பிரதிதினம் ஒரு நிமிஷமாகிலும் ஓய்வில்லாமல் ஆயிர வருஷம் வரையி லும், மாயா சம்சார குடும்பததிற்கு வேண்டிய வேலைகள் மாத்திரம் செய்துகொண்டு வருவார்களே யொழிய, மோக்ஷமடைய அரை நிமிஷமாகிலும் ஈசுவரனைத் துதி செய்யார்கள். ஆனால், இவர்கள் எதைவேண்டித் துதிசெய் கின்றார்களென்றால்; ஸ்நானம் செயது விபூதிபூசி உத்திரா க்ஷங்களைக் கழுத்தில் போட்டு கோவிலுக்குச்சென்று பக வானெதிரில் நின்று; நான் செய்யும் வியாபாரத்தில் நல்ல லாபம் வரவேண்டுமென்றாகிலும், என் கேஸ் ஜயமாக வேண்டுமென்றாகிலும், நான் கொடுத்த பணம் வட்டி முதலுடன் சரியாய் வரவேண்டுமென்றாகிலும், எனக்கு நல்ல சம்பத்துகள் வரவேண்டுமென்றாகிலும், எனக்குச் சந்தானம் உண்டாக வேண்டுமென்றாகிலும், எனக்கும் என்குடும்பத்தி லுள்ளவர்களுக்கும் யாதொரு வியாதி யும் வாராம லிருக்கவேண்டுமென்றாகிலும் இவ்வாறு, அவ ரவர்கள் எண்ணியபடி வரங்களைக் கேட்கின்றார்களே யொழிய, மாயா சம்சாரத்தைக்கடந்து கடைத்தேரும்படி யான வரத்தைக்கேட்கமாட்டார்கள். சம்சாரத்திலிருந்து கடைத்தேரவேண்டுமென்று ஈசுவரனைக் கேட்பவர்கள், நூற்றிற்கு ஒருவர் இருப்பதும் மிகவும் கஷ்டம். முன் சொல்லிய ஆசைகளை வைத்து கோவிலுச்குப் போகப்பட்ட வர்களை ஈசுவரன் பரீக்ஷிப்பதற்காக, அவர்கள் கேட்பது போல் வரங் கொடுத்ததுமேயன்றி அதே ஜன்மத்தில் இன் னும் ஆயிரவருஷங்கள் ஜீவித்திருப்பதற்கு வேண்டிய சுவா சத்தை ஆயுட்பாகமாய்க் கொடுத்து பரீக்ஷித்தபோதிலும், முன்னைவிட அதிக ஆசை யுண்டாய், அரை நிமிஷமாகிலும் ஓய்வில்லாதபடி தனத்தைச் சம்பாதிக்கப் பிரயத்தினப் பட்டு, தனப் பிசாசென்னும் சேற்றில் அழுந்தி, பாழகும்

நாளில், மரணம் சம்பவித்து விட்டால், இரண்டாயிர வருஷம் ஜீவித்து இப்போது மரணமடைந்தானே போகட்டுமென்று அவன் குடும்பத்தார் எண்ணுமல் அவன், மேல் விழுந்து புரண்டு புரண்டு அழுது சிலது நாட்கள் துக்கித்து, அவர்களும் அவன் மரணமடைந்ததுபோல் மரணமடைகின்றார்கள். இப்படிப் பட்டவர்களின் கூத்து கள் யாவும் ஈசுவரனுக்கு ஒரு வேடிக்கையாதலால், அவர் களுக்கு விசேஷ ஆசைகளை உண்டாக்கி அந்த ஆசையால் அவர்களை மோஹிக்கச்செய்து, தான் எல்லோருடைய பலவிதங்களான கூத்துகளைப் பார்த்துக் கொண்டிருக்கின் ருன். இவைகளையெல்லாம் ஸ்திரீ புருஷர்கள் கவனித்து, நாம் பிரதிதினம் செய்து கொண்டுவரும் வியாபரங் களையே செய்து கொண்டு வருகின்றேமே, இதற்காகவா நாம் ஜனனமெடுத்தோம் என்று எவன் சற்று ஆழ்ந்து யோசிக்கின்றனே அப்படிப்பட்டவன், ஓஹோ ! நமது காலம் இதுவரையில் வியர்த்தமாய்விட்டதல்லவா வென்று, நினைத்து, அவனது மனம் துடிதுடித்து மறுபடியும் தாயின் கர்ப்பத்தில் போய்ப்பிரவேசிக்காமலிருப்பதற்காக, என்ன செய்யவேண்டுமோ அதற்கு வேண்டிய பாடுகளைப் படுவான். நாம் மறு ஜனனமெடுக்காமலிருப்பதற்காக எதுவேண்டுமோ அதை இந்நூலில் தெரிவித்திருக்கின் ரேம். ஆதலால், நாம் உலகத்தில் ஏன் பிறந்தோம், பிறந்ததற்காக எதை அடையவேண்டுமென்று ஸ்திரீ புருஷர்கள் சற்று ஆழ்ந்து யோசிப்பார்களாகில் அவர்க ளுக்குடனே நல்லறிவு உண்டாய் மறுபிறப்பு வாராதபடி அதற்கு வேண்டிய வழியைத் தேடிக்கொள்வார்கள். ஆத லால், நீங்கள் எதற்காகப் பிறந்தீர்களோ அதைச் சற்றே ஆலோசித்துப்பாருங்கள். அப்போது உண்மைப்பொருள் எதுவோ அது, உங்கள் மனதிற்கு நன்ருய்ப் புலப்படும்.

ஹம்ஸ சூத்திர ரகசியம்.

சுரு|| " ஹம்ஸோ கணேசோ விதிரேவ ஹம்ஸோ
ஹம்ஸோ ஹரிர் விஶ்வமயஶ் ஸம்பு:
ஹம்ஸோஹமாத்மா குருரேவ ஹம்ஸோ
ஹம்ஸோஹம் ஹம்ஸ: பரமாத்ம ஹம்ஸ:."

இந்த 'ஹம்ஸ'யே' கணபதி, ஹரி, சம்பு, ஆத்மா, குரு, பரமாத்மாவென்று சொல்லப்படும்.

சுரு|| " ஸ்வப்ரகாஶ சிதாநந்தம் ஸ ஹம்ஸ இதி கீயதே."

[ப்ரஹ்ம வித்யோபநிஷத்.]

சுயம்பிரகாசமாய், பரஞ்சோதியாய், ஞாநாநந்த சொரூபமாய், சர்வசாக்ஷியாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பரப் பிரம்மமாகிய ஆத்மாவே 'ஹம்ஸ' என்று சொல்லப்படும்; இந்த 'ஹம்ஸ' மானது சகல ஜீவராசிகளின் சரீரத்தில், எங்கு நிவசிக்கின்றதென்றால்:—

" ஜாக்ரந் நேத்ர த்வயோர்மத்யே ' ஹம்ஸ ' எவ ப்ரகாஶதே
ஸகார: கேசரீ ப்ரோக்த: த்வம்பதம் சேதி நிஶ்சிதம்.

ஹகார: பரமேஶ: ஸ்யாத் தத்பதம் சேதி நிஶ்சிதம்
ஸகாரோ த்யாயதே ஜந்து: ஹகாரோஹி பவேத் த்ருவம்."

[யோகசூடாமண் யுபநிஷத்.]

இரண்டு நேத்திரங்களுக்கு மத்தியில் (புருவமத்திய ஸ்தானத்தில்) ' ஹம்ஸ ' மானது பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது. ' ஹம்ஸ ' என்னும் பதத்தில் ' ஹ ' என்னும் அக்ஷரம், ' ம் ', ' ஸ ' என்னும் அக்ஷரம் ஆக இம்மூன்றும் சேர்ந்திருக்கின்றன. அதில் 'ஹ' என்றால் பரமாத்மா, ' ஸ ' என்றால் ஜீவாத்மா என்று சொல்லப்படும். ' ஹ - ஸ ' என்னும் இவ்விரண்டு அக்ஷரங்களின் மத்தியிலிருக்கும் (ம்) என்பது, பரமாத்மாவே ஜீவாத்மா,

ஜீவாத்மாவே பரமாத்மா என்று இவ்விரண்டையும் ஒன்ருய்ச் சேர்ப்பிக்கின்றது. இந்த ஜீவாத்மா, நாபி இருதய கமலம் கண்டம் பிரம்ம ரந்திரம் இவைகளில் சஞ்சரிக்கின்றது என்று பிரஹ்மோப நிஷத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால்,

'ஹம்ஸ' மந்திரத்தை ஜபிக்கப் பட்டவர்கள் சத்திய மாய்ப் பரமாத்ம சொரூபத்தை அடைகின்ருர்கள். இதற்குச் சந்தேகமில்லை. இது சத்தியம் சத்தியமே.

சுரு || "ஸகாரஞ்ச ஹகாரஞ்ச ஜீவோ ஜபதி ஸர்வதா."

[ப்ரஹ்ம வித்யோபநிஷத்.]

ஜீவன் புருவமத்தியிலிருந்துகொண்டு, 'ஸ' காரத்தையும் 'ஹ' காரத்தையும் சதா தனக்குத் தாஞகவே ஸ்மரித்துக்கொண் டிருக்கும். இதற்குச் சுருதி பிரமாணம் :—

சுரு|| "ப்ராணுபாநவஶோ ஜீவோ ஹ்யதஶ் சோர்த்வம் ப்ரதாவதி
வாமதக்ஷிண மார்கேண சஞ்சலத்வாந் ந த்ருஶ்யதே.
ஆக்ஷிப்தா புஜதண்டேந யதோச்சலதி கந்துகः
ப்ராணுபாந ஸமாக்ஷிப்தः தத்வஜ்ஜீவோ ந விஶ்ரமேத்.

அபாநாத் கர்ஷதி ப்ராணே அபாநः ப்ராணுச்ச கர்ஷதி
ககரஜ்ஜுவ தித்யேதத் யோஜாநாதி ஸ யோகவித்.
ஹகாரேண பஹிர்யாதி ஸகாரேண வஶேத் புநः
ஹம்ஸ ஹம்ஸேத்ய மந்த்ரம் ஜீவோ ஜபதி ஸர்வதா."

[த்யானபிந்துபநிஷத்.]

சிறு பிள்ளைகள் கையிஞல் உயரவிடும் பந்தானது, கீழும் மேலும் எகிறிக்கொண் டிருப்பதுபோல், பிராண அபான வாயுக்கள் இரண்டும் இத்தேக மத்தியில் ஷடா தாரங்களின் (எழு) சக்கரங்களின் வழியாய் சுவாசம் உள் பிரவேசிக்கும்போது 'ஸ' காரத்துடனும் என்ருல் 'ஸோ' என்னும் மந்திரத்துடனும், மறுபடியும் சுவாசம் வெளி

வரும்போது 'ஹ' காரத்துடனும் என்றால் 'ஹம்' என்னும் மந்திரத்துடனும் ஏறி இறங்கிக்கொண்டு, பிரதிதினம் முன் சொல்லியிருக்கும் கணக்கைப்போல் 21,600 இருபத்து ஓராயிரத்து அறுநூறு முறை * ரேசக † பூரகமாய் மூக்குத் துவாரங்களின் வழியாய் துவாதசாங்குல (12-அங்குல)ம் அஷ்டாங்குல (8-அங்குல)ம் வரையில் (அதாவது, இடது மூக்கில் வெளிவரும் சுவாசம் 12-அங்குலமும், வலது மூக்கில் வரும் சுவாசம் 8-அங்குலமும்) வெளிவந்து மறுபடியும் உள் பிரவேசிக்கின்றது. இவ்விதமாய் சூரிய நாடி (வலது மூக்கி)லிருந்து சந்திரநாடி (இடது மூக்கு) மார்க்கமாகவும், இடது மூக்கிலிருந்து வலது மூக்கு மார்க்கமாகவும் சுவாசம் மாறிமாறித் திரிந்துகொண்டே யிருக்கும்.

எப்படி யென்றால், ஓர் கயிற்றால் கட்டப்பட்ட பக்ஷி அந்தக் கயிற்றை அடிக்கடி எப்படி யிழுத்துக்கொண்டிருக்குமோ அதுபோல், ரேசக பூரகங்களென்னும் பிராண அபானவாயுக்களுக்கு மத்தியிலிருக்கும் ஜீவனை, சுவாசமானது மேலுக்கும் கீழுக்கும் அதாவது உள்ளுக்கும் வெளிக்கும் இழுத்துக்கொண்டேயிருக்கும். இந்த ஜீவன் சுவாசத்துடன் சேர்ந்து நாசிக்குள்ளும், வெளியும் நடக்கும்போது "ஸோஹம் ஸோஹம்" என்னும் வாக்கியத்தைத் தனக்குத் தானாகவே ஜபித்துக்கொண்டே போகும். இந்த ரகசியத்தைத் தெரிந்து இராப்பகலாய் ஜபம் (அப்பியாசம்) செய்துகொண்டு வரப்பட்டவர்களே ராஜயோகிகள் என்று சொல்லப்படும். இந்த ராஜயோகிகள் யாருக்குச் சமானர்களென்றால்;

---

* ரேசகம்=சுவாசம் வெளியில் விடுவது.

† பூரகம்=சுவாசம் உட்கொள்வது.

சுரு|| "ஹம்ஸ ஹம்ஸேதி யோ ப்ரூயாத் ஹம்ஸோ ப்ரஹ்மா ஹரிః ஶிவஃ, குருவக்த்ராத் லப்யே ப்ரத்யக்ஷம் ஸர்வதோமுகம்."
[ப்ரஹ்மவித்யோபநிஷத்.]

பிரஹ்மைக்கியத்திற்குக் காரணமாகிய இந்த 'ஸோஹம்' ரகசியத்தைக் குருமுகமாய்த் தெரிந்துத் தியானிக்கப்பட்டவர்களே, ஆத்மா ராமாத்தியானம் செய்யும் பிரம்மஞானிகள் என்று சொல்லப்படுவார்கள். இப்படி 'ஹம்ஸ தியானம் செய்பவர்கள் ஹரி ஹராதி தேவதைகளுக்குச் சமானமாகின்றார்கள். இந்த ':குரு ரகஸ்யம், இதுவே சிவராஜயோக ஸமாதி இதை ஜபம் செய்யுங்கள் என்னும் அத்யாயத்தில் முன் சொல்வோம்."

"ஜ்ஞாநாஸ் ஸ்வரூபம் பரம ஹம்ஸமந்த்ரம் ஸமுஸ்சரேத்
ப்ராணீநாம் தேஹமத்யேது ஸ்திதோ ஹம்ஸஃ ஸதாச்யுதஃ
ஹம்ஸஏவ பரம்ஸத்யம் ஹம்ஸஏவது ஶக்திகம்
ஹம்ஸஏவ பரம்வாக்யஃ ஹம்ஸஏவது வைதிகம்
ஹம்ஸஏவ பரோ ருத்ரஃ ஹம்ஸஏவ பராத்பரஃ"
[ப்ரஹ்ம வித்யோபநிஷத்.]

"ஸோஹமபாபோ விரஜோ நிர்முக்தஃ"
"யோஸாவஸௌ புருஷஸ்ஸோ ஹமஸ்மி."
"ஸர்வதேவஸ்ய மத்யஸ்த்தோ ஹம்ஸஏவ மஹேஶ்வரஃ
ஸதா ஸமாதிம் குர்வீத ஹம்ஸமந்த்ர மநுஸ்மரன்
நிர்மல ஸ்படிகாகாரம் திவ்யரூபம நுத்தமம்.
மத்யதேஶே பரமஹம்ஸ ஜ்ஞாநமுத்ராத்மரூபகம்."
[ப்ரஹ்மவித்யோபநிஷத்.]

அப்பேர்ப்பட்ட ஞானசொரூபமான 'ஹம்ஸ' மே (ஆத்மாவே), தேஹமத்தியில் புத்தியென்னும் குஹையில் சுயம் பிரகாசமாய் சாக்ஷி சொரூபமாய்ப் பிரகாசித்துக்கொண்டு "ஸோஹம்", "ஸோஹம்" என்றால், "நானே பிரம்மம்" "பிரம்மமே நான்" என்று சதா தனக்குத் தானகவே

"ஸோஹம்" மந்திரத்தை அஜபாவாய் ஜபித்துக்கொண்டு மூக்கின் ரந்திரங்களின் வழியாய் நடந்துகொண்டிருக்கும்

சொல்லுமொனக் கேட்டுகந்த மாணுக்காவுன்
 தூலகா ரணப்பிரமந் துரியாதீதம்
அல்லுமல்ல பகலுமல்ல நிஷ்களங்கம்
 'ஹம்ஸோஹம்' அஜபாமந் திரத்தியானம்
செல்லுமவனே நானென் றபிமானிக்கும்
 சித்தவிருத்தி நிரோதகமாம் யோகத்தாலே
வெல்லறிஞர் பலயோக விருத்தியோகி
 விவேகத்தியானுதிகளே மேலாம் பிரம்மம்.

இதை ஜபிக்கவேண்டிய ரகசியம், "இதுவே சிவ ராஜ யோக ஸமாதி, இதை ஜபம் செய்யுங்கள்." என்பதில் முன் சொல்லப்படும்; இந்த சிவராஜயோகம் அனேகபிடங்களில் சொல்லிக்கொண்டே வருகின்ருேம். அதை அறிந்து அது போல் ஜபம் செய்து வரவேண்டும். ஆதலால், இந்த 'ஹம்ஸ'மே சத்திய சொரூபன்; இவனே பராத்பரன். இவன் வாக்கே 'ஸோஹம்.' ஸப்தகோடி மஹா மந்திரங்களிலும் இதுவே சிரேஷ்டமான மந்திரம். இந்த 'ஸோஹம்' மந்திரமே பிரம்மைக்யத்திற்குக் காரணமா யிருக்கின்றது. எப்படி யென்ருல்,

நாம் தேவாலயத்திற்குச் சென்று அங்குள்ள விக்கிரஹங்களைப் பார்த்து இரண்டு கைகளையும் குவித்து அஞ்சலிஹஸ்தர்களாய் நின்று அந்த விக்கிரஹங்களை நமஸ்கரிக்க வேண்டிய காரணமென்னவென்ருல், என் ஆத்மாவை பிரம்மத்தில் சேர்க்கவேண்டுமென்னும் ஐக்கிய பாவமே, நாம் இரண்டு கைகளையும் குவிப்பதற்குக் காரணம். அதற்கு அந்த விக்கிரஹங்கள் நமக்கு என்னகாட்டுகின்றதென்ருல்,

ஸ்ரீ பார்த்தஸாரதி பெருமாள்.

ஸ்ரீ பார்த்தசாரதி பெருமாள், ஒரு கையில் சங்கும், மற்றொரு கையில் சக்ரமும், இன்னொரு கையால் தன் பாதத்தைக்காட்டி, என் பாதத்தின்மீது நீங்கள் திருஷ்டி வைத்து உங்கள் மனதை நிறுத்தினால், அப்போது உங்கள் ஆத்மா பரமாத்மாவில் ஐக்கியமாகும் என்னும் பாவனையாய் நமக்குப் பெருமாள், இடது கையால் இடது பாதத்தைக் காட்டி, மனதை வெளியில் ஓடவிடாமல் நிறுத்தி

சும்மாயிருவென்று வலது கையைக் காட்டுகின்றது. அப்படி மனம் வெளியில் ஓடாமல் நின்றால் அவன் ஆத்மா பரமாத்மாவில் ஐக்கியமாகும். மனதை நிறுத்துவதற்காகவே தேவாலயங்களில் விக்கிரஹங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த ஹம்ஸயே 'சற்குரு' ரஹஸியம். இதுவே நான்கு மஹா வாக்கியங்களினுடைய ஸாரம். அஜபா காயத்திரி, மௌனம், நிர்க்குணம், ஆத்மத்தியானம் இதுவே ஆத்மராம தாரகம். இந்த ஹம்ஸ சூத்திரத்தைத் தெரிந்துகொண்டவர்களே நிஜமான பிராம்மணர்கள். இவர்களே பிரம்மஞானிகள்.

நாநாவிஷயங்களில் ஓடித்திரியும் ☞ மனதை (குரங்கை ஓடவிடாமல் ஒரு கயிற்றால் கட்டிகொண்டு வந்து ஓரிடத்தில் கட்டிவைத்தால் அது எங்கும் ஓடாமலிருப்பதுபோல்) இந்த ஹம்ஸ சூத்திரத்தால் (மூக்குத் துவாரங்களில் ஆடிக்கொண்டிருக்கும் சுவாசமென்னும் நூலால்) மனக் குரங்கைக் கட்டிவிட்டால் அம்மனம் எங்கும் ஓடாமல் நாபியிலேயே சும்மாய் உட்கார்ந்திருக்கும். இதைவிட வேறே எந்த உபாயங்களினாலும் இம்மனக் குரங்கு கட்டுப்பட்டு நிலைபடமாட்டா. இப்படிப்பட்ட மனம், உலகத்திலுள்ள மனிதர்களுக்கு சுத்தமாயும், அசுத்தமாயும் இருக்கின்றது. அதை இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

மனதின் சுபாவம்.

"ஓம், மநோ ஹி த்விவிதம் ப்ரோக்தம் ஶுத்தஞ்சா ஶுத்தமேவச
அஶுத்தம் காமஸங்கல்பம் ஶுத்தம் காமவிவர்ஜிதம்."

[ப்ரஹ்மபிந்துபநிஷத்.]

மனம், சுத்தம் அசுத்தம் என இரண்டு வகைப்படும். காம குரோத லோப மோஹ மத மச்சராதி சங்கல்பத்துடன் இருக்கும் மனம் அசுத்தமான மனம் இதற்கு வாசிட்டம் பிரமாணம்,

மெத்துகின்ற வாதனையை விட்டான் மேலா நல முளதாஞ்
சத்தினசத்தி னிடைநின்று சைதன் னியத்திற் சாட் டியத்தி
லொத்து நடுநின் றலைவதுவே யுள்ளமாகு மிவ் வுள்ளஞ் [கும்.
சித்தின் முயல்வாற் சித்தாகுஞ் செடத்தின் முயல்வாற் செடமா

காம குரோத லோப மோஹ மத மச்சராதி குணங்கள் நசித்து நல்ல குணங்கள், விஷய வைராக்கியம், ஆத்மாநாத்ம விவேகம் முதலானவைகள் உண்டாயிருக்கும் மனம் சுத்தமான மனம் என்று சொல்லப்படும். என்றால், ஆசையென்கிற பெரிய வாயையுடைய முதலையானது பிடித்திழுக்க அதனால், மரணமுண்டாய் சுழல்போல் சுழலுகின்றேமென் றறிபவர்கள், ஆசையுடைய அசுத்தமான மனதினால் நாசம்செய்வார்கள். என்றால், எந்த எண்ணம் உதித்தபோதிலும் உதிக்கவிடாமல் சும்மாயிருப்பதே சுத்தமான மனம். இதற்கு வாசிட்டம் பிரமாணம்,

பிறவிக் கடலிற் காதலெனும் பெருவாய் முதலை பிடித்தீர்க்க
விறவுச்சுழி பாற் சுழலு மவர்க்கிதய நாவா யெட்டாவா
மறமுற றுளத்தை யுளத்தாலே மாய்த்துப் பிறப்பில் வருத்தாமல்
லுறவுற்றனை நீ யுய்விப்பா யுயிர்க்குப் பிறரா லுய்வுண்டோ.

ஆதலால், இந்த மூன்று லோகமும் மனதின் சொரூபமாகவே யிருக்கின்றன. எப்படி யென்றால்,

சுரு || "மந எவ ஜகத்ஸர்வம் மந எவ மாஹா ரிபுஃ, மந ஏவஹி ஸம்ஸாரோ மந ஏவ ஜகத்த்ரயம். மந ஏவ மஹத் துஃகம் மந ஏவ ஜராதிகம், மந ஏவஹி காலஶ்ச மந ஏவ மலம் ததா. மந ஏவஹி ஸங்கல்போ மந ஏவஹி ஜிவகஃ, மந ஏவஹி சித்தஞ்ச மநோ ஹங்கார ஏவச. மந ஏவ மஹத்பந்தம் மநோந்தஃ கரணஞ்ச தத், மந ஏவஹி பூமிஶ்ச மந ஏவஹி தோயகம். மந ஏவஹி தேஜஶ்ச மந ஏவ மருந்மஹாந், மந ஏவஹி ஆகாஶம் மந ஏவஹி ஶப்தகம். ஸ்பர்ஶம் ரூபம் ரஸம் கந்தம் கோஶாஃ பஞ்ச மநோ பவஃ, ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்த்யாதி மநோமய மிதீரிதம். திக்பாலா வஸவோ ருத்ரா ஆதித்யாஶ்ச மநோமயஃ. த்ருஶ்யம் ஜடம் த்வம்த்வஜாத மஜ்ஞாநம்மாநஸம் ஸ்ம்ருதம். ஸங்கல்பமேவ யத்கிஞ்சித் தத்தந் நாஸ்தீதி நிஶ்சிநு. நாஸ்தி நாஸ்தி ஜகத் ஸர்வம் குருஶிஷ்யாதிகம் நஹி." [தேஜோபிந்தூபநிஷத்.]

ஒரே பொன்னனது நாநாவித நாமரூபங்களையுடைய நாநாவித ஆபரணங்களாவதுபோல, ஓர் மனமே நாநாவித நாமரூபங்களையுடைய பிரபஞ்ச ரூபமாய்க் காணப்படுகின்றது. அப்பேர்ப்பட்ட மனமே, நமக்குப் பெருத்த சத்துருவாயிருக்கின்றது. இதற்கு உபதேசகாண்ட படலமும், நெஞ்சறிவிளக்கம் பிரமாணம்;

பிரகிரு தியெனச் சொல்லப்படு மாயை
    யுமையிடத் தெம் பெருமா னென்னு
மரனை யாதரித் திருக்கும் பிரம
    ஞதியாக்கு மயக் களிப்ப தாகும்
விரவு பசும்பொன் னணிப்பால் வெவ்வே
    ருகுதல் போல மென்கலைக்கு நூல்போற்
பரவு பிரபஞ்ச முண்டாவதற் கதுவே
    காரண மாய்ப் பவித்த தாமே.

பசும்பொன்னி ஞம மென்றிற் பணதி வேருனற் போலே
விசும்பெலாங் கலந்த சோதி வெவ் வேற தெய்வமாகி
உசும்பி சீவாத்து மாக்க ளுடல்பல வான தன்மை
கசிந்துகண் ணுருகி நாகை லிங்கரைக் காண்பாய் நெஞ்சே.

இந்த மனமே சம்சாரரூபமாகவும்,ஜகத் த்ரயமாகவும் (மூன்று உலகங்களாகவும்) இருக்கின்றன. மனமே, துக்க சொரூபமாயிருக்கின்றது. அம்மனமே பால்ய பௌவன கௌமார (கிழத்தனமாய்) யிருக்கின்றது. அதுவே, கால (யமன்) ரூபமாகவும் ஆணுவ, மாய்கை, காம்யம் என மும்மலமாகவும் இருக்கின்றது. மனமே, சங்கல்ப விகல்பங்களாகவும் என்றால், நினைப்பு மரப்பாகவும் ஜீவரூபமாகவும் புத்தி சித்தம் அஹங்காரமாகவும் அந்தக்கரணங்களாகவும் இருக்கின்றது. மனமே பந்தமாயிருக்கின்றது. மனமே ஆகாசாதி பஞ்ச பூதங்களாவும், சப்த ஸ்பரிசாதி பஞ்சதன் மாத்திரைகளாகவும், அன்னமயாதி பஞ்சகோசங்களாகவும்,ஞானேந்திரிய கர்மேந்திரிய பஞ்சபிராணன்களாகவும், காம குரோத லோப மோஹ மத மச்சரங்களாகவும், சத்துவ ரஜ தமோ குணங்களாகவும் இருக்கின்றது. சாக்கிரத் சொப்பன சுழுப்த்தி என்னும் மூன்று அவஸ்தைகளாகவும் இருக்கின்றது. அஷ்டதிக்குப் பாலகர்களும், அஷ்ட வசுக்களும், ஏகாதச ருத்திரர்களும் துவாதசா தித்தியர்களும் மனதாகவே யிருக்கின்றன. காணப்படும் எல்லா வஸ்துக்களுக்கு மனதாகவே யிருக்கின்றன. மனமே நினைப்பு மறப்பாகவும், ஞான அஞ்ஞானங்களாகவும், குரு (ஞானம்) சிஷ்யன் (அஞ்ஞானங்)களாகவும், மாயை அவித்தையாகவும் இருக்கின்றன. நாமரூபங்களையுடைய இந்த சராசர பிரபஞ்சமெல்லாம் மனதாகவே யிருக்கின்றன.

சுரு|| " இதஶ்சேதஶ்ச ஸுவ்யக்ரம் வ்யர்த்தமே வாபிதாவதி
மனோ அாரதரம் யாதி க்ராமே கௌலேயகோ யதா."
[மஹோபநிஷத்.]

மனம், இது நல்லது இது கெட்டது என்று அறிந்து, கெட்டதை விட்டுவிட்டு நல்லதை யெடுத்துக்கொள்ளாமல்,

எல்லா வஸ்துக்களின்மீதும் ஆசையுடையதாய்க் கிராமத்தி லிருக்கும் நாயானது, யாதொரு வேலையுமில்லாமல் விருதா வாய் இங்கும் அங்கும் ஓடித்திரிவதுபோல், இந்த மன மானது, க்ஷணத்திற்குள்ளே சோர்க்க மத்ய பாதாள லோகம்வரையில் ஓடி அலைந்துத் திரிந்துகெட்டு வந்துவிடு கின்றது. இப்படி மனமானது, நான்கு பக்கங்களிலும் ஓடித் திரிவதனால், எல்லோருக்கும் ஜநநமரண துக்கங்கள் சம்பவித்துக்கொண்டே யிருக்கின்றன.

சுரு|| "ஸ்வயம் கல்பித தந்மாத்ரா ஜாலாப்யந்தர வர்திச
பரம் விவஶதாமேதி ஶ்ருங்கலாபத்த விம்ஹவத்."

[மஹோபநிஷத்.]

ஜீவன், மனோவசமாய் விஷயவாசனுலோலனாய் சிங்க மானது சங்கிலியினால் கட்டப்பட்டதுபோல், ஜீவன் சம் சாரத்தில் கட்டப்பட்டு, ஜநந மரண (இறப்பு பிறப்பு) என் னும் சமுத்திரத்தில் மூழ்கிக்கொண்டு சுக துக்கங்களை அநு பவித்துக்கொண்டேயிருந்து, இச்சரீரத்தைவிட்டு எப்படி ஓடிவிடுகின்றதென்றால்;

"தோதாஹை பஞ்ஜர்மே தேக்! கீதா போல் போல்கோ உஸ்மே கைஸா ஸோதாதேச்! ஜாதா உப்பர் உட்கர் தேக்! தோதா வாத்ஜான் பராபர் போகுதபார் ஜீவா."

இந்த தூல சரீரத்தில் எழுபத்தீ ராயிரம் நாடிக ளுண்டு. அதில், பதினேழு தத்துவங்களையுடைய சூட்சும சரீரம் ஒன்று இருக்கின்றது; அது யாதெனில், மநம் புத்தி இரண்டு, சூட்சும ஞானேந்திரியங்கள் ஐந்து, சூட்சும கர் மேந்திரியங்கள் ஐந்து, பிராணவாயுக்கள் ஐந்து, இந்தப் பதினேழு தத்துவங்கள் கூடினதே சூட்சும சரீரம். இந்த சூட்சும சரீரத்திற்குள் ஜீவாத்மா என்னும் கிளியானது நடுநாயகனாயிருந்துகொண்டு, கீதைகளையும் வேத சாஸ்தி

ரங்களையும் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் அந்தக் கிளி என்னும் ஜீவாத்மா எப்படித் தூங்கிக்கொண்டிருக்கின்றது பார்! இப்படித் தூங்கிங்கொண்டிருந்து அந்தத் தூலசரீரத்தைவிட்டுவிட்டு, (மரணமடைந்தது) அந்தக் கிளியாகிய ஜீவாத்வா சூட்சும சரீரத்துடன் (கண்களுக்குக் காணாத சரீரத்துடன்) ஆகாசமார்க்கமாய் எகிறிச்சென்று அவனவன்செய்த கர்மானுசாரமாய் அந்தந்த தாய் கர்ப்பத்திலிருக்கும் தூலசரீரத்தில் போய்ச்சேர, அந்தந்தத் தாயானவள் மூச்சு உள்ளுக் கிழுக்கும்போது அம் மூச்சுடன், முன்சொல்லிய சூட்சும சரீரங்களும் சேர்ந்து, உள்ளுக்குச்சென்று கர்ப்பத்திலிருக்கும் பிண்டத்தின் இருதய கமலமத்தியில் ஏழாம்மாதம் போய்ச் சேர்ந்து, பிறகு சிசுவாய்ப் பிறக்கின்றது. இதுவிஷயம் முன்னும் சொல்லி யிருக்கின்றோம்: மறந்துவிடுவீர்க ளென்று மறுமுறையும் சொன்னோம்.

நாட்டுவார் சித்தரெல்லாம் பேதமாக
நலம்போலே சாத்திரங்கள் கட்டினார்கள்
பூட்டியே மனிதரெல்லாம் நூலைப்பார்த்துப்
பூரணமாய் அண்டமதைப் பாராமற்றான்
காட்டிலே திரிந்தலைந்த மானைப்போலே
கபடமாய் வாய்ஞானம் பேசுவார்கள்
கூட்டிலே அடைத்திருக்கும் குயிலைப்பாரார்
கூறாத மந்திரத்தின் குறியைப்பாரே.

இதற்குத் திருஷ்டாந்தம் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம் 2, சுலோகம் 11-ல், ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லுகின்றார்;

அசோச்யா நந்வசோசஸ்த்வம் ப்ரஜ்ஞாவாதாம்ஸ்ச பாஷஸே
கதாஸூந் நகதாஸூம்ஸ்ச நாநுசோசந்தி பண்டிதா:.

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுநா! உன் விஷயத்தைப் பார்க்குமளவில் மிகவும் விசித்திரமா யிருக்கின்றது. எப் படி யென்றால், நீ சொல்லுகின்ற வார்த்தைகளோ சகல தர்மங்களையும் அறிந்த பண்டிதர்களுடைய வார்த்தை களைப்போல் இருக்கின்றன. துக்கிக்கப்படாத பீஷ்மத் துரோணர்களின் மரணத்தைக் குறித்துத் துக்கிப்பதைப் பார்த்தால் எந்த தர்மங்களையும் நீ அறியாத பாமரனைப் போல் காணப்படுகின்றாய். வார்த்தையிலோ விவேகிகளைப் போல் பேசுகின்றாய்;

அஃதெப்படி என்றால், பீஷ்மத் துரோணர்கள் மிக வும் பெரியோர்களென்றும், பூஜ்ஜியர்களென்றும் இவர் களைக் கொல்வது தர்மமல்லவென்றும் சொன்னாயல்லவா? அவர்கள், உனது சத்துருக்களாகிய கௌரவ சைன்னி யத்திற்கு அதிபதிகளாயிருந்து இப்பொழுது, உங்களுடன் யுத்தம் செய்யமுயன்று, ஆயுதபாணிகளாய் வந்திருக்கின் றார்களல்லவா? யுத்தத்தில் ஆயுதபாணியாய் வந்தவன் பிரம்மஞான சம்பன்னனா யிருந்தபோதிலும், அவனைக் கொல்வதனால் பாபமில்லையென்று தர்ம சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. இப்பொழுது யுத்தத்தில் உன்னைக் கொல்வதற்கு ஆயுதபாணிகளாய் வந்திருக்கும் பீஷ்மத் துரோணர்கள் எப்பேர்ப்பட்ட மஹாநுபாவர்களா யிருந்த போதிலும் அவர்களைக் கொல்லுவது அதர்மமென்று நினைப்பது வியர்த்தமேயல்லவா?

அர்ஜுநன்:—ஓ கிருஷ்ணமூர்த்தியே! இவர்களைக் கொல்லுவது அதர்மமல்லவென்று சொன்னீரல்லவா? இவ் விருவர்களிலும் பீஷ்மருடைய விஷயம் இருக்கட் டும். துரோணாசாரியர் பிராமணோத்தமரல்லவா? இவர் சாமான்னிய பிராமணரா யிருந்தபோதிலும் இவரைக் கொல்வது பாபமாயிருக்க, விப்ரோத்தமரும் எங்கள்

குருவுமாகிய இவரைக் கொல்லுவது எங்களுக்குப் பாப மல்லவா?

கிருஷ்ணன்—ஓ ஹோ! நீ அவ்வாருகவோ எண்ணு கின்ருய்? அதிலுள்ள தர்ம சூக்ஷ்மத்தை நீ அறிய வில்லையே! நீ சொல்லியதுபோல் பிராமணனை கொல்லு வது பாபகாரியமே! சாந்தமே குடிகொண்டுள்ள பிராம ணனு யிருந்தாலும், அவன் ஆயுதங்களைத் தரித்து யுத்த களத்தில்வந்து நின்றுவிட்டால், அவனைக் கொல்லுவதே தர்மமென்று தர்ம சாஸ்திரங்களும் வேதங்களும் முறை யிடுகின்றன. ஆதலால் இப்பொழுது துரோணசாரியர் ஆயுதபாணியாய் உன்னுடன் யுத்தம் செய்ய வந்திருக் கின்ருரல்லவா? அப்படிப்பட்டவரைக் கொல்வது அதர்ம மல்ல.

அர்ஜுனன்:—ஐயா கிருஷ்ணமூர்த்தியே! இப்பொ ழுது நீர் சொல்லியதை யோசிக்குமளவில் இந்த பீஷ்மத் துரோணர்களைக் கொல்லுவது பாபகாரியமல்ல வென்று தோன்றுகின்றது. அப்படியிருக்க, துஷ்டர்களாகிய துர் யோதனுதிகளைக் கொல்வதனுல் பாபம் உண்டாகுமென்று எப்படி யோசிக்கலாம்? ஆயினும் இப்பொழுது எனக்கு உண்டாயிருக்கும் துக்கத்திற்கு அதுவே முக்கியகாரண மல்ல. எனக்கு குருக்களாயும் பந்துக்களாயும் இருக்கப் பட்டவர்களைக் கொல்வதற்கு இஷ்டமில்லாமல் விபசனப் படுகின்றேன.

கிருஷ்ணன்:—அப்படி வியசனப்படுவது அறியாத் தன்மையினுலேயே யன்றி வேறல்ல. நீ ஆத்மாநாத்ம விவேகம் அறியாதவனு யிருப்பதுபோல் காணப்படுகின் ருய், அப்படி ஆத்மாநாத்மா விவேகமுடையவர்கள் ஜீவித் திருக்கப்பட்டவர்களைக் குறித்தேனும், இறந்தவர்களைக் குறித்தேனும் இப்படி உன்னைப்போல் வியசனப்பட

மாட்டார்கள். அஃதெப்படியென்றால், சொல்லுகின்றேன் கேள்.

இதுவரையில் நீ சொல்லிவந்ததில் குல க்ஷயத்திற்குக் காரணபூதர்கள் நரலோகத்திற்குப் போவார்களென்றும், துர்யோதனாதிகள் மித்ர துரோகமும் பாபகாரியங்களும் செய்ததனால் அவர்களுக்கு நரக பிராப்தி உண்டாகுமென்றும், அவர்களைக் கொல்லாமலிருப்பதனால் உனக்கு புண்ணியலோகம் உண்டாகுமென்றும் இவை முதலான சங்கதிகளைச் சொல்லிக்கொண்டு வந்தாயல்லவா? இவர்கள் யுத்த களத்தில் இறந்தபிறகு இவர்களின் ஜீவன், புண்ணிய லோகத்திற்குகேனும் பாபலோகத்திற்கேனும் எப்படிப் போகும்?

அர்ஜுனன்:—இவர்களின் சரீரம் மாத்திரம் இறக்கின்றதேயொழிய ஜீவன் இறப்பதில்லை. இவ்விடத்தில் இந்த தேகத்தை விட்டபோது இவர்களின் ஜீவன் புண்ணிய லோகத்திற்கேனும் பாப லோகத்திற்கேனும் போகின்றது.

கிருஷ்ணன்:—ஆனால் இந்த தேகம் வேறு ஜீவன் வேறு என்றல்லவோ உனது அபிப்பிராயம்.

அர்ஜுனன்:—ஆம். இந்த தேகம் வேறு,ஜீவன் வேறேயாம். தேகம் வீட்டைப்போன்றது; ஜீவன் வீட்டில் குடியிருப்பவனைப்போன்றது. ஒரு வீட்டில் குடியிருப்பவன் அந்த வீட்டைவிட்டு வேறு வீட்டிற்கு எப்படிப் போகின்றானோ அதுபோல் இந்த ஜீவன் இத்தேகத்தை விட்டு மற்றொரு தேகத்தில் போய் பிரவேசிக்கின்றது.

கிருஷ்ணன்:—நல்லது அப்படியானால், இந்த யுத்த களத்தில் பீஷ்மத் துரோணர்கள் இறந்தால் இவர்களின் ஜீவன் எப்படியாகும்?

அர்ஜுநன்:—அவர்களின் ஜீவன் பறலோகத்திற்கே போகும்.

கிருஷ்ணன் :—பரலோக மென்றால், புண்ணியலோகமா ? அல்லது பாபலோகமா ?

அர்ஜுநன்:—பரலோகமென்பது புண்ணியலோகமேயாகும். அவர்கள் எப்பொழுதும் புண்ணிய கார்யங்களைச் செய்த மஹான்களே யொழிய பாபகார்யங்களைச் செய்தவர்களல்லர் ; ஆதலால், அவர்களுக்கு சொற்காதி புண்ணிய லோகமே லபிக்குமென்று தோன்றுகின்றது.

கிருஷ்ணன் :—நல்லது, அவர்களின் ஜீவன் புண்ணிய லோகத்தை அடையுமல்லவா ? அப்படி அவ்விடம் சென்ற பிறகு அவர்கள் இவ்வுலகில் அனுபவித்த சுகத்தைவிட அதிக சுகத்தை அனுபவிப்பார்களா ? அல்லது கஷ்ட தசையை அனுபவிப்பார்களா ?

அர்ஜுநன்:—அவர்கள் இவ்விடத்தில் அனுபவித்த சுகத்தைவிட அதிக சுகத்தையே அனுபவிப்பார்களேயன்றி துக்கத்தை அனுபவிக்கமாட்டார்களென்றே தோன்றுகின்றது.

கிருஷ்ணன்:—அவர்கள் அவ்விடத்தில் மோக்ஷத்தை அடையத்தக்க யோக்கியதை யுடையவர்களாயிருந்து, எப்பொழுதும் மோக்ஷ சாம்ராஜ்ஜிய பதவியை அனுபவிக்கின்றார்க ளல்லவா ? அப்படியிராவிட்டால் அவர்களின் புண்ணியத்திற்குத்தக்க சௌக்கியத்தை அனுபவித்தபிறகு 'க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி' என்னும் பிரமாண ரீதியாய் புண்ணியம் முடிந்தவுடன் அவர்கள் மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரவேண்டுமல்லவா ? அப்பொழுது, அவர்களுக்கு இதைவிட மேலாகிய ஜன்மம் உண்டாகுமென்று எண்ணுகின்றாயா ? அல்லது தாழ்ந்த ஜன்மம் உண்டாகுமென்று எண்ணுகின்றாயா ?

அர்ஜுனன்:—அவர்கள் புண்ணிய புருஷர்களாதலால் அவர்களுக்கு இதைவிட மேலாகிய ஜன்மமே உண்டாகுமென்று தோன்றுகின்றது.

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுனா! இப்பொழுது உன் வார்த்தையால் என்ன ஏற்படுகின்றதென்றால், நீ இப்பொழுது யாரைக்குறித்து வியசனப்படுகின்றாயோ அப்படிப்பட்ட பீஷ்மத் துரோணர்கள் இந்த யுத்தகளத்தில் மரணமடைந்தால் பரலோகத்தில் இதைவிட மேலாகிய சுகத்தை அனுபவிப்பார்களென்றும், அவர்கள் மறுபடியும் இவ்வுலகில் ஜன்மிக்கவேண்டியதாய் நேரிட்டால் இதைவிட மேலான ஜன்மம் எடுப்பார்களென்று ஏற்படுகின்றதல்லவா? அப்படிப்பட்ட இவர்களைக் குறித்து நீ வியசனப்படுவதேன்? இது அப்படியிருக்கட்டும். உன்னுடைய சத்துருக்களாகிய துர்யோதனாதிகள் மரணமடைந்தால் அவர்களுக்குப் பரலோகத்தில் எப்படிப்பட்ட கதியுண்டாகுமென்று எண்ணுகின்றாய்!

அர்ஜுனன்:—அவர்கள் இராஜ்ஜியத்தை அபகரித்தவர்களும், மித்திரத் துரோஹிகளும் பாபாத்மாக்களுமாய் இருப்பதனால், அவர்களுக்கு அவ்விடம் நரகலோகமே சம்பவிக்கும். மறுபடியும் அவர்கள் இவ்வுலகில் ஜன்மிக்க வேண்டியதாய் நேரிட்டால், இதைவிட தாழ்ந்த ஜன்மமே உண்டாகுமென்று தோன்றுகின்றது.

கிருஷ்ணன்:—அவர்களுக்கு அப்படி உண்டாவதனால் உனக்கு ஏதாகிலும் வியசனமுண்டாகுமா?

அர்ஜுனன்:—அவர்கள் எனக்கு துரோகம் செய்தவர்களாதலால் அவர்களுக்குச் சம்பவிக்கும் துக்ககதியைக் குறித்து எனக்கு சந்தோஷத்தை உண்டாக்குமேயொழிய வியசனமுண்டாகமாட்டா.

கிருஷ்ணன்:—நல்லது, நீ யாரைக்குறித்து இப்பொழுது வியசனப்படுகின்றாய் ?

அர்ஜுநன்:—பீஷ்மத் துரோணாதிகள் மரணமடைந்தால் அவர்களுக்கு நல்லகதியே உண்டாகும். அந்த விஷயத்தில், எனக்கு வியசனம் ஒன்றுமேயில்லை. ஆனால், அவர்கள் நமது எதிரில் இல்லாமல் போகின்றார்களென்றே வியசயனப்படுகின்றேன் ?

"அர்ஜுநன் மோஹத்தினால் ஆசாரியர்களையும் பந்துக்களையும் எப்படிக் கொல்லுகின்றதென்பதாய் துக்கப்படுகின்றானல்லவா ? அந்தத் துக்கத்தை போக்கடிப்பதற்காக இனிசொல்லப்போகும் சுலோகத்தில் பகவானானவர் தத்வோபதேசம் செய்யப்போகின்றார்" ஆதலால், இதற்குமுன் விஷயங்களை ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 2, சுலோகம் 12, முதல் பார்க்கக் கடவீர்களாக.

சுலோ || வாயுநா ஜாயதே மேகః புநஸ்தேநைவ லீயதே
மநஸா கல்ப்யதே பந்தோ மோக்ஷஸ்தேநைவ கல்ப்யதே.

நிர்மலமான ஆகாயத்தில் மேகங்கள் உண்டாவதற்கும், மறுபடியும் அந்த மேகங்கள் இல்லாமற் போவதற்கும் வாயுவே காரணமாயிருப்பதுபோல், மனிதர்களுக்குப் பந்தம் உண்டாவதற்கும், மறுபடியும் அந்த பந்தம் நசித்து மோக்ஷம் உண்டாவதற்கும் மனதே காரணமாயிருக்கின்றது. என்றால், மனம் சலித்தால் உலகமாகும். சலிக்காவிட்டால் மோக்ஷமாகும். இந்த மனதிற்கு நீங்காத சலனம் (அசைவு) எப்போதும் இருந்துகொண்டிருப்பதே மாயை எனப்படும். அச்சலனம் நின்றால் மாயையில்லை. எல்லோருடைய மனோசலனத்தை நிறுத்திவிட இந்த ஜீவப்பிரமைக்ய வேதாந்த ரஹஸ்யம் ஒன்றே போதுமானதாயிருக்கின்றது. இதற்கு வாசிட்டம் பிரமாணம்,

அலையுமந்த மன மூலகா மலைவு போகின் மனங்கெடுமின்
நிலையே தவமு நூற் கருத்தும் நிமலவீடுந் துணி பொருளுந்
துலைவி லலைவே மன மாயை தொடர் வாதனையு மதன்பெயரா
மலையு மனமு மதுவதனை மாறு விசா ரத்தான் மாய்ப்பாய்.

இந்த ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்ய விசாரணையினால், மாயையென்னும் மனதை நாசம்செய்யவேண்டும். இந்த மனம் நசித்தால், உலகத்தையெல்லாம் அழிக்கத்தக்க சுழல்காற்றுவந்தாலும், சமுத்திரம் பொங்கி பிரளயம் வந்தாலும், பூமி உருகும்படி எரிகின்ற பன்னிரண்டு சூர்யர்கள் வந்தாலும் மனதிற்குத் துன்பமில்லை. நானென்று அஹங்காரங் கொண்டிருக்கும் மனோவாசனையை நசிக்கச் செய்தால், ஆணவம் மாய்கை காம்யம் ஆகிய இம்மூவரும், வலைக்குள் அகப்பட்ட பக்ஷிபோல் இரப்பார்கள். இதற்கு வாசிட்டம் பிரமாணம்.

பெருகத்திரண்ட முகிலெல்லாம் பெருங் காற்றாலே யொருவுதல்
போல்வருகற்பனை நாசத்தாலே மனம்போயிறக்கு மனமிறந்தாற்
பொரு கற்பாந்த மாருதமும் பொங்குடலும் புவியனைத்து
முருகக்சுடு பன்னிரு கதிரு மொருகால்வரினு மிடருண்டோ.

நிலைபெறும்படி நானெனும் வாதனை நின்றால்
வலைபுகுந்த புள்ளாமென மூவரு மடிவர்
கொலைசெயற் கெளிதாசையே யுயிர்கெலாங் கூற்றாய்
தொலைவிறுன்பமா நிராசையே துன்பமி லின்பம்.

சுரு || யதோ நிர்விஷய ஸ்யாஸ்ய மநஸோ முக்திரிஷ்யதே
தஸ்மாந் நிர்விஷயம் நித்யம் மநஃ கார்யம் முமுக்ஷுணா.

[ப்ரஹ்ம பிந்துபநிஷத்.]

மனம், எப்பொழுது விஷய சம்பந்தமில்லாமலிருக்கின்றதோ, அதாவது, புத்திர மித்திர களத்திர கிருக தன தாந்யாதி சம்பத்துகளும் "இது எனது" "இது எனது" என்னும் "மம" காரமும் இவைகளுக்கெல்லாம் நானே

கர்த்தனென்னும் "அஹங்" காரமுமாகிய இவ்விரண்டும், பூர்வ ஜன்மங்களின் வாசனையினால் ஜீவனுடன் கூட அணு சொரூபமாய் (கண்களுக்குக்காணாமல்) தாயின் கர்ப்பத்தில் பிரவேசித்து சிசுவாய்ப் பிறந்தவுடன், நான் எனது யென்னும் அஹங்கார மமகாரங்கள் சிசுவின் கர்ப்பத்தி லேயே அடங்கியிருந்து, பிறகு சிசுவானது விருத்தி அடையவடைய முன் சொல்லிய "நான்" "எனது" என்னும் அஹங்காரங்களும், ஆசாபாசங்களும் சிசுவுடன் கூடவே விருத்தியாய்க்கொண்டே வருகின்றது. ஆதலால், நாமெல்லோரும் சிறுபிள்ளைகளா யிருந்தபோது, எந்த ஆசாபாசங்களும் நமக்கு இல்லாமலிருந்தன. பிறகு நாம் விருத்தி யடையவடைய அந்த ஆசாபாசங்களும் நம்முடன் கூடவே விருத்தியாகிக்கொண்டே வந்துவிட்டன. இவைகள் யாவும் மனதிற்கு இல்லாமல் எப்பொழுது நசித்து விடுகின்றதோ, அப்பொழுதே ஜீவன் மோக்ஷத்தை அடைகின்றது; ஆதலால், மோக்ஷாபேக்ஷை உடையவர்க ளெல்லோரும் மனதை விஷய சம்பந்த மில்லாதபடிக்குப் பரிசுத்தமாகச் செய்துகொண்டால் யோகியாவான். இதற்கு தேவிகாலோத்திரம் பிரமாணம்;

வளியென மறுகுஞ் சித்த
நெஞ்சிலே மருவி நிற்கும்
தெளிவுற நடுவுகீழ் மேற்
செலாவகை நிறுத்திக் கொண்டால்
ஒளியுறு முள்ள மொன்றும்
பாவியா துறவே நோக்கி
எளிய வப்பொருள்மேல் பற்றற்
றிருப்பவன் யோகி யாவன்.

அதாவது, இருதயத்தில் மேற்சொல்லிய காமக்குரோதாதி அழுக்குகள் இல்லாமற்செய்து, மனதை பரிசுத்த

மான நிலையில் நிறுத்தி வைத்தால் தனது நிஜசொரூபத்தை அடையலாம். அப்படி மனது பரிசுத்தமாகாவிடில் அந்த மனதின் கதி என்ன ஆகின்றதென்றால்,

"மநஸா பாவ்யமாநோஹி தேஹதாம் யாதி தேஹகஃ
தேஹவாஸநயா முக்தோ தேஹதர்மைர் ந லிப்யதே".
[மஹோபநிஷத்.]

பிராண பிரயாணகாலத்தில் மனமானது எதை எதை நினைத்து பிராணனை விடுகின்றதோ, ஜீவனுக்கு அந்தந்த ஜன்மங்கள் உண்டாகின்றன. எப்படியென்றால், சதா பார்யாளை நினைத்துக் கொண்டிருந்தால் பிராணன் போகும் போது சித்திர குப்தம் (சித்திரம்-படம், குப்தம்-ரகசியம்) என்றால், ரகசியமான படம் தோன்றும். அச்சமயத்தில் கண்களைத் திறந்து கொண்டிருந்தாலும் அல்லது மூடிக் கொண்டிருந்தாலும், கண்களுக்கு எதிரில் காணப்படும் சித்திரகுப்த படத்தில் பாரியாளின் உருவம் தோன்றும் படி, நமக்குள் சாக்ஷியாய் இருக்கப்பட்ட ஜீவாத்மா காட்டுகின்றான். இதற்கு தேவிகா லோத்திரம், கைவல்யம் பிரமாணம்;

எந்த வாருயிர் யாதோர் பொருளினைச்
சிந்தையாற் பற்றிக் காரியஞ் செய்திடின்
அந்த யோனியதா மென் றறிவினால்
பந்தயில் பொருள் பற்றுத றக்கதே.

சடமதாகிய தியான மெய்யாகிய சர்வ முத்தியை நல்கும்
திடமான தெப்படியெனி லவரவர் தியானமே பிறப் பாகும் [தா
உடலமாசையாற் றியானிக்கிற் றியானித்தவுடல்க ளாகுவார் மைந்
தொடர்பவக்கெடச் சொரூபமே தியானிக்கிற் சொரூபமாகுவர்
[மெய்யே.

ஆத்மா மாயா சக்தியினால் பந்தப்பட்டு சம்சாரத்தை அனுபவிக்கின்றான் என்பதில் இப்பாடல்களை மேலும் சொல்

லப்போகின்றோம், அன்றியும், "பரமாத்மா சரீரத்தில் குடியிருந்து கிளம்பி விடுதல்" என்பதில் இதுவிஷயம் விசேஷமாய்ச் சொல்வோம்.

யைஷா ஸ்வபாவாபிமதம் ஸ்வயம் ஸங்கல்ப்ய தாவதி
சிச்சைத்யம் ஸ்வய மம்லாநம் மாநநாந்மந உச்யதே:"

[மஹோபநிஷத்.]

இந்த மனோவாசனை, தனக்கிஷ்டமான விஷயங்களை சங்கல்பித்துக்கொண்டு அந்த விஷயங்களிலேயே விசேஷமாய் ஓடிக்கொண் டிருக்கும். இப்படி மனம் சற்றாகிலும் வாடாமல், நாளுக்குநாள் விருத்தி அடைந்து கொண்டேயிருக்கும். பிரபஞ்ச விஷயத்தையும், பிரபஞ்ச விஷயத்தை அறியும்படியான சுத்த அறிவாகிய பரப் பிரம்மத்தையும் ஸ்மரித்துக் கொண்டிருப்பதனால், இதற்கு மனம் என்று பெயர் வந்தது.

"ஸங்கல்பநம் மநோ வித்தி ஸங்கல்ப தந்ந வித்யதே
யத்ர ஸங்கல்பநம் தத்ர மநோஸ்தீ த்யவகம்யதாம்."

[மஹோபநிஷத்]

சங்கல்பத்தையே (எண்ணங்களையே), மனம் என்று சொல்லப்படும். சங்கல்பத்தைவிட மனம் வேறானதல்ல. சங்கல்பம் எங்கு பிறக்கின்றதோ அங்கு மனம் இருக்கிறதென்று, கண்டிதமாய்த் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த மனம் உதிக்குமிடம் நான்முகன் உதித்த விடமேன்று முன்சொல்லி யிருக்கின்றோம். அந்த இடத்தை ஆகாச ரூபமாய்ப் பார்த்தால் அதாவது,

" எங்குஞ் சிவமே இரண்டற்று சிற்குநெஞ்சே
தங்கும் சுகசீ சலியாதே—அங்கிங்கென்
றெண்ணாதே யாழிவிறந்து பிறந்துழலப்
பண்ணாதே யானும்பரம்."

என்னும் ஸ்ரீ தாயுமானவர் வாக்கியரீதியாய், எங்கும் ஓடித்திரியும் மனதை ஓடவிடாமல், முன் சொல்லியது போல் நிறுத்தினால், "தானே தானு" கின்றான். அதாவது எங்கும் நிறைந்திருக்கும் பரிபூரண பரப் பிரம்மத்தில் தான் ஐக்கியமாகின்றான்.

"விரஞ்சிரூபாந் மநஸஃ கல்பிதத்வாத் ஜகத் ஸ்திதேஃ
தாவத் ஸ்திதிரியம் ப்ரோக்தா தந்நாஸே நாஸமாப்நுயாத்."
[மஹோபநிஷத்.]

சங்கல்ப ரூபமாயிருக்கும் மனதினாலேயே, இந்த பிரபஞ்சம் கற்பிக்கப்பட்டது; அவ்விதமான மனதே, சதுர்முக பிரம தேவனென்றும், சிருஷ்டிக்குக் காரண கர்த்தனென்றும் சொல்லப்படும்.

"சித்தமேவஹி ஸம்ஸாரோ ராகாதி க்லேஸதூஷிதம்
ததேவதைர்வி நிர்முக்தம் பவாந்த இதிகத்யதே." [மஹோ.]

மனதே, ராகத்துவேஷ காமக்குரோதாதி விருத்திகளாகவும், ஈஷணத் திரயங்களாகவும் இருக்கின்றது. இவ்வித விகாரமுடைய மனதே, மஹா சம்சாரமாயிருக்கின்றது. ராகத்துவேஷ காமக் குரோதாதிகள், ஈஷணத் திரயங்கள் முதலானவைகளை பிரம்மஞானத்தினால் நசிக்கச் செய்வதே மநோ நாசனமென்று சொல்லப்படும். அது தான் மோக்ஷம்.

சொல்லுகின்றேன் என்மகனே மாணகேளு
சூட்சமெல்லா மவனுடைய சூட்சமல்லால்
வெல்லுதற்கு வேறுமொரு விதமுங்காணேம்
வெட்டவெளி யோன்றநிசம் வெளியேமைந்தா
அல்லுகின்ற ஆன்மாவே ஒன்றேதெய்வம்
அவனியிலே தெய்வமுந்தா னேயாயில்லை
தள்ளுகிற கருவிகளைத் தள்ளினக்கால்
தானவனைத் தன்னுளே அறியலாமே.

"த்ஸ்ய சஞ்சலதா யைஷாத்வ வித்யா வாஸநாத்மிகா
வாசநா பரநாந் ந்மீதாம் விசாரேண விநாஶய.

[மஹோபநிஷத்.]

அலையும் மனதே, அவித்தியா (அஞ்ஞான) வாசனை யென்று சொல்லப்படும். அதை ஆத்ம விசாரணையினுல் நாசம் செய்யவேண்டும்.

'நதநாந்யுப குர்வந்தி நமித்ராணி நபாந்தவாஃ
நகாயக்லேஶ வைதுர்யம் நதீர்த்தா யதநாஸ்ரயஃ
கேவலம் தந்மநோ மாத்ர ஜயேனு ஸாத்யதே பதம்."

[மஹோபநிஷத்.]

குருதே கங்கா ஸாகரகமனம் வ்ரத பரிபாலன மதவா தானம்
ஞான விஹீனே ஸர்வமனேன முக்தர் ந பவதி ஜன்மஶதேன.

[ஸ்ரீ சங்கராசாரியர்.]

பிராண பிரயாணகாலத்தில், தனம் மித்திரர்கள் பந்துக்கள் முதலானவர்கள் உபகாரம் செய்யமாட்டார்கள். சரீர கஷ்டத்துட னிருக்கும் ஏகாதசி முதலிய உபவாசங்கள், புண்ணிய தீர்த்தயாத்திரை, தேவாலய தரிசநம், பிரம்மசரியம், சந்நியாசம் முதலானவைகளினுல் மோக்ஷம் உண்டாகமாட்டா.

ஆனல், சஞ்சல ரூபமாயிருக்கும் மனதை ஜயித்தால், மோக்ஷத்தை அடையலாம். ஆதலால், எல்லா ஜயத்தை விட மனேஜயமே சிரேஷ்டமானது.

பந்தம்பரியினுடையவும், திருவண்ணுமலையி னுடையவும் அந்தரார்த்தம்.

காணப்பா கோவிலென்றுந் தீர்த்தமென்றுங்
காசினியிற் செம்பால் விக்கிரகமென்றும்
பேணப்பா உலகத்தோர் தங்களைத்தான்
பேய்போல திரிந்தலையப் படைத்தாரீசன்
நாணப்பா தேவதையைப் பணிந்திட்டாலும்
நதிகளெல்லாந் தேடிப்போய் முழுகினாலும்
ஊணப்பா உள்வீட்டுக் குள்ளிருக்கும்
ஒளியுள்ள வத்துவைத்தா னறிந்துகாணே.

ஓ சகோதரர்களே! எங்குள்ள தீர்த்தங்களுக்குச் சென்று, ஸ்நாநம் செய்து அங்குள்ள ஆலயங்களில் இருக்கும் விக்கிரகங்களை தரிசித்தபோதிலும், மோக்ஷம் (விடுதலை) அடையமாட்டார்கள். விடுதலை என்றால், சகல பந்தத்தி (ஆசையி)லிருந்து விடுபடுதல். இதற்கோர் திருஷ்டாந்தம் சொல்லுகின்றோம் கேளுங்கள்,

சென்னை திருஒற்றியூரில் பிரதி வருஷம் மாசிமாதம் நடந்தேறிவரும் உச்சவத்தில் பத்தாவது நாளில் பந்தம்பரி உச்சவம் நடக்கின்றதென்றும் அதைப் பார்க்கவேண்டுமென்றும் எண்ணங்கொண்டு அனேக ஸ்திரீ புருஷர்கள் ஆயிரக்கணக்காய் கூட்டங்கூடி அங்குசென்று, பந்தம்பரி அந்தரார்த்தம் (இரகசிய அர்த்தம்) தெரிந்துகொள்ளாமல் பந்தம்பரி என்னும் உச்சவத்தைப் பார்த்து கட்டுச்சாதங்களைச் சாப்பிட்டு புதுப்பாண்டம், வாங்கிக்கொண்டு வருகின்றார்கள். இதன் அந்தரார்த்தம் என்னவென்றால், இந்நூலில் 66-முதல், 68-பக்கம் வரையில், சொல்லியிருக்கும் காம, குரோத, லோப, மோஹ, மத, மச்சர, டம்ப, தர்ப,

சரிஷை, அரூயை என்னும் பத்து பந்தங்களையும் பறி (கொள்ளை) கொடுக்கவேண்டுமென்பதேயாம். இந்த பத்து பந்தங்களையும் கொள்ளை கொடுத்தால் மோக்ஷமென்னும் பதவியை அடையலா மென்று காட்டுவதற்காக, திரு ஒற்றியூரில் ஒன்பது தினங்கள் உச்சவமாய்ச் செய்து காட்டி பத்தாவது தினத்தில், நீங்கள் எல்லோரும் உங்களில் இருக்கும் சகல பந்தங்களையும் கொள்ளைக் கொடுத்து விடுங்கள் என்று காட்டுவதற்காக பந்தம்பறி (பந்தம்-ஆசை, பறி-கொள்ளை) அதாவது,சகல ஆசைகளையும் கொள்ளைக் கொடுங்கள் என்பதேயாம். இவ்விதமாய் பந்தம்பறி என்னும் உச்சவம் பகவானல் செய்து காட்டும்படி பூர்வீக பெரியோர்களால், ஆலயங்களில் விக்கிரக மூலமாய் இப்படிப்பட்ட உச்சவம் செய்ய ஏற்படுத்தினர்கள். அப்படியிருக்க இப்போதிருக்கும் பாமரஜனங்கள், இதன் ரகஸ்யாாத்தம் தெரிந்து கொள்ளாமல் பந்தம்பறி என்பதற்குப் பதிலாய் பந்தமெரி என்று சொல்லி அங்குமிங்குமாய் ஓடிக் கெட்டலைந்து பாழாகின்றார்கள். அன்றியும்,

இனி திருவண்ணமலையில் நடந்தேறிவரும் கார்த்திகை தீபத்தின் இரகஸ்யார்த்தம் சொல்லுகின்றோம் கேளுங்கள். திருவண்ணுமலையின்மீது பெரும் விளக்கேற்றி அதை படுதாவினல் மறைத்து வைக்கின்றார்கள். பிறகு மாலை, ஐந்தலர மணிக்குமேல் கிருத்திகை நக்ஷத்திரம் பிறந்தவுடன் ஆலயத்திற்குள் அலங்கரித்து வைத்திருக்கும் ஈசுவர விக்கிரகத்தைச் சுமந்து வெளிப் பிராகாரத்தில் கொண்டுவந்தவுடன், ஆகாசமார்க்கமாய் எகிரி ஓடும் பாணத்தைக் கொளுத்தி மேற்படி தீபத்திற்கு நேராய் விட்டவுடன், அதுவரையில் மலையின்மீது படுதாவால் மறைத்து வைத்திருக்கும் தீபத்தினிடம் தயாராய்க் கார்த்துக்கொண்டிருக்கும் புருஷன், ஆகாசபாணத்தைப்

பார்த்தவுடன் மேற்படி திரையை எடுத்து விடுகின்முன். திரை எடுத்தவுடன், அதுவரையில் ஆலயத்திற்குள் ஒரு வரோடொருவர் இடியுண்டு மிதிபட்டுக் காத்திருந்த ஜனங்க ளெல்லோரும், இருகைகளையும் குவித்து சிரசிற்கு மேல் தூக்கி ஹரஹர! ஹரஹர!! ஹரஹர!!! வென்று எல்லோரும் ஒரே சப்தமாய்க் கூச்சலிடுவார்கள். அச் சமயத்தில், அதுவரையில் அங்கு காத்திருந்த கள்ளர்க ளெல்லோரும், புருஷர்கள் தங்கத்தினுல் கவசம்போட்டுக் கழுத்தில் கட்டியிருக்கும் தங்க ருத்திராக்ஷ கண்டிகளையும், ஸ்திரீகள் கண்டத்தில் (கழுத்தில்) தரித்திருக்கும் கெம்பு ரவை அட்டிகைகளையும், காசிமாலை தாலி உருக்களையும் மிகவும் கூர்மையுடைய கத்திரியினுல் திருடன் கத்தரித்து, தன்புறமாய் நின்றிருக்கும் மற்றொரு திருடன் கையில் கொடுத்து அனுப்பிவிடுகின்முன். பிறகு, ஸ்திரீகளும் புரு ஷர்களும் தீபதரிசனம் செய்து முடிந்தபிறகு, தங்கள் தங் கள் கழுத்திலிருக்கும் ஆபரணங்களைப் பார்த்து, என் னுடைய கல் இழைத்த அட்டிகைப் போச்சு, என் ரவை அட்டிகைப் போச்சு, என் சரட்டட்டிகை போச்சு, என் தாலியுரு போச்சு என்று ஸ்திரீகளும்; என் தங்க ருத்ராக்ஷ கண்டிகை போச்சென்று புருஷர்களும் சொல்லி சற்று நேரம் விசனப்பட்டு பிறகு, தாம் இறங்கி யிருக்கும் இடம் சென்று மாவிளக்குப் போட்ட பச்சை மாவுகளை யும் தேங்காய்களையும் மஹா பிரசாதமென்று சொல்லி அவைகளை வயிறு நிறையப் புசித்து, அதற்குமேல் ஜலம் குடிக்கின்முர்கள். இவர்கள் ஒருப்பொழுதென்றுசொல்லி ஒன்றும் சாப்பிடாமல் வெறும் வயிறுடனிருந்து சுவா மிக்கு நைவேதித்த தேங்காய் மாவுகளைத் தின்று ஜலம் சாப்பிடுவதனுல், மேற்படி மாவும் ஜலமும் வயிறு என்னும் பாண்டத்தில் போய்ச்சேர்ந்து அது, தோசைமாவுபோல்

கன்றாய்ப் புளித்துவிடுவதனால், காலை மூன்று மணிக்கெல்லாம் பேதியும் வாந்தியும் உண்டாகின்றது. திருவண்ணா மலை கார்த்திகை தீபத்தில் வாந்திபேதி உண்டாவதற்குக் காரணம் இதுவேயாம்.

திருவண்ணாமலை கார்த்திகை தீபத்தின் அந்தரார்த்தத்தைக்குறித்து ஜனங்கள் என்ன சொல்லுகின்றார்களென்றால், ஆகாசமார்க்கமாய் எகரவிடும் பாணமானது மலையிலுள்ள பெரும் விளக்கைப்போய்க் கொளுத்துகின்றதென்னும் ஐதீகம் உண்டென்று சொல்லுவார்களே யொழிய அதன் நிஜமாகிய அந்தரார்த்தம் அவர்களுக்குத் தெரியவரமாட்டா.

அதன் நிஜமாகிய அந்தரார்த்தம் என்னவென்றால், பரமாத்மா ஸர்வ வியாபியாய் (எங்கும் நிறைந்து) தீபப்பிரகாசம்போல் இருக்கப்பட்டவன். அப்படிப்பட்ட பரமாத்மாவில், நமது சரீரத்திற்குள் அந்தர்யாமியாயும் சாக்ஷி சொரூபனாயும் கூடஸ்தனாயும் அதாவது, இருதயத்தில் தாமரைக்கமல மென்னும் கூண்டுக்குள் இருக்கும் ஆத்மாவை அந்த பரமாத்மாவில் சேர்ப்பிப்பதற்காக விசேஷ பக்தியும் உபவாசங்களும் (அன்ன ஆஹாரங்களும் இல்லாமல்) இருந்து தவம் செய்யவேண்டுமென்று கர்மகாண்டத்தில் சொல்லப் பட்டிருக்கின்றது. ஆதலால், திருவண்ணா மலையின்மீ திருக்கும் தீபமே பரமாத்மா; ஆகாசபாணமே ஜீவாத்மா; ஆகாசபாணம்போ லிருக்கும் ஜீவாத்மா, மலையின்மீதுள்ள பெருந் தீபம்போல் எங்கும் நிறைந்திருக்கும் பரமாத்ம சொரூபத்தில் போய்ச் சேருவதற்காக, பகவானைவர் கிருத்திகை நக்ஷத்திரத்தில் விக்கிரக ரூபமாய் கோவிலுக்குள் ளிருந்து வெளிவந்து ஜனங்களைப் பார்த்து, மாயை என்னும் அழுக்கால் மூடுண்டுகிடக்கும் ஓ ஸ்திரீ புருஷர்களே! இதோ எதிரில், காணப்படும் மலையின்மீது

எரிந்துகொண்டிருக்கும் பெருந்தீபத்தைத் திரையால் மூடப்பட்டிருப்பதுபோல்,உங்கள் இருதய கமலத்திலிருக்கும் பரமாத்மாவின் அம்ஸமாகிய ஜீவாத்மாவை மாயையென்னும் திரை மூடிக்கொண்டிருக்கின்றது; மலையின்மேல் எரிந்து கொண்டிருக்கும் தீபத்தில், இதோ யான்விடும் ஆகாசபாணமானது, தீபத்தை மறைத்துக்கொண்டிருக்கும் திரையைக் கொளுத்திச் சாம்பலாய்ச்செய்து அந்தத் தீபத்தில் ஆகாசபாணம் போய்ச் சேர்ந்து ஐக்கியமாய் விடுவதுபோல், உங்கள் இருதய கமலத்திலிருக்கும் ஜீவாத்மாவை மூடிக்கொண்டிருக்கும் மாயையென்னும் திரையை, இந்நூலில் உபதேசித்திருக்கும் "ஸோஹம்" என்னும் இரண்டு மந்திரங்களால் கொளுத்திச் சாம்பலாய்ச்செய்து, உங்கள் ஜீவாத்மாவை பரமாத்மாவுடன் ஐக்கியம் செய்யுங்கள் என்று காட்டுவதற்காக,பகவானானவர் ஆகாசபாணத்தைக் கொளுத்தி, திருவண்ணாமலையின்மீது திரையால் மூடப்பட்டு எரிந்துகொண்டிருக்கும் தீபத்திற்கு நேராய் ஏகரவிட்டு, திரையைக் கொளுத்தி பெருந் தீபத்தைக் காட்டுகின்றார். அதாவது, திருவண்ணாமலையின்மீது படுதாவால் மூடப்பட்டு எரிந்துகொண்டிருக்கும் விளக்கே, பரமாத்ம சொரூபம்; ஆகாசபாணமே ஜீவாத்ம சொரூபம்; ஆகாசபாணம்போன்ற ஜீவாத்மாக்களாகிய உங்களை, மாயை என்னும் படுதா மூடிக்கொண்டிருக்கின்றது. ஆதலால், நீங்கள் மாயையென்னும் படுதாவை நீக்கி பரமாத்ம சொரூபத்தை அடையுங்கள் என்று காட்டுவதற்காக, ஆகாசரூபமாய் என்றால், வெட்டவெளியாயிருக்கும் பரமாத்மாவானவர், விக்கிரக ரூபமாய் அண்ணாமலையார் என்னும் பெயருடன் வேஷந்தரித்து மலையின்மீதிருக்கும் விளக்கைப் பாணத்தினால் கொளுத்திக் காட்டுகின்றார்.

இதற்கு சூதமாமுனிவர் எழுதிய உபதேச காண்டம் பிரமாணம் என்னவென்றால்,

மாயைதன்னைப் பரப்பிரம்ம பிரகுருதி
சடம்பாசமென வெடுத்துப் பகர்ந்தார்
ஆங்கஃ தணுகியிலே பதியினின்றுந்
தோன்றிபதாம் பசுவென் ஞேது
நீங்கரிய வான்மாவை மலபேதங்
கொடுவளைத்து நிற்ப வங்கு
ஞேங்குபசு விருவினையா லுண்டான
பயனுண்ணும் வினைகட் கெல்லாம்
மீங்கிவன் செய்திடுந் தொழிலேகாரணம்
மவ்வினை யெப்போது முண்டாம்.

இருவினை யெப்போ தொடுங்குமெனி
லான்மாவினை வளைத்த மலம்போயன்றி
யொருவல வவ்வினையா தென்றுரைத்திடிற்
புண்ணிய பாவ மிவைகளீட்டித்
தருவறு கரும்போக னுகர்வதற்குச்
சரீரங் காரணமே யாகும்
பொருவருமைம் புலத்தி லந்தக்கரணத்தாற்
பொசிக்கு மலம் பொதிந்தசீவன்.

சீவனெனப்படு புருட னேகனவன்
றமரோடுஞ் செல்வா ரோடு
மேவரு மென்பது கொடியவெஞ்
சுரத்தி னருநிழற்கீழ் வேடைக்கா
யாவருந் தொக்கது போலுமிவ
னுடம் பனேகமெடுத் திழப்பானந்த
மீவருங் கலாமதியைப் பன்முறையாற்
புயல்மறைத்து விடுதல் போலும்.

இவன்றிரிந்த காயத்திற் சளவையிலை
பழங்கலை நீத் தெடுத்துக்கொண்டு
கவர்ந்த புதுக்கலை யெடுக்குமாபோல
வெடுத்தபல காயம் போக்கி

நிவர்ந்தெழு மச்சட மகற்றியச்சீவன்
முத்திசென்று நிலக்குங் காறு
முவந்தபுனற்கயல் கரைப்பா னுலவுதல்
போற் சடந்தோறு முலவாநிற்கும்.

விளைத்த விருவினைத்தொடரா லச்சீவன்
றளைப்பட்டு மேவி மூன்ருய்க்
கிளைத்த புவனந்தோறு மின்பதுன்பந்
துய்த்துழலல் கிளர் பூங்கொன்றை
தளைத்தமோலிப் பெருமான்றிரு விளையாட்
டென் றுரைக்குஞ் சாத்திரங்கள்
வளைத்தெழு சீவனுக்கெல்லாம் பசுவெனும்
பேரொன்னையெனின் வருத்துச் சொல்கோம்.

பிரமனேமுத லெரும்பு கடையாகப்
பசுவென்று பேசலா மச்
சுரபிதறித் தளைப்பட்டா லோரிடத்தும்
போகாதத் தொடர்பே போல
விரவுமிந்தச் சீவறுங் கன்மத்
தளையாற் கட்டுண்டால் வேறுபோகா
துரவுதளைக் கிடந்துழலு மாதலாற்
பசுவெனும் பேருரிமைத் தாமே.

மாயையே, பிரகுருதியென்றும் பரப் பிரம்மமென்றும் ஜடமாகிய பதார்த்தமென்றும், பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது; இம் மாயையானது, அனுதியாய் பரப் பிரம்மமாகிய ஆன்மாவை அனுசரித்துக்கொண்டே வருவதனுல், இவ் வான்மாவிற்கு மலபேதங்கள் அதிகமாய், நல்வினை தீவினையென்னும் இரண்டு பலன்களை அனுபவித்துக்கொண்டே வருகின்றன. இன் நல்வினை தீவினைகள் எப்போதும் இருந்துகொண்டே யிருக்கும். இன் நல்வினை தீவினைகள் எப்பொழுது ஒடுங்குமென்ருல், ஆன்மாவைப் பற்றிய, ஆணவம் மாய்கை காம்யம் என்னும்

மும்மலங்களும் எப்பொழுது ஒழிகின்றதோ, அப்போதே ஜீவன் மோக்ஷமென்னும் வீட்டை அடையும். புண்ணிய பாப கர்மங்களே அனுபவிப்பதற்குச் சரீரமே காரணமா இருக்கின்றது. இந்த சரீரத்திற்குக் கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகத்தின்மேலிருக்கும் தோல் என்னும் ஐந்து இந்திரியங்களும், மனம் புத்தி சித்தம் அஹங்காரமென்னும், நான்கு அந்தக்கரணங்களுமே, ஜீவனுக்கு உபாதையாயிருக்கின்றது. இந்த ஜீவன், மனேவிய மக்கள் பந்துஜனங்களாகிய கொடிய வெப்பமென்னும் கானலில் அகப்பட்டு, மோக்ஷமென்னும் நிழலில் ஒதுங்கச் சக்தியில்லாமல் அனேக சரீரங்களே எடுத்துக்கொண்டும், விட்டுக்கொண்டுமா இருக்கின்றது. இந்த ஜீவன், பன்முறைகளில் சரீரம் எடுப்பது எப்படியிருக்கின்றதென்ருல், சந்திரனே அடிக்கடி மேகங்கள்வந்து மூடுவதுபோல் இருக்கின்றது பழய வஸ்திரத்தை நீக்கி புதியவஸ்திரத்தைத் தரிப்பதுபோல், இந்த ஜீவன் எடுத்த பலதேகங்களேப்போக்கி, மென்மேலும் வருகின்ற பலதேகங்களே மாற்றி முக்தியடையும்வரையில், நாவரண்டவன் ஜலம்குடிக்க குளத்தினிடம் செல்வதுபோல், ஜீவன் ஆவல்கொண்ட வஸ்துக்களே அனுபவிக்க மறுபடியும் ஜனனமெடுக்கின்றது. அதாவது, தான் செய்துவந்த நல்வினே தீவினேகளாகிய புண்ணிய பாபங்களென்னும் கர்மத்திஞல் ஜீவன் கட்டுப்பட்டு, சொர்க்க மத்ய பாதாள லோகங்களே அடைந்து, இன்ப துன்பங்களே அனுபவித்து வருவதஞல், இவையாவும் சிவபெருமான் திரு விளேயாட்டென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. ஜீவன், பந்தமென்னும் கயற்ருல் கட்டுப்பட்டிருப்பதஞல் பசுவென்னும் பெயர் உண்டாயிற்று. எறும்புமுதல் பிரமதேவன் வரையில் பசுவென்றே சொல்லலாம். எப்படியென்ருல், கயற்ருல் கட்டுப்பட்ட பசுவானது அதைவிட்டு விலகிப்

போக சக்தியில்லாமல் கட்டில் இருப்பதுபோல், ஜீவனும், கர்மமென்னும் உறுதியான கயற்றால் கட்டுப்பட்டுக்கிடந்து வருந்தும். ஆதலால், இச் ஜீவனுக்கு பசுவென்னும் பெயர் உண்டாயிற்று. இப்பசுவென்னும் பெயர் நீங்கி ஜீவன் பரமாத்ம சொரூபத்தை அடையவேண்டும்.

பரமாத்மா பேசப்பட்டவனல்லன். ஆனால் எல்லாக் காரியங்களையும் பகவானால் காட்டப்படுவதுபோல் காட்டுவதற்காக முன்னுள்ள பெரியோர்கள், ஆலயங்களில் விக்கிரகங்களைச் செய்துவைத்து அதன்மூலமாய் எல்லா ரகசியங்களையும் தெரிந்து கொள்ளும்படி செய்திருக்கின்றார்கள். நமது பரதகண்டத்தில் இருக்கும் ஸ்திரீ புருஷர்கள் எல்லோரும் மிகவும் புண்ணியம் செய்தவர்கள். புண்ணிய புருஷர்களுக்கு மாத்திரம் பரதகண்டம் சித்திக்குமேயொழிய மற்றவர்களுக்குச் சித்திக்கமாட்டா. இப்படிப்பட்ட புண்ணிய ஸ்தலத்தில் பிறந் திருப்பதனால்தான் ஸ்திரீ புருஷர்கள், மாயை என்னும் திரையால் மூடப்பட்டிருந்தபோதிலும் ஈசுவரபக்தியுடனும், தரும குணங்களுடனும் கூடியிருக்கின்றார்கள். எவ்வளவுமூடபுத்தியுடையவனா யிருந்தபோதிலும், வருஷத்திற்கு ஒருமுறையாகிலும் பகவானைப்போய் சேவிக்கட்டும், அப்படிச் சேவித்தால் அதனால் சொல்ப பலன் உண்டாகும்; இப்படியே ஜன்மாந்திரங்கள் தோறும் சிறுகச்சிறுக கோவிலுக்குச் சென்று வந்தால் பிறகு, அவன் மனம் லயப்பட்டு கடைசியில் மோக்ஷமென்னும் வீட்டை அடைவான் என்று நினைத்து, நமது பெரியோர்கள் ஆலயங்களைக் கட்டிவைத்தார்கள். அவ்வாலயங்கள் க்ஷீணதசை அடையாமலிருப்பதற்காக இப்போதிருக்கும் சத்புருஷர்கள், சிலமான கோவில்களை சீர்த்திருத்தி வருகின்றார்கள். ஆதலால்,

நாம் முக்கியமாய் ஜனனமெடுத்தது, மாயையில்

அகப்பட்டுக்கொண் டிருக்கும் ஜீவாத்மாவை, மாயை என்னும் கட்டிலிருந்து விடுதலை செய்வதற்கேயன்றி, பெண்டு பிள்ளைகளின்மீதும், தனம் தான்னியம் கிருகம் பூமி தோட்டம் துரவுகள் முதலானவைகளின்மீதும் சிலது நாட்கள் ஆசாபாசமாயிருந்து மரணமடைவதற்கல்ல. பதினேழு தத்துவங்களுக்கும் மனதே பிரதானமா யிருக்கின்றது. ஆதலால், அப்படிப்பட்ட மனதைச் சூன்னியமாய் (ஒன்றுமில்லாமல்) செய்தால் மற்ற பதினறு தத்துவங்களும் தனக்குத்தானகவே நசித்து, (சங்கிலியினுல் கட்டப்பட்ட சிங்கத்தை கட்டிலிருந்து விடுவித்தவுடன் அது, எப்படி காட்டுக்கு ஓடிவிடுமோ அதுபோல்) மாயையால் கட்டுப்பட்டிருக்கும் ஜீவனுனது, மாயையென்னும் கட்டிலிருந்து விடுபட்டவுடன், ஆதியில் பரமாத்த சொரூபியாயிருந்த என்னை, அந்த நான்முகன் (பிரமதேவன்) பதினேழு தத்துவங்களுடன்கூடிய சூக்ஷ்ம (கண்களுக்குக் காணப்படாத) சரீரத்தினுல் கட்டி, சம்சாரமென்னும் பந்தத்தை அனுபவிக்கும்படிச்செய்து அனுப்பிவிட்டான். இப்போது பரமாத்மாவாகிய நான் குடியிருக்கும் தேஹமென்னும் வீட்டில் ஜீவனென்னும் மனிதன், முன் ஜன்மாந்திரங்களில் அநேக எண்ணங்களையுடையவனு யிருந்தபோதிலும் அவைகள் யாவும் முன் ஜன்மாந்திரங்கள்தோறும் செய்துவந்த நிஷ்காம்மிய தவத்தினுல், முன்னிருந்த ஆசாபாசங்களென்னும் அழுக்குகளெல்லாம் சிறுகச்சிறுக ஒழிந்துகொண்டே வந்து கடைசியாய் இந்த ஜன்மத்தில் எல்லா ஆசைகளும் ஒழிந்து விட்டன. இனி இந்த ஜீவனுயிருக்கும் புருஷன் அனுபவிக்கவேண்டி எந்த ஸஞ்சித கர்மங்களும் இல்லவேயில்லை. ஆதலால், நான் மாயையென்னும் கட்டிலிருந்து விடுபட்டேன் என்று ஜீவாத்மா, பரமாத்மாவில் போய்ச் சேர்ந்து ஐக்கியமாய் விடும்.

இப்பேர்ப்பட்ட ஜீவப் பிரம்மைக்கியமே மோக்ஷ மென்று சொல்லப்படும். உலகத்திலுள்ள ஸ்திரீ புருஷர்க ளெல்லோரும் அந்த மனதென்னும் மாயைக்கு வசப்பட்டு, பிறப்பு இறப்பை அடைந்துகொண்டு வருகின்றார்களே யொழிய மற்றப்படிக்கு வேறல்ல. அப்படிப்பட்ட மனதே மஹா பந்தமாயிருக்கின்றது.

பந்தத்திற்கு மனதே காரணம்.

சரு || மந ஏவ மனுஷ்யாணும் காரணம் பந்தமோக்ஷயோ:
பந்தாய விஷயாஸக்தம் முக்த்யை நிர்விஷயம் ஸ்ம்ருதம்.

ஒவ்வொரு புருஷனுக்கும் அவன் மனதே, பந்த மோக்ஷத்திற்குக் காரணமா யிருக்கின்றது. ஸ்திரீ சந்தனம் புஷ்பம் தாம்பூலாதி விஷயங்களில் ஆசையுடைய மனம் அசுத்தமான மனம்; அதனுல் ஜீவனுக்கு பந்தம் உண்டா கின்றது. இதற்குத் திருஷ்டாந்தம் ஸ்ரீ கிருஷ்ணர்ஜுந சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 6, சுலோகம் 5.

உத்தரே தாத்ம நாத்மாநம் நாத்மாந மவஸாதயேத்
ஆத்மைவ ஹ்யாத்மநோ பந்து: ராத்மைவ ரிபு ராத்மந:.

கிருஷ்ணன்:—நல்லது, அதற்கோர் திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன் கேள்:—

பிரதி புருஷனுக்கு தன் மனதே, பந்தமோக்ஷத்திற் குக் காரணமாயிருக்கின்றது. அந்த மனதைவிட புத்தி சிரேஷ்டமானது. அந்த புத்தியினுல் மனதை வசப்படுத்தி காமமென்னும் சத்துருவை ஜயிக்கவேண்டுமென்று, இது வரையில் அத்தியாயம் 3, சுலோகம் 42-43-ல், சொல்லி

யிருந்தேன். ஆதலால், தன் மனதினலேயே தன்னை சம்சாரமென்னும் சமுத்திரத்திலிருந்து கரையேற்றிக் கொள்ளவேண்டும். தன் மனதினலேயே தன்னை, சம்சார துக்கத்தில் அதாவது நரகத்தில் விழும்படியாய்க் கெடுத்துக் கொள்ளலாகாது. ஏனென்றால், பரிசுத்தமுடைய மனமே தனக்கு பந்து. பரிசுத்தமில்லாத மனமே தனக்கு சத்துரு. ஒவ்வொருவரும் மோக்ஷம்(ஜீவாத்மா பரமாத்மா ஐக்கியம்) அல்லது நரகம் (துக்கம்) அடைவதற்கு, அவன் சொந்த பிரயத்தினமே காரணமா யிருக்கின்றது. உலகத்தில், புத்திர மித்திர களத்திர பந்துக்கள் சிநேகிதர்கள் முதலானவர்க ளெல்லோரும் மோக்ஷத்திற்கு விரோதிகள். ஆதலால்,அவர்கள் பந்துக்க ளாகார்கள். தனக்குத்தானே பந்துவாயும் சுகிருதனுயும் ஆகவேண்டும். தன் மனதே தனக்குப் பந்து. என்றால் பரமாத்மாவே பந்து. அதாவது, பரமாத்மாவினிடத்தில் அணுவேனும் விடாமல் சதா தைல தாரையைப்போலவும், கண்டாநாத ரீதியாயும் இடைவிடாத பக்தி செய்துவந்தால் பகவான் பந்துவைப்போலாகின்றான்.அப்படிச் செய்யாமல் மாயையால் மூடப்பட்டு சம்சாரமென்னும் சமுத்திரத்திலேயே சதாகாலமும் மூழ்கிப் பரமாத்மாவை,பக்தி செய்யாதவன் பரமாத்மாவிற்குச் சத்துருவாகின்றான். அத்யாயம் 6, சுலோகம் 6.

> பந்துராத்மா த்மநஸ்தஸ்ய யேநாத்மை வாத்மநாஜிதஃ
> அநாத்மநஸ்து ஶத்ருத்வே வர்த்ததாத்மைவ ஶத்ருவத்

எவனாலே மனதானது ஜயிக்கப்படுகின்றதோ அவனுக்கு அந்த மனதானது, உபகாரத்தைச் செய்ததாகின்றது. மனதை ஜயிக்கப்படாதவனுக்கு, அந்த மனம் அவனுக்குச் சத்துருவைப்போல் அபகாரத்தைச் செய்யும். எந்த ஜீவனாலே, பரமாத்மா ஐக்கியப்படுகின்றாரோ என்

ருல், பக்தி என்னும் கயிற்றால் கட்டுப் பட்டாரோ அந்த ஜீவனுக்கு, அந்த பரமாத்மா பந்துவைப்போல் இருப்பார். பரமாத்மாவை பக்தி செய்யாவிட்டால், அந்த பரமாத்மா அவனுக்கு சத்துருவாயிருந்து அபகாரம் செய்கின்றார். அர்ஜுனா! பரமாத்மாவிற்கு பந்துத்துவமும் சத்துருத்துவமும் உண்டாகும் மார்க்கத்தைச் சொல்லுகின்றேன் கேள்:—

ஒருபுருஷனுடைய மனது விஷயங்களில் எப்பொழுது ஓடுகின்றதோ அப்பொழுதே, அதை தன்புத்தியினால் தப்பு மார்க்கங்களில் போகவிடாமல் இழுத்துப் பிடிப்பானாகில், அப்போது தன் மனதை ஜயித்தவனாகின்றான். அஃதெப்படியென்றால், ஓர் புருஷன் மற்றோர் புருஷனை நிஷ்காரணமாய் வைகின்றான்; அப்பொழுது அதைக் கேட்டுக்கொள்ளும் புருஷனுடைய மனதிற்குக் கோபம் உண்டாகுமல்லவா? அந்தக் கோபத்தை அடக்கி தீர்க்க ஆலோசனை செய்து, வைதவனை மறுபடியும் வைவது நல்லதல்லவென்று எண்ணி சகித்துக் கொண்டிருப்பதே சிரேஷ்டமானதென்று எண்ணுவானாகில், அவனுக்கு உண்டாகிய கோபம் தணிந்து சாந்தம் பிரகாசிக்கும். இவ்வாறு பொறுத்துக் கொள்பவன் அடையும் பலன் என்னவென்றால், தன்னை வைதவனுடைய புண்ணியங்களை எல்லாம் இவன் ஆகர்ஷித்துக் (இழுத்துக்) கொண்டவனாகின்றான். ஆதலால், சாந்தமாயிருக்கும் மனது, இதரர்கள் செய்த புண்ணியங்களை தனக்கு லபிக்கும்படிச் செய்விக்கும். அதனால் அது அவனுக்கு பந்துவைப்போல் மேன்மையைச் செய்விக்கின்றது. இவன் விஷயம் இப்படியிருக்க இனி இவனை வைதவனுடைய கதி என்னவாகின்றதென்றால், அவன் ஏதோ ஓர் சொல்ப காரணத்தினால் குரோதத்தை அடைந்து அந்த குரோதத்தை அடக்கமுடியாமல் இவனை

வைததனால் தான் அதுவரையில் செய்திருந்த புண்ணியங்களை எல்லாம் இவனுக்குத் தாரைவார்த்தவனாகின்றான். புத்தியின் பலத்தை மீறி அதன் வார்த்தையைக் கேளாதவனுடைய மனது, அவனுக்குச் சத்துருவைப்போலிருந்து கெடுதியை விளைவிக்கும். இப்படியே பிரதி புருஷனுடைய மனது இந்திரிய விஷயங்களில் புகுந்து காமக்குரோதாதிகளினால் தூண்டப்பட்டு, தப்புமார்க்கங்களில் பிரவேசித்துக்கொண்டிருப்பதை பார்த்துக்கொண்டிருக்கும் புத்திமான், தன் புத்திபலத்தினால் அந்த மனதைத் திருப்பிக்கொண்டு வருவானாகில், அது தப்புமார்க்கங்களில் போகாமல் அவன் சுவாதீனத்திலேயே இருக்கும். அப்படி சுவாதீனமான மனதுடன் செய்யும் கர்மங்கள் நிஷ்காம கர்மங்களாவதனால், காம்ப கர்மங்களுக்குப் பந்தப்படாமல் மோக்ஷாரூடனாகின்றான். ஆதலால், அவனுக்கு அந்த மனது மேன்மை செய்கதாகின்றது. அதனால், அதை பந்துவென்று சொல்வதற்குக் காரணமாயிற்று. மனதை அடக்காமல் அதன் இஷ்டம்போல் நடத்தி காமக்குரோதங்களுக்கு உட்படுவானாகில், அதனால் உண்டாகும் கர்மங்களை அனுபவிக்கவேண்டியவனாய் இருக்கின்றான். அதனால் அதை சத்துருவென்று சொல்வதற்குக் காரணமாயிருக்கின்றது. இதற்கு முன் விஷயங்களை ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதையில் விரிவாய்க் காணலாம். ஒரு வஸ்துவில், பற்றுதலும் விடுதலுமாயிருப்பதே மனதின் சொரூபமாம். இதுவே மஹா பந்தமன்றி வேறன்று; இப்பற்றுதல், அனேக ஜன்மங்களாய் முதிர்ந்து அதனால் வந்துகொண்டிருக்கும், காமக் குரோதங்களும், ராகத் துவேஷங்களுமே ஜனனத்திற்குக் காரணமாயிருந்து துன்பத்தைத் தருகின்றது. இந்த துன்பத்தை எப்பொழுது போக்கிக் கொள்ளுகின்றார்களோ அப்போதே முக்தர்களாவார்கள். இதற்கு ஞானவாசிட்டம் பிரமாணம்.

பற்று வீடென் றிரண்டிற் பற்றலும் விடுத ருனு
முற்றவை மனத்து ரூப முயர்பந்த மது வேறில்லை
முற்றுறு பற்று வீட்டின் மோகமுந் துயரும் விட்டு
துற்றுள பற்று வீடு துடைத் தசையாது நிற்பாய்.

சுரு || மநோவ்யாதே சிகித்சார்த்த முபாயம் கதயாமிதே
யத்யத் ஸ்வாபிமதம் வஸ்து தத் த்யஜன் மோக்ஷ மச்நுதே.

[மஹோபநிஷத்.]

சகல எண்ணங்களையும் விட்டுவிடுவதே, மனோ வியாதிகளுக்குப் பரம ஔஷதம்; இதைவிட வேறொரு ஔஷதம் இல்லை.

சுரு || நிரஸ்த விஷயாஸங்கம் ஸந்நிருத்தம் மநோ ஹ்ருதி
யதா யா த்யுந்மநீ பாவம் ததா தத் பரமம் பதம்.

மனம் சகல விஷயங்களிலிருந்து நீங்கி, "நான்" "எனது" என்னும் "அஹங்கார" "மமகாரங்கள்" இல்லாத தாய், ஆத்ம சொரூபத்தில் எப்பொழுது லயித்துவிடு கின்றதோ அப்பொழுதே அது பரமபதத்தை (மோக்ஷத் தை) அடையும். எப்படியென்றால், இரவில் மின்னும் பூச்சியானது தன் மெய்யொளியைக் கண்டதுபோல், உண்மை நிலையை அறிந்து உள்ளொளிகண்டால், ஜனன மில்லை. பிறகு, சிவத்தோடே சேருவார். இதற்கு நெஞ்சறி விளக்கம் பிரமாணம்.

மின்மினிப் பூச்சி தன்னுண் மெய்யொளி கண்டாற்போல
உன்மன தொடுங்கியே யுன் னுள்ளொளி கண்டாற் பின்னைச்
சென்மமு மில்லை யந்தச் சிவத்துளே சேர்வாய் நாளும்.

சுரு || 'மநஃப்ரஶம மநோபாயோ யோக இத்யபி தீயதே."

[மஹோபநிஷத்.]

மனம், சங்கல்ப விகல்பங்களில்லாமல் பிரம்மத்தில் லயித்து உபசாந்தி அடைவதே, ஞானயோகமென்று சொல் லப்படும்.

சுரு || "அஸங்கல்பந ஶஸ்த்ரேணச் சின்நம் சித்தமிதம் யதா
ஸர்வம் ஸர்வகதம் ஶாந்தம் ப்ரஹ்ம ஸம்பத்யதேததா."

[மஹோபநிஷத்.]

மனம், சங்கல்ப விகல்பங்களற்று பிரம்மத்தில் எப்பொழுது லயிக்கின்றதோ, அப்பொழுதே அது அகண்ட பரிபூரண பரப்பிரம்ம சொரூபமாகின்றது.

சுரு || "மநஸா மந ஆலோக்ய வ்ருத்திஶூந்யம் யதா பவேத்
ததஃ பரம்ப்ரஹ்ம த்ருஶ்யம் த்ருஶ்யதேச ஸுதுர்லபம்
மநஸா மந ஆலோக்ய முக்தோ பவதி யோகவித்
மநஸா மந ஆலோக்ய உந்மந்யந்தம் ஸதா ஸ்மரேத்
மநஸா மந ஆலோக்ய யோகநிஷ்டஸ் ஸதா பவேத்."

[யோகஶிகோபநிஷத்.]

மனம், சமஸ்தபிராணிகளையும் காமக்குரோதாதி குணங்களில் ஆழ்ந்தச்செய்து, துக்கமயமாகிய போகங்களைச் சுகமென்றெண்ணி, சம்சாரமென்னும் சமுத்திரத்தில் மூழ்கச்செய்து, மறுபடியும் தலையெடுக்காவண்ணம் அஞ்ஞானமென்னும் பாறையால் மூடும்படிச் செய்விக்கின்றது. மனதே, புண்ணிய பாபங்களின் மூட்டையைப் பெருத்த சுமையாய்ச் சுமந்து, சுவர்க்க நரகங்களிலிருந்து சுக துக்கங்களை அனுபவிக்கச்செய்கின்றது. இந்த புண்ணிய பாபங்களின் மூட்டையே சஞ்சிதமென்று சொல்லப்படும். ஆதலால், அந்த மனம் இப்பேர்ப்பட்டதென்று அறிந்து, அதைப் பிரம்மநிஷ்டையில் நிறுத்தி சகல எண்ணங்களையும் சூன்யம் செய்தபோது அது, மிகவும் சுலபமாய்ப் பிரம்மசொரூபத்தை அடையும். ஆதலால், மனதின் சுபாவம் இப்பேர்ப்பட்டதென்று அறிந்து, அதை சூன்யமாய்ச் செய்தவனே முக்தனென்றும் ராஜயோகியென்றும் பிரம்மஞானியென்றும் சொல்லப்படுவான்.

சுரு || "தாவதேவ நிரோதவ்யம் யாவத் த்ருதிகதம் க்ஷயம்
எதத் ஜ்ஞானஞ்ச மோக்ஷஞ்ச அதோந்யோ க்ரந்தவிஸ்தர:."

மனம் எதுவரையில் நசிக்கவில்லையோ, அதாவது சங்கல்ப விகல்பமில்லாத ஸ்திதியை அடையவில்லையோ, அதுவரையில் அதை நாசம் செய்யப்பட்ட பிரம்மநிஷ்டையை அப்பியாசம் செய்வதே, பிரம்மஞானமென்றும் மோக்ஷமென்றும் சொல்லப்படும். சாஸ்திராப்பியாசத்தினால் உண்டாகும் ஞானம், பிரம்ம ஞானமென்றும், மோக்ஷமென்றும் சொல்லப்படமாட்டா. இப்பேர்ப்பட்ட பிரம்ம ஞானம் பிராமணத்துவத்தினால் உண்டாகவேண்டும். அந்த பிராமணத்துவம் எப்படிப்பட்டதென்றால்:—

சுரு || "ததேத தத்ருசா ப்யுக்தம் ஏஷநித்யோ மஹிமா, ப்ராஹ்மணஸ்ய நவர்த்ததே கர்மணா நோகநீயாந், தஸ்யைவ ஸ்யாத் பதவித்தம் விதித்வா நலிப்யதே கர்மணா பாபகேநேதி" "தஸ்மாதேவம் விச்சாந்தோ தாந்த உபரதி ஸ்திதிக்ஷு: ஸமாஹிதோ பூத்வா ஆத்மந்யேவாத்மாநம் பஶ்யதி, ஸர்வமாத்மாநம் பஶ்யதி, நைநம் பாப்மா தரதி, ஸர்வம் பாப்மாநம் தரதி; நைநம் பாப்மா தபதி, ஸர்வம் பாப்மாநம் தபதி, விபாபோ விரஜோ விசிகித்ஸோ ப்ராஹ்மணோ பவதி." [ப்ருஹதாரண்யகோபநிஷத்.]

வைய மாச்சிரமம் மென வைத்தவும்
செய்ய சாதி குலமெனச் சேர்த்தவும்
ஐய மின்றி யறவிட் டறிந்தவர்
செய்ய ஞானத் திரளைச் சிந்திக்கவே. [தேவிகா லோத்திரம்.]

பிராமணத்வம், பிரம்ம ஞானத்தினால் உண்டாகுமேயொழிய, ஆசிரமத்தினாலும், ஜாதி குலத்தினாலும், கர்மாநுஷ்டானங்களினால் உண்டாகமாட்டா. அப்பேர்ப்பட்ட பிரம்மஞானமுடைய பிராமணன் கர்மாநுஷ்டானங்களைச் செய்யமாட்டான். ஒருவேளை தான் உலகத்தாருக்காகக் கர்மாநுஷ்டானங்களைச் செய்தபோதிலும் அவன், அந்தக்

கர்மத்திற்குப் பாத்திரனாகமாட்டான். சாந்தி (காமக் குரோதாதி நாசம்) தாந்தி (இந்திரிய நிக்கிரகம்) உபரதி (நிராசை) திதீக்ஷை (சாந்தம்) சிரத்தை விசுவாசமென்னும் ஆறுகுணங்களை உடையவனாய் ஆத்மசொரூபனாய், தன்னைத் தான் பிரம்மமென்று அறிந்து சதா ஆத்மாநுஸந்தானம் செய்துகொண்டு பிரபஞ்சம் சர்வம் பிரம்மசொரூபமே என்று நினைக்கப்பட்ட அஹங்கார ரஹிதன் பிராமணனே யொழிய, ஜன்மங்களினாலும், கர்மாநுஷ்டானங்களினாலும் பிராமண னாகமாட்டான். இப்பேர்ப்பட்ட பிரம்மஞான முடைய பிராமணன், எப்படி யிருப்பானென்றால்,

சுரு|| "யோஹேரிவ குணாத்பீதஃ ஸந்மாநாந் நரகாதிவ
குணபாதிவ யஃ ஸ்த்ரீப்யஃ தம் தேவாஃ ப்ராஹ்மணம் விதுஃ"

உலகத்தார் சர்ப்பத்தைப்பார்த்துப் பயப்படுவது போல், ஜனக்கூட்டத்தைப் பார்த்து மருளப்பட்டவனும், உலகத்தார் தனக்குச் செய்யப்பட்ட சன்மானங்களை நரகத்திற்குச் சமானமாய்ப் பார்க்கப்பட்டவனுமாகிய ஒருவன், ஆண் பெண் அலி என்பது சரீரத்திற்கேயொழிய ஆத்மாவிற் கல்லவென்றும், மேற்சொல்லிய சரீரங்கள் அவ ரவர்களின் சங்கல்பத்தால், அந்தந்த ரூபங்களை அடைகின்றனவென்றும் அறிந்தபடியால், ஆண் பெண் என்னும் வேற்றுமைகள் அவனுக்கு இராததனால், ஸ்திரீகளைப் பிணங்களாக நினைத்துத் திரஸ்காரஞ்செய்து, சதா ஞான அனுபவ நிஷ்டையி லிருப்பான். மேலும்,

சுலோ||"யேன பூர்ண மிவாகாஶம் பவத்யேகேந ஸர்வதா
ஶூந்யம் யஸ்ய ஜநாகீர்ணம் தம் தேவாஃ ப்ராஹ்மணம் விதுஃ."

ஆகாசத்தைப்போல் ஸர்வ பரிபூரணமா யிருக்கும் பிரம்மமே தானென்று, ஆத்மாநுசந்தானஞ் செய்து கொண்டு சதா பரிபூரண தன்மையிலிருந்து, தனது நிர்வி

கல்ப சமாதிநிஷ்டைக்கு ஜனசங்கமான இடம் தகாதென்றெண்ணி,ஏகாந்த ஸ்தலத்தை யடைந்திருப்பவனே, தேவதைகளால் புகழப்பட்ட பிராமணனென்று சொல்லப்படுவான்.

சரு || ஏகமேவா த்விதீயம் யத் குரோர்வாக்யேந நிஸ்சிதம்
ஏததேகாந்த ந மித்யுக்தம் ந மடம் ந வநாந்தரம்.

என்னும் குருகீதாவாக்கியரீதியாய், தனக்கு இரண்டாவது இல்லாததாய் ஏகமாய் பிரகாசித்துக்கொண்டிருக்கும் பரப் பிரம்மமாகிய ஆத்மாவே, ஏகாந்த ஸ்தலமென்றும் மடமென்றும் சொல்லப்படும். அப்படிப்பட்ட ஏகாந்த ஸ்தலத்தில் உட்கார்ந்து மனதைப் பரமாத்மசொரூபத்தில் ஐக்கியம் செய்துகொண்டிருப்பவனே ஏகாந்த ஸ்தலவாசியென்றும் மடாதிபதியென்றும் சொல்லப்படுமேயொழிய, பரமாத்மசொரூபத்தில் மனதை ஐக்கியம்செய்யாமல், ஜனசஞ்சாரமில்லாத காட்டிலும் மடங்களிலும் நிவசித்துக் கொண்டிருப்பவன், ஏகாந்த ஸ்தலவாசியும் மடாதிபதியும் ஆகமாட்டான். இப்படி யிருக்கப்பட்டவனுக்கு மோக்ஷ சாம்ராஜ்ஜிய பதவி உண்டாகவேமாட்டா. முன் சொல்லிய விஷயங்களை நன்ருய் அறிந்தவனே பிராமணன்.

இந்த பிராமணனே பிரம்மஸூத்திரத்தைத் தரித்துக் கொண்டிருப்பவன். அந்த பிரம்மசூத்திரம் எப்போப்பட்டதென்ருல் அதை இதனடியில் சொல்லுகின்ருேம் கேளுங்கள்.

பிரம்ம சூத்திரமே யஞ்ஞோபவீத தாரணை.

சுரு|| "யேந ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ
தத் ஸூத்ரம் தாரயேத் யோகீ யோகவித் தத்வதர்ஸிவாந்
பஹிஸ் ஸூத்ரம் த்யஜேத் வித்வாந் யோகமுத்தம மாஸ்ரித:
ப்ரஹ்மபாவமிதம் ஸூத்ரம் தாரயேத்ய: ஸசேதந:
தாரணாத்தஸ்ய ஸூத்ரஸ்ய நோச்சிஷ்டோ நா ஸுசிர்பவேத்
ஸூத்ரமந் தர்கதம் யேஷாம் ஜ்ஞாநயஞ்ஞோபவீதிநாம்
தேவை ஸூத்ரவிதோ லோகே தேச யஞ்ஞோபவீதிந:
ஜ்ஞாநஸிகிநோ ஜ்ஞாநநிஷ்டா ஜ்ஞாந யஞ்ஞோபவீதிந:
ஜ்ஞாநமேவ பரம் தேஷாம் பவித்ரம் ஜ்ஞாந முச்யதே."
[ப்ரஹ்மோபநிஷத்.]

ஒரு முத்து சரத்திலுள்ள ஒவ்வொரு முத்திலும், ஒரே சூத்திரமானது (நூலானது) வியாபித் திருப்பதுபோல், சகல ஜீவ ஜந்துக்களின் இருதயத்தில் பரமாத்மா ஒருவனே வியாபித் திருக்கின்றான்; அப்பேர்ப்பட்ட பரமாத்மாவே, மஹா சூத்திரம், மஹா யஞ்ஞோபவீதம், (பூணூல்) நிஜமான ஞான ஸந்தியாவந்தனம் என்று சொல்லப்படும். அந்த மஹா சூத்திரமான பிரம்மத்தைத் தெரிந்துகொண்டு பிரம்மாநுசந்தானஞ் செய்வதே யஞ்ஞோபவீததாரணை யென்று சொல்லப்படும். பிரம்ம ஞானியாகிய பிராமணன் பிரம்மாநு பூதியென்னும் பிரம்ம சூத்திரத்தைத் தரித்து, நூலிழைகளையுடைய பூணூநூலைக் கழற்றிவிடவேண்டும். அந்த பிரம்மமென்னும் சூத்திரத்தைத் தரித்த ஞானியாகிய பிராமணனுக்கு, உச்சிஷ்டம் (எச்சல்) சுசி என்னும் பேதமே இராது; சர்வம் அபேத பரப் பிரம்ம சொரூபமாகவே இருக்கும். அந்த பிரம்மமென்னும் சூத்திரத்தைத் தெரிந்து, சதா அதை இடைவிடாமல் தியானித்துக் கொண்டிருப்பவனே 'சூத்திரம்' இப்படிப்பட்ட தென்று

தெரிந்த யஞ்ஞோபவீதத்தைத் தரித்த ஞான பிராமணன் என்று சொல்லப்படுவான். அவ்வித பிரம்ம சூத்திரத்தைத் தெரிந்தவனே ஜீவித்திருப்பவன். மற்றவர்கள் ஜீவித்திருந்தும் பிணத்திற்குச் சமானரே. பிரம்ம ஞானமே 'சிகா (குடுமை) யஞ்ஞோபவிதம் (பூணூல்), என்று சொல்லப்படும். இப்படிப்பட்ட பிரம்மஞானமுடையவன் பிராமணனேயொழிய ஜன்மங்களினாலும் கர்மானுஷ்டானங்களினாலும பிராமணனாகமாட்டான்.

சரு || "நிராலம்போபநிஷதம் யோதீதே குர்வநுக்ரஹதஃ
ஸோக்நிபூதோ பவதி ஸவாயுபூதோ பவதி நஸ புநரா
வர்த்ததே நஸ புநராவர்த்ததே புநர்நாபிஜயதே
புநர்நாபிஜாயதே இத்யுபநிஷத்." [நிராலம்போபநிஷத்.]

இந்த நிராலம்போபநிஷத்தில் சொல்லப்பட்ட பிரம்ம சூத்திரத்தை, இதுவே சிவராஜயோக ஸமாதி இதை ஜபம் செய்யுங்கள் என்பதை இதனடியில் சொல்லப் போகின்றோம். ஆதலால், அதைத்தெரிந்து கொண்டு, இடைவிடாத ஜலப் பிரவாஹம்போல் அப்பியசிப்பவர்கள், அக்கினியைப்போலும், வாயுவைப்போலும் பவித்திர மாகின்றார்கள்; அவர்களுக்குப் புநர்ஜனன மில்லவே இல்லை. இந்த உபநிஷத் வாக்கியங்கள், மஹா ரகசியம்; இது பரமகோப்யம். இந்த பிரம்ம சூத்திரத்தைத் தெரிந்து அப்பியாசம் செய்து கொண்டிருப்பதே ஸம் பிரஞ்ஞாத ஸமாதி யென்றும் அல்லது ஸவிகல்ப ஸமாதி யென்றும் சொல்லப்படும். அதை இதில் முன் சொல்லப்போகின்றோம். எல்லோரும் முக்கியமாய்க் கவனிக்கவேண்டும்.

இதுவே சிவராஜயோக ஸமாதி

இதை ஜபம் செய்யுங்கள்.

சுரு || "ஸம்ப்ரஜ்ஞாத ஸமாதிஃ ஸ்யாத் த்யாநாப்யாஸ ப்ரகர்ஷதஃ
ப்ரஶாந்த வ்ருத்திகம் சித்தம் பரமாநந்த தாயகம்" [முக்தி]

"ஹ்ருதயகமலமத்யே தீப மத்வைதஸாரம்
ப்ரணவமயமதர்க்யம் யோகிஹ்ருத் யானகம்யம்
ஹரிகுருஶிவயோகம் ஸர்வபூதஸ்த மேகம்
ஸக்ருதபி மனஸாத்யாயதேயஃ ஸ முக்தஃ"

பாரப்பா இதையறியார் சித்தர்கூடிப்
பார்தனிலே அறுபத்து நாலுயோகம்
ஆரப்பா இருக்குதென்று வெவ்வேறாக
அலைந்தலைந்து கெட்டவர்க ளனந்தங்கோடி
நேரப்பா ராஜாங்க யோகம்பார்த்து
நிலைஅறிந்து கண்டவனே கோடிக்கொன்று
வீரப்பா பேசாமல் மனக்கண்ணாலே
விந்துவடா பாய்ந்ததலம் வெளியைக்காணே. (1)

கண்ணான பிடரிமுது கோடிரந்திரம்
கால்கூட்டிப் பார்த்தாலே தலைமேலாகும்
விண்ணான பெருவெளிக்கு லீனமானால்
விமோசனமாம் நிராலம்ப மெனத்தான்சொல்லும்
ஒண்ணான யோகமல்லோ இந்தநிஷ்டை
உபதேசம் பெற்றவர்க்கே உண்மையாகும்
அண்ணாந்து பார்த்திருந்தால் வருமோஞானம்
அஜபா மந்திரத்தியானம் அறைகின்றேனே. (2)

அறைகிறேன் அஜபைஎன்னும் பிராணன்மாவை
அகண்ட பராபரத்தினுள்ளே ஐக்கியஞ்செய்ய
குறைவில்லை "ஓங்"கார மூலவட்டக்
குண்டலியாய் நின்றிடத்திற் குணாதீதந்தான்

நிறைகிறேன் நாசிகா ரந்த்ரவாயு
நீங்காம லேகமாய் நிர்ணயித்துப்
பறைகிறே னக்ஷரசா தனமுந்தள்ளிப்
பந்தமற்ற மகாமோக்ஷப் பதிபெற்றேனே. (3)

மகிமையென்று யோக சாதனையினாலே
மகாகாச நிர்விகற்ப வாழ்க்கையாச்சு
அகமகமென் றுணவத்வைத நீக்கலாச்சு
அத்துவித பிரம்ம சிதானந்தகாரம்
சகலாதீ தங்கடந்து களாதீதத்தில்
சாதித்தேன் தன்மயமாய்ச் சார்ந்துபோச்சு
பகலிருளில் லாதவெளிக் கப்பாலாச்சு
பந்தமற்ற மகாமோக்ஷப் பதம்பெற்றேனே. (4)

பெற்றதனைச் சொல்லிவிட்டேன் வடநூல்பாஷை
பிரித்துமுப்பத் தொன்றினிலே பிரம்மஞ்ஞானம்
தத்துவத்தைச் சொல்லிவைத்தேன் யோகியானால்
சாதனைசெய் வானறிவான் சைதன்யத்தில்
முத்தியடை வானதிலே நிருத்தஞ்செய்வான்
முமூட்சுத்துவ மறிந்த மூர்த்தியாவான்
நித்தியமெனு முபநிடதப் பொருள்தான்சொல்லும்
நிலவரத்தால் யொகநிஷ்டை நிறைந்துமுற்றே. (5)

"தனிமுதலைபார்த்திருந்து தனித்திருந்து வாழாம
லனியாயமாய்ப் பிறந்திங்கலைந்துநின்றேன் பூரணமே
வாசிதனைப் பார்த்திருந்து மகிழ்ந்துனைத்தான் போற்றுமல்
காசிவரைபோய்த்திரிந்து காலலுத்தேன் பூரணமே."

மேற்சொல்லிய பாடல்களின் உரையே இதனடியில் விவரித்துச் சொல்லுகின்றோம். ஆதலால், இந்நூலுக்கெல்லாம் இதுவே மிகவும் முக்யமான ரஹஸ்யமும், முக்ய

மான உபதேசமுமாய் இருக்கின்றது. யோகமார்க்கமோ மிகவும் கஷ்டமான மார்க்கம். இந்த ராஜயோகமோ, ராஜபாட்டையைப்போல் ஆயாசமில்லாமல் மிகவும் சுலபமாய்ப் போகும் மார்க்கம். ஆதலால், ஸ்திரீ புருஷர்களாகிய நீங்கள் எல்லோரும், யோகவழியைவிட்டு ராஜபாட்டையாகிய இந்த ராஜயோகத்தை இதனடியில் சரியான வழியுடன் சொல்லுகின்றோம். அதுபோல், ஏகாந்த இருட்டு அரையில் உட்கார்ந்து ஜபம் செய்து வருவீர்களாகில், அப்போதே உங்கள் மனம் இறந்துவிடும். இது, யோகத்திற்குக் கீழ்படி; இதனால், அநேக மஹான்கள் சித்தியடைந்திருக்கின்றார்கள். ஆதலால், மனம் இறக்கும் ரஹஸ்யம் அநேகர்களுக்குத் தெரியவராது; இது, உபநிஷத்துகளில் சொல்லப் பட்டிருக்கின்றது. அவ்வாறு உபநிஷத்துகளில் சொல்லியிருந்தபோதிலும், அதன் ரஹஸ்யம், சுவானுபவமுடைய அப்யாசிகளுக்கு மாத்திரம் தெரியவருமேயொழிய, விசேஷ சாஸ்திரங்களை வாசித்துப் பிரபஞ்சத்தை எல்லாம் ஜபிக்கத்தக்க பண்டிதனென்று பெயர்பெற்றபோதிலும், பிரம்மசூத்திர ரஹஸ்யம் அநுபவமில்லாமல் தெரியவரமாட்டா. ஆதலால், யாம் மூன்றும் படியாகிய யோகமார்க்கத்திலிருந்து, யக்ஞோபவீதமென்னும் பிரம்மசூத்திரமாகிய கயிற்றை (நூலை) பிடித்து, அதன் கொழுப்பை அடக்கி பாம்பாட்டியைப் போல் ஆட்டி, பிரம்மசூத்திர ரஹஸ்யங்களை எல்லாம் யோகபலத்தினால் அறிந்து, அதை இப்பொழுது உங்கள் புத்திக்கு நன்றாய் விளங்கும்படி பலவித திருஷ்டாந்தங்களின் மூலமாயும் 'ஸோஹம்' மந்திரம் சுவாசத்துடன் சேர்த்து ஜபம் செய்வது படத்தின் மூலமாய்ச் சொல்லி, உங்கள் மனதின் ஓட்டத்தை நிறுத்திவிடப் போகின்றோம். ஆதலால், இதை முக்கியமாய்க் கவனித்து இதனடியில் சொல்வதுபோல் ஜபம் செய்து வரவேண்டும்.

எனதன்பர்களே! எல்லா வஸ்துவையும் கட்டுவதற்கு, கொலுசும் கயிறும் நூலும் வேண்டுவதா யிருக்கின்றது, இவைகள் இல்லாவிடில், எந்தக் காரியமும் நடைபெற மாட்டா. அதுபோல், ஜீவராசிகளின் மனதைக்கட்ட நூல் ஒன்று இருக்கின்றது? அந்நூல், நமது சரீரத்தில் மூக்கின் ரந்திரங்களின் வழியாய் ஆடிக்கொண்டிருக்கின்றது. இந்நூல் என்றைக்கோ ஓர்நாள் அறுபட்டுப் போகப் போகின்றது. இந்நூல் அறுபட்டால், சரீரம் பிணமாய் விடும். ஆதலால், மூக்கு ரந்திரங்களின்வழியாய் ஆடிக் கொண்டிருக்கும் யஞ்ஞோபவீதமென்னும் நூல் அறுபடா முன்னமே, எல்லா ஸ்திரீ புருஷர்களும் ஜாக்கிரதைப்பட வேண்டும். அதாவது, சிங்கம் புலி யானை முதலானவைகளைக் கட்டுவதற்குக் கொலுசு (சங்கலி) வேண்டும்: பசு எருது எருமை கிடா இன்னும் அனேக மிருகங்களையும் பக்ஷிகளையும் கட்ட கயிறுவேண்டும். கண்களுக்குக் காணப்படும் மிருகங்களையும் பக்ஷிகளையும், கண்களுக்குக் காணப்படும் கொலுசுகளாலும் கயறுகளாலும் கட்டுகின்றோம். மனது என்னும் குரங்கானது கண்களுக்குக் காணப்படாதவஸ்து. கண்களுக்குக் காணப்படாத வஸ்துவை, கண்களுக்குக் காணப்பாடாத கயற்றால் கட்டவேண்டும். என்றால், கண்களுக்குக் காணப்படாத மனது என்னும் குரங்கை, கண்களுக்குக் காணப்படாத யஞ்ஞோபவீதமென்னும் நூலால் கட்டவேண்டும் என்பதேயாம். இந்த யஞ்ஞோபவீதமென்னும் நூலுக்கே, பிரம்ம சூத்திரமென்றும், ஹம்ஸ என்றும், வாசி என்றும், கால் என்றும், மூச்சு என்றும், சுவாசனென்றும்,பிராணனென்றும் சொல்லப்படும். இது விஷயம் அனேகர்களுக்கு அடிக்கடி மருதியுண்டாகும்; இது முக்கியமான விஷயமாதலால் பலயிடங்களில் இதை சொல்லி யிருக்கின்றோம் கவனியுங்கள்: இந்த

சுவாசமானது நாபியில் பிறந்து, மூக்கு ரந்திரங்களின் வழியாய் வருகின்றது. இந்த சுவாசத்துடன் கூடவே ஞாபகமிராத உதவியற்ற அனேக சிறிய சிறிய எண்ணங்களும், தனக்கு முக்கியமாய் ஞாபகமுள்ள சில எண்ணங்களும் அந்த சுவாசத்துடன் கூடவே பிறந்து பிறந்து, உடனுக்குடனே அந்த க்ஷணமே மறைந்து விடுகின்றன. எப்படியென்றால்,

நிஷ்க்களங்கமாய் (அசையாமல்) இருக்கும் சமுத்திரத்தின்மேல் காற்று, எப்பொழுதும் அடித்துக்கொண்டே இருக்கும். ஜலத்தின்மேல் காற்று வேகமாய்வந்து படுவதனால் அந்த ஜலம், அலையாய்ப் புறண்டுகொண்டே இருக்கும். அந்த அலையிலிருந்து, நுரைகளும் குமிழிகளும் திவலைகளும் உடனுக்குடனே பிறந்து பிறந்து, அந்த க்ஷணமே நுரை குமிழ் திவலைகள் யாவும் மேற்படி அலையில் மறைந்து, அவ்வலை சமுத்திரத்தில் மறைந்து விடுகின்றன. சமுத்திர ஜலமே, அலைகளாகவும் நுரைகளாகவும் குமிழிகளாகவும் தோன்றி, மறுபடியும் அவையாவும் சமுத்திரத்தில் மறைந்து விடுகின்றன.

அதுபோல், நாம் மூக்கு ரந்திரங்களின் வழியாய்விடும் சுவாசமென்னும் காற்றில், எதற்கும் உபயோகமற்ற சிறிய சிறிய எண்ணங்கள் உடனுக்குடனே தோன்றி, ஷை அலையிலுள்ள நீர்க்குமிழிகள் எவ்வளவு சீக்கிரமாய்ப் பிறந்து பிறந்து நசித்துப் போகின்றனவோ அதுபோல், நிமிஷத்திற்குள் அனேக உதவியற்ற எண்ணங்கள், ஷை சுவாசத்திலிருந்து ஒவ்வோரடி வைக்கும்போதெல்லாம், ஒவ்வோரெண்ணம் பிறந்து பிறந்து மேற்சொல்லிய நீர்க்குமிழியைப் போல் மறைந்துவிடுகின்றது. இந்த எண்ணங்களையே மனது என்று சொல்லப்படும். இந்த மனது என்னும் குரங்கைக் கட்டும் நூலுக்கே யஞ்ஞோபவீதமென்றும், பிரம்மசூத்திர

மென்றும், ஹம்ஸ என்றும், சுவாசமென்றும், மூச்சென்றும் வாசி என்றும் கால் என்றும் சொல்லப்படும். இந்த மூச்சு நாபியிலிருந்து புறப்படுகின்றது. ஆதலால், எண்ணங்களும் நாபியிலிருந்தே பிறக்கின்றன. இந்த மூச்சே "ஹம்ஸஸ் ஸோஹம்" என்று உபநிஷத்துகளில் சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது, ஹம்ஸ என்றால் நூல்; இந்த நூலுடன் ஸோஹம் என்னும் மந்திரம் சேர்ந்து, நாள் ஒன்றிற்கு இருபத்து ஓராயிரத்து அறுநூறுமுறை தனக்குத் தனகவே ஜபித்துக்கொண்டே இருக்கும் இப்படிப்பட்ட சுவாசமென்னும் நூலில், அடியில் சொல்லப்போகும் இரண்டு மந்திரங்களும் சேர்த்து, உள்ளுக்கும் வெளிக்குமாய் இழுத்து ஜபம் செய்துவந்தால், மனம் வெளி வியவகாரங்களில் ஓட அவகாசமிராமல், மந்திரம் சுவாசம் இவ்விரண்டின் மத்தியில் சிலநேரம் கட்டுப்பட்டு, பிறகு அம்மனம் தனக்குத் தானகவே இறந்துவிடும். ஏனென்றால், பலயிடங்களிலும் ஓடிக்கொண்டிருக்கும் மனதை, பிரம்ம சூத்திரமென்னும் நூலால் (மூச்சால்) கட்டிவிட்டால், அம்மனம் சிலநேரம் மாத்திரம் மந்திரம் ஜபம் செய்துகொண்டிருந்து பிறகு, தூங்கும் சிறுவன் கையிலிருக்கும் பழத்தை சிறுவன் நழுகவிட்டு தூங்குவது போல், மனம் மேற்படி சுவாசத்துடன் சேர்ந்து மந்திரம் ஜபம் செய்துகொண்டேயிருந்து, பிறகு தன்னைத்தான் மறந்து தான்தானய் நின்றுவிடும். இதுவே ஹம்ஸஸ் ஸோஹம் என்னும் மந்திரத்தின் ரஹஸ்யார்த்தம். இன்னும் இந்த ஹம்ஸஸ் ஸோஹம் ரஹஸ்யார்த்தம் என்னவென்றால், "சிவோஹம்" என்றும் சொல்லப்படும். இந்த "சிவோஹம்" ரஹஸ்யம் என்னவென்றால், ஹம், என்றால் நான்; சிவோ, என்றால் சிவம்; என்றால் நானே சிவம் என்பதேயாம். இவ்வாறு கர்மவாக்கினல், சிவோஹம், சிவோ

ஹம், சிவோஹம் என்று சொல்லிக்கொண்டிருந்தால் சிவமாய் விடுவானு?

"சிவோஹம்" மந்திரத்தின் ரஹஸ்யார்த்தமே "ஸோஹம்" என்றால், நானே பிரம்மம் பிரம்மமே நான் என்று, மூக்கின் ரந்திரங்களின் வழியாய் ஆடிக்கொண்டிருக்கும் மூச்சானது, "ஸோஹம்" என்னும் இரண்டு மந்திரங்களையும் தனக்குத்தானுகவே நாள்முழுமையும் இறுபத்தி ஒராயிரத்து அறுநூறுமுறை சொல்லிக்கொண்டு, ஒவ்வொரு ஜீவராசிகளின் மூக்குத் துவாரங்களில் ஆடிக்கொண்டிருக்கும். 'ஸோஹம்' மந்திரத்தின் அர்த்தமும் 'சிவோஹம்' மந்திரத்தின் அர்த்தமும் ஒன்றேயாம். அதாவது 'ஸோஹம்' என்றால் நானே பிரம்மமென்றும், 'சிவோஹம்' என்றால் நானே சிவம் என்றும் சொல்லப்படும். இவ்விரண்டு மந்திரங்களும் ஒரே பரப் பிரம்மத்தைக் குறிப்பிட்டுச் சொல்லுகின்றது. ஆதலால், "சிவோஹம்" என்னும் ரஹஸ்யம் குருவினுல் தெரிந்து கொள்ளும் வரையில், "சிவோஹம்" என் றிருந்திடாயே என்று சுருதிகளில் மறைவாய்ச் சொல்லியிருக்கின்றார்கள். அவ்வாறு மறைவாய்ச் சொல்லியிருந்த பொருளை, இப்போது இந்நூலில் வெட்டவெளியாய்ச் சொல்லுகின்றோம். ஆதலால், ஸ்த்ரீ புருஷர்க ளெல்லோரும், அடியில் சொல்வதுபோல் பிரதி தினம் தவறாமல் ராஜயோகம் ஜபம் செய்யவேண்டிய வழியை, இதனடியில் உபதேசமாய்ச் சொல்லுகின்றோம். ஆதலால், ஸதானந்தன், வேப்பேரிபோஸ்ட்டு, சென்னை. இவ்விலாசத்திற்கு எழுதி, சின் முத்திரைப்படம் வரவழைத்து, அப்படத்தையே 'குரு' வாய் நினைத்து, பூஜை அறையில் அப்படத்தைவைத்து விளக்கேற்றி படத்திற்கெதிரில் பழம்வைத்து கர்பூரம் (சூடம்) ஏற்றி நமஸ்கரித்து முடிந்தவுடன், படத்துக்கெதிரில் வடக்குமுகமாய்ச் சித்-

தாசனத்துடன் மான்தோல்மீது உட்கார்ந்து ஒருதட்டில் பஞ்சபாத்திரம் ஜலம் வைத்துக்கொண்டு பிறகு கொஞ்சம் எள் வலதுகை விரல் நுனியில் வைத்துக்கொண்டு, இடது கையில் பஞ்சபாத்திரஜலம் எடுத்துக்கொண்டு மேற்படி எள்ளில் ஜலம் விட்டுக்கொண்டே, உடல் பொருள் ஆவி இம்மூன்றும் குரு சுவாமிகளுக்கு அற்பணம் செய்து விட்டேன் என்று மனதில் நினைத்து எள்ளும் ஜலமும் தட்டில் விட்டு கை துடைத்துக் கொள்ளவேண்டும்.

விரிந்த சஞ்சித வினைகளன் புடனும்
 விழிக்க வெந்தன விரும்பி முற்செனனம்
புரிந்த வல்வினை யுடலுட னகலும்
 புந்தி சேரருள் வருவினை போக்கு
மருந்துயர்ப் பொரு ளுயிருடம் புனவே
 யல்ல நம்மன வாகுமிங் குனைப்போ
விருந்த நங்குரு வடிவைநின் கருத்தி
 விழுத்து வாய்பொரு ளிதுவென மொழிந்தார்.

இவ்வாறு உடல் பொருள் ஆவி இம்மூன்றும் அப் படத்திற்கு தத்தம் செய்த பிறகு, அவ் உடல் பொருள் ஆவி இம்மூன்றும் உமதல்ல யெமதாகும். மாயை, ஸஞ்சித கர்மங்களெல்லாம் நயன தீக்ஷையால் (கண்பார்வையால்) தகிக்கப்பட்டொழியும்: உன் பிராரப்த கர்மம் சரீரம் இருக்கும் வரையில் இருந்து அதனோடே அப் பிராரப்த கர்மம் ஒழியும்; உன் மனதிற் பதிந்த நம் அருளானது, இனி உன் ஆகாம்ய கர்மங்களை ஏறவொட்டாமல் தடுக்கும்: இந்த ஸஞ்சித பிராரப்த ஆகாம்ய கர்மங்களையெல்லாம் இன்நூல் 49-வது, பக்கம் முதல் 51-வது, பக்கம் வரையில் எழுதியிருக்கின்றோம்; இது, முக்கியமாய்த் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயம் ஆதலாவ், அதை மறுபடியும் ஒருமுறை வாசித்து அதன் கருத்தை நன்றாய்

அறியுங்கள். எவரெவர்களுக்கு எந்தெந்த ஜபம் வேண்டுமோ அதை இதில் சொல்லியிருக்கின்றோம். அதுபோல் செய்து வரவேண்டும்.

இன் நூலாசிரியர் பத்மாசனத்தில் உட்கார்ந்து சின் முத்திரையை விரல்களால் பிடித்து நிஷ்டையில் இருக்கும் போது பிடித்த பெரிய ஸயிஸ் போடோ(படம்).

ஸதானந்தன்

வேப்பேரிபோஸ்ட்டு; சென்னை.

இவ்விலாசத்தில் விற்கின்றார்கள். அப்படத்தை வரவழைத்து நீங்கள் பூஜைசெய்யும் அறையில் வைத்து அப்படத்தையே குருவாய் நினைத்து முன் சொல்லியதுபோல் உடல் பொருள் ஆவி இம்மூன்றும் அப்படத்திற்கு அற்பணம் செய்து இதில் உபதேசமாய்ச் சொல்லியிருக்கும் பிராணாயாமம், உபநயந காயத்ரீ மந்திரோபதேசம், சிவ ராஜயோகம், ராம மந்திரோபதேசம், பஞ்சாக்ஷர மந்திரோபதேசம், கைக்குரிபடத்தில் மனதை லயப்படுத்துதல், மனோஓட்டத்தை நிறுத்திக்காட்டுதல் இவைகளில், எவரெவர்கள் எதை அனுஷ்டிக்கவேண்டுமென்று எண்ணுகின்றார்களோ அவைகளை, நன்றாய் வாசித்து அதில் சொல்லியதுபோல் பிரதிதினம் காலை மாலைகளில் ஜபம்செய்துவர வேண்டும்.

உடல் பொருள் ஆவி இம்மூன்றும் மேற்படி படத்திற்குத் தத்தம்செய்த பிறகு, விபூதியை மந்திர பூர்வகமாய் அந்தந்த அவயவங்களில் இட்டு ராஜயோகம் ஜபம் செய்ய வேண்டும். இனி விபூதிமந்திரம் விதிப்படி இடும் உபதேசம் இதனடியில் சொல்லுகின்றோம். அதுபோல் அந்தந்த அங்கங்களில் அந்தந்த மந்திரங்களை மூன்று முறை சொல்லி மூன்றுமுறை விபூதி இடவேண்டும்.

ஒருபெரிய மணை அதாவது, ஒரு அங்குலம் உயர முள்ள பெரிய பலகைமேல் மான்தோல் போட்டு அதன் மேல் வெள்ளை வஸ்திரம் மடித்துப்போட்டு மணை எதிரில், பஞ்சபாத்திரத்தில் ஜலம், உத்தரணியுடன் (சிறிய கரண்டி யுடன்) தட்டில் வைக்க வேண்டும். பிறகு, அடியேன் சித்தாசனமாய் உட்கார்ந்து சின்முத்திரையை விரல்களால் பிடித்துக் காட்டியதுபோல் அதாவது, இடது பாதம் வலது தொடையின் கீழ்வைத்து, வலது பாதம் இடது தொடை, கணுக்கால் இவ்விரண்டின் சந்தில் வைத்து இடது தொடை யுடன் சேர்ந்தாற்போல் பாதம் சமமாய் இருக்கும்படி வைப்பதே சித்தாசனம். இவ்விதமாய்ச் சித்தாசனத்துடன் வடக்குமுகமாய் உட்காரவேண்டும். உட்கார்ந்தவுடன், அப்புருஷன் சுற்றிலுமிருக்கும் துஷ்டதேவதைகளை தூர மாய் விலக்கும்படிச்செய்ய ஜலம், வலதுகை மூன்றுவிரல் களால் எடுத்து மந்திரத்துடன் சிரசிற்குமேலும், சிரசு சுற்றி லும் இறைக்கவேண்டும். அவ்வாறு இறைக்கும் நீர்த் துளியானது, அஸ்திரமாய் நின்று துஷ்ட தேவதைகளை யெல்லாம் தூரமாய்த் துரத்தும். பிறகு, விபூதி குழைத்து மந்திரத்துடன் அந்தந்த அவயங்களில் இடவேண்டும்.

ஓ சகோதரிகளே ! ஓ சகோதரர்களே ! நீங்கள், பிரதி தினம் காலை 7-மணிக்கெல்லாம் ஸ்னானம்செய்து உலர்ந்த மடிவஸ்திரம் கட்டிக்கொண்டு, முன் சொல்லியதுபோல், மணையின்மீது மான்தோல் போட்டிருக்கும் ஆசனத்தில் வடக்குமுகமாய்ச் சித்தாசனத்துடன் உட்காரவேண்டும் பிறகு, வலதுகை மோதிரவிரல், நடுவிரல், ஆள்காட்டும் விரல்கள் மூன்றையும் பஞ்சபாத்திரத்திலுள்ள ஜலத்தில் மூழ்த்தி;

ஓம் அஸ்த்ராயநமஃ, ஓம் அஸ்த்ராயநமஃ, ஓம் அஸ்த் ராயநமஃ என்று மூன்றுமுறை சொல்லிக்கொண்டே மூன்று

முறை ஜலம் எடுத்து சிரசிற்குமேல் இறைக்கவேண்டும். பிறகு,

ஓம் அஸ்த்ராயநமஃ, ஓம் அஸ்த்ராயாநமஃ, ஓம் அஸ்த்ராயநமஃ என்று மூன்றுமுறை சொல்லிக்கொண்டே மூன்றுமுறை ஜலம் எடுத்து கை வளைத்து சிரசு சுற்றிலும் இறைக்கவேண்டும். இவ்வாறு இரைத்தால் புருஷன் சிரசிற்குமேலும், சுற்றிலுமிருக்கும் துஷ்ட தேவதைகளெல்லாம் தூரமாய் விலகிவிடும் பிறகு,

இடதுகையில் ஒரு உத்தரணி ஜலம் எடுத்து, வலது உள்ளங்கையில் விட்டு, ஓம் ஆத்ம தத்வாயநமஃ என்று சொல்லிய பிறகு, அந்தத் தீர்த்தம் சாப்பிட்டு மறுபடியும்,

ஒரு உத்தரணி ஜலம் எடுத்து, உள்ளங்கையில் விட்டு ஓம் வித்யா தத்வாயநமஃ என்று சொல்லிய பிறகு, அந்தத் தீர்த்தம் சாப்பிட்டு மறுபடியும்,

ஒரு உத்தரணி ஜலம் எடுத்து, உள்ளங்கையில் விட்டு ஓம் சிவதத்வாயநமஃ என்று சொல்லிய பிறகு, அந்தத் தீர்த்தம் சாப்பிடவேண்டும்.

இவ்வாறு மூன்றுமுறை சாப்பிட்டு முடிந்தவுடன் குட்டை அல்லது வேஷ்டி முனையை எடுத்து ஜலத்தில் நனைத்துப் பிழிந்து இரண்டு கண்களையும், வாயையும் துடைத்துக்கொள்ளவேண்டும். பிறகு,

ஆள்காட்டும்விரலை நீக்கி, பெருவிரல் நடுவிரல் மோதிர விரல்களால் விபூதி எடுத்து இடது உள்ளங்கையில்வைத்து, வலதுகை மோதிரவிரல் நடுவிரல் ஆள்காட்டும் இம்மூன்று விரல்களால் ஜலம் எடுத்து, ஓம்சிவ, ஓம்சிவ, ஓம்சிவ என்று மூன்றுமுறை மனதினால் நினைத்துக்கொண்டே, ஷை விபூதியில் மூன்றுமுறை ஜலம்விட்டு, விபூதியுள்ள இடது கையை வலது தொடையின் மீதுவைத்து, வலது உள்ளங்கையால் அந்த விபூதியைமூடி, சிவ சிவ சிவ என்று மூன்று

முறை மனதில் நினைத்து முடிந்தவுடன் விபூதியைக் குழைத்து, வலதகை மோதிர விரலால் இடது உள்ளங் கையில், ஓம் என்று எழுதி, மறுபடியும் விபூதியைக் குழைத்து,

வலது இடது கைகளின், மோதிரவிரல் நடுவிரல் ஆள் காட்டும் ஆறுவிரல்களையும், சிரசிற்குமேல் கொண்டுபோய்ப் பின்புறமாய் மடித்து ஒன்றாய்ச்சேர்த்து, ஓம் ஈசாயந மூர்த்தியாயநமஃ ஓம் ஈசாயந மூர்த்தியாயநமஃ, ஓம் ஈசாயந மூர்த்தியாயநமஃ என்று மூன்றுமுறை மனதில் நினைத்து மூன்றுமுறை, சிரசின் உச்சியை ஆறு விரல்களால் தொட வேண்டும்.

பிறகு, விபூதியைக் குழைத்து, ஓம் தத்புருஷ வஸ்த்ராயநமஃ, ஓம் தத்புருஷ வஸ்த்ராயநமஃ, ஓம் தத்புருஷ வஸ்த்ராயநமஃ என்று மூன்றுமுறை மனதில் நினைத்து மூன்றுமுறை நெற்றியில் வைக்கவேண்டும். பிறகு,

விபூதியைக் குழைத்து, ஓம் அகோர இருதயாயநமஃ, ஓம் அகோர இருதயாயநமஃ, ஓம் அகோர இருதயாயநமஃ என்று மூன்றுமுறை மனதில் நினைத்து மூன்றுமுறை மார்பில் வைக்கவேண்டும். பிறகு,

விபூதியைக் குழைத்து, ஓம் வாமதேவ குய்யாயநமஃ, ஓம் வாமதேவ குய்யாயநமஃ, ஓம் வாமதேவ குய்யாயநமஃ, என்று மூன்றுமுறை மனதில் நினைத்துக்கொண்டே, வலது இடது கைகளின் ஆறுவிரல்களால் நாபியை (தொப்பிளை)த் தடவேண்டும். பிறகு,

வலதுபுஜம் இடதுபுஜம் நடுக்கைகள் கணுக்கைகளும், மாறுதலாய் முழங்கால் பாத மணிக்கட்டு விலா இடுப்பு கழுத்து முதலான ஒவ்வொரு இடங்களிலும், ஓம் ஸத்யோசாதாயநமஃ, ஓம் ஸத்யோசாதாயநமஃ, ஓம் ஸத்யோசாதாய நமஃ என்று மூன்றுமுறை மனதினுல் நினைத்து மூன்று

முறை விபூதியை அந்தந்த இடங்களில் இடவேண்டும். விபூதி இட்டு முடிந்தவுடன் விபூதிகை அலம்பிக் கையி லிருக்கும் விபூதி ஜலத்தில் மூன்று துளி, சிவ சிவ சிவ என்று மனதில் நினைத்துச் சாப்பிட்டு முடிந்தவுடன்.

ஒரு உத்தரணி ஜலம் வலது கையில் விட்டுக்கொண்டு, ஓம் ஆத்ம தத்வாயநமஃ, என்று சொல்லி முடிந்தவுடன் அந்த தீர்த்தம் சாப்பிட்டு, மறுபடியும்,

உத்தரணிஜலம் கையில் விட்டுக்கொண்டு, ஓம் வித்யா தத்வாயநமஃ என்று சொல்லி முடிந்தவுடன் அந்தத் தீர்த் தம் சாப்பிட்டு மறுபடியும்,

உத்தரணிஜலம் கையில் விட்டுக்கொண்டு, ஓம் சிவதத் வாயநமஃ என்று சொல்லி முடிந்தவுடன் அந்த தீர்த்தம் சாப்பிடவேண்டும்.

இவ்வாறு மூன்றுமுறை ஆசமனம் செய்து முடித்த பின், வலதுகைப் பெருவிரல் மோதிரவிரல்களை ஒன்ருய்ச் சேர்த்து அடியில் சொல்லப் போகும் மந்திரங்களைச் சொல்லி அந்தந்த இடங்களை அவ்விரல்களின் நுனியால் தொடவேண்டும். இதைப் பாடஞ்செய்து கொள்ளுங்கள்.

ஹர என்று வலது கண்ணையும், ருத்ர என்று இடது கண்ணையும், சங்கர என்று வலது காதையும், நீலலோஹித என்று இடது காதையும், பீம என்று வலது நாசியையும், விஜய என்று இடது நாசியையும், தேவ தேவ என்று வாயையும், உற்பவ என்று தொப்பிளையும், கபாலீச என்று சிரசு உச்சியையும், சிகாயநமஃ என்று குடுமியையும், இருத யாயநமஃ என்று மார்பையும், இவ்வாறு ஒவ்வொரு மந்திர மும் சொல்லி மேற்சொல்லிய ஒவ்வோரிடமும் தொட வேண்டும். அந்தந்த இடங்களைத்தொட்டு முடிந்தவுடன் கண்களைமூடி, தனது குருவை இருதயகமலத்தில் நிறுத்தி அவரது ரூபத்தை உள்முகமாய் மனக்கண்ணுல் பார்த்து,

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு குருர் தேவோ மஹேஸ்வரः
குரு ஸாக்ஷாத் பரப் ப்ரஹ்மா தஸ்மை ஸ்ரீ குரவேநः.

என்று மனதினுல் நினைத்துக் கும்பிட்டுப் பிறகு, தன் உபாசனுமூர்த்தியை அதாவது தனக்கு எந்த தேவதையின் மீது பிரீதியோ என்முல், கணபதியோ, சுப்ரமண்யனோ, சிவனோ, விஷ்ணுவோ, பார்வதியோ இந்த தேவதைகளில் எந்த தேவதையின் மீது பிரீதியோ, அந்த தேவதையை நன்ருய்த்திருஷ்டித்துப்பார்த்து அந்த ரூபத்தைக் கண்களை மூடி, புருவமத்தியில் நிறுத்தவேண்டும். அப்போது அந்த ரூபம் அங்கு இருப்பதாய்க் காணப்படும். பிறகு இந்நூலாசிரியர் பூர்வஜன்ம இச்ஜன்ம சரித்திரத்தில் மேற்சொல்லிய தேவதைகளுக்கெல்லாம் வெவ்வேருய்ச் சொல்லியிருக்கும் அஷ்டோத்தர சதநாமங்களைப் பாடம்செய்து கண்களை மூடி, வில்வமோ அல்லது திருத்துளாவோ, (துளசியோ) இவைகளை மனக்கண்ணுல் பார்த்தவுடன் புருவமத்தில் அவைகள் காணப்படும்: அதைக்கொண்டு உள்முகமாய் மனக்கையால் ஒவ்வொரு வில்வமாய் எடுத்து, முன் பாடம் செய்து வைத்த மந்திரங்களினுல் அர்ச்சனை செய்ய வேண்டும். இவ்வாறு செய்து முடிந்த பிறகு, மனதினுல் தூப தீப நைவேத்தியம் காட்டிப் பிறகு, இதனடியில் சொல்லப் போகும் ராஜயோகம் மந்திரம் ஜபம் செய்யவேண்டும்.

விஷ்ணு பக்தர்கள் பதிமூன்று இடங்களில் ஸ்ரீ சூர்ணம் இடவேண்டிய மந்திரங்களைச் சொல்லுகின்ருேம். அந்ததந்த இடங்களில் அந்தந்த மந்திரங்களைச் சொல்லி ஸ்ரீசூர்ணம் இடவேண்டும்.

உச்சியில், ஓம் தத் ஸத் ஸ்ரீ பரப் பிரம்மணேநமः. நெற்றியில், கேசவாயநமः நாபியில், நாராயணுயநமः. மார்பில், மாதவாயநமः. கண்டத்தில், கேசவாயநமः. வலது அல்லேயில், வாமநாயநமः, இடது புஜத்தில், ஸ்ரீத

ராயநமஃ, இடது கழுத்தில், ருஷீகேசாயநமஃ, இடுப்பு பின்புறம், பத்மநாபாயநமஃ. புறங்கழுத்தில், தாமோத ராயநமஃ. என்று பதிமூன்று இடங்களிலும் பதிமூன்று மந்திரங்களைச் சொல்லி இடவேண்டும். இந்த மந்திரங் களுடன் ஸ்ரீசூர்ணம் அணிந்து முன் சொல்லியதுபோல் குருவை ஸ்துதிசெய்து கும்பிட்டு, கண்களைமூடி உங்கள் உபாசநாமூர்த்தியை புருவமத்தில் நிறுத்தி அதை மனக் கண்ணுல் பார்த்து திருத்துளாவினுல் (துளசியினுல்) அர்ச் சனை செய்யவேண்டும். மேற்சொல்லிய பூஜையும் அடியில் சொல்லப்போகும் "ஸோஹம்" மந்திரஜபமும் செய்து முடியும் வரையில் கண்களைத் திறக்காமலிருந்து, ஜபம் செய்து முடித்த பிறகு கண்களைத் திறந்து வெளிவந்து போஜனம்செய்து தம் தம் கார்யங்களைச் செய்யவேண்டும்.

உலகத்தில், வாசகம் மந்தம் மானசம் என்று மூன்று விதங்களாய் மந்திரங்களைச் ஜபம் செய்து வருகின்றுர்கள். அது எவ்வாறெனில், இதரர்கள் கேட்கும்படி மந்திரம் வாக்கினுல் ஜபம் செய்து வருவது வாசகமென்றும், இதரர் களுக்குக் கேட்காதபடி உதட்டை முணமுணவென்று அசைத்து மந்திரம் ஜபம் செய்துவருவது மந்தமென்றும், மந்திரம் மனதினுல் நினைத்து ஜபம் செய்துவருவது மானச மென்றும் சொல்லப்படும். வாசகமாய் மந்திரம் ஜபிப்பது ஆயிரமடங்கு பலன் உண்டாகும். வாசகமாய் மந்திரம் ஜபிப்பதைவிட மந்தமாய் மந்திரம் ஜபிப்பது பதினுயிரம் மடங்கு பலன் அதிகம், மந்தமாய் ஜபிப்பதைவிட மானச மாய் ஜபிப்பது நூறுயிரம் மடங்கு பலன் அதிகம்.

உலகத்திலுள்ள ஜனங்களெல்லோரும், இம்மூன்று விதங்களாய் விசேஷமாய் ஜபம் செய்து வருகின்றுர்களே யொழிய, மந்திரங்களை யக்ஞோபவீதமென்னும் நூலுடன் சேர்த்துச் ஜபம் செய்வதில்லை.

இந்த ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில் சொல்லியிருக்கும் மந்திரங்களின் உபதேசமெல்லாம், யஜ்ஞோபவீதமென்னும் சுவாசத்துடன் சேர்த்து ஜபம்செய்து வரவேண்டிய மந்திரங்களாகவே இருக்கும். இவ்வாறு ஜபம் செய்துவந்தால் முன்சொல்லியவைகளைவிட கோடி மடங்கு அதிக பலத்தைத்தரும். ஆதலால், இதில் இனி சொல்லப்போகும் இரண்டு மந்திரங்களை, சுவாசத்துடன் சேர்த்து, உள்ளுக்கிழுத்தும் வெளியில் விட்டும் ஜபம் செய்து வரவேண்டும்.

ஐயா! ராஜயோகமே மிகவும் சிரேஷ்டமானது ஆதலால், இந்த ராஜயோகம் ஜபம் செய்யவேண்டுமென்று நினைக்கப்பட்ட ஸ்திரீகளாயினும் புருஷர்களாயினும் முன் சொல்லியதுபோல் காலை ஏழுமணிக்கு ஸ்நானம் செய்து, மந்திர பூர்வகமாய் விபூதியோ, அல்லது ஸ்ரீசூர்ணமோ அந்தந்த அவயவங்களில் அந்தந்த மந்திரங்களைச்சொல்லி இடவேண்டும். இவ்வாறு செய்வாராகில் தேக சுத்தி, வாக்கு சுத்தி செய்து முடித்ததாகும்; பிறகு மனோசுத்திக்காக தன் வீட்டில், சப்தங்கள் கேளாமலும் காற்று அடிக்காமலும் இருக்கும் ஓர் ஏகாந்த இருட்டு அறையை பூஜை வீடாய் ஏற்படுத்தவேண்டும். பிறகு அவ்வறையை ஒட்டடை அடித்து சுண்ணும்புபூசி பசுஞ்சாணத்தினால் மெழுகி காரையிடித்த சுண்ணும்பு மொக்குப்போடாமல் நல்ல மாக்கோலமிட்டு அதில் ஒரு பெரிய மணையை அமைத்து அதன்மீது மான்தோல் விரித்து அதன்மேல் அபானவாயு படாவண்ணம் அத்தோலின் மேல் வெள்ளை வஸ்திரம் மடித்துப்போட்டு தயார் செய்து வைக்கவேண்டும்.

மான்தோல் விரித்து அதன்மீதுட்கார்ந்து ஜபம் செய்வதற்குக் காரணம் யாதெனில்; பூமிககு இழுக்கும் தன்மையுண்டு. துணியை பூமியின்மீது விரித்து அதன்மேல் உட்கார்ந்து ஜபம்

செய்துவந்தாலும் சரி, அல்லது மணையின்மீ துட்கார்ந்து ஜபம் செய்துவந்தாலும்சரி. ஜபத்தின்பலன் புருஷனை அடையவிடா மல், காந்தம் ஊசியை இழுப்பதுபோல் பூமி, புருஷன்செய்யும் ஜபத்தின் பலத்தை ஆகர்ஷித்துக் (இழுத்துக்) கொள்ளும். மான்தோல்மீது உட்கார்ந்து ஜபம் செய்துவந்தால் பூமிக்கு இழுக்க சக்தியிராது. ஆதலால், மான்தோல்மீது உட் கார்ந்து ஜபம் செய்யவேண்டுமென்று, ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லி யிருக்கின்றார். மான்தோல்மீது உட்கார்ந்து ஜபம் செய்யவேண்டுமென்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல் லிய ரஹஸ்யம் இதுவேயாம். மணையின்மீது மான்தோல் விரித்து உட்காராமல், பூமியின்மீது தோல்விரித்து உட்கார்ந்து ஜபம் செய்துவந்தால் நல்லசமயத்தில் சிற்றெரும்புகள் பீஜத்தி ணிடம் சென்று சுருக்கென்று கடிக்கும். அச்சமயம் புருஷனது ஜபத்திற்கு பின்னமுண்டாகும். ஆதலால், மணையின்மீது மான்தோல் போட்டு அதன்மேல் வெள்ளைவஸ்திரம் மடித்துப் போட்டு உட்கார்ந்து ஜபம் செய்துவரவேண்டும்.

எந்த ஜபமாகிலும், பூஜையாகிலும், காயத்ரீ ஜபமாகி லும் செய்து வரப்பட்டவர்களுக்காக மெதுவாய்ப் பாட னம்செய்த மான்தோல், G. ரங்கநாதன் பிரதர்ஸ் கோர்ட்டு வியூ நந்தலூர் போஸ்ட்டு, கடப்பைஜில்லா. இவ்விடத்தில் விற்பனை செய்கின்றார்கள்: இந்தியாவிற்குள் இருக்கப் பட்ட வர்கள் ரூபா ஐந்தும் (5-0-0), இரங்கூன் பினங்கு, சிங்க பூர், சிலோன் முதலாகிய அன்னிய தேசங்களில் இருக்கப் பட்டவர்கள் ரூபா ஆறும் (6-0-0) மேல்கண்ட விலாசத் திற்கு முன்னதாய் மணியார்டர் செய்தால், அவர்கள் மான் தோல் ரிஜிஸ்டர்மூலமாய் அனுப்பிவிடுவார்கள். சிலர் புள்ளிமான்தோல் சிரேஷ்டமென்று சொல்லுவார்கள்: அது அறியாத்தன்மையே யன்றி வேறல்ல; புள்ளிமான் தோல்மீது உட்கார்ந்து ஜபம்செய்வது சிரேஷ்டமென்றும்,

மற்ற மான்தோல்மீது உட்கார்ந்து ஜபம் செய்வது சிரேஷ்டமல்லவென்றும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்ல வில்லை, எந்தத்தோல்மீது உட்கார்ந்து ஜபம் செய்தபோதி லும் பூமிக்கு இழுக்கும் சக்தி யிராது; ஆதலால், சம்சார சம்பந்தமான கிருஹஸ்தா ஸ்ரம தர்மத்தி லிருக்கப்பட்ட வர்கள், எந்த மான்தோல்மீதாகிலும் உட்கார்ந்து ஜபம் செய்துவரலாம். புலித்தோல்மேல் உட்கார்ந்து ஜபம்செய்ய லாகாது; புலித்தோல் வீட்டிலும் வைத்திருக்கலாகாது; வைத்திருந்தால் விசேஷ கஷ்டங்கள் அடிக்கடி சம்பவித் துக்கொண்டே யிருப்பது மல்லாமல் தாரித்திரியத்தையும் உண்டாக்கும்: புலி சொரூபம் எப்படிப் பட்டதென்றால், ஐம்புலன்களையும் அடக்கி பாய்ச்சலாய் உட்கார்ந்து, சிலனேரம் மனதை மிருகத்தின்மேல் ஒரே நாட்டமாய் நிறுத்தி, பிறகு ஓர் பாய்ச்சலாய் மிருகத்தின் கண்டத்தி னிடம் பாய்ந்து, கண்டத்தைக் கவ்விக் கடித்து இரத் தத்தை எல்லாம் உறிந்து, அது எவ்வளவு பெரிய மிருகமா யிருந்தபோதிலும், வாயால்கடித்து இழுத்துக்கொண்டு போகும். அப்படிப்பட்ட புலித்தோல்மேல் யார் உட்கார வேண்டுமென்றால், ஐம் புலன்களையும் அடக்கி மனதை பரமாத்ம சொரூபத்தில் ஐக்கியம்செய்து வரப்பட்ட † சன்யாசிகள் மாத்திரம் புலித்தோல்மீது உட்கார்ந்து ஜபம்செய்ய வல்லவர்களே யொழிய, மற்றவர்களல்லர். ஆத லால், மேற்சொல்லிய விலாசத்திலிருந்து மான்தோல் வர வழைத்து அதன் மேல் வெள்ளை வஸ்திரம் மடித்து விரித்து வடக்குமுகமாய் சித்தாசனத்துடன் அத்தோல்மேல் உட் கார்ந்து, அடியில் சொல்லப்போகும் இரண்டு மந்திரங் களையும் சுவாசத்துடன்சேர்த்து, உள்ளுக்கும் வெளிக்கு மாய் இழுத்து ஜபம் செய்யவேண்டும்:

† சந்யாசி = சகலமும் நாசம் செய்தவன் சந்யாசி.

'ஸோஹம்' மந்திரம் சுவாசத்துடன் சேர்த்து
ஜபம் செய்யும் படம்.

ஜபம்செய்வதற்குமுன், மிகவும் உயர்ந்த பளிங்குசாம்பிராணி தூள்செய்து தூபம்போட்டு, இந்நூல் விற்கும் கம்பெனியில் பூஜை அறைக்காகச் செய்வித்து விற்பனைசெய்யும் மிகவம் உயர்ந்த பரிமளமுள்ள ஊதுவத்திகளை வரவழைத்து அதில் இரண்டு வத்திகளை எடுத்து ஜலத்தில் நனைத்துக் கொளுத்தினால் அவ்வத்தி மிகவும் நிதானமாய் ஒன்றரை மணிநேரம் எரிந்து, அதன் சுகந்தவாசனை அவ்வறை எல்லாம் நிறைந்திருக்கும். அச்சமயம் இதரர்கள் உள்ளே வாராதபடி கதவைச்சாற்றி தாள்போட்டு மனதை ஒரே நாட்டத்தில் நிறுத்துவதற்காக முன் அமைத்து வைத்திருந்த மணையின்மீது சித்தாசனத்துடன் எதிரிலிருக்கும் படத்தில் ☞ உட்கார்ந்து கைகளால் சின்முத்திரையைப் பிடித்துக்காட்டி இருப்பதுபோல், நீங்களும் உட்கார்ந்து கண்களை மூடி சின்முத்திரையை விரல்களால் பிடித்து முகத்தை நிமிர்ந்து இடுப்பு கூன்வளையாமல் நேராய் நிறுத்தி சித்திரப் பதுமைபோல் அசையாமலிருந்து, இதையே 'குரு' வாக்காய் நினைத்து இதனடியில் சொல்லப் போகும் "ஸோஹம்" என்னும் இரண்டு மந்திரம் பிரதி தினம் காலை, பகல், மாலை இம்மூன்று வேளைகளிலும் ஜபம் செய்துவரவேண்டும். இவ்வாறு பிரதிதினம் தவறாமல் ஜபம் செய்துவந்தால் மனோசுத்திஉண்டாகும். எதிரில் வலதுகைப்படத்தில் ☞ அம்பினால் காட்டியிருக்கும் மோதிரவிரலே 'ஸோ' என்னும் மந்திரம்; மேற்படி படத்தில் அம்பினால் காட்டியிருக்கும் நடுவிரலே 'மனது' மேற்படி படத்தில் அம்பினால் காட்டியிருக்கும் ஆள்காட்டும் விரலே 'சுவாசம்'; அதுபோல், இடதுகைப் படத்தில் அம்பினால் காட்டியிருக்கும் ஆள்காட்டும் விரலே 'ஹம்' என்னும் மந்திரம்; மேற்படி படத்தில் அம்பினால் காட்டியிருக்கும் நடுவிரலே 'மனது'; மேற்படி படத்தில் அம்பினால்

காட்டியிருக்கும் மோதிரவிரலே சுவாசம்; மந்திரம், மனது, சுவாசம் இம்மூன்றையும் ஒன்றுய்ச்சேர்த்து உள்ளுக்கிழுத்தவுடன் மனது, வெளியில் ஓட அவகாசமிராமல் மந்திரம் சுவாசம் இவ்விரண்டின் மத்தியில் கட்டுப்பட்டு, ஒரே சமாதி நிலையில் நின்றுவிடும். இவ்வாறு சமாதிநிலையில் நின்றிருந்தால் அப்போது, மனம் இறந்துவிடும்: மனம் இறந்துவிடுவதனுல், தான் வஸ்துக்களின்மீது வைத்திருந்த இச்சைகளும், செய்யவேண்டிய கார்யங்களும் மறந்து எந்த நினைவுமில்லாமல் தான் தானுயிருந்து, தேனையுண்ட வண்டுபோல் ஆனந்த நித்திரையில் சொக்கியிருப்பார்கள்; இதற்குப் பட்டினத் தடிகள் பாடல் பிரமாணம்:

சினந்தனை யற்றுப் பிரியமுந்தா னற்று செய்கை யற்று
நினைந்தது மற்று நினையாமையு மற்று நிர்ச்சிந்த ஞய்த்
தன்ந்தனியே யிருந் தானந்த நித்திரை தங்கு கின்ற
வனந் தனி லென் றிருப்பே னத்தனே கயிலாயத்தனே.

"ஸோஹம்" மந்திரத்தால் மனதைக் கட்டுங்கள் என்று நேராய்ச் சொல்லாமல், மேற்சொல்லிய பாடலாய் பட்டிணத்தடிகள் பாடினுர்கள். மேற்படி சுவாமிகள்சொல்லிய ரகஸ்யார்த்தம் இதுவேயாம்: ஆதலால், எல்லோரும் இதில் சொல்லியதுபோல் ஸோஹம் மந்திரம், ஜபம் செய்துவாருங்கள்: வலது இடது கைகளின் மத்தியில் இந்நூலாசிரியர் சித்தாசனத்தில் சின்முத்திரையுடன் உட்கார்ந்து, கண்களை மூடிக் காட்டியதுபோல் நீங்களும் உட்கார்ந்து இந்நூலாசிரியர் கண்களை மூடி, வாய்த்திறவாமல் மூக்கு நுனியில் திருஷ்டிவைத்து சுவாசத்தைக் கவனித்து 'ஸோ' என்னும் மந்திரம், மனது, சுவாசம் இமமூன்றையும் ஒன்றுய்ச்சேர்த்து, மூக்கு துவாரங்களின் வழியாய் மிகவும் நிதானமாய் இழுத்துக் காட்டுவதுபோல் நீங்களும் இழுத்து, மறுபடியும் சுவாசம் வெளிவிடும்போது அந்த

சுவாசத்துடன் கூடவே 'ஹம்' என்னும் மந்திரம் சேர்த்து இந்நூலாசிரியர் மூக்கின் துவாரங்களின் வழியாய் வெளியில் விட்டுக் காட்டியதுபோல் நீங்களும் விடவேண்டும். ஆனால் நீங்கள், சுவாசம் உள்ளுக்கிழுக்கும்போது வலது இடது மூக்குத் துவாரங்களை கவனிக்காமல் சுவாசத்தை மாத்திரம் கவனிக்கவேண்டும். உங்கள் மனதிற்கு நன்ருய்ப் பிடிபடும்படி இப்படம் ஓர் குறியாய்க் காட்டப்பட்டது. இவ்விதமாய் ஒவ்வொரு சுவாசத்திலும் முன்சொல்லிய இரண்டு மந்திரங்களையும் சேர்த்து விட்டுக்கொண்டே இருக்கவேண்டும் ஆதலால், சொல்லாத மேற்சொல்லிய மந்திரம் உங்களுக்குக் குறியாய்ச் சொன்ஞேம். காலை பகல் மாலைகளில் இக்குறியைப் பார்த்து, ஸோஹம் மந்திரத்தில் மனதைச்சேர்த்து அம் மனதின் அன்பால், மேற்படி மந்திரம் ஜபம் செய்து தெளிவு பெற்றுள்ளவராய்த் தவம் செய்வீர்களாகில், பராபர வஸ்துவாகிய கடவுள் வசப்படுவார்:

எட்டுதற்கரிய, இவ் ஒரு மொழியை, குருவாக்காய் நம்பி நிஷ்டை சாதிப்பாராகில், சகல பாபமும் ஒழிந்து பிறப் பிறப்பு நீங்கும்: இதற்கு அகஸ்தியர் பாடல் நெஞ்சறிவிளக்கம் பிரமாணம்;

கூருத மந்திரத்தின் குறியைப் பார்த்துச்
சித்தமொன்று யந்திசந்தி யுச்சிக் காலம்
தேவனுக்கும் பூசை செய்து தெளிவுபெற்று
குற்றமது வையாமல் மன தன்பாலே
குருபரனை நோக்கியடா தவமே செய்து
பற்றுசை வைத்து மிகப்பார்க்கும் போது
பராபரமும் கை வசமா யாவானே

"எட்டுதற் கரிய சற்குரு வருளா
லியம்பு மோர் மொழியினைப் பெற்றே

நிட்டை சாதித்தே சகல கேவலங்க
ணீங்கிடிற் பிறப் பறு மே.''

இதுபோல், ஒவ்வொரு குடும்பத்திலுள்ள ஸ்திரீ புருஷர்களும் முன்சொல்லியதுபோல் ஓர் இருட்டு அறையைப் பூஜைவீடாய்ச் செய்து, அதில் மணையும் அதன்மேல் மான்தோலும் போட்டு வடக்குமுகமாய் உட்கார்ந்து இடுப்புக் கூன் வளையாமல் நேராய் நிமிர்ந்து சித்திரப்பதுமைபோல் நின்று மேற்சொய்லிய "ஸோ ஹம்'' என்னும் இரண்டு மந்திரங்களையும் வாக்கினல் சொல்லாமல் மனதுடன்சேர்த்து உள்ளுக்கிழுத்து சாதனம் செய்துவருவீர்களாகில் அந்த க்ஷணமே உங்கள் மனதானது வெளியில் ஓட அவகாசமிராமல், மந்திரம் சுவாசம் இவ்விரண்டின் மத்தியில் கட்டுப்பட்டு ஒடுங்கிவிடும். இது தேவரகஸ்யம். இந்த தேவரகஸ்யம் உங்களுக்குச் சொன்னேம் சொன்னேம். இவ்விதமாய் சிலது நாள் பழகிவந்தால், சரீரம் சிரசு முதலானவைகள் அசையாமல் சிலாவடிவமால் (கோவில்களி லிருக்கும் கல் பொம்மைபோல்) நின்றுவிடும். இப்படி நின்றுவிடுவதே ஜாக்கிரத்தில் சுஷுப்தி யென்றும், தூங்காமற் றூங்கிச் சுகம் பெறுவதென்றும் சொல்லப்படும். அச்சமயம் ஓர் விதமாகிய சுகமுண்டாகும். அந்தச் சுகத்தை அனுபவித்துப் பாருங்கள். இவ்விதமாய் அப்பியாசம் செய்துவருவதே ராஜயோகம் என்று வேதங்களின் முடிவாகிய அந்தரார்த்தம். இதற்கு, பிரபுலிங்க லீலை, சிவாஞான சித்தியார்தாயுமானவர் பிரமானம்.

*† நெஞ்சஞ் * சோகம் பாவனையி னிற்க*
நிறுத்தி விடயங்க
ளஞ்சுந் துறவாத் துறந்த சிவயோகியொருவ
னடி யிணையிற்

---

† நெஞ்சஞ்=மனம்; * சோகம்=சோஹம் மந்திரம் ஜபம் செய்தல்.

றுஞ்சுந் திருமான் முதலமா ருள்ளமவனைத்
துதித் திறைஞ்சா
தெஞ்சுங் கவ மாமுனிவ ரிலை
யென நான்மறையுமியம்புமால்.

கண்டவிவை யல்லேனா னென்றகன்று காணாக்
கழிபரமு நானல்லே னெனக்கருதிக் கசிந்த
தொண்டினொடு முளத்தவன்றா னின்றகலப் பாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி
விண்டகலு மலங்களெல்லாங் கருடதியா னத்தால்
வீடமொழியு மதுபோல விமலதையு மடையும்
பண்டமறை களுமதுநா னானே னென்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே.

காராரு மாணவக் காட்டைக் களைந்தறக்
கண்டகங் காரமென்னும்
கல்லைப் பிளந்துநெஞ் சமான பூமிவெளி
காணத்திருத்தி மேன்மேற்
பாராதி யறியாத மோனமாம் வித்தைப்
பதித்தன்பு நீராகவே
பாச்சியது பயிராகு மட்டுமோ மாயையவன்
பறவையணு காதவண்ண
நேராக நின்றுவிளை போகம் புசித்துய்ந்த
நின்னன்பர் கூட்டமெய்த
நினைவின் படிக்குநீ முன்னின்று காப்பதே
நின்னருட் பாரமென்று
மாராரு மறியாத சூதான வெளியில்வெளி
யாகின்ற துரியமயமே
யண்டபகி ரண்டமு மடங்க வொருநிறைவாகி
யாநந்த மானபரமே.

விஷயங்கள் யாவும் "ஸோஹம்" மந்திர ஜபத்தால் மறந்திருக்கும் யோகியை, பிரம விஷ்ணுக்களும் உபசரிப் பார்கள்: என்றால், ஒருவன் தன்னை கருடனாய் பாவித்து

பாம்பின் விஷத்தை அவன் மந்திரபலத்தால் நீக்குவது போல், "ஸோஹம்", மந்திரம் ஜபம் செய்துவரப்பட்டவர் கள், அம் மந்திர பலத்தால் பூர்வ ஜன்மங்களில் விஷம் போல் ஏறிவந்த, பாபகர்மங்கள் யாவும் இந்த "ஸோஹம்" மந்திர ஜபத்தின் சுடரால் நீங்கப்பெற்று தன்னை மறந்து சொக்கியிருப்பான்: என்றால்,

பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசமென்னும் ஐந்து பூதங்களினால் உண்டாகிய சரீரமென்னும்விருக்ஷத்தில், மன மானது போய்ச் சேர்ந்து அஞ்ஞானமென்னும் இருளினால் மூடப்பட்டு, தனது நிஜசொரூபத்தை மறந்து, கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகசர்மமென்னும் ஐந்து இந்திரி யங்களின் வழியாய், ஆணவமென்னும் மலத்துடன் சேர்ந்து உலகவியாபாரத்தில் சென்றுகொண்டிருக்கும் மனதை, அவ்வழியாய்ச் செல்லவிடாதபடி நிறுத்த, இதில் சொல்லி யிருக்கும் குரு வாக்காகிய "ஸோஹம்" மந்திரத்தில் அம மனதைச்சேர்த்து, அன்புயென்னும் நீரைப்பாச்சி தேஹத் திற்குள் ஒருவரும் அறியாமலிருக்கும் சிதாகாசத்தில் அம மனதை ஐக்கியம் செய்து, அங்கு, மனம் புத்திகளை எள்ளள வேனும் வராதபடி "ஸோஹம்" மந்திரத்தைச் ஜபம் செய்து வரவேண்டும்: அவ்வாறு ஜபம் செய்துவந்தால், ஸப்த, ஸ்ப ரிஸ, ரூப, ரச, கந்தங்களாகிய, கேட்பது சரீரத்தின் மேலிருக் கும் தோலால் அறிவது பார்ப்பது ருசியறிவது வாசனைப் பார்பது, முதலானவைகள் எதுவும் தோன்றாமல் தன் சொரூபத்திலேயே மனம், அசையாத தீபம்போல் சேர்ந் திருக்கும். இவ்வாறு சேர்ந்திருப்பதே நனவிற் சுழுப்தி யென்றும், தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவதென்றும் சொல்லப்படும்: இத்தகைய ஸ்திதியிலிருக்கும் ஸ்திரீ புருஷர் களுக்கு மனோ ராஜ்ஜிய வியாபாரங்களெல்லாம் ஒடுங்கித் தன் நிஜ சொரூபத்திலேயே அசையாத தீபம்போல் நின்று,

உள்ளக் குளிர்ச்சியிலேயே விரிதலின்றிருப்பார்கள்: மனம் உதிக்குமிடத்திலேயே உதிக்கவிடாதபடி "ஸோஹம்" மந்திர ஜபத்தால் நாசம் செய்துவிடவேண்டும்; ஆதலால் எல்லா ஜப தபங்களிலும், இந்த "ஸோஹம்" ஜபமே மிகவும் சிரேஷ்டமானது, உபநிஷத்துகளின் ரஹ்பம் தெரிந்தவர்களால் இதை அறிந்துக்கொள்ள,மறைவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஸோஹம் மந்திரம் இதில் சொல்லியது போல் உபதேக்க அனேகர்களுக்குத் தெரியாமல் உதட்டை அசைத்தோ, அல்லது மனதினுலோ ஸோஹம் மந்திரம் ஜபம் செய்துவரும்படி உபதேசிக்கின்ருர்கள்; அவ் உபதேசங்களினுல் மனேலயம் உண்டாகவேமாட்டா; மனம் லயப்பட இதில் சொல்லியதே சரியானமார்க்கம் (வழி)· ஆதலால், இந்த "குரு" உபதேகத்தை வாசிப்பவர்களுக்கெல்லாம் இங்கு உபதேசமாய்ச் சொன்னேம்; சொன்னேம்; இதுபோல் எல்லா ஸ்திரீ புருஷர்களும் ஜபம் செய்து வரவேண்டுமென்பதே அடியேனுடைய கருத்து,

இந்நூலாசிரியர் வலது இடது மூக்குத் துவாரங்களில் காட்டியிருக்கும் அம்புகளே சுவாசம் (மூச்சு). இந்த மூச்சு கண்களுக்குக் காணப்படாதது. ஆதலால் அந்த மூச்சை மேற்படி படத்தின் மூக்கில், அம்புபோல் காட்டியிருக்கின்ருேம். அந்த அம்பு 'ஸோ' என்னும் மந்திரத்தை மூக்கு ரந்திரங்களின் வழியாய் உள்ளுக் கிழுத்துக்கொண்டு சென்று, மறுபடியும் மூச்சு வெளிவரும்பொழுது 'ஹம்' என்னும் மந்திரத்தை இழுத்துக்கொண்டு வருகின்றது. இதுபோல் ஒவ்வொருவரும் சுவாசத்துடன் 'ஸோ' என்னும் மந்திரத்தைச் சேர்த்து உள்ளுக்கிழுத்து, சுவாசம் விடும்போது 'ஹம்' என்னும் மந்திரத்தைச் சேர்த்து விடவேண்டும்.

இந்த ராஜயோகம் செய்யப்பட்டவர்கள் வியாபாரம்

அல்லது உத்தியோகம் செய்யச் செல்லுங்காலத்தில், தன்னை எதிர்நோக்கி வரப்பட்ட ஸ்திரீ புருஷர்களை ஏறெடுத்துப் பார்க்கலாகாது; அப்படிப் பார்ப்பதனால், பல கெட்ட எண்ணங்களுக் கிடமுண்டாகி அனேக அனர்த்தங்களில் கொண்டுவந்துவிடும். அதாவது, கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகசர்மம் என்னும் பஞ்சேந்திரியங்களில் (ஐந்து இந்திரியங்களில்) கண் என்னும் இந்திரயம் மாத்திரம் விசேஷ அனர்த்தங்களை உண்டாக்குவதற்குக் காரணமாயிருக்கின்றது. ஆதலால், அப்படிப்பட்ட அனர்த்தங்கள் உண்டாகாவண்ணம், நடந்து போகும்போது வண்டிகளின் பயமில்லாமலிருப்பதற்காக இடதுகை ஓரமாய்ச் சென்று, தலையைக்குனிந்து தனது பாதப் பெருவிரலிலிருந்து மூன்றடிதூரத்தில் திருஷ்டியை நிறுத்தி, 'ஸோ' என்னும் மந்திரத்தை சுவாசத்துடன் சேர்த்து உள்ளுக் கிழுத்து, மறுபடியும் சுவாசம் வெளியில் விடும்போது 'ஹம்' என்னும் மந்திரத்தை சுவாசத்துடன் சேர்த்து விடவேண்டும். இப்படியே ஒவ்வொரு சுவாசத்திலும் மேற்சொல்லிய இரண்டு மந்திரங்களையும் சேர்த்து விட்டுக்கொண்டே சென்று, வியாபாரம் அல்லது உத்தியோகங்கள் செய்யும்போது மாத்திரம் "ஸோஹம்" மந்திரம் ஜபம் செய்வதை நிறுத்தி, அந்தந்த வியவகாரங்களில் மனதை கவனிக்கும்படிச் செய்து வேலைமுடிந்தவுடன், மறுபடியும் மேற்சொல்லியதுபோல் "ஸோஹம்" என்னும் இரண்டு மந்திரங்களை சுவாசத்துடன் சேர்த்து ஜபம் செய்து கொண்டே வரவேண்டும். இவ்வாறு "ஸோஹம்" மந்திரம் ஜபம் செய்துகொண்டு போகும்போது தான் எந்த ஸ்தலத்தை நாடிச் செல்லுகின்றானோ அதை மறந்து அதிக தூரம் சென்றுவிடுவான். ஏனென்றால், மனம் சுவாசத்துடன் சேர்த்து "ஸோஹம்" மந்திரத்தை ஜபித்துக்

கொண்டே செல்லுவதனல், தான் குறித்திருந்த வழிதப்பி வெகுதூரம் சென்று விடுவான். மேற்படி ஜபம் நிறுத்தி உலகவியாபாரத்தில் மனதைத் திருப்பிப் பார்த்தபோது வெகுதூரம் வந்துவிட்டோமென்று எண்ணி, தான் குறித்த இடம்போக மறுபடியும் பின்னுக்கே திரும்புவான். இதை நீங்கள் பரீக்ஷித்துப்பாருங்கள்; பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாய்த் தெரியவரும்.

பகற்காலங்களில் முன்சொல்லியதுபோல் ஸோஹம் மந்திரம் ஜபம்செய்து இரவில் போஜனமுண்டு படுக்கையில் உட்கார்ந்து சிலநிமிஷங்கள் இந்நூலில் சொல்லியதுபோல் ஈசுவரனைத் துதிசெய்து இடதுகைப் புறமாய் ஒஞ்சரித்துப் படுத்து மேற்படி 'ஸோஹம்' மந்திரத்தை சுவாசத்துடன் சேர்த்து ஜபித்துக்கொண்டே நித்திரை செய்ய வேண்டும். இவ்வாறு 'ஸோஹம்' மந்திரம் சுவாசத்துடன் சேர்த்து ஜபம் செய்துகொண்டு படுத்தால் மனதானது, ஊர் வியவகாரங்களில் ஓடாமல், சுவாசம் என்னும் கயற்ருல் கட்டுப்பட்டு, சீக்கிரமாய்த் தூங்கிவிடும். இப்படிச் செய்யாமல் படுத்தால், மனதானது ஏதேதோ உதவியற்ற அனேக எண்ணங்களையெல்லாம் இரவு பன்னிரெண்டு மணிவரையில் எண்ணி எண்ணி பிறகு தூங்கிவிடும். இவை யாவும் பொழுது விடிந்தவுடன் ஞாபகமிருக்குமா என்ருலோ இராது. ஆதலால், இடதுகைப்புறமாய் ஒஞ்சரித்துப் படுத்தவுடன் ஸோஹம் மந்திரம் சுவாசத்துடன் சேர்த்து ஜபம்செய்து கொண்டிருந்தால், பதினைந்து நிமிஷத்திற்குள் மிகவும் நல்ல தூக்கம் வந்துவிடும். இதை நீங்கள் பரீக்ஷித்துப்பாருங்கள் மனோலயம் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாய்த் தெரியவரும். இதற்கு திருஷ்டாந்தம் சொல்லுகின்ருேம் கேளுங்கள்.

அடியேன் தேச ஸஞ்சாரார்த்தமாய்ப் புறப்பட்டு,

1922ளு மார்ச்சு மாதம் சிலோன், கண்டி முதலான இன்னும் அனேக ஊர்களுக்குச் சென்றிருந்தபோது, கண்டியில் ஓர் ஜவுளிவியாபாரி பிரதிதினம் ஜவுளிவர்த்தகம் செய்து இரவு மளிகையைச்சாற்றி வீடுசென்று சாப்பிட்டுப் படுக்கையில் படுத்தவுடன் அவனுக்கு தூக்கம் வராமல் இரவு சுமார் பன்னிரெண்டு மணிவரையில் பிரதிதினம் விழித்துக்கொண்டிருப்பது வழக்கமென்றும் எந்தக்காரணத்தினால் தூக்கம் வருவதில்லையென்றும் கேட்டான். நீ சாப்பிட்டுப் படுத்தபிறகு உன் மனதானது ஜவுளி கொடுக்கல் வாங்கல் விஷயத்தைக் குறித்தும், நின்ற கடன்களை கோர்ட்டில் சம்மன் செய்யவேண்டிய விஷயங்களைக் குறித்தும் சிலவழிந்துவிட்ட ஜவுளிகளை வாங்கவேண்டிய விஷயங்களைக் குறித்தும் பிறகு, குடும்ப விஷயங்களைக் குறித்தும் இவ்வாறு இன்னும் அனேக விஷயங்களில் உன் மனம் ஓடிக்கொண்டிருக்கவில்லையா என்று அடியேன் கேட்டதற்கு, அது வாஸ்தவமான விஷயமே என்று சொன்னான். நீ ஆவ்வாறு அனேக எண்ணங்களை எண்ணிக் கொண்டிருப்பதனால் உனக்குத் தூக்கம் சீக்கிரமாய் வருவதில்லை என்று அடியேன் சொல்ல, அதற்கு என்ன செய்யலாமென்று கேட்டான். இரவில் ஈசுவரனை துதி செய்து சயனித்தல் என்று இந்நூலில் எழுதியிருக்கின்றோம். அதாவது, இரவு சாப்பிட்டு யாருடனும் வீண் வியவகாரங்களைப் பேசாமல் படுப்பதற்காக படுக்கையில் உட்கார்ந்து, கண்களைமூடி இருகைகளையும் குவித்து நமஸ்கரித்து "எங்கும்பரிபூரணமாய் நிறைந்து எண்பத்துநான்கு லக்ஷ ஜீவராசிகளிலும சாக்ஷிசொரூபமாய் ஜீவாத்மாவாய் வியாபித்திருக்கும் ஓ பரப் பிரம்மமே யான் இன்று காலை முதல் சயனிப்பதற்காக படுக்கையில் உட்காரும் வரையில் அடியேன், கைகளாலும் கால்களாலும் மனதினாலும் வாக்கி

றும் தெரிந்தும் தெரியாமலும் செய்த புண்ணிய பாபங் களையெல்லாம் உனக்கு அர்ப்பணம் செய்து விட்டேன்; நீ என்னுளே அந்தர்யாமியாயும் சாக்ஷி சொரூபனாயும் இருப்பதால் யான் இன்றிரவு தூங்கி எழுந்தவுடன் என் மனதை, பாபகாரியங்களைச் செய்யவிடாமல் நல்ல காரி யங்களையே செய்யும்படிச்செய்ய, உன் கருணையென்னும் சாவியைக்கொடுத்துத்திருப்பக்கடவாய்'' என்று உதட்டை அசைக்காமல் மனதினால் நினைத்து முடிந்தவுடன் மறுபடி யும் கண்களைத்திறக்காமல் இடதுகைப்புறமாய் ஒஞ்சரித் துப்படுத்து கண்களை மூடிக்கொண்டே மூக்கு நுனிக்குறி யில் திருஷ்டி நிறுத்தி சுவாசம் மூக்குத் துவாரங்களின் வழியாய் உட்செல்லும்போது அந்த சுவாசத்துடன்கூட "ஸோ" என்னும் மந்திரத்தைச் சேர்த்து மனதினால் நினைத்து உள்ளுக்கிழுத்து, மறுபடியும் சுவாசம் வெளி விடும்போது அந்த சுவாசத்துடன்கூட "ஹம்" என்னும் மந்திரத்தைச்சேர்த்து மனதினால் நினைத்து வெளியில் விட வேண்டும். இவ்வாறு சுமார் நூறு சுவாசங்களுடன் கூட மேற்சொல்லிய இரண்டு மந்திரங்களைச் சேர்த்துச் ஜபம் செய்துகொண்டே யிருப்பாயாகில் உனக்கு அதிசீக்கிர மாய் தூக்கம்வந்துவிடும். ஆதலால், மேற்சொல்லிய ஈசுவர ஸ்துதியை இன்று பாடம்செய்து, இன்றிரவு படுக்கும் போது ஈசுவரனை ஸ்துதிசெய்து முடிந்தவுடன், இடது கைப்புறமாய் ஒஞ்சரித்துப்படுத்து முன் சொல்லியது போல் "ஸோஹம்" மந்திரம் சுவாசத்துடன் சேர்த்து ஜபம்செய்து இதன் அனுபவம் காலையில் என்னுடன் சொல்லவேண்டுமென்று அவனிடம் சொன்னேன். அவன் அன்றிரவு மேற்சொல்லியதுபோல் செய்து, படுத்த சில நிமிஷங்களுக்குள் எப்பொழுதும் வாராத மிகவும் நல்ல தூக்கம் வந்துவிட்டதென்றும், இப்படிப்பட்ட தூக்கம்

இதுவரையில் எப்பொழுதும் வரவில்லை யென்றும் எந்தக் கினவுகளு மில்லாமல் மிகவும் சுகமாய்த் தூங்கி எழுந்திருந்தேன் என்று சொல்லினன். ஆதலால், இதை வாசிக்கும் ஸ்திரீ புருஷர்கள் எல்லோரும் இரவில் போஜனமுண்டு அங்குமிங்கும் சென்று வீண்வார்த்தைகளை ஆடாமல் சீக்கிரமாய் படுக்கையில் உட்கார்ந்து முன்சொல்லியதுபோல் ஈசுவரனை ஸ்துதிசெய்து மறுபடியும் கண்களைத் திறக்காமல் இடது கைப்புறமாய் ஒஞ்சரித்துப் படுத்து "ஸோஹம்" மந்திரம் சுவாசத்துடன் சேர்த்து ஜபம்செய்து கொண்டே இருந்து தூங்குங்கள். இவ்விதமாய்த் தூங்கிய பிறகு காலை மூன்று மணிக்கு எழுந்திருக்கவேண்டும்.

இந்திரிய வியாபாரம் மனோவியாபாரம் என இரண்டு வியாபாரங்கள் நமக்குண்டு. இந்திரிய வியாபாரமென்றால், மனதை நிறுத்தவேண்டுமென்று வீட்டில் உட்கார்ந்த போது வீட்டிலுள்ளவர்கள் பேசும் சப்தங்களையெல்லாம் காதினால் கேட்டுக்கொண்டிருத்தல். மனோவியாபாரமென்றால், மனம் வெளியில் சஞ்சாரம் செய்யப்போகுதல். இவ்விரண்டும் ஒரேகாலத்தில் ஒழிப்பது மிகவும் கஷ்டமாயிருக்கும். இராத்திரி மூன்று மணிக்குப் பிரளயகாலம் போல் நிஸ்சப்தமா யிருப்பதால், அக்காலத்தில் எந்த இந்திரிய வியாபாரங்களும் இராது; அச்சமயத்தில், படுக்கைவிட்டெழுந்து மறுபடியும் தூக்கம் வாராவண்ணம் கைகால்களைச் சுத்திசெய்துகொண்டு முன்சொல்லிய ஏகாந்தமான அறையில், எறும்பு மூட்டைப்பூச்சிகளின் பாதைகள் இல்லாம லிருப்பதற்காகத் தனக்குத்தகுந்த ஒருபெரிய மணையின்மீது மான்தோல் போட்டு அபானவாயு படாவண்ணம் அதன்மேல் வெள்ளை வஸ்திரம் விரித்து வடக்கு முகமாய் உட்கார்ந்து எதிரிலிருக்கும் படத்தில்,

இந்நூலாசிரியர் ☞ வலதுகையில் காட்டியிருக்கும்



கோலார், ராபர்ட்ஸன்பேட்டை, ஸச்சிதாநந்த மடாலய உபந்யாச சபையில் சிதாகாஸ குரியை ஸ்ரீ சுவாமிகள் வலதுகையில் காட்டும்போது பிடித்த போடோ. விலை ரூபா 2, வி. பி. சிலவு பிரத்தியேகம். படங்கள் மாத்திரம் ஸதாநந்தன், வேப்பேரி போஸ்டு, சென்னை. இவ்விலாசத்தில் பெறலாம். புஸ்தகங்கள் இங்கு கிடைக்கமாட்டா.

...ncentrating the mind in the open space between the forefinger and the thumb of the right hand encircled.

...e members of the "Sachithanantha Madalayam", Robertsonpet, Kolar.

ஆகாசவடிவத்தில் மனம் லயிக்கும்படி அப்பியாஸம் செய்துகொண்டு வரவேண்டும்.

இப்படி வடதிசையை நோக்கிச்செய்வது நிஷ்காம்யம். இதனால், ஞானமடைவார்கள். கிழக்குத் திசையை நோக்கிச் செய்வது காம்யம். இதனால், அவரவர்கள் கோரிய பலன்களை மறுஜன்மத்தில் தப்பாமல் அடைவார்கள். படத்தில் காட்டிய கைக்குறியிலுள்ள ஆகாசக்குறியை அகமுகமாய் (உள்முகமாய்) கண்களைமூடி மனக்கண்ணால் பார்த்து வருவீர்களாகில் சிலமாதங்களுக்குள் மனம் அக் கைக்குறியினுள் லயித்துச் சுற்றிலுமிருக்கும் பெருவிரல், ஆள்காட்டும் விரல்களின் ஓரங்களெல்லாம் புலப்படாமல், அகண்டாகார விருத்தியாய்த் தன்னைத்தான் மறந்து, தான் எங்கு உட்கார்ந் திருப்பதும் என்ன செய்வதும் தனக்குத் தெரியாமல், மனம் கைக்குறியின் நடுவிலுள்ள ஆகாசவடிவத்தில் லயித்துவிடும். அப்படி மனம் லயித்து விடுவதே "தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது" என்று சொல்லப் படும். ஆனால் அந்த கைக்குறியை நீங்கள் கையினால் பிடித்துக்கொண்டு கண்களைத்திறந்து பார்த்துக்கொண் டிருக்கவேண்டாம். அக்குறியிலுள்ள ஆகாசத்தை புருவ மத்தியில் நிறுத்தி கண்களைமூடி, அந்தர் (உள்) முகமாய் மனக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தால் மனம் லயமாகும். காலை 6-மணிமுதல் இரவு நித்திரை செய்யும், வரையில் முன்சொல்லிய ராஜயோகமாகிய 'ஸோஹம்' மந்திரத்தை சுவாசத்துடன் சேர்த்து ஜபித்துக்கொண்டே நித்திரைசெய்து, காலை மூன்றுமணிக்கு எழுந்து 'ஸோஹம்' மந்திரத்தை ஜபிக்காமல் முன் கைக்குறியினுட் காட்டிய ஆகாசவடிவத்தில் மனதை நிறுத்த அப்பியாசம் செய்து வரவேண்டும். மறுபடியும் காலை 6-மணிமுதல் 'ஸோஹம்' மந்திரத்தை ஜபிக்கவேண்டும். இந்த 'ஸோஹம்' மந்தி

ரத்தை விசேஷமாய் ஜபித்துக்கொண்டு வரப்பட்டவர்களுக்கு சகல எண்ணங்களும் நசித்துவிடும். பிறகு மனம், எந்த எண்ணங்களும் எண்ணுமல் சதாகாலமும் ஆகாச வடிவத்திலேயே லயித்திருக்கும். இப்படியிருப்பதே அஸம்பிரஞ்ஞாத சமாதி யென்று சொல்லப்படும். இப்படிப் பழகுவதனுல்,

விட்டுப்போம் சம்சார வியாபாரங்கள்
 விஷயசுகம் இச்சைவைத்தால் விவேகம்போச்சு
தொட்டுவிட லாகாது ஞானமார்க்கம்
 துரியநிலை நன்ருகத் தோன்றுமட்டும்
எட்டுகின்ற பரியந்தம் சுருதிவாக்கியத்
 தெண்ணமெனுந் தியானத்தா லெய்தும்முத்தி
தட்டுகின்ற ஜீவத்வம் தனக்கில்லாமற்
 சமாதியுற்ருல் நாமதுவே சாக்ஷாத்காரம்.
வீணல்லோ சாதனப் பிரயோஜனங்கள்
 மெய்ஞ்ஞான அபரோட்சம் வந்தபோது
வீணல்லோ வேதபா டத்தினிச்சை
 வியோமபரி பூரணத்தில் மேவிநின்ருல்
வீணல்லோ இருட்டறையிற் பொருளைக்காண
 விளக்கதனை மறந்தவன்கை விடுதல்போலும்
வீணல்லோ தியானதாரணைக ளெல்லாம்
 மெய் பிரகாசிக்கும்வரை வேணுந்தானே.

ருஷிகள் ஆஹாரமில்லாம லிருப்பதற்குக் காரணம்.

அன்பர்களே !

மலைக் குகைக்குள் தவம் செய்யும் தபோதனர்கள், குகைக்குள் உட்கார்ந்து சின்முத்திரையைப் பிடித்து இடுப்பு கூன்வளையாமல் நேராய் நிமிர்ந்து கழுத்து முகம் சாயாமல் நேராய் நிமிர்த்தி சித்திரப்பதுமைபோல் நின்று, மனதை பரமாத்ம சொரூபத்தில் ஐக்கியம் செய்து விடுவார்கள். அப்படி ஐக்கியம் செய்துவிடுவதே "மனம் இறந்த" தென்று பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படி மனம் எதுவரையில் இறந்து நிற்கின்றதோ அதுவரையில் பசிதாகங்கள் உண்டாகவே மாட்டா. ருஷிகள் அனேக வருஷங்கள் நிஷ்டையில் இருப்பதனால், அக்காலத்தில் அவர்களின் மனம் ஆத்ம சொரூபத்தில் ஐக்கியமாய்விடும். இவ்வாறு ஐக்கியமாய் எத்தனை வருஷங்களிருந்தபோதிலும், ருஷிகளுக்குப் பசிதாகமுண்டாகவே மாட்டா. பசிதாகங்கள் உண்டாவதற்குக் காரணம் மனதாகவே யிருக்கின்றன. அப்படிப்பட்ட மனம் இறந்து விடுவதே சமாதி என்று சொல்லப்படும். அனேக வருஷம் ருஷிகள் சமாதி † நிஷ்டையிலிருந்து சமாதி நிஷ்டைகலைந்து ருஷிகள் வெளிவந்தவுடன் அவர்களின் மனது, பலயிடங்களிலும் ஓட ஆரம்பிக்கும். அப்போது ருஷிகளுக்கு பசிதாகங்கள் உண்டாகும். அச்சமயம் ருஷிகள் செடியிலுள்ள தழைகளைப் பறித்துத் தின்பதனால் பாபமுண்டாகுமென்று எண்ணி பழுத்து உதிர்ந்து

---

† நிஷ்டை என்றால்—எந்த மந்திரங்களும் ஜபமும் செய்யாமல் தன்னைத்தான் மறந்து பிரம்மானந்தத்தில் சொக்கியிருப்பதே நிஷ்டையென்று சொல்லப்படும்.

மண்ணுய்ப் போகும் தழைகளைத்தின்று ஜலம் சாப்பிட்டு மறுபடியும் குகைக்குள்சென்று அநேக வருஷங்கள் தவம் செய்து வருகின்றூர்கள். மரத்திலுள்ள தழைகளைப் புசிக்காமல் பழுத்து உதிர்ந்த சருகுகளைப் புசிப்பதற்குக் காரணம் யாதெனில் பரமாத்மசொரூபம் மரத்திலும் செடிகளிலும் இருப்பதனுல் இலைகளைப் பறித்துத் தின்னலாகாது. அப்படித்தின்றூல் பரமாத்மாவைக் கொன்றவனுகின்றூன் என்னும் ஜீவகாருண்யத்துடனிருந்து சருகுகளைப் புசித்துக் காலம் கழித்துவருகின்றூர்கள். இப்படிப்பட்ட மஹான்கள், பாமரர்களாகிய மானவ ஜனங்களின் கண்களுக்குக் காணப்படமாட்டார்கள்.

எனதன்பர்களே! செடிகளிலும் பரமாத்மசொரூபம் இருக்கின்றதென்றும், அச்செடிகளிலுள்ள இலைகளைப் பறித்தால் பாபமுண்டாகு மென்றும் பெரியோர்கள் எண்ணி, அதைப் பறித்துச் சாப்பிடாமல் பழுத்துத் தானுய் உதிர்ந்து மண்ணுய்ப் போகும் தழைகளைச் சாப்பிடுகின்றூர்களல்லவா? அப்படியிருக்க உங்கள் குடும்பத்தில் எவர்களுக்காகிலும் வியாதிவந்து விட்டால் அதை நிவாரணை செய்து கொள்வதற்காக துஷ்ட தேவதைகளுக்குப் பொங்கலிட்டு நைவேத்தியம் வைத்து அதன் எதிரில் ஆடு கோழிகளை பலிகொடுக்க, இரண்டு மூன்று பேர்கள் கால்களும் தலையும் துடிக்காம லிருக்கக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண் டிருப்பார்கள். இவர்கள் எவ்வளவு கெட்டியாய்ப் பிடித்த போதிலும் அவைகள் துடித்துக் கொண்டே இருக்கும் சமயத்தில், அவைகளின் கழுத்தின் மேல் மிகவும் கூர்மையான கத்தியை வைத்து அறுத்துத் தலையை மஹாகாளி எதிரில் வைத்து, தூபதீப நைவேத்தியம் காட்டி சிரசுகளின் முண்டத்தின் மேல் ஜலம் விட்டு எங்களுக்கு வாய்த்திறந்து சொல்லவேண்டுமென்று மூட

ஜனங்கள் கேட்பார்கள்; அப்போது பிராணன், சிரசு முண்டத்தைவிட்டுப் போகும்போது வாய் திறப்பது வழக்கம். அதை பாமரஜனங்கள் பார்த்து அம்மன் எங்களுக்கு நல்ல வரம் கொடுத்தாளென்று மகிழ்ந்து விடுவார்கள். பிறகு அதன் தோலை உரித்து அனேகவித பக்குவங்களுடன் சமைத்து நாருசியாய்ச் சாப்பிடுவார்கள். இவைகள் மனிதர்களுக்கு என்ன தீங்குசெய்கின்றது. காட்டிலிருக்கும் புல்லையும் புல்லிலுள்ள அரிசிகளையும், சிறிய சிறிய கற்களையும் தின்று காலம் கழித்துவரும் மிருகங்களையும் பக்ஷிகளையும் பிடித்து, துப்பாக்கியால் சுட்டும் கொண்டுவந்து பொசிக்கிச் சாப்பிடுகின்றார்கள்.

ஐயோ! பாவம்! வாயில்லாத ஜீவனைக் கொண்டுவந்து கொன்றால் அவைகள் என்ன செய்யும். இவ்வாறு கொன்று தின்றாலும் சரி அல்லது, கசாயித்தொழில் என்றால், ஆடுகளை அறுக்கும் துலுக்கனிடமிருந்து மாம்சங்களைக் கொண்டுவந்து தின்றாலும் சரி எல்லாவற்றிற்கும் பாவம் ஒன்றேயாகும். ஆதலால்,

"உங்கள் மக்களும் நீங்களும் நோய்கொள
எங்கள் மக்களும் நாங்களு மென்செய்தோம்
பொங்க விட்டுப் பலியுங் கொடுக்கிறீர்
எங்கள் முறையினை யீசனுர் கேளாரோ.

அம்மா வென்றலர ஆருயிரைக் கொன்றருந்தி
இம்மா னுடரெல்லாம் மின்புற் றிருக்கின்றாரே
அம்மா வென்னுஞ்சத்தங் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்மா நிரையமென்றூற் புசித்தவருக் கென்சொல்வதே."
சங்கையிற் படிந்திட்டாலும் கடவுளைப் பூசித்தாலும்
மங்குல்போற் கோடிதானம் வள்ளலாய் வழங்கினாலும்
சங்கையில் லாதஞான தத்துவ முணர்ந்திட்டாலும்
பொங்குறுபுலால் புசிப்போன் போய்நர கடைவானென்றே.

அதாவது, கங்கா யமுநா ஸரஸ்வதி நர்மதா சிந்து காவேரி துங்கபத்ரா கோதாவரி குமரி முதலாகிய ஒன்பது மஹா தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து வாய்த்தாள் போட்டு தீர்த்தங்களை காவடியில்கட்டி மிகவும் நேம நிஷ்டைகளுடன் அத்தீர்த்தங்களைக் கொண்டுபோய் காசி ராமேஸ்வரங்களிலுள்ள மஹாலிங்கங்களுக்கு அபிஷேகம் செய்து, ஆங்காங்குள்ள பெரியோர்களுக்கு, மேகம் வருஷிப்பதுபோல், கோதான பூதான சொர்னதான கன்னிகாதான அன்னதான வஸ்திரதான முதலாகிய முப்பத்திரெண்டு தானங்களைச்செய்து, ஆங்காங்குள்ள பெரியோர்களின் திருவாக்கால் ஞானார்த்தங்களைக் கேட்டு சந்தேக விபரீத பரதத்துவ விசாரணைகளைச் செய்து உண்மைப் பொருளை அறிந்தவனாயிருந்தாலும், ஜீவராசிகளின் உயிர்களைப்போக்கி அதன் மாமிசங்களைத்தின்று தன் தேகத்தை வளர்ப்பானாகில் நரகத்தையே அடைந்து துக்க மனுபவிக்க வேண்டியதாய் நேரிடும் என்பதே இப்பாடல்களின் கருத்தாகும். ஆதலால், இதுவரையில் தெரியாமல் மாமிசங்களைத் தின்றிருந்தாலும் இப்போது இந்நூலை வாசிக்கும் ஸ்திரீ புருஷர்க ளெல்லோரும் இனி, மாமிசங்களைப் புசிக்காம லிருப்பீர்களாகில், சீக்கிரமாய் உங்களுக்கு ஈசுவரர் அனுக்கிரஹம் உண்டாகும் அவ் வனுக்கிரஹத்தினால் மோக்ஷ சாம்ராஜ்ய பதவியை தப்பாமல் அடையலாம். இது சத்தியம் சத்தியம். இனி ஜீவராசிகளுக்குப் பசிதாகங்கள் உண்டாவதற்குக் காரணம் சொல்லுகின்றோம் கேளுங்கள். உலகத்திலுள்ள ஜீவராசிகளுக்கெல்லாம் பசிதாகங்கள் உண்டாவதற்குக் காரணம் மனதாகவே இருக்கின்றது. பசிதாகங்கள் உண்டாவதற்கும், பசிதாகங்கள் இல்லாம லிருப்பதற்கும் காரணம், இதனடியில் விவரித்துச் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

காலே ஆறுமணிமுதல், மாலே ஆறுமணிவரையில் பன்னிரண்டு மணிநேரம் ஆகின்றது. இப்பன்னிரெண்டுமணி நேரத்திற்குள், காலே ஆறு அல்லது ஏழுமணிக்கெல்லாம், இட்லி உப்புமா ரொட்டி பூரி முதலாகிய பலகாரங்களேயும் காபியும் சாப்பிட்டு, மறுபடியும் பகல் பத்துமணிக்கெல்லாம் சாதம் சாப்பிட்டு மறுபடியும் மாலே மூன்றுமணிக்கு டிபன் என்னும் பலகாரங்களும், டீ காபி முதலானவைகளேயும் சாப்பிட்டு மறுபடியும் மாலே ஏழு அல்லது எட்டு மணிக்கெல்லாம் சாதம் சாப்பிடுகின்றீர்களே அது ஏன் என்று புருஷர்களேக்கேட்டால், ஐயா! நாங்கள் அங்கங்கு திரிந்து கஷ்டப்படுவதனுல் சரீரம் அலண்டு பசிதாகம் உண்டாகின்றதென்று சொல்லுகின்ருர்கள். நல்லது, இவர்களேப்போல் எங்கும் வெளியில் செல்லாமல் வீட்டிலேயே சும்மாய் உட்கார்ந் திருப்பவர்களுக்கும் அதிக பசிதாகமுண்டாய் இவர்கள் சாப்பிடுவதைவிட இன்னும் அதிகமாய்ச் சாப்பிட்டு வருகின்ருர்களல்லவா? இதுபோல் மாலே ஆறுமணிமுதல் மறுநாட் காலே ஆறுமணிவரையில் பன்னிரெண்டு மணிநேரம் உண்டல்லவா? அச்சமயம் பகற்காலங்களில் உண்டாகிய பசிதாகங்களேப்போல் இராமல் சும்மாய்த் தூங்குவதேன்? அப்படித் தூங்கும் சமயத்தில், நல்ல அர்த்தராத்திரிவேளேயில் திவ்வியமான பலகாரங்களேக் கொண்டுவந்து கொடுத்தபோதிலும் இப்போது வேண்டாம் காலேக்காகட்டுமென்று சிலர் சொல்வதும் சுபாவமாயிருக்கும் விஷயம் ஒவ்வொருவரும் அறிந்த விஷயமேயல்லவா? பகற்காலங்களிலுள்ள பன்னிரெண்டு மணி நேரத்திற்குள் நான்குமுறை சாப்பிடுவதுபோல் இராக்காலங்களிலுள்ள பன்னிரெண்டு மணிநேரத்தில் ஒருமுறை சாப்பிட்டு மறுநாள் காலேவரையில் சாப்பிடாமலிருப்பதற்குக் காரணம் இதனடியில் தெரிவிக்கின்ருேம் கேளுங்கள்.

நமது வயிற்றில் ஓர் பெரிய தீனிப்பையுண்டு. அது ☞ எதிரிலிருக்கும் நெம்பர் 1-படத்தில் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றது. அதைக்கவனியுங்கள். இப்பை சகல ஜீவராசிகளின் கர்ப்பத்தில் இருக்கின்றது. என்றால், நாம் சாப்பிடும் பதார்த்தங்கள், தாடைப்பற்களால் அரைப்பட்டு தொண்டை பின்புறமாய்ச் சேர்ந்திருக்கும் குழாய் வழியாய், ரசரூபமடைய தீனிப்பைக்குள் அப்பதார்த்தங்கள் இறங்குகின்றன. இக்குழா, வாயிற்கும் ஜீர்ணகோசத்திற்கும் ஒரே கால்வாயா யிருக்கின்றது. அக்கால்வாய் படத்தில் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றது. அதைப்பாருங்கள்; ஜீர்ணகோசத்தின் இருபுறமும் ஒருவிதமான வளையம்போன்ற தசைநார்கள் (Muscles) மூடப்பட்டு விழுங்கும் ஆஹாரங்களை உள்ளுக்குச் செலுத்த அடிக்கடி தொண்டையிடம் திறந்துகொண்டும் மூடிக்கொண்டுமாய் இருக்கின்றன. ஜீர்ணகோசத்திற்குக் கீழ்பாகம், ஏறக்குறைய இருபத்திரெண்டடி நீளமுள்ள சிறுங்குடல் தொடரப்பட்டிருக்கின்றது. அது No, 3 படத்தில் காட்டப்பட் டிருக்கின்றது. இக்குடலில், கணக்கில்லாத சுருள்களாய்ச் சுருண்டிருக்கின்றன. தீனிப்பை முடிவாகிய இடத்திற்கு பெருங்குடல் யென்று சொல்லப்படும். இப்பெருங்குடல் No, 4 படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது. குதத்தினிடம் மலத்தைத்தள்ள எப்பொழுதும் இப்பெருங்குடல் வாயைத் திறந்துகொண்டே யிருக்கும். குதத்தினிடம் சேர்ந்திருக்கும் மலத்தை வெளியில் தள்ளவேண்டுமென்று நினைத்து குதத்தை (ஆசனத்தை)த் திறந்தால் உடனே அம்மலம் வெளியில்வந்து விழும்; மறுபடியும் குதத்தை (ஆசனத்தை) மூடிவிட்டால், மலம் குடல் முடிவில் நின்றிருக்கும். மறுபடியும் குதம் திறந்தால் மலம் வெளிவரும். ஆதலால், குடலுக்கெல்லாம் குதமே ஆதார

DIGESTIVE PICTURE



SOLDEN & CO., MADRAS. S.E.

மாயிருந்து, மலத்தை வெளியில் தள்ளவும், உள் நிறுத்த வும் செய்விக்கின்றது. குதத்தினிடம் எப்பொழுதும் வாய்த் திறந்துகொண்டிருக்கும் பெருங்குடலை படத்தில் பாருங்கள்; வழுவழுப்பான மெல்லியதோல், குடல்முழுமையு மிருந்து சாப்பிட்ட ஆஹாரங்களை உள்ளுக்கு நழுவச்செய்கின்றது. வழுவழுப்பான மெல்லியதோலில் ஆயிரக்கணக்கான மாமிச கிரந்திகள் சேர்ந்து, பதார்த்தங்களை ஜீர்ணிக்கச்செய்யும். மேற்படி குடல் சுற்றிலுமுள்ள தோலில், வரிகளில்லாத தசைநாருகள் (Muscles) அடங்கியிருக்கின்றன. மனதின் ஓட்டத்தால் தசைநாருகள் மெதுவாய் திறப்பதும் மூடு வதுமாயிருந்து, ஜீர்ணகோசத்திலும் குடலிலும் அற்புத மான அசைவை உண்டாக்கும். என்றால் ஜீர்ணகோசப்பை மனதின் ஓட்டத்தால் திறப்பதும் மூடுவதுமா யிருக்கும். இவ்வாறு திறப்பதும் மூடுவதுமா யிருப்பதால் சாப்பிட்ட ஆஹாரம் மெதுவாய் நசுக்கப்பட்டு அதிலுண்டாகிய ரசத்தை வேறுபடுத்தி அந்த ரசத்தை ரத்தரூபமாய்ச் செய்து, நாடி நரம்புகளுக்குப் பங்கிட்டனுப்பி நிப்பியை மலமாய்ச்செய்து குதத்தின்வழியாயப் போகும்படி செய் யும். ஈரல் (Liver) லிக்வம் (Pancreas) தீனிப்பை சமீப மாய் அமைந்திருக்கின்றன. ஈரல் அடியிலிருக்கும் பித்தப் பையில் பித்தம் சேர்ந்துகொண்டே யிருக்கும்: கொழுப் புள்ள பதார்த்தங்களும் கொழுப்பில்லாத பதார்த்தங்க ளும் பாதி அரைபட்டும் பாதி அரைபடாமலும் குடலில் செல்லும்போது, மேற்படி பித்தப்பையிலிருந்து பித்தம் (கசப்பு) ஒவ்வொருதுளியாய் வீழ்ந்து, எப்படிப்பட்ட கொழுப்புள்ள பதார்த்தங்களா யிருந்தபோதிலும் மேற் படி பித்தத் துளிகள் ஜீர்ணிக்கச்செய்யும். பித்தப்பையி லிருந்து பித்தம் குடலில் விழுவதை No, 2-படத்தில் பாருங்கள். சரீரத்தினுள் ளிருக்கும் யந்திரங்களையெல்லாம்

அசையும்படிச் செய்வதற்கு மனதே காரணமாயிருக்கின்றது. இம்மனம் எங்கும் ஓடாமலிருந்தால் நமக்குள்ளிருக்கும் யந்திரங்கள் யாவும் அசையாமல் நின்றுவிடும். அப்போது எந்த பதார்த்தங்களும் ஜீர்ணமாகமாட்டா. மனம் வெளியில் ஓடாமல் நின்றுவிடுவதே சமாதியென்று சொல்லப்படும். ஆதலால், ஜீவராசிகள் சாப்பிடும் பதார்த்தம் பைக்குள் இறங்குகின்றது. இப்பையானது இச்சரீரத்திற்கு ஏந்திரம்போல் இருக்கின்றன. இவ்வேந்திரத்தை அரைப்பதற்கு மனதே மேல் அச்சாயிருக்கின்றது. மனது எப்பொழுதும் ஓடிக்கொண்டேயிருக்கும். அதனால் முன் சொல்லிய தீனிப்பையிலுள்ள தீனிகளையெல்லாம், பகற்காலங்களில் பல யிடங்களிலும் ஓடிக்கொண்டிருக்கும் மனது என்னும் அச்சினால், அரைபட்டு திப்பியென்னும் மலத்தை கீழ்பாகமாய் மலப்பையில் தள்ளி, அதிலுண்டாகிய ரசம் நாடி நரம்புகளுக்குச் சென்று ரத்தரூபத்தை அடைகின்றது. மனது பகற்காலங்களில் பலயிடங்களிலும் ஓடிக்கொண்டிருப்பதனால் கர்ப்பத்திலிருக்கும் ஏந்திரம் போன்ற தீனிப்பை, மனது என்னும் அச்சினால் விசேஷமாய் அரைத்துக்கொண்டே யிருக்கும். பகற்காலங்களில் தீனிப்பையிலுள்ள பதார்த்தங்கள, மனது என்னும் அச்சினால் விசேஷமாய் அரைப்படுகின்றது. அதனால் நான்கு முறை சாப்பிடுகின்றார்கள். இப்படிப்பட்ட மனம் இராக்காலங்களில் எங்கும் ஓடாமல் நின்று விடுவதனால் தீனிப்பை என்னும் ஏந்திரம், மனது என்னும் அச்சினால் அரைபடாமல் நின்றுவிடும். அப்படி நின்றுவிடுவதனால் தீனிப்பையிலிருக்கும் பதார்த்தங்கள் ஜீர்ணமாகாமல் தீனிப்பையில் தங்கிவிடும். பிறகு புருஷன் காலை ஐந்துமணிக்கு எழுந்தவுடன் மறுபடியும் அவன் மனம் பல இடங்களிலும் ஓடிக்கொண்டிருக்கும். அப்போது இரவு தீனிப்பையில்

கிருதியாயிருந்த பதார்த்தங்கள், காலே ஏழுமணிக்குள் அரைபட்டுப்போகும்; தீனிப்பையிலிருந்த ஆகாரமெல்லாம் காலே ஏழுமணிக்குள் சிலவழிந்துவிடுவதனால் மறுபடியும் காலே ஏழுமணிக்குமேல் பசிதாக முண்டாகின்றன. பகற்காலங்களில் பசிதாகங்கள் அதிகமாய் உண்டாவதற்கும், இராக்காலங்களில் பசிதாகங்கள் பூர்த்தியாய் இல்லாம லிருப்பதற்கும் காரணம் மனதாகவே யிருக்கின்றது. இப்படிப்பட்ட மனம் சமாதியில் எத்தனே வருஷங்கள் நின்றிருக்கின்றதோ அதுவரையில் பசிதாகங்கள் உண்டாகவேமாட்டா. ஆதலால், எல்லாத் தவங்களிலும் மனதை வெளியில் ஓடவிடாமல் நிறுத்துவதே பெரிய தவமென்று அறியவேண்டும். அதாவது, மனது சும்மாயிருக்கவேண்டும். சும்மாயிராமல் எந்த மந்திரங்களை ஜபம் செய்து வந்தபோதிலும் பிரயோஜனமில்லே. அப்படிப் பிரயோஜன மில்லாவிடில் ஸோஹம் மந்திரம் ஏன் ஜபம் செய்ய வேண்டு மென்று கேட்கின்றீர்களா என்ன? அதற்குக் காரணம் சொல்லுகின்ரும் கேளுங்கள்.

மனது, இமை கொட்டுமவ்வளவு நேரமும் சும்மாயிராமல், சதாகாலமும் அனேக எண்ணங்களை எண்ணி, வெளியில் ஓடிக்கொண்டேயிருக்கும் அப்படி ஓடிக்கொண்டிருக்கும் மனதை ஸோஹம் மந்திரத்துடன் சேர்த்து ஜபம் செய்துவந்தால் சகல எண்ணங்களும் ஒழிந்து மனம் ஒரே தியானத்தில் நின்றுவிடும். பிறகு சிலமாதங்களின் பழக்கத்தால் அந்த ஸோஹம் மந்திரத் தியானமும் ஒழிந்து தான் தாளுகவே சமாதியில் நின்றுவிடும். அதாவது, அனேக ஆயிரம் எண்ணங்களையுடைய மனதை முதலில் ஓர் நிலைக்குக் கொண்டுவருவதற்காக முன்சொல்லிய இரண்டு மந்திரங்களையும் ஜபம் செய்யவேண்டும். இவ்வாறு ஜபித்து வந்தால் அந்த ஓர் நிலையும் நின்று தன்னைத் தான் மறந்து சமாதி நிலையை அடையலாம்.

ஸோஹம் மந்திரஜப கண்டனே.

சுரு || "ஸோஹம் சின்மாத்ரமேவேதி சிந்தநம் த்யாநமுச்யதே
த்யாநஸ்ய விஸ்ம்ருதிః ஸம்யக் ஸமாதி ரபிதீயதே."
[த்ரிஸிகி ப்ராஹ்மணோபநிஷத்.]

"ஆநந்தாப்திர்யஃ பரஃ ஸோஹமஸ்மி
ப்ரத்யக்தாதுர் நாத்ர ஸம்ஸீதிரஸ்தி."
[மைத்ரேய்யுபநிஷத்.]

"ஜ்ஞாத்வா ஸ்வம் ப்ரத்யகாத்மாநம் புத்திஃ தத்வ்ருத்திஸாக்ஷிணம்
ஸோஹமித்யேவதத் வ்ருத்யா ஸ்வாந்யத்ராத்ம மதிம் த்யஜேத்."
[அத்யாத்மோபநிஷத்.]

திரமென்ன ஹம்ஸோஹம் மந்திராதீதம்
திருசியசூன் யாதிகளே தியானமாகும்
சரமென்ன சாக்கரமுத லவித்தைசூன்யம்
சாதனையே சமாதியெனத் தானேபோகும்
வரமென்ன விபரீத விருத்திமார்க்கம்
வாசனையே சாதனமால் வகுத்துக்காட்டும்
அரமென்ன இதையறிந்தால் யோகிபவான்
அஞ்ஞான மவரிடத்தி லணுகாதென்னே

"ஹம்ஸ" ரகசியமாகிய 'ஸோஹம்' மந்திரத்தை எப்பொழுதும் ஜபித்துக்கொண் டிருப்பதே ஆத்ம தியானமென்று சொல்லப்படும். இது, ஞானிகளுக்கு ஞான காயத்திரியா யிருக்கின்றது. இந்த ஞான காயத்திரியே அஜபாகாயத்திரி. அந்த அஜபாகாயத்திரியை விட்டு சகலமும் மறந்து கேவல பிரஞ்ஞையுடையவனு யிருப்பதே ஆத்ம சாக்ஷாத்கார மென்றும், பிரம்ம நிஷ்டையென்றும், நிர்விகல்ப சமாதி என்றும் சொல்லப்படும். இந்த நிர்விகல்ப சமாதியே அஸம்பிரஞ்ஞாத சமாதி என்றும் சொல்லப்படும். அந்த அஸம்பிரஞ்ஞாத சமாதி இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

அஸம்பிரஞ்ஞாத சமாதி.

சரு || "அஸம்ப்ரஜ்ஞாத நாமாயம் ஸமாதிர்யோகிநாம் ப்ரிய:
ப்ரபாஸாங்யம் மநஸ்ஸாங்யம் புத்தி ஸாங்யம் சிதாத்
மகம்." [முக்திகோபநிஷத்.]

முத்தியடாமந்திரத்தை நினைக்கும்போது மோசமட
மனத்தானு மிரண்டாய்ப் போகும்
சத்தியடா மனந்தானும் ஏகமாகத்
தனித்திருந்து நித்திரையைத் தள்ளிமைந்தா
புத்தியடா பிரம்மத்திற் புகுந்துகொண்டால்
பூலோக மெல்லாந்தான் பணியுமுன்னை
எத்தியே திரியாமற் பிடரிமார்க்கம்
ஏறுகின்ற வாசியுந்தான் கற்பந்தானே.

"நானே பிரம்மம்" "பிரம்மமே நான்" என்னும் (ஸோஹம்) மந்திரத்தை மறந்து மனோ புத்திகள் இரண்டும் சூன்னியமாய் சகல எண்ணங்களும் (வலதுகைப் படத்தில் காட்டியிருக்கும் ஆகாசக்குறியில்) அடங்கி, தேகாதிப் பிரபஞ்ச மீறுகிய சகல திருசியங்களையும் மறந்து, தானே தானாய் தன்மயமாய் கேவல சின்மாத்திரனாய் இருந்து, நிர்மலமாகிய கண்ணாடி எதிரில், மற்றொரு நிர்மலமான கண்ணாடியை வைத்தபோது எந்தபேதமுமில்லாமலும் ஒன்றை யொன்று காணாமல் இரண்டும் ஒன்றாயிருப்பதுபோல், பிரம்ம சொரூபத்தில் மனம் கலந்து சாக்ஷிமாத்திரனாய் நின்றிருப்பதே அஸம் பிரஞ்ஞாத சமாதி என்றும், நிர்விகல்ப சமாதி என்றும் சொல்லப்படும். இதற்கு கைவல்யம் பிரமாணம்.

களங்கமற்ற கண்ணாடி தன்முன் வேறோர்
களங்கமற்ற கண்ணாடி காட்டும் போது
விளங்கிய தன்மய மாகி யபேதமாகி
விகற்பமின்றி நிருவிகற்ப மானாற் போல

அளந் தறியப்படா விபுவாய்ச் சத்தாய்ச்
சித்தா யாநந்தமாம் பிரமத் தைக்கியமான
உளந் தெளிந்தபடி யிருந்தா லுலகமெங்கே
யுலேவெங்கே யென்று சங்கை யொழுத்திடாயே.

ஆதலால், மோக்ஷத்தைக் கொடுக்கும் அஸம் பிரஞ்ஞாத சமாதியே, உயர்ந்தது. அந்த சமாதியை அடையுமுன் மனதையே விஷயமாகக்கொண்டு, சங்கல்ப விகல்பங்கள் நாபியிலிருந்து உண்டாகும் விதங்களை யறிந்து, அவைகள் உண்டாகாவண்ணம் தடுக்கவேண்டும். மனதில் ஒரு சங்கல்பமும் உண்டாகாமல் தடுத்துவிட்டால், அதுவே அசம் பிரஞ்ஞாத சமாதி யாகும். சங்கல்பமே மனதிற்கு சொரூபமானபடியால், சங்கல்பங்கள் உண்டாகாமல் நின்றுவிட்டால்,மன மிறந்ததேன யோகிகள் கூறுகின்றார்கள். மன மிறந்த சமாதியே அசம் பிரஞ்ஞாத சமாதி. அந்த சமாதியில் ஆத்மா,தான் மாத்திரமாய் நிற்கும். சம்பிரஞ்ஞாத சமாதியில் சித்தவிருத்திகள் அடங்கி யிருந்தபோதிலும், சமாதியிலிருக்கிறேமென்றும், தத்துவங்களின் உண்மையை அறிய வேண்டுமென்றும், மனே சங்கல்பம் இருப்பதால், அடங்கியிருந்த சித்தவிருத்திகள், மனதுக்கு பலமாய்க் கவரத்தக்க விஷயங்களின் சம்பந்தம் நேரிட்டால், மனம் வேளியே கிளம்பி, நிஷ்டையில் உட்கார்ந்த புருஷனை உலக வியாபாரத்தில் இழுத்துச் செல்லும். அஸம் பிரஞ்ஞாத சமாதியில் மனமில்லாமல் ஆத்மா மாத்திரம் நின்றிருப்பதால், மனே சங்கல்பங்க ளுண்டாவதற்குக் காரணமில்லை. ஆதலால், அசம்பிரஞ்ஞாத சமாதியில் இருந்தால் மனம் விஷயங்களில் இழுத்துச் சென்று அநர்த்தத்தை விளைவிக்காது.

சரு || "அஜ்ஞானஹ்ருதய க்ரந்தேர் நிஶ்ஶேஷ விலயஸ்ததா
ஸமாதிநா விகல்பேந யதா அத்வைதாத்ம தர்ஶநம்."
[அத்யாத்மோபநிஷத்.]

இருத்தியே இருதயத்தில் மனதொன்ருக
ஏகபர மாம்பொருளை யிருத்தியொன்ருய்
நிறுத்தியே வெகுகோடி காலமட்டும்
நிருவிகற்ப சமாதியிலே நிறைந்தெந்நாளும்
பொருந்தியே லலாடக்கண் திறந்துபார்க்கப்
பூலோக மெங்குமொன்ருய் நிறைந்தேன்மைந்தா
கருத்தொன்ருய் நிறுத்தியடா கபாடம்நீக்கிக்
காரணத்தைக் கண்டு விளையாடுவாயே.

இந்த நிர்விகல்ப சமாதி நிஷ்டையினுல், அஞ்ஞானமய மாகிய சமஸ்த இருதய கிரந்திகளும் நசித்து, அதாவது ஸங்கல்ப விகல்பங்கள் சூன்னியமாய்க் கேவல அத்வய பிரம்மமாகிய ஆத்ம சாக்ஷாத்காரம் உண்டாகும்.

சரு || "ஸமாதிநிஷ்டதாமேத்ய நிர்விகல்போ பவாநக."

[அத்யாத்மோபநிஷத்.]

ஸதா நிர்விகல்ப சமாதி நிஷ்டாப்பியாசம் செய்து கொண்டு நிர்விகாரமா யிருப்பதற்கு ஒவ்வொருவரும் பிர யத்தினம் செய்யவேண்டும்.

சரு || "தர்மமேகமிமம் ப்ராஹுஃ ஸமாதிம் யோகவித்தமாஃ
வர்ஷத்யேஷ யதா தர்மாம்ருத தாராஃ ஸஹஸ்ரஶஃ
அமுநா வாஸநாஜாலே நிஃஶேஷம் ப்ரவிலாபிதே."

[அத்யாத்மோபநிஷத்.]

இந்த நிர்விகல்ப சமாதியை தர்மமேக மென்று பெரி யோர்கள் சொல்லுவார்கள். இதனுல் சுவாநுபவா நந்தா மிருதம் விசேஷமாய் வருஷித்து தேஹவாசனை, சாஸ்திர வாசனை, லோகவாசனை என்னும் மூன்று வாசனைகளும் நீங்குவதனுல்,

சுரு || "யதா ஜலேஜலம் க்ஷிப்தம் க்ஷீரம் க்ஷீரே க்ருதம் க்ருதே
அவிஶேஷோ பவேத் தத்வத் ஜீவாத்ம பரமாத்மநோ:."
"யதோதகே தோய மநு ப்ரவிஷ்டம் ததாத்மரூபோ
நிரூபாதி ஸம்ஸ்தித:." [பயிங்கலோபநிஷத்.]

ஜலத்தில் ஜலமும், பாலில் பாலும், நெய்யில் நெய்யும் கலந்து ஏகமாவதுபோல், இந்த சரீரம் நசித்தவுடனே ஜீவோபாதி (அனேக எண்ணங்களையுடைய மனம்) நசித்து பிரம்மத்தில் ஆத்மா கலந்து ஏகமாய்ப் போவதே விதேஹ முக்தி எனப்படும்.

சுலோ || "ஆத்மாநாத்மவிவேகேந புந: ஸம்ஸார நிர்வ்ருதி:
தத்விநா ஜன்மகோட்யாபி பந்தஶ்சேதோ ந வித்யதி."

என்னும் சுலோகரீதியாய், ஆத்மா அநாத்மா என்னும் விவேகமில்லாதவர்கள், கோடி ஜன்மங்கள் எடுத்த போதிலும் மோக்ஷத்தை அடையமாட்டார்கள்.

சுரு || "ஆயமாத்மா ப்ரஹ்ம ஆத்மா நாராயண: பர:."

என்னும் சுருதிரீதியாய், ஆத்மாவே பரப் பிரம்மமென்று அறிந்து ஆத்மாநுபவம் அடையாதவர்கள் வனவாசம்சென்று, தலைகீழாய் நின்று, அன்ன ஆகாரங்களில்லாமல் தவஞ் செய்து எவ்வளவு கஷ்டப் பட்டபோதிலும் மோக்ஷத்தை அடையமாட்டார்கள்.

" அஞ்ஞாநாம் பாவநார்த்தாய ப்ரதிமா: பரிகல்பிதா:."

ஆத்மஞானமில்லாதவர்களுக்கே, விக்கிரக ஆராதனைகள் சொல்லபட்டதேயொழிய, கேவல ஆத்மஞானிகளுக்கு, விக்கிரக ஆராதனைகளினால் பிரயோஜனமில்லை. ஆத்மஞானிகள் எதை ஆராதிக்கின்றார்களென்றால்:—

தேஹோ தேவாலய: ப்ரோக்தோ ஜீவோ தேவஸ் ஸதாஶிவ:
த்யஜேத ஜ்ஞாந நிர்மால்யம் ஸோஹம்பாவேந பூஜயேத்."

நமது தேஹமே தேவாலயமென்றும், அதில் நிவசித்துக்கொண்டிருக்கும்ஜீவனே புராதன (ஆதி) புருஷனுகிய பரப்பிரம்மமென்றும்அறிந்து, அஞ்ஞானமென்னும்பழைய புஷ்பங்களைக் களைந்து, ''ஸோஹம்'' பிரம்மநிஷ்டை என்னும் புதிய புஷ்பங்களினுல் பூஜைசெய்து, அதையும் மறந்து, பிரம்ம ஐக்கிய அநுபவத்தை அடைந்தவர்களே புநர்ஜநந (மறுஜநந) மில்லாதவர்களாய் நித்திய முக்தியை அடைவார்களேயன்றி, மற்றவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டபோதிலும் முக்தியை அடையமாட்டார்கள்.

சுலோ || "அவிச்சிந்ந சிதாத்மக: புமாநஸ்தீஹ நேதாத்
ஸ்வஸங்கல்பவஶாத் பத்த: நிஸ்ஸங்கல்பஸ்து முச்யதே."

தேசகால வஸ்து பரிச்சேதமில்லாத சித்ரூபனுன பரம புருஷன் ஒருவனே இருக்கின்றான்; மற்றொருவனில்லை. அப்புருஷன், தனது சங்கல்பமென்னும் மாயாசக்தியினுல் பந்தப்பட்டு சம்சாரத்தை அனுபவிக்கின்றான். சங்கல்ப சூன்யமானுல் முத்தனுகின்றான்.

சிதாகாசம் எது? நிர்விகல்ப சமாதி எது?

சுரு || "தேஶாத் தேஶாந்தர ப்ராப்தௌ ஸம்விதோ மத்யமேவ
யத் நிமேஷேண சிதாகாஶம் தத் வித்தி முநிபுங்கவ."
[மஹோபநிஷத்.]

" ஒருபொருளை நீத்து ஒருபொருளைப்பற்றி இருபொருளும் போக்கி இடையேயொரு பொருளுமற்ற நிலை யாதோ அதுவே உனது நிலை."

மனமானது க்ஷணத்திற்குள்ளே ஓரிடமிருந்து மற்றோரிடத்தில் சஞ்சரித்துக்(ஓடிக்)கொண்டிருக்கும்அப்படி ஓரிடமிருந்து மற்றோரிடத்தில் சஞ்சரிக்கும்போது, இவ்விரண்டிற்கும் மத்தியில் எந்த ஞானம் மத்யஸ்தமாயிருக்

கின்றதோ அதாவது, இவ்விரண்டிற்கும் மத்தியில் இமைக் கொட்டு மவ்வளவுநேரம் எது வெளியாய் இருக்கின்றதோ அந்தவெளியே சிதாகாசம். இந்த "சிதாகாசமே நீ" யென்று அறிந்து அந்த ரூபமா யிருக்கவேண்டும. என்றால், எந்த எண்ணங்களும் இல்லாமல் சும்மாயிருக்கவேண்டும். இதற்கு ஞானவாசிட்டம் பிரமாணம்.

ஓரிடம்விட் டோரிடத்தே யுள்ள
　　முறிலவற்றி னடு வுண்மையாகிப்
பேரிலதா யுணர் விலதாய்ச்
　　சடமிலதா யதுநீயாய்ப் பிரியேலென்றுங்
கூரியபுத்தியி னாலே யூகித்துக்
　　குடும்பியெனுங் குறிப்பை மாற்றித்
தூரியதாம்படி மனத்தின் றுவக்கறுத்து
　　விருந்தபடி துணிந்து நிற்பாய்.

சுரு || "தஸ்மிந் நிரஸ்த நிஶ்ஶேஷ ஸங்கல்பஸ்திதி மேஷிஶேத் ஸர்வாத்மகம் பதம் ஶாந்தம் ததா ப்ராப்நோஷ்ய ஸம்ஶய:"
[மஹோபநிஷத்.]

அப்படிப்பட்ட சிதாகாசத்தில் (வெளியில்) சகல எண்ணங்களும் அடங்கி தான்தானாய் இருப்பானாகில், சர்வத்திற்கும் அதிகப்பட்டதும் பரம சாந்தமா யிருப்பதுமாகிய பிரம்ம சொரூபத்தில் ஐக்கியமாய் விடுவான். இப்படி ஐக்கிய மாவதே "நிர்விகல்ப சமாதி" என்று சொல்லப்படும் இதற்குச் சுருதிப் பிரமாணம்:—

"அர்த்தா தர்த்தாந்தரம் சித்தே யாதி மத்யேது யா ஸ்திதி: ஸாத்வஸ்த மநநாகார ஸ்வரூபஸ்திதி ருச்யதே."

என்னும் மஹோபநிஷத் வாக்கியரீதியாய் மனமானது, ஒரு விஷயத்திலிருந்து மற்றொரு விஷயத்திற்குப் போகும் போது அதன் மத்தியில் சித்த சலனமில்லாமல் நிற்கும் நிலையெதுவோ அதுவே நிர்விகல்ப சமாதி என்றும் உனது சொரூபமென்றும் சொல்லப்படும்.

சுரு || "சித்தம் அரே பரித்யஜ்ய யோவஸி ஸோவஸி ஸ்திரோ பவ."
[மஹோபநிஷத்·]

சங்கல்ப விகல்ப ரூபமாயிருக்கும் மனதை தூரப் படுத்தி சேஷமாய் நின்றிருக்கும் ஞானமே உன் சொரூப மாதலால், சஞ்சலமில்லாமல் ஸ்திரமாய் இருக்கவேண்டும்.

சுரு||"நாஹம் நேதமிதி த்யாயந் திஷ்ட த்வமசலாசலஃ
ஆத்மநோ ஜகதஸ்சாந்தர் த்ரஷ்ட ருத்ருஸ்ய தஸாந்தரே
தர்ஸநாக்யம் ஸ்வமாத்மாநம் ஸர்வதா பாவயந் பவ."
[மஹோபநிஷத்,]

கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகசர்மம் என்னும் ஐந்து இந்திரியங்களும், அஹங்காரமும் நானல்ல, இந்த ஜகத்து மித்தியா (மாயா) சொரூபமானது என்று நிச்சய மாய் அறிந்து, இந்த தேஹேந்திரிய ஜகத்திற்கு சாக்ஷிமாத் திரனாய் இருந்துகொண்டு எது அறிகின்றதோ, அந்த சாக்ஷியே உன் சொரூபமென்று அறிந்து சதா அந்த சாக்ஷியுடன் சேர்ந்து தன்மயமாய் (தான்தானாய்) யிருக்க வேண்டும்.

சுரு || "அவலம்ப்ய நிராலம்பம் மத்யே மத்யே ஸ்திரோ பவ."
[மஹோபநிஷத்,]

தேஹேந்திரியாதி ஜகத்திற்கு சாக்ஷியாயிருக்கும் வஸ் துவே ஆத்மாவென்றும் பிரம்மமென்றும் சொல்லப்படும். அப்படி சாக்ஷி சொரூபமாகிய ஆத்மா, சமஸ்தத்திற்கும் ஆதாரமானது. அப்படிப்பட்ட ஆத்மாவிற்கு ஆதாரம் ஒன்றுமில்லை. அது நிராதாரமானது. அப்படிப்பட்ட ஆத்மாவே நீ யென்று அறிந்து திட நிச்சயமுடையவனாய் சதா அதையே தியானித்துத் தன்மயமா யிருக்கவேண்டும.

"த்ர்ஷ்ட்ரு தர்ஸந த்ருஸ்யாநாம் மத்யே யத்தர்ஸநம் ஸ்ம்ருதம்
நாதஃபரதரம் கிஞ்சிந் நிஸ்சயோஸ்த்யபரோ முநே." [மஹோப]

காண்பான், காக்ஷி, காணப்படும்பொருள் (திருசிய பிரபஞ்சம்) இம்மூன்றும் த்ரிபுடி யென்று சொல்லப்படும். அப்படிப்பட்ட திரிபுடி மத்தியில் சாக்ஷியாய் எந்த அறிவு பிரகாசிக்கின்றதோ அந்த அறிவே ஆத்மாவென்றும் பிரம்ம மென்றும் சொல்லப்படும். அந்த அறிவே தானென்று தெரிந்து சதா தன்மயமா யிருப்பதைவிட, வேறு சாஸ்திரார்த்த ஸாராம்சம் இல்லையாதலால், சதா அந்த "அறிவே தா"னென்று அறிந்து எப்பொழுதும் தன்மயமா யிருக்க வேண்டும். இதற்குத் திருஷ்டாந்தம் என்னவென்றால்,

சுலோ||"நஸாக்ஷிணம் ஸாக்ஷ்யதர்மாஃ ஸம்ஸ்ப்ரஶந்தி விலக்ஷணம்
அவிகார மதாஸீநம் க்ருஹதர்மாஃ ப்ரதீபதஃ"

என்னும் சுலோகரீதியாய், ஒரு வீட்டிலுள்ள கூடத்தில் தீபம் பிரகாசித்துக் கொண்டிருக்கும்போது அந்த தீபத்தை அனுசரித்து ஜனங்கள், மேற்படி கூடத்தில் நடந்துகொண்டு அனேக கார்யங்களைச் செய்துகொண்டு வந்தபோதிலும், அந்த தீபம்மாத்திரம் எந்தக் கார்யங்களையும் செய்யாமலும் எந்த விகாரங்களையும் அடையாமலும் சலிக்காமலும் இருப்பதுபோல், ஜீவ ஜந்துக்களின் தேஹமத்தியில் புத்தியென்னும் குகையில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஆத்ம சந்நிதானத்தை ஆசிரயித்துக் கொண்டிருக்கும், மனம் புத்தி சித்த அஹங்காரங்கள் சலித்துக்(அசைந்துக்)கொண்டு அதது அதனதன் காரியங்களைச் செய்துகொண் டிருந்தபோதிலும், ஆத்மாமாத்திரம் மேற்படி கூடத்திலுள்ள தீபம்போல் இருந்து கொண்டு எந்த விகாரங்க ளில்லாமலும் எந்த காரியங்களைச் செய்யாமலும் சலிக்காமலும் சாக்ஷி சொரூபமாயிருக்கின்றது. இப்படி சாக்ஷி சொரூபமா யிருக்கப்பட்ட ஆத்மாவே "கூடஸ்தன்" என்று சொல்லப்படும். அதாவது, இந்த சரீரமென்னும் கூண்டுக்குள் ஜீவன் அடைபட் டிருப்பதனால்(புகுந்து கொண் டிருப்பதனால்) கூடஸ்தன் என்று பெயர் வந்தது.

ஆத்மா மாயா சக்தியினுல் பந்தப்பட்டு சம்சாரத்தை அனுபவிக்கின்றது.

அன்பர்களே! உலகத்தில் கர்மகாண்டம், ஞான காண்டமென்று இரண்டு காண்டங்களுண்டு. கர்மகாண்டத்தினுல் ஜன்மங்கள் அதிகரித்துக்கொண்டே வரும். ஞானகாண்டத்தினுல் மோக்ஷ பிராப்தி உண்டாகும். ஆதலால், எல்லோரும் ஞானகாண்டத்தையே அனுஷ்டிக்கவேண்டும். இதற்குச் சுருதி பிரமாணம்:—

"ஹஸ்தம் ஹஸ்தேந ஸம்பீட்ய தந்தைர் தந்தாந் விசூர்ண்ய ச
அங்கா ந்யங்கை ரிவாக்ரம்ய ஜயேதாதௌ ஸ்வகம் மநః."
[மஹோபநிஷத்.]

ஹஸ்தம் ஹஸ்தேந=கர்மகாண்டத்தை ஞானகாண்டத்தினுல் கண்டித்து, தந்தைர் தந்தாந் விசூர்ண்யச=ஸங்கல்பமென்னும் பற்களை ஞானபற்களினுல் பொடிசெய்து, அங்காந் யங்கைः=யோகாஷ்டாங்கங்களை ஞானஷ்டாங்கங்களினுல் கண்டித்து, மனதை ஆத்மாவில் லயிக்கும்படி அப்பியசித்தால் மனோஜய முண்டாகும்.

"மநஸோ ஹ்யுந்மநீ பாவே த்வைதம் நைவோப லப்யதே
யதா யா த்யுந்மநீபாவம் ததா தத் பரமம்பதம்." [பயிங்கலோப]

இந்த மனதே மஹா மாயையென்று சொல்லப்படும். இதனுலேயே 'நீ' 'நான்' என்னும் துவைதபேதங்கள் உண்டாகின்றன. இந்த மனதே நித்தியமுக்த பரப் பிரம்மம் தானென்பதை மறந்து தேகமே தானென்னும் பிரமையை உண்டாக்கும். இந்த மனதே, புத்தி சித்தம் அஹங்காரங்களாகவும், காமக் குரோதாதிகளாகவும் மாறிக்கொண்டு, என் மனைவி என் குமாரர்கள் என் குமாரிகள் என்பொருள்கள் என் வீடு என் தோட்டம் என் திரவுகள்என்று, தன

தல்லாத வேறு வஸ்துவை யெல்லாம் தனதாய் நினைத்து, அநேக ஜன்மங்களாய் அனேக துன்பங்களை உண்டாக்கிக் கொண்டு வருகின்றது. இம்மனதே சரீரமென்னும் விருக்ஷத்திற்கு மூலகாரணமா யிருக்கின்றது: இந்த சரீரமென்னும் விருக்ஷத்திற்கு, மேற்சொல்லிய ஆசாபாசங்களும் காமக் குரோதாதிகளும் அனேக ஜன்மங்களாய்த் தழைத்துப் படர்ந்துகொண்டு வருவதை வெட்ட வெட்ட, அவைகள் யாவும் மறுபடியும் துளிர்த்துக் கொழுந்து இலைகளுமாய், மறுபடியும் படர்ந்து வருகின்றன. இவைகளையெல்லாம் வேருடன் பிடுங்கி நல்வினை தீவினையென்னும் புண்ணிய பாபங்களையெல்லாம் எரித்து, அஞ்ஞானமென்னும் பாறையை சிறிதேனும் இராதபடி சுழுமுனையென்னும் உளியால் செதுக்கி, இடை பிங்கலையென்னும் வாசியால் (சுவாசத்தால்) கட்டி, துடுக்குத்தனமாயிருக்கும், கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகசர்மம் என்னும் ஐந்து துஷ்ட இந்திரியங்களை, வைராக்கியத்தினால் வென்று, மேற்சொல்லியவைகளை யெல்லாம் அன்னமய கோசமென்னும் பள்ளத்தில் தள்ளி "ஸோஹம்" என்னும் மந்திர ஜப அக்கினியினால் சாம்பலாய் எரித்து சமாதி நிஷ்டை செய்யவேண்டும். மனதினது வடிவம் சங்கற்பம்: சங்கற்பம், மனது இவ்விரண்டும் ஒன்றேயாம். அநர்த்தம் மோகம் மலம் பந்தம் அவித்தை (அஞ்ஞானம்) மாயை தபசு முதலான பெயர்கள், சங்கற்பத்திற்குத் தக்க பெயர்களேயாம். இச் சங்கற்பம் நசித்தால், காணப்படும் திருஷ்டியும் மனமும் நாசமாகும். இதற்கு ஞானவாசிட்டமும் தேவிகாலோத்திரமும் பிரமாணம்.

மனத்தின் வடிவு சங்கற்ப மற்றிவ் விரண்டு மொன்றாகு
மனர்த்த மோக மலம்பந்த மவித்தை மாயை தமமுதலா

மினத்த பெயர் சங்கற்பத்துக் கேற்ற பெயரா மிதாகழுவிற்
கனத்த சகக்காட்சியும் போகுங் கதிர்விட் டெறிக்கும் பர
[வடிவம்.

ஆகத்தே யாங்கார வடிவதாகி யிருவினை
செய் தகங்கார மாகு மாய
மோகத்தைத் துறக்கின் மொழியிற் படாத
முத்திதல மினிதளிக்கு மொழிந்த தன்றிச்
சோகத்தைத் தருமுடலை யெல்லாம் விட்டுச்
சேராத வறிவாகிச் சுத்த ரூபம்
ஆகத்தான் பாவித்தற் சத்தியெல்லாம் மறவிடுகை
பர மார்த்த மறிவார் தாமே.

இப்படிப்பட்ட சண்டாளமனம் நித்திரையில் மாத்திரம் சற்று லயிக்கும். எப்படியென்றால்,

"ஸுஷுப்தௌ ஸுகமாத்ராயாம் பேதः கோாவலோகிதः
சித்தமூலோ விகல்போயம் சித்தா பாவேந கஸ்சந
அதஸ்சித்தம் ஸமாதேஹி ப்ரத்ய க்ரூபே பராத்மநி." [அத்யாத்]

இந்த மனம் நித்திரையில் அடங்கியிருப்பதனால் பிரபஞ்சமும், பிரபஞ்சத்தில் அடங்கிய விஷயபோகங்களும் தோன்றுவதில்லை. நித்திரையைவிட்டு எழுந்தவுடன் மறுபடியும் மனம் தோன்றுவதனால் பிரபஞ்ச வியவகாரங்கள் உண்டாகின்றன. இப்படிப்பட்ட சண்டாள மனதை பிரம்ம நிஷ்டையில் லயிக்கச் செய்தால் துவைதபிராந்தி நசிந்து (ஸங்கல்ப விகல்பமற்று) பிரபஞ்சம் தோன்றாமல் சர்வம் தானான பிரம்ம சாக்ஷாத்காரம் உண்டாகும்.

சுவாமி! மனம் நித்திரையில் அடங்கி பிரபஞ்சம் தோன்றாமலிருக்க மறுபடியும் பிரம்ம நிஷ்டையில் மனம் அடங்கும்படி என் அப்பியாசம் செய்யவேண்டும்.

குழந்தாய்! நீ கேட்ட கேள்வி மிகவும் உத்தமமானதாகவே இருக்கின்றது. அதன் விவரத்தைச் சொல்லுகின்றோம் கேள்.

"ஸுஷுப்தி ஸமாத்யோர் மனோலய விசேஷேபி மஹதஸ் த்யுபயோர்பேதஃ தமஸி லீனத்வாத் முக்திஹேது த்வாபாவாஸ்ச, ஸமாதௌ ம்ருதித தமோவிகாரஸ்ய ததாகாராகாரித அகண்டா கார வ்ருத்யாத்மக ஸாக்ஷீசைதந்யே ப்ரபஞ்சலயஃ ஸம்பத்யதே."

[மண்டல ப்ராஹ்மணோபநிஷத்.]

மனம், நித்திரையில் அஞ்ஞானமென்னும் அந்தகாரத்தி (இருளி)ல் லயித்திருப்பதால், ஈர பூமியில் வீழ்ந்த விதை பூமியில்அடங்கி மறுபடியும் முளையெடுப்பதுபோல், ஜாக்கிரதாவஸ்தையில் மறுபடியும் மனம் தோன்றிக் கொண்டிருக்கும். மேலும் நித்திரையில் மனதுடன்கூட ஜீவனும் அஞ்ஞானத்தில் அடங்கி இருப்பதனல் தானே பிரம்மமென்று தெரியாமல் தன்னை மறந்து, இருளடைந்த பாழுங் கிணற்றில் வீழ்ந்திருக்கும். அதனல் ஜீவன், முக்தி அடையமாட்டா. பிரம்மநிஷ்டையில் மனம் ஞானுக்நியில் லயிக்கப் பட்டிருப்பதனல், அக்நியில் விழுந்த விதை மறு படியும் முளையெடுக்காமல் நசிப்பதுபோல் அந்த மனம் நசிந்துவிடும். என்றால், கணக்கற்ற பிறவிகளைத் தருதற்குக் காரணமா யிருக்கின்ற புண்ணிய பாபமென்னும் இருவினை களையே சஞ்சிதமென்று சொல்லப்படும். இவ் விருவினை களையும் வறுத்த விதைபோல் செய்ய ஆசாரியரது திரு வருள் வேண்டும். ஆதலால், இன்நூலில் உபதேசமாய்ச் சொல்லியிருக்கும் உபதேசங்களே, ஆசாரியரது திருவாக் காய் நம்பி ஜபம் செய்து வரப்பட்டவர்களின் இருவினை களும் சாம்பலாய் எரிந்து, சரீரமிருக்கும்வரையில் பிராரப்த கர்மங்களை அனுபவித்து, பிராரப்தம் அனுபவிக்கும் நாளில் செய்துவந்த ஆகாம்ய வினைகள்யாவும், ஒளிமுன் இருள்போல், ஞானத்தால் நீங்கும். இதற்கு சிவப் பிரகாசம் பிரமாணம்:

எல்லையில் பிறவி நல்கு மிருவினை யெரிசேர் வித்தின்
ஒல்லையி னகலு மேன்ற வுடற்பழ வினைக ளூட்டுந் [மேல்
தொல்லையின் வருதல் போலத் தோன்றிரு வினைய துண்
அல்லொளி புரையு ஞானத் தழலுற வழிந்து போமே.

ஆதலால், பிரம்மநிஷ்டையி லிருக்கும் ஞானிகளுக்குத் தான் ஜீவனென்னும் துவைதபிராந்தி நசிந்து பிரபஞ்சம் தோன்றாமல் தான் கேவல ஸாக்ஷிமாத்ர சுயம்பிரகாச பரப் பிரம்மமாயிருப்பார்கள். இதுவே நினைவில் சுஷுப்தி என்று சொல்லப்படும். ஆதலால், நித்திரை செய்பவனுக்கும் பிரம்மநிஷ்டையி லிருப்பவனுக்கும் விசேஷ பேதமுண்டு. பிரம்மநிஷ்டையில் இருப்பவர்களுக்கு மரண காலத்தில் மிருத்தியு (மரணம்) உண்டாகமாட்டா. பிரம்ம நிஷ்டையை மறந்தவர்களுக்கே மிருத்தியு உண்டாகும்.

மரணகாலத்தில், எவனெவன் எதையெதை நினைத்துப் பிராணனை விடுகின்றானோ, அவனவனுக்கு அந்தந்த ஜன்மங்கள் உண்டாகின்றன, இதற்கோர் திருஷ்டாந்தம் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

ஒருவனுக்கு லக்ஷவராகன் இருந்தன; அவன், மரண கால சமீபத்தில் ஆஸ்ட்ரேலியா தேசக்குதிரையின்மீது ஆசைவைத்து அதை ஆயிரம் வராகன்களுக்கு வாங்கி, அதன்மீது அதிக பிரீதிவைத்து காப்பாற்றிக்கொண்டு வந்தான். இவனுக்கோ பிராண பிரயாணகாலம் (மரண காலம்) சமீபித்தது. பிராணன் போகும்போது ஒவ்வொருவருக்கும் சித்ரகுப்த மென்னும் படம் ஒன்று காணப்படும். சித்ரகுப்தம் (சித்ரம்-படம், குப்தம்-ரஹஸியம்.) அதாவது, ரஹசியமான படம் காணப்படும். உலகத்திலுள்ள ஜனங்கள் இதையறியாமல் சித்திராபுத்திரன் என்று சொல்லுவார்கள். அவனவன் செய்துவரும் புண்ணிய பாபங்களையெல்லாம் வேறோர் சித்ராபுத்திரன் இருந்து

பார்த்துக்கொண்டு கணக்கு எழுதுவதல்ல. பின் எப்படி யென்றால், அவனவன் இருதயகமலத்தில் சாக்ஷி சொரூப மாயிருக்கும் ஆத்மா, ஜனனகாலம் முதல் மரணகாலபரி யந்தம் அவனவன் செய்துவரும் புண்ணிய பாபங்களை யெல்லாம் பார்த்திருந்து, அவனவன் புண்ணிய பாபங் களுக்குத் தக்கபடி, எவனெவனை எந்தெந்த ஜாதியில் யார் யார் வீட்டில் ஜன்மிக்கச் செய்யவேண்டுமோ அவனவனை அந்தந்த ஜாதி வீட்டில் ஜன்மிக்கச் செய்கிறான். மனம் கோரிய விஷயங்களையெல்லாம் ஆத்மா அறிகின்றது. ஆதலால், மரணகாலத்தில் இவன் கோரிய விஷயங்களை யெல்லாம் மேற்சொல்லிய சித்ரகுப்த படத்தில் ஆத்மா காட்டுவதனால், அந்த ஆத்மாவிற்கு சித்ர குப்தனென்று பெயர் வந்தது. பயாஸ்கோப்பில் (Bioscope) படங்கள் எப் படிக் காட்டப்பட்டு, ஒன்றின்பின் ஒன்றாய் துரிதத்துடன் போகின்றதோ அதுபோல் மரணமடையப்பட்டவன் எந் தெந்த எண்ணங்களை எண்ணியிருந்தானோ, அவைகளை யெல்லாம் அந்த சித்ரகுப்த படத்தில் காட்டிக்கொண்டே சென்று, இவன் எந்த வஸ்துவின்மீது அதிகப் பிரீதியை வைத்திருந்தானோ அவ் வஸ்துவைக் கொண்டுவந்து, கடை சியில் அந்த சித்ரகுப்த படத்தில் ஆத்மா நிறுத்திவிடும். இவன் நினைத்திருந்த வஸ்து இவன் முன்வந்து நின்றிருப்ப தால் இவன் மனம் அவ்வஸ்துவில் ஆழ்ந்து நிற்கும். அந்த சமயத்தில் அவனது பந்து ஜனங்களெல்லோரும் அவனைச் சூழ்ந்துகொண்டு நான் யார், அவர் யார், இவள் யார், அவன் யார், இவன் யார், எனக்கென்ன சொல்லுகின்றாய், இவளுக்கென்ன சொல்லுகின்றாய், அவனுக்கென்ன சொல் லுகின்றாய் என்று சிலரும், மற்றும் சிலர் நாராயணாவென்று சொல், கோவிந்தாவென்று சொல், ராமாவென்று சொல், கிருஷ்ணாவென்று சொல்லென்று இவ்வாறு அனேகர்கள்

அனேக விதங்களாய்ச்சொல்லி அவனுக்குத் தொந்திரவைக் கொடுத்துக்கொண் டிருப்பார்கள். ஆனால் அவர்கள் சொல்லும் விஷயம் எதுவும் அவனுக்குக் கேட்கமாட்டா. ஏனென்றால் மனம், கண் இந்திரியத்துடன் சேர்ந்து பார்க்குந்தொழில் பிரவேசித்திருப்பதனால் செவி யிந்திரியம் யாதொன்றும் கிரகிக்கமாட்டா. ஒரு சப்தத்தைக் கிரகிக்க வேண்டுமானால் மனம், செவி, செவி யிந்திரியம் இம்மூன்றும் ஒன்றாய்ச் சேர்ந்தால் மாத்திரம் விஷயங்களை கிரகிக்குமேயொழிய இம்மூன்றும் ஒன்றாய்ச் சேராவிட்டால் விஷயங்களைக் கிரகிக்கமாட்டா. இப்படிப்பட்டவனுக்கு நூறு செவிகள் இருந்தபோதிலும் பிரயோஜனப்படமாட்டா. செவி இந்திரியங்களுடன்கூட மனம் சேர்ந்தால் தான் பேசும் விஷயங்களை மனம் கிரகிக்கும். ஆதலால், பிராண பிரயாணகாலத்தில் (மரணகாலத்தில்) இருக்கப் பட்டவர்களுக்கு எது சொல்லிய போதிலும் கேட்க மாட்டா. இப்போது மனம் சம்சார விஷயத்திலேயே அதிகமாய் உழன்றுகொண்டு வந்தால் மரணகாலத்தில் மேற்சொல்லிய 'சித்ரகுப்த' படத்தில் அந்த சம்சார ஞாபகமேவந்து நிற்கும். சம்சார ஆசையைவிட்டு ஸதா காலமும் ஈசுவரத் தியானத்திலேயே இருப்போமாகில் அந்த ஈசுவரசொரூபமே மரணகாலத்தில் சித்ரகுப்தபடத்தில் தோன்றும். அதனால், மறு ஜன்மத்தில் மேற்படியில் ஆத்மாகொண்டு போய் விடும்.

இப்போது சம்சார விஷயங்களைப் பார்த்துக்கொண் டிருந்து மரணகாலத்தில் ஈசுவரத்தியானம் செய்துகொள்ளலாமென்று யோசிக்கின்றீர்களோ என்ன? அப்படி யோசிக்கவேண்டாம். ஏனென்றால், இப்போது மனம் எந்த விஷயத்தில் விசேஷமாய்ப் பற்றுகின்றதோ அந்த விஷயம் மாத்திரம் மரணகாலத்தில் ஞாபகத்திற்கு வருமே

யொழிய ஈசுவரத் தியானம் ஞாபகத்திற்கு வரமாட்டா. ஆதலால், இதில் சொல்லியிருக்கும் ராஜயோக ரகஸ்யத்தைத் தெரிந்துகொண்டு, மரணகால பரியந்தம் யார் ஒருவர் ராஜயோகம் அப்பியசித்துவருகின்றார்களோ அவர்கள் தப்பாமல் நற்கதியை அடைவார்கள் என்று அறிவீர்களாக.

இந்த உபதேசம் இதுவரையில் நிறுத்தி, இனி குதிரை வாங்கிய லக்ஷாதிபதி எவ்வித மானுனே அவனைக் குறித்துச் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

மேற்சொல்லிய லக்ஷாதிபதி குதிரையின்மீது அதிக பிரீதி வைத்திருந்தபடியால் கடைசியில் அவனுடைய குதிரை ரூபம், முன்சொல்லிய சித்ரகுப்த படத்தில் காணப்படும். அப்போது அந்த குதிரையை, தன் எதிரிலிருக்கும் சித்ரகுப்த படத்தில் பார்த்து, உன்னை ஆயிரம் வராகன் கொடுத்து வாங்கி அதிகநாள் சவாரிசெய்யாமல் உன்னை விட்டு மரணமடைகின்றேனே யென்று நினைத்துக் கொண்டே, அவன் ஜீவனை விடுகின்றான். ஜீவன் இவ்விதமாய் எண்ணிக்கொண்டிருந்தவைகளை யெல்லாம் யார் பார்த்துக் கொண்டிருந்தார்க ளென்றால்,

"ஏகோ தேவஸ் ஸர்வபூதேஷு கூட: ஸர்வவ்யாபீ ஸர்வ
பூதாந்தராத்மா கர்மாத்யக்ஷஸ் ஸர்வபூதாதி வாஸஸ்ஸாக்ஷீ
சேதா கேவலோ நிர்குணஶ்ச" [ஶ்வேதாஶ்வதரோபநிஷத்.]

ஒரு முத்து சரத்திலிருக்கப்பட்ட ஒவ்வொரு முத்திலும் ஒரே சூத்திரமானது (நூலானது) வியாபித்திருப்பது போல் பரப் பிரம்மமாகிய ஆத்மா, சகல ஜீவஜந்துக்களிலும் சாக்ஷிசொரூபமாய் வியாபித்து அந்தந்த ஜீவர்கள் செய்யப்பட்ட காரியங்களுக்கெல்லாம் சாக்ஷியாய் இருக்கின்றான்.

இப்படி சாக்ஷி சொரூபமாயிருக்கும் ஆத்மா, பார்த்துக்கொண்டிருந்து முன்சொல்லிய லக்ஷாதிபதி, புண்ணியம்

செய்திருந்தால் அவனை, ஆஸ்ட்ரேலியா தேசத்திலுள்ள குதிரையின் கர்ப்பத்தில் பிரவேசிக்கச் செய்கின்றது. பாபம் செய்திருந்தால் ஜட்கா வண்டிகளின் குதிரை கர்ப்பத்தில் பிரவேசிக்கச் செய்கின்றது. ஆஸ்ட்ரேலியா தேசக் குதிரைகள் மிகவும் விலையுள்ளது. அதை பெறுத்த உத்தியோகஸ்தர்கள் மாத்திரம் வாங்கி பிரதிதினம் 5, அல்லது, 6-மைல் தூரம் சவாரிசெய்து சுகமாய் வைத்திருப்பார்கள். பாபம் செய்த ஜட்காவண்டிக் குதிரைகளை காலை 6-மணிமுதல் பகல் இரண்டுமணிவரையில் வண்டியில் கட்டி நன்றாய் அடித்தடித்துச் சவாரிசெய்து கொல்லுகின்றார்கள் குதிரையே யல்ல எதையெதை நினைத்து ஜீவனை விடுகின்றானோ அந்தந்த ரூபத்தை மறு ஜன்மத்தில் அவன் தப்பாமல் அடைகின்றான். இதற்கு தேவிகாலோத்திரம் கைவல்யம் பிரமாணம்,

எந்த வாருயிர் யாதோர் பொருளினைச்
சிந்தையாற் பற்றிக் காரியஞ் செய்திடின்
அந்த யோனியதா மென் றறிவினால்
பந்தமில் பொருள் பற்றுத றக்கதே.

சடமதாகிய தியான மெய்யாகிய சர்வ முத்தியை நல்கும்
திடமான தெப்படியெனி லவரவர் தியானமே பிறப் பாகும் [தா
உடலமாசையாற் றியானிக்கிற் றியானித்த வுடல்க ளாகுவர் மைந்
தொடர் பவங்கெடச் சொரூபமே தியானிக்கிற் சொரூப மாகுவர்
[மெய்யே.

பொய்யாகிய நினைப்பானது, சத்யமாகிய பரிபூர்ண கைவல்யத்தைக் கொடுக்கமாட்டா: அவரவர் மரணகாலத்தில் நினைக்கும் ரூபமாகவே மறு ஜநந முண்டாகும்: ஆதலால், மரணகாலத்தில் தேக இச்சையினால் நினைத்த நினைப்பு வடிவமாவார்கள்: அனேக கோடானகோடி ஜன்மங்களாய் வரும் ஜநநம் மறுபடியும் வாராமலிருக்க, ஆத்ம

சொரூபத்தை எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டே இருக்கவேண்டும். ஆதலால்,

மேற்சொல்லியவன் லக்ஷாதிபதியாயிருந்தும் குதிரையின் ஜன்மம் ஏன் அடையவேண்டுமென்று கேட்கின்றீர்களோ வென்ன? அதற்குக் காரணம் சொல்லுகின்றோம் கேளுங்கள். இவன் பூர்வஜன்மங்களில் செய்து கொண்டு வந்த புண்ணிய விசேஷத்தினால் அந்த புண்ணியபலனை அனுபவிப்பதற்காக இப்போது லக்ஷாதிபதி வீட்டில் ஜன்மித்து,புண்யபலன் எவ்வளவு அனுபவிக்க வேண்டுமோ அவ்வளவும் அனுபவித்து முடிந்தவுடன் மரணமடைகின்றான். அதுபோல் பாபங்களையும் அவன் அனுபவிக்க வேண்டியவனா யிருப்பதால் "புத்தி கர்மாநுஸாரணீ" என்பதுபோல் எந்தக் கர்மத்தை அனுபவிக்க வேண்டியவனா யிருக்கின்றானோ அந்த கர்மத்திற்குத் தகுந்த புத்தி, மரணகாலத்தில் அவனுக்கு உண்டாகும். ஆதலால், முன்சொல்லிய லக்ஷாதிபதி புண்ணிய பலனை அடைந்ததுபோல், பாபபலனையும் அடையவேண்டியவனா யிருப்பதனால், எந்த ஜன்மத்தை அவன் அடையவேண்டுமோ அதற்குத் தகுந்த புத்தி மரணகாலத்தில் உண்டாகின்றது. எந்த எண்ணங்களுமில்லாமல் பிரம்ம நிஷ்டையிலிருந்து ஜீவனை விடப்பட்டவர்களுக்கு புனர் (மறு) ஜநநமில்லை இந்த ஜீவர்கள் செய்யும் புண்ணிய பாபங்கள் ஆத்மாவைப் பற்றமாட்டா. எப்படியென்றால்,

"ஸூர்யோ யதா ஸர்வலோகஸ்ய சக்ஷுர் ந லிப்யதே
சாக்ஷுஷைர் பாஹ்ய தோஷைஃ ஏகஸ்ததா ஸர்வபூதாந்தராத்மா
நலிப்யதே லோக துஃகேந பாஹ்யதஃ." [கடோபநிஷத்.]

சூர்யகிரணங்கள், சுகந்த துர்க்கந்தங்களிற் பிரகாசித்துக் கொண்டிருந்தபோதிலும், அந்த சுகந்த துர்க்கந்தங்கள் சூர்யனைப் பற்றுமலிருப்பதுபோல், சகல ஜீவஜந்துக்

களினுடைய இருதயத்தில் வசித்துக்கொண்டிருக்கும் பரப்பிரம்மமாகிய ஆத்மாவிற்கு அந்தந்த ஜந்துக்கள் செய்யும் புண்ணிய பாபங்கள் பற்றமாட்டா. ஆத்மா, புண்ணிய பாபங்களில்லாத நிர்த்தோஷியானதால் நிர்மலனாகின்றான். புண்ணியபாபங்கள் நம்மைப் பற்றாமலிருப்பதற்காக, நாம் செய்யப்பட்ட காரியங்களையெல்லாம் ஈசுவரார்ப்பணமாய், அல்லது கிருஷ்ணார்ப்பணமாய்ச்செய்துவந்தால் சகலபுண்ணிய பாபங்களும் நம்மைப் பற்றாமல் ஈசுவனைச் சேருகின்றன. எப்பொழுது புண்ணியபாபங்கள் ஒழிந்து விடுகின்றனவோ அப்போதே முக்தனாகின்றான்.

"ஏகாத பஹுதா சைவ தத்ருஶ்யதே ஜலசந்த்ரவத்." [த்ரிபுரா.]

கடமெனு முபாதி போனாற் ககன மொன் றானாற்போல
உடலெனு முபாதி போன வுத்தரஞ் சீவன் முத்தர்
அடிமுடி நடுவு மின்றி யகம்புற மின்றி நின்ற
படிதிகழ் விதேக முத்திப் பதமடைந் திருப்ப ரென்றும்.

ஆகமெனு மான்மா பூரண
மேகமனேக விதஞ் சீவர்
ஆகமெனு மந்தக் கரணோ
பாதிக ளளவிலை யாதலினால்
சகமுழுதுங் குளிர் சந்திர
னேகஞ் சலசந்திரர் பலராம்
சகமதி லேரிகுளஞ் சிறுகுழி
சால்சட்டி குடம் பலவாம்.

சட்டி குடங்களி லொன்று
நசித்திடி னதினுட் சலசந்திரன்
ஒட்டு முதற்சந்திர னோடு
கூடு மொழிந்வை கூடாவே
சுட்டு முபாதி நசித்திடு
சீவன் காரண வான்மாவில்
கிட்டு மயிக்கிய முபாதி
கெடாதவர் கேவல மாகாரே. [கைவல்யம்]

ஒரு சந்திரனே, அநேக நீர்க்குடங்களில் பிரதிபிம்பித்து அநேக சந்திரர்களாய்த் தோன்றுவதுபோல், பரப் பிரம்மமாகிய ஆத்மா ஒன்றே, நாநா ஜந்துக்களின் சரீரத்தில் பிரதிபிம்பித்து அநேக ஜீவர்களாய்த் தோன்றுகின்றான். நீர்க்குடத்தின் ஜலம் அசையாமலிருந்தால் அதிலிருக்கும் சந்திர பிரதிபிம்பம் அசையாமல் பரிசுத்தமாய்க் காணப்படும். நீர்க்குடத்திலுள்ள ஜலம் அசைந்தால், குடத்திலுள்ள சந்திர பிரதிபிம்பமும் அசைவதாய்க் காணப்படுமேயன்றி, வாஸ்தவமான சந்திரன் அசைவதில்லை. இதுபோல் கடத்திலிருக்கும் ஆகாசம், எந்த சங்கல்பங்களும் இல்லாமல் பரிசுத்த ஆகாசமாய் அக்கடத்தில் இருக்கின்றது. கடத்திற்கு உபாதியா யிருக்கும் ஓடு உடைந்த உடனே, அந்த கடாகாசம் மஹாகாசத்தில் சேர்ந்துவிடும். கடத்தைப்போன்ற நமது சரீரத்திலிருக்கும் ஆத்மாவுடன் மனது சேர்ந்திருப்பதால் கடமாகிய இந்த சரீரம் நசிந்தவுடனே, இந்த சரீரத்தில் மனதுடன் கூடியிருக்கும் ஆத்மா வேறு சரீத்தை அடைகின்றது. இந்த ஆத்மா, மனதுடன்கூட எதுவரையில் சம்பந்தப்பட்டிருக்கின்றதோ அதுவரையில் அநேக ஜன்மங்களை அடைந்துகொண்டே வரும். எவன் மனம், இறந்துவிடுகின்றதோ அதாவது, சகல சுகதுக்கங்களையும், சகல எண்ணங்களையும் விட்டுவிடுகின்றதோ அப்பொழுது, அப்புருஷனை வேறு தாயின் கர்ப்பத்தில் சிருஷ்டிசெய்ய பரமாத்மாவிற்கு வேலையிராது. அவனுடன்கூட, அநேககோடானகோடி ஜன்மங்களாய் சாக்ஷி சொரூபமாய் வந்துகொண்டிருந்த, மேற்சொல்லிய பரமாத்மாவிற்கு வேலை யிராததனல், தனது நிஜ சொரூபமாகிய பரப் பிரம்மத்தில் ஆத்மா போய்ச்சேர்ந்து ஐக்கியமாய் விடும்; எறும்பு முதல் பிரமதேவன்வரையில் இருக்கும் ஜீவாத்மாக்களெல்லாம், சகல

ஆசைகளையும், புண்ணிய பாபங்களையும் ஒழித்த பிறகு, ஏதோ ஓர் ஜன்மத்தில், அவர்களுக்குச் சாக்ஷியாயிருந்த ஆத்மா, அந்த பரப் பிரம்மத்தில் போய்ச் சேரவேண்டியது திண்ணம்: இதற்கு சிவபிரகாசநூல் பிரமானம்;

தனக்கெனவறிவி லாதான் ருனிவை யறிந்து சாரான்
தனக்கென வறிவி லாத வாயிரு னறியா சாரத்
தனக்கென வறிவி லாதான் றத்துவ வன்ன ரூபன்
தனக்கென வறிவா னுலிச் சகலமு நகருந் தானே.

மனதானது சலித்து (ஓடி)க்கொண் டிருப்பதனுல், நம்மில் இருக்கும் ஆத்மாவைத் தெரிந்துகொள்ளாம லிருக்கின்றோம். ஆதலால், மனதை எங்கும் ஓடவிடாமல் நிறுத்தி விட்டால் நம்மில் இருக்கும் ஆத்மாவைத் தரிசிக்கலாம்.

சரு || "ஸ சாவிவேக ப்ரக்ருதி ஸங்கத்யா தத்ர முஹ்யதே
நாநா யோநி ஶதங் கத்வா ஶேதேஸௌ வாஸநாவஶாத்
விமோக்ஷாத் ஸஞ்சரத்யேவ மத்ஸ்யஃ கூலத்வயம் யதா."
[த்ரிஶிகி ப்ராஹ்மணோபநிஷத்.]

சரு || "கர்மேந்திரியாணி ஜ்ஞாநேந்த்ரியாணி தத்தத் விஷயாந்
ப்ராணாந் ஸம்ஹ்ருத்ய காமகர்மாந்வித அவித்யாபூத
வேஷ்டிதோ ஜீவோ தேஹாந்தரம் ப்ராப்ய
லோகாந்தரம் கச்சதி ப்ராக்கர்ம பலபாகேந
ஆவர்த்தாந்தர கீடவத் விஶ்ராந்திம் நைவ கச்சதி."
[பைங்கலோப நிஷத்.]

ஆனல் ஆகாச சந்திரனைப்போல், ஜல சந்திரனும் அசையாம லிருந்தபோதிலும் ஜலம் அசைவதால், ஜல சந்திரனும் அசைந்துகொண் டிருக்கும். அதுபோல் நிர்விகார பரப் பிரம்மமாகிய ஆத்மாவினுடைய பிரதி பிம்பமாகிய ஜீவனும் நிர்விகாரனுய் (எந்த விகாரங்களும் இல்லாதவனுய்) இருந்தபோதிலும் அந்த ஜீவன், மாயை என்

னும் அஞ்ஞானத்துடன் கூடியிருப்பதனால், சங்கல்ப விகல்பங்கள் உண்டாய், பாதரசம்போல் சலித்துக்கொண்டிருக்கும் மனம், புத்தி, சித்தம், அஹங்காரமென்னும் அந்தக்கரணங்களுடன் கூடிக்கொண்டு, என் தேகம், என் பாரியாள் என்னும் தேகாபிமானமும் அஹங்கார மமகாரங்களும், காமக் குரோத லோப மோஹ மத மச்சரங்கள் முதலான குணங்களை யுடையவனாய் தூல சரீரத்தின் மூலமாய் அநேக கர்மங்களைச் செய்துகொண்டு அதன் பலன்களை அனுபவித்துக்கொண்டு மரண மடைந்த பின், ஜீவன் சூட்சும சரீரத்துடன் சேர்ந்து சூட்சுமசரீரியாய், சொர்க்க நரகங்களை அடைந்து சுகதுக்கங்களை அனுபவித்து மறுபடியும் பூர்வ கர்ம சேஷத்திற்காக ஜநநமெடுத்து அவைகளை அனுபவிக்க, நாநாயோனிகளில் போய்ப் புகுந்து, பிறந்து கொண்டும் இறந்து கொண்டும் இவ்விதமாய், ஒரு குளத்தில் அகப்பட்டுக்கொண்டு அந்த குளத்தைவிட்டு வெளிச்செல்ல சக்தியில்லாமல், இக்கரைக்கும் அக்கரைக்கும் நீந்திக்கொண் டிருக்கும் மீன்குட்டியைப் போலும், சுழல் நீரில் அகப்பட்டுக்கொண்டு அதிலிருந்து தப்பிப்போக சக்தியில்லாமல் அந்தச் சுழலில்தானே சுற்றிச் சுற்றித் திரிந்து கொண்டிருக்கும் வண்டுபோலும், இந்த ஜீவன் ஜநநமரணமென்னும் துக்க சமுத்திரத்தில் மூழ்கி அதிலிருந்து தப்பித்துக்கொண்டு போக சக்தியில்லாமல் அலைந்து கொண்டிருக்கும். ஆதலால்,

'ப்ரஜ்ஞாநகந ஏவைதேப்ய: ஸமுத்தாய தாந்யேவாநு விநஶ்யதி.'

இப்படிப்பட்ட ஜீவனுக்கு சஞ்சித கர்மமும் பிராரப்த கர்மமும் நசிந்தவுடனே தேஹமும் ஜீவோபாதியும்என்றால், சங்கல்ப ரூபமாயிருக்கும் மனதும் நசிந்து, "ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவ பவதி" என்னும் சுருதி ரீதியாய், கடாகாசம் மஹாகாசத்திற் கலந்து ஏகமாவதுபோல், அகண்ட சச்சி

தானந்த நித்திய நிர்மல பரிபூர்ணமாகிய பரப் பிரம்மத்தில் ஐக்கியமாய் நித்திய முக்தனாகின்றான்.

சுரு||"ஏகோ பஹூநாம் யோ வித்தாதிகாமாந்"[கடோபநிஷத்.]

பரப் பிரம்மமாகிய ஆத்மா ஒருவனே, சகல ஜீவராசிகளுக்கும் சாக்ஷியாயிருந்துகொண்டு, அவரவர்கள் கோரிய பலன்களைக் கொடுத்துக்கொண் டிருக்கின்றான். "நானே பிரம்மம்" "பிரம்மமே நான்" என்று பேதமில்லாமலிருக்கும் ஞானிகளை மாத்திரம், ஈசுவரன் தன்னில் ஐக்கியம் செய்து கொள்ளுகின்றான். பிரம்மம் வேறு, தான் வேறென்று பேதமாய் எண்ணப்பட்டவர்களை ஈசுவரன், தன்னில் ஐக்கியம் செய்துகொள்ளாமல் வேறாய் பேதரூபமுடையவனாகவே காட்டுகின்றான். இதற்குத் திருஷ்டாந்தம் தேவிகாலோத்திரமும், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம் 4, சுலோகம் 12-ம், பிரமாணம்,

சித்தனும் பரமேசன் யானென்று நிச்சயிக்கின்
முத்தனலனெனினு மவன்முத்தனு முயிருடம்பின்
பெத்தமற ஞானத்தாற் காட்சிபெறிற் சாந்தியுடைச்
சித்தனைப் பொருட்பற்றுத் தீர்ந்து வீடடையுமால்.

காங்க்ஷந்தః கர்மணாம் வித்திம் யஜந்த இஹ தேவதாః
க்ஷிப்ரம் ஹி மாநுஷே லோகே வித்திர்பவதி கர்மஜா.

கிருஷ்ணன்:—இந்த பூலோகத்திலுள்ள ஜனங்களில் சிலரே, ஞானத்தைப் பெற்று, மோக்ஷமடைய வேண்டுமென்று எண்ணுகின்றார்கள். இவர்கள், அல்பதேவதைகளை ஆராதிப்பதனால் பிரயோஜனமில்லையென்று தெரிந்துகொண்டு, மோக்ஷத்திற்கு ஆதாரமாயிருக்கும் என்னையே ஆராதித்துக் கடைத்தேறுகின்றார்கள். மற்றவர்களென்றாலோ கர்மபலத்தைக்கோரி கர்மங்களையே செய்து வரு

கின்றவர்களா யிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட பலன்கள் சொல்ப பலன்கள்; அல்ப தேவதைகளை ஆராதிப்பவர்களுக்கு அல்ப பலன்களையே நான் கொடுக்கின்றவனாயிருக்கின்றேன். எப்படி என்றால், ரம்பா சம்போகாதி சொல்ப பலனைக் கோரப்பட்டவர்கள், இந்திராதி தேவதைகளுக்கு யஞ்ஞம் செய்வார்கள்; சந்தானம் வேண்டுமென்று கோரப்பட்டவர்கள், அரசமர பிரதக்ஷணம் நாகப் பிரதிஷ்டை விரதங்கள் முதலியன செய்வார்கள்; ஏதேனும் குரூரமான கிரகசாரம் இருந்தால், நவக் கிரகங்களை பிரதக்ஷணம் செய்வார்கள்; ஏதேனும் ஆபத்து உண்டானால், அந்த ஆபத்துத் தீரும்படி சுந்தரகாண்டம் பாராயணம் செய்வார்கள்; ஐசுவர்யம் வேண்டுமென்று கொரப்பட்டவர்கள், சூரிய நமஸ்காரங்களைச் செய்வார்கள். இப்படி அனேக விதங்களாகிய பலன்களைக்கோரி அந்தந்த பலன்களைத் தரத்தக்க அநேக தேவதைகளை ஆராதித்துக்கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் நானே அல்பபலனைக்கொடுக்கும் தேவதாரூபமாயிருந்து அழிந்து போகத்தக்க சொல்ப பலன்களைக் கொடுத்துக்கொண்டு வருகின்றேன். அவர்கள், அப்படி அல்ப தேவதைகளை ஆராதிக்காமல், எப்பொழுதும் எந்த இச்சையும் இல்லாமல், என்னையே தியானம் செய்துவந்தால் பெருத்த ஸாம்ராஜ்ஜிய பதவியாகிய மோக்ஷத்தை அவர்களுக்கு நான் கொடுப்பேன். ஆனால், அவர்கள் அப்படி என்னை ஆராதிக்கமாட்டார்கள். ஏனென்றால்மனிதர்கள், பிரபஞ்ச சிருஷ்டிமுதல் நாளதுவரையில் அனேககோடானகோடி ஜன்மங்கள் எடுத்திருக்கின்றார்கள். ஒவ்வொரு ஜன்மங்களிலும் வந்த பெண்டுபிள்ளை, தனதான்யம், கிருகம், பூமி, தோட்டம் முதலானவைகளின்மீதே ஆசையுடையவர்களாய்ப் பிசினைப்போல் பந்தத்தில் ஒட்டிக்கொண்டிருப்பதனால்,

நன்மார்க்கமாகிய மோக்ஷத்திற்கு இடம் கொடாமல் அந்த சம்சாரபந்தத்திலேயே அவர்களை இழுத்துக்கொண்டு போகும். இதுதான் பூர்வ வாசனை யென்றும், பந்த மென்றும் சொல்லப்படும். இவ்வாறு எத்தனை கற்பகோடி யுகங்கள்வரையில் ஜீவர்கள் இருந்தபோதிலும், ஏதோ ஒரு ஜன்மத்தில் என்னில் ஐக்கியப் படுபவர்களாகவே இருக் கின்றார்கள். ஆனால், ஜனங்கள் என்னையடைவது மிகவும் கஷ்டம். எவனொருவன் பலாபேக்ஷையைவிட்டு நிஷ்காம கர்மத்தைச் செய்துகொண்டு வருகின்றானோ அவனுக்கு அநேக ஜன்மங்களுக்குப் பின் ஞானமுண்டாய், அந்த ஞானத்தில் அவனது ஆகாம்ய சஞ்சித கர்மங்கள் பஸ்ம மாய், பிறகு என்னில் ஐக்கியமாவான். ஆகாம்ய ஸஞ்சித கர்மங்கள் உள்ளவரையில் ஜன்மங்கள் எடுத்துக்கொண்டே வரவேண்டும். எந்த நாள் எந்த பக்ஷத்தில் ஆகாம்ய ஸஞ்சிதங்கள் பஸ்மமாய் விடுகின்றனவோ அந்த க்ஷணமே, சரீர மிருக்குமளவில் பிராரப்த கர்மங்களை அனுபவித்து சரீரம் விட்டவுடன் என்னில் ஐக்கியமாகின்றான். ஆதலால், மனமென்னும் சிறு குழந்தையை அசுத்த வாசனையில் செலுத்தாமல் சுத்தவாசனையில் நிறுத்தவேண்டும்: அனேக ஜன்மங்களாய் எடுத்துவந்த நாநாவித ஜன்மங்களின் பழக் கத்தால் வந்த அசுத்த வாசனைகளை நீக்கி, மகத்தாகிய சுத்தவாசனையைக் கைப்பெற்றால், மனம் இறந்து பிரம்ம சொரூபியாகும். இவைகளை அறிய ஆசார்யரும் வேதங் களும் வேண்டும். ஆதலால், இந்த ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்யமே வேதமாகவும், இதில் உபதேசித் திருக்கும் உபதேசங்களே ஆசார்யாது உபதேசமாயும் எண்ணி ஜபம்செய்து வரப்பட்டவர்களுக்கு மனோசாந்தி யுண்டாய் பரமபதமென்னும் (மோக்ஷமென்னும்) கை

வல்யத்தை அடைவார்கள். இதற்கு ஞானவாசிட்டம் பிரமாணம்:

மிகமுயன்று வருந்தாமற் சமமாகின்ற
வேண்டுகோளாற் றன்முயல்வால் வினைதந்தன்றற்
பகர்மனமாஞ் சிறுமகவை நிறுத்தல்வேண்டும்
பலபிறப்பிற் பரிசயங்க ளகலப்பண்ணி
யகல்சுபவா தனையுதித்தான் முயற்சிபேரு
மையுறினுஞ் சுபமடைவா யதுநீதல்ல
திகழ்மனம்போய்த் தற்பதத்தைத் தெளியுமட்டுந்
தேசிகனூற் சொல்வழியிற் செல்லுவாயே.

இதுவே வேதாந்தத்தினுடைய மஹாரஹஸ்யம். இந்த ரஹஸ்யத்தை நான் உனக்குச் சொன்னேன்.

அர்ஜுநன்:—நல்லது; இந்த உலகத்தில் உத்தமராய் இருக்கப்பட்டவர்கள், ராம கிருஷ்ணவதார ரூபங்களையும், மத்திமர்களாய் இருக்கப்பட்டவர்கள், இந்திராதி தேவதைகளையும், அதமர்களாய் இருக்கப்பட்டவர்கள், கங்கம்மாள் அங்காளம்மாள் படவேட்டம்மாள் முநீசுவரன் காட்டேரி முதலாகிய அல்பதேவதைகளை ஆராதிக்கின்றார்களே அதற்குக் காரணமென்ன? இதற்குமுன் விஷயங்களை ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதையில் விரிவாய்க்காணலாம்.

சரு || "அவ்யக்தலேஸாஜ்ஞாநச்சாதித பாரமார்த்திக ஜீவஸ்ய தத்வமஸ்யாதி வாக்யாநி ப்ரஹ்மணைகதாம் ஜகுః."

[பைங்கலோபநிஷத்.]

இந்த உலகத்தில் வசிக்கும் மனிதர்கள் முதல் சகல ஜந்துக்களும் ஜீவன்களென்று சொல்லப்படும். பரப் பிரம மத்தின் பிரதிபிம்பமாகிய இந்த ஜீவன் மாயை என்னும் அஞ்ஞானத்தில் மூடப்பட்டிருக்கின்றான். இப்படிப்பட்ட ஜீவன், பிரம்மைக்கியத்தைப் போதிக்கும் தத் த்வமஸி

முதலான மஹாவாக்கியங்களை விசாரணைசெய்தால், ஜனன மரணங்களில்லாதவனும் பிரம்மைக்கிய மென்னும் முத்தியை அடையுமே யொழிய மற்றவைகளால் அடைய மாட்டா.

☞ "தத் த்வமஸி" தத்-அது, த்வம்-நீ, அஸி-ஆகின்றாய். அதாவது, தத்-அந்த பரப் பிரம்மம், த்வம்-ஜீவாத்ம சொரூபியா யிருக்கப்பட்ட நீ, அஸி-ஆகின்றாய்.

என்றால், ஜீவாத்ம சொரூபியாயிருச்கப்பட்ட நீ, அந்தப் பரப் பிரம்ம சொரூபமாகின்றாய் என்பதேயாம்.

"அக்னிர்யதைகோ புவநம் ப்ரவிஷ்டோ; ரூபம் ரூபம் ப்ரதி ரூபோ பபூவ, ஏகஸ்ததா ஸர்வபூதாந்தராத்மா; ரூபம் ரூபம் ப்ரதி ரூபோ பஹிஸ்ச." [கடோபநிஷத்.]

ஒருவத்தியில் பிரகாசித்துக்கொண்டிருக்கும் தீபத்திலிருந்து அநேக வத்திகளை ஏற்றிடபோது அந்த ஓர் தீபமே, அநேக வத்திகளில் வியாபித் திருப்பதுபோல், ஓர் ஆத்மாவே அநேக தேகங்களில் வியாபித்து, அனேக ஆத்மாக்களாய்த் தோன்றுகின்றது.

வாயுர் யதைகோ புவநம் ப்ரவிஷ்டோ; ரூபம் ரூபம் ப்ரதி ரூபோ பபூவ, ஏகஸ்ததா ஸர்வபூதாந்தராத்ம; ரூபம் ரூபம் ப்ரதி ரூபோ பஹிஸ்ச." [கடோபநிஷத்.]

பிரபஞ்சமெல்லாம் ஓர் வாயுவே வியாபித்து பிராண வாயுவென்றும், மலயமாருதமென்னும் சுழல் காற்றென்றும் சொல்லப்படுவதுபோல் ஓர் ஆத்மாவே, பிபீலிகாதி பிரம்ம பரியந்தம் சகல ஜீவ ஜந்துக்களிலும் வியாபித்து அனேக ஆத்மாக்களாய்த் தோன்றுகின்றது.

"யதேவேஹ ததமுத்ர ததந்விஹ, ம்ருத்யோஸ்ஸ
ம்ருத்யு மாப்நோதி ய இஹ நாநேவ பஸ்யதி." [கடோபநிஷத்.]

இந்த சரீரத்தில் இருக்கும் ஆத்மாவே அந்த

பரலோகத்திலிருக்கும் பரப் பிரம்மமா யிருக்கின்றது. அந்த பரலோகத்திலிருக்கும் பரப் பிரம்மமே இந்த உலகத்தில் நமது சரீரத்தில் ஆத்ம சொரூபமாய் நிவசித்துக் கொண் டிருக்கின்றது. ஓர் ஆகாசமே கடோபாதியினால் கடாகாசமென்றும் உபாதி யில்லாம லிருப்பதால் மஹாகாசமென்றும் சொல்லப்படும். சர்வபரிபூர்ண பரப் பிரம்மம், இந்த தேகத்தில் வசிப்பதால் ஆத்மாவென்று சொல்லப்படும்.

"அணோரணீயாந் மஹதோ மஹீயாந்
ஆத்மஸ்ய ஜந்தோர் நிஹிதோ குஹாயாம்." [கடோபநிஷத்.]

இந்த உலகத்தில் அணுவைவிட மிகவும் சிறிய ஜந்துக்களிலும், யானை அல்லது பெரிய பர்வதம்போன்ற பெரிய ஜந்துக்களினுடைய சரீரத்திலும் ஆத்மா நிவசித்துக்கொண் டிருக்கின்றது;

'அமரீரம் மரீரேஷு அநவஸ்த்தே ஷ்வவஸ்த்திதம்' [கடோ]

ஆத்மா, தனக்குச் சரீரமில்லாமல் நாசரஹிதனாய், நமது சரீரத்திலேயே வசித்துக்கொண் டிருக்கின்றான்.

ஆத்மா, காற்றுருவமாய் இருக்கப்பட்டது. ஆதலால், இந்த சரீரத்திலேயே ரூபமில்லாமல்நாசரஹிதனாய்வசித்துக் கொண் டிருக்கின்றான். இந்த சரீரத்திற்கு நாசமேயொழிய ஆத்மாவிற்கு நாசமில்லை. இதற்கு திருஷ்டாந்தம், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம் 2, சுலோகம் 23, 24, 25-ல், ஸ்ரீ கிருஷ்ண பகவான் என்ன சொல்லுகின்றாரென்றால்:—

நைநம் சிந்தந்தி மஸ்த்ராணி நைநம் தஹதி பாவக:
நசைநம் க்லேதயம் த்யாபோ நமோஷயதி மாருத:

அச்சேத்யோ யமதாஹ்யோ யமக்லேத்யோ மோஷ்யயேவச
நித்ய ஸ்ஸர்வகத: ஸ்தாணு ரசலோயம் ஸநாதந:.

அவ்யக்தோய மசிந்த்யோய மவிகார்யோ ய முச்யதே
தஸ்மா தேவம் விதித்வைநம் நாநுசோசிது மஹரஸி.

இந்த தேஹம் ஆயுதங்களினுல் வெட்டுப் பட்டபோதிலும், அக்கியினுல் தஹிக்கப்பட்டபோதிலும், ஜலத்தினுல் நனைக்கப் பட்டபோதிலும், காற்றினுல் மோதப் பட்டபோதிலும், இந்த தேகத்திலிருக்கும் ஆத்மா அதனைவிட்டு மற்றொரு தேஹத்தில் பிரவேசிக்கின்றதேயன்றி தேகத்துடன்கூட நசிக்கமாட்டா; அப்படி வெட்டுப்படுவது தஹிக்கப்படுவது நனைக்கப்படுவது மோதப்படுவது நிந்திக்கப்படுவது முதலானவைகள் சரீரத்திற்குச் சம்பந்தப் பட்டனவே யன்றி ஆத்மாவிற்குச் சம்பந்தப் பட்டவையல்ல. சரீரத்திற்கு மாத்திரம் மாறுதலுண்டே யன்றி ஆத்மாவிற்கு எப்பொழுதும் மாறுத லில்லை. இந்த ஆத்மா, ஆயுதம் அக்கினி ஜலம் வாயு முதலாகிய எவற்றினுலும் நசிக்கப்படமாட்டா. இவ்வாத்மா எப்படிப்பட்ட தென்றால், ஆதியில் பசுத்தன்மை யுடையதாயிருந்தது. பசுத்தன்மையாயிருந்த பரமாத்மாவிற்கு ஆணவ மலமென்னும் பந்தம் பற்றியபடியால் இவ்வான்மாவிற்கு, ஜீவாத்மா என்னும் பெயர் உண்டாயிற்று; இதற்கு சிவஞான சித்தியார் பிரமாணம்:

அசித்தரு வியாப கம்போல் வியாபக மருவ மின்ருய்
வசித்திட வரும் வியாபி யெனும்வழக் குடைய ஞகி
நசித்திடா ஞானச் செய்தி யநாதியே மறைந்து நிற்கும்
பசுத்துவ முடைய ஞகிப் பசுவென நிற்கு மான்மா.

இதுநித்தியமானது; அதாவது, ஆத்மா ஒருபோதிருந்தும் ஒருபோதுஇல்லாமல் இருப்பதுமல்ல. மாயா சம்சாரத்திலிருந்து தப்பித்துக்கொண்டு பாப்பிரம்மத்தில் ஐக்கியமாகும் வரையில் எப்பொழுதும் ஏதையோ ஓர் சரீரத்தை ஆசிரயித்துக் கொண்டேயிருக்கும். ‘ஸர்வகதம்’ அதா

வது, பிபீலிகாதி பிரம பரியந்தம் சகல ஜந்துக்களின் இருதய கமலத்தில் ஆத்மா வியாபித்திருக்கின்றது.

'தாணு' நிச்சலமானது; அதாவது, தான் தரித்திருக்கும் தேஹங்கள் அப்போதைக் கப்போது மாறினனும், ஆத்மா மாத்திரம் மாருமல் எப்பொழுதும் ஒரே விதமாயிருக்கும்

இன்னும் இந்த ஆத்மா எப்படிப்பட்டதென்ருல், ஞானேந்திரியங்களினுலும் அறியக்கூடாதவ னென்பதற்குச் சுருதிப் பிரமாண மென்னவென்ருல், "ந தத்ர சக்ஷுர் கச்சதி ந வாக் கச்சதி நோ மநஃ ந வித்யோ ந விஜாநீமஃ" ஆத்மா கண்களுக்குக் காணப்படாதது, மனதினுல் நினைப்பதற்குச் சாத்தியப்படாதது, இப்படிப்பட்டதென்று நிரூபித்துச் சொல்வதற்கு வாக்கு வரமாட்டா. இப்பேர்ப்பட்ட எந்த விகாரங்களும் ஆத்மாவிற்கு இல்லையென்று தத்வஞானிகள் சொல்லுகின்ருர்கள். ஒரு தடவை சொல்லிய விஷயங்களைப்போல் மறுபடியும் சொல்லுகின்ருெமென்று யோசிக்கின்ருயா என்ன? பரமாத்ம சொரூபம் இப்படிப்பட்டதென்று உன் மனதிற்கு நன்ருய்ப் பிடிபடும்படி சப்தங்களை மாற்றி மாற்றித் தெரிவிக்கின்றேன். ஆதலால், ஆத்மா இப்படிப்பட்டதென்று தெரிந்து கொண்டு யுத்தம்செய்; துக்கப்படவேண்டாம். இன்னும் அத்யாயம் 2, சுலோகம் 26-ல், ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல்லுகின்ருர்.

அத சைநம் நித்யஜாதம் நித்யம்வா மந்யஸே ம்ருதம்
ததாபி த்வம் மஹாபாஹோ நைவம் ஶோசிது மஹரவி.

ஓ அர்ஜுநா ! ஆத்மதத்வம் இப்படிப்பட்டதென்று நான் உனக்கு, இதுவரையில் அத்தியாயம் 2, சுலோகம் 2-முதல் 25-வரையில், சொல்லியிருக்கின்றேன். ஆதலால்,

மறுபடியும் இந்த ஆத்மா பிறக்கின்றவனென்றும் இறக்கின்றவனென்றும் நினைக்கவேண்டாம். இந்த ஆத்மாவைக் குறித்து நீ துக்கப்படவேண்டாம்; ஏனென்றால், பிறந்தவன் இறப்பதும், இறந்தவன் மறுபடியும் பிறப்பதும் தப்பாதல்லவா? ஆதலால், பிறந்து இறந்துகொண்டிருக்கும் சுவாபமுடைய பீஷ்மர் முதலானவர்கள் இன்று உன்னால் கொல்லப்பட்டாலும், நாளையதினம் மறுமடியும் தப்பாமல் பிறப்பார்கள். பூர்த்தியாய் நாசமானால், விசனப்படவேண்டியதுதான். தூங்கி எழுந்தவனைப்போல் இன்றைக்கிறந்து நாளைக்குப் பிறப்பவர்களைக் குறித்து விசனப்படவேண்டாம். இறந்தவர்கள் மறுபடியும் பிறப்பார்களல்லவா? இதற்குமுன் வரும் விஷயங்களை கீதையில் விரிவாய்க் காணலாம். இதற்கு சிவஞானசித்தியார் பிரமாணம்;

> சூக்கும தேகி யாகித் தூலரூ பத்தின் மன்னிச்
> சாக்கிர முதலா யுள்ள வவத்தையுட் டங்கி யெங்கும்
> போக்கொடு வரவு மெல்லாம் புரிந்துபுண் ணியங்கள் பாவ
> மாக்கியும் பலன்க ளெல்லா மருந்தியு நிற்கு மான்மா.

"ஸவாஏஷ மஹாநஜ ஆத்மா அஜரோ அமரோ அம்ருதோ அபயோ ப்ரஹ்மாபயம் ஹி வை ப்ரஹ்மாபவதி." [ப்ருஹதாரண்யகோப]

ஆத்மா, பால்ய யௌவன கௌமாரங்கள் (கிழத்தனங்கள்) இல்லாதது. இந்தச் சரீரத்திற்கே பாலய யௌவன கௌமார (கிழத்தன) அவஸ்தைகள் உண்டு. இந்த ஆத்மா பயமில்லாதவன். அப்படிப்பட்ட ஆத்மா இந்த சரீரத்தில் எவ்விடம் குடி இருக்கின்றதென்றால்,

"அந்தஶ்ஶரீரே நிஹிதோ குஹாயாம்." [அத்யாத்மோபநிஷத்.]

ஆத்மா, இந்த சரீரத்தில் பஞ்சகோசங்களில் வசிக்கின்றது. அது, அன்னமய பிராணமய மனோமய விஞ்ஞானமய ஆனந்தமயமென்று சொல்லப்படும்.

இந்த தூல சரீரம் ஆஹாரமில்லாவிடில் நசித்துவிடும். அப்படி நசிக்காமல் நிற்பதற்காக அன்னமீய கோசமும். சூட்சுமசரீரம் நிற்பதற்காக, பிராணமய மனோமய விஞ் ஞானமய இந்த மூன்று கோசங்களும் ஆதாரமாயிருக் கின்றது. இதில் பிராணவாயு கர்மேந்திரியங்கள் சேர்ந்து பிராணமய கோசமாகும்.

சித்தம் கர்மேந்திரியங்கள் சேர்ந்து மனோமய கோச மாகும். புத்தி ஞானேந்திரியங்கள் சேர்ந்து விஞ்ஞான மய கோசமாகும். காரணசரீரம் ஆனந்தமய கோசமென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட கோசங்கள் ஞானத்தை எவ்விதமாய் மூடிக்கொண் டிருக்கின்றதென்றால், ஸ்ரீகிருஷ் ணார்ஜுன சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்தி யாயம் 3, சு. 38-39-ல், ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லுகின்றார்:—

> தூமேநா வ்ரியதே வஹ்நிர்யதா தர்ஶோ மலேநச
> யதோல்பே நாவ்ருதோ கர்ப்பஸ்த்ததா தேநேத மாவ்ருதம்
>
> ஆவ்ருதம் ஜ்ஞாந மேதேந ஜ்ஞாநிநோ நித்யவைரிணா
> காமரூபேண கௌந்தேய துஷ்பூரே ணாநலேநச.

ஓ குந்தீ புத்ரா! அக்நி புகையினாலும், கண்ணாடி அழுக்கினாலும், கர்ப்பத்திலிருக்கும் பிண்டம் பையினாலும் எப்படி மூடப்பட்டிருக்கின்றனவோ, அவ்வாறே ஞான மானது ஆசையினால் மூடப்பட்டுள்ளதென்று சொல்லப் பட்டிருக்கின்றது. இம்மூன்று திருஷ்டாந்தங்களும் மூன்று வித மனிதரைக் குறிக்கும். அம்மூவகை மனிதராவது:—

1. புகையினால் அக்நி மூடப்பட் டிருப்பதுபோல், மாயை என்னும் ஆசையால் ஆத்மஞானமென்னும் அக்னி யை மூடப்பட் டிருப்பவர்கள் ஆத்மஞான மூள்ளவர் களே யாவார்கள்.

எப்படியென்றால், நிஷ்களங்கமாகிய ஆத்மாஞானத்தி லேயே நிலையில்லாமலும், விஷய பற்றுதல்களை முழுதும்

விடாமலும் இருப்பார்கள். அக்கியைச் சூழ்ந்திருக்கும் புகை எவ்வளவு விசேஷமாயிருந்தாலும் அக்கியின்மீது காற்று பட்டவுடன் புகை விலக்கப்பட்டு, பிறகு அது சுவாலையை விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கினவுடனே புகை இருந்த இடந்தெரியாமல் எப்படி மறைகின்றதோ அப்படியே, குரு உபதேசத்தினாலும் சாது சங்கத்தினாலும் இவர்களுக்கு இச்சை நசித்து கூடிய சீக்கிரமாகவே அப்பியாச முதிர்ச்சியினால் ஆத்மஞானத்தை அடைவார்கள். ஆதலால், இவர்கள் முதல் வகுப்பினர் ஆவார்கள்.

2. அழுக்கினால் மூடப்பட்ட கண்ணாடியைப் பார்க்கும் ஒருவனது முகம், பிரகாசமாகவும் சுத்தமாகவும் தெரியாவிட்டாலும், ஏகதேசமாய்த் தெரியுமன்றோ? அவனுக்குத் தன்முகம் பிரகாசமாய்த் தெரியவேண்டுமென்கிற எண்ணம் மாத்திரம் இருக்கின்றதேயன்றி அழுக்கைத் துடைத்தால் கண்ணாடியில் முகம் பிரகாசிக்கும் என்கிற ஞானம் இல்லை. அதுபோல், ஆத்மஞானத்தை சம்பாதிக்கவேண்டுமென்கிற அபேக்ஷைமாத்திரம் இருக்கின்றது. ஆசையை ஒழித்தாலன்றி அதனைக்கிட்டுவது கூடாது என்கிற நிச்சயமில்லாமல் கலக்கமுற்றிருப்பான். இந்த ஆசையைப் போக்கடித்துக் கொண்டால் ஆத்மஞானத்தை அடையலாம் என்கிற நிச்சயஞானம் இல்லாமலிருப்பான். இப்பேர்ப் பட்டவனுக்கு குரு உபதேசத்தினாலும் சாது சங்கத்தி (நல்லவர்கள் சகவாசத்தி) னாலும் சிலகாலங்களுக்குப்பின் ஞானோதயமாகும். இப்படிப்பட்டவர்கள் இரண்டாவது வகுப்பினராவார்கள். இதற்கு கைவல்யம் பிரமாணம்.

தர்ப்பணத்தினிற் களிம்புவாஸ்தவமலஞ் சகசமாதலின் மைந்தா
கற்பளிங்கினிற் கருநிறஞ்சகசமாங் கறுத்தன் றாரோபம்
தற்பணத்தினி லழுக்கறவேண்டினாற் சாதனத்தொழில் வேண்டும்
கற்பளிங்கி லாரோபமே கறுப்பெனக் கண்டிடமனம்போதும்.

3. தாயின் கர்ப்பத்திலுள்ள பையில் அடங்கிக் கிடக்கும் பிண்டமானது, தானகவே அந்தப் பையைவிட்டு வர சக்தியற்றதா யிருப்பதுபோல், ஆத்மஞானமில்லாதவர்கள் ஆத்மா இப்படிப்பட்டதென்று அறியாமல், ஆசையென்னும் வலையில் அகப்பட்டுக்கொண்டிருப்பார்கள். ஆசையை நிவர்த்தி செய்துகொள்ளச் சக்தியற்ற இவர்களுக்கு குரு உபதேசத்தினுலும் சாது சங்கத்தினுலும் பிரயோஜன மில்லை. இவர்களே மூன்ருவது வகுப்பினர்கள் ஆவார்கள்.

அர்ஜுனா! புகைந்துகொண்டிருக்கும் அக்கி, ஊதுவத னுலேயோ அல்லது விசிரியினுல் விசுருவதனுலேயோ புகை நீங்கி சுவாலை உண்டாகின்றதல்லவா? அழுக்கினுல் மூடப்பட்ட கண்ணுடியைக் கழுவுவதனுலேயோ அல்லது துடைப்பதனுலேயோ அழுக்கு நீங்கி கண்ணுடி துலாம்பரமாயிருக்குமல்லவா! பிரசவித்தவுடன் சிசுவை மூடிக்கொண்டிருந்த 'மா' வீழ்ந்து விடுகின்றதல்லவா? அதுபோல், யோகப்பியாசத்தினுல் யோகியை மூடிக்கொண்டிருந்த காமக்குரோதங்கள் நீங்கி ஞானம் பிரகாசிக்கும். என்ருல், ஜநநமென்கிற மாயை நசித்தால், எங்கும் நிறைந்திருக்கும் பராபர வஸ்துவானது உதயமாகும்: இப் பராபரவஸ்து உதயமாயின், மாயை நாசமாகும்: மாயை நாசமாவதே மோக்ஷமெனப்படும்: ஞானமென்கிற சூரியன் உதயமானுல், அனேக ஜன்மங்களாய்த் தொடர்ந்துவரும், மண்ணுசை பெண்ணுசை பொருளாசை என்கிற மூன்று வாசனைகளும், ஆணவம் மாய்கை காம்யம் என்னும் மும்மலங்களும் நீங்கும்: இதற்கு ஞானவாசிட்டம் பிரமாணம்,

பிறப்பெனு மாயைக் கரையதா யெங்கும்
பிறிவறு பெரும் பொருடோன்றி
லிறப்புறு மாயைக் கிச்சையே வடிவா
மித னுடை நாசமே வீடு

சிறப்பில் சங்கற்பஞ் சிதைந்திடி லிதுதான்
றேய்ந்திடுஞ் சித் தெனுங் கதிரோன்
புறப்படி லிதய விசும்பில் வாதனையாம்
பொங் கிருள் போமெனப் புகல்வாம்.

அர்ஜுனன் — ஓ சுவாமீ! புகையினால் மூடப்பட்ட அக்கி ஊதுவதனால் எரிந்து, ஊதுவதை நிறுத்தினவுடனே எரிவது நின்று, மறுபடியும் புகைந்துகொண் டிருக்குமல்லவா? அதுபோல் இந்த ஞானமும் காமக்குரோதங்களால் மறைபட்டும் வெளிப் பட்டுக்கொண்டும் இருக்குமல்லவா?

கிருஷ்ணன்:—ஆம், புகைந்து கொண்டிருக்கும் அக்கியை விசிறினால் எரிந்து, மறுபடியும் அணைந்து மறுபடியும் புகைந்து, மறுபடியும் எரிந்து, வரவர சிலநேரத்தில் சுவாலை பிரகாசித்துப் பெருந்தீயை உண்டாக்கும். அதன் பிறகு விசிறுவ தாயினும், ஊதுவ தாயினும் இல்லாமலே தனக்குத்தானாய், எப்படி எரிகின்றதோ அதுபோல் யோகாப்பியாசிக்கு காமக்குரோதங்கள், மனம், புத்தி, இந்திரியங்கள் முதலானவைக ளெல்லாம் அவன் செய்யும் மனோ நிக்கிரஹத்தில் நிவர்த்தியாய் மறுபடியும் தோன்றி மறுபடியும், மனம் புத்தி இந்திரிய நிக்கிரஹத்தினால் நிவர்த்தியாய் இப்படிச் சிலநாள்வரையில் அவனைக் கஷ்டப் படுத்திக்கொண்டிருக்கும். ஆனால், அவைகள் தோன்றும் போதெல்லாம் அந்த யோகாப்பியாசி விடாமல் பிடிவாதத்துடன்யிருந்து, மனம் புத்தி இந்திரியங்கள் முதலானவைகளை நிக்கிரஹித்துக்கொண்டே வருவானாகில், அவைகள் அனைத்தும் அவனை விட்டொழியும். அப்படி ஊக்கத்துடன் விடாமல் செய்துகொண்டுவரும் அப்பியாசத்தினால் சிலகாலங்களுக்குள் பூர்ண வைராக்கிய முண்டாகும். அப்போது, அந்த காமக்குரோதங்கள் அவனை விட்டொழி

யும். அதன்பிறகு ஞானம் நிர்மலமானதாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் இதன் விஷயமாய் ஒரு கதையுண்டு. அதனைச் சொல்லுகின்றோம் கேள்:—

ஒரு பட்டணத்தில் கள்ளன் ஒருவனிருந்தான். அவன், ஒருநாள் இரவு அந்த பட்டணத்தை ஆளும் ராஜானுடைய படுக்கையறையில் ரகசியமாய்ப், பிரவேசித்து, ராஜனும் அவனுடைய மனைவியும் நல்ல நித்திரைசெய்யும் பொழுது அவர்களினுடைய ஆபரணங்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு போவதற்கு சமயம் பார்த்துக்கொண்டு ஒருபுறமாய்ப் பதுங்கியிருந்தான். ராஜனும் அவனுடைய பத்தினியும் பள்ளியறையில் பிரவேசித்து சந்தோஷமாய் வார்த்தையாடிக் கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் ராஜனனவன் தன் மகளை, ஒரு பாகவதோத்தமனுக்கு அதாவது, சதாகாலமும் பகவந்நாம ஸ்மரணை செய்து கொண்டிருக்கப்பட்டவனுக்கு, அவனுடைய ஜாதி கோத்திரம் யாதாயிருந்தபோதிலும் விசாரிக்காமல் அவனுக்குக் கொடுத்து, விவாகம் செய்வித்து தன்னுடைய ராஜ்ஜியத்தில் பாதி ராஜ்ஜியம் கொடுப்பதாய் திடமாய்த் தன் மனைவியிடம் சொல்லினன். அவ்விடத்தில் பதுங்கியிருந்த கள்ளன், இவைகளைக் கேட்டவுடன் தான் முன் உத்தேசித்திருந்த திருட்டுவேலை செய்வதனால் அது நிர்விக்கினமாய் நடந்தேறிய போதிலும் அற்ப பலனே உண்டாகுமென்றும், அல்லது ஒருவேளை கிரஹசாரம் போதாமல் பிடிப்பட்டாலோ ராஜதண்டனைக்குப் பாத்திரனாகவேண்டுமென்றும், எண்ணினவனாய் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதைப் பார்க்கிலும், சிலகாலம் வரையில் பாகவதனாய் வேடந்தரித்து, சதா பகவத் குணானுபவம் ஜபம்செய்து வந்தால் ராஜகுமாரத்தியையும் பாதி ராஜ்ஜியத்தையும் அடையலாம் என்று எண்ணி, தான் எப்படி ரகசியமாய்

உட்பிரவேசித்தானோ அப்படியே ரகசியமாய் வெளியே சென்று, மறுநாள் அருணோதயத்திலேயே ஆற்றுக்குச் சென்று நீராடி துவாதசோர்த்துவ புண்டரங்களைத்(பன்னி ரெண்டு நாமங்களைத்) தரித்து, பகவத்பக்த சின்னங்களு டன் சர்வகால சர்வா வஸ்தைகளிலும் பகவந்நாமத்தையே ஜபித்துக்கொண் டிருந்தான். இவ்வாறிருக்க, மறுநாள் உதயத்தில், ராஜன் படுக்கையினின்று எழுந்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, ஆஸ்தான மண் டபத்தில் உட்கார்ந்து, மந்திரிமார்களைப் பார்த்துத் தன் குமாரத்தியின் விவாகத்தைக் குறித்துத் தான் கொண் டிருக்கும் மனோ நிச்சயத்தைத் தெரிவித்து, அப்பேர்ப் பட்ட புருஷன் எவ்விடத்திலேனும் காணப்பட்டால், ஆறு மாதம்வரையில் அவனுடைய நடக்கைகளைப் பார்த்து, அதன்பிறகு அவனைத் தன்னிடத்தில் அழைத்துக்கொண்டு வரும்படி ஆஞ்ஞாபித்து, தகுந்த சேவகர்களை நியமிக்க வேண்டுமென்று மந்திரிமார்களுக்குக் கட்டளையிட்டான். அதுபோல் மந்திரிமார்களும் தகுந்த சேவகர்களைநியமித்து அனுப்பினார்கள். அந்தச் சேவகர்கள் சென்று பட்டண மெங்கும்தேடியலைந்தபோது, அன்றிரவு ராஜனது படுக்கை யறையில் பதுங்கியிருந்து வெளியான அந்தவேஷதாரி யாகிய கள்ளனே, சேவகர்களுக்குத் தென்பட்டான். பிறகு திருடன் சென்ற இடமெல்லாம் சேவகர்கள் சென்று, அவனுக்குத் தெரியாமல் மறைந்து உடன்சென்று பார்த் துக் கொண்டிருந்தார்கள். சேவகர்கள் தன்னைக் கண்டு பிடிக்கத் திரிந்து கொண்டிருப்பதை வேஷதாரியாகிய திருடன் அறிந்து, தன் மனோரதம் சித்திக்குமென்னும் நம்பிக்கையுடன் ஒரு க்ஷணமேனும் ஓயாமல் பகவந்நா மத்தை ஸ்மரித்துக்கொண்டேவந்தான். இவ்வாறு ஸ்மரித் துக்கொண்டு வந்தபடியால், அப்பியாச முதிர்ச்சியினால்

பகவந்நாமத்தில் உண்மையாகவே ருசியுண்டாய் அவனுக்கு முன்னிருந்த துன்மார்க்க குணங்கள் கிரமக் கிரமமாய் நசித்து, பகவத்பக்தி அதிகரித்துக் கொண்டேவந்தது. இதனைக்கண்ட சேவகர்கள் ஆறுமாதம் சென்றதும், அவனை ராஜசபைக்கு அழைத்துக்கொண்டு சென்றார்கள். ராஜன் சேவகர்களால் அவனது சவிஸ்தாரங்களையெல்லாம் செவ்வனே கேட்டுத் தான் உத்தேசித்தபடி தனது குமாரத்திக்குத் தகுந்தவரன் (புருஷன்) இவனே என்று நிச்சயித்துத் தன் குமாரத்தியைப் பாணிக் கிரகணம் (விவாகம்) செய்துகொள்ள வேண்டுமென்றும், தனது பாதி ராஜ்ஜியத்தை அங்கீகரிக்க வேண்டுமென்றும், அரசன் அவனைப் பிரார்த்தித்தான். திருடனுக்கு, அப்பியாச முதிர்ச்சியினால் பகவந்நாமத்தில் ருசி அதிகரித்தபடியால் முன்னிருந்த துர்விஷயம் யாவும் நசித்துபோய், விஷயவாஞ்சை பூர்த்தியாய் விட்டவனாதலால் ராஜனுடைய பிரார்த்தனையின் மீது அருவை யுண்டாய் அவ்வார்த்தைக்கு உடன்படாமல், திடீரென்று எழுந்து வெளியே சென்றான். ஆதலால், இதற்கு வாசிட்டம் பிரமாணம்.

> பாரியை யுடையோன் யாவ னவனுக்கே பற்றும் போக
> நாரியை யில்லாதாற்குப் போகத்தி னல மெங் குண்டாங்
> காரிகை தன்னை நீங்கிற் கருத்துரு சகத்து நீங்கும்
> பேரியல் சகத்து நீங்கிற் பிரிவில் பேரின்ப முண்டாம்.

அதாவது, மனைவி யுடையவனுக்கே, மோகத்திலும் எல்லாப் பொருள்களிலும் இச்சை உண்டாகும: மனைவி இல்லாதவனுக்கு புணர்ச்சி யின்பமும் வஸ்துக்களின் இச்சையும் உண்டாக மாட்டா: சம்போகத்திற்கு இடமான பெண்ணை விட்டால் உலகத்திலுள்ள பற்றுதல் யாவும் நீங்கும்: இப்பற்றுதல் யாவும் நீங்கினல், உலகத்திலுள்ள இச்சை யாவும் ஒழிந்து சொல்லத்தகாத பேரானந்த இன்ப

சுகத்தை அடைவான்: மேற்சொல்லிய கள்ளன் செய்த பக்தியே சரிகை எனப்படும்: சரிகை முடிந்தபின் கிரிகை தானுய் உண்டாகும்: கிரிகை முடிந்தபின் யோகியாவான்; யோகம் முடிந்தபின் ஞானவானுவான்: ஆதலால், முதற் படியாகிய சரிகையை எல்லோரும் மிகவும் சிரத்தை பக்தி விசுவாசங்களுடன் செய்துவந்தால் மற்ற மூன்று படிகளும் தனக்குத்தானுகவே உண்டாகும்: இதற்கு வள்ளலார் பாடல் பிரமாணம்;

சரிகையிலே யீசன் சடவடிவாய் நின்றான்
கிரிகையிலே மந்திரத்திற் கிட்டி யருகிருந்தா
னானமிலா யோகத்தி னுள்ளொளியாயே நின்றான்
ஞான மதி தானு யினன்.

சரிகையிலே இருக்கப்பட்டவர்களுக்கு, ஈசன் மானிடனைப் போன்ற சட்டையைத்தரித்து மனிதரூபமாய் நின்றார். கிரிகையிலே இருக்கப் பட்டவர்களுக்கு மந்திர வடிவமாய் நின்றார். யோகனிலே அறிந்தவர்களுக்கு உள்ளொளியாய் நின்றார். ஞானத்தில், தன்னில் ஐக்கியம் செய்து தான் தானுய் நின்றான். ஆகலால், காயுங் கிழங்கும் கனியும் புசித்துத் தவம், செய்தாலும் ஜநந மரணமென்னும் பிறவி நீங்காது. தேகத்திற்குள் இருதய கமலத்தின் மத்தியில் கூடஸ்தனையும் சாக்ஷி மாத்ரனையும், சதாசிவனென்று பெயர் வழங்கும் பரமாத்ம சொரூபத்தை எங்கும் நிறைந்த வஸ்துவாய்ப் பார்த்து தான் அவ்வஸ்துவில் கலந்தால், பிறவி நீங்கும்: இதற்கு வள்ளலார் சரித்திரம் பிரமாணம்:

காயுங் கிழங்குங் கனியருந்தி நோற்றாலு
மாயும் பிறப்பகல மாட்டுமோ காயத்திற்
றங்குஞ் சதாசிவனைத் தானுகக்கண்டு தனை
யெங்கு மாய்க் கண்டாலிறும்.

ஆதலால், பகவத் குணானுபவத்தின் ருசியறிந்து ததேக நிஷ்டனாய் ஆத்மானுபவ முடையவனுக்கு லௌகீக விஷயங்களில் ருசி உண்டாகுமா? உண்டாக மாட்டா. சில சமயங்களில், அவனுடைய மனம் துர் விஷயங்களில் திரும்பினாலும், அவ்வாறு போக விடாமல் அதனை உடனே திருப்பிக்கொள்வான்.

ஓ அன்பர்களே! ஆத்மா, மனதுடன் கூட எதுவரை யில் சம்பந்தப் பட்டிருக்கின்றதோ, அதுவரையில் ஜநந மரணங்கள் அடைந்துகொண்டே வரும். மனம் இறந்தால், ஜீவன் மோக்ஷத்தை அடையும். அஃதெப்படி யென்றால், ஆத்மாவிற்குச் சஹாயகாரியா யிருந்த மனம் நசித்துவிட்ட படியால், தான் வேறு சரீரங்களில் புகுந்தொழில் நீங்கித் தன் நிஜ சொரூபமாகிய பரப் பிரம்மத்துடன் போய்ச் சேர்ந்து ஐக்யமாய் விடும். எப்படியென்றால், கண்ணாடி யெதிரில் மற்றொரு கண்ணாடி வைத்தால், அவைகள் எப் படி ஒன்றையொன்று அறியாம லிருக்கின்றதோ அது போல், சராசர மென்கிற அசையும் அசையாப் பொருள் களெல்லாம் அசையாமல் பரிபூரணமாய் நிற்பதற்கு, நீ நான் என்னும் கற்பனை முதலாகிய வேற்றுமைக ளெல்லா மடங்கி விட்டால், ஒப்பற்ற கைவல்யமாகும். இதற்கு வாசிட்டம் பிரமாணம்:

நிற்பநடப்ப வெனுமனைத்தி னிழலாடாது வெறிதிருக்குந்
தற்பணந்தா னெப்படியோ தானேவிளங்கு மப்படியே
தற்பமுறுநீ நான்முதலாங் காட்சிவிகற்ப மெலாமடக்கி
யற்பமெனினுங் காட்சியறி லதுவே தனிக்கே வலநிலைமை.

அணு (கண்களுக்குக் காணப்படாத சிறிய புழு) முதல் பிரமதேவன் வரையில், அநேககோடி ஜன்மங்களை, யுகங் கள் தோறும் எடுத்துக்கொண்டு வந்தபோதிலும், எதுவோ

ஓர் ஜன்மத்தில் அந்த பரப் பிரம்மத்தில் போய்ச் சேர வேண்டியது திண்ணம். ஆனால், ஜீவகோடிகள் அந்த பரப் பிரம்மத்தில் போய்ச் சேருவது மிகவும் கஷ்டசாத்தியம். ஏனென்றால், பிரமதேவர் ஜீவர்களைச் சிருஷ்டி செய்த நாள்முதல் நாளது வரையில், எத்தனையோ கோடி ஜன்மங்கள் எடுத்து, ஒவ்வொரு ஜன்மத்திலும் மாறிமாறி வந்து கொண்டிருக்கும், பெண்டு பிள்ளைகளின் மீதும், பூமி வீடு தனம் தான்யங்களின் மீதும் அதிக பிரீதியை வைத்து மரணமடைந்துக் கொண்டே வருவதால், இவர்களுக்கு ஜன்மங்கள் தோறும் பெண்டு பிள்ளைகளின் மீதுள்ள இச்சை அதிகரித்துக் கொண்டே வருவதனால், அவர்களுக்கு மென்மேலும் சம்சார வாசனையில் மனம், இழுத்துக்கொண்டு செல்லுமே யொழிய மோக்ஷத்தை அடைய இச்சையை உண்டாக்கமாட்டா. உலகத்திலுள்ள ஜனங்க ளெல்லோரும் இப்படிப்பட்ட மாயா சக்கரத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இது, முன்னும் சொன்னோம்.

இந்த மாயாசக்கரத்தைக் குறித்து ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாத ரூபமாய் எழுதி யிருக்கும் ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம் 3, சுலோகம் 16-ல், எழுதப்பட் டிருக்கின்றது. அதை , இங்கு திருஷ்டாந்தமாய்ச் சொல்லுகின்றோம் கேளுங்கள்

எவம் ப்ரவர்திதம் சக்ரம் நானுவர்தயதீஹ யஃ
அகாயு ரிந்திரியாராமோ மோகம் பார்த்த ஸ ஜீவதி.

அர்ஜுனா ! இந்த யஞ்ஞம் சக்ராகாரமாய்த் திரிந்து கொண் டிருக்கின்றது; அஃதெப்படி என்றால், யஞ்ஞம் ஜனங்களுடன் கூடவே பிரமதேவனால் உற்பத்தி செய்து அனுப்பப்பட்டது. ஜனங்கள் செய்யும் யஞ்ஞத்தினால் தேவதைகள் பிரீதி அடைகின்றார்கள். தேவதைகள் பிரீதி அடைவதனால் மழை பெய்கின்றது; மழை பெய்வதனால்

ஆஹார (சாப்பிடும்) வஸ்துக்களெல்லாம் விசேஷமாய் விளைகின்றன. அப்படி விளைவதனால் பகவானுக்கு ஆராதனை செய்ய சக்தியுடையவர்களாயிருப்பார்கள் இப்படிப் பட்ட கர்மம் மறுபடியும் அந்த பகவானிடத்திலேயே சமர்ப்பணமாகின்றது. ஆதலால், இந்த யஞ்ஞரூபமாகிய கர்மம் எந்த பரப் பிரம்மத்திலிருந்து பிறந்ததோ அந்தப் பரப் பிரம்மத்திலேயே ஐக்கியமாய் மறுபடியும், அதிலிருந்தே உண்டாகிற படியால், இதற்குச் சக்கரமென்று சொல்லப்படும். இந்த விஷயங்களை எல்லாம் எவனொருவன் சரியாய் அறியாமல் தான் செய்யப்பட்ட கர்மமெல்லாம் பரமாத்மாவினாலேயே உண்டாயின வென்றும், அவற்றின் பலன் அந்த பரமாத்மாவிற்கே சேரவேண்டியதா யிருக்கின்றதென்றும் எண்ணமல், தன் ஆத்மார்த்தமாய் எண்ணி அதன் பலத்தைத் தானே அனுபவத்துக்கொண்டு, கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகசர்ம மென்னும் பஞ்சேந்திரிய (ஐந்து இந்திரிய) ங்களின் வழியாய் மனதை ஒடும்படிச் செய்கின்றானோ அவன் பாபாத்மனாகின்றான். அப்படிப் பட்டவன் ஜீவித்திருந்தாலும் இல்லாவிட்டாலும் வியர்த்தமானவனென்று அறியக்கடவாய்.

ஓ அர்ஜுனா! உலகத்தில் முதல் விருக்ஷமுண்டாயிற்று; அல்லது விதையுண்டாயிற்று என்னும் விஷயம் எவ்வாறு சொல்லத் துணியமாட்டோமோ அதுபோல், இந்த யஞ்ஞ ரூபமாகிய கர்மத்திற்கு இது முதலென்றும், இது கடைசியென்றும் சொல்வதற்குச் சாத்தியப்படமாட்டா. அதுபோல் சம்சார மென்னும் சமுத்திரம் அனாதி என்று அறியக்கடவாய். அஃதெப்படி யென்றால், ஒரு சக்கரத்தின் மீதேறி அந்தச் சக்கரத்தை அனேக தடவைகளில் சுற்றிவரும் எறும்பானது, தான் வெகுதூரம் திரிகின்றதென்று எண்ணுமேயன்றி மறுபடியும் தான் யதா ஸ்தா

னத்திற்கே வருகின்ற தென்று தெரிந்து அந்தச் சக்க ரத்தை விட்டு இறங்க எப்படிப் பிரயத்தினப்படாதோ, அதுபோல் சம்சாரியானவன் தான் ஒரு முறை செய்த காரியங்களையே மறுபடியும் செய்துகொண்டு அப்போ தைக்கப்போது அது புதிதான காரியமென்று எண்ணி பிரமையை அடைந்து இந்த சம்சார மென்னும் சக்கரத் தில், பிறந்துகொண்டும் இறந்துகொண்டும் இருப்பானே யன்றி, இதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்குப் பிரயத்தி னப் படமாட்டான். இதற்கு முன் விஷயங்களை ஸ்ரீ கிருஷ் ணார்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதையில் விரிவாய்க் காணலாம்.

இப்படிப்பட்ட மாயா சக்கரத்தில் அகப்பட்டுக் கொண் டிருக்கப்பட்டவர்கள் என்றைக்கோ ஓர்நாள் அத் வைத உபந்நியாசங்களைக் கேட்கவேண்டு மென்று இச்சை யுண்டாய், உபந்நியாசம் செய்யுமிடத்திற்குச் சென்று உட் கார்ந்தபோதிலும் உபந்நியாசம் ஆரம்பித்தவுடன் "ஐயோ மாயா சம்சார சக்கரத்தில் மூழ்கி யிருக்கப்பட்ட நீ, இந்த வேதாந்த ரகசியங்களைக் கேட்க அருஹனல்லவே" என்று மூதேவியானவள் பிரசன்னமாகின்றாள். அந்த மூதேவி யாரென்றால் ஜன்மாந்திரங்கள்தோறும் இவனுடன்கூடவே சாக்ஷியாய் வந்துகொண் டிருக்கும் பரப் பிரம்மத்தின் அம்சமாகிய ஆத்மா வென்று அறியக்கடவீர்களாக.

இந்த ஆத்மா, நித்திரை வாராத மற்றும் சிலருடைய மனதை, உபந்யாசங்களைக் கேட்க விடாமல் வேறு விஷ யங்களில் பற்றி அதாவது, சம்சார விஷயத்திலோ வியா பார விஷயத்திலோ உத்தியோக விஷயத்திலோ கோர்ட்டு விஷயத்திலோ அல்லது உபந்நியாசப் கேட்கவந்த மாதர் களின் மீதோ, இவ்விதமாய் எதிலேயோ ஓர் விஷயத்தில் இழுத்துச் செல்லும். இப்படிப்பட்டவர்களின் மனதை,

சங்கீதத்தின் மீதாகிலும் தாசிகளின் கச்சேரி மீதாகிலும் அகடவிகடமான குயுக்தி கதைகளின் மீதாகிலும் அருவருக்கத்தக்க நாடகங்களின் மீதாகிலும் சந்தோஷிக்கச் செய்யும். இப்படிப்பட்டவைகளின் மீது அதிக பிரீதி வைத்து மீன்குத்தி பக்ஷியைப்போல் தூங்காமல் விழித்து நாடகங்களைப் பார்த்துக்கொண்டு, அந்தந்தச் சந்தர்ப்பங்களில் 'ஒன்ஸ்மோர்' 'ஒன்ஸ்மோர்' (Once more, Once more) என்று சொல்லி எக்காளம் போட்டுக் கைகொட்டி ஹ! ஹ!! ஹ!!! ஹா!!!! வென்று சிறித்துக்கொண் டிருப்பார்கள். ஓர் சமயங்களில் நித்திரை வருவதாயிருந்தால் வெளியில் சென்று, ஸோடா லெமனெட்டுகளைச் சாப்பிட்டு தாம்பூலம் போட்டு சிகரெட் பீடிகளைப்பிடித்து நித்திரையைப் போக்கிக்கொண்டுவந்து உட்காருவதுமுண்டு. இவர்கள் ஜன்மமெடுத்தது இதற்கே யன்றி மோக்ஷத்தை அடைவதற்கல்லவென்று அறிக. இவ்விதமாய் ஒவ்வொன்றிலும் பற்றுதல் அதிகமா யிருப்பதனால், ஜன்மங்கள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன; இப்படிப்பட்ட விஷயங்களையெல்லாம் விட்டு மோக்ஷத்திற்குரிய சாதனங்களைச் செய்துவந்தால் 'முக்தி' பெறலாம். இவ்வாறு எழுதினேனென்று கோபிக்கவேண்டாம். உலகத்தில் நடந்தேறிவரும் விஷயங்களை எடுத்துக் காட்டியிருக்கின்றதேயன்றி வேறல்ல. உலகத்திலுள்ள யாவரும், அந்த பரப் பிரம்மத்தில் ஐக்கியமாகவேண்டு மென்னும் எண்ணத்தினால் இவ்வாறு எழுதினதேயன்றி வேறல்ல. இதற்கு திருஷ்டாந்தம் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம் 4, சுலோகம் 8-டின் கீழ்,

"லாலநே தாடநே மாதுர் ந வைஷம்யம் யதார்பகே
தத்வதேவ மஹேஶஸ்ய நியந்துர் குணதோஷயோ:"

என்று சொல்லி யிருக்கின்றது. அதாவது, தாய் சொல்வதுபோல் கேட்கும் குமாரனை அவள் அதிக பிரீதி யுடன் விசுவாசிப்பாள். தன் வார்த்தையைக் கேளாத குமாரனை அடிப்பாளன்றோ? அப்படி அடிப்பதும், தான் சொன்னபடி கேட்டு அவனும் நல்வழிக்கு வரவேண்டு மென்னும் எண்ணத்தினுல் அடிக்கின்றாளே யொழிய, அவன்மீதுள்ள விரோதத்தினு லல்ல? அதுபோல் சகல புருஷர்களுக்கும் நல்லறிவு தோன்றி, மோக்ஷானந்த பதவியை அடையும்பொருட்டு இவ்வாறெழுத நேரிட்ட தென்று அறிவீர்களாக.

மேற்சொல்லியதுபோல் எவனொருவன் தன்னுடைய மனதை, சதா பகவத் விஷயத்தில் லயிக்கும்படி அப்பிய சித்து வருகின்றானோ அவனுக்கு, கிரமக்கிரமமாய் இந்திரி யங்கள் வசமாகும். சகல இந்திரியங்களும் எப்பொழுது சரியாய் வசப்பட்டு நிற்கின்றனவோ அப்பொழுது தான் திருட ஞானமுடையவனு யிருப்பான். ஆதலால், மனதை யும் இந்திரியங்களையும் சுவாதீனம்செய்துகொண்டு சமாதி யில் இருக்கவேண்டும். அதாவது, கண்கள் மூக்கு வாய் தேஹசர்மம் செவிகள் என்னும் ஐந்து இந்திரியங்களும், மனதிற்கு வேலைக்காரர்களாய் இருந்து, வெளி விஷயங் களைக் கொண்டுபோய் மனதினிடம் சேர்ப்பிக்கின்றது. மேற்சொல்லிய இந்திரியங்கள், விஷயங்களை மனதினிடம் சேர்ப்பித்தவுடன் அம்மனம், உள்முகமாய் உதவியற்ற அனேக யோசனைகளைச் செய்துக்கொண்டே கடைசியில் எல்லாவற்றையும் மறந்துவிடும். எப்படி யென்றால்,

ஒரே சந்திரன் நூறு குடத்தில் பிரகாசித்துக்கொண் டிருக்கும்போது நூறு குடங்களிலும் பார்த்தால், அக் குடங்களின் ஜலம் அசையாமல் இருப்பதனுல், குடத்தில் காணப்படும் நூறு சந்திரர்களும், கண்ணுடியிற் காணப்படு

வதுபோல் மிகவும் சுத்தமாய்க் காணப்படும். பிறகு நூறு குடங்களையும் அசைத்துவிட்டால் நூறு குடத்திலுள்ள சந்திரர்களும் தலைகீழாய் ஆடிக்கொண்டேயிருக்கும். அப்போது சந்திரன், நீர்க்குடத்தில் முன் சுத்தமாய்க்காணப்பட்டதுபோல் காணப்படாமல், சந்திரன் தலைகீழாய்ச் சாய்ந்து ஆடிக்கொண்டேயிருக்கும். ஆனால், வாஸ்த்தவமான சந்திரன் சாய்கின்றானா வென்றாலோ சாய்வதில்லை.

அது போல் நமது சரீரத்தின் மத்தியில், தாமரைக் கமலம்போல் இருக்கும் கூண்டுக்குள் நிவசித்துக்கொண்டிருக்கும் ஆத்ம சன்னிதானத்தை அனுசரித்துக்கொண்டிருக்கும், மனம் புத்தி சித்தம் அஹங்காரமென்னும் அந்தக் கரணங்கள் நான்கும், முன்சொல்லிய நீர்க்குடத்திலுள்ள ஜலத்தைப்போல் சதாகாலமும் அசைந்துகொண்டிருப்பதனால், நமது இருதய கமலத்தில் இருக்கும் ஆத்மாவைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கின்றோம்; மனம் புத்தி சித்தம் அஹங்காரமென்னும் அந்தக் கரணங்கள் நான்கும் அசையாமல் நின்றுவிட்டால், முன் நீர்க்குடத்தில் ஜலம் அசையாமல் இருந்தபோது, சந்திரனது பிரதிபிம்பம் எவ்வளவு சுத்தமாய்க் காணப்பட்டதோ, அது போல், மனம் அசையாத தீபம்போல் நின்றால், இருதய கமலத்திலிருக்கும் பரமாத்ம சொரூபத்தைக் காணலாம். இதற்குத் திருஷ்டாந்தம் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந ஸம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீபகவத்கீதை அத்தியாயம் 2 சுலோகம் 61,

* தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத மத்பர:
வஸேஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா.

---

* (தாநி) ஆத்மதத்துவத்தை விசாரிக்குமளவில், இந்திரியங்களுக்கெல்லாம் மனதே ராஜன். அந்த ராஜனைப் பிடித்துச் சிறைச்சாலையில் அடைத்தபோது அதாவது, பரப்பிரம்ம சொரூபமாயிருக்கும் ஆத்மாவில் மனதை ஐக்கியம் செய்தபோது சங்கல்

கிருஷ்ணன்:—ஆஹா! ஜயிப்பான். † இந்திரியங்கள், யோகாப்பியாசியினது மனதையும் பலவந்தமாய் இழுத்துக்கொண்டிருக்கும். அதனால், அவைகளை சுவாதீனப்படுத்திக்கொள்ள அவனுக்கு கஷ்டமாயிருப்பது நிஜமே. ஆயினும் யோகாப்பியாசியானவன், இந்திரியங்களென்னும் குதிரைகளினால் இழுத்துக்கொண்டிருக்கும் தன் மனதென்னும் வண்டியை, துன்மார்க்க விஷயங்களில் போகவிடாமல், புத்தி என்னும் கயிற்றால் இழுத்துப்பிடித்து சன்மார்க்கத்திற்குத் திருப்பிக்கொண்டு வரவேண்டும். அப்படிச் செய்வதனால் காரில்லாத (கொழுவில்லாத) கலப்பை எப்படி உழமாட்டாதோ அதுபோல் மனதில்லாமல் எந்த இந்திரியங்களும் பிரயோஜனப் படமாட்டா. இந்திரியங்களில் ஏதேனும் ஒன்று தப்பு மார்க்கங்களில் ஓடினால், அது மனதினுடைய தப்பாகவே இருக்கின்றது. அப்படிப்பட்ட மனதை முதலில் வசப்படுத்தி பிறகு இந்திரியங்களை வசப்படுத்துவதற்கு பிரயத்தனிக்கவேண்டும். அப்படி மனதை வசப்படுத்தச் சாதனம் புத்தியேயாம். ஆதலால், எவனொருவன் தன் புத்தியினால் யுக்தா அயுக்தங்களை ஆலோசித்துத் தன் மனதை, இந்திரியங்களுடன் சேர்த்து தப்புமார்க்கத்தில் போகவிடாமல் இழுத்துப் பிடிக்கின்றானோ, அப்படிப்பட்டவனுக்கு தேவதைகள் பிரசன்னமாவார்கள். என்றால், அப்படிப்பட்டவனுக்கு முக்தி சுலபசாத்தியமாகும்.

அர்ஜுனன்:—ஆனால், மனதை வசப்படுத்துவதற்கு புத்தியே சாதனமென்று சொன்னீரல்லவா? அதனை எப்

பங் (எண்ணங்)களென்னும் சேவகர்கள் எல்லோம் ஓடிப்போய் விடுவார்கள் என்பதாம்.

கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகத்தின்மீதிருக்கும் தோல் இவ்வைந்தும் † இந்திரியங்களென்று சொல்லப்படும்.

படிச் சாதனம் செய்யவேண்டுமோ அதை விவரித்துச் சொல்லும் கிருஷ்ணா?

கிருஷ்ணன்:—அர்ஜுனா! நல்லது, சொல்லுகின்றேன் கேள். மனிதன், ஸ்திரீரூபத்தைப் பார்த்தவுடன், அவனுடைய மனம் அதில் நாடுகின்றதல்லவா? அப்பொழுது விவேகியானவன் என்ன செய்யவேண்டுமென்றால், "நாரீ ஸ்தநபர நாபீதேஸம் த்ருஷ்ட்வா மாயா மோஹாவேஸம் ஏதன்மாம்ஸ வஸாதி விகாரம் மநஸி விசிந்தய வாரம் வாரம்," என்னும் வாக்கிபரீதியாய் ஸ்திரீரூபம், சீழ் ரத்தம் மாமிசம் நாற்றங்களுடன் கூடிய கெட்ட பதார்த்தமென்று எண்ணினால் அப்படிப்பட்டவனுடைய திருஷ்டிக்கு ஸ்திரீகள் தெரிந்தபோதிலும், மோகத்தை அடையாமல் இருப்பான். இப்படி இருந்தபோதிலும் அவனது இந்திரியங்கள் அப்போ தைக்கப்போது கெட்ட விஷயங்களில் ஓடிக்கொண்டேயிருக்கும். அப்படி ஓடாமலிருப்பதற்காக யோகியானவன், தன் மனதை சதாகாலமும் என்னிடம் சேர்த்து என்னையே நம்பியிருந்தால் அப்பொழுது அவன் மனம், இந்திரியங்களின் வழியாய் தப்பு விஷயங்களில் பிரவேசிக்காமல் நின்றுவிடும். அஃதெப்படியென்றால், இதுவரையில் மனம் வண்டியைப்போன்றதென்றும், இந்திரியங்கள் குதிரையைப்போன்றதென்றும், பின்புறமாய் வண்டியின் சக்கரத்தை இழுத்துப்பிடிப்பவன் யோகியைப்போன்றவனென்றும், அப்படி இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தபோதிலும் அந்தக் குதிரைகள் கஷ்டத்தோடாயினும் வண்டியை இழுத்துக்கொண்டிருக்குமென்றும் சொல்லி இருந்தேனல்லவா? அப்படிப் பின்புறமாய் மனிதன் வண்டியின் சக்கரத்தை இழுத்துப் பிடிப்பதைவிட, உறுதியான கயற்றால் அந்தக்குதிரையை ஒரு விருக்ஷத்தில் கட்டிவிட்டால், அப்பொழுது அந்த வண்டியைக் குதிரை இழுக்குமா?

அர்ஜுநன்:—அப்படிக் கட்டின பிறகு, அந்த வண்டியை இழுப்பதற்கு அக்குதிரை எவ்வளவு பலமுடையதாயிருந்தபோதிலும், பூர்த்தியாய் சாத்தியமாகாமல் நின்று விடும்.

கிருஷ்ணன்:—அதுபோல், யோகியானவன் தன் மனதென்னும் வண்டியை "நான்" என்னும் விருக்ஷத்தில் கட்டிவிட்டால் அதாவது, மனதை ஆத்மாவில் ஐக்கியம் செய்துவிட்டால், அப்பேர்ப்பட்டவனுடைய இந்திரியங்கள் விஷயங்களில் போகமாட்டா. ஆதலால், மேற்சொல்லியது போல் எவனொருவன், தன்னுடைய மனதை பகவத் விஷயத்தில் எப்பொழுதும் லயித்திருக்கும்படி பழகி வருகின்றானோ அப்படிப் பட்டவனுக்கு, கிரமக்கிரமமாய் சகல இந்திரியங்களும் வசமாகும். அப்படி சகல இந்திரியங்களும் வசமாவதனால் ஸ்திரமான ஞானமுடையவனாய் இருப்பான். ஆதலால், மனதையும் இந்திரியங்களையும் சுவாதீனம் செய்துகொண்டு சமாதியிலிருக்கவேண்டும். இதற்குமுன் விஷயங்களை ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதையில் விரிவாய்க் காணலாம்.

மூத்திரப்பை தீனிப்பை குடல்களைக் கழுவி காயசுத்திசெய்யப் பழகுதல்.

மோக்ஷம் அடைவதற்கு முதல் சாதனம் யோகம்; இரண்டாவது ராஜயோகம்; மூன்றாவது பஞ்சாக்ஷரம்; நான்காவது பஞ்சமுத்திரைகள்; ஐந்தாவது மனோ ஓட்டத்தை நிறுத்திக்காட்டுதல்; ஆறாவது கைக்குறி சிதாகாசத்தில் மனதை லயப்படுத்துதல்; ஏழாவது ஸ்ரீ ராம மந்திரோபதேசம். இவைகளில் எதையாகிலும் ஒன்றை அப்பியசித்து, மனதை ஆகாச வடிவத்தில் லயிக்கச் செய்யவேண்டும்.

இப்போது யோகத்தைக் குறித்துச் சொல்லுகின்றோம். அதற்குப்பின் ராஜயோக லக்ஷணங்கள் சொல்லப்படும்.

யோகம் எப்படிப்பட்டதென்றால்:—காயசுத்தி செய்து அதாவது, இரவு மூன்றுமணிக்கெழுந்திருந்து இரண்டுபேடி ஜலத்தை ஓர் பெரியசொம்பில் வைத்து, அதனுடன் ஒரு 'பஞ்சபாத்திரம்' வைத்துக்கொண்டு மேற்படி பெரியசொம்பிலிருக்கும் ஜலத்தை, 'பஞ்சபாத்திரம்' நிறைய விட்டுக் கொண்டு, அதிலிருந்து பத்து விழுங்கு ஜலத்தைச் சாப்பிட்டுப் பஞ்சபாத்திரம் கீழேவைத்து ☞ எதிரிலிருக்கும் முதற் படம் No. 1-ணில், மூச்சைப்பிடித்து வயிற்றையெக்கி எவ் விதமாய் உட்கார்ந்துக் கொண்டிருக்கின்றதோ அதுபோல் உட்கார்ந்து, மூச்சை விடாமல் வயிற்றை முன்னுக்குத் தள்ளி, மறுபடியும் மூச்சை விடாமல் வயிற்றை உள்ளுக் கெக்கிக்கொண்டு, மறுபடியும் மூச்சை விடாமல் வயிற்றை முன்னுக்குத் தள்ளி, மறுபடியும் மூச்சை விடாமல் வயிற்றை உள்ளுக்கு எக்கிக்கொண்டு, இவ்விதமாய் மூச் சைப் பிடிக்க எவ்வளவு நேரம் சக்தியுண்டோ அவ்வளவு நேரம் மூச்சைப்பிடித்து எக்கிக்கொண்டு, முன்னுக்கும் பின்னுக்குமாய் வயிற்றை அசைத்து அசைத்துக் குலுக்கி, மூச்சைப்பிடிக்க சக்தியற்றபோது மூச்சை விட்டு விட்டு இரண்டு நிமிஷங்கள் சும்மாய் உட்கார்ந்து சிரமம் தீர்த்துக் கொண்டு, மறுபடியும் மேற்படி ஜலத்திலிருந்து பத்து விழுங்கு ஜலத்தைச் சாப்பிட்டு, முன்போல் சாதனம் செய்யவேண்டும். இவ்விதமாய் இரண்டுமுறை ஜலத்தைச் சாப்பிட்டு அப்பியாசம் செய்தபிறகு, No. 2. படத்தில் எழுந்து நின்று மூச்சைப்பிடித்து வயிற்றை எக்கிக் காட்டி யிருப்பதுபோல் நீங்களும் எக்கிக்கொண்டு, மூச்சைப் பிடித்துக்கொண்டே வயிற்றை முன்னுக்குத்தள்ளி மறு படியும் மூச்சைப் பிடித்துக்கொண்டே வயிற்றை எக்கிக்





ஜலம்சாப்பிட்டு மூத்திரப்பை தீனிப்பை குடல் இவைகளை
இரண்டு விதங்களாய்க் கழுவப் பழகுவதைக் காட்டும்
போடோ முழுப்ளேட்டு 2-க்கு, வி. பி. உள்பட ரூபா 4-0
வேண்டுபவர்கள், ஸதாநந்தன் வேப்பேரி போஸ்ட்
சென்னை என்று எழுதிப் பெறலாம். SATHANANTHAN VEPERY POST MADRAS.

నీళ్లు త్రాగి పేగులు, తీవిసంచి, మూత్రపుసంచి వీటిని రెండు విధములుగా సుద్ధిచేయు సాధకము.

Photo shewing the two ways of cleaning the stomach, the intestines and the bladder by taking in water.

கொண்டு, சுமார் பத்து அல்லது பதினைந்து தடவை வயிற்றை முன்னுக்கும் பின்னுக்குமாய் அசைத்து அசைத்து, மூச்சைப்பிடிக்கச் சக்தியற்றபோது மூச்சை விட்டுவிட்டு இரண்டு நிமிஷங்கள் இளைப்பாறி மறுபடியும் பத்து விழுங்கு ஜலம் சாப்பிட்டு, உட்கார்ந்து சில நேரமும், நின்று சில நேரமும் சாதனம் செய்யவேண்டும். இவ்விதமாய்ச் சாதனம் செய்து சிறுகச்சிறுக இரண்டு படி ஜலத்தையும் சாப்பிட்டுக்கொண்டே வர வர, ஓர் தோல் பையில் அரைபாகம் ஜலம் விட்டு வாயைமூடிக் குலுக்கிய போது அது என்ன சப்தம் உண்டாகின்றதோ அந்த சப்தம்போல் குடலை அசைக்கும்போதெல்லாம் சப்தமுண்டாகும். இவ்விதமாய்ச் சாதனம் செய்யும்போது பத்து நிமிஷங்களுக்கொருதரம் அடிக்கடி மூத்திரம் சுரந்துக்கொண்டே வரும். மூத்திரம் அடிக்கடி சுரந்துக் கொண்டு வருவதனால் மூத்திரப்பை பரிசுத்தமாய்விடும். மூத்திரப்பை எப்பொழுது பரிசுத்தமாய் விடுகின்றதோ அதன் பிறகு அதில் தங்கும் மூத்திரம் பரிசுத்தமான ஜலமாகவேயிருக்கும். அப்போது அதைப் பிடித்து யூரினுமிடர் (Urinometer) டிக்ரி (Degree) போட்டுப் பார்த்த போது அம்மூத்திரம் ஜலம் நிற்கும் குறி அளவில் அந்த யூரினுமிடரில் காட்டும். இது அடியேனுடைய பிரத்தியக்ஷ திருஷ்டாந்தம். இதை நீங்கள் அனுபவத்தில் காணலாம். மூச்சைப்பிடித்து வயிற்றை முன்னுக்கும் பின்னுக்குமாய் அசைத்து அசைத்து குலுக்குவதனால் மூத்திரப்பையில் சென்ற ஜலம்போக நீனிப்பையில் மிகுதியாயிருக்கும் ஜலமானது, கட்டியாயிருக்கும் மலத்தையெல்லாம் கலக்கிச் சில நேரத்திற்குள் மலத்தை அதிவேகமாய் வெளியில் கொண்டுவரும். அச்சமயத்தில் மலபாதையைத் தீர்த்துக்கொண்டு வரவேண்டும். இவ்வப்பியாசம் செய்து

வெளியில்வரும் மலம் கட்டியாய் வராமல் மிகவும் தாராளமாய் வரும். மறுபடியும், மூன் போல் பத்து அல்லது பன்னிரெண்டு விழுங்கு ஜலம் சாப்பிட்டு, உட்கார்ந்து சில நேரமும், நின்று சிலநேரமும், மூச்சைப்பிடித்து வயிற்றை அசைத்துக் குலுக்கி அப்பியாசம் செய்தால், மறுபடியும் சில நிமிஷங்களுக்குள் கொஞ்சம் கட்டியாயும் குழம்பாயும் மலம் வரும். கைகால் சுத்தி செய்துகொண்டு மறுபடியும் ஜலம் சாப்பிட்டு, உட்கார்ந்து சிலநேரமும் நின்று சில நேரமும் சாதனம் செய்யவேண்டும். இந்த சாதனத்தினால் இரண்டு மூன்றுவிசை மலம் குழம்பாய் வந்து, மறுபடியும் செய்யும்போது வெறும் ஜலமாகவேவரும். அஃதெப்படியென்றால், கசாயித்தொழில் செய்பவன் ஆட்டினுடைய தீனிப்பையையும் குடலையும் ஜலத்தினால் நன்றாய் அலம்பி எவ்விதமாய்ச் சுத்தம் செய்துவிடுகின்றானோ அதுபோல், காயசுத்தி செய்து சித்தியடைந்த புருஷர்கள் ஒரு பெரிய சொம்பு ஜலம் சாப்பிட்டு இரண்டு கால்களையும் அகலமாய் விரித்து வயிற்றை ஓர் அசக்கு அசக்கினவுடன் மலமும் ஜலமுமாக ஆசனத்தின் வழியாய் வந்துவிடும். மறுபடியும் ஓர் பெரிய சொம்பு ஜலம் சாப்பிட்டு, வயிற்றை அசக்கினால், வெறும் ஜலமாகவே வந்துவிடும். இவ்விதமாய்க் குடலைக் கழுவி சுத்தம் செய்தபிறகு இன்னும் கொஞ்சம் ஜலம் தீனிப்பையில் தங்கியிருக்கும். அப்போது ஆள் காட்டும் விரல் நடுவிரல் இவ்விரண்டையும் வாயினுள்விட்டு உண்ணாக்கில் படும்படியாய் அசக்கவேண்டும். அப்படி அசக்கினவுடனே, விசேஷப் புளிப்புடன் ஜலமும் அதாவது, டார்டாரிக் ஆஸிட் (Tartaric acid) போன்ற புளிப்பு, வெண்மை நுரையுடன் பால்போல் வந்து விழும். இப்புளிப்பானது எல்லாப் புளிப்பைவிட அதிகமாயிருக்கும். இது, வயற்றிலிருந்துகொண்டு புசித்த ஆஹாரங்களை

ஜீர்ணிக்கச் செய்யும். இப்படிப் பழகுவதே காயசுத்தி என்று சொல்லப்படும். அய்யா! யாம் தேச சஞ்சாரார்த்தமாய்ச் சென்றபோது சில புருஷர்கள் இதில் சொல்லியதுபோல் ஜலம் சாப்பிட்டு படத்தில் காட்டியிருப்பதுபோல் உட்கார்ந்து மூச்சைப் பிடித்து வயற்றை அசைத்து அசைத்து குலுக்கிச் சாதனம்செய்து மலமும் ஜலமும் ஆசனத்தின் வழியாய் விட்டு, மறுபடியும் ஜலம் சாப்பிட்டு சாதனம் செய்துகொண்டு வர வர வெறும் ஜலமாகவே வந்து, பிறகு குடலைக்கழுவக் கைதேர்ந்தவர்களாய் விட்டார்கள். இந்த காயசுத்தியினால், தூத்துக்குடியில் ஒருவருக்கு கையில் இருந்த படை மறைந்துவிட்டதென்று சொன்னார். குடல் கழுவு வதனால் வியாதிகளும் நீங்கி விடும். இதில் சொல்லியதுபோல் அனேகர்கள் குடலைக் கழுவி மலஜலங்களை வெளியில் தள்ளப்பழகி எந்த வியாதியும் இல்லாமல் சுகமாய் இருக்கின்றார்கள். காயசுத்தி செய்து முடிந்தவுடன் இந்நூலில் 453-வது, பக்கம் முதல் 526-வது பக்கம் வரையில், பிராணயாமத்தில் சொல்லியதுபோல் குடல் நிரம்பக் காற்றைப்பிடித் தடைத்து பத்து நிமிஷங்கள் வரையில் சுவாசத்தை வெளிவிடாமல் நிறுத்தி பிறகு அதிலிருந்து கொஞ்சம் சுவாசத்தை வெளியில் ஓட்டிவிட்டு அதை உசுவாச நிசுவாசங்களாய் ஆடச்செய்து நிஷ்டையி லிருக்கவேண்டும். அக்காலத்தில் சங்கல்பரூபமாயிருக்கும் மனோவாயு, வெளியில் செல்லாமல் குடலில் தங்கிய வாயுவில் ஐக்கியமாய்விடும். அத்தருணத்தில், யோகியானவன், தன்னைத்தான் மறந்து சிலைவடிவமாய் ஆத்மசொரூபியாய் தானே பிரம்மமாகின்றான்.

கல்பம் எது? அமரி எது?

அன்பர்களே! நமது இந்துதேசத்தில் சிசுக்கள் பிறந்தவுடன், அவைகளுக்கு இதர குழந்தைகளின் சிறுநீரைப் பிடித்து மூன்று தினங்கள் கொடுப்பது, உலகமறிந்த விஷயமன்றோ? இவ்வப்பியாசம், ஆதியில் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டது. சிசுக்களுக்குச் சிறுநீர் மூன்று தினங்கள் கொடுத்து நிறுத்தி விடுவதனுல் யாதொரு பிரயோஜனமும் உண்டாகமாட்டா. இதற்குச் சுருதிப் பிரமாணம்.

"* அமரீம் யஃ பிபேந்நித்யம் நஸ்யம் குர்வந் திநே திநே."
"பித்தோல்பணத்வாத் ப்ரதமாம்புதாராம் விஹாய நிஸ்ஸாரதயா அந்த்யதாரா நிஷேவ்யதே ஶீதல மத்ய தாரா."

[ஹடயோக தீபிகை.]

பல்லவி.

பூசித்தேன் பிராணுய வாசியோகம் ரேசித்து-ஆண்டே
பூரித்து கும்பகங் கண்டேன்
பஞ்சாக்ஷர மமுரி நஞ்சானது கொண்டாண்டு
அஞ்சாமலும் வைராக்கிய மெண்சாண் தேகத்தைச்சுட்டு
முக்கோண கேசரிவாலை முனையுமிடை பிங்கலை
அக்கோணச்சுழி பிரகாசமாலை யந்தனில் நின்று

[பூசித்தேன் பிராணுயவாசி.]

வஸ்துவென்ற பானத்தை மருவி மாவுறந்தேகம்
அஸ்திகள் தந்தங்கள் போலுமமிர்த்த சஞ்சீவியுண்டு
தன்னைத்தானு மறிந்து சடத்தைச்சுத்திகள் செய்து
அன்னையம் பிகைபாதம் அவ்வும் உவ்வாலறிந்து

[பூசித்தேன் பிராணுயவாசி.]

---

* அமரீம்=அமுர்தம். இது குருவினுல் தெரிந்துக் கொள்ளத்தக்கது. இந்த குரு ரகஸ்யமே இதனடியில் சொல்லப்படும்.

அஷ்டாட்சர மாவது அமுரிப்புளி யெனும்பேர்
இஷ்டத்துடனு முண்டு எட்டெட்டு வித்தைகளுட
வங்குசிங்கென் றெழுத்தை வாவென் றழுத்திவாசி
யெங்கும் பிரகாசமாக இருந்தி கடிகையாக
[பூசித்தேன்.]

அக்கரை மீனைப்பிடித்து சக்கரையாக வடித்து
சொக்க நாதரைத்துதித்து நக்கவுந்தேனை மதித்து
அஞ்சுமூன்று மிரண்டு மறியலாச்சுது கற்பஞ்
செஞ்சடாதர மூலஞ் சேவித்து சுழிமுனையை
பூசித்தேன் பிராணய வாசியோகம் ரேசித்து ஆண்டே
பூரித்து கும்பகங் கண்டேன்

[திருவள்ளுவ நாயனர் அருளிச்செய்த ஞானவெட்டி.]

சிசுவிற்கு யாதொரு வியாதியும் வாராமல் சுகமாயிருக்க வேண்டுமென்று நினைக்கப்பட்ட தாயானவள் என்ன செய்யவேண்டுமென்றால், சிசு பிறந்த நாள் முதல் அதற்கு புத்திவரும் வரையில் ஒருநாளும் தவறாமல் அதே நினைவாய்ப் பிரதிதினம், காலையில் சிசு விடும் முதற்பாகம் சிறுநீர் பித்தமாயும்,கடைசியில் விடும் சிறுநீர் பிரயோஜனமற்றதாயும் இருப்பதனல், இவ்விரண்டு பாகங்களையும் நீக்கி, மத்தியில் வரும் தாரை அமரியா (அமுர்தமா)யிருப்பதால் அதை ஒரு சிறிய கிண்ணத்தில் பிடித்துக்கொண்டு சிசுவிற்கு பால்கொடாமல் மேற்படி சிறுநீரில் இரண்டு பாலடை குடிப்பித்து, பத்து நிமிஷங்கள் சென்ற பிறகு தாயானவள் பால் கொடுக்கவேண்டும். அவன் புத்தி அறியும் வரையில் இவ்விதமாய்க் கொடுத்து புத்தி வந்தவுடன் அப்பா நாயனு! நீ காலையில் எழுந்தவுடன் பிரதிதினம் சிறுநீர் விடும்போது முதல் வரப்பட்ட சிறுநீர் கொஞ்சம் விட்டுவிட்டு, மத்தியில் வரப்பட்ட சிறுநீரில் மூன்றுகை சாப்பிட்டுக் கடைசியாய்வரும் சிறுநீரை விட்டு விடவேண்டும், இவ்விதமாய் ஒருநாளும் தவறாமல் பிரதிதினம் காலை

யில் சாப்பிட்டு வருவாயாகில் உனக்கு எந்த வியாதியும் வாராது என்று நல்ல வார்த்தையாய்ச் சொல்லி சிறுநீரைக் குடிக்கும்படி பிரதிதினம் எச்சரிக்கை செய்து கொண்டே வரவேண்டும். இப்படிச் சாப்பிட்டுவரும் சிறுவர், சிறு மியர்கள் யாதொரு பிணியும் வாராமல் எப்பொழுதும் மிகவும் சுகமாகவே யிருப்பார்கள். இச்சுகத்தை அனுப வத்தில் காணலாம். இவ்வப்பியாசம் சில குடும்பங்களில், ஆண் பெண் குழந்தைகளுக்கு அவாளவாள் சிறுநீரையே பிடித்துக் குடிப்பித்துக்கொண்டு வருகின்றார்கள். அக் குழந்தைகள் யாதொரு பிணியுமில்லாமல் மிகவும் சௌக் கியமா யிருக்கின்றன. இவ்விஷயம் அவர்களின் கடிதமூல மாய்த் தெரியவந்தது. பெரியோர்களால் ஏற்படுத்திய மறைப்பொருளாகிய இந்த ரகசியம் எல்லோரும் அறிந்து அதுபோல் அப்பியாசம் செய்யும் பொருட்டே இந்நூலில் எழுதப்பட்டது. பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்ட இந்த மஹா ரகசியமான பொருளை அசஹ்யமென்றெண்ணி பிறந்தவுடன் மூன்றுநாள் மாத்திரம் சிறுநீர் சிசுக்களுக்குக் கொடுத்து நிறுத்தி விடுகின்றார்கள். இவ்வாறு நிறுத்தி விடுவதனலேயே சிசுக்களுக்கு அடிக்கடி பல வியாதிகளும், கருப்பான் முதலிய சிரங்குகளும் வந்துகொண்டே யிருக் கின்றன. இத், அசஹ்யமான வஸ்துவென்று எண்ணியே பெரியோர்கள் இதற்குக் ‘கல்ப’ மென்றும் ‘அமரி’ எனறும் மறைபொருளான பெயரைத் தந்தார்கள். ஆதலால், இதை வாசிக்கப்பட்ட யாவரும் “சங்குதீர்த்தம் கையில் பிடித்து போங்குதீர்த்தம்” பானம் செய்யவேண்டும். அதா வது,பிரதிதினம் காலையில் விடும் சிறுநீரில் முதற்பாகமும், கடைசிபாகமும் எடுத்துக்கொள்ளாமல் மத்தியில் வரும் பொங்கு தீர்த்தம் மூன்று கைப்பிடித்துச் சாப்பிட்டுக் கொண்டுவந்தால், முதல் உப்பாகவும் சிலநாள் சென்ற

பிறகு வாயில் வைக்க சகிக்காமல் விஷத்திற்குச் சமான மாய் வெகுட்டலாகவும் ருசிமாறிக்கொண்டே வரும். இவ் விதமாய் எத்தனை வித வெகுட்டலா யிருந்த போதிலும் அதை சகித்துக்கொண்டு எப்படிப்பட்ட சுகதுக்கங்கள் நேர்ந்த போதிலும் ஒருநாளும் தவறாமல் பிரதிதினம் காலை யில் அதே ஞாபகமாய் இருந்து யாரொருவர் பிரதிதினம் தவறாமல் பன்னிரெண்டு வருஷங்கள் சாப்பிட்டுக்கொண்டு வருகின்றார்களோ அப்படிப் பட்டவர்களின் சரீரத்தை விஷப்புழுக்கள் அதாவது, தேள் சர்ப்பம் முதலாகிய விஷ ஜந்துக்கள் தீண்டியபோதிலும் அவர்களுக்கு விஷம் ஏற மாட்டா. ஏனென்றால், அநேக வருஷங்களாய் ஒருநாளும் தவறாமல் 'கல்பம்' சாப்பிட்டு வருவதனால் அவர்களின் சரீரம் விஷமாய் விடுகின்றது. அதனால், அவர்களுக்கு விஷம் ஏறுவதில்லை. இதற்கு பத்தியம் இல்லை எல்லாம் சாப்பிடலாம். இப்படிப்பட்டவர்களுக்குச் சிசு தரிக்கும் பக்ஷத்தில் அச்சிசு யாதொரு வியாதியும் இல்லாமல் மிகவும் சுகமாயிருக்கும்.

இந்நூலாசிரியரை இருபத்தைந்து வயது வரை யில் அநேக தேள்கள் கொட்டியதுண்டு, ஒவ்வொரு மூறை தேள் கொட்டினவுடன் 'திக்' கென்று நெருப் பை மெரித்ததுபோல் கொட்டிய இடத்திலிருந்து தொடை வரையில் ஏறி, விசேஷ நோயைத் தந்துகொண்டிருக்கும். இவ்விதமாய் ஒவ்வொரு முறையும் தேள் கொட்டிய போதெல்லாம் பாதைப்பட்டுக்கொண்டிருப்பது வழக்கம். அதன்பிறகு 'கல்பம்' ரகசியத்தை 'குரு' மூலமாய் அறிந்து, 'குரு' வாக்கைப்போல் ஒருநாளும் தவறாமல் அநேக வரு ஷங்கள் சாப்பிட்டுக்கொண்டு வந்தனர். இப்படிச் சாப் பிட்டுக்கொண்டு வரும் நாளில் ஒருநாள் பகல் நல்ல வெய் யில் வேளையில், வலது கைப் பெருவிரல் நுனியில் தேள்

கொட்டிற்று. அப்போது எரும்பு கடித்ததுபோல் இருந்தது. உடனே பரீக்ஷித்துப் பார்த்தபோது, இரண்டங்குலம் நீளமுள்ள ஒரு பெரிய செந்தேளா யிருந்தது. தருமங்களில் முதல் தருமம் 'அஹிம்ஸை' ஆதலால், எந்த ஜீவ ஜந்துக்களாகிலும் தனக்குக் கெடுதியை விளைவித்தபோதிலும் தாம் மாத்திரம் மறுபடியும் அந்த ஜீவ ஜந்துக்களுக்குக் கெடுதியை உண்டாக்கலாகாது. தர்மசூத்திரத்தில் முதல்வாக்கியம் என்னவென்றால் "அஹிம்ஸா பரமோ தர்மஃ" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த வாக்கியம் இவர் நன்றாய் அறிந்தவராதலால், அந்தத் தேளைக் கொள்ளாமல் பிடிப்பித்து ஒருபுதரில் விட்டுவிடப்பட்டது. மேற்படி தேள் கொட்டின உடனே முன் விஷம் ஏறிக்கொண்டிருந்ததுபோல் ஏறாமல் கொட்டினவுடன் எரும்புக் கடித்ததுபோல் இருந்து அந்தக்ஷணமே ஒன்றுமில்லாமற் போய்விட்டது. ஏனென்றால், 'கல்பம்' சாப்பிட்டு சரீரம் விஷமாய் விட்டபடியால், தேளின் விஷத்தை சரீரம் லக்ஷியம் செய்யவில்லை. அன்றியும் எந்த வியாதிகளும் உண்டாகவே மாட்டா; ஆதலால், ஒருநாளும் தவறாமல் காலையில் வரும் சிறுநீரை மத்தியில் பிடித்து மூன்று கை சாப்பிட்டுக் கொண்டுவரும் 'அமரியே' 'கல்ப' மென்று சொல்லப்படும். இதைச் சில பெரியோர்கள் பாட்டாகவும் பாடியிருக்கின்றார்கள். ஆதலால், யாதொரு வியாதியும் வராமலிருக்கவேண்டுமென்று எண்ணங்கொள்ளும் புருஷர்களும், ஸ்திரீகளும் இக்கல்பத்தைச் சாப்பிட்டுக்கொண்டு வரலாம்.

பஞ்ச முத்திரைகளின் லக்ஷணங்கள்.

கேசரி, பூசரி, மத்ய லக்ஷணம், ஷண்முகீ, சாம்பவீ என முத்திரைகள் ஐந்து.

1. கேசரி:—விழிகளை மத்தியில் நிறுத்தி மேனோக்கி சிதாகாசத்தைப் பார்த்துக்கொண் டிருப்பதே கேசரி எனப்படும்.

2. பூசரி:—கண்களை அசைக்காமல் தன் மூக்கு நுனிக்குறியில் லக்ஷியம் வைத்துப் பார்த்துக்கொண் டிருப்பதே பூசரி எனப்படும்.

1. மத்யலக்ஷணம்:—கண்களை அரைப் பார்வையுடன் மூடி,மூக்கு மத்தியில் திருஷ்டியை நிறுத்திப் பார்த்துக்கொண் டிருப்பதே மத்யலக்ஷணம் எனப்படும்.

4. ஷண்முகீ:—செவி கண்கள் மூக்கு வாய் இவைகளை விரல்களால் மூடி, வெளிப் பார்வையையும் மனதையும் உள்முகமாய்த் திருப்பி கண்விழிகளை மத்தியில் நிறுத்தி நாத (பிராணன்), பிந்து (மனம்), களை (புத்தி) இவைகளை ஒன்ருய்ச் சேர்ப்பது ஷண்முகீ எனப்படும்.

5. சாம்பவீ:—கண்களை இமைக்கொட்டாமல்திறந்து, பார்வையை சிதாகாசத்தில் நிறுத்தி, அங்குள்ள விந்தைகளான மண்டலங்களைப் பார்த்துக்கொண்டு சொாக்கியிருப்பதே சாம்பவீ எனப்படும்,

சாம்பவீ

சுலோ || "அந்தர்லக்ஷ்யம் பஹிர் த்ருஷ்டிர் நிமேஷோந் மேஷவர் ஜிதா
ஏஷா ஸா ஶாம்பவீ ஜ்ஞேயா ஸர்வதந்த்ரேஷு கோபிதா." [ஜிதா
"தத்தர்ஶநே திஸ்ரோ த்ருஷ்டய: அமா ப்ரதிபத் பூர்ணிமாசேதி
நிமீலித தர்ஶந மமாத்ருஷ்டி:, அர்த்தோந் மீலிதம் ப்ரதிபத்,
ஸர்வோந்மீலநும் பூர்ணிமா பவதி. தாஸு பூர்ணிமாப்யாஸ:

கர்தவ்ய:, தல்லக்ஷ்யம் நாஸாக்ரம். ததா தாலுமூலேகாடதயோத்ரு ஶ்யதே. ததப்யா ஸாதகண்டமண்டலாகார ஜ்யோதிர் த்ருஶ்யதே. ததேவ ஸச்சிதாநந்தம் ப்ரஹ்ம பவதி. தாமேவ கேசரீமாஹு:. ததப்யாஸாந் மநஸ்தைர்யம். ததோ வாயுஸ்தைர்யம்.
தச்சிஹ்நாநி ஆதௌ தாரகவத் த்ருஶ்யதே. ததோ வஜ்ரதர்பணம், தத உபரி பூர்ணசந்த்ரமண்டலம். ததோ நவரத்ந ப்ரபாமண்டலம். ததோ மத்தியார்க்நார்கமண்டலம். ததோ வஹ்நிஶிகா மண்டலம் க்ரமாத்த்ருஶ்யதே, அஹர்யஹர்யர்தராத்ரௌ மத்வயாப்யாஸேந மந: ப்ராணயோரைக்யம் பவதி.'' [மண்டல]

இவைகளின் அர்த்தத்தையே ஸ்ரீ சங்கராசாரியரும் ஹரிஸ்துதியில் அருளிச் செய்திருக்கின்றார்கள்.

ஏகமாய் இரண்டாவது இல்லாததாய் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஆத்மாவை சாவதான சித்தத்துடன் பாட்டியமி, அமாவாசியை, பௌர்ணமி என்னும் மூன்று வித திருஷ்டிகளை யுடையது சாம்பவீ முத்திரை யென்று சொல்லப்படும்.

1. நிமீலித திருஷ்டி பாட்டியமி திருஷ்டி யென்றும், கண்களை மூடிக்கொண்டு பார்க்கும் திருஷ்டி அமாவாசியை திருஷ்டியென்றும், இமைகொட்டாமல் பார்க்கும் திருஷ்டி பௌர்ணமாசியை திருஷ்டி யென்றும் சொல்லப்படும். இம்மூன்றில் முதலிரண்டையும் நிவர்த்திசெய்து பிரம்மா கார விருத்தியில் பிரகாசித்துக்கொண்டிருக்கும் புத்தியினால், இமை கொட்டாமலிருக்கும் பௌர்ணமாசியை திருஷ்டியை அப்பியசிக்கவேண்டும். மேற்சொல்லியதுபோல் சிரவணஞ்செய்து அந்தரத்திலிருக்கும் பரமாத்ம சொரூபத்தைத் தரிசித்துக்கொண்டு வெளியில் காணப்படும் நாம ரூபத்தை அடையாத திருஷ்டி சாம்பவீ முத்திரையென்று சொல்லப்படும். இந்த முத்திரையைக் கண்களில் நிறுத்தி சித்தத்தை ஒன்றாய்ப் பொருந்தச்செய்து இரண்டு ஜாமங்கள் (6-மணிநேரம்) அப்பியசித்தால் க்ஷீரோதகம் (பாலும்

நீரும்) போல்,மனம் பிராணன் இரண்டும் ஒன்றாய்ச்சேர்ந்து நின்றிருக்கும். அந்த மனம் பிராணன்களில் ஏதாகிலும் ஒன்று சலித்தால் இரண்டாவதும் அம்மார்க்கமாகவே சலித்துக் கெடும். ஆகையால், இதை சிரவணம்செய்து அவ்விரண்டையும் ஓரிடத்தில் பொருந்தச்செய்து, பிரபஞ்ச திருசியங்க ளெல்லாவற்றையும் மறந்து, சலனமற்றிருக்கும் சமயத்தில் நிர்விகல்ப சமாதியாய்ப் பிரகாசிக்கும்.

அஃதாவது;—இரண்டு கண்களின் கரிய விழிகளைக் கண்களின் உட்புற நுனியில் கொண்டுவந்து நிறுத்தி, மேனோக்கி புருவமத்ய ஸ்தானத்தைப் பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கும்போது, மேற்சொல்லிய சுலோகத்தில் கண்டுள்ள எல்லா மண்டலங்களும் காணப்பட்டுக் கடைசியில், ஒன்றும் காணாமல் மனம் ஆகாச வடிவத்தில் லயித்து விடும். இப்படி லயித்துவிடுவதே நிர்விகல்ப சமாதி என்று சொல்லப்படும். மனிதர்களிற் பெரும்பான்மையோர்,முன் சொல்லிய மண்டலங்களைப் பார்த்துக்கொண்டே மோசம் போய்விடுகின்றார்கள். அம்மண்டலத்தைக் கடந்து ஒன்றுமில்லாமல் சூன்னியமாயிருக்கும் ஆகாச வடிவத்தில் மனம் ஐக்கியமாய் விடுவதே ஜீவப் பிரம்மைக்யமென்றும், மோக்ஷமென்றும் சொல்லப்படும். இதை அப்பியசிக்கும் போது கண்களின்விழிகள் கீழ்மேலாகப் புரளுவதனால் விழிகளுக்கு நோயுண்டாய், பிறகு எரிச்சலைத் தந்து கண்களினின்று தாரைதாரையாய் ஜலம் வடிந்துகொண்டிருக்கும். இப்படி எவ்வளவு நோய் உண்டானபோதிலும் இமைக்கொட்டாமல் புருவமத்திய ஸ்தானத்தை மேனோக்கிப் பார்த்து இரண்டு ஜாமங்கள் (6-மணிநேரம்) அப்பியாசித்தால் மோக்ஷவீட்டை அடைவார்கள். யோகம், சாம்பவீ முத்திரை இவ்விரண்டையும் அப்பியசிப்பது கஷ்டமான

மார்க்கங்கள் என்பதற்குத் தடையில்லை. ஆதலால், பிரம்ம சூத்திரமாகிய "ஸோஹம்" என்னும் ராஜயோகத்தை முன் கூறியவாறு சதா ஜபம் செய்துகொண்டிருந்து, இரவு 3-மணிமுதல் ஐந்து மணிவரையிலும், சுவாமிகள் முன் வலதுகையில் காட்டிய கைக்குறியிலுள்ள ஆகாச வடிவத்தில் மனதை நிறுத்தி அப்பியசித்து வந்தால் அவ்வப்பியாச முதிர்ச்சியினால் மோக்ஷத்தை அடையலாம். இவ்வப்பியாசம் செய்யப்பட்டவர்கள், சத்தியம் தவறாமல் பொய் சொல்லாமல் ஜீவஹிம்சை செய்யாமல் ஜனங்களை, துஷ்ட வார்த்தைகளினாலும் கெட்ட எண்ணங்களினாலும் துன்மார்க்க காரியங்களினாலும் துன்பப்படுத்தாமல், பரஸ்திரீ கமனம் செய்யாமல் இருக்கவேண்டும். இவ்வித பத்தியங்களுடன் இருக்கப் பட்டவர்களுக்கே மோக்ஷம் சித்தியாகும்.

ஸ்ரீ ராமாயணத்தின் அந்தரார்த்தம்.

பக்தஜன சிரோன்மணிகளே!

ஆனந்தமயமே அயோத்தியா நகரமென்று சொல்லப்படும். அந்நகரத்தை ஆள்பவர் பரப் பிரம்மமென்னும் தசரதர்; அவருக்கு இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தியென்னும் மூன்று மனைவிகள் உண்டு; அவர்களில் ஞான சக்தியென்னும் கௌஸல்யாதேவியின் கர்ப்பத்தில் ஆத்மாவென்னும் ஸ்ரீராமமூர்த்தி அவதரித்தனர். அவர், அவ்யக்த (அஞ்ஞான) மென்னும் பால்யா வஸ்தையினால் தன் நிஜசொரூபத்தை மறந்து, அஞ்ஞான மயமாகிய ஜீவாத்மாவே தானென்று பிரமித்து, தேஹம் இந்திரியங்கள் பிரபஞ்சம் முதலானவைகளின் மீது அபிமானம் வைத்திருந்தார். பிறகு வசிஷ்டர் உபதேசத்தினால், மறுபடியும் தன்

அறிவை அறிந்து, வைராக்கியமென்னும் இலக்ஷ்மண மூர்த்தியை தன்னுடன் அழைத்துக்கொண்டு, மனனமென்னும் விசுவாமித்திரருடன் புறப்பட்டு, பஞ்சமஹா பாதகமென்னும் பர்வதங்களைக்கடந்து, ஞானமென்னும் தீக்ஷண்ணியபாணத்தினல், மாயாசத்தி என்னும் தாடகியை வதைத்து, இச்சை (ஆசை) யென்னும் மாரீசனை, சமுத்திரத்தில் மூழ்கச்செய்து, துராசாரமென்னும் சிலையைக் காலினல் மிதித்து, சதாசாரமென்னும் அகலியையின் சாபத்தை நீக்கி, ஏகாந்தமென்னும் மிதிலாபுரம் பிரவேசித்து, சாந்தமென்னும் ஜனகனைத் தரிசித்து, அஞ்ஞானமென்னும் சிவனுடைய வில்லை முறித்து, ஆனந்தமென்னும் சீதையை மணம்புரிந்து, மதமென்னும் பரசுராமனைப் பங்கப்படுத்தி, மோக்ஷமென்னும் அயோத்தியா நகரம் சேர்ந்து, ஜீவத்வத்தியாகமென்னும் பட்டாபிஷேகத்திற்கு அருகனயிருந்தார். அப்போது கிரியாசக்தியென்னும் கைகேயியினல், சபலத்துவமென்னும் விக்கினமுண்டாகப்பெற்று ஆத்மாராமன், பிரம்மமென்னும் தசரதனைப்பிரிந்து மோக்ஷமென்னும் அயோத்யா நகரத்தைவிட்டு, ஆனந்தமென்னும் சீதை, வைராக்கியமென்னும் இலக்ஷ்மணனுடன் புறப்பட்டு, சித்தமென்னும் சரயுநதியைக்கடந்து, புத்தியென்னும் குகனைத் துணையாகக்கொண்டு, நிக்ஷேபமென்னும் மஹா ஆரண்ணியத்திற் புகுந்து, தபசு என்னும் சித்திர கூடத்தில் நின்று, அஹங்காரமென்னும் விராதனைப் பலிகொடுத்து, மனமென்னும் காகாசுரனை வதைத்து, சங்கல்பமென்னும் கண்ணைக் குத்தி, நிர்விகல்பமென்னும் கண்ணைத்தந்து, வீரியமென்னும் அகஸ்திய முனியை ஆசிரயித்து, தைரியமென்னும் அஸ்திரத்தைப் பிரயோகித்து, காமமென்னும் சூர்ப்பனகையைப் பின்னப்படுத்தி, ஆகாம்மிய கர்மங்களென்னும் மாரீசன் வஞ்சித்தபோது, ராஜஸமென்னும் ராவணன்

டம்பமென்னும் சந்நியாசிவேடம்பூண்டு ஆனந்தமென்னும சீதையை அபகரித்துக் கொண்டுபோக, ஆனந்தமென்னும் சீதையைக் காணுமல் ஆத்மாராமன் அதிக துயரப்பட்டு, வைராக்கியமென்னும் இலக்ஷ்மணனுடன், விக்ஷேபமென்னும் ஆரண்ணியத்தில் சென்று விவேகமென்னும் ஜடாயுவை சத்கதியடையச்செய்து, சிந்தையென்னும் கவந்தனை வதைத்து, சந்தோஷமென்னும் சபரியின் பூஜையை அங்கீகரித்து, நிதித்தியாசனமென்னும் அநுமானைத் துணையாகக் கொண்டு, பயமென்னும் வாலியைக்கொன்று, நிர்ப்பயமென்னும் சுக்ரீவனை ஆதரித்து, நிதித் தியாசனமென்னும் அநுமானையனுப்ப, அவர் மோஹமென்னும் மஹா சமுத்திரத்தைக் கடந்து லோபமென்னும் இலங்கையைத் தாண்டி தூர்வாசனைகளென்னும் இராக்ஷதர்களை ஜயித்து, ஆனந்த மென்னும் சீதையைக்கண்டு, சங்கல்பமென்னும் அசோகவனத்தை நாசஞ்செய்து, அஞ்ஞானமென்னும் ஜம்பு மாலியை பஸ்மம்செய்து. சம்சயமென்னும் அக்ஷனை சிக்ஷித்து, விபரீதமென்னும் இந்திரஜித்தைத் திரஸ்கரித்து, பிரமையென்னும் பாசத்தை அறுத்து, ராஜஸமென்னும் இராவணனை எதிர்த்து, மௌனமென்னும் மஹா அக்கினியை ஜொலிக்கச்செய்து, துக்கமென்னும் இலங்கையைத் தக்தப்படுத்தி, மோஹமென்னும் மஹா சமுத்திரத்தைத் தாண்டி, ஆனந்தமென்னும் சீதையைக்கண்டு ஆத்மா என்னும் ஸ்ரீராமமூர்த்தியிடம் சொல்ல, அப்போதே ஆத்மாராமன்பிரயாணப்பட்டு, மோஹமென்னும் சமுத்திரத்தைப் பங்கப்படுத்தி, நிசசலத்துவமென்னும் சேதுவைக்கட்டி, சத்தியமென்னும் விபீஷணனைக் கைப்பிடித்து, விபரீதமென்னும் இந்திரஜித்தை யெதிர்த்து, சந்தேகமென்னும் நாகபாசத்தினுல் கட்டுண்டு, சத்விசாரணை என்னும் கருடனுல் விடுபட்டு, தாமசமென்னும் கும்பகர்ணனை சங்கரித்து,

பிரமையென்னும் அஸ்திரத்தினுல் வைராக்கியமென்னும் இலக்ஷ்மணன் மூர்ச்சையடைய, நிதித்தியாசனமென்னும் அனுமானை புரோச்சாகப்படுத்தி, நிஷ்டையென்னும் சஞ்சீவி பர்வதத்தைக் கொண்டுவந்து வைராக்கியமென்னும் இலக்ஷ்மணனை மூர்ச்சைதெளிவித்து, விபரீதமென்னும் இந்திரஜித்தைக்கொன்று, சஞ்சிதமென்னும் மூலபலசேனைகளை யெல்லாம், சாதனமென்னும் மோகனஸ்திரத்தினுல் நிர்மூலப்படுத்தி, துர்வாசனையென்னும் அசுரர்களையெல்லாம் நாசப்படுத்தி, சத்வாசனையென்னும் கபி (குரங்கு) சைன்னியங்களை ஆதரித்து, காம்பீர்யமென்னும் தநுசைக் கைப்பிடித்து, ராஜஸமென்னும் இராவணனை யெதிர்த்து, ஞானமென்னும் திவ்விய பாணத்தைப் பிரயோகித்து, அஹங்காரமென்னும் அமிருத கலசத்தைப்பேதித்து தசகண்டன், (காம குரோத லோப மோஹ மத மச்சர டம்ப தர்ப்ப ஈரிஷை அசூயை) என்னும் தச (பத்து) குணங்களுடைய சிரசைக் கண்டித்து, (இது விஷயம் இந்நூல் 66, 67, 68-வது, பக்கம் பார்க்க) ஆனந்தமென்னும் சீதையை அங்கீகரித்து, மோக்ஷமென்னும் அயோத்தியாபுரியைச் சேர்ந்து, ஜீவத்வ நிவர்த்தியென்னும் பட்டாபிஷேகம் வகித்து பிரம்மமென்னும் தசரதரே தானுய், கேவல பிரம்ம ஸாக்ஷாத்காரமென்னும் ராஜ்யாதி பதித்துவத்தை அடைந்தனர். இதுவே ஸ்ரீ ராமாயணத்தின் பரம கோப்பியமான அந்தரார்த்தம். இதுவிஷயம் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம்-4 சுலோகம் 8-ல், விரிவாய்க் காணலாம்.

ஸ்ரீ ராம மந்த்ரோபதேசம்.

எனதன்பர்களே!

உலகத்திலுள்ள மனிதர்களுக்கெல்லாம், ராம மந்திரம் உபதேசம் செய்யும் குருக்களெல்லோரும், ராம மந்திரம், உபதேசம் செய்யவேண்டிய விதிப்படி செய்விக்காமல், "ராம ராம ராம ராம ராம" என்று கர்மவாக்கினுலாகிலும் அல்லது, மனதினுலாகிலும் நினைத்து ராமனை ஜபம்செய்து வரவேண்டுமென்று உபதேசமாய்க் கற்றுக்கொடுத்து, அதுபோல் ஜபம் செய்துவரும்படிச் சொல்லுவார்களே யொழிய, ராம மந்திரம் சரியான வழியுடன் ஜபம் செய்து வரும் ரகஸ்யார்த்தங்களைச் சொல்லிக்கொடுக்க மாட்டார்கள். ஏனென்றால், தமக்கே ராம மந்திரம் ஜபம் செய்ய வேண்டிய வழி தெரியாமல், வாக்கினுலோ அல்லது மனதினுலோ ராம மந்திரத்தை நினைத்து ஜபம்செய்து வருவதனுல், தாம் செய்வதுபோல் தமது சிஷ்யர்களையும் செய்யும் படிக் கற்றுக்கொடுப்பார்களே யொழிய ராம மந்திரம் ஸாஸ்த்திர விதிப்படி ஜபம் செய்வதை உபதேசம் செய்ய மாட்டார்கள். ராம மந்திரம் ஸாஸ்த்திர விதிப்படிச் செய்யவேண்டிய முறையை அறிந்த குருவினுல் உபதேசம் பெற்று ஜபம் செய்பவர்கள் உலகத்தில் மிகவும் அரிது. குருவினுல் உபதேசம் பெற்று அவர் சொல்லும் ரகஸ்யார்த்தங்களை அறிந்து அதுபோல் ஜபம் செய்துவர வேண்டு மென்று எல்லா ஸாஸ்த்திரங்களும் முறையிடுகின்றன. ஆதலால், எவரெவர்களுக்கு எந்தெந்த உபதேசம் வேண்டுமோ அவரவர்களுக்குத் தக்கபடி அந்தந்த உபதேசங்கள் ஸாஸ்த்திர விதிப்படி சரியான வழியுடன் ஜபம் செய்யவேண்டிய ரஹஸ்யம் இந்த "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்ய"த்

தில் எழுதி வெளியிட் டிருக்கின்றோம் இக் கலியுகத்தில் மாயையென்னும் கடலைக் கடக்கவேண்டுமென்று எண்ணங் கொண்ட ஸ்திரீ புருஷர்க ளெல்லோரும் அடியேனால் எழுதிய இந்த "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹசிய"மும் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதரூபமாய் எழுதிய "ஸ்ரீ பகவத் கீதை" "ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம்" அடியேனுடைய "பூர்வஜன்ம இஜ்ஜன்ம சரித்திரம்" இன் நான்கு நூலை மாத்திரம் வாசித்து இவைகளிலுள்ள சத்தை கிரஹித்து, பிறகு இன் நான்கு ஸாஸ்த்திரங்களையும் வாசிப்பதை நிறுத்தி, பிரம்ம ஸ்வரூபமா யிருக்கும் சுவாசத்துடன் ஒரு மந்திரம் மனதினால் நினைத்துச் சேர்த்து சுவாசம் உள்ளுக் கிழுத்து, மறுபடியும் சுவாசம் வெளிவிடும்போது மற்றொரு மந்திரம் சுவாசத்துடன் சேர்த்து வெளியில்விட்டு, மறுபடியும் சுவாசம் உள்ளுக்கிழுக்கும்போது முதல் சொன்ன மந்திரத்தை மனதினால் நினைத்து சுவாசத்துடன் சேர்த்து உள்ளுக்கிழுத்து, மறுபடியும் சுவாசம் வெளி விடும்போது இரண்டாவது சொன்ன மந்திரத்தை மனதினால் நினைத்து சுவாசத்துடன் சேர்த்து வெளிவிட வேண்டும். இன்நூலில் அனேக உபதேசங்கள் சொல்லி யிருக்கின்றோம். இவைகளில் எந்த உபதேசம் வேண்டுமோ அந்த உபதேசத்தை நன்றாய் வாசித்து புத்திக்கு விளங்கும்படி தெரிந்துகொண்டு சதா காலமும் அணுவேனும் விடாமல் இராப் பகலாய் அம் மந்திரம் சுவாசத்துடன் சேர்த்து ஜபம் செய்துவருவீர்களாகில், அப்பியாச முதிர்ச்சியினால் உங்கள் மனம் சில மாதங்களுக்குள் இறந்து, பிரம்மானந்த சுகத்தைத் தப்பாமல் அனுபவிப்பீர்கள். உலகத்தில் அனேக ஸாஸ்த்திரங்கள் சமுத்திரம்போல் அபாரமா யிருக்கின்றன. அவைகளையே நீங்கள் வாசித்துக்கொண்டிருந்தால் எக்காலத்தில் மோக்ஷமென்னும் வீட்டை அடையப் போகின்றீர்கள். ஐயோ

பாவம்! அனியாயமாய், ஸாஸ்த்திரங்களை வாசித்துக் கொண்டேயிருந்து, நீங்கள் எதற்காக வந்தீர்களோ அதை அறியாமல்மறந்து ஸாஸ்த்திரங்களைவாசித்துக்கொண்டும், ஒருவரோடொருவர் வாதாடிக்கொண்டும் இருந்து, விருதா காலங்கழித்து யாதொன்றும் தெரிந்துகொள்ள சக்தியில்லாமல், இச்சரீரத்தை விட்டுச் சென்று விடுவதனால் என்ன பிரயோஜனம் அடையப் போகின்றீர்கள். இந் நூலை வாசித்த புண்ய புருஷர்களெல்லோரும் மறுபடியும் வேறு எந்த வேதாந்த சாஸ்த்திரங்களையும் வாசிக்காமலிருந்து, இதில் உபதேசமாய்ச் சொல்லியிருக்கும் ரஹஸ்யத்தை நன்ருய் அறிந்து ஸதாகாலமும் அதையே ஜபம் செய்துவர வேண்டும். இவ்வாறு ஜபம் செய்துவருவீர்களாகில் சம்சார மென்னும் சமுத்திரத்தைக் கடந்து, மோக்ஷ மென்னும் பதவியை தப்பாமல் அடைவீர்கள்.

இனி ராம மந்திரம் எவ்விதமாய் ஜபம் செய்ய வேண்டுமோ அந்த உபதேசம் இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

ஒரு ஏகாந்த இருட்டு அறையில் வாசனை வஸ்துக்களை வைத்து G. அரங்கனாதன் பிரதர்ஸ் கோட்டு வியூ நந்தலூர் போஸ்ட்டு கடப்பை ஜில்லா, இவ்விலாசத்திற்கு எழுதி பாடனம்செய்த மான்தோல் வரவழைத்து அத்தோலை மணையின்மேல் போட்டு அதன்மேல் அபானவாயு படாவண்ணம் வெள்ளை வஸ்திரம் மடித்துவிரித்து இதரர்கள் உள்ளே வாராதபடி கதவைச்சாற்றி தாள்போட்டு மேற்படி மணையின்மேல் வடக்கு முகமாய்ச் சித்தாசனத்துடன் உட்கார்ந்து சின்முத்திரையைப் பிடித்து கண்களை மூடி, சுவாசம் (மூச்சு) மூக்கு ரந்திரங்களின் வழியாய் இழுக்கும் போது அந்த மூச்சுடன் 'ரா' என்னும் மந்திரம் மனதினால் நினைத்து மூச்சுடன் சேர்த்து உள்ளுக்கிழுத்து மறுபடியும்

மூச்சு விடும்போது அந்த மூச்சுடன் 'ம' என்னும் மந்திரம் சேர்த்து வெளியில் விடவேண்டும். இவ்விதமாய் இரண்டு மந்திரங்களையும், மூச்சு உட்செல்லும்போது வெளி வரும்போதும் சேர்த்து விட்டுக்கொண்டே ஜபம் செய்து வரவேண்டும். இவ்வாறு மேற்சொல்லிய 'ராமா' என்னும் இரண்டு மந்திரங்களையும் மூச்சுடன் சேர்த்து ஜபம்செய்து வருவதே சரியான ராம ஜபமேயொழிய வாக்கினாலும் மனதினாலும் ராமனை நினைத்து ஜபம் செய்துவருவது ராமஜபமாக மாட்டாதென்று ஸ்பஷ்டமாய்த் தெரிந்துகொள்ளுங்கள். இதற்கு ராம ரஹஸ்யோபநிஷத் ப்ரமாணம் என்னவென்றால்,

> " அத்யோ 'ரா' தத் பதார்த் தஸ்யாத்,
> 'ம' கார ஸ்த்வம் பதார்த்தவாங், தயோஸ்
> ஸங்யோஜந மஸீ த்யர்த்தே தத்த்வவிதோ விதுः"

'ரா' என்னும் அக்ஷரம் 'தத்' பத, லக்ஷியார்த்தமாகிய நிராகார பரப் பிரம்மமென்றும், 'ம' என்னும் அக்ஷரம் 'த்வம்' பத, லக்ஷியார்த்தமாகிய ஜீவாத்மா என்றும் அர்த்தமாகின்றது. ஆகையால், அப்பேர்ப்பட்ட நிராகார (ரூபமில்லாத) பரப் பிரம்மமே ஒவ்வொரு ஜீவ ஜந்துக்களிலும் ஸாக்ஷிமாத்திரமாய் ஆத்மா என்னும் பெயருடன் வழங்கி வருகின்றது. என்றால், பிரம்மம் ஆத்மா என்னும் பேதமேயொழிய இவ்விரண்டும் ஒன்றேயாம். ஆதலால், தேகத்ரய, என்றால் தூல சூக்ஷ்ம காரணமென்னும் மூன்று சரீரங்களும் என்றால், தூல சரீரம், கண்களுக்குக் காணப்படும் நமது சரீரம். சூக்ஷ்ம சரீரம், இந்த தூல சரீரத்திற்குள், மனம் புத்தி சித்தம் அஹங்காரமென்னும் இந் நான்கும் கண்களுக்குக் காணப்படாமல் வேலைசெய்துகொண்டிருக்கும் சரீரம். காரண சரீரம், இவ்விரண்டு சரீரங்களும் உண்டாக காரணமாயிருக்கும் சஞ்சித கர்மமென்னும் மூட்

டையே காரண சரீரமென்று சொல்லப்படும். இம் மூன்றும்எப்பொழுது ஒழிகின்றதோ அப்போதே மோக்ஷமென்னும் வீட்டை அடையலாம். ஆதலால், இம் மூன்று தேகங்களுக்கும் சாக்ஷியா யிருக்கும் ஆத்மாவே 'ராம' னென்று சொல்லப்படுமே யொழிய வாக்கினல் ராம ராம ராம வென்று சொல்லிக்கொண் டிருப்பது ராமஜபம் ஆகமாட்டா? ஆதலால், ராமனையே ஜபம் செய்யவேண்டுமென்று நினைக்கப்பட்ட ஸ்திரீ புருஷர்கள் எல்லோரும், ராமனை வாக்கினல் சொல்லாமல் ரா என்னும் மந்திரம் மனதினல் நினைத்து மூச்சுடன் சேர்த்து உள்ளுக்கிழுத்து, மூச்சு விடும்போது மா என்னும் மந்திரம் சேர்த்து வெளியில் விடவேண்டும். இதுவே ராம மந்திரத்தின் ரகஸ்யார்த்தம். இது விஷயம் இந்நூல் 329-வது பக்கம் 20-வது வரியில் எழுதி யிருக்கின்றோம் இது உங்களுக்கு மறதியிருக்கலாமென்று மறுமுறையும் இதில் தெரிவிக்கின்றோம். அடியேன் சொல்லியதுபோல் ராம மந்திரம் உள்ளுக்கும் வெளிக்குமாய் மூச்சுடன் சேர்த்து இழுத்து ஜபம் செய்து வருவீர்களாகில் தவருமல் மனம் இறந்து, மோக்ஷ மென்னும் வீட்டை அடைவீர்கள்.

இந்நூலில் உபதேசித்திருக்கும் உபதேசங்கள் யாவும் மிகவும் ரஹஸ்யமான உபதேசங்கள். இப்படிப்பட்ட மஹா ரஹஸ்யமான உபதேசங்களை எந்த குருக்களும் புஸ்தகமூலமாய் வெளியிட்டுச் சொல்லார்கள். ஆதலால், இந்நூலை வாசித்து இனியாகிலும் ஜாக்கிரதைப் படுங்கள். ஏனென்றால், பிரமதேவர் மிகவும் விசித்ரமான மூன்றுவித சிருஷ்டிகளாய் ஸ்திரீ புருஷர்களை உலகத்தில் சிருஷ்டி செய்திருக்கின்றார். எல்லா சிருஷ்டிகளினும் இதுவே மிகவும் சிரேஷ்டமான சிருஷ்டியா யிருக்கின்றது. எப்படி யென்றால், உலகத்தில் எத்தனையோ கோடானகோடி

ஸ்திரீ புருஷர்களை பிரமதேவர் சிருஷ்டிசெய்திருக்கின்றார். அத்தனை கோடானகோடி ஸ்திரீ புருஷர்களின் ரூபங்களை நாம் பார்க்கின்றோமல்லவா? அவர்களில் எவர்களாகிலும் ஒருவரைப்போல் மற்றொருவர் இருக்கின்றார்களா? இல்லை யல்லவா? உலகத்தில் ஸ்திரீ புருஷர்கள் எத்தனையோ விதங்களான நிறங்களும் ரூபங்களுமாய் இருக்கும் விஷயம் ஒவ்வொருவரும் அறிந்தவிஷயமே யல்லவா? ஸ்திரீ புருஷர்களின் ரூபமும் நிறங்களும் எவ்வாறு வெவ்வேறாய் இருக்கின்றனவோ அதுபோல் ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களின் மனதும் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்படாமல் வெவ்வேறு குணங்களையுடையவர்களாய் இருப்பார்களே யொழிய எல்லோரும் ஒரே மனதுடையவர்களாய் இரார்கள். இவ்விரண்டு விசித்திரமான சிருஷ்டிகளேயல்லாமல் இன்னும் இரண்டு விசித்திரமான சிருஷ்டிகளைச் செய்திருக்கின்றார். அது எது வென்றால், உலகத்தில் எத்தனைவித ரூபமுடைய ஸ்திரீ புருஷர்கள் இருக்கின்றார்களோ அது போல் அவர்களின் கை எழுத்துகளெல்லாம் வெவ்வேறாகவே இருக்கும். எவனாகிலும் ஒருவன் மற்றொருவன் கை எழுத்தை அனேக நாள் எழுதிப்பழகி அதுபோல் எழுதி தேர்ந்து அவன் கை எழுத்துபோல் எழுதியபோதிலும், உலகத்திலுள்ள எல்லா ஜனங்களின் வலது அல்லது இடது கைகளின் அங்குஷ்ட (பெருவிரல்) ரேகைகள் வெவ்வேறாய் இருக்குமே யொழிய, ஒன்றுடன் ஒன்று சம்பந்தப் பட்டிராது. இதற்குத் திருஷ்டாந்தம் ரிஜிஸ்டர் ஆபீசில் தெரிந்து கொள்ளுங்கள். இதுபோல் ஒவ்வொருவர்களின் குரலோசையும் வெவ்வேறாகவே யிருக்கும். பிரமதேவர் ஸ்திரீ புருஷர்களை இவ்வாறு வெவ்வேறு விசித்திரரூபங்களாய்ச் சிருஷ்டிசெய்து வருவது எவ்வளவு ஆச்சர்யம். மனிதர்கள் எவ்வாறு வெவ்வேறு குணங்களுடையவர்களா

யிருக்கின்றார்களோ அதுபோல் உலகத்தில் அனேக குருக்கள் அனேக விதங்களான உபதேசங்களைச் செய்துகொண்டு வருகின்றார்களே யொழிய மனேலயமாகும் மந்திரங்களைத் தெரிந்து அதை உபதேசம் செய்யமாட்டார்கள். இவர்கள் உபதேசிக்கும் மந்திரங்கள்யாவும் மனதிற்கு அதிக வியாபாரத்தைத் தரத்தக்கதேயொழிய, மனே ஓட்டத்தை நிறுத்தத்தக்கதல்ல. மனே ஓட்டத்தை யோகபலத்தினுல் அறிந்து, அதை நிறுத்தவேண்டிய வழியை ஜனங்களின் புத்திக்கு எட்டும்படிச் சொல்லி அவர்களின் மனதை திருப்பவேண்டுமேயொழிய, மந்திரங்களினுல் மனதை ஓடவிடாமல் நிறுத்தலாகாது. "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்யம்" மாத்திரம் எல்லோருடைய மனே ஓட்டத்தை நிறுத்தச் செய்யுமேயொழிய, மற்ற எந்த நூல்களும் மனே ஓட்டத்தை நிறுத்தச் செய்யமாட்டா. அடியேன் இதில் எழுதிய மந்திரங்களை மூச்சுடன் சேர்த்து ஜபம்செய்து பாருங்கள். அப்போது உங்களுக்கே பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாய்த் தெரியவரும். நமக்கோ பிரதிதினம் ஜகத் சிருஷ்டி, ஜகத்லயமா யிருக்கின்றது. இந்த ஜகத் சிருஷ்டி ஜகத்லயம் நாம் அறிந்துகொள்ளாம லிருக்கின்றோம். எப்படியென்றால், தூங்கி காலை நாலுமணிக்கு எழுந்தவுடன், பல் தேய்த்தோ தேய்க்காமலோ எந்த ஈசுவர தியானமும் இல்லாமல், தம் குடும்ப கார்ய விஷயமாய் பிரதிதினம் காட்டுக்குச்சென்று, ஏர் விழுவதோ கவலை யடிப்பதோ ஏத்தமிரைப்பதோ நடவு நாட்டுவதோ களை பறிப்பதோ அறுவடை அறுப்பதோ கடைவியாபாரம் செய்வதோ உத்யோகம் செய்யச்செல்வதோ கேசுகளைப் பார்ப்பதோ கோர்ட்டுக்குப் போவதோ படிப்பதோ அல்லது வழிநடப்பதோ இவ்வாறு செய்து மனதை பலயிடங்களில ஓடவிட்டு இரவு படுக்கைவரையில் அனேகனேக கார்யங்களைச்

செய்து வருகின்றார்கள். இதுவே ஜகத் சிருஷ்டி. மறுபடியும் படுத்து காலைமுதல் மாலைவரையில் செய்த வியாபாரங்களை யெல்லாம் மறந்து தூங்குகின்றார்கள். தூங்கும்போது நல்ல அர்த்த ராத்திரிவேளையில் பிரபஞ்சமெல்லாம் பிரளய காலம்போல் நிஸ்சப்தமாய் இருக்கும். அக்காலத்தில் தம்மைத் தாம் மறந்து தூங்குவதனால் அவர்களின் மேல் சர்ப்பம் ஏறிச்சென்றாலும் சரி, அல்லது அவர்களின் வீட்டில் கள்ளர்கள் புகுந்து எல்லாவற்றையும் திருடிக்கொண்டு சென்றாலும் சரி இவர்களுக்கு எதுவும் தெரியவரமாட்டா. இதுவே ஜகத்லயம். மறுபடியும் தூங்கி எழுந்தவுடன் எல்லாவற்றையும் அறிகின்றார்கள். இதுபோல் ஒவ்வொருவரும் பிரதிதினம் செய்துவரும் கார்யங்களையே செய்து வருகின்றார்களேயொழிய, நாம் எதற்காக ஜனனமெடுத்தோம் என்பதை சிறிதேனும் யோசனை செய்யமாட்டார்கள். யார் ஒருவர் இவைகளை யெல்லாம் யோசனை செய்கின்றார்களோ அவர்கள் ஞானமடைய தகுந்த குருவைத் தேடுவார்கள். உலகத்தில் தாம் பிரதிதினம் செய்துவரும் வியாபாரங்களையெல்லாம் தீர்க்காலோசனைசெய்யாததனால் பிரதி ஜன்மங்களிலும் சம்சார துக்கத்தையே அனுபவித்து வருகின்றார்கள். இந்த சம்சார சுகம் மிகவும் அல்பமானதென்றும், நீடித்திருப்பதல்ல வென்றும் யோசித்துப்பார்ப்பாராகில், இவையாவும் பொய்யான காரியமென்றும், நாம் சிலது நாளைக்குள் இவைகளை யெல்லாம் விட்டு ஓடிவிடப் போகின்றோமென்றும் ஸ்பஷ்டமாய்த் தெரியவரும். இவைகளையெல்லாம் ஒவ்வொருவரும் ஆழ்ந்து யோசனை செய்யாத தோஷத்தால் நாம் அடிக்கடி ஜன்மங்களை எடுக்க வேண்டியதாய் நேரிடுகின்றது. இவ்வாறு அடிக்கடி ஜனனமெடுத்து, பொய் சூது களவு மோசம் வஞ்சனை பொறாமை பரஸ்திரீகளை மோஹிப்பது முதலான துர்க் குணங்களுடன்

இருப்பதனால், இப்பாப கார்யங்களை அனுபவிக்க அதற்குத் தகுந்த சரீரமெடுத்து, எப்போதும் துக்கத்தையே அனுபவித்து வருகின்றோம். எப்பொழுதும் பாபகார்யங்களைச் செய்யாமல் நல்ல கார்யங்களையே செய்துவந்தால் நாம் சீக்கிரமாய் சிலது ஜன்மங்களிலேயே மோக்ஷமென்னும் வீட்டை அடைந்து விடுவோம். உலகத்தில் ஆஸ்தியும் கடனும் இருக்கலாகாது. கடனைத் தீர்த்து, ஆஸ்தியை வைத்துக் கொள்ளவேண்டும். கடனை வைத்துக்கொண்டு ஆஸ்தியிருந்தால் இக்கடனானது பிரதி நிமிஷமும் வட்டிக்கு வட்டியேறி ஆஸ்தியையெல்லாம் சாப்பிட்டுவிடும். ஆதலால், தமக்கிருக்கும் ஆஸ்த்தியில் சிலவற்றை விற்பனை செய்து கடனை ஒழித்து மிகுதியை கையிருப்பாய்வைத்துக் கொள்ளவேண்டுமே யொழிய கடனையும் ஆஸ்தியையும் வைத்துக்கொண்டிருந்தால் பிறகு கடனால் முழுகிப் போக வேண்டியதாய் நேரிடும். ஆதலால், கடன் உள்ளவர்களெல்லோரும் முதல் கடனைத்தீர்த்து விடுவீர்களாகில் பிறகு மனதிற்கு எக்கவலையும் இராது. அதன் பிறகு மனதிற்கு சந்தோஷம் உண்டாகும் அக்காலத்தில் இதில் உபதேசித்திருக்கும் பிராணயாமமாகிலும் ராஜயோகமாகிலும் ராம மந்த்ரமாகிலும் பஞ்சாக்ஷரமாகிலும் ஜபம் செய்து வருவீர்களாகில் எல்லா நன்மையும் அடைவீர்கள். இதுவே சத்யமான வாக்கென்று அறியக்கடவீர்களாக.

தன் நிஜசொரூபத்தைத் தெரிந்துகொள்ள சிஷ்யனுக்கு உபதேசித்தல்.

ருக்வேதத்தில் "ப்ரஜ்ஞாந"மே ப்ரஹ்மம்; யஜுர்வேதத்தில் "அஹம் ப்ரஹ்மாஸ்மி"யே ப்ரஹ்மம்; ஸாமவேதத்தில் "தத்த்வமஸி"யே ப்ரஹ்மம்; அதர்வணவேதத்தில் "அயமாத்மா"வே ப்ரஹ்மம், என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

சிஷ்யன்:—பிரஜ்ஞானமென்றால் எது? பிரஹ்மமென்றால் எது? ஆத்மா எவ்விதமாய்ப் பரமாத்மாவாகும்? இவைகளை விவரமாய்த் தெரிவிக்கவேண்டும், சுவாமி.

ஆசாரியர்:—பிரஜ்ஞானமென்றால் ஆத்மா; பிரம்மமென்றால் பரமாத்மா; பிரஜ்ஞான சொரூபமே பிரம்மமென்று தெரிவிப்பதே முதல்வாக்கியத்தின் அந்தரார்த்தம்.

சப்த பரிச ரூப ரச கந்தங்களென்னும் விஷயங்களையெல்லாம் தெரிந்துகொள்ளும் இந்திரியங்களும், அந்த இந்திரியங்களைத் தெரிந்துகொள்ளும் அந்தக்கரணங்களும், சிதாபாஸனாகிய ஜீவனும் மாயையால் மறைவுபட்டிருக்கின்றன. சாக்ஷிமாத்திரமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் பதார்த்தமே பிரஜ்ஞானமென்றும், இவ்விதமாய் சமஸ்த பதார்த்தங்களிலும் நிவசித்து அவைகளையெல்லாம் தெரிந்துகொள்ளும் சர்வசாக்ஷியே பிரம்மமென்றும் வேதங்கள் முறையிடுகின்றன. கூடஸ்த பிரத்தியகாத்ம, ஸச்சிதானந்த நித்ய நிர்மல நிர்க்குண நிர்விகார நிரஞ்ஜனனென்னும் பலவித பெயர்களுக்கு ஆதாரமாய், சாக்ஷிமாத்திரமாய் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஞானமே ஆத்மாவென்றும், பரப்பிரம்ம பரிபூரண பராத்பர நிராகார நிஷ்களங்க நிஷ்கிரிய நிச்சல அக்ஷய அகண்ட ஆதி

அநாதி அப்ரமேயமென்னும் அனேகவித நாமங்களை யுடையவனும் சர்வ சாக்ஷியாய்ப் பிரகாசித்துக்கொண் டிருக்கும் பிரம்மமே பரமாத்மாவென்று உபநிஷத்துகள் முறையிடுகின்றன.

சிஷ்யன்:—ஓர் தேகத்திற்கு சாக்ஷியாயிருகிகும் ஆத்மா எவ்விதமாய் சர்வ சாக்ஷியாகிய பரமாத்மாவாகும்?

ஆசாரியர்:—தீபம் தீவட்டி யென்னும் பெயர்கள் வெவ்வேறு யிருந்தபோதிலும், அவைகளின் பிரகாசம் மாத்திரம் வேருகாம லிருப்பதுபோல், ஆத்மா பரமாத்மா வென்னும் நாமங்கள் வேரு யிருந்தபோதிலும் அதன் குணங்கள் மாத்திரம் ஒன்ருயிருக்கும். எப்படியென்ருல், பெரிதாயிருப்பதனல் ஏரி யென்றும், சிறிதாயிருப்பதனல் மடுவென்றும், நீரோட்டமாயிருப்பதனல் நதியென்றும், சிலதூரம் போவதனல் கால்வாயென்றும், மனிதர்கள் அநேகர் சேர்ந்திருந்தால் ஸங்கமென்றும், ஒருவனிருந் தால் மனிதனென்றும், விருக்ஷங்கள் அதிகமாயிருந்தால் தோப்பென்றும், ஒன்றிருந்தால் மரமென்றும், நாமபேதங் கள் உண்டானபோதிலும், ஜலங்களினுடையவும், மனி தர்களினுடையவும், விருக்ஷங்களினுடையவும் குணங்கள் மாத்திரம் வேறுபடாமல் ஒரேவிதமா யிருப்பதுபோல், சகல தேகத்திற்கும் சாக்ஷியாயிருக்கும் பரமாத்மாவிற்கு, உபாதிபேதங்களினல் பெயர்கள் வேறுபட்டனவேயன்றி தத்வ விசாரணை செய்தபோது ஆத்மாவிற்கும் பரமாத்மா விற்கும் சிறிதேனும் பேதமில்லை.

1. சிஷ்யன்:—ஆத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் பேத மில்லாவிடில் முக்தியடையவேண்டியது எது?
2. பந்தத்திற்கு அகப்படுவது எது?
3 ஆத்மாவிற்குக் கைவல்யம் கொடுக்கப்பட்டவர்கள் யார்?

4. ஆத்மாவிற்குப் பிறப்பு இறப்பு உண்டா?
5. ஜீவன் முத்தியடைவதற்கு பிரயத்தினப் படவேண்டிய தேன்?
6. ஸஜ்ஜன (நல்லவர்கள்) சினேகம் அவசியம் செய்ய வேண்டுமா?
7. சாஸ்திர விசாரணை என் செய்யவேண்டும்?
8. குரு சிசுரூஷையால் உண்டாகும் பலன் என்ன?
9 தெய்வபக்தி இருந்தே தீரவேண்டுமா? இவைகளையெல்லாம் விவரித்துச்சொல்ல வேண்டும் சுவாமீ:—

ஆசாரியர்:—1. முக்தியடைவது ஆத்மாவேயன்றி வேறல்ல.

2. அந்த ஆத்மாவின் சொரூபத்தைச் சரியாய் விசாரித்துப் பார்த்தபோது, அது சுத்த சூன்னியமென்று மேலே மௌன கட்டத்தில் சொல்லப்படும். அப்போது உனக்குத் தெளிவாய்த் தெரியவரும். நிழலுடன் யுத்தம் செய்ய ஆரம்பிப்பதுபோல், இந்திரிய விகாரங்களுக்குக் கட்டுப்பட்டு தூரபிமானத்திற் குட்பட்டு, சிறுபிள்ளைகள் விளையாட்டில், இவன் ராஜன் இவன் மந்திரியென்று தம்மில் ஒருவனை ஏற்படுத்திக்கொண்டு வியவகரிப்பதுபோல் ஆத்மாவில் மித்தியா ஜீவத்துவமொன்று ஆரோபித்து, அநித்தியமாகிய மாயா ஸம்ஸாரத்தில் பிரமித்து அனேக கற்பனைகளை கற்பிப்பதில் அதிக சாமர்த்தியத்தை வகிக்கச்செய்து, அஞ்ஞானத்திற்குட்பட்டு ஜனனமரணரூபமான சம்சார சமுத்திரத்தில் மூழ்கி சதாகாலமும் துக்கத்தை அநுபவித்துக் கொண்டிருக்கும் தான், சச்சிதானந்த சொரூபமான ஆத்மாவா யிருந்தும் மாயாந்தகாரத்தினுல் மூடப்பட்டுத் தன்னைத்தான் மறந்து, தானல்லாத தேகாதிப் பிரபஞ்சமெல்லாம் தனதாய் நினைத்து புத்திர மித்திர களத்திர கிருக தன தான்னியாதிகளாகிய பதார்த்தங்கள் சாசுவத

மென்றும், சந்ததியினால் சுகமுண்டென்றும் மனதில் திடமாய் நம்பி, க்ஷணபங்கமாகிய தேகத்தில் அபிமானம் வைத்து, ஸ்திரீ போகத்தில் சதாகாலமும் மூழ்கித் தன் சொரூபம் இப்படிப்பட்டதென்று தெரிந்து கொள்ளாமல், தேகத்தி லிருக்கும், கண்கள் மூக்கு வாய் தேகசர்மமென்னும் ஐந்து இந்திரியங்களால் சர்வமும் பார்த்து பிரமையடைவதே பந்தம்.

3. இந்த பந்தத்தில் அகப்பட்டவர்களுக்குக் கோடி ஜன்மங்களிலாயினும் சரீராபிமானம் விடமாட்டா; தானல்லாத தேகாதிப் பிரபஞ்சத்தைத் தானென்று நினைக்கப்பட்ட பிரமை சற்றேனும் நீங்காது. தூல சூட்சும காரணங்களென்னும் சரீரத் திரயங்களை விசாரித்து ஆத்ம தத்துவங்களைத் தெரிந்துகொள்ளாவிடில் ஞானம்உண்டாக மாட்டா. தன் தேகம் தன் நேத்திரம் தன் கைகள் தன் மனம் தன் பிராணம் தன் ஜீவன் என்று பிரமிக்கப்பட்ட தான், தேகாதிப் பிரபஞ்சத்திற்கு வேறாயிருந்து சாக்ஷி மாத்திரனாய்ப் பிரகாசித்துக்கொண்டு சாக்கிராவஸ்தையில் இந்திரிய வியாபாரமும், சொப்னாவஸ்தையில் மனோ வியாபாரமும், சுஷுப்தியாவஸ்தையில் சூன்னியத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் விஷயங்களை யெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிவிக்கப்பட்ட காரணாசாரியரே கைவல்யத்தைப் பிரசாதிக்கப்பட்டவர்.

4. ஆத்மாவிற்குப் பிறப்பு இறப்பில்லை. அது ஒருவரால் கொல்லப்பட மாட்டா; ஒருவரையும் கொல்லாது. ஏனென்றால், அது நாம ரூபங்களில்லாதது; ஆதலால், தானும் ஒருவரைக் கொல்லாது. ஒருவரால் தானும் கொல்லப்பட மாட்டாது. ஆத்மாவிற்குப் பிறப்பு இறப்பு உண்டென்று மூடர்கள் எண்ணுவார்கள் (இது விஷயம் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்

கீதை அத்தியாயம் 2, சு-23, 24, 25-ல், பார்க்க.)

5. சம்சாரத்தில் மூழ்கி ஜனன மரண மென்னும் சமுத்திரத்தின் அலைகளில் அகப்பட்டுக்கொண்டு, நரகத்தில் வீழ்ந்து அனேக துக்கத்தை அனுபவிக்காமல், சதா ஆனந்தகரமாகிய சாஸ்வத பதவியை அடைந்து சுகிப்பதற்காக அவசியமாய் ஜீவன் முத்தியைச் சம்பாதிக்கவேண்டும்.

6. துர்க்கந்தமாகிய மலத்தைத் தின்று சந்தோஷிக்கும் பன்றியைப்போல், விஷய சுகங்களில் அகப்பட்டு மிருத்யு விற்கு (மரணத்திற்கு) இரையாகும் தேகாபிமான துக்கங்களை யெல்லாம் சுகமென்று தோன்றச் செய்யும் இந்திரிய விகாரங்களும், பலவிதங்களாகிய துராசைகளை உண்டாக்கும் துஷ்ட குணங்களைப் பூர்த்தியாய் நிவர்த்தி செய்துகொண்டு, கண்கள் மூக்கு வாய் செவிகள் தேஹசர்மம் என்னும் ஐந்து இந்திரியக் கூட்டங்களைத் தூரப்படுத்தி வைராக்கியத்தை அடைந்து சர்வதா சமாதி நிஷ்டையிற் சொக்கி, அதில் உண்டாகும் அகண்டானந்தத்தை யநுபவித்துக்கொண்டு திருப்தி யடைவதற்காக சத்சகவாசம் அவசியமாய்ச் செய்யவேண்டும்.

7. * அநித்தியமாகிய தேகத்திற்கு ரக்ஷகனு யிருக்கும் நித்தியமாகிய பரப் பிரம்மத்தைத் தெரிவிப்பதற்கு சகாய காரியா யிருக்கும் ஹரிஸ்மரணே, அல்லது சிவபக்தி செய்து அதனுல், ஸ்ரீமறுஜன்மத்தில் அதிக பக்தியுண்டாய் பிரம்மோபதேசத்திற்குப் பாத்திரனுகச்செய்து ஆதரிப்பது தருமமே யாதலால் அதைச் சம்பாதிக்க அவசியமாய்ப் பாடுபட வேண்டும். பாமரர்களிற் சிலர், அப்பிரயோஜனர்களாகிய காரிய குருவினுடைய ஆடம்பரங்களைப்பார்த்து மிகவும் பெரியவரென்று பிரமித்து அவரை ஆசிரயித்து அவரால் உபதேசம் பெற்று, தப்புமார்க்கமாகிய விபரீத விஷயங்களை யெல்

*இந்த 7 பக்தியை ஒவ்வொருவரும் தீர்க்கமாய் கவனிக்கக்கடவர்.

லாம் பரமார்த்த மென்று நினைத்து அவைகளை அனுசந்தானஞ் செய்து தன்னிஷ்டப்போல் திரிந்துகொண்டு வரும்போது, இதரர்கள் வேறோர் மார்க்கத்தை உபதேசித்து இதுவே மிகவும் சிரேஷ்டமானதென்று அதைச் சிலாக்கியமாய்ச் சொல்ல, பிரமித்து முதலில் போதித்த விஷயங்களை அதுவரையில் நிறுத்தி இதை அநுஷ்டித்துக் கொண்டுவர, மற்றொருவர் இன்னும் சில விஷயங்களைப் போதிக்க அதிலும் நிச்சயபுத்தி யில்லாமல் கடைசியில் அதையும் போக்கடித்துக்கொண்டு பிரஷ்டனாய் அஞ்ஞான மென்னும் பாழுங் கிணற்றில் வீழ்ந்து பாழாகின்றான். ஆதலால், ஸ்திரசித்தம், ஸமதரிசனம், சந்தோஷம், சாந்தம், நிச்சலத்துவம் (எந்த எண்ணமும் இல்லாமலிருப்பது) அநுபவ ஞானம், அவஸ்தாத்திரயம், மனோலயம், பந்த விமோசனம் முதலாகிய சத்விஷயங்களை யெல்லாம் சந்தோஷத்துடன் ஸ்திரமாய் நிறுத்துவதற்காக சாஸ்திர விசாரணை தவறாமல் செய்யவேண்டும்.

8. மோகமென்னும் கிணற்றில் வீழ்ந்து துக்கத்தை அநுபவித்துக்கொண்டு, யுக்தா அயுக்த பரிஞ்ஞான மில்லாத பசுப் பிராணிகள், சம்போகம் நித்திரை ஆகாராதி வியர்த்தமாகிய வியசனத்தில் மூழ்கி, மரணபய மென்னும் மஹா சர்ப்பத்தின் வாயில் அகப்பட்டுத் தத்தளிக்காமல், ஞானக்கண்களைத் திறப்பித்து அனேக ஜன்மங்களுக்குக் காரண பூதமாயிருக்கும் சஞ்சித கர்மங்களை, (ஒரு தீப்பொறியானது பஞ்சுப்பொதிகளை பஸ்மீகரப் படுத்துவது போல்) பஸ்மம் செய்வித்து ஸச்சிதானந்த சொரூபத்தைத் தெரிவித்து, சதானந்த முண்டாகச் செய்தவரே ஆசாரியராவர். ஆதலால், அவரிடத்தில் பக்தி சிரத்தை யுடையவனாய் இருந்து அவருக்கு எப்பொழுதும் சிசுரூஷை செய்யவேண்டும்.

9. அதோகதி செய்விக்கும் குரூரமாகிய மனோவிகாரங்களை யெல்லாம் அடக்கி, அநியாயமாகிய மரணம் முதலாகிய ஆபத்திலிருந்து தப்பித்துப் பரிபூரண ஞான மடைவதற்குமுன், ஒருவேளை காலகதி யடைந்தால் மறு ஜன்மத்தில் நல்லறிவுண்டாய் ஸர்வ இஷ்டங்களும் அநுக்கிரகித்து கண்களை இமை காப்பதுபோல் காத்து ரக்ஷிக்க இஷ்ட தெய்வத்தின்மேல் அதிக பக்தி உண்டாவதற்காகவே தெய்வபக்தி முக்கியமாய் இருந்தே தீரவேண்டும்.

ஆதலால், 'நேதி நேதி' யென்னும் மஹா வாக்கியத்தினால் தேகாதிப் பிரபஞ்சமெல்லாம் வேறுபடுத்தி, அவைகளுக்கெல்லாம் விலக்ஷணனாயிருக்கும் ஆத்மாவே பரமாத்மா என்னும் நிச்சயமுடையவனாயிருந்து அதனால் உண்டாகும் பிரம்மா னந்தத்தை அநுபவித்துக்கொண்டிருக்கவேண்டும்.

சிஷ்யன்:—ஆத்மாவே பரமாத்மாவென்று தெரிந்து கொண்டமாத்திரத்தில் ஆனந்தம் எவ்விதமாய் உண்டாகும்?

ஆசாரியர்:—நீயே ஆனந்த சொரூபமா யிருக்க, வேறொரு ஆனந்தத்தைத் தேடவேண்டிய அவசியமில்லை.

சிஷ்யன்:—நான் எவ்விதமாய் ஆனந்த சொரூபனானேனோ அப்பேர்ப்பட்ட ஆனந்த சொரூபத்திற்கு, இந்த துக்கங்கள் எவ்விதமாய் உண்டாயினவோ அதை தெரிவிக்கவேண்டும் சுவாமீ?

ஆசாரியர்:—உனது யதார்த்த சொரூபத்தை நீ இன்னும் திருடமாய்க் காணாததனால், அஞ்ஞான வசத்தினால் உனக்கு ஆனந்தம் தோன்றாம லிருக்கின்றது.

சிஷ்யன்:—தேகத்திற்கும், இந்திரியங்களுக்கும், அந்தக் கரணத்திற்கும், பிராணனுக்கும் மத்தியில் பிரகாசித்துக் கொண்டிருப்பதே ஆத்மாவென்று ஸ்திரமாய் நான்

தெரிந்து கொண்டிருந்தபோதிலும் ஆனந்தம் மாத்திரம் உதிக்க வில்லையே !

ஆசாரியர்:—தேகாதிப் பிரபஞ்சமெல்லாம் தானல்லவென்றும் அவைகளுக்கெல்லாம் விலக்ஷணமாயிருக்கும் ஆத்மாவே தானென்றும் திருடமாய்த் தெரிந்துகொண்டதுபோல், ஆத்மசொரூபமாய் (தான்தானாய்) நின்றாலே யொழிய, ஆனந்தம் உண்டாகமாட்டா.

சிஷ்யன்:—ஆத்ம சொரூபம் எப்பேர்ப்பட்டதோ அதை அடைவதற்குச் சாதனங்கள் எவைகளோ அவற்றைத் தயைசெய்து அநுக்கிரகிக்கவேண்டும். சுவாமீ !

ஆசாரியர்:—தேகாதிப் பிரபஞ்சங்களெல்லாம் தானல்லவென்று தெரிந்துக்கொண்டு நீக்கிவிட்டதுபோல் சரீர துக்கங்களுக்கும், இந்திரிய சுகங்களுக்கும், மனோ விகாரங்களுக்கும், எவ்வளவேனும் இடங்கொடாமல் அவைகளையெல்லாம் நிவர்த்திசெய்து, ஆத்மாவே தானென்று நிச்சயித்து வெளிவிஷய வியாபாரங்களையெல்லாம் விட்டு மானாபிமானங்களைத் தூரப்படுத்தி மௌன முத்திரையைத் தரித்து, சங்கல்ப விகல்பங்களை யெல்லாம் நசிக்கச்செய்து நிர்விகல்ப ஸமாதியில் நிச்சலத்துவமடைந்து சுகமாயிருப்பதே பிரம்மானந்தமென்றும் அதுவே ஆத்ம சொரூபமென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள்.

சிஷ்யன்:—வெளி திருஷ்டியைவிட்டு உள் திருஷ்டியை அவலம்பித்து நிச்சலத்துவம் அடைந்த மாத்திரத்தில், பிரம்மானந்த மநுபவிக்க எப்படிச் சாத்தியமாகும்?

ஆசாரியர்:—ஜாக்கிரத்தில் சுஷுப்தியை அடைந்து தன்மயமா யிருப்பதே பிரம்மானந்தமேயொழிய இதைவிட ஆனந்தம் வேறொன்றில்லை.

சிஷ்யன்:—திருசிய (காணப்படும்) பிரபஞ்சங்களையெல்லாம் தூரப்படுத்தி சாக்ஷிமாத்திரமாய் பிரகாசித்துக்

கொண்டு, சித்திரப் பதுமையைபோல் நிச்சலத்வம் அடைந்திருந்த போதிலும், ஆனந்தம் மாத்திரம் உதிக்க வில்லையே அது என் ?

ஆசாரியர்:—கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகசர்மம் என்னும் ஐந்து இந்திரியங்களினுடையவும், மனம் புத்தி சித்தம் அஹங்காரமென்னும் நான்கு அந்தக்கரணங்களினுடையவும் விருத்திகளெல்லாம் அடங்கியிருக்கும் சுஷுப்தியாவஸ்தை எவ்விதமாயிருந்ததோ சொல் பார்ப்போம்.

சிஷ்யன்:—பிரபஞ்ச வியாபாரம், மனோ விகாரங்கள் முதலானவைகளெல்லாம் சுஷுப்தியாவஸ்தையில் இல்லாமலிருந்தது. சுஷுப்தியில், சுகதுக்கங்களுக்கெல்லாம் காரண பூதமாயிருக்கும் மனம் காணுமற்போனதால், இந்திரியங்கள் யாவும் தலைகாட்டாமல் மறைந்து, ஆத்மா ஒன்றே சாக்ஷிமாத்திரமாய்ப் பிரகாசிப்பதனல் அச்சமயம் மாத்திரம் ஆனந்தமாய்த் தோன்றிற்று.

ஆசாரியர்:—அந்த ஆனந்தமே, இதுவரையில் சொல்லப்பட்ட ஆத்மசொரூபமென்று, பெரியோர்கள் சொல்லுவார்கள்.

சிஷ்யன்:—சுஷுப்தியில் தோன்றும் ஆனந்தத்தை ஜாக்கிரத்தில் எவ்விதமாய் அடைவதற்குச் சாத்தியமாகும்?

ஆசாரியர்:—அந்தர் (உள்) பகிர் (வெளி) பார்வைகளெல்லாம் துக்கமயமாயிருக்கும்; ஆத்மா மாத்திரம் ஆனந்த மயமாயிருக்கும். இந்த விஷயங்களை அறியாததால் தேகசம்பந்தமாகிய உபாதிகளெல்லாம் (எண்ணங்களெல்லாம்) ஆத்மாவிலேயே காணப்படுகின்றன.

சிஷ்யன்:—தேஹேந்திரியாதி துக்கங்களினுல் ஆத்மானந்தம் மறைவுபடுகின்றதே அது என் ?

ஆசாரியர்:—சரீரம் இருக்கும் வரையில் அதன் சுக

துக்கங்கள் அனுபவிக்காமல் தீராது. ஆத்மாநுபவ முடையவர்களுக்கே சரீர சம்பந்தமான சுகதுக்கங்க ளெல்லாம் சொப்பனத்திற் காணப்பட்டதுபோல் தோன்றினும் அது மித்தை (பொய்) யாயிருக்கும். அவ்விதமாய்த் தோன்றியும் தோன்றுமற்போவதும், அப்பியாசிகளுக்கே யன்றி ஆரூடனுக்கு அது எவ்வளவேனும் தோன்றாது. அப்யாசிகள் எப்பொழுதும் கேவலானந்த மயமாகவே யிருப்பார்கள்.

சிஷ்யன்:—அந்த ஆனந்தத்தை அடைந்த ஒருவனுக்கே மோக்ஷ சாம்ராஜ்ஜிய பதவி உண்டாகுமேயன்றி, மற்றவர்களுக்கு உண்டாகமாட்டாதென்று தோன்றுகின்றது.

ஆசாரியர்:—அகண்ட கைவல்ய சாம் ராஜ்யத்தை அநுபவிப்பதற்கு பிரம்மவித்து, வரன், வரீயான், வரிட்டன் என அதிகாரிகள் நால்வருண்டு. அவர்களில் தான், இப்பேர்ப்பட்டவனென்றாகிலும், இத்தேசத்தில் இருக்கின்றேனென்றாகிலும், மலஜல விசர்ஜனமாகிலும், அறுசுவைகளாகிய எவ்வித ருசிகளையும் அறியாமல், பொறி புலன்களால் சமாதியி லாழ்ந்து சதா முக்திவீட்டில் சலனமற (அசையாமல்) நின்று தானுண்டதும், அந்நியரா லூட்டப்பட்டதுமாகிய இவ்விரண்டும் தெரியாமல் தன்மயமாய் சஞ்சரிக்கும் பிரம்மவித் வரிட்டனே சிரேஷ்டமானவன். அவன் ஒருவனே பிரம்மானந்த சமுத்திரத்தில் மிதந்துகொண்டு தன்னைத்தான் மறந்து ஜீவன்முத்தி பதவியை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அடைவான். ஆதலால், பரமோத்கிருஷ்டமான (மிகவும் சிரேஷ்டமான) வரிட்டன் பதவியை நீ யடைந்து சதா பிரம்மானந்தத்தை அநுபவிக்கக்கடவாய்.

சிஷ்யன்:—பிராணனேடிருந்து மோக்ஷம் எப்படி அடையலாம்.

ஆசாரியர்:—மோக்ஷமென்றால் என்னவென்று தெரிந்துக்கொண்டாய்? பிராணனை விட்டு விடுவது மோக்ஷமல்ல. மோக்ஷமென்றால், பந்தத்திலிருந்து விடுபடுதல்; பந்தமே நரகம்; பந்தவிமோசனமே மோக்ஷம். துக்கமே நரகம்; துக்க நிவர்த்தியே மோக்ஷம்; இதைவிட மோக்ஷம் வேறொன்றில்லை. ஆதலால், துக்கமாகிய விருத்தியை விட்டு நிச்சல சித்தத்துடன் யிருந்து ஆனந்தத்தை யடையக்கடவாய். (இதுவிஷயம் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகத்கீதை அத்தியாயம் 5, சுலோகம் 24-பார்க்க.)

சிஷ்யன்:—நான் சதா ஆனந்தத்திற்சொக்கி ஜீவன் முத்தி பதவியை அடைவதற்கு எவ்வளவுகாலம் செல்லுமோ அறியேன்.

ஆசாரியர்:—ஜீவன்முத்தி பதவியை அடைவதற்கு எவ்வளவோ காலம் பிடிக்காது. இன்றுமுதல் தேகாபிமானத்தை விட்டு, நிச்சல சித்தத்துடன் பரப் பிரம்மத்தை எப்பொழுதும் தைலதாரையைப்போல் தியானித்துக் கொண்டு, பேதவாதங்களுக்கு அகப்பட்டு பிரமிக்காமல், சித்த விருத்திகளையெல்லாம் மனதிலும், மனதை அஹங்காரத்திலும், அஹங்காரத்தை மாயையிலும், மாயையை ஆத்மாநுபவத்திலும் அதாவது, "ஸோஹம்" மந்திர ஜபத்திலும் ஐக்கியம் செய்து (சேர்த்து) சுவாநுபவத்தினல் ஆத்மசொரூபமாய்ப் பிரகாசித்துக்கொண்டு, பசியுண்டானபோது ஜடாராக்நியைத் தணிப்பதற்காக அகப்பட்ட பதார்த்தங்களை ருசிபக்குவ மறியாமல் புசித்து, மானபிமானங்கள், ஜயாபஜயங்கள், லாபநஷ்டங்கள், சுகதுக்கங்கள் முதலானவைகளையெல்லாம் சமதிருஷ்டியாய்ப் பார்க்க

வேண்டும். பரப் பிரம்மத்தைவிட பிரத்தியகாத்மா வேறென்று நினைக்கப்பட்ட புருஷனுடைய இந்திரியங்களும் மனதும் தம்வசப்படாமல், விஷய சுகங்களுக்கு உட்பட்டு பலவித சங்கடங்களை யுண்டாக்கிக்கொண்டிருக்கும். ஆதலால், ஸோஹம் பிரம்மமே தானென்னும் நிச்சய ஞானத்தினால், தசேந்திரியங்களையும் அவைகளுக்குக் காரணமாயிருக்கும் மனதையும் வசப்படுத்தி, அரிஷட்வர்க்கங்களை அதாவது, காமக் குரோதாதிகளை ஜயித்து,நிர்மல பிரம்மாகார விருத்தியினால் கேவல பரிபூர்ண தத்துவ சொரூபத்தைத் தரிசித்து, ஆனந்தமுடையவனாய் சர்வ பிரபஞ்சத்தையும் உன்னிடத்திலேயே லயிக்கச்செய்து சித்த விஸ்ராந்தியடைந்து, கர்ம பக்தி ஞானயுக்தமாகிய விதிகளின் எண்ணங்களை யெல்லாம் தலையெடுக்கவிடாமற்செய்து, ஸச்சிதானந்த மயமாகிய பரப் பிரம்மத்திற் கலந்து கர்ம வசத்தினால் சம்பிராப்தமான துக்கங்களுக்குப் பயப்படாமல், ராகத் துவேஷ பய குரோதங்கள் முதலாகிய துக்கங்களையெல்லாம் நிவர்த்திசெய்து, பக்தி பூர்வகமாய் ஆசிரயிக்கப் பட்டவர்களுக்குத் தத்வோபதேசம்செய்து சங்கல்ப விகல்பங்களை எள்ளளவேனும் இருதயத்தில் நுழைய விடாமல், சமாதியிற் சொக்கி ஆனந்தத்தை அடையக்கடவாய்.

ஓ சற்குரு நாதா! அந்த சமாதிநிலை எப்படிப்பட்டதோ? அதை அறிவிக்கக் கடவீர்களாக.

சுரு || "ஸமாதி நிர்தூதமலஸ்ய சேதஸோ நிவேசிதஸ்யாத்மநி
யத் ஸுகம் பவேத் ந பக்யதே வர்ணயிதும் க்ராதாதா
ஸ்வயம் ததந்தஃகரணேச க்ருஹ்யதே."

ஆசாரியா்:—மலின வாசனை, காமக் குரோதாதி குணங்கள் முதலானவைகளை சமாதியில் போக்கடித்து மனதை பரப் பிரம்மத்தில் ஐக்கியம் செய்தபோது எப்படிப்பட்ட

சுகம் உண்டாகுமோ அந்த சுகத்தை வாக்கினால் வர்ணிப்ப தற்குச் சாத்தியமாகாது; நிர்மலமாகிய தனது புத்தியி னாலேயே கிரகிக்கவேண்டும்.

சுரு || "நிர்விகாரதயா வ்ருத்யா ப்ரஹ்மாகார தயா புநஃ
வ்ருத்தி விஸ்மரணம் ஸம்யக் ஸமாதி ரபிதீயதே."

என்னும் உபநிஷத்வாக்கியரீதியாய் "நானே பிரம்ம" மென்னும் தியானத்தையும் மறந்து விருத்தி சூன்னியமாய் சதா கேவல நிர்குண நிர்விகார சின்மாத்திரனாயிருப்பதே சகஜ நிர்வாண சமாதி எனப்படும். இந்த சகஜ நிர்வாண சமாதியிலிருந்து உன் சுவாநுபவத்தைச் சொல்லக்கட வாய்.

சிஷ்யன் ஆசாரியர் சொல்லியதுபோல் சமாதி நிஷ்டையிலிருந்து தன் சுவாநுபவத்தை ஆசாரியரிடம் சொல்லுதல்.

ஓ யோகீசுவரரே ! அடியேனுடைய குருநாதா !
சரணம் ! சரணம் !

ஆஹா ! இதுவரையில் என்னை நான் அறியாமல், அஞ்ஞானமயமாகிய பிரகிருதி என்னும் மாயையால் மூடப் பட்டு, என் சரீரத்தை நான் என்று எண்ணி, பரமானந்த சொரூபத்தை அறியாமற்போனேன். ஜலத்திற்கும், மச்சங் களுக்கும் எப்படி சம்பந்தம் உண்டாயிற்றோ அதுபோல், பிரகிருதி என்னும் மாயைக்கும் எனக்கும் இதுவரையில் சம்பந்தப்பட்டிருந்தது. ஐயோ ! நான் அஹங்காரத்திற்கு ஆதீனமாயிருந்து, அந்த பிரகிருதி என்னும் மாயையே 'நான்' என்று அபிமானித்திருந்தேன். இதுவரையில் என் நிஜ சொரூபத்தை நான் அறியாமல், அஞ்ஞானத்தினால்

மோசம் போயிருந்தேன். ஆஹா! மாயை என்னில் சேர்ந்து என்னை மோசம் செய்ததல்லவா? இப்போது தேவரீருடைய கிருபா கடாக்ஷத்தினால் என் நிஜ சொரூபத்தை நான் தெரிந்துகொண்டேன். மாயையின் குணங்களினால் நான் அனேக விகாரங்களை அடைந்து, பயித்தியம் பிடித்தவனைப்போல் திரிந்துகொண்டிருந்தேன். ஆஹா! என் நிஜசொரூபத்தை நான் இப்போதல்லவா தெரிந்துகொண்டேன். இனி மாயையிலிருந்து தப்பித்துக்கொண்டு சுகமாயிருப்பேன். நான், பாபமில்தாவன். ரூபமில்லாத திவ்யரூபன். இதுவரையில் என் நிஜசொரூபத்தை நான் அறியாமல் மாயையுடன் கூடி பிரமை கொண்டிருந்தேன். இக்குற்றம் மாயை செய்ததல்ல; நான் மாயையுடன் கூடியிருந்ததனால் எனக்கு நானே தப்பிதம் செய்துகொண்டு கெட்டுப்போய் "தேகமே நா"னென்று பிரமித்திருந்தேன். அப்படிப்பட்ட பிராந்தியினால் எனக்கு அனேக விசாரங்கள் உண்டாயின. "இது என்னுடைய" தென்னும் "மம" காரத்தினால் இதுவரையில் எனக்கு அனேக ஜன்மங்கள் உண்டாயின. இனி இந்த 'மம' காரத்தைவிட்டு ஜநந மரணமென்னும் துக்கத்தை அடையாமலிருப்பேன். மிகவும் பரிசுத்தனை எனக்கு இந்த மாயையுடன்கூடி இருக்கவேண்டிய ஆவசியமில்லை. மாயையென்பது அனேகவித ரூபங்களைக் கொண்டுவந்து அடியேனுக்குக் காட்டியபோதிலும் அப்படிப்பட்ட ரூபங்களை இனி பார்க்காமலிருப்பேன். அஹங்காரமென்பதை என்னில் சேரவிடாமல் இருப்பேனாகில் மாயை எனக்குத் தெரியாமல் நசித்துப்போகும். துர்மார்க்கத்தில் ஓடிக்கொண்டிருக்கும் சுபாவகுணமுடைய மாயையிலிருந்து விடுபட்டு நான், எனது சொரூபத்திலேயேயிருந்து ஆனந்திக்கின்றேன். ஆஹா! எதிரிற்

காணப்படும் நாமரூப ஜகத்து சிருஷ்டிக்குப் பூர்வத்தில் எங்கு போயிருந்தது? இப்பொழுது எப்படி உண்டாயிற்று? மறுபடியும் பிரளயத்தில் எங்கு லயித்திருக்கும்? இப்போது பிராந்தியினால் இருப்பதாய்த் தோன்றுகின்றது. இந்த ஜாக்கிராவஸ்தையில் சர்வமும் காணப்படுகின்றதே யொழிய, நித்திராவஸ்த்தையில் பூர்த்தியாய்க் காணப்படுவதில்லை. ஆஹா! இது எவ்வளவு ஆச்சரிய கரமாயிருக்கின்றது! இதைவிட வேறே ஆச்சரிய மொன்றுண்டோ? இப்படி காணப்படுவது மாயா பிராந்தியினாலேயேயொழிய வேறன்று. மனமே பிராந்திரூபமா யிருக்கின்றது; பிராந்தியில்லாவிடில் ஜகத்தில்லை, எல்லாம் பரிபூரண பரப் பிரம்மமே. ஆதலால், எது அந்நியம், எது விலக்ஷணம், எது விதி, எது நிஷேதம், (தள்ளப்பட்டது) எது சுத்தம், எது அசுத்தம், இவைகளெல்லாம் அசத்தியமே.

பரிபூரண பிரம்மானந்த நிஷ்டையில் நானே யிருக்கின்றேன்; என்னைவிட அந்நியமாய் எதையும் பார்ப்பதில்லை; எதையும் கேட்பதில்லை; நான் எதையும் அறிவதில்லை; பரிபூரண பரப் பிரம்மத்தை என்னிடத்திலேயே நான் அநுபவித்துக்கொண் டிருக்கின்றேன். சமுத்திரத்தில் காற்று சஞ்சரிப்பதனால் அலைகள் அநேக விசை பிறந்து பிறந்து நசிப்பதுபோல் ஞானானந்த சொரூபியாகிய என்னிடத்தில் மாயை யென்னும் காற்று சஞ்சரிப்பதனால் பிரபஞ்ச மென்னும் அலைகள் அநேக விசை பிறந்து பிறந்து நசிக்கின்றன. ஆத்ம சொரூபியாகிய நான் என்றைக்கும் நாசமில்லாத அத்விதீய பரிபூரண பரப் பிரம்மமா யிருக்கின்றேன். உபே வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜநஃ பரமம் ஸாம்ய முபைதி)என்பதுபோல் என்னைவிட அந்நியமானது எதுவுமில்லை. எனக்கு விதி விலக்குகளில்லை. எனக்கு புண்ணிய பாபங்களேது. மனம் வாக்கு காய

மென்னும் திரிகரண சத்தியால் நான் புண்ணிய பாபங்களைச் செய்வதில்லை. நான் அஸங்கன். நான் அடையாளமில்லாதவன். நான் அசரீரி. நான் அசலன். சம்சார பந்தத்தையும் அஞ்ஞான பாசங்களையும் ஹரித்ததனால் (ஹரித்தல்-நாசஞ்செய்ததனால்) நான் ஹரி, நான் பிரசாந்தன், நான் ஆதி அந்திய மில்லாதவன், நான் பரிபூரண பரப்பிரம்மம், நான் அகர்த்தன், நான் அபோக்தன் என்றால், நான் எந்தக் காரியங்களையும் செய்வதில்லை, எதையும் அனுபவிப்பதில்லை. நான் பிறப்பு இறப் பில்லாதவன், நான் நாசமில்லாதவன், நான் நித்தியமங்கள சொரூபன்.

ஒ சற்குருநாதா! மாயாந்த காரத்தினால் மூடப்பட்ட என்னை, உமது கடாக்ஷத்தினால் பாசமென்னும் மாயையினின்று நீக்கிப் பசு பதியுடன் சேர்ப்பித்த என் பிரபுவே! இப்போதல்லவோ என்னை நான் அறிந்தேன்; இப்பொழுது உமக்கும் எனக்கும் யாதொரு பேதமுமில்லை. நாமிருவரும் ஏக பரப் பிரம்ம சொரூபிகளே.

ஆசாரியர்:—உன்னை நீ அறிந்த ஒ குமாரா! இப்பொழுது ஒன்று சொல்லுகின்றோம் கேள்.

சரு || "ப்ரமாதோ ப்ரஹ்ம நிஷ்டாயாம் ந கர்த்தவ்ய: கதாசந
ப்ரமாதோம்ருத்யு ரித்யாஹ: வித்யாயாம் ப்ரஹ்மவாதிந:
யதாபக்ருஷ்டம் சைவாலம் க்ஷணமாத்ரம் ந திஷ்டதி
ஆவ்ருணோதி ததா மாயா ப்ராஞ்ஞம் வாபி பராங்முகம்."

என்னும் அத்யாத்மோபநிஷத் வாக்கிய ரீதியாய் சாதாரணமாய் எல்லோருக்கும் மரணகாலத்தில் மிருத்யு உண்டாகமாட்டா. பிரம்ம நிஷ்டையை மறப்பதே மிருத்யு. ஒரு தடாகத்திலுள்ள பாசியை எவ்வளவு தூரம் போக்கியபோதிலும் மறுபடியும் உடனே அந்தப் பாசியானது யதாப் பிரகாரமாய் அந்த ஜலத்தை மூடிக்கொள்வதுபோல்,எப்பேர்ப்பட்ட பிரம்மவேத்தனாயிருந்தபோதி

னும் பிரம்ம நிஷ்டாப்பியாசத்தில் சிரத்தையில்லாமல் பராமரிக்கையா யிருந்தால் அவனை ஆவரண விக்ஷேப சொரூபமாயிருக்கும் மாயாசக்தி அந்தக்ஷணமே ஆவரித்து(மூடி)க்கொண்டு, அவனுக்குச் ஜநநமரண துக்கங்களை உண்டாக்கச்செய்யும். ஆதலால், நீ ஒருபோதும் பிரம்ம நிஷ்டாப்பியாசத்தை மறக்கவேண்டாம். சர்வ வியாபகமான ஸச்சிதானந்த பரப் பிரம்மத்தை பிரம்மவேத்தர்கள் தமது ஆத்ம சொரூபமாய் அறிகின்றார்கள். அந்த பரப் பிரம்மம், ஆகாசத்தைப்போல் எங்கும் வியாபித்திருக்கின்றது. அந்த பரப் பிரம்மம் சகல ஜீவர்களின் இருதயத்தில் சாக்ஷிமாத்திரனா யிருந்துகொண்டு, நேத்திரம் சகல ரூபங்களையும் அறிவதுபோல், தேஹேந்திரியாதி பிரபஞ்சம் சர்வத்தையும் அறிந்துகொண்டிருக்கும். அஹங்கார மமகார சூன்னியர்களான பிரம்மவேத்தர்கள் அப்படிப்பட்ட பரப் பிரம்மத்தைத் தமது ஆத்மசொரூபமாய் அறிந்து சதா ஆத்மாநு சந்தானம் செய்துகொண்டிருப்பதுபோல் நீயும் செய்யக்கடவாய்,

---

பரப் பிரம்மத்தின் ரூபம் எப்படிப்பட்டது.

எனதன்பர்களே! உலகத்தில் காரியகுரு காரணகுரு என இரண்டு குருக்களுண்டு; அதில் காரிய குரு என்பவன், ஓர் முத்திரையைக் காட்டிக்கொடுத்து அதாவது, சுவற்றில் ஓர் கறுப்பு சிறிய புள்ளிவைத்து, அதை கண் சிமிட்டாமல் பார்க்கவேண்டுமென்றும், அக்காலத்தில் கண்களில் ஜலம் தாரைதாரையாய்ப்பெருகி கண்கள் எரிச்சல் உண்டாகுமென்றும், எவ்வளவு எரிச்சல் உண்டானபோதிலும் கண்களைச் சிமிட்டாமல் மேற்சொல்லிய புள்ளியைப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டுமென்றும், இவ்வாறு சில மாதங்கள்

பழகிவந்தால் சுவற்றிலுள்ள புள்ளியின் குறி மறைந்து, நக்ஷத்திரமண்டலம் தோன்றுமென்றும், பிறகு சந்திர மண்டலம் தோன்றுமென்றும், பிறகு சூர்யமண்டலம் தோன்றுமென்றும், பிறகு அம்மண்டலம் விசேஷ பிரகாச மாயக் காணப்படுமென்றும், அப்படிக் காணப்படும் பிர காசமே ஆத்ம தரிசனமென்றும், அந்த ஆத்ம தரிசனமே பரமாத்ம சொரூபமென்றும் சொல்லுவார்கள். மற்றும் சில குருக்கள் மூக்கின் நுனிக்குறியைக்காட்டி அதைதிருஷ் டித்துப்பார் அப்போது அந்த திருஷ்டி மறைந்து முன் சொல்லிய மண்டலங்கள் காணப்படும் என்றும் சொல்லு வார்கள். இவ்வாறே அனேக குருக்கள் அனேக விதங் களாய்க் காட்டி ஆத்மா, கோடிசூர்ய பிரகாசமாய்க் காணப்படுமென்று சொல்லுவார்கள். இவையாவும் அறி யாத்தன்மையே. நாமரூபமில்லாத பரப் பிரம்மத்தின் அம்சமாகிய ஆத்மாவிற்கு பிரகாசம் எவ்விதமாய் உண்டா கும். முன்சொல்லிய மண்டலங்களும் பிரகாசமும் கடந்து பார்த்தால் சுத்த சூன்யமாயிருக்கும் ஆகாசவடிவமே காணப்படும்; அந்த ஆகாசவடிவம் இங்கு பலவித திருஷ் டாந்தங்களுடன் காட்டிச் சொல்லுகின்றோம். கேளுங்கள். இதற்கு ஞானவாசிட்டம் பிரமாணம்.

அறிவதா யறிவே மெய்யா யமலமா யனைத்தா யாறிப்
பிறிவுறு வரவு போக்கில் பிரமமே யுளதா மந்தச்
செறிபொருட் சத்தி தோற்ற மாத்தரஞ் சகமாய் நிற்கும்
பொறிகள் பல்காட்சி பொய்யே பொருண் மெய்யேயென்று
[வாழ்வாய்.

இராப்பகல் இல்லாத இடம் எதுவோ அதுவே பர மாத்மாவின் சுயரூபம். அதாவது, காலே நாலேமுக்கால் அல்லது ஐந்துமணி வேளையில் என்றால், உள்ளங்கையி லுள்ள கோடுகள் தெரிந்தும் தெரியாமலும் காணப்படும்

சமயம் எதுவோ அதுவே இரவும் பகலும் இல்லாத இடம். அதாவது, இருள் நீங்கி சூரியன் உதயமாக இரவும் பகலும் கூடிப்பிரியும் வேளை, ஐந்து நிமிஷங்களுக்குமேல் இராது அச்சமயம், நீலம்போலிருக்கும் மேல் ஆகாசத்தைப் பாராமல் அதன் மத்தியிலுள்ள ஆகாசத்தை மாத்திரம் நோக்கிப்பார்த்தால் சற்று இருளும் சற்று வெளிச்சமாயும் காணப்படும். இரவும் பகலும் கூடுமுன்னமே அதாவது காலை ஐந்துமணி முதல் ஐந்தேகால் ஐந்தரை மணிவரையில் எல்லா ஜீவராசிகளின் மனதிற்கு மிகவும் சந்தோஷமுண்டாகும்; அக்காலத்தில் 'கூ' வென்று குயில் கூவுவதும், மயில் ஆடுவதும், சிங்கம் புலி யானை முதலானவைகள் கர்ஜனை செய்வதும், காடை புறா கோழி இன்னும் மற்றுமுள்ள வானம்பாடி காக்கை முதலான பக்ஷிகள் கூவுவதும், ஏரி குளம் சமுத்திரம் முதலானவைகளி லுள்ள மீன்கள் மிகவும் சந்தோக்ஷித்து ஜலத்தினின்று ஒரு முழத்திற்குமேல் துள்ளி எகிறி குதித்துக்கொண்டிருக்கும். எல்லா புஷ்பங்களும் மலர்ந்து பூர்க்கும் வேளை அதுவேயாம். அக்காலத்தில் மனிதர்கள் காட்டுவழியாய்ச் சென்றால், முன்சொல்லிய சப்தங்களையெல்லாம் கேழ்க்கலாம். அச்சமயம் அப்புருஷர்களின் மனம், ஓர்விதமாகிய சந்தோஷத்தை அடையும். இதை நீங்கள் பரீக்ஷித்துப் பார்த்தால் பிர்த்தியக்ஷ திருஷ்டாந்தமாய்க் காணப்படும். இருட்டு அறையில் உட்கார்ந்து கண்களை மூடி இடுப்பு கூன் வளையாமல் நேராய் நிமிர்ந்து, காலை ஐந்துமணிக்கு தரிசித்த பரமாத்மாவின் ரூபம் மனதினால் நினைத்தவுடன் அந்த ரூபம் அங்கு தோன்றும். அப்போது மனதை வெளி வியவகாரங்களில் ஓடவிடாமல் நிறுத்தி பரமாத்மாவின் ரூபத்திலேயே ஐக்கியமாகும் (சேரும்)படி செய்தால் மிகவும் ஆனந்தம் உண்டாகும். அச்சமயம் எந்த மந்திரங்

களையும் ஜபிக்காமல் சும்மாயிருந்தால்தான், ஓர்விதமாகிய ஆனந்தம் உண்டாகும். அனேக விஷயங்களில் ஓடிக் கொண்டிருக்கும் மனதை ஓடவிடாமல் நிறுத்துவதற்காக இந்நூலில் 'ஸோஹம்' மந்திரம், பஞ்சாக்ஷரமந்திரம் முதலானவைகளை உபதேசமாய்ச் சொல்லப்பட்டது. இவ்வாறு ஜபம் செய்துவந்தால் அனேக எண்ணங்களை எண்ணிக்கொண்டிருக்கும் மனமானது, ஒரே எண்ணமாயிருந்து மந்திரத்தை ஜபம் செய்துகொண்டே வரவர அனேக நாள் பழக்கத்தால், ஜபித்துக்கொண்டிருக்கும் மந்திரம் தனக்குத்தானுப் நின்றுவிடும். அப்போது, யாவையுஞ் சாக்ஷியா யறிவதாகியும்,போதாகாரமாகியும், நிர்மலமாகியும், எல்லாமாகியும், உபசாந்தமாகியும், இராப்பகல் இல்லாததுமா யிருக்கின்ற பிரம்ம சொரூபத்தில் சேர்ந்துவிடுவான்;அச்சமயத்தில் முன்சொல்லிய ஆனந்தம் தோன்றும். மனம் இருக்கும் வரையில் ஆனந்தம் உண்டாகமாட்டா; மனம் நசித்தால் தன்னைத்தான் மறந்து ஆனந்தத்திலேயே சொக்கியிருக்கலாம்.

அருணோதயமானவுடன் பக்ஷிகள் கூவுவதும், சிங்கம் புலி முதலானவைகள் கர்ஜனை செய்வதும், அருணோதயத்திற்குமுன் ஜனங்களுக்கு உண்டாயிருந்த ஓர் விதமான சந்தோஷமும் நீங்கிவிடும். பிறகு மனக்குரங்கானது பழயபடி பலயிடங்களிலும் ஓடித்திரிந்துக்கெட்டு அலையும். அப்பாழ் மனம் இஷ்டம்போல் போகவிடாமல் புத்தியினல் திருப்பிவிடவேண்டும். அப்போது அம்மனதின் சேஷ்டைகள் யாவும் அடங்கிவிடும். அதாவது, கள்சாராயம் விஸ்கி பிராந்தி ஒயின் முதலானவைகளில் எவரெவர்களின் மனம் எதையெதை சாப்பிடவேண்டுமென்று நினைக்கின்றதோ அப்போது, அம்மனதின் இஷ்டம்போல் போகவிடாமல் புத்தியினல் தடுத்துவிட்டால் மனதிற்கு உண்டாயிருந்த

இச்சை ஒழியும். மனதை வசப்படுத்த புத்தியே முக்கிய மானதாயிருக்கின்றது. துன்மார்க்க கர்ம பலன்களை அனுபவிக்கவேண்டியதாயிருந்தால், புத்திசொல்லும் சொற்களை மனம் கேழ்கமாட்டா. எப்படி யென்றால், ஓர் வீட்டின் கூடத்தில் விலை உயர்ந்த சிறிய கெடிகாரம் ஆணியில் மாட்டியிருந்தது; அவ்வீட்டிலுள்ளவர்க ளெல்லோரும் பின்புறமாய் இருந்தார்கள். அப்போது ஒருவன் ஏதோ ஓர் கார்யார்த்தமாய் அவ்வீட்குற்குவந்து கூடத்தில் பார்த்த போது, அங்கு ஒருவரும் காணாததால் கெடிகாரத்தைப் பார்த்து ஆஹா! இது மிகவும் நல்ல கெடிகாரம் இதைக் கொண்டுபோய் விடலாமென்று அவன் மனம் நினைத்தது. உடனே புத்தியானது, அதையெடுப்பது யாராகிலும் பார்த்தால் பின் கெடுதிவந்து நேரிடுமென்று சொல்லும். அவன் ராஜதண்டனை அடையவேண்டிய பிராரப்த கர்மம் இருப்பதனால் புத்திசொல்லும் சொல்லை மனம் கேளாமல், அதன் மேல் அஹங்காரமென்பது உண்டாய், அங்குமிங்கும் திரும்பிப்பார்த்து, இங்கு யாருமில்லை, எடுத்துப்போவதை ஒருவரும் பார்க்கமாட்டார்கள் என்று அவன் மனம் நினைத்து கெடிகாரத்தைக் கொண்டுபோய் விடுகின்றான். இவன் உள்ளிருந்து வரும்போது மற்றொருவன் வெளியில் பார்த்திருந்தான். சுமார் பத்துமணிக்கு ஆபீசுக்குப்போகும் வேளையில் அவ்வீட்டு எஜமான் கெடிகாரத்தைப்பார்த்து காணாமல் போனதால் எவர்களை விசாரித்தபோதிலும் அகப்படாம லிருந்தது. பிறகு திருடன் காலையில் வீட்டிற்குள்ளிருந்து வரும்போது பார்த்திருந்த மனிதன், திருடன் பெயரைச்சொல்லி பலானவன் காலை 7-மணிக்கு உங்கள் வீட்டிற்குள் இருந்து வெளிவந்ததை நான் பார்த்தேன். அவன்தான் கொண்டுபோயிருக்கலாமென்று சொன்னான். பிறகு அவர்கள் அதை போலீசாருக்குத் தெரிவித்தார்கள்.

போலீசார் அவனைப்பிடித்துவந்து கேட்டதற்கு நான் பார்க்கவேயில்லையென்று ஒரே சாதனையாய்ச் சாதித்தான். பிறகு அவர்கள் செய்யவேண்டிய வேலையைச்செய்த பிறகு கெடிகாரத்தைக் கொண்டுவந்து கொடுத்து விட்டான். உடனே அவனை ஜெயிலுக்குள் போட்டு பூட்டிவிட்டார்கள். அப்போது அவன் ஏகாந்தமாய் உட்கார்ந்து,ஐயோ! நான் ஏன் அதை எடுத்தேன்; அதை யெடுப்பது யாராகிலும் பார்த்தால் பின் கெடுதிவந்து நேரிடுமென்று என் மனதிற்குத் தோன்றிற்றல்லவா? அதுபோல் நான் எடுக்கா மலிருக்கலாகாதா வென்று அவன் மனம் நினைத்துத் துக்கப்படும். அப்போது புத்தியானது என்ன நினைத்துக் கொள்ளுகின்றதென்றால், "நான் சொன்னதை எடுத்துக் கொள்ளாமற் போனாயல்லவா, படவேண்டிய கஷ்டங்களை யெல்லாம் படு" என்று புத்தி நினைத்துக்கொள்ளும். இது ஒவ்வொருவருக்கும் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமே. அதாவது இப்படிச் செய்யலாகாதென்று நினைத்தேன், அப்படி நினைத்தும் ஏதோ புத்தி பிசக்காய்ச் செய்துவிட்டேன் என்று ஒவ்வொருவரும் சொல்லுவது வழக்கமாயிருக்கும் விஷயம் ஒவ்வொருவரும் அறிந்த விஷயமே ஆதலால், மனதைவிட புத்தி சிரேஷ்டமானதா யிருப்பதனால் புத்தி சொல்லும் வார்த்தையை முக்கியமாய் மனம் கவனிக்க வேண்டும்.

மனம் லயப்பட மூன்றும்முறை உபதேசித்தல்.

ஐயா! இதனடியில் உபதேசித்திருக்கும் உபதேசம் இதுவரையில் உபதேசித்திருந்தபோதிலும், மாயைக்குள் அகப்பட்டிருக்கும் ஸ்திரீ புருஷர்கள் அந்த மாயையிலிருந்து விடுபட அவர்கள் மனதிற்கு நன்றாய் விளங்கும்படி, மறுபடியும் மூன்றும்முறையும் உபதேசிக்கின்றோம். உபதேசித்ததுபோல் ஒருநாள் அப்பியசித்துப் பார்ப்பீராகில், இதன் அநுபவம். உங்களுக்குப் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாய்த் தெரியவரும். மானிடஜநநம் கடைத்தேற எல்லா உபதேசங்களும் இந்நூலில் எழுதப்பட்டிருக்கின்றன. கடைத்தேறப் பட்டவர்களுக்கு இந்நூல் ஒன்றே போதுமானதா யிருக்கின்றது.

அன்பர்களே! நீங்கள் ஒரு காரியம் நினைத்து வீட்டை விட்டு வெளிப் புறப்பட்டு குறித்த இடம் சேர்ந்து அக்காரியங்களைப் பார்க்கும் வரையில், எந்த எண்ணங்களுமில்லாமல் வழி நடந்து, குறித்த இடம் போய்ச்சேர்ந்து அவ்விடத்திலுள்ள வேலைகளைப் பார்க்கும்போது மாத்திரம் மனதை அக்காரியங்களில் பிரவேசிக்கச் செய்து, அதற்கு வேண்டிய பிரயத்தினங்களெல்லாவற்றையும் செய்து முடித்து, மறுபடியும் வீட்டுக்குத் திரும்பி வரும்போது மனதை, அப்பொழுது செய்து முடித்துவந்த விஷயங்களைக் குறித்தேனும் அல்லது வேறு எந்த விஷயங்களைக்குறித்தேனும் நினைக்கவிடாமல் செய்து, இதனடியில் சொல்லப்போகும் இரண்டு மந்திரங்களையும் சுவாசத்துடன் சேர்த்து உள்ளுக்கிழுத்து ஜபித்துக்கொண்டு வருவதே ராஜயோகமென்று சொல்லப்படும். உபநிஷத்துகளும் பெரியோர்களும் சொல்வது இதுவேயாம்.

பிரபஞ்சத்திலுள்ள மானவர்களின் மனதெல்லாம், மேற்சொல்லியவைகளுக்கு நேர்விரோதமாய் நடக்கின்றது. எப்படியென்றால், ஏதாகிலும் ஒரு காரியத்தை நினைத்து வீடுவிட்டு வெளிகிளம்பினவுடன், ஜலத்தில் நீர்க்குமிழிகள் பிறந்து பிறந்து எவ்வளவு சீக்கிரமாய் நசிக்கின்றனவோ அதுபோல் "புங்காநு புங்கவிஷயே க்ஷணதத்வரூபிணும்" என்னும் வாக்கியரீதியாய் க்ஷணத்திற்குள், கணக்கற்ற எண்ணங்கள் பிறந்து பிறந்து, அப்போதே அக்கணமே இமைக்கொட்டுவதற்குள் மறைந்து, மனம் வேறு விஷயங்களில் பிரவேசித்து (ஓடி) அதையும் மறந்து, மறுபடியும் வெவ்வேறு விஷயங்களை யோசனைசெய்து கொண்டே, இவ்வாறு தான் குறித்த இடம் போய்ச் சேருவதற்குள் அனேக யோசனைகள் பிறந்து பிறந்து அக்கணமே மறந்து, மறுபடியும் அந்த ஞாபகமில்லாமல் பூர்த்தியாய் மறந்துவிடும். பிரபஞ்சத்திலுள்ள மானவர்களின் மனத்திற்கெல்லாம் இச்சேஷ்டையே உண்டாயிருக்கின்றன. இப்படிப்பட்ட மனம் எப்பொழுது அடங்கியிருக்குமென்றால், சாதாரணமாய் ஜனங்கள் அவரவர்களின் வேலைகளை முடித்து சயனிக்க இரவு பதினொரு மணியாகும். அதற்குமேல் சயனித்து மறுபடியும் மூன்றுமணிக்கு எழுந்திருக்கின்றார்கள். இதன் மத்தியில் அதாவது, நித்திரையில் இருக்கும் நாலுமணிநேரம் மாத்திரம் இப்பாழ் மனம் நித்திரையில் அடங்கியிருக்கும். அச்சமயத்திலும் மனம் சுமமாயிராமல், சொப்பனமென்பதைக் காணும். நித்திரையில் தன் வீட்டில் கள்ளர்கள் புகுந்து வீட்டிலுள்ள திரவ்வியங்களைக் கொண்டுசென்றாலும், தன்மீது சர்ப்பம் ஏறிச்சென்றாலும், தன் மானத்தின்மீது வேஷ்டி யில்லாமலிருந்தாலும் தனக்குத் தெரியாமல் தன்னைத்தான் மறந்து நித்திரை செய்கின்றான். அப்படிப்பட்ட சமயத்தில் மனம்,

கண்ணிந்திரிய மூலமாய் அறிந்து எதையும் பார்ப்பதில்லை. அப்படியிருக்க, இரவு நித்திரையில் மனம் வெளியில் சென்று திரிந்து, தான் இரவு நித்திரையில் கண்ட வஸ்துக்களை எல்லாம் காலையில் அம்மனம் எவ்விதமாய்ச் சொல்லுகின்றதென்றால், தன்னில் அந்தர்யாமியாயும் சாக்ஷி சொரூபனுயும் இருக்கும் ஆத்மாவானது, மனம் இரவு நித்திரையில் கண்ட விஷயங்களை எல்லாம் தான் சாக்ஷிமாத்ரனுயிருந்து பார்த்துவந்தவனுதலால், நித்திரை விட்டெழுந்தவுடன் மனம், இரவு நித்திரையில் கண்ட விஷயங்களையெல்லாம் ஞாபகத்திற்கு வரும்படிச்செய்விக்கின்றுன். அதனுல் மனம், இரவு நித்திரையில் கண்ட விஷயங்களை எல்லாம் சொல்லுகின்றது. இம்மனம் ஒவ்வொரு சமயம் சொப்பனமில்லாமல் அடங்கியிருக்கும். அப்படி அடங்கியிருப்பதே சுழுப்தி என்று சொல்லப்படும் அதாவது, மனம் பிரபஞ்ச வியாபாரங்களும், சொப்பனுவஸ்தைகளும் இல்லாமலிருப்பதே சுஷுப்தி அவஸ்தை என்று சொல்லப்படும். ஜாக்கிரத்தில் இந்த சுஷுப்தியவஸ்தைஅடைந்திருப்பதே சமாதி என்று சொல்லப்படும். இந்த சமாதியில் காணப்படும் வஸ்துவே யோகதிருஷ்டி என்று சொல்லப்படும். இப்படிப்பட்ட சமாதியில் மனம் லயிக்காமல் நித்திரையில் லயித்திருப்பது எப்படி இருக்கின்றதென்றுல், பிரளய காலம் வந்தபோது பிரபஞ்சமெல்லாம் எவ்விதமாய் ஜலத்தில் முழுகி விடுகின்றனவோ அதுபோல் பிரபஞ்சத்திலுள்ள ஜீவர்களின் மனதெல்லாம் இரவு நித்திரையில் நாலு மணிநேரம் லயித்திருந்து நித்திரைவிட்டெழுந்தவுடன் மறுபடியும் இரவு நித்திரை செய்யும் வரையில் அவர்களின் மனம் அனேக எண்ணங்களை எண்ணிக்கொண்டிருக்கும். அப்படி எண்ணிய எண்ணங்களெல்லாம் ஞாபகமிராது; ஆனுல் அவர்களுக்கு எது முக்கியமான விஷயமோ அவை

களில் மாத்திரம் ஞாபகமிருந்து, மற்றவைகளெல்லாம் மறந்துவிடும். மனது, எப்படி க்ஷணத்திற்குள் பிறந்து உடனே நசித்து விடுகின்றதோ அதுபோல் பிரபஞ்சத்தி லுள்ள மானவ ஜனங்களெல்லோரும், மாயையால் கட்டுப் பட்டு க்ஷணத்திற்குள் அழிந்துபோகும் தேகம் அனேக கால மிருப்பதாய் எண்ணி, அனேக பாடுகள்பட்டு, நல்வழி யிலும் துன்மார்க்க விருத்தியிலும் திரவ்வியம் சம்பாதித்து, இப்போதுள்ள பெண்டு பிள்ளைகளுக்கு ஆஸ்தி சேகரித்துக் கொண்டே வரவர, அகஸ்மாத்தாய் இருந்தாற்போலிருந்து திடீரென ஏதோ ஓர் வியாதிவந்து, ஜீவன் இத்தேஹம்விட்டு மற்றொரு தேஹத்திற்போய்ப் பிரவேசித்து, மறு ஜநந மெடுத்து அங்கு சிலநாளிருந்து அச்ஜென்மத்தில் புதிதாய் வரும் பெண்டு பிள்ளைகளுக்கு மறுபடியும் தனம் சம்பா தித்துவைத்து, மறுபடியும் மரணமடைந்து வேறு சரீரம் போய்ப் புகுந்து, மறுபடியும் அங்குவரும் பெண்டுபிள்ளை களுக்கு ஆஸ்தி சேகரித்துவைத்து இவ்விதமாய் அப்போ தைக்கப்போது ஜன்மாந்திரங்கள்தோறும் புதிதாய் வந்து கொண்டிருக்கும் பெண்டு பிள்ளைகளின்மீது ஆசை அதிக மாய் வைத்துக்கொண்டு வருவதனுல், ஜன்மங்கள் அதி கரித்துக்கொண்டே வருகின்றன. ஈசுவரன் ஸ்திரீ புருஷர் களை, இப்படி ஆசை என்னும் மாயையினுல் மோஹிக்கச் செய்து, அவர்களைத்:தான் சூத்திரதாரியைப்போலிருந்து ஆட்டி அவர்களின் கூத்துகளை எல்லாம் பார்த்துக்கொண்டு வருகின்றுன். ஆதலால், இந்த ஈசுவரமாயைக் குட்படா மல் தப்பித்துக்கொள்ளும்பொருட்டே இந்நூல் எழுதப் பட்டது. ஸ்திரீ புருஷர்களுக்கு ஈசுவரனுல் மறைக்கப்பட் டிருக்கும் மாயையை நீக்க, இந்நூல் ஒன்றே போது மானதாயிருக்கின்றது. இந்நூல் வாசித்து இதில் சொல் லிய உபதேசத்தைச் சதாகாலமும் அப்பியசித்து வருவார்

களாயின் மேலாகிய ஞானமடைய பாத்திரர்களாவார்களாதலால், இதனடியில் சொல்லப்போகும் இரண்டு மந்திரங்களை பரீக்ஷித்துப் பாருங்கள். இதனால் உங்கள் மனம் வெளியில் ஓடாமல் நின்றால், இவ்வப்பியாசம் சதாகாலமும் செய்துவரவேண்டும்.

அய்யா! முன் சொல்லியதுபோல் ஒரு காரியார்த்தமாய் வெளியில் செல்லும்பொழுது அங்குமிங்கும் பாராமல் ரோட்டுவழியில் வண்டிகளின் பயமில்லாமலிருப்பதற்காக வலதுகை ஓரமாய்ச் சென்று தலை குனிந்து தன் பாதப் பெருவிரலிலிருந்து மூன்றடி தூரத்தில் திருஷ்டிவைத்துப் பார்த்துக்கொண்டே செல்லவேண்டும். அச்சமயம் சுவாசம் மூக்குத் துவாரங்கள் வழியாய் பிரவேசிக்கும்போது அந்த சுவாசத்துடன் கூடவே 'ஸோ' என்னும் மந்திரம் வாக்கினால் சொல்லாமல் மனதினால் நினைத்து சுவாசம் உள்ளுக்கிழுத்து மறுபடியும் சுவாசம் வெளிவரும்போது அதனுடன் கூடவே 'ஹம்' என்னும் மந்திரம் சேர்த்து வெளியில் விடவேண்டும். இவ்வாறு ஒவ்வொரு சுவாசம் உட்செல்லும்போதும் வெளிவரும்போதும் இவ்விரண்டு மந்திரங்களையும் சேர்த்து ஜபித்துக்கொண்டு வழி நடக்க வேண்டும். இவ்விதமாய் எப்பொழுதும் அதாவது, நடக்கும்போதும் மலஜல விசர்ஜனம் செய்யும்போதும் படுக்கும் போதும் சதாகாலமும் இதை அப்பியசித்துவந்தால் மனம் லயமாகும். இந்த சுவாசம் நிமிஷத்திற்கு 15-நடக்கின்றது. இப்படி நாள் ஒன்றிற்கு 24-மணி நேரத்திற்குள் இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசங்கள் நடந்து கொண்டிருக்கும். இப்படிப்பட்ட மஹா ஹம்ஸ சூத்திரமாகிய சுவாசத்தை, வீணே செலவழிக்காமல் மேற்சொல்லிய இரண்டு மந்திரங்களைச் சேர்த்து நடத்தவேண்டும். இப்படி நடத்துவதே ராஜயோகமென்று சொல்லப்படும்.

இந்த ராஜயோகம் குடும்பத்திலுள்ள எல்லா ஸ்திரீ புருஷர்களும் அப்பியசித்துவர இந்நூலில் உபதேசமாய் எழுதப்பட்டது. மற்ற உபதேசங்கள் யாவும் இதைவிடத் தாழ்ந்தனவென்று அறியக்கடவீர்களாக.

சரு || மந்மாயா மோஹித சேதஸோ மாமாத்மாநமாபூர்ணம்
பரம் விதக்தோதா பூரணுய ப்ரமந்தி காகா இவ ஸூரயோபி
[அலப்தவந்தஃ

முநிபுங்கவா ! என் மாயையினல் மூடப்பட்டிருக்கும் வித்வாம்சர்கள், அகண்ட ஸச்சிதானந்த சர்வ பரிபூரண பரப் பிரம்மமாகிய என்னைத் தன் ஆத்மசொரூபியாய் அறியாமல், சுவானுபவ ஞானமில்லாதவர்கள் நாங்களே ஞானமுடைய வித்துவாம்சர்களென்று தம்மைத்தாம் புகழ்ந்து, அவர்களின் வித்வத்தினுல் உலகத்தாரை பிரமிக்கும்படிச் செய்து ஒவ்வொரு ஊரிலும் காகம்போல் திரிந்து வரப்பட்டவர்கள் வியர்த்தமானவர்களே.

"யே ஹி வ்ருத்திம் விஹாயைநாம ப்ரஹ்மாக்யாம் பாவநீம்
[பராம்
வ்ருதைவ தேத ஜ்வந்தி பஸுபிஸ்ச ஸமா நராஃ"

"யேது வ்ருத்திம் விஜாநந்தி ஞாத்வா வைவர்த்தயந்தியே
தேவை ஸத்புருஷா தந்யா வந்த்யாஸ்தே புவநத்ரயே."

என்னும் தேஜோபிந்துபநிஷத் வாக்கியரீதியாய் யார் ஆத்மாநுசந்தானம் அறிந்து அப்பியசிக்காமல், விருதா காலம் கழித்து வருகின்றார்களோ அப்படிப்பட்டவர்கள், நான்கு பாதங்களையுடைய மிருகங்களுக்குச் சமானர்களாகின்றார்கள். யார் யார் ஆத்மநிஷ்டையை அறிந்து சதா அப்பியாசம்செய்து பிரம்மானந்த சொரூபிகளாக இருக்கின்றார்களோ அவர்களே, சத்புருஷர்களென்றும் கிருதார்த்தர்களென்றும் மூன்று லோகங்களிலும் நமஸ்

கரிக்கத்தக்க மஹாத்மாக்க ளென்றும் சொல்லப்படுவார்கள். அன்றியும்,

சரு || "யேஷாம் வ்ருத்திஃ ஸமா வ்ருத்தா பரிபக்வா ச ஸா புநஃ
தேவை ஸத்ப்ரஹ்மதாம் ப்ராப்தா நேதரே ஶப்தவாதிநஃ."

"குஶலா ப்ரஹ்மவார்தாயாம் வ்ருத்தி ஹீநாஃ ஸுராகிணஃ
தேப்ய ஜ்ஞாநதயா நூநம் புநராயாந்தி யாந்திச."

"அவித்யாயாமந்தரே வர்தமாநாஃ ஸ்வயம் தீராஃ
பண்டிதம் மந்யமாநாஃ தந்த்ரம்யமாணஃ
பரியந்தி மூடா அந்தேனைவ நீயமாநா யதாந்தாஃ."

என்னும் தேஜோபிந்தூபநிஷத், கடோபநிஷத் வாக்கியங்களின்ரீதியாய் எவன் ஆத்மாநுசந்தானம் ("ஸோஹம்" மந்திரஜபம்) செய்துகொண்டு வருகின்றானே அவனுக்கு, மனோ வியாபாரங்களெல்லாம் சூன்யமாய் தான் தானைப் பிரகாசித்துக்கொண்டிருப்பான். அப்படி இருக்கப்பட்டவனே ஸச்சிதாநந்த சொரூபமாகிய பரப் பிரம்மத்தை அடைந்து முக்தனாகின்றான். அப்படிக் கில்லாமல், யார் ஒருவன் நான் பிரம்மமென்று வாக்கினால் சொல்லிக் கொண்டிருப்பானோ அவன், சாஸ்திரங்களை வாசித்து அவைகளின் அந்தரார்த்தம் தெரியாமல் சுவாநுபவமில்லாத வெளி அர்த்தத்தை மாத்திரம் தெரிந்துகொண்டு, நான் பிரம்மஞானியென்று கர்வங்கொண் டிருக்கின்றானோ அப்படிப்பட்டவனை,ஆபாச வேதாந்தியென்றே சொல்லப் படும். இப்படிப்பட்ட வேதாந்திகளின் வாக்கியங்களை நம்பப்பட்டவர்கள் வியர்த்தர்களாகின்றார்கள். இப்படிப் பட்டவர்கள் ஓர் குருடன் மற்றொரு குருடனை மேடு பள்ளமுள்ள வழியாய் அழைத்துச் சென்று இருவரும் பள்ளத்தில் வீழ்ந்து துக்கப்படுவதுபோல் புருஷர்கள்,முன் சொல்லிய ஆபாச வேதாந்திகளின் வாக்கியங்களைக் கேட்டு ஜநநமரண சம்சாரமென்னும் சமுத்திரதில் மூழ்கி

மோக்ஷமென்னும் கரை காணுமல் துக்கித்துக்கொண்டிருப்பார்கள். ஆதலால்,

சுரு || "பாஷாண லோஹ மணி ம்ருண்மய விக்ரஹேஷு பூஜா புநர்ஜநந போககரீ முமுக்ஷோः தஸ்மாத் யதிः ஸ்வஹ்ருதர்சநமேவ குர்யாத், பாஹ்யார்சநம் ப்ரிஹரேதபுநர்புவாய."
[மைத்ரேய்யுபநிஷத்.]

கல் தங்கம் தாம்பரம் முதலாகிய லோகங்களினுலும், மரகதம் மாணிக்கம் முதலாகிய ரத்னங்களினுலும், கல், மண், மரம் முதலானவைகளினுலும் செய்திருக்கும் விக்கிரகங்களைப் பூஜிப்பதனுல் சகல போகங்களை அனுபவிக்க மறு ஜநநம் உண்டாகும். ஞான சந்யாசம் பெற்றவன் தன் இருதயத்திலிருக்கும் ஆத்மாராமனை மாத்திரம் பூஜை செய்துவரவேண்டும். பாஹ்யார்ச்சனை என்றுல், விக்கிரகங்களைப் பூஜித்தால் மறு ஜன்மங்களை உண்டாக்குவதற்குக் காரணமாயிருக்கின்றது. ஆதலால், விக்கிரஹ ஆராதனையை நிறுத்தி இதில் சொல்லியதுபோல் "ஸோஹம்" என்னும் ஆத்மாராமனை ஜபம் செய்துவரவேண்டும்.

மௌனம் எது? சமாதி எது?

சுரு || "ஸம்த்யக்த வாஸநாந் மௌநாத்ருதே
நாஸ்த்யுத்தமம் பதம்." [முக்திகோபநிஷத்.]

பிரம்ம ஞானிகளுக்கு, சர்வ வாசனைகளும் சூன்னியமாய் மௌனத்தைவிட சிரேஷ்டமானது யாதொன்றுமில்லை. மௌனமென்றுல் பிரபஞ்ச தர்ம சம்பந்தங்களை விட்டு சகல சங்கல்பங்களையும் ஒழித்து பிரம்மசொரூபனுயிருக்கப்பட்டவனுக்கு ஆனந்ததசை லபிக்கும். இந்த மௌனமே தியானமென்று சொல்லப்படும். மௌனமென்றுல், யாருடனும் பேசாமல் வாய் மூடிக்கொண்

டிருப்பதல்ல. மனதை வெளியில் ஓடவிடாமல் நிறுத்து வதே மௌனமாகும்.

சுரு||"பால்யேன் திஷ்டாஸேத் பால்யஞ்ச நிர்வித்ய பாண்டித்யேந திஷ்டாஸேத் பால்யஞ்ய பாண்டித்யஞ்ச நிர்வித்ய மௌநேந திஷ்டாஸேத் பால்யஞ்ச பாண்டித்யஞ்ச மௌநஞ்ச நிர்வித்ய அத ப்ராஹ்மணஃ." [ப்ருஹதாரண்யகோபநிஷத்.]

பாலியமென்றால் சிரவணம், பாண்டித்தியமென்றால் மநநம், மௌனமென்றால் நிதித்தியாசனம். இம்மூன்றை யும் விட்டு தன்னைத்தான் மறந்து பிரம்ம சொரூபியாயிருப் பதே மௌனம்.

சுரு||"கடாகாஶம் மஹாகாச இவாத்மாநம் பராத்மநி
விலாப்யாகண்டபாவேந தூஷ்ணீம் பவ ஸதா முநே."
"சிதாத்மநி ஸதாநந்தே தேஹாரூட மஹந்தியம்
நிவேஶ்ய லிங்கமுத் ஸ்ருஜ்ய கேவலோ பவ ஸர்வதா."[அத்]

கடாகாசம் மஹாகாசம் ஏகமாவதுபோல் ஆத்மாவே பரப் பிரம்மமென்றும், பரப் பிரம்மமே ஆத்மாவென்றும் ஐக்கிய பாவத்தை அடைந்து, ஆத்மசொரூபியாகிய நீயே பிரம்மமென்று நிச்சயித்து சகல எண்ணங்களையும் மறந்து சிலை (கல்) வடிவமாய்ச் சும்மாயிருப்பதே மௌனம்.

சுரு||"வாஸநாஸ்த்வம் பரித்யஜ்ய அந்தஶ் ஶாந்தஃ ஸமஸ்தேஹோ பவ சிந்மாத்ர வாஸநஃ, தாமப்யத பரித்யஜ்ய மநோபுத்தி ஸமந்விதாம் ஶேஷஸ்திர ஸமாதாநோ மயித்வம் பவமாருதே அஶப்தமஸ்பர்ஶமித்யாதி." [முக்திகோபநிஷத்.]

வாசநாத்திரயங்களும் மோக்ஷத்தின் இச்சையும்விட்டு விட்டு, ஜகத் சர்வம் அநித்தியமென்றும் பிரம்மமே சத்திய மென்றும், பிரம்மத்தைத் தியானிக்க வேண்டும். பிறகு அந்தத் தியானத்தையும் விட்டு மனோ புத்திகள் இரண்டை யும் சஞ்சலமில்லாமல் (அசையாமல்) ஸ்திரமாய் நிறுத்தி,

சுரு || "ஹ்ருதயம் நிர்மலம் க்ருத்வா சிந்தயித்வாப்ய நாமயம்
அஹமேவ பரம் ஸர்வமிதி பஶ்யேத்பரம் ஸுகம்." [பயிங்க.]

இருதயத்தி லிருக்கும் காமக் குரோதாதிகளாகிய அழுக்குகளை யெல்லாம் நீக்கி மனதை நிர்மலமாகச் செய்து கொண்டு, அந்த பரப் பிரம்மமே நானென்றும் நானே சர்வ மென்றும் மௌனமாய் சும்மா யிருப்பதே பரமசுகம்.

சுரு||"அஹமேவ பரம் ப்ரஹ்ம ப்ரஹ்மா ஹமிதி ஸம்ஸ்திதிः
ஸமாதிः ஸது விஞ்ஞேயः ஸர்வவ்ருத்தி விவர்ஜிதः."
[த்ரிஶிகி ப்ராஹ்மணோபநிஷத்.]

ஆத்ம சொரூபியாகிய நானே பிரம்மமென்று ஐக்கிய பாவத்தில் திருடமாய் நின்று, சகல மனோ விருத்திகளும் சூன்னியமாய் எந்த எண்ணங்களு மில்லாமல் சகல திருசியங்களும் (கண்களுக்குக் காணப்படும் சகல வஸ்துக்களும், சகல எண்ணங்களும்) மறந்து தானே தானாய் சாக்ஷிமாத்திரனா யிருப்பதே சமாதி.

சாஸ்திர விசாரணை ஜபதபங்கள் இவைகளினால் உண்டாகும் பலன்.

சுரு || அபேத தர்ஶநம் ஞானம், த்யானம் நிர்விஷயம் மனः
ஸ்நாநம் மநோமலத்யாகः, ஶௌசம் இந்த்ரிய நிக்ரஹः
[ஸ்கந்தோபநிஷத்.]

சுரு || "விஹாய ஶாஸ்த்ரஜாலாநி யத் ஸத்யம் ததுபாஸ்யதாம்.
அநந்தகர்ம ஶௌசஞ்ச ஜபோ யஜ்ஞஸ்ததைவச தீர்த்தயாத்
ராபிகமநம் யாவத் தத்த்வம் ந விந்யதி." [பைங்கலோப]

சகல சாஸ்திரங்களையும் வாசிக்கவேண்டு மென்னும் பிராந்தியை விட்டுவிட்டு ஆத்மாவே சத்தியமாகிய பரப் பிரம்மமென்று அறிந்து, ஆத்மானு சந்தானம் செய்து கொண்டிருக்கவேண்டும். ஸ்நானம் சத்தியாவந்தனம், ஜப

தபம் ஹோமம் நியமம் யாகம் தீர்த்தயாத்திரை முதலாகிய ஸத்கர்மங்களைச் செய்வதனுல் தத்வ ஞானம் உண்டாக மாட்டா; ஆத்மானுபவத்தை அடைய மாட்டான்.

சுரு || "அதீத்ய சதுரோ வேதாந் ஸர்வஶாஸ்த்ராண்யநேகஶ:
ப்ரஹ்மதத்த்வம் நஜாநாதி தர்வீ பாகரஸம் யதா." [முக்தி]

"சுட்டசட்டி சட்டுவங் கறிச்சுவை யறியுமோ."

மதுரமாகிய பதார்த்தங்களைச் சமைத்து அதில் அகப்பையைப் போட்டு வைத்தால், அவ்வகப்பையும் சட்டியும் பதார்த்த ருசியை அறியாததுபோல், சகல சாஸ்திரங்களையும் வாசித்துப் பண்டிதனென்று பெயரெடுத்த போதிலும், குருகடாக்ஷத்தினுல் வேதாந்த சாஸ்திரங்களைக் கேட்டு, சிரவண மநந நிதித்தியாசன முடையவனுய்த் தத்துவஞான ஸம்பன்னனு யிருந்தபோதிலும் ஆத்மாநுபவம் அடையா விட்டால், அப்படிப்பட்டவன் வியர்த்தனே;

சுரு||"ஸந்த்யஜ்ய ஹ்ருத்கு ஹேஶாநம் தேவமந்யம் ப்ரயாந்தி யே
தே ரத்ந மபிவாஞ்சந்தி த்யக்த ஹஸ்தஸ்த்த கௌஸ்துபா:"
[மஹோபநிஷத்.]

"நட்டகல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்."

என்றபடி இருதய கமலத்திலிருக்கும் ஆத்மதேவதையைத் தெரிந்து கொள்ளாமல், வேறேரிடத்தில் தெய்வ மிருக்கின்றதென்று எண்ணப்பட்டவர்கள், ஹஸ்தத்தில் (கையில்) இருக்கும் தேவலோகத்திலுள்ள தேவரத்நமாகிய கௌஸ்துப மணியை விட்டுவிட்டு, பூலோகத்திலுள்ள சாமான்னியமாகிய ரத்னத்தைத் தேடப்பட்டவனுக்குச் சமானமாகின்றூர்கள்.

சுரு || "பஹுஶாஸ்த்ரகதாகந்தா ரோமந்தேந வ்ருதைவ கிம்
அந்வேஷ்டவ்யம் ப்ரயத்நேந மாருதே ஜ்யோதிராந்தரம்."
[முக்திகோபநிஷத்.]

சுரு || ஆத்மாநம் ஆத்மநா ஸாக்ஷாத் ப்ரஹ்ம புத்த்வாஸு நிஶ்ஶ்சலம் தேஹஜாத்யாதி ஸம்பந்தாந் வர்ணு ஶ்ரமஸமந் விதாந் வேத ஶாஸ்த்ராணி சாந்யாநி பதபாம்ஸுமிவ த்யஜேத். குருபக்திம் ஸதா குர்யாத் ஶ்ரேயஸே பூயஸே நரஃ. குருரேவ ஹரிஸ்ஸாக்ஷாத் நாந்ய இத்யப்ரவீத் ஶ்ருதிஃ. [ப்ரஹ்மவித்யோபநிஷத்]

சகல சாஸ்திரங்களையும் வாசிப்பதனுல் பிரயோஜன மில்லை; அதனுல் முத்தி அடையமாட்டார்கள். இந்த தேகத்தில் வசித்துக்கொண் டிருக்கும் பரப் பிரம்மமாகிய ஆத்மாவை அந்தரங்க (உள்) திருஷ்டியினுல் தரிசித்தால் தான் முக்தி அடையலாம்.

சுரு || ” நைவமாத்மா ப்ரவசநஶதேநாபி லப்யதே, ந பஹுஶ்ருதேந. ந புத்திஜ்ஞாநாஶ்ரிதேந, ந மேத்யா ந வேதைர் ந யஜ்ஞைஃ ந தபோபிருக்ரைர் ந ஸாங்க்யைர் நயோகைர் ந ஶ்ரமைர் நாந்யை ராத்மாந முபலபந்தே. [ஸுபாலோபநிஷத்ஃ.]

இந்த ஆத்மாநுபவம், நிஸ்ஸாரமாகிய சிரவணங்களினுலும், புத்தி சாதுரியங்களினுலும், யாகம்செய்வதனுலும், தேவதா தியானங்களினுலும், தவம்செய்வதனுலும் சாங்கிய ஹடாதி யோகங்களினுலும், வர்ணுசிரம தர்மங்களைத் தப்பாமல் அநுஷ்டிப்பதனுலும் உண்டாக மாட்டா.

சுரு || “ அம்ருதேந த்ருப்தஸ்ய பயஸா கிம் ப்ரயோஜநம், ஏவம் ஸ்வாத்மாநம் ஜ்ஞாத்வா வேதைஃ ப்ரயோஜநம் கிம் பவதி.” [பைங்கலோபநிஷத்.]

அம்ருதபானம் செய்தவனுக்கு ஜலபானம் செய்வதனுல் பிரயோஜனம் இல்லாம லிருப்பதுபோல், வேதாந்த விசாரணையினுலும், குருவினுலும் ஆத்மாநுபவம் அறிந்தவனுக்கு வேதங்களினுல் பிரயோஜன மில்லை. இந்த வேதங்கள் எப்படி யிருக்கின்றன வென்றுல்,

சுரு || " அபிவர்ஷ ஸஹஸ்ராயுஃ ஶாஸ்த்ராந்தம் நாதிகஸ்சதி
விஜ்ஞேயோக்ஷர தந்மாத்ரோ ஜீவிதம் வாபி சஞ்சலம்
விஹாயஶாஸ்த்ர ஜாலாநி யத் ஸத்யம் ததுபாஸ்யதாம்."
[பயிங்கலோபநிஷத்.]

உலகத்தில், சமுத்திரம்போல் அனேக சாஸ்திரங்கள் அபாரமாயிருக்கின்றன. ஒவ்வொரு மனிதனும் ஆயிர வருஷங்கள் ஜீவித்திருந்து, சாஸ்திரங்களை வாசித்துக் கொண்டிருந்தபோதிலும் சாஸ்திரங்கள் சம்பூரண மாக மாட்டா. ஆதலால், சாஸ்திர விசாரணையை விட்டு, நமது ஜீவிதகாலம் மிகவும் சொற்பமாயும், தாமரை யிலையின் மீதுள்ள ஜலபிந்துவைப்போல் இருக்கின்றதென்று எண்ணி அதிதீவரப்பட்டு இந்நூலில் உபதேசித்திருக்கும் ரரஜயோ கத்தின் ரஹசியத்தைத் தெரிந்துகொண்டு சதாகாலமும் தியானத்திலேயே இருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல்,

சுரு || " நாநாஶாஸ்த்ர பரேலோகே நாநாதேவஞ்ச பூஜனம் ஆத்ம ஜ்ஞாநம் விநா பார்த்த ஸர்வகர்ம நிரர்த்தகம்." "ஆசாரக்ரியதே கோடிதாநஞ்ச கிரிகாஞ்சநம். ஆத்மதத்வம் விநா நாஸ்தி முக்திர் நாஸ்தி குருர் விநா. கோடியஜ்ஞும் க்ருதம் யேந கோடிகோஹய தாநகம், கஜதாநம் ஸஹஸ்ரஞ்ச முக்திஃ ஜ்ஞாநம் விநாநச."
[சர்ப்பகீதை.]

சகல சாஸ்திரங்களையும் வாசித்துப் பண்டிதனென்று பெயர்பெற்றபோதிலும், பிரம்மா விஷ்ணு மஹேசுவராதி சகலதேவதைகளைப் பூஜித்தபோதிலும் ஆத்மஞானமில்லா விடில் மேற்சொல்லியவைகளெல்லாம் நிஷ்பிரயோஜனமே. வருணுசிரம தருமங்களைத் தப்பாமல் அநுஷ்டித்தபோதி லும், மஹம்மேரு பருவத மவ்வளவு தங்கம் கோடிமுறைக ளில் தானம் கொடுத்தபோதிலும் ஆத்மஞானம் இல்லா விட்டால் நிஷ்ப்ரயோஜனமே. கோடியக்ஞுங்கள் செய்த போதிலும், கோக்கள் (பசுக்கள்) குதிரைகள் யானைகள்

கோடி கோடியாய்த் தானங்கொடுத்தபோதிலும் முக்தி உண்டாகமாட்டா. குருகடாக்ஷமில்லாமல் ஆத்மஞானம் உண்டாகமாட்டா; ஆத்மஞானமில்லாமல் முக்தி லபிக்காது. ஆதலால்,

உலகத்திலுள்ள மனிதர்க ளெல்லோரும் சாஸ்திரங்களையே பார்த்துக்கொண்டு கூட்டங்கூடி ஒருவரோடொருவர் விசாரணைச் செய்துகொண்டேவந்து இருந்தாற்போலிருந்து திடீரென ஏதோ ஓர் வியாதிவந்து இந்தச் சரீரத்தை விட்டுக் கிளம்பி அவனவன் கர்மத்திற்குத் தக்கபடி வேறு சரீரத்தில் போய்ப்புகுந்து அந்த ஜன்மத்திலும், முன் ஜன்மாந்திர வாசனையினால் இவனை சாஸ்திரங்களைப் பார்க்கும்படி இழுத்துக்கொண்டே செல்லும். ஆதலால், சாஸ்திர விசாரணையை விட்டு ஒழித்து யாருடனும் வாய் திறவாமலிருந்து இந்நூலில் உபதேசித்திருக்கும் விஷயங்களை நன்குய் அறிந்து, பிறகு இந்நூலையும் கைத்தீண்டாமல் சதா காலமும் தன் அநுபவத்திலேயே இருக்கவேண்டும். மனதை ஒடுக்கவேண்டுமென்று எல்லா சாஸ்திரங்களும், பெரியோர்களும் சொல்லியிருக்க, நீங்கள் அவ்வாறு செய்யாமல் சாஸ்திரங்களையே வாசித்து மனதை சமுத்திரம்போல் விரிவாய்ச் செய்துக்கொள்ளுகின்றீர்கள். அப்படிச்செய்துகொண்டுவருவதனால் விசேஷ ஜன்மங்களை எடுக்கக் காரணமேயொழிய மற்றபடிக்கு வேறொன்றில்லை. ஆதலால், இந்நூலை வாசித்தவர்கள் வேறு எந்த சாஸ்திரங்களையும் வாசித்து விருதா காலம் கழித்துச்சென்றுவிடாமல் மனதை ஒடுக்க சாதனம் செய்து வரவேண்டுமென்று அடியேனுடைய கறுத்து. ஆதலால்,

சுரு || "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய நிர்மமோ நிரஹங்காரோ பூத்வா ப்ரஹ்மேஷ்டம் ஶரணமுபகம்ய, தத்வமஸி, அஹம் ப்ரஹ்மாஸ்மி, ஸர்வம்கல்பிதம் ப்ரஹ்ம, நேஹ நாநாஸ்தி கிஞ்சநேத்

யாதி மஹாவாக்யார்த்தாநுபவ ஜ்ஞானாத் ப்ரஹ்மைவா ஹமஸ்மீதி நிஶ்சித்ய நிர்விகல்பஸமாதிநாஸ்வதந்த்ரோ யஶ்சரதி ஸ ஸந்யாஸீ ஸ முக்த꞉ ஸபூஜ்ய꞉ ஸ யோகீ ஸ பரமஹம்ஸ꞉ ஸோவதூதஸ் ஸ ப்ராஹ்மண꞉ இதி ச.'' [நிராலம்போபநிஷத்.]

அநித்தியமான ஸம்ஸாரதுக்க விஷயங்களாகிய புத்திர மித்திர களத்திர க்ஷேத்திராதி சகலத்திற்கும் 'நானே யஜமானன்' என்னும் அஹங்காரத்தையும், 'இது எனது' 'இது எனது' என்னும் மமகாரத்தையும், சகல மனேவியாபாரங்களையும் விட்டு பிரம்மத்தைத் தியானித்து, மஹாவாக்கியார்த்தங்களை அறிந்த பிறகு தத்துவ விவேகத்தினல் "பிரம்மமே நான்" "நானே பிரம்ம" மென்று நிச்சயித்து சகலமும் மறந்து, நிர்விகல்ப சமாதி நிஷ்டையென்னும் ஆத்மசாக்ஷாத்காரத்தை அடைந்தவனே சந்யாசி, அவனே முக்தன், அவனே பூஜ்யன், அவனே ராஜயோகி அவனே பரமஹம்ஸன், அவனே அவதூதன், அவனே பிராமணன்.

காஷாய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டிருப்பதனல் சந்யாசியும், கௌபீனமில்லாமல் திரிவதனல் அவதூதனும், நூலிழைகளையுடைய பூணூலைத் தரித்துக்கொண்டிருப்பதனல் பிராமணனும் ஆகமாட்டான் என்று அறியவேண்டும்.

பரமஹம்ஸன் எவன்?

சுரு || "யோயம் பரமஹம்ஸமார்கோ லோகே துர்லபதரோ ந து பாஹுல்யோ யத்யேகோ பவதி ஸ எவ நித்யகூடஸ்தஃ ஸ எவ வேதபுருஷ இதி விதுஷோ மந்யந்தே மஹாபுருஷோ யச்சித்தம் தத் ஸதா மய்யேவாவதிஷ்டதே தஸ்மாதஹம்ச தஸ்மிந்நேவாவஸ்தீயதே அஸௌ ஸ்வபுத்ர மித்ரகளத்ர பந்த்வாதீந்ஸிகாம் யஞ்ஞோபவீதம் யாகம் ஸத்ரம் ஸ்வாத்யாயம் ச ஸர்வகர்மாணி ஸந்யஸ்யாயம் ப்ரஹ்மாண்டம் ச ஹித்வா கௌபீநம் தண்ட மாச்சாதநம்ச ஸ்வஶரீரோப போகார்த்தாய லோகஸ்யைவோபகாரார்த்தாய ச பரிக்ரஹேத் தச்ச ந முக்யோ ஸ்தி கோ அயம் முக்ய இதி ச யதயம் முக்யஃ."

[பரம ஹம்ஸோபநிஷத்.]

பிரபஞ்சத்திலுள்ள ஜீவகோடிகளெல்லாம் விடும் சுவாச நிசுவாசங்களுக்கு (மூச்சுக்கு) "ஹம்ஸ" என்று சொல்லப்படும். இந்த 'ஹம்ஸ' த்தை (மூச்சை)த் தன் சுவாதீனம் செய்துகொண்டு நடத்தப்பட்டவனே பரமஹம்ஸன். (ராஜாங்கத்தில் பெயர் பெற்றவனுக்கு பஹதூர் பட்டம் சக்ரவர்த்தியினால் எப்படி கொடுக்கப்படுகின்றதோ அதுபோல்) ஹம்ஸத்தை (மூச்சை)த் தன் சுவாதீனம் செய்துகொண்டவனுக்கு பரமஹம்ஸ என்னும் பட்டம் அவனது குருவினால் கொடுக்கப்படும்.

உலகத்தில் இந்த பரமஹம்ஸர்கள் இருப்பது, மிகவும் துர்லபம். அநேக ஜன்மங்களாய் நிஷ்காம்ய புண்ணிய கர்மங்களை அநுஷ்டித்துவந்து அந்த புண்ணிய கர்மங்களின் பரிபக்குவத்தினால் இந்த ஜன்மத்தில் லபிக்குமேயொழிய சாதாரணமாய் லபிக்கத்தக்கதல்ல. பிரம்மசாரிகள் கிருகஸ்தர்கள் இருப்பதுபோல் இந்த பரமஹம்ஸர்கள் எங்கும் இருக்க மாட்டார்கள். பவித்ரமாகிய புண்ணிய தீர்த்த ஸ்தலங்கள் எங்கெங்குண்டோ அங்கங்கு

தேடித்தேடித் திரிந்து அலேந்து பார்த்தபோதிலும் ஒரு பரமஹம்ஸன் அகப்படுவது மிகவும் கஷ்டம்; அந்த பரம ஹம்ஸனே நித்தியபவித்திரன். அவனுக்கு லௌகிக சின்னங்கள், சிகா (குடுமை) யஞ்ஞோபவீதம் (பூணூல்)கள் இல்லாவிட்டாலும் அவன் நித்திய பூஜ்யனே. நித்திய பூஜ்யன் என்னும் சப்தத்திற்கு ஸ்ரீ சங்கராசாரியர் சொல்லுகின்றார்.

சரு || "நித்யம் ஸர்வதா காலத்ரயேபி அஶேஷவிஶேஷ ஶூன்யதேந பூதம் பவித்ரம், ஶிகா யஜ்ஞோபவீத வேதாத்யயநாதி த்யாகஶூந்திகாரணம் ஸத்யஜ்ஞாநமநந்த மாநந்தாத்ம ஸ்வரூபம் யத்ப்ரஹம தஸ்மிந்நித மஹமஸ்மீதி ஐக்யேநாவதிஷ்டதி இதி நித்யபூதஸ்தஃ யதஸ்ததஃ ஶிகாயஜ்ஞோபவீத வேதாத்யயநாதி பரித்யாக்யபி ந ஶூத்ராதி ஸமாநத்வேந ஶங்கநீயஃ கிம் து ஸ ஏவ நித்யபூதஸ்தோ ந ஹயந்யோ வேதாத்யயநாதிமாநபி."

காலத்திரயங்களில் சிகை (குடுமி) யஞ்ஞோபவீதம் (பூணூல்), வேதாத்தியநாதிகள் (வேதபாராயணர்கள்) இல்லாவிட்டாலும் மனோசுத்திக்குக் காரணமாகிய சத்திய (சத்தியமானதும்)ஞான (ஞானசொரூபமானதும்) அநந்த (ஆதி மத்திய அந்தியமில்லாததும்) ஆநந்தாத்ம சொரூபமானதுமாகிய எந்த பரப் பிரம்மமுண்டோ அந்த "பரப் பிரம்மமே நான்" என்று ஐக்கியமாய் இருப்பவனே நித்ய பூஜ்யனென்று சொல்லப்படுவான். அப்படிப் பட்டவனுக்கு சிகை யஞ்ஞோபவீதம் இல்லாவிட்டாலும் அவனே பிராமணனுவான். இப்படிப்பட்ட பிரம்மைக்கியாநுஸந்தானமில்லாமல் கேவல சிகா யஞ்ஞோபவீத வேதாத்தியநங்கள் உடையவனுயிருந்தாலும் அவன் பிராமணனுக மாட்டான். அதாவது, சிகா யஞ்ஞோபவீத வேதபாடாப்பியாசங்களினுல் புண்ணிய முண்டாகுமென்னும் விஷயங்களை சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதை எப்படி நம்புகின்

ளூமோ அதுபோல், வைராக்கிய முடையவன் சிகா யஞ்ஞோப வீதங்களைத் தியாகம் செய்யவேண்டுமென்று (நீக்கிவிட வேண்டுமென்று) சாஸ்திரங்களில் சொல்லி யிருப்பதனுல் அதை பரமஹம்ஸன் அனுஷ்டித்து வருகின்ருன். அதனுல் அவனுக்குத் தோஷமில்லை. இந்த விஷயத்தில் யாதொரு சந்தேகமும் இல்லை. பிரம்மாத் மைக்கியத்தை அடைந்தவனுக்கு சிகா யஞ்ஞோப வீதங்கள் இல்லா விட்டாலும் அவன் பவித்திரனே யாவான். அவனே வேத புருஷன். காலாத்ம புருஷனும் (காலனும் ஆத்மாவும்) அவனே. அதாவது, என்னைவிட வேருனவனன்று என்று இரண்யகர்ப்பன் நாரத மஹரிஷிக்குச் சொல்லினர். ஆதலால், சூரனுயிருக்கப்பட்டவன் ரணக்களத்தில் ஆயுதங்களினுல் விசேஷகாயம் பட்டபோதிலும் அவைகளை யெல்லாம் லக்ஷியம் செய்யாமல் ரணக்களத்தில் தீரனுய் நின்று எப்படி யுத்தம் செய்கின்ருனே அதுபோல், பிராணுயாமம் செய்யப்பட்ட பரமஹம்ஸனுக்கு தன் தேகத்தில் எவ்வளவு நோய் உண்டான போதிலும், அவைகளை யெல்லாம் லக்ஷியம் செய்யாமல் தன் அப்பியாசத்தைத் தவருவமல் பிரதி தினமும் செய்துவருவான். இப்படி அப்யசித்து வருவதனுல், அவனது இந்திரியங்களின் வேகமெல்லாம் அடங்கி விடும். அப்போது பரமஹம்ஸன் எப்படி யிருப்பானென்ருல், நன்ருய்ப் பழகிய குதிரைகளை ரதத்தில்கட்டி நிருத்தி வைத்தபோதிலும் சாரதியினுடைய தூண்டுகோல் இல்லாமல் எப்படிச் செல்லாம லிருக்கின்றனவோ, அதுபோல் பரமஹம்ஸனுடைய இந்திரியங்கள் எங்கும் ஒடாமல் நிச்சலனமாய் நின்றிருக்கும். இப்படி இந்திரியங்களை ஜயித்தவன் தத்துவார்த்த லக்ஷியபூதனுய் ஆத்மாவைவிட நான் வேறு பதார்த்த மல்ல வென்று பேதபுத்தி யில்லாம லிருப்பான்.

பரமாத்மா சரீரத்தில் குடியிருந்து கிளம்பிவிடுதல்.

ஓ சகோதரிகளே ! ஓ சகோதரர்களே !!

எங்கும் நிறைந்திருக்கும் பரமாத்மா சரீரத்தில் குடியிருக்கின்றதா என்னவென்று யோசிக்கவேண்டாம். பரமாத்மா சரீர இருதயகமலத்தில் நிவசிப்பதாய், நாராயணோப நிஷத்திலும், ஸுபாலோப நிஷத்திலும், யோகசிகோப நிஷத்திலும் சொல்லப்பட் டிருக்கின்றது. உபநிஷத்தில் சொல்லி யிருப்பதை பரீக்ஷிப்பதற்காக இருதய கமலத்தை அறுத்துப் பார்த்தோம். அப்போது மேற்படி உபநிஷத்துகளில் சொல்லிய விஷயங்கள் யாவும் அந்தக் கமலத்தில் சரியாய் அமைந்திருந்தன. ஆனால், பரீக்ஷிக்கும்போது கமலத்தின் மத்தியிலிருந்த ஜலம் மாத்திரம் உபநிஷத்தில் சொல்லியதுபோல் காணப்பட வில்லை. ஏனென்றால், ஆத்மா ஜலத்துடன் சம்பந்தப் பட்டிருப்பவனாதலால் பிராண பிரயாண காலத்தில் (பிராணன் போகும் பொழுது) மேற்படி கமலத்தி லிருக்கும் ஜலம் வற்றிவிடும். அப்போது ஜலமத்தியில் நிவசித்துக்கொண்டிருந்த ஜீவன் கிளம்பி விடுகின்றது. அதனால் களேபரத்தின் (பிணத்தின்) இருதய கமலத்தி லிருக்கும் ஜலத்தைக் காணமுடியாது. அந்த ஜலம் தவிர மற்றவைகளை எல்லாம் உபநிஷத்தில் சொல்லியிருப்பதுபோல் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாய் அந்தக் கமலத்திற் காணலாம். ஆதலால், பரமாத்மா இருதய கமலத்தில் நிவசிப்பதாய் உபநிஷத்துகளின் ஆதாரங்களைக்கொண்டு இதனடியில் தெரிவிக்கின்றோம் கேளுங்கள்:—

'பத்மகோஶ ப்ரதீகாஶம் ஹ்ருதயம் சாப்யதோமுகம்
அதோநிஷ்ட்யா விதஸ்த்யாந்தே நாப்யாமுபரி திஷ்டதி
ஜ்வாலமாலாகுலம் பாதி விஶ்வஸ்யாயதநம் மஹத்
ஸந்ததம் ஶிலாபிஸ்து லம்பத்யா கோஶஸந்நிபம்
தஸ்யாந்தே ஸுஷிரம் ஸூக்ஷ்மம் தஸ்மிந்ஸர்வம் ப்ரதிஷ்டி
தஸ்ய மத்யே மஹாநக்நிர் விஶ்வார்சிர் விஶ்வதோமுகஃ [தம்
ஸோக்ரபுக் விபஜந் திஷ்டந்நாஹார மஜரஃகவிஃ
திர்யகூர்த்வமதஃ ஶாயீ ரஶ்மயஸ்தஸ்ய ஸம்ததாஃ
ஸந்தாபயதி ஸ்வம் தேஹமாபாத தலமஸ்தகஃ
தஸ்ய மத்யே வஹ்நி ஶிகா அணீயோர்த்வா வ்யவஸ்த்திதஃ
நீலதோயத மத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா
நீவாரஶூகவத்தந்வீ பீதா பாஸ்வத்யணூபமா
தஸ்யா ஶிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்த்திதஃ
ஸ ப்ரஹ்மா ஸ ஶிவஃ ஸ ஹரிஃ ஸேந்த்ரஃ ஸோக்ஷரஃ பரமஃ
ஸ்வராட்.'' [நாராயணோபநிஷத்.]

"ஹ்ருதயஸ்ய மத்யே லோஹிதம் மாம்ஸபிண்டம் யஸ்மிந் தத்தஹரம்புண்டரீகம் குமுதமிவாநேகதா விகஸிதம் தஸ்யமத்யே ஸமுத்ரம், ஸமுத்ரஸ்ய மத்யே கோஶதஸ்மிந் நாட்யஶ்சதஸ்ரோ பவந்தி ரமாரமேஸ்ச்சா அபுநர்பவேதி. தத்ர ரமா புண்யேந புண்யம் லோகம் நயதி. அரமாபாபேந பாபமிஸ்ச்யா யத் ஸ்மரதி ததபிஸம்பத்யதே அபுனர்பவயா கோஶம் பிநத்தி.'' [நாராயணோபநிஷத்.]

"அங்குஷ்டமாத்ரஃ புருஷோங்குஷ்டம் ச ஸமாஶ்ரிதஃ ஈஶஸ்ஃ ஸர்வஸ்ய ஜகதஃ ப்ரபுஃ ப்ரீணாதி விஶ்வபுக்.''[ஸுபாலோபநிஷத்.]

"அஸ்மின் ப்ரஹ்மபுரே வேஶ்ம தஹரம் யதிதம் முநே
புண்டரீகம் து தந்மத்யே ஆகாஶோ தஹரோஸ்தி தத்
ஸ ஶிவஸ் ஸச்சிதாநந்தஸோந்வேஷ்டவ்யோ முமுக்ஷுபிஃ
அயம் ஹ்ருதிஸ்த்தித ஸாக்ஷீ ஸர்வேஷா மவிஶேஷதஃ
தேநாரம் ஹ்ருதயம் ப்ரோக்தஃ ஶிவ ஸம்ஸாரமோசக
இத்யுபநிஷத்.''

பத்மகோசப் ப்ரதீகாசம் - தாமரைக் கமலத்திற்குச் சமானமான, யத் - எந்த, ஹ்ருதயம் சாமி - ஹ்ருதயம்,

அதோமுகம் - தலைகீழாய், நிஸ்ட்யா - நெஞ்சுக்கு, விதஸ்த்யாந்த-ஜாணளவு, அதஃ - கீழ், நாப்யாம்-நாபிக்கு, விதஸ்த்யாந்த - ஜாணளவு, உபரி - மேல், திஷ்டதி - இருக்கின்றதோ, தத் - அந்த, ஹ்ருதயம் - ஹ்ருதயம், விஸ்வஸ்யப்ரபஞ்ச சொரூபனான பரமாத்மாவிற்கு, மஹத் - சிரேஷ்டமான, ஆயதநம் - ஸ்தானமாய், விஜாநீயாத் - தெரிந்துகொள்ளவேண்டும். தத்-அந்த இருதயம், கோஸஸந்நிபம்-கமலத்திற்குச் சமானமாய், ஸிராபிஸ்து - நரம்புகளுடன் கூடி, லம்பதே - தொங்குகின்றது. தஸ்ய - அதனுடைய, அந்தே-மத்தியில், ஸூக்ஷ்மம்-ஸூக்ஷ்மமாகிய, ஸுஷிரம்-ரந்திரம், அஸ்தி - உண்டு. தஸ்மிந் - அதில், ஸர்வம் - ஸர்வஸ்வரூபனாகிய பரப்ரஹ்மம், ப்ரதிஷ்டிதம் - இருக்கின்றான், (தியானிக்கப்பட்டவர்களை அனுக்கிரகிப்பதற்காக இருதய கமலத்தில் இருக்கின்றான்.) தஸ்ய - அந்த இருதயத்தின், மத்யே - மத்தியில், விஸ்வதோமுகஃ - எங்கும் வியாபித்திருப்பதாயும், விஸ்வார்சிஃ - எங்கும் ஜ்வாலையுடையதாயும், மஹாந் - பெரிதாயும், அக்நிஃ - ஜடராக்நி, வர்த்தே - இருக்கின்றது. ஸஃ - அந்த அக்நி, அஜரஃ - ஜாக்கிரதையுடையதாயும், கவிஃ - ஸப்தமுடையதாயும், திஷ்டந் - இருந்து, ஆஹாரம் - ஆஹாரத்தை (பக்ஷிக்கப்பட்ட, குடிக்கப்பட்ட ஆஹாரங்களை) விபஜந்-பங்கிடுவதற்காக, அக்ரபுக்-புசித்து, (முதல் சாப்பிடும் பதார்த்தங்களைத் தான் சொந்தமாய் புசித்து) ஆபாததலமஸ்தகம் - பாதம் முதல் உச்சி வரையில், ஸ்வயம் - ஸ்வயமாய், தேகம் - தேகத்தை, ஸந்தாபயதி-தபிக்கச் செய்கின்றது. (உஷ்ணத்தை உண்டாக்கச் செய்கின்றது.) தஸ்ய - அந்த இருதயத்தின், மத்யே - மத்தியில், வஹ்நிஸிகா - அக்நிஜ்வாலை, அணீயோர்த்வா - மேல்கிளம்பி, வ்யவஸ்த்திதஃ - இருக்கின்றது. நீலதோயத மத்யஸ்தா; நீல - கறுத்த, தோயத - மேகங்களின், மத்

யஸ்தா-மத்தியிலிருக்கும், வித்யுல்லேகேவ-மின்னற் கொடி போல், பாஸ்வரா - ப்ரகாசித்துக்கொண்டு, நீவார ஸூகவத் - நெல்லினுடைய நுனியிலிருக்கும் சிறிய முள்ளைப் போல், தந்வீ - ஸூக்ஷ்மமானதும், பீதா - பச்சை நிறமுடைய காந்தியுடையதும், அணூபமா - இதற்கு உபமானம் கொடுப்பதற்கு வேறொருவஸ்து இல்லாததாய், பாஸ்வதி - பிரகாசிக்கின்றது. தஸ்யா: - அப்படிப்பட்ட, ஶிகாயா: - சிகையின், மத்யே - மத்தியில், பரமாத்மா - பரமாத்மா, வ்யவஸ்தித: - இருக்கின்றான். ஸ: - அவனே, ப்ரஹ்மா - ப்ரம்மா, ஸ: - அவனே, ஶிவ: - ஶிவன், ஸ: - அவனே, இந்த்ர: - இந்திரன், ஸ: - அவனே, அக்ஷர:-நாசமில்லாமல், பரம: - சிரேஷ்டனாய், ஸ்வராட் - ஸ்வயமாய் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் பரமாத்மாவா யிருக்கின்றான். (கருமத்திற்கு பந்தப்பட்டிராத பரமாத்மா என்பதேயாம்.)

அதாவது, மாமிசத்துடன் சேர்ந்து நரம்புகளுடன் கூடி சிவந்த நிறமுடைய தாமரைக்கமலம் ஒன்று இருதயத்தில் தலைகீழாய்த் தொங்கிக்கொண்டிருக்கும். அந்தக் கமலம் ☞ எதிரிலிருக்கும் படம் நெம்பர் 1-ணில் காட்டப்பட்டிருக்கின்றது. அது தொண்டைக்கு ஜாணளவுகீழும், நாபிக்கு ஜாணளவு மேலுமாய் இருக்கின்றது. அந்தக் கமலத்தின் மத்தியில் முக்கியமான ரந்திர மொன்றுண்டு. அந்த ரந்திரமத்தியில் அங்குலப்பிரமாணம் ஆகாசம் உண்டு. அந்த ஆகாசம் மலர்ந்த வெண்மையான தாமரை மலரைப்போலிருக்கின்றது. அது, எதிரிலிருக்கும் நெம்பர் 2 - படத்தில் ☞ அம்பினால் காட்டப்பட்டிருக்கின்றது. அந்த ஆகாச மத்தியில் சமுத்திரம்போல் ஜலம் நிறைந் திருக்கும். அந்த ஜலமத்தியில் பரமாத்மா நெல்லின் நுனியிலுள்ள சிறிய முள்ளைப்போலவும், கறுத்த

SEAT OF THE PARAMATMAN IN THE LOTUS OF THE HEART

ஹ்ருதயகமலத்தில் பாமாத்மா நிவஸிப்பது

హృదయకమలమునందు పరమాత్మనివసించుట



SOLDEN & CO., MADRAS, S.E.

மேகங்களின் மத்தியில் தோன்றும் மின்னலைப் போலவும்

"கார்வண்ணம் திருமேனி கண்ணும்வாயும்
கைத்தலமு மடியிணையும் கமலவண்ணம்
பார்வண்ணமடமங்கை பத்தர் பித்தர்
பனிமலர்மேல் பாவைக்குப் பாவம்செய்தேன்
ஏர்வண்ண வென்பேதை யென்சொல்கேளாள்
எம்பெருமான் திருவரங்க மெங்கேயென்னும்
நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேனென்னும்
இதுவன்றோ நிறைவழித்தார் நிற்குமாறே."

என்னும் நாலாயிரப்பிரபந்த வாக்கியரீதியாய், மிகவும் சூட்சுமமானதாயும், அதற்குச் சமானமானது வேறொன்றும் இல்லாததாயும் பச்சை நிறமுள்ள காந்தியுடையதாயும் இருக்கின்றது. இதற்கு தொண்டரடிப் பொடியாழ்வார் பிரமாணம்

"பச்சைமாமலை போல்மேனி
பவளவாய்க் கமலச்செங்கண்."

அந்த பரமாத்மா ஜடராக்கினிக்கு உஷ்ணத்தை யுண்டாக்கி ஜீவராசிகள் புசிக்கும் ஆஹாரங்களைப் பஸ்மம் செய்வித்து பாதப்பெருவிரல் முதல் உச்சிவரையில் உஷ்ணத்தை யுண்டாக்குகின்றான். இப்படிப்பட்ட பரமாத்மா இருதய கமலத்திலிருக்கும் ஜலத்துடன் சேர்ந்து இருப்பதனால் அவனுக்கு நாராயணன் என்று பெயர் வந்தது. நார - ஜலம், அயன-ஸ்தானம் அதாவது, ஜலத்திற்கு ஸ்தானமாயிருக்கப்பட்டவனாதலால் அவனுக்கு நாராயணன் (க்ஷீராப்தி வாஸன்) என்று பெயர் வந்தது. அன்றியும் ஆலிலையின் மேல் பள்ளிகொண்டான் என்றும் சொல்லுவார்கள். ஏனென்றால், இருதயகமலம் இருபிளப்பாய்ப் பிளந்த போது அது ஆலிலை வடிவமாயிருக்கும். அதை, நெம்பர்

2. படத்தில் அம்பினால் காட்டப்பட்டிருக்கின்றது. இதற்கு, பெரியாழ்வார் திருமொழிப்பிரமாணம்.

"ஆலத் திலையா னரைவினணைமேலான்
நீலக்கடலுள் நெடுங்காலங் கண்வளர்ந்தான்."

அந்த ஆலிலையின்மீதிருக்கும் ஜலத்தின்மீது அனேக கோடானகோடி ஜன்மங்களாய் ஜீவாத்மா மிதந்துகொண்டு வருவதனால் அவனுக்கு ஆலிலையின்மேல் பள்ளிகொண்டான் என்று பெயர் வந்தது. அன்றியும் ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் - 15, சுலோகம் 14-ல், ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லுகின்றார்.

அஹம் வைஶ்வாநரோ பூத்வா ப்ராணிநாம் தேஹமாஶ்ரிதஃ
ப்ராணாபாநஸமாயுக்தஃ பசாம் யந்நஞ்சதுர்விதம்.

நான் பிராணிகளுடைய தேகத்தை ஆசிரயித்து, அக்கினி சொரூபமாயிருந்துகொண்டு அந்த அக்கினியைத் தூண்டும் பிராண அபானவாயுக்களுடன் கூடிக்கொண்டு சாப்பிடும் பக்ஷ்யம் போஜ்யம் லேஹ்யம் சோஷ்யம் முதலாகிய நான்குவித ஆஹாரங்களையும் ஜீரணம் செய்விக்கின்றேன். அத்யாயம் 15, சுலோகம் 15.

ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநம் ச, வேதைஶ்ச ஸர்வைரஹ மேவ வேத்யோ வேதாந்தக்ருத்வேதவி தேவ சாஹம்.

பிரம்மாதி தேவதைகள்முதல் சகலபிராணிகளினுடைய இருதயகமலத்தில் நான் ஆத்மாவாயிருக்கின்றேன். என்னாற்றானே நினைவும் அறிவும் மறதியும் உண்டாகின்றன. ஸகல வேதங்களினாலும் அறிவதற்குரியவன் நானே. வேதங்களை அறிந்தவனும், வேதாந்த சம்பிரதாயத்தை விளக்கிய குருவும் நானே. என்னை, ஸ்திரீ புருஷர்களின் ஆசாபாசங்களும் காமக்குரோதாதிகளும் மூடிக்கொண்

டிருப்பதனல், நான் அவர்களுக்குக் காணப்படுவதில்லை. இவைகளை எல்லாம் ஒழித்தவர்களுக்கு நான் மிகவும் சுலபமாய்க் காணப்படுவேன். என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால்,

சுலோ || ஹ்ருதாகாஶே சிதாபாநு ஸதாபாஸதி பாஸதே
நசோதேதி நாஸ்த்தமேதி கதாஸந்த்யா முபாஸ்மஹே.

என்னும் சுலோகரீதியாய் இருதயகமல ஆகாசத்தில் சிதாபாசன் (சித் என்னும் சூர்யன்) (பரமாத்மா) பிரகாசித்துக்கொண்டு, பகலிரவுகள் இல்லாமல் எப்பொழுதும் ஒரே ஒளியா இருப்பவனை, தரிசித்த யோகி சந்தியாவந்தனம் செய்யவேண்டிய அவஸ்யமில்லை. பரமாத்ம சொரூபத்தை அறிந்துகொள்ளாதவர்களே சந்த்யாவந்தனம் காலம் தவறுமல் செய்துவரவேண்டும்.

இப்பரமாத்மாயிருக்கும் இருதயகமலத்தில் பஞ்சபூதங்களும் அடங்கியிருக்கின்றன. அஃது யாதெனில், பிருதிவி - பூமி (மண்ணீரல்), அப்பு - ஜலம் (ஈரல்), தேயு - அக்கினி (பிச்சி), (கசப்பு), வாயு - காற்று (நுரைஈரல்), ஆகாயம் - வெளி (இருதய கமலம்), இவ்வைந்தும் சேர்ந்ததே பஞ்சபூதங்கள். இப்பஞ்ச பூதங்களே ஜீவராசிகளுக்கு மிகவும் முக்கியமானவைகள். இவ்வைந்தும் இருதய கமலத்தில் பரமாத்மா நிவசிப்பது என்னும் படத்தில் காட்டப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து உஷ்ணமுண்டாய் ஜீவராசிகள் புசிக்கும் ஆஹாரங்களை ஜீர்ணிக்கச் செய்கின்றது. இப்பஞ்ச பூதங்களிலிருந்து, குளிர்க்காலங்களில் மூக்கு வாய் சிறுநீர் மலம் வழியாய்ப் புகையுண்டாகும். இப்படிப்பட்ட பஞ்ச பூதங்களின் மத்தியில் பரமாத்மா எப்படி நிவசித்துக் கொண்டிருக்கின்ருரென்ருல்:—

" மகிழ்ச்சியுடன் மார்க்கண்டா வாராய்கண்ணே
வரலாறு நீயெனமாயறிவாய் சொல்லாய்

சுகட்சியுடன் கருதிப்பார் யுகங்கள்தோறும்
சூட்சுமிந்த மாலோன்றன் வயிற்றிற்சேர்வேன்."

"புஷ்பமத்யே யதா கந்தஃ பயோமத்யே யதா க்ருதம்
திலமத்யே யதா தைலம் பாஷாணேஷ்விவ காஞ்சனம்
ஹ்ருதிஸ்தானே ஸ்திதம் பத்மம் தஸ்ய வக்த்ரமதோமுகம்
ஊர்த்வ நாளமதோ பிந்து தஸ்ய மத்யே ஸ்த்திதம் ப்ராஹ்ம"

புஷ்பத்தில் வாசனை போலவும், பாலில் நெய்போலவும், எள்ளில் எண்ணெய்போலவும், கல்மத்தியில் தங்கம்போலவும் இருதய ஸ்தானத்தில் தாமரைக் கமலம் போன்ற, சிகப்பு வெண்மையுடைய மாமிசத்தினல் உண்டாயிருக்கும் கமலமத்தியில் ஜலமுண்டு. அந்த ஜலமத்தியில் பரமாத்மா நிவசித்துக் கொண்டிருக்கின்றார்.

அகட்சியுடன் ஆலிலைமே லிருப்பாரையா
அப்போது இவரிடத்தி லெல்லாஞாயம்
இகழ்சியுட னிவற்குப்பின் னெவரோகாணேன்
இவ்வார்த்தை நானறிவே னவரைக்கேளீர்."

ஆதலால், ஆலிலையின்மீது பள்ளிகொண்டிருக்கும் பரமாத்மாவே நாராயணன். இந்த நாராயணனே சிவன், இவனே பிரமன், இவனே இந்திரன், இவனே சித்திரகுப்தன்; இந்த சித்திரகுப்தன் ரகசியம் அறியாத சில புருஷர்கள், சித்திராபுத்திரன் என்று வழக்கச்சொல்லாய்ச் சொல்லுகின்றார்கள், ஜீவகோடிகள் செய்யும் புண்ணியபாபங்களையெல்லாம் வேரோர் சித்திராபுத்திரன் இருந்து பார்த்துக் கொண்டு கணக்கு எழுதுவதல்ல, அவனவன் செய்து வரும் புண்ணிய பாபங்க ளெல்லாவற்றையும் இருதயகமலத்திற் சாக்ஷி சொரூபமாயிருக்கும் ஆத்மா பார்த்துக் கொண்டு வருகின்றது. புண்ணிய பாபங்களைப் பார்த்துக் கொண்டு வருவதுமே யல்லாமல் ஜீவகோடிகள் பிரதிதினம் சிலவு செய்துகொண்டுவரும் உசுவாச நிசுவாசங்களை

(மூச்சுகளை) யெல்லாம், அந்தந்த ஜீவஜந்துக்களில் சாக்ஷி சொரூபமாயிருக்கும் ஆத்மா கணக்குப் பார்த்துக்கொண்டு வரும். ஏனென்றால். ஜீவஜந்துக்களின் ஆயுட்பாகம் சுவாசமேயொழிய சூர்ய சந்திரர்கள் நடக்கும்படியான நாட்களல்ல. ஒவ்வொரு மனிதனுக்கும் இத்தனை கோடி சுவாசங்களென்று, பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசமென்னும் பஞ்ச பூதங்களினால் உண்டாகிய தூல சரீரத்திலுள்ள நாபிக் கமலத்தில் சேர்த்திருப்பதனால் ஜீவராசிகள் விடும் சுவாசங்களை எல்லாம் ஆத்மா, கணக்குப் பார்த்துக்கொண்டு, நாற்பத்தைந்து லக்ஷத்து முப்பத்தாறுயிரம் சுவாசங்கள் இருக்கும்போதே இவனுக்கு வேறு சரீரம் ஆத்மா சிருஷ்டி செய்து வருகின்றது. அதாவது, நாள் ஒன்றிற்கு நடக்கும் சுவாசஸங்கள், இருபத்தோராயிரத்து அறுநூறு. மாதம் ஏழுக்கு நாட்கள் 210 ஆதலால், இருபத்தோராயிரத்து அறுநூறும், இறநூற்றிப் பத்தும் பெருக்கினால் 21, 600 × 210 = 45, 36, 000 நாற்பத்தைந்து லக்ஷத்து முப்பத்தாறுயிரம் சுவாசங்கள் ஆகின்றது. பிரதி ஜீவனுக்கும் இவ்வளவு சுவாசம் இருக்கும்போதே அந்தந்த ஜீவர்களுக்கு வேறு சரீரம் ஆத்மா சிருஷ்டிசெய்து விடுகின்றது.

இதற்கோர் திருஷ்டாந்தம் சொல்லுகின்றோம்கேளுங்கள். வேங்கட்ராமையர் என்பவன் ஒருவனிருந்தான். அவனுக்கு ஆயுர்ப்பாகத்தில் ஏற்படுத்தியிருந்த சுவாசமெல்லாம் செலவழிந்து நாற்பத்தைந் லக்ஷத்து முப்பத்தாறுயிரம் சுவாசங்கள் இருக்கும்போதே வேங்கட்ராமையனை வேறு ஜன்மத்தில் சிருஷ்டிசெய்ய ஆத்மா ஆலோசித்து அவன் பிராரப்தத்தில் கொண்டுவந்த புண்ணியபாபங்கள் போக சேஷமாய் முன் தங்கியிருக்கும் சஞ்சிதமென்னும் புண்ணிய பாபங்களையும், இந்த ஜன்மத்தில் செய்துவந்த ஆகாம்மியமென்னும் புண்ணிய பாபங்களையும் கணக்குப்

பார்த்து, முன் ஜன்மத்தைவிட இவன் கொஞ்சம் புண்ணியம் அதிகமாய் இந்த ஜன்மத்தில் செய்திருப்பதால் இவனை யார்வீட்டில் சிருஷ்டி செய்யலாமென்று தனக்குள் அந்தர் யாமியாயும் சாக்ஷி சொரூபனுயும் யிருக்கும் சித்ரகுப்தனென்னும் ஆத்மா யோசிக்கும். இவ்விதமாய் யோசித்து இவனை ராஜனது பாரியாளின் கர்ப்பத்தில் போடவேண்டுமென்று ஆத்மா தீர்மானித்து, ராஜன் பத்நியினுடைய மாதவிடாய் நிறுத்தி கர்ப்பம்தரிக்க ஆத்மா செய்விக்கின்றது. ஆனல் ராஜனுக்குப் பிராரப்த கர்மத்தில் புத்திர சந்தானம் இருந்தால் மாத்திரம் அவ்விடத்தில் சிருஷ்டி செய்வானே யொழிய பிராரப்தகர்மத்தில் புத்திரசந்தானம் இல்லாவிட்டால் ராஜனுக்குச் சமானமாய் செல்வமும் புத்திரசந்தானமும் இருக்கப்பட்ட வேறு எந்த அரசன் வீட்டிலோ அல்லது அரசனுக்குச் சமானமான பெறுத்த செல்வமுடையவன் வீட்டிலோ, சித்ரகுப்தனென்னும் ஆத்மா சிருஷ்டி செய்விக்கின்ருன். இவ்விதமாய் சிருஷ்டிக்கு கர்ப்பம் தரித்தபின் வேங்கட்ராமையனை ஆணுய் சிருஷ்டி செய்யலாமா அல்லது, பெண்ணுய் சிருஷ்டி செய்யலாமா என்று ஆத்மா யோசித்து, வெங்கட்ராமையனை ஆணுகவே சிருஷ்டி செய்யவேண்டும்; ஏனென்ருல், இவன் குமாரன்மீது அதிக பிரீதிவைத்து சதாகாலமும் குமாரனையே நினைத்துக்கொண்டிருப்பதனல் இவன் பிராணன் போகும்பொழுது இவனது குமாரன் ரூபத்தை நாமல்லவோ சித்திரகுப்த படத்தில் காட்டப் போகின்ரோம், ஆதலால், இவனை ஆணுகவே சிருஷ்டி செய்ய வேண்டுமென்று ஆத்மா தீர்மானித்து மேற்படி ஐயர் முன் வரப்போகும் ஜன்மத்தில் அனுபவிப்பதற்காக அவனது சஞ்சிதமென்னும் புண்ணியபாபங்களின் கருமத்திற்குத் தக்கபடி அவனுக்கு இத்தனை புத்திரர்களென்றும்

இத்தனை புத்திரிகளென்றும் அவர்களில் ஒருவன் இன்ன வயதில் மரணமடையவேண்டுமென்றும் மற்றொருவனுக்கு இங்கு விவாகம் நடக்கவேண்டுமென்றும் இவை முதலான வைகளும், இவன் இன்னின்ன விஷயங்களினால் மனோவியா கூல மடையவேண்டுமென்றும், இத்தனைகோடி ரூபாய்கள் சம்பாதிக்கவேண்டுமென்றும், கடைசியாய் இன்ன வியாதியினால் மரணமடைய வேண்டுமென்றும் பிராரப்தத்தில் அனுபவிக்கத் தந்து ஆத்மா சிசுவை சிருஷ்டி செய்துவிடுகின்றான் இவ்விதமாய் சிருஷ்டி செய்து ராஜஸ்திரீ கர்ப்பத்திலிருக்கும் சிசுவிற்கு மாதங்கள் ஏழு முடிவதற்கும், வெங்கட்ராமையர் சரீரத்திலுள்ள நாற்பத்தைந்து லக்ஷத்து முப்பத்தாறாயிரம் சுவாசங்கள் செலவாவதற்கும், கணக்குச் சரியாய்விடும்.

பிறகு வெங்கடராமையர் தரித்திருந்த சரீரத்தைவிட்டுக் கிளம்புவதற்குமுன், அதாவது இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசங்கள் இருக்கும் போதே, என்றால் ஒரு நாள் முழுமையும் வெங்கடராமையர் பிரஞ்ஞை தப்பும்படி ஆத்மா செய்வித்து, வெங்கட்ராமையர் பாலிய தசையிலிருந்து மரணகாலபரியந்தம் எந்தெந்த ஸ்திரீகளை யிச்சைகொண்டிருந்தானோ அவர்களின் ரூபத்தையும் எந்தெந்த வஸ்துக்களின்மீது அதிகபிரீதி வைத்திருந்தாரோ, அவைகளையும் 'பயாஸ்கோப்பில்' படங்களை எவ்விதமாய் ஒன்றின்பின் ஒன்றாய்க் காட்டிக்கொண்டு போகின்றனவோ அதுபோல், இவன் ஆவல்கொண்டிருந்த வஸ்துக்களையெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாய் வெங்கட்ராமையர் எதிரில் காணப்படும் சித்ரகுப்த (சித்ர - படம், குப்த - ரகசியம். அதாவது ரகசியமான) படத்தில் காட்டிக் கொண்டே சென்று, பிறகு அதிக பிரீதிவைத்திருக்கும் தன் குமாரனது ரூபத்தை அந்தப்பட்டத்தில் கடைசியாய்க்

கொண்டுவந்து நிறுத்திவிடும். இதற்கு ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 15, சுலோகம் 8-ம், யோகசிகோபநிஷத்தும் பிரமாணம்.

ஶரீரம் யதவாப்நோதி யச்சாப்யுத்க்ராமதீஶ்வர:
க்ருஹீத்வைதானி ஸம்யாதி வாயுர்கந்தானிவாஶயாத்.

கர்மவசத்தினால் ஜீவன், தான் குடியிருந்த சரீரத்தை விட்டு மற்றொன்றை அடையும்போது முன்சரீரத்தில் தடிப்பேறியிருந்த ஆசாபாசங்களை எல்லாம், எல்லா தேகங்களுக்கும் சாக்ஷியாயும் ஈசுவரனாயுமிருக்கும் ஆத்மா, வாசனையுள்ள புஷ்பத்தில் காற்றானது வீசி அவ்வாசனையை அதிகதூரம் இழுத்துக்கொண்டு எவ்வாறு செல்லுமோ அதுபோல், முன் சரீரத்தி லிருந்த, சூக்ஷ்ம காரணமென்னும் இரண்டு சரீரங்களுடன் கூடிக் கொண்டு அவனவன் செய்த கர்மத்திற்குத் தக்கபடி அந்தந்த சரீரத்தில், தாயானவள் சுவாசம் உள்ளுக்கிழுக்கும்போது அந்த சுவாசத்துடன் கூடவே சிசுவின் ஆத்மா சேர்ந்து தாய்கர்ப்பத்தில், சிசுவின் இருதயகமலத்திலிருக்கும் ஜலமத்தியில் போய்ச்சேரும். ஜீவன் தாய்கர்ப்பத்திலிருக்கும் சிசுவின் இருதயகமலத்திலுள்ள ஜலமத்தியில் ஏழாம்மாதம் போய்ச் சேர்ந்தவுடன் பிண்டம் தலைகீழாய்த் திரும்பும். ஜீவன் தாய் கர்ப்பத்தில்போய்ப் பிரவேசிப்பதற்கு, ஸ்தூல சூக்ஷ்ம காரணமென்னும் மூன்றுசரீரங்களே காரணமாயிருக்கின்றது. இம்மூன்று சரீரங்களின் ரகஸ்யம் இந்நூல் 419-வது பக்கம் இந்நூலாசிரியர் படத்தில் காண்க.

"தேஹாவஸான ஸமயே சித்தே யத் யத் விபாவயேத்
தத் ததேவ பவேஜ்ஜீவ இத்யேவம் ஜன்மகாரணம்.
தேஹாந்தே கிம் பவேத் ஜந்ம தந்ந ஜாநந்தி மாநவா:
தஸ்மாத் ஜ்ஞானம் ச வைராக்யம் ஜீவஸ்ய கேவலம் ஶ்ரம:.

பிபீலிகா யதா லக்நா தேஹே த்யாநாத் விமுச்யதே.
அஸெள கிம் விருஸ்சிகைர் தஷ்டோ தேஹாந்தேவாகதம்ஸ்ஃசீ
தஸ்மாந்மூடா நஜாநந்தி மித்யாதர்கேண வேஷ்டிதாஃ."
[யோகஸிகோபநிஷத்]

மேற்படி சித்ரகுப்த படத்தில் வெங்கடராமையர் குமாரனது ரூபத்தை ஆத்மா, நிறுத்தியபிறகு வெங்கடராமையர், குமாரனது ரூபத்தைப் பார்த்து, ஐயோ குமாரா! உன்னைவிட்டு மரணமடைகின்றேனே என்று மேற்படி வெங்கடராமையர் ஸ்மரித்துக்கொண்டிருப்பான். இதற்கு தேவிகாலோத்திரம் கைவல்யம் பிரமாணம். இப்பாடல்கள் 721-வது, பக்கமும் சொல்லப்பட்டிருக்கின்றது; இங்கு வேண்டுவதாதலால் இவ்விடமும் சொல்லப்பட்டது,

எந்த வாருயிர் யாதோர் பொருளினைச்
சிந்தையாற் பற்றிக் காரியஞ் செய்திடின்
அந்த யோனியதா மென் றறிவினல்
பந்தமில் பொருள் பற்றுத றக்கதே.

சடமதாகிய தியான மெய்யாகிய சர்வ முத்தியை நல்கும்
திடமான தெப்படியெனி லவரவர் தியானமே பிறப் பாகும் [தா
உடலமாசையாற் றியானிக்கிற் றியானித்த வுடல்க ளாகுவர் மைந்
தொடர் பவங்கெடச் சொரூபமே தியானிக்கிற் சொரூப மாகுவர்
[மெய்யே.

பொய்யாகிய நினைப்பானது, சத்யமாகிய பரிபூர்ண கைவல்யத்தைக் கொடுக்கமாட்டா: அவரவர் மரணகாலத்தில் நினைக்கும் ரூபமாகவே மறு ஜநந முண்டாகும்: ஆதலால், மரணகாலத்தில் தேக இச்சையினல் நினைத்த நினைப்பு வடிவமாவார்கள்.

அந்த சமயத்தில், அவனது பந்து ஜனங்களெல்லோரும் அவனைச் சூழ்ந்துகொண்டு அண்ணு எனக்கென்ன சொல்லுகின்ருய், மாமா எனக்கென்ன சொல்லுகின்ருய்,

அப்பா எனக்கென்ன சொல்லுகின்றாய் என்று சிலரும், மற்றும், சிலர் நாராயணாவென்று சொல், ராமாவென்று சொல், கோவிந்தாவென்று, சொல், கிருஷ்ணாவென்று சொல்லென்று இவ்விதமாய் அவருக்குத் தொந்தரவைக் கொடுத்துக்கொண்டிருப்பார்கள். இதற்குப் பெரியாழ்வார் திருமொழிப் பிரமாணம்.

சோர்வி னாற்பொருள் வைத்ததுண்டாகிற்
சொல்லுசொல்லென்று சுற்று மிருந்து
ஆர் வினவிலும் வாய்திறவாதே
யந்தகால மடைவதன் முன்னம்
மார்வ மென்பதோர் கோயிலமைத்து
மாதவனென்னுந் தெய்வத்தை நாட்டி
ஆர்வமென்பதோர் பூவிட வல்லார்க்
கரவ தண்டத்தி லுய்யலுமாமே.

இவர்கள் எவ்வளவு உரத்த சப்தத்துடன் சொல்லிய போதிலும் அவனுக்கு எந்த சங்கதியும் கேட்கமாட்டா; ஏனென்றால், மனம் சித்ரகுப்த படத்திலிருக்கும் குமாரனது ரூபத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதனால் அவனுக்கு எந்த சங்கதியும் கேட்கமாட்டா. இவ்விதமாய் சுவாசங்களெல்லாம் செலவழியும்வரையில் படத்திலிருக்கும் குமாரனது ரூபத்தைப் பார்த்து பெருமூச்சு விட்டுக்கொண்டே வந்து கடைசியாய்வரும் சுவாசத்துடன் மனம் சேர்ந்து ஒகுமாரா! உன்னை விட்டுவிட்டுச் செல்லுகின்றேன்! என்று நினைத்துக்கொண்டே மனம் ஆத்மாவுடன் சேர்ந்து கிளம்பிவிடும். இதற்குள் ராஜனது பத்தினிக்கு மாதங்கள் ஏழு பூர்த்தியாய்விடும். வெங்கடராமையர், குமாரனை நினைத்துக்கொண்டே சரீரத்தைவிட்டுக் கிளம்பினவுடன் (புதிதாய் வீடுகட்டி முடித்து கிரகப்பிரவேசம் செய்து அதில் குடிபோய்ச் சேருவதுபோல்) ராஜனது பத்னியின்

கர்ப்பத்திலிருக்கும் சிசுவினுடைய இருதயகமலத்திலுள்ள ஜலமத்தியில் ஆத்மா போய்ச்சேருகின்றது. ஆத்மா மனதுடன் சேர்ந்து பிண்டத்தில் பிரவேசித்தவுடன், பிண்டம் தலைகீழாகத் திரும்பும்; அதுமுதல் ஜநநகாலம் வரையில் கர்ப்பப்பையில் அடைப்பட்டிருக்கும் ஜீவன், எண்பத்து நான்கு லக்ஷ ஜீவராசிகளின் நாலுயோனிகளில் பிறந்து அந்தந்த வம்சத்தில் வந்துகொண்டிருந்த புத்திர பௌத்திர களத்திர தனதான்னியாதிகளை யெல்லாம் நினைத்து துக்கப்படும்படி, இவனுடன்கூடவே சாக்ஷி சொரூபமாய் வந்துகொண்டிருக்கும் ஆத்மா, ஒவ்வொரு ஜன்மத்திலும் தன் பூர்வ ஜன்மங்களையெல்லாம் கர்பப்பையில் காட்டிக் கொண்டே வருகின்றான். அதாவது, ராஜஸ்திரீ கர்ப்பத்தில் பிரவேசிப்பதற்குமுன் என்றால், குமாரனை நினைத்துக் கொண்டே பிராணனை விடுமுன் வேங்கடராமையராயிருந்த ஜன்மத்தில் வந்த பிராமண ஜாதி பெண்டுபிள்ளைகளையும், தனதான்னியங்களையும் சற்றுநேரம் நினைத்து நினைத்து துக்கித்து அதைமறந்து, அதற்குமுன், க்ஷத்திரியனாயிருந்த போது வந்த க்ஷத்திரியஜாதி பெண்டு பிள்ளைகளை யெல்லாம் சிலநேரம் நினைத்து நினைத்து துக்கித்து அதை மறந்து, அதற்குமுன், சண்டாளனாயிருந்தபோது வந்த சண்டாளஜாதி பெண்டு பிள்ளைகளையும் ஜாதிபேதங்களையும் சிலநேரம் நினைத்து நினைத்து, இவ்விதமாய் எந்தெந்த ஜன்மங்களை ஜீவன் அடைந்துகொண்டு வந்ததோ அந்தந்த ஜன்மங்களை யெல்லாம் சில சில நிமிஷங்கள் நினைத்து நினைத்து துக்கித்தும், ஜனனகாலம் சமீபிக்காவிட்டால் மறுபடியும் ஆதியிலிருந்து தன் பூர்வ ஜன்மங்களையெல்லாம் நினைத்து நினைத்து துக்கித்துக்கொண்டிருந்தும் அதாவது, எட்டு ஒன்பதாவது மாதங்கள்வரையில் பூர்வ ஞானத்துடன் இருந்து, முன் பிறந்து இறந்த ஜன்மங்களையெல்

லாம் நினைத்துக்கொண்டிருக்கும் சமயத்தில் ஜநநகாலம் ஸமீபித்து, ராஜனது பத்தினி பிரசவவேதனைப்படுவாள். அப்போது இரண்டு கைகளையும் குவித்து சிரசின்மேல் வைத்து ஐயோ! மாயா பிரபஞ்சத்தில் கொண்டுபோய்த் தள்ளுகின்றாயா வென்று சிசுவானது இரண்டு கைகளையும் குவித்து சிரசிற்குமேல் வைத்து ஈசுவரனைக் கும்பிட்டுக் கொண்டே, பையிலிருந்து புறப்பட்டு வெளி வருகின்றது. சிசு கர்பப் பையிலிருந்து கும்பிட்டுக்கொண்டே வெளி வருவது இந்நூல் 188-வது, பக்கம் படத்தில் காட்டப் பட்டிருக்கின்றது.

இவ்வாறு, சிசு கும்பிட்டுக்கொண்டே வெளிவந்தவுடன் சிசுவை மாயை மூடிக்கொண்டு ஒன்றும் தெரியாமல் திக்பிரமையுடனிருக்கும். அப்போது கலியுக ஜலத்தை சிசுவின் முகத்தில் புரோக்ஷிக்கின்றார் (தெளிக்கின்றார்) கள். தெளித்தவுடன் சிசு திமிறிக்கொண்டு கைகால்களை உதறி குவா! குவா! குவா! என்று வீறிட்டு அழுது, பூர்வஞானத்தை மறந்து பரப்பிரம்ம சொரூபமாயிருக்கும். பிறகு பதினோராவது நாள் புண்ணியாஹவாசனம் செய்து அந்த சிசுவிற்கு வேங்கடராமையர் என்னும் பெயர் போய் ஸ்ரீராமராஜ உடையார், என்று நாமகரணம் செய்து விசேஷ தான தருமங்களைச் செய்கின்றார்கள். இவ் விதமாய்ச் செய்து சிசு வளர்ந்து இரண்டாவது வயது தொடங்கினவுடன் அத்தை, அண்ணா, அக்கா, மாமா, அம்மா என்று சொல்லென்று அக்குழந்தைக்கு சில நாள் கள் நூதனமாய் வார்த்தைகளைக் கற்றுக்கொடுத்து பிறகு கண் எது, மூக்கேது, வாய் எது, நாக்கேது, கை எது, கால் எது, தலை எது என்றும், அம்மா யார், அத்தை யார், மாமா யார் என்று நூதனமான வார்த்தைகளை யெல்லாம் கற்றுக் கொடுத்து, ஆட்களைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்கள்.

இவ்விதமாய் கற்றுக்கொடுத்த பிறகு ஐந்தாவது வயதில் வாசிப்பதற்காக பள்ளிக்கு அனுப்புகின்றார்கள். வாசித்துப் படிப்பில் தேர்ந்து யௌவனவயது வந்தவுடன், தான் தாயின் கர்ப்பத்தில் இருந்தபோது இன்னவிடத்திலிருந்து பாரியாள் வரவேண்டுமென்றும், அவளுக்கித்தனை புத்திரர்கள் உண்டாகவேண்டுமென்றும் பிராரப்தத்தில் எழுதி இருக்கின்றாரென்று முன் சொல்லியிருந்தோமல்லவா? அதுபோல் அந்த இடத்தில் விவாகம் முடிந்து தான் அனுபவிக்கவேண்டிய சொத்துக்களையெல்லாம் பிராரப்த கர்மம்போல் அனுபவித்து மறுபடியும், புண்ணிய பாபங்களைச்செய்து பிராரப்த கர்மத்தின்படி வரவேண்டிய வியாதிகள் உண்டாய் இவன் பார்யாளின்மீது அதிக பிரீதியை வைத்திருந்தவனாதலால் பிராண பிரயாணகால சமீபத்தில் அதாவது, பிராணன் போகும்போது இவன் எதிரில் நின்றிருக்கும் சித்ரகுப்த மென்னும் படத்தில், இவன் பார்யாளின் ரூபத்தை சாக்ஷிசொரூபமாயிருக்கும் ஆத்மா காட்டுகின்றான். அப்போது, பார்யாளை நினைத்துக் கொண்டே பிராணனை விடுகின்றான். விட்டவுடன் இவன் புண்ணிய பாபத்திற்குத் தக்கபடி வேறு ஜாதி தாயின் கர்ப்பத்தில் சிருஷ்டி செய்திருக்கும் பெண் சரீரத்திலுள்ள இருதய கமலத்திலிருக்கும் ஜலமத்தியில் போய் ஆத்மா பிரவேசித்து, ஜநநகாலம் வரையில் ஜீவன் பூர்வ ஞானத்துடன் இருந்து பிறகு பெண்சிசுவாய்ப் பிறக்கின்றது. பிறந்த பதினோராவது நாள் புண்ணியாஹவாசனம் செய்வித்து 'கமலாபாய்' என்னும் பெயருடன், முன் சில வருஷங்கள் வேங்கடராமையராகவும், சில வருஷங்கள் ராமராஜ உடையாராகவும் இருந்த ஜீவன் இப்போது பெண்ரூபங் கொண்டு கமலாபாய் என்னும் பெயருடன் வளர்ந்து வருகின்றது. ஆதலால், ஜீவனுக்கு ஜாதிபேதமில்லை. அப்படியிருக்க

பூர்வ ஜன்மத்தில் எந்த மிலேச்சனோ (துலுக்கனோ) எந்த சண்டாளனோ ஒருவன், பிரதிதினம் கர்மம் செய்யப்பட்ட பிராமணர்களின் வீட்டில்வந்து ஜன்மித்து, நான் உயர்ந்த ஜாதியானென்றும் என்னைவிட உயர்ந்த ஜாதியான் உலகத்தில் ஒருவருமில்லையென்றும் சொல்லி, கர்மவாக்கினால் உதட்டை அசைத்து பல்லைக் காட்டிக்கொண்டே மந்திரங்களை கர்மவாக்கினால் முண முணவென்று சொல்லிக்கொண்டு மற்றவர்களைத் தாழ்மையாய் பேசுகிறான். இவன் பூர்வஜன்மத்தில் எந்த ஜாதியில்பிறந்தான். வருகிற ஜன்மத்தில் எந்த ஜாதியில்பிறப்பான். ஆதலால், இந்த ஜன்மத்தில் நான் பிராமணனென்று அஹங்காரம்கொள்ளலாகாது. இவைகளையெல்லாம் நன்றாய் அறிந்த பிராமணன், மற்றவர்களை இகழ்ந்து பேசான். ஜாதிபேதமில்லாத ஜீவனுக்கு மத்தியில் ஜாதிபேதமெங்கிருந்து வந்தது. பிராமண குலத்தில் பிறந்தவனை, உபநயனம் செய்யும்வரையில் அவனை சூத்திர பிள்ளைபோல் நினைப்பார்கள் வைதிகமுள்ள சில பிராமணர்கள் தன்பிள்ளை தீண்டிய பதார்த்தமும் ஜலமும் சாப்பிடமாட்டார்கள். அவர்கள் சாப்பிடாததற்குக் காரணம்,மேற் சொல்லியவைகளேயாம். அதாவது, எந்த ஜாதியிலிருந்து வந்தவனோ என்பதேயாம். காற்றுருவமா இருக்கப்பட்ட ஜீவனுக்கு ஜாதிபேதம் எங்கிருந்துவந்தது. பூணூல் போட்டபிறகு அவன் தொட்ட பதார்த்தங்களை ஷை வைதிகபிராமணர்கள் சாப்பிடுவார்கள்.

இப்படிப்பட்ட வெளி வேஷங்களினாலும், மந்திரங்களினாலும் பிராமணனாகமாட்டான். அனேக ஜன்மங்களாய் மனதில் பற்றிக்கொண்டுவரும் ஆசாபாசங்களென்னும் அழுக்குகளையெல்லாம் ஒழித்து எவன் பரிசுத்தமாய்த் தானே தானாயிருக்கின்றானோ அவனே வேதங்க

ளில் சொல்லிய பிராமண நாவான்: மற்றவர்கள் தேக சுத்தி ஆசாரங்களுடன்யிருந்து எவ்வளவு மந்திரங்களைச் ஜபித்துவந்தபோதிலும் கர்மப் பிராமணர்களே யொழிய தன்னைத்தான் அறிந்த பிராமணர்களாகமாட்டார்கள் ஆதலால், இந்நூல் 66-வது பக்கம் 27-வது வரிமுதல், 101-வது பக்கம் வரையில் சொல்லியிருக்கும், காம குரோத லோப மோஹ மத மச்சர டம்ப தர்ப்ப ஈர்ஷை அசூயை என்னும் பத்து குணங்களும், தாரேஷணை புத்ரேஷணை தனேஷனை என்னும் ஈஷணத்திரயங்களும் நசிக்கும் வரையில் ஜீவன் எப்பொழுதும் எதையோ ஓர் சரீரத்தை அடைந்துகொண்டே வரும். (இது விஷயம் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம், 2. சுலோகம், 16 - முதல், 22-வரையில் பார்க்க).

ஆத்மா எந்த சரீரத்தைவிட்டுக் கிளம்பி விடுகின்றதோ அந்த சரீரத்திலுள்ள இருதய கமலத்திலிருக்கும் அங்குலபிரமாண ஆகாசத்திலுள்ள ஜலம் வற்றிக்கொண்டேவரும். அந்த ஆகாசம், ஈரல் படத்தில் அம்பினால் காட்டப்பட்டிருக்கின்றது. அந்த ஜலம் வற்றவற்ற நாவறட்சியை உண்டாக்கும். அப்போது நாக்கைத் தொட்டுப் பார்த்தால் அதில் சிறிதேனும் ஜலமில்லாமல் 'நா' வறண்டு முள்ளுபோல் காணப்படும். இவ்விதமாய் இருதய கமலத்திலிருக்கும் ஜலம் வற்றிக்கொண்டே வரவர அப்போது ஜலமத்தியிலிருக்கும் நாராயணன் (ஆத்மா) கடைசியாய் வெளிவரும் சுவாசத்துடன்கூடவே, சரீரத்தைவிட்டு வெளி கிளம்பி, அவனவன் கர்மானுசாரமாய் எந்தெந்த தாயின் கர்ப்பத்தில் தூலசரீரத்தை ஆத்மா சிருஷ்டி செய்திருக்கின்றதோ, அந்தந்த சரீரத்திலுள்ள இருதய கமலத்திலிருக்

கும் ஜலமத்தியில், ஏழாவது மாதம் ஆத்மாபோய் பிரவேசிக்கின்றது.

இருதய கமலத்தில் பரமாத்மா இருக்கும் ஜலசம்பந்தத்தால் ஜீவராசிகளின் 'நா'வின் கீழ்யிருந்து ஜலம் சுரந்துகொண்டிருக்கும். அந்த பரமாத்மா சரீரத்தைவிட்டுக் கிளம்பும்போது, இருதய கமலத்திலிருக்கும் ஜலம் வற்றுவதனால் 'நா' வரண்டுபோகும். இவ்விதமாய் நாவறண்டு கொண்டேவந்து ஆத்மா, கடைசியாய் வெளிவரும் சுவாசத்துடன்கூடவே கிளம்பிவிடுகின்றான். பிறகு சுவாசம் ஆடாமல் நின்றுவிடும். அப்போது சரீரம் பிரேதமாய் (பிணமாய்) விடும்.

"ஶதம் சைகா ச ஹ்ருதயஸ்ய நாட்யஸ் தாஸாம் மூர்தாநமபி நிஸ்ருதைகா தயோர்த்வமாயந்நம்ருதத்வமேதி விஷ்வங்ஙந்யா உத்க்ரமணே பவந்தி." [கடோபநிஷத்.]

இடா பாகீரதீ கங்கா பிங்களா யமுனா நதீ
தயோர்த் மத்யகதா நாடீ ஸுஷும்நா ச ஸரஸ்வதீ
ஏவம் ஞாநஹ்ரதே தீர்த்தே ராகத்வேஷ மலாபஹே
யஃ ஸ்நாதி மானஸே தீர்த்தே ஸ யாதி பரமாம் கதிம்.

முன்சொல்லிய கமலத்தில் நூற்றொருநாடிகள் உண்டு. இவைகளில் சுஷும்நா என்னும் சூட்சும நாடி ஒன்று இருக்கின்றது.

அந்த நாடியை சுவாதீனம் செய்துகொண்டு அதன் வழியாய் யோகபலத்தினால் உச்சியைத்திறந்து ஆத்மாவை விட்டவன், ஜநநமரணமென்னும் சமுத்திரத்தைத்தாண்டி முத்தியை அடைகின்றான். மற்ற நாடிகளின் வழியாய் ஆத்மா சென்றால் மறுபடியும் சம்சாரத்தை அடைகின்றான். இந்த ஆத்மாவைக் குறித்து ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம், 18-சுலோகம் 61-ணில், என்ன சொல்லுகின்றதென்றால்,

ஈஶ்வரஸ் ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶேர்ஜுந ! திஷ்டதி
ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா.

ஓ அர்ஜுநா! எல்லா பூதங்களையும் ஆஞ்ஞாபிக்கும் ஈசுவரன், எல்லா பிராணிகளின் இருதயகமலத்தின் மத்தியிலிருந்துகொண்டு சூத்திரதாரியால் ஆட்டப்படும் பொம்மையைப்போல் ஆட்டி, மாயையால் பிராணிகளை பிரமிக்கச் செய்கின்றான். இவ்வாறு சொல்வதற்குக் காரணம் யாதெனில் அத்யாயம், 15, சுலோகம் 10,

உத்க்ராமந்தம் ஸ்திதம் வாபி புஜ்ஞாநம் வா குணாந்விதம்
விமூடா நாநுபஶ்யந்தி ஜ்ஞாநசக்ஷுஷ:.

இத்தேஹத்தைவிட்டு மாறி மாறி வந்து கொண்டிருக்கும், ஸ்தூல சூக்ஷ்ம காரண தேஹங்கள் ஒன்றைவிட்டு மற்றொன்றையடைந்து, விஷயபோக சுகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் அஞ்ஞானிகள், ஆத்மாவை அறிய மாட்டார்கள். அப்படி அறியாமல் போவதனால் ஸ்திரீ புருஷர்களின் இருதயத்தில் ஈசுவரனாயிருக்கும் ஆத்மா, அவர்களை நாடகத்தில், பொம்மைகளை சூத்திரத்தினால் (கயிற்றால்) கட்டி, ஆட்டிக்காட்டுவதுபோல் ஆட்டிவைக்கின்றான் என்று அறியக்கடவீர்களாக.

"கபாலகுஹரே மத்யே சதுர்த்வாரஸ்ய மத்யமே
ததாத்மாராஜதே தத்ர யதா வ்யோம்நி திவாகர:
கோதண்டத்வய மத்யேது ப்ரஹ்மரந்த்ரேஷு ஶக்தி ச
ஸ்வாத்மாநம் புருஷம் பஶ்யேந்மநஸ்தத்ர லயம் கதம்.
ரத்நாநி ஜ்யோத்ஸநிநாதம் து பிந்துமஹேஶ்வரம் பதம்."

[தியானபிந்தூப நிஷத்.]

பிரம்ம கபாலத்திற்கு (உச்சிக்கு) நான்கு துவாரங்களுண்டு. அதற்கு மத்தியிலிருக்கும் ஆகாசத்தில், சூரியன் ஆகாசமத்தியில் பிரகாசித்துக் கொண்டிருப்பதுபோல், ஆத்மா, இருதயகமல மத்தியில் பிரகாசித்துக்கொண்டிருக்

கின்றான். அவன் நாத (பிராணன்) பிந்து (மனம்) களுடன்கூடி மஹேசுவர சொரூபமாயிருக்கின்றான். அன்றியும், கோதண்டம் போலிருக்கும் புருவமத்தியில் ஆத்மா சுஷும்ன நாடியுடன் கூடியிருக்கின்றான்.

இந்த ஆத்மா, இருதய கமலத்திலிருக்கும் அங்குல பிரமாண ஆகாசத்திலிருக்கும் ஜலமத்தியில் இருப்பதாய் முன் சொல்லியிருக்க, இப்போது பிரம்மகபாலத்தி (உச்சியி)லும் வில்லைப்போலிருக்கும் புருவமத்தியிலும் இருப்பதாய் மறுபடியும் சொல்லியதற்குக்காரணம் தியான பிந்தூபநிஷத்தின்படி இதனடியில் சொல்லியிருக்கின்றோம் கேளுங்கள்:—

பெருத்த பட்டணங்களிலுள்ள விளக்குகளையெல்லாம் ஏற்றுவதற்காக எலெக்ட்ரிக் மிஷின் (Electric Machine) ஒன்றை, பிரத்தியேகமாய் வைத்து அதை ஆடும்படிச் செய்து அதிலிருந்து உண்டாகும் கரண்டுகளை (Current) யெல்லாம் வேறோரிடத்தில் சேகரித்து வைப்பதற்காக, மற்றொருகட்டடம் கட்டி கரண்டுகளை அவ்விடம் சேர்ப்பித்து, அதன் மூலமாய் பட்டணங்களிலுள்ள தீபங்களையெல்லாம் பிரகாசிக்கும்படிச் செய்விக்கின்றார்கள். அதுபோல் இருதய கமலத்திலிருக்கும் பரமாத்மாவிற்கு, உச்சியும் புருவ மத்தியிலும் ஸ்தானமாயிருந்துகொண்டு சரீரத்திலுள்ள நாடி நரம்புகளுக்கெல்லாம் உஷ்ணத்தை உண்டாக்கி முன்சொல்லிய யந்திரம்போல் ஆடும்படிச் செய்விக்கின்றான். இதற்குப் பிரமாணம் வாஸுதேவோபநிஷத்.

> "ப்ரஹ்மரந்த்ரே ப்ருவோர்மத்யே ஹ்ருதயே சித்ரவிம் ஹரிம்
> கோபீசந்தநமாலிப்ய தத்ர த்யாத்வாப்நுயாத் பரம்."

என்னும் வாஸுதேவோபநிஷத் வாக்கியரீதியாய் பரமாத்மா உச்சியிலும் புருவமத்தியிலும் இருதய கமலத்

திலும் வசித்துக்கொண்டிருப்பதனால் அந்த மூன்று இடங்களிலும் பரமாத்மா இருக்கின்றதென்று காட்டுவதற்காக கோபீ சந்தனமாகிலும், திரிசூர்ணமாகிலும், விபூதி சந்தனமாகிலும் தரிக்கின்றார்கள். இவைகளெல்லாம் வேதங்களினுடையவும், குருவினுடையவும் மஹா ரஹஸியங்கள். இப்படிப்பட்ட மஹா ரஹஸ்யார்த்தங்களை எல்லாம் உங்களுக்குப் புஸ்தகமூலமாய்த் தெரிவித்தோம்.

ஆனால் சில புருஷர்கள், ஆண் ஆணாகவும், பெண் பெண்ணாகவும் பிறக்குமென்று சொல்வார்கள். அது, அறியாத்தன்மையே! மனம் ஜட சொரூபமாயிருக்கப்பட்டது அது எந்த சரீரத்தை நினைக்கின்றதோ அந்த சரீரத்தையடையுமேயன்றி வேறு சரீரத்தை அடையாது. ரூபமாயிருக்கும் மனதை எந்த சரீரத்திலும் போடலாம். ஜடபரதர் பிராணனை விடும்போது மானை நினைத்துக்கொண்டே பிராணனை விட்டபடியால் அவர், மான் சரீரம் எடுக்கநேரிட்டது. மானாய்ப்பிறந்தபோதிலும் பூர்வ ஜன்ம வாசனையினால் இவர் ரிஷிகளுடன் கூடவே இருந்தபடியால் ரிஷிகள் மானைக்கண்டு இதென்ன இம்மான் நம்முடன்கூட இருப்பதற்குக் காரணமென்னவென்று யோக திருஷ்டியினால் பார்த்து ஓ ஹோ! இவர் பூர்வ ஜன்மத்தில் ஜடபரதராய் இருந்தவர். மரணகாலத்தில் தான் வளர்த்திருந்த மானை நினைத்துக்கொண்டே பிராணனை விட்டபடியால் இவருக்கு மான் சரீரம் உண்டாயிற்றென்று தெரிந்துகொண்டார்கள். ஆதலால், நாம் ஈசுவரத்தியானமில்லாமல் சம்சாரத்திலேயே அதிகமாய் உழன்றுகொண்டிருந்தால் நமது மரணகாலத்தில் அந்த சம்சார ஞாபகமே உண்டாகும். அப்படி உண்டாகாவண்ணம், இப்போதிருந்தே ஈசுவரபக்தி அதிகமாய்ச் செய்துவந்தால் மரணகாலத்தில், ஈசுவரஞாபகமே உண்டாகும். அவ்வாறு உண்டாவதனால்

மறுஜன்மத்தில் மேலான பதவிக்கு ஆத்மா கொண்டுபோய் விடுமென்று அறியக்கடவீர்களாக.

மனம், சுஷுப்தியில் இருதய கமலத்திலிருக்கும் பரமாத்மசொரூபத்தில் சிலநேரம் அடங்கி இருக்கும். பிறகு, பரமாத்மாவிலிருந்து மனம் பின்னப்பட்டு (வேறாய்) ஜாக்கிரத்திற்கு வந்தவுடன் நித்திரைவிட்டெழுந்து சுகமாய் நித்திரித்து எழுந்தேனென்று சொல்லுகின்றது. அந்த மனம் அஞ்ஞானத்துடன்கூடி ஆத்மாவில் லயித்திருந்தபடியால் பிரம்மானந்த சுகம் அவ்விடம் தோன்றவில்லை. மனம் அஞ்ஞானத்துடன்கூடி சுஷுப்தியில் (நித்திரையில்) இல்லாமல் ஜாக்கிராவஸ்தையிலிருந்து பத்மாசனத்துடன் உட்கார்ந்து, கண்களைமூடி சின்முத்திரையைப் பிடித்து எந்தஎண்ணங்களுமில்லாமல் இருக்கவேண்டும். அப்போது மனம் வெளியில் ஓடாமல் நின்றிருப்பதனால் சிலநிமிஷங்களுக்குள் தேகமாத்தியந்தம் ஜிலுஜிலுவென்றிருந்து ஓர் சுகத்தை உண்டாக்கி புருவமத்தியில் இழுத்துப் பிடிப்பதுபோலிருக்கும். அப்படி சிலநேரம் இருந்தபிறகு பிரஞ்ஞை தப்பி தன்னைத்தான் மறந்துவிடுகின்றான்; அப்போது ஓர்விதமாகிய ஆனந்தத்தை யுண்டாக்குகின்றது, அந்த ஆனந்தம் இவ்விதமாயிருக்கின்றதென்று இதில் எழுத புத்திக்கு எட்டாததாயிருக்கின்றது.

முகத்துக்கண் கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்துக்கண் கொண்டு பார்ப்பதே ஆனந்தம்
மகட்குத்தாய் தன் மணாளனோ டாடிய
சுகத்தைச்சொல்லென சொல்லுவ தெங்ஙனம்.

சாதாரணமாய் சம்போககாலத்தில் புருஷர்களுக்கு சுக்கிலமாகிலும் அல்லது ஸ்திரீகளுக்குச் சுரோணிதமாகிலும் ஸ்கலிதமாகும்போது (வெளிவரும்போது) இவ்வித சுகமாயிருக்கின்றதென்று ஸ்திரீ புருஷர்களால் சொல்ல

சாத்தியமாகாமலிருக்க, இந்த பிரம்மானந்த சுகத்தைச் சொல்ல யாவரால் தான் முடியும்; இந்த சுகம் ஹரி ஹராதிகளாலும் சொல்லக்கூடியதல்ல. இது, அனுபவிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரம் தெரியவருமேயொழிய, இவ்விதமாய் இருக்கின்றதென்று இதரர்களுக்குச் சொல்ல அவர்களால் சாத்தியமாகாது. நிஷ்டையில் உட்கார்ந்து மனம் சூன்னியமாகும் சமயத்தில் சரீரமெல்லாம் ஜிலு ஜிலுப்பு (உள்ளக்குளிர்ச்சி) உண்டாகும் வரையில் மாத்திரம் சொல்லலாமேயொழிய அதற்குமேல் சொல்லமுடியாது. இந்த சுகம் அடையவேண்டுமென்று கோரப்பட்ட புருஷன் பிராணயாமம் அப்பியசித்துவந்தால் சீக்கிரமாய் அநுபவிக்கலாம். அப்படி பிராணயாமம் செய்ய சக்தியில்லாத புருஷர்கள், இதில் உபதேசித்திருக்கும் "ஸோஹம்" மந்திரம் "பஞ்சாக்ஷர" மந்திரம் 'மனம் உதிக்கும் இடமாகிய நாபிஸ்தானத்தை வெட்டவெளியாய்ப் பார்ப்பது, மனோ ஓட்டத்தை நிறுத்திக்காட்டுதல் இவைகளில் எதையாகிலும் ஒன்றை எடுத்துக்கொண்டு சிலகாலம் அப்பியசித்து வந்தால் மனம் ஓர் நிலையில் நிற்கும். பிறகு, அந்த ஓர் நிலையுமற்று முன்சொல்லிய பிரம்மானந்த சுகத்தை அடைவார்கள்.

கர்மவியாதியை வைத்யமூலமாய் போக்கடிப்பதனால் உண்டாகும் கெடுதி.

ஓ சகோதரிகளே! ஓ சகோதரர்களே!

இதற்குமுன் சரீரத்தில் பரமாத்மா குடியிருந்து கிளம்பிவிடுதல் என்பதில், அவனது சஞ்சிதமென்னும் புண்ணிய பாபங்களின் கர்மத்திற்குத்தக்கபடி, அவனுக்கு இத்தனை புத்திரர்களென்றும், இத்தனை புத்திரிகளென்றும் அவர்களில் ஒருவன் இன்ன வயதில் மரணமடையவேண்டுமென்றும், மற்றொருவனுக்கு இங்கு விவாகம் நடக்கவேண்டுமென்றும் இவைமுதலானவைகளும், அவன் இன்னின்ன விஷயங்களினால் மனோ வியாகூலமடையவேண்டுமென்றும் இத்தனைகோடி ரூபாய்கள் சம்பாதித்துக் கடைசியாய் இன்னவியாதியினால் மரண மடையவேண்டுமென்றும் பிராரப்தத்தில் அனுபவிக்கத்தந்து சிசுவை சிருஷ்டிசெய்து விடுகின்றான் என்று எழுதியிருக்கின்றோம். ஆதலால், ஸ்திரீ புருஷர்களுக்குப் பிராரப்த கர்மத்தினால் வந்த வியாதியை,வைத்தியத்தினால் போக்கடித்துக்கொண்டால், தாம் எத்தனைநாள் வியாதி அனுபவித்தார்களோ அந்நாள் போக மிகுதி அனுபவிக்கவேண்டிய நாட்களை வைத்தியத்தினால் போக்கடித்தால், மிகுதி அனுபவிக்கவேண்டிய சேஷமாய் நின்றிருக்கும் கர்மத்தினால் வந்த வியாதியை, மறுஜன்மத்திலும் அனுபவிக்கவேண்டியதாய் நேரிடும். அந்த ஜன்மத்திலும் வைத்தியத்தினால் போக்கடித்துக் கொண்டால், மிகுதி சேஷமாய் நின்றிருக்கும் வியாதியை மறுஜன்மத்தில் தப்பாமல் அனுபவிக்கவேண்டியதாய் நேரிடும். ஸ்திரீ புருஷர்கள் இதன் ரகஸ்யங்களையெல்லாம் தெரிந்துகொள்ளாமல், அவரவர்கள் செய்த கர்மத்தினால்

வந்த வியாதிகளை ஒளஷதங்களினல் போக்கடித்துக் கொண்டு இன்னும் அனுபவிக்கவேண்டிய மிகுதி சேஷகர்மத்தை மறுஜன்மத்தில் அனுபவிக்கின்றார்கள். எந்த வியாதிகள் வந்தபோதிலும் "படு மனமே படு"; நீ பூர்வ ஜன்மங்களில் செய்த பாபகர்மத்திற்காக அதன் பலனை இந்த ஜன்மத்தில் அனுபவிக்கின்றாய் என்று தன் மனதை நொந்து அந்நோய்களுக்கெல்லாம் சகித்துக்கொண்டிருக்க வேண்டும். யாரொருவர் தன்மனதை நொந்து, தன் வியாதியை வைத்தியத்தால் போக்கடித்துக் கொள்ளாமல் சகித்துச்கொண் டிருக்கின்றார்களோ, அவர்களை ஞானி யென்றே சொல்லலாம். ஏனென்றால், ஞானிகள் இந்த ரகஸ்யம் நன்றாய் அறிந்தவர்கள்; அவர்களின் கைகளிலாகிலும் மற்ற எவ்விடங்களிலாகிலும் ரணங்கண்டு அதில் புழுக்கள் விழுந்து நெளிந்து கீழ்விழுந்தபோதிலும், அப் புழுவை மறுபடியும் எடுத்து தன் புண்ணில் விட்டுக் கொண்டு, அவைகள் தம்மை எவ்வளவு குடைந்தபோதிலும் அவைகளுக்கெல்லாம் சகித்துக்கொண்டு கர்மபலனை அனுபவிப்பார்கள். அவர்கள் இவ்வாறு அனுபவித்து மறுஜன்மத்தில் பரிசுத்தர்களாய் விடுவார்கள். கருமவியாதி எவர்களாலும் உண்டாக்கத்தக்கதல்ல; அது ஈசுவரன் உண்டாக்கியது. அந்த ஈசுவர சிருஷ்டியை நாம் ஒளஷதங்களினல் போக்கடித்துக்கொண்டால் மிகுதி அனுபவிக்கவேண்டிய வியாதியை மறுஜன்மத்தில் தப்பாமல் அனுபவிக்கவேண்டியதாய் நேரிடும். ஆதலால், அவரவர்களின் கர்மவசத்தால் வந்த வியாதியை அனுபவிப்பதே மிகவும் உத்தமம் என்று அறியக்கடவீர்களாக.

பஞ்சாக்ஷர மந்திரத்தினால் உண்டாகும் பலன்.

பிரபஞ்சத்திலுள்ள எல்லா க்ஷேத்திரங்களிலும் பிரசித்தியடைந்தது 'காசி' க்ஷேத்திரம். இது, பிரமரிஷி, தேவரிஷி, ராஜரிஷி இவர்களால் பூஜிக்கப்பட்டது. இந்த க்ஷேத்திரம் கைவல்யத்தை பிரசாதிக்கத்தக்கது. பிரமஹத்தி முதலாகிய மஹாபாபங்களேயும் நாசம் செய்யத்தக்கது. இது, பிரளயத்தில் ஜலத்தினால் மூழ்காமலிருப்பதற்காக காலபைரவன் தன் சூலத்தினால் தாங்கிக்கொண்டிருக்கப்பெற்றது. இந்த காசீ க்ஷேத்திரத்தில் கணபதி, காலபைரவன், பிந்துமாதவன், விசுவேசுவரன், பார்வதி, குஹை, பாகீரதி, மணிகர்ணிகா முதலானவைகளும் உண்டென்று கர்மகாண்டத்தில் சொல்லியிருக்கின்றது. இப்படிப் பிரசித்தியடைந்த காசி க்ஷேத்திரத்தை விசுவநாத சங்கர் என்னும் அரசன் அரசாண்டு வந்தான். அவனுக்கு காசீ விசுவநாதர் கிருபையால் ஒரு பெண் குழந்தை உண்டாயிற்று. அந்தக் குழந்தைக்குக் 'களாவதி' என்று நாமகரணம் வைக்கப்பட்டு வளர்ந்துவந்தது. இக்குழந்தைக்கு எட்டு வருஷங்கள் பூர்த்தியாயின. இப்படியிருக்க ஒருநாள் 'தூர்வாஸ' மஹரிஷி காசிராஜனிடம் வந்தார். ராஜன், அவரைக் கண்டு ஷோடசோபசாரங்களால் பூசித்து அர்க்கிய பாத்தியம் கொடுத்து பாததீர்த்தத்தை உட்கொண்டு, சிரசில் புரோக்ஷித்து (தெளித்துக்) கொண்டு அறுவித சுவைகளால் போஜனம் செய்வித்து ரிஷி வந்த காரியத்தைக் குறித்து அரசன் கேட்டான். ராஜனிடம் சிலநாள் இருக்க வேண்டுமென்று எண்ணி வந்ததாய் ரிஷி சொல்லினர். அப்போது அரசன் தன் குமார்த்தியை வரவழைத்து "அம்மா! இவர் தூர்வாச மஹரிஷி! இந்த

மஹாத்மா ஈசுவரனுக்குச் சமானமானவர். நாம் முன் ஜன்மங்களில் ஏதோ நல்ல புண்ணியம் செய்திருக்கின்றோம். அந்தப்புண்ணிய விசேஷத்தினுல் இந்த மஹானுபாவர் நமது கிருகத்திற்கு எழுந்தருளினர்; இவர் எழுந்தருளியது எப்படி இருக்கின்றதென்றுல், "பாத தூளி படுதலால் இவ்வுலகம் பாக்கியம் எய்ததே" என்பதுபோல் இருக்கின்றது.

இவரது பாதபரிசம் நமது கிருகத்தில் பட்டமாத்திரத்தில் நமது பெரியோர்களும் நாமும் பவித்திரர்களானேம். இப்படிப்பட்ட மஹாத்மா சிலகாலம் வரையில் நம்முடனிருக்க உத்தேசித்து வந்திருக்கின்றனர். இவரை சந்துஷ்டிசெய்தால் ஜகத்தெல்லாம் சந்தோஷமடையும். ஆதலால், நீ இவருக்கு வேண்டிய உபசரணைகளைச் செய்து வரக்கடவாய்" என்று அரசன் ஆஞ்ஞாபித்தான். இவைகளையெல்லாம் ராஜகுமார்த்தி கேட்டு மிகவும் சந்தோஷித்து, தூர்வாச மஹரிஷியினது பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று, இருகைகளையும் குவித்து அஞ்சலி ஹஸ்தத்துடன் நமஸ்கரித்து "ஓ மஹானுபாவா! எங்கள் வம்ச பரம்பரையில் வந்தவர்களெல்லோரும் எப்படிப்பட்ட புண்ணியங்களைச் செய்தவர்களோ தெரியவில்லை. நாங்கள் செய்த புண்ணியமே புண்ணியம். தேவரீருடைய பாததூளி இங்குபட்ட மாத்திரத்தில் நாங்களும் எங்கள் வம்சத்தில் வந்தவர்களெல்லோரும் கிருதார்த்தர்களானேம்" என்று சொல்லி நமஸ்கரித்து, 'தேவரீருடைய நந்தவனத்திற்கு எழுந்தருளவேண்டு' மென்று சொல்லி தூர்வாச மஹரிஷியினது ஹஸ்தத்தைப் பிடித்துக்கொண்டு தனது நந்தவனத்திற்கு அழைத்துச் சென்று அவ்விடமிருக்கும் அரண்மனையிலுள்ள ஓர் உயர்ந்த ஆசனத்தின்மீது எழுந்தருளச்செய்து

உபசரித்தனள். பிறகு பிரதி தினம் காலைமாலைகளில் ஸ்நானம் செய்வித்து நல்ல பட்டுப்பீதாம்பரங்களை யுடுத்தி பூஜைக்கு வேண்டிய வஸ்துக்களையெல்லாம் சேகரித்து வைத்து, தர்ப்பாசனம் அதன்மேல் வியாக்ராசனம் (புலித் தோல்) முதலானவைகளை அமைத்துவைப்பாள். பிறகு ரிஷியானவர் பூஜை அறைக்குட்சென்று பூஜையை முடித் துக்கொண்டு வெளியில் வந்தவுடன், மதுரமான அறு சுவை பதார்த்தங்களுடன் திவ்வியமாகிய அன்னம் பரி மாறி மிகவும் பரிசுத்தமான குளிர்ந்த ஜலம்வைத்து விசிறி யினல் விசிறிக்கொண்டிருப்பாள். ரிஷியானவர் புசித்து எழுந்தவுடன் கைகால்களை சுத்திசெய்து ஹம்ஸதூளிகா மஞ்சத்தின்மீது சயனிக்கும்படிச்செய்து, சிரமம் தீரும்படி பாதங்களைப் பிடித்து அவர் நித்திரை செய்தபிறகு ரிஷியி னது உச்சிஷ்டம் (சாப்பிட்டு மிகுதியாகிய) அன்னம் புசிப் பதற்காக தான் எழுந்துசெல்வது வழக்கம். இவ்விதமாய்ப் பிரதிதினம் அவரை இணைபிரியாமல் உபசரித்து வந்தனள். சில மாதங்கள் சென்றவுடனே அவருக்கு இக்கன்னிகை மேல் விசேஷப் பிரீதியுண்டாய் மிகவும் சந்தோஷித்து ராஜகுமாரத்தியைப் பார்த்து பின்வருமாறு சொல்லி உப தேசம் செய்யப்போகின்றார். "அம்மா குழந்தாய்! உனது நல்ல விருத்திக்கும் உன் விநயத்திற்கும் விவேகத்திற்கும் மிகவும் சந்தோஷமடைந்தேன். உனக்கு "பஞ்சாக்ஷர" மந்திரத்தை இப்போது உபதேசிக்கின்றேன்; அதைப் பெற்றுக்கொண்டு சதாகாலமும் அணுவேனும் சோராமல் இடைவிடாத ஜலப்பிரவாஹம்போல் அதையே ஸ்மரித்துக் (நினைத்துக்) கொண்டு சமாதிநிஷ்டையில் இருந்து காலம் கழித்து வருவாயாகில் உனது சஞ்சித கர்மங்களெல்லாம் ஒழிந்து மஹத்தாகிய கைவல்ய பதவியை அடைவாய்" என்று சொல்லி பஞ்சாக்ஷர மந்திரத்தை உபதேசித்துச்

சென்ருர். அந்த பஞ்சாக்ஷர மந்திரம் உபதேசம் பெற்ற நாள்முதல் விவாஹமாகும் வரையில் நித்திரை வேளை தவிர மற்றக் காலங்களெல்லாம் அந்த தியானத்திலேயே இருப்பாள். சில வருஷங்கள் சென்றவுடன் ராஜகுமாரத்தி யௌவனதசை அடைந்தாள். பிறகு, ராஜன் தன் குமாரத்திக்கு விவாஹம் செய்ய உத்தேசித்து இவளுக்குத் தகுந்த வரன் எவ்விடமிருக்கின்ருனென்று தூதனுப்பினன். தூதர்கள் சென்று, பலயிடங்களில் திரிந்து எங்கும் தகுந்த வரன் கிடைக்கவில்லை என்று வந்துவிட்டார்கள். பிறகு சில தூதர்களை வேறு வேறிடங்களுக்கு அனுப்பினன். அவர்களும் சென்று பலதேசங்களிலும் திரிந்துப் பார்த்து தக்க வரன் அகப்படாமல், கடைசியில் மதுராபுரிக்குச்சென்ருர்கள். அத்தேசத்தை ஆண்டுவரும் யது வம்சத்தைச்சார்ந்த தாசானுபவன் என்னும் அரசனுக்கு ஓர் குமாரனிருந்தான். அவன், நல்ல சௌந்தரியமும் கீர்த்திப்பிரபாவ முடையவனென்றும், சகல பிரஜைகளின் சௌக்கியத்தைக் கோரப்பட்டவனென்றும் தூதர்கள், பிரஜைகளால் தெரிந்துகொண்டு, தன் ராஜனிடம் சென்று ராஜகுமாரனது பராக்கிரமங்களை யெல்லாம் சொல்லினர்கள். ராஜன், அதைக் கேட்டு மிகவும் சந்தோஷித்து அவனே நமது குமாரத்திக்குத் தகுந்த வரன் என்று தீர்மானித்து, மதுராபுரி அரசனையும் அரசகுமாரனையும் வரவழைத்து, வேதவிதிப்படி நல்ல சுப முகூர்த்தத்தில் விவாகம் செய்வித்துக் கொடுத்தான். பிறகு மாப்பிள்ளையினுடன்கூட, தன் குமாரத்தியையும் சில தாதிகளையும் யானை குதிரைகளையும் சில சைன்னியங்களையும் கூட்டி அனுப்பினன். அரசகுமாரன், இவர்களை அழைத்துக்கொண்டு தன் பட்டணம் போய்ச்சேர்ந்தான். பிறகு, ஒருநாள் நல்ல சுபலக்கினத்தில் நிஷேக முகூர்த்தம் (சாந்திமுகூர்த்தம்)செய்வித்தார்கள். முகூர்த்த

அறைக்குள் சென்றவுடன் அரசகுமாரன் தன் பத்னியினது ஹஸ்தத்தைப் பிடித்தான். பிடித்தவுடன் அந்த ஹஸ்தம், உலைக்களத்தில்வைத்துக் காய்ச்சிய இரும்பு எவ்வளவு சூடாயிருக்குமோ அவ்வளவு சூடாயிருந்தது. அரசகுமாரன், அந்தச் சூட்டை சகிக்கமுடியாமல் கையை விட்டுவிட்டு, மஹா ஆச்சரியப்பட்டு தன் நாயகியைப் பார்த்து "உன் ஹஸ்தத்தைத்தீண்டிய மாத்திரத்தில் என் சரீரமெல்லாம் தீச்சூடு கொளுத்திவிட்டதற்குக் காரணமென்ன" வென்று கேட்டான், அப்போது ராஜனது பத்தினி, "ஓ அரசே! உமது சரீரம் ஆசாரங்களில்லாமல் ஜீவஹிம்சை செய்து மாமிசங்களைப்புசித்து வளர்ந்து நீசத்துவமடைந்திருக்கின்றது; எனது சரீரமோ அப்படியல்ல, தூர்வாச மஹரிஷியால் பஞ்சாக்ஷரமந்திரம் உபதேசம் பெற்று அதை சதாகாலமும் இடைவிடாமல் ஜபித்துக்கொண்டு வருகிறபடியால், சகல பாபங்களும் நசித்து இந்த சரீரம் பவித்திரமாய் விட்டது; அதனால் அக்கினி ரூபமாயிருக்கின்றது. இப்படிப்பட்ட பரிசுத்தமுடைய சரீரத்தை, நீர் தீண்ட சாத்தியப்படுமோ! விரதம் செய்யும் ஸ்திரீகள், உபவாசமுள்ள ஸ்திரீகள், கருப்பிணி ஸ்திரீகள், தீர்க்க வியாதியுள்ள ஸ்திரீகள் முதலானவர்கள் ஸம்போகத்திற்கு அருகரல்லர்" என்று சொல்லினள். இதைக்கேட்ட ராஜகுமாரன் மிகவும் விசனமடைந்து தன் நாயகியைப்பார்த்து ஓ நாயகிரத்னமே! அப்படிப்பட்ட மஹா பாபங்களையெல்லாம் நிர்மூலம் செய்யத்தக்க மஹா மந்திரமாகிய "பஞ்சாக்ஷர"த்தை நீ எனக்கு உபதேசம் செய்யவேண்டுமென்றுகேட்டான். அதற்குப் பத்தினியானவள் சொல்லுகின்றாள். "ஓ பிராணவல்லபா! நான் உமக்கு நாயகியாயிருக்கின்றேன். ஆதலால், இந்த மஹாபஞ்சாக்ஷரத்தை உமக்கு உபதேசிக்கலாகாது; நமது குலகுருவாகிய கர்க மஹா

முனியினிடம் நீர் உபதேசம் பெற்றுக்கொண்டு பவித்திரரானபிறகு என்னைத்தீண்டலா" மென்று சொல்லி தன் நாயகனை அழைத்துக்கொண்டு அர்த்தராத்திரி வேளையில் கர்கமஹாமுனி ஆசிரமத்திற்குச் சென்றாள். அவ்விடம் சென்று தாம் வந்திருக்கும் சேதியை கர்க மஹா முனிக்குக் கூறும்படி சிஷ்யர்களிடம் சொல்லி யனுப்பினள். சிஷ்யர்கள் சென்று இளவரசியார் வந்திருக்கும் சேதியை முனீசுவரரிடம் சொல்லினர்கள். பிறகு முனீசுவரர் அவர்களை ஆசிரமத்திற்குள் வரவழைத்து தர்ப்பாசனத்தின் மீது உட்காரும்படிச் சொல்லி ஆசீர்வதித்து "அம்மணீ! நீங்கள் பள்ளியறையை விட்டு இந்த அர்த்தராத்திரி வேளையில் இவ்விடத்திற்குப் பாதசாரிகளாய் வருவதற்குக் காரணமென்ன" என்று கேட்டனர். இளவரசியும் இளவரசனும் முனீசுவரரது பாதத்தில் விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று. இருகைகளையும் குவித்து,

"சுவாமி! இவ்வரசன் நல்ல ஆசாரங்க ளில்லாமல் பரஸ்திரீகளை மோஹித்து ஜீவஹிம்சைசெய்து மாமிசங்களைப்புசித்து மஹா பாபங்களுக் குட்பட்டு நீசத்துவமடைந்திருக்கின்றார். ஆதலால், இவரது பாபகர்மங்களையெல்லாம் பஞ்சுப்பொதியில்பட்ட நெருப்புப்பொறி எவ்விதமாய் அப்பஞ்சுப்பொதிகளை பஸ்பம் செய்விக்கின்றதோ அதுபோல் பஸ்பம் செய்விக்கத்தக்க மஹா மந்திரமாகிய 'பஞ்சாக்ஷர'த்தை இவ்வரசனுக்கு உபதேசம் செய்விக்கும் பொருட்டு இந்த அர்த்தராத்திரி வேளையில் தேவரீருடைய ஆசிரமத்திற்கு வந்தோம். இவரது சரீரம் பவித்திரமாகும் வரையில் அடியாளைத் தீண்டலாகாது" என்று முனிவரிடம் சொல்லினள். இவ்வார்த்தைகளையெல்லாம் கேட்ட கர்க மஹாமுனி மிகவும் சந்தோஷித்து அவர்களிருவரையும் யமுனா நதிக்கு அழைத்துச்சென்று களாவதியைக் கரை

யின் மீதிருக்கும்படிச் சொல்லி அரசனை நதியில் இறங்கும்படிச் செய்து சங்கல்ப பூர்வகமாய் அகமர்ஷண (பாபங்களைப்போக்கடிக்கத்தக்க) ஸ்நானம் செய்வித்து விபூதியைத் தரிக்கும்படிச் சொல்லி, பிறகு அரசகுமாரன் கரைமீது வந்தவுடன் சித்தாசனத்தில் உட்காரும்படிச் செய்து அரசனது இரண்டு ஹஸ்தங்களையும் ரிஷியினது பாதத்தின்மீது வைக்கும்படிச்சொல்லி சாஸ்திரவிதிப்படி உடல் பொருள் ஆவி இம்மூன்றையும் தத்தம்செய்துகொண்டு ஹஸ்தமஸ்தக சையோகம்செய்து சிவ பஞ்சாக்ஷரமந்திரம் உபதேசித்தார். அரசகுமாரன் உபதேசம் பெற்றவுடன் மனதை ஒரே நிலையாய் நிறுத்தி பஞ்சாக்ஷரமந்திரத்தை ஜபித்துக்கொண்டிருந்தான். இப்படி ஜபித்துக் கொண்டிருக்கும்போது, அரசனுடைய பாப கர்மங்களெல்லாம் அனேககோடி கருங்காக ரூபங்கொண்டு அரசனது சரீரத்திலிருந்து புறப்பட்டு, ககன மார்க்கமாய்க் கிளம்பி படபட வென்றடித்துக்கொண்டு எரிந்து, சாம்பலாய் யமுனா நதியில் விழுந்தன. இவைகளையெல்லாம் அரசகுமாரன் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டு இவ்விஷயங்களை எல்லாம் தன் குருவாகிய கர்க மஹாரிஷியிடம் சொல்லினன். அதைக்கேட்ட ரிஷியானவர் சொல்லுகின்றார், "ஓ அரசனே! நீ முன் ஜன்மங்களில் செய்துவந்த பாபகர்மங்களெல்லாம், பஞ்சாக்ஷர மந்திர ஜபத்தால் கருங்காக ரூபங்கொண்டு (பஞ்சுப்பொதியில் பட்ட தீப்பொறியானது பஞ்சுப்பொதிகளை எவ்விதமாய் பஸ்பம் செய்விக்கின்றதோ அதுபோல்) இந்த பஞ்சாக்ஷர அக்கினி, உன் பாபகர்மங்களையெல்லாம் பஸ்பம் செய்து விட்டது. ஆதலால், நீ இன்றுமுதல் இந்த பஞ்சாக்ஷர மந்திரத்தை, சதாகாலமும் ஜபித்துக்கொண்டே வரவேண்டும்" என்று சொல்லி இளவரசனையும் இளவரசியையும் ஆசிர்வதித்து அனுப்பினர். பிறகு, அரசகுமாரன்

குருவினிடம் ஆஞ்ஞைபெற்றுத் தன் நகரம் சேர்ந்து, தம் பதிக ளிருவரும் பஞ்சாக்ஷரமந்திர ஜபம் தவறாமல் சதா காலமும் செய்துவந்தார்கள். அப்படிப்பட்ட பஞ்சாக்ஷா மந்திரம் ஜபம் செய்யும் முறைமை இதனடியில் சக்கா மூலமாய்க்காட்டி உபதேசித்திருக்கின்றோம். அதுபோல் உலகத்திலுள்ள ஸ்திரீ புருஷர்க ளெல்லோரும் பேசும் வேளைகளில் தவிர மற்றக்காலங்களெல்லாம் அணுவேனும் சோமல் சதாகாலமும் பஞ்சாக்ஷர மந்திரம் ஜபித்து வந்தால் அவர்களினுடைய புண்ணிய பாப கர்மங்களெல்லாம், பஞ்சாக்ஷர அக்கினியினால் பஸ்பமாய், அவர்கள் மோக்ஷமென்னும் பதவியைத் தப்பாமல் அடைவார்கள்.

பஞ்சாக்ஷர மந்த்ரோபதேசம்.

பஞ்சாக்ஷாமந்திரம் ஜபம் செய்யவேண்டுமென்று கோரப்பட்ட ஸ்திரீகளாயினும் புருஷர்களாயினும் மனம் சஞ்சலமில்லாமல் (ஓடாமல்) அசைவற்று நிற்பதற்காக தன் வீட்டில் சப்தங்கள் கேளாத ஏகாந்த அறையைப் பூஜை வீடாகச் செய்யவேண்டும். அவ்வீட்டில் மனம் லயிக்க மிகுந்த பரிமளமுள்ள வாஸனை வஸ்துக்கள் வைத்து அதில் இதரர்கள் பிரவேசிக்காதபடி நிர்ணயம் செய்து, தான் பஞ்சாக்ஷரமந்திரம் ஜபம் செய்வதற்காக ஒருபெரிய மணையின்மீது மான்தோல் அமைத்து அதன்மீது அபான வாயு படாவண்ணம் வெள்ளை வஸ்திரம் மடித்து விரித்து சித்தாஸனத்துடன் உட்கார்ந்து, இடுப்பு கூன்வளையாமல் சித்திரப்பதுமைபோல் சரியாய்நிறுத்தி முகத்தை நிமிர்த்தி நேராய் நிறுத்தி, இந்நூல் 419-வது, பக்கம் காட்டியிருக்கும் 'சிந்முத்திரை' யை விரல்களால் பிடித்து அடியில் காட்டியிருக்கும் சக்கரத்தில் அமைத்துள்ள பஞ்சாக்ஷர மந்திரம் ஜபம் செய்யவேண்டும்.

ந ம சி வா ய.

இதுவே பஞ்சாக்ஷரமந்திரம்.

"காண்பேனே 'ந' காரமது 'ம' காரம் புக்கும்
கருத்தான 'ம' காரமது சிகாரம் புக்கும்
தேண்பேனே 'சி' காரமது 'வ' காரம் புக்கும்
சிவசிவ 'வ' காரமது 'ய' காரம் புக்கும்
காண்பேனே 'ய' காரமது சுடரிற் புக்கும்
குருவான சுடரோடி மணியிற் புக்கும்
நாண்பான மணியோடி பரத்திற் புக்கும்
நற்பரந்தான் சிவம்புக்குஞ் சிவத்தைக்கேளே."

"நகாரமாகிய சேரியை நஞ்செண வெறுத்து
மகாரமாகிய மயலெலாம் வேருடன் களைந்து
வகாரமாகிய வனத்திருந் திளைப்பாறி
சிகாரமாகிய சிவனையடைந்தனன் ஜீவன்."

"அஞ்செழுத்திலே பிறந்து அஞ்செ
        ழுத்திலே வளர்ந்து
அஞ் செழுத்தை யோதுகின்ற
        பஞ்சபூத பாவிகாள்
அஞ் செழுத்தி லோரெழுத்தை
        அறிந்துகூற வல்லிரேல்
அஞ்ச லஞ்சலென்று நாதன்
        அம்பலத்தி லாடுமே."

ந ம சி வ ய.

"நமசிவய" என்னும் ஐந்து அக்ஷரங்களுக்கும் 'ய' என்னும் மந்திரம் ஜீவனாயிருக்கின்றது. இந்த 'ய' என்னும் ஜீவனால் 'நம, சிவ' என்னும் இரண்டு மந்திரங்களைச் சுவாசத்துடன் சேர்த்து உள்ளுக்கிழுத்து வெளியில் விட வேண்டும். இந்த பஞ்சாக்ஷர மந்திரமே, பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசங்கள்; இவைகளே பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மஹேசுவரன், சதாசிவன். இவ்வைந்துபேர்களும் சுவாதிஷ்டானம் மணிபூரகம் அநாஹதம் விசுத்தி ஆஞ்ஞேயங்களுக்கு அதி தேவதைகளாயிருந்து சுவாசத்தை நடத்திக்கொண்டு வருகின்றார்கள். பிருதிவி (பூமி) 'ந' காரம்; இந்த 'ந' காரமே பிரமன்: அப்பு (ஜலம்) 'ம' காரம்; இந்த 'ம' காரமே விஷ்ணு: தேயு (அக்கி) 'சி' காரம்; இந்த 'சி' காரமே ருத்திரன்: வாயு (காற்று) 'வ' காரம்; இந்த 'வ' காரமே மஹேஸ்வரன்: ஆகாசம் (வெளி) 'ய' காரம்; இந்த 'ய' காரமே சதாசிவன்: இந்த பஞ்சாக்ஷர குருரகசியத்தை அடியில் சொல்லுகின்றோம். ஆத

லால், இதையே "குரு" வாக்காய் நம்பி இதில் உபதேசித்தபோல் அப்பியாசம் செய்து வரவேண்டும்.

854-வது, பக்கம் நெம்பர் 5-ல் காட்டிய 'ய' என்னும் மந்திரத்தின் மத்தியிலிருப்பது மூக்குத்தண்டு. அந்த மூக்குத்தண்டுக்கு வலது இடது பாகங்களிலுள்ள மூக்கின் ரந்திரங்கள், சிவன் (சூர்யநாடி) சக்தி, (சந்திரநாடி)கள் என்று சொல்லப்பட்ட சுவாசங்கள் நடக்கும்படியான மார்க்கங்கள். இம்மார்க்கமாய் 'ய' என்னும் ஜீவாக்ஷரத்தை நீக்கி 4, 3-நெம்பரில் காட்டிய 'நம' என்னும் மந்திரத்தை சுவாசத்துடன் சேர்த்து உள்ளுக்கிழுத்து சுவாஸம் வெளிவிடாமல் சிலநேரம் 'ஓம்' என்று மனதினால் நினைத்து மறுபடியும் சுவாசம் வெளியில் விடும்போது 2-1, நெம்பரில் காட்டிய 'சிவ' என்னும் மந்திரத்தை சுவாசத்துடன் சேர்த்து வெளி விடவேணடும்.

அதாவது ஒவ்வொரு சுவாசமும் உட்பிரவேசிக்கும்போது அந்த சுவாசத்துடன்கூடவே 'நம' என்னும் மந்திரத்தை மனதுடன் சேர்த்து உள்ளுக்கிழுத்து, "ஓம்! ஓம் என்னும் மந்திரத்துடன் சற்றுநேரம் நிறுத்தி, மறுபடியும் சுவாசம் வெளிவிடும்போது 'சிவ' என்னும் மந்திரத்துடன் விட்டு, மறுபடியும் சுவாசம் உள் செல்லும்போது 'நம' என்னும் மந்திரத்தினால் உள்ளுக்கிழுத்து 'ஓம்' என்னும் மந்திரத்துடன் சற்றுநேரம் நிறுத்தி, மறுபடியும் சுவாஸம் வெளிவிடும்போது 'சிவ' என்னும் மந்திரத்துடன் சேர்த்து விட்டுக்கொண்டு வரவேண்டும்.

என்றால், சுவாசம் 'நம' என்னும் மந்திரத்துடன் உள்ளுக்கிழுத்து, 'ஓம்' என்னும் மந்திரத்துடன் சற்றுநேரம் நிறுத்தி, 'சிவ' என்னும் மந்திரத்துடன் வெளியில் விடவேண்டும்.

'ய' என்பது ஜீவன்; இந்த ஜீவனால் மற்ற நான்கு மந்திரங்களையும் ஐபிக்கவேண்டும். செ. 5-ல், காட்டிய 'ய' என்னும் அக்ஷரத்தில் இரண்டு கால்கள் காட்டப் பட்டிருக்கின்றன. அந்தக் கால்களே உசுவாச நிசுவாசங்களாகும். என்றால், உள்ளுக்கும் வெளிக்கும் ஆடும் மூச்சுகளேயாம். அந்த உசுவாச நிசுவாசங்களை 'ய' என்னும் ஜீவன் உள்ளுக்கும் வெளிக்கும் இழுத்துக்கொண்டிருக்கின்றதென்று அறிவீர்களாக. இதை யார் ஒருவர் விடாமுயற்சியாய் அப்பியசித்து வருகின்றார்களோ அப்படிப்பட்டவர்களின் மனம் இறந்து ஆத்மசொரூபத்தில் லயித்து முன்சொல்லிய காசிராஜன் குமார்த்தியாகிய களாவதி அடைந்த சுகம் அடைவார்கள். இதன் அனுபவம் பிரத்தியக்ஷமாய் அப்பியாஸம்செய்து வரப்பட்டவர்களுக்கு மாத்திரம் தெரிய வருமே யொழிய இதரர்களுக்குத் தெரியவரமாட்டாதென்று அறிவீர்களாக.

இந்த பஞ்சாக்ஷர மந்திரம் இவ்வாறு கர்ம விதிப்படி செய்யவேண்டிய முறையைவிட்டு, பிரதிதினம் அனேக பொய்களைச் சொல்லப்பட்ட கர்மவாக்கினால் நமசிவாய! நமசிவாய! நமசிவாய! என்று உதட்டை அசைத்து விரல்களை மடிப்பவர்களும், ஜபமாலையைத் திருப்புகிறவர்களுமா யிருக்கின்றார்கள். இவ்வாறு ஜபிப்பதனால் யாதொரு பிரயோஜனமும் இல்லையென்று அறியக்கடவீர்களாக.

ஓம் என்னும் மஹா மந்திரத்தின் ரஹஸ்யம்,

எனதன்பர்களே !

ஏகாக்ஷரமாகிய ஓம் என்னும் பிரணவத்தை, துவைதிகளுக்கும் அத்வைதிகளுக்கும் விசிஷ்டாத்வைதிகளுக்கும் ஏகவுருவமாய்க் காட்ட, இதனடியில் காசிகாண்ட பிரமாணத்துடன் சொல்லுகின்றோம்:

யுகமொரு நூறு நீங்கா யோகினி லுயங்கு வேதன்
அகமல ரதனி லோங்கு மலங்கொளி யொன்று தோன்றி
நிகரில் பாதலங்க ளேழுங் கடந்தத நிலையில் மீட்டும்
புகுதலு முலகம் போர்க்கும் பொங்கொலி யெழுந்த தன்றே.

பொங்கொலி யெழுதல் கேட்டுப் பொறிபுல னடக்கி யாற்றுந்
துங்கநல் விரத நீங்கிச் சதுமுகன் றனைவி நோக்கச்
செங்கண் மாலுருவா யாதி வேத காரணமாய்ச் சீர்த்தி
தங்கு சாத்துவித மாகு மகர முன்சார்தல் கண்டான்.

இராஜத குணத் திரண்டாம் வேத காரணமாய் வேதன்
பராவரு முருவமுற் றோர் வடிவமா யனைத்து மாகி
விராவிய பேருலக மீன்ற வன்னையாய் விளங்கு மென்னுந்
தராதல முழுதும் போற்று முகர முன்சாரக் கண்டான்.

சாம காரணமாய் நோற்ற றொழிற் குயர் தலைமைத் தாகிக்
காமனை யெரித்த முக்கட் கடவுளென் வடிவு போன்று
தோமற விளங்கு மிக்க தாமத குணத்திற் றோன்று
நாமநூல் மறையோ ரேத்து மகரமு நண்ணக் கண்டான்.

உலகெலா மோங்கு சத்தப் பிரமமா புவமை யின்றி
யலகில் பேரின்ப மாகி வாக்கினுக் காதி யாகி
யிலகொளி விரிக்குந் தூய விச்சுவ வுருவா யென்றுந்
தொலைவி லானந்த மாகு நாத முன்றோன்றக் கண்டான்.

காரண மனைத்துந் தோன்றுங் காரண மாகி யெங்கும்
பூரண மாகி யோங்கும் பிரமமாய்ப் பொலிந்து நின்ற
வேர்பெற விளங்கித் தோன்றும் விந்துவை நோக்கி யெங்கும்
சீர்கெழு பிரணவத்தைத் தெருளுற வேத்துமன்றே.

நூறு யுகங்கள், யோகத்திலிருந்த பிரமதேவருடைய இருதய கமலத்தின் மத்தியில் அகாரத்தின் சிரசாகிய சுழி சுழன்று, அவ்விடமிருந்து நீளமாய்ப்புறப்பட்டு அண்ட புவனங்க ளுள்ளவரையில் சென்று, அண்ட புவனங்கள் முடிந்தவுடன் அங்கு சுற்றிமுடிந்து திரும்பி மறுபடியும் அகாரத்தின் சிரசாகிய சுழியின் கீழ் மத்தியில் வந்து கலந்து, சிலதூரம் செல்லும்போது அதற்கு அப்புறம் ஒன்றுமில்லாம லிருந்தபடியால் அந்த அகரத்தை அப்பால் போகவிடாமல் குறுக்கிட்டு காலாய் நின்று, அகரமாய்த் தோன்றிய எழுத்தை தன் இருதயத்தில் பிரமதேவர் கண்டவுடன், தமது யோகம் கலந்து பார்க்க, அந்த அகாரத்தில் நாதசப்தம் பிறந்ததைக் கேட்டார். அந்த அகாரம் சாத்விககுணமும் விஷ்ணுவின் அம்ஸமும் ருக் வேதத்திற்கு முதற்காரணமும் கீர்த்தி பொருந்தியதுமாய் இருக்கப்பட்டது. அந்த அகாரம் இதனடியில் காட்டப் பட்டிருக்கின்றது.

இராஜஸ குணரூபமான யஜுர்வேதத்தில், பிரம தேவர் வணங்கத்தக்க ஒ ருருவங்கொண்டு, உலகங்களைப் பெற்ற மாதாவாகிய உமயவள் வடிவம்போல், பூ உலக முழுதும் துதிக்கும்படியான உ காரம் தோன்றுதலை பிரம தேவர் கண்டார். அந்த உ காரம் இதனடியில் காட்டப் பட்டிருக்கின்றது.

உ

ஸாமவேதப் பிரியனாயும், தபோ விரதங்களுக்குத் தலைவனாயும், மதமென்கின்ற மன்மதனை ஞானக்கண்ணால் எரித்த கடவுளின் ரூபமாயும், குற்றமற்றவனாய் விளங்கு பவனும் தாமதகுணத்தில் உதித்தவனும் வேதங்கள் துதிக் கப்படுவதுமாகிய ம காரம் தோன்றுதலை பிரமதேவர் கண்டார். அந்த ம காரம் இதனடியில் காட்டப்பட்டிருக் கின்றது.

ம

உலகத்தில் உயர்ந்த சப்தமே ஒப்பற்ற பிரம்மமாய்ச் சொல்லுதற்கரிய பேரின்பமயமாயும், வாக்குக்குத்தலைமையாயும், பிரகாசிக்கின்ற விஸ்வரூப முடையதாயும், எக்காலத்துங் குறைவில்லாத ஆனந்தரூபமான நாதம் தோன்றுதலை பிரமதேவர் கண்டார்.

சகல காரணங்களும் தோன்றுதற்கு மூலகாரணமாயும், எங்கும் பரிபூரணமாயும் நிறைந்திருக்கும் விந்துவைப் பார்த்து, எவ்விடத்துஞ் சிறந்து விளங்கும் பிரணவத்தை பிரமதேவர் தெளிவோடு அறிந்து துதி செய்கின்றார்; இவைகளுக்குக் காசிகாண்டம் பிரமாணம்;

உலகெலா மளிக்கு மாற்றா லோமெனும் பெயர தாயிற்
றலகறு கரும வாரி யகன்கரை கடத்த றன்னு
லிலகு தாரகமென ரேுதும் பெயரொடு மியைந்த தென்னு
மலர்தலை யுலகம் பூத்த மறையவன் பழிச்சு கின்றான்.

ஓங்கார வுருவா யோது மெழுத்தா யோங்கா ராதி
நீங்கரும் வன்னந தோன்று நிலையதா யுயிர்கள் யாவுந்
தாங்கியு மதனுட் டோயாச் சதாசிவ மாகி நான்காந்
தீங்கறு மறையாய் நாத விந்துவாய்ச் சிவ மதாகி.

அகரமா யுகரமாகி மகரமா யழி வொன்ன நின்றிப்
பகர்வரும் பவராய்த் தூய சர்வராய்ப் பிரம மாகிப்
புகலருந்த குணக் குன்றாகிப் புவன கோடிகளும் பூத்த
நிகர றுதுரிய மாகி நிருமல மாகி நின்றாய்.

குறுமையாய் நெடுமையாகிக் குணங் குறி யுருவ மில்லாச்
சிறுமையாய்ப் பருமை யாகிச் சித்துரு வாகி நான்கு
மறை புக விளையராகி விருத்தராய் வண்ண மைந்தா
யறிவரு முதாத்த மிக்க வனு தாத்தஞ் சொரிதமாகி.

எடுத்தலே படுத்தல் மிகநலிதல் மூக்கிதழ் நாப் பல்லோ
டடுத்திடு மண்ணஞ் சார்ந்து பிறந்த வக்கரங்க ளாகி
நடத்தலோ டிருத்த லென்னும் பாவக நண்ணி நண்ணுக
கடுத்திகழ் மிடற்ற ராகிக் களைகணுய ருவ மாகி.

மலரயனுகி யாவும் வருத்து மால் வடிவ மாகி
யுலகெலாங் காத்து முக்க ணெருவனும் யொடுக்கிப் பின்னு
மல இலா புருவமாகி யேகமா யனுதி யாகி
யிலகு பேரொளியே யெந்தாயென் றெடுத் தேத்தல் செய்
[தான்.

உள்ளநெகிழ் விழிபனிப்ப பழிச்சிப்
பழிச்சி யுவந் தேத்து
மள்ளற் கமலப்பொகுட் டுறைபு
மலரோன்முன்ன ரருள் புரிவான
கொள்ளையினவண் டிசைபயிலக் கொழுந்தேன்
பிலிற்று நறுங் கொன்றை
வள்ள விலிங்கத்திடை யணிதுவந்துதோன்றி
மகிழ்ந் துரைப் பான்.

விழைந்த கேட்டியென வமலன் வினவலோடும் மலர்க் கிழவன்
தழைந்த வுவகை மீதூரத் தண்டிறபணிந்து கஜி ருமிழுங்
குழைந்த மதிதாழ் புரிசடை யெங்குழகா மினது குற்றடியேன்
பழங்க ணகல விவ்விலிங்கத் திருத்தி யென்னப் பகர்ந்தனனுல்.

அனையநேர்ந்தே னிவ் விலிங்கத் தகலா தடைவ விதனுமம்
வினைக டக்கு மோங்கார விலிங்க மென்ன விளம்பிடுக
வனையு முலக முழுதழைக்கும் வரமு மளித்தோம் பிதாமகனென்
றிதனி னெவரும் பணிந்தேத்தும பேரு முனக்கே யீந்தனமால்.

உலக மெல்லாவற்றையும் சிருஷ்டித்ததனுல் ஓங்கார மென்னும் பெயருடையதாயிற்று சொல்லுதற்கரிய விசாலமாகிய கர்மமென்னும் சமுத்திரத்தைத் தாண்டச் செய்வதால், தாரக மந்திரமாயிற்றென்று உலக சிருஷ்டி செய்யும் பிரமதேவர் துதிக்கின்ருர்.

ஜீவகோடிகள் ஜபிக்கும் பஞ்சாக்ஷரத்தில் சேர்ந்து அவர்களை தம்முட்கொண்டு, விலக்ஷணனுயும் சதாசிவனு யும் குற்றமற்ற நான்கு வேதமாயும் சிவமாயும் நிற்கின்றீர்.

அகரமாய் உகரமாய் மகரமாய் சொல்லுதற்கரிய பக

வானாய் சர்வமுமாய் பிரம்மமாய் அளவிடற்கரிய குணமலை யாய்ப் புவனகோடிகளுண்டாகின்ற நிகரற்ற துரியமாய் மல ரகிதராய் நிற்கின்றீர்.

குறிதாயும் நெடிதாயும் குணங்குறி உருவங்க ளில்லாத, அணுவாய் ஸ்தூலமாய் சித்ரூபமாய் நான்கு வேதங்களும் கூறும் இளைஞனராய் விருத்தராய் பஞ்சவர்ணங்களாய், உரத்ததொனி சமதொனி தாழ்ந்த தொனி உடையவருயும் இருக்கின்றீர்:

எடுத்தல் படுத்தல் நலிதல் மூக்கிதழ் நா பல்லோடு சேர்ந்த மேல்வாயைப் பொருந்திப் பிறக்கின்ற அக்ஷரங்களாய், நடத்தலோ டிருத்த லென்னுந் தன்மையை பொருந்தியும் பொருந்தாமலும், இருக்கும் நஞ்சை அணிந்த கண்டத்தை யுடையவராயும் இருக்கின்றீர்.

பிரமாவாயிருந்து சர்வமும் சிருஷ்டித்து, விஷ்ணு வடிவமாயிருந்து உலகெலாம் காத்து, திருநேத்திரதாரியாயிருந்து யாவற்றையும் சங்கரித்துப் பின்பு அளவிடற்கரிய வுருவங்களாகியும் ஏகரூபமாகியும் விளங்குகின்ற அகண்ட ஜோதியே என்பிதாவேயென்று பிரமதேவர் பலமுறையுந் துதிசெய்தனர்.

மனங் கசிந்து கண்ணீர் பெருகப் புகழ்ந்து புகழ்ந்து துதிக்கின்ற தாமரையாசனராகும் பிரமதேவருக்கு அனுக்கிரகம் செய்ய, வண்டுகள் இசைபாடுகின்ற தேன்பொருந்திய கொன்றைமாலை யணிந்தவரும் கிருபையுள்ளவருமான சிவபெருமான், பிரமதேவர் பூசித்த லிங்கத்தினின்று மகிழ்ந்து கூறுகின்றார்:

“ஹே! பிரமதேவா! நீ விரும்பியதைக் கேட்கக் கடவாய்” என்று சிவபெருமான் லிங்கத்தினின்று கேட்டனர். அப்போது பிரமதேவர் மிகவும் சந்தோஷித்து மரம் போல் வீழ்ந்து நமஸ்கரித்து, நிலா வீசுகின்ற ஜடாபாரத்தை

யுடைய எனது தலைவனே உமது சிற்றடியனாகிய அடியேனது ஊழ்வினைகள் நீங்கும்படி இந்த லிங்கத்தில் எப்பொழுதும் எழுந்தருளி யிருக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர்.

நீ கேட்டதுபோல் இந்த லிங்கத்தில் எப்போதும் இருப்பேன்; இந்த லிங்கத்தின் நாமம் துன்பம் தீர்க்கும் ஓங்கார லிங்கமென்று யாம் பெயரிட்டதுபோல் உலகத்தார் சொல்ல வரமும் கொடுத்தேன்; உன்னால் இந்தலிங்கத்திற்கு இப்பெயர் உண்டாயிற்றென்று உலகத்தார் சொல்ல வரமும் கொடுத்தேனென்று சொல்லி மறைந்தனர்: இனி, ஓம் என்னும் ஏகாக்ஷர மந்திர மஹிமையை உபநிஷத் மூலமாய்ச் சொல்லுகின்றோம்.

சுரு || அஷ்டாங்கம் ச சதுஷ்பாதம் த்ரிஸ்தானம் பஞ்சதைவதம்
ஓங்காரம் யோ ந ஜானாதி ப்ராஹ்மணோ ந பவேத் து ஸ:.
[த்யானபிந்தூபநிஷத்.]

'ஓம்' என்பது 'அ' 'உ' 'ம' என்ற மூன்று அக்ஷரங்கள் சேர்ந்துள்ளது. இவைகளை மாத்திரைகள் என்றும் சொல்வதுண்டு. இவைகளைத் தவிர நான்காவது மாத்திரை அல்லது அர்த்தமாத்திரை அல்லது அமாத்திரை என்று ஒரு மாத்திரையும் அதில் அந்தர்கதமாயிருக்கின்றது. இவைகளின் அர்த்தம் தெரிந்துகொள்ளாவிட்டால் பிரம்மஞானம் உண்டாகவேமாட்டா. ஆகையால் அதை இங்கு விசாரிப்போம்.

'ஓம்' என்பது பரப் பிரம்மத்தின் பெயர்.

சுரு || ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம த்யேயம் ஸர்வமுமுக்ஷுபி:
[த்யானபிந்தூபநிஷத்.]

இது த்யானத்திற்கு மிகவும் சிரேஷ்டமானது. ஸகுணம் நிர்குணம் இரண்டிற்கும் உபயோகமானது. ஸரியான

ஸம்ஸ்காரத்தை அடையாத மனதிற்கு, நிர்க்குண உபாஸனம் பிடிப்படாதாகையால் ஸகுணத்யானம் முதலில் அவசியமாய் வேண்டும். இதற்கு ஒரு மூர்த்தியை அதாவது, சிவனோ விஷ்ணுவோ கணபதியோ ஸுப்ரமண்யரோ பார்வதியோ லக்ஷ்மியோ இன்னும் அவரவர்களுக்கு இஷ்டமான தேவதா ஸ்வரூபத்தை அதாவது, தலை முகம் கை கால் முதலான அவயவங்களுடன் ஒரு பிம்பத்தை மனக்கண்ணால் பார்த்து,அதிலேயே மனதை ஒரே நாட்டமாக நிறுத்தி அப்பியாசம்செய்து அந்த அப்பியாச முதிர்ச்சியினால், தன்னை அறவே மறந்து, தானென்றும் தேவதை என்றும் துவைத (இரண்டான) பாவமில்லாமல் ஏகமாய் தேவதா ஸ்வரூபத்தில் ஐக்கியமாய்விடும். இது ஒருவிதயான ஸகுணோபாஸனம். இதன் பலன் என்னவென்றால், எந்த தேவதையை உபாஸித்து அதன் பாவத்தை யடைகின்றானோ அந்த உபாஸகனுக்கு, அந்த தேவதையின் ஐசுவரியங்களெல்லாம் உண்டாகும். இதைவிட அதிக உத்கிருஷ்ட (சிரேஷ்ட) மான த்யானம் எதுவென்றால், அவயமுள்ள தேவதா பாவனையை விட்டு, மனதை ஒரே இடத்தில் நிறுத்தவேண்டியதற்காக ஒரு அடையாளத்தை அதாவது, லிங்கத்தை மனதில் நிறுத்தி, அதை அதிஸூக்ஷ்மமான பரமாத்மாவாக நினைத்து அதில் மனதை லயப்படுத்தினால், ப்ரம்ம பாவத்தை யடைந்ததாகும், இதன் பலன் என்னவென்றால், உபாஸகன் ப்ரம்மமாகவே ஆய்விடுவான். "யத் பாவம் தத் பவதி" என்ற நியாயப்பிரகாரம், இப்படிச்செய்ய உபயோகமான அனேக லிங்கங்களில் இந்த 'ஓம்' என்னும் லிங்கம் மிகவும் சிரேஷ்டமானது. ஏனென்றால் 'ஓம்' என்பது நிரம்ப அர்த்தபுஷ்டியுள்ளது.

சுரு || "சர்வம் கலு இதம் ப்ரஹ்ம", "நேக நாநாஸ்தி கிஞ்சந", "ப்ரஹ்மைமேவேதம் ஸர்வம்". "ஆத்மைமேவேதம் ஸர்வம்", "அஹமேவ இதம் ஸர்வம்",

என்னும் மஹா வாக்கியங்களில் சொல்லியதுபோல் ஸர்வ சராசர அண்டகோடிகளெல்லாம் ப்ரஹ்மத்தைத் தவிர வேறல்ல என்கிற அகண்டாகார ஏகவிருத்தியை யடைந்தாலல்லது ஏகத்வ (அபேத) ஞானம் வந்து ப்ரஹ்மத்தில் லயிக்க சாத்தியமாகாது. இந்த அகண்டாகார விருத்தியை யடைய 'ஓங்' கார த்யானத்தைத் தவிர வேறு ஸுலபோபாயம் இல்லை. ஆகையால் 'ஓம்' என்னும் பரம சிரேஷ்டமான மந்திரத்தின் மாத்திரைகளையும், அவைகளின் ரஹஸ்யார்த்தங்களையும் மனதில் நிருத்தி மனனம் பண்ணி உபாஸனை செய்ய ஆரம்பிக்கவேண்டும். ஆதலால், அந்த ரஹஸ்யத்தைத் தெரிவிக்கின்றோம் கேளுங்கள்.

சுரு || ய ஓங்காரஃ ஸ ப்ரணவஃ யவஃ ப்ரணவஃ ஸ ஸர்வவ்யாபீ ஸ ஏகஃ தத் பரப்ரஹ்ம. [அதர்வஸிர உபநிஷத்.]

'ஓம்' என்பது மஹா புனிதமான அக்ஷரம்; அதாவது அழியாப்பொருள். என்றால், பர ப்ரஹ்மம். இதற்கு எப்படி 'ஓம்' என்று பெயர் வந்ததென்றால்,

சுரு || "யஸ்மாதுச்சார்யமாண ஏவ ப்ராணாந் ஊர்த்வம் உத்க்ராமதி"

என்னும் அதர்வசிர உபநிஷத் வாக்கியரீதியாய் 'ஓம்' என்று சொன்னமாத்திரத்தில், சொல்பவனை மேல்பதவிக்கு (ப்ரஹ்மத்தினிடம்) கொண்டுபோகிறதோ அந்தக் காரணத்தினால் 'ஓ' என்று சொல்லப்படுகின்றது. இதற்கு "ப்ரணவம்" என்றும் பெயருண்டு. அப்படிச் சொல்வதற்குக் காரண மென்னவென்றால்,

சரு || "ப்ராணந் ஸர்வாந் பரமாத்மனி ப்ரணமயதி இதி ப்ரணவஃ."

என்னும் அதர்வசி உபநிஷத் வாக்கியரீதியாய் ப்ராணிகளை, பரமாத்ம ஸ்வரூபத்தில் லயிக்கச்செய்கிற ஸாமர்த்தியமிருப்பதால் 'ப்ரணவம்' என்று சொல்லப்படுகின்றது.

'அ' என்றால் பிருதிவீ, பூஃ, 'உ' என்றால் அந்தரிக்ஷம் புவஃ. 'ம்' என்றால் த்யுலோகம் ஆகையால் 'ஓம்' என்பது மூன்று வியாஹ்ருதிகள் அடங்கிய ஸர்வலோகங்களான திருசிய (பார்க்கப்படும்) பிரபஞ்சம் முழுமையும் குறிக்கின்றது.

'அ' என்றால் ஸூரியன். 'உ' என்றால் சந்திரன். 'ம்' என்றால் அக்கினி. அதாவது 'ஓம்' என்பது எல்லாப் பிரகாசமுள்ள வஸ்துக்களின் ஸ்வரூபம்.

'அ' என்றால் ஸ்தூலம், 'உ' என்றால் ஸூக்ஷ்மம், 'ம்' என்றால் காரணம். அதாவது, ஸ்தூலசரீரம், ஸூக்ஷ்ம சரீரம் (லிங்கசரீரம்), காரண சரீரம் என்று இம்மூன்றையும் குறிப்பிடுகின்றது.

'அ' என்றால் ஸ்திரீ, 'உ' என்றால் 'பூமான்' (புருஷன்), 'ம்' என்றால் நபும்ஸகன். அதாவது 'ஓம்' என்பது லிங்க ஸமஷ்டி.

'அ' என்றால் ருக்வேதம், 'உ' என்றால் யஜுர்வேதம், 'ம் என்றால் ஸாமவேதம், 'ஓம்' என்றால் ஸர்வ வேதங்களின் ஸாரம் என்று அர்த்தம்.

'அ' என்றால் காயத்ரீசந்தஸ், 'உ' என்றால் திரிஷ்டுப் சந்தஸ், 'ம்' என்றால் ஜகதீச் சந்தஸ். 'ஓம்' என்பது எல்லா சந்தஸ்களையும் (விருத்தங்களையும்) குறிக்கின்றது.

'அ' என்றால் கார்ஹபத்யாக்னி, 'உ' என்றால் தக்ஷிணாக்னி, 'ம்' என்றால் ஆஹவனீயாக்னி, அதாவது 'ஓம்' என்பது அக்னி ஹோத்ராதி ஸர்வ கர்மங்களையும் காட்டுகிறது.

'அ' என்றால் ஹ்ரஸ்வம், 'உ' தீர்க்கம், 'ம்' ப்லுதம். 'ஓம்' என்பது மூன்றுவித ஸ்வரங்களின் கூட்டம்.

'அ' என்றால் பாதம், 'உ' என்றால் நாபி, 'ம்' என்றால் சிரசு. ஆகையால் 'ஓம்' என்பது ஸர்வ அவயவங்களோடு கூடிய வ்யக்தி (தேஹ) விசித்திரத்தைப் போதிக்கின்றது.

'அ' என்றால் புத்தி, 'உ' என்றால் மனது, 'ம்' என்றால் அஹங்காரம். அதாவது 'ஓம்' என்றால் ஸர்வேந்திரிய ஸமஷ்டி.

'அ' என்றால் ரஜோகுணம், 'உ' என்றால் ஸத்வ குணம், 'ம்' என்றால் தமோகுணம். அதாவது 'ஓம்' என்பது ஸகலமான குணபேதங்களுக்கு ஆதாரமாயிருக்கும் மாயையை குறிப்பிடுகின்றது.

'அ' என்றால் சிகப்பு, 'உ' என்றால் கபிலவர்ணம், 'ம்' என்றால் கறுப்பு. ஆகையால் ஓம் என்றால், ஸர்வ வர்ணங்களின் பேதம். 'அ' என்றால் பூரகம், 'உ' என்றால் கும்பகம், 'ம்' என்றால் ரேசகம். ஆகையால் 'ஓம்' என்பது ப்ராணயாமாப்பியாஸமான யோகத்தைக் காட்டுகின்றது.

'அ' என்றால் நாதம், 'உ' என்றால் பிந்து, 'ம்' என்றால் களை. 'ஓம்' என்றால் நாத, பிந்து, களைகளின்ஸமஷ்டி.

'அ' என்றால் கிரியாசக்தி, 'உ' என்றால் பிந்து, 'ம்' என்றால் ஞானசக்தி. ஆகையால் 'ஓம்' என்பது மூன்று வித சக்தி ஸ்வரூபம். இதையே ப்ராம்மீ வைஷ்ணவீ ரௌத்ரீ என்றும் சொல்வதுண்டு.

'அ' என்றால் ப்ரம்மா, 'உ' என்றால் விஷ்ணு, 'ம்' என்றால் ருத்திரன். அதாவது 'ஓம்' என்பது மும்மூர்த்தி ஸ்வரூபம்.

'அ' என்றால் வஸுக்கள், 'உ' என்றால் ருத்ரர்கள், 'ம்' என்றால் ஆதித்தியர்கள் அதாவது எல்லா தேவக்கூட்டங்களும 'ஓங்'காரமாகவே யிருக்கின்றன.

'அ' என்றால் சென்றகாலம் (பூதகாலம்), 'உ' என்றால் நிகழ்காலம் (பவ்யம்), 'ம்' என்றால் எதிர்காலம் (பவிஷ்யத்). 'ஓம்' என்பது மூன்று காலங்களையும் காட்டுகின்றது.

'அ' என்றால், ஜாக்கிரதாவஸ்தையில், ஸர்வவெளிப் பிரபஞ்ச வஸ்துக்களையும் அனுபவிக்கிற ஸ்தூலாபிமானியான விசுவன் என்கிற ஜீவபேதம். 'உ' என்றால் ஸ்வப்னாவஸ்தையில் ஸர்வபாஹ்யவஸ்து வாஸனா மயமான மானஸப் பிரபஞ்ச வஸ்துக்களை யனுபவிக்கும் லிங்காபிமானியான தைஜஸ ஜீவன். "ம்" என்றால் ஸுஷுப்தி யவஸ்தையில் எவ்விதமான பிரபஞ்சானுபவமின்றி பரமாத்மாவோடு ஐக்யமாகும் காரணாபிமானியான ப்ராஞ்ஞனென்ற ஜீவன்.

'அ' என்றால் அத்யாத்மத்தில் (பிண்டத்தில்)ஸாக்ஷி ஸ்வரூபனான ஜீவாத்மா, 'உ' என்றால் அந்தராத்மா, 'ம்' என்றால் கூடஸ்தன். அதாவது ஜாக்கிர ஸ்வப்ன ஸுஷுப்தி அவஸ்தைகளில், சிதாபாஸஜீவனை பிரதி பிம்ப ஸ்வரூபத்தை 'ஓம்' காட்டிக்கொடுக்கின்றது.

'அ' என்றால் அதிதைவத்தில் (அண்டத்தில்) ஜாக்கிரத் பிரபஞ்சத்திற்கு அதிபதியாகிய ஸ்தூலாபிமானியான விராட் புருஷன். 'உ' என்றால் லிங்க (ஸூக்ஷ்ம) சரீராபிமானியான ஹிரண்யகர்ப்பன். 'ம்' என்றால் காரண (அஞ்ஞான) சரீராபிமானியான ஈசுவரன். அதாவது 'ஓம்' என்பது ஸர்வகார்ய ப்ரம்மத்தையும் காண்பிக்கிறது.

அதாவது 'ஓம்' என்னும் மந்திரமானது ஸர்வ காமரூப கர்மாக்களினால் ஸம்ஸாரமாகிய எல்லாப் பிரபஞ்சத்தையும் சேர்த்துக்காட்டுகின்றது.

இப்படிச் சொல்வதற்கு ஆதாரம், ப்ரம்மவித்யா மாண்டூக்ய மைத்ராயணீ காலாக்கிருத்ர நாரத பரிவ்ராஜக உபநிஷத்துக்களேயாம்.

சுரு || "அமாத்ரஶ்சதுர்த்தஃ அவ்யவஹார்யஃ ப்ரபஞ்சோபஶமஃ ஶிவஃ அத்வைதஃ ஏவம் ஓங்கார ஆத்மைவ.

[மாண்டூக்யோபநிஷத்.]

இப்படி 'ஓங்' காரத்தின் வ்யக்தமான மூன்று அக்ஷரங்களும் ஸர்வ நஸ்வரமான ஜகத்தை எடுத்துக்காட்டி அவ்யக்தமான நான்காவது மாத்திரையானது ஸகலமான திருசிய (காணப்படும்) பிரபஞ்சத்திற்கு அதீதமாயும் இந்தப்பிரபஞ்ச வஸ்துக்களில் அந்தர்யாமியாயும் அதாவது, "ஸூத்ரே மணிகணா இவ" முத்து ஸரத்திற்குள்ளிருந்தும், வெளியில் காணப்படாத நூல்போலவும், "ததினீவ ஸர்பிஃ" தயிரில் நெய்போலவும், "திலேஷு தைலம்" எள்ளிற்குள் எண்ணெய்போலவும் இருந்துகொண்டு ஆகாசத்தைப்போல் ஏகமா (ஒன்று)யும், நிரவயவமாயும், ஸர்வ வியாபியாயும், ஸூக்ஷமமாயும், அஸங்க (ஒன்றிலும் ஒட்டாதவ) னுயும், அவிகாரியா(மாறுதவனு)யும், அகண்டமா (துண்டிக்கக்கூடாதவனு)யும், நிர்மல (ராக துவேஷாதி அழுக்கில்லாதவ) னுயும், ஸர்வத்திற்கும் ஆதாரமாயும், அப்ரமேயமாயும், ஸர்வ ஸ்வரூபியாயும், ஸர்வ ஸாக்ஷியாயும், நித்யசுத்த நித்யபுக்த நித்ய முக்த ஸ்வரூபனுயும், சிதாகாஸனுயுமிருக்கும் ஆத்மா, அல்லது ப்ரம்மத்தை ஓம் தெரிவிக்கின்றது.

ஆகையால் 'ஓம்' என்பது ரஸதமத்வ, ஆப்தி, ஸமிருத்தி, பரோவரீயத்வ, ஸர்வேசுவரத்வ, அபயத்வ, அமிருதத்வ குணங்களைக் கொடுக்கத்தக்க ஓர் மஹா ரகசியமான பரிசுத்த மந்திரமாயிருக்கிறது.

சுரு || "ஸர்வ விக்ந ஹரீ மந்த்ரஃ ப்ரணவஃ ஸர்வ தோஷஹா.

[யோகதத்வோபநிஷத்.]

சுரு ||"ஶிசிர்வாப்யஶிசிர்வாபி யோ ஜபேத் ப்ரணவம் ஸதா நாஸ லிப்யதி பாபேன பத்மபத்ர மிவாம்பஸா.

[யோகசூடாமண்யுபநிஷத்.]

சுரு || "ஆத்மாநம் அரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணிம்
த்யாந நிர்மதநாப்யாஸாத் பாஶம் தஹதி பண்டிதஃ
[கைவல்யோபநிஷத்.]

சுரு || "ஸ்வதேஹம் அரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணீம்
த்யான நிர்மதனுப்யாஸாத் தேவம் பஶ்யேத் நிகூடவத்.
[ஶ்வேதாஶ்வதரோபநிஷத்.]

என்னும் உபநிஷத்துகளின் வாக்கியரீதியாய் சுசியா யிருந்தாலும் சுசியாய் இல்லாவிட்டாலும் எல்லாக்காலங் களிலும் முன் சொல்லிய அர்த்தங்களை மனதில் தாரணை செய்துகொண்டு 'ஓங்' காரத்தை த்யானம் செய்து வருப வர்கள் ஜநந, மரண, ஜரா (கிழத்தனம்), வ்யாதி, பயம் முதலான துக்க ஸமுத்திரமான ஸம்ஸார அநர்த்த பரம்ப ரைக்குக் காரணமாயிருக்கும் மனதை, அநித்யமாகவும், துச்சமாகவும், மித்யா பூதமாகவும், துக்க மயமாகவுமான தேஹாதிப் பிரபஞ்ச வியாபாரங்களில் ஓடவிடாமல், அவைகளில் சிறிதேனும் சுகம் கிடையாதென்கிற நிச்சய புத்தியினால் அறிந்து ராக, துவேஷாதி மலங்களை ஒழித்து, 'நான்' 'என்னுடையது' என்ற அபிமானத்தை நீக்கி மனதைச் சுத்திசெய்துகொண்டு ஸாத்விக விருத்தியினால் சித்த சுத்தியையடைந்து ஞானோத்பத்திக்குத் தயாராக்கி ஐகாக்கிரியம் செய்து "உபாதானம் ப்ரபஞ்சஸ்ய ப்ரஹ்ம ணோந்யந் ந வித்யதே, தஸ்மாத் ஸர்வ ப்ரபஞ்சோயம் ப்ரஹ்மைவாஸ்தி ந சேதரத்." என்னும் யோகசிகோப நிஷத் வாக்கியரீதியாயும் "ஏகமேவா த்விதீயம் ப்ரஹ்ம" என்கிற சுருதி ரீதியாயும் ஸர்வமும் ப்ரஹ்மமே; ப்ரஹ்மத் தைத் தவிர வேறு பதார்த்தம் இல்லை என்று விவேக வைராக்கியங்களை யடைந்து, "ரஜ்வஞ்ஞானத் க்ஷணே னைவ யத்வத் ரஜ்ஜுர்ஹி ஸர்பிணீ, பாதி தத்வத் சிதிஸ்ஸா க்ஷாத் விஸ்வாகாரேண கேவலா." என்ற சுருதிரீயாய்

கயறு என்று அறியாதகாலத்தில் எப்படி அந்தக் கயறு னது ஒரே க்ஷணத்தில் ஸர்பமாக மாறித்தோன்றி மோகத் தையும் சோகத்தையும் தந்து ஸர்வ அனர்த்தத்திற்கும் ஹேதுவாய், பிறகு ஒரு வெளிச்சத்தைச் கொண்டுவந்து பார்த்தமாத்திரத்தில் கயறுதான் என்று அறிந்தக்ஷணத்தி லேயே ஸர்பம் என்ற பிராந்தி நாசத்தையடைந்து, கயிறு என்கிற வாஸ்தவஞான முண்டாய் ஸர்வ துக்கமும்நிவர்த்தி யாகின்றதோ, அதுபோல் எப்பொழுதும் ஸத்தியமா யிருக்கும் ப்ரம்மமானது, (அதாவது தனக்குள்ளிருக்கும் ஆத்மாவான) தன் நிஜ ஸ்வரூபத்தை ப்ரமையினல் மறந்த காலத்தில் புருஷனுக்கு நாமரூப கர்மத்தோடுகூடிய அநித் திய ஜட துக்கரூபமான தேஹேந்திரியாதிப் பிரபஞ்ச பஹிர் (வெளி) விஷயங்களாகத்தோன்றி, 'நான்' 'எனது' என்னும் மோஹத்தையும் துரபிமானத்தையும் ஜநந, மரண, ஜரா, வியாதி, பயமுதலான கோடி துக்கமயமான ஸம்ஸாரமாகிற சோகத்தையும் குயவன் சக்கிரம்போல் சுற்றிச் சுற்றி அனுபவிக்கச்செய்து, பிறகு, அனேக ஜன் மாந்திர புண்ணிய விசேஷத்தினுல் ஒரு அனுபவ ஆத்ம ஞானமுள்ள ஸத்குருவை நாடி அவருடைய கருணுகடா க்ஷத்தினுலும் ஈசுவரார்ப்பணமாய்ச் செய்த வேதவிஹித கர்மா னுஷ்டானத்தின் பல ரூபமான ஈசுவரா னுக் கிரகத்தினுலும் "தத் த்வமஸி" என்ற உபதேசம் பெற்று, அதாவது நீ ஜீவனல்ல, ஸம்ஸாரியல்ல, தேஹாதி உபாதி கள் உனக்கில்லை, இவைகளெல்லாம் அஞ்ஞானத்தினுல் தோன்றுகின்றனவே தவிர வாஸ்தவத்தில் உனக்கில்லை, நீ எப்பொழுதும் நித்ய ஸித்தனுன ப்ரம்மமே தவிர வேறல்ல, அஞ்ஞானமென்கிற பிராந்தியினுல் நீ, ப்ரம்மம் தானென்பதை மறந்து, ஜீவனென்று நினைத்துக்கொண்டு தேகத்தை ஆத்மாவென்று தப்பான அபிப்பிராயம்

கொண்டு, ஸம்ஸாரி என்று நினைத்துத் திண்டாடுகிருய் என்று தெரிவித்த மாத்திரத்தில் பூர்வ புண்ணிய ஸம்ஸ் காரத்தினுல் பரோக்ஷமாய் வாக்கியார்தத்தை யறிந்த வுடன் அபரோக்ஷமாய் (பிரத்தியக்ஷமாய்) தான் ப்ரம் மம் என்கிற ஞானவெளிச்சத்தினுல், தன்னைத்தான் நிஜ மாய் லக்ஷியார்த்தத்தை யறிந்து, ஸ்வானுபவம் (ஸம திருஷ்டி) வந்த க்ஷணத்திலேயே ஸர்வ ப்ராந்திக்குக் காரண மான அஞ்ஞானம் நசிக்கப்பெற்று "ப்ரம்ம வேத ப்ரஹ் மைவ பவதி" என்கிற சுருதிரீதியாயும் "ப்ரமரகீடவத்" என்கிற நியாயப்படிக்கும் (அதாவது ஒரு குளவியானது, பச்சைப்புழுவைக் கொண்டுவந்து தான் விசித்திரமாய் கட்டியிருக்கும் மண் கூண்டில் வைத்து, அதை ஒரு கொட்டுக் கொட்டிவிட்டு கூட்டின் வாயை நன்ருய் அடைத்து விட, அந்தப் புழுவானது தனக்கு உண்டா யிருக்கும் உபத்திரவத்தினுலும், பிறகு குளவியின் ரீங்கார சப்தத்தைக் கேழ்ப்பதனுலும் ஸதாகாலமும் தத்தேக (குளவி) த்யானமாயிருக்க இந்தச் சித்த ஐகாக்கிரகத்தி ஞல் தானும் புழுரூபத்தை விட்டு புழுவிற்கு உபாசனு மூர்த்தியாயிருந்த குளவி ரூபமாய் மாறுவது உலகப்பிர ஸித்தம், இதை யாவரும் பார்க்கலாம்:—ஸாதகதுக்க முள்ள தேஹேந்திரியாதி உபாதிகளோடு கூடிய தாம், ஜீவர்கள் என்கிற அஞ்ஞானத்தை நாசம் செய்தால், தங்க ளுடைய நித்யபுத்த நித்யசுத்த நித்யமுக்த ஸ்வரூபமான நிர்குணப் ப்ரம்மத்தில் ஐக்யமாய் ஜீவன்முக்தர்களாவார் கள் என்பதற்கு அணுவேனும் ஸந்தேஹமில்லை. பராபர வஸ்துவாகிய கடவுளை வேதங்கள் துதிசெய்வதை இதனடி யில் தெரிவிக்கின்ருேம்:

பராபர வஸ்துவை வேதங்கள் துதிசெய்வது.

இதுவரையில் ஓங்கார மஹிமையைச் சொன்னோம்: இனி வேதங்கள், பராபர வஸ்துவாகிய கடவுளைத் துதி செய்வதை இதனடியில் காசிகாண்ட பிரமாண ரீதியாய்ச் சொல்லுகின்றோம்:

தேறலொழுகக் கனிந்த பசுந் தேமாங் கனியைப் பிழிந்து செழுஞ்
சாறு நுகர்ந்தா லென்ன வண்ட கோடி பிழிந்து தனி நுகர்ந்து
நீறு பூசி யென் பணிந்து சூலந் திரித்து நின் றாடு
மீறி லொருவ னெவ னுள னாங் கவனே யுள்ளத் திருக்குமால்.

அன்ன கடவுள் மாயை முழு துலக மறைப்ப வவிர் சுடராய்த்
தன்னை யுணரா வகை யுறைவோ னுலக முழுதுந் தானாகி
மன்னி யிடினு மனோ வாக் குக் காய மிவற்றுக் கெட்டாத
முன்னோ னயன் மாற் கவ நிலைமை காண்டல் செல்ல முடியாதே.

சாற்று முலக மெவற் றினுக்குந் தானே யாகி யினி தமைத்தல்
போற்றி யளித்தல் துடைத்த லென்னப் புகலு மரிய முத் தொழிலு
மாற்று மொருவ னெவன் சிவனா மவனே மொழிந்த தத்துவ மென்
றேற்ற மறைக ளொரு நான்கின் முதலாம் வேத மிசைத் ததுவே.

புரிதற் கரிய வரு மகத்தால் யோக மதனாற் புவன மெல்லாம்
பரவப் படுவா னியாவ னுளன் யாமு மவனாற் பரி வோடு?
முறை பெற றுலகி னிலை பெறுது மனைய கண்மூன் றுடையோனே
தெரிதற் கரிய தத்துவ மென் றிரண்டாம் வேதஞ் செப்பிய தால்.

யாவ னுலக மூன் றினையுந் திரிவிப்பவன் மற் றெஞ் ஞான் றும்
யாவன் யோ முனிவ ரா லேத்தப் படுவோ னினி தோங்க
யாவன் றனது பே ரொளியா லெவையும் விளக்கு மவ் விறைவன்
மேவ வருந் தத்துவ மென்றே மூன்றாம் வேதம் விளம்பிய தால்.

கண்ணீர் வார மயிர் பொடிப்ப வுள்ள நெகிழக் கசிந்து கசிந் [யோ
துண்ணிர்மை யினா லெஞ்ஞான் றுந் தன்னை யுணரு முணர் வுடை
ரெண்ணா வழுத்தத் தன் னருளாற் றன்னை யறி விப்பவன் யாரத்
தண் ணார் கடுக் கையோ னென்ன நான்காம் வேதஞ் சாற்றியதால்.

இரசமொழுக நல்ல மாங்கனியைப் பிழிந்து அவ்விரசத்தை புசித்தார்ப்போல், சகல சராசர புவனங்களை யெல்லாம் ஒருங்கே சேர்த்துப் பிழிந்த தேனைத் தானேயுண்டு, விபூதியணிந்து மண்டை ஓடுகளை மாலையாய்ச் சூட்டி சூலம் பிடித்து நின்று நர்த்தனம் செய்பவன் எவனோ அவனே என் இருதய கமல மத்தியில் குடிகொண் டிருக்கிறான்.

மாயையானது உலக மெல்லாவற்றையும் சூழ்ந்த போதிலும் மேற்சொல்லிய கடவுளை பற்றமாட்டா; இவர், மனோ வாக்குக் காயங்களுக்கு எட்டாதவர். இக்கடவுளை பிரம விஷ்ணுக்களும் காணலரிது.

உலகமெங்கும் நிறைந்து தானேதானா யிருந்து, படைத்தல் காத்தல் அழித்தலென்னும் மூன்று தொழிலும் செய்கின்றவ னெவனோ, அவனே முன் சொல்லப்பட்டவன். இப்படிப்பட்டவனை முதல் வேதமாகிய ருக்வேதம் துதி செய்கின்றது.

செய்தற்கரிய யாகத்தினால் பூலோக மெல்லாம், எவனை துதிக்கின்றார்களோ அப்படிப்பட்டவனால், நாங்களும் வேதமென்னும் பெயர்பெற்று நிலைத்திருக்கின்றோ மென்று யஜுர்வேதம் கூறுகின்றது.

எவன், மூன்று லோகங்களையும் நடத்துகின்றானோ, எவன், எக்காலத்தும் யோக முனிவர்களால் துதிக்கப்படுகின்றானோ அவன் தனது பேரொளியால் உலக மெல்லாவற்றையும் காப்பாற்றுகின்றானென்று சாமவேதம் கூறியது.

கண்ணீர்வடிய ரோமம் சிலிர்க்க மனமுருக கசிந்து கசிந்து மனக்கண்ணினா லெப்பொழுதும் தம்மை உணரும் உணர்வுடையோர் எண்ணித் துதிக்க, தன்னருளால் தன்னை அறிவிப்பவன் எவனோ அவனே கொன்றைமாலை யணிந்த சிவபெருமா னென்று நான்காம் வேதமாகிய அதர்வண வேதம் கூறியது:

ஞானமடையும் மார்க்கம்.

" தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு.—"

ஓ பரப் பிரம்மமே! யான் ஜநந மரண மென்னும் கடலில் மூழ்கி, அஹங்காரமாகிய முதலைவாயிற் சிக்கி, நல்வினை தீவினை என்னும் இரண்டு அலைகளால் எறியப் பட்டு, மாதர்களுடைய காமமயக்கமாகிய சுழல்காற் றடிக்க, ஆசையாகிய காட்டாறு மேலும்வந்து மோத, சிறுதோணிக்காரர்போல், ஞானமாகிய மரக்கலத்தையும் கைசோரவிட்டு, மதிமயங்கி, திருட்டுக்கப்பல் போன்ற யமதூதர்கள் வருவாரே என்று அஞ்சி, அருவியாறு போலக் கண்ணீரைப் பெருக்கி நிற்கும் எளியேனை மோக்ஷ மாகிய கரையைச் சேரும்படிக்குக் கருணை செய்வாய்.

அதாவது, சம்சாரமானது இருளடைந்த காட்டைப் போன்றது; மிகவும் பயங்கரமானது; அது வீடு வாசல் தோட்டம் துறவு புத்திர மித்திர களத்திர தன தான்னி யாதிகளான முட்களையுடைய புதராயிருக்கின்றது. இதில், காம குரோத லோப மோஹ மத மாச்சரிய மென்னும் ஆறு கள்வர்களும், ரோகமென்னும் வியாக்கிரகமும் (புலி யும்) பாபமென்னும் கோர ராக்ஷதர்களும், துராசை யென் னும் கட சர்ப்பங்களும், கிழத்தன மென்னும் பிசாசமும், மிருத்தியு வென்னும் சகஜ சுபாவமும், சம்சாரமென்னும் காட்டில் தன்னிஷ்டம்போல் திரிந்துகொண் டிருக்கின் றன. தாரித்திரியம் இமவத் பர்வதம்போல் சுற்றிலும் கோட்டை கட்டிய வண்ணம் சுற்றிக்கொண் டிருக்கும்; ரோஷ சந்தோஷங்கள் பயங்கரமான பனிக்காற்றைப்

போன்றன. துக்கமென்னும் காடு மஹாவேகமாய்த் தகித்துக்கொண்டேயிருக்கும். விஷயங்கள் தேள்களாகவும், இந்திரியங்கள் சர்ப்பங்களாகவும், காமக்குரோதாதிகள் வேங்கைப் புலிகளாகவும், சங்கல்ப விகல்பங்கள் சிம்மங்களாகவும், எண்ணங்கள் வேட்டைநாய்களாகவும், அஞ்ஞானம் காடாந்தகாரமாய் மூடிக்கொண்டு மாயாந்தகாரத்தி லகப்பட்டு வழிகாணாமல் சம்சாரமென்னும் சமுத்திரத்தில் அதாவது, மனமேன்னும் மச்சமானது கோரமாகிய சம்சாரமேன்னும் சமுத்திரத்தில், தாராபுத்திராதிகளேன்னும் ஜலத்தில் அழுந்தி வேறொன்றும் தோன்றாமல், முதலிருந்து கடைசிவரையில் புண்ணிய பாபங்களுக்குட்பட்டு வண்டியின் சக்கரம்போல் திரிந்து திரிந்து விஸ்ராந்தி யடைய (தங்குவதற்காக) எங்கும் யுக்தமான (சரியான) ஸ்தலம் அகப்படாமல் சிரமப்பட்டு, முன் எத்தனை ஜன்மங்கள் எடுத்தேனோ இனி எத்தனை ஜன்மங்கள் எடுப்பேனோவென்று பயந்து புத்திர மித்திர களத்திர தனதான்னியாதிகளில் இச்சை யில்லாதவனாய் சுவர்க்கம் முதல் சத்தியலோகம் வரையில் அனுபவிக்கும் பிரதான சாதனங்களாகிய நித்திய நைமித்தியாதி கர்மங்களை எப்பொழுதும் பலாபேக்ஷையில்லாமல் ஈசுவரார்ப்பணமாய்ச்செய்து சித்தசுத்தியடைய வேண்டும். காமமென்னும் மதகஜம் (மதயானை) ஞானமென்னும் அங்குசம் ஒன்றிற்கே வசமாகுமேயன்றி மற்றவைகளால் வசப்படமாட்டா. ராக்ஷதர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டுச் சம்பாதித்த அமிர்தத்தைக் காமத்தினால் நிமிஷத்தில் நஷ்டப்படுத்திக் கொண்டார்கள். காமமென்பது சம்போகமேயல்ல. எந்த வஸ்துவும் வேண்டுமேன்று இச்சிப்பதே காமமாகும்.

மோஹப் பிரவாஹங்களில் வீழ்ந்து மூழ்கிக்கொண்டிருக்கும் மனிதர்களுக்கு எவ்விதமாய் ஞானோதயமாகும்?

சரீரம் யாருடையது? சரீத்திற் குடியிருப்பவன் யார்? என்பதையும் தெரிந்து ஆத்ம தத்துவத்தை விசாரிக்குமளவில், இந்திரியங்களுக் கெல்லாம் மனதே ராஜன், இந்த ராஜனைப்பிடித்துச் சிறைச்சாலையில் அடைத்தபோது அதாவது பரப் பிரம்ம சொரூபமாயிருக்கும்ஆத்மாவில் மனதை ஐக்கியம் செய்தபோது, சபலத்வ முடைய (சங்கல்பமென்னும்) சேவகர்க ளெல்லோரும் ஒடிப்போய் விடுவார்கள். விசாலமாகிய ஆகாயத்தை மேகங்கள் மூடிக்கொண்டு காணப்படாமற் செய்வதுபோல், தூல சூட்சும தேஹத்தின் மத்தியில் அத்விதீயமான ஸத்வஸ்து நிறைந்திருக்கின்றது. பிரம்மாண்டத்திலுள்ள பதார்த்தம் பிண்டாண்டத்தில் உண்டு. அதுமாயையால் மூடப்பட்டிருப்பதனுல் காணப்படாமலிருக்கின்றது; அந்த மாயையின் மகிமையினுலேயே 'நான்' 'என்னுடையது' என்னும் பிராந்திகள் உண்டாயிருக்கின்றன. விவேகத்தினுல் தத்துவங்களை விசாரித்தபோது பிராந்தியும், அஞ்ஞானமென்னும் இருளும், பூர்வ ஜன்மங்களின் சஞ்சித கர்மங்களும், சூரியனைக் கண்ட இருளைப்போலும் பனியைப்போலும் தமக்குத்தாமாகவே ஒழிந்து, நிர்மலத்வமடையும். துவைதத்தை விட்டு அத்வைதத்தைப் பார்க்குமளவில்,சர்வத்திற்கும் எந்த பதார்த்தம் ஆதாரமாயிருக்கின்றதோ அந்த பதார்த்தமே உனக்கும் எனக்கும் காரணமா யிருக்கின்றது. அந்த பதார்த்தம் கண்களில்லாமலே சர்வமும் பார்த்துக்கொண்டும், செவிக ளில்லாமலே சர்வமும் கேட்டுக்கொண்டும், கைகளில்லாமலே சகல காரியங்களைச் செய்துகொண்டும், கால்களில்லாமலே எங்கும் சஞ்சரித்துக்கொண்டும், வாயில்லாமலே அசரீரிவாக்காய்ச் சொல்லிக்கொண்டும், மனமில்லாமலே சங்கல்பித்துக்கொண்டும், எந்த அவயவங்களும் எந்த ரூபமும் இல்லாமல் சர்வமும் தானுய், சச்சி

தானந்த சொரூபனுய் ஆதி மத்யாந்த ரஹிதனுய், அப்ரமேயனுய், அபரிச்சின்னனுய், வேதங்களினுலும் ஆன்றோர்களினுலும் நிரூபிக்கக்கூடாமல் சர்வ சக்தனுய் தான் தானுகவே பிரகாசித்துக் கொண் டிருக்கின்றுன். அப்படிப்பட்ட பரமாத்மா தன் மகத்துவத்திஞல் எதை நடத்த வேணடுமானுலும் அதை நடத்துவான்.

இத்தகைய பரமாத்மாவை, எந்த மஹான்கள், தனது புத்திர களத்திராதிகளை விட்டு சதாகாலமும் தியானிக்கின்றுர்களோ, அப்பேர்ப்பட்டவர்களுக்கு அந்த பரமாத்மா ஊழியம் செய்துகொண்டிருப்பார். இப்படிப்பட்ட பரமாத்மா எவ்விடம் நிவசிக்கின்றுனென்றுல், நமது தேகமத்தியில் புத்தியென்னும் குகையில் அந்தர்யாமியாய் சாக்ஷி சொரூபமாய் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றுன். இந்த பரமாத்மா, தேவ மானவ கிருமி கீடாதி சகல ஜந்துக்களிலும் இருந்துகொண்டு, சகல காரியங்களையும் செய்வதைப் பார்த்துக் கொண்டு, சாக்ஷியா யிருக்கின்றுன். இப்படி யிருந்துகொண்டு மரணகாலத்தில் அவனவன் செய்யும் புண்ணிய பாபங்களுக்குத் தக்க ஜநநத்தைத் தருகின்றுன். ஆதலால், இதையறிந்து லோபத்துவமில்லாமல் ஸத்காரியங்களில் தனத்தை உபயோகப் படுத்தவேண்டும். ஸத்காரியங்களில் தனத்தை உபயோகப் படுத்தாவிட்டால் மறுஜன்மத்தில் தரித்திரனுய்ப் பிறப்பான். தாரித்திரிய தோஷத்திஞல் யுக்தா அயுக்த பரிஞானமில்லாமல் பாபகாரியங்களில் பிரவேசிப்பான். பாபகாரியத்திஞல் நரகம் சம்பவிக்கும். அதனுற், ஜன்மங்கள் தோறும் தரித்திரனுய்ப் பிறந்து, துஷ்ட காரியங்களுக்கு மடிபிடித்து துன்மார்க்கனுய் பாபங்களுக் குட்பட்டு அதிக கஷ்டதசையை அனுபவிப்பான். அப்பேர்ப்பட்டவன் எப்பொழுதும் கடைத்தேற மாட்டான்.

"பரோபகாரார்த்த மிதம் சரீரம்" என்னும் வாக்கியத்தைக் கிரகித்துத் தன்னை ஆசிரயித்தவர்களுக்கும், ஏழைகளுக்கும் சக்தியானுசாரம் வஞ்சனையில்லாமல் எவ்விதத்திலாயினும் உபகாரம் செய்யவேண்டும். விருக்ஷங்களும் தம்மை ஆசிரயித்தவர்களுக்கு நிழலையும், தம்மால் உண்டாகிய கனிவர்க்கங்களையும்தந்து உபசரித்துக்கொண்டிருக்கும். மேகங்கள், உலகத்திற்குவேண்டிய ஜலத்தைத் தந்து ஆதரிக்கின்றன. ஜடபதார்த்தங்களுக்கே இவ்வளவு பரோபகாரார்த்த முண்டாயிருக்க விவேகமுடைய மனிதர்களுக்கு எவ்வளவு இருக்கவேண்டும். இஃதன்றியும் தனக்கு அபகாரம் செய்யப்பட்ட குரூர குணமுடையவனுக்கும் தீங்குசெய்யாமல் எப்பொழுதும் உபகாரம் செய்யவேண்டியதே யொழிய கெடுதி செய்யக் கொஞ்சமேனும் எண்ணலாகாது. எவர்கள் எதைச்செய்தபோதிலும் அதில் தனக்கு அப்பிரியமாய்த் (பிரியமில்லாதது என்று) தோன்றினல் அக்காரியங்களைத் தான் அந்நியர்களுக்குச் செய்யாமல் ஜாக்கிரதையாய்ப் பிரவர்த்திப்பது பரம தர்ம மாகும்.

"அஹிம்ஸா பரமோ தர்ம:" என்றிருப்பதனுல், எந்த ஜந்துக்களையும் இம்சைசெய்யலாகாது. இம்சையென்ருல், ஜந்துக்களைக் கொல்லுவதேயல்ல; இதரர்களின் மனதை நோகப் பேசுவதும் இம்சையே. வியபிசாரமென்ருல், புருஷனை வஞ்சித்து பரபுருஷனுடன் சேருவதல்ல; பரபுருஷர்களை மனதில் நினைப்பதும் வியபிசாரமே

அபேததர்சநம் ஞாநம், த்யாநம் நிர்விஷயம் மந:.
ஸ்நாநம் மநோமலத்யாக:, சௌசம் இந்த்ரிய நிக்ரஹ:.
சித்தசுத்திகரம் சௌசம் வாஸநாத்ரய நாசநம்
ஞாந வைராக்யம்ருத்தோயை: க்ஷாலநாத் சௌசமுச்யதே

பாஷாணலோஹமணி ம்ருண்மய விக்ரஹேஷு
பூஜா புநர்ஜநந போககரீ முமுக்ஷோ:.
தஸ்மாத் யதி: ஸ்வஹ்ருத யார்சநமேவ
குர்யாத் பாஹ்யார்சநம் பரிஹரேத் பநர்பவாய.
[மைத்ரேய்யுபநிஷத்.]

காசீக்ஷேத்ரம் ஶரீரம் த்ரிபுவநஜநநீ வ்யாபிநீ ஞாநகங்கா
பக்தி ஶ்ரத்தா கயேயம் நிஜகுரு சரண த்யாநயோக: ப்ரயாக:
விஶ்வேஶோயம் துரீய: ஸகலஜந மநஸாக்ஷி பூதோ அந்தராத்மா
தேஹே ஸர்வம் மதீயே யதி வஸதி புநஸ்தீர்த்தம் அந்யத்கிமஸ்தி.

பூஜையென்றால், சும்மாய் வாயினால் துதிசெய்வதல்ல; சித்தசுத்தியுடன் செய்யும் பக்தியே பூஜை; பிரேமை யென்றால், இருவரும் ஆலிங்கனம் செய்துகொள்வதல்ல; மனதில் எப்பொழுதும் மறவாமலிருப்பதே பிரேமை; ஆதரணை யென்றால், பஞ்ச பக்ஷண பாயசங்களுடன் சந்தோஷப் படுத்துவதல்ல; திரிகரண (மனம், வாக்குக் காயம்) சுத்தியுடன் பிரியமாய்ச் சந்தோஷப்படுத்துவதே ஆதரணை; ஸ்நானமென்றால், கங்கா யமுனா காவேரி நதிகளில் ஸ்நானம் செய்வதல்ல; மனதில் எந்த கல்மஷங்களும் இல்லாம லிருப்பதே ஸ்நானம்; சுசி யென்றால், ஈரவஸ்திரங்களைக் கட்டிக்கொண்டு மடியா யிருப்பதல்ல; மந்தபுத்தியை விட்டுப் பரிசுத்த சித்தத்துட னிருப்பதே சுசி; காம்பீரியமென்றால், கூடகோபுரம் மாடமாளிகைகள் கட்டிக்கொண்டு பூஷணங்களைத் தரித்துக்கொண் டிருப்பதல்ல; சத்தியம் தவறாமல் நடப்பதே காம்பீரியம்; மஹா சூரனென்றால், யுத்தத்தில் ஜயமடைபவனல்ல; தனது இந்திரியங்களை ஜயித்தவனே மஹா சூரன்; தாதாவென்றால், தானம் செய்யப் பட்டவனல்ல; பூததயை பச்சாத்தாப முடையவனே தாதா; வக்தன் (வகீல்) என்றால், பாரிஸ்டர் வக்கீலல்ல; சத்தியமாய் வார்த்தையாடுபவனே வக்த்தா (வகீல்)

நிஷ்டையென்றால், ஆஸனத்தின்மீ துட்கார்ந்து கண்களை மூடி தான் உபதேசம் பெற்ற மந்திரங்களை மனதினால் அஜபாவாய் உச்சரித்துக்கொண் டிருப்பதல்ல ; சங்கல்ப விகல்பங்க ளில்லாமல் மௌனமுத்திரையைத் தரிப்பதே நிஷ்டை; பாண்டித்யமென்றால், வேத சாஸ்திரங்களைக் கற்று வீண் விவாதங்களில் பிரவேசிப்பதல்ல;பிரம்ம ஞான மடைந்து பிரம்மானந்தத்தை அனுபவித்திருப்பதே பாண் டித்யம்; மேற்சொல்லிய விஷயங்களையெல்லாம் நிவர்த்தி செய்து " ஆத்மவத் ஸர்வ பூதாநி யஃ பஶ்யதி ஸ பஶ்யதி " என்னும் வாக்கியரீதியாய், சகல பூதங்களையும் தன்னைப் போல் நினைத்துச் சஞ்சரிக்கும் புருஷர்களுக்கு சித்த சுத்தி உண்டாகும். சித்த சுத்தி அடைந்த புருஷர்கள், பூமி யானது, சகல ஜந்துக்களுக்கும் ஆதாரமாய் இருந்து அவர் களின் காரியத்திற்கெல்லாம் சகித்துக்கொண்டிருப்பது போல், எல்லாவற்றையும் க்ஷமித்துக்கொண்டிருக்கவேண் டும். க்ஷமிக்காவிடில், எத்தனை குணங்களிருந்தபோதிலும் பிரயோஜனப்படமாட்டா. பர்வதங்கள், சகல ஜீவகோடி களுக்கும் ஆதாரமாயிருப்பதுபோல், இதரர்கள் விஷய மாய் எப்பொழுதும் உபகாரமே செய்யவேண்டும். மூலச் சேதம் செய்தபோதிலும் அதாவது, கிளைகளை வெட்டிய போதிலும், பட்டைகளைச் செதுக்கியபோதிலும், விருக்ஷங் கள் பலருக்கும் உபயோகப்படுவதுபோல்,தனக்குஆபத்து வந்தபோதிலும் நிச்சல சித்தத்துடன் பின்வாங்காமலிருக்க வேண்டும். குளத்தில் ஸ்நானம் செய்தபோதிலும் குளத்து ஜலம் பரிசுத்தமா யிருப்பதுபோல், ஸத் (நல்ல) பிரவர்த் தனத்தினால் (நடவடிக்கையினால்) எப்பொழுதும் சுசிர் பவனா யிருக்கவேண்டும். அக்கினி எப்பொழுதும் அந்த காரமாயிராமல் தேஜோமயமா யிருப்பதுபோல், புருஷன் அஞ்ஞானத்தினால் மூடப்படாமல் ஞான நிஷ்டனாயிருக்க

வேண்டும். சமுத்துக்களின் சேர்க்கையினால் அக்கினி பிரகாசிப்பதுபோல், சுத்தமான தபசினால் பிரகாசித்துக் கொண்டிருக்கவேண்டும். அக்கினி தன் பிரயத்தினமில்லாமல் தனக்குக் கிடைத்த வஸ்துக்களை நிறுத்தாமல் தக்ஷணமே பஸ்மஞ் செய்வதுபோல், எப்பொழுது எந்தப் பதார்த்தம் கிடைக்கின்றதோ அதை ருசியறியாமல் புசிக்க வேண்டும். மனதை அந்தப் பதார்த்தத்தில் செலுத்தாமல் புசித்தால், ருசியை அறியமாட்டா. இதை அப்பியாசம் செய்து தெரிந்து கொள்ளவேண்டும். வாயு, மந்தவேகங்கள் சுகந்த துர்க்கந்தங்கள் சீதளம் உஷ்ணம் முதலாகிய குணங்களுடன் கூடி வீசியபோதிலும், அந்தக் குணங்களெல்லாம் அதன் அதன் சேர்க்கையினால் உண்டானதேயொழிய தன் சுயமானதல்லாததுபோல், தேகத்தில் வசிக்கும் ஆத்மாவிற்கு, கர்மவசத்தினால் சம்பவித்த சுகதுக்கங்கள் முதலாகிய விகாரங்களெல்லாம் அஞ்ஞானவசத்தினால் தோன்றுமேயொழிய ஸகஜ மல்லவென்று அறியவேண்டு.

பிராணவாயு, எவ்விதமாகிய ருசி பக்குவங்களைக் கோராமல் சாமான்னியமாகிய அன்ன வுதகங் (ஜலங்)களினால் திருப்தியடைவதுபோல், எப்பொழுதும் விஷய ஸுகங்களுக்கில்லாமல், தேஹம் நிற்பதற்கு மாத்திரம் வேண்டிய சாதாரண ஆஹாரத்தைப் புசிக்கவேண்டும்.

ஆகாசம், சராசர ரூபமாகிய சமஸ்த பதார்த்தங்களிலும் ஒட்டாமல் நிறைந் திருந்தபோதிலும், எதிலும் படாமல் விலக்ஷணமா யிருப்பதுபோல், பரமாத்மா சகல வஸ்துக்களிலும் பகி ரந்தரங்களில் (உள்ளும் புறம்பும்) எங்கும் நிறைந் திருந்தபோதிலுல் விலக்ஷணமாயிருக்கின்ற தென்றும், ஆகாசத்தினிடமாய்த் தன்னிடம் தோன்றும் மேகங்கள் மின்னல் முதலாகியவைகளையெல்லாம் ஆகாசம் பற்றும லிருப்பதுபோல், பரமாத்மா கால வசத்தினால்

தோன்றும் உற்பத்தி ஸ்திதி நாசங்கள் ஆகிய எவற்றையும் அடையாமல், சச்சிதானந்த மயமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றதென்று அறியவேண்டு.

விருத்தி க்ஷயங்கள், சந்திர கலைக்கே யொழிய சந்திரனுக் கில்லாம லிருப்பதுபோல், ஜநநமரணாதி விகாரங்கள் சரீரத்திற்கேயொழிய ஆத்மாவிற்கல்லவென்று அறிய வேண்டும். சூரியன், தன் கிரணங்களினால் ஜலத்தை இழுத்தபோதிலும், அதைத் தான் உபயோகப் படுத்திக் கொள்ளாமல், மறுபடியும் பூமியில் விட்டுவிடுவதுபோல், இதரர்கள் தனக்குக்கொடுத்த பதார்த்தத்தைத் தன் வயற்றிற்கே உபயோகப் படுத்தாமல், தன்னை ஆசிரயித்தவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும். காதினால் கேட்ட சப்தாதி விஷயங்களைக் கிரஹித்தபோதிலும், மனதில் நிறுத்தாமல் அவைகளை உடனே நிவர்த்திசெய்யவேண்டும். சிறு பிள்ளைகள், மானாபிமானம் சத்துரு மித்துருக்கள், சுக துக்கங்கள் முதலானவைகளையெல்லாம் கவனித் திருக்காமல், தமது ஆட்டத்தில் ஆசையுடையவர்களாய் ஆனந்திப்பது போல், ஞான வசத்தினால் மானாபிமானங்களெல்லாம் சரீரத்திற்கே யொழிய ஆத்மாவிற்கல்லவென்று தெரிந்து, புத்திர களத்திராதி விஷய சிந்தையில்லாமல் திட*வைராக்கியத்தினாலும் † அப்பியாச யோகத்தினாலும் மனதைச் சிதறவிடாமல், ஆடாமல் ஓய்ந்துவிட்ட பம்பரம்போல் நிறுத்தி, இதர எண்ணங்களில்லாமல் தைலதாரையைப் போல் அவிச்சின்னமாகிய தியானத்துடன் பரமாத்மாவி

---

* வைராக்யமென்றால், இந்திரியங்களை விஷயங்களிற் போகவிடாமல் நிறுத்துவது.

† அப்பியாச யோகமென்றால், மனதை பரமாத்மாவில் சேர்ப்பதற்குப் பழக்கப்படுத்தல்.

லேயே திருஷ்டியை நிறுத்தவேண்டும். அது எப்படியெனில்:—

“ ஆடாம லோய்ந்திட்ட பம்பரம் போல்விசை
யடங்கிமனம் வீழ்நேரே
யறியாமை யாகின்ற விருளகல விருளொளிய
மல்லா திருந்த வெளிபோற்
கோடா தெனேக்கண் டெனக்குணிறை சாந்தவெளி
கூடியின் பாதீதமுங்
கூடினே ஞேசரியை கிரியையின் முயன்றுநெறி
கூடினே ஞேவல்லனியா
னீடாக வேயாறு வீட்டினி னிரம்பியே
யிலகிவளர் பிராணனென்னு
மிருநிதி யினைக்கூடி யோகபர ஞானம
லேழைக் குடும்பனுகித்
தேடா தழிக்கவொரு மதிவந்த தென்கொலோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேஜோ மயானந்தமே.”

சுரு||“ப்ரணவோ தநுஃ ஶரோஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்ய முச்யதே அப்ரமத்தேந வேத்தவ்யம் ஶரவத்தந்மயோ பவேத்.”

என்னும் த்யாநபிந்தூபநிஷத் ரீதியாய், பிரணவமே தநுசு, ஜீவனே பாணம், லக்ஷியமே பரப் பிரம்மமென்று சொல்லப்படும். ஆதலால், ஓர் வேடன் ஓர் குறியில் லக்ஷியம் வைத்து பாணத்தை விட்டபோது அந்தப்பாணம் குறி தப்பாமல் அந்த லக்ஷியத்திலேயே சேர்ந்து குத்திக் கொண்டு அதிலேயே ஒட்டிக்கொண் டிருப்பதுபோல், பிரம்மஞானியும், மனமென்னும் தநுசில் ஜீவனென்னும் பாணத்தைப் பூட்டி பிரம்மமென்னும் லக்ஷியத்தில் குறி வைத்து பிரயோகித்தபோது, இந்த ஜீவனென்னும் பாணமானது, அந்த லக்ஷியமென்னும் பரப் பிரம்மத்திற்போய்ச்

சேர்ந்து அதில் லயித்து அந்த ரூபமேயாகும். இதற்குத் திருஷ்டாந்த மென்னவென்றால்,

சிந்மயம் பரமாநந்தம் ப்ரஹ்மைவாஹமிதி ஸ்மரந் ஞ்ஞாத்வைவம் மநோதண்டம் த்ருத்வா ஆஶா நிவ்ருத்தோ பூத்வா ஸர்வதா மநோவாக்காய கர்மபி: ஸர்வஸம்ஸார முத்ஸ்ருஜ்ய ப்ரபஞ்சாவாங்முக: ஸ்வரூபாநு ஸந்தாநேந ப்ரமாகீடந் ந்யாயேந முக்தோ பவதி.

நாவமதிபங்கம் கர்ணதார இவ யந்தேவ கஜம் ஸ்வபுத்த்யா வஸீக்ருத்ய ஸ்வ வ்யதிரிக்தம் ஸர்வம் க்ருதகம் நஶ்வரமிதி மத்வா விரக்த: புருஷ: ஸர்வதா ப்ரஹ்மாஹமிதி வ்யவஹரேத். நாந்யத் கிஞ்சித் வேதிதவ்யம் ஸ்வ வ்யதிரேகேண ந நாஹம் ப்ரஹ்மேதி வ்யவஹரேத் கிம் து ப்ரஹமா ஹமஸ்மீதி அஜஸ்ரம் ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்திஷு.

[நாரதபரிவ்ராஜகோபநிஷத்.]

குளவி ஓர் புழுவைக் கொண்டுவந்து தன் கூண்டில் வைத்துக் கொட்டி, அதைச் சுற்றிச்சுற்றி ரீங்காரஞ் செய்து கொண்டிருப்பதனால் அப்புழுவானது பயந்து தன் லக்ஷியங்களை யெல்லாம் அந்தக் குளவியின்மீது வைத்துக் கடைசியில் அந்த குளவி ரூபத்தையடைவதுபோல், புருஷன் பயத்தினாலோ சிநேகிதத்தினாலோ எந்த வஸ்துவில் மனதை திடமாய் நிறுத்தித் தியானம் செய்கின்றானோ, அந்த வஸ்துவின் சொரூபத்தை சத்தியமாய் அடைவானென்று தெரிந்துகொண்டு, பகவத் சொரூபத்தில் மனம் கலக்க தியானிக்கவேண்டும். விஷயாஸக்தி பூர்த்தியாய் நசிக்கும் வரையில், பரப் பிரம்மத்தின் திவ்வியமங்கள சொரூபத்தை அடையமாட்டான்.

பூர்ணமாய் அஞ்ஞானத்தில் மூழ்கியிருக்கப்பட்டவர்களுக்குத் "தேஹமே தானெ"ன்றும், 'காணப்படும் பிரபஞ்சமெல்லாம் நித்தியமென்றும் தோன்றுவது சகஜமே

யாதலால், அப்படிப்பட்டவர்கள் அவசியமாய் மனே சுத்திக்காக சத்கர்மங்களைச் செய்யவேண்டும். அவர்களை விட அதிக விவேகமுடையவர்களுக்கு 'ஜீவனே தானென் றும்' 'திருசிய பிரபஞ்சமெல்லாம் காலக்கிரமத்தில் வேறு ரூபமாய் மாறுவதனுல் அநித்திய'மென்றும் தோன்றுவது சுபாவமாதலால் அப்படிப்பட்டவர்கள் முக்கியமாய்ச் சித்த சுத்திக்காக சத்துவகுண விசிஷ்டர்களாய்ப் பக்தி மார்க்க பிரவிஷ்டர்களாய்ப் பிரவர்த்திக்கவேண்டும்.

சுத்த ஞானஸம்பந்நர்களா யிருக்கப்பட்டவர்களுக்கு ஸ்திர விசாரணையினுல் பிரம்மமே தானென்றும், திருசிய பிரபஞ்சமெல்லாம் மித்தையென்றும், தோன்றுவது சகஜ மாதலால், அப்படிப்பட்டவர்கள் நிச்சயமாய் பரப் பிரம் மத்திற் கலந்து பரவசமடைந்து மௌனநிஷ்டையை அவ லம்பித்து 'நீ' 'நான்' என்னும் துவைதபாவம் நீங்கி துரீய திருஷ்டியுண்டாய் நிர்மலத்துவம் அடைந்திருக்க வேண்டும்;

தன்னைத்தான் அறிந்தவர்கள், நிர்மலமாகிய ஞான சம்பந்தத்தால் நிராகார பரப் பிரம்மத்தைத் தெரிந்து கொண்டு, கேவல தியானரூபமாய் ஐந்தாவது பதவியாகிய கைவல்யபதவியில் இச்சையுண்டாய், ஜீவன் முக்தர்களாய் யிருந்து கடைசியில் விதேஹமுக்தியை யடைவார்கள்.

ஆதலால், மானிட ஜநநம் எடுத்த ஒவ்வொருவரும் இந்தக் கிரந்தத்தை முதலிருந்து கடைசி வரையில் பல கால் வாசித்து, ஆங்காங்கு சொல்லியிருக்கும் உபநிஷத் வாக்கியங்களின் அபிப்பிராயத்தை நன்குணர்ந்து, கேவல பிரம்மா த்வைத ஞாநாநந்த பிராப்தர்க ளாவார்களென் பதாம்.

நில்லடா சகலகலை ஞானஞ் சொன்னேன்
நீங்காத மும்மூல நிலையுஞ் சொன்னேன்
மல்லடா ஆதிவஸ்தை யறியச் சொன்னேன்
மடங்காத சித்தனென்று ஆடச் சொன்னேன்
வல்லடா யோகத்தின் வகையுஞ் சொன்னேன்
வஸ்தான மும்மூலங் கொள்ளச் சொன்னேன்
அல்லடா அதையெடுத்துத் தானு முண்டு
அடங்காத ஆத்துமாவி லடங்கி நில்லே.

சுரு || "ஆப்யாயந்து மமாங்காநி வாக் ப்ராணஶ் சக்ஷுஃ ஶ்ரோத்ரமதோ பல மிந்த்ரியாணி ச ஸர்வாணி, ஸர்வம் ப்ரஹ்மோபநிஷதம் மாஹம் ப்ரஹ்ம நிராகுர்யாம், மாமா ப்ரஹ்ம நிராகரோத் நிராகரணமஸ்த்வநிராகரணம் மே அஸ்து ததாத்மநி நிரதே ய உபநிஷத்ஸு தர்மாஃ தே மயி ஸந்து தே மயி ஸந்து, ஓம் ஶாந்திஃ ஶாந்திஃ ஶாந்திஃ."

அடியேனுடைய, வாக்கு பாணி (கைகள்) பாதம் பாயுரு உபஸ்தங்களாகிய கர்மேந்திரியங்களும், கண்கள் மூக்கு நாக்கு செவிகள் தேகத்தின்மீதிருக்கும் தோல் முதலாகிய ஞானேந்திரியங்களும், மனோ புத்தி சித்த அஹங்காரங்களாகிய அந்தக் கரணங்களும், பஞ்ச பிராணன்களும், சப்த பரிச ரூப ரஸ கந்தங்களாகிய தந்மாத்திரைகளும், நாகன் கூர்ம கிருகர தேவதத்த தநஞ்சயனென்னும் ஐந்து உப வாயுக்களும் விஷயாதிகளில் ஓடாமல், பரப் பிரம்மமாகிய ஆத்ம சொரூபத்தில் நின்று, திருப்தியடையக்கடவன. வேதாந்த பிரதிபாதகமாகிய ஸச்சிதாநந்த பரப் பிரம்மம் சர்வ சொரூபியாகக்கடவது. ஆத்மசொரூபியாகிய அடியேன், அந்த பரப் பிரம்மத்தை நிராகரிக்காம லிருக்கக்கடவேனாக. அந்த பரப் பிரம்மம் ஆத்ம சொரூபியாகிய அடியேனை நிராகரிக்காம லிருக்கக் கடவதாக. அந்த பரப் பிரம்மத்தினுடைய ஆதரணை அடியேனுச்கு உண்டாகக் கடவதாக. அடியேனுக்கு அந்த பரப் பிரம்மத்தில் விசு

வாசமும், பிரம்ம லக்ஷியபாவமும் உண்டாகக் கடவன. மேலும், அந்த பரப் பிரம்மத்தில் ஆசையுடைய அடியே னுக்கு உபநிஷத்துக்களினால் சொல்லப்பட்ட தருமங்கள் உண்டாகக்கடவன. சகல தருமங்களும் அடியேனிடத்தில் உண்டாயிருக்கக்கடவன. ஓ! பிரணவ சொரூபமாகிய பரப் பிரம்மமே! ஓ! நாராயணா! சாந்திః! சாந்திః! சாந்திః! சாந்திః சகல விக்கினங்களும் பரிகரிக்கக்கடவாய் கிருஷ்ணா!

ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்

ஸம்பூர்ணம்.

தத் ஸத்,

ஸ்ரீ ஸர்வ பரிபூரண பரப் பிரஹ்மணே நமః

பரமஹம்ஸ ஸச்சிதானந்தன்

கடிகோட்டை, வீரபல்லி போஸ்ட்டு,
ராயசோடி தாலூக்கா,
கடப்பை ஜில்லா.

Gadikota, Virabulli Post,
Rayachoty Taluq,
CUDDAPAH Dist.
(15-5-1925.)

அறுதியுரைத்தல்.

மெய்யேயுரைத்தவறுதிசொற்கொள்ளார் விளங்குவேதாள மொப்
ஐயோ பவங்கடந் தேறலோர்காலத்து மாணையே யில்லையில்லை[பா
இந்த உடலம் விடுவதன் முன்விறைந் திப்பவந் தீராவிடின்
வந்துவந்து பலனாகிப் பிறந்தெய்து மாண்டே விடுவர் கிடீர்.

சாதல் பிறத்த லெனுங்கேடு தானறத் தம்மை யுணரா விடிற்
போதல்வருதலாற்பொன்னூசலாட்டொருகாலத்தும்போகாகிடீர்.

உம்மையுணர்ந்து பவச்சுடு காட்டையொப் போடேகழலா விடின்
இம்மை மறுமையி லேபிடித் தும்மை யெல்லாம் படுத்துங் கிடீர்.

ஊனைவடியென்றல்விட்டுத்தன்னுண்மையையுள்ளவாகாணுவிடின்
மானு மழுவுமாய் வந்தாலும் வன்பவ மாளா திருக்குங் கிடீர்.

இப்பிறப் பில்லே தமையுணர்ந் தெல்லாப் பிரப்புமொழியாவிடின்.
தப்பி யுடல்கொண்டு சதங்கையுங் காலுமாய் நிற்பர் கிடீர்.

ஆறி யறிவே வடி ன்றிருந்தல்லவெல்லாங் கழியாவிடிற்
கூறைகொண்டே மாயையும் மைபூணுக்கித்தோற்பாவைக் கூத்
தாட்டுங் கிடீர்.

மேலாலறிவேர மெனுதே விரைந்தும்மை மெய்கண்டு கொள்ளா
விடிற்
கோலாகலஞ்செய்துவந்தும்மையாசைபைசாசங்குமைக்குங் கிடீர்.

பந்தசங் கற்பனை யிற்றலை வைத்துப் படாதெலாம் பட்டிடாதே
யெந்தைகழல்சூடினெங்கழிலென் ஞாயிறென் றிருக்கல்லாங் கிடீர்.

நாடிக்குரவன் கழறலை வைத்துண ராதுனை நானென் றிடிற்
கூடிப்பெருஞ்சுற்றமத்தின்றலையிலேகொள்ளியைவைக்குங் கிடீர்.

ADVERTISEMENT

ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம்.

அன்பார்ந்த ஐயா ! இதை கவனித்து வாசித்துப்பாருங்கள் ! !

இந்நூலாசிரியராகிய ஸாது கடிகோட்டை, ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதாநந்த யோகீசுவரர், மூன்று நான்காம்படிகளாகிய யோக, ஞான மார்க்கங்களை மாத்திரம் ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில் விசேஷமாய் உபதேசித்திருக்கின்றார். மோக்ஷமடைய முக்கியமான நூல் இதுவேயாம். மேற்படி சுவாமிகள், ஸ்ரீ பகவத் கீதை ஆறு அத்தியாயம் வரையில் விசேஷார்த்தங்களுடன் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந சம்வாதரூபமாய் எழுதி முடித்திருக்கின்றார். அதனை ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில் ஆங்காங்கு திருஷ்டாந்தங்களாகக் காட்டியிருக்கின்றனர். முதல் இரண்டு படிகளில் இருக்கப்பட்டவர்களுக்கு இந்நூல் பிடிபடுவது மிகவும் கஷ்டம். "விரும்புஞ்சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும் அரும்பு மலர் காய் கனி போலன்றோ பராபரமே" என்பது போல், வேதாந்தம் எப்படிப்பட்டதென்றால், அரும்பு, மலர், காய் கனியைப்போன்றது. கனியாயிருக்கும் தான் இந்த நான்கு படிகளையும் அறியும்; அதாவது, தான் முதல் அரும்பா யிருந்ததையும் அறியும்; அதன் பின் மலரா யிருந்ததையும் அறியும்; அதன் பின் காயாயிருந்ததையும் அறியும்; அதன்பின் கனியாயிருந்து கொண்டிருப்பதையும் அறியும். கனியாயிருக்கும் தான், முன்னிருந்த மூன்று படிகளையும் அறியும். நமது சுவாமிகள், அரும்பு மலர்களை நீக்கிக் காய் கனியைப்போன்ற யோக ஞானமார்க்கங்களை மாத்திரம் ஜீவப் பிரம்மைக்யத்தில் விசேஷமாய் போதித்திருக்கின்றார்கள். ஸ்திரீ புருஷரூபமாய்ச் சஞ்சரித்துக்கொண்டு மாயையால் கட்டுப்பட்டு மிதியுண்டு மிகவும் அகாதமான சம்சார மென்னும் பாழுங்கிணற்றில் வீழ்ந்து தநாசையென்னும் வியாதியினால் பீடிக்கப்பட்டு விஷயவாசனா ரூபமாகிய அற்ப சுகங்களுக் குட்பட்டு எப்பொழுதும் பரிதபித்துக்கொண் டிருக்கப்பட்ட சில பாமரர்க

ளுக்கு இந்நூல் பிடிபடுவது மிகவும் கஷ்டம்; இப்படிப்பட்ட ஸ்திரீ புருஷர்களுக்கு முதலில் பக்தி ரசத்தை ஊட்ட வேண்டும்; அப்போது அவர்களின் மனம் ஓர் நிலையில் நின்று மேல்படி ஏறுவதற்கு மார்க்கம் உண்டாகும். ஆதலால், பக்திசெய்து முக்தி அடையத்தக்க கிரந்தங்கள் சிலவற்றை எழுதும்படி சில பக்தர்கள் மேற்படி சுவாமிகளைக் கேட்டுக்கொண்டபடியால், இது விஷயங்களைக் குறித்து சுவாமிகள் நெடுநாளாய் ஆலோசித்து எது விஷயம் உபதேசித்தால் ஜனங்கள் சீக்கிரமாய் கிரகிக்கக்கூடுமென்று யோசித்துக்கொண் டிருக்கும் சமயத்தில், பரதகண்டத்திற்கு வடக்கே லோக ரக்ஷணார்த்தமாய் பகவதாஞ்ஞானுசாரமாய் இந்த கலியுகத்தில் அவதரித்த பரம பாகவதர்களின் சரித்திரங்களை யெல்லாம் விசிதம் செய்து சிரவண மனனம் செய்யப்பட்டவர்களினுடையவும், கிரகிக்கப் பட்டவர்களினுடையயும், இருதயத்தை மூடிக்கொண்டிருக்கும் மாயை என்னும் மலினம் நீங்கி பக்திவைராக்கியங்களை உண்டாக்கி இஷ்டார்த்தங்களை யெல்லாம் தரத்தக்க 'மஹா பக்தவிஜயம்' என்னும் இந்த புராண (பழய) க்ரந்தம், முதல் முதல் யுத்தவதாஸர் என்பவரால் லோகோபகாரார்த்தமாய் ஸம்ஸ்கிருத பாஷையில் எழுதப்பெற்றது. இந்த யுத்தவதாஸர் பண்டரீபுர நிவாசகர், மிகவும் பரிசுத்த மனமுடையவர். பிறகு கலியுகாதி 4732-வது ஆண்டில், பிரம்ம குலத்தில் அவதரித்த நாபாஜி சித்தர் என்பவர் அதை இந்துஸ்தானி பாஷையில் எழுதி, விருந்த வசிஷ்டாதி முனிவரிஷ்டர்களுக்கு வாசித்துக் காட்டினார். பிறகு விருந்த வசிஷ்டர் நாபாஜி சித்தரிடம் கேட்ட சரித்திரங்களை துவாலியர் பாஷையில் எழுதித் தமது சிஷ்யர்களுக்கு உபதேசித்தார். பிறகு கலியுகாதி 4862-ல், மஹீபதி பாவா என்பவர் அதை மஹாராஷ்டிர பாஷையில் பிரசித்தி செய்வித்தனர். பிறகு கலியுகாதி 4890-ருவது ஆண்டில், தக்ஷிண தேசத்தில் வசித்துக்கொண்டிருந்த ஸ்ரீ குருஷ்ணபாத யோகீசுவரர் அதை மறுபடியும் ஸம்ஸ்கிருத பாஷையில் எழுதி பிரசித்தி செய்வித்தனர். பிறகு மைசூர் தேசத்தை ஆண்டு வந்த அரசர்களில், 21-வது அரசராகிய ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார் பஹதூர் அவர்கள், தம் காலத்தில் மேற்படி கிரந்தத்தை கன்னட

பாஷையில் எழுதிவைத்தனர். இப்படிப்பட்ட உத்கிருஷ்ட (சிரேஷ்ட)மான கிரந்தம், நமது சுவாமிகள் இருக்கப்பட்ட ஆசிரமத்தினிடமே அகஸ்மாத்தாய் கிடைத்தது. சுவாமிகள் அதைப் பார்த்து, மானிடயாக்கை யெடுத்த ஒவ்வொருவருக்கும் பக்தி ரசத்தை ஊட்டுவதற்கு இதுதான் சரியான நூல் என்றெண்ணி பண்டரீ நாதரை பக்திசெய்து முக்தியடைந்த மஹானுபாவர்களாகிய ஸ்ரீ கபீர்தாஸ், ஸ்ரீ துளஸிதாஸ், ஸ்ரீ ஞாநதேவ், ஸ்ரீ ஜயதேவ், ஸ்ரீ நாமதேவ், ஆகிய இவ்வைந்து பக்தர்களின் சரித்திரங்களைக் கன்னடத்திலிருந்து தமிழ் பாஷையில் மொழி பெயர்த்து எழுதி யிருக்கின்றனர். ஆதியில் உண்டாகிய சரியான 'பக்த விஜயம்' மூலகிரந்தம் இதுவேயாம். இப்படிப்பட்ட கிரந்தம் இதுவரையில் தமிழ்பாஷையில் வெளிவரவில்லை. பக்த விஜயமென்று பெயர்வைத்து ஏதேதோ விஷயங்களை எழுதி இதுவரையில் அச்சிட்டிருக்கின்றார்கள். அதற்கும் இதற்கும் விசேஷ தாரதம்மியம் உண்டு இப்போது கபீர்தாஸ் சரிததிரத்தை இதில் சற்றே சுருக்கிக்காட்டியிருக்கின்றது. அதாவது:—

பூலோகத்தில் பாமரர்களுக்கு பக்தி ஞானங்களை உபதேசிப்பதற்காக பகவான், ஸ்ரீ சுகப்பிரம்ம ரிஷியை சிசுபமாய்ச் செய்து கங்காநதியில் மூன்றுமுறை முழ்த்தி முத்துச்சிப்பியில் வைத்து கங்கையில் விட்டுவிட்டனர். பகவான் சிசுவை கங்கையில் மூன்று முழுக்குகள் மூழ்த்தினவுடனே ஸ்ரீ சுகர் மாயையால் மூடப்பட்டு திக்கு முக்கலாடி திணறி திமிறி துவா! துவா!! துவா!!! என்று அழுது முத்துச்சிப்பியில் மிதந்துகொண்டிருந்தது. கங்காதேவி, முத்துச்சிப்பியை தன் அலைகளாகிய கைகளால், அப்போது கங்கை ஓரமாய் தவம்செய்துகொண்டிருக்கும் தமால் சமீபமாய்க்கொண்டுபோய் நிறுத்தினள். அப்போது சிசு'தமால்'கையில் அகப்பட்டு கபீர் என்னும் பெயருடன் வளர்ந்துவந்தது. இவர் அயோனி சம்பந்தர். ஆதியில் 'ரம்பை' சுகரை மோஹிக்க சந்யாசி வேஷங்கொண்டு அவர் செல்லும் மார்க்கத்தில் பர்னசாலை கட்டி அகோரமான தவம் செய்பவளைப்போல் நடித்துக்காட்டினள். அப்போது சுகர், வேஷதாரியாகிய சந்யாசியைக்கண்டு பேசியபோது, என் தவத்தைக் கெடுத்தாய் என்று கோபித்துச்

சபிப்பதாய் சந்யாசி வேஷதாரியாகிய ரம்பை சொல்லினள். சுகர் மன்னிக்கும்படி கேட்டனர். 'என் எண்ணத்தை நிறை வேற்றினல் மன்னிப்போம்' என்று சொல்லினள். சுகர் அதற்குச் சம்மதித்தவுடன் ரம்பை காஷாய வஸ்திரத்தை நீக்கி தன் நிஜ சொரூபத்தைக்காட்டி தன்னைச் சேரும்படிச் சொல்லினள், உடனே சுகர் திடுக்கிட்டு பதில் சொல்ல யாதொன்றுந் தோன்று மல் சிலநேரம் சென்ற பிறகு 'கலியுகத்தில் உன்னிஷ்டத்தைப் பூர்த்திசெய்கின்றேன்' என்று வரங்கொடுத்தனர். அதுபோல் இக்கலியுகத்தில் அதிக ரூபரேகா விலாசத்துடன் 'சுந்தரா' என் னும் பெயருடையவளாய்க் கபீருக்கு நெருங்கிய பாத்தியஸ்த்தர் களின் வீட்டில் அவதரித்தனள். கபீர் சுந்தராவை மணம் புரிந்து கோடாலியில் காம்பிருந்துகொண்டு தன் குலமாகிய மரங்களை யெல்லாம் நிம்சம் செய்வதுபோல், கபீர் மகம்மது மதத்தி லிருந் தும் மகம்மது மதத்திற் கெல்லாம் கோடாலிக் காம்பா யிருந்து நிம்சப்படுத்தி,பக்திமார்க்கங்கிளினல் பிரபஞ்சத்தைச் சீர்திருத்தி முடிந்தவுடன்,பகவான் கபீருக்குப்பிரத்யக்ஷமாய்,"கபீர்! நீ அவ தரித்த காரியம் முடிந்தது. இனி பரமபதம் வந்து சேரக் கடவாய்"என்று ஆஞ்ஞாபித்து சுந்தரா தேவியைத் தன்னுடன் கூட அழைத்துக்கொண்டு விமானத்தின்மீதேறி உட்கார்ந்த வுடன், அந்த திவ்விய விமானம் ஆகாசமார்க்கமாய்க் கிளம்பி மிகவும் வேகமாய்ச் சென்று மறைந்தது. பிறகு கபீர், பகவதாஞ் ஞானுசாரமாய் சந்தோஷத்துடன், இந்த சரீரத்தை தகனமும் செய்யாலாகது; சமாதியும் செய்யலாகாது என்று சவரின்மீது எழுதுவிட்டு பத்மாசனத்துடன் உட்கார்ந்து யோகபலத்தினல் நாபியிலிருக்கும் குண்டலி சத்தியைக்கிளப்பி பிரம்மாந்திரத்தைத் திறந்துகொண்டு சுகப்பிரம்மரிஷியாய் திவ்விய விமானமேறிச் செல்லும்போது ஸுரர்களும் முனிவர்களும் வந்து எதிர்க் கொண்டு அழைத்துச் சென்றார்கள்.

பொழுதுவிடிந்தவுன் கபீர் பரமபதம் அடைந்த விஷயம் பட்டணமெங்கும் வியாபித்து இந்துக்களும் மகம்மதியர்களும் இது எங்கள் களேபரம் (பிணம்) இது எங்கள் களேபரம் (பிணம்) என்று சண்டையிட்டு ஒருவரோடொருவர் மண்டைகளை உடைத்

துக்கொண்டார்கள். அரசன் இது விஷயம் கேட்டு ஓடோடியும் வந்து இவர்களை சமாதானப்படுத்தி கபீர் சிரசின்மேல் எழுதியிருக்கும் வாக்கியத்தை வாசித்து கபீரை துதிசெய்து பட்டு பீதாம்பரத்தை களேபரத்தின் (பிணத்தின்) மீது மூடி, காலையில் வந்து பீதாம்பரத்தைத் திறந்து பார்த்தபோது கபீர் சரீரம் பாதி துளசி தளமாகவும் மற்றப் பாதி சரீரம் மல்லிகைப் புஷ்பமாகவும் இருந்தது. உடனே அரசன் இரண்டு மதஸ்தரையும் கூப்பிட்டு, அவரவர்களின் பாகங்கள் அவரவர்களை எடுத்துக்கொள்ளும்படி ஆஞ்ஞாபித்தான். உடனே இந்துக்கள் துளசிதளங்களையும் மகம்மதீயர்கள் மல்லிகைப்புஷ்பங்களையும் எடுத்துக்கொண்டு அம்பாரி மீது வைத்து பேரீ மிருதங்க வாத்தியங்களுடன் ஊர்கோலம் சென்று உசிதமான ஸ்தலத்தில் வைத்துப் பூஜித்து வந்தார்கள். இது வாசிக்க வாசிக்க ஆனந்தத்தை உண்டாக்கி பக்தியை விருத்தி செய்விக்கும்.

இது, பக்திசெய்து முத்தியடைந்த ஐவர் சரித்திரங்களில் ஒன்று; இது, இந்நூலாசிரியரால், பாலர் பாலிகைகளுக்கும் விளங்கும்படி இனிய தமிழ்நடையில் எழுதப்பட்டுள்ளது. இதில் உள்ள முக்கியமான விஷயங்கள் சிலவற்றை இதனடியில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை வருமாறு:—

1. பகவதாஞ்ஞானுசாரமாய் ஸ்ரீ சுகர், சிசுரூபமாய் முத்துச் சிப்பியில் சயனித்து குவா! குவா!! குவா!!! என்று வீறிட்டழுது பெருவிரல் வாயில் வைத்து சப்பிக்கொண்டு கங்கையில் மிதந்து போகுதல். 2. சிசு தமால்கையில் அகப்பட்டு கபீர் என்னும் பெயருடன் வளர்ந்து வருதல். 3. தேவரம்பை, சுகரைமோஹித்ததனால் ரம்பை, பூலோகத்தில் அவதரித்து சுந்தரா என்னும் பெயருடன் வளர்ந்துவருதல். 4. கபீர் சுன்னத் செய்யவந்த காஜியுடன் தர்க்கம்செய்து ஜயித்தல். 5. கபீர் தாயார் ஜிஜ்ஜாபீபீ தன் மகனை நெசவுசெய்யும் தொழிலில் விடுதல். 6. கிழ பிராம்மண ரூபமாய் வந்த பகவானுக்கு கபீர் வஸ்த்ரதானம் செய்தல். 7. பகவான், கபீருக்கு சகுணோபாசனம் உபதேசித்தல். 8. பகவான், கபீரைச் சோதிக்க பகீர் வேஷத்துடன் வருதல். 9. பகவானுன பகீருக்கும் கபீருக்கும் சம்வாதம் நடப்பது. 10. பகீர், ஜிஜ்ஜா பீபீயிடம்

சென்று கோள் சொல்லி தண்டனை செய்வித்தல். 11. பகவான் கபீருக்கு தரிசனம் கொடுத்தல். 12. ராமானந்தர் சிஷ்யர்கள், கபீரை அடித்து மடத்திலிருந்து துறத்துதல். 13. மறுபடியும் கபீர், ராமானந்தரை சேவித்து அவரிடமிருந்து ஆசீர்வாதம் பெறுதல். 14. ராமானந்தரிடம் கபீர் தாரகமந்திரம் உபதேசம் பெறுதல். 15. கபீர், மகம்மது மதத்தை ஜயித்தல். 16. கபீர், கோரக்கரை ஜயித்தல். 17. தமால், கபீருக்கு விவாஹம்செய்ய பிரயத்தினப்படுதல். 18. கபீருக்கும் சுந்தராவுக்கும் விவாஹ மஹோத்சவம் நடக்குதல். 19. கபீர் கோ இம்சையை நிவர்த்தி செய்தல். 20. கபீர் ஜீவஹிம்சை பாபமென்று உபதேசம் செய்தல். 21. பகவான் கபீரை பரீக்ஷித்தல். 22. கபீர், தன்மனைவியாகிய சுந்தராதேவியை மோஹித்த துளசீதாஸ் என்பவனிடம் கொண்டு போய்விடுதல். 23. பகவான், சுந்தராதேவியின் மான பங்கத்தைக்காக்க கொத்தவால் ரூபமாய் வந்து துளசீதாசனை தண்டனை செய்தல். 24. தமாலும் ஜிஜ்ஜாபீபீயும் சத்கதி அடைதல். 25. பகவான், கபீர் சங்கீதத்திற்கு நர்த்தனம் புரிதல். 26. யேந்திரத்தில் கோதுமை அறைபடுவதைப் பார்த்து துக்கப்படும் கபீருக்கு ஸ்ரீராமமூர்த்தி தேறுதல் சொல்வது. 27. கபீருடைய கீர்த்திக்குப் பொறாமைகொண்டு சில துஷ்டர்கள் யுக்தி செய்தல். 28. பகவானும் கபீரும் சாதுசங்கத்தை ஆதரித்தல் 29. கபீர், சரணாகதியடைந்த துஷ்டர்களுக்கு தத்துவோபதேசம் செய்தல். 30. அர்த்தராத்திரியில் வந்த ஐந்நூறு சாதுக்களின் பசியைத் தணிக்கப் பதார்த்தம் கொண்டுவரும்படி கபீர் தன் மனைவியைக் கடைக்கு அனுப்புதல். 31. அர்த்தராத்திரியில் வர்த்தகனிடமிருந்து பதார்த்தம் கொண்டுபோவதற்கு பகவான் வண்டிகளைக் கொண்டுவருதல். 32. கபீர், பதார்த்தம் தந்த வர்த்தகனிடம் தனது மனையாளைச் சுமந்து கொண்டுபோய் விடுதல். 33. கபீர் குமாரன் தமால், தீர்த்தயாத்திரைசெய்தல். 34. கபீருக்கும் ரோகிதாசுக்கும் சம்வாதம் நடக்குதல். 35. பகவான் வந்து, கபீரையும் ரோகிதாசையும் சமாதானம் செய்தல். 36. கோரக், இரண்டாவது முறை கபீரிடம் வந்து தோல்வியடைந்து சிஷ்யனாகுதல். இது படிக்கப்படிக்க மிகவும் அற்புதமா

யிருக்கும். 37. பகவான் கபீருக்கு தரிசனம் தந்து, பரமபதம் வந்து சேரும்படி ஆஞ்ஞாபித்து, சுந்தராதேவியைத் தன்னுடன் விமானத்தில் ஏற்றிக்கொண்டு செல்லுதல். 38. கபீர், பிராணயாமம் செய்து நாபியிலிருக்கும் குண்டலி சக்தியைக் கிளப்பி பிரம்ம கபாலத்தை (உச்சியை)த் திறந்துகொண்டு சுகப்பிரம்மரிஷியாய்ச் செல்லுதல். 39. கபீர் சரீரம், பாதி துளசிதளமாகவும், பாதி சரீரம் மல்லிகை மலராகவும் காணப்பட்டது. அதை இந்துக்களும் மகம்மதியர்களும் அம்பாரியின் மீதுவைத்து ஊர்கோலத்துடன் சென்று பூசித்தல். இந்த முப்பத்தொன்பது சரித்திரங்களும் படிக்கப்படிக்க மிகவும் அற்புதமாயிருக்கும்.

இதன் விலை இரண்டாம்பதிப்பு காலிகோபயிண்டு ரூ. 2 4 0

ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந சம்வாத ரூபமாய் எழுதிய

ஸ்ரீ பகவத்கீதை.

இக்கீதையின் சாராம்ஸம் இதில் சுருக்கமாய் எழுதப்பட்டிருக்கின்றது. அதாவது,

யதா யதா ஹி தர்மஸ்ய க்ளாநிர் பவதி பாரத!
அப்யுத்தாந மதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்.
பரித்ராணாய ஸாதூநாம் விநாஸாய ச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே.

என்கிற பகவத்கீதா வாக்கியத்தின்படி, எந்தக் காலத்தில் வேதோத்தம தர்மங்கள் க்ஷீணித்து அதர்மம் விருத்தியடைகின்றதோ அப்போதெல்லாம் என்னை நானே சிருஷ்டித்துக்கொண்டு, நானும் ஓர் மனுஷ்யனாக பிரதியுகங்களிலும் அவதரித்து அதர்மத்தை விருத்தி செய்துகொண்டிருக்கும் துஷ்டர்களை நசிக்கச்செய்வதற்கும், தர்மங்களைச் சரியாய்ப் பரிபாலனம் செய்துகொண்டிருக்கும் சத்புருஷர்களுக்கு, துஷ்ட ஜனங்களால் பாதையுண்டாகாமல் இருப்பதற்காக ரக்ஷிக்கும் பொருட்டும், தர்மாசார பத்ததிகளை ஜனங்களுக்குக் காண்பித்து அவர்களை ஆசிரயிக்கச்

செய்து அதன் மூலமாய் க்ஷீணித்த தர்மங்களைப் புனருத்தானம் செய்வதற்கும், யாதவ வம்சத்தில் பிறந்தவர்களும் மஹா பக்தர்களுமான வசுதேவர் தேவகீ இவர்களுடைய இஷ்ட பூர்த்திக்காகவும் அவர்களுக்குப் புத்திரனாக மஹாவிஷ்ணு அவதாரம் செய்தார் என்று சொல்லப் பட்டிருக்கிறது. "ஆனால், ஈசுவரனாகியநீ என்னால் சிருஷ்டிக்கப்பட்ட சமஸ்த ஜனங்களையும் சமமாய்ப் பரிபாலனம் செய்யாமல் சத்புருஷர்களை மாத்திரம் ரக்ஷிப்பதும், துஷ்டர்களை நசிக்கச்செய்வதும் உனக்குத் தருமமா என்று கேட்கின்றாயோ சொல்லுகிறேன் கேள்.

சுலோ || "லாலநே தாடநே மாதுர்ந வைஷம்யம் யதார்பகே
தத்வதேவ மஹேஸஸ்ய நியந்துர்க்குண தோஷயோ:."

"தாய் தான் சொன்னபடி கேட்கப்பட்ட குமாரன்மீது சந்தோஷிப்பாள். தன் வார்த்தையைக்கேளாத குமாரனை அடிப்பாளன்றோ? அப்படி அடிப்பதனால் சொன்னபடி கேட்டு அவனும் நல்லொழுக்கத்திற்கு வருவானென்கிற எண்ணத்தினால் அடிக்கின்றாளே யொழிய விரோதத்தினாலல்ல. அதுபோல், சர்வ சமரசமாயும், சர்வ பரிபாலனனாயும், ஸர்வேஸ்வரனாயும் இருக்கப்பட்ட பகவானை என்னால் ஏற்படுத்திய வேதங்களில் சொல்லப்பட்டதுபோல் நடந்துகொள்ளும் சத் புருஷர்களை ரக்ஷிக்கின்றேன். அப்படி நடவாத துஷ்டர்கள் மேன்மையை அடைவதற்காக அநுக்கிரஹத்துடன் புத்திவரும்படியாய் தக்கபடி அவர்களைச் சிக்ஷிக்கின்றேனே யொழிய அவர்களிடத்தில் துவேஷத்தினாலாகிலும், பக்ஷபாதத்தினாலாகிலும் செய்கின்றேனென்று எண்ண வேண்டாம்." என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

அக்காலத்தில், அஸ்தினபுரத்தை ஆண்டுவந்த சந்திர வம்சத்து அரசர்களின் சந்ததியில் திருதராஷ்ட்டிரனென்றும் பாண்டுவென்றும் இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். திருதராஷ்ட்டிரன் பிறவிக்குருடன். அவன் பட்டத்திற்கு அருஹன் ஆகாவிடினும், தம்பியான பாண்டு தமையனிடத்தில் உள்ள பக்ஷத்தினால் தமையனை ராஜா வாக்கித் தான் இளவரசனானான். திருதராஷ்ட்டிரனுக்குத் துர்யோதனாதி நூறு குமாரர்களும், பாண்டுவுக்குத் தர்மபுத்திரன் பீமசேனன், அர்ஜுனன், நகுலன்

சகாதேவன் என ஐந்து குமாரர்களும், இருந்தார்கள். பாண்டு குமாரர்களான ஐவர்களும் வித்தையிலும், வல்லமையிலும், பெருந் தன்மையிலும்,புத்தியிலும், சகலவித நற்குணங்களிலும் துர்யோத ஞதிகளைவிட சிரேஷ்டர்களாயும் சலர ாலும் புகழத்தக்கவர்க ளாயும் இருந்ததனுல், தன் தகப்பனுக்குப் பிறகு ராஜ்ஜியம் தனக்குக் கிடைக்காமற் போய்விடும் என்கிற பயத்தினுல், துர்யோதனன் இவர்களைத் தந்திரமாய் விரோதித்துக் கொன்று விடுவதற்கு எண்ணங்கொண்டான். தன் குமாரன் பாண்டவர் களை விரோதிக்கின்றுன் என்கிற விஷயம் திருதராஷ்ட்டிரன் அறிந்து பாண்டவர்களுக்குப்பாதி ராஜ்ஜியம் கொடுத்து, இந்திர பிரஸ்தம் என்கிற பட்டணத்தில் அவர்களை வசிக்கச்செய்தான். துர்யோதனன் அத்துடன் திருப்தியடையாமல் பாண்டவர்களை கொன்று விடுவதற்காகவே பலவித முயர்ச்சிகளைச்செய்தும்,பயன் படாததனுல் அவர்களை அடுத்து சிநேகம் பாராட்டிக்கடைசியில் மோசவடியாய் தர்ம புத்திரைச் சூதாட்டத்திற்கு உட்படுத்தித் தனக்கும் தர்மபுத்திரருக்கும் அம்மானுன சகுனி என்பவனைக் கொண்டு மாயச்சூதாடுவித்துப் பாண்டவர்களுடைய சகல சொத் துக்களையும் அபகரித்துக்கொண்டது மல்லாமல், பாண்டவர்களை யும், அவர்களுடைய பத்தினி பதிவ்விரதா சிரோன்மணியுமாகிய திரௌபதியையும், துர்யோதனன் சபையில் மானபங்கம் செய் தான். பிறகு பீஷ்மாச்சாரியர் முதலான பெரியோர்களுடைய வேண்டுகோளின்மேல் பாண்டவர்கள் பன்னிரெண்டு வருஷம் காட்டில் சஞ்சரித்துப் பதின்மூன்ருவது வருஷம் தனக்குத்தென் படாத இடத்தில் வசித்திருந்து, பிறகுவந்தால் பாதி ராஜ்ஜியம் கொடுப்பதாகத் துர்யோதனன் உடன்பட்டான்.

பாண்டவர்கள் ஐவரும் மஹா பலசாலிகளாய் இருப்பினும், தர்மமென்கிற கயிற்ருல் கட்டுப்பட்டவர்களாகையால், அப்படியே காட்டுக்குச்சென்று நிபந்தனை தவருமல் பதிமூன்று வருஷம் காடு மலை முதலிய இடங்களில் சஞ்சரித்துப் பிறகு, பாதி ராஜ் ஜியம் கொடுக்கும்படி துர்யோதனனைக் கேட்டனுப்பினுர்கள். அதற்கு அவன் சம்மதிக்கவில்லை. அதன்பிறகு, தங்களுக்கு அம் மான்பிள்ளையும் தங்களிடத்தில் அதிக வாத்சல்யமுடையவருமான

ஸ்ரீ கிருஷ்ணபகவானைப் பிரார்த்தித்து அவர் மூலமாக துர்யோதனனைப் பாதிராஜ்ஜியம் கொடுக்கும்படி கேட்டனுப்பினார்கள். துர்யோதனன் ஊசிநாட்டும் இடமுள்ள பூமியும் கொடுக்கச் சம்மதமில்லை என்றான். அதன் பிறகு, இரு திறத்தாரும் யுத்தம் செய்யவேண்டியதாய் நேர்ந்தது. இந்த யுத்தத்திற்குப் பாரத யுத்தம் என்றுபெயர். இரு திறத்துச் சேனைகளும் யுத்தகளத்தில் நிற்கும்போது,யுத்தத் தொடக்கத்தில் அச்சேனைகளை அர்ஜுநன் பார்த்துப் பெரும்பாலும் தன் பந்துக்களும், சிநேகிதர்களும், ஆசாரியர்களுமாய் இருக்கக்கண்டு பரிதாபமடைந்து தனக்குச் சாரதியாய் எழுந்தருளிய ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கி, "நான் இந்தச் சேனைகளைக்கொல்லத் துணியேன்; எவ்விடத்தை நோக்கினாலும் பந்து, மித்திர ஆசாரியர்களாகவே யிருக்கின்றார்கள். அவர்களைக்கொன்றால் நான் நரகமடைவேன், எனக்கு ராஜ்ஜியமே வேண்டாம் காட்டுக்கே மறுபடியும் செல்வேன்'' என்றான். அந்த வார்த்தைகளைக்கேட்ட ஸ்ரீ கிருஷ்ணபகவானானவர் அர்ஜுநனை வியாஜ்ஜியமாகக்கொண்டு, சகலமான பெயர்களும் கடைத்தேரும் பொருட்டும், தம்தம் வர்ணாசிரம தர்மத்தை விட்டவர்கள் நரகமடைவார்கள் என்பதையும், ஆத்மாநாத்ம விவேகத்தையும், உத்தம சுகத்தையும் அடையவேண்டியதற்காகவும் ஞான கர்ம மார்க்கங்களை உபதேசித்தார். ஆகையால், இந்த கிரந்தமானது, பகவானான ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியால் உபதேசிக்கப்பட்டபடியால், இதற்கு பகவத்கீதை என்றும், வேதாந்த அர்த்தங்களைத் திரட்டிச் சொல்லியிருப்பதனால் உபநிஷத்தென்றும், பரப்பிரமத்தைத் தெரிவிக்கின்ற வித்தையாயிருப்பதனால் பிரம்ம வித்யையென்றும், ஆத்மா நாத்ம விவேகத்தை விளக்குகிற சாங்கிய யோகமும் கர்மயோகமும் சொல்லப்பட்டிருப்பதனால் யோக சாஸ்திரமென்றும், ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கும் அர்ஜுநனுக்கும் நடந்த உத்தர பிரதியுத்தரங்களா யிருப்பதனால் ஸ்ரீகிருஷ்ணார்ஜுன சம்வாதமென்றும் சொல்லப்படுகின்றது. மற்ற விஷயங்கள் யாவும் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதையில் விரிவாய்க்காணலாம். சுத்தமான கிளேஸ் கடிதங்கள், உயர்ந்த காலிகோபயிண்டு, மூன்றும் பதிப்பு. ஸ்ரீ பகவத்கீதை விலை ரூ. 2 4 0

வெளிவரப்போகின்றது! வெளிவரப்போகின்றது!!

ஸ்ரீ துளஸீதாஸ் ஸ்ரீ ஞானதேவ் சரித்திரங்கள்.

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர் எழுதிமுடித்த "ஸ்ரீ துளசீதாஸ் ஸ்ரீ ஞானதேவ்" சரித்திரங்கள் இரண்டும் ஒரே புஸ்தகமாய் உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டு காலிகோ பயிண்டுடன் வெளி வரப்போகின்றது.

இந்த சரித்திரம் வால்மீக அம்ஸமே "ஸ்ரீ துளசீதா" ஸாகவும், விஷ்ணுமூர்த்தி அம்ஸமே "ஸ்ரீ ஞானதே" வாகவும். பிரமதேவன் அம்சமே "ஸ்ரீ சோபானதே" வாகவும். நாரதர் அம்சமே "ஸ்ரீ பாதசுவாமி" யாகவும். அருந்ததி, வசிஷ்டர் அம்சமே "முக்தாபாய், விடோபா" வாகவும் பரமசிவன் அம்சமே "நிவர்த்திதே" வாகவும் பிறந்து கலியுகத்தைச் சீர்திருத்த வந்தவர்களின் கதைகளைக் குறித்ததேயாம். ரிஷிகளும் ஆதிசக்தியும் திரிமூர்த்திகளும் அவதரித்து பாமர ஜனங்களுக்கு ஞானோபதேசம் செய்யவந்த இவர்களின் சரித்திரங்கள் எவ்வளவு சிரேஷ்டமானதா யிருக்கலாமோ அதை நீங்களே சற்று ஆலோசித்துப் பாருங்கள். ஆதலால், இது ஒவ்வொரு குடும்பத்திலுள்ள ஸ்திரீ புருஷர்கள் எல்லோரும் வாசித்து வருவாராகில் அவர்களின் பந்தம் நீங்கி மோக்ஷ வீட்டை அடைவார்கள். அதாவது, மோக்ஷமென்றால் விடுதலை. விடுதலை என்றால் சகல பந்தங்களிலிருந்து விடுபடுவதே மோக்ஷமென் றறியக்கடவீர்களாக. ஆதலால், இந்த துளஸீதாஸ் சரித்திரம் ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து வரவேணடும். இது சீக்கிரமாய் வெளிவரும்.

இதன் விலை காலிகோ பயிண்டு ரூ. 2 4 0

சுவாமிகளின் புஸ்தகங்களும் இன்னும் வேண்டும் புஸ்தகங்களும் அடியில்கண்ட கம்பெனிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ ஸச்சிதானந்தர் கம்பெனி,
169, ஸ்டிராஹன்ஸ்ரோட்டு சூளைப்பட்டாடம்
பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

"ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்"

ரஹஸ்யார்த்தம்.

மேற்படி ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தி லுள்ள ரஹஸ்யங்களை யெல்லாம் சிறு பிள்ளைகள்முதல், யோகிகள் ஞானிகள் வரையில் தமக்குத் தாமாகவே அறிந்த விஷயமே யொழிய அறியாத விஷயமன்று. ஆனால், இவ்விஷயங்களை அவர்கள் ஆழ்ந்துப் பாராத குற்றத்தினால் உலகத்தின் மாயையென்னும் ரஹஸ்யார்த்தங்களை அறிந் துக்கொள்ளாம லிருக்கின்றார்கள். ஜனங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் பிறந்து சுக துக்கங்களை அனுபவித்து, குடும்ப வியவகாரங்களிலேயே சதாகாலமும் உழன்று அனேக யோசனைகளுடன் இருந்து கடைசியாய் ஒருனாள், இத்தேஹத்தில் மூக்கு ரந்திரங்களின் வழியாய் ஆடிக் கொண்டிருக்கும் மூச்சானது அறுபட்டு ஓடிவிடுகின்றது. ஆதலால்,

நாம் எதற்காக ஜநநமெடுத்தோம்; ஜநநமெடுத்ததற் காக மறுஜன்மத்திற்கு வேண்டிய என்ன சாதனைகளைச் செய்யவேண்டும் என்று சற்று ஆழ்ந்து யோசிப்பாராயின், அவர்கள் பூர்வ ஜன்மங்களில் செய்த புண்ணிய விசேஷத் தினால் நல்வழியில்செல்ல அவர்களின் மனதிற்கு ஓர் சந் தோஷத்தை உண்டாக்கும்; காம்ய புண்ணியத்தினால், (இச்சைக்கொண்டுசெய்த புண்ணியத்தினால்) மறுஜன்மத் தில் தனவந்தனாய்ப் பிறப்பானாகில், அவனுக்கு ஈசுவர பக்தி யில் பிரீதியில்லாமல், எப்பொழுதும் தனம் சம்பாதிக்கும் விஷயங்களிலேயே அவன்மனம பற்றி இழுக்கும். இவ்வா றான தநாசையுடைய புருஷன் மனம், ஈசுவர பக்தியில் நாடமாட்டா; ஏனென்றால் ஆதியில்,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவாராய்ச்

செல்லாஅ நின்றவித் தாவர ஜங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்."

என்னும் திருவாசகத்தில் கூறியவாங்கு முன்சொல்லிய புருஷர்களெல்லோரும், முதல் புல்லாயிருந்து புண்ணிய விசேஷத்தினால் பூண்டாய், அப்புண்ணிய விசேஷத்தினால் மரமாய்ப் பிறகு பறவையாய்ப் பிறகு நகர்ந்துசெல்லும் பாம்பு வர்க்கங்களாய்ப் பிறகு அப்புண்ணிய விசேஷத்தினால் மானிடச்சட்டையைத்தரித்து புருஷர்களாய் வந்தார்கள். புண்ணியவிசேஷத்தினால் மனிதனாய்ப் பிறந்து தனவந்தனாகலாம். இப்படிப்பட்டவர்களுக்கு ஈசுவரபக்தி உண்டாவது மிகவும் அரிது. இதற்குத் திருஷ்டாந்தம் சொல்லுகின்றோம்.

பசுவாகிலும் எருதாகிலும் குதிரையாகிலும் அல்லது வேறு எந்த மிருகமாகிலும் வேகமாய் ஓடிவந்தாலும் அல்லது நடையாய் வந்தாலும் நல் லறிவுடை மிருகங்கள், குழந்தைகளாகிலும் பிள்ளைகளாகிலும் வழியில் இருப்பார்களாகில் அம்மிருகங்களுக்கும் ஜீவகாருண்யமுண்டாய் குழந்தை சமீபமாய்வந்தவுடன் தம்வேகமெல்லாம் அடக்கி நின்றுவிடும். அல்லது குழந்தைகளைச் சுற்றிச் சென்றாலும் செல்லும். இதுவிஷயம் ஒவ்வொருவரும் அறிந்தவிஷயமே. இவ்வாறான அறிவுடைய மிருகங்களும் மானிடராய் ஜன்மிக்கவேண்டியதாய் நேரிடும். மிருக ஜாதிகளும் முதல்முதல் மானிட சரீரங்களை யெடுத்து அந்தந்த ஜன்மங்களில் செய்துவரும் புண்ணியவிசேஷத்தினால், ஈசுவரபக்தி அதிகரித்து, அப்புண்ணிய விசேஷத்தினால் மறுஜன்மத்தில் களங்கமற்ற மகாசீலனாயிருந்து பரிபக்குவமடைந்து, அப்புண்ணிய விசேஷத்தினால் மறுஜன்மத்தில் யோகியாய்ப்பிறந்து, அச்ஜன்ம புண்ணிய விசேஷத்தினால் மறுஜன்மத்தில் ஞானியாய்ப் பிறந்து கடைசியில் பராபர வஸ்துவாகிய பரப் பிரம்மத்தில் ஐக்கமாய் (சேர்ந்து) விடுவான்.

புல் பூண்டு மிருகங்களும் மனிதர்களாய்வரும் ரஹஸ்யம் தெரிந்துகொள்ளவேண்டுமானால், இராஜாங்கத்தார்

பத்து வருஷங்களுக்கு ஒருமுறை ஒருநாள் இரவில் உலகமெங்கும் எடுக்கும் ஸேன்ஸஸ் கணக்குகளைப் பாருங்கள். ஒவ்வொரு ஸேன்ஸஸ்ஸிலும் எத்தனையோகோடி ஜனங்கள் அதிகரித்துக்கொண்டே வருகின்றார்கள். இவ்வாறு பிரதி ஸென்ஸஸ்களிலும் ஜனங்கள் அதிகரித்துக் கொண்டு வருவதற்குக் காரணம் முன்சொல்லிய புற்பூண்டு மிருகங்களேயாம். மிருகங்களாயிருந்து முதல் ஜன்மத்தில் மனிதராய் வந்தவர்களுக்கு ஈசுவர பக்தியில் சிரத்தை இராது. இவ்வீசுவரபக்தி ஜன்மாந்திரங்கள்தோறும், பஜனைகளாலும் தேவாலய தர்சனங்களினாலும் வேதாந்த விசாரணையினாலும் மஹா தீர்த்தங்களின் ஸ்நானங்களினாலும் சத்யம் தவராமல் இருப்பதனாலும் சிறுகச்சிறுக ஜன்மாந்திரங்கள் தோறும் அபிவிருத்தியாய் வந்துகொண்டே இருக்கும். இவ்வாறு கஷ்டப்பட்டு மானிடசரீரம் எடுத்தும, பெரியோர்களையும் சாதுக்களையும் அடியார்களையும் ஞானிகளையும் தம் வாக்கிற்கு வந்தவாறு தூஷித்து அவர்களின் பாப கர்மங்களையெல்லாம் பங்கிட்டுக்கொண்டு மறுபடியும் தாழ்ந்த சரீரமெடுத்து, வண்டியின் சக்கரம் கீழ்மேலாய்ச் சுழல்வதுபோல் அவர்களுக்குத் தாழ்வான ஜன்மங்கள் வந்துக்கொண்டும் போய்க்கொண்டுமா இருக்கும் இப்படிப்பட்ட மஹா ரஹஸ்யங்களையெல்லாம் சிலர் தெரிந்துக்கொள்ளாமல் ஜன்மாந்திரங்கள்தோறும், பாப கர்மங்களென்னும் மூட்டையைத் தலைமேல்சுமந்து கடைசியில் ஹீனமான (தாழ்ந்த) சரீரமெடுத்து அந்தந்த கர்மவிதிப்படி அச்சரீரங்களுக்கு உயர்வு தாழ்வான வியாதிகள் உண்டாய் அவ்வியாதிகளினால் மனம் நொந்து, எத்தனை நாள் அக்கர்மபலன் நோயை அனுபவிக்கவேண்டுமோ அன்நாள் வரையில் அந்நோயை அனுபவித்து கடைசியாய் பிராணனை விட்டுவிடுவார்களென்று அறியக்கடவீர்களாக.

இங்ஙனம்,